PUBLICATIONS DE L'INSTITUT FRANÇAIS D'INDOLOGIE No. 68,2

TĒVĀRAM

HYMNES ŚIVAÏTES DU PAYS TAMOUL

தேவாரம்

பண்முறை

édition établie par T. V. GOPAL IYER
sous la direction de FRANÇOIS GROS

volume II Appar et Cuntarar

அப்பரும் சுந்தரரும்

publié avec le concours du Fonds International
pour la Promotion de la Culture

INSTITUT FRANÇAIS D'INDOLOGIE
PONDICHÉRY
1985

TĒVĀRAM

HYMNES ŚIVAÏTES DU PAYS TAMOUL

தேவாரம்

பண்முறை

PUBLICATIONS DE L'INSTITUT FRANÇAIS D'INDOLOGIE No. 68,2

TĒVĀRAM

HYMNES ŚIVAÏTES DU PAYS TAMOUL

தேவாரம்

பண்முறை

édition établie par T. V. GOPAL IYER
sous la direction de FRANÇOIS GROS

volume II Appar et Cuntarar

அப்பரும் சுந்தரும்

publié avec le concours du Fonds International
pour la Promotion de la Culture

INSTITUT FRANÇAIS D'INDOLOGIE
PONDICHÉRY
1985

Publications de l'Institut Français d'Indologie (ISSN 0073-8352)

© Institut Français d'Indologie 1985

Imprimerie de Sri Aurobindo Ashram
Pondichéry, Inde

AVANT-PROPOS

Ce second volume de notre édition du Tēvāram contient les 4ème, 5ème et 6ème tirumuṟai qui sont attribués à Appar (Tirunāvukkaracar) et le 7ème attribué à Cuntarar. On trouvera à la suite, comme annoncé dans le premier volume (p. lxxxviii), des détails sur les vers supplémentaires trouvés dans certains manuscrits sur oles ainsi que l'index de l'ensemble des 8272 strophes.

Notre édition est destinée à permettre aux lecteurs de saisir clairement le sens des poèmes. Dans ce volume pour les aider à mieux comprendre le mètre nous avons systématiquement adopté à chaque fois que c'était nécessaire la méthode suivie parfois dans les dernières éditions de Dharmapura Ādhīnam (insertion d'une consonne, allongement ou prolongation d'une voyelle); les détails sont donnés ci-dessous dans l'Avant-propos tamoul.

T.V.G.

FOREWORD

This second volume of our edition of Tēvāram comprises the 4th, 5th and 6th tirumuṟais which are attributed to Appar (Tirunāvukkaracar) and the 7th attributed to Cuntarar. Then as announced in the preface of the first volume (p. lxxxviii) various particulars of additional verses found in some palm-leaf manuscripts and the index of all the 8272 verses are added.

Our edition is intended to enable the readers to get a clear comprehension of the meaning of the verses. In this volume to help them to have a better understanding of metre we have adopted systematically wherever necessary the method of insertion of a consonant, and lengthening and prolongation of vowels followed to some extent in recent editions of Dharmapura Ādhīnam; for details please refer to the Tamil Editorial Note.

T.V.G.

பதிப்புரை

திருநாவுக்கரசர் (அப்பர்) அருளிய நான்காம் திருமுறையுள் பதிகம்- 22 முதல் 79 முடிய நின்ற 58 பதிகங்களும் அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்த யாப்பால் அமைந்தவை. ஈரசைச்சீர்களே மிகப் பயிலும் இவ்வகை விருத்தம் 'திரு நேரிசை' எனப் பெயர் பெறுகிறது. இவ்வகை யாப்பில் அடிதோறும் மூன்றும் ஆறும் சீர்கள் ஒருதலையாகத் தேமா வாய்பாடு பெறுதல்வேண்டும். வாகீசர் அருள்வாக்கில் ஏடுகளில் இவ்விலக்கணம் பிறழ்படக் காணப்படுகிறது.

பண்ணோடு பாடப்பட்ட காலத்து ஓசை விரிந்து தக்கவாறு சீர் நிரம்பி நின்ற பாசுரங்கள், பிற்காலத்தில் வரிவடிவில் வாசிக்கப்படுங்கால் அவ்வோசை நிரம்பி நிற்குமாற்றைக் காட்டவே, விரித்தல் முதலிய விகாரங்கள் இன்றியமையாமைப்படுகின்றன.

நிரையசையாகவோ நேரசையாகவோ நிற்பன சீர்நிலை பெற்றன என்று (ஆறும் திருமுறையுள் கொள்ளுமாறு போல) இவ்வறுசீர் விருத்தத்துள் கோடற்கு இயலவில்லை. அவ்வாறு கொள்ளின், முன்னடி பின்னடிகள் ஒத்தியலாமல் ஓசை பெரிதும் இழுக்குப்படுதல், பாட்டினை இசைத்த அளவிலேயே புலப்படுதல் காணலாம். அப்பரடிகளது வாக்கில் இக்குறைபாடு காலப்போக்கில் ஏடெழுதுவோரால் நிலைத்துவிட்டதாகக் கருதவேண்டியுள்ளது. **தருமையாதீனப் பதிப்பு இக்குறை பாட்டினை ஓரளவு செம்மைசெய்துள்ளது. இப்பதிப்பு முழுமையுறச் செம்மை செய்துளது. பிற திருமுறைப் பாசுரங்கட்கும் இக்குறிப்புப் பொருந்தும்.**

நிரையசையைத் 'தேமா' ஆக்கவேண்டி, இடையே மகர னகர மெல்லொற்றும், யகர லகர வகர இடையொற்றும், ஆய்தமும் விரிகின்றன.

எடுத்துக்காட்டு :

பார்த்தனுக் கருள்கள் செய்த பாசுப தன்தி ற(ம்)மே 4578—2
மண்உண்ட மால்அ வ(ன்)னும் மலர்மிசை மன்னி னானும் 4407—1
கேட்டிலேன் கிளைபி ரி(ய்)யேன் கேட்குமா கேட்டி யாகில் 4400—1
சுரிபுரி வரிகு ழ(ல்)லாள் துடிஇடைப் பரவை அல்குல் 4423—3
விண்ணுண்ட திருஉ ரு(வ்)வம் விரும்பினார் காண மாட்டார் 4407—2
போதித்து நின்று ல(ஃ)கில் போற்றிசைத் தார்இ வர்கள் 4529—2

விரித்தல்விகாரத்தைவிட, நிரையசைச்சீர்க்கண் முன்நின்ற குறில் நீண்டொலிக்க மிகவும் வாய்க்குமிடத்தே நீட்டல்விகாரம் நிகழும் இடங்கள் உள.

எடுத்துக்காட்டு :

ஆழியான் அன்னத் தானும் அன்றவர்க் களப்பரிய 4527—3
திருந்துநல் திருவ டியும் திருமுடி காண மாட்டார் 4561—2
பார்த்தனோ டமர்பொ ருது பத்திமை காண்பர் போலும் 4832—1

குற்றுகரம் வருமொழி முதல் உயிர் ஏறி முடிய நேரசையாக நிற்கற்பாலது, குற்றுகரத்தை முற்றுகரமாக்கி வகர உடம்படுமெய் பெறுவிக்கத் 'தேமா' வாய்பாடு பெறும்.

எடுத்துக்காட்டு :

அடிகழல் ஆர்க்க நின்று(வ்) அனல்எரி ஆடும் ஆறே. 4389—4

('நின் றனல்எரி' என்று மூன்றும் சீர் நேரசையாக நிற்க வேண்டுவது, வகர உடம்படுமெய் விரிய, 'நின்று வனல்எரி' எனச் சீர்நிலை பெற்றவாறு காண்க. திருஞானசம்பந்தர் அருளிய திருநீற்றுப் பதிகத்துள் 2179—3, 2182—3, 2183—1, 2184—1, 2185—1 இவ்வடிகளில், மூன்றும் சீரினை நேரசையாக்காது 'தேமா' ஆக்க வகர உடம்படுமெய் விரிந்தவாறு போல, இதனைக் கொள்க.) அடியிறுதிக்கண் ஆரும்சீரே இவ்விரித்தல்விகாரம் பெறுவதாக வருமிடங்கள் பல உள.

எடுத்துக்காட்டு :

விரவுகொப் பளித்த கங்கை விரிசடை மேவ வைத்து(வ்)
இரவுகொப் பளித்த 4416—2

இனி, இத்திருமுறையுள் 80 ஆம் பதிகம் முதல் 113 ஆம் பதிகம் முடிய நிகழும் பாசுரங்கள் கட்டளைக்கலித்துறை யாப்பின. கட்டளைக்கலித்துறை 'திருவிருத்தம்' என்றே பெயர் சுட்டப்பெறுகிறது. (நம்மாழ்வார் அருளிய 'திருவிருத்தம்' காண்க.) இவ்யாப்பு, அடிதோறும் ஈற்றுச்சீர் பெரும்பான்மையும் விளங்காயாக நிகழ்கிறது; சிறுபான்மையே மாங்கனியாக நிகழ்தல் காண்கிறோம். 4944—1, 4974—3 முதலியவற்றுள் காண்க. இனி, 'திருவிருத்தத்'தின் ஈற்றுச்சீர்கள் நாலசைச்சீராக நிகழின், தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ என்னும் இரண்டு வாய்பாடாகவே நிகழ்தல் காணப்படும். 4956—1, 2; 4976—3; 4997—3 முதலாயினவற்று இறுதிச்சீர்கள் தேமாந்தண்பூ வாய்பாட்டின; 4991—1, 4992—2, 4998—3 முதலாயினவற்று இறுதிச்சீர்கள் புளிமாந்தண்பூ வாய்பாட்டின.

கட்டளைக்கலித்துறையாகிய இத் 'திருவிருத்தப்' பாசுரங்களில் தளை பிறழாமைப் பொருட்டாகச் சில விரித்தல்விகாரங்கள் புகுத்தப்பெற்றுள. (அடியெதுகை கெடாமைப் பொருட்டாக வல்லொற்று விரிதல் 4952, 5188, 5189ஆம் பாசுரங்களில் இயல்பாகவே காணப்பெறுகிறது. ஈற்றுச்சீர் மாங்கனியாக நிற்பின் ஓசை சிறக்கும் என்று 'அடிமை(க்)களே' என 91ஆம் பதிகம் முழுவதும் மூன்றும் அடிக்கண் ககரமெய் இயல்பாகவே விரியுமாறு அருளப்பட்டுள்ளமையும் காண்கிறோம்.) மூவினமெய்களும் விரிகின்றன.

எடுத்துக்காட்டு :

கார்அடைந் த(க்)கடல் வாய்உமிழ் நஞ்சமு தாகஉண்டான் 5022—2
பொறுத்தான் அமரர்க் கமுதரு ளி(ந்)நஞ்சம் உண்டுகண்டம் 4974—1
கொடியுமுற் ற(வ்)விடை ஏறிஓர் கூற்றொரு பால்உடையான் 5075—2

அகரஈற்றுப் பெயரெச்சத்தின் முன்னர் வல்லினமெய் மிகுதலாகாது என்பதே விதியாயினும், இயற்சீர்வெண்டளை பிறழாமைப் பொருட்டுத் தனிக்குறிலை நேரசை யாக்கவேண்டி வல்லினமெய் விரிதல் வேண்டிற்று. அடுத்து, ‘கமுதரு ளி(ந்)நஞ்சம்’ என நகரம் விரியாக்கால் இயற்சீர்வெண்டளை பிறழுமாறு உணரப்படும்; இறுதி எடுத்துக்காட்டும் அது.

இனி, குற்றுகரஈறு வருமொழிமுதல் உயிரோடு புணர்ந்து முடியுமிடத்தே தளை கெடாமை நோக்கி வகர உடம்படுமெய் விரித்தல்விகாரமாகத் தோன்றும் இடமும் உள.

எடுத்துக்காட்டு :

இடைவித்த ஆறிட்ட நோய்வினை காட்டி இடர்ப்படுத்து(வ்)
உடைவித்த 5047—1

[வகரம் விரியாக்கால், ‘இடர்ப்படுத்(துடைவித்த)’ என அடியிறுதிச்சீர் விளங்காயாக வாராது கருவிளமாக நிற்குமாறு காண்க.]

இனி, ஐந்தாம் திருமுறையாகிய திருக்குறுந்தொகைப் பாடல்கள் யாவும் கலிவிருத்த யாப்பின. சீர்நிலை நிரப்புதல்வேண்டிப் பெரும்பான்மையும் வகரமும் மகரமும் விரிகின்றன; னகரமும் நகரமும் சிறுபான்மையே விரிகின்றன; லகரமும் ளகரமும் மிக அருகியே விரிகின்றன; யகர வகர உடம்படுமெய்களும் அவ்வாறே அருகி விரிகின்றன. இனி, வல்லெழுத்துக்களுள் ககர பகர சகரங்கள் விரித்தலாகத் தோன்றுகின்றன. ஆய்தம் ஓரிடமே விரிகிறது.

எடுத்துக்காட்டு :

அரிச்சுற் ற(வ்)வினை யால்அடர்ப் புண்டுநீர் 5242—1
கார்ஒத் த(ம்)மிடற் றார்கனல் வாயரா 5309—2
இண்டைச் செஞ்சடை யன்(ன்)இருள் சேர்ந்ததோர் 5314—2
பொன்னொத் த(ந்)நிறத் தானும் பொருகடல் 5704—1
உரத்தி னால்அடுக் கல்(ல்)எடுக் கல்(ல்)உற 5443—2
அன்னம் ஆர்வயல் கோழம்பத் துள்(ள்)அமர் 5886—3
எய்ப்பற் றி(ய்)அறி தற்கரி யாய்அருள் 6193—2
சேதா ஏறுடை யான்அமர்ந் த(வ்)இடம் 5457—3
ஈசன் தன்னையும் என்மனத் துக்கொண்டு(வ்)
ஈசன் 6155—3
கூறி ய(க்)குணத் தார்குறி நின்றவன் 5415—2

பொருத்தி ய(ப்)புனி தன்புரி புன்சடை 5408—2
தூண்டி ய(ச்)சுடர் போல்ஒக்கும் சோதியான் 6047—1
கொக்கி ற(ஃ)கர் குளிர்மதிச் சென்னியர் 6038—1

இவற்றுள், உடம்படுமெய் விரித்தலாகத் தோன்றும் எடுத்துக்காட்டுக்களுள் ‘எய்ப்பற் றி(ய்)யறி’, ‘யானமர்ந் த(வ்)விடம்’ என யகர வகர உடம்படுமெய்கள் இடையே தோன்றுமிடம் அறிக. இப்பதிப்பில் சொற்றொடர்கள் நிலைவருமொழிகள் பிரித்து எழுதப்பட்டுள்ளமையால் இடையே உடம்படுமெய் காணப்படாது. அடுத்து, ‘என்மனத் துக்கொண்டு (வீசன்)’ என வகர உடம்படுமெய் தோன்றாவிடின், நான்காம் சீர் ‘என்மனத் துக்கொண் (டீசன்)’ என ஓசை நிரம்பாது கெடும். இக்கலிவிருத்த யாப்புள் அடிதோறும் நாலாம் சீர் விளச்சீராகவோ மாங்காய்ச்சீராகவோ இருத்தல் வேண்டும்; மாச்சீராதல் கூடாது. ஈண்டு விளச்சீராதற்கு வாய்ப்பின்மையின், காய்ச்சீராக நிற்க வகர உடம்படுமெய் விரித்தலாகத் தோன்ற வேண்டிற்று. பிறவும் இவ்வாறே இடம் நோக்கி உணரப்படும்.

இனி, இவ்யாப்புள், இரண்டாம் மூன்றும் சீர்கள் புளிமாவாக நிற்பின் ஓசை கெடுதலின், முதற்குறிலை அடுத்து உரிய மெய்யொன்று விரிகிறது; விரியவே, ‘கூவிளம்’ தோன்றுதலின் ஓசை சிறக்கிறது. (விளம் நிற்குமிடத்தே இரண்டு நேரசை நிற்பினும் ஓசை குன்றாது.) கருவிளச்சீரும் ஓசை சிறக்கிறது. ஒரோவழித் ‘தேமா’ வருதலும் பிற சீர்களது தொடர்பால் சிறத்தலுமுண்டு.

இனி, இகரஉகரஉயிர்களே சிறுபான்மை நீட்டல்விகாரமாய்ச் சீரினை நிரப்புகின்றன.

எடுத்துக்காட்டு :

இறைக்காட் டீ யெடுத் தான்தலை ஈர்ஐந்தும் 5331—2
குரங்கா டு துறைக் கோலக்க பாலியே. 5869—4

இனி, ஒரோவழிப் புளிமாச்சீர் கூவிளமாக நின்றொலிப்பனவும் சில உள.

வருமாறு :

ஆரத் தர்உறை யும்மணி ஆரூரை 5309—3
அருந்தி றல்(ல்)அம ரர்அயன் மாலொடு 5718—1

இவற்றுள் முறையே ‘தருறை’, ‘ரரயன்’ எனப் ‘புளிமா’ வாக நிற்க வேண்டுவன, ரகரம் விரிக்கப்பட்டவாறு போல ‘தர்ருறை’ ‘ரர்ரயன்’ எனக் கூவிளமாக ஒலித்து இசை நிரப்பியவாறு காண்க. ரகரம் விரிக்கப்படலாகாமையின், முன்னின்ற குற்றொற்று விட்டிசைத்து ‘த ருறை’, ‘ர ரயன்’ என ஒலிக்கும் என்பது.

இனி, ஆறும் திருமுறையாகிய நெடுந்தாண்டகப் பாசுரங்கள் எண்சீரடியாக அமைந்த ஆசிரியவிருத்த யாப்பின. அடிகளில் அசையாக நிற்பன சீர்நிலை எய்தல்வேண்டி, வேண்டுமிடத்தே விரித்தல்விகாரம் இடம் பெற்றுள்ளது. மெல்லினத்துள்

பெரும்பான்மையும் மகரமும் னகரமும் விரிகின்றன; நகரம் மிக அருகியே விரிகிறது. இடையினத்துள் யகரம் மிகுதியே விரிகிறது; லகரளகரங்கள் மிக அருகியே விரிகின்றன; வகரமும் அருகியே விரிகிறது. குற்றுகர ஈற்றுச்சொல் அசையாக நிற்பதனைச் சீர்நிலை பெறுவிக்க முற்றுகரஈறே போல வகரஉடம்படுமெய் விரிகிறது. இனி, அசை சீர்நிலை பெறுதற்பொருட்டாக மிகலாகா இடத்து வல்லினமெய் விரிகிறது.

எடுத்துக்காட்டு :

செல்வப் புனல்கெடில வீரட் ட(ம்)மும் 6318—1
மணவாள னேவலங்கை மழுவா ள(ன்)னே 6295—2
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத் து(ந்)நீ 7184—4
தீக்காலி வல்லம் திருவேட் டி(ய்)யும் 6324—1
கூம்பித் தொழுவார்தம் குற்றே வ(ல்)லை 6301—2
நமைப்புண்ணேன் கமைத்துநீர் நடமின் க(ள்)ளே. 6525—4
கடும்பிணியும் சுடும்தொழிலும் கைவிட் ட(வ்)வே. 6702—4
ஏகாச மாஇட்டோ டொன்றேந்தி வந்து(வ்)
இடுதிருவே……… 6383—2

(இறுதி எடுத்துக்காட்டுள், 'வந் திடுதிருவே' என அசையாக நிற்கற்பாலது, வகர உடம்படுமெய் தோன்றுதலின், 'வந்து விடுதிருவே' எனச் சீர்நிலை எய்தியவாறு.)

ஒத்துலகம் எல்லாம் ஒடுங்கி ய(ப்)பின் 6605—3

('ஒடுங்கி **யபின்**' என நிரையசையாக நிற்கற்பாலது, வல்லொற்று விரிதலின், '**யப்பின்**' எனச் சீர்நிலை பெற்றவாறு.)

இனி, குறில்நெடில்ஒற்றும் நிரையசை 'புளிமா' எனச் சீர்நிலை எய்தவேண்டி, நெடில் அளபெழுகிறது. இவ்வளபெடை நிகழுமிடம் சிறுவரவிற்று. அந்நிரையசையுள் நெடில் அளபெடுக்க வாய்க்காவிடத்தே, முதலில் நின்ற குறில் (இகரம்) நீண்டு 'தேமா' எனச் சீரை நிரப்புகிறது. இவ்வாறு குறில் நீடல் சிறிது பெருவரவிற்று. இவ்விரண்டு திறமும் குறில்நெடில்(ஒற்று) என வரும் நிரையசைக்கண்ணேயே நிகழ்வன.

எடுத்துக்காட்டு :

திளைத்தானைத் தென்கூடல் திருஆ லவாஅய் 6444—6654 : 4
அங்கமெலாம் குறைந்தழுகு தொழுநோ யராஅய் 7193—3
அறைஆர் புனல்ஒழுகு காவி ரீசூழ் 6320—3

இனி, மேற்கூறிய விகாரம் தோன்ற இயலாதவிடத்தே நிரையசை அசைச்சீராகவே கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டு :

அடிதோறும் இவ்விருமுறை நிகழும் 'அடி' எனும் அசை.	6308—6317
ஈற்றடி இறுதிச்சீராக நிகழும் 'காப்புக் களே'	6318—6329

[முன்னர், 'க(ள்)ளே' என் ளகரம் விரிந்ததாகக் காட்டிய (6525—4) சீர், அப்பதிகத்துள் ஓரிடத்தேயே நிகழ்கிறது. ஈண்டுக் 'களே' பதிகமுழுதும் நிகழ்தலின், ளகரம் இடையே விரியத் 'தேமா' வாகக் கோடற்கண் போதப் பயனின்றும் ஆதலின், அசைச்சீராகவே கோடல் மிகப் பொருந்தும்.]

ஏனோர்கள் ஏத்தும் வெகுளீச் சுரம்	6328—3
கழிப்பாலை மேய கபாலப் பனார்	6371—6379 : 3

('பனார்' எனும் இந்நிரையசை பதிகம் முழுதும் நிகழ்தலின், 'பனாஅர்' என அளபெடை விரியாது அசைச்சீராகவே கோடல் மிகப் பொருந்தும் எனக் கருதப்படுகிறது. பிறவும் அன்ன.)

சுந்தரர் அருளிய ஏழாம் திருமுறையுள், சீர்நிலை நிரப்பவேண்டி விரித்தல்விகாரம் பலவாக நிகழ்கிறது. எண்சீர் விருத்தங்களில் இவ்விகாரங்கள் பெரும்பான்மையும் உள. 79, 80 ஆம் பதிகங்கள் இவ்விரித்தல் இல்லையேல் செய்யுளின் ஓசை குன்றிவிடுதல் இசைத்துணரப்படும். 63 ஆம் பதிகம் விரித்தல்விகாரமின்றி ஒருவாறு எண்சீர் விருத்தமாதல் கூடும். சந்தவிருத்தமாக அமைந்த பாசுரங்களிலும் இவ்விரித்தல் இடம் பெற்றுளது.

மெல்லின இடையின மெய்களே பெரும்பான்மையும் விரிகின்றன. வல்லினம் மிக அருகியே விரிகிறது. ஒரோவழி ஆய்தமும் விரிகிறது. நீட்டல்விகாரமும் மிக அருகியே நிகழ்கிறது. அளபெடை ஓரிடத்தே விரிகிறது. குற்றுகரஈறு வருமொழி முதல்உயிரோடு புணர்ந்து அசையாக நிற்பதனைச் சீர்நிலைப்படுத்த வகர உடம்படுமெய் விரிகிறது. வேறு வாய்ப்பு இல்வழியே அசை சீராகவே நின்று அடியினை நிரப்பிற்ருகக் கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டு :

செங்கண்(ண்)அர வசைத்தான்திருக் கேதீச்சுரத் தானே.	8049—4
நிறைஅணி நெஞ்சனுங் க(ந்)நீல மால்விடம் உண்ட தென்னே	8241—2
உம்மை அன்றே எம்பெ ரு(ம்)மான்	7283—4
அங்கைய வன்(ன்)உறை கின்ற இடம்கலி	7337—4
அந்தம்ஆ தி(ய்)அறி தற்கரி யானை	7818—2
கண்ணி லேன்உடம் பில்(ல்)அடு நோயால்	7945—2
தோலும்நூ லும்துதைந் த(வ்)வரை மார்பன்	7820—2
ஆர்க்கின் ற(க்)கட லைமலை தன்னை	7840—4
ஓர்க்கின் ற(ச்)செவி யைச்சுவை தன்னை	7840—3
செய்ய னைவெளி ய(த்)திரு நீற்றில்	7826—3
கார்ஊர் மழைபெய் து(ப்)பொழி அருவி	7328—1
மொய்த்த வெண்தலை கொக்கி ற(ஃ)கொடு	7603—2
திருவ டிதொழு துய்யின் அல்லால்	7284—2

ஆரூரன் தம்பிரான் ஆரூரன் மீகொங்கில் அணிகாஞ் சிவாஅய் 8157—3
ஊரும் காடு(வ்) உடையும் தோலே 7285—4

(இறுதி எடுத்துக்காட்டுள், ‘காடு’ குற்றுகரஈறாகக் ‘காடுடை’ என வருமொழி முதல் உயிரோடு முடியின், அடி சீர்நிலை நிரம்பாமை கருதி வகர உடம்படுமெய் விரிந்தது; ‘காடு வுடையும்’ என நிறைதல் காண்க.)

தேவி யார்கொற் றடி யாளால் 7278—3

(இதன்கண், ‘அடி’ எனும் நிரையசை சீர்நிலை பெற்றே எண்சீரடியை நிரப்பியவாறு காண்க.)

இத்திருமுறையில் சில பதிகங்கள் பாடல்முழுதும் கட்டளைக்கலித்துறையால் அமைந்தன. 17, 18, 19, 20, 22 ஆம் பதிகங்களை முதற்கண் காண்போம். இவ்யாப்புள் அடிதோறும் இறுதிச்சீர்கள், அப்பரடிகள் அருளிய ‘திருவிருத்தத்’தில் போலவே, பெரும்பான்மையும் விளங்காயாக நிகழ்தலை யன்றிச் சிறுபான்மை மாங்கனியாகவும் நிகழ்கின்றன; தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ எனும் வாய்பாட்டால் நாலசைச்சீராகவும் நிகழ்கின்றன.

எடுத்துக்காட்டு :

சீரும் சிவகதி யாயிருந் தானைத் திருநாவலா 7433—2
அரக்கன் முடிகரங் கள்ளடர்த் திட்டஎம் ஆதிப்பிரான் 7441—1
நெல்லிட ஆட்கள்வேண் டிந்நினைந் தேத்திய பத்தும்வல்லார் 7443—3
வாடுமிவ் வாழ்க்கைதன் னைவருந் தாமல் திருந்தச்சென்று 7456—3

இவை முறையே புளிமாங்கனி, தேமாங்கனி, தேமாந்தண்பூ, புளிமாந்தண்பூ எனும் வாய்பாட்டால் வந்துள்ளமை காண்க.

இவ்யாப்புள் வெண்டளை பிறழாமைவேண்டி மூவினமெய்களும் விரிகின்றன.

எடுத்துக்காட்டு :

பாடவல் ல(ப்)பர மன்னடி யார்க்கடி மைவழுவா 7422—2
பெற்றரைப் பித்தரென் று(க்)கரு தேன்மின் படிக்கரையுள் 7462—3
பூசத்தி னார்புக லி(ந்)நகர் போற்றுமெம் புண்ணியத்தார் 7424—1
ஆர்த்தவ ராடர வம்(ம்)அரை மேற்புலி ஈருரிவை 7428—1
பாரும் விசும்பும் தொழப்பர மன்(ன்)அடி கூடுவரே. 7433—4
அண்டக பாலஞ்சென் னி(ய்)அடி மேலலர் இட்டுநல்ல 7455—1

இவற்றுள் இறுதி எடுத்துக்காட்டின்கண் உடம்படுமெய்யாக வந்த யகரம் விரிந்தது.

இனி, பின்வரும் அடிகளுள் கட்டளையாப்புப் பிறழ்தல் காண்கிறோம்.

வருமாறு :

அ) தாயவ ளாய்த்தந்தை ஆகிச் சாதல் பிறத்தலின்றி 7408—1
ஆ) உங்கைக ளாற்கூப் பி(ய்)யுகந் தேத்தித் தொழுமின்கண்டீர்
மங்கையொர் கூறுடை யான்வா னோர்முத லாயபிரான் 7458—1, 2
இ) அல்லியந் தாமரைத் தாரா ரூரன் உரைத்ததமிழ் 7463—2
ஈ) வாளன கண்மட வாளவள் வாடி வருந்தாமே 7434—2

அ, ஆ, இ-இத் தேமாச்சீர்களைக் கூவிளமாகக் கொள்ளுமாறு சுவடிகளிற் பாடபேதங்கள் காணப்படாமையின், கிடந்தவாறே கொண்டுள்ளோம். ‘வருந்தாமே’ என்பதும் பொருந்தாமை காணப்படும்; ஏற்ற பாடம் கிடைத்திலது.

இனி, 25ஆம் பதிகத்துள் 1, 2, 4, 7ஆம் எண்ணுடைய பாசுரங்கள் கட்டளைக்கலித்துறை யாப்பின. 27, 28ஆம் பதிகங்களில் பாடல் அடிதோறும் முதலிரு சீர்களிடை ஆசிரியத்தளை தட்கிறது. கட்டளைக்கலித்துறையின் சிறிது வேறுபட்டு நெடிலடியால் நிகழும் வேறு சில கட்டளையாப்பினவாம் பதிகங்களும் உள. (எடுத்துக்காட்டு : பதிக எண் : 82)

இனி, இறுதிக்கண் அமைந்த 97 ஆம் பதிகம் முதலிய நான்கனையும் காண்போம். அப்பாசுரங்களில் வெண்டளை பிறழாமைப் பொருட்டு விரித்தல்விகாரம் பல தோன்றியுள்ளன. பிற பாசுரங்களிற் போலவே மூவினமெய்களும் விரிகின்றன; நீட்டல்விகாரமும் நிகழ்கிறது.

எடுத்துக்காட்டு :

குறைஅணி குல்லைமுல் லைஅளைந் து(க்)குளிர் மாதவிமேல் 8241—3
நிலைகெட விண்அதி ர(ந்)நிலம் எங்கும் அதிர்ந்தசைய 8258—1
ஊழிதொ றூழிமுற் றும்(ம்)உயர் பொன்நொடித் தான்மலையை 8261—1
அலைகடல் ஆல்அரை யன்(ன்)அலர் கொண்டுமுன் வந்திறைஞ்ச 8258—3
ஆழிக டல்(ல்)அரை யாஅஞ்சை அப்பர்க் க்றிவிப்பதே. 8261—4
அஞ்சினை ஒன்றிநின் று(வ்)அலர் கொண்டடி சேர்வறியா 8257—1
மலைஇடை யானைஏ றி(வ்)வழி யேவரு வேன்எதிரே 8258—2
குன்ற மலைக்கும ரீகொடி ஏர்இடை யாள்வெருவ 8244—1

(இறுதி மூன்று எடுத்துக்காட்டுக்களுள், முதலாவதன்கண் வகரம் உடம்படுமெய்யாக விரிந்து இரட்டித்து, ‘ஒன்றிநின் றுவ்வலர்’ எனத் தளை பிறழாமை காத்தது; அடுத்ததன்கண், வருமொழி முதல் மெய்யாக விரிந்தது. இறுதி எடுத்துக்காட்டுள் இகரம் நீண்டது; அன்றி, வருமொழிக் ககரம் விரிந்து ‘மலைக்கும ரி(க்)கொடி’ எனினும் இழுக்காது.)

இனி, பின் வரும் இரண்டடிகளில் கட்டளையாப்புப் பிறழ்தல் காண்கிறோம்.

வருமாறு :

அ) சேடியல் சிங்கிதந் தைசடை யன்திரு வாரூரன் 8240—3
ஆ) வான்எனை வந்தெதிர் கொள்ளமத்த யானை அருள்புரிந்து(வ்)
ஊன்உயிர்......... 8252—3

முதலாவதன்கண் இறுதிச்சீர் (கூவிளங்காயாகவோ, தேமாங்கனியாகவோ, தேமாந்தண்பூவாகவோ நில்லாமல்) தேமாங்காயாக நிற்கிறது. நேரசையால் தொடங்கும் இவ்வடி 16 எழுத்துப் பெறாமல் ஒன்று குறைய நேர்கிறது. இறுதிச்சீர் ‘ஆரூரவன்’ என்றோ, ‘ஆரூரன்தான்’ என்றோ இருந்திருக்கலாம்போலும்; சுவடியுள் பாடபேதம் காணப்பட்டிலது.

இனி, இரண்டாவதன்கண் இறுதிச்சீர் குற்றுகரத்தால் முடிதலின், வருஞ்சீர் முதலுயிரோடு புணர்ந்து ‘அருள்புரிந்(தூனுயிர்)’ எனக் கருவிளமாக நிற்கும். அக்குறைபாட்டினை நீக்க வகர உடம்படுமெய் விரித்தல்விகாரமாகத் தோன்றவே, ‘அருள்புரிந்து (வூனுயிர்)’ என அச்சீர் கருவிளங்காயாக நிற்கும். ஆயின் அவ்வாறு கொள்ளின், நேரசையால் தொடங்கும் அவ்வடி 17 எழுத்துப் பெறுகிறது. எழுத்தெண்ணிக்கையினும் சீரமைப்பே சிறந்ததெனக் கொண்டு வகர உடம்படுமெய் விரிக்கப்பட்டுள்ளது. இப்பதிகத்துள் ஆறாம் பாசுரத்தில் ‘ஆனை’ வந்தாற்போல, இதன்கண்ணும் யானையை ‘ஆனை’ எனக்கொண்டு ‘மத்தஆனை’ எனும் தொடருள் அகரம் விகாரத்தால் தொக்கதென, ‘மத்தானை’ என்று பாடம் கொள்ளின், ‘கொள்ளமத் தானை அருள்புரிந்து’ என்று சீர்கள் அமையப்பெற்று, இவ்வடி 16 எழுத்துப் பெறும். தொன்றுதொட்டே ‘மத்த யானை’ என்றே ஓதப்பெறுகிற பாடத்தினை யாம் வேறுபடுத்தற்கில்லை; கிடந்தவாறே கொண்டுள்ளோம். எழுத்தெண்ணிக்கையினும் ஓசையமைப்பையே மிக்கதாகக் கொண்டனர்போலும் என்றே கருதி அமைவோம்.

‘அழுந்துவேற்கு’ (7277—3) முதலாகச் சில திருத்தங்கள், முன்னர் முன்னுரையில் ‘நாம் கொண்ட பாடம்’ என்பதன்கண் சுட்டப்பட்டுள்ளதற்கு வேறாக வருவதும், ஓசைநயம் பற்றியே ஆதலின் அமைத்துக் கொள்ளப்படும்.

இனி, முதல்தொகுதியுள் கட்டளைக்கலித்துறைப் பாசுரங்கள் பற்றிய குறிப்புக்கள் எழுதப்படாதவை ஈண்டுத் தொடர்பு பற்றிக் குறிக்கப்படுவன உள. ஆண்டுச் சில பாசுரங்கட்கு விரித்தல்விகாரம் காட்டப்பெறவில்லை. அவை ஈண்டு முறையே காட்டப்பெறும்.

திருஞானசம்பந்தர் அருளிய பதிகங்களுள் கட்டளைக்கலித்துறை யாப்பால் நிகழ்வன முதல்திருமுறையுள் 116, 117ஆம் பதிகங்களும், இரண்டாம் திருமுறையுள் 79ஆம் பதிகத்துள் சில பாடல்களும் (1, 2, 3, 9, 11 என்பன அவை; மூன்றாம் பாடல் ஈற்றடி யிறுதிச்சீரினை ‘அஞ்சல் நெஞ்சே’ என்று கொள்க.), மூன்றாம் திருமுறையுள் 56ஆம் பதிகம் முதல் 62ஆம் பதிகம் ஈறாகிய ஏழு பதிகங்களும் ஆம்.

அடிதோறும் இறுதிச்சீர் விளங்காயாகவே வரவேண்டும் என்ற யாப்புறவின்றி, தேமாந்தண்பூ புளிமாந்தண்பூ என நாலசைச்சீராக வருதலும், தேமாங்கனி புளிமாங்கனி எனக் கனிச்சீராக வருதலும் அப்பர் திருவிருத்தத்துள் வருமாறு போலவே அருகிக் காணப்படுகின்றன.

எடுத்துக்காட்டு :

1258—3, 1269—1; 1261—1, 1263—1 என முறையே காண்க.

குற்றியலுகரஈறு தளையமைதி நோக்கி உயிரேறி முடியாது, இடையே வகர உடம்படுமெய் தோன்ற நிற்குமிடம் சில உள.

வருமாறு :

மாலது(வ்) ஏந்தல் மழுவது பாகம் வளர்கொழுங்கோட்
டாலது(வ்) ஊர்வர் அடலேற் றிருப்பர் அணிமணிநீர்ச் 1265—2, 3

'மால தேந்தல்', 'டால தூர்வர்' எனில், ஆசிரியத்தளை வந்து தட்கும்; 'மாலது வேந்தல்', 'டாலது வூர்வர்' என உடம்படுமெய் கொடுத்து முடிப்பின், வெண்டளை பிறழாதாம்.

மூவினமெய்களும் விரித்தல்விகாரமாக நிகழ்கின்றன. இவற்றுள், மகரமும் உடம்படுமெய்யாக வரும் யகர வகரங்களும் பெரும்பான்மையாக விரிகின்றன. வருமொழி முதல் வகரம் நோக்கி நிலைமொழியீற்றில் விரியும் வகரம் சிறுவரவிற்று. னகரமெய்யும் லகரளகரங்களும் சிறுபான்மையே விரிகின்றன. நகரமும் அருகியே விரிகிறது. வல்லினமெய் விரியுமிடங்களும் மிக அருகியே காணப்படும். இவ்வாற்றை முறையே காண்போம்:

வருமாறு :

ஒற்றை விடையின னாயுமை நங்கையொ டும்(ம்)உடனே 3399—3
பேதையொ டும்(ம்)இருந் தான்பிர மாபுரம் பேணுமினே. 3400—4
விரைதரு விண்ணுல கம்(ம்)எதிர் கொள்ள விரும்புவரே. 3404—4
சுமையொடு நின்றசீ ரான்கழ லும்சிலம் பும்(ம்)ஒலிப்பச் 3410—1
நன்றியால் வாழ்வதுள் ளம்(ம்)உல குக்கொரு நன்மையாலே 3411—1
பெருமலர்ச் சோலைமே கம்(ம்)உரிஞ் சும்பெருஞ் சாத்தமங்கை 3416—3
இமயமெல் லாமிரி ய(ம்)மதி லெய்துவெண் ணீறுபூசி 3422—1
காரெழில் வண்ணனோ டுக்கன கம்(ம்)அனை யானும்காணா 3424—3
ஒத்தர வங்களோ டும்(ம்)ஒலி காவிரி ஆர்த்தயலே 3428—1
மயில்பெடை புல்கியா ல(ம்)மணல் மேல்மட அன்னமல்கும் 3429—1
அக்கர வாமையே ன(ம்)மருப் போடவை பூண்டழகார் 3430—2
இழைவளர் மங்கையோ டும்(ம்)இருந் தானவன் எம்மிறையே. 3432—4
ஆரெரி யாழியா னும்(ம்)அல ரானும் அளப்பரிய 3435—1
ஏனவெண் கொம்பினொ டும்(ம்)இள ஆமையும் பூண்டுகந்து 3442—1
கன்றிய காலனை யும்(ம்)உரு ளக்கனல் வாயலறிப் 3455—1
சூழ்தரு வல்வினை யும்(ம்)உடல் தோன்றிய பல்பணியும் 3463—1
தொடைநவில் கொன்றையொ டுவ்வன்னி துன்னெருக் கும்(ம்)
அணிந்த 3465—3
மலையவன் முன்பயந் த(ம்)மட மாதையோர் கூறுடையான் 3466—1

உடையவன் ஊனமில் லி(ய்)உட னாயுமை நங்கையெனும் 3395—3
ஓல மிடவரு ளி(ய்)உமை நங்கையொ டும்முடனாய் 3402—3

உடையவன் ஊனமில் லி(ய்)உறை யும்மிடம் ஒற்றியூரே. 3405—4
ஒண்பிறை மல்குசென் னி(ய்)இறை வன்னுறை ஒற்றியூரைச் 3415—1
அருமலர் ஆதிமூர்த் தி(ய்)அய வந்தி அமர்ந்தவனே. 3416—4
அந்தமாம் ஆதியா கி(ய்)அய வந்தி அமர்ந்தவனே. 3420—4
ஈரெழிற் கோலமா கி(ய்)உட னாவதும் ஏற்பதொன்றே 3424—2
இரவிரி திங்கள்சூ டி(ய்)இருந் தானவன் எம்மிறையே. 3427—4
இலைமலி சூலமேந் தி(ய்)இருந் தானவன் எம்மிறையே. 3433—4
ஏடலர் கொன்றைசூ டி(ய்)இருந் தானவன் எம்மிறையே. 3436—4
இலங்கையர் மன்னனா கி(ய்)எழில் பெற்ற இராவணனைக் 3445—1
சாமவெண் தாமரை மேலய னுந்தர ணி(ய்)அளந்த 3446—3

இமையவர் அஞ்சியோ ட(வ்)எதிர் வாரவர் தம்மையின்றி 3401—1
அரசினை ஏத்தவல் ல(வ்)அணி சம்பந்தன் பத்தும்வல்லார் 3404—3
அரவமே கச்சதா க(வ்)அசைத் தானலர் கொன்றையந்தார் 3408—1
அடிகணக் கன்பர வ(வ்)அய வந்தி அமர்ந்தவனே. 3417—4
அற்றவர் நாளுமேத் த(வ்)அய வந்தி அமர்ந்தவனே. 3419—4
ஏத்தர வங்கள்செய் ய(வ்)இருந் தானவன் எம்மிறையே. 3428—4
இயலொடு வானமேத் த(வ்)இருந் தானவன் எம்மிறையே. 3429—4
எக்கரை யாருமேத் த(வ்)இருந் தானவன் எம்மிறையே. 3430—4
பொடியணி மேனிமு ட(வ்)உரி கொண்டவன் புன்சடையான் 3431—2
இடிபடு வானமேத் த(வ்)இருந் தானவன் எம்மிறையே. 3431—4
இடுமணல் எக்கர்சூ ழ(வ்)இருந் தானவன் எம்மிறையே. 3434—4

விரவிவெண் னூல்கிடந் த(வ்)விரை யார்வரை மார்பனெந்தை 3408—2
வெந்தவெண் ணீறுபூ சி(வ்)விடை ஏறிய வேதகீதன் 3420—1
வேதமாய் வேள்வியா கி(வ்)விளங் கும்பொருள் வீடதாகிச் 3421—1
வெண்கொடி மாடமோங் கு(வ்)விறல் வெங்குரு நன்னகரான் 3437—1
தொடைநவில் கொன்றையொ டு(வ்)வன்னி துன்னெருக் கும்மணிந்த 3465—3

மாணியை நாடுகா லன்(ன்)உயிர் மாய்தரச் செற்றுக்காளி 3396—1
அமைதரு வல்லரக் கன்(ன்)அடர்த் தும்மலை அன்றெடுப்பக் 3401—2
நூனலம் தங்குமார் பி(ன்)னுகர் நீறணிந் தேறதேறி 3418—1
நிறையினார் நீலநக் க(ன்)னெடு மாநகர் என்றுதொண்டர் 3426—2
ஆதியன் ஆதிரை யன்(ன்)அன லாடிய ஆரழகன் 3449—1

சீரொடும் பாடலா டல்(ல்)இல யஞ்சிதை யாதகொள்கைத்
(தாரிடும் போர்விடை யன்தலை வன்தலை யேகலனா) 3406—2
அரவிரி கோடனீ டல்(ல்)அணி காவிரி யாற்றயலே 3427—1
குயில்பெடை யோடுபா டல்(ல்)உடை யான்குட மூக்கிடமா 3429—3
கொக்கரை யோடுபா டல்(ல்)உடை யான்குட மூக்கிடமா 3430—3
காலனை ஒருதை யில்(ல்)உயிர் வீடுசெய் வார்கழலான் 3450—1
எரித்தவன் முப்புரங் கள்ளியல் ஏழுல கில்(ல்)உயிரும் 3461—2

வாய்ந்தவன் முப்புரங் கள்(ள்)எரி செய்தவன் வக்கரையில் 3439—3
தானவர் முப்புரங் கள்(ள்)எரி செய்த தலைமகனே. 3442—4
பரவவல் லார்வினை கள்(ள்)அறுப் பானொரு பாகமும்பெண் 3456—3

சோதியாய் மங்கைபா க(ந்)நிலை தான்சொல்லல் ஆவதொன்றே 3421—2
உமையையொர் பாகம்வைத் த(ந்)நிலை தானுன்னல் ஆவதொன்றே 3422—2
நெடுமுடி பத்துடை ய(ந்)நிகழ் வாளரக் கன்னுடலைப் 3434—1
நெய்யணி சூலமோ டு(ந்)நிறை வெண்மழு வும்மரவும் 3441—1

காரெழில் வண்ணனோ டு(க்)கன கம்மனை யானும்காணா 3424—3
குரவிரி சோலைசூழ்ந் த(க்)குழ கன்குட மூக்கிடமா 3427—3
குழைவளர் சோலைசூழ்ந் த(க்)குழ கன்குட மூக்கிடமா 3432—3
கூரெரி யாகிநீண் ட(க்)குழ கன்குட மூக்கிடமா 3435—3
படம்புரி நாகமொ டு(த்)திரை பன்மணி யுங்கொணரும் 3464—3
முற்றும்வெண் ணீறணிந் த(த்)திரு மேனியன் மும்மையினான் 3467—2
பேரிட மாகக்கொண் ட(ப்)பிர மாபுரம் பேணுமினே. 3397—4
தழைவளர் மாவினல் ல(ப்)பல வின்கனி கட்டயங்கும் 3432—2
(‘கனிக டயங்கும்’ எனப் புணரற்பாலது, தளைநோக்கி டகரம் இரட்டித்தது.)
கொடுமடல் தங்குதெங் கு(ப்)பழம் வீழ்குட மூக்கிடமா 3434—3

இவ்வாறு கட்டளைக்கலித்துறை யாப்புப் பிறழாமை பற்றியே இம்மூவினத்து மெய்களும் விரித்தல்விகாரமாகப் பிறைவளைவுக்குறியுள் அகப்படுத்தப்பட்டுள்ளன. சொற்றொடர்களைப் பிரித்துக் காட்டுதலே நம் பதிப்பின் முழுநோக்கம் எனினும், யாப்பமைதியையும் கருதுவார்க்கு, சீர்பிரித்து வரையுமிடத்தே இவ்விரித்தல் பெரிதும் தேவைப்படுவன. முதல் தொகுதியுள் காட்டப்படாத இவ்விரித்தலை ஈண்டுக் கண்டுணர்ந்து யாப்பமைதி கொள்ளப்படும்.

தேவாரம்

பண்முறை

திருநாவுக்கரசர்
(அப்பர்)

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய

தேவாரத் திருப்பதிகங்கள்

நான்காம் திருமுறை

திரு அதிகைவீரட்டானம் IV-1 கொல்லி

கூற்று ஆயினஆறு விலக்ககிலீர் —
    கொடுமைபல செய்தன நான் அறியேன்;
ஏற்றாய் ! அடிக்கே இரவும் பகலும்
    பிரியாது வணங்குவன், எப்பொழுதும்;
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
    குடரோடு துடக்கி முடக்கியிட,
ஆற்றேன், அடியேன்;—அதிகைக் கெடில
    வீரட்டானத்து உறை அம்மானே ! 1

நெஞ்சம் உமக்கே இடம்ஆக வைத்தேன்;
    நினையாது ஒருபோதும் இருந்துஅறியேன்;
வஞ்சம்இது ஒப்பது கண்டுஅறியேன்;
    வயிற்றோடு துடக்கி முடக்கியிட,
நஞ்சுஆகி வந்து என்னை நலிவதனை
    நணுகாமல் துரந்து கரந்தும்இடீர்;
''அஞ்சேலும் !'' என்னீர்—அதிகைக் கெடில
    வீரட்டானத்து உறை அம்மானே ! 2

பணிந்தாரன பாவங்கள் பாற்ற வல்லீர் !
    படுவெண்தலையில் பலி கொண்டு உழல்வீர் !
துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழல்உற்றால்,
    சுடுகின்றதுசூலை தவிர்த்துஅருளீர்—
பிணிந்தார் பொடிகொண்டு மெய் பூச வல்லீர் !
    பெற்றம் ஏற்று உகந்தீர் ! சுற்றும் வெண்தலை கொண்டு
அணிந்தீர் ! அடிகேள் ! அதிகைக் கெடில
    வீரட்டானத்து உறை அம்மானே ! 3

முன்னம், அடியேன் அறியாமையினால்
    முனிந்து, என்னை நலிந்து முடக்கியிட,
பின்னை, அடியேன் உமக்கு ஆளும்பட்டேன்;
    சுடுகின்றதுசூலை தவிர்த்துஅருளீர்;
தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதுஅன்றே,
    தலைஆயவர்தம் கடன்ஆவதுதான் ?—
அன்னம்நடையார் அதிகைக் கெடில
    வீரட்டானத்து உறை அம்மானே ! 4

காத்து ஆள்பவர் காவல் இகழ்ந்தமையால்,
கரை நின்றவர், ''கண்டுகொள் !'' என்று சொல்லி,
நீத்துஆய கயம் புக நூக்கியிட,
நிலைக் கொள்ளும் வழித்துறை ஒன்று அறியேன்;
வார்த்தைஇது ஒப்பது கேட்டுஅறியேன்;
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார்—புனல் ஆர் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே ! 5

சலம், பூவொடு, தூபம், மறந்துஅறியேன்;
தமிழோடு இசைபாடல் மறந்துஅறியேன்;
நலம் தீங்கிலும் உன்னை மறந்துஅறியேன்;
உன் நாமம் என் நாவில் மறந்துஅறியேன்;
உலந்தார்தலையில் பலி கொண்டு உழல்வாய் !
உடலுள் உறு சூலை தவிர்த்து அருளாய் !
அலந்தேன், அடியேன்;—அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே ! 6

உயர்ந்தேன், மனைவாழ்க்கையும் ஒண் பொருளும்,
ஒருவர் தலை காவல் இலாமையினால்;
வயந்தே உமக்கு ஆட்செய்து வாழல்உற்றால்,
வலிக்கின்றதுசூலை தவிர்த்துஅருளீர்;
பயந்தே என் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட, நான்
அயர்ந்தேன், அடியேன்;—அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே ! 7

வலித்தேன் மனைவாழ்க்கை, மகிழ்ந்து அடியேன்,
வஞ்சம் மனம் ஒன்றும் இலாமையினால்;
சலித்தால் ஒருவர் துணை யாரும் இல்லை;
சங்கவெண்குழைக் காது உடை எம்பெருமான் !
கலித்தே என் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன,
அலுத்தேன், அடியேன்;—அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே ! 8

பொன் போல மிளிர்வது ஓர் மேனியினீர் !
புரிபுன்சடையீர் ! மெலியும் பிறையீர் !
துன்பே, கவலை, பிணி, என்று இவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும்இடீர் !
என்போலிகள் உம்மை இனித் தெளியார்,
அடியார் படுவது இதுவேஆகில்;
அன்பே அமையும் — அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே ! 9

போர்த்தாய், அங்கு ஓர் ஆனையின் ஈர்உரி-தோல் !
புறங்காடு அரங்கா நடம்ஆட வல்லாய் !
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக்கீழ்
அடர்த்திட்டு, அருள்செய்தஅது கருதாய்;
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்,
என் வேதனைஆன விலக்கியிடாய்—
ஆர்த்து ஆர் புனல் சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே ! 10

திரு அதிகைவீரட்டானம் IV-2 காந்தாரம்

சுண்ணவெண்சந்தனச்சாந்தும், சுடர்த் திங்கள்சூளாமணியும்,
வண்ண உரிவைஉடையும், வளரும் பவளநிறமும்,
அண்ணல் அரண் முரண் ஏறும், அகலம் வளாய அரவும்,
திண்ணென் கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் !—
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 1

பூண்டது ஓர் கேழல்எயிறும், பொன்திகழ் ஆமை புரள,
நீண்ட திண்தோள் வலம் சூழ்ந்து நிலாக்கதிர் போல வெண்நூலும்,
காண்தகு புள்ளின் சிறகும், கலந்த கட்டங்கக் கொடியும்,
ஈண்டு கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் ! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 2

ஒத்த வடத்து இள நாகம் உருத்திரபட்டம்இரண்டும்,
முத்துவடக் கண்டிகையும், முளைத்து, எழு மூஇலைவேலும்,
சித்தவடமும், அதிகைச் சேண் உயர் வீரட்டம் சூழ்ந்து
தத்தும் கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் ! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 3

மடமான்மறி, பொன்கலையும், மழு, பாம்பு, ஒரு கையில் வீணை,
குடமால்வரைய திண்தோளும், குனிசிலைக்கூத்தின் பயில்வும்,
இடம் மால் தழுவிய பாகம், இரு நிலன் ஏற்ற சுவடும்,
தடம் ஆர் கெடிலப் புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் ! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 4

பலபல காமத்தர் ஆகிப் பதைத்து எழுவார் மனத்துள்ளே
கலமலக்கிட்டுத் திரியும் கணபதி என்னும் களிறும்,
வலம் ஏந்து இரண்டுசுடரும், வான் கயிலாயமலையும்,
நலம் ஆர் கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் ! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 5

கரந்தன கொள்ளிவிளக்கும், கறங்கு துடியின் முழக்கும்,
பரந்த பதினெண்கணமும், பயின்றுஅறியாதன பாட்டும்,
அரங்குஇடை நூல் அறிவாளர் அறியப்படாதது ஓர் கூத்தும்,
நிரந்த கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் ! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 6

கொலை வரிவேங்கை அதளும், குலவோடு இலங்கு பொன்-தோடும்,
விலை பெறு சங்கக்குழையும், விலை இல் கபாலக்கலனும்,
மலைமகள் கைக்கொண்ட மார்பும், மணி ஆர்ந்து இலங்கு மிடறும்,
உலவு கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் ! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவ்தும் இல்லை. 7

ஆடல் புரிந்த நிலையும், அரையில் அசைத்த அரவும்,
பாடல் பயின்ற பல்பூதம், பல்ஆயிரம் கொள் கருவி
நாடற்கு அரியது ஓர் கூத்தும், நன்கு உயர் வீரட்டம் சூழ்ந்து
ஓடும் கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம் ! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 8

சூழும் அரவத்துகிலும், துகில் கிழி கோவணக்கீளும்,
யாழின் மொழியவள் அஞ்ச அஞ்சாது அரு வரை போன்ற
வேழம் உரித்த நிலையும், விரி பொழில் வீரட்டம் சூழ்ந்து
தாழும் கெடிலப்புனலும், உடையார்ஒருவர்தமர், நாம்! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 9

நரம்பு எழு கைகள் பிடித்து, நங்கை நடுங்க, மலையை
உரங்கள்எல்லாம் கொண்டு எடுத்தான் ஒன்பதும்ஒன்றும் அலற,
வரங்கள் கொடுத்து அருள்செய்வான், வளர் பொழில் வீரட்டம் சூழ்ந்து
நிரம்பு கெடிலப்புனலும் உடையார்ஒருவர்தமர், நாம்! —
அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை. 10

திரு ஐயாறு IV-3 காந்தாரம்

மாதர்ப் பிறைக்கண்ணியானை மலையான்மகளொடும் பாடி,
போதொடு நீர் சுமந்து ஏத்திப் புகுவார்அவர்பின் புகுவேன்,
யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்றபோது,
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன். 1

போழ்இளங்கண்ணியினானைப் பூந்துகிலாளொடும் பாடி,
''வாழியம், போற்றி!'' என்று ஏத்தி, வட்டம்இட்டு ஆடா வருவேன்,
ஆழிவலவன் நின்று ஏத்தும் ஐயாறு அடைகின்றபோது,
கோழி பெடையொடும் கூடிக் குளிர்ந்து வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன்! 2

எரிப்பிறைக்கண்ணியினானை ஏந்திழையாளொடும் பாடி,
முரித்த இலயங்கள் இட்டு, முகம் மலர்ந்து ஆடா வருவேன்,
அரித்து ஒழுகும் வெள்அருவி ஐயாறு அடைகின்றபோது,
வரிக்குயில் பேடையொடு ஆடி வைகி வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன்! 3

பிறைஇளங்கண்ணியினானைப் பெய்வளையாளொடும் பாடி,
துறை இளம் பல்மலர் தூவி, தோளைக் குளிரத் தொழுவேன்,
அறை இளம் பூங் குயில் ஆலும் ஐயாறு அடைகின்றபோது,
சிறை இளம் பேடையொடு ஆடிச் சேவல் வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன்! 4

ஏடுமதிக்கண்ணியானை ஏந்திழையாளொடும் பாடி,
காடொடு நாடும் மலையும் கைதொழுது ஆடா வருவேன்,
ஆடல் அமர்ந்து உறைகின்ற ஐயாறு அடைகின்றபோது,
பேடை மயிலொடும் கூடிப் பிணைந்து வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன்! 5

தண்மதிக்கண்ணியினானைத் தையல்நல்லாளொடும் பாடி,
உள் மெலி சிந்தையன்ஆகி, உணரா, உருகா, வருவேன்,
அண்ணல் அமர்ந்து உறைகின்ற ஐயாறு அடைகின்றபோது.,
வண்ணப் பகன்றிலொடு ஆடி வைகி வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன்! 6

கடிமதிக்கண்ணியினானைக் காரிகையாளொடும் பாடி,
வடிவொடு வண்ணம்இரண்டும் வாய் வேண்டுவ சொல்லி வாழ்வேன்,

அடிஇணை ஆர்க்கும் கழலான் ஐயாறு அடைகின்றபோது,
இடி குரல் அன்னது ஒர் ஏனம் இசைந்து வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன் ! 7

விரும்பு மதிக்கண்ணியானை மெல்லியலாளொடும் பாடி,
பெரும்புலர்காலை எழுந்து, பெறு மலர் கொய்யா வருவேன்,
அருங் கலம் பொன்மணி உந்தும் ஐயாறு அடைகின்றபோது,
கருங் கலை பேடையொடு ஆடிக் கலந்து வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன் ! 8

முற்பிறைக்கண்ணியினானை மொய்குழலாளொடும் பாடி,
பற்றிக் கயிறு அறுக்கில்லேன், பாடியும் ஆடா வருவேன்,
அற்று அருள் பெற்று நின்றாரோடு ஐயாறு அடைகின்றபோது,
நல்-துணைப் பேடையொடு ஆடி நாரை வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன் ! 9

திங்கள்-மதிக்கண்ணியானைத் தேமொழியாளொடும் பாடி,
''எங்கு அருள் நல்கும்கொல், எந்தை எனக்கு இனி ?'' என்னா வருவேன்,
அங்கு இள மங்கையர் ஆடும் ஐயாறு அடைகின்றபோது,
பைங்கிளி பேடையொடு ஆடிப் பறந்து வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன் ! 10

வளர்மதிக்கண்ணியினானை வார்குழலாளொடும் பாடி,
களவு படாதது ஒர் காலம் காண்பான் கடைக்கண் நிற்கின்றேன்,
அளவு படாதது ஒர் அன்போடு ஐயாறு அடைகின்றபோது,
இள மண நாகு தழுவி ஏறு வருவன கண்டேன்; —
கண்டேன், அவர் திருப்பாதம்; கண்டுஅறியாதன கண்டேன் ! 11

திரு ஆரூர் IV-4 காந்தாரம்

பாடு இளம் பூதத்தினானும், பவளச்செவ்வாய் வண்ணத்தானும்,
கூடு இளமென்முலையாளைக் கூடிய கோலத்தினானும்,
ஓடு இளவெண்பிறையானும், ஒளி திகழ் சூலத்தினானும்,
ஆடு இளம் பாம்பு அசைத்தானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 1

நரியைக் குதிரை செய்வானும், நரகரைத் தேவு செய்வானும்,
விரதம் கொண்டு ஆடவல்லானும், விச்சு இன்றி நாறு செய்வானும்,
முரசு அதிர்ந்து ஆனை முன் ஓட, முன் பணிந்து அன்பர்கள் ஏத்த,
அரவு அரைச் சாத்தி நின்றானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 2

நீறு மெய் பூச வல்லானும், நினைப்பவர் நெஞ்சத்து உளானும்,
ஏறு உகந்து ஏற வல்லானும், எரி புரை மேனியினானும்,
நாறு கரந்தையினானும், நால்மறைக் கண்டத்தினானும்,
ஆறு சடைக் கரந்தானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 3

கொம்பு நல் வேனிலவனைக் குழைய முறுவல்செய்தானும்,
செம்பு நல் கொண்ட எயில்மூன்றும் தீ எழக் கண் சிவந்தானும்,
வம்பு நல் கொன்றையினானும், வாள்கண்ணி வாட்டம்அது எய்த
அம்பர ஈர்உரியானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 4

ஊழி அளக்க வல்லானும், உகப்பவர் உச்சி உள்ளானும்,
தாழ்இளஞ்செஞ்சடையானும், தண்ணம் ஆர் திண் கொடியானும்,
தோழியர் தூது இடையாட, தொழுது அடியார்கள் வணங்க,
ஆழி வளைக் கையினானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 5

ஊர் திரை வேலை உள்ளானும், உலகு இறந்த ஒண் பொருளானும்,
சீர் தரு பாடல் உள்ளானும், செங்கண் விடைக் கொடியானும்,
வார்தருபூங்குழலாளை மருவி உடன்வைத்தவனும்,
ஆர்திரைநாள் உகந்தானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 6

தொழற்கு அம் கை துன்னி நின்றார்க்குத் தோன்றி அருள வல்லானும்;
கழற்கு அங்கை பல்மலர் கொண்டு காதல் கனற்ற நின்றானும்;
குழல் கங்கையாளை உள் வைத்துக் கோலச் சடை கரந்தானும்;
அழல், கம், கை ஏந்த வல்லானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 7

ஆயிரம்தாமரை போலும் ஆயிரம்சேவடியானும்,
ஆயிரம்பொன்வரை போலும் ஆயிரம்தோள் உடையானும்,
ஆயிரம்ஞாயிறு போலும் ஆயிரம் நீள் முடியானும்,
ஆயிரம்பேர் உகந்தானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 8

வீடு அரங்கா நிறுப்பானும், விசும்பினை வேதி தொடர
ஓடு அரங்குஆக வைத்தானும், ஓங்கி ஒர் ஊழி உள்ளானும்,
காடு அரங்கா மகிழ்ந்தானும், காரிகையார்கள் மனத்துள்
ஆடுஅரங்கத்துஇடையானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 9

பை அம் சுடர்விடு நாகப்பள்ளி கொள்வான் உள்ளத்தானும்,
கை அஞ்சு-நான்கு உடையானைக் கால்விரலால் அடர்த்தானும்,
பொய் அஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ் புரிந்தார்க்கு அருள்செய்யும்
ஐ-அஞ்சின் அப் புறத்தானும்—ஆரூர் அமர்ந்த அம்மானே. 10

IV-5

திரு ஆரூர் பழமொழி காந்தாரம்

‘‘மெய்எலாம் வெண்நீறு சண்ணித்த மேனியான் தாள் தொழாதே
உய்யல் ஆம்’’ என்று எண்ணி, உறி தூக்கி உழிதந்தேன் உள்ளம் விட்டு,
கொய் உலா மலர்ச்சோலைக் குயில் கூவ மயில் ஆலும் ஆரூரரைக்
கையினால்-தொழாது ஒழிந்து,—கனி இருக்கக் காய் கவர்ந்த கள்வனேனே! 1

என்பு இருத்தி, நரம்பு தோல் புகப் பெய்திட்டு, என்னை ஓர் உருவம் ஆக்கி,
இன்பு இருத்தி, முன்பு இருந்த வினை தீர்த்திட்டு, என் உள்ளம் கோயில் ஆக்கி,
அன்பு இருத்தி, அடியேனைக் கூழ் ஆட்கொண்டு அருள்செய்த ஆரூரர்தம்
முன்பு இருக்கும் விதி இன்றி,—முயல் விட்டுக் காக்கைப்பின் போனஆறே! 2

பெருகுவித்து என் பாவத்தை, பண்டுஎலாம் குண்டர்கள்தம் சொல்லே கேட்டு,
உருகுவித்து, என் உள்ளத்தினுள் இருந்த கள்ளத்தைத் தள்ளிப் போக்கி,
அருகுவித்து, பிணி காட்டி, ஆட்கொண்டு, பிணி தீர்த்த ஆரூரர்தம்
அருகு இருக்கும் விதி இன்றி,—அறம் இருக்க மறம் விலைக்குக் கொண்டஆறே! 3

குண்டனாய்த் தலை பறித்து, குவிமுலையார் நகை காணாது, உழிதர்வேனை —
பண்டமாப் படுத்து, என்னைப் பால் தலையில்-தெளித்து, தன் பாதம் காட்டி,
தொண்டுஎலாம் இசை பாட—தூ முறுவல் அருள்செய்யும் ஆரூரரைப்
பண்டுஎலாம் அறியாதே,—பனிநீரால் பரவை செயப் பாவித்தேனே! 4

துன்நாகத்தேன்ஆகி, துர்ச்சனவர் சொல் கேட்டு, துவர் வாய்க்கொண்டு(வ்)
என்னாகத் திரிதந்து, ஈங்கு இருகை ஏற்றிட உண்டேன், ஏழையேன்நான்,
பொன்ஆகத்து அடியேனைப் புகப் பெய்து பொருட்படுத்த ஆரூரரை
என் ஆகத்து இருத்தாதே,—ஏதன் போர்க்கு ஆதனாய் அகப்பட்டேனே ! 5

பப்பு ஓதிப் பவணனாய்ப் பறித்தது ஒரு தலையோடே திரிதர்வேனை
ஒப்பு ஓட ஓதுவித்து, என் உள்ளத்தினுள் இருந்து, அங்கு உறுதி காட்டி,
அப்போதைக்கு அப்போதும் அடியவர்கட்கு ஆர் அமுதுஆம் ஆரூரரை
எப்போதும் நினையாதே,—இருட்டு அறையில் மலடு கறந்து எய்த்தஆறே ! 6

கதி ஒன்றும் அறியாதே, கண் அழலத் தலை பறித்து, கையில் உண்டு,
பதி ஒன்று நெடுவீதிப் பலர் காண நகை நாணாது உழிதர்வேற்கு
மதி தந்த ஆரூரில் வார் தேனை வாய்மடுத்துப் பருகி உய்யும்
விதி இன்றி, மதிஇலியேன்,—விளக்கு இருக்க மின்மினித்தீக் காய்ந்தஆறே ! 7

பூவைஆய்த் தலை பறித்து, பொறி அற்ற சமண்நீசர் சொல்லே கேட்டு,
காவி சேர் கண் மடவார்க் கண்டு ஓடிக் கதவு அடைக்கும் கள்வனேன்தன்
ஆவியைப் போகாமே தவிர்த்து, என்னை ஆட்கொண்ட ஆரூரரைப்
பாவியேன் அறியாதே,—பாழ்ஊரில் பயிக்கம் புக்கு எய்த்தஆறே ! 8

ஒட்டாத வாள் அவுணர் புரம்மூன்றும் ஓர் அம்பின்வாயின் வீழக்
கட்டானை, காமனையும் காலனையும் கண்ணினொடு காலின் வீழ
அட்டானை, ஆரூரில் அம்மானை, ஆர்வச்செற்றக்குரோதம்
தட்டானை, சாராதே,—தவம் இருக்க அவம் செய்து தருக்கினேனே ! 9

மறுத்தான் ஓர் வல்அரக்கன் ஈர்-ஐந்துமுடியினொடு தோளும் தாளும்
இறுத்தானை, எழில் முளரித்தவிசின்மிசை இருந்தான்தன் தலையில் ஒன்றை
அறுத்தானை, ஆரூரில் அம்மானை, ஆலாலம் உண்டு கண்டம்
கறுத்தானை, கருதாதே,—கரும்பு இருக்க இரும்பு கடித்து எய்த்தஆறே ! 10

திருக் கழிப்பாலை IV-6 காந்தாரம்

வன பவளவாய் திறந்து, ‘‘வானவர்க்கும் தானவனே !’’ என்கின்றாளால்;
‘‘சின பவளத்திண்தோள்மேல் சேர்ந்து இலங்கும் வெண்நீற்றன்’’ என்கின்றாளால்;
‘‘அன பவள மேகலையோடு அப்பாலைக்கு அப்பாலான்’’ என்கின்றாளால்—
கன பவளம் சிந்தும் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ ! 1

‘‘வண்டு உலவு கொன்றை வளர்புன்சடையானே !’’ என்கின்றாளால்;
‘‘விண்டு அலர்ந்து நாறுவது ஓர் வெள்எருக்கநாள்மலர் உண்டு’’ என்கின்றாளால்;
‘‘உண்டு அயலே தோன்றுவது ஓர் உத்தரியப்பட்டுஉடையன்’’ என்கின்றாளால்—
கண்டல் அயலே தோன்றும் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ ! 2

‘‘பிறந்து இளைய திங்கள் எம்பெருமான் முடிமேலது’’ என்கின்றாளால்;
‘‘நிறம் கிளரும் குங்குமத்தின் மேனி அவன் நிறமே’’ என்கின்றாளால்;—
மறம் கிளர் வேல்கண்ணாள்,—‘‘மணி சேர் மிடற்றவனே !’’ என்கின்றாளால்—
கறங்கு ஓதம் மல்கும் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ ! 3

‘‘இரும்பு ஆர்ந்த சூலத்தன், ஏந்திய ஓர் வெண்மழுவன்’’ என்கின்றாளால்;
‘‘சுரும்பு ஆர்ந்த மலர்க்கொன்றைச் சுண்ணவெண்நீற்றவனே !’’ என்கின்றாளால்;
‘‘பெரும்பாலன்ஆகி ஓர் பிஞ்ஞகவேடத்தன்’’ என்கின்றாளால்—
கரும்பானல் பூக்கும் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ! 4

''பழி இலான், புகழ் உடையன், பால்நீற்றன், ஆன்ஏற்றன்'' என்கின்றாளால்;
''விழி உலாம் பெருந்தடங்கண் இரண்டு அல்ல, மூன்று உளவே!'' என்கின்றாளால்;
''சுழி உலாம் வரு கங்கை தோய்ந்த சடையவனே !'' என்கின்றாளால்—
கழி உலாம் சூழ்ந்த கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ ! 5

''பண் ஆர்ந்த வீணை பயின்ற விரலவனே!'' என்கின்றாளால்;
''எண்ணார் புரம் எரித்த எந்தைபெருமானே !'' என்கின்றாளால்;
''பண் ஆர் முழவு அதிர, பாடலொடு ஆடலனே !'' என்கின்றாளால்—
கண் ஆர் பூஞ்சோலைக் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ! 6

''முதிரும் சடைமுடிமேல் மூழ்கும், இள நாகம்'' என்கின்றாளால்;
''அது கண்டு, அதன் அருகே தோன்றும், இளமதியம்'' என்கின்றாளால்;
''சதுர் வெண்பளிக்குக் குழை காதில் மின்னிடுமே'' என்கின்றாளால்—
கதிர் முத்தம் சிந்தும் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ! 7

''ஓர் ஓதம் ஓதி உலகம் பலி திரிவான்'' என்கின்றாளால்;
''நீர் ஓதம் ஏற நிமிர்புன்சடையானே !'' என்கின்றாளால்;
''பார் ஓத மேனிப் பவளம் அவன் நிறமே'' என்கின்றாளால்—
கார்ஓதம் மல்கும் கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ ! 8

''வான் உலாம் திங்கள் வளர்புன்சடையானே!'' என்கின்றாளால்;
''ஊன் உலாம் வெண்தலை கொண்டு ஊர்ஊர் பலி திரிவான்'' என்கின்றாளால்;
''தேன் உலாம் கொன்றை திளைக்கும் திருமார்பன்'' என்கின்றாளால்—
கான் உலாம் சூழ்ந்த கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ ! 9

''அடர்ப்பு அரிய இராவணனை அரு வரைக்கீழ் அடர்த்தவனே !'' என்கின்றாளால்;
''சுடர்ப் பெரிய திருமேனிச் சுண்ணவெண்நீற்றவனே !'' என்கின்றாளால்;
''மடல் பெரிய ஆலின்கீழ் அறம் நால்வர்க்கு, அன்று, உரைத்தான்''
என்கின்றாளால்—
கடல்கருவி சூழ்ந்த கழிப்பாலை சேர்வானைக் கண்டாள்கொல்லோ! 10

திருக் கச்சி ஏகம்பம் IV-7 காந்தாரம்

கரவு ஆடும் வன்நெஞ்சர்க்கு அரியானை; கரவார்பால்
விரவாடும் பெருமானை; விடை ஏறும் வித்தகனை;
அரவு ஆட, சடை தாழ, அங்கையினில் அனல் ஏந்தி,
இரவு ஆடும் பெருமானை;—என் மனத்தே வைத்தேனே! 1

தேன் நோக்கும் கிளிமழலை உமை கேள்வன், செழும் பவளம்
தான் நோக்கும் திருமேனி தழல்உருஆம் சங்கரனை;
வான் நோக்கும் வளர்மதி சேர் சடையானை; வானோர்க்கும்
ஏனோர்க்கும் பெருமானை;—என் மனத்தே வைத்தேனே! 2

கைப் போது மலர் தூவி, காதலித்து, வானோர்கள்,
முப்போதும் முடி சாய்த்து, தொழ நின்ற முதல்வனை;
அப்போது மலர் தூவி, ஐம்புலனும் அகத்து அடக்கி,
எப்போதும் இனியானை;—என் மனத்தே வைத்தேனே ! 3

அண்டம்ஆய், ஆதிஆய், அருமறையோடு ஐம்பூதப்
பிண்டம்ஆய், உலகுக்கு ஓர் பெய்பொருள்ஆம் பிஞ்ஞகனை;
தொண்டர்தாம் மலர் தூவிச் சொல்மாலை புனைகின்ற
இண்டை சேர் சடையானை;—என் மனத்தே வைத்தேனே ! 4

ஆறு ஏறு சடையானை, ஆயிரம்பேர் அம்மானை,
பாறு ஏறு படுதலையில் பலி கொள்ளும் பரம்பரனை,
நீறு ஏறு திருமேனி நின்மலனை, நெடுந் தூவி
ஏறு ஏறும் பெருமானை;—என் மனத்தே வைத்தேனே! 5

தேசனை; தேசங்கள் தொழ நின்ற திருமாலால்
பூசனை; பூசனைகள் உகப்பானை; பூவின்கண்
வாசனை; மலை, நிலம், நீர், தீ, வளி, ஆகாசம், ஆம்
ஈசனை; எம்மானை;—என் மனத்தே வைத்தேனே ! 6

நல்லானை, நல் ஆன நால்மறையோடு ஆறுஅங்கம்
வல்லானை, வல்லார்கள் மனத்து உறையும் மைந்தனை,
சொல்லானை, சொல் ஆர்ந்த பொருளானை, துகள்ஏதும்
இல்லானை, எம்மானை;—என் மனத்தே வைத்தேனே ! 7

விரித்தானை, நால்வர்க்கு வெவ்வேறு வேதங்கள்;
புரித்தானை, பதம் சந்தி; பொருள்உருஆம் புண்ணியனை;
தரித்தானை, கங்கைநீர், தாழ்சடைமேல்; மதில்மூன்றும்
எரித்தானை; எம்மானை;—என் மனத்தே வைத்தேனே ! 8

ஆகம் பத்து அரவுஅணையான், அயன், அறிதற்கு அரியானை;
பாகம் பெண் ஆண் பாகம்ஆய் நின்ற பசுபதியை;
மா கம்பம் மறை ஓதும் இறையானை; மதில் கச்சி
ஏகம்பம் மேயானை;—என் மனத்தே வைத்தேனே ! 9

அடுத்த ஆனை உரித்தானை; அருச்சுனற்குப் பாசுபதம்
கொடுத்தானை; குலவரையே சிலைஆகக் கூர்அம்பு
தொடுத்தானை, புரம் எரிய; சுனை மல்கு கயிலாயம்
எடுத்தானைத் தடுத்தானை;—என் மனத்தே வைத்தேனே ! 10

IV-8

பொது “சிவன் எனும் ஓசை” பியந்தைக்காந்தாரம்

சிவன் எனும் ஓசைஅல்லது, அறையோ, உலகில்-திரு நின்ற செம்மை உளதே?—
அவனும் ஓர் ஐயம்உண்ணி; அதள் ஆடைஆவது; அதன்மேல் ஒர் ஆடல் அரவம்;
கவண் அளவு உள்ள உள்கு; கரிகாடு கோயில்; கலன்ஆவது ஓடு, கருதில்;
அவனது பெற்றி கண்டும், அவன் நீர்மை கண்டும், அகம் தேர்வர்,
தேவர்அவரே. 1

விரி கதிர் ஞாயிறு அல்லர்; மதி அல்லர்; வேதவிதி அல்லர்; விண்ணும் நிலனும்
திரிதரு வாயு அல்லர்; செறு தீயும் அல்லர்; தெளி நீரும் அல்லர், தெரியில்;
அரி தரு கண்ணியாளை ஒருபாகம்ஆக, அருள் காரணத்தில் வருவார்;
எரிஅரவுஆரம் மார்பர்; இமையாரும் அல்லர்; இமைப்பாரும் அல்லர், இவரே. 2

தேய் பொடிவெள்ளை பூசி, அதன்மேல் ஓர் திங்கள்-திலகம் பதித்த நுதலர்;
காய்கதிர் வேலைநீல ஒளி மா மிடற்றர்; கரிகாடர்; கால் ஓர் கழலர்;
வேய்உடன் நாடு தோளிஅவள் விம்ம, வெய்ய மழு வீசி, வேழஉரி போர்த்து,
ஏ, இவர் ஆடும்ஆறும் இவள் காணும்ஆறும் ! இதுதான் இவர்க்கு ஓர் இயல்பே? 3

வளர் பொறி ஆமை புல்கி, வளர்கோதை வைகி, வடி தோலும் நூலும் வளர,
கிளர் பொறிநாகம் ஒன்று மிளிர்கின்ற மார்பர்; கிளர் காடும், நாடும், மகிழ்வர்;
நளிர் பொறி மஞ்ஞை அன்ன தளிர் போன்ற சாயலவள் தோன்று வாய்மை பெருகி,
குளிர் பொறிவண்டு பாடு குழலாள்ஒருத்தி உளள்போல், குலாவி உடனே. 4

உறைவது காடுபோலும்; உரி-தோல் உடுப்பர்; விடை ஊர்வது; ஓடு கலனா;
இறைஇவர் வாழும் வண்ணம் இதுவேலும், ஈசர் ஒருபால் இசைந்தது; ஒருபால்,
பிறைநுதல் பேதைமாதர்உமை என்னும் நங்கை பிறழ் பாட நின்று பிணைவான்;
அறைகழல் வண்டு பாடும் அடிநீழல் ஆணை கடவாது, அமரர்உலகே. 5

கணி வளர் வேங்கையோடு கடிதிங்கள்கண்ணி, கழல்கால் சிலம்ப, அழகு ஆர்
அணி கிளர் ஆர வெள்ளை தவழ் சுண்ணவண்ணம் இயலார்; ஒருவர்; இருவர்;
மணி கிளர் மஞ்ஞை ஆல, மழை ஆடு சோலை மலையான்மகட்கும் இறைவர்;
அணி கிளர் அன்னவண்ணம், அவள் வண்ணவண்ணம்; அவர் வண்ணவண்ணம்,
அழலே. 6

நகை வளர் கொன்றை துன்று நகுவெண்தலையர்; நளிர்கங்கை தங்கு முடியர்;
மிகை வளர் வேதகீதம் முறையோடும் வல்ல, கறை கொள் மணிசெய் மிடறர்;
முகை வளர் கோதை மாதர் முனி பாடும்ஆறும், எரி ஆடும்ஆறும், இவர் கைப்
பகை வளர் நாகம் வீசி, மதி அங்கு மாறும்இதுபோலும், ஈசர் இயல்பே? 7

ஒளி வளர் கங்கை தங்கும் ஒளி; மால் அயன்தன் உடல் வெந்து வீய, சுடர் நீறு
அணி கிளர் ஆர வெள்ளை தவழ் சுண்ணவண்ணர்; தமியார் ஒருவர்; இருவர்;
களி கிளர் வேடம் உண்டு, ஒர் கடமா உரித்து உடைதோல் தொடுத்த கலனார்—
அணி கிளர் அன்ன தொல்லையவள் பாகம்ஆக, எழில் வேதம் ஓதுமவரே. 8

மலைமடமங்கையோடும், வடகங்கைநங்கை மணவாளர்ஆகி மகிழ்வர்;
தலை கலன்ஆக உண்டு, தனியே திரிந்து, தவவாணர்ஆகி முயல்வர்;
விலைஇலி சாந்தம் என்று வெறி நீறு பூசி விளையாடும் வேடவிகிர்தர்—
அலைகடல்வெள்ளம் முற்றும் அலறக் கடைந்த அழல்நஞ்சம் உண்டஅவரே. 9

புது விரி பொன் செய் ஓலை ஒரு காது, ஒர் காது சுரிசங்கம் நின்று புரள,
விதிவிதி வேதகீதம் ஒரு பாடும் ஓத, ஒரு பாடு மெல்ல நகுமால்;
மது விரி கொன்றை துன்று சடை பாகம் மாதர் குழல் பாகம்ஆக வருவர்;
இது இவர் வண்ணவண்ணம்; இவள் வண்ணவண்ணம்; எழில்வண்ணவண்ணம்,
இயல்பே ! 10

திரு அங்கமாலை IV-9 சாதாரி

தலையே, நீ வணங்காய் !—தலைமாலை தலைக்கு அணிந்து,
தலையாலே பலி தேரும் தலைவனை—தலையே, நீ வணங்காய் ! 1

கண்காள், காண்மின்களோ !—கடல்நஞ்சு உண்ட கண்டன்தன்னை,
எண்தோள் வீசி நின்று ஆடும் பிரான்தன்னை,—கண்காள், காண்மின்களோ ! 2

செவிகாள், கேண்மின்களோ !—சிவன், எம் இறை, செம்பவள
எரி போல் மேனிப் பிரான், திறம் எப்போதும், செவிகாள், கேண்மின்களோ ! 3

மூக்கே, நீ முரலாய் !—முதுகாடு உறை முக்கணனை,
வாக்கே நோக்கிய மங்கைமணாளனை,—மூக்கே, நீ முரலாய் ! 4

வாயே, வாழ்த்துகண்டாய் !—மதயானை உரி போர்த்து,
பேய் வாழ் காட்டுஅகத்து ஆடும் பிரான்தன்னை—வாயே, வாழ்த்துகண்டாய் ! 5

நெஞ்சே, நீ நினையாய் !—நிமிர்புன்சடை நின்மலனை,
மஞ்சு ஆடும் மலை மங்கை மணாளனை,—நெஞ்சே, நீ நினையாய் ! 6

கைகாள், கூப்பித் தொழீர் !—கடிமாமலர் தூவி நின்று,
பைவாய்ப் பாம்பு அரை ஆர்த்த பரமனை—கைகாள், கூப்பித் தொழீர் ! 7

ஆக்கையால் பயன் என்?—அரன் கோயில் வலம்வந்து,
பூக் கையால் அட்டி, ''போற்றி !'' என்னாத இவ் ஆக்கையால் பயன் என்? 8

கால்களால் பயன் என்?—கறைக்கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணம் சூழாக் கால்களால் பயன் என்? 9

உற்றார் ஆர் உளரோ?—உயிர் கொண்டு போம்பொழுது,
குற்றாலத்து உறை கூத்தன்அல்லால், நமக்கு உற்றார் ஆர் உளரோ? 10

இறுமாந்து இருப்பன்கொலோ?—ஈசன் பல்கணத்து எண்ணப்பட்டு,
சிறுமான்ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென்று, அங்கு இறுமாந்து
இருப்பன்கொலோ? 11

தேடிக் கண்டுகொண்டேன்!—திருமாலொடு நான்முகனும்
தேடித் தேட ஒணாத் தேவனை, என் உளே, தேடிக் கண்டுகொண்டேன் ! 12

திரு அதிகைவீரட்டானம் IV-10 காந்தாரபஞ்சமம்

முளைக்கதிர் இளம்பிறை மூழ்க, வெள்ளநீர்
வளைத்து எழு சடையினர்; மழலை வீணையர்;
திளைத்தது ஓர் மான்மறிக் கையர்—செய்யபொன்
கிளைத்துழித் தோன்றிடும் கெடிலவாணரே. 1

ஏறினர், ஏறினை; ஏழை தன் ஒரு-
கூறினர்; கூறினர், வேதம்; அங்கமும்
ஆறினர்; ஆறு இடு சடையர்; பக்கமும்
கீறின உடையினர்—கெடிலவாணரே. 2

விடம் திகழ் கெழுதரு மிடற்றர்; வெள்ளைநீறு
உடம்பு அழகு எழுதுவர்—முழுதும் வெண்நிலாப்
படர்ந்து அழகு எழுதரு சடையில் பாய்புனல்
கிடந்து அழகு எழுதிய கெடிலவாணரே. 3

விழும் மணி அயில்எயிற்றுஅம்பு, வெய்யது ஓர்
கொழு மணி நெடுவரை கொளுவிக் கோட்டினார்;
செழு மணிமிடற்றினர்; செய்யர்; வெய்யது ஓர்
கெழு மணி அரவினர்—கெடிலவாணரே. 4

குழுவினர் தொழுது எழும் அடியர்மேல் வினை
தழுவின கழுவுவர், பவளமேனியர்,
மழுவினர், மான்மறிக் கையர், மங்கையைக்
கெழுவின யோகினர்—கெடிலவாணரே. 5

அங்கையில் அனல்-எரி ஏந்தி, ஆறு எனும்
மங்கையைச் சடைஇடை மணப்பர்; மால்வரை-
நங்கையைப் பாகமும் நயப்பர்—தென்திசைக்
கெங்கைஅது எனப்படும் கெடிலவாணரே. 6

கழிந்தவர் தலை கலன் ஏந்தி, காடு உறைந்து,
''இழிந்தவர் ஒருவர் !'' என்று எள்க, வாழ்பவர்—
வழிந்து இழி மதுகரம் மிழற்ற, மந்திகள்
கிழிந்த தேன் நுகர்தரும் கெடிலவாணரே. 7

கிடந்த பாம்பு அருகு கண்டு அரிவை பேதுஉற,
கிடந்த பாம்பு அவளை ஓர் மயில் என்று ஐயுற,
கிடந்த நீர்ச் சடைமிசைப் பிறையும் ஏங்கவே,
கிடந்து தான் நகுதலைக் கெடிலவாணரே. 8

வெறி உறு விரிசடை புரள வீசி, ஓர்
பொறி உறு புலிஉரி அரையது ஆகவும்,
நெறி உறு குழல் உமை பாகம் ஆகவும்,
கிறி பட உழிதர்வர்—கெடிலவாணரே ! 9

பூண்ட தேர் அரக்கனை, பொரு இல் மால்வரைத்
தூண்டு தோள்அவை பட, அடர்த்த தாளினார்—
ஈண்டு நீர்க் கமலவாய், மேதி பாய்தர,
கீண்டு தேன் சொரிதரும் கெடிலவாணரே. 10

IV-11

பொது நமச்சிவாயத் திருப்பதிகம் காந்தாரபஞ்சமம்

சொல்-துணை வேதியன், சோதி வானவன்,
பொன்-துணைத் திருந்து அடி பொருந்தக் கைதொழ,
கல்-துணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச்சினும்,
நல்-துணை ஆவது நமச்சிவாயவே ! 1

பூவினுக்கு அருங் கலம் பொங்கு தாமரை;
ஆவினுக்கு அருங் கலம் அரன் அஞ்சுஆடுதல்;
கோவினுக்கு அருங் கலம் கோட்டம்இல்லது;
நாவினுக்கு அருங் கலம் நமச்சிவாயவே ! 2

விண் உற அடுக்கிய விறகின் வெவ்அழல்
உண்ணிய புகில், அவை ஒன்றும் இல்லைஆம்;
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே ! 3

இடுக்கண்பட்டு இருக்கினும், இரந்து யாரையும்,
''விடுக்கிற்பிரால் !'' என்று வினவுவோம்அல்லோம்;
அடுக்கல்கீழ்க் கிடக்கினும், அருளின், நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே ! 4

வெந்தநீறு அருங் கலம், விரதிகட்கு எலாம்;
அந்தணர்க்கு அருங் கலம் அருமறை, ஆறுஅங்கம்;
திங்களுக்கு அருங் கலம் திகழும் நீள் முடி;
நங்களுக்கு அருங் கலம் நமச்சிவாயவே ! 5

சலம் இலன்; சங்கரன்; சார்ந்தவர்க்கு அலால்
நலம் இலன்; நாள்தொறும் நல்குவான், நலன்;
குலம்இலர்ஆகிலும், குலத்திற்கு ஏற்பது ஓர்
நலம் மிகக் கொடுப்பது நமச்சிவாயவே ! 6

வீடினார், உலகினில் விழுமிய தொண்டர்கள்;
கூடினார், அந் நெறி; கூடிச் சென்றலும்,
ஓடினேன்; ஓடிச் சென்று உருவம் காண்டலும்,
நாடினேன்; நாடிற்று, நமச்சிவாயவே ! 7

இல்அக விளக்குஅது இருள் கெடுப்பது;
சொல்அக விளக்குஅது சோதி உள்ளது;
பல்அக விளக்குஅது பலரும் காண்பது;
நல் அக விளக்குஅது நமச்சிவாயவே ! 8

முன்நெறி ஆகிய முதல்வன் முக்கணன்-
தன் நெறியே சரண் ஆதல் திண்ணமே;
அந் நெறியே சென்று அங்கு அடைந்தவர்க்கு எலாம்
நன் நெறி ஆவது நமச்சிவாயவே ! 9

மாப்பிணை தழுவிய மாதுஓர்பாகத்தன்
பூப் பிணை திருந்து அடி பொருந்தக் கைதொழ,
நாப் பிணை தழுவிய நமச்சிவாயப்பத்து
ஏத்த வல்லார்தமக்கு இடுக்கண் இல்லையே. 10

திருப் பழனம் IV-12 பழந்தக்கராகம்

சொல்மாலை பயில்கின்ற குயில்இனங்காள் ! சொல்லீரே—
பல்மாலை வரிவண்டு பண் மிழற்றும் பழனத்தான்,
முன்மாலை நகு திங்கள்முகிழ் விளங்கும் முடிச் சென்னிப்
பொன் மாலை மார்பன்(ன்), என் புது நலம் உண்டு இகழ்வானோ ? 1

கண்டகங்காள் ! முண்டகங்காள் ! கைதைகாள் ! நெய்தல்காள் !—
பண்டரங்கவேடத்தான், பாட்டு ஓவாப் பழனத்தான்,
வண்டு உலா(அ)ம் தடம் மூழ்கி மற்று அவன் என் தளிர்வண்ணம்
கொண்ட(ந்) நாள் தான் அறிவான், குறிக்கொள்ளாதொழிவானோ ? 2

மனைக் காஞ்சி இளங் குருகே ! மறந்தாயோ ?—மத முகத்த
பனைக்கைமா உரி போர்த்தான், பலர் பாடும் பழனத்தான்,
நினைக்கின்ற நினைப்புஎல்லாம் உரையாயோ, நிகழ் வண்டே ?—
சுனைக்குவளைமலர்க்கண்ணாள் சொல்-தூதுஆய்ச் சோர்வாளோ ? 3

புதியைஆய் இனியைஆம் பூந் தென்றால் ! ‘‘புறங்காடு
பதிஆவது இது’’ என்று பலர் பாடும் பழனத்தான்,
மதியாதார் வேள்விதனை மதித்திட்ட மதி கங்கை
விதியாளன், என் உயிர்மேல் விளையாடல் விடுத்தானோ ? 4

மண் பொருந்தி வாழ்பவர்க்கும், மா தீர்த்த வேதியர்க்கும்,
விண் பொருந்து தேவர்க்கும், வீடுபேறுஆய் நின்றானை;
பண் பொருந்த இசை பாடும் பழனம் சேர் அப்பனை; என்
கண் பொருந்தும்போழ்தத்தும், கைவிட நான் கடவேனோ ? 5

பொங்கு ஓதமால்கடலில் புறம்புறம் போய் இரை தேரும்
செங்கால் வெண் மடநாராய் ! செயல்படுவது அறியேன், நான் !
அம் கோல வளை கவர்ந்தான், அணி பொழில் சூழ் பழனத்தான்,
தம் கோல நறுங்கொன்றைத்தார் அருளாதொழிவானோ? 6

துணை ஆர முயங்கிப் போய்த் துறை சேரும் மடநாராய் !
பணை ஆரவாரத்தான், பாட்டு ஓவாப் பழனத்தான்,
கணை ஆர இரு விசும்பில் கடிஅரணம் பொடிசெய்த
இணை ஆர மார்பன்(ன்) என் எழில் நலம் உண்டு இகழ்வானோ ? 7

கூவைவாய் மணி வரன்றிக் கொழித்து ஓடும் காவிரிப்பூம்-
பாவை வாய் முத்து இலங்கப் பாய்ந்து ஆடும் பழனத்தான்,
கோவைவாய் மலைமகள் கோன், கொல் ஏற்றின் கொடிஆடைப்
பூவைகாள் ! மழலைகாள் ! போகாத பொழுது உளதே ? 8

‘‘புள்ளிமான் பொறிஅரவம், புள்உயர்த்தான் மணி நாகப்-
பள்ளியான் தொழுது ஏத்த இருக்கின்ற பழனத்தான்
உள்ளுவார் வினை தீர்க்கும்’’ என்று உரைப்பர், உலகுஎல்லாம்;
கள்ளியேன் நான் இவற்கு என் கன வளையும் கடவேனோ ? 9

வஞ்சித்து என் வளை கவர்ந்தான் வாரானேஆயிடினும்,
பஞ்சிக்கால் சிறகுஅன்னம் பரந்து ஆர்க்கும் பழனத்தான்—
அஞ்சிப் போய்க் கலி மெலிய அழல் ஓம்பும் அப்பூதி
குஞ்சிப் பூஆய் நின்ற சேவடியாய் !—கோடு இயையே ! 10

திரு ஐயாறு IV-13 பழந்தக்கராகம்

விடகிலேன், அடிநாயேன்; வேண்டியக்கால் யாதொன்றும்
இடகிலேன்; அமணர்கள்தம் அறவுரை கேட்டு அலமந்தேன்;
தொடர்கின்றேன்,—உன்னுடைய தூ மலர்ச்சேவடி காண்பான்,—
அடைகின்றேன்; ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 1

செம்பவளத்திருஉருவர், திகழ் சோதி, குழைக் காதர்,
கொம்பு அமரும் கொடிமருங்குல் கோல்வளையாள் ஒருபாகர்,
வம்பு அவிழும் மலர்க்கொன்றை வளர்சடைமேல் வைத்து உகந்த
அம் பவளஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 2

நணியானே ! சேயானே ! நம்பானே ! செம்பொன்னின்
துணியானே ! தோலானே ! சுண்ணவெண்நீற்றானே !
மணியானே ! வானவர்க்கு மருந்துஆகிப் பிணி தீர்க்கும்
அணியானே ! ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 3

ஊழித்தீஆய் நின்றாய் ! உள்குவார் உள்ளத்தாய் !
வாழித் தீஆய் நின்றாய் ! வாழ்த்துவார் வாயானே !
பாழித் தீஆய் நின்றாய் ! படர்சடைமேல் பனிமதியம்
ஆழித் தீ ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 4

சடையானே ! சடைஇடையே தவழும் தண்மதியானே !
விடையானே ! விடை ஏறிப் புரம் எரித்த வித்தகனே !
உடையானே ! உடைதலை கொண்டு ஊர்ஊர் உண் பலிக்கு உழலும்
அடையானே ! ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 5

‘‘நீரானே ! தீயானே ! நெதியானே ! கதியானே !
ஊரானே ! உலகானே ! உடலானே ! உயிரானே !
பேரானே ! பிறைசூடீ ! பிணி தீர்க்கும் பெருமான் !’’ என்று
ஆராத ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 6

கண் ஆனாய் ! மணி ஆனாய் ! கருத்து ஆனாய் ! அருத்து ஆனாய் !
எண் ஆனாய் ! எழுத்து ஆனாய் ! எழுத்தினுக்கு ஓர் இயல்பு ஆனாய் !
விண் ஆனாய் ! விண்இடையே புரம் எரித்த வேதியனே !
அண்ஆன ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 7

மின் ஆனாய் ! உரும் ஆனாய் ! வேதத்தின் பொருள் ஆனாய் !
பொன் ஆனாய் ! மணி ஆனாய் ! பொருகடல்வாய் முத்து ஆனாய் !
நின் ஆனார் இருவர்க்கும் காண்பு அரிய நிமிர் சோதி
அன்னானே ! ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 8

முத்து இசையும் புனல் பொன்னி மொய் பவளம் கொழித்து உந்தப்
பத்தர்பலர் நீர் மூழ்கிப் பலகாலும் பணிந்து ஏத்த,
எத்திசையும் வானவர்கள், ''எம்பெருமான்'' என இறைஞ்சும்
அத் திசைஆம் ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 9

கருவரை சூழ் கடல் இலங்கைக் கோமானைக் கருத்து அழியத்
திருவிரலால் உதகரணம்செய்து உகந்த சிவமூர்த்தி,
பெருவரை சூழ் வையகத்தார், ''பேர் நந்தி'' என்று ஏத்தும்
அரு வரை சூழ் ஐயாறர்க்கு ஆள்ஆய் நான் உய்ந்தேனே ! 10

IV-14

பொது தசபுராணம் பழம்பஞ்சுரம்

பருவரை ஒன்று சுற்றி அரவம் கைவிட்ட இமையோர் இரிந்து பயம்ஆய்,
திரு நெடுமால் நிறத்தை அடுவான் விசும்பு சுடுவான் எழுந்து விசை போய்ப்
பெருகிட, ''மற்று இதற்கு ஓர் பிதிகாரம்ஒன்றை அருளாய், பிரானே !'' எனலும்,
அருள்கொடு மா விடத்தை, எரியாமல், உண்டஅவன் அண்டர்அண்டர்அரசே. 1

நிரவு ஒலி வெள்ளம் மண்டி நெடுஅண்டம் மூட, நிலம் நின்று தம்பம்அது அப்
பரம் ஒரு தெய்வம் எய்த, ''இது ஒப்பது இல்லை'' இருபாலும் நின்று பணியப்
பிரமனும் மாலும் மேலைமுடியோடு பாதம் அறியாமை நின்ற பெரியோன்,
பரமுதல்ஆய தேவர், சிவன்ஆயமூர்த்திஅவன், ஆம், நமக்கு ஓர் சரணே. 2

காலமும் நாள்கள் ஊழி படையாமுன், ஏகஉருஆகி, மூவர்உருவில்,
சாலவும் ஆகி மிக்க சமயங்கள்ஆறின் உருஆகி, நின்ற தழலோன்,
ஞாலமும் மேலைவிண்ணொடு உலகுஏழும் உண்டு குறள்ஆய் ஓர் ஆலின்இலைமேல்
பாலனும் ஆயவர்க்கு ஓர் பரம்ஆயமூர்த்திஅவன், ஆம், நமக்கு ஓர் சரணே. 3

நீடு உயர்விண்ணும் மண்ணும் நெடுவேலை குன்றொடு உலகுஏழும் எங்கும் நலியச்
சூடிய கையர் ஆகி, இமையோர்கணங்கள் துதி ஓதி நின்று தொழலும்,
ஓடிய தாருகன்தன் உடலம் பிளந்தும் ஒழியாத கோபம் ஒழிய
ஆடிய மாநடத்து எம் அனல்ஆடி பாதம்அவை ஆம், நமக்கு ஓர் சரணே. 4

நிலை வலி இன்றி எங்கும் நிலனோடு விண்ணும் நிதனம்செய்து ஓடு புரம்மூன்று
அலை நலிவு அஞ்சி ஓடி, அரியோடு தேவர் அரணம் புக, தன் அருளால்—
கொலை நலி வாளி, மூள அரவு, அம் கை நாணும், அனல் பாய நீறு புரம் ஆம்—
மலை சிலை கையில் ஒல்க வளைவித்த வள்ளல்அவன், ஆம், நமக்கு ஓர் சரணே. 5

நீல நல் மேனி, செங்கண், வளை வெள்எயிற்றின், எரிகேசன், நேடி வரும் நாள்,—
காலை நல் மாலை கொண்டு வழிபாடு செய்யும் அளவின்கண், வந்து குறுகிப்
பாலனை ஓடஓடப் பயம் எய்துவித்த, உயிர் வவ்வு பாசம் விடும்—அக்
காலனை வீடுசெய்த கழல்போலும், அண்டர் தொழுது ஓது சூடு கழலே. 6

உயர் தவம் மிக்க தக்கன் உயர் வேள்விதன்னில்,—அவி உண்ண வந்த இமையோர்,
பயம் உறும் எச்சன், அங்கு மதியோனும், உற்றபடி கண்டு நின்று பயம்ஆய்—
அயனொடு மாலும், ''எங்கள் அறியாமை ஆதி, கமி!'' என்று இறைஞ்சி அகல,
சயம் உறு தன்மை கண்ட தழல்வண்ணன், எந்தை, கழல் கண்டுகொள்கை
கடனே. 7

நலம் மலி மங்கைநங்கை விளையாடி ஓடி நயனத்தலங்கள் கரமா,
உலகினைஏழும் முற்றும் இருள் மூடமூட, இருள் ஓட, நெற்றி ஒரு கண்
அலர்தர, அஞ்சி மற்றை நயனம் கைவிட்டு மடவாள் இறைஞ்ச, மதி போல்
அலர்தரு சோதி போல அலர்வித்த முக்கண்அவன், ஆம், நமக்கு ஒர் சரணே. 8

கழை படு காடு தென்றல் குயில் கூவ, அஞ்சுகணையோன்,—அணைந்து புகலும்
மழைவடிவண்ணன் எண்ணி மகவோனை விட்ட—மலர்ஆன தொட்ட மதனன்
எழில் பொடி வெந்து வீழ, இமையோர்கணங்கள் எரி என்று இறைஞ்சி அகல,
தழல் படு நெற்றி ஒற்றை நயனம் சிவந்த தழல்வண்ணன்எந்தை சரணே. 9

தட மலர்ஆயிரங்கள் குறைவு ஒன்றுஅது ஆக, நிறைவு என்று தன் கண்அதனால்
உடன்வழிபாடு செய்த திருமாலை, எந்தைபெருமான், உகந்து மிகவும்
சுடர் அடியான் முயன்று சுழல்வித்து, அரக்கன் இதயம் பிளந்த கொடுமை
அடல் வலி ஆழி, ஆழியவனுக்கு அளித்தஅவன், ஆம், நமக்கு ஒர் சரணே. 10

''கடுகிய தேர் செலாது, கயிலாயம்மீது; கருதேல், உன் வீரம்; ஒழி, நீ!
முடுகுவது அன்று, தன்மம்'' என நின்று பாகன் மொழிவானை நன்று முனியா,
''விடுவிடு'' என்று சென்று விரைவுஉற்று, அரக்கன், வரை உற்று எடுக்க,
முடிதோள்
நெடுநெடு இற்று வீழ, விரல் உற்ற பாதம் நினைவுஉற்றது, என்தன் மனனே. 11

IV-15

பொது பாவநாசத் திருப்பதிகம் பழம்பஞ்சுரம்

பற்றுஅற்றார் சேர் பழம்பதியை, பாசூர் நிலாய பவளத்தை,
சிற்றம்பலத்து எம் திகழ்கனியை, தீண்டற்கு அரிய திருஉருவை,
வெற்றியூரில் விரிசுடரை, விமலர்கோனை, திரை சூழ்ந்த
ஒற்றியூர் எம் உத்தமனை, உள்ளத்துள்ளே வைத்தேனே. 1

ஆனைக்காவில் அணங்கினை, ஆரூர் நிலாய அம்மானை,
கானப்பேரூர்க் கட்டியை, கானூர் முளைத்த கரும்பினை,
வானப் பேரார் வந்து ஏத்தும் வாய்மூர் வாழும் வலம்புரியை,
மானக் கயிலைமழகளிற்றை, மதியை, சுடரை, மறவேனே. 2

மதிஅம்கண்ணி நாயிற்றை, மயக்கம் தீர்க்கும் மருந்தினை,
அதிகைமூதூர் அரசினை, ஐயாறு அமர்ந்த ஐயனை,
விதியை, புகழை, வானோர்கள் வேண்டித் தேடும் விளக்கினை,
நெதியை, ஞானக்கொழுந்தினை, நினைந்தேற்கு உள்ளம் நிறைந்ததே. 3

புறம்பயத்து எம் முத்தினை, புகலூர் இலங்கு பொன்னினை,
உறந்தை ஓங்கு சிராப்பள்ளி உலகம் விளக்கும் ஞாயிற்றை,
கறங்கும் அருவிக் கழுக்குன்றில் காண்பார் காணும் கண்ணானை,
அறம் சூழ் அதிகைவீரட்டத்து அரிமான்ஏற்றை, அடைந்தேனே. 4

கோலக்காவில் குருமணியை, குடமூக்கு உறையும் விடம்உணியை,
ஆலங்காட்டில் அம் தேனை, அமரர் சென்னி ஆய்மலரை,

பாலில்-திகழும் பைங்கனியை, பராய்த்துறை எம் பசும்பொன்னை,
சூலத்தானை, துணைஇலியை, தோளைக் குளிரத் தொழுதேனே. 5

மருகல் உறை மாணிக்கத்தை, வலஞ்சுழி(ய்)யின் மாலையை,
கருகாவூரில் கற்பகத்தை, காண்டற்கு அரிய கதிர்ஒளியை,
பெருவேளூர் எம் பிறப்புஇலியை, பேணுவார்கள் பிரிவு அரிய
திரு வாஞ்சியத்து எம் செல்வனை, சிந்தையுள்ளே வைத்தேனே. 6

எழில் ஆர் இராசசிங்கத்தை, இராமேச்சுரத்து எம் எழில் ஏற்றை,
குழல்ஆர்கோதை வரைமார்பில் குற்றாலத்து எம் கூத்தனை,
நிழல் ஆர் சோலை நெடுங்களத்து நிலாய நித்தமணாளனை,
அழல் ஆர் வண்ணத்து அம்மானை, அன்பில் அணைத்து வைத்தேனே. 7

மாலைத் தோன்றும் வளர்மதியை, மறைக்காட்டு உறையும் மணாளனை,
ஆலைக் கரும்பின் இன்சாற்றை, அண்ணாமலை எம் அண்ணலை,
சோலைத் துருத்திநகர் மேய சுடரில்-திகழும் துளக்குஇலியை,
மேலைவானோர்பெருமானை, விருப்பால் விழுங்கியிட்டேனே. 8

சோற்றுத்துறை எம் சோதியை, துருத்தி மேய தூமணியை,
ஆற்றில் பழனத்து அம்மானை, ஆலவாய் எம் அருமணியை,
நீரில் பொலிந்த நிமிர்திண்தோள் நெய்த்தானத்து எம் நிலாச்சுடரைத்
தோற்றக் கடலை, அடல்ஏற்றை, தோளைக் குளிரத் தொழுதேனே. 9

புத்தூர் உறையும் புனிதனை, பூவணத்து எம் போர்ஏற்றை,
வித்துஆய் மிழலை முளைத்தானை, வேள்விக்குடி எம் வேதியனை,
பொய்த்தார் புரம்மூன்று எரித்தானை, பொதியில் மேய புராணனை,
வைத்தேன், என்தன் மனத்துள்ளே—மாத்தூர் மேய மருந்தையே. 10

முந்தித் தானே முளைத்தானை, மூரி வெள்ஏறு ஊர்ந்தானை,
அந்திச் செவ்வான் படியானை, அரக்கன் ஆற்றல் அழித்தானை,
சிந்தை வெள்ளப்புனல்ஆட்டிச் செஞ்சொல்மாலை அடிச் சேர்த்தி,
''எந்தைபெம்மான், என் எம்மான்'' என்பார் பாவம் நாசமே. 11

திருப் புகலூர் IV-16 இந்தளம்

செய்யர்; வெண்நூலர்; கருமான்மறி துள்ளும்
கையர்; கனைகழல் கட்டிய காலினர்;
மெய்யர், மெய்ந்நின்றவர்க்கு; அல்லாதவர்க்கு என்றும்
பொய்யர்—புகலூர்ப் புரிசடையாரே. 1

மேக நல் ஊர்தியர், மின் போல் மிளிர்சடைப்
பாகமதிநுதலாளை ஓர்பாகத்தர்,
நாகவளையினர், நாகஉடையினர்,
போகர்—புகலூர்ப் புரிசடையாரே. 2

பெருந் தாழ்சடைமுடிமேல் பிறை சூடி,
கருந்தாழ்குழலியும் தாமும் கலந்து,
திருந்தா மனம் உடையார்திறத்து என்றும்
பொருந்தார்—புகலூர்ப் புரிசடையாரே. 3

அக்கு ஆர் அணி வடம் ஆகத்தர், நாகத்தர்,
நக்கு ஆர் இளமதிக் கண்ணியர், நாள்தொறும்
உக்கார்தலை பிடித்து உண் பலிக்கு ஊர்தொறும்
புக்கார்—புகலூர்ப் புரிசடையாரே. 4

ஆர்த்து ஆர்உயிர் அடும் அந்தகன்தன் உடல்
பேர்த்தார், பிறைநுதல் பெண்ணின்நல்லாள் உட்கக்
கூர்த்து ஆர் மருப்பின் கொலைக் களிற்று ஈர்உரி
போர்த்தார்—புகலூர்ப் புரிசடையாரே. 5

உதைத்தார், மறலி உருள ஓர் காலால்;
சிதைத்தார், திகழ் தக்கன் செய்த நல் வேள்வி;
பதைத்தார் சிரம்கரம் கொண்டு, வெய்யோன் கண்
புதைத்தார்—புகலூர்ப் புரிசடையாரே. 6

தூ மன் சுறவம் துதைந்த கொடி உடைக்
காமன் கணை வலம் காய்ந்த முக்கண்ணினர்,
சேமநெறியினர்; சீரைஉடையவர்—
பூ மன் புகலூர்ப் புரிசடையாரே. 7

கரிந்தார் தலையர்; கடிமதில்மூன்றும்,
தெரிந்தார், கணைகள், செழுந் தழல் உண்ண;
விரிந்து ஆர் சடைமேல் விரி புனல் கங்கை
புரிந்தார்—புகலூர்ப் புரிசடையாரே. 8

ஈண்டு ஆர் அழலின், இருவரும் கைதொழ,
நீண்டார், நெடுந் தடுமாற்றநிலை அஞ்ச;
மாண்டார்தம் என்பும் மலர்க்கொன்றைமாலையும்
பூண்டார்—புகலூர்ப் புரிசடையாரே. 9

கறுத்தார், மணிகண்டம்; கால்விரல் ஊன்றி
இறுத்தார், இலங்கையர்கோன் முடிபத்தும்;
அறுத்தார், புலன்ஐந்தும்; ஆயிழை பாகம்
பொறுத்தார்—புகலூர்ப் புரிசடையாரே. 10

திரு ஆரூர் அரநெறி IV-17 இந்தளம்

எத் தீப் புகினும் எமக்கு ஒரு தீது இலை;
தெத்தேஎன முரன்று எம் உள் உழிதர்வர்;
முத்தீ அனையது ஓர் மூஇலைவேல் பிடித்து
அத் தீநிறத்தார்—அரநெறியாரே. 1

வீரமும் பூண்பர்; விசயனொடு ஆயது ஓர்
தாரமும் பூண்பர்; தமக்கு அன்புபட்டவர்
பாரமும் பூண்பர்; நன் பைங்கண் மிளிர் அரவு-
ஆரமும் பூண்பர்—அரநெறியாரே. 2

தஞ்ச வண்ணத்தர்; சடையினர்; தாமும் ஓர்
வஞ்ச வண்ணத்தர்; வண்டு ஆர் குழலாளொடும்
துஞ்ச வண்ணத்தர்; துஞ்சாத கண்ணார் தொழும்
அஞ்ச வண்ணத்தர்—அரநெறியாரே. 3

விழித்தனர், காமனை வீழ்தர; விண் நின்று
இழித்தனர், கங்கையை; ஏத்தினர் பாவம்
கழித்தனர்; கல் சூழ் கடிஅரண்மூன்றும்
அழித்தனர்—ஆரூர் அரநெறியாரே. 4

துற்றவர், வெண்தலையில்; சுருள் கோவணம்
தற்றவர்; தம் வினைஆனஎலாம் அற
அற்றவர்; ஆரூர் அரநெறி கைதொழ
உற்றவர்தாம் ஒளி பெற்றனர்தாமே. 5

கூடு அரவத்தர்; குரல் கிண்கிணி அடி
நீடு அரவத்தர்; முன்மாலைஇடை இருள்
பாடு அரவத்தர்; பணம்அஞ்சுபை விரித்து
ஆடு அரவத்தர்—அரநெறியாரே. 6

கூட வல்லார், குறிப்பில்(ல்), உமையாளொடும்;
பாட வல்லார்; பயின்று அந்தியும் சந்தியும்
ஆட வல்லார்; திரு ஆரூர் அரநெறி
நாட வல்லார் வினை வீட வல்லாரே. 7

பாலை நகு பனிவெண்மதி, பைங்கொன்றை,
மாலையும் கண்ணியும் ஆவன; சேவடி
காலையும் மாலையும் கைதொழுவார் மனம்
ஆலயம்—ஆரூர் அரநெறியார்க்கே. 8

முடி வண்ணம் வான மின்வண்ணம்; தம் மார்பின்
பொடி வண்ணம் தம் புகழ் ஊர்தியின் வண்ணம்;
படி வண்ணம் பாற்கடல் வண்ணம்; செஞ்ஞாயிறு
அடி வண்ணம்—ஆரூர் அரநெறியார்க்கே. 9

பொன் நவில் புன்சடையான் அடியின் நிழல்
இன்அருள் சூடி எள்காதும் இராப்பகல்,
மன்னவர் கின்னரர் வானவர்தாம், தொழும்
அன்னவர்—ஆரூர் அரநெறியாரே. 10

பொருள் மன்னனைப் பற்றிப் புட்பகம் கொண்ட
மருள் மன்னனை எற்றி, வாள்உடன் ஈந்து,
கருள் மன்னு கண்டம் கறுக்க நஞ்சு உண்ட
அருள் மன்னர்—ஆரூர் அரநெறியாரே. 11

IV-18

பொது   விடம் தீர்த்த திருப்பதிகம்   இந்தளம்

ஒன்றுகொல்ஆம் அவர் சிந்தை உயர் வரை;
ஒன்றுகொல்ஆம் உயரும் மதி சூடுவர்;
ஒன்றுகொல்ஆம் இடு வெண்தலை கையது;
ஒன்றுகொல்ஆம் அவர் ஊர்வதுதானே. 1

இரண்டுகொல்ஆம் இமையோர் தொழு பாதம்;
இரண்டுகொல்ஆம் இலங்கும் குழை; பெண், ஆண்,
இரண்டுகொல்ஆம் உருவம்; சிறு மான், மழு,
இரண்டுகொல்ஆம் அவர் ஏந்தினதாமே. 2

மூன்றுகொல்ஆம் அவர் கண்நுதல் ஆவன;
மூன்றுகொல்ஆம் அவர் சூலத்தின் மொய் இலை;
மூன்றுகொல்ஆம் கணை, கையது வில், நாண்;
மூன்றுகொல்ஆம் புரம் எய்தனதாமே. 3

நாலுகொல்ஆம் அவர்தம் முகம்ஆவன;
நாலுகொல்ஆம் சனனம் முதல்-தோற்றமும்;
நாலுகொல்ஆம் அவர் ஊர்தியின் பாதங்கள்;
நாலுகொல்ஆம் மறை பாடினதாமே. 4

அஞ்சுகொல்ஆம் அவர் ஆடுஅரவின் படம்;
அஞ்சுகொல்ஆம் அவர் வெல் புலன்ஆவன;
அஞ்சுகொல்ஆம் அவர் காயப்பட்டான் கணை;
அஞ்சுகொல்ஆம் அவர் ஆடினதாமே. 5

ஆறுகொல்ஆம் அவர் அங்கம் படைத்தன;
ஆறுகொல்ஆம் அவர்தம் மகனார் முகம்;
ஆறுகொல்ஆம் அவர் தார்மிசை வண்டின் கால்;
ஆறுகொல்ஆம் சுவை ஆக்கினதாமே. 6

ஏழுகொல்ஆம் அவர் ஊழி படைத்தன;
ஏழுகொல்ஆம் அவர் கண்ட இருங்கடல்;
ஏழுகொல்ஆம் அவர் ஆளும் உலகங்கள்;
ஏழுகொல்ஆம் இசை ஆக்கினதாமே. 7

எட்டுக்கொல்ஆம் அவர் ஈறு இல் பெருங் குணம்;
எட்டுக்கொல்ஆம் அவர் சூடும் இனமலர்;
எட்டுக்கொல்ஆம் அவர் தோள்இணைஆவன;
எட்டுக்கொல்ஆம் திசை ஆக்கினதாமே. 8

ஒன்பதுபோல் அவர் வாசல் வகுத்தன;
ஒன்பதுபோல் அவர் மார்பினில் நூல்-இழை;
ஒன்பதுபோல் அவர் கோலக் குழல்சடை;
ஒன்பதுபோல் அவர் பார்இடம்தானே. 9

பத்துக்கொல்ஆம் அவர் பாம்பின் கண், பாம்பின் பல்;
பத்துக்கொல்ஆம் எயிறு(ந்) நெரிந்து உக்கன;
பத்துக்கொல்ஆம் அவர் காயப்பட்டான் தலை;
பத்துக்கொல்ஆம் அடியார் செய்கைதானே. 10

திரு ஆரூர் IV-19 சீகாமரம்

சூலப்படையானை; சூழ்ஆக வீழ் அருவி
கோலத் தோள் குங்குமம் சேர் குன்றுஎட்டு உடையானை;
பால் ஒத்த மென்மொழியாள் பங்கனை; பாங்கு ஆய
ஆலத்தின்கீழானை;—நான் கண்டது ஆரூரே. 1

பக்கமே பாரிடங்கள் சூழ, படுதலையில்
புக்க ஊர்ப் பிச்சை ஏற்று, உண்டு, பொலிவு உடைத்துஆய்க்
கொக்குஇறகின் தூவல் கொடி எடுத்த, கோவணத்தோடு
அக்கு அணிந்த, அம்மானை—நான் கண்டது ஆரூரே. 2

சேய உலகமும் செல் சார்வும் ஆனானை,
மாயப் போர் வல்லானை, மாலை தாழ் மார்பானை,
வேய் ஒத்த தோளியர்தம் மென்முலைமேல்-தண் சாந்தின்
ஆயத்துஇடையானை,—நான் கண்டது ஆரூரே. 3

ஏறு ஏற்றமா ஏறி, எண்கணமும் பின் படர,
மாறு ஏற்றார் வல்அரணம் சீறி, மயானத்தின்
நீறு ஏற்ற மேனியனாய், நீள்சடைமேல் நீர் ததும்ப
ஆறு ஏற்ற அந்தணனை—நான் கண்டது ஆரூரே. 4

தாம் கோல வெள்எலும்பு பூண்டு, தம் ஏறு ஏறி,
பாங்குஆன ஊர்க்கு எல்லாம் செல்லும் பரமனார்
தேம் காவி நாறும் திரு ஆரூர்த் தொல்-நகரில்
பூங்கோயிலுள் மகிழ்ந்து போகாது இருந்தாரே. 5

எம் பட்டம் பட்டம் உடையானை, ஏர் மதியின்
நும் பட்டம் சேர்ந்த நுதலானை, அந்திவாய்ச்
செம்பட்டு உடுத்துச் சிறுமான்உரிஆடை
அம் பட்டு அசைத்தானை,—நான் கண்டது ஆரூரே. 6

போழ் ஒத்த வெண்மதியம் சூடிப் பொலிந்து இலங்கு
வேழத்துஉரி போர்த்தான், வெள்வளையாள்தான் வெருவ,
ஊழித்தீ அன்னானை, ஓங்குஒலிமாப் பூண்டது ஓர்
ஆழித் தேர் வித்தகனை,—நான் கண்டது ஆரூரே. 7

வஞ்சனையார் ஆர் பாடும் சாராத மைந்தனை,
துஞ்சு இருளில் ஆடல் உகந்தானை, தன் தொண்டர்
நெஞ்சின் இருள் கூரும்பொழுது நிலாப் பாரித்து
அம் சுடர்ஆய் நின்றானை,—நான் கண்டது ஆரூரே. 8

கார முது கொன்றை கடிநாறு தண்என்ன
நீர முதுகோதையோடு ஆடிய நீள் மார்பன்,
பேர் அமுதம் உண்டார்கள் உய்யப் பெருங்கடல்நஞ்சு
ஆர் அமுதா உண்டானை,—நான் கண்டது ஆரூரே. 9

தாள் தழுவு கையன், தாமரைப்பூஞ்சேவடியன்,
கோள் தால வேடத்தன், கொண்டது ஓர் வீணையினான்,
ஆடுஅரவக்கிண்கிணிக் கால் அன்னான் ஓர் சேடனை,
ஆடும் தீக் கூத்தனை,—நான் கண்டது ஆரூரே. 10

மஞ்சு ஆடு குன்று அடர ஊன்றி, மணி விரலால்,
துஞ்சாப் போர் வாள் அரக்கன் தோள் நெரியக் கண் குருதிச்-
செஞ்சாந்து அணிவித்து, தன் மார்பில் பால்வெண்நீற்று-
அம்சாந்து அணிந்தானை—நான் கண்டது ஆரூரே. 11

திரு ஆரூர் IV-20 சீகாமரம்

காண்டலே கருத்துஆய் நினைந்திருந்தேன் மனம் புகுந்தாய்; கழல்அடி
பூண்டுகொண்டொழிந்தேன்; புறம் போயினால் அறையோ ?—
ஈண்டு மாடங்கள் நீண்ட மாளிகைமேல் எழு கொடி வான்இள(ம்)மதி
தீண்டி வந்து உலவும் திரு ஆரூர் அம்மானே ! 1

கடம் பட(ந்) நடம்ஆடினாய்; களைகண் நினக்கு ஒரு காதல் செய்து, அடி
ஒடுங்கி வந்து அடைந்தேன்; ஒழிப்பாய், பிழைப்பஎல்லாம் !—
முடங்கு இரு, முது நீர் மலங்கு, இள வாளை, செங்கயல், சேல், வரால், களிறு,
அடைந்த தண்கழனி, அணி ஆரூர் அம்மானே ! 2

அரு மணித் தடம் பூண் முலை அரம்பையரொடு அருளிப்பாடியர்,
உரிமையில்-தொழுவார், உருத்திரபல்கணத்தார்,
விரிசடை விரதிகள், அந்தணர், சைவர், பாசுபதர், கபாலிகள்,
தெருவினில் பொலியும் திரு ஆரூர் அம்மானே ! 3

பூங்கழல் தொழுதும் பரவியும், புண்ணியா ! புனிதா ! உன் பொன்கழல்
ஈங்கு இருக்கப்பெற்றேன்; என்ன குறை உடையேன் ?—
ஓங்கு தெங்கு, இலை ஆர் கமுகு, இள வாழை, மாவொடு, மாதுளம், பல-
தீம்கனி சிதறும் திரு ஆரூர் அம்மானே ! 4

நீறு சேர் செழு மார்பினாய்; நிரம்பா மதியொடு நீள்சடைஇடை
ஆறு பாய வைத்தாய்; அடியே அடைந்தொழிந்தேன்—
ஏறி வண்டொடு தும்பி அம் சிறகு ஊன்ற, விண்ட மலர் இதழ் வழி
தேறல் பாய்ந்து ஒழுகும் திரு ஆரூர் அம்மானே ! 5

''அளித்து வந்து அடி கைதொழுமவர்மேல் வினை கெடும்'' என்று இ(வ்)வையகம்
களித்து வந்து உடனேகலந்து ஆடக் காதல்ஆய்க்
குளித்தும், மூழ்கியும், தூவியும், குடைந்து ஆடு கோதையர் குஞ்சியுள் புகத்
தெளிக்கும் தீர்த்தம் அருத் திரு ஆரூர் அம்மானே ! 6

திரியும் மூஎயில் தீ எழச் சிலை வாங்கி நின்றவனே ! என் சிந்தையுள்
பிரியும்ஆறு எங்ஙனே ? பிழைத்தேயும் போகல் ஒட்டேன்—
பெரிய செந்நெல், பிரம்புரி, கெந்தசாலி, திப்பியம் என்று இவை அகத்து
அரியும் தண்கழனி அணி ஆரூர் அம்மானே ! 7

பிறத்தலும், பிறந்தால் பிணிப் பட வாய்ந்து அசைந்து உடலம் புகுந்து நின்று
இறக்கும்ஆறு உளதே; இழித்தேன், பிறப்பினை நான்;
அறத்தையே புரிந்த மனத்தனாய், ஆர்வச்செற்றக்குரோதம் நீக்கி, உன்
திறத்தனாயொழிந்தேன்—திரு ஆரூர் அம்மானே ! 8

முளைத்த வெண்பிறை மொய்சடை உடையாய் ! எப்போதும் என் நெஞ்சு இடம்கொள்ள
வளைத்துக்கொண்டிருந்தேன்; வலிசெய்து போகல் ஒட்டேன்—
அளைப் பிரிந்த அலவன் போய்ப் புகுதந்த காலமும் கண்டு தன் பெடை
திளைக்கும் தண்கழனித் திரு ஆரூர் அம்மானே ! 9

நாடினார்,—கமலம்மலர் அயனோடு, இரணியன்ஆகம் கீண்டவன்,—
நாடிக் காணமாட்டாத் தழல் ஆய நம்பானை,
பாடுவார் பணிவார் பல்லாண்டுஇசை கூறு பத்தர்கள் சித்தத்துள் புக்கு,
தேடிக் கண்டுகொண்டேன்; திருஆரூர் அம்மானே ! 10

IV-21

திரு ஆரூர் திருஆதிரைத் திருப்பதிகம் குறிஞ்சி

முத்து விதானம்; மணி பொன் கவரி; முறையாலே
பத்தர்களோடு பாவையர் சூழப் பலிப் பின்னே
வித்தகக் கோல வெண்தலைமாலை விரதிகள்;—
அத்தன் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம் ! 1

நணியார் சேயார், நல்லார் தீயார், நாள்தோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்;—
''மணியே! பொன்னே! மைந்தா! மணாளா!'' என்பார்கட்கு
அணியான் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 2

வீதிகள்தோறும் வெண் கொடியோடு விதானங்கள்;
சோதிகள்விட்டுச் சுடர் மா மணிகள்; ஒளி தோன்றச்
சாதிகள் ஆய பவளமும் முத்துத்தாமங்கள்;—
ஆதி ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 3

குணங்கள் பேசிக் கூடிப் பாடித் தொண்டர்கள்
பிணங்கித் தம்மில் பித்தரைப் போலப் பிதற்றுவார்—
வணங்கி நின்று வானவர் வந்து வைகலும்
அணங்கன் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 4

நிலவெண்சங்கும் பறையும்(ம்) ஆர்ப்ப, நிற்கில்லாப்
பலரும் இட்ட கல்லவடங்கள் பரந்து, எங்கும்
கலவமஞ்ஞை கார் என்று எண்ணிக் களித்து வந்து
அலமரு ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 5

விம்மா, வெருவா, விழியா, தெழியா, வெருட்டுவார்;
தம் மாண்பு இலராய்த் தரியார், தலையான் முட்டுவார்;—
''எம்மான், ஈசன், எந்தை, என் அப்பன்'' என்பார்கட்கு
அம்மான் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 6

செந்துவர்வாயார் செல்வன சேவடி சிந்திப்பார்;
மைந்தர்களோடு மங்கையர் கூடி மயங்குவார்;—
இந்திரன் ஆதி வானவர், சித்தர், எடுத்து ஏத்தும்
அந்திரன் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 7

முடிகள்வணங்கி மூவாதார்கள் முன் செல்ல,
வடி கொள் வேய்த்தோள் வான்அரமங்கையர் பின் செல்ல,
பொடிகள் பூசிப் பாடும் தொண்டர் புடை சூழ,
அடிகள் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 8

''துன்பம், நும்மைத் தொழாத நாள்கள்'' என்பாரும்,
''இன்பம், நும்மை ஏத்தும் நாள்கள்'' என்பாரும்,
''நுன்பின் எம்மை நுழையப் பணியே!'' என்பாரும்;—
அன்பன் ஆரூர் ஆதிரைநாளால் அது வண்ணம்! 9

பார் ஊர் பௌவத்தானைப் பத்தர் பணிந்து ஏத்த,
சீர் ஊர் பாடல் ஆடல் அறாத செம்மாப்பு ஆர்ந்து,
ஓர் ஊர் ஒழியாது உலகம் எங்கும் எடுத்து ஏத்தும்
ஆரூரன்தன் ஆதிரைநாளால் அது வண்ணம்! 10

IV-22

கோயில் திரு நேரிசை கொல்லி

செஞ்சடைக்கற்றை முற்றத்து இளநிலா எறிக்கும் சென்னி
நஞ்சு அடை கண்டனாரைக் காணல் ஆம்; நறவம் நாறும்
மஞ்சு அடை சோலைத் தில்லை மல்கு சிற்றம்பலத்தே
துஞ்சு அடை இருள் கிழியத் துளங்கு எரிஆடும்ஆறே! 1

ஏறனார், ஏறு; தம்பால் இளநிலா எறிக்கும் சென்னி
ஆறனார்; ஆறுசூடி; ஆயிழையாள், ஓர்பாகம்;
நாறு பூஞ்சோலைத் தில்லை நவின்ற சிற்றம்பலத்தே
நீறு மெய் பூசி நின்று நீண்டு எரிஆடும்ஆறே ! 2

சடையனார்; சாந்தநீற்றர்; தனி நிலா எறிக்கும் சென்னி
உடையனார்; உடைதலையில் உண்பதும், பிச்சை ஏற்று;
கடி கொள் பூந் தில்லைதன்னுள் கருது சிற்றம்பலத்தே
அடி கழல் ஆர்க்க நின்று(வ்) அனல்-எரி ஆடும்ஆறே! 3

பைஅரவு அசைத்த அல்குல், பனிநிலா எறிக்கும் சென்னி
மைஅரிக்கண்ணினாளும் மாலும் ஓர்பாகம்ஆகி,
செய்எரித் தில்லைதன்னுள்-திகழ்ந்த சிற்றம்பலத்தே
கை எரி வீசி நின்று கனல்-எரிஆடும்ஆறே ! 4

ஓதினார், வேதம் வாயால்; ஒளி நிலா எறிக்கும் சென்னிப்
பூதனார்; பூதம் சூழப் புலிஉரி-அதளனார், தாம்;
நாதனார்; தில்லைதன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே
காதில் வெண்குழைகள் தாழக் கனல்-எரிஆடும்ஆறே ! 5

ஓர் உடம்பு இருவர்ஆகி, ஒளி நிலா எறிக்கும் சென்னி,
பாரிடம் பாணிசெய்யப் பயின்ற, எம் பரமமூர்த்தி
கார் இடம் தில்லைதன்னுள் கருது சிற்றம்பலத்தே
பேர் இடம் பெருக நின்று பிறங்கு எரிஆடும்ஆறே ! 6

முதல்-தனிச் சடையை மூழ்க முகிழ்நிலா எறிக்கும் சென்னி,
மதக்களிற்று உரிவை போர்த்த, மைந்தரைக் காணல் ஆகும்;
மதத்து வண்டு அறையும் சோலை மல்கு சிற்றம்பலத்தே
கதத்தது ஓர் அரவம் ஆடக் கனல்-எரிஆடும்ஆறே ! 7

மறையனார், மழு ஒன்று ஏந்தி, மணிநிலா எறிக்கும் சென்னி
இறைவனார், எம்பிரானார், ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்,
சிறை கொள் நீர்த் தில்லைதன்னுள்-திகழ்ந்த சிற்றம்பலத்தே
அறைகழல் ஆர்க்க நின்று அனல்-எரிஆடும்ஆறே ! 8

விருத்தனாய், பாலன்ஆகி, விரிநிலா எறிக்கும் சென்னி
நிருத்தனார்; நிருத்தம் செய்ய நீண்ட புன்சடைகள் தாழக்
கருத்தனார்; தில்லைதன்னுள் கருது சிற்றம்பலத்தே
அருத்தமாமேனிதன்னோடு அனல்-எரிஆடும்ஆறே ! 9

பாலனாய், விருத்தன்ஆகி, பனிநிலா எறிக்கும் சென்னி,
காலனைக் காலால் காய்ந்த, கடவுளார்; விடை ஒன்று ஏறி;
ஞாலம் ஆம் தில்லைதன்னுள் நவின்ற சிற்றம்பலத்தே—
நீலம் சேர் கண்டனார்தாம்—நீண்டு எரிஆடும்ஆறே ! 10

மதி இலா அரக்கன் ஓடி மாமலை எடுக்க நோக்கி,
நெதியன் தோள் நெரிய ஊன்றி, நீடு இரும் பொழில்கள் சூழ்ந்த,
மதியம் தோய், தில்லைதன்னுள் மல்கு சிற்றம்பலத்தே
அதிசயம் போல நின்று(வ்) அனல்-எரிஆடும்ஆறே ! 11

IV-23

கோயில்

திரு நேரிசை

கொல்லி

பத்தனாய்ப் பாடமாட்டேன்; பரமனே ! பரமயோகீ !
எத்தினால் பத்தி செய்கேன் ? என்னை நீ இகழவேண்டா;
முத்தனே ! முதல்வா ! தில்லை அம்பலத்து ஆடுகின்ற
அத்தா ! உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தஆறே ! 1

கருத்தனாய்ப் பாடமாட்டேன்; காம்பு அன தோளி பங்கா !
ஒருத்தரால் அறிய ஒண்ணாத் திருஉரு உடைய சோதீ !
திருத்தம் ஆம் தில்லைதன்னுள்-திகழ்ந்த சிற்றம்பலத்தே
நிருத்தம் நான் காண வேண்டி நேர்பட வந்தஆறே! 2

கேட்டிலேன்; கிளைபிரி(ய்)யேன்; கேட்குமா கேட்டிஆகில்
நாட்டினேன், நின்தன் பாதம் நடுப்பட நெஞ்சினுள்ளே;
மாட்டில் நீர் வாளை பாய, மல்கு சிற்றம்பலத்தே
கூட்டம் ஆம் குவிமுலையாள் கூட நீ ஆடும்ஆறே ! 3

சிந்தையைத் திகைப்பியாதே செறிவு உடை அடிமை செய்ய,
எந்தை ! நீ அருளிச்செய்யாய் ! யாது நான் செய்வது ? என்னே !
செந்தியார் வேள்வி ஓவாத் தில்லைச் சிற்றம்பலத்தே
அந்தியும் பகலும் ஆட அடிஇணை அலசும்கொல்லோ ! 4

கண்டவா திரிந்து நாளும் கருத்தினால் நின்தன் பாதம்
கொண்டிருந்து ஆடிப் பாடிக் கூடுவன், குறிப்பினாலே;
வண்டு பண் பாடும் சோலை மல்கு சிற்றம்பலத்தே
எண்திசையோரும் ஏத்த, இறைவ ! நீ ஆடும்ஆறே ! 5

பார்த்திருந்து அடியனேன்நான் பரவுவன்; பாடி ஆடி
''மூர்த்தியே'' என்பன்,—உன்னை,—''மூவரில் முதல்வன்'' என்பன்;
ஏத்துவார் இடர்கள் தீர்ப்பாய் ! தில்லைச் சிற்றம்பலத்துக்
கூத்தா ! உன் கூத்துக் காண்பான் கூட நான் வந்தஆறே ! 6

பொய்யினைத் தவிர விட்டுப் புறம் அலா அடிமை செய்ய,
ஐய ! நீ அருளிச்செய்யாய் ! ஆதியே ! ஆதிமூர்த்தி !
வையகம்தன்னில் மிக்க மல்கு சிற்றம்பலத்தே
பைய நின் ஆடல் காண்பான், பரம ! நான் வந்தஆறே ! 7

மனத்தினார் திகைத்து நாளும் மாண்பு அலா நெறிகள்மேலே
கனைப்பரால்; என் செய்கேனோ ? கறை அணி கண்டத்தானே !
தினைத்தனை வேதம் குன்றாத் தில்லைச் சிற்றம்பலத்தே
அனைத்தும் நின் இலயம் காண்பான் அடியனேன் வந்தஆறே ! 8

நெஞ்சினைத் தூய்மை செய்து நினைக்குமா நினைப்பியாதே
வஞ்சமே செய்தியாலோ, வானவர்தலைவனே ! நீ;
மஞ்சு அடை சோலைத் தில்லை மல்கு சிற்றம்பலத்தே
அம் சொலாள் காண நின்று, அழக ! நீ ஆடும்ஆறே ! 9

மண் உண்ட மாலவ(ன்)னும், மலர்மிசை மன்னினானும்,—
விண் உண்ட திருஉரு(வ்)வம் விரும்பினார்—காணமாட்டார்;
திண்ணுண்ட திருவே ! மிக்க தில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும், பரம ! நீ ஆடும்ஆறே ! 10

திரு அதிகைவீரட்டானம் IV-24 கொப்பளித்த திரு நேரிசை

இரும்பு கொப்பளித்த யானை ஈர்உரி போர்த்த ஈசன்—
கரும்பு கொப்பளித்த இன்சொல் காரிகை பாகம்ஆக,
சுரும்பு கொப்பளித்த கங்கைத் துவலைநீர் சடையில் ஏற்ற,
அரும்பு கொப்பளித்த சென்னி, அதிகைவீரட்டனாரே. 1

கொம்பு கொப்பளித்த திங்கள் கோணல்வெண்பிறையும் சூடி,
வம்பு கொப்பளித்த கொன்றை வளர்சடைமேலும் வைத்து,
செம்பு கொப்பளித்த மூன்றுமதில் உடன்சுருங்க, வாங்கி
அம்பு கொப்பளிக்க எய்தார்—அதிகைவீரட்டனாரே. 2

விடையும் கொப்பளித்த பாதம் விண்ணவர் பரவி ஏத்த,
சடையும் கொப்பளித்த திங்கள், சாந்தம்வெண்நீறு பூசி,
உடையும் கொப்பளித்த நாகம், உள்குவார் உள்ளத்து என்றும்
அடையும் கொப்பளித்த சீரார்—அதிகைவீரட்டனாரே. 3

கறையும் கொப்பளித்த கண்டர்; காமவேள் உருவம் மங்க
இறையும் கொப்பளித்த கண்ணார்; ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்;
மறையும் கொப்பளித்த நாவர்—வண்டு பண் பாடும் கொன்றை
அறையும் கொப்பளித்த சென்னி அதிகைவீரட்டனாரே. 4

நீறு கொப்பளித்த மார்பர்—நிழல் திகழ் மழு ஒன்று ஏந்தி,
கூறு கொப்பளித்த கோதை கோல்வளை மாது ஓர்பாகம்,
ஏறு கொப்பளித்த பாதம் இமையவர் பரவி ஏத்த,
ஆறு கொப்பளித்த சென்னி அதிகைவீரட்டனாரே. 5

வணங்கு கொப்பளித்த பாதம் வானவர் மருவி ஏத்த,
பிணங்கு கொப்பளித்த சென்னிச் சடை உடைப் பெருமை அண்ணல்—
சுணங்கு கொப்பளித்த கொங்கைச் சுரிகுழல் பாகம்ஆக,
அணங்கு கொப்பளித்த மேனி அதிகைவீரட்டனாரே. 6

சூலம் கொப்பளித்த கையர்; சுடர்விடு மழுவாள் வீசி,
நூலும் கொப்பளித்த மார்பில் நுண்பொறிஅரவம் சேர்த்தி,
மாலும் கொப்பளித்த பாகர்—வண்டு பண் பாடும் கொன்றை,
ஆலம் கொப்பளித்த கண்டத்து அதிகைவீரட்டனாரே. 7

நாகம் கொப்பளித்த கையர்; நால்மறைஆய பாடி,
மேகம் கொப்பளித்த திங்கள் விரிசடைமேலும் வைத்து,
பாகம் கொப்பளித்த மாதர் பண்உடன் பாடி ஆட,
ஆகம் கொப்பளித்த தோளார்—அதிகைவீரட்டனாரே. 8

பரவு கொப்பளித்த பாடல் பண்உடன் பத்தர் ஏத்த,
விரவு கொப்பளித்த கங்கை விரிசடை மேவ வைத்து(வ்),
இரவு கொப்பளித்த கண்டர்; ஏத்துவார் இடர்கள் தீர்ப்பார்;
அரவு கொப்பளித்த கையர்—அதிகைவீரட்டனாரே. 9

தொண்டை கொப்பளித்த செவ்வாய், துடிஇடை, பரவைஅல்குல்,
கொண்டை கொப்பளித்த கோதை, கோல்வளை பாகம்ஆக—
வண்டு கொப்பளித்த தீம்தேன் வரிக்கயல் பருகி மாந்தக்
கெண்டை கொப்பளித்த தெண்நீர்க் கெடில வீரட்டனாரே. 10

திரு அதிகைவீரட்டானம் IV-25 திரு நேரிசை

வெண்நிலாமதியம்தன்னை விரிசடை மேவ வைத்து(வ்),
உள்-நிலாப் புகுந்து நின்று, அங்கு உணர்வினுக்கு உணரக் கூறி,
விண்இலார்; மீயச்சூரார்; வேண்டுவார் வேண்டுவார்க்கே
அண்ணியார்; பெரிதும் சேயார்—அதிகைவீரட்டனாரே. 1

பாடினார், மறைகள்நான்கும்; பாய் இருள், புகுந்து என் உள்ளம்
கூடினார்; கூடல்ஆலவாயிலார்; நல்ல கொன்றை
சூடினார்; சூடல் மேவிச் சூழ் சுடர் சுடலை வெண்நீறு-
ஆடினார், ஆடல் மேவி;— அதிகைவீரட்டனாரே. 2

ஊனையே கழிக்க வேண்டில் உணர்மின்கள், உள்ளத்துள்ளே !
தேன் ஐய மலர்கள் கொண்டு சிந்தையுள் சிந்திக்கின்ற
ஏனைய பலவும்ஆகி, இமையவர் ஏத்த நின்று(வ்),
ஆனையின்உரிவை போர்த்தார்—அதிகைவீரட்டனாரே. 3

துருத்தி ஆம் குரம்பைதன்னில்-தொண்ணூற்று அங்கு அறுவர் நின்று,
''விருத்திதான் தருக !'' என்று வேதனைபலவும் செய்ய,
வருத்தியால்; வல்லஆறு வந்துவந்து அடைய நின்ற
அருத்தியார்க்கு அன்பர்போலும்—அதிகைவீரட்டனாரே. 4

பத்தியால் ஏத்தி நின்று பணிபவர் நெஞ்சத்து உள்ளார்;
துத்திஐந்தலைய நாகம் சூழ் சடைமுடிமேல் வைத்து(வ்),
உத்தரமலையர்பாவைஉமையவள் நடுங்க அன்று(வ்)
அத்தியின்உரிவை போர்த்தார்—அதிகைவீரட்டனாரே. 5

வரிமுரி பாடி என்றும் வல்லஆறு அடைதும்,—நெஞ்சே !—
கரிஉரி மூடவல்ல கடவுளைக் காலத்தாலே;
சுரிபுரிவிரிகுழ(ல்)லாள், துடிஇடைப் பரவைஅல்குல்
அரிவை, ஓர்பாகர்போலும்—அதிகைவீரட்டனாரே. 6

நீதியால் நினைசெய்,—நெஞ்சே !—நிமலனை, நித்தம்ஆக;
பாதி ஆம் உமைதன்னோடும் பாகம்ஆய் நின்ற எந்தை,
சோதியா சுடர்விளக்குஆய்ச் சுண்ணவெண்நீறுஅதுஆடி
ஆதியும் ஈறும் ஆனார்—அதிகைவீரட்டனாரே. 7

எல்லியும் பகலும் எல்லாம் துஞ்சுவேற்கு ஒருவர் வந்து
புல்லிய மனத்துக் கோயில்புக்கனர்; காமன் என்னும்
வில்லி ஐங்கணையினானை வெந்து உக நோக்கியிட்டார்—
அல்லி அம் பழன வேலி அதிகைவீரட்டனாரே. 8

ஒன்றவே உணர்திர்ஆகில் ஓங்காரத்து ஒருவன் ஆகும்,
வென்ற ஐம்புலன்கள்தம்மை விலக்குதற்கு உரியீர்எல்லாம்;
நன் தவ நாரண(ன்)னும் நான்முகன் நாடிக் காண்குற்று
அன்று அவர்க்கு அரியர்போலும்—அதிகைவீரட்டனாரே. 9

தடக்கையால் எடுத்து வைத்துத் தடவரை குலுங்க ஆர்த்துக்
கிடக்கையால் இடர்கள் ஓங்கக் கிளர் மணி முடிகள் சாய
முடக்கினார், திருவிரல்தான்; முருகுஅமர்கோதை பாகத்து
அடக்கினார்—என்னை ஆளும் அதிகைவீரட்டனாரே. 10

திரு அதிகைவீரட்டானம் IV-26 திரு நேரிசை

‘‘நம்பனே ! எங்கள் கோவே ! நாதனே ! ஆதிமூர்த்தி !
பங்கனே ! பரமயோகி !’’ என்றுஎன்றே பரவி நாளும்,
செம்பொனே ! பவளக்குன்றே ! திகழ் மலர்ப்பாதம் காண்பான்,
அன்பனே ! அலந்துபோனேன்—அதிகைவீரட்டனீரே ! 1

பொய்யினால் மிடைந்த போர்வை புரைபுரை அழுகி வீழ
மெய்யனாய் வாழமாட்டேன்; வேண்டிற்று ஒன்று ஐவர் வேண்டார்;
செய்யதாமரைகள் அன்ன சேவடிஇரண்டும் காண்பான்,
ஐய ! நான் அலந்துபோனேன்—அதிகைவீரட்டனீரே ! 2

நீதியால் வாழமாட்டேன், நித்தலும்; தூயேன்அல்லேன்;
ஓதியும் உணரமாட்டேன்; உன்னை உள் வைக்கமாட்டேன்;
சோதியே ! சுடரே ! உன்தன் தூ மலர்ப்பாதம் காண்பான்,
ஆதியே ! அலந்துபோனேன்—அதிகைவீரட்டனீரே ! 3

தெருளுமா தெருளமாட்டேன்; தீவினைச் சுற்றம் என்னும்
பொருளுளே அழுந்தி, நாளும், போவது ஓர் நெறியும் காணேன்;
இருளும் மா மணிகண்டா ! நின் இணை அடிஇரண்டும் காண்பான்
அருளும்ஆறு அருளவேண்டும்—அதிகைவீரட்டனீரே ! 4

அஞ்சினால் இயற்றப்பட்ட ஆக்கை பெற்று, அதனுள் வாழும்
அஞ்சினால் அடர்க்கப்பட்டு, இங்கு உழிதரும் ஆதனேனை,
அஞ்சினால் உய்க்கும் வண்ணம் காட்டினாய்க்கு அச்சம் தீர்ந்தேன்—
அஞ்சினால் பொலிந்த சென்னி அதிகைவீரட்டனீரே ! 5

உறு கயிறு ஊசல் போல ஒன்று விட்டு ஒன்று பற்றி,
மறு கயிறு ஊசல் போல வந்துவந்து உலவும், நெஞ்சம்;
பெறு கயிறு ஊசல் போலப் பிறை புல்கு சடையாய் ! பாதத்து
அறு கயிறு ஊசல் ஆனேன்—அதிகைவீரட்டனீரே ! 6

கழித்திலேன், காமவெந்நோய்; காதன்மை என்னும் பாசம்
ஒழித்திலேன்; ஊன்கண் நோக்கி உணர்வு எனும் இமை திறந்து
விழித்திலேன்; வெளிறு தோன்ற வினை எனும் சரக்குக் கொண்டேன்;
அழித்திலேன்; அயர்த்துப்போனேன்—அதிகைவீரட்டனீரே ! 7

மன்றத்துப் புன்னை போல மரம் படு துயரம் எய்தி,
ஒன்றினால் உணரமாட்டேன்; உன்னை உள் வைக்கமாட்டேன்;
கன்றிய காலன் வந்து கருக்குழி விழுப்பதற்கே
அன்றினான்; அலமந்திட்டேன்—அதிகைவீரட்டனீரே ! 8

பிணி விடா ஆக்கை பெற்றேன்; பெற்றம் ஒன்று ஏறுவானே !
பணி விடா இடும்பை என்னும் பாசனத்து அழுந்துகின்றேன்;
துணிவு இலேன்; தூயன்அல்லேன்; தூ மலர்ப்பாதம் காண்பான்
அணியனாய் அறிய மாட்டேன்—அதிகைவீரட்டனீரே ! 9

திருவினாள்கொழுநனாரும், திசைமுகம் உடைய கோவும்,
இருவரும் எழுந்தும் வீழ்ந்தும் இணைஅடி காணமாட்டா
ஒருவனே ! எம்பிரானே ! உன் திருப்பாதம் கண்பான்,
அருவனே ! அருளவேண்டும்—அதிகைவீரட்டனீரே ! 10

திரு அதிகைவீரட்டானம் IV-27 திரு நேரிசை

மடக்கினார், புலியின்தோலை; மா மணி நாகம் கச்சா
முடக்கினார்; முகிழ்வெண்திங்கள் மொய்சடைக்கற்றைதன்மேல்-
தொடக்கினார்; தொண்டைச்செவ்வாய்த் துடிஇடைப் பரவைஅல்குல்
அடக்கினார்—கெடில வேலி அதிகைவீரட்டனாரே. 1

சூடினார், கங்கையாளை; சூடிய துழனி கேட்டு அங்கு
ஊடினாள், நங்கையாளும்; ஊடலை ஒழிக்க வேண்டிப்
பாடினார், சாமவேதம்; பாடிய பாணியாலே
ஆடினார்—கெடில வேலி அதிகைவீரட்டனாரே. 2

கொம்பினார் குழைத்த வேனல்கோமகன் கோல நீர்மை
நம்பினார் காணல் ஆகா வகையது ஓர் நடலை செய்தார்;
வெம்பினார் மதில்கள்மூன்றும் வில்லிடை எரித்து வீழ்த்த
அம்பினார்—கெடில வேலி அதிகைவீரட்டனாரே. 3

மறி படக் கிடந்த கையர், வளர் இள மங்கை பாகம்
செறிபடக் கிடந்த செக்கர்ச் செழு மதிக்கொழுந்து சூடி,
பொறி படக் கிடந்த நாகம் புகை உமிழ்ந்து அழல வீக்கி,
கிறிபட நடப்பர்போலும்—கெடில வீரட்டனாரே. 4

நரி வரால் கவ்வச் சென்று நல்-தசை இழந்தது ஒத்த,
தெரிவரால்,—மால் கொள் சிந்தை,—தீர்ப்பது ஓர் சிந்தைசெய்வார்—
வரி வரால் உகளும் தெண்நீர்க் கழனி சூழ் பழன வேலி,
அரிவரால் வயல்கள் சூழ்ந்த, அதிகைவீரட்டனாரே. 5

புள் அலைத்து உண்ட ஓட்டில் உண்டு போய், பலாசங்கொம்பின்
சுள்ளலைச் சுடலை வெண்நீறு அணிந்தவர்—மணி வெள்ஏற்றுத்
துள்ளலைப் பாகன்தன்னைத் தொடர்ந்து இங்கே கிடக்கின்றேனை
அள்ளலைக் கடப்பித்து ஆளும் அதிகைவீரட்டனாரே. 6

நீறு இட்ட நுதலர்; வேலைநீலம் சேர் கண்டர்; மாதர்
கூறுஇட்ட மெய்யர்ஆகி, கூறினார், ஆறும் நான்கும்;
கீறிட்ட திங்கள் சூடிக் கிளர்தரு சடையினுள்ளால்
ஆறு இட்டு முடிப்பர்போலும்—அதிகைவீரட்டனாரே. 7

காண்இலார் கருத்தில் வாரார்; திருத்தலார்; பொருத்தல் ஆகார்;
ஏண் இலார்; இறப்பும் இல்லார்; பிறப்பு இலார்; துறக்கல் ஆகார்;
நாண்இலார்ஐவரோடும் இட்டு எனை விரவி வைத்தார்;
ஆண் அலார்; பெண்ணும் அல்லார்—அதிகைவீரட்டனாரே. 8

தீர்த்தம் ஆம் மலையை நோக்கிச் செரு வலி அரக்கன் சென்று
பேர்த்தலும், பேதை அஞ்ச, பெருவிரல்அதனை ஊன்றி,
சீர்த்த மா முடிகள்பத்தும் சிதறுவித்து, அவனை அன்று(வ்)
ஆர்த்த வாய் அலற வைத்தார்—அதிகைவீரட்டனாரே. 9

திரு அதிகைவீரட்டானம் IV-28 திரு நேரிசை

முன்புஎலாம் இளையகாலம் மூர்த்தியை நினையாது ஓடி,
கண்கண இருமி, நாளும் கருத்து அழிந்து, அருத்தம் இன்றி,
பின்பகல் உணங்கல் அட்டும் பேதைமார் போன்றேன், உள்ளம்;
அன்பனாய் வாழமாட்டேன்—அதிகைவீரட்டனீரே! 1

கறைப் பெருங் கண்டத்தானே ! காய் கதிர் நமனை அஞ்சி
நிறைப் பெருங்கடலைக் கண்டேன் ! நீள்வரை உச்சி கண்டேன் !
பிறைப் பெருஞ் சென்னியானே ! பிஞ்ஞகா ! இவைஅனைத்தும்
அறுப்பது ஓர் உபாயம் காணேன்—அதிகைவீரட்டனீரே ! 2

''நாதனார்'' என்ன, நாளும் நடுங்கினர்ஆகித் தங்கள்
ஏதங்கள் அறியமாட்டார், ''இணைஅடி தொழுதோம்'' என்பார்;
ஆதன்ஆனவன் என்று எள்கி,—அதிகைவீரட்டனே !—நின்
பாதம் நான் பரவாது உய்க்கும் பழவினைப் பரிசு இலேனே. 3

சுடலை சேர் சுண்ண மெய்யர்; சுரும்பு உண விரிந்த கொன்றைப்-
படலை சேர் அலங்கல் மார்பர்—பழனம் சேர் கழனித் தெங்கின்
மடலை நீர் கிழிய ஓடி அதன்இடை மணிகள் சிந்தும்
கெடில வீரட்டம் மேய கிளர் சடைமுடியனாரே. 4

மந்திரம் உள்ளதுஆக, மறிகடல் எழு நெய் ஆக,
இந்திரன் வேள்வித்தீயில் எழுந்தது ஓர் கொழுந்தின் வண்ணம்
சிந்திரம் ஆக நோக்கித் தெருட்டுவார்—தெருட்ட வந்து,
கந்திரம் முரலும் சோலைக் கானல் அம் கெடிலத்தாரே. 5

மைஞ்ஞலம் அனைய கண்ணாள் பங்கன் மாமலையை ஓடி,
மெய்ஞ் ஞரம்பு உதிரம் பில்க, விசை தணிந்து, அரக்கன் வீழந்து,
கைஞ்ஞரம்பு எழுவிக்கொண்டு, காதலால் இனிது சொன்ன
கின்னரம் கேட்டு உகந்தார்—கெடில வீரட்டனாரே. 6

திருச் செம்பொன்பள்ளி IV-29 திரு நேரிசை

ஊனினுள் உயிரை வாட்டி உணர்வினார்க்கு எளியர்ஆகி,
வானினுள் வானவர்க்கும் அறியல் ஆகாத வஞ்சர்;
நான் எனில்-தானே என்னும் ஞானத்தார்; பத்தர் நெஞ்சுள்
தேனும் இன்அமுதும் ஆனார்—திருச் செம்பொன்பள்ளியாரே. 1

நொய்யவர்; விழுமியாரும்; நூலின் நுண்நெறியைக் காட்டும்
மெய்யவர்; பொய்யும் இல்லார்; உடல் எனும் இடிஞ்சில்தன்னில்
நெய் அமர் திரியும் ஆகி நெஞ்சத்துள் விளக்கும் ஆகிச்
செய்யவர்; கரிய கண்டர்—திருச் செம்பொன்பள்ளியாரே. 2

வெள்ளியர்; கரியர்; செய்யர்; விண்ணவர்அவர்கள் நெஞ்சுள்
ஒள்ளியர்; ஊழிஊழி உலகம்அது ஏத்த நின்ற
பள்ளியர்; நெஞ்சத்து உள்ளார்; பஞ்சமம் பாடி ஆடும்
தெள்ளியர்; கள்ளம் தீர்ப்பார்—திருச் செம்பொன்பள்ளியாரே. 3

தந்தையும் தாயும் ஆகித் தானவன்; ஞானமூர்த்தி;
முந்திய தேவர் கூடி முறைமுறை இருக்குச் சொல்லி,
''எந்தை, நீ சரணம் !'' என்று அங்கு இமையவர் பரவி ஏத்தச்
சிந்தையுள் சிவம்அது ஆனார்—திருச் செம்பொன்பள்ளியாரே. 4

ஆறு உடைச் சடையர்போலும்; அன்பருக்கு அன்பர்போலும்;
கூறு உடை மெய்யர்போலும்; கோள் அரவு அரையர்போலும்;
நீறு உடை அழகர்போலும்—நெய்தலை கமழும் நீர்மைச்
சேறு உடை கமல வேலித் திருச் செம்பொன்பள்ளியாரே. 5

ஞாலமும் அறிய வேண்டின், ‘‘நன்று’’ என வாழல்உற்றீர் !
காலமும் கழியல்ஆன கள்ளத்தை ஒழியகில்லீர் !
கோலமும் வேண்டா; ஆர்வச்செற்றங்கள்குரோதம் நீக்கில்
சீலமும் நோன்பும் ஆவார், திருச் செம்பொன்பள்ளியாரே. 6

புரி காலே நேசம் செய்ய இருந்த புண்டரீகத்தாரும்;
எரி, காலே, மூன்றும், ஆகி இமையவர் தொழ நின்றாரும்;
தெரி காலே மூன்றுசந்தி தியானித்து வணங்க நின்று
திரிகாலம் கண்ட எந்தை—திருச் செம்பொன்பள்ளியாரே. 7

கார் உடைக் கொன்றைமாலை கதிர் மதி அரவினோடும்
நீர் உடைச் சடையுள் வைத்த நீதியார்; நீதிஉள்ளார்;
பாரொடு விண்ணும், மண்ணும், பதினெட்டுக்கணங்கள், ஏத்தச்
சீரொடு பாடல் ஆனார்—திருச் செம்பொன்பள்ளியாரே. 8

ஓவாத மறைவல்லானும், ஓதநீர்வண்ணன், காணா
மூவாத பிறப்புஇலாரும்; முனிகள்ஆனார்கள் ஏத்தும்
பூஆன மூன்றுமுந்நூற்றுஅறுபதும் ஆகும் எந்தை;
தேவாதிதேவர், என்றும்;—திருச் செம்பொன்பள்ளியாரே. 9

அங்கங்கள்ஆறும் நான்கும் அந்தணர்க்கு அருளிச்செய்து,
சங்கங்கள் பாட ஆடும் சங்கரன்—மலை எடுத்தான்
அங்கங்கள் உதிர்ந்து சோர அலறிட அடர்த்து நின்றும்,
செங்கண் வெள்ஏறுஅது ஏறும்—திருச் செம்பொன்பள்ளியாரே. 10

திருக் கழிப்பாலை IV-30 திரு நேரிசை

நங்கையைப் பாகம் வைத்தார்; ஞானத்தை நவில வைத்தார்;
அங்கையில் அனலும் வைத்தார்;ஆனையின்உரிவை வைத்தார்;
தம் கையின் யாழும் வைத்தார்; தாமரைமலரும் வைத்தார்;
கங்கையைச் சடையுள் வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 1

விண்ணினை விரும்ப வைத்தார்; வேள்வியை வேட்க வைத்தார்;
பண்ணினைப் பாட வைத்தார்; பத்தர்கள் பயில வைத்தார்;
மண்ணினைத் தாவ நீண்ட மாலினுக்கு அருளும் வைத்தார்;
கண்ணினை நெற்றி வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 2

வாமனை வணங்க வைத்தார்; வாயினை வாழ்த்த வைத்தார்;
சோமனைச் சடைமேல் வைத்தார்; சோதியுள் சோதி வைத்தார்;
ஆ மன் நெய் ஆட வைத்தார்; அன்பு எனும் பாசம் வைத்தார்;
காமனைக் காய்ந்த கண்ணார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 3

அரியன அங்கம்வேதம் அந்தணர்க்கு அருளும் வைத்தார்;
பெரியன புரங்கள்மூன்றும் பேர்அழலுண்ண வைத்தார்;
பரிய தீவண்ணர்ஆகிப் பவளம் போல் நிறத்தை வைத்தார்;
கரியது ஓர் கண்டம் வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 4

கூர் இருள் கிழிய நின்ற கொடு மழுக் கையில் வைத்தார்;
பேர் இருள் கழிய மல்கு பிறை, புனல், சடையுள் வைத்தார்;
ஆர் இருள் அண்டம் வைத்தார்; அறுவகைச் சமயம் வைத்தார்;
கார்இருள் கண்டம் வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 5

உள்-தங்கு சிந்தை வைத்தார்; உள்குவார்க்கு உள்ளம் வைத்தார்;
விண்-தங்கு வேள்வி வைத்தார்; வெந்துயர் தீரவைத்தார்;
நள்-தங்கு நடமும் வைத்தார்; ஞானமும் நாவில் வைத்தார்;
கட்டங்கம் தோள்மேல் வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 6

ஊனப் பேர் ஒழிய வைத்தார்; ஓதியே உணர வைத்தார்;
ஞானப் பேர் நவில வைத்தார்; ஞானமும் நடுவும் வைத்தார்;
வானப்பேர்ஆறும் வைத்தார்; வைகுந்தற்கு ஆழி வைத்தார்;
கானப்பேர் காதல் வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 7

கொங்கினும் அரும்பு வைத்தார்; கூற்றங்கள் கெடுக்க வைத்தார்;
சங்கினுள் முத்தம் வைத்தார்; சாம்பலும் பூச வைத்தார்;
அங்கமும் வேதம் வைத்தார்; ஆலமும் உண்டு வைத்தார்;
கங்குலும் பகலும் வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 8

சதுர்முகன்தானும் மாலும் தம்மிலே இகலக் கண்டு(வ்),
எதிர்முகம் இன்றி நின்ற எரிஉருஅதனை வைத்தார்;
பிதிர்முகன்காலன்தன்னைக் கால்தனில் பிதிரவைத்தார்;
கதிர்முகம் சடையில் வைத்தார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 9

மாலினாள் நங்கை அஞ்ச, மதில் இலங்கைக்கு மன்னன்
வேலினான் வெகுண்டு எடுக்கக் காண்டலும், வேத நாவன்
நூலினான் நோக்கி நக்கு, நொடிப்பதுஓர்அளவில் வீழ,
காலினால் ஊன்றியிட்டார்—கழிப்பாலைச் சேர்ப்பனாரே. 10

திருக் கடவூர்வீரட்டம் IV-31 திரு நேரிசை

பொள்ளத்த காயம் ஆய பொருளினை, போகமாதர்-
வெள்ளத்தை, கழிக்க வேண்டில், விரும்புமின் ! விளக்குத் தூபம்
உள்ளத்த திரி ஒன்று ஏற்றி உணரும்ஆறு உணர வல்லார்
கள்ளத்தைக் கழிப்பர்போலும், கடவூர்வீரட்டனாரே. 1

மண்இடைக் குரம்பைதன்னை மதித்து, நீர், மையல் எய்தில்,
விண்இடைத் தருமராசன் வேண்டினால் விலக்குவார் ஆர் ?
பண்இடைச் சுவைகள் பாடி ஆடிடும் பத்தர்க்கு என்றும்
கண்இடை மணியர்போலும், கடவூர்வீரட்டனாரே. 2

பொருத்திய குரம்பைதன்னுள் பொய்ந்நடை செலுத்துகின்றீர்;
ஒருத்தனை உணரமாட்டீர்; உள்ளத்தில் கொடுமை நீக்கீர்;
வருத்தின களிறுதன்னை வருத்துமா வருத்த வல்லார்
கருத்தினில் இருப்பர்போலும், கடவூர்வீரட்டனாரே. 3

பெரும்புலர்காலை மூழ்கி, பித்தர்க்குப் பத்தர்ஆகி,
அரும்பொடு மலர்கள் கொண்டு, ஆங்கு ஆர்வத்தை உள்ளே வைத்து
விரும்பி, நல் விளக்குத் தூபம் விதியினால் இட வல்லார்க்குக்
கரும்பினில் கட்டி போல்வார், கடவூர்வீரட்டனாரே. 4

தலக்கமே செய்து வாழ்ந்து, தக்கஆறு ஒன்றும் இன்றி,
விலக்குவார் இலாமையாலே, விளக்கத்தில் கோழி போன்றேன்;
மலக்குவார், மனத்தினுள்ளே காலனார்தமர்கள் வந்து
கலக்க நான் கலங்குகின்றேன்—கடவூர்வீரட்டனீரே ! 5

பழி உடை யாக்கைதன்னில் பாழுக்கே நீர் இறைத்து
வழிஇடை வாழமாட்டேன்; மாயமும் தெளியகில்லேன்;
அழிவுஉடைத்துஆய வாழ்க்கை ஐவரால் அலைக்கப்பட்டுக்
கழிஇடைத் தோணி போன்றேன்—கடவூர்வீரட்டனீரே ! 6

மாயத்தை அறியமாட்டேன்; மையல் கொள் மனத்தன்ஆகி,
பேய் ஒத்து, கூகை ஆனேன்; பிஞ்ஞகா ! பிறப்புஒன்றுஇல்லீ !
நேயத்தால் நினையமாட்டேன்; நீதனே ! நீசனேன்நான்
காயத்தைக் கழிக்கமாட்டேன்—கடவூர்வீரட்டனீரே ! 7

பற்று இலா வாழ்க்கை வாழ்ந்து பாழுக்கே நீர் இறைத்தேன்;
''உற்றலால் கயவர் தேறார்'' என்னும் கட்டுரையோடு ஒத்தேன்;
எற்று உளேன் ? என் செய்கேன், நான் ? இடும்பையால் ஞானம்ஏதும்
கற்றிலேன்; களைகண் காணேன்—கடவூர்வீரட்டனீரே ! 8

சேலின் நேர்-அனைய கண்ணார் திறம் விட்டு, சிவனுக்கு அன்புஆய்,
பாலும் நல்-தயிர் நெய்யோடு பலபலஆட்டி, என்றும்
மாலினைத் தவிர நின்ற மார்க்கண்டற்குஆக அன்று
காலனை உதைப்பர்போலும்—கடவூர்வீரட்டனாரே. 9

முந்து உரு இருவரோடு மூவரும் ஆயினாரும்—
இந்திரனோடு தேவர் இருடிகள் இன்பம் செய்ய,
வந்து இருபதுகள்தோளால் எடுத்தவன் வலியை வாட்டி,
கந்திருவங்கள் கேட்டார்—கடவூர்வீரட்டனாரே. 10

திருப் பயற்றூர் IV-32 திரு நேரிசை

உரித்திட்டார், ஆனையின்தோல் உதிரஆறு ஒழுகி ஓட;
விரித்திட்டார்; உமையாள் அஞ்சி விரல் விதிர்த்து அலக்கண் நோக்கித்
தரித்திட்டார், சிறிதுபோது; தரிக்கிலர்ஆகித் தாமும்
சிரித்திட்டார், எயிறு தோன்ற;—திருப் பயற்றூரனாரே. 1

உவந்திட்டு அங்கு உமை ஓர்பாகம் வைத்தவர்; ஊழிஊழி
பவர்ந்திட்ட பரமனார்தாம் மலைச்சிலை நாகம் ஏற்றி,
கவர்ந்திட்ட புரங்கள்மூன்றும் கனல்-எரி ஆகச் சீறி,
சிவந்திட்ட கண்ணர்போலும்—திருப் பயற்றூரனாரே. 2

''நங்களுக்கு அருளது'' என்று நால்மறை ஓதுவார்கள்-
தங்களுக்கு அருளும் எங்கள் தத்துவன்; தழலன்; தன்னை,
''எங்களுக்கு அருள்செய் !'' என்ன நின்றவன்; நாகம் அஞ்சும்
திங்களுக்கு அருளிச்செய்தார்—திருப் பயற்றூரனாரே. 3

பார்த்தனுக்கு அருளும் வைத்தார்; பாம்பு அரை ஆட வைத்தார்;
சாத்தனை மகனா வைத்தார்; சாமுண்டி சாமவேதம்
கூத்தொடும் பாட வைத்தார்; கோள் அரா, மதியம், நல்ல
தீர்த்தமும், சடைமேல் வைத்தார்—திருப் பயற்றூரனாரே. 4

மூவகை மூவர்போலும்; முற்று மா நெற்றிக்கண்ணர்;
நா வகை நாவர்போலும்; நால்மறை ஞானம்எல்லாம்
ஆ வகை ஆவர்போலும்; ஆதிரை நாளர்போலும்;
தேவர்கள்தேவர்போலும்—திருப் பயற்றூரனாரே. 5

ஞாயிறுஆய், நமனும் ஆகி, வருணனாய், சோமன்ஆகி,
தீ அரு நிருதி வாயுத் திப்பி(ய) ஈசானன்ஆகி,
பேய் அருக் காட்டில் ஆடும் பிஞ்ஞகன், எந்தைபெம்மான்,
தீ அருக் கையர்போலும்—திருப் பயற்றூரனாரே. 6

ஆவிஆய், அவியும் ஆகி, அருக்கம்ஆய், பெருக்கம்ஆகி,
பாவியார் பாவம் தீர்க்கும் பரமனாய், பிரமன்ஆகி,
காவிஅம்கண்ணள்ஆகிக் கடல்வண்ணம்ஆகி நின்ற
தேவியைப் பாகம் வைத்தார்—திருப் பயற்றூரனாரே. 7

தந்தையாய், தாயும் ஆகி, தரணிஆய், தரணிஉள்ளார்க்கு
எந்தையும் என்ன நின்ற ஏழ்உலகுஉடனும் ஆகி,
''எந்தை ! எம்பிரானே !'' என்றுஎன்று உள்குவார் உள்ளத்து என்றும்
சிந்தையும் சிவமும் ஆவார்—திருப் பயற்றூரனாரே. 8

புலன்களைப் போக நீக்கி, புந்தியை ஒருங்க வைத்து(வ்),
இனங்களைப் போக நின்று, இரண்டையும் நீக்கி, ஒன்றுஆய்
மலங்களை மாற்ற வல்லார் மனத்தினுள் போகம் ஆகிச்
சினங்களைக் களைவர்போலும்—திருப் பயற்றூரனாரே. 9

மூர்த்திதன் மலையின்மீது போகாதா, முனிந்து நோக்கி,
பார்த்துத் தான் பூமிமேலால் பாய்ந்து, உடன் மலையைப் பற்றி,
ஆர்த்திட்டான் முடிகள்பத்தும் அடர்த்து நல் அரிவை அஞ்சத்
தேத்தெத்தா என்னக் கேட்டார்—திருப் பயற்றூரனாரே. 10

திரு மறைக்காடு IV-33 திரு நேரிசை

இந்திரனோடு தேவர் இருடிகள் ஏத்துகின்ற
சுந்தரம்ஆனார்போலும்; துதிக்கல் ஆம் சோதிபோலும்;
சந்திரனோடும் கங்கை அரவையும் சடையுள் வைத்து
மந்திரம் ஆனார்போலும்—மா மறைக்காடனாரே. 1

தேயன நாடர் ஆகித் தேவர்கள்தேவர்போலும்;—
பாயன நாடு அறுக்கும் பத்தர்கள், பணிய வம்மின் !—
காயன நாடு கண்டம் கதன்உளார்; காளகண்டர்;
மாயன நாடர்போலும்—மா மறைக்காடனாரே. 2

அறுமை இவ் உலகுதன்னை ஆம் எனக் கருதி நின்று,
வெறுமையின் மனைகள் வாழ்ந்து வினைகளால் நலிவுணாதே;
சிறுமதி, அரவு, கொன்றை திகழ்தரு சடையுள் வைத்து,
மறுமையும் இம்மை ஆவார்—மா மறைக்காடனாரே. 3

கால் கொடுத்து, இருகை ஏற்றி, கழி நிரைத்து, இறைச்சி மேய்ந்து,
தோல் மடுத்து, உதிரநீரால் சுவர் எடுத்து, இரண்டுவாசல்
ஏல்வு உடைத்தா அமைத்து, அங்கு ஏழுசாலேகம் பண்ணி,
மால் கொடுத்து, ஆவி வைத்தார்—மா மறைக்காடனாரே. 4

விண்ணினார்; விண்ணின் மிக்கார்; வேதங்கள் விரும்பி ஓதப்
பண்ணினார்; கின்னரங்கள் பத்தர்கள் பாடி ஆடக்
கண்ணினார்; கண்ணினுள்ளே சோதிஆய் நின்ற எந்தை—
மண்ணினார் வலம்கொண்டு ஏத்தும் மா மறைக்காடனாரே. 5

அங்கையுள் அனலும் வைத்தார்; அறுவகைச் சமயம் வைத்தார்;
தம் கையில் வீணை வைத்தார்; தம் அடி பரவ வைத்தார்;
திங்களைக் கங்கையோடு திகழ்தரு சடையுள் வைத்தார்;
மங்கையைப் பாகம் வைத்தார்—மா மறைக்காடனாரே. 6

கீதராய், கீதம் கேட்டுக் கின்னரம்தன்னை வைத்தார்;
வேதராய், வேதம் ஓதி விளங்கிய சோதி வைத்தார்;
ஏதராய், நட்டம்ஆடி, இட்டம்ஆய்க் கங்கையோடு
மாதை ஓர்பாகம் வைத்தார்—மா மறைக்காடனாரே. 7

கனத்தின் ஆர் வலி உடைய கடிமதில்அரணம்மூன்றும்
சினத்தினுள் சினம்ஆய் நின்று தீ எழச் செற்றார்போலும்;
தனத்தினைத் தவிர்ந்து நின்று தம் அடி பரவுவார்க்கு
மனத்தினுள் மாசு தீர்ப்பார்—மா மறைக்காடனாரே. 8

தேசனை, தேசன்தன்னை, தேவர்கள் போற்றுஇசைப்பார்;
வாசனை செய்து நின்று வைகலும் வணங்குமின்கள் !
காசினை, கனலை, என்றும் கருத்தினில் வைத்தவர்க்கு
மாசினைத் தீர்ப்பர்போலும்—மா மறைக்காடனாரே. 9

பிணி உடை யாக்கைதன்னைப் பிறப்பு அறுத்து உய்ய வேண்டில்,
பணி உடைத் தொழில்கள் பூண்டு பத்தர்கள் பற்றினாலே;
துணி உடை அரக்கன் ஓடி எடுத்தலும், தோகை அஞ்ச,
மணி முடிப்பத்து இறுத்தார்—மா மறைக்காடனாரே. 10

திரு மறைக்காடு IV-34 திரு நேரிசை

தேரையும் மேல் கடாவித் திண்ணமாத் தெழித்து நோக்கி
ஆரையும் மேல் உணரா ஆண்மையால் மிக்கான்தன்னை,
பாரையும் விண்ணும் அஞ்சப் பரந்த தோள்முடி அடர்த்து,
''காரிகை, அஞ்சல் !'' என்பார்—கலி மறைக்காடனாரே. 1

முக்கி முன் வெகுண்டு எடுத்த முடி உடை அரக்கர்கோனை
நக்கு இருந்து ஊன்றிச் சென்னி நாள்மதி வைத்த எந்தை;
அக்கு, அரவு, ஆமை, பூண்ட அழகனார், கருத்தினாலே;—
தெக்கு நீர்த் திரைகள் மோதும் திரு மறைக்காடனாரே. 2

மிகப் பெருத்து உலாவ மிக்கான் நக்கு, ஒரு தேர் கடாவி,
''அகப்படுத்து !'' என்று தானும் ஆண்மையால் மிக்கு, அரக்கன்
உகைத்து எடுத்தான், மலையை ஊன்றலும், அவனை ஆங்கே
நகைப்படுத்து அருளினான் ஊர்—நால்மறைக்காடுதானே. 3

அந்தரம் தேர் கடாவி, ''ஆர் இவன் ?'' என்று சொல்லி,
உந்தினான் மாமலையை ஊன்றலும், ஒள் அரக்கன்
பந்தம் ஆம் தலைகள்பத்தும் வாய்கள் விட்டு அலறி வீழச்
சிந்தனைசெய்து விட்டார்—திரு மறைக்காடனாரே. 4

தடுக்கவும் தாங்க ஒண்ணாத் தன் வலி உடையன்ஆகி,
கடுக்க ஓர் தேர் கடாவி, ''கைஇருபதுகளாலும்
எடுப்பன், நான்; என்ன பண்டம் !'' என்று எடுத்தானை ஏங்க
அடுக்கவே வல்லன் ஊர்ஆம்—அணி மறைக்காடுதானே. 5

நாள் முடிக்கின்ற சீரான் நடுங்கியே மீது போகான்,
''கோள் பிடித்து ஆர்த்த கையான், கொடியன், மா வலியன்'' என்று;
நீள் முடிச்சடையர் சேரும் நீள்வரை எடுக்கல்உற்றான்
தோள்முடி நெரிய வைத்தார்—தொல் மறைக்காடனாரே. 6

பத்துவாய் இரட்டிக்கைகள் உடையன், ''மா வலியன்'' என்று
பொத்தி வாய் தீமை செய்த பொரு வலி அரக்கர்கோனைக்
கத்தி வாய் கதற, அன்று, கால்விரல் ஊன்றியிட்டார்—
முத்து வாய்த் திரைகள் மோதும்—முது மறைக்காடனாரே. 7

பக்கமே விட்ட கையான், பாங்கு இலா மதியன்ஆகி,
புக்கனன் மாமலைக்கீழ், போதும்ஆறு அறியமாட்டான்,
மிக்க மா மதிகள் கெட்டு, வீரமும் இழந்தஆறே
நக்கன, பூதம்எல்லாம்; நான்மறைக்காடனாரே! 8

நாண் அஞ்சு கையன் ஆகி, நல் முடிபத்தினோடு
பாண் அஞ்சு முன் இழந்து பாங்கு இலா மதியன்ஆகி,
நீள் நஞ்சு தான் உணரா நின்று எடுத்தானை, அன்று(வ்)
ஏண் அஞ்சு கைகள் செய்தார்—எழில் மறைக்காடனாரே. 9

கங்கைநீர் சடையுள் வைக்கக் காண்டலும் மங்கை ஊட,
தென்கையான் தேர் கடாவிச் சென்று எடுத்தான், மலையை,
முன்கை மா நரம்பு வெட்டி முன் இருக்குஇசைகள் பாட,
அம் கை வாள் அருளினான் ஊர்—அணி மறைக்காடுதானே. 10

திரு இடைமருது IV-35 திரு நேரிசை

காடு உடைச் சுடலை நீற்றர்; கையில் வெண்தலையர்; தையல்
பாடு உடைப் பூதம் சூழப் பரமனார்—மருதவைப்பில்
தோடு உடைக் கைதையோடு சூழ் கிடங்குஅதனைச் சூழ்ந்த
ஏடு உடைக் கமல வேலி இடைமருது இடம்கொண்டாரே. 1

முந்தையார்; முந்தி உள்ளார்; மூவர்க்கும் முதல்வர்ஆனார்;
சந்தியார்; சந்தி உள்ளார்; தவநெறி தரித்து நின்றார்;
சிந்தையார்; சிந்தை உள்ளார்; சிவநெறிஅனைத்தும் ஆனார்;
எந்தையார்; எம்பிரானார்—இடைமருது இடம்கொண்டாரே. 2

கார் உடைக் கொன்றைமாலை கதிர் மணி அரவினோடு
நீர் உடைச் சடையுள் வைத்த நீதியார்; நீதிஆய
போர் உடை விடை ஒன்று ஏற வல்லவர்—பொன்னித் தென்பால்
ஏர் உடைக் கமலம் ஓங்கும் இடைமருது இடம்கொண்டாரே. 3

விண்ணினார்; விண்ணின் மிக்கார்; வேதங்கள் நான்கும், அங்கம்,
பண்ணினார்; பண்ணின் மிக்க பாடலார்; பாவம் தீர்க்கும்
கண்ணினார்; கண்ணின் மிக்க நுதலினார்; காமற் காய்ந்த
எண்ணினார்; எண்ணின் மிக்கார்—இடைமருது இடம்கொண்டாரே. 4

வேதங்கள்நான்கும்கொண்டு விண்ணவர் பரவி ஏத்த,
பூதங்கள் பாடி ஆடல் உடையவன்; புனிதன்; எந்தை;
பாதங்கள் பரவி நின்ற பத்தர்கள்தங்கள் மேலை-
ஏதங்கள் தீர நின்றார்—இடைமருது இடம்கொண்டாரே. 5

பொறிஅரவு அரையில் ஆர்த்து, பூதங்கள்பலவும் சூழ,
முறி தரு வன்னி, கொன்றை, முதிர்சடை மூழ்க வைத்து,
மறிதரு கங்கை தங்க வைத்தவர்—எத்திசையும்
ஏறிதரு புனல் கொள் வேலி இடைமருது இடம்கொண்டாரே. 6

படர் ஒளி சடையினுள்ளால் பாய்புனல் அரவினோடு
சுடர்ஒளி மதியம் வைத்துத் தூ ஒளி தோன்றும் எந்தை;
அடர் ஒளி விடை ஒன்று ஏற வல்லவர்; அன்பர்தங்கள்
இடர்அவை கெடவும் நின்றார்—இடைமருது இடம்கொண்டாரே. 7

கமழ்தரு சடையினுள்ளால் கடும்புனல் அரவினோடும்
தவழ்தரு மதியம் வைத்து, தன் அடி பலரும் ஏத்த,
மழுஅது வலங்கை ஏந்தி, மாது ஒருபாகம் ஆகி,
எழில் தரு பொழில்கள் சூழ்ந்த இடைமருது இடம்கொண்டாரே. 8

பொன்திகழ் கொன்றைமாலை, புதுப்புனல், வன்னி, மத்தம்,
மின்திகழ் சடையில் வைத்து, மேதகத் தோன்றுகின்ற
அன்று அவர் அளக்கல் ஆகா அனல்-எரி ஆகி நீண்டார்—
இன்று உடன் உலகம் ஏத்த இடைமருது இடம்கொண்டாரே. 9

மலைஉடன் விரவி நின்று மதி இலா அரக்கன் நூக்கத்
தலைஉடன் அடர்த்து, மீண்டே தலைவனா அருள்கள் நல்கி,
சிலை உடை மலையை வாங்கித் திரி புரம்மூன்றும் எய்தார்—
இலை உடைக் கமல வேலி இடைமருது இடம்கொண்டாரே. 10

திருப் பழனம் IV-36 திரு நேரிசை

ஆடினார் ஒருவர்போலும்; அலர் கமழ் குழலினாளைக்
கூடினார் ஒருவர்போலும்; குளிர்புனல், வளைந்த திங்கள்,
சூடினார் ஒருவர்போலும்; தூய நல்மறைகள்நான்கும்
பாடினார் ஒருவர்போலும்—பழனத்து எம் பரமனாரே. 1

போவது ஓர் நெறியும் ஆனார்; புரிசடைப் புனிதனார்;—நான்
வேவது ஓர் வினையில் பட்டு வெம்மைதான் விடவும் கில்லேன்;
கூவல்தான் அவர்கள் கேளார்—குணம் இலா ஐவர் செய்யும்
பாவமே தீர நின்றார்—பழனத்து எம் பரமனாரே. 2

கண்டராய், முண்டர்ஆகி, கையில் ஓர் கபாலம் ஏந்தி,
தொண்டர்கள் பாடி ஆடித் தொழு கழல் பரமனார்தாம்;
விண்டவர் புரங்கள் எய்த வேதியர்; வேத நாவர்;
பண்டை என் வினைகள் தீர்ப்பார்—பழனத்து எம் பரமனாரே. 3

நீர் அவன்; தீயினோடு நிழல் அவன்; எழிலது ஆய
பார் அவன்; விண்ணின் மிக்க பரம் அவன்; பரமயோகி;
ஆரவன்; அண்டம் மிக்க திசையினோடு ஒளிகள்ஆகிப்
பார்அகத்து அமுதம் ஆனார்—பழனத்து எம் பரமனாரே. 4

ஊழியார்; ஊழிதோறும் உலகினுக்கு ஒருவர்ஆகிப்
பாழியார்; பாவம் தீர்க்கும் பராபரர்; பரம்அதுஆய,
ஆழியான் அன்னத்தானும் அன்று அவர்க்கு அளப்ப(அ)ரிய,
பாழியார்—பரவி ஏத்தும் பழனத்து எம் பரமனாரே. 5

ஆலின்கீழ் அறங்கள்எல்லாம் அன்று அவர்க்கு அருளிச்செய்து,
நூலின்கீழவர்கட்கு எல்லாம் நுண்பொருள் ஆகிநின்று,
காலின்கீழ்க் காலன்தன்னைக் கடுகத் தான் பாய்ந்து, பின்னும்
பாலின்கீழ் நெய்யும் ஆனார்—பழனத்து எம் பரமனாரே. 6

ஆதித்தன், அங்கி, சோமன், அயனொடு, மால், புத(ன்)னும்,
போதித்து நின்று உல(ஃ)கில் போற்றுஇசைத்தார்; இவர்கள்
சோதித்தார்; ஏழுஉல(ஃ)கும் சோதியுள்சோதிஆகிப்
பாதிப் பெண்உருவம்ஆனார்—பழனத்து எம் பரமனாரே. 7

கால்-தனால் காலற் காய்ந்து கார்உரி போர்த்த ஈசர்;
தோற்றனார், கடலுள் நஞ்சை; தோடு உடைக் காதர்; சோதி
ஏற்றினார் இளவெண்திங்கள், இரும் பொழில் சூழ்ந்த காயம்;
பாற்றினார், வினைகள்எல்லாம்;—பழனத்து எம் பரமனாரே. 8

கண்ணனும் பிரமனோடு காண்கிலர்ஆகி வந்தே
எண்ணியும் துதித்தும் ஏத்த, எரிஉரு ஆகி நின்று,
வண்ண நல் மலர்கள் தூவி வாழ்த்துவார் வாழ்த்தி ஏத்தப்
பண் உலாம் பாடல் கேட்டார்—பழனத்து எம் பரமனாரே. 9

குடை உடை அரக்கன் சென்று, குளிர் கயிலாயவெற்பின்-
இடை மடவரலை அஞ்ச, எடுத்தலும், இறைவன் நோக்கி
விடை உடை விகிர்தன்தானும் விரலினால் ஊன்றி மீண்டும்
படை கொடை அடிகள்போலும்—பழனத்து எம் பரமனாரே. 10

திரு நெய்த்தானம் IV-37 திரு நேரிசை

காலனை வீழச் செற்ற கழல்அடிஇரண்டும் வந்து என்
மேலஆய் இருக்கப்பெற்றேன்; மேதகத் தோன்றுகின்ற
கோல நெய்த்தானம் என்னும் குளிர்பொழில் கோயில் மேய
நீலம் வைத்த(அ)னைய கண்டம் நினைக்குமா நினைக்கின்றேனே. 1

காமனை அன்று கண்ணால் கனல்-எரி ஆக நோக்கி,
தூபமும் தீபம் காட்டித் தொழுமவர்க்கு அருள்கள்செய்து,
சேம நெய்த்தானம் என்னும் செறி பொழில் கோயில் மேய
வாமனை நினைந்த நெஞ்சம் வாழ்வுஉற நினைந்தஆறே ! 2

பிறை தரு சடையின்மேலே பெய் புனல் கங்கைதன்னை
உறைதர வைத்த எங்கள் உத்தமன்; ஊழிஆய
நிறைதரு பொழில்கள் சூழ நின்ற நெய்த்தானம் என்று
குறைதரும் அடியவர்க்குக் குழகனைக் கூடல் ஆமே. 3

வடிதரு மழு ஒன்று ஏந்தி, வார்சடை மதியம் வைத்து,
பொடி தரு மேனிமேலே புரிதரு நூலர்போலும்—
நெடி தரு பொழில்கள் சூழ நின்ற நெய்த்தானம் மேவி,
அடி தரு கழல்கள் ஆர்ப்ப, ஆடும் எம் அண்ணலாரே. 4

காடு இடம்ஆக நின்று, கனல்-எரி கையில் ஏந்தி,
பாடிய பூதம் சூழ, பண்உடன் பலவும் சொல்லி,
ஆடிய கழலர், சீர் ஆர் அம் தண் நெய்த்தானம் என்றும்
கூடிய குழகனாரைக் கூடும்ஆறு அறிகிலேனே ! 5

வானவர் வணங்கி ஏத்தி வைகலும் மலர்கள் தூவ,
தான் அவர்க்கு அருள்கள்செய்யும் சங்கரன்; செங்கண் ஏற்றன்;
தேன் அமர் பொழில்கள் சூழத் திகழும் நெய்த்தானம் மேய
கூன்இளமதியினானைக் கூடும்ஆறு அறிகிலேனே ! 6

கால் அதிர்கழல்கள் ஆர்ப்ப, கனல்-எரி கையில் வீசி,
ஞாலமும் குழிய நின்று, நட்டம்அதுஆடுகின்ற
மேலவர்—முகடு தோய விரிசடை திசைகள் பாய
மால் ஒருபாகம்ஆக மகிழ்ந்த நெய்த்தானனாரே. 7

பந்தித்த சடையின்மேலே பாய்புனல்அதனை வைத்து,
அந்திப்போது அனலும் ஆடி, அடிகள், ஐயாறு புக்கார்;
வந்திப்பார் வணங்கி நின்று வாழ்த்துவார் வாயின் உள்ளார்;
சிந்திப்பார் சிந்தை உள்ளார்—திருந்து நெய்த்தானனாரே. 8

சோதிஆய்ச் சுடரும் ஆனார்; சுண்ணவெண்சாந்து பூசி
ஓதி வாய் உலகம் ஏத்த, உகந்து தாம் அருள்கள்செய்வார்;
ஆதிஆய் அந்தம் ஆனார்—யாவரும் இறைஞ்சி ஏத்த,
நீதிஆய் நியமம்ஆகி, நின்ற நெய்த்தானனாரே. 9

இலைஉடைப்படை கை ஏந்தும் இலங்கையர்மன்னன்தன்னைத்
தலைஉடன் அடர்த்து மீண்டே தான் அவற்கு அருள்கள்செய்து,
சிலைஉடன் கணையைச் சேர்த்து, திரிபுரம் எரியச் செற்ற
நிலை உடை அடிகள்போலும்— நின்ற நெய்த்தானனாரே. 10

திரு ஐயாறு IV-38 திரு நேரிசை

கங்கையைச் சடையுள் வைத்தார்; கதிர்ப் பொறிஅரவும் வைத்தார்;
திங்களைத் திகழ வைத்தார்; திசைதிசை தொழவும் வைத்தார்;
மங்கையைப் பாகம் வைத்தார்; மான்மறி, மழுவும், வைத்தார்;
அங்கையுள் அனலும் வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 1

பொடிதனைப் பூச வைத்தார்; பொங்கு வெண்நூலும் வைத்தார்;
கடியது ஓர் நாகம் வைத்தார்; காலனைக் கால் அவைத்தார்;
வடிவு உடை மங்கைதன்னை மார்பில் ஓர்பாகம் வைத்தார்;
அடிஇணை தொழவும் வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 2

உடை தரு கீளும் வைத்தார்; உலகங்கள்அனைத்தும் வைத்தார்;
படை தரு மழுவும் வைத்தார்; பாய் புலித்தோலும் வைத்தார்;
விடை தரு கொடியும் வைத்தார்; வெண்புரிநூலும் வைத்தார்;
அடைதர அருளும் வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 3

தொண்டர்கள் தொழவும் வைத்தார்; தூ மதி சடையில் வைத்தார்;
இண்டையைத் திகழ வைத்தார்; எமக்கு என்றும் இன்பம் வைத்தார்;
வண்டு சேர் குழலினாளை மருவி ஓர்பாகம் வைத்தார்—
அண்ட வானவர்கள் ஏத்தும் ஐயன்ஐயாறனாரே. 4

வானவர் வணங்க வைத்தார்; வல்வினை மாய வைத்தார்;
கான்இடை நடமும் வைத்தார்; காமனைக் கனலா வைத்தார்;
ஆன்இடைஐந்தும் வைத்தார்; ஆட்டுவார்க்கு அருளும் வைத்தார்;
ஆனையின்உரிவை வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 5

சங்கு அணி குழையும் வைத்தார்; சாம்பர் மெய்ப் பூச வைத்தார்;
வெங்கதிர் எரிய வைத்தார்; விரி பொழில்அனைத்தும் வைத்தார்;
கங்குலும் பகலும் வைத்தார்; கடுவினை களைய வைத்தார்;
அங்கம்அது ஓத வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 6

பத்தர்கட்கு அருளும் வைத்தார்; பாய் விடை ஏற வைத்தார்;
சித்தத்தை ஒன்ற வைத்தார்; சிவம்அதே நினைய வைத்தார்;
முத்தியை முற்ற வைத்தார்; முறைமுறை நெறிகள் வைத்தார்;
அத்தியின்உரிவை வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 7

ஏறு உகந்து ஏற வைத்தார்; இடைமருது இடமும் வைத்தார்;
நாறு பூங்கொன்றை வைத்தார்; நாகமும் அரையில் வைத்தார்;
கூறு உமை ஆகம் வைத்தார்; கொல் புலித் தோலும் வைத்தார்;
ஆறும் ஓர் சடையில் வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 8

பூதங்கள்பலவும் வைத்தார்; பொங்கு வெண்நீறும் வைத்தார்;
கீதங்கள் பாட வைத்தார்; கின்னரம்தன்னை வைத்தார்;
பாதங்கள் பரவ வைத்தார்; பத்தர்கள் பணிய வைத்தார்;
ஆதியும் அந்தம் வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 9

இரப்பவர்க்கு ஈய வைத்தார்; ஈபவர்க்கு அருளும் வைத்தார்;
கரப்பவர்தங்கட்கு எல்லாம் கடுநரகங்கள் வைத்தார்;
பரப்பு நீர்க் கங்கைதன்னைப் படர்சடைப் பாகம் வைத்தார்;
அரக்கனுக்கு அருளும் வைத்தார்—ஐயன்ஐயாறனாரே. 10

திரு ஐயாறு IV-39 திரு நேரிசை

குண்டனாய்ச் சமணரோடே கூடி நான் கொண்ட மாலைத்
துண்டனே ! சுடர் கொள் சோதீ ! தூ நெறிஆகி நின்ற
அண்டனே ! அமரர்ஏறே ! திரு ஐயாறு அமர்ந்த தேனே !
தொண்டனேன், தொழுது உன் பாதம் சொல்லி, நான் திரிகின்றேனே. 1

பீலி கை இடுக்கி, நாளும் பெரியது ஓர் தவம் என்று எண்ணி,
வாலிய தறிகள் போல மதிஇலார் பட்டது என்னே !
வாலியார் வணங்கி ஏத்தும் திரு ஐயாறு அமர்ந்த தேனோடு
ஆலியா எழுந்த நெஞ்சம் அழகிதா எழுந்த ஆறே ! 2

தட்டு இடு சமணரோடே தருக்கி, நான் தவம் என்று எண்ணி,
ஒட்டிடு மனத்தினீரே ! உம்மை யான் செய்வது என்னே !
மொட்டு இடு கமலப் பொய்கைத் திரு ஐயாறு அமர்ந்த தேனோடு
ஒட்டிடும் உள்ளத்தீரே ! உம்மை நான் உகந்திட்டேனே. 3

பாசிப் பல்மாசு மெய்யர் பலம் இலாச் சமணரோடு
நேசத்தால் இருந்த நெஞ்சை நீக்கும்ஆறு அறியமாட்டேன்;
தேசத்தார் பரவி ஏத்தும் திரு ஐயாறு அமர்ந்த தேனை
வாசத்தால் வணங்க வல்லார் வல்வினை மாயும்அன்றே. 4

கடுப் பொடி அட்டி மெய்யில், கருதி ஓர் தவம் என்று எண்ணி,
வடுக்களோடு இசைந்த நெஞ்சே ! மதிஇலி பட்டது என்னே !
மடுக்களில் வாளை பாயும் திரு ஐயாறு அமர்ந்த தேனை
அடுத்து நின்று உன்னு, நெஞ்சே ! அருந்தவம் செய்தஆறே ! 5

துறவி என்று அவம்அது ஓரேன்; சொல்லிய சொலவு செய்து(வ்),
உறவினால் அமணரோடும் உணர்வுஇலேன், உணர்வு ஒன்று இன்றி;
நறவம் ஆர் பொழில்கள் சூழ்ந்த திரு ஐயாறு அமர்ந்த தேனை
மறவு இலா நெஞ்சமே! நல்மதி உனக்கு அடைந்தஆறே! 6

பல்உரைச் சமணரோடே பலபல காலம்எல்லாம்
சொல்லிய சொலவு செய்தேன்; சோர்வன், நான் நினைந்தபோது;
மல்லிகை மலரும் சோலைத் திரு ஐயாறு அமர்ந்த தேனை
எல்லியும் பகலும் எல்லாம் நினைந்தபோது இனியஆறே! 7

மண்உளார் விண்உளாரும் வணங்குவார் பாவம் போக,—
எண் இலாச் சமணரோடே இசைந்தனை, ஏழைநெஞ்சே!—
தெண்நிலா எறிக்கும் சென்னித் திரு ஐயாறு அமர்ந்த தேனைக்
கண்ணினால் காணப்பெற்றுக் கருதிற்றே முடிந்தஆறே! 8

குருந்தம்அது ஒசித்த மாலும், குலமலர் மேவினானும்,
திருந்துநல்-திருவடியும் திருமுடி கரணமாட்டார்;
அருந்தவ முனிவர் ஏத்தும் திரு ஐயாறு அமர்ந்த தேனைப்
பொருந்தி நின்று உன்னு, நெஞ்சே! பொய்வினை மாயும்அன்றே. 9

அறிவு இலா அரக்கன் ஓடி, அருவரை எடுக்கல்உற்று,
முறுகினான்; முறுகக் கண்டு மூதறிவாளன் நோக்கி
நிறுவினான், சிறுவிர(ல்)லால்; நெரிந்து போய் நிலத்தில் வீழ,
அறிவினால் அருள்கள்செய்தான், திரு ஐயாறு அமர்ந்த தேனே. 10

## திரு ஐயாறு		IV-40		திரு நேரிசை

தான்அலாது உலகம் இல்லை; சகம்அலாது அடிமை இல்லை;
கான்அலாது ஆடல் இல்லை; கருதுவார்தங்களுக்கு
வான்அலாது அருளும் இல்லை; வார்குழல் மங்கையோடும்
ஆன்அலாது ஊர்வது இல்லை—ஐயன்ஐயாறனார்க்கே. 1

ஆல்அலால் இருக்கை இல்லை; அருந்தவ் முனிவர்க்கு அன்று
நூல்அலால் நொடிவது இல்லை; நுண்பொருள் ஆய்ந்துகொண்டு
மாலும் நான்முகனும் கூடி மலர்அடி வணங்க, வேலை
ஆல்அலால் அமுதம் இல்லை—ஐயன்ஐயாறனார்க்கே. 2

நரி புரி சுடலைதன்னில் நடம்அலால் நவிற்றல் இல்லை;
சுரிபுரிகுழலியோடும் துணைஅலால் இருக்கை இல்லை;
தெரி புரி சிந்தையார்க்குத் தெளிவுஅலால் அருளும் இல்லை—
அரி புரி மலர்கொடு ஏத்தும் ஐயன்ஐயாறனார்க்கே. 3

தொண்டுஅலால்-துணையும் இல்லை; தோல்அலாது உடையும் இல்லை;
கண்டு அலாது அருளும் இல்லை; கலந்தபின் பிரிவது இல்லை—
‘‘பண்டைநால்மறைகள் காணாப் பரிசினன்’’ என்றுஎன்று எண்ணி,
அண்ட வானவர்கள் ஏத்தும் ஐயன்ஐயாறனார்க்கே. 4

எரிஅலால் உருவம் இல்லை; ஏறுஅலால் ஏறல் இல்லை;
கரிஅலால் போர்வை இல்லை; காண்தகு சோதியார்க்கு,—
பிரிவு இலா அமரர் கூடிப் பெருந்தகைப்பிரான் என்று ஏத்தும்—
அரிஅலால்-தேவி இல்லை, ஐயன்ஐயாறனார்க்கே. 5

என்புஅலால் கலனும் இல்லை; எருதுஅலால் ஊர்வது இல்லை;
புன் புலால் நாறு காட்டின் பொடிஅலால் சாந்தும் இல்லை;
துன்பு இலாத் தொண்டர் கூடித் தொழுது அழுது ஆடிப் பாடும்
அன்புஅலால் பொருளும் இல்லை—ஐயன்ஐயாறனார்க்கே. 6

கீள்அலால் உடையும் இல்லை; கிளர் பொறிஅரவம் பைம்பூண்
தோள்அலால்-துணையும் இல்லை; தொத்து அலர்கின்ற வேனில்
வேள்அலால் காயப்பட்ட வீரரும் இல்லை; மீளா
ஆள்அலால் கைம்மாறு இல்லை—ஐயன்ஐயாறனார்க்கே. 7

சகம்அலாது அடிமை இல்லை; தான்அலால்-துணையும் இல்லை;
நகம்எலாம் தேயக் கையால் நாள்மலர் தொழுது தூவி,
முகம்எலாம் கண்ணீர் மல்க முன் பணிந்து, ஏத்தும் தொண்டர்
அகம்அலால் கோயில் இல்லை—ஐயன்ஐயாறனார்க்கே. 8

உமைஅலாது உருவம் இல்லை; உலகுஅலாது உடையது இல்லை—
நமை எலாம் உடையர் ஆவர்; நன்மையே; தீமை இல்லை;
கமைஎலாம் உடையர்ஆகிக் கழல்அடி பரவும் தொண்டர்க்கு
அமைவு இலா அருள்கொடுப்பார்—ஐயன்ஐயாறனார்க்கே. 9

மலைஅலால் இருக்கை இல்லை; மதித்திடா அரக்கன்தன்னைத்
தலைஅலால் நெரித்தது இல்லை, தடவரைக்கீழ் அடர்த்து;
நிலைஇலார் புரங்கள் வேவ நெருப்புஅலால் விரித்தது இல்லை—
அலையின் ஆர் பொன்னி மன்னும் ஐயன்ஐயாறனார்க்கே. 10

திருச் சோற்றுத்துறை IV-41 திரு நேரிசை

பொய் விராம் மேனிதன்னைப் பொருள் எனக் காலம் போக்கி
மெய் விராம் மனத்தன்அல்லேன்; வேதியா ! வேத நாவா !
ஐவரால் அலைக்கப்பட்ட ஆக்கை கொண்டு அயர்த்துப்போனேன்—
செய் வரால் உகளும் செம்மைத் திருச் சோற்றுத்துறையனாரே ! 1

கட்டராய் நின்று நீங்கள் காலத்தைக் கழிக்கவேண்டா;—
எட்ட ஆம் கைகள் வீசி எல்லி நின்று ஆடுவானை—
அட்டமாமலர்கள் கொண்டே ஆன்அஞ்சும்ஆட்ட ஆடிச்
சிட்டராய் அருள்கள்செய்வார், திருச் சோற்றுத்துறையனாரே. 2

கல்லினால் புரம்மூன்று எய்த கடவுளைக் காதலாலே
எல்லியும் பகலும் உள்ளே ஏகாந்தம்ஆக ஏத்தும் !
பல்இல்வெண்தலை கை ஏந்திப் பல்இலம் திரியும் செல்வர்;
சொல்லும் நன்பொருளும் ஆவார்—திருச் சோற்றுத்துறையனாரே. 3

கறையராய்க் கண்டம், நெற்றிக்கண்ணராய், பெண் ஓர்பாகம்
இறையராய், இனியர்ஆகி, தனியராய், பனிவெண்திங்கள்-
பிறையராய், செய்தஎல்லாம் பீடராய், கேடு இல் சோற்றுத்-
துறையராய், புகுந்து என் உள்ளச் சோர்வு கண்டு அருளினாரே. 4

பொந்தையைப் பொருளா எண்ணிப் பொருக்கெனக் காலம் போனேன்;
''எந்தையே ! ஏகமூர்த்தி !'' என்று நின்று ஏத்தமாட்டேன்;
பந்தம்ஆய், வீடும் ஆகி, பரம்பரம் ஆகி, நின்று
சிந்தையுள்-தேறல்போலும்—திருச் சோற்றுத்துறையனாரே. 5

பேர்த்து இனிப் பிறவா வண்ணம் பிதற்றுமின், பேதைபங்கன்
பார்த்தனுக்கு அருள்கள்செய்த பாசுபதன் திற(ம்)மே !
ஆர்த்து வந்து இழிவது ஒத்த அலைபுனல் கங்கை ஏற்றுத்
தீர்த்தம்ஆய்ப் போத விட்டார், திருச் சோற்றுத்துறையனாரே. 6

கொந்து ஆர் பூங் குழலினாரைக் கூறியே காலம் போன,
எந்தைஎம்பிரானாய் நின்ற இறைவனை ஏத்தாது; அந்தோ !
முந்து அராஅல்குலாளை உடன்வைத்த ஆதிமூர்த்தி,
செந் தாது புடைகள் சூழ்ந்த திருச் சோற்றுத்துறையனாரே. 7

அம் கதிரோன்அவ(ன்)னை அண்ணலாக் கருதவேண்டா;
வெங்கதிரோன் வழியே போவதற்கு அமைந்துகொண்மின் !
அம் கதிரோன்அவ(ன்)னை உடன்வைத்த ஆதிமூர்த்தி—
செங்கதிரோன் வணங்கும் திருச் சோற்றுத்துறையனாரே. 8

ஓதியே கழிக்கின்றீர்கள்;—உலகத்தீர் !—ஒருவன்தன்னை
நீதியால் நினைக்கமாட்டீர்; நின்மலன் என்று சொல்லீர்;
சாதியா நான்முக(ன்)னும் சக்கரத்தானும் காணாச்
சோதிஆய்ச் சுடர்அது ஆனார்—திருச் சோற்றுத்துறையனாரே. 9

மற்று நீர் மனம்வையாதே மறுமையைக் கழிக்க வேண்டில்
பெற்றது ஓர் உபாயம்தன்னால் பிரானையே பிதற்றுமின்கள் !
கற்று வந்து அரக்கன் ஓடிக் கயிலாயமலை எடுக்க,
செற்று உகந்து அருளிச்செய்தார்—திருச் சோற்றுத்துறையனாரே. 10

திருத் துருத்தி IV-42 திரு நேரிசை

பொருத்திய குரம்பைதன்னைப் பொருள் எனக் கருதவேண்டா;
இருத்தி எப்போதும் நெஞ்சுள், இறைவனை, ஏத்துமின்கள் !
ஒருத்தியைப் பாகம் வைத்து அங்கு ஒருத்தியைச் சடையில் வைத்த
துருத்தி அம் சுடரினானைத் தொண்டனேன் கண்டஆறே ! 1

சவைதனைச் செய்து வாழ்வான் சலத்துளே அழுந்துகின்ற
இவை ஒரு பொருளும் அல்ல; இறைவனை ஏத்துமி(ன்)னே !
அவைபுரம்மூன்றும் எய்தும் அடியவர்க்கு அருளிச்செய்த
சுவையினை, துருத்தியானை, தொண்டனேன் கண்டஆறே ! 2

உன்னி எப்போதும் நெஞ்சுள் ஒருவனை ஏத்துமி(ன்)னே !
கன்னியை ஒருபால் வைத்து, கங்கையைச் சடையுள் வைத்து,
பொன்னியின் நடுவுதன்னுள் பூம் புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தியானைத் தொண்டனேன் கண்டஆறே ! 3

ஊன்தலை வலியன்ஆகி, உலகத்துள் உயிர்கட்கு எல்லாம்
தான் தலைப்பட்டு நின்று, சார் கனல்அகத்து வீழ,
வான்தலைத் தேவர் கூடி, ‘‘வானவர்க்கு இறைவா !’’ என்னும்
தோன்றலை, துருத்தியானை, தொண்டனேன் கண்டஆறே ! 4

உடல்தனைக் கழிக்கல்உற்ற உலகத்துள் உயிர்கட்கு எல்லாம்
இடர்தனைக் கழிக்க வேண்டில் இறைவனை ஏத்துமி(ன்)னே !
கடல்தனில் நஞ்சம் உண்டு காண்பு அரிதுஆகி நின்ற
சுடர்தனை, துருத்தியானை, தொண்டனேன் கண்டஆறே ! 5

அள்ளலைக் கடக்க வேண்டில் அரனையே நினைமின், நீர்கள் !
பொள்ளல் இக்காயம்தன்னுள் புண்டரீகத்து இருந்த
வள்ளலை, வானவர்க்கும் காண்பு அரிதுஆகி நின்ற
துள் அலைத் துருத்தியானை, தொண்டனேன் கண்டஆறே ! 6

''பாதியில் உமையாள்தன்னைப் பாகமா வைத்த பண்பன்;
வேதியன்'' என்று சொல்லி விண்ணவர் விரும்பி ஏத்தச்
சாதி ஆம் சதுமுக(ன்)னும் சக்கரத்தானும் காணாச்
சோதியை, துருத்தியானை, தொண்டனேன் கண்டஆறே ! 7

சாம் மனைவாழ்க்கைஆன சலத்துளே அழுந்தவேண்டா;
தூமம் நல் அகிலும் காட்டித் தொழுது அடி வணங்குமி(ன்)னோ !
சோமனைச் சடையுள் வைத்துத் தொல்-நெறிபலவும் காட்டும்
தூ மணல்-துருத்தியானைத் தொண்டனேன் கண்டஆறே ! 8

குண்டரே, சமணர்புத்தர்; குறி அறியாது நின்று
கண்டதே கருதுவார்கள் கருத்து எண்ணாது ஒழிமின், நீர்கள் !
விண்டவர் புரங்கள் எய்து விண்ணவர்க்கு அருள்கள்செய்த
தொண்டர்கள்துணையினானைத் துருத்தி நான் கண்டஆறே ! 9

பிண்டத்தைக் கழிக்க வேண்டில் பிரானையே பிதற்றுமின்கள் !
அண்டத்தைக் கழிய நீண்ட அடல் அரக்கன்தன் ஆண்மை
கண்டு ஒத்துக் கால்விர(ல்)லால் ஊன்றி, மீண்டு அருளிச்செய்த
துண்டத்துத் துருத்தியானைத் தொண்டனேன் கண்டஆறே ! 10

திருக் கச்சி மேற்றளி IV-43 திரு நேரிசை

மறைஅது பாடிப் பிச்சைக்கு என்று அகம் திரிந்து வாழ்வார்;
பிறைஅது, சடைமுடி(ம்)மேல்; பெய்வளையாள்தன்னோடும்
கறைஅது கண்டம் கொண்டார்; காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
இறையவர்—பாடல் ஆடல் இலங்கு மேற்றளியனாரே. 1

மால் அன மாயன்தன்னை மகிழ்ந்தனர்; விருத்தர் ஆகும்
பாலனார்; பசுபதி(ய்)யார்; பால்வெள்ளைநீறு பூசிக்
காலனைக் காலால் காய்ந்தார்; காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
ஏல நல் கடம்பன்தந்தை—இலங்கு மேற்றளியனாரே. 2

விண்இடை விண்ணவர்கள் விரும்பி வந்து இறைஞ்சி வாழ்த்த,
பண்இடைச் சுவையின் மிக்க கின்னரம் பாடல் கேட்பார்;
கண்இடை மணியின் ஒப்பார்; காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
எண்இடை எழுத்தும் ஆனார்—இலங்கு மேற்றளியனாரே. 3

சோமனை அரவினோடு சூழ்தரக் கங்கை சூடும்
வாமன்; நல் வானவர்கள் வலம்கொடு வந்து போற்றக்
காமனைக் காய்ந்த கண்ணார்; காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
ஏமம் நின்று ஆடும் எந்தை—இலங்கு மேற்றளியனாரே. 4

ஊனவர்; உயிரினோடும் உலகங்கள் ஊழிஆகி,
தானவர் தனமும்ஆகி, தனஞ்சயனோடு எதிர்ந்த
கானவர்; காளகண்டர்; காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
ஏனம் அக்கோடு பூண்டார்—இலங்கு மேற்றளியனாரே. 5

மாயன் ஆம் மாலன்ஆகி, மலரவன்ஆகி, மண்ஆய்,
தேயம்ஆய், திசைஎட்டுஆகி, தீர்த்தம்ஆய், திரிதர்கின்ற
காயம்ஆய், காயத்து உள்ளார்; காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
ஏய மென்தோளிபாகர்—இலங்கு மேற்றளியனாரே. 6

மண்ணினை உண்ட மாயன்தன்னை ஓர்பாகம் கொண்டார்;
பண்ணினைப் பாடி ஆடும் பத்தர்கள் சித்தம் கொண்டார்;
கண்ணினை மூன்றும் கொண்டார்; காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
எண்ணினை எண்ண வைத்தார்—இலங்கு மேற்றளியனாரே. 7

செல்வியைப் பாகம் கொண்டார்; சேந்தனை மகனாக் கொண்டார்;
மல்லிகைக்கண்ணியோடு மா மலர்க்கொன்றை சூடி,
கல்வியைக் கரை இலாத காஞ்சி மா நகர்தன்னுள்ளால்
எல்லியை விளங்க நின்றார்—இலங்கு மேற்றளியனாரே. 8

வேறு இணை இன்றி என்றும் விளங்கு ஒளி மருங்கினாளைக்
கூறு இயல் பாகம் வைத்தார்; கோள் அரா மதியும் வைத்தார்;
ஆறினைச் சடையுள் வைத்தார்; அணி பொழில் சச்சிதன்னுள்
ஏறினை ஏறும் எந்தை—இலங்கு மேற்றளியனாரே. 9

தென்னவன் மலை எடுக்கச் சேயிழை நடுங்கக் கண்டு,
மன்னவன் விரலால் ஊன்ற, மணி முடி நெரிய, வாயால்
கன்னலின் கீதம் பாடக் கேட்டவர்; காஞ்சிதன்னுள்—
இன்னவற்கு அருளிச்செய்தார்—இலங்கு மேற்றளியனாரே. 10

திருக் கச்சி ஏகம்பம் IV-44 திரு நேரிசை

நம்பனை, நகரம்மூன்றும் எரியுண வெருவ நோக்கும்
அம்பனை, அமுதை, ஆற்றை, அணி பொழில் கச்சியுள் ஏ-
கம்பனை, கதிர் வெண்திங்கள் செஞ்சடைக் கடவுள்தன்னை,
செம்பொனை, பவளத்தூணை, சிந்தியா எழுகின்றேனே. 1

ஒரு முழம் உள்ள குட்டம், ஒன்பதுதுளை உடைத்துஆய்;
அரைமுழம் அதன் அக(ல்)லம்; அதனில் வாழ் முதலை ஐந்து;
பெரு முழைவாய்தல் பற்றிக் கிடந்து நான் பிதற்றுகின்றேன்—
கருமுகில் தவழும் மாடக் கச்சி ஏகம்பனீரே ! 2

மலையினார்மகள் ஓர்பாகம் மைந்தனார், மழு ஒன்று ஏந்திச்
சிலையினால் மதில்கள்மூன்றும் தீ எழச் செற்ற செல்வர்,
இலையின் ஆர் சூலம் ஏந்தி ஏகம்பம் மேவினாரை,
தலையினால் வணங்க வல்லார் தலைவர்க்கும் தலைவர்தாமே ! 3

பூத்த பொன்கொன்றமாலை புரிசடைக்கு அணிந்த செல்வர்,
தீர்த்தம் ஆம் கங்கையாளைத் திருமுடி திகழ வைத்து(வ்)
ஏத்துவார் ஏத்த நின்ற ஏகம்பம் மேவினாரை,
வாழ்த்தும்ஆறு அறியமாட்டேன்; மால்கொடு மயங்கினேனே ! 4

மையின் ஆர் மலர்நெடுங்கண் மங்கை ஓர்பங்கர்ஆகி,
கையில் ஓர் கபாலம் ஏந்தி, கடைதொறும் பலி கொள்வார், தாம்
எய்வது ஓர் ஏனம் ஓட்டி ஏகம்பம் மேவினாரை,
கையினால்-தொழ வல்லார்க்குக் கடுவினை களையல் ஆமே. 5

தரு வினை மருவும் கங்கை தங்கிய சடையன், எங்கள்
அருவினை அகல நல்கும் அண்ணலை, அமரர் போற்றும்
திருவினை, திரு ஏகம்பம் செப்பட உறைய வல்ல
உருவினை, உருகி ஆங்கே உள்ளத்தால் உகக்கின்றேனே ! 6

கொண்டது ஓர் கோலம்ஆகிக் கோலக்கா உடைய கூத்தன்,
உண்டது ஓர் நஞ்சம்ஆகி உலகுஎலாம் உய்ய உண்டான்,
எண்திசையோரும் ஏத்த நின்ற ஏகம்பன்தன்னை,
கண்டு நான் அடிமை செய்வான் கருதியே திரிகின்றேனே. 7

படம் உடை அரவினோடு பனிமதிஅதனைச் சூடி,
கடம் உடை உரிவை மூடிக் கண்டவர் அஞ்ச, அம்ம !
இடம் உடைக் கச்சிதன்னுள் ஏகம்பம் மேவினான்தன்
நடம்உடைஆடல் காண ஞாலம்தான் உய்ந்தஆறே ! 8

பொன்திகழ் கொன்றைமாலை பொருந்திய நெடுந் தண் மார்பர்;
நன்றியின் புகுந்து என் உள்ளம் மெள்ளவே நவில நின்று,
குன்றியில் அடுத்த மேனிக் குவளைஅம்கண்டர்; எம்மை
இன் துயில் போது கண்டார்; இனியர்—ஏகம்பனாரே. 9

துருத்தியார், பழனத்து உள்ளார், தொண்டர்கள்பலரும் ஏத்த
அருத்தியால் அன்பு செய்வார்அவர்அவர்க்கு அருள்கள்செய்து(வ்)
எருத்தினை இசைய ஏறி ஏகம்பம் மேவினார்க்கு,
வருத்தி நின்று அடிமை செய்வார் வல்வினை மாயும் அன்றே ! 10

திரு ஒற்றியூர் IV-45 திரு நேரிசை

வெள்ளத்தைச் சடையில் வைத்த வேதகீதன்தன் பாதம்
மெள்ளத்தான் அடைய வேண்டின் மெய் தரு ஞானத்தீயால்
கள்ளத்தைக் கழிய நின்றார் காயத்துள் கலந்து நின்று(வ்)
உள்ளத்துள் ஒளியும் ஆகும், ஒற்றியூர் உடைய கோவே. 1

வசிப்பு எனும் வாழ்க்கை வேண்டா; வானவர்இறைவன் நின்று,
புசிப்பது ஓர் பொள்ளல் ஆக்கைஅதனொடும் புணர்வு வேண்டில்,
அசிர்ப்பு எனும் அருந்தவத்தால் ஆன்மாவின் இடம்அதுஆகி
உசிர்ப்பு எனும் உணர்வின் உள்ளார், ஒற்றியூர் உடைய கோவே. 2

தானத்தைச் செய்து வாழ்வான் சலத்துளே அழுந்துகின்றீர்;
வானத்தை வணங்க வேண்டில் வம்மின்கள், வல்லீர்ஆகில் !
ஞானத்தை விளக்கை ஏற்றி நாடி உள் விரவ வல்லார்
ஊனத்தை ஒழிப்பர்போலும், ஒற்றியூர் உடைய கோவே. 3

காமத்துள் அழுந்தி நின்று கண்டரால் ஒறுப்புண்ணாதே,
சாமத்துவேதம்ஆகி நின்றது ஓர் சயம்புதன்னை
ஏமத்தும் இடைஇராவும் ஏகாந்தம் இயம்புவாருக்கு
ஓமத்துள் ஒளிஅது ஆகும், ஒற்றியூர் உடைய கோவே. 4

சமையம் மேல் ஆறும்ஆகி, தான் ஒரு சயம்புஆகி,
இமையவர் பரவி ஏத்த இனிதின் அங்கு இருந்த ஈசன்;
கமையினை உடையர்ஆகிக் கழல்அடி பரவுவாருக்கு
உமைஒருபாகர்போலும்—ஒற்றியூர் உடைய கோவே. 5

ஒருத்தி தன் தலைச்சென்றாளைக் கரந்திட்டான்; உலகம் ஏத்த
ஒருத்திக்கு நல்லன்ஆகி, மறுப் படுத்து ஒளித்தும், ஈண்டே
ஒருத்தியைப் பாகம் வைத்தான்; உணர்வினால் ஐயம் உண்ணி;
ஒருத்திக்கும் நல்லன்அல்லன்—ஒற்றியூர் உடைய கோவே. 6

பிணம் உடை உடலுக்கு ஆகப் பித்தராய்த் திரிந்து நீங்கள்
புணர்வு எனும் போகம் வேண்டா; போக்கல் ஆம், பொய்யை நீங்க;
நிணம் உடை நெஞ்சினுள்ளால் நினைக்குமா நினைக்கின்றாருக்கு
உணர்வினோடு இருப்பர்போலும், ஒற்றியூர் உடைய கோவே. 7

பின்னு வார்சடையான்தன்னைப் பிதற்றிலாப் பேதைமார்கள்
துன்னுவார், நரகம்தன்னுள்;-தொல்வினை தீர வேண்டின்,
மன்னு வான்மறைகள் ஓதி, மனத்தினுள் விளக்கு ஒன்று ஏற்றி,
உன்னுவார் உள்ளத்து உள்ளார், ஒற்றியூர் உடைய கோவே. 8

முள்குவார் போகம் வேண்டின் முயற்றியால்; இடர்கள் வந்தால்
எள்குவார்; எள்கி நின்று அங்கு இது ஒரு மாயம் என்பார்;
பள்குவார் பத்தர்ஆகிப் பாடியும் ஆடியும் நின்று
உள்குவார் உள்ளத்து உள்ளார், ஒற்றியூர் உடைய கோவே. 9

வெறுத்து உகப் புலன்கள்ஐந்தும் வேண்டிற்று வேண்டும்; நெஞ்சே !
மறுத்து உக, ஆர்வச்செற்றக்குரோதங்கள்ஆன மாய !
பொறுத்து உகப் புட்பகத்தேர் உடையானை அடர ஊன்றி
ஒறுத்து உகந்து அருள்கள்செய்தார், ஒற்றியூர் உடைய கோவே. 10

திரு ஒற்றியூர் IV-46 திரு நேரிசை

ஓம்பினேன் கூட்டை, வாளா உள்ளத்து ஓர் கொடுமை வைத்து;
காம்பு இலா மூழை போலக் கருதிற்றே முகக்கமாட்டேன்;
பாம்பின்வாய்த் தேரை போலப் பலபல நினைக்கின்றேனை
ஓம்பி நீ உய்யக்கொள்ளாய், ஒற்றியூர் உடைய கோவே ! 1

மனம் எனும் தோணி பற்றி, மதி எனும் கோலை ஊன்றி,
சினம் எனும் சரக்கை ஏற்றி, செறி கடல் ஓடும்போது,
மதன் எனும் பாறை தாக்கி மறியும்போது, அறிய ஒண்ணாது;
உனை உனும் உணர்வை நல்காய், ஒற்றியூர் உடைய கோவே ! 2

திருக் கயிலாயம் IV-47 திரு நேரிசை

கனகம் மா வயிரம் உந்தும் மா மணிக் கயிலை கண்டு,
முனகனாய் அரக்கன் ஓடி எடுத்தலும், உமையாள் அஞ்ச,
அனகனாய் நின்ற ஈசன் ஊன்றலும், அலறி வீழ்ந்தான்;
மனகனாய் ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 1

கதித்தவன் கண் சிவந்து, கயிலை நல் மலையை ஓடி
அதிர்த்து அவன் எடுத்திட(ல்)லும், அரிவைதான் அஞ்ச, ஈசன்
நெதித்தவன் ஊன்றியிட்ட நிலை அழிந்து அலறி வீழ்ந்தான்;
மதித்து இறை ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 2

கறுத்தவன் கண் சிவந்து, கயிலை நல் மலையைக் கையால்
மறித்தலும், மங்கை அஞ்ச, வானவர்இறைவன் நக்கு,
நெறித்து ஒருவிரலால் ஊன்ற, நெடுவரை போல வீழ்ந்தான்;
மறித்து இறை ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 3

கடுத்தவன் கண் சிவந்து, கயிலை நல் மலையை ஓடி
எடுத்தலும், மங்கை அஞ்ச, இறையவன் இறையே நக்கு,
நொடிப்புஅள(வு) விரலால் ஊன்ற, நோவதும் அலறியிட்டான்;
மடித்து இறை ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 4

கன்றித் தன் கண் சிவந்து, கயிலை நல் மலையை ஓடி
வென்றித் தன் கைத்தலத்தால் எடுத்தலும், வெருவ மங்கை,
நன்று(த்)தான் நக்கு நாதன் ஊன்றலும், நகழ வீழ்ந்தான்;
மன்றித் தான் ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 5

களித்தவன் கண் சிவந்து, கயிலை நல் மலையை ஓடி,
நெளித்து அவன் எடுத்திட(ல்)லும், நேரிழை அஞ்ச, நோக்கி,
வெளித்தவன் ஊன்றியிட்ட வெற்பினால் அலறி வீழ்ந்தான்;
மளித்து இறை ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 6

கருத்தனாய்க் கண் சிவந்து, கயிலை நல் மலையைக் கையால்
எருத்தனாய் எடுத்தஆறே, ஏந்திழை அஞ்ச, ஈசன்—
திருத்தனாய் நின்ற தேவன்— திருவிரல் ஊன்ற, வீழ்ந்தான்;
வருத்துவான் ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 7

கடியவன் கண் சிவந்து, கயிலை நல் மலையை ஓடி,
வடிவு உடை மங்கை அஞ்ச எடுத்தலும், மருவ நோக்கிச்
செடி படத் திருவிர(ல்)லால் ஊன்றலும், சிதைந்து வீழ்ந்தான்;
வடிவு உற ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 8

கரியத் தான் கண் சிவந்து, கயிலை நல் மலையைப் பற்றி,
இரியத் தான் எடுத்திட(ல்)லும், ஏந்திழை அஞ்ச, ஈசன்
நெரியத் தான் ஊன்றாமுன்னம் நிற்கிலாது, அலறி வீழ்ந்தான்;
மறியத் தான் ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே! 9

கற்றனன், கயிலைதன்னைக் காண்டலும் அரக்கன் ஓடிச்
செற்றவன் எடுத்தஆறே, சேயிழை அஞ்ச, ஈசன்
உற்று இறை ஊன்றாமுன்னம் உணர்வு அழி வகையால், வீழ்ந்தான்;
மற்று இறை ஊன்றினானேல் மறித்தும் நோக்கு இல்லை அன்றே ! 10

திரு ஆப்பாடி IV-48 திரு நேரிசை

கடல்அகம்ஏழினோடும் பவனமும் கலந்து, விண்ணும்
உடல்அகத்து உயிரும் பாரும் ஒள்அழல் ஆகி நின்று,
தடம் மலர்க் கந்தமாலை தண்மதி பகலும் ஆகி,
மடல் அவிழ் கொன்றை சூடி, மன்னும்—ஆப்பாடியாரே. 1

ஆதியும் அறிவும் ஆகி, அறிவினுள் செறிவும் ஆகி,
சோதியுள் சுடரும் ஆகி, தூநெறிக்கு ஒருவன்ஆகி,
பாதியில் பெண்ணும் ஆகி, பரவுவார் பாங்கர்ஆகி,
வேதியர் வாழும் சேய்ஞால் விரும்பும்—ஆப்பாடியாரே. 2

எண் உடை இருக்கும் ஆகி, இருக்கின் உள்பொருளும் ஆகி,
பண்ணொடு பாடல்தன்னைப் பரவுவார் பாங்கர்ஆகி,
கண் ஒரு நெற்றிஆகி, கருதுவார் கருதல் ஆகாப்
பெண் ஒருபாகம்ஆகி, பேணும்—ஆப்பாடியாரே. 3

அண்டம் ஆர் அமரர்கோமான்—ஆதி, எம் அண்ணல்,—பாதம்
கொண்டவன் குறிப்பினாலே கூப்பினான், தாபரத்தை;
கண்டு அவன்தாதை பாய்வான் கால் அற எறியக் கண்டு
தண்டியார்க்கு அருள்கள்செய்த தலைவர், ஆப்பாடியாரே. 4

சிந்தையும் தெளிவும் ஆகி, தெளிவினுள் சிவமும் ஆகி,
வந்த நன் பயனும் ஆகி, வாணுதல் பாகம்ஆகி,
மந்தம் ஆம் பொழில்கள் சூழ்ந்த மண்ணித் தென்கரைமேல் மன்னி
அந்தமோடு அளவு இலாத அடிகள்—ஆப்பாடியாரே. 5

வன்னி, வாள்அரவு, மத்தம், மதியமும்,ஆறும், சூடி,
மின்னிய உருஆம் சோதி மெய்ப்பொருள் பயனும் ஆகி,
கன்னி ஓர்பாகம்ஆகி, கருதுவார் கருத்தும் ஆகி,
இன்இசை தொண்டர் பாட, இருந்த ஆப்பாடியாரே. 6

உள்ளும்ஆய்ப் புறமும் ஆகி, உருவும்ஆய் அருவும் ஆகி,
வெள்ளம்ஆய்க் கரையும் ஆகி, விரி கதிர் ஞாயிறுஆகி,
கள்ளம்ஆய்க் கள்ளத்து உள்ளார் கருத்தும்ஆய் அருத்தம்ஆகி,
அள்ளுவார்க்கு அள்ளல்செய்திட்டு இருந்த ஆப்பாடியாரே ! 7

மயக்கம்ஆய்த் தெளிவும் ஆகி, மால்வரை வளியும் ஆகி,
தியக்கம்ஆய் ஒருக்கம்ஆகி, சிந்தையுள் ஒன்றி நின்று(வ்)
இயக்கம்ஆய், இறுதிஆகி, எண்திசைக்கு இறைவர்ஆகி,
அயக்கம்ஆய் அடக்கம்ஆய ஐயர்—ஆப்பாடியாரே. 8

ஆர்அழல்உருவம்ஆகி அண்டம் ஏழ் கடந்த எந்தை
பேர்ஒளிஉருவினானைப் பிரமனும் மாலும் காணாச்
சீர்அவை பரவி ஏத்திச் சென்று அடி வணங்குவார்க்குப்
பேர்அருள் அருளிச்செய்வார், பேணும் ஆப்பாடியாரே. 9

திண் திறல் அரக்கன் ஓடி, சீ கயிலாயம்தன்னை
எண் திறல் இலனும் ஆகி எடுத்தலும், ஏழை அஞ்ச,
விண்டு இற நெரிய ஊன்றி, மிகக் கடுத்து அலறி வீழ,
பண் திறல் கேட்டு உகந்த பரமர்—ஆப்பாடியாரே. 10

திருக் குறுக்கைவீரட்டம் IV-49 திரு நேரிசை

ஆதியில் பிரமனார்தாம் அர்ச்சித்தார், அடிஇணைக்கீழ்;
ஓதிய வேதநாவர் உணரும்ஆறு உணரல்உற்றார்;
சோதியுள் சுடர்ஆய்த் தோன்றிச் சொல்லினை இறந்தார்—பல்பூக்
கோதி வண்டு அறையும் சோலைக் குறுக்கைவீரட்டனாரே. 1

நீற்றினை நிறையப் பூசி, நித்தலும் நியமம் செய்து,
ஆற்றுநீர் பூரித்து ஆட்டும் அந்தணனாரைக் கொல்வான்
''சாற்றும் நாள் அற்றது'' என்று, தருமராசற்குஆய், வந்த
கூற்றினைக் குமைப்பர்போலும்—குறுக்கைவீரட்டனாரே. 2

தழைத்தது ஓர் ஆத்தியின்கீழ்த் தாபரம் மணலால் கூப்பி,
அழைத்து அங்கே ஆவின் பாலைக் கறந்துகொண்டு ஆட்ட, கண்டு
பிழைத்த தன் தாதை தாளைப் பெருங் கொடுமழுவால் வீச,
குழைத்தது ஓர் அமுதம் ஈந்தார்—குறுக்கைவீரட்டனாரே. 3

சிலந்தியும் ஆனைக்காவில்-திருநிழல் பந்தர்செய்து
உலந்து அவண் இறந்தபோதே, கோச்செங்கணானும் ஆக,
கலந்த நீர்க் காவிரீ சூழ் சோணாட்டுச் சோழர்தங்கள்
குலம்தனில் பிறப்பித்திட்டார்—குறுக்கைவீரட்டனாரே. 4

ஏறு உடன் ஏழ் அடர்த்தான், எண்ணி ஆயிரம்பூக்கொண்டு(வ்),
ஆறு உடைச் சடையினானை அர்ச்சித்தான் அடிஇணைக்கீழ்;
வேறும் ஓர் பூக் குறைய மெய்ம் மலர்க்கண்ணை மிண்ட;
கூறும் ஓர் ஆழி ஈந்தார்—குறுக்கைவீரட்டனாரே. 5

கல்லினால் எறிந்து கஞ்சி தாம் உணும் சாக்கிய(ன்)னார்
நெல்லின் ஆர் சோறு உணாமே நீள் விசும்பு ஆள வைத்தார்;
எல்லி ஆங்கு எரி கை ஏந்தி எழில் திகழ் நட்டம்ஆடிக்
கொல்லி ஆம் பண் உகந்தார்—குறுக்கைவீரட்டனாரே. 6

காப்பது ஓர் வில்லும் அம்பும், கையது ஓர் இறைச்சிப்பாரம்,
தோல் பெருஞ் செருப்புத் தொட்டு, தூய வாய்க்கலசம் ஆட்டி,
தீப் பெருங் கண்கள் செய்யகுருதிநீர் ஒழுகத் தன் கண்
கோப்பதும், பற்றிக் கொண்டார்—குறுக்கைவீரட்டனாரே. 7

நிறை மறைக்காடுதன்னில் நீண்டு எரி தீபம்தன்னைக்
கறை நிறத்து எலி தன் மூக்குச் சுட்டிடக் கனன்று தூண்ட,
நிறை கடல் மண்ணும் விண்ணும் நீண்ட வான்உலகம்எல்லாம்
குறைவு அறக் கொடுப்பர்போலும்—குறுக்கைவீரட்டனாரே. 8

அணங்கு உமை பாகம்ஆக அடக்கிய ஆதிமூர்த்தி;
வணங்குவார் இடர்கள் தீர்க்கும் மருந்து; நல் அருந்தவத்த
கணம்புல்லர்க்கு அருள்கள்செய்து, காதல் ஆம் அடியார்க்கு என்றும்
குணங்களைக் கொடுப்பர்போலும்—குறுக்கைவீரட்டனாரே. 9

எடுத்தனன் எழில் கயி(ல்)லை இலங்கையர்மன்னன்தன்னை
அடுத்து ஒருவிரலால் ஊன்ற, அலறிப் போய் அவனும் வீழ்ந்து,
விடுத்தனன் கைநரம்பால் வேதகீதங்கள் பாட,
கொடுத்தனர், கொற்றவாள் நாள்;—குறுக்கைவீரட்டனாரே. 10

திருக் குறுக்கைவீரட்டம் IV-50 திரு நேரிசை

நெடிய மால் பிரமனோடு நீர் எனும் பிலயம் கொள்ள
அடியொடு முடியும் காணார்; அருச்சுனற்கு அம்பும் வில்லும்
துடி உடை வேடர் ஆகித் தூய மந்திரங்கள் சொல்லிக்
கொடி நெடுந் தேர் கொடுத்தார்—குறுக்கைவீரட்டனாரே. 1

ஆத்தம் ஆம் அயனும், மாலும், அன்றி மற்று ஒழிந்த தேவர்,
''சோத்தம், எம்பெருமான் !'' என்று தொழுது தோத்திரங்கள் சொல்ல,
தீர்த்தம் ஆம் அட்டமீ முன் சீர் உடை ஏழுநாளும்
கூத்தராய் வீதி போந்தார்—குறுக்கைவீரட்டனாரே. 2

திருக் கோடிகா IV-51 திரு நேரிசை

நெற்றிமேல் கண்ணினானே! நீறு மெய் பூசினானே!
கற்றைப்புன்சடையினானே! கடல்விடம் பருகினானே!
செற்றவர் புரங்கள்மூன்றும் செவ்அழல் செலுத்தினானே!
குற்றம் இல் குணத்தினானே! கோடிகா உடைய கோவே! 1

கடி கமழ் கொன்றையானே! கபாலம் கை ஏந்தினானே!
வடிவுஉடைமங்கைதன்னை மார்பில் ஓர்பாகத்தானே!
அடிஇணை பரவ நாளும் அடியவர்க்கு அருள்செய்வானே!
கொடி அணி விழவுஅது ஓவாக் கோடிகா உடைய கோவே! 2

நீறு மெய் பூசினானே! நிழல் திகழ் மழுவினானே!
ஏறு உகந்து ஏறினானே! இருங்கடல் அமுது ஒப்பானே!
ஆறும் ஓர்நான்குவேதம் அறம் உரைத்து அருளினானே!
கூறும் ஓர் பெண்ணினானே! கோடிகா உடைய கோவே! 3

காலனைக் காலால் செற்று, அன்று, அருள் புரி கருணையானே!
நீலம் ஆர் கண்டத்தானே! நீள் முடி அமரர்கோவே!
ஞாலம் ஆம் பெருமையானே! நளிர்இளந்திங்கள் சூடும்
கோலம் ஆர் சடையினானே! கோடிகா உடைய கோவே! 4

பூண் அரவுஆரத்தானே! புலிஉரி அரையினானே!
காணில் வெண்கோவண(ம்)மும், கையில் ஓர் கபாலம் ஏந்தி,
ஊணும் ஊர்ப் பிச்சையானே! உமை ஒருபாகத்தானே!
கோணல்வெண்பிறையினானே! கோடிகா உடைய கோவே! 5

கேழல்வெண்கொம்பு பூண்ட கிளர் ஒளி மார்பினானே!
ஏழையேன்ஏழையேன்நான் என் செய்கேன்? எந்தைபெம்மான்!
மாழைஒண்கண்ணினார்கள் வலைதனில் மயங்குகின்றேன்;
கூழைஏறு உடைய செல்வா! கோடிகா உடைய கோவே! 6

அழல் உமிழ் அங்கையானே! அரிவை ஓர்பாகத்தானே!
தழல் உமிழ் அரவம் ஆர்த்துத் தலைதனில் பலி கொள்வானே!
நிழல் உமிழ் சோலை சூழ நீள் வரிவண்டுஇனங்கள்
குழல் உமிழ் கீதம் பாடும் கோடிகா உடைய கோவே! 7

ஏ அடு சிலையினாலே புரம்அவை எரிசெய்தானே!
மா வடு வகிர் கொள் கண்ணாள் மலைமகள் பாகத்தானே!
ஆவடுதுறை உளானே! ஐவரால் ஆட்டப்பட்டேன்
கோ அடு குற்றம் தீராய், கோடிகா உடைய கோவே! 8

ஏற்ற நீர்க் கங்கையானே! இரு நிலம் தாவினானும்,
நாற்ற மா மலர்மேல் ஏறும் நான்முகன், இவர்கள் கூடி
ஆற்றலால் அளக்கல்உற்றார்க்கு அழல்உரு ஆயினானே!
கூற்றுக்கும் கூற்றுஅது ஆனாய்! கோடிகா உடைய கோவே! 9

பழக நான் அடிமை செய்வேன்—பசுபதீ! பாவநாசா!
மழ களியானையின் தோல் மலைமகள் வெருவப் போர்த்த
அழகனே! அரக்கன் திண்தோள் அரு வரை நெரிய ஊன்றும்
குழகனே! கோல மார்பா! கோடிகா உடைய கோவே! 10

திரு ஆரூர் IV-52 திரு நேரிசை

படு குழிப் பவ்வத்து அன்ன பண்டியைப் பெய்த ஆற்றால்
கெடுவது இம் மனிதர் வாழ்க்கை; காண்தொறும் கேதுகின்றேன்;
முடுகுவர், இருந்து உள் ஐவர்மூர்க்கரே; இவர்களோடும்
அடியனேன் வாழமாட்டேன்—ஆரூர் மூலட்டனீரே! 1

புழுப் பெய்த பண்டிதன்னைப் புறம் ஒரு தோலால் மூடி
ஒழுக்கு அரு ஒன்பது(வ்)வாய் ஒற்றுமை ஒன்றும் இல்லை;
சழக்கு உடை இதனுள் ஐவர் சங்கடம்பலவும் செய்ய,
அழிப்பனாய் வாழமாட்டேன்—ஆரூர் மூலட்டனீரே! 2

பஞ்சின் மெல்அடியினார்கள் பாங்கராய் அவர்கள் நின்று
நெஞ்சில் நோய்பலவும் செய்து, நினையினும் நினைய ஒட்டார்;
நஞ்சு அணி மிடற்றினானே! நாதனே! நம்பனே! நான்
அஞ்சினேற்கு, ''அஞ்சல்!'' என்னீர்—ஆரூர் மூலட்டனீரே! 3

கெண்டைஅம்தடங்கண் நல்லார்தம்மையே கெழும வேண்டிக்
குண்டராய்த் திரிதந்து ஐவர் குலைத்து இடர்க்குழியில் நூக்கக்
கண்டு நான் தரிக்ககில்லேன்; காத்துக்கொள்!—கறை சேர் கண்டா!
அண்ட வானவர்கள் போற்றும் ஆரூர் மூலட்டனீரே! 4

தாழ்குழல் இன்சொல் நல்லார்தங்களைத் தஞ்சம் என்று(வ்)
ஏழையேன்ஆகி நாளும் என் செய்வேன்? எந்தைபெம்மான்!
வாழ்வதேல் அரிதுபோலும்; வைகலும் ஐவர் வந்து(வ்)
ஆழ்குழிப் படுக்க ஆற்றேன்—ஆரூர் மூலட்டனீரே! 5

மாற்றம் ஒன்று அருளகில்லீர்; மதிஇலேன் விதி இலாமை
சீற்றமும் தீர்த்தல்செய்யீர்; சிக்கனவு உடையர் ஆகிக்
கூற்றம் போல் ஐவர் வந்து குலைத்திட்டுக் கோகு செய்ய,
ஆற்றவும் கில்லேன், நாயேன்—ஆரூர் மூலட்டனீரே! 6

உயிர்நிலை உடம்பே காலா, உள்ளமே தாழி ஆக,
துயரமே ஏற்றம் ஆக, துன்பக்கோல்அதனைப் பற்றி,
பயிர்தனைச் சுழிய விட்டு, பாழ்க்கு நீர் இறைத்து, மிக்க
அயர்வினால் ஐவர்க்கு ஆற்றேன்—ஆரூர் மூலட்டனீரே! 7

கற்றதேல் ஒன்றும் இல்லை; காரிகையாரோடு ஆடிப்
பெற்றதேல் பெரிதும் துன்பம்; பேதையேன் பிழைப்பினாலே
முற்றினால் ஐவர் வந்து முறைமுறை துயரம் செய்ய
அற்று நான் அலந்துபோனேன்—ஆரூர் மூலட்டனீரே! 8

பத்தனாய் வாழமாட்டேன், பாவியேன்; பரவி வந்து
சித்தத்துள் ஐவர் தீய செய்வினைபலவும் செய்ய,
மத்து உறு தயிரே போல மறுகும், என் உள்ளம்தானும்—
அத்தனே! அமரர்கோவே! ஆரூர் மூலட்டனீரே! 9

தடக்கைநால்-ஐந்தும் கொண்டு தடவரைதன்னைப் பற்றி
எடுத்தவன் பேர்க்க, ஓடி இரிந்தன, பூதம்எல்லாம்;
முடித் தலைபத்தும் தோளும் முறிதர இறையே ஊன்றி
அடர்த்து, அருள்செய்தது என்னே?—ஆரூர் மூலட்டனீரே! 10

திரு ஆரூர்

IV-53

திரு நேரிசை

குழல் வலம் கொண்ட சொல்லாள் கோல வேல்கண்ணி தன்னைக்
கழல் வலம்கொண்டு நீங்காக் கணங்கள்; அக் கணங்கள் ஆர
அழல் வலம் கொண்ட கையான் அருள்கதிர் எறிக்கும் ஆரூர்
தொழல், வலம்கொண்டல், செய்வான் தோன்றினார் தோன்றினாரே. 1

நாகத்தை நங்கை அஞ்ச; நங்கையை மஞ்ஞை என்று
வேகத்தைத் தவிர, நாகம்; வேழத்தின்உரிவை போர்த்துப்
பாகத்தின் நிமிர்தல்செய்யாத் திங்களை மின் என்று அஞ்சி
ஆகத்தில் கிடந்த நாகம் அடங்கும், ஆரூரனார்க்கே. 2

தொழுது அகம் குழைய மேவித் தொட்டிமை உடைய தொண்டர்
அழுத(அ)கம் புகுந்து நின்றார், அவர் அவாப் போலும்—ஆரூர்
எழில் அகம் நடு வெண் முற்றம் அன்றியும், ஏர் கொள் வேலிப்
பொழில்அகம் விளங்கு திங்கள்புதுமுகிழ் சூடினாரே. 3

நஞ்சு இருள் மணி கொள் கண்டர்; நகை இருள் ஈமக் கங்குல்
வெஞ்சுடர் விளக்கத்து ஆடி விளங்கினார்போலும்—மூவா
வெஞ்சுடர் முகடு தீண்டி வெள்ளிநாராசம் அன்ன
அம் சுடர் அணி வெண்திங்கள் அணியும் ஆரூரனாரே. 4

''எம் தளிர்நீர்மை கோல மேனி'' என்று இமையோர் ஏத்த,
பைந்தளிர்க் கொம்பர் அன்ன படர்கொடி பயிலப்பட்டு,
தம் சடைத்தொத்தினாலும் த(ம்)மது ஓர் நீர்மையாலும்
அம் தளிர் ஆகம் போலும் வடிவர்—ஆரூரனாரே. 5

வானகம் விளங்க மல்கும் வளம் கெழு மதியம் சூடித்
தான் அகம் அழிய வந்து தாம் பலி தேர்வர்போலும்,
ஊன் அகம் கழிந்த ஓட்டில்; உண்பதும், ஒளி கொள் நஞ்சம்—
ஆன்அகஅஞ்சும்ஆடும் அடிகள்ஆரூரனாரே. 6

அஞ்சு அணை கணையினானை அழல் உற அன்று நோக்கி,
அஞ்சு அணை குழலினாளை அமுதமா அணைந்து நக்கு(வ்),
அஞ்சு அணை அஞ்சும்ஆடி, ஆடுஅரவு ஆட்டுவார்தாம்,
அஞ்சு அணை வேலி ஆரூர் ஆதரித்து இடம்கொண்டாரே. 7

வணங்கி முன் அமரர் ஏத்த வல்வினைஆன தீரப்
பிணங்கு உடைச் சடையில் வைத்த பிறை உடைப் பெருமை அண்ணல்,
மணம்கமழோதி பாகர்—மதிநிலாவட்டத்து ஆடி
அண் அம் கொடி மாட வீதி ஆரூர் எம் அடிகளாரே. 8

நகல் இடம் பிறர்கட்கு ஆக, நால்மறையோர்கள்தங்கள்
புகல்இடம் ஆகி வாழும் புகல்இலி—இருவர் கூடி
இகல் இடம் ஆக, நீண்டு அங்கு ஈண்டு எழில் அழல்அது ஆகி,
அகலிடம் பரவி ஏத்த அடிகள் ஆரூரனாரே. 9

ஆயிரம்திங்கள் மொய்த்த அலைகடல் அமுதம் வாங்கி,
ஆயிரம்அசுரர் வாழும் அணி மதில்மூன்றும் வேவ
ஆயிரம்தோளும் மட்டித்து, ஆடிய அசைவு தீர,
ஆயிரம்அடியும் வைத்த அடிகள்—ஆரூரனாரே. 10

திருப் புகலூர் IV-54 திரு நேரிசை

பகைத்திட்டார் புரங்கள்மூன்றும் பாறி, நீறுஆகி வீழ,
புகைத்திட்ட தேவர்கோவே! பொறிஇலேன் உடலம்தன்னுள்
அகைத்திட்டு அங்கு அதனை நாளும் ஐவர் கொண்டு ஆட்ட ஆடித்
திகைத்திட்டேன்; செய்வது என்னே?—திருப் புகலூரனீரே! 1

மை அரி மதர்த்த ஒண்கண் மாதரார்வலையில் பட்டுக்
கை எரி சூலம் ஏந்தும் கடவுளை நினையமாட்டேன்;
ஐ நெரிந்து அகமிடற்றே அடைக்கும்போது, ஆவியார்தாம்
செய்வது ஒன்று அறியமாட்டேன்—திருப் புகலூரனீரே! 2

முப்பதும்முப்பத்தாறும்முப்பதும் இடு குரம்பை,
அப்பர் போல் ஐவர் வந்து(வ்), ‘‘அது தருக, இது விடு!’’ என்று(வ்)
ஒப்பவே நலியல்உற்றால் உய்யும்ஆறு அறியமாட்டேன்—
செப்பமே திகழும் மேனித் திருப் புகலூரனீரே! 3

பொறி இலா அழுக்கை ஓம்பி, பொய்யினை மெய் என்று எண்ணி,
நெறி அலா நெறிகள் சென்றேன்; நீதனே! நீதிஏதும்
அறிவிலேன்; அமரர்கோவே! அமுதினை மனனில் வைக்கும்
செறிவு இலேன்; செய்வது என்னே?—திருப் புகலூரனீரே! 4

அளியின் ஆர் குழலினார்கள்அவர்களுக்கு அன்புஅது ஆகி,
களியின் ஆர் பாடல் ஓவாக் கடவூர்வீரட்டம் என்னும்
தளியினார் பாதம் நாளும் நினைவு இலாத் தகவு இல் நெஞ்சம்
தெளிவு இலேன்; செய்வது என்னே?—திருப் புகலூரனீரே! 5

இலவின் நா மாதர்பாலே இசைந்து நான் இருந்து பின்னும்
நிலவும் நாள்பல என்று எண்ணி, நீதனேன் ஆதிஉன்னை
உலவினால் உள்கமாட்டேன்; உன் அடி பரவும் ஞானம்
செலவு இலேன்; செய்வது என்னே?—திருப் புகலூரனீரே! 6

காத்திலேன், இரண்டும்மூன்றும்; கல்வியேல் இல்லை, என்பால்;
வாய்த்திலேன், அடிமைதன்னுள்; வாய்மையால்-தூயேன்அல்லேன்—
பார்த்தனுக்கு அருள்கள்செய்த பரமனே! பரவுவார்கள்
தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப் புகலூரனீரே! 7

நீரும்ஆய், தீயும்ஆகி, நிலனும்ஆய், விசும்பும்ஆகி,
ஏர் உடைக் கதிர்கள்ஆகி, இமையவர் இறைஞ்ச நின்று(வ்),
ஆய்வதற்கு அரியர்ஆகி, அங்குஅங்கே ஆடுகின்ற,
தேவர்க்கும் தேவர் ஆவார்—திருப் புகலூரனாரே. 8

மெய்யுளே விளக்கை ஏற்றி, வேண்டு அளவு உயரத் தூண்டி,
உய்வது ஓர் உபாயம் பற்றி, உகக்கின்றேன்; உகவா வண்ணம்
ஐவரை அகத்தே வைத்தீர்; அவர்களே வலியர், சால;
செய்வது ஒன்று அறியமாட்டேன்—திருப் புகலூரனீரே! 9

அரு வரை தாங்கினானும், அருமறை ஆதியானும்,
இருவரும் அறியமாட்டா ஈசனார்; இலங்கை வேந்தன்
கருவரை எடுத்தஞான்று கண் வழி குருதி சோரத்
திருவிரல் சிறிது வைத்தார்—திருப் புகலூரனாரே. 10

திரு வலம்புரம் IV-55 திரு நேரிசை

தெண்திரை தேங்கி ஓதம் சென்று அடி வீழுங்காலை,
தொண்டு இரைத்து அண்டர்கோனைத் தொழுது, அடி வணங்கி, எங்கும்
வண்டுகள் மதுக்கள் மாந்தும் வலம்புரத்து அடிகள்தம்மைக்
கொண்டு, நல் கீதம் பாடக் குழகர்தாம் இருந்தஆறே! 1

மடுக்களில் வாளை பாய வண்டுஇனம் இரிந்த பொய்கை,
பிடிக் களிறு என்னத் தம்மில் பிணை பயின்று அணை வரால்கள்—
தொடுத்த நல் மாலை ஏந்தித் தொண்டர்கள் பரவி ஏத்த,
வடித்தடங்கண்ணி பாகர்—வலம்புரத்து இருந்தஆறே! 2

தேன் உடை மலர்கள் கொண்டு திருந்து அடி பொருந்தச் சேர்த்தி,
ஆன்இடைஅஞ்சும் கொண்டு அன்பினால் அமர ஆட்டி,
வான்இடைமதியம் சூடும் வலம்புரத்து அடிகள்தம்மை
நான் அடைந்து ஏத்தப்பெற்று, நல்வினைப் பயன் உற்றேனே. 3

முளை எயிற்று இள நல் ஏனம் பூண்டு, மொய்சடைகள் தாழ,
வளை எயிற்று இளைய நாகம் வலித்து அரை இசைய வீக்கி,
புளைகயப் போர்வை போர்த்து, புனலொடு மதியம் சூடி,
வளை பயில் இளையர் ஏத்தும் வலம்புரத்து அடிகள்தாமே. 4

சுருள் உறு வரையின்மேலால்-துளங்கு இளம் பளிங்கு சிந்த,
இருள் உறு கதிர் நுழைந்த இளங் கதிர்ப் பசலைத்திங்கள்—
அருள் உறும் அடியர்எல்லாம் அங்கையின் மலர்கள் ஏந்த,
மருள் உறு கீதம் கேட்டார்—வலம்புரத்து அடிகளாரே. 5

நினைக்கின்றேன், நெஞ்சுதன்னால்,—நீண்ட புன்சடையினானே!—
அனைத்துஉடன் கொண்டுவந்து அங்கு அன்பினால் அமைய ஆட்டி;
புனை(க்)கின்றேன், பொய்ம்மைதன்னை; மெய்ம்மையைப் புணரமாட்டேன்;
எனக்கு நான் செய்வது என்னே, இனி?—வலம்புரவனீரே! 6

செங்கயல் சேல்கள் பாய்ந்து, தேம் பழம் இனிய நாடி,
தம் கயம் துறந்து போந்து, தடம்பொய்கை அடைந்து நின்று,
கொங்கையர் குடையுங்காலைக் கொழுங் கனி அழுங்கினார் அம்
மங்கல மனையின் மிக்கார்—வலம்புரத்து அடிகளாரே. 7

அருகுஎலாம் குவளை, செந்நெல், அகல் இலை ஆம்பல், நெய்தல்;
தெருஎலாம் தெங்கு மாவின் பழம் விழும், படப்பைஎல்லாம்
குருகுஇனம் கூடி ஆங்கே கும்மலித்து இறகு உலர்த்தி
மருவல் ஆம் இடங்கள் காட்டும், வலம்புரத்து அடிகளாரே! 8

கருவரை அனைய மேனிக் கடல்வண்ணன்அவனும் காணான்;
திரு வரை அனைய பூமேல்-திசைமுகன்அவனும் காணான்;
ஒரு வரை உச்சி ஏறி ஓங்கினார், ஓங்கி வந்து(வ்)
அருமையின் எளிமைஆனார்அவர், வலம்புரவனாரே. 9

வாள்எயிறு இலங்க நக்கு வளர் கயிலாயம்தன்னை
ஆள் வலி கருதிச் சென்ற அரக்கனை வரைக்கீழ், அன்று,
தோளொடு பத்துவாயும் தொலைந்து உடன்அழுந்த ஊன்றி,
ஆண்மையும் வலியும் தீர்ப்பார்அவர்—வலம்புரவனாரே. 10

திரு ஆவடுதுறை IV-56 திரு நேரிசை

மா-இரு ஞாலம்எல்லாம் மலர்அடி வணங்கும்போலும்;
பாய் இருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர்போலும்;
காய் இரும் பொழில்கள் சூழ்ந்த கழுமலஊரர்க்கு அம் பொன்-
ஆயிரம் கொடுப்பர்போலும்—ஆவடுதுறையனாரே. 1

மடந்தை பாகத்தர்போலும்; மான்மறிக் கையர்போலும்;
குடந்தையில் குழகர்போலும்; கொல் புலித் தோலர்போலும்;
கடைந்த நஞ்சு உண்பர்போலும்; காலனைக் காய்வர்போலும்;
அடைந்தவர்க்கு அன்பர்போலும்—ஆவடுதுறையனாரே. 2

உற்ற நோய் தீர்ப்பர்போலும்; உறு துணை ஆவர்போலும்;
செற்றவர் புரங்கள்மூன்றும் தீ எழச் செறுவர்போலும்;
கற்றவர் பரவி ஏத்தக் கலந்து உலந்து அலந்து பாடும்
அற்றவர்க்கு அன்பர்போலும்—ஆவடுதுறையனாரே. 3

மழு அமர் கையர்போலும்; மாதுஅவள் பாகர்போலும்;
எழு நுனை வேலர்போலும்; என்பு கொண்டு அணிவர்போலும்;
தொழுது எழுந்து ஆடிப் பாடித் தோத்திரம்பலவும் சொல்லி
அழுமவர்க்கு அன்பர்போலும்—ஆவடுதுறையனாரே. 4

பொடி அணி மெய்யர்போலும்; பொங்கு வெண்நூலர்போலும்;
கடியது ஓர் விடையர்போலும்; காமனைக் காய்வர்போலும்;
வெடிபடுதலையர்போலும்; வேட்கையால் பரவும் தொண்டர்
அடிமையை அளப்பர்போலும்—ஆவடுதுறையனாரே. 5

வக்கரன் உயிரை வவ்வக் கண்மலர்கொண்டு போற்றச்
சக்கரம் கொடுப்பர்போலும்; தானவர்தலைவர்போலும்;
துக்க மா மூடர்தம்மைத் துயரிலே வீழ்ப்பர்போலும்;
அக்கு அரை ஆர்ப்பர்போலும்—ஆவடுதுறையனாரே. 6

விடை தரு கொடியர்போலும்; வெண்புரிநூலர்போலும்;
படை தரு மழுவர்போலும்; பாய் புலித்தோலர்போலும்;
உடை தரு கீளர்போலும்; உலகமும் ஆவர்போலும்—
அடைபவர் இடர்கள் தீர்க்கும் ஆவடுதுறையனாரே. 7

முந்தி வானோர்கள் வந்து முறைமையால் வணங்கி ஏத்த;
நந்தி, மாகாளர்என்பார், நடுஉடையார்கள் நிற்ப;
சிந்தியாதே ஒழிந்தார் திரிபுரம் எரிப்பர்போலும்—
அந்தி வான்மதியம் சூடும் ஆவடுதுறையனாரே. 8

பான் அமர் ஏனம் ஆகிப் பார் இடந்திட்ட மாலும்,
தேன் அமர்ந்து ஏறும் அல்லித் திசைமுகம் உடைய கோவும்,
தீனரைத் தியக்கு அறுத்த திருஉரு உடையர்போலும்;
ஆன்நரைஏற்றர்போலும்—ஆவடுதுறையனாரே. 9

பார்த்தனுக்கு அருள்வர்போலும்; படர்சடைமுடியர்போலும்;
ஏத்துவார் இடர்கள் தீர இன்பங்கள் கொடுப்பர்போலும்;
கூத்தராய்ப் பாடி, ஆடி, கொடு வலி அரக்கன்தன்னை
ஆர்த்த வாய் அலறுவிப்பார்—ஆவடுதுறையனாரே. 10

திரு ஆவடுதுறை IV-57 திரு நேரிசை

மஞ்சனே! மணியும் ஆனாய்; மரகதத்திரளும் ஆனாய்;
நெஞ்சுளே புகுந்து நின்று நினைதரும் நிகழ்வினானே!
துஞ்சும்போதாக வந்து துணை எனக்கு ஆகி நின்று(வ்),
''அஞ்சல்!'' என்று அருளவேண்டும்—ஆவடுதுறை உளானே! 1

நான் உகந்து உன்னை நாளும் நணுகுமா கருதியேயும்
ஊன் உகந்து ஓம்பும் நாயேன் உள் உற ஐவர் நின்றார்;
தான் உகந்தே உகந்த தகவு இலாத் தொண்டனேன், நான்;—
ஆன் உகந்து ஏறுவானே! ஆவடுதுறை உளானே! 2

கட்டமே வினைகள்ஆன காத்து, இவை நோக்கி, ஆள்ஆய்
ஒட்டவே ஒட்டி, நாளும் உன்னை உள் வைக்கமாட்டேன்—
பட்ட வான் தலை கை ஏந்திப் பலி திரிந்து ஊர்கள்தோறும்
அட்டமாஉருவினானே! ஆவடுதுறை உளானே! 3

''பெருமை நன்று உடையது இல்லை'' என்று நான் பேசமாட்டேன்;
ஒருமையால் உன்னை உள்கி உகந்து வான் ஏறமாட்டேன்;
கருமை இட்டு ஆய ஊனைக் கட்டமே கழிக்கின்றேன், நான்;—
அருமைஆம் நஞ்சம் உண்ட ஆவடுதுறை உளானே! 4

துட்டனாய் வினைஅது என்னும் சுழித்தலை அகப்பட்டேனைக்
கட்டனா ஐவர் வந்து கலக்காமை காத்துக் கொள்வாய்—
மட்டு அவிழ் கோதைதன்னை மகிழ்ந்து ஒருபாகம் வைத்து(வ்),
அட்டமாநாகம் ஆட்டும் ஆவடுதுறை உளானே! 5

கார் அழல் கண்டம் மேயாய்; கடிமதில்புரங்கள்மூன்றும்
ஓர் அழல்அம்பினாலே உகைத்துத் தீ எரிய மூட்டி
நீர் அழல்சடை உளானே! நினைப்பவர் வினைகள் தீர்ப்பாய்—
ஆர்அழல் ஏந்தி ஆடும் ஆவடுதுறை உளானே! 6

செறிவு இலேன்; சிந்தையுள்ளே சிவன்அடி தெரியமாட்டேன்;
குறி இலேன்; குணம் ஒன்று இல்லேன்; கூறுமா கூறமாட்டேன்;
நெறி படு மதி ஒன்று இல்லேன்; நினையுமா நினையமாட்டேன்;
அறிவு இலேன்; அயர்த்துப்போனேன்—ஆவடுதுறை உளானே! 7

கோலம் மா மங்கைதன்னைக் கொண்டு ஒரு கோலம்ஆய
சீலமே அறியமாட்டேன்; செய்வினை மூடி நின்று
ஞாலம் ஆம் இதனுள் என்னை நைவியா வண்ணம் நல்காய்—
ஆலம் மா நஞ்சம் உண்ட ஆவடுதுறை உளானே! 8

நெடியவன் மலரினானும் நேர்ந்து இருபாலும் நேட,
கடியது ஓர் உருவம் ஆகி, கனல்-எரி ஆகி, நின்ற
வடிவு இன வண்ணம் என்றே என்று தாம் பேசல் ஆகார்;
அடியனேன் நெஞ்சின் உள்ளார்—ஆவடுதுறை உளாரே. 9

மலைக்கு நேர்ஆய் அரக்கன் சென்று உற மங்கை அஞ்சத்
தலைக்குமேல் கைகளாலே தாங்கினான் வலியை மாள
உலப்பு இலா விரலால் ஊன்றி ஒறுத்து, அவற்கு அருள்கள்செய்து(வ்),
அலைத்த வான்கங்கை சூடும்—ஆவடுதுறை உளானே. 10

IV-58

திருப் பருப்பதம்

திரு நேரிசை

கன்றினார் புரங்கள்மூன்றும் கனல்-எரி ஆகச் சீறி,
நின்றது ஓர் உருவம்தன்னால் நீர்மையும் நிறையும் கொண்டு(வ்),
ஒன்றி ஆங்கு உமையும் தாமும், ஊர் பலி தேர்ந்து, பின்னும் 1
பன்றிப் பின் வேடர் ஆகி, பருப்பதம் நோக்கினாரே.

கற்ற மாமறைகள் பாடிக் கடைதொறும் பலியும் தேர்வார்:
வற்றல்ஓர்தலை கை ஏந்தி, வானவர் வணங்கி வாழ்த்த,
முற்ற ஓர் சடையில் நீரை ஏற்ற முக்கண்ணர்—தம்மைப் 2
பற்றினார்க்கு அருள்கள்செய்து, பருப்பதம் நோக்கினாரே.

கரவு இலா மனத்தர்ஆகிக் கைதொழுவார்கட்கு என்றும்
இரவில் நின்று எரிஅதுஆடி இன்அருள் செய்யும் எந்தை—
மருவலார் புரங்கள்மூன்றும் மாட்டிய நகையர் ஆகி, 3
பரவுவார்க்கு அருள்கள்செய்து, பருப்பதம் நோக்கினாரே.

கட்டிட்ட தலை கை ஏந்தி, கனல்-எரிஆடி, சீறி,
சுட்டிட்ட நீறு பூசி, சுடுபிணக்காடர் ஆகி,
விட்டிட்ட வேட்கையார்க்கு வேறு இருந்து அருள்கள்செய்து, 4
பட்டு இட்ட உடையர் ஆகி, பருப்பதம் நோக்கினாரே.

கையராய்க் கபாலம் ஏந்தி, காமனைக் கண்ணால் காய்ந்து,
மெய்யராய், மேனிதன்மேல் விளங்கு வெண்நீறு பூசி,
உய்வராய் உள்குவார்கட்கு உவகைகள்பலவும் செய்து, 5
பைஅரா அரையில் ஆர்த்து, பருப்பதம் நோக்கினாரே.

வேடராய், வெய்யர்ஆகி, வேழத்தின்உரிவை போர்த்து(வ்),
ஓடராய், உலகம்எல்லாம் உழிதர்வர், உமையும் தாமும்;—
காடராய், கனல் கை ஏந்தி, கடியது ஓர் விடை மேற்கொண்டு, 6
பாடராய், பூதம் சூழ, பருப்பதம் நோக்கினாரே.

மேகம் போல் மிடற்றர்ஆகி, வேழத்தின்உரிவை போர்த்து(வ்),
ஏகம்பம் மேவினார்தாம்; இமையவர் பரவி ஏத்த,
காகம்பர் கழறர் ஆகி, கடியது ஓர் விடைஒன்று ஏறி, 7
பாகம் பெண்உருவம் ஆனார்—பருப்பதம் நோக்கினாரே.

பேர்இடர்ப் பிணிகள் தீர்க்கும் பிஞ்ஞகன்; எந்தை; பெம்மான்;
கார் உடைக் கண்டர்ஆகி, கபாலம் ஓர் கையில் ஏந்தி,
சீர் உடைச் செங்கண் வெள்ஏறு ஏறிய செல்வர்—நல்ல 8
பாரிடம் பாணிசெய்யப் பருப்பதம் நோக்கினாரே.

அம் கண் மால் உடையர்ஆய ஐவரால் ஆட்டுணாதே
உங்கள் மால் தீர வேண்டில் உள்ளத்தால் உள்கி ஏத்தும்!
செங்கண் மால் பரவி ஏத்திச் சிவன் என நின்ற செல்வர்— 9
பைங்கண் வெள்ஏறுஅது ஏறிப் பருப்பதம் நோக்கினாரே.

அடல் விடை ஊர்தி ஆகி, அரக்கன் தோள் அடர ஊன்றி,
கடல்இடை நஞ்சம் உண்ட கறை அணி கண்டனார்தாம்—
சுடர்விடு மேனிதன்மேல் சுண்ணவெண்நீறு பூசி, 10
படர்சடை மதியம் சேர்த்தி, பருப்பதம் நோக்கினாரே.

திரு அவள்இவள்நல்லூர் IV-59 திரு நேரிசை

தோற்றினான் எயிறு கவ்வித் தொழில் உடை அரக்கன்தன்னைத்
தேற்றுவான் சென்று சொல்ல, ''சிக்கெனத் தவிரும்!'' என்று,
வீற்றினை உடையன்ஆகி வெடுவெடுத்து எடுத்தவன்தன்
ஆற்றலை அழிக்க வல்லார்—அவளிவணல்லூராரே. 1

''வெம்பினார் அரக்கர்எல்லாம்; மிகச் சழக்கு ஆயிற்று'' என்று.
''செம்பினால் எடுத்த கோயில் சிக்கெனச் சிதையும்!'' என்ன,
''நம்பினார்'' என்று சொல்லி நன்மையால் மிக்கு நோக்கி,
அம்பினால் அழிய எய்தார்—அவளிவணல்லூராரே. 2

கீழ்ப்படக் கருதல் ஆமோ, கீர்த்திமை உள்ளதுஆகில்?
''தோள் பெரு வலியினாலே தொலைப்பன், யான் மலையை'' என்று
வேள் பட வைத்தஆறே விதிர்விதிர்த்து அரக்கன் வீழ்ந்து(வ்)
ஆட்படக் கருதிப் புக்கார்—அவளிவணல்லூராரே. 3

நிலை வலம் வல்லன்அல்லன், நேர்மையை நினையமாட்டான்,
சிலை வலம் கொண்ட செல்வன் சீரிய கயிலைதன்னைத்
தலை வலம் கருதிப் புக்குத் தாங்கினான்தன்னை, அன்று(வ்)
அலைகுலை ஆக்குவித்தார்—அவளிவணல்லூராரே. 4

தவ்வலி ஒன்றன்ஆகித் தனது ஒரு பெருமையாலே,
''மெய்(வ்) வலி உடையன்'' என்று மிகப் பெருந் தேரை ஊர்ந்து
செவ் வலி கூர் விழி(ய்)யான் சிரமத்தான் எடுக்குற்றானை
அவ் வலி தீர்க்க வல்லார்—அவளிவணல்லூராரே. 5

நன்மைதான் அறியமாட்டான், நடு இலா அரக்கர்கோமான்
வன்மையே கருதிச் சென்று, வலிதனைச் செலுத்தல்உற்றுக்
கன்மையால் மலையை ஓடி, கருதித் தான் எடுத்து, வாயால்
''அம்மையோ!'' என்ன வைத்தார்—அவளிவணல்லூராரே. 6

கதம் படப் போதுவார்கள் போதும் அக் கருத்தினாலே
''சிதம்பட நின்ற நீர்கள் சிக்கெனத் தவிரும்!'' என்று,
மதம் படு மனத்தன்ஆகி, வன்மையான் மிக்கு நோக்க,
அதம்பழத்து உருவு செய்தார்—அவளிவணல்லூராரே. 7

நாடு மிக்கு உழிதர்கின்ற நடு இலா அரக்கர்கோனை,
''ஓடு, மிக்கு!'' என்று சொல்லி, ஊன்றினான், உகிரினாலே;
''பாடு மிக்கு உய்வன்'' என்று பணிய, நல்-திறங்கள் காட்டி,
ஆடு மிக்கு அரவம் பூண்டார்—அவளிவணல்லூராரே. 8

ஏனம்ஆய்க் கிடந்த மாலும், எழில் தரு முளரியானும்,
ஞானம்தான் உடையர்ஆகி நன்மையை அறியமாட்டார்;
சேனம்தான் இலா அரக்கன் செழு வரை எடுக்க ஊன்றி
ஆனந்த அருள்கள் செய்தார்—அவளிவணல்லூராரே. 9

ஊக்கினான் மலையை ஓடி உணர்வு இலா அரக்கன்தன்னைத்
தாக்கினான், விரலினாலே தலைபத்தும் தகர ஊன்றி;
நோக்கினார், அஞ்சத் தன்னை, நோன்பு இற; ஊன்று சொல்லி
ஆக்கினார், அமுதம்ஆக—அவளிவணல்லூராரே. 10

திருப் பெருவேளூர் IV-60 திரு நேரிசை

மறை அணி நாவினானை, மறப்புஇலார் மனத்து உளானை,
கறை அணி கண்டன்தன்னை, கனல்-எரிஆடினானை,
பிறை அணி சடையினானை, பெருவேளூர் பேணினானை,
நறை அணி மலர்கள் தூவி நாள்தொறும் வணங்குவேனே. 1

நாதனாய் உலகம்எல்லாம் நம்பிரான் எனவும் நின்ற
பாதன்ஆம் பரமயோகி, பலபல திறத்தினாலும்
பேதனாய்த் தோன்றினானை, பெருவேளூர் பேணினானை,
ஓத நா உடையன்ஆகி உரைக்கும்ஆறு உரைக்கின்றேனே. 2

குறவி தோள் மணந்த செல்வக் குமரவேள் தாதை என்று
நறவு இள நறுமென்கூந்தல் நங்கை ஓர்பாகத்தானை,
பிறவியை மாற்றுவானை, பெருவேளூர் பேணினானை,
உறவினால் வல்லன்ஆகி உணரும்ஆறு உணர்த்துவேனே. 3

மைஞ் ஞவில் கண்டன்தன்னை, வலங்கையில் மழு ஒன்று ஏந்திக்
கைஞ் ஞவில் மானினோடும் கனல்-எரிஆடினானை,
பிஞ்ஞகன்தன்னை, அம் தண் பெருவேளூர் பேணினானை,
பொய்ஞ் ஞெக நினையமாட்டாப் பொறி இலா அறிவினேனே! 4

ஓடை சேர் நெற்றி யானை உரிவையை மூடினானை,
வீடுஅதே காட்டுவானை, வேதம்நான்கு ஆயினானை,
பேடை சேர் புறவு நீங்காப் பெருவேளூர் பேணினானை,
கூட நான் வல்ல மாற்றம் குறுகும்ஆறு அறிகிலேனே. 5

கச்சை சேர் நாகத்தானை, கடல்விடங் கண்டத்தானை,
கச்சி ஏகம்பன்தன்னை, கனல்-எரிஆடுவானை,
பிச்சை சேர்ந்து உழல்வினானை, பெருவேளூர் பேணினானை,
இச்சை சேர்ந்து அமர நானும் இறைஞ்சும்ஆறு இறைஞ்சுவேனே. 6

சித்தராய் வந்து தன்னைத் திருவடி வணங்குவார்கள்
முத்தனை, மூர்த்திஆய முதல்வனை, முழுதும்ஆய
பித்தனை, பிறரும் ஏத்தப் பெருவேளூர் பேணினானை,
மெத்த நேயவனை, நாளும் விரும்பும்ஆறு அறிகிலேனே. 7

முண்டமே தாங்கினானை, முற்றிய ஞானத்தானை,
வண்டு உலாம் கொன்றைமாலை வளர்மதிக்கண்ணியானை,
பிண்டமே ஆயினானை, பெருவேளூர் பேணினானை,
அண்டம்ஆம் ஆதியானை, அறியும்ஆறு அறிகிலேனே. 8

விரிவு இலா அறிவினார்கள் வேறு ஒரு சமயம் செய்து(வ்)
எரிவினால் சொன்னாரேனும் எம்பிராற்கு ஏற்றது ஆகும்;
பரிவினால் பெரியோர் ஏத்தும் பெருவேளூர் பற்றினானை
மருவி, நான் வாழ்த்தி, உய்யும் வகைஅது நினைக்கின்றேனே. 9

பொருகடல் இலங்கை மன்னன் உடல் கெடப் பொருத்தி நல்ல
கருகிய கண்டத்தானை, கதிர் இளங்கொழுந்து சூடும்
பெருகிய சடையினானை, பெருவேளூர் பேணினானை,
உருகிய அடியர் ஏத்தும் உள்ளத்தால் உள்குவேனே. 10

திரு இராமேச்சுரம் IV-61 திரு நேரிசை

பாசமும் கழிக்ககில்லா அரக்கரைப் படுத்து, தக்க
வாசம் மிக்க(அ)லர்கள் கொண்டு, மதியினால் மால் செய் கோயில்—
நேசம் மிக்கு அன்பினாலே நினைமின், நீர், நின்று நாளும்!—
தேசம் மிக்கான் இருந்த திரு இராமேச்சுர(ம்)மே. 1

''முற்றின, நாள்கள்'' என்று முடிப்பதே காரணம்(ம்)ஆய்
உற்ற வன் போர்களாலே உணர்வு இலா அரக்கர்தம்மைச்
செற்ற மால் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைப்
பற்றி, நீ பரவு,—நெஞ்சே!—படர்சடை ஈசன்பாலே! 2

கடல்இடை மலைகள்தம்மால் அடைத்து, மால், கருமம் முற்றி,
திடல்இடைச் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைத்
தொடல்இடை வைத்து நாவில் சுழல்கின்றேன், தூய்மை இன்றி,
உடல்இடைநின்றும் பேரா ஐவர் ஆட்டுண்டு, நானே. 3

குன்றுபோல்-தோள் உடைய குணம் இலா அரக்கர்தம்மைக்
கொன்று போர் ஆழி அம் மால் வேட்கையால் செய்த கோயில்—
நன்றுபோல் நெஞ்சமே! நீ நன்மையை அறிதியாயில்,
சென்று நீ தொழுது உய்க்ண்டாய்!—திரு இராமேச்சுர(ம்)மே. 4

வீரம் மிக்கு எயிறு காட்டி விண் உற நீண்டு அரக்கன்
கூரம் மிக்கவனைச் சென்று கொன்று உடன் கடல் படுத்துத்
தீரம் மிக்கான் இருந்த திரு இராமேச்சுரத்தைக்
கோரம் மிக்கு ஆர் தவத்தால் கூடுவார் குறிப்புஉளாரே. 5

''ஆர், வலம் நம்மின் மிக்கார்?'' என்ற அவ் அரக்கர் கூடிப்
போர் வலம் செய்து மிக்குப் பொருதவர்தம்மை வீட்டித்
தேர் வலம் செற்ற மால் செய் திரு இராமேச்சுரத்தைச்
சேர்,—மட நெஞ்சமே!—நீ செஞ்சடை எந்தைபாலே! 6

வாக்கினால் இன்பு உரைத்து வாழ்கிலார்தம்மை எல்லாம்
போக்கினால் புடைத்து, அவர்கள் உயிர்தனை உண்டு, மால்தான்
தேக்குநீர் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தை
நோக்கினால் வணங்குவார்க்கு நோய்வினை நுணுகும்அன்றே. 7

பலவும் நாள் தீமைசெய்து பார்தன்மேல் குழுமி வந்து
கொலை விலார் கொடியர்ஆய அரக்கரைக் கொன்று வீழ்த்த,
சிலையினான் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைத்
தலையினால் வணங்குவார்கள் தாழ்வர்ஆம்; தவம்அது ஆமே. 8

கோடி மா தவங்கள் செய்து குன்றினார்தம்மை எல்லாம்
வீடவே சக்கரத்தால் எறிந்து, பின் அன்புகொண்டு,
தேடி, மால் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தை
நாடி வாழ்!—நெஞ்சமே, நீ!—நன்நெறி ஆகும்அன்றே. 9

வன்கண்ணர், வாள் அரக்கர்,—வாழ்வினை ஒன்று அறி(ய்)யார்,
புன்கண்ணர்ஆகி நின்று—போர்கள் செய்தாரை மாட்டி,
செங்கண் மால் செய்த கோயில்-திரு இராமேச்சுரத்தைத்
தம் கணால் எய்த வல்லார் தாழ்வர்ஆம், தலைவன்பாலே. 10

வரைகள் ஒத்தே உயர்ந்த மணி முடி அரக்கர்கோனை
விரைய முற்று அற ஒடுக்கி, மீண்டு மால் செய்த கோயில்—
திரைகள் முத்தால் வணங்கும்—திரு இராமேச்சுரத்தை
உரைகள்பத்தால் உரைப்பார், உள்குவார், அன்பினாலே. 11

திரு ஆலவாய் IV-62 திரு நேரிசை

''வேதியா! வேதகீதா! விண்ணவர்அண்ணா!'' என்றுஎன்று
ஓதியே, மலர்கள் தூவி, ஒடுங்கி, நின் கழல்கள் காண—
பாதி ஓர் பெண்ணை வைத்தாய்! படர்சடை மதியம் சூடும்
ஆதியே! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 1

''நம்பனே! நான்முகத்தாய்! நாதனே! ஞானமூர்த்தி!
என் பொனே! ஈசா!'' என்றுஎன்று ஏத்தி நான் ஏசற்று, என்றும்
பின்பினே திரிந்து நாயேன் பேர்த்து இனிப் பிறவா வண்ணம்—
அன்பனே! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 2

ஒரு மருந்துஆகி உள்ளாய், உம்பரோடு உலகுக்கு எல்லாம்;
பெரு மருந்துஆகி நின்றாய்; பேர்அமுதின் சுவைஆய்க்
கரு மருந்துஆகி உள்ளாய்;—ஆளும் வல்வினைகள் தீர்க்கும்
அருமருந்து! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 3

செய்ய நின் கமலபாதம் சேருமா—தேவர்தேவே!
மை அணி கண்டத்தானே! மான்மறி மழு ஒன்று ஏந்தும்
சைவனே!—சால ஞானம் கற்று அறிவு இலாத நாயேன்—
ஐயனே! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 4

வெண்தலை கையில் ஏந்தி மிகவும் ஊர் பலி கொண்டு என்றும்
உண்டதும் இல்லை; சொல்லில், உண்டது நஞ்சுதன்னை;
பண்டு உனை நினையமாட்டாப் பளகனேன் உளம்அது ஆர,—
அண்டனே! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 5

''எஞ்சல் இல் புகல் இது'' என்றுஎன்று ஏத்தி நான் ஏசற்று, என்றும்
வஞ்சகம் ஒன்றும் இன்றி மலர்அடி காணும் வண்ணம்—
நஞ்சினை மிடற்றில் வைத்த நன்பொருள் பதமே! நாயேற்கு,
''அஞ்சல்!'' என்று—ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 6

வழு இலாது உன்னை வாழ்த்தி வழிபடும் தொண்டனேன் உன்
செழு மலர்ப்பாதம் காண—தெண்திரை நஞ்சம் உண்ட
குழகனே! கோலவில்லீ! கூத்தனே! மாத்துஆய் உள்ள
அழகனே! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 7

நறுமலர் நீரும் கொண்டு நாள்தொறும் ஏத்தி வாழ்த்திச்
செறிவன சித்தம்வைத்துத் திருவடி சேரும் வண்ணம்—
மறிகடல்வண்ணன் பாகா! மாமறை அங்கம்ஆறும்
அறிவனே! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 8

''நலம் திகழ் வாயில் நூலால் சருகுஇலைப்பந்தர்செய்த
சிலந்தியை அரசுஅது ஆள அருளினாய்'' என்று திண்ணம்
கலந்து உடன்வந்து நின் தாள் கருதி நான் காண்பதுஆக
அலந்தனன்;—ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 9

பொடிக்கொடு பூசி, பொல்லாக் குரம்பையில் புந்தி ஒன்றி,
பிடித்து நின் தாள்கள் என்றும் பிதற்றி, நான் இருக்கமாட்டேன்—
''எடுப்பன்'' என்று இலங்கைக் கோன் வந்து எடுத்தலும், இருபது(த்)தோள்
அடர்த்தனே! ஆலவாயில் அப்பனே!—அருள்செயாயே! 10

திரு அண்ணாமலை　　IV-63　　திரு நேரிசை

ஓதி மா மலர்கள் தூவி—உமையவள்பங்கா! மிக்க
சோதியே! துளங்கும் எண்தோள் சுடர் மழுப்படையினானே!
ஆதியே! அமரர்கோவே! அணி அணாமலை உளானே!—
நீதியால் நின்னை அல்லால் நினையுமா நினைவு இலேனே. 1

பண்தனை வென்ற இன்சொல் பாவை ஓர்பங்க! நீல-
கண்டனே! கார் கொள் கொன்றைக் கடவுளே! கமலபாதா!
அண்டனே! அமரர்கோவே! அணி அணாமலை உளானே!—
தொண்டனேன் உன்னை அல்லால் சொல்லுமா சொல் இலேனே. 2

உருவமும் உயிரும் ஆகி, ஓதிய உலகுக்கு எல்லாம்
பெரு வினை பிறப்பு வீடுஆய், நின்ற எம்பெருமான்! மிக்க
அருவி பொன் சொரியும் அண்ணாமலை உளாய்! அண்டர்கோவே!—
மருவி நின் பாதம்அல்லால் மற்று ஒரு மாடு இலேனே. 3

பைம்பொனே! பவளக்குன்றே! பரமனே! பால்வெண்நீற்றாய்!
செம்பொனே! மலர் செய் பாதா! சீர் தரு மணியே! மிக்க
அம் பொனே கொழித்து வீழும் அணி அணாமலை உளானே!
என் பொனே!—உன்னை அல்லால் ஏதும் நான் நினைவு இலேனே. 4

பிறை அணி முடியினானே! பிஞ்ஞகா! பெண் ஓர்பாகா!
மறைவலா! இறைவா! வண்டு ஆர் கொன்றையாய்! வாமதேவா!
அறைகழல் அமரர் ஏத்தும் அணி அணாமலை உளானே!
இறைவனே!—உன்னை அல்லால் யாதும் நான் நினைவு இலேனே. 5

புரிசடைமுடியின்மேல் ஓர் பொரு புனல் கங்கை வைத்துக்
கரிஉரி போர்வைஆகக் கருதிய காலகாலா!
அரிகுலம் மலிந்த அண்ணாமலை உளாய்!—அலரின் மிக்க
வரி மிகு வண்டு பண்செய் பாதம் நான் மறப்பு இலேனே. 6

இரவியும், மதியும், விண்ணும், இரு நிலம், புனலும், காற்றும்,
உரகம் ஆர் பவனம்எட்டும், திசை, ஒளி, உருவம்ஆனாய்!
அரவு உமிழ் மணி கொள் சோதி அணி அணாமலை உளானே!—
பரவும் நின் பாதம்அல்லால், பரம! நான் பற்று இலேனே. 7

பார்த்தனுக்கு அன்று நல்கிப் பாசுபதத்தை ஈந்தாய்;
நீர்த் ததும்பு உலாவு கங்கை நெடு முடி நிலாவ வைத்தாய்—
ஆர்த்து வந்து ஈண்டு கொண்டல் அணி அணாமலை உளானே!
தீர்த்தனே!—நின்தன் பாதத் திறம்அலால்-திறம் இலேனே. 8

பாலும் நெய் முதலா மிக்க பசுவில்ஐந்துஆடுவானே!
மாலும் நான்முகனும் கூடிக் காண்கிலா வகையுள் நின்றாய்!
ஆலும் நீர் கொண்டல் பூகம் அணி அணாமலை உளானே!
வால் உடை விடையாய்!—உன்தன் மலர்அடி மறப்பு இலேனே. 9

இரக்கம்ஒன்றுயாதும் இல்லாக் காலனைக் கடிந்த எம்மான்!
உரத்தினால் வரையை ஊக்க, ஒருவிரல்நுதியினாலே
அரக்கனை நெரித்த அண்ணாமலை உளாய்! அமரர்ஏறே!—
சிரத்தினால் வணங்கி ஏத்தித் திருவடி மறப்பு இலேனே. 10

திரு வீழிமிழலை IV-64 திரு நேரிசை

பூதத்தின் படையர்; பாம்பின் பூணினர்; பூணநூலர்;
சீதத்தின் பொலிந்த திங்கள்கொழுந்தர்; நஞ்சு அழுந்து கண்டர்;
கீதத்தின் பொலிந்த ஓசைக் கேள்வியர்; வேள்வியாளர்;
வேதத்தின் பொருளர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 1

காலையின் கதிர்செய் மேனி, கங்குலின் கறுத்த கண்டர்;
மாலையின் மதியம் சேர்ந்த மகுடத்தர்; மதுவும் பாலும்
ஆலையில் பாகும் போல அண்ணித்திட்டு,—அடியார்க்கு,—என்றும்
வேலையின் அமுதர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 2

வரும் தினம், நெருநல், இன்றுஆய், வழங்கின நாளர்; ஆல்கீழ்
இருந்து நன்பொருள்கள் நால்வர்க்கு இயம்பினர்; இருவரோடும்
பொருந்தினர்; பிரிந்து தம்பால் பொய்யர்ஆம்அவர்கட்கு என்றும்
விருந்தினர்—திருந்து வீழிமிழலையுள் விகிர்தனாரே. 3

நிலை இலா ஊர்மூன்று ஒன்ற,—நெருப்பு,—அரி காற்று அம்புஆக,
சிலையும் நாண்அதுவும் நாகம் கொண்டவர்; தேவர்தங்கள்
தலையினால்-தரித்த என்பும், தலைமயிர்வடமும், பூண்ட
விலை இலா வேடர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 4

மறைஇடைப் பொருளர்; மொட்டின் மலர் வழி வாசத் தேனர்;
கறவுஇடைப் பாலின் நெய்யர்; கரும்பினில் கட்டியாளர்;
பிறைஇடைப் பாம்பு கொன்றைப் பிணையல் சேர் சடையுள் நீரர்;
விறகுஇடைத் தீயர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 5

எண் அகத்து இல்லைஅல்லர்; உளர்அல்லர்; இமவான் பெற்ற
பெண் அகத்தர்; ஐயர்; காற்றில் பெரு வலி இருவர்ஆகி,
மண்அகத்து ஐவர்; நீரில் நால்வர்; தீஅதனில் மூவர்;
விண்அகத்து ஒருவர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 6

சந்துஅணிகொங்கையாள் ஓர்பங்கினர்; சாமவேதர்;
எந்தையும் எந்தைதந்தைதந்தையும் ஆய ஈசர்;
அந்தியோடு உதயம் அந்தணாளர் ஆன்நெய்யால் வேட்கும்
வெந்தழல்உருவர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 7

நீற்றினை நிறையப் பூசி, நித்தல் ஆயிரம்பூக்கொண்டு(வ்)
ஏற்றுழி, ஒரு நாள் ஒன்று குறைய, கண் நிறைய இட்ட
ஆற்றலுக்கு ஆழி நல்கி, அவன் கொணர்ந்து இழிச்சும் கோயில்
வீற்றிருந்து அளிப்பர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 8

சித்தி செய்பவர்கட்கு எல்லாம் சேர்வுஇடம்; சென்று கூடப்
பத்தி செய்பவர்கள் பாவம் பறைப்பவர்; இறப்புஇலாளர்;
முத்து இசை பவளமேனி முதிர் ஒளி நீலகண்டர்;
வித்தினில் முளையர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 9

தருக்கின அரக்கன் தேர் ஊர் சாரதி தடை நிலாது,
பொருப்பினை எடுத்த தோளும் பொன் முடிபத்தும் புண்ஆய்
நெரிப்புண்டு அங்கு அலறி மீண்டு நினைந்து அடி பரவ, தம் வாள்
விருப்பொடும் கொடுப்பர்—வீழிமிழலையுள் விகிர்தனாரே. 10

திருச் சாய்க்காடு IV-65 திரு நேரிசை

''தோடு உலாம் மலர்கள் தூவித் தொழுது எழு மார்க்கண்டேயன்
வீடும் நாள் அணுகிற்று'' என்று மெய் கொள்வான் வந்த காலன்
பாடு தான் செலலும், அஞ்சி, ''பாதமே சரணம்'' என்ன,
சாடினார், காலன் மாள;—சாய்க்காடு மேவினாரே. 1

வடம் கெழு மலை மத்துஆக வானவர் அசுரரோடு
கடைந்திட எழுந்த நஞ்சம் கண்டு பல்-தேவர் அஞ்சி
அடைந்து, ''நும் சரணம்'' என்ன, அருள் பெரிது உடையர்ஆகித்
தடங்கடல்நஞ்சம் உண்டார்—சாய்க்காடு மேவினாரே. 2

அரண் இலா வெளிய நாவல் அரு நிழல்ஆக ஈசன்
வரணியல் ஆகித் தன் வாய் நூலினால் பந்தர்செய்ய,
முரண் இலாச் சிலந்திதன்னை முடி உடை மன்னன் ஆக்கித்
தரணிதான் ஆள வைத்தார்—சாய்க்காடு மேவினாரே. 3

அரும் பெருஞ் சிலைக் கை வேடனாய், விறல் பார்த்தற்கு, அன்று(வ்),
உரம் பெரிது உடைமை காட்டி, ஒள் அமர் செய்து, மீண்டே
வரம் பெரிது உடையன் ஆக்கி, வாள் அமர்முகத்தில் மன்னும்
சரம் பொலி தூணி ஈந்தார்—சாய்க்காடு மேவினாரே. 4

இந்திரன் பிரமன் அங்கி எண்வகை வசுக்களோடு
மந்திர மறைஅது ஓதி வானவர் வணங்கி வாழ்த்த,
தந்திரம் அறியாத் தக்கன் வேள்வியைத் தகர்த்தஞான்று,
சந்திரற்கு அருள்செய்தாரும்—சாய்க்காடு மேவினாரே. 5

ஆ மலி பாலும் நெய்யும் ஆட்டி அர்ச்சனைகள் செய்து
பூ மலி கொன்றை சூட்டப் பொறாத தன் தாதை தாளைக்
கூர்மழு ஒன்றால் ஓச்ச, குளிர் சடைக் கொன்றைமாலைத்-
தாமம் நல் சண்டிக்கு ஈந்தார்—சாய்க்காடு மேவினாரே. 6

மை அறு மனத்தன்ஆய பகீரதன் வரங்கள் வேண்ட,
ஐயம் இல் அமரர் ஏத்த, ஆயிரம்முகம்அதுஆகி
வையகம் நெளியப் பாய்வான் வந்து இழி கங்கை என்னும்
தையலைச் சடையில் ஏற்றார்—சாய்க்காடு மேவினாரே. 7

குவப் பெருந் தடக்கை வேடன், கொடுஞ்சிலை இறைச்சிப்பாரம்,
துவர்ப் பெருஞ் செருப்பால் நீக்கி, தூய வாய்க்கலசம் ஆட்ட,
உவப் பெருங் குருதி சோர, ஒரு க(ண்)ணை இடந்து அங்கு அப்பத்
தவப் பெருந் தேவு செய்தார்—சாய்க்காடு மேவினாரே. 8

நக்கு உலாம் மலர் பல்-நூறு கொண்டு நல்ஞானத்தோடு
மிக்க பூசனைகள் செய்வான், மென்மலர் ஒன்று காணாது,
''ஒக்கும், என் மலர்க்கண்'' என்று அங்கு ஒரு க(ண்)ணை இடந்தும் அப்ப,
சக்கரம் கொடுப்பர்போலும்—சாய்க்காடு மேவினாரே. 9

புயம் கம் ஐஞ்-ஞான்கும் பத்தும் ஆய கொண்டு அரக்கன் ஓடிச்
சிவன்திருமலையைப் பேர்க்கத் திருமலர்க் குழலி அஞ்ச,
வியன் பெற எய்தி வீழ விரல் சிறிது ஊன்றி, மீண்டே
சயம் பெற நாமம் ஈந்தார்—சாய்க்காடு மேவினாரே. 10

திரு நாகேச்சுரம் IV-66 திரு நேரிசை

கச்சை சேர் அரவர்போலும்; கறை அணி மிடற்றர்போலும்;
பிச்சை கொண்டு உண்பர்போலும்; பேர்அருளாளர்போலும்;
இச்சையால் மலர்கள் தூவி இரவொடு பகலும் தம்மை
நச்சுவார்க்கு இனியர்போலும்—நாகஈச்சுரவனாரே. 1

வேடு உறு வேடர் ஆகி விசயனோடு எய்தார்போலும்;
காடு உறு பதியர்போலும்; கடிபுனல் கங்கைநங்கை
சேடு எறி சடையர்போலும்; தீவினை தீர்க்க வல்ல
நாடு அறி புகழர்போலும்—நாகஈச்சுரவனாரே. 2

கல்-துணை வில்அதுஆகக் கடிஅரண் செற்றார்போலும்;
பொன்-துணைப் பாதர்போலும்; புலிஅதள் உடையார்போலும்;
சொல்-துணைமாலைகொண்டு தொழுது எழுவார்கட்கு எல்லாம்
நல்-துணை ஆவர்போலும்—நாகஈச்சுரவனாரே. 3

கொம்பு அனாள் பாகர்போலும்; கொடி உடை விடையர்போலும்;
செம்பொன் ஆர் உருவர்போலும்; திகழ் திருநீற்றர்போலும்;
''எம்பிரான்! எம்மை ஆளும் இறைவனே!'' என்று தம்மை
நம்புவார்க்கு அன்பர்போலும்—நாகஈச்சுரவனாரே. 4

கடகரி உரியர்போலும்; கனல் மழுவாளர்போலும்;
படஅரவு அரையர்போலும்; பாரிடம்பலவும் கூடிக்
குடம் உடை முழவம் ஆர்ப்ப, கூளிகள் பாட, நாளும்
நடம் நவில் அடிகள்போலும்—நாகஈச்சுரவனாரே. 5

பிறை உறு சடையர்போலும்; பெண் ஒருபாகர்போலும்;
மறை உறு மொழியர்போலும்; மால், மறையவன்தன்னோடு,
முறைமுறை அமரர் கூடி முடிகளால் வணங்க நின்ற
நறவு அமர் கழலர்போலும்—நாகஈச்சுரவனாரே. 6

வஞ்சகர்க்கு அரியர்போலும்; மருவினோர்க்கு எளியர்போலும்;
குஞ்சரத்துஉரியர்போலும்; கூற்றினைக் குமைப்பர்போலும்;
விஞ்சையர் இரிய அன்று வேலைவாய் வந்து எழுந்த
நஞ்சு அணி மிடற்றர்போலும்—நாகஈச்சுரவனாரே. 7

போகம் ஆர் மோடி கொங்கை புணர்தரு புனிதர்போலும்;
வேகம் ஆர் விடையர்போலும்; வெண்பொடிஆடும் மேனிப்
பாகம் மால் உடையர்போலும்; பருப்பதவில்லர்போலும்;
நாகம்நாண் உடையர்போலும்—நாகஈச்சுரவனாரே. 8

கொக்கரை, தாளம், வீணை, பாணிசெய் குழகர்போலும்;
அக்கு அரை அணிவர்போலும்; ஐந்தலைஅரவர்போலும்;
வக்கரை அமர்வர்போலும்; மாதரை மையல் செய்யும்
நக்க(அ)ரை உருவர்போலும்—நாகஈச்சுரவனாரே. 9

வின்மையால் புரங்கள்மூன்றும் வெந்தழல் விரித்தார்போலும்;
தன்மையால் அமரர்தங்கள் தலைவர்க்கும் தலைவர்போலும்;
வன்மையால் மலை எடுத்தான் வலியினைத் தொலைவித்து, ஆங்கே
நன்மையால் அளிப்பர்போலும்—நாகஈச்சுரவனாரே. 10

திருக் கொண்டீச்சுரம் IV-67 திரு நேரிசை

வரைகிலேன், புலன்கள்ஐந்தும்; வரைகிலாப் பிறவி மாயப்
புரையுளே அடங்கி நின்று புறப்படும் வழியும் காணேன்;
அரையிலே மிளிரும் நாகத்து அண்ணலே! ''அஞ்சல்!'' என்னாய்—
திரை உலாம் பழன வேலித் திருக் கொண்டீச்சுரத்து உளானே! 1

தொண்டனேன் பிறந்து வாளா தொல்வினைக்குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து நைந்து பேர்வது ஓர் வழியும் காணேன்;
அண்டனே! அண்டவாணா! அறிவனே! ''அஞ்சல்!'' என்னாய்—
தெண்திரைப் பழனம் சூழ்ந்த திருக் கொண்டீச்சுரத்து உளானே! 2

கால் கொடுத்து, எலும்பு மூட்டி, கதிர் நரம்பு ஆக்கை ஆர்த்து,
தோல் உடுத்து, உதிரம் அட்டி, தொகு மயிர் மேய்ந்த கூரை
ஓல்எடுத்து உழைஞர் கூடி ஒளிப்பதற்கு அஞ்சுகின்றேன்—
சேல் உடைப் பழனம் சூழ்ந்த திருக் கொண்டீச்சுரத்து உளானே! 3

கூட்டம்ஆய் ஐவர் வந்து கொடுந் தொழில் குணத்தர்ஆகி
ஆட்டுவார்க்கு ஆற்றகில்லேன்—ஆடுஅரவு அசைத்த கோவே!
காட்டுஇடை அரங்கம்ஆக ஆடிய கடவுளேயோ!
சேட்டு இரும் பழன வேலித் திருக் கொண்டீச்சுரத்து உளானே! 4

பொக்கம்ஆய் நின்ற பொல்லாப் புழு மிடை முடை கொள் ஆக்கை
தொக்கு நின்று ஐவர் தொண்ணூற்றுஅறுவரும் துயக்கம் எய்த,
மிக்கு நின்று இவர்கள் செய்யும் வேதனைக்கு அலந்துபோனேன்—
செக்கரே திகழும் மேனித் திருக் கொண்டீச்சுரத்து உளானே! 5

ஊன் உலாம் முடை கொள் ஆக்கை உடைகலம் ஆவது, என்றும்;
மான் உலாம் மழைக்கணார்தம் வாழ்க்கையை மெய் என்று எண்ணி,
நான் எலாம் இனைய காலம் நண்ணிலேன்; எண்ணம் இல்லேன்— 6
தேன் உலாம் பொழில்கள் சூழ்ந்த திருக் கொண்டீச்சுரத்து உளானே!

சாண் இரு மருங்கு நீண்ட சழக்கு உடைப் பதிக்கு நாதர்,
வாணிகர்ஐவர் தொண்ணூற்றுஅறுவரும் மயக்கம் செய்து,
பேணிய பதியின்நின்று பெயரும்போது அறியமாட்டேன்—
சேண் உயர் மாடம் நீடு திருக் கொண்டீச்சுரத்து உளானே! 7

பொய்ம் மறித்து இயற்றிவைத்து, புலால் கமழ் பண்டம் பெய்து,
பைம் மறித்து இயற்றியன்ன பாங்கு இலாக் குரம்பைநின்று
கைம் மறித்தனைய ஆவி கழியும்போது அறியமாட்டேன்;
செந்நெறிச் செலவு காணேன்—திருக் கொண்டீச்சுரத்து உளானே! 8

பாலனாய்க் கழிந்த நாளும், பனிமலர்க் கோதைமார்தம்-
மேலனாய்க் கழிந்த நாளும், மெலிவொடு மூப்பு வந்து
கோலனாய்க் கழிந்த நாளும், குறிக்கோள் இலாது கெட்டேன்— 9
சேல் உலாம் பழன வேலித் திருக் கொண்டீச்சுரத்து உளானே!

விரை தரு கருமென்கூந்தல் விளங்கு இழை வேல்ஒண்கண்ணாள்
வெருவர, இலங்கைக் கோமான் விலங்கலை எடுத்தஞான்று,
பருவரை அனைய தோளும் முடிகளும் பாறி வீழத்
திருவிரல் ஊன்றினானே—திருக் கொண்டீச்சுரத்து உளானே! 10

திரு ஆலங்காடு IV-68 திரு நேரிசை

வெள்ளநீர்ச் சடையர்போலும்; விரும்புவார்க்கு எளியர்போலும்;
உள்ளுளே உருகி நின்று அங்கு உகப்பவர்க்கு அன்பர்போலும்;
கள்ளமே வினைகள்எல்லாம் கரிசு அறுத்திடுவர்போலும்—
அள்ளல் அம் பழனை மேய ஆலங்காட்டு அடிகளாரே. 1

செந்தழல்உருவர்போலும்; சின விடை உடையர்போலும்;
வெந்தவெண்நீறுகொண்டு மெய்க்கு அணிந்திடுவர்போலும்;
மந்தம் ஆம் பொழில் பழ(ன்)னை மல்கிய வள்ளல்போலும்;
அந்தம் இல் அடிகள்போலும்—ஆலங்காட்டு அடிகளாரே. 2

கண்ணினால் காமவேளைக் கனல் எழ விழிப்பர்போலும்;
எண்இலார் புரங்கள்மூன்றும் எரியுணச் சிரிப்பர்போலும்;
பண்ணின் ஆர் முழவம் ஓவாப் பைம்பொழில் பழனை மேய
அண்ணலார்—எம்மை ஆளும் ஆலங்காட்டு அடிகளாரே. 3

காறிடு விடத்தை உண்ட கண்டர்; எண்தோளர்போலும்;
தூறு இடு சுடலைதன்னில் சுண்ணவெண்நீற்றர்போலும்;
கூறு இடும் உருவர்போலும்; குளிர்பொழில் பழனை மேய
ஆறு இடு சடையர்போலும்—ஆலங்காட்டு அடிகளாரே. 4

பார்த்தனோடு அமர் பொருது பத்திமை காண்பர்போலும்;
கூர்த்த வாய் அம்பு கோத்துக் குணங்களை அறிவர்போலும்;
பேர்த்தும் ஓர் ஆவநாழி அம்பொடும் கொடுப்பர்போலும்—
தீர்த்தம் ஆம் பழனை மேய திரு ஆலங்காடனாரே. 5

வீட்டினார் சுடுவெண்நீறு மெய்க்கு அணிந்திடுவர்போலும்;
காட்டில் நின்று ஆடல் பேணும் கருத்தினை உடையர்போலும்;
பாட்டின் ஆர் முழவம் ஓவாப் பைம்பொழில் பழனை மேயார்;
ஆட்டினார், அரவம்தன்னை;—ஆலங்காட்டு அடிகளாரே. 6

தாள் உடைச் செங்கம(ல்)லத் தடங் கொள் சேவடியர்போலும்;
நாள் உடைக் காலன் வீழ உதைசெய்த நம்பர்போலும்;
கோள் உடைப் பிறவி தீர்ப்பார்; குளிர்பொழில் பழனை மேய
ஆள்உடை அண்ணல்போலும்—ஆலங்காட்டு அடிகளாரே. 7

கூடினார், உமைதன்னோடே குறிப்பு உடை வேடம் கொண்டு;
சூடினார், கங்கையாளைச் சுவறிடு சடையர்போலும்;
பாடினார், சாமவேதம்; பைம்பொழில் பழனை மேயார்;
ஆடினார், காளி காண;—ஆலங்காட்டு அடிகளாரே. 8

வெற்று அரைச் சமணரோடு விலை உடைக் கூறை போர்க்கும்
ஒற்றரைச் சொற்கள் கொள்ளார் குணங்களை உகப்பர்போலும்;
பெற்றமே உகந்து அங்கு ஏறும் பெருமையை உடையர்போலும்;
அற்றங்கள் அறிவர்போலும்—ஆலங்காட்டு அடிகளாரே. 9

மத்தனாய் மலை எடுத்த அரக்கனைக் கரத்தோடு ஒல்க
ஒத்தினார், திருவிர(ல்)லால் ஊன்றியிட்டு அருள்வர்போலும்;
பத்தர்தம் பாவம் தீர்க்கும் பைம்பொழில் பழனை மேய
அத்தனார்; நம்மை ஆள்வார்—ஆலங்காட்டு அடிகளாரே. 10

திருக் கோவலூர்வீரட்டம் IV-69 திரு நேரிசை

செத்தையேன், சிதம்ப நாயேன், செடியனேன், அழுக்குப் பாயும்
பொத்தையே போற்றி நாளும் புகல்இடம் அறியமாட்டேன்;
எத்தை நான் பற்றி நிற்கேன்? இருள் அற நோக்கமாட்டாக்
கொத்தையேன் செய்வது என்னே?—கோவல்வீரட்டனீரே! 1

தலை சுமந்து இரு கை நாற்றித் தரணிக்கே பொறைஅது ஆகி
நிலை இலா நெஞ்சம்தன்னுள் நித்தலும் ஐவர் வேண்டும்
விலை கொடுத்து அறுக்கமாட்டேன்; வேண்டிற்றே வேண்டி எய்த்தேன்—
குலை கொள் மாங்கனிகள் சிந்தும் கோவல்வீரட்டனீரே! 2

வழித்தலைப் படவும் மாட்டேன்; வைகலும் தூய்மை செய்து
பழித்திலேன்; பாசம் அற்று,—பரம!—நான் பரவமாட்டேன்;
இழித்திலேன், பிறவிதன்னை; என் நினைந்து இருக்கமாட்டேன்—
கொழித்து வந்து அலைக்கும் தெண்நீர்க் கோவல்வீரட்டனீரே! 3

சாற்றுவர், ஐவர் வந்து சந்தித்த குடிமை வேண்டி;
காற்றுவர், கனலப் பேசி; கண்செவிமூக்குவாயுள்
ஆற்றுவர்; அலந்துபோனேன், ஆதியை அறிவு ஒன்று இன்றி;
கூற்றுவர் வாயில் பட்டேன்—கோவல்வீரட்டனீரே! 4

தடுத்திலேன், ஐவர்தம்மை; தத்துவத்து உயர்வு நீர்மைப்
படுத்திலேன்; பரப்பு நோக்கிப் பல்மலர்(ப்) பாதம் முற்ற
அடுத்திலேன்; சிந்தை ஆர ஆர்வலித்து அன்பு திண்ணம்
கொடுத்திலேன்; கொடியவா, நான்!—கோவல்வீரட்டனீரே! 5

மாச் செய்த குரம்பைதன்னை மண்இடை மயக்கம் எய்தும்
நாச் செய்து, நாலும்ஐந்தும் நல்லன வாய்தல் வைத்து,
காச்செய்த காயம்தன்னுள் நித்தலும் ஐவர் வந்து
கோச் செய்து குமைக்க ஆற்றேன்—கோவல்வீரட்டனீரே! 6

படைகள் போல் வினைகள் வந்து பற்றி என் பக்கல்நின்றும்
விடகிலா; ஆதலாலே விகிர்தனை விரும்பி ஏத்தும்
இடை இலேன்; என் செய்கேன், நான்? இரப்பவர்தங்கட்கு என்றும்
கொடை இலேன்; கொள்வதே, நான்!—கோவல்வீரட்டனீரே! 7

பிச்சுஇலேன், பிறவிதன்னைப் பேதையேன்; பிணக்கம் என்னும்
துச்சுளே அழுந்தி வீழ்ந்து, துயரமே இடும்பைதன்னுள்
அச்சனாய் ஆதிமூர்த்திக்கு அன்பனாய், வாழமாட்டாக்
கொச்சையேன் செய்வது என்னே!—கோவல்வீரட்டனீரே! 8

நிணத்துஇடை யாக்கை பேணி நியமம் செய்து இருக்கமாட்டேன்;
மனத்துஇடை ஆட்டம் பேசி மக்களே சுற்றம் என்னும்
கணத்துஇடை ஆட்டப்பட்டு, காதலால் உன்னைப் பேணும்
குணத்துஇடை வாழமாட்டேன்—கோவல்வீரட்டனீரே! 9

விரிகடல் இலங்கைக் கோனை வியன்கயிலாயத்தின்கீழ்
இருபதுதோளும் பத்துச்சிரங்களும் நெரிய ஊன்றி,
பரவிய பாடல் கேட்டு, படை கொடுத்து அருளிச்செய்தார்—
குரவொடு கோங்கு சூழ்ந்த கோவல்வீரட்டனாரே. 10

திரு நனிபள்ளி IV-70 திரு நேரிசை

முன்-துணை ஆயினானை, மூவர்க்கும் முதல்வன்தன்னை,
சொல்-துணை ஆயினானை, சோதியை, ஆதரித்து(வ்)
உற்று உணர்ந்து உருகி ஊறி உள் கசிவு உடையவர்க்கு
நல்-துணை ஆவர்போலும், நனிபள்ளி அடிகளாரே. 1

புலர்ந்தகால் பூவும் நீரும் கொண்டு அடி போற்றமாட்டா,
வலம்செய்து வாயின் நூலால் வட்டணைப் பந்தர்செய்த,
சிலந்தியை அரையன் ஆக்கிச் சீர்மைகள் அருள வல்லார்—
நலம் திகழ் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாரே. 2

எண்பதும்பத்தும்ஆறும் என் உளே இருந்து மன்னிக்
கண் பழக்கு ஒன்றும் இன்றிக் கலக்க நான் அலக்கழிந்தேன்—
செண்பகம், திகழும் புன்னை, செழுந் திரள் குரவம், வேங்கை,
நண்பு செய் சோலை சூழ்ந்த நனிபள்ளி அடிகளாரே! 3

பண்ணின் ஆர் பாடல்ஆகி, பழத்தினில் இரதம்ஆகி,
கண்ணின் ஆர் பார்வைஆகி, கருத்தொடு கற்பம்ஆகி,
எண்ணினார் எண்ணம்ஆகி, ஏழ்உலகுஅனைத்தும்ஆகி,
நண்ணினார் வினைகள் தீர்ப்பார்—நனிபள்ளி அடிகளாரே. 4

துஞ்சு இருள் காலைமாலை, தொடர்ச்சியை மறந்துஇராதே
அஞ்சுஎழுத்து ஓதில், நாளும் அரன்அடிக்கு அன்புஅது ஆகும்;
வஞ்சனைப் பால்சோறு ஆக்கி வழக்கு இலா அமணர் தந்த
நஞ்சு அமுது ஆக்குவித்தார், நனிபள்ளி அடிகளாரே. 5

செம்மலர்க்கமலத்தோனும் திருமுடி காணமாட்டான்;
அம் மலர்ப்பாதம் காண்பான் ஆழியான் அகழ்ந்தும் காணான்;
''நின்மலன்'' என்று அங்கு ஏத்தும் நினைப்பினை அருளி நாளும்
நம் மலம் அறுப்பர்போலும், நனிபள்ளி அடிகளாரே. 6

அரவத்தால் வரையைச் சுற்றி அமரரோடு அசுரர் கூடி
அரவித்துக் கடையத் தோன்றும் ஆலநஞ்சு அமுதா உண்டார்;
விரவித் தம் அடியர்ஆகி வீடு இலாத் தொண்டர்தம்மை
நரகத்தில் வீழ ஒட்டார்—நனிபள்ளி அடிகளாரே. 7

மண்ணுளே திரியும்போது வருவனபலவும் குற்றம்;
புண்ணுளே புரைபுரையன் புழுப் பொதி பொள்ளல் ஆக்கை
....
.... 8

பத்தும்ஓர்இரட்டிதோளான் பாரித்து மலை எடுக்க,
பத்தும்ஓர்இரட்டிதோள்கள் படர் உடம்பு அடர ஊன்றி,
பத்துவாய் கீதம் பாட, பரிந்து அவற்கு அருள் கொடுத்தார்—
பத்தர்தாம் பரவி ஏத்தும் நனிபள்ளிப் பரமனாரே. 9

திரு நாகைக்காரோணம் IV-71 திரு நேரிசை

மனைவி தாய் தந்தை மக்கள் மற்று உள சுற்றம் என்னும்
வினையுளே விழுந்து, அழுந்தி, வேதனைக்கு இடம் ஆகாதே,
கனையும் மா கடல் சூழ் நாகை மன்னு காரோணத்தானை
நினையுமா வல்லீர்ஆகில் உய்யல் ஆம்—நெஞ்சினீரே! 1

வையனை, வையம் உண்ட மால் அங்கம் தோள்மேல் கொண்ட
செய்யனை, செய்யபோதில்-திசைமுகன் சிரம் ஒன்று ஏந்தும்
கையனை, கடல் சூழ் நாகைக்காரோணம் கோயில்கொண்ட
ஐயனை, நினைந்த நெஞ்சே! அம்ம, நாம் உய்ந்தஆறே! 2

நிருத்தனை, நிமலன்தன்னை, நீள் நிலம் விண்ணின் மிக்க
விருத்தனை, வேதவித்தை, விளைபொருள் மூலம்ஆன
கருத்தனை, கடல் சூழ் நாகைக்காரோணம் கோயில்கொண்ட
ஒருத்தனை, உணர்தலால் நாம் உய்ந்தவா!—நெஞ்சினீரே! 3

மண்தனை இரந்து கொண்ட மாயனோடு அசுரர் வானோர்
தெண்திரை கடைய வந்த தீவிடம்தன்னை உண்ட
கண்டனை, கடல் சூழ் நாகைக்காரோணம் கோயில்கொண்ட
அண்டனை, நினைந்த நெஞ்சே! அம்ம, நாம் உய்ந்தஆறே! 4

நிறைபுனல் அணிந்த சென்னி நீள் நிலா, அரவம், சூடி,
மறைஒலி பாடி, ஆடல் மயானத்து மகிழ்ந்த மைந்தன்,
கறை மலி கடல் சூழ் நாகைக்காரோணம் கோயில்கொண்ட
இறைவனை, நாளும் ஏத்த இடும்பை போய் இன்பம் ஆமே. 5

வெம் பனைக்கருங்கை யானை வெருவ அன்று உரிவை போர்த்த
கம்பனை, காலற் காய்ந்த காலனை, ஞாலம் ஏத்தும்
உம்பனை, உம்பர்கோனை, நாகைக்காரோணம் மேய
செம்பொனை, நினைந்த நெஞ்சே! திண்ணம், நாம் உய்ந்தஆறே! 6

வெங் கடுங் கானத்து ஏழைதன்னொடும் வேடனாய்ச் சென்று
அங்கு அமர் மலைந்து பார்த்தற்கு அடு சரம் அருளினானை,
மங்கைமார் ஆடல் ஓவா மன்னு காரோணத்தானை, 7
கங்குலும் பகலும் காணப்பெற்று நாம் களித்தஆறே!

தெற்றினர் புரங்கள்மூன்றும் தீயினில் விழ ஓர் அம்பால்
செற்ற வெஞ்சிலையர்; வஞ்சர் சிந்தையுள் சேர்வு இலாதார்;
கற்றவர் பயிலும் நாகைக்காரோணம் கருதி ஏத்தப்- 8
பெற்றவர் பிறந்தார்; மற்றுப் பிறந்தவர் பிறந்திலாரே!

கரு மலி கடல் சூழ் நாகைக்காரோணர் கமலபாதத்து
ஒருவிரல்நுதிக்கு நில்லாது ஒண் திறல் அரக்கன் உக்கான்;
இரு திற மங்கைமாரோடு எம்பிரான் செம்பொன்ஆகம் 9
திருவடி தரித்து நிற்க, திண்ணம், நாம் உய்ந்தஆறே!

திரு இன்னம்பர் IV-72 திரு நேரிசை

விண்ணவர் மகுடகோடி மிடைந்த சேவடியர்போலும்;
பெண் ஒருபாகர்போலும்; பேடுஅலிஆணர்போலும்;
வண்ண மால் அயனும் காணா மால்வரை எரியர்போலும்;
எண் உரு அநேகர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 1

பன்னிய மறையர்போலும்; பாம்பு அரை உடையர்போலும்;
துன்னிய சடையர்போலும்; தூ மதி மத்தர்போலும்;
மன்னிய மழுவர்போலும்; மாது இடம் மகிழ்வர்போலும்;
என்னையும் உடையர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 2

மறி ஒரு கையர்போலும்; மாதுஉமை உடையர்போலும்;
பறி தலைப் பிறவி நீக்கிப் பணி கொள வல்லர்போலும்;
செறிவு உடை அங்கமாலை சேர் திருஉருவர்போலும்;
எறிபுனல் சடையர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 3

விடம் மலி கண்டர்போலும்; வேள்வியை அழிப்பர்போலும்;
கடவு நல் விடையர்போலும்; காலனைக் காய்வர்போலும்;
படம் மலி அரவர்போலும்; பாய் புலித்தோலர்போலும்;
இடர் களைந்து அருள்வர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 4

அளி மலர்க்கொன்றை துன்றும் அவிர்சடை உடையர்போலும்;
களி மயில்சாயலோடும் காமனை விழிப்பர்போலும்;
வெளி வளர் உருவர்போலும்; வெண்பொடி அணிவர்போலும்;
எளியவர், அடியர்க்கு என்றும்;—இன்னம்பர் ஈசனாரே. 5

கணை அமர் சிலையர்போலும்; கரிஉரி உடையர்போலும்;
துணை அமர் பெண்ணர்போலும்; தூ மணிக் குன்றர்போலும்;
அணை உடை அடியர் கூடி அன்பொடு மலர்கள் தூவும்
இணைஅடி உடையர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 6

பொருப்பு அமர் புயத்தர்போலும்; புனல் அணி சடையர்போலும்;
மருப்பு இள ஆமை தாங்கு மார்பில் வெண்நூலர்போலும்;
உருத்திரமூர்த்திபோலும்; உணர்வுஇலார் புரங்கள்மூன்றும்
எரித்திடு சிலையர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 7

காடுஇடம் உடையர்போலும்; கடிகுரல் விளியர்போலும்;
வேடுஉரு உடையர்போலும்; வெண்மதிக்கொழுந்தர்போலும்;
கோடு அலர் வன்னி, தும்பை, கொக்குஇறகு, அலர்ந்த கொன்றை-
ஏடு, அமர் சடையர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 8

காறிடு விடத்தை உண்ட கண்டர்; எண்தோளர்போலும்;
நீறு உடை உருவர்போலும்; நினைப்பினை அரியர்போலும்;
பாறு உடைத் தலை கை ஏந்திப் பலி திரிந்து உண்பர்போலும்;
ஏறு உடைக் கொடியர்போலும்—இன்னம்பர் ஈசனாரே. 9

ஆர்த்து எழும் இலங்கைக் கோனை அருவரை அடர்ப்பர்போலும்;
பார்த்தனோடு அமர் பொருது படை கொடுத்து அருள்வர்போலும்;
தீர்த்தம் ஆம் கங்கைதன்னைத் திருச்சடை வைப்பர்போலும்;
ஏத்த ஏழ்உலகும் வைத்தார்—இன்னம்பர் ஈசனாரே. 10

திருச் சேறை

IV-73

திரு நேரிசை

பெருந் திரு இமவான் பெற்ற பெண்கொடி பிரிந்த் பின்னை
வருந்து வான் தவங்கள் செய்ய, மா மணம் புணர்ந்து, மன்னும்
அருந் திருமேனிதன்பால் அங்கு ஒருபாகம்ஆகத்
திருந்திட வைத்தார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 1

ஓர்த்து உளஆறு நோக்கி உண்மையை உணராக் குண்டர்
வார்த்தையை மெய் என்று எண்ணி, மயக்கில் வீழ்ந்து, அழுந்துவேனைப்
பேர்த்து எனை ஆளாக்கொண்டு பிறவி வான் பிணிகள்எல்லாம்
தீர்த்து அருள்செய்தார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 2

ஒன்றிய தவத்து மன்னி உடையனாய் உலப்பு இல் காலம்
நின்று தம் கழல்கள் ஏத்தும் நீள் சிலை விசயனுக்கு
வென்றி கொள் வேடன் ஆகி விரும்பி வெங் கானகத்துச்
சென்று அருள்செய்தார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 3

அஞ்சையும் அடக்கி, ஆற்றல் உடையனாய், அநேககாலம்
வஞ்சம் இல் தவத்துள் நின்று, மன்னிய பகீரதற்கு
வெஞ்சின முகங்கள்ஆகி விசையொடு பாயும் கங்கை
செஞ்சடை ஏற்றார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 4

நிறைந்த மா மணலைக் கூப்பி, நேசமோடு ஆவின் பாலைக்
கறந்து கொண்டு ஆட்ட, கண்டு கறுத்த தன் தாதை தாளை
எறிந்த மாணிக்கு அப்போதே எழில் கொள் தண்டீசன் என்னச்
சிறந்த பேறு அளித்தார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 5

விரித்த பல்கதிர் கொள் சூலம், வெடிபடு தமருகம், கை
தரித்தது ஓர் கோல காலபயிரவன்ஆகி, வேழம்
உரித்து, உமை அஞ்சக் கண்டு, ஒண் திரு மணிவாய் விள்ளச்
சிரித்து, அருள்செய்தார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 6

சுற்றும் முன் இமையோர் நின்று, தொழுது, தூ மலர்கள் தூவி,
‘‘மற்று எமை உயக்கொள்!’’ என்ன, மன்னு வான் புரங்கள்மூன்றும்
உற்று ஒரு நொடியின்முன்னம் ஒள்அழல்வாயின் வீழச்
செற்று, அருள்செய்தார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 7

முந்தி இவ் உலகம்எல்லாம் படைத்தவன் மாலினோடும்,
‘‘எம் தனி நாதனே!’’ என்று இறைஞ்சி நின்று ஏத்தல்செய்ய,
அந்தம் இல் சோதிதன்னை அடி முடி அறியா வண்ணம்
செந்தழல் ஆனார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 8

ஒருவரும் நிகர் இலாத ஒண் திறல் அரக்கன் ஓடி,
பெரு வரை எடுத்த திண்தோள் பிறங்கிய முடிகள் இற்று,
மருவி, ‘‘எம்பெருமான்!’’ என்ன, மலர்அடி மெள்ள வாங்கித்
திருஅருள்செய்தார்—சேறைச் செந்நெறிச் செல்வனாரே. 9

பொது IV-74 "நினைந்த" திரு நேரிசை

முத்தினை, மணியை, பொன்னை, முழுமுதல் பவளம் ஏய்க்கும்
கொத்தினை, வயிரமாலைக் கொழுந்தினை, அமரர் சூடும்
வித்தினை, வேதவேள்விக்கேள்வியை விளங்க நின்ற
அத்தனை,—நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தஆறே! 1

முன்பனை, உலகுக்கு எல்லாம் மூர்த்தியை, முனிகள் ஏத்தும்
இன்பனை, இலங்கு சோதி இறைவனை, அரிவை அஞ்ச
வன் பனைத்தடக்கை வேள்விக் களிற்றினை உரித்த எங்கள்
அன்பனை,—நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தஆறே! 2

கரும்பினும் இனியான்தன்னை, காய்கதிர்ச்சோதியானை,
இருங்கடல் அமுதம்தன்னை, இறப்பொடு பிறப்பு இலானை,
பெரும்பொருள்கிளவியானை, பெருந்தவ முனிவர் ஏத்தும்
அரும்பொனை,—நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தஆறே! 3

செருத்தனை அருத்தி செய்து செஞ் சரம் செலுத்தி ஊர்மேல்
கருத்தனை, கனகமேனிக் கடவுளை, கருதும் வானோர்க்கு
ஒருத்தனை, ஒருத்தி பாகம் பொருத்தியும் அருத்தி தீரா
நிருத்தனை,—நினைந்த நெஞ்சம் நேர்பட நினைந்தஆறே! 4

கூற்றினை உதைத்த பாதக் குழகனை, மழலை வெள்ஏறு
ஏற்றனை, இமையோர் ஏத்த இருஞ்சடைக்கற்றைதன்மேல்
ஆற்றனை, அடியர் ஏத்தும் அமுதனை, அமுத யோக
நீற்றனை,—நினைந்த நெஞ்சம் நேர்பட நினைந்தஆறே! 5

கருப் பனைத்தடக்கை வேழக்களிற்றினை உரித்த கண்டன்,
விருப்பனை, விளங்கு சோதி வியன்கயிலாயம் என்னும்
பொருப்பனை, பொருப்பன்மங்கை பங்கனை, அங்கை ஏற்ற
நெருப்பனை,—நினைந்த நெஞ்சம் நேர்பட நினைந்தஆறே! 6

நீதியால் நினைப்புஉளானை, நினைப்பவர் மனத்து உளானை,
சாதியை, சங்கவெண்நீற்று அண்ணலை, விண்ணில் வானோர்
சோதியை, துளக்கம் இல்லா விளக்கினை, அளக்கல் ஆகா
ஆதியை,— நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தஆறே! 7

பழகனை உலகுக்கு எல்லாம், பருப்பனை, பொருப்போடு ஒக்கும்
மழ களியானையின் தோல் மலைமகள் நடுங்கப் போர்த்த
குழகனை, குழவித்திங்கள் குளிர்சடை மருவ வைத்த
அழகனை,—நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தஆறே! 8

விண்இடை மின் ஒப்பானை, மெய்ப் பெரும்பொருள் ஒப்பானை,
கண்இடை மணி ஒப்பானை, கடுஇருள் சுடர் ஒப்பானை,
எண்இடை எண்ணல்'ஆகா இருவரை வெருவ நீண்ட
அண்ணலை,—நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தஆறே! 9

உரவனை, திரண்ட திண்தோள் அரக்கனை ஊன்றி மூன்றுஊர்
நிரவனை, நிமிர்ந்த சோதி நீள் முடி அமரர்தங்கள்
குரவனை, குளிர்வெண்திங்கள் சடைஇடைப் பொதியும் ஐவாய்-
அரவனை,—நினைந்த நெஞ்சம் அழகிதா நினைந்தஆறே! 10

பொது IV-75 தனித் திரு நேரிசை

தொண்டனேன் பட்டது என்னே! தூய காவிரியின் நன்நீர்
கொண்டு இருக்கு ஓதி, ஆட்டி, குங்குமக்குழம்பு சாத்தி,
இண்டை கொண்டு ஏற நோக்கி, ஈசனை, எம்பிரானை,
கண்டனை, கண்டிராதே காலத்தைக் கழித்தஆறே! 1

பின் இலேன், முன் இலேன், நான்; பிறப்பு அறுத்து அருள்செய்வானே!
என் இலேன், நாயினேன் நான்? இளங் கதிர்ப் பயலைத்திங்கள்
சில்-நிலா எறிக்கும் சென்னிச் சிவபுரத்து அமரர்ஏறே!
நின்அலால் களைகண் ஆரே? நீறு சேர் அகலத்தானே! 2

கள்ளனேன் கள்ளத் தொண்டுஆய்க் காலத்தைக் கழித்துப் போக்கி,
தெள்ளியேன் ஆகி நின்று தேடினேன்; நாடிக் கண்டேன்;
''உள்குவார் உள்கிற்றுஎல்லாம் உடன்இருந்து அறிதி'' என்று
வெள்கினேன்; வெள்கி, நானும் விலா இறச் சிரித்திட்டனே! 3

உடம்பு எனும் மனைஅகத்து(வ்), உள்ளமே தகளி ஆக,
மடம் படும் உணர்நெய் அட்டி, உயிர் எனும் திரி மயக்கி,
இடம் படு ஞானத்தீயால் எரிகொள இருந்து நோக்கில்,
கடம்பு அமர் காளை தாதை கழல்அடி காணல் ஆமே. 4

வஞ்சப்பெண் அரங்கு கோயில், வாள்எயிற்று அரவம் துஞ்சா;
வஞ்சப்பெண் இருந்த சூழல் வான் தவழ் மதியம் தோயும்;
வஞ்சப்பெண் வாழ்க்கையாளன் வாழ்வினை வாழல்உற்று
வஞ்சப்பெண் உறக்கம் ஆனேன்; வஞ்சனேன் என்செய்கேனே! 5

உள்குவார் உள்ளத்தானை, உணர்வு எனும் பெருமையானை,
உள்கினேன், நானும் காண்பான்; உருகினேன்; ஊறிஊறி
எள்கினேன்; எந்தை! பெம்மான்! இருதலை மின்னுகின்ற
கொள்ளிமேல் எறும்பு என் உள்ளம் எங்ஙனம் கூடும்ஆறே? 6

மோத்தையைக் கண்ட காக்கை போல வல்வினைகள் மொய்த்து, உன்
வார்த்தையைப் பேச ஒட்டா மயக்க, நான் மயங்குகின்றேன்;
சீத்தையை, சிதம்புதன்னை, செடி கொள் நோய் வடிவு ஒன்று இல்லா
ஊத்தையை, கழிக்கும் வண்ணம் உணர்வு தா, உலகமூர்த்தி! 7

அங்கத்தை மண்ணுக்கு ஆக்கி, ஆர்வத்தை உனக்கே தந்து,
பங்கத்தைப் போக மாற்றி, பாவித்தேன், பரமா, நின்னை!
சங்கு ஒத்த மேனிச் செல்வா! சாதல்நாள், நாயேன் உன்னை,
''எங்கு உற்றாய்?'' என்றபோதா, ''இங்கு உற்றேன்'' என்கண்டாயே! 8

வெள்ளநீர்ச் சடையனார்தாம் வினவுவார் போல வந்து, என்
உள்ளமே புகுந்து நின்றார்க்கு, உறங்கும் நான் புடைகள் போர்ந்து
''கள்ளரோ, புகுந்தீர்?'' என்ன, கலந்துதான் நோக்கி, நக்கு,
''வெள்ளரோம்!'' என்று, நின்றார்—விளங்கு இளம்பிறையனாரே. 9

பெருவிரல் இறைதான் ஊன்ற, பிறைஎயிறு இலங்க அங்காந்து,
அரு வரை அனைய தோளான்அரக்கன், அன்று, அலறி வீழ்ந்தான்;
இருவரும் ஒருவன்ஆய உருவம் அங்கு உடைய வள்ளல்
திருவடி சுமந்துகொண்டு காண்க, நான் திரியும்ஆறே! 10

பொது IV-76 தனித் திரு நேரிசை

மருள் அவா மனத்தன்ஆகி மயங்கினேன், மதிஇலாதேன்;
இருள் அவா அறுக்கும் எந்தை இணைஅடிநீழல் என்னும்
அருள்அவாப் பெறுதல் இன்றி, அஞ்சி, நான் அலமந்தேற்குப்
பொருள்அவாத் தந்தஆறே போது போய்ப் புலர்ந்தது அன்றே! 1

மெய்ம்மை ஆம் உழவைச் செய்து, விருப்பு எனும் வித்தை வித்தி,
பொய்ம்மை ஆம் களையை வாங்கி, பொறை எனும் நீரைப் பாய்ச்சி,
தம்மையும் நோக்கிக் கண்டு, தகவு எனும் வேலி இட்டு,
செம்மையுள் நிற்பர்ஆகில், சிவகதி விளையும் அன்றே! 2

‘‘எம்பிரான் என்றதே கொண்டு என் உளே புகுந்து நின்று, இங்கு
எம்பிரான் ஆட்ட, ஆடி, என் உளே உழிதர்வேனை
எம்பிரான் என்னைப் பின்னைத் தன்னுளே கரக்கும் என்றால்,
எம்பிரான் என்னின்அல்லால், என் செய்கேன், ஏழையேனே? 3

காயமே கோயில்ஆக, கடிமனம் அடிமைஆக,
வாய்மையே தூய்மைஆக, மனமணி இலிங்கம்ஆக,
நேயமே நெய்யும் பாலா, நிறைய நீர் அமைய ஆட்டி,
பூசனை ஈசனார்க்குப் போற்றுஅவிக் காட்டினோமே. 4

வஞ்சகப் புலையனேனை வழி அறத் தொண்டில் பூட்டி,
‘‘அஞ்சல்!’’ என்று ஆண்டுகொண்டாய்; அதுவும் நின் பெருமை அன்றே!
நெஞ்சுஅகம் கனியமாட்டேன்; நின்னை உள் வைக்கமாட்டேன்;
நஞ்சு இடம் கொண்ட கண்டா! என், என நன்மைதானே? 5

நாயினும் கடைப்பட்டேனை நன்நெறி காட்டி ஆண்டாய்;
ஆயிரம்அரவம் ஆர்த்த அமுதனே! அமுதம் ஒத்து
நீயும் என் நெஞ்சினுள்ளே நிலாவினாய்; நிலாவி நிற்க,
நோய்அவை சாரும்ஆகில், நோக்கி நீ அருள்செயாயே! 6

விள்ளத்தான் ஒன்று மாட்டேன்; விருப்பு எனும் வேட்கையாலே
வள்ளத் தேன் போல நுன்னை வாய்மடுத்து உண்டிடாமே,
உள்ளத்தே நிற்றியேனும், உயிர்ப்புளே வருதியேனும்,
கள்ளத்தே நிற்றி; அம்மா! எங்ஙனம் காணும்ஆறே? 7

ஆசை வன் பாசம் எய்தி, அங்கு உற்றேன் இங்கு உற்றேனாய்,
ஊசலாட்டுண்டு, வாளா, உழந்து நான் உழிதராமே,—
தேசனே! தேசமூர்த்தி! திரு மறைக்காடு மேய
ஈசனே!— உன்தன் பாதம் ஏத்தும்ஆறு அருள், எம்மானே! 8

நிறைவு இலேன், நேசம் இல்லேன்; நினைவு இலேன்; வினையின் பாசம்
மறைவிலே புறப்பட்டு ஏறும் வகை எனக்கு அருள், என் எம்மான்!
சிறைஇலேன் செய்வது என்னே? திருவடி பரவி ஏத்தக்
குறைவு இலேன்; குற்றம் தீராய்—கொன்றை சேர் சடையினானே! 9

நடு இலாக் காலன் வந்து நணுகும்போது அறிய ஒண்ணா;
அடுவன, அஞ்சுபூதம்; அவைதமக்கு ஆற்றல் ஆகேன்;
படுவன, பலவும் குற்றம்; பாங்கு இலா, மனிதர் வாழ்க்கை;
கெடுவது, இப் பிறவி சீ! சீ!—கிளர் ஒளிச் சடையினீரே! 10

பொது IV-77 த்னித் திரு நேரிசை

கடும்பகல் நட்டம்ஆடி, கையில் ஓர் கபாலம் ஏந்தி,
இடும் பலிக்கு இல்லம்தோறும் உழிதரும் இறைவனீரே!
நெடும் பொறை மலையர்பாவை நேரிழை நெறிமென்கூந்தல்
கொடுங்குழை புகுந்த அன்றும் கோவணம் அரையதேயோ? 1

கோவணம் உடுத்தஆறும், கோள் அரவு அசைத்தஆறும்,
தீ வணச் சாம்பர் பூசித் திருஉரு இருந்தஆறும்,
பூவணக் கிழவனாரை புலிஉரி அரையனாரை,
ஏ வணச் சிலையினாரை, யாவரே எழுதுவாரே? 2

விளக்கினால் பெற்ற இன்பம் மெழுக்கினால் பதிற்றி ஆகும்;
துளக்கு இல் நல் மலர் தொடுத்தால்-தூய விண் ஏறல் ஆகும்;
விளக்கு இட்டார் பேறு, சொல்லின், மெய்ஞ்ஞெறி ஞானம் ஆகும்;
அளப்பு இல கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளும்ஆறே! 3

சந்திரன் சடையில் வைத்த சங்கரன், சாமவேதி,
அந்தரத்து அமரர்பெம்மான், ஆன்நல்வெள்ஊர்தியான்தன்
மந்திரம் நமச்சிவாய ஆக, நீறு அணியப்பெற்றால்,
வெந்து அறும், வினையும் நோயும் வெவ்அழல் விறகுஇட்டன்றே! 4

புள்ளுவர் ஐவர்கள்வர் புனத்துஇடைப் புகுந்து நின்று
துள்ளுவர், சூறை கொள்வர்; தூ நெறி விளைய ஒட்டார்;
முள் உடையவர்கள்தம்மை முக்கணான் பாதநீழல்
உள்இடை மறைந்து நின்று, அங்கு உணர்வினால் எய்யல் ஆமே. 5

தொண்டனேன் பிறந்து, வாளா தொல்வினைக்குழியில் வீழ்ந்து
பிண்டமே சுமந்து, நாளும் பெரியது ஓர் அவாவில் பட்டேன்;
அண்டனே! அமரர்கோவே! அறிவனே! ‘‘அஞ்சல்’’ என்னாய்—
தெண்திரைக் கங்கை சூடும் திருத் தகு சடையினானே! 6

பாறினாய்,—பாவிநெஞ்சே!—பன்றி போல் அளற்றில் பட்டு;
தேறி நீ நினைதிஆயின், சிவகதி திண்ணம் ஆகும்;
ஊறலே உவர்ப்பு நாறி, உதிரமே ஒழுகும் வாசல்
கூறையால் மூடக் கண்டு கோலமாக் கருதினாயே! 7

உய்த்த கால் உதயத்து உம்பர் உமைஅவள் நடுக்கம் தீர
வைத்த கால், அரக்கனோ தன் வான்முடி தனக்கு நேர்ந்தான்;
‘‘மொய்த்த கான் முகில்வெண்திங்கள் மூர்த்தி என் உச்சிதன்மேல்
வைத்த கால் வருந்தும்’’ என்று வாடி நான் ஒடுங்கினேனே. 8

பொது IV-78 குறைந்த திரு நேரிசை

வென்றிலேன், புலன்கள்ஐந்தும்; வென்றவர் வளாகம்தன்னுள்
சென்றிலேன்; ஆதலாலே செந்நெறிஅதற்கும் சேயேன்;
நின்று உளே துளும்புகின்றேன்; நீசனேன்; ஈசனேயோ! 1
இன்று உளேன்! நாளை இல்லேன்!—என் செய்வான் தோன்றினேனே!

கற்றிலேன், கலைகள் ஞானம்; கற்றவர்தங்களோடும்
உற்றிலேன்; ஆதலாலே உணர்வுக்கும் சேயன் ஆனேன்;
பெற்றிலேன்; பெருந்தடங்கண் பேதையார்தமக்கும் பொல்லேன்;
எற்றுஉளேன்? இறைவனே!—நான் என் செய்வான் தோன்றினேனே! 2

மாட்டினேன், மனத்தை முன்னே; மறுமையை உணரமாட்டேன்;
மூட்டி, நான், முன்னைநாளே முதல்வனை வணங்கமாட்டேன்;
பாட்டு இல் நாய் போல நின்று பற்றுஅதுஆம் பாவம்தன்னை
ஈட்டினேன்; களையமாட்டேன்—என் செய்வான் தோன்றினேனே! 3

கரைக் கடந்து ஓதம் ஏறும் கடல் விடம் உண்ட கண்டன்
உரைக் கடந்து ஓதும் நீர்மை உணர்ந்திலேன்; ஆதலாலே,
அரைக் கிடந்து அசையும் நாகம் அசைப்பனே! இன்ப வாழ்க்கைக்கு
இரைக்கு இடைந்து உருகுகின்றேன்—என் செய்வான் தோன்றினேனே! 4

செம்மை வெண்நீறு பூசும் சிவன்அவன், தேவதேவன்,
வெம்மைநோய் வினைகள் தீர்க்கும் விகிர்தனுக்கு ஆர்வம் எய்தி
அம்மை நின்று அடிமை செய்யா வடிவு இலா முடிவு இல் வாழ்க்கைக்கு
இம்மை நின்று உருகுகின்றேன்—என் செய்வான் தோன்றினேனே! 5

பேச்சொடு பேச்சுக்கு எல்லாம் பிறர்தமைப் புறமேபேசக்
கூச்சுஇலேன்; ஆதலாலே கொடுமையை விடும்ஆறு ஓரேன்;
நாச் சொலி நாளும் மூர்த்தி நன்மையை உணரமாட்டேன்—
ஏச்சுளே நின்று, மெய்யே என் செய்வான் தோன்றினேனே! 6

தேசனை, தேசம் ஆகும் திருமால் ஓர்பங்கன்தன்னை,
பூசனை, புனிதன்தன்னை, புணரும் புண்டரிகத்தானை,
நேசனை, நெருப்பன்தன்னை, நிவஞ்சகத்து அகன்ற செம்மை
ஈசனை, அறியமாட்டேன்—என் செய்வான் தோன்றினேனே! 7

விளைக்கின்ற வினையை நோக்கி, வெண்மயிர் விரவி, மேலும்
முளைக்கின்ற வினையைப் போக முயல்கிலேன், இயல; வெள்ளம்
திளைக்கின்ற முடியினான்தன் திருவடி பரவமாட்டாது
இளைக்கின்றேன், இருமி ஊன்றி;—என் செய்வான் தோன்றினேனே! 8

விளைவு அறிவு இலாமையாலே வேதனைக்குழியில் ஆழ்ந்து,
களைகணும் இல்லேன்; எந்தாய்! காமரம் கற்றும்இல்லேன்!
தளை அவிழ் கோதை நல்லார்தங்களோடு இன்பம் எய்த
இளையனும் அல்லேன்; எந்தாய்!—என் செய்வான் தோன்றினேனே! 9

வெட்டனவு உடையன்ஆகி வீரத்தால் மலை எடுத்த
துட்டனைத் துட்டுத் தீர்த்துச் சுவைபடக் கீதம் கேட்ட
அட்டமாமூர்த்திஆய ஆதியை ஓதி நாளும்
எள்-தனை எட்டமாட்டேன்—என் செய்வான் தோன்றினேனே! 10

பொது IV-79 குறைந்த திரு நேரிசை

தம் மானம் காப்பது ஆகித் தையலார்வலையுள் ஆழ்ந்து—
அம்மானை, அமுதன்தன்னை, ஆதியை, அந்தம்ஆய
செம் மான ஒளி கொள் மேனிச் சிந்தையுள் ஒன்றி நின்ற
எம்மானை,—நினைய மாட்டேன்;—என் செய்வான் தோன்றினேனே! 1

மக்களே, மணந்த தாரம், வல்வயிற்றுஅவரை, ஓம்பும்
சிக்குளே அழுந்தி, ஈசன் திறம் படேன்; தவம்அது ஓரேன்;
கொப்புளே போலத் தோன்றி அதனுளே மறையக் கண்டும்,
இக் களேபரத்தை ஓம்ப, என் செய்வான் தோன்றினேனே! 2

கூழையேன் ஆகமாட்டேன், கொடுவினைக்குழியில் வீழ்ந்து;
ஏழின் இன்இசையினாலும் இறைவனை ஏத்தமாட்டேன்;
மாழைஒண்கண்ணின் நல்ல மடந்தைமார்தமக்கும் பொல்லேன்—
ஏழையேன் ஆகி, நாளும் என் செய்வான் தோன்றினேனே! 3

முன்னை என் வினையினாலே மூர்த்தியை நினையமாட்டேன்;
பின்னை நான் பித்தன்ஆகிப் பிதற்றுவன், பேதையேன்நான்;
என் உளே மன்னி நின்ற சீர்மைஅது ஆயினானை
என் உளே நினையமாட்டேன்—என் செய்வான் தோன்றினேனே! 4

கறை அணி கண்டன்தன்னைக் காமரம் கற்றும்இல்லேன்;
பிறைநுதல் பேதைமாதர் பெய்வளையார்க்கும் அல்லேன்;
மறை நவில் நாவினானை மன்னி நின்று இறைஞ்சி நாளும்
இறையேயும் ஏத்தமாட்டேன்—என் செய்வான் தோன்றினேனே! 5

வளைத்து நின்று, ஐவர்கள்வர் வந்து எனை நடுக்கம் செய்ய,
தளைத்து வைத்து உலையை ஏற்றித் தழல்-எரி மடுத்த நீரில்-
திளைத்து நின்று ஆடுகின்ற ஆமை போல்-தெளிவுஇலாதேன்,
இளைத்து நின்று ஆடுகின்றேன்—என் செய்வான் தோன்றினேனே! 6

கோயில் IV-80 திரு விருத்தம்

பாளை உடைக் கமுகு ஓங்கி, பல்மாடம் நெருங்கி, எங்கும்
வாளை உடைப் புனல் வந்து எறி, வாழ் வயல்-தில்லைதன்னுள்,
ஆள உடைக் கழல் சிற்றம்பலத்து அரன் ஆடல் கண்டால்
பீளை உடைக் கண்களால் பின்னைப் பேய்த்தொண்டர் காண்பது என்னே? 1

பொரு விடை ஒன்று உடைப் புண்ணியமூர்த்தி, புலிஅதளன்,
உரு உடை அம் மலைமங்கை மணாளன், உலகுக்கு எல்லாம்
திரு உடை அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்,
திருவடியைக் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே? 2

தொடுத்த மலரொடு தூபமும் சாந்தும் கொண்டு எப்பொழுதும்
அடுத்து வணங்கும் அயனொடு மாலுக்கும் காண்பு அரியான்,
பொடிக் கொண்டு அணிந்து பொன் ஆகிய தில்லைச் சிற்றம்பலவன்,
உடுத்த துகில் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே? 3

''வைச்ச பொருள் நமக்கு ஆகும்'' என்று எண்ணி நமச்சிவாய
அச்சம் ஒழிந்தேன்; அணி தில்லை அம்பலத்து ஆடுகின்ற
பிச்சன், பிறப்புஇலி, பேர் நந்தி, உந்தியின்மேல் அசைத்த
கச்சின் அழகு கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே? 4

செய்ஞ் ஞின்ற நீலம் மலர்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்,
மைஞ் ஞின்ற ஒண்கண் மலைமகள் கண்டு மகிழ்ந்து நிற்க
நெய்ஞ் ஞின்று எரியும் விளக்கு ஒத்த நீலமணிமிடற்றான்,
கைஞ் ஞின்ற ஆடல் கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே? 5

ஊனத்தை நீக்கி உலகு அறிய(வ்) என்னை ஆட்கொண்டவன்,
தேன் ஒத்து எனக்கு இனியான், தில்லைச் சிற்றம்பலவன், எம் கோன்,
வானத்தவர் உய்ய வன்நஞ்சை உண்ட கண்டத்து இலங்கும்
ஏனத்துஎயிறு கண்டால் பின்னைக் கண்கொண்டு காண்பது என்னே? 6

தெரித்த கணையால்-திரி புரம்மூன்றும் செந்தீயில் மூழ்க
எரித்த இறைவன், இமையவர்கோமான், இணைஅடிகள்
தரித்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்,
சிரித்த முகம் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே? 7

சுற்றும் அமரர், சுரபதி, ‘‘நின் திருப்பாதம்அல்லால்
பற்று ஒன்று இலோம்’’ என்று அழைப்பப் பரவையுள் நஞ்சை உண்டான்,
செற்று அங்கு அநங்கனைத் தீவிழித்தான், தில்லை அம்பலவன்,
நெற்றியில் கண் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே? 8

சித்தத்து எழுந்த செழுங் கமலத்து அன்ன சேவடிகள்
வைத்த மனத்தவர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலவன்,
முத்தும் வயிரமும் மாணிக்கம்தன்னுள் விளங்கிய தூ
மத்தமலர் கண்ட கண்கொண்டு மற்று இனிக் காண்பது என்னே? 9

தருக்கு மிகுத்துத் தன் தோள்வலி உன்னித் தடவரையை
வரைக்கைகளால் எடுத்து ஆர்ப்ப, மலைமகள்கோன் சிரித்து,
அரக்கன் மணி முடிபத்தும்—அணி தில்லை அம்பலவன்—
நெருக்கி மிதித்த விரல் கண்ட கண்கொண்டு காண்பது என்னே? 10

கோயில் IV-81 திரு விருத்தம்

கரு நட்ட கண்டனை, அண்டத்தலைவனை, கற்பகத்தை,
செரு நட்ட மும்மதில் எய்ய வல்லானை, செந்தீ முழங்கத்
திருநட்டம்ஆடியை, தில்லைக்கு இறையை, சிற்றம்பலத்துப்
பெருநட்டம்ஆடியை, ‘‘வானவர்கோன்’’ என்று வாழ்த்துவனே. 1

ஒன்றி இருந்து நினைமின்கள்! உம்தமக்கு ஊனம் இல்லை;
கன்றிய காலனைக் காலால் கடிந்தான், அடியவற்கா;
சென்று தொழுமின்கள், தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்!—
‘‘என்று வந்தாய்?’’ என்னும் எம்பெருமான்தன் திருக்குறிப்பே. 2

கல்மனவீர்! கழியும் கருத்தே சொல்லிக் காண்பது என்னே?
நல் மனவர் நவில் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
பொன்மலையில் வெள்ளிக்குன்றுஅது போலப் பொலிந்து இலங்கி,
என் மனமே ஒன்றிப் புக்கனன்; போந்த சுவடு இல்லையே! 3

குனித்த புருவமும், கொவ்வைச்செவ்வாயில் குமிண் சிரிப்பும்,
பனித்த சடையும், பவளம் போல் மேனியில் பால்வெண்நீறும்,
இனித்தம் உடைய எடுத்த பொன்பாதமும் காணப்பெற்றால்
மனி(த்)தப்பிறவியும் வேண்டுவதே, இந்த மா நிலத்தே! 4

வாய்த்தது நம்தமக்கு ஈது ஓர் பிறவி; மதித்திடுமின்!
பார்த்தற்குப் பாசுபதம் அருள்செய்தவன்,—பத்தர்உள்ளீர்!—
கோத்து அன்று முப்புரம் தீ விளைத்தான், தில்லை அம்பலத்துக்
கூத்தனுக்கு ஆட்பட்டு இருப்பதுஅன்றே, நம்தம் கூழைமையே? 5

பூத்தன, பொன்சடை பொன் போல் மிளிர; புரிகணங்கள்
ஆர்த்தன, கொட்டி; அரித்தன, பல்குறள்பூதகணம்;
தேத்தென என்று இசை வண்டுகள் பாடு சிற்றம்பலத்துக்
கூத்தனின் கூத்து வல்லார் உளரோ, என்தன் கோல்வளைக்கே? 6

முடி கொண்ட மத்தமும், முக்கண்ணின் நோக்கும், முறுவலிப்பும்,
துடி கொண்ட கையும், துதைந்த வெண்நீறும், சுரிகுழலாள்
படி கொண்ட பாகமும், பாய் புலித்தோலும், என் பாவிநெஞ்சில்
குடிகொண்டவா, தில்லை அம்பலக் கூத்தன் குரைகழலே! 7

படைக்கலம் ஆக உன் நாமத்து எழுத்துஅஞ்சு என் நாவில் கொண்டேன்;
இடைக்கலம் அல்லேன்; எழுபிறப்பும்(ம்) உனக்கு ஆட்செய்கின்றேன்;
துடைக்கினும் போகேன்; தொழுது வணங்கித் தூ நீறு அணிந்து உன்
அடைக்கலம்கண்டாய்—அணி தில்லைச் சிற்றம்பலத்து அரனே! 8

பொன் ஒத்த மேனிமேல் வெண்நீறு அணிந்து, புரிசடைகள்
மின் ஒத்து இலங்க, பலி தேர்ந்து, உழலும் விடங்கவேடச்-
சின்னத்தினால் மலி தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என் அத்தன் ஆடல் கண்டு இன்புஉற்றதால், இவ் இரு நிலமே. 9

சாட எடுத்தது, தக்கன்தன் வேள்வியில் சந்திரனை;
வீட எடுத்தது, காலனை; நாரணன் நான்முகனும்
தேட எடுத்தது,—தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
ஆட எடுத்திட்ட பாதம் அன்றே,—நம்மை ஆட்கொண்டதே! 10

திருக் கழுமலம் IV-82 திரு விருத்தம்

பார் கொண்டு மூடிக் கடல் கொண்டஞான்று நின் பாதம்எல்லாம்
நால்-அஞ்சு புள்இனம் ஏந்தின என்பர்; நளிர்மதியம்
கால் கொண்ட வண்கைச் சடை விரித்து ஆடும் கழுமலவர்க்கு
ஆள்அன்றி மற்றும் உண்டோ, அம் தண் ஆழி அகலிடமே? 1

கடை ஆர் கொடி நெடுமாடங்கள் எங்கும் கலந்து இலங்க
உடையான், உடைதலைமாலையும் சூடி உகந்துஅருளி,
விடைதான் உடைய அவ் வேதியன் வாழும் கழுமலத்துள்
அடைவார்—வினைகள்அவை என்க!—நாள்தொறும் ஆடுவரே! 2

திரைவாய்ப் பெருங்கடல் முத்தம் குவிப்ப, முகந்துகொண்டு
நுரைவாய் நுளைச்சியர் ஓடிக் கழுமலத்துள்(ள்) அழுந்தும்
விரை வாய் நறுமலர் சூடிய விண்ணவன்தன் அடிக்கே
வரையாப் பரிசுஇவை நாள்தொறும் நம்தமை ஆள்வனவே. 3

விரிக்கும், அரும் பதம்; வேதங்கள் ஓதும்; விழுமிய நூல்
உரைக்கில் அரும்பொருள் உள்ளுவர்; கேட்கில் உலகம் முற்றும்
இரிக்கும் பறையொடு பூதங்கள் பாட, கழுமலவன்
நிருத்தம் பழம்படி ஆடும் கழல் நம்மை ஆள்வனவே. 4

சிந்தித்து எழு,—மனமே!—நினையாமுன் கழுமலத்தை!
பந்தித்த வல்வினை தீர்க்க வல்லானை, பசுபதியை,
''சந்தித்த காலம் அறுத்தும்'' என்று எண்ணி இருந்தவர்க்கு
முந்தித் தொழு கழல் நாள்தொறும் நம்தம்மை ஆள்வனவே. 5

நிலையும் பெருமையும் நீதியும் சால அழகு உடைத்துஆய்,
அலையும் பெருவெள்ளத்து அன்று மிதந்த இத் தோணிபுரம்,
சிலையில்-திரி புரம்மூன்று எரித்தார், தம் கழுமலவர்,
அலரும் கழல்அடி நாள்தொறும் நம்தமை ஆள்வனவே. 6

முற்றிக் கிடந்து முந்நீரின் மிதந்து, உடன்மொய்த்து அமரர்
சுற்றிக் கிடந்து, தொழப்படுகின்றது—சூழ் அரவம்
தெற்றிக் கிடந்து வெங் கொன்றையும் துன்றி வெண்திங்கள் சூடும்
கற்றைச் சடைமுடியார்க்கு இடம் ஆய கழுமலமே. 7

உடலும் உயிரும் ஒருவழிச் செல்லும் உலகத்துள்ளே
அடையும் உனை வந்து அடைந்தார், அமரர் அடிஇணைக்கீழ்;
நடையும் விழவொடு நாள்தொறும் மல்கும் கழுமலத்துள்
விடையன் தனிப்பதம் நாள்தொறும் நம்தமை ஆள்வனவே. 8

பரவைக்-கடல்நஞ்சம் உண்டதும் இல்லை; இப் பார்முழுதும்
நிரவிக் கிடந்து தொழப்படுகின்றது;—நீண்டு இருவர்
சிரமப்பட வந்து சார்ந்தார், கழல்அடி காண்பதற்கே—
அரவக் கழல்அடி நாள்தொறும் நம்தமை ஆள்வனவே. 9

கலை ஆர் கடல் சூழ் இலங்கையர்கோன்தன் முடி சிதறத்
தொலையா மலர்அடி ஊன்றலும், உள்ளம் விதிர்விதிர்த்துத்
தலைஆய்க் கிடந்து, உயர்ந்தான்தன் கழுமலம் காண்பதற்கே
அலையாப் பரிசுஇவை நாள்தொறும் நம்தமை ஆள்வனவே. 10

திருக் கழுமலம் IV-83 திரு விருத்தம்

படை ஆர் மழு ஒன்று பற்றிய கையன் பதி வினவில்,
கடை ஆர் கொடி நெடுமாடங்கள் ஓங்கும் கழுமலம் ஆம்—
மடைவாய்க் குருகுஇனம், பாளை விரிதொறும் வண்டுஇனங்கள்
பெடை வாய் மது உண்டு, பேராது இருக்கும்—பெரும்பதியே.

பொது IV-84 ‘‘ஆருயிர்’’த் திரு விருத்தம்

‘‘எட்டு ஆம் திசைக்கும் இருதிசைக்கும்(ம்) இறைவா, முறை!’’ என்று
இட்டார் அமரர் வெம்பூசல் எனக் கேட்டு, எரிவிழியா,
ஒட்டாக் கயவர் திரி புரம்மூன்றையும் ஓர் அம்பினால்
அட்டான் அடிநிழல்கீழது அன்றோ, என்தன் ஆர்உயிரே! 1

பேழ்வாய் அரவின் அரைக்கு அமர்ந்து ஏறிப் பிறங்கு-இலங்கு
தேய் வாய் இளம்பிறை செஞ்சடைமேல் வைத்த தேவர்பிரான்,
மூவான், இளகான், முழுஉலகோடு மண் விண்ணும் மற்றும்
ஆவான், அடிநிழல்கீழது அன்றோ, என்தன் ஆர்உயிரே! 2

தரியா வெகுளியனாய்த் தக்கன் வேள்வி தகர்த்து உகந்த
எரி ஆர் இலங்கிய சூலத்தினான், இமையாத முக்கண்
பெரியான், பெரியார் பிறப்பு அறுப்பான், என்றும் தன் பிறப்பை
அரியான், அடிநிழல்கீழது அன்றோ, என்தன் ஆர்உயிரே! 3

வடிவு உடை வாள்நெடுங்கண் உமையாளை ஓர்பால் மகிழ்ந்து,
வெடிகொள் அரவொடு வேங்கைஅதள் கொண்டு மேல் மருவி,
பொடி கொள் அகலத்துப் பொன் பிதிர்ந்தன்ன பைங்கொன்றைஅம்தார்
அடிகள் அடிநிழல்கீழது அன்றே, என்தன் ஆர்உயிரே! 4

பொறுத்தான், அமரர்க்கு அமுது அருளி(ந்); நஞ்சம் உண்டு கண்டம்
கறுத்தான்; கறுப்பு அழகா உடையான்; கங்கை செஞ்சடைமேல்
செறுத்தான்; தனஞ்சயன் சேண் ஆர் அகலம் கணை ஒன்றினால்
அறுத்தான்; அடிநிழல்கீழது அன்றே, என்தன் ஆர்உயிரே! 5

காய்ந்தான், செறற்கு அரியான் என்று, காலனைக் கால் ஒன்றினால்
பாய்ந்தான்; பணை மதில்மூன்றும் கணை என்னும் ஒள்அழலால்
மேய்ந்தான்; வியன்உலகுஏழும் விளங்க விழுமிய நூல்
ஆய்ந்தான்; அடிநிழல்கீழது அன்றே, என்தன் ஆர்உயிரே! 6

உளைந்தான், செறுத்தற்கு அரியான் தலையை உகிர் ஒன்றினால்
களைந்தான், அதனை நிறைய நெடுமால் கண் ஆர் குருதி
வளைந்தான், ஒருவிரலி(ன்)னொடு வீழ்வித்துச் சாம்பர்வெண்நீறு
அளைந்தான், அடிநிழல்கீழது அன்றே, என்தன் ஆர்உயிரே! 7

முந்து இவ் வட்டத்துஇடைப் பட்டதுஎல்லாம் முடி வேந்தர்தங்கள்
பந்தி வட்டத்துஇடைப்பட்டு அலைப்புண்பதற்கு அஞ்சிக்கொல்லோ,
நந்திவட்டம் நறுமாமலர்க்கொன்றையும் நக்க சென்னி
அந்தி வட்டத்து ஒளியான் அடிச் சேர்ந்தது, என் ஆர்உயிரே! 8

மிகத் தான் பெரியது ஓர் வேங்கைஅதள் கொண்டு மெய்ம் மருவி,
அகத்தான் வெருவ நல்லாளை நடுக்குஉறுப்பான்; வரும் பொன்
முகத்தால் குளிர்ந்திருந்து, உள்ளத்தினால் உகப்பான் இசைந்த
அகத்தான்; அடிநிழல்கீழது அன்றே, என்தன் ஆர்உயிரே! 9

பைம் மாண் அரவுஅல்குல் பங்கயச்சீறடியாள் வெருவக்
கைம்மா, வரிசிலைக் காமனை, அட்ட கடவுள்; ''முக்கண்
எம்மான் இவன்'' என்று இருவரும் ஏத்த எரி நிமிர்ந்த
அம்மான்; அடிநிழல்கீழது அன்றே, என்தன் ஆர்உயிரே! 10

பழக ஓர் ஊர்தி அரன், பைங்கண் பாரிடம் பாணிசெய்யக்
குழலும் முழவொடு மாநடம்ஆடி, உயர் இலங்கைக்
கிழவன் இருபதுதோளும் ஒருவிரலால் இறுத்த
அழகன், அடிநிழல்கீழது அன்றே, என்தன் ஆர்உயிரே! 11

திருச் சோற்றுத்துறை IV-85 திரு விருத்தம்

காலை எழுந்து, கடிமலர் தூயன தாம் கொணர்ந்து,
மேலைஅமரர் விரும்பும் இடம்—விரையான் மலிந்த
சோலை மணம் கமழ்—சோற்றுத்துறை உறைவார் சடைமேல்
மாலை மதியம்அன்றே, எம்பிரானுக்கு அழகியதே? 1

வண்டு அணை கொன்றையும், வன்னியும், மத்தமும், வாள்அரவும்,
கொண்டு அணைந்து ஏறு முடி உடையான், குரை சேர் கழற்கே
தொண்டு அணைந்து ஆடிய சோற்றுத்துறை உறைவார் சடைமேல்
வெண்தலைமாலைஅன்றே, எம்பிரானுக்கு அழகியதே? 2

அளக்கும் நெறியினன், அன்பர்கள்தம் மனத்து ஆய்ந்து கொள்வான்,
விளக்கும் அடியவர்மேல் வினை தீர்த்திடும் விண்ணவர்கோன்,
துளக்கும் குழை அணி சோற்றுத்துறை உறைவார் சடைமேல்
திளைக்கும் மதியம்அன்றே, எம்பிரானுக்கு அழகியதே? 3

ஆய்ந்த கை வாள்அரவத்தொடு, மால்விடை ஏறி, எங்கும்
பேர்ந்த கை மான், நடம்ஆடுவர்; பின்னுசடைஇடையே
சேர்ந்த கைம் மா மலர் துன்னிய சோற்றுத்துறை உறைவார்;
ஏந்து கைச் சூலம் மழு எம்பிரானுக்கு அழகியதே! 4

கூற்றைக் கடந்ததும், கோள் அரவு ஆர்த்ததும், கோள் உழுவை
நீற்றில்-துதைந்து திரியும் பரிசுஅதும், நாம் அறியோம்;
ஆற்றில் கிடந்து அங்கு அலைப்ப அலைப்புண்டு அசைந்தது ஒக்கும்,
சோற்றுத்துறை உறைவார் சடைமேலது ஓர் தூ மதியே. 5

வல்லாடி நின்று வலி பேசுவார் கோளர்வல்அசுரர்
கொல்லாடி நின்று குமைக்கிலும், வானவர் வந்து இறைஞ்சச்
சொல்லாடி நின்று பயில்கின்ற சோற்றுத்துறை உறைவார்
வில்ஆடி நின்ற நிலை எம்பிரானுக்கு அழகியதே! 6

ஆயம் உடையது நாம் அறிவோம்; அரணத்தவரைக்
காயக் கணை சிலை வாங்கியும் எய்தும் துயக்கு அறுத்தான்,
தூய வெண்நீற்றினன், சோற்றுத்துறை உறைவார், சடைமேல்
பாயும் வெண்நீர்த்திரைக்கங்கை எம்மானுக்கு அழகியதே! 7

அண்டர் அமரர் கடைந்து எழுந்து ஓடிய நஞ்சுஅதனை
உண்டும் அதனை ஒடுக்க வல்லான், மிக்க உம்பர்கள்கோன்,
தொண்டு பயில்கின்ற சோற்றுத்துறை உறைவார், சடைமேல்
இண்டை மதியம்அன்றே, எம்பிரானுக்கு அழகியதே? 8

கடல் மணிவண்ணன், கருதிய நான்முகன்தான், அறியான்;
விடம் அணி கண்டம் உடையவன்; தான் எனை ஆள்உடையான்;
சுடர் அணிந்து ஆடிய சோற்றுத்துறை உறைவார்; சடைமேல்
படம் மணி நாகம்அன்றே, எம்பிரானுக்கு அழகியதே? 9

இலங்கைக்கு இறைவன் இருபதுதோளும் முடி நெரியக்
கலங்க விரலினால் ஊன்றி அவனைக் கருத்து அழித்த
துலங்கல் மழுவினான், சோற்றுத்துறை உறைவார், சடைமேல்
இலங்கும் மதியம்அன்றே, எம்பிரானுக்கு அழகியதே? 10

திரு ஒற்றியூர் IV-86 திரு விருத்தம்

செற்றுக் களிற்றுஉரி கொள்கின்றஞான்று செரு வெண்கொம்பு ஒன்று
இற்றுக் கிடந்தது போலும், இளம்பிறை; பாம்பு, அதனைச்
சுற்றிக் கிடந்தது, கிம்புரி போலச் சுடர் இமைக்கும்;
நெற்றிக்கண் மற்று அதன் முத்து ஒக்குமால்—ஒற்றியூரனுக்கே. 1

சொல்லக் கருதியது ஒன்று உண்டு, கேட்கில்: தொண்டுஆய் அடைந்தார்
அல்லல் படக் கண்டு பின் என் கொடுத்தி?—அலை கொள் முந்நீர்
மல்லல்-திரைச் சங்கம் நித்திலம் கொண்டு வம்பக் கரைக்கே
ஒல்லை(த்) திரை கொணர்ந்து எற்று ஒற்றியூர் உறை உத்தமனே! 2

பரவை வரு திரை நீர்க்கங்கை பாய்ந்து உக்க பல்சடைமேல்
அரவம் அணிதரு—கொன்றை, இளந்திங்கள், சூடியது ஓர்
குரவநறுமலர், கோங்கம், அணிந்து குலாய—சென்னி,
உரவு திரை கொணர்ந்து எற்று, ஒற்றியூர் உறை உத்தமனே! 3

தான் அகம்காடு, அரங்குஆக உடையது; தன் அடைந்தார்
ஊன் அகம் நாறும் உடைதலையில், பலி கொள்வது, தான்;
தேன் அகம் நாறும் திரு ஒற்றியூர் உறைவார்அவர்தாம்
தான் அகமே வந்து போனகம் வேண்டி உழிதர்வரே. 4

வேலைக்-கடல்நஞ்சம் உண்டு வெள்ஏற்றொடும் வீற்றிருந்த
மாலைச் சடையார்க்கு உறைவுஇடம்ஆவது, வாரி குன்றா
ஆலைக் கரும்பொடு செந்நெல் கழனி அருகு அணைந்த
சோலை, திரு ஒற்றியூரை எப்போதும் தொழுமின்களே! 5

புற்றினில் வாழும் அரவுக்கும், திங்கட்கும், கங்கை என்னும்
சிற்றிடையாட்கும், செறிதரு கண்ணிக்கும், சேர்வுஇடம் ஆம்—
பெற்றுடையான், பெரும் பேச்சு உடையான், பிரியாது எனை ஆள்
விற்று உடையான்—ஒற்றியூர் உடையான்தன் விரிசடையே. 6

இன்று அரைக்கண் உடையார் எங்கும் இல்லை; இமயம் என்னும்
குன்றர்ஐக்கு அண் நல் குலமகள்பாவைக்குக் கூறு இட்ட நாள்-
அன்று, அரைக்கண்ணும் கொடுத்து, உமையாளையும் பாகம் வைத்த
ஒன்றரைக்கண்ணன் கண்டீர், ஒற்றியூர் உறை உத்தமனே! 7

சுற்றி வண்டு யாழ்செயும் சோலையும் காவும் துதைந்து இலங்கு
பெற்றி கண்டால் மற்று யாவரும் கொள்வர்; பிறர்இடை நீ
ஒற்றி கொண்டாய்; ஒற்றியூரையும் கைவிட்டு, உறும் என்று எண்ணி
விற்றிகண்டாய்; மற்று இது ஒப்பது இல், இடம்—வேதியனே! 8

சுற்றிக் கிடந்து ஒற்றியூரன் என் சிந்தை பிரிவு அறியான்;
ஒற்றித் திரிதந்து நீ என்ன செய்தி? உலகம்எல்லாம்
பற்றித் திரிதந்து பல்லொடு நா மென்று கண் குழித்துத்
தெற்றித்து இருப்பதுஅல்லால், என்ன செய்யும், இத் தீவினையே? 9

அம் கள் கடுக்கைக்கு முல்லைப்புறவம்; முறுவல்செய்யும்
பைங்கண்-தலைக்கு சுடலைக்களரி; பரு மணி சேர்
கங்கைக்கு வேலை; அரவுக்குப் புற்று; கலை நிரம்பாத்
திங்கட்கு வானம்—திரு ஒற்றியூரர் திருமுடியே. 10

தருக்கின வாள் அரக்கன் முடிபத்து இறப் பாதம்தன்னால்
ஒருக்கினஆறு அடியேனைப் பிறப்பு அறுத்து ஆள வல்லான்,
நெருக்கின வானவர் தானவர் கூடிக் கடைந்த நஞ்சைப்
பரு(க்)கினஆறு என் செய்கேன்?—ஒற்றியூர் உறை பண்டங்கனே! 11

திருப் பழனம் IV-87 திரு விருத்தம்

மேவித்து நின்று விளைந்தன, வெந்துயர் துக்கம்எல்லாம்;
ஆவித்து நின்று கழிந்தன, அல்லல்; அவை அறுப்பான்
பாவித்த பாவனை நீ அறிவாய்;—பழனத்து அரசே!—
கூவித்துக் கொள்ளும்தனை அடியேனைக் குறிக்கொள்வதே! 1

சுற்றி நின்றார் புறம் காவல் அமரர்; கடைத்தலையில்
மற்று நின்றார்; திருமாலொடு நான்முகன் வந்து அடிக்கீழ்ப்
பற்றி நின்றார்.—பழனத்து அரசே!—உன் பணி அறிவான்
உற்று நின்றார்; அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 2

ஆடி நின்றாய், அண்டம்ஏழும் கடந்து போய்; மேல் அவையும்
கூடி நின்றாய்; குவிமென்முலையாளையும் கொண்டு உடனே-
பாடி நின்றாய்;—பழனத்து அரசே!—அங்கு ஓர் பால்மதியம்
சூடி நின்றாய்; அடியேனை அஞ்சாமைக் குறிக்கொள்வதே! 3

எரித்துவிட்டாய், அம்பினால் புரம்மூன்றும் முன்னே படவும்;
உரித்துவிட்டாய், உமையாள் நடுக்கு எய்த ஓர் குஞ்சரத்தை;
பரித்துவிட்டாய்,—பழனத்து அரசே!—கங்கை வார்சடைமேல்-
தரித்துவிட்டாய்; அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 4

முன்னியும் முன்னை முளைத்தன மூஎயிலும்(ம்) உடனே-
மன்னியும், அங்கும் இருந்தனை; மாய மனத்தவர்கள்
பன்னிய நூலின் பரிசு அறிவாய்;—பழனத்து அரசே!—
உன்னியும் உன் அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 5

ஏய்ந்து அறுத்தாய், இன்பனாய் இருந்தே படைத்தான்தலையை;
காய்ந்து அறுத்தாய், கண்ணினால் அன்று காமனை; காலனையும்
பாய்ந்து அறுத்தாய்;—பழனத்து அரசே!—என் பழவினைநோய்
ஆய்ந்து அறுத்தாய்; அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 6

மற்று வைத்தாய், அங்கு ஓர் மால் ஒருபாகம்; மகிழ்ந்து உடனே-
உற்று வைத்தாய், உமையாளொடும் கூடும் பரிசு எனவே;
பற்றி வைத்தாய்,—பழனத்து அரசே!—அங்கு ஓர் பாம்பு ஒரு கை
சுற்றி வைத்தாய்; அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 7

ஊரின் நின்றாய், ஒன்றி நின்று; விண்டாரையும் ஒள்அழலால்
போரில் நின்றாய்; பொறையால் உயிர்-ஆவி சுமந்துகொண்டு
பாரில் நின்றாய்;—பழனத்து அரசே!—பணி செய்பவர்கட்கு
ஆர நின்றாய்; அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 8

போகம் வைத்தாய், புரிபுன்சடைமேல் ஓர் புனல்அதனை;
ஆகம் வைத்தாய், மலையான்மடமங்கை மகிழ்ந்து உடனே
பாகம் வைத்தாய்;—பழனத்து அரசே!—உன் பணி அருளால்
ஆகம் வைத்தாய்; அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 9

அடுத்து இருந்தாய், அரக்கன் முடி வாயொடு தோள் நெரியக்
கெடுத்து இருந்தாய்; கிளர்ந்தார் வலியைக் கிளையோடு உடனே-
படுத்திருந்தாய்;—பழனத்து அரசே!—புலியின்(ன்)உரி-தோல்
உடுத்திருந்தாய்; அடியேனைக் குறிக்கொண்டு அருளுவதே! 10

திருப் பூந்துருத்தி IV-88 திரு விருத்தம்

மாலினை மால் உற நின்றான், மலைமகள்தன்னுடைய
பாலனை, பால்மதிசூடியை, பண்பு உணரார் மதில்மேல்
போலனை, போர் விடை ஏறியை, பூந்துருத்தி(ம்) மகிழும்
ஆலனை, ஆதிபுராணனை—நான் அடி போற்றுவதே. 1

மறி உடையான், மழுவாளினன், மாமலைமங்கை ஓர்பால்
குறி உடையான், குணம் ஒன்று அறிந்தார் இல்லை; கூறில், அவன்
பொறி உடை வாள்அரவத்தவன்; பூந்துருத்தி(ய்) உறையும்
அறிவு உடை ஆதிபுராணனை—நான் அடி போற்றுவதே. 2

மறுத்தவர் மும்மதில் மாய ஓர் வெஞ்சிலை கோத்து ஓர் அம்பால்
அறுத்தனை, ஆல்அதன்கீழனை, ஆல்விடம் உண்டு அதனைப்
பொறுத்தனை, பூதப்படையனை, பூந்துருத்தி(ய்) உறையும்
நிறுத்தனை, நீலமிடற்றனை—யான் அடி போற்றுவதே. 3

உருவினை, ஊழிமுதல்வனை, ஓதி நிறைந்து நின்ற
திருவினை, தேசம் படைத்தனை, சென்று அடைந்தேனுடைய
பொரு வினைஎல்லாம் துரந்தனை, பூந்துருத்தி(ய்) உறையும்
கருவினை, கண்மூன்று உடையனை—யான் அடி போற்றுவதே. 4

தக்கன்தன் வேள்வி தகர்த்தவன்,—சாரம்,அது(வ்) அன்று—கோள்
மிக்கன மும்மதில் வீய ஓர் வெஞ்சிலை கோத்து ஓர் அம்பால்
புக்கனன், பொன் திகழ்ந்தன்னது ஓர் பூந்துருத்தி(ய்) உறையும்
நக்கனை, நங்கள் பிரான்தனை—நான் அடி போற்றுவதே. 5

அருகு அடை மாலையும் தான் உடையான், அழகால் அமைந்த
உருஉடைமங்கையும் தன் ஒருபால் உலகுஆயும் நின்றான்,
பொருபடைவேலினன், வில்லினன், பூந்துருத்தி(ய்) உறையும்
திரு உடைத் தேச மதியனை—யான் அடி போற்றுவதே. 6

மன்றியும் நின்ற மதிலரை மாய வகை கெடுக்கக்
கன்றியும் நின்று கடுஞ்சிலை வாங்கிக் கனல்அம்பினால்
பொன்றியும் போகப் புரட்டினன், பூந்துருத்தி(ய்) உறையும்
அன்றியும் செய்த பிரான்தனை—யான் அடி போற்றுவதே. 7

மின் நிறம் மிக்க இடை உமைநங்கை ஓர்பால் மகிழ்ந்தான்,—
''என் நிறம்?'' என்று அமரர்பெரியார் இன்னம் தாம் அறியார்—
பொன்நிறம் மிக்க சடையவன், பூந்துருத்தி(ய்) உறையும்
எல்-நிற எந்தைபிரான்தனை—யான் அடி போற்றுவதே. 8

அந்தியை, நல்ல மதியினை, யார்க்கும் அறிவு அரிய
செந்தியை வாட்டும் செம்பொன்னினை, சென்று அடைந்தேனுடைய
புந்தியைப் புக்க அறிவினை, பூந்துருத்தி(ய்) உறையும்
நந்தியை, நங்கள் பிரான்தனை—நான் அடி போற்றுவதே. 9

பைக்கையும் பாந்தி விழிக்கையும் பாம்பு; சடைஇடையே
வைக்கையும் வான் இழி கங்கையும்; மங்கை நடுக்குஉறவே
மொய்க்கை அரக்கனை ஊன்றினன், பூந்துருத்தி(ய்) உறையும் 10
மிக்க நல்வேத விகிர்தனை—நான் அடி போற்றுவதே.

திரு நெய்த்தானம்   IV-89   திரு விருத்தம்

பார்இடம் சாடிய பல்உயிர் வான்அமரர்க்கு அருளி,
கார் அடைந்த(க்) கடல் வாய் உமிழ் நஞ்சு அமுதுஆக உண்டான்—
ஊர் அடைந்து இவ் உலகில் பலி கொள்வது நாம் அறியோம்— 1
நீர் அடைந்த(க்) கரை நின்ற நெய்த்தானத்து இருந்தவனே.

தேய்ந்து இலங்கும் சிறுவெண்மதியாய்! நின் திருச்சடைமேல்
பாய்ந்த கங்கைப்புனல் பல்முகம் ஆகிப் பரந்து ஒலிப்ப,
ஆய்ந்து இலங்கும் மழு, வேல், உடையாய்!—அடியேற்கு உரை நீ,
ஏந்து இளமங்கையும் நீயும் நெய்த்தானத்து இருந்ததுவே! 2

கொன்று அடைந்து ஆடிக் குமைத்திடும் கூற்றம், ஒன்னார் மதில்மேல்
சென்று அடைந்து ஆடி,—பொருததும்,—தேசம் எல்லாம் அறியும்;—
குன்று அடைந்து ஆடும் குளிர்பொழில் காவிரியின் கரைமேல்,
சென்று அடைந்தார் வினை தீர்க்கும், நெய்த்தானத்து இருந்தவனே! 3

கொட்டு முழவு அரவத்தொடு கோலம்பல அணிந்து
நட்டம்பல பயின்று ஆடுவர்; நாகம் அரைக்கு அசைத்துச்
சிட்டர் திரிபுரம் தீ எழச் செற்ற சிலை உடையான்—
இட்டம் உமையொடு நின்ற நெய்த்தானத்து இருந்தவனே. 4

கொய்ம் மலர்க்கொன்றை, துழாய், வன்னி, மத்தமும், கூவிளமும்,
மொய்ம்மலர், வேய்ந்த விரிசடைக்கற்றை விண்ணோர்பெருமான்;
மைம்மலர்நீலநிறம் கருங்கண்ணி ஓர்பால் மகிழ்ந்தான்;
நின்மலன்—ஆடல் நிலயம் நெய்த்தானத்து இருந்தவனே. 5

பூந்தார் நறுங்கொன்றைமாலையை வாங்கிச் சடைக்கு அணிந்து,
கூர்ந்து ஆர் விடையினை ஏறி, பல்பூதப்படை நடுவே
போந்தார்—புற இசை பாடவும் ஆடவும் கேட்டுஅருளிச்
சேர்ந்து ஆர் உமையவளோடும் நெய்த்தானத்து இருந்தவனே. 6

பற்றின பாம்பன்; படுத்த புலிஉரித்-தோல் உடையன்;
முற்றின மூன்றுமதில்களை மூட்டி எரித்து அறுத்தான்;
சுற்றிய பூதப்படையினன்—சூலம் மழு ஒருமான்,
செற்று நம் தீவினை தீர்க்கும், நெய்த்தானத்து இருந்தவனே. 7

விரித்த சடையினன்; விண்ணவர்கோன்; விடம் உண்ட கண்டன்;
உரித்த கரிஉரி மூடி ஒன்னார் மதில்மூன்று உடனே-
எரித்த சிலையினன்—ஈடு அழியாது என்னை ஆண்டுகொண்ட,
தரித்த உமையவளோடு, நெய்த்தானத்து இருந்தவனே. 8

தூங்கான்; துளங்கான்; துழாய், கொன்றை, துன்னிய செஞ்சடைமேல்
வாங்கா மதியமும், வாள்அரவும், கங்கை, தான் புனைந்தான்;
தேங்கார் திரிபுரம் தீ எழ எய்து தியக்கு அறுத்து
நீங்கான், உமையவளோடு;—நெய்த்தானத்து இருந்தவனே. 9

ஊட்டி நின்றான், பொரு வானில் அம் மும்மதில் தீ; அம்பினால்
மாட்டி நின்றான்; அன்றினார் வெந்து வீழவும் வானவர்க்குக்
காட்டி நின்றான்; கதமாக் கங்கை பாய ஓர் வார்சடையை
நீட்டி நின்றான்—திரு நின்ற நெய்த்தானத்து இருந்தவனே. 10

திரு வேதிகுடி IV-90 திரு விருத்தம்

கையது, கால் எரி நாகம், கனல்விடு சூலம்அது;
வெய்யது வேலை நஞ்சு உண்ட விரிசடை விண்ணவர்கோன்,
செய்யினில் நீலம் மணம் கமழும் திரு வேதிகுடி
ஐயனை, ஆரா அமுதினை,—நாம் அடைந்து ஆடுதுமே. 1

கைத்தலை மான்மறி ஏந்திய கையன்; கனல் மழுவன்;
பொய்த்தலை ஏந்தி, நல் பூதி அணிந்து பலி திரிவான்;
செய்த்தலை வாளைகள் பாய்ந்து உகளும் திரு வேதிகுடி
அத்தனை; ஆரா அமுதினை;—நாம் அடைந்து ஆடுதுமே. 2

முன் பின் முதல்வன்; முனிவன்; எம் மேலைவினை கழித்தான்;
அன்பின் நிலை இல் அவுணர்புரம் பொடிஆன செய்யும்
செம்பொனை; நல் மலர்மேலவன் சேர் திரு வேதிகுடி
அன்பனை; நம்மை உடையனை;—நாம் அடைந்து ஆடுதுமே. 3

பத்தர்கள், நாளும் மறவார், பிறவியை ஒன்று அறுப்பான்;
முத்தர்கள் முன்னம் பணிசெய்து பார்இடம்முன் உயர்ந்தான்;
கொத்தன கொன்றை மணம் கமழும் திரு வேதிகுடி
அத்தனை; ஆரா அமுதினை;—நாம் அடைந்து ஆடுதுமே. 4

ஆன் அணைந்து ஏறும் குறி குணம் ஆர் அறிவார்? அவர் கை
மான் அணைந்து ஆடும்; மதியும் புனலும் சடைமுடியன்;
தேன் அணைந்து ஆடிய வண்டு பயில் திரு வேதிகுடி,
ஆன்அண்ஐந்துஆடும், மழுவனை;—நாம் அடைந்து ஆடுதுமே. 5

எண்ணும் எழுத்தும் குறியும் அறிபவர் தாம் மொழிய,
பண்ணின் இசை மொழி பாடிய வானவர்தாம் பணிவார்;
திண்ணென் வினைகளைத் தீர்க்கும் பிரான்; திரு வேதிகுடி
நண்ண அரிய அமுதினை;—நாம் அடைந்து ஆடுதுமே. 6

ஊர்ந்த விடை உகந்து ஏறிய செல்வனை நாம் அறியோம்;
ஆர்ந்த மடமொழி மங்கை ஓர்பாகம் மகிழ்ந்து உடையான்;
சேர்ந்த புனல் சடைச் செல்வப் பிரான்; திரு வேதிகுடிச்
சார்ந்த வயல் அணி தண்ணமுதை அடைந்து ஆடுதுமே. 7

எரியும் மழுவினன்; எண்ணியும் மற்றொருவன் தலையுள்-
திரியும் பலியினன்; தேயமும் நாடும் எல்லாம் உடையான்;
விரியும் பொழில் அணி சேறு திகழ் திரு வேதிகுடி
அரிய அமுதினை அன்பர்களோடு அடைந்து ஆடுதுமே. 8

மை அணி கண்டன்; மறை விரி நாவன்; மதித்து உகந்த
மெய் அணி நீற்றன்; விழுமிய வெண்மழுவாள்படையன்;
செய்யகமலம் மணம் கமழும் திரு வேதிகுடி
ஐயனை; ஆரா அமுதினை;—நாம் அடைந்து ஆடுதுமே. 9

வருத்தனை, வாள் அரக்கன் முடி தோளொடு பத்து இறுத்த
பொருத்தனை, பொய்யா அருளனை, பூதப்படை உடைய
திருத்தனை, தேவர்பிரான் திரு வேதிகுடி உடைய
அருத்தனை, ஆரா அமுதினை,—நாம் அடைந்து ஆடுதுமே. 10.

திரு ஐயாறு

IV-91

திரு விருத்தம்

குறுவித்தவா, குற்றம் நோய்வினை காட்டி! குறுவித்த நோய்
உறுவித்தவா! உற்ற நோய்வினை தீர்ப்பான் உகந்துஅருளி
அறிவித்தஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
செறிவித்தவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 1

கூர்வித்தவா, குற்றம் நோய்வினை காட்டியும்! கூர்வித்த நோய்
ஊர்வித்தவா! உற்ற நோய்வினை தீர்ப்பான் உகந்துஅருளி
ஆர்வித்தஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
சேர்வித்தவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 2

தாக்கினவா, சலம்மேல் வினை காட்டியும்! தண்டித்த நோய்
நீக்கினவா! நெடுநீரின்நின்று ஏற நினைந்துஅருளி
ஆக்கினஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
நோக்கினவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 3

தருக்கின நான் தகவு இன்றியும் ஓடச் சலம்அதனால்
நெருக்கினவா! நெடுநீரின்நின்று ஏற நினைந்துஅருளி
உருக்கினஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
பெருக்கினவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 4

இழிவித்தஆறு, இட்ட நோய்வினை காட்டி! இடர்ப்படுத்துக்
கழிவித்தவா! கட்டநோய் வினை தீர்ப்பான் கலந்துஅருளி
அழிவித்தஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
தொழுவித்தவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 5

இடைவித்தஆறு, இட்ட நோய்வினை காட்டி! இடர்ப்படுத்து(வ்)
உடைவித்தஆறு! உற்ற நோய்வினை தீர்ப்பான் உகந்துஅருளி
அடைவித்தஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
தொடர்வித்தவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 6

படக்கினவா, பட நின்று பல்-நாளும்! படக்கின நோய்
அடக்கினஆறு! அது அன்றியும் தீவினை பாவம்எல்லாம்
அடக்கினஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
தொடக்கினவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 7

மறப்பித்தவா, வல்லை நோய்வினை காட்டி! மறப்பித்த நோய்
துறப்பித்தவா! துக்க நோய்வினை தீர்ப்பான் உகந்துஅருளி
இறப்பித்தஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
சிறப்பித்தவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 8

துயக்கினவா, துக்க நோய்வினை காட்டி! துயக்கின நோய்
இயக்கின ஆறு! இட்ட நோய்வினை தீர்ப்பான் இசைந்துஅருளி
அயக்கினஆறு, அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே!
மயக்கினவா—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 9

கறுத்துமிட்டார், கண்டம்; கங்கை சடைமேல் கரந்துஅருளி,
இறுத்துமிட்டார், இலங்கைக்கு இறைதன்னை இருபதுதோள்;
அறுத்துமிட்டார், அடியேனை ஐயாறன் அடிமை(க்)களே;
பொறுத்தும் இட்டார்—தொண்டனேனைத் தன் பொன்அடிக்கீழ் எனையே! 10

திரு ஐயாறு IV-92 திரு விருத்தம்

சிந்திப்பு அரியன; சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன்
முந்திப் பொழிவன; முத்தி கொடுப்பன; மொய்த்து இருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன—பாம்பு சுற்றி
அந்திப்பிறை அணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே. 1

இழித்தன ஏழ் ஏழ்பிறப்பும் அறுத்தன; என் மனத்தே
பொழித்தன; போர் எழில் கூற்றை உதைத்தன; போற்றவர்க்குஆய்க்
கிழித்தன, தக்கன் கிளர் ஒளி வேள்வியைக் கீழ முன்சென்று
அழித்தன—ஆறுஅங்கம்ஆன ஐயாறன் அடித்தலமே. 2

மணி நிறம் ஒப்பன; பொன்நிறம் மன்னின; மின் இயல் வாய்
கணி நிறம் அன்ன; கயிலைப்பொருப்பன; காதல் செய்யத்
துணிவன; சீலத்தர்ஆகித் தொடர்ந்து விடாத தொண்டர்க்கு
அணியன; சேயன, தேவர்க்கு;—ஐயாறன் அடித்தலமே. 3

இருள் தரு துன்பப்படலம் மறைப்ப, மெய்ஞ்ஞானம் என்னும்
பொருள் தரு கண் இழந்து, உண் பொருள் நாடி, புகல் இழந்த
குருடரும் தம்மைப் பரவ, கொடுநரகக்குழிநின்று
அருள்தரு கை கொடுத்து ஏற்றும்—ஐயாறன் அடித்தலமே. 4

எழுவாய் இறுவாய் இலாதன; எங்கள் பிணி தவிர்த்து
வழுவா மருத்துவம் ஆவன; மா நரகக்குழிவாய்
விழுவார்அவர்தம்மை வீழ்ப்பன; மீட்பன; மிக்க அன்போடு
அழுவார்க்கு அமுதங்கள்—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 5

துன்பக்கடல்இடைத் தோணித்தொழில் பூண்டு, தொண்டர்தம்மை
இன்பக்கரை முகந்து ஏற்றும் திறத்தன; மாற்று அயலே
பொன் பட்டு ஒழுகப் பொருந்து ஒளி செய்யும் அப் பொய் பொருந்தா
அன்பர்க்கு அணியன—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 6

களித்துக் கலந்தது ஓர் காதல் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுது முன் நின்ற இப் பத்தரைக் கோது இல் செந்தேன்
தெளித்து, சுவை அமுது ஊட்டி, அமரர்கள் சூழ்இருப்ப
அளித்து, பெருஞ்செல்வம் ஆக்கும்—ஐயாறன் அடித்தலமே. 7

திருத்திக் கருத்தினைச் செவ்வே நிறுத்திச் செறுத்து உடலை
வருத்திக் கடிமலர்வாள் எடுத்து ஓச்சி மருங்கு சென்று
விருத்திக்கு உழக்க வல்லோர்கட்கு விண் பட்டிகை இடுமால்—
அருத்தித்து அருந்தவர் ஏத்தும் ஐயாறன் அடித்தலமே. 8

பாடும் பறண்டையும் மொந்தையும் ஆர்ப்ப, பரந்து பல்பேய்
கூடி முழவக் குவி கவிழ் கொட்ட, குறுநரிகள்
நீடும் குழல்செய்ய, வையம் நெளிய நிணப் பிணக்காட்டு
ஆடும் திருவடி—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 9

நின் போல் அமரர்கள் நீள் முடி சாய்த்து நிமிர்ந்து உகுத்த
பைம்போது உழக்கிப் பவளம் தழைப்பன—பாங்கு அறியா
என்போலிகள் பறித்து இட்ட இலையும் முகையும் எல்லாம்
அம் போது எனக் கொள்ளும் ஐயன்ஐயாறன் அடித்தலமே. 10

மலையான்மடந்தை மனத்தன; வானோர் மகுடம் மன்னி
நிலைஆய் இருப்பன; நின்றோர் மதிப்பன; நீள் நிலத்துப்
புலை ஆடு புன்மை தவிர்ப்பன—பொன்னுலகம்(ம்) அளிக்கும்,
அலை ஆர் புனல் பொன்னி சூழ்ந்த, ஐயாறன் அடித்தலமே. 11

பொலம் புண்டரிகப்புதுமலர் போல்வன; ''போற்றி!'' என்பார்
புலம்பும்பொழுதும் புணர் துணை ஆவன; பொன் அனையாள்
சிலம்பும், செறி பாடகமும், செழுங் கிண்கிணித்திரளும்,
அலம்பும் திருவடி—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 12

உற்றார்இலாதார்க்கு உறு துணை ஆவன; ஓதி நன்நூல்
கற்றார் பரவப் பெருமை உடையன; காதல் செய்ய
கிற்பார்தமக்குக் கிளர் ஒளி வானகம்தான் கொடுக்கும்;
அற்றார்க்கு அரும்பொருள்—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 13

வானைக் கடந்து அண்டத்து அப்பால் மதிப்பன; மந்திரிப்பார்
ஊனைக் கழித்து உய்யக்கொண்டு அருள்செய்வன; உத்தமர்க்கு
ஞானச் சுடர்ஆய் நடுவே உதிப்பன; நங்கை அஞ்ச
ஆனை உரித்தன—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 14

மாதிரம், மா நிலம், ஆவன; வானவர் மா முகட்டின்-
மீதன; மென் கழல் வெங் கச்சு வீக்கின; வெந் நமனார்-
தூதரை ஓடத் துரப்பன; துன்பு அறத் தொண்டுபட்டார்க்கு
ஆதரம் ஆவன—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 15

பேணித் தொழுமவர் பொன்னுலகு ஆளப் பிறங்கு அருளால்
ஏணிப்படி நெறி இட்டுக் கொடுத்து, இமையோர் முடிமேல்
மாணிக்கம் ஒத்து, மரகதம் போன்று, வயிரம் மன்னி,
ஆணிக்கனகமும் ஒக்கும்— ஐயாறன் அடித்தலமே. 16

ஓதிய ஞானமும், ஞானப்பொருளும், ஒலி சிறந்த
வேதியர் வேதமும், வேள்வியும், ஆவன; விண்ணும் மண்ணும்
சோதிஅம்செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன, தீ, மதியோடு;
ஆதியும் அந்தமும் ஆன—ஐயாறன் அடித்தலமே. 17

சுணங்கு முகத்துத் துணைமுலைப் பாவை—சுரும்பொடு வண்டு
அணங்கும் குழலி—அணி ஆர் வளைக்கரம் கூப்பி நின்று,
வணங்கும்பொழுதும், வருடும்பொழுதும், வண் காந்தள்ஒண்போது
அணங்கும் அரவிந்தம் ஒக்கும்—ஐயாறன் அடித்தலமே. 18

சுழல் ஆர் துயர்வெயில் சுட்டிடும்போது அடித்தொண்டர் துன்னும்
நிழல் ஆவன; என்றும் நீங்காப் பிறவி நிலை கெடுத்துக்
கழலா வினைகள் கழற்றுவ; காலவனம் கடந்த
அழல் ஆர் ஒளியன—காண்க!—ஐயாறன் அடித்தலமே. 19

வலியான் தலைபத்தும் வாய்விட்டு அலற வரை அடர்த்து,
மெலியா வலி உடைக் கூற்றை உதைத்து, விண்ணோர்கள்முன்னே
பலி சேர் படு கடைப் பார்த்து, பல்-நாளும் பலர் இகழ
அலி ஆம் நிலை நிற்கும்—ஐயன்ஐயாறன் அடித்தலமே. 20

திருக் கண்டியூர் IV-93 திரு விருத்தம்

வானவர் தானவர் வைகல் மலர் கொணர்ந்து இட்டு இறைஞ்சித்
தானவர் மால் பிரமன்(ன்) அறியாத தகைமையினான்,
ஆனவன், ஆதிபுராணன், அன்று ஓடிய பன்றி எய்த
கானவனை, கண்டியூர் அண்டவாணர் தொழுகின்றதே. 1

வானமதியமும் வாள்அரவும் புனலோடு சடைத்-
தானம்அது என வைத்து உழல்வான், தழல் போல் உருவன்,
கானமறி ஒன்று கை உடையான், கண்டியூர் இருந்த
ஊனம் இல் வேதம் உடையனை, நாம் அடி உள்குவதே. 2

பண்டு அங்கு அறுத்தது ஓர் கை உடையான்,—படைத்தான் தலையை,—
உண்டு, அங்கு அறுத்ததும் ஊரொடு நாடு அவைதான் அறியும்;
கண்டம் கறுத்த மிடறு உடையான்; கண்டியூர் இருந்த
தொண்டர்பிரானை—கண்டீர்—அண்டவாணர் தொழுகின்றதே. 3

முடியின் முற்றாதது ஒன்று இல்லை, எல்லாம் உடன் தான் உடையான்;
கொடியும் உற்ற(வ்) விடை ஏறி, ஓர் கூற்று ஒருபால் உடையான்;
கடிய முற்று அவ் வினைநோய் களைவான், கண்டியூர் இருந்தான்;
அடியும் உற்றார் தொண்டர்; இல்லைகண்டீர், அண்டவானவரே. 4

பற்றி ஓர் ஆனை உரித்த பிரான், பவளத்திரள் போல்
முற்றும் அணிந்தது ஓர் நீறு உடையான், முன்னமே கொடுத்த—
கல்-தம் குடையவன்தான் அறியான்—கண்டியூர் இருந்த
குற்றம் இல் வேதம் உடையானை ஆம், அண்டர் கூறுவதே. 5

போர்ப் பணை யானை உரித்த பிரான்; பொறி வாய் அரவம்
சேர்ப்பது, வானத் திரைகடல் சூழ் உலகம்(ம்)இதனைக்
காப்பது காரணம்ஆக, கொண்டான்; கண்டியூர் இருந்த
கூர்ப்பு உடை ஒள்வாள்மழுவனை ஆம், அண்டர் கூறுவதே. 6

அட்டது காலனை; ஆய்ந்தது வேதம் ஆறுஅங்கம்; அன்று
சுட்டது காமனை, கண்அதனாலே; தொடர்ந்து எரியக்
கட்டுஅவைமூன்றும் எரித்த பிரான்; கண்டியூர் இருந்த
குட்டம் முன் வேதப்படையனை ஆம், அண்டர் கூறுவதே. 7

அட்டும் ஒலிநீர், அணி மதியும், மலர்ஆனஎல்லாம்,
இட்டுப் பொதியும் சடைமுடியான், இண்டைமாலை; அம் கைக்
கட்டும் அரவுஅது தான் உடையான்; கண்டியூர் இருந்த—
கொட்டும் பறை உடை—கூத்தனை ஆம், அண்டர் கூறுவதே. 8

மாய்ந்தன, தீவினை; மங்கின நோய்கள் மறுகி விழத்
தேய்ந்தன; பாவம் செறுக்ககில்லா, நம்மை; செற்று அநங்கைக்
காய்ந்த பிரான், கண்டியூர் எம்பிரான், அங்கம்ஆறினையும்
ஆய்ந்த பிரான், அல்லனோ, அடியேனை ஆட்கொண்டவனே? 9

மண்டி மலையை எடுத்து மத்து ஆக்கி அவ் வாசுகியைத்
தண்டி அமரர் கடைந்த கடல்விடம் கண்டுஅருளி
உண்ட பிரான், நஞ்சு ஒளித்த பிரான், அஞ்சி ஓடி நண்ணக்
கண்ட பிரான், அல்லனோ, கண்டியூர் அண்டவானவனே? 10

திருப் பாதிரிப்புலியூர் IV-94 திரு விருத்தம்

ஈன்றாளும்ஆய், எனக்கு எந்தையும்ஆய், உடன்தோன்றினராய்,
மூன்றுஆய் உலகம் படைத்து உகந்தான்; மனத்துள் இருக்க
ஏன்றான்; இமையவர்க்கு அன்பன்; திருப் பாதிரிப்புலியூர்த்
தோன்றாத் துணைஆய் இருந்தனன், தன் அடியோங்களுக்கே. 1

பற்றுஆய் நினைந்திடு, எப்போதும்!—நெஞ்சே!—இந்தப் பாரை முற்றும்
சுற்றுஆய் அலைகடல் மூடினும் கண்டேன், புகல் நமக்கு;
உற்றான், உமையவட்கு அன்பன், திருப் பாதிரிப்புலியூர்
முற்றா முளைமதிக்கண்ணியினான்தன மொய்கழலே. 2

விடையான் விரும்பி என் உள்ளத்து இருந்தான்; இனி நமக்கு இங்கு
அடையா, அவலம்; அருவினை சாரா; நமனை அஞ்சோம்;
புடை ஆர் கமலத்து அயன் போல்பவர் பாதிரிப்புலியூர்
உடையான் அடியார் அடி அடியோங்கட்கு அரியது உண்டே? 3

மாயம்எல்லாம் முற்ற விட்டு, இருள் நீங்க,—மலைமகட்கே
நேயம் நிலாவ இருந்தான்அவன்தன் திருவடிக்கே
தேயம்எல்லாம் நின்று இறைஞ்சும்—திருப் பாதிரிப்புலியூர்
மேய நல்லான் மலர்ப்பாதம் என் சிந்தையுள் நின்றனவே. 4

''வைத்த பொருள் நமக்கு ஆம்'' என்று சொல்லி, மனத்து அடைத்து,
சித்தம் ஒருக்கி, ''சிவாயநம'' என்று இருக்கின்அல்லால்,
மொய்த்த கதிர் மதி போல்வார்அவர் பாதிரிப்புலியூர்
அத்தன் அருள் பெறல் ஆமோ?—அறிவு இலாப் பேதைநெஞ்சே! 5

கருஆய்க் கிடந்து உன் கழலே நினையும் கருத்து உடையேன்;
உருஆய்த் தெரிந்து உன்தன் நாமம் பயின்றேன்,—உனது அருளால்,—
திருவாய் பொலியச் ''சிவாயநம'' என்று நீறு அணிந்தேன்;
தருவாய், சிவகதி நீ!—பாதிரிப்புலியூர் அரனே! 6

எண்ணாது அமரர் இரக்கப் பரவையுள் நஞ்சம் உண்டாய்!
திண் ஆர் அசுரர் திரிபுரம் தீ எழச் செற்றவனே!
பண் ஆர்ந்து அமைந்த பொருள்கள் பயில் பாதிரிப்புலியூர்க்
கண் ஆர் நுதலாய்!—கழல் நம் கருத்தில் உடையனவே. 7

புழுஆய்ப் பிறக்கினும்,—புண்ணியா!—உன் அடி என் மனத்தே
வழுவாது இருக்க வரம் தரவேண்டும்—இவ் வையகத்தே
தொழுவார்க்கு இரங்கி இருந்து அருள்செய் பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்-புனல் கங்கை செஞ்சடைமேல் வைத்த தீவண்ணனே! 8

மண் பாதலம் புக்கு, மால்கடல் மூடி, மற்று ஏழ்உலகும்
விண்பால் திசை கெட்டு, இருசுடர் வீழினும், அஞ்சல், நெஞ்சே!
திண்பால் நமக்கு ஒன்று கண்டோம்; திருப் பாதிரிப்புலியூர்க்
கண் பாவும் நெற்றிக் கடவுள்சுடரான் கழல்இணையே. 9

திருந்தா அமணர்தம் தீநெறிப் பட்டு, திகைத்து, முத்தி
தரும் தாள்இணைக்கே சரணம் புகுந்தேன்; வரை எடுத்த
பொருந்தா அரக்கன் உடல் நெரித்தாய்! பாதிரிப்புலியூர்
இருந்தாய்! அடியேன் இனிப் பிறவாமல் வந்து ஏன்றுகொள்ளே! 10

திரு வீழிமிழலை IV-95 திரு விருத்தம்

வான் சொட்டச்சொட்ட நின்று அட்டும் வளர்மதியோடு அயலே
தேன் சொட்டச்சொட்ட நின்று அட்டும் திருக் கொன்றை சென்னி வைத்தீர்!
மான்பெட்டை நோக்கி மணாளீர்! மணிநீர் மிழலை உள்ளீர்!—
நான் சட்ட உம்மை மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 1

அந்தமும் ஆதியும் ஆகி நின்றீர்! அண்டம் எண்திசையும்
பந்தமும் வீடும் பரப்புகின்றீர்! பசு ஏற்று உகந்தீர்!
வெந்தழல் ஓம்பும் மிழலை உள்ளீர்!—என்னைத் தென்திசைக்கே
உந்திடும்போது மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 2

அலைக்கின்ற நீர், நிலம், காற்று, அனல், அம்பரம், ஆகி நின்றீர்!
கலைக்கன்று சேரும் கரத்தீர்! கலைப்பொருள்ஆகி நின்றீர்!
விலக்கு இன்றி நல்கும் மிழலை உள்ளீர்—மெய்யில் கையொடு கால்
குலைக்கின்று நும்மை மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 3

தீத் தொழிலான் தலை தீயில் இட்டு, செய்த வேள்வி செற்றீர்!
பேய்த்தொழிலாட்டியைப் பெற்றுஉடையீர்! பிடித்துத் திரியும்
வேய்த் தொழிலாளர் மிழலை உள்ளீர்! விக்கி அஞ்சுஎழுத்தும்
ஓத்து ஒழிந்து உம்மை மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 4

தோள் பட்ட நாகமும், சூலமும், சுத்தியும், பத்திமையால்
மேற்பட்ட அந்தணர் வீழியும், என்னையும் வேறு உடையீர்!
நாள் பட்டு வந்து பிறந்தேன், இறக்க, நமன்தமர்தம்
கோள்பட்டு நும்மை மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 5

கண்டியில் பட்ட கழுத்து உடையீர்! கரிகாட்டில் இட்ட
பண்டியில் பட்ட பரிகலத்தீர்! பதிவீழி கொண்டீர்—
உண்டியில், பட்டினி, நோயில், உறக்கத்தில்,—உம்மை,—ஐவர்
கொண்டியில் பட்டு மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 6

தோற்றம் கண்டான் சிரம் ஒன்று கொண்டீர்! தூய வெள்எருது ஒன்று
ஏற்றம் கொண்டீர்! எழில் வீழிமிழலை இருக்கை கொண்டீர்!—
சீற்றம் கொண்டு என்மேல் சிவந்தது ஓர் பாசத்தால் வீசிய வெங்
கூற்றம் கண்டு உம்மை மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 7

சுழிப்பட்ட கங்கையும் திங்களும் சூடிச் சொக்கம் பயின்றீர்!
பழிப்பட்ட பாம்பு அரைப் பற்று உடையீர்! படர் தீப் பருக
விழிப்பட்ட காமனை வீட்டீர்! மிழலை உள்ளீர்!—பிறவிச்-
சுழிப்பட்டு நும்மை மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 8

பிள்ளையின் பட்ட பிறைமுடியீர்! மறை ஓத வல்லீர்!
வெள்ளையில் பட்டது ஓர் நீற்றீர்! விரிநீர் மிழலை உள்ளீர்!—
நள்ளையில் பட்டு ஐவர் நக்கு அரைப்பிக்க நமன்தமர்தம்
கொள்ளையில் பட்டு மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 9

கறுக்கொண்டு அரக்கன் கயிலையைப் பற்றிய கையும் மெய்யும்
நெறுக்கென்று இறச் செற்ற சேவடியால் கூற்றை நீறுசெய்தீர்!
வெறிக் கொன்றைமாலை முடியீர்! விரிநீர் மிழலை உள்ளீர்!—
இறக்கின்று நும்மை மறக்கினும், என்னைக் குறிக்கொண்மினே! 10

திருச் சத்திமுற்றம்

IV-96

திரு விருத்தம்

கோவாய் முடுகி அடுதிறல் கூற்றம் குமைப்பதன்முன்
பூ ஆர் அடிச்சுவடு என்மேல் பொறித்துவை! போக விடில்
மூவா முழுப்பழி மூடும்கண்டாய்—முழங்கும் தழல் கைத்
தேவா! திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 1

காய்ந்தாய், அநங்கன் உடலம் பொடிபட; காலனை முன்
பாய்ந்தாய், உயிர் செக; பாதம் பணிவார்தம் பல்பிறவி
ஆய்ந்துஆய்ந்து அறுப்பாய், அடியேற்கு அருளாய்! உன் அன்பர் சிந்தை
சேர்ந்தாய்—திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 2

பொத்து ஆர் குரம்பை புகுந்து ஐவர் நாளும் புகல் அழிப்ப,
மத்து ஆர் தயிர் போல் மறுகும் என் சிந்தை மறுக்கு ஒழிவி!
அத்தா! அடியேன் அடைக்கலம்கண்டாய்—அமரர்கள்தம்
சித்தா! திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 3

நில்லாக் குரம்பை நிலையாக் கருதி, இந் நீள் நிலத்து ஒன்று
அல்லாக் குழி வீழ்ந்து, அயர்வு உறுவேனை வந்து ஆண்டுகொண்டாய்;
வில் ஏர் புருவத்து உமையாள் கணவா! விடின் கெடுவேன்—
செல்வா! திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 4

கரு உற்று இருந்து உன் கழலே நினைந்தேன்; கருப்புவியில்-
தெருவில் புகுந்தேன்; திகைத்த(அ)டியேனைத் திகைப்பு ஒழிவி!
உருவில்-திகழும் உமையாள் கணவா! விடின் கெடுவேன்—
திருவின் பொலி சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 5

வெம்மை நமன்தமர் மிக்கு விரவி விழுப்பதன்முன்
இம்மை உன் தாள் என்தன் நெஞ்சத்து எழுதிவை! ஈங்கு இகழில்
அம்மை அடியேற்கு அருளுதி என்பது இங்கு ஆர் அறிவார்?—
செம்மை தரு சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 6

விட்டார் புரங்கள் ஒரு நொடி வேவ ஓர் வெங்கணையால்
சுட்டாய்; என் பாசத்தொடர்பு அறுத்து ஆண்டுகொள்!—தும்பி பம்பும்
மட்டு ஆர் குழலி மலைமகள் பூசை மகிழ்ந்துஅருளும்
சிட்டா! திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 7

இகழ்ந்தவன் வேள்வி அழித்திட்டு, இமையோர் பொறை இரப்ப
நிகழ்ந்திட அன்றே விசயமும் கொண்டாய், நீலகண்டா!
புகழ்ந்த அடியேன்தன் புன்மைகள் தீரப் புரிந்து நல்காய்!—
திகழ்ந்த திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 8

தக்கு ஆர்வம் எய்திச் சமண் தவிர்ந்து உன்தன் சரண் புகுந்தேன்;
எக் காதல், எப் பயன், உன் திறம்அல்லால் எனக்கு உளதே?—
மிக்கார் தில்லையுள் விருப்பா! மிக வடமேரு என்னும்
திக்கா! திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 9

பொறித் தேர் அரக்கன் பொருப்பு எடுப்புஉற்றவன் பொன்முடி தோள்
இற, தாள்ஒருவிரல் ஊன்றிட்டு, அலற இரங்கி, ஒள்வாள்
குறித்தே கொடுத்தாய்; கொடியேன் செய் குற்றக் கொடுவினைநோய்
செறுத்தாய்—திருச் சத்திமுற்றத்து உறையும் சிவக்கொழுந்தே! 10

திரு நல்லூர் IV-97 திரு விருத்தம்

''அட்டுமின், இல் பலி!'' என்றுஎன்று அகம் கடைதோறும் வந்து,
மட்டு அவிழும் குழலார் வளை கொள்ளும் வகை என்கொலோ?—
கொட்டிய பாணி எடுத்திட்ட பாதமும் கோள் அரவும்
நட்டம் நின்று ஆடிய நாதர், நல்லூர் இடம்கொண்டவரே. 1

‘‘பெண் இட்டம் பண்டையது அன்று; இவை பெய் பலிக்கு’’ என்று உழல்வார்
நண்ணிட்டு, வந்து, மனை புகுந்தாரும் நல்லூர்அகத்தே
பண் இட்ட பாடலர் ஆடலராய்ப் பற்றி, நோக்கி நின்று,
கண்ணிட்டு, போயிற்றுக் காரணம் உண்டு—கறைக்கண்டரே. 2

பட ஏர் அரவுஅல்குல் பாவை நல்லீர்! பகலே ஒருவர்
இடுவார்இடைப் பலி கொள்பவர் போல வந்து, இல் புகுந்து,
நடவார்; அடிகள் நடம் பயின்று ஆடிய கூத்தர்கொலோ?
வடபால் கயிலையும் தென்பால் நல்லூரும் தம் வாழ் பதியே. 3

செஞ்சுடர்ச் சோதிப் பவளத்திரள் திகழ் முத்து அனைய,
நஞ்சு அணி கண்டன், நல்லூர் உறை நம்பனை, நான் ஒரு கால்
துஞ்சுஇடைக் கண்டு கனவின்தலைத் தொழுதேற்கு அவன்தான்
நெஞ்சுஇடை நின்று அகலான், பலகாலமும் நின்றனனே. 4

வெண்மதி சூடி விளங்க நின்றானை, விண்ணோர்கள் தொழ;
நண் இலயத்தொடு பாடல் அருத நல்லூர்அகத்தே
திண் நிலயம்கொடு நின்றான்; திரி புரம்மூன்று எரித்தான்;
கண்ணுளும் நெஞ்சத்து அகத்துளும் உள, கழல்சேவடியே. 5

தேற்றப்படத் திரு நல்லூர்அகத்தே சிவன் இருந்தால்
தோற்றப்படச் சென்று கண்டுகொள்ளார், தொண்டர், துன்மதியால்;
ஆற்றில் கெடுத்துக் குளத்தினில்-தேடிய ஆதரைப் போல்
காற்றின் கடுத்து உலகுஎல்லாம் திரிதர்வர், காண்பதற்கே. 6

நாள் கொண்ட தாமரைப்பூத் தடம் சூழ்ந்த நல்லூர்அகத்தே
‘‘கீள் கொண்ட கோவணம் கா!’’ என்று சொல்லிக் கிறிபடத் தான்
வாள் கொண்ட நோக்கி மனைவியொடும் அங்கு ஓர் வாணிகனை
ஆட்கொண்ட வார்த்தை உரைக்கும்அன்றோ, இவ் அகலிடமே? 7

அறை மல்கு பைங்கழல் ஆர்க்க நின்றான்; அணி ஆர் சடைமேல்
நறை மல்கு கொன்றைஅம்தார் உடையானும்; நல்லூர்அகத்தே
மறை மல்கு பாடலன் ஆடலன்ஆகிப் பரிசு அழித்தான்—
பிறை மல்கு செஞ்சடை தாழ நின்று ஆடிய பிஞ்ஞகனே. 8

மன்னிய மா மறையோர் மகிழ்ந்து ஏத்த, மருவி என்றும்
துன்னிய தொண்டர்கள் இன்இசை பாடித் தொழுது, நல்லூர்க்
கன்னியர்தாமும் கனவு இடை உன்னிய காதலரை,
அன்னியர் அற்றவர், ‘‘அங்கணனே, அருள் நல்கு!’’ என்பரே. 9

திரு அமர் தாமரை, சீர் வளர் செங்கழுநீர், கொள் நெய்தல்,
குரு அமர் கோங்கம், குரா, மகிழ், சண்பகம், கொன்றை, வன்னி,
மரு அமர் நீள் கொடி மாடம் மலி மறையோர்கள் நல்லூர்
உரு அமர் பாகத்து உமையவள்பாகனை உள்குதுமே. 10

செல் ஏர் கொடியன் சிவன் பெருங்கோயில் சிவபுரமும்
வல்லேன், புகவும்; மதில் சூழ் இலங்கையர் காவலனைக்
கல் ஆர் முடியொடு தோள் இறச் செற்ற கழல்அடியான்,
நல்லூர் இருந்த பிரான் அல்லனோ, நம்மை ஆள்பவனே? 11

திரு ஐயாறு

IV-98

திரு விருத்தம்

அந்தி வட்டத் திங்கள்கண்ணியன், ஐயாறு அமர்ந்து வந்து என்
புந்தி வட்டத்துஇடைப் புக்கு நின்றானையும், பொய் என்பனோ?—
சிந்தி வட்டச்சடைக்கற்றை அலம்பச் சிறிது அலர்ந்த
நந்தி வட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே. 1

பாடகக் கால்; கழல்கால்; பரிதிக் கதிர் உக்க அந்தி
நாடகக் கால்; நங்கைமுன் செங்கண் ஏனத்தின் பின் நடந்த
காடுஅகக் கால்; கணம் கைதொழும் கால்; எம் கணாய் நின்ற கால்;
ஆடகக்கால்—அரிமால் தேர அல்லன் ஐயாற்றனவே. 2

திருக் கச்சி ஏகம்பம்

IV-99

திரு விருத்தம்

ஓதுவித்தாய், முன் அறஉரை; காட்டி அமணரொடே
காதுவித்தாய்; கட்டம், நோய், பிணி, தீர்த்தாய்; கலந்துஅருளிப்
போதுவித்தாய்; நின் பணி பிழைக்கின் புளியம்வளாரால்
மோதுவிப்பாய்; உகப்பாய்; முனிவாய்—கச்சி ஏகம்பனே! 1

எத்தைக்கொடு எத்தகை ஏழை அமணொடு இசைவித்து,—எனை,—
கொத்தைக்கு மூங்கர் வழி காட்டுவித்தென்னக் கோகு செய்தாய்?—
முத்தின்திரளும் பளிங்கினின் சோதியும் மொய் பவளத்-
தொத்தினை ஏய்க்கும் படியாய்! பொழில் கச்சி ஏகம்பனே! 2

மெய் அம்பு கோத்த விசயனொடு அன்று ஒரு வேடுவனாய்ப்
பொய் அம்பு எய்து, ஆவம் அருளிச்செய்தாய்; புரம்மூன்று எரியக்
கை அம்பு எய்தாய்; நுன் கழல்அடி போற்றாக் கயவர் நெஞ்சில்
குய்யம் பெய்தாய்—கொடி மா மதில் சூழ் கச்சி ஏகம்பனே! 3

குறிக்கொண்டு இருந்து செந்தாமரைஆயிரம் வைகல்வைகல்
நெறிப்பட இண்டை புனைகின்ற மாலை நிறை அழிப்பான்,
கறைக்கண்ட! நீ ஒரு பூக் குறைவித்துக் கண் சூல்விப்பதே?—
பிறைத்துண்ட வார்சடையாய்! பெருங் காஞ்சி எம் பிஞ்ஞகனே! 4

உரைக்கும் கழிந்து இங்கு உணர்வு அரியான்; உள்குவார் வினையைக்
கரைக்கும் எனக் கைதொழுவதுஅல்லால், கதிரோர்கள்எல்லாம்,
விரைக் கொள் மலரவன், மால், எண்வசுக்கள், ஏகாதசர்கள்,
இரைக்கும் அமிர்தர்க்கு, அறிய ஒண்ணான்—எங்கள் ஏகம்பனே. 5

கரு உற்ற நாள் முதல்ஆக உன் பாதமே காண்பதற்கு(வ்)
உருகிற்று, என் உள்ளமும்; நானும் கிடந்து அலந்து எய்த்தொழிந்தேன்;
திரு ஒற்றியூரா! திரு ஆலவாயா! திரு ஆரூரா!
ஒரு பற்று இலாமையும் கண்டு இரங்காய்—கச்சி ஏகம்பனே! 6

அரி, அயன், இந்திரன், சந்திராதித்தர், அமரர்எல்லாம்,
உரிய நின் கொற்றக் கடைத்தலையார் உணங்காக் கிடந்தார்;
புரிதரு புன்சடைப் போக முனிவர் புலம்புகின்றார்;—
எரிதரு செஞ்சடை ஏகம்ப!—என்னோ, திருக்குறிப்பே? 7

பாம்பு அரைச் சேர்த்திப் படரும் சடைமுடிப் பால்வண்ணனே!
கூம்பலைச் செய்த கரதலத்து அன்பர்கள் கூடிப் பல்-நாள்
சாம்பலைப் பூசி, தரையில் புரண்டு, ''நின் தாள் சரண்'' என்று
ஏம்பலிப்பார்கட்கு இரங்குகண்டாய்—கச்சி ஏகம்பனே! 8

ஏன்றுகொண்டாய், என்னை; எம்பெருமான்! இனி, ''அல்லம்'' என்னில்,
சான்றுகண்டாய் இவ் உலகம்எல்லாம்; தனியேன் என்று என்னை
ஊன்றி நின்றார் ஐவர்க்கு ஒற்றி வைத்தாய்; பின்னை ஒற்றிஎல்லாம்
சோன்றுகொண்டாய்—கச்சி ஏகம்பம் மேய சுடர்வண்ணனே! 9

உந்தி நின்றார், உன்தன் ஓலக்கச் சூளைகள்; வாய்தல் பற்றித்
துன்றி நின்றார், தொல்லைவானவர்ஈட்டம்; பணி அறிவான்
வந்து நின்றார், அயனும் திருமாலும்;—மதில் கச்சியாய்!—
இந்த நின்றோம் இனி எங்ஙனமோ, வந்து இறைஞ்சுவதே? 10

திரு இன்னம்பர் IV-100 திரு விருத்தம்

மன்னும் மலைமகள் கையால் வருடின; மாமறைகள்
சொன்ன துறைதொறும் தூப் பொருள் ஆயின; தூக் கமலத்து
அன்ன வடிவின; அன்பு உடைத் தொண்டர்க்கு அமுது அருத்தி
இன்னல் களைவன—இன்னம்பரான்தன் இணைஅடியே. 1

பைதல்பிணக்குழைக் காளி வெங்கோபம் பங்கப்படுப்பான்
செய்தற்கு அரிய திருநடம் செய்தன; சீர் மறையோன்
உய்தல்பொருட்டு வெங் கூற்றை உதைத்தன; உம்பர்க்கு எல்லாம்
எய்தற்கு அரியன—இன்னம்பரான்தன் இணைஅடியே. 2

சுணங்கு நின்று ஆர் கொங்கையாள் உமை சூடின; தூ மலரால்
வணங்கி நின்று உம்பர்கள் வாழ்த்தின; மன்னும் மறைகள் தம்மில்
பிணங்கி நின்று இன்ன(அ)ளவு என்று அறியாதன; பேய்க்கணத்தோடு
இணங்கி நின்று ஆடின—இன்னம்பரான்தன் இணைஅடியே. 3

ஆறு ஒன்றிய சமயங்களின் அவ்அவர்க்கு அப் பொருள்கள்
வேறு ஒன்று இலாதன; விண்ணோர் மதிப்பன; மிக்கு உவமன்
மாறு ஒன்று இலாதன; மண்ணொடு விண்ணகம் மாய்ந்திடினும்
ஈறு ஒன்று இலாதன—இன்னம்பரான்தன் இணைஅடியே. 4

அரக்கர்தம் முப்புரம் அம்பு ஒன்றினால் அடல் அங்கியின்வாய்க்
கரக்க முன் வைதிகத்தேர்மிசை நின்றன; கட்டுஉருவம்
பரக்க வெங்கான்இடை வேடுஉரு ஆயின; பல்பதிதோறு
இரக்க நடந்தன—இன்னம்பரான்தன் இணைஅடியே. 5

கீண்டும் கிளர்ந்தும் பொன் கேழல் முன் தேடின; கேடு படா
ஆண்டும் பலபலஊழியும் ஆயின; ஆரணத்தின்
வேண்டும் பொருள்கள் விளங்க நின்று ஆடின; மேவு சிலம்பு
ஈண்டும் கழலின—இன்னம்பரான்தன் இணைஅடியே. 6

போற்றும் தகையன; பொல்லா முயலகன் கோபப் புன்மை
ஆற்றும் தகையன; ஆறுசமயத்தவர்அவரைத்
தேற்றும் தகையன; தேறிய தொண்டரைச் செந்நெறிக்கே
ஏற்றும் தகையன—இன்னம்பரான்தன் இணைஅடியே. 7

பயம், புன்மை, சேர்தரு பாவம், தவிர்ப்பன; பார்ப்பதிதன்
குயம் பொன்மை மா மலர்ஆகக் குலாவின; ''கூட ஒண்ணாச்
சயம்பு'' என்றே, ''தகு தாணு'' என்றே, சதுர்வேதங்கள் நின்று
இயம்பும் கழலின—இன்னம்பரான்தன் இணைஅடியே. 8

அயன், நெடுமால், இந்திரன், சந்திராதித்தர், அமரர்எல்லாம்
''சயசய'' என்று முப்போதும் பணிவன; தண்கடல் சூழ்
வியல்நிலம் முற்றுக்கும் விண்ணுக்கும் நாகர் வியல்நகர்க்கும்
இயபரம் ஆவன—இன்னம்பரான்தன் இணைஅடியே. 9

தருக்கிய தக்கன்தன் வேள்வி தகர்த்தன; தாமரைப்போது,
உருக்கிய செம்பொன், உவமன் இலாதன; ஒண் கயிலை
நெருக்கிய வாள் அரக்கன் தலைபத்தும் நெரித்து, அவன்தன்
இருக்கு இயல்புஆயின—இன்னம்பரான்தன் இணைஅடியே. 10

திரு ஆரூர் IV-101 திரு விருத்தம்

குலம் பலம் பாவரு குண்டர்முன்னே நமக்கு உண்டுகொலோ—
அலம்பு அலம்பா வரு தண்புனல் ஆரூர் அவிர்சடையான்,
சிலம்பு அலம்பா வரு சேவடியான், திரு மூலட்டானம்
புலம்பு அலம்பா வரு தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 1

மற்று இடம் இன்றி மனை துறந்து அல் உணா வல் அமணர்
சொல்-திடம் என்று துரிசுபட்டேனுக்கும் உண்டுகொலோ—
வில்-திடம் வாங்கி, விசயனொடு அன்று ஒரு வேடுவனாய்,
புற்று இடம்கொண்டான்தன் தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 2

ஒரு வடிவு இன்றி நின்று உண் குண்டர்முன் நமக்கு உண்டுகொலோ—
செரு வடி வெஞ்சிலையால் புரம் அட்டவன், சென்று அடையாத்
திரு உடையான், திரு ஆரூர்த் திருமூலட்டானன், செங்கண்
பொரு விடையான், அடித்தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 3

மாசினை ஏறிய மேனியர், வன்கண்ணர், மொண்ணரை விட்டு
ஈசனையே நினைந்து ஏசறுவேனுக்கும் உண்டுகொலோ—
தேசனை, ஆரூர்த் திருமூலட்டானனை, சிந்தைசெய்து
பூசனைப் பூசுரர்தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 4

அருந்தும்பொழுது உரையாடா அமணர் திறம் அகன்று,
வருந்தி நினைந்து, ''அரனே!'' என்று வாழ்த்துவேற்கு உண்டுகொலோ—
திருந்திய மா மதில் ஆரூர்த் திருமூலட்டானனுக்குப்
பொருந்தும் தவம் உடைத் தொண்டர்க்குத் தொண்டர்ஆம் புண்ணியமே? 5

வீங்கிய தோள்களும் தாள்களும்ஆய் நின்று, வெற்று அரையே
மூங்கைகள் போல் உண்ணும் மூடர்முன்னே நமக்கு உண்டுகொலோ—
தேம் கமழ் சோலைத் தென்ஆரூர்த் திருமூலட்டானன், செய்ய-
பூங்கழலான், அடித்தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 6

பண்ணிய சாத்திரப் பேய்கள் பறி தலைக் குண்டரை விட்டு
எண் இல் புகழ் ஈசன்தன் அருள் பெற்றேற்கும் உண்டுகொலோ—
திண்ணிய மா மதில் ஆரூர்த் திருமூலட்டானன், எங்கள்
புண்ணியன்தன் அடித்தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 7

கரப்பர்கள், மெய்யை; ''தலை பறிக்கச் சுகம்'' என்னும் குண்டர்
உரைப்பன கேளாது, இங்கு உய்யப் போந்தேனுக்கும் உண்டுகொலோ—
திருப் பொலி ஆரூர்த் திருமூலட்டானன், திருக் கயிலைப்-
பொருப்பன், விருப்பு அமர் தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 8

கையில் இடு சோறு நின்று உண்ணும் காதல் அமணரை விட்டு,
உய்யும் நெறி கண்டு, இங்கு உய்யப் போந்தேனுக்கும் உண்டுகொலோ—
ஐயன், அணி வயல் ஆரூர்த் திருமூலட்டானனுக்குப்
பொய் அன்பு இலா அடித்தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 9

குற்றம் உடைய அமணர் திறம்அது கை அகன்றிட்டு,
உற்ற கருமம் செய்து, உய்யப் போந்தேனுக்கும் உண்டுகொலோ—
மல் பொலி தோளான், இராவணன்தன் வலி வாட்டுவித்த
பொன்கழலான், அடித்தொண்டர்க்குத் தொண்டர் ஆம் புண்ணியமே? 10

திரு ஆரூர் IV-102 திரு விருத்தம்

வேம்பினைப் பேசி, விடக்கினை ஓம்பி, வினை பெருக்கி,
தூம்பினைத் தூர்த்து, அங்கு ஓர் சுற்றம் துணை என்று இருத்திர், தொண்டீர்!
ஆம்பல்அம்பூம் பொய்கை ஆரூர் அமர்ந்தான் அடிநிழல்கீழ்,
சாம்பலைப் பூசி, சலம் இன்றி, தொண்டுபட்டு உய்ம்மின்களே! 1

ஆராய்ந்து, அடித்தொண்டர் ஆணிப்பொன், ஆரூர் அகத்து அடக்கிப்
பார் ஊர் பரப்பத் தம் பங்குனிஉத்தரம் பால்படுத்தான்,
நார் ஊர் நறுமலர்-நாதன், அடித்தொண்டன்நம்பிநந்தி
நீரால்-திருவிளக்கு இட்டமை நீள் நாடு அறியும் அன்றே! 2

பூம் படிமக்கலம் பொன் படிமக்கலம் என்று இவற்றால்
ஆம் படிமக் கலம்ஆகிலும் ஆரூர் இனிது அமர்ந்தார்-
தாம் படிமக் கலம் வேண்டுவரேல்,-தமிழ்மாலைகளால் 3
நாம் படிமக்கலம் செய்து தொழுதும், மட நெஞ்சமே!

துடிக்கின்ற பாம்பு அரை ஆர்த்து, துளங்கா மதி அணிந்து,
முடித் தொண்டர்ஆகி முனிவர் பணி செய்வதேயும் அன்றி,
பொடிக்கொண்டு பூசிப் புகும் தொண்டர் பாதம் பொறுத்த பொற்பால் 4
அடித்தொண்டன் நந்திஎன்பான் உளன், ஆரூர் அமுதினுக்கே.

கரும்பு பிடித்தவர் காயப்பட்டார்; அங்கு ஓர் கோடலியால்
இரும்பு பிடித்தவர் இன்புஉறப்பட்டார்; இவர்கள் நிற்க,
அரும்பு அவிழ் தண்பொழில் சூழ் அணி ஆரூர் அமர்ந்த பெம்மான் 5
விரும்பு மனத்தினை, ''யாது ஒன்று?'' நான் உன்னை வேண்டுவனே.

கொடி, கொள் விதானம், கவரி, பறை, சங்கம், கைவிளக்கோடு,
இடிவு இல் பெருஞ் செல்வம் எய்துவர்; எய்தியும் ஊனம் இல்லா
அடிகளும் ஆரூர் அகத்தினர்ஆயினும், அம் தவளப்- 6
பொடி கொண்டு அணிவார்க்கு இருள் ஒக்கும், நந்தி புறப்படினே.

சங்கு ஒலிப்பித்திடுமின், சிறுகாலைத் தடவு அழலில்
குங்கிலியப்புகைக்கூட்டு என்றும் காட்டி! இருபதுதோள்
அங்கு உலம் வைத்தவன் செங்குருதிப்புனல் ஓட அஞ் ஞான்று 7
அங்குலி வைத்தான் அடித்தாமரை என்னை ஆண்டனவே.

திரு நாகைக்காரோணம் IV-103 திரு விருத்தம்

வடிவு உடை மாமலைமங்கை பங்கா! கங்கை வார்சடையாய்!
கடி கமழ் சோலை சுலவு கடல் நாகைக்காரோணனே!—
பிடி மதவாரணம் பேணும் துரகம் நிற்க, பெரிய
இடி குரல் வெள்எருது ஏறும்இது என்னைகொல்? எம் இறையே! 1

கற்றார் பயில் கடல் நாகைக்காரோணத்து எம் கண்ணுதலே!
வில்-தாங்கிய கரம் வேல்நெடுங்கண்ணி வியன்கரமே;
நல்-தாள் நெடுஞ் சிலை நாண் வலித்த(க்) கரம் நின் கரமே;
செற்றார் புரம் செற்ற சேவகம் என்னைகொல்? செப்புமினே! 2

தூ மென்மலர்க்கணை கோத்துத் தீவேள்வி தொழில்படுத்த
காமன் பொடிபடக் காய்ந்த கடல் நாகைக்காரோண! நின்
நாமம் பரவி, நமச்சிவாய என்னும் அஞ்சுஎழுத்தும்
சாம் அன்று உரைக்கத் தருதிகண்டாய், எங்கள் சங்கரனே! 3

பழிவழி ஓடிய பாவிப் பறி தலைக் குண்டர்தங்கள்
மொழிவழி ஓடி முடிவேன்; முடியாமைக் காத்துக்கொண்டாய்;
கழிவழி ஓதம் உலவு கடல் நாகைக்காரோண! என்
வழிவழி ஆள்ஆகும் வண்ணம் அருள், எங்கள் வானவனே! 4

செந்துவர்வாய்க் கருங்கண்இணை வெண்நகைத் தேமொழியார்
வந்து, வலம்செய்து, மா நடம்ஆட, மலிந்த செல்வக்
கந்தம் மலி பொழில் சூழ் கடல் நாகைக்காரோணம் என்றும்
சிந்தைசெய்வாரைப் பிரியாது இருக்கும், திருமங்கையே. 5

பனை புரை கைம் மதயானை உரித்த பரஞ்சுடரே!
கனைகடல் சூழ்தரு நாகைக்காரோணத்து எம் கண்ணுதலே!—
மனை துறந்து அல் உணு வல் அமண்குண்டர் மயக்கை நீக்கி
எனை நினைந்து ஆட்கொண்டாய்க்கு என், இனி யான் செயும் இச்சைகளே? 6

சீர் மலி செல்வம் பெரிது உடைய செம்பொன் மா மலையே!
கார் மலி சோலை சுலவு கடல் நாகைக்காரோணனே!—
வார் மலி மென்முலையார் பலி வந்து இடச் சென்று இரந்து,
ஊர் மலி பிச்சை கொண்டு உண்பது மாதிமையோ? உரையே! 7

வங்கம் மலி கடல் நாகைக்காரோணத்து எம் வானவனே!
எங்கள் பெருமான்! ஓர் விண்ணப்பம் உண்டு; அது கேட்டுஅருளீர்:
கங்கை சடையுள் கரந்தாய்; அக் கள்ளத்தை மெள்ள உமை-
நங்கை அறியின் பொல்லாதுகண்டாய், எங்கள் நாயகனே! 8

''கருந்தடங் கண்ணியும் தானும் கடல் நாகைக்காரோணத்தான்
இருந்த திருமலை'' என்று இறைஞ்சாது அன்று எடுக்கல்உற்றான்
பெருந் தலைபத்தும் இருபதுதோளும் பிதிர்ந்து அலற
இருந்து அருளிச்செய்ததே; மற்றுச் செய்திலன்— எம் இறையே. 9

திரு அதிகைவீரட்டானம் IV-104 திரு விருத்தம்

மாசு இல் ஒள்வாள் போல் மறியும் மணிநீர்த் திரைத்தொகுதி
ஊசலை ஆடி அங்கு ஒண் சிறை அன்னம் உறங்கல்உற்றால்,
பாசடை நீலம் பருகிய வண்டு பண் பாடல் கண்டு,
வீசும் கெடில வடகரைத்தே—எந்தை வீரட்டமே. 1

பைங்கால்-தவளை பறை கொட்ட, பாசிலை நீர்ப் படுகர்
அம் கால் குவளை மெல் ஆவி உயிர்ப்ப, அருகு உலவும்
செங்கால் குருகுஇவை சேரும் செறி கெடிலக் கரைத்தே—
வெங் கால் குரு சிலை வீரன் அருள் வைத்த வீரட்டமே. 2

அம் மலர்க்கண்ணியர் அஞ்சனம்,—செந்துவர்வாய் இளையார்—
வெம் முலைச் சாந்தம், விலை பெறு மாலை, எடுத்தவர்கள்,
தம் மருங்கிற்கு இரங்கார், தடந் தோள் மெலியக் குடைவார்
விம்மு புனல் கெடிலக் கரைத்தே—எந்தை வீரட்டமே. 3

மீன் உடைத் தண்புனல் வீரட்டரே! நும்மை வேண்டுகின்றது
யான் உடைச் சில்குறை ஒன்று உளதால்: நறுந்தண்எருக்கின்
தேன் உடைக் கொன்றைச் சடை உடைக் கங்கைத் திரை தவழும்
கூன் உடைத் திங்கள்குழவி எப்போதும் குறிக்கொண்மினே! 4

ஆர் அட்டதேனும் இரந்து, உண்டு, அகம்அகவன் திரிந்து,
வேர் அட்ட, நிற்பித்திடுகின்றதால்—விரிநீர்ப் பரவைச்
சூர் அட்ட வேலவன் தாதையை, சூழ் வயல் ஆர் அதிகை-
வீரட்டத்தானை, விரும்பா அரும்பாவவேதனையே. 5

படர் பொன்சடையும், பகுவாய் அரவும், பனிமதியும்,
சுடலைப் பொடியும், எல்லாம் உளவே; அவர் தூய தெண்நீர்க்
கெடிலக் கரைத் திரு வீரட்டர் ஆவர்; கெட்டேன்! அடைந்தார்
நடலைக்கு நல்-துணை ஆகும்கண்டீர், அவர் நாமங்களே. 6

காளம் கடந்தது ஓர் கண்டத்தர்ஆகிக் கண் ஆர் கெடில
நாள்அங்கடிக்கு ஓர் நகரமும், மாதிற்கு நன்கு இசைந்த
தாளங்கள் கொண்டும், குழல் கொண்டும், யாழ் கொண்டும், தாம் அங்ஙனே
வேடங்கள் கொண்டும், விசும்பு செல்வார்அவர்—வீரட்டரே. 7

திருப் புகலூர் IV-105 திரு விருத்தம்

தன்னைச் சரண் என்று தாள் அடைந்தேன்; தன் அடி அடைய,
புன்னைப்பொழில் புகலூர் அண்ணல் செய்வன கேண்மின்களோ!
என்னைப் பிறப்பு அறுத்து, என் வினை கட்டுஅறுத்து, ஏழ்நரகத்து
என்னைக் கிடக்கல் ஒட்டான், சிவலோகத்து இருத்திடுமே. 1

பொன்னை வகுத்தன்ன மேனியனே! புணர் மென்முலையாள்
தன்னை வகுத்தன்ன பாகத்தனே, தமியேற்கு இரங்காய்!
புன்னைமலர்த்தலை வண்டு உறங்கும் புகலூர்க்கு அரசே!
என்னை வகுத்திலையேல், இடும்பைக்கு இடம் யாது? சொல்லே! 2

பொன் அளவு ஆர் சடைக் கொன்றையினாய்! புகலூர்க்கு அரசே!
மன் உள தேவர்கள் தேடும் மருந்தே! வலஞ்சுழியாய்!—
என் அளவே, உனக்கு ஆட்பட்டு இடைக்கலத்தே கிடப்பார்!
உன் அளவே, எனக்கு ஒன்றும் இரங்காத உத்தமனே! 3

ஓணப் பிரானும், ஒளிர் மா மலர்மிசை உத்தமனும்,
காணப் பராவியும் காண்கின்றிலர்; கரம் நால்-ஐந்து உடைத்
தோள் நப்பிரானை வலி தொலைத்தோன், தொல்லைநீர்ப் புகலூர்க்
கோணப்பிரானைக் குறுக, குறுகா, கொடுவினையே. 4

திருக் கழிப்பாலை IV-106 திரு விருத்தம்

நெய்தல் குருகு தன் பிள்ளை என்று எண்ணி நெருங்கிச் சென்று,
கைதைமடல் புல்கு தென்கழிப்பாலைஅதின் உறைவாய்!
பைதல்பிறையொடு பாம்பு உடன்வைத்த பரிசு அறியோம்;
எய்தப்பெறின் இரங்காதுகண்டாய்—நம் இறையவனே! 1

பரு மா மணியும் பவளம் முத்தும் பரந்து உந்தி வரை
பொரு மால் கரைமேல்-திரை கொணர்ந்து ஏற்றப் பொலிந்து இலங்கும்
கரு மா மிடறு உடைக் கண்டன், எம்மான்—கழிப்பாலை எந்தை,
பெருமான்அவன், என்னை ஆள்உடையான், இப் பெரு நிலத்தே. 2

நாள்பட்டு இருந்து இன்பம் எய்தல்உற்று, இங்கு நமன்தமரால்
கோட்பட்டு ஒழிவதன் முந்துஉறவே, குளிர் ஆர் தடத்துத்
தாள் பட்ட தாமரைப் பொய்கை அம் தண் கழிப்பாலை அண்ணற்கு
ஆட்பட்டொழிந்தம் அன்றே, வல்லம்ஆய் இவ் அகலிடத்தே! 3

திருக் கடவூர் IV-107 திரு விருத்தம்

மருள்-துயர் தீர அன்று அர்ச்சித்த மாணிமார்க்கண்டேயற்குஆய்—
இருட்டிய மேனி, வளைவாள்எயிற்று, எரி போலும் குஞ்சி,
சுருட்டிய நாவில்—வெங் கூற்றம் பதைப்ப உதைத்து உங்ஙனே
உருட்டிய சேவடியான்—கடவூர் உறை உத்தமனே. 1

பதத்து எழு மந்திரம் அஞ்சுஎழுத்து ஓதிப் பரிவினொடும்
இதத்து எழு மாணிதன் இன்உயிர் உண்ண வெகுண்டு அடர்த்த
கதத்து எழு காலனைக் கண் குருதிப்புனல்ஆறு ஒழுக
உதைத்து எழு சேவடியான்—கடவூர் உறை உத்தமனே. 2

கரப்புஉறு சிந்தையர் காண்டற்கு அரியவன்; காமனையும்
நெருப்பு உமிழ் கண்ணினன்; நீள்புனல் கங்கையும், பொங்கு அரவும்,
பரப்பிய செஞ்சடைப் பால்வண்ணன்; காலனைப் பண்டு ஒரு கால்
உரப்பிய சேவடியான்—கடவூர் உறை உத்தமனே. 3

மறி(த்) திகழ் கையினன்; வானவர்கோனை மனம் மகிழ்ந்து
குறித்து எழு மாணிதன் ஆர்உயிர் கொள்வான் கொதித்த சிந்தை,
கறுத்து எழு மூஇலைவேல் உடை, காலனைத் தான் அலற
உறுக்கிய சேவடியான்—கடவூர் உறை உத்தமனே. 4

குழை(த்) திகழ் காதினன்; வானவர்கோனைக் குளிர்ந்து எழுந்து
பழக்கமொடு அர்ச்சித்த மாணிதன் ஆர்உயிர் கொள்ள வந்த,
தழல் பொதி மூஇலைவேல் உடை, காலனைத் தான் அலற
உழக்கிய சேவடியான்—கடவூர் உறை உத்தமனே. 5

பாலனுக்குஆய் அன்று பாற்கடல் ஈந்து, பணைத்து எழுந்த
ஆலினின்கீழ் இருந்து ஆரணம் ஓதி, அரு முனிக்குஆய்,—
சூலமும் பாசமும் கொண்டு தொடர்ந்து அடர்ந்து ஓடி வந்த—
காலனைக் காய்ந்த பிரான்—கடவூர் உறை உத்தமனே. 6

படர்சடைக் கொன்றையும், பன்னகமாலை, பணி கயிரு
உடைதலை கோத்து, உழல் மேனியன்; உண்பலிக்கு என்று உழல்வோன்;
சுடர் பொதி மூஇலைவேல் உடைக் காலனைத் துண்டம்அதா
உடறிய சேவடியான்—கடவூர் உறை உத்தமனே. 7

வெண்தலைமாலையும், கங்கை, கரோடி, விரிசடைமேல்
பெண்டு அணி நாயகன்; பேய் உகந்து ஆடும் பெருந்தகையான்;
கண் தனி நெற்றியன்; காலனைக் காய்ந்து, கடலின் விடம்
உண்டு அருள்செய்த பிரான்—கடவூர் உறை உத்தமனே. 8

கேழல்அதுஆகிக் கிளறிய கேசவன் காண்பு அரிதுஆய்,
வாழி நல் மா மலர்க்கண் இடந்து இட்ட அம் மால்அவற்கு அன்று
ஆழியும் ஈந்து(வ்), அடு திறல் காலனை அன்று அடர்த்து(வ்),
ஊழியும் ஆய பிரான்—கடவூர் உறை உத்தமனே. 9

தேன் திகழ் கொன்றையும், கூவிளமாலை, திருமுடிமேல்
ஆன்திகழ்ஐந்து உகந்து ஆடும் பிரான்; மலை ஆர்த்து எடுத்த
கூன் திகழ் வாள் அரக்கன் முடிபத்தும் குலைந்து விழ
ஊன்றிய சேவடியான்—கடவூர் உறை உத்தமனே. 10

திரு மாற்பேறு IV-108 திரு விருத்தம்

மாணிக்கு உயிர் பெறக் கூற்றை உதைத்தன; மாவலிபால்
காணிக்கு இரந்தவன் காண்டற்கு அரியன; கண்ட தொண்டர்
பேணிக் கிடந்து பரவப்படுவன; பேர்த்தும் அஃதே;
மாணிக்கம் ஆவன—மாற்பேறு உடையான் மலர்அடியே. 1

கருடத் தனிப்பாகன் காண்டற்கு அரியன; காதல் செய்யில்
குருடர்க்கு முன்னே குடிகொண்டு இருப்பன; கோலம் மல்கும்
செருடக்கடிமலர்ச் செல்வி தன் செங்கமலக்கரத்தால்
வருடச் சிவப்பன—மாற்பேறு உடையான் மலர்அடியே. 2

IV-109

திருக் கடந்தைத் தூங்கானைமாடம் திரு விருத்தம்

பொன் ஆர் திருவடிக்கு ஒன்று உண்டு, விண்ணப்பம்: போற்றிசெய்யும்
என் ஆவி காப்பதற்கு இச்சை உண்டேல், இருங் கூற்று அகல
மின் ஆரும் மூஇலைச்சூலம் என்மேல் பொறி—மேவு கொண்டல்
துன் ஆர் கடந்தையுள்-தூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே! 1

''ஆவா! சிறுதொண்டன் என் நினைந்தான்!'' என்று அரும் பிணிநோய்
காவாது ஒழியின் கலக்கும், உன்மேல் பழி; காதல் செய்வார்
தேவா! திருவடி நீறு என்னைப் பூசு—செந்தாமரையின்
பூ ஆர் கடந்தையுள்-தூங்கானைமாடத்து எம் புண்ணியனே! 2

கடவும் திகிரி கடவாது ஒழியக் கயிலை உற்ருன்
படவும் திருவிரல்ஒன்று வைத்தாய்; பனிமால்வரை போல்
இடபம் பொறித்து என்னை ஏன்றுகொள்ளாய்—இருஞ் சோலை திங்கள்
தடவும் கடந்தையுள்-தூங்கானைமாடத்து எம் தத்துவனே! 3

‘‘பசுபதி’’ IV-110 திரு விருத்தம்

சாம்பலைப் பூசித் தரையில் புரண்டு, நின் தாள் பரவி,
ஏம்பலிப்பார்கட்கு இரங்குகண்டாய்—இருங் கங்கை என்னும்
காம்பு அலைக்கும் பணைத்தோளி கதிர்ப் பூண் வனமுலைமேல் 1
பாம்பு அலைக்கும் சடையாய்! எம்மை ஆளும் பசுபதியே!

உடம்பைத் தொலைவித்து உன் பாதம் தலை வைத்த உத்தமர்கள்
இடும்பைப் படாமல் இரங்குகண்டாய்—இருள் ஓடச் செந்தீ
அடும்பு ஒத்து அனைய அழல்மழுவா! அழலே உமிழும் 2
படம் பொத்து அரவு அரையாய்! எம்மை ஆளும் பசுபதியே!

தாரித்திரம் தவிரா அடியார் தடுமாற்றம் என்னும்
மூரித் திரைப்பெளவம் நீக்குகண்டாய்—முன்னைநாள் ஒரு கால்
வேரித் தண் பூஞ் சுடர் ஐங்கணை வேள் வெந்து வீழச் செந்தீப் 3
பாரித்த கண் உடையாய்! எம்மை ஆளும் பசுபதியே!

ஒருவரைத் தஞ்சம் என்று எண்ணாது உன் பாதம் இறைஞ்சுகின்றார்
அருவினைச் சுற்றம் அகல்விகண்டாய்—அண்டமே அளவும்
பெருவரைக்குன்றம் பிளிறப் பிளந்து, வேய்த்தோளி அஞ்சப் 4
பருவரைத் தோல் உரித்தாய்! எம்மை ஆளும் பசுபதியே!

இடுக்கு ஒன்றும் இன்றி, எஞ்சாமை உன் பாதம் இறைஞ்சுகின்றார்க்கு
அடர்க்கின்ற நோயை விலக்குகண்டாய்—அண்டம் எண்திசையும்
சுடர்த் திங்கள் சூடி, சுழல் கங்கையோடும் சுரும்பு துன்றி, 5
படர்க்கொண்ட செஞ்சடையாய்! எம்மை ஆளும் பசுபதியே!

அடலைக்கடல் கழிவான் நின் அடிஇணையே அடைந்தார்
நடலைப் படாமை விலக்குகண்டாய்—நறுங்கொன்றை, திங்கள்,
சுடலைப் பொடிச்-சுண்ணம், மாசுணம், சூளாமணி, கிடந்து 6
படரச் சுடர் மகுடா! எம்மை ஆளும் பசுபதியே!

துறவித்தொழிலே புரிந்து உன் சுரும்பு அடியே தொழுவார்
மறவித்தொழில்அது மாற்றுகண்டாய்—மதில்மூன்று உடைய
அறவைத்தொழில் புரிந்து அந்தரத்தே செல்லும் மந்திரத்தேர்ப்- 7
பறவைப்புரம் எரித்தாய்! எம்மை ஆளும் பசுபதியே!

சித்தத்து உருகி, ‘‘சிவன், எம்பிரான்’’ என்று சிந்தையுள்ளே
பித்துப் பெருகப் பிதற்றுகின்றார் பிணி தீர்த்து அருளாய்—
மத்தத்து அரக்கன் இருபதுதோளும் முடியும் எல்லாம் 8
பத்து உற்று உற நெரித்தாய்! எம்மை ஆளும் பசுபதியே!

‘‘சரக்கறை’’ IV-111 திரு விருத்தம்

விடையும் விடைப் பெரும் பாகா! என் விண்ணப்பம்: வெம்மழுவாள்-
படையும், படைஆய் நிரைத்த பல்பூதமும், பாய் புலித்தோல்-
உடையும், முடைத்தலைமாலையும், மாலைப் பிறை ஒதுங்கும் 1
சடையும், இருக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே!

விஞ்சத் தடவரை வெற்பா! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
சங்கக் கலனும், சரி கோவணமும், தமருகமும்,
அந்திப் பிறையும், அனல் வாய் அரவும், விரவி எல்லாம்
சந்தித்து இருக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே! 2

வீந்தார்தலைகலன் ஏந்தீ! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
சாந்து ஆய வெந்ததவள-வெண்நீறும், தகுணிச்சமும்,
பூந்தாமரைமேனி, புள்ளிஉழை-மான்அதள், புலித்தோல்,
தாம்தாம் இருக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே! 3

வெஞ்சமர் வேழத்து உரியாய்! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
வஞ்சமா வந்த வருபுனல்கங்கையும், வான்மதியும்,
நஞ்சம் மா நாகம், நகுசிரமாலை, நகுவெண்தலை,
தஞ்சமா வாழும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே! 4

வேலைக்-கடல்நஞ்சம் உண்டாய்! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
காலற் கடந்தான் இடம் கயிலாயமும், காமர் கொன்றை,
மாலைப் பிறையும், மணி வாய் அரவும், விரவி எல்லாம்
சாலக் கிடக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே! 5

வீழிட்ட கொன்றைஅம்தாராய்! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
சூழ்இட்டு இருக்கும் நல் சூளாமணியும், சுடலை நீறும்,
ஏழ் இட்டு இருக்கும் நல் அக்கும், அரவும், என்பு, ஆமைஓடும்,
தாழ்இட்டு இருக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே! 6

விண்டார் புரம்மூன்றும் எய்தாய்! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
தொண்டுஆடிய தொண்டு அடிப்பொடி-நீறும், தொழுது பாதம்
கண்டார்கள் கண்டிருக்கும் கயிலாயமும், காமர் கொன்றைத்-
தண்தார் இருக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே! 7

விடு பட்டி ஏறு உகந்து ஏறீ! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
கொடுகொட்டி, கொக்கரை, தக்கை, குழல், தாளம், வீணை, மொந்தை,
வடு விட்ட கொன்றையும், வன்னியும், மத்தமும், வாள்அரவும்,
தடுகுட்டம் ஆடும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே! 8

வெண்திரைக் கங்கை விகிர்தா! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
கண்டிகை பூண்டு, கடிசூத்திரம்மேல் கபாலவடம்,
குண்டிகை, கொக்கரை, கொன்றை, பிறை, குறள்பூதப்படை, 9
தண்டி வைத்திட்ட சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே!

வேதித்த வெம்மழுஆளீ! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
சோதித் திருக்கும், நல் சூளாமணியும், சுடலை நீறும்,
பாதிப்பிறையும், படுதலைத்துண்டமும், பாய் புலித்தோல், 10
சாதித்து இருக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே!

விவந்து ஆடிய கழல் எந்தாய்! என் விண்ணப்பம்: மேல் இலங்கு
தவந்தான் எடுக்கத் தலைபத்து இறுத்தனை; தாழ் புலித்தோல்
சிவந்து ஆடிய பொடி-நீறும், சிரமாலை சூடி நின்று 11
தவம்தான் இருக்கும் சரக்குஅறையோ, என் தனி நெஞ்சமே!

IV-112

தனி திரு விருத்தம்

வெள்ளிக் குழைத்துணி போலும் கபாலத்தன்; வீழ்ந்து இலங்கு
வெள்ளிப் புரி அன்ன வெண்புரிநூலன்—விரிசடைமேல்
வெள்ளித் தகடு அன்ன வெண்பிறை சூடி, வெள்ளென்பு அணிந்து,
வெள்ளிப்பொடிப் பவளப்புறம் பூசிய வேதியனே. 1

உடலைத் துறந்து உலகுஏழும் கடந்து உலவாத துன்பக்-
கடலைக் கடந்து, உய்யப் போயிடல் ஆகும்; கனகவண்ணப்
படலைச் சடை, பரவைத் திரைக் கங்கை, பனிப்பிறை, வெண்
சுடலைப் பொடி, கடவுட்கு அடிமைக்கண்-துணி, நெஞ்சமே! 2

முன்னே உரைத்தால் முகமனே ஒக்கும்; இம் மூஉலகுக்கு
அன்னையும் அத்தனும் ஆவாய்—அழல்வணா!—நீ அலையோ?
உன்னை நினைந்தே கழியும், என் ஆவி; கழிந்ததன் பின்
என்னை மறக்கப்பெறாய்; எம்பிரான்! உன்னை வேண்டியதே. 3

நின்னை எப்போதும் நினையல் ஒட்டாய், நீ; நினையப் புகில்
பின்னை அப்போதே மறப்பித்துப் பேர்த்து ஒன்று நாடுவித்தி;
உன்னை எப்போதும் மறந்திட்டு உனக்கு இனிதா இருக்கும்
என்னை ஒப்பார் உளரோ? சொல்லு, வாழி!—இறையவனே! 4

முழுத்தழல்மேனித் தவளப்பொடியன், கனகக்குன்றத்து
எழில் பரஞ்சோதியை, எங்கள் பிரானை, இகழ்திர்கண்டீர்;
தொழப்படும் தேவர் தொழப்படுவானைத் தொழுத பின்னை,
தொழப்படும் தேவர்தம்மால்-தொழுவிக்கும் தன் தொண்டரையே. 5

விண்அகத்தான்; மிக்க வேதத்து உளான்; விரிநீர் உடுத்த
மண் அகத்தான்; திருமால்அகத்தான்; மருவற்கு இனிய
பண்அகத்தான்; பத்தர் சித்தத்து உளான்; பழ நாய்அடியேன்
கண்அகத்தான்; மனத்தான்; சென்னியான்—எம் கறைக்கண்டனே. 6

பெருங்கடல் மூடிப் பிரளயம் கொண்டு பிரமனும் போய்
இருங்கடல் மூடி இறக்கும்; இறந்தான் களேபரமும்
கருங்கடல்வண்ணன் களேபரமும் கொண்டு, கங்காளராய்,
வரும் கடல் மீள நின்று, எம் இறை நல் வீணை வாசிக்குமே. 7

வானம் துளங்கில் என்? மண் கம்பம் ஆகில் என்? மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடுமாறில் என்? தண்கடலும்
மீனம் படில் என்? விரிசுடர் வீழில் என்?—வேலைநஞ்சு உண்டு
ஊனம் ஒன்று இல்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே. 8

சிவன் எனும் நாமம் தனக்கே உடைய செம்மேனி அம்மான்-
அவன் எனை ஆட்கொண்டு அளித்திடும்ஆகில், அவன்தனை யான்
பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்து பல்-நாள் அழைத்தால்,
''இவன் எனைப் பல்-நாள் அழைப்பு ஒழியான்'' என்று எதிர்ப்படுமே! 9

என்னை ஒப்பார் உன்னை எங்ஙனம் காண்பர்? இகலி, உன்னை
நின்னை ஒப்பார் நின்னைக் காணும் படித்துஅன்று, நின் பெருமை—
பொன்னை ஒப்பாரித்து, அழலை வளாவி, செம்மானம் செற்று,
மின்னை ஒப்பாரி, மிளிரும் சடைக்கற்றை வேதியனே! 10

தனி

IV-113

திரு விருத்தம்

பவளத்தடவரை போலும், திண்தோள்கள்; அத் தோள்மிசையே
பவளக்குழை தழைத்தால் ஒக்கும், பல்சடை; அச் சடைமேல்
பவளக்கொழுந்து அன்ன, பைம்முகநாகம்; அந் நாகத்தொடும்,
பவளக்கண் வாலமதி, எந்தை சூடும் பனிமலரே. 1

முருகு ஆர் நறுமலர் இண்டை தழுவி, வண்டே முரலும்
பெருகு ஆறு அடை சடைக்கற்றையினாய்! பிணி மேய்ந்து இருந்த
இருகால் குரம்பைஇது நான் உடையது; இது பிரிந்தால்,
தருவாய், எனக்கு உன் திருவடிக்கீழ் ஓர் தலைமறைவே! 2

''மூவா உருவத்து முக்கண் முதல்வ! மிக்கு ஊர் இடும்பை
காவாய்!'' என, கடை தூங்கு மணியைக் கையால் அமரர்
நாவாய் அசைத்த ஒலி ஒலிமாறியது இல்லை; அப்பால்
தீஆய் எரிந்து பொடிஆய்க் கழிந்த, திரிபுரமே. 3

பந்தித்த பாவங்கள் உம்மையில் செய்தன இம்மை வந்து
சந்தித்த பின்னைச் சமழ்ப்பது என்னே—வந்து அமரர் முன்நாள்
முந்திச் செழு மலர் இட்டு, முடி தாழ்த்து, அடி வணங்கும்
நந்திக்கு முந்துஉற ஆட்செய்கிலா விட்ட நன்நெஞ்சமே? 4

அந்தி வட்டத்து இளங்கண்ணியன், ஆறு அமர் செஞ்சடையான்,
புந்தி வட்டத்துஇடைப் புக்கு நின்றானையும்,—பொய் என்பனோ—
சந்தி வட்டச் சடைக்கற்றை அலம்பச் சிறிது அலர்ந்த
நந்திவட்டத்தொடு கொன்றை வளாவிய நம்பனையே? 5

உன்மத்தகமலர் சூடி, உலகம் தொழச் சுடலைப்
பல்மத்தகம் கொண்டு, பல்கடைதோறும் பலி திரிவான்;
என் மத்தகத்தே இரவும் பகலும் பிரிவு அரியான்—
தன் மத்தகத்து ஓர் இளம்பிறை சூடிய சங்கரனே. 6

அரைப்பால் உடுப்பன கோவணச் சின்னங்கள்; ஐயம் உணல்;
வரைப்பாவையைக் கொண்டது எக் குடிவாழ்க்கைக்கு? வான் இரைக்கும்
இரைப்பா! படுதலை ஏந்து கையா! மறை தேடும் எந்தாய்!
உரைப்பார் உரைப்பனவே செய்தியால்—எங்கள் உத்தமனே! 7

துறக்கப்படாத உடலைத் துறந்து வெந் தூதுவரோடு
இறப்பன்; இறந்தால், இரு விசும்பு ஏறுவன்; ஏறி வந்து
பிறப்பன்; பிறந்தால், ''பிறை அணி வார்சடைப் பிஞ்ஞகன் பேர்
மறப்பன்கொலோ?'' என்று, என் உள்ளம் கிடந்து மறுகிடுமே. 8

வேரி வளாய விரைமலர்க்கொன்றை புனைந்து, அனகன்,
சேரி வளாய என் சிந்தை புகுந்தான்; திருமுடிமேல்
வாரி வளாய வருபுனல் கங்கை சடை மறிவுஆய்,
ஏரி வளாவிக் கிடந்தது போலும், இளம்பிறையே. 9

கல்-நெடுங்காலம் வெதும்பி, கருங்கடல் நீர் சுருங்கி,
பல்-நெடுங்காலம் மழைதான் மறுக்கினும், ''பஞ்சம் உண்டு'' என்று
என்னொடும் சூள்அறும்—அஞ்சல்!—நெஞ்சே! இமையாத முக்கண்
பொன்நெடுங்குன்றம் ஒன்று உண்டுகண்டீர், இப் புகல்இடத்தே. 10

மேலும் அறிந்திலன், நான்முகன் மேல் சென்று; கீழ் இடந்து
மாலும் அறிந்திலன்; மால் உற்றதே; வழிபாடு செய்யும்
பாலன்மிசைச் சென்று பாசம் விசிறி மறிந்த சிந்தைக்
காலன் அறிந்தான், அறிதற்கு அரியான் கழல்அடியே! 11

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய

தேவாரத் திருப்பதிகங்கள்

ஐந்தாம் திருமுறை

கோயில் V-1 திருக் குறுந்தொகை

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும்; மேலும், இப் பூமிசை
என் நம்பு ஆலிக்கும்ஆறு கண்டு, இன்புஉற
இன்னம் பாலிக்குமோ, இப் பிறவியே? 1

அரும்பு அற்றப் பட ஆய் மலர் கொண்டு, நீர்,
சுரும்பு அற்றப் படத் தூவி, தொழுமினோ—
கரும்பு அற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்,
பெரும்பற்றப்புலியூர் எம்பிரானையே! 2

அரிச்சுஉற்ற(வ்) வினையால் அடர்ப்புண்டு, நீர்,
''எரிச் சுற்றக் கிடந்தார்'' என்று அயலவர்
சிரிச்சுஉற்றுப் பல பேசப்படாமுனம்,
திருச் சிற்றம்பலம் சென்று அடைந்து உய்ம்மினே! 3

அல்லல் என் செயும்? அருவினை என் செயும்?
தொல்லை வல்வினைத் தொந்தம்தான் என் செயும்?—
தில்லை மா நகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லைஇல்லது ஓர் அடிமை பூண்டேனுக்கே. 4

ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதுஎலாம்
நான் நிலாவி இருப்பன், என் நாதனை;
தேன் நிலாவிய சிற்றம்பலவனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே. 5

சிட்டர், வானவர், சென்று வரம் கொளும்
சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலத்து உறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும் அச்
சிட்டர்பால் அணுகான், செறு காலனே. 6

ஒருத்தனார், உலகங்கட்கு ஒரு சுடர்,
திருத்தனார், தில்லைச் சிற்றம்பலவனார்,
விருத்தனார், இளையார், விடம் உண்ட எம்
அருத்தனார், அடியாரை அறிவரே. 7

விண் நிறைந்தது ஓர் வெவ்அழலின் உரு
எண் நிறைந்த இருவர்க்கு அறிவு ஒணா
கண் நிறைந்த கடிபொழில் அம்பலத்-
துள்-நிறைந்து நின்று ஆடும், ஒருவனே. 8

வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம்
வல்லை வட்டம் மதில்மூன்று உடன்மாய்த்தவன்
தில்லை வட்டம் திசை கைதொழுவார் வினை
ஒல்லை, வட்டம் கடந்து, ஓடுதல் உண்மையே. 9

நாடி, நாரணன் நான்முகன் என்று இவர்
தேடியும், திரிந்தும், காண வல்லரோ—
மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்து-
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே? 10

மதுர வாய்மொழி மங்கை ஓர் பங்கினன்,
சதுரன், சிற்றம்பலவன், திருமலை
அதிர ஆர்த்து எடுத்தான் முடிபத்து இற
மிதிகொள் சேவடி சென்று அடைந்து உய்ம்மினே! 11

கோயில் V-2 திருக் குறுந்தொகை

பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்,
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்,
அனைத்துவேடம் ஆம் அம்பலக் கூத்தனை,
தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ? 1

தீர்த்தனை, சிவனை, சிவலோகனை,
மூர்த்தியை, முதல்ஆய ஒருவனை,
பார்த்தனுக்கு அருள்செய்த சிற்றம்பலக்
கூத்தனை, கொடியேன் மறந்து உய்வனோ? 2

கட்டும் பாம்பும், கபாலம், கை மான்மறி,
இட்டம்ஆய் இடுகாட்டு எரிஆடுவான்,
சிட்டர் வாழ் தில்லை அம்பலக் கூத்தனை,
எள்-தனைப் பொழுதும் மறந்து உய்வனோ? 3

மாணி பால் கறந்து ஆட்டி வழிபட
நீண் உலகுஎலாம் ஆளக் கொடுத்த என்
ஆணியை, செம்பொன் அம்பலத்துள்-நின்ற
தாணுவை, தமியேன் மறந்து உய்வனோ? 4

பித்தனை, பெருங்காடு அரங்கா உடை
முத்தனை, முளைவெண்மதிசூடியை,
சித்தனை, செம்பொன் அம்பலத்துள்-நின்ற
அத்தனை, அடியேன் மறந்து உய்வனோ? 5

நீதியை, நிறைவை, மறைநான்கு உடன்-
ஓதியை, ஒருவர்க்கும் அறிவு ஒணாச்
சோதியை, சுடர்ச் செம்பொனின் அம்பலத்து
ஆதியை, அடியேன் மறந்து உய்வனோ? 6

மை கொள் கண்டன், எண்தோளன், முக்கண்ணினன்,
பை கொள் பாம்பு அரை ஆர்த்த பரமனார்,
செய்யமாது உறை சிற்றம்பலத்து எங்கள்
ஐயனை, அடியேன் மறந்து உய்வனோ? 7

முழுதும் வான்உலகத்து உள தேவர்கள்
தொழுதும் போற்றியும் தூய செம்பொன்னினால்
எழுதி மேய்ந்த சிற்றம்பலக் கூத்தனை,
இழுதையேன் மறந்து எங்ஙனம் உய்வனோ? 8

கார் உலாம் மலர்க்கொன்றைஅம்தாரனை,
வார் உலாம் முலை மங்கை மணாளனை,
தேர் உலாவிய தில்லையுள் கூத்தனை,
ஆர்கிலா அமுதை, மறந்து உய்வனோ? 9

ஓங்கு மால்வரை ஏந்தல்உற்றான் சிரம்
வீங்கி விம்முற ஊன்றிய தாளினான்,
தேங்கு நீர் வயல் சூழ் தில்லைக் கூத்தனை,
பாங்கு இலாத் தொண்டனேன் மறந்து உய்வனோ? 10

திரு நெல்வாயில் அரத்துறை V-3 திருக் குறுந்தொகை

கடவுளை, கடலுள்(ள்) எழு நஞ்சு உண்ட
உடல் உளானை, ஒப்பாரி இலாத எம்
அடல் உளானை, அரத்துறை மேவிய
சுடர் உளானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 1

கரும்பு ஒப்பானை, கரும்பினில் கட்டியை,
விரும்பு ஒப்பானை, விண்ணோரும் அறிகிலா
அரும்பு ஒப்பானை, அரத்துறை மேவிய
சுரும்பு ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 2

ஏறு ஒப்பானை, எல்லாஉயிர்க்கும்(ம்) இறை
வேறு ஒப்பானை, விண்ணோரும் அறிகிலா
ஆறு ஒப்பானை, அரத்துறை மேவிய
ஊறு ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 3

பரப்பு ஒப்பானை, பகல் இருள் நன்நிலா
இரப்பு ஒப்பானை, இளமதி சூடிய
அரப்பு ஒப்பானை, அரத்துறை மேவிய
சுரப்பு ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 4

நெய் ஒப்பானை, நெய்யில் சுடர் போல்வது ஓர்
மெய் ஒப்பானை,—விண்ணோரும் அறிகிலார்—
ஐ ஒப்பானை, அரத்துறை மேவிய
கை ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 5

நிதி ஒப்பானை, நிதியின் கிழவனை,
விதி ஒப்பானை,—விண்ணோரும் அறிகிலார்—
அதி ஒப்பானை, அரத்துறை மேவிய
கதி ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 6

புனல் ஒப்பானை, பொருந்தலர்தம்மையே
மினல் ஒப்பானை,—விண்ணோரும் அறிகிலார்—
அனல் ஒப்பானை, அரத்துறை மேவிய
கனல் ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 7

பொன் ஒப்பானை, பொன்னில் சுடர் போல்வது ஓர்
மின் ஒப்பானை,—விண்ணோரும் அறிகிலார்—
அன் ஒப்பானை, அரத்துறை மேவிய
தன் ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 8

காழியானை, கன விடை ஊரும் மெய்
வாழியானை, வல்லோரும் என்ற இன்னவர்
ஆழியான் பிரமற்கும் அரத்துறை
ஊழியானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 9

கலை ஒப்பானை, கற்றார்க்கு ஓர் அமுதினை,
மலை ஒப்பானை, மணி முடி ஊன்றிய
அலை ஒப்பானை, அரத்துறை மேவிய
நிலை ஒப்பானை,—கண்டீர்—நாம் தொழுவதே. 10

திரு அண்ணாமலை V-4 திருக் குறுந்தொகை

வட்டனை(ம்), மதிசூடின்ய, வானவர்-
சிட்டனை, திரு அண்ணாமலையனை,
இட்டனை, இகழ்ந்தார் புரம்மூன்றையும்
அட்டனை,—அடியேன் மறந்து உய்வனோ? 1

வானனை(ம்), மதி சூடிய மைந்தனை,
தேனனை, திரு அண்ணாமலையனை,
ஏனனை, இகழ்ந்தார் புரம்மூன்று எய்த
ஆனனை,—அடியேன் மறந்து உய்வனோ? 2

மத்தனை(ம்), மதயானை உரித்த எம்
சித்தனை, திரு அண்ணாமலையனை,
முத்தனை(ம்), முனிந்தார் புரம்மூன்று எய்த
அத்தனை,—அடியேன் மறந்து உய்வனோ? 3

காற்றனை, கலக்கும் வினை போய் அறத்
தேற்றனை, திரு அண்ணாமலையனை,
கூற்றனை, கொடியார் புரம்மூன்று எய்த
ஆற்றனை,—அடியேன் மறந்து உய்வனோ? 4

மின்னனை, வினை தீர்த்து எனை ஆட்கொண்ட
தென்னனை, திரு அண்ணாமலையனை,
என்னனை, இகழ்ந்தார் புரம்மூன்று எய்த
அன்னனை,—அடியேன் மறந்து உய்வனோ? 5

மன்றனை(ம்), மதியாதவன் வேள்விமேல்
சென்றனை, திரு அண்ணாமலையனை,
வென்றனை, வெகுண்டார் புரம்மூன்றையும்
கொன்றனை, கொடியேன் மறந்து உய்வனோ? 6

வீரனை, விடம் உண்டனை, விண்ணவர்-
தீரனை, திரு அண்ணாமலையனை,
ஊரனை, உணரார் புரம்மூன்று எய்த
ஆரனை,—அடியேன் மறந்து உய்வனோ? 7

கருவினை, கடல்வாய் விடம் உண்ட எம்
திருவினை, திரு அண்ணாமலையனை,
உருவினை, உணரார் புரம்மூன்று எய்த
அருவினை,—அடியேன் மறந்து உய்வனோ? 8

அருத்தனை, அரவுஐந்தலைநாகத்தைத்
திருத்தனை, திரு அண்ணாமலையனை,
கருத்தனை, கடியார் புரம்மூன்று எய்த
வருத்தனை,—அடியேன் மறந்து உய்வனோ? 9

அரக்கனை அலற(வ்) விரல் ஊன்றிய
திருத்தனை, திரு அண்ணாமலையனை,
இரக்கம்ஆய் என் உடல் உறு நோய்களைத்
துரக்கனை,—தொண்டனேன் மறந்து உய்வனோ? 10

திரு அண்ணாமலை V-5 திருக் குறுந்தொகை

பட்டிஏறு உகந்து ஏறி, பலஇலம்
இட்டம்ஆக இரந்து உண்டு,உழிதரும்
அட்டமூர்த்தி அண்ணாமலை கைதொழக்
கெட்டுப் போம், வினை; கேடு இல்லை; காண்மினே! 1

பெற்றம் ஏறுவர், பெய் பலிக்கு ஏன்று அவர்;
சுற்றமா மிகு தொல்புகழாளொடும்
அற்றம் தீர்க்கும் அண்ணாமலை கைதொழ
நல்-தவத்தொடு ஞானத்து இருப்பரே. 2

பல்இல்ஓடு கை ஏந்திப் பலஇலம்
ஒல்லை சென்று உணங்கல் கவர்வார்அவர்;
அல்லல் தீர்க்கும், அண்ணாமலை கைதொழ
நல்லஆயின நம்மை அடையுமே. 3

பாடிச் சென்று பலிக்கு என்று நின்றவர்
ஓடிப் போயினர்; செய்வதுஒன்று என்கொலோ?
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போகும், நம் மேலைவினைகளே. 4

தேடிச் சென்று திருந்து அடி ஏத்துமின்!
நாடி வந்து அவர் நம்மையும் ஆட்கொள்வர்;
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம், நமது உள்ள வினைகளே. 5

கட்டி ஒக்கும், கரும்பின்இடை; துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனார்,
அட்டமூர்த்தி, அண்ணாமலை மேவிய
நட்டம்ஆடியை, நண்ண நன்கு ஆகுமே. 6

கோணிக்கொண்டையர் வேடம் முன் கொண்டவர்,
பாணி நட்டங்கள்ஆடும் பரமனார்,
ஆணிப்பொன்னின், அண்ணாமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே. 7

கண்டம்தான் கறுத்தான், காலன் ஆர்உயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்,
அண்டத்து ஓங்கும் அண்ணாமலை கைதொழ
விண்டு போகும், நம் மேலைவினைகளே. 8

முந்திச் சென்று முப்போதும் வணங்குமின்,
அந்திவாய் ஒளியான்தன் அண்ணாமலை!
சிந்தியா எழுவார் வினை தீர்த்திடும்,
கந்தமாமலர் சூடும் கருத்தனே. 9

மறையினானொடு மாலவன் காண்கிலா
நிறையும் நீர்மையுள் நின்று அருள்செய்தவன்
உறையும் மாண்பின் அண்ணாமலை கைதொழப்
பறையும், நாம் செய்த பாவங்கள்ஆனவே. 10

திரு ஆரூர் V-6 திருக் குறுந்தொகை

எப்போதும்(ம்) இறையும் மறவாது, நீர்;
முப்போதும் பிரமன் தொழ நின்றவன்,
செப்பு ஓதும் பொனின் மேனிச் சிவன்அவன்,
அப் போதைக்கு, ''அஞ்சல்!'' என்னும்—ஆரூரனே. 1

சடையின்மேலும் ஓர் தையலை வைத்தவர்,
அடைகிலா அரவை அரை ஆர்த்தவர்,
படையின் நேர் தடங்கண் உமை பாகமா
அடைவர்போல், இடுகாடர்—ஆரூரரே. 2

விண்ட வெண்தலையே கலன்ஆகவே
கொண்டு அகம் பலி தேரும் குழகனார்;
துண்டவெண்பிறை வைத்த இறையவர்—
அண்டவாணர்க்கு அருளும் ஆரூரரே. 3

விடையும் ஏறுவர்; வெண்தலையில் பலி
கடைகள்தோறும் திரியும் எம் கண்ணுதல்;
உடையும் சீரை; உறைவது காட்டுஇடை;
அடைவர்போல், அரங்குஆக;—ஆரூரரே. 4

துளைக்கைவேழத்து உரி உடல் போர்த்தவர்;
வளைக்கையாளை ஒர்பாகம் மகிழ்வு எய்தி
திளைக்கும் திங்கள் சடையின்-திசைமுழுது
அளக்கும் சிந்தையர்போலும்—ஆரூரரே. 5

பண்ணின் இன்மொழியாளை ஒர்பாகமா,
விண்ணின் ஆர் விளங்கும் மதி சூடியே,
சுண்ண-நீறு மெய்ப் பூசி, சுடலையின்
அண்ணி ஆடுவர்போலும்—ஆரூரரே. 6

மட்டு வார்குழலாளொடு மால்விடை
இட்டமா உகந்து ஏறும் இறைவனார்—
கட்டுவாங்கம், கனல், மழு, மான்தனோடு,
அட்டம் ஆம் புயம் ஆகும் ஆரூரரே. 7

தேய்ந்த திங்கள் கமழ் சடையன்; கனல்
ஏந்தி எல்லியுள் ஆடும் இறைவனார்;
காய்ந்து காமனை நோக்கின கண்ணினார்—
ஆய்ந்த நால்மறை ஓதும் ஆரூரரே. 8

உண்டு நஞ்சு கண்டத்துள் அடக்கி, அங்கு
இண்டை செஞ்சடை வைத்த இயல்பினான்;
கொண்ட கோவணஆடையன்—கூர் எரி
அண்டவாணர் அடையும் ஆரூரரே. 9

மாலும் நான்முகனும்(ம்) அறிகிற்கிலார்;
காலன்ஆயஅவனைக் கடந்திட்டுச்
சூலம் மான்மறி ஏந்திய கையினார்—
ஆலம் உண்டு அழகுஆய ஆரூரரே. 10

திரு ஆரூர் V-7 திருக் குறுந்தொகை

கொக்கரை, குழல், வீணை, கொடுகொட்டி,
பக்கமே பகுவாயன பூதங்கள்
ஒக்க ஆடல் உகந்துஉடன் கூத்தராய்,
அக்கினோடு அரவு ஆர்ப்பர்—ஆரூரரே. 1

எந்த மா தவம் செய்தனை, நெஞ்சமே!—
பந்தம்வீடுஅவை ஆய பராபரன்
அந்தம் இல் புகழ் ஆரூர் அரநெறி
சிந்தையுள்ளும் சிரத்துள்ளும் தங்கவே? 2

வண்டு உலாம் மலர்கொண்டு வளர்சடைக்கு
இண்டைமாலை புனைந்தும், இராப்பகல்
தொண்டர்ஆகி, தொடர்ந்து விடாதவர்க்கு
அண்டம் ஆளவும் வைப்பர்—ஆரூரரே. 3

துன்புஉளலாம் அற நீங்கிச் சுபத்தராய்,
என்புஉளலாம் நெக்கு, இராப்பகல் ஏத்தி நின்று,
இன்பராய் நினைந்து, என்றும் இடை அறா
அன்பர்ஆமவர்க்கு அன்பர்—ஆரூரரே. 4

முருட்டு மெத்தையில் முன் கிடத்தாமுனம்,
அரட்டர்ஐவரை ஆசு அறுத்திட்டு, நீர்,
முரண்-தடித்த அத் தக்கன்தன் வேள்வியை
அரட்டுஅடக்கிதன் ஆரூர் அடைமினே! 5

எம் ஐயார் இலை; யானும் உளேன்அலேன்;
எம்மை யாரும் இது செய வல்லரே?
''அம்மை யார், எனக்கு?'' என்றுஎன்று அரற்றினேற்கு
அம்மை ஆரத் தந்தார், ஆரூர் ஐயரே. 6

தண்ட ஆளியை,—தக்கன்தன் வேள்வியை,—
செண்டுஅதுஆடிய தேவரகண்டனை,
கண்டுகண்டு இவள் காதலித்து அன்புஅதுஆய்க்
கொண்டி ஆயினஆறு, என்தன் கோதையே! 7

இவள் நமைப் பல பேசத் தொடங்கினாள்;
அவணம் அன்று எனில், ''ஆரூர் அரன்'' எனும்;
பவனி வீதிவிடங்கனைக் கண்டு இவள்,
தவனி ஆயினஆறு, என்தன் தையலே! 8

நீரைச் செஞ்சடை வைத்த நிமலனார்,
கார் ஒத்த(ம்) மிடற்றர், கனல் வாய் அரா-
ஆரத்தர், உறையும்(ம்) அணி ஆரூரைத்
தூரத்தே தொழுவார் வினை தூளியே. 9

உள்ளமே! ஒன்று உறுதி உரைப்பன், நான்:
வெள்ளம் தாங்கும் விரிசடை வேதியன்,
அள்ளல் நீர் வயல் ஆரூர் அமர்ந்த எம்
வள்ளல், சேவடி வாழ்த்தி வணங்கிடே! 10

விண்ட மா மலர்மேல் உறைவானொடும்
கொண்டல்வண்ணனும் கூடி அறிகிலா
அண்டவாணன்தன் ஆரூர் அடி தொழப்
பண்டை வல்வினை நில்லா, பறையுமே. 11

மை உலாவிய கண்டத்தன், அண்டத்தன்,
கை உலாவிய சூலத்தன், கண்ணுதல்,
ஐயன், ஆரூர் அடி தொழுவார்க்கு எலாம்
உய்யல் ஆம்; அல்லல் ஒன்று இலை; காண்மினே! 12

திரு அன்னியூர் V-8 திருக் குறுந்தொகை

பாறு அலைத்த படுவெண்தலையினன்;
நீறு அலைத்த செம்மேனியன்—நேரிழை
கூறு அலைத்த மெய், கோள் அரவு ஆட்டிய,
ஆறு அலைத்த சடை, அன்னியூரனே. 1

பண்டு ஒத்த(ம்) மொழியாளை ஓர்பாகம்ஆய்,
இண்டைச் செஞ்சடையன்(ன்); இருள் சேர்ந்தது ஓர்
கண்டத்தன்; கரியின்(ன்)உரி போர்த்தவன்;
அண்டத்து அப் புறத்தான்—அன்னியூரனே. 2

பரவி நாளும் பணிந்தவர்தம் வினை
துரவைஆகத் துடைப்பவர்தம் இடம்,
குரவம் நாறும் குழல் உமை கூறராய்
அரவம் ஆட்டுவர்போல், அன்னியூரரே. 3

வேதகீதர்; விண்ணோர்க்கும் உயர்ந்தவர்;
சோதி வெண்பிறை துன்று சடைக்கு அணி
நாதர்; நீதியினால் அடியார்தமக்கு
ஆதிஆகி நின்றார்—அன்னியூரரே. 4

எம்பிரான்; இமையோர்கள்தமக்கு எலாம்
இன்பர்ஆகி இருந்த எம் ஈசனார்;
துன்ப வல்வினை போகத் தொழுமவர்க்கு
அன்பர்ஆகி நின்றார்—அன்னியூரரே. 5

வெந்தநீறு மெய் பூசும் நல் மேனியர்;
கந்தமாமலர் சூடும் கருத்தினர்;
சிந்தை ஆர் சிவனார்; செய்யதீவண்ணர்;
அந்தணாளர்கண்டீர்—அன்னியூரரே. 6

ஊனை ஆர் தலையில் பலி கொண்டு உழல்-
வானை; வானவர்தாங்கள் வணங்கவே,
தேனை ஆர் குழலாளை ஒர்பாகமா,
ஆனைஈர்உரியார்—அன்னியூரரே. 7

காலை போய்ப் பலி தேர்வர்; கண்ணார், நெற்றி;
மேலைவானவர் வந்து விரும்பிய,
சோலை சூழ் புறங்காடு அரங்குஆகவே,
ஆலின்கீழ் அறத்தார்—அன்னியூரரே. 8

எரி கொள் மேனியர்; என்பு அணிந்து இன்பராய்த்
திரியும் மூஎயில் தீ எழச் செற்றவர்;
கரிய மாலொடு, நான்முகன், காண்பதற்கு
அரியர்ஆகி நின்றார்—அன்னியூரரே. 9

வஞ்ச(அ)ரக்கன் கரமும்—சிரத்தொடும்—
அஞ்சும்அஞ்சும்ஓர்ஆறும்நான்கும்(ம்) இற,
பஞ்சின் மெல்விரலால் அடர்த்து, ''ஆயிழை,
அஞ்சல்அஞ்சல்!'' என்றார்—அன்னியூரரே. 10

திரு மறைக்காடு V-9 திருக் குறுந்தொகை

ஓதம் மால்கடல் பரவி உலகுஎலாம்
மாதரார் வலம்கொள் மறைக்காடரைக்
காதல்செய்து, கருதப்படுமவர்
பாதம் ஏத்த, பறையும், நம் பாவமே. 1

பூக்கும் தாழை புறணி அருகுஎலாம்
ஆக்கம்தான் உடை மா மறைக்காடரோ!
ஆர்க்கும் காண்பு அரியீர்!—அடியார்தம்மை
நோக்கிக் காண்பது, நும் பணி செய்யிலே. 2

புன்னை ஞாழல் புறணி அருகுஎலாம்,
மன்னினார் வலம்கொள் மறைக்காடரோ!
அன்னமென்நடையாளை ஒர்பாகமாச்
சின்னவேடம் உகப்பது செல்வமே. 3

அட்டமாமலர் சூடி, அடும்பொடு,
வட்டப்புன்சடை மா மறைக்காடரோ!
நட்டம்ஆடியும், நால்மறை பாடியும்,
இட்டம்ஆக இருக்கும் இடம் இதே. 4

நெய்தல் ஆம்பல் நிறை வயல் சூழ்தரும்,
மெய்யினார் வலம்கொள், மறைக்காடரோ!
தையல் பாகம் கொண்டீர்!—கவர் புன்சடைப்
பைதல்வெண்பிறை பாம்புஉடன் வைப்பதே? 5

துஞ்சும்போதும் துயில் இன்றி ஏத்துவார்
வஞ்சு இன்றி(வ்) வலம்கொள் மறைக்காடரோ!
பஞ்சின் மெல்அடிப் பாவை பலி கொணர்ந்து
அஞ்சி நிற்பதும் ஐந்தலை நாகமே. 6

திருவினார் செல்வம் மல்கு விழா அணி,
மருவினார் வலம்கொள், மறைக்காடரோ!
உருவினாள்உமைமங்கை ஓர்பாகம்ஆய்,
மருவினாய், கங்கையைச் சென்னிதன்னிலே. 7

சங்கு வந்து அலைக்கும் தடங்கானல்வாய்
வங்கம் ஆர் வலம்கொள் மறைக்காடரோ!
கங்கை செஞ்சடை வைப்பதும் அன்றியே
அங்கையில்(ல்) அனல் ஏந்தல் அழகிதே? 8

குறைக் காட்டான், விட்ட தேர் குத்த மாமலை
இறைக் காட்டி எடுத்தான், தலைஈர்-ஐந்தும்
மறைக்காட்டான் இறை ஊன்றலும் வாய்விட்டான்;
இறைக் காட்டாய்,—எம்பிரான்!—உனை ஏத்தவே! 9

திரு மறைக்காடு V-10 திருக் குறுந்தொகை

பண்ணின் நேர் மொழியாள் உமைபங்கரோ!
மண்ணினார் வலம்செய்ம் மறைக்காடரோ!—
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணம்ஆகத் திறந்து அருள்செய்ம்மினே! 1

ஈண்டு செஞ்சடை ஆகத்துள் ஈசரோ!
மூண்ட கார்முகிலின் முறிக்கண்டரோ!—
ஆண்டுகொண்ட நீரே அருள்செய்திடும்!
நீண்ட மாக் கதவின் வலி நீக்குமே! 2

அட்டமூர்த்திஅது ஆகிய அப்பரோ!
துட்டர் வான் புரம் சுட்ட சுவண்டரோ!
பட்டம் கட்டிய சென்னிப் பரமரோ!—
சட்ட இக் கதவம் திறப்பிம்மினே! 3

அரிய நால்மறை ஓதிய நாவரோ!
பெரிய வான் புரம் சுட்ட சுவண்டரோ!
விரிகொள் கோவணஆடை விருத்தரோ!—
பெரிய வான் கதவம் பிரிவிக்கவே! 4

மலையில் நீடு இருக்கும் மறைக்காடரோ!
கலைகள் வந்து இறைஞ்சும் கழல் ஏத்தரோ!
விலை இல் மா மணிவண்ணஉருவரோ!—
தொலைவு இலாக் கதவம் துணை நீக்குமே! 5

பூக்கும் தாழை புறணி அருகுஎலாம்
ஆக்கும் தண்பொழில் சூழ் மறைக்காடரோ!
ஆர்க்கும் காண்பு அரியீர்! அடிகேள்!—உமை
நோக்கிக் காணக் கதவைத் திறவுமே! 6

வெந்தவெண்பொடிப் பூசும் விகிர்தரோ!
அந்தம்இ(ல்)லி, அணி மறைக்காடரோ!
எந்தை!—நீ அடியார் வந்து இறைஞ்சிட
இந்த மாக் கதவம் பிணை நீக்குமே! 7

ஆறு சூடும் அணி மறைக்காடரோ!
கூறு மாதுஉமைக்கு ஈந்த குழகரோ!
ஏறுஅது ஏறிய எம்பெருமான்!—இந்த
மாறு இலாக் கதவ்ம் வலி நீக்குமே! 8

சுண்ணவெண்பொடிப் பூசும் சுவண்டரோ!
பண்ணி ஏறு உகந்து ஏறும் பரமரோ!
அண்ணல், ஆதி, அணி மறைக்காடரோ!—
திண்ணமாக் கதவம் திறப்பிம்மினே! 9

விண்உளார் விரும்பி(ய்) எதிர்கொள்ளவே
மண்உளார் வணங்கும் மறைக்காடரோ!
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணம்ஆகத் திறந்து அருள்செய்ம்மினே! 10

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்
இரக்கம் ஒன்று இலீர்; எம்பெருமானிரே!
சுரக்கும் புன்னைகள் சூழ் மறைக்காடரோ!
சரக்க இக் கதவம் திறப்பிம்மினே! 11

திரு மீயச்சூர் இளங்கோயில் V-11 திருக் குறுந்தொகை

தோற்றும் கோயிலும், தோன்றிய கோயிலும்,
வேற்றுக் கோயில்பல உள; மீயச்சூர்,
கூற்றம் பாய்ந்த குளிர்புன்சடை அரற்கு
ஏற்றம் கோயில்கண்டீர், இளங்கோயிலே. 1

வந்தனை அடைக்கும்(ம்) அடித்தொண்டர்கள்
பந்தனை செய்து பாவிக்க நின்றவன்,
சிந்தனை திருத்தும் திரு மீயச்சூர்,
எம்தமை உடையார், இளங்கோயிலே. 2

பஞ்சமந்திரம் ஓதும் பரமனார்,
அஞ்ச ஆனை உரித்து அனல்ஆடுவார்,—
நெஞ்சம்! வாழி நினைந்து இரு—மீயச்சூர்,
எம்தமை உடையார், இளங்கோயிலே! 3

நாறு மல்லிகை கூவிளம் செண்பகம்
வேறுவேறு விரித்த சடைஇடை
ஆறு கொண்டு உகந்தான், திரு மீயச்சூர்,
ஏறு கொண்டு உகந்தார், இளங்கோயிலே. 4

வெவ்வ வண்ணத்து நாகம் வெருவவே
கவ்வ வண்ணக் கனல் விரித்து ஆடுவர்,
செவ்வவண்ணம் திகழ் திரு மீயச்சூர்,
எவ்வ வண்ணம், பிரான் இளங்கோயிலே? 5

பொன்அம்கொன்றையும், பூ அணி மாலையும்,
பின்னும் செஞ்சடைமேல் பிறை சூடிற்று;
மின்னும் மேகலையாளொடு, மீயச்சூர்,
இன்ன நாள் அகலார், இளங்கோயிலே. 6

படை கொள் பூதத்தன், பைங்கொன்றைத்தாரினன்,
சடை கொள் வெள்ளத்தன், சாந்தவெண்நீற்றினன்,
விடை கொள் ஊர்தியினான், திரு மீயச்சூர்,
இடைகொண்டு ஏத்த நின்றார், இளங்கோயிலே. 7

ஆறு கொண்ட சடையினர் தாமும் ஓர்
வேறுகொண்டது ஓர் வேடத்தர்ஆகிலும்,
கூறு கொண்டு உகந்தாளொடு, மீயச்சூர்,
ஏறு கொண்டு உகந்தார், இளங்கோயிலே. 8

வேதத்தான் என்பர், வேள்விஉளான் என்பர்,
பூதத்தான் என்பர், புண்ணியன்தன்னையே;
கீதத்தான் கிளரும் திரு மீயச்சூர்,
ஏதம் தீர்க்க நின்றார், இளங்கோயிலே. 9

கடுக்கண்டன் கயிலாயமலைதனை
எடுக்கல்உற்ற இராவணன் ஈடு அற
விடுக்கண் இன்றி வெகுண்டவன், மீயச்சூர்,
இடுக்கண் தீர்க்க நின்றார், இளங்கோயிலே. 10

திரு வீழிமிழலை V-12 திருக் குறுந்தொகை

கரைந்து கைதொழுவாரையும் காதலன்;
வரைந்து வைது எழுவாரையும் வாடலன்;
நிரந்த பாரிடத்தோடு அவர் நித்தலும்
விரைந்து போவது, வீழிமிழலைக்கே. 1

ஏற்று வெல் கொடி ஈசன், தன் ஆதிரை,
நாற்றம் சூடுவர்; நன்நறும் திங்களார்—
நீற்றுச்சந்தனவெள்ளை விரவலார்,
வேற்றுக் கோலம் கொள் வீழிமிழலையே. 2

புனை பொன் சூலத்தன்; போர் விடைஊர்தியான்;
வினை வெல் நாகத்தன்; வெண்மழுவாளினான்;
நினைய நின்றவன், ''ஈசனையே'' எனா;—
வினைஇலார் தொழும் வீழிமிழலையே. 3

மாடத்து ஆடும் மனத்துஉடன் வைத்தவர்,
கோடத்தார், குருக்கேத்திரத்தார்பலர்,
பாடத்தார், பழிப்பார் பழிப்புஇல்லது ஓர்
வேடத்தார், தொழும் வீழிமிழலையே. 4

எடுத்த வெல் கொடி ஏறு உடையான் தமர்
உடுப்பர், கோவணம்; உண்பது பிச்சையே;
கெடுப்பதுஆவது, கீழ் நின்ற வல்வினை;
விடுத்துப் போவது, வீழிமிழலைக்கே. 5

குழலை யாழ் மொழியார் இசை வேட்கையால்
உழலை யாக்கையை ஊணும் உணர்வுஇலீர்!
தழலை நீர் மடிக் கொள்ளன்மின்! சாற்றினோம்:
மிழலையான் அடி சார, விண் ஆள்வரே! 6

தீரன்; தீத்திரளன்; சடைத் தங்கிய
நீரன்; ஆடிய நீற்றன்; வண்டு ஆர் கொன்றைத்-
தாரன்; மாலையன்; தண் நறுங்கண்ணியன்;
வீரன்—வீழிமிழலை விகிர்தனே. 7

எரியினார்; இறையார்; இடுகாட்டுஇடை
நரியினார்; பரியா மகிழ்கின்றது ஓர்
பெரியனார்; தம் பிறப்பொடு சாதலை
விரியினார் தொழும் வீழிமிழலையே! 8

நீண்ட சூழ் சடைமேல் ஓர் நிலா மதி;
காண்டு, சேவடிமேல் ஓர் கனைகழல்;
வேண்டுவார்அவர் வீதி புகுந்திலர்;
மீண்டும் போவது, வீழிமிழலைக்கே. 9

பாலையாழொடு செவ்வழி பண் கொள
மாலை வானவர் வந்து வழிபடும்,
ஆலை ஆர்அழல் அந்தணர் ஆகுதி
வேலையார் தொழும், வீழிமிழலையே! 10

மழலை ஏற்று மணாளன் திருமலை
சுழல ஆர்த்து எடுத்தான் முடிதோள் இறக்
கழல் கொள் காலில்-திருவிரல் ஊன்றலும்,
''மிழலையான் அடி வாழ்க!'' என, விட்டதே. 11

திரு வீழிமிழலை V-13 திருக் குறுந்தொகை

என் பொனே! இமையோர் தொழு பைங்கழல்
நன்பொனே! நலம் தீங்கு அறிவு ஒன்று இலேன்;
செம்பொனே! திரு வீழிமிழலையுள் 1
அன்பனே!—அடியேனைக் குறிக்கொளே!

கண்ணினால் களி கூரக் கையால்-தொழுது
எண்ணும்ஆறு அறியாது இளைப்பேன்தனை,—
விண்உளார் தொழும் வீழிமிழலையுள் 2
அண்ணலே!—அடியேனைக் குறிக்கொளே!

ஞாலமே! விசும்பே! நலம்தீமையே!
காலமே! கருத்தே! கருத்தால்-தொழும்
சீலமே! திரு வீழிமிழலையுள் 3
கோலமே!—அடியேனைக் குறிக்கொளே!

முத்தனே! முதல்வா! முகிழும் முளை
ஒத்தனே! ஒருவா! உருஆகிய
சித்தனே! திரு வீழிமிழலையுள்
அத்தனே!— அடியேனைக் குறிக்கொளே! 4

கருவனே! கருஆய்த் தெளிவார்க்கு எலாம்
ஒருவனே! உயிர்ப்புஆய் உணர்வுஆய் நின்ற
திருவனே! திரு வீழிமிழலையுள்
குருவனே!—அடியேனைக் குறிக்கொளே! 5

காத்தனே, பொழில் ஏழையும்! காதலால்
ஆத்தனே, அமரர்க்கு! அயன்தன் தலை
சேர்த்தனே! திரு வீழிமிழலையுள்
கூத்தனே!—அடியேனைக் குறிக்கொளே! 6

நீதி வானவர் நித்தல் நியமம் செய்து
ஓதி வானவரும்(ம்) உணராதது ஓர்
வேதியா! விகிர்தா! திரு வீழியுள்
ஆதியே!—அடியேனைக் குறிக்கொளே! 7

பழகி நின் அடி சூடிய பாலனைக்
கழகின்மேல் வைத்த காலனைச் சாடிய
அழகனே! அணி வீழிமிழலையுள்
குழகனே!—அடியேனைக் குறிக்கொளே! 8

அண்ட வானவர் கூடிக் கடைந்த நஞ்சு
உண்ட வானவனே! உணர்வு ஒன்று இலேன்;
விண்ட வான் பொழில் வீழிமிழலையுள்
கொண்டனே!—அடியேனைக் குறிக்கொளே! 9

ஒருத்தன் ஓங்கலைத் தாங்கல்உற்றான் உரம்
வருத்தினாய்! வஞ்சனேன் மனம் மன்னிய
திருத்தனே! திரு வீழிமிழலையுள் 10
அருத்தனே!—அடியேனைக் குறிக்கொளே!

திரு இடைமருதூர் V-14 திருக் குறுந்தொகை

பாசம் ஒன்று இலராய், பலபத்தர்கள்
வாசம்நாள்மலர் கொண்டு அடி வைகலும்,
ஈசன் எம்பெருமான் இடைமருதினில் 1
பூசம், நாம் புகுதும், புனல்ஆடவே.

மறையின்—நாள்மலர் கொண்டு அடி வானவர்—
முறையினால் முனிகள் வழிபாடுசெய்
இறைவன், எம்பெருமான், இடைமருதினில் 2
உறையும் ஈசனை,உள்கும், என் உள்ளமே.

கொன்றைமாலையும் கூவிளம் மத்தமும்
சென்று சேரத் திகழ்சடை வைத்தவன்,
என்றும் எந்தைபிரான், இடைமருதினை 3
நன்று கைதொழுவார் வினை நாசமே.

இம்மை வானவர் செல்வம் விளைத்திடும்,
அம்மையே பிறவித்துயர் நீத்திடும்,
எம்மை ஆளும், இடைமருதன் கழல்
செம்மையே தொழுவார் வினை சிந்துமே. 4

''வண்டு அணைந்தன வன்னியும் கொன்றையும்
கொண்டு அணிந்த சடைமுடிக் கூத்தனார்,
எண்திசைக்கும் இடைமருதா!'' என,
விண்டுபோய் அறும், மேலைவினைகளே. 5

ஏறுஅது ஏறும் இடைமருது ஈசனார்,
கூறுவார் வினை தீர்க்கும் குழகனார்,
ஆறு செஞ்சடை வைத்த அழகனார்க்கு
ஊறிஊறி உருகும், என் உள்ளமே. 6

விண்உளாரும் விரும்பப்படுபவர்;
மண்உளாரும் மதிக்கப்படுபவர்;
எண்ணினார், பொழில் சூழ் இடைமருதினை
நண்ணினாரை நண்ணா, வினை; நாசமே. 7

வெந்தவெண்பொடிப் பூசும் விகிர்தனார்,
கந்தமாலைகள் சூடும் கருத்தனார்,
எந்தை, என் இடைமருதினில் ஈசனைச்
சிந்தையால் நினைவார் வினை தேயுமே. 8

வேதம் ஓதும் விரிசடை அண்ணலார்,
பூதம் பாட நின்று ஆடும் புனிதனார்—
''ஏதம் தீர்க்கும் இடைமருதா!'' என்று—
பாதம் ஏத்தப் பறையும், நம் பாவமே. 9

கனியினும், கட்டி பட்ட கரும்பினும்,
பனிமலர்க்குழல் பாவைநல்லாரினும்,
தனி முடி கவித்து ஆளும் அரசினும்,
இனியன்—தன் அடைந்தார்க்கு, இடைமருதனே. 10

முற்றிலா மதி சூடும் முதல்வனார்;
ஒற்றினார், மலையால் அரக்கன் முடி;
எற்றின் ஆர் கொடியார்; இடைமருதினைப்
பற்றினாரைப் பற்றா, வினைப் பாவமே. 11

திரு இடைமருதூர் V-15 திருக் குறுந்தொகை

பறையின் ஓசையும் பாடலின் ஓசையும்
மறையின் ஓசையும் வைகும், அயல்எலாம்,—
இறைவன், எங்கள் பிரான்—இடைமருதினில்
உறையும் ஈசனை உள்கும், என் உள்ளமே. 1

மனத்துள் மாயனை, மாசு அறு சோதியை,
புனிற்றுப்பிள்ளைவெள்ளை(ம்)மதி சூடியை,
எனக்குத் தாயை, எம்மான்இடைமருதனை,
நினைத்திட்டு ஊறி நிறைந்தது—என் உள்ளமே. 2

வண்டு அணைந்தன வன்னியும் மத்தமும்
கொண்டு அணிந்த சடைமுடிக் கூத்தனை
''எண்திசைக்கும் இடைமருதா!'' என,
விண்டுபோய் அறும், மேலைவினைகளே. 3

''துணை இலாமையில்-தூங்கு இருள் பேய்களோடு
அணையல்ஆவது எமக்கு அரிதே!'' எனா,
இணை இலா இடைமாமருதில்(ல்) எழு
பணையில் ஆகமம் சொல்லும், தன் பாங்கிக்கே. 4

மண்ணை உண்ட மால் காணான், மலர்அடி;
விண்ணை விண்டு அயன் காணான், வியன்முடி;
''மொண்ணை மா மருதா!'' என்று என் மொய்குழல்
பண்ணை ஆயமும் தானும் பயிலுமே. 5

மங்கை காணக் கொடார், மணமாலையை;
கங்கை காணக் கொடார், முடிக் கண்ணியை;
நங்கைமீர்! இடைமருதர் இந் நங்கைக்கே
எங்கு வாங்கிக் கொடுத்தார், இதழியே? 6

திருப் பேரெயில் V-16 திருக் குறுந்தொகை

மறையும் ஓதுவர்; மான்மறிக் கையினர்;
கறை கொள் கண்டம் உடைய கபாலியார்;
துறையும் போகுவர்; தூய வெண்நீற்றினர்;
பிறையும் சூடுவர்—பேரெயிலாளரே. 1

கணக்குஇலாரையும், கற்று வல்லாரையும்,
வணக்கு இலா நெறி கண்டு கொண்டாரையும்,
தணக்குவார்; தணிப்பார்; எப்பொருளையும்
பிணக்குவார்அவர்—பேரெயிலாளரே. 2

சொரிவிப்பார், மழை; சூழ் கதிர்த் திங்களை
விரிவிப்பார்; வெயில் பட்ட விளங்கு ஒளி
எரிவிப்பார்; தணிப்பார்; எப்பொருளையும்
பிரிவிப்பார்அவர்—பேரெயிலாளரே. 3

செறுவிப்பார், சிலையால் மதில்; தீர்த்தங்கள்
உறுவிப்பார்; பலபத்தர்கள் ஊழ்வினை
அறுவிப்பார்; அது அன்றியும் நல்வினை
பெறுவிப்பார்அவர்—பேரெயிலாளரே. 4

மற்றையார் அறியார்; மழுவாளினார்;
பற்றி ஆட்டி ஓர் ஐந்தலைப்பாம்பு அரைச்
சுற்றியார் அவர்; தூ நெறியால் மிகு
பெற்றியார்அவர்—பேரெயிலாளரே. 5

திருக்கு வார்குழல் செல்வன சேவடி—
இருக்கு வாய்மொழியால்—தனை ஏத்துவார்
சுருக்குவார்,துயர்; தோற்றங்கள் ஆற்றறப்
பெருக்குவார்அவர், பேரெயிலாளரே. 6

முன்னையார்; மயில்ஊர்தி முருகவேள்-
தன் ஐயார் எனில்-தான் ஓர் தலைமகன்;
என்னை ஆளும் இறையவன்; எம்பிரான்;
பின்னையார்அவர்—பேரெயிலாளரே. 7

உழைத்தும், துள்ளியும், உள்ளத்துளே உரு
இழைத்தும், ''எந்தைபிரான்'' என்று இராப்பகல்
அழைக்கும் அன்பினர்ஆய அடியவர்
பிழைப்பு நீக்குவர்—பேரெயிலாளரே. 8

''நீர் உலாம் நிமிர்புன்சடையா!'' எனு
ஏர் உலாவு அநங்கன் திறல் வாட்டிய,
வார் உலாம் வனமென்முலையாளொடும்,
பேர் உளார்அவர்—பேரெயிலாளரே. 9

பாணி ஆர் படுதம் பெயர்ந்து ஆடுவர்;
தூணி ஆர் விசயற்கு அருள்செய்தவர்;
மாணியாய் மண் அளந்தவன், நான்முகன்,
பேணியார்அவர் பேரெயிலாளரே. 10

மதத்த வாள் அரக்கன் மணிப் புட்பகம்
சிதைக்கவே, திருமாமலைக்கீழ்ப் புக்கு,
பதைத்து அங்கு ஆர்த்து எடுத்தான் பத்து நீள் முடி
பிதக்க ஊன்றிய பேரெயிலாளரே. 11

திரு வெண்ணியூர் V-17 திருக் குறுந்தொகை

முத்தினை, பவளத்தை, முளைத்த எம்
தொத்தினை, சுடரை, சுடர் போல் ஒளிப்
பித்தனை, கொலும் நஞ்சினை, வானவர்
நித்தனை,—நெருநல் கண்ட வெண்ணியே. 1

வெண்ணித் தொல்-நகர் மேய வெண்திங்கள் ஆர்
கண்ணித் தொத்த சடையர்; கபாலியார்;
எண்ணித் தம்மை நினைந்துஇருந்தேனுக்கு(வ்)
அண்ணித்திட்டு அமுது ஊறும், என் நாவுக்கே. 2

காற்றினை; கனலை; கதிர் மா மணி
நீற்றினை; நினைப்பார் வினை நீக்கிடும்,
கூற்றினை உதைத்திட்ட குணம் உடை,
வீற்றினை;—நெருநல் கண்ட வெண்ணியே. 3

நல்லனை, திகழ் நால்மறைஓதியை,
சொல்லனை, சுடரை, சுடர் போல் ஒளிர்
கல்லனை, கடி மா மதில்மூன்று எய்த
வில்லனை,—நெருநல் கண்ட வெண்ணியே. 4

சுடரைப் போல் ஒளிர் சுண்ணவெண்நீற்றனை,
அடரும் சென்னியில் வைத்த அமுதனை,
படரும் செஞ்சடைப் பால்மதிசூடியை,
இடரை நீக்கியை, யான் கண்ட வெண்ணியே. 5

பூதநாதனை, பூம் புகலூரனை,
தாது எனத் தவழும் மதி சூடியை,
நாதனை, நல்ல நால்மறை ஓதியை,
வேதனை,—நெருநல் கண்ட வெண்ணியே. 6

ஒருத்தியை ஒருபாகத்து அடக்கியும்
பொருத்திய(ப்) புனிதன், புரிபுன்சடைக்
கருத்தனை, கறைக்கண்டனை, கண்நுதல்
நிருத்தனை,—நெருநல் கண்ட வெண்ணியே. 7

சடையனை; சரி கோவணஆடை கொண்டு
உடையனை; உணர்வார் வினை தீர்த்திடும்
படையனை, மழுவாளொடு; பாய்தரும்
விடையனை;—நெருநல் கண்ட வெண்ணியே. 8

பொருப்பனை, புனலாளொடு புன்சடை
அருப்பனை, இளந்திங்கள்அம்கண்ணியான்
பருப்பதம் பரவித் தொழும் தொண்டர்கள்
விருப்பனை,—நெருநல் கண்ட வெண்ணியே. 9

சூல, வஞ்சனை, வல்ல எம் சுந்தரன்;
கோலமா அருள்செய்தது ஓர் கொள்கையான்;
காலன் அஞ்ச உதைத்து, இருள்கண்டம் ஆம்
வேலைநஞ்சனை; கண்டது வெண்ணியே. 10

இலையின் ஆர் கொன்றை சூடிய ஈசனார்,
மலையினால் அரக்கன் திறல் வாட்டினார்,
சிலையினால் மதில் எய்தவன், வெண்ணியைத்
தலையினால்-தொழுவார் வினை தாவுமே. 11

திருக் கடம்பந்துறை V-18 திருக் குறுந்தொகை

முற்றிலா முலையாள் இவள்ஆகிலும்,
அற்றம் தீர்க்கும் அறிவு இலள்ஆகிலும்,
''கற்றைச் செஞ்சடையன், கடம்பந்துறைப்
பெற்றம்ஊர்தி'' என்றாள்—எங்கள் பேதையே. 1

தனகு இருந்தது ஓர் தன்மையர்ஆகிலும்,
முனகு தீரத் தொழுது எழுமின்களோ!
கனகப்புன்சடையான் கடம்பந்துறை
நினைய வல்லார் நீள் விசும்பு ஆள்வரே. 2

ஆரியம் தமிழோடு இசைஆனவன்,
கூரிய(க்) குணத்தார் குறி நின்றவன்,
காரிகை உடையான், கடம்பந்துறை,
சீர் இயல் பத்தர், சென்று அடைமின்களே! 3

பண்ணின் இன்மொழி கேட்கும் பரமனை—
வண்ண நல் மலரான், பல தேவரும்,
கண்ணனும்(ம்), அறியான்—கடம்பந்துறை
நண்ண, நம் வினைஆயின நாசமே. 4

மறை கொண்ட(ம்) மனத்தானை மனத்துளே
நிறை கொண்ட(ந்) நெஞ்சின் உள் உற வைம்மினோ!
கறைகண்டன்(ன்) உறையும் கடம்பந்துறை
சிறைகொண்ட(வ்) வினை தீரத் தொழுமினே! 5

நங்கை பாகம் வைத்த(ந்) நறுஞ்சோதியைப்
பங்கம் இன்றிப் பணிந்து எழுமின்களோ!
கங்கைச் செஞ்சடையான் கடம்பந்துறை,
அங்கம் ஓதி அரன் உறைகின்றதே. 6

அரிய நால்மறை ஆறுஅங்கம்ஆய், ஐந்து
புரியன்; தேவர்கள் ஏத்த நஞ்சு உண்டவன்;
கரிய கண்டத்தினான்; கடம்பந்துறை
உரியஆறு நினை, மட நெஞ்சமே! 7

பூமென்கோதை உமை ஒருபாகனை
ஓமம் செய்தும் உணர்மின்கள், உள்ளத்தால்!
காமற் காய்ந்த பிரான் கடம்பந்துறை
நாமம் ஏத்த, நம் தீவினை நாசமே. 8

பார் அணங்கி வணங்கிப் பணி செய
நாரணன் பிரமன்(ன்) அறியாதது ஓர்
காரணன்—கடம்பந்துறை மேவிய
ஆர் அணங்கு ஒருபால் உடை மைந்தனே. 9

நூலால் நன்ரு நினைமின்கள், நோய் கெட!
பால் ஆன்ஐந்து உடன்ஆடும் பரமனார்;
காலால் ஊன்று உகந்தான்; கடம்பந்துறை
மேலர்ல் நாம் செய்த வல்வினை வீடுமே. 10

திருக் கடம்பூர்க் கரக்கோயில் V-19 திருக் குறுந்தொகை

தளரும் கோள் அரவத்தொடு தண்மதி
வளரும் கோல வளர்சடையார்க்கு இடம்—
கிளரும் பேர் இசைக் கின்னரம் பாட்டு அருக்
களரும் கார்க் கடம்பூர்க் கரக்கோயிலே. 1

வெல வலான், புலன்ஐந்தொடு; வேதமும்
சொல வலான்; சுழலும் தடுமாற்றமும்
அல வலான்; மனை ஆர்ந்த மென்தோளியைக்
கல வலான்; கடம்பூர்க் கரக்கோயிலே. 2

பொய் தொழாது, புலிஉரியோன் பணி
செய்து எழா எழுவார் பணி செய்து எழா,
வைது எழாது எழுவார்அவர் எள்க, நீர்
கைதொழா எழுமின், கரக்கோயிலே! 3

துண்ணெனா, மனத்தால்-தொழு, நெஞ்சமே!
பண்ணினால் முனம் பாடல்அது செய்தே;—
எண்இலார் எயில்மூன்றும் எரித்த முக்-
கண்ணினான் கடம்பூர்க் கரக்கோயிலே! 4

சுனையுள் நீலமலர் அன கண்டத்தன்,
புனையும் பொன்நிறக் கொன்றை புரிசடைக்
கனையும் பைங்கழலான், கரக்கோயிலை
நினையும் உள்ளத்தவர் வினை நீங்குமே. 5

குணங்கள் சொல்லியும் குற்றங்கள் பேசியும்
வணங்கி வாழ்த்துவர், அன்புஉடையார்எலாம்—
வணங்கி வான் மலர் கொண்டு அடி வைகலும்
கணங்கள் போற்றுஇசைக்கும் கரக்கோயிலே. 6

பண்ணின் ஆர் மறை பல்பலபூசனை
மண்ணினார் செய்வது அன்றியும், வைகலும்
விண்ணினார்கள் வியக்கப்படுமவன்
கண்ணின் ஆர் கடம்பூர்க் கரக்கோயிலே. 7

அங்கை ஆர்அழல் ஏந்தி நின்று ஆடலன்,
மங்கை பாட மகிழ்ந்து உடன் வார்சடைக்
கங்கையான், உறையும் கரக்கோயிலைத்
தம் கையால்-தொழுவார் வினை சாயுமே. 8

நன் கடம்பனைப் பெற்றவள் பங்கினன்,
தென்கடம்பைத் திருக் கரக்கோயிலான்-
தன் கடன்(ன்) அடியேனையும் தாங்குதல்;
என் கடன் பணி செய்து கிடப்பதே. 9

பணம் கொள் பாற்கடல் பாம்புஅணையானொடும்,
மணம் கமழ் மலர்த்தாமரையான்அவன்,
பிணங்கும் பேர்அழல் எம்பெருமாற்கு இடம்—
கணங்கள் போற்றுஇசைக்கும் கரக்கோயிலே. 10

வரைக்கண் நால்-அஞ்சுதோள் உடையான் தலை
அரைக்க ஊன்றி அருள்செய்த ஈசனார்,
திரைக்கும் தண்புனல் சூழ், கரக்கோயிலை
உரைக்கும் உள்ளத்தவர் வினை ஓயுமே. 11

திருக் கடம்பூர்க் கரக்கோயில் V-20 திருக் குறுந்தொகை

ஒருவராய் இரு மூவரும் ஆயவன்,
குருஅது ஆய குழகன், உறைவுஇடம்—
பரு வரால் குதிகொள்ளும் பழனம் சூழ் 1
கருஅதுஆம் கடம்பூர்க் கரக்கோயிலே.

வன்னி, மத்தம், வளர்இளந்திங்கள், ஓர்
கன்னியாளை, கதிர் முடி வைத்தவன்;
பொன்னின் மல்கு புணர்முலையாளொடும் 2
மன்னினான்; கடம்பூர்க் கரக்கோயிலே.

இல்லக் கோலமும், இந்த இளமையும்,
அல்லல் கோலம், அறுத்து உய வல்லிரே!
ஒல்லைச் சென்று அடையும், கடம்பூர்நகர்ச் 3
செல்வக் கோயில் திருக் கரக்கோயிலே!

வேறு சிந்தை இலாதவர் தீவினை
கூறு செய்த குழகன் உறைவுஇடம்—
ஏறு செல்வத்து இமையவர்தாம் தொழும்
ஆறு சேர் கடம்பூர்க் கரக்கோயிலே. 4

திங்கள் தங்கிய செஞ்சடைமேலும் ஓர்
மங்கை தங்கும் மணாளன் இருப்புஇடம்—
பொங்கு சேர் மணல் புன்னையும், ஞாழலும்,
தெங்கு, சேர் கடம்பூர்க் கரக்கோயிலே. 5

மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கு எலாம்
எல்லைஆன பிரானார் இருப்புஇடம்—
கொல்லைமுல்லை, கொழுந் தகை மல்லிகை,
நல்ல சேர் கடம்பூர்க் கரக்கோயிலே. 6

தளரும் வாள்அரவத்தொடு தண்மதி
வளரும் பொன்சடையார்க்கு இடம்ஆவது—
கிளரும் பேர் ஒலிக் கின்னரம் பாட்டு அருக்
களரி ஆர் கடம்பூர்க் கரக்கோயிலே. 7

உற்றாராய் உறவுஆகி உயிர்க்கு எலாம்
பெற்றார்ஆய பிரானார் உறைவுஇடம்—
முற்றார் மும்மதில் எய்த முதல்வனார்,
கற்றார் சேர், கடம்பூர்க் கரக்கோயிலே. 8

வெள்ளைநீறு அணி மேனியவர்க்கு எலாம்
உள்ளம்ஆய பிரானார் உறைவுஇடம்—
பிள்ளைவெண்பிறை சூடிய சென்னியான்,
கள்வன், சேர் கடம்பூர்க் கரக்கோயிலே. 9

பரப்புநீர் இலங்கைக்கு இறைவன்(ன்)அவன்
உரத்தினால் அடுக்கல்(ல்) எடுக்கல்(ல்)உற,
இரக்கம் இன்றி இறை விரலால்-தலை
அரக்கினான் கடம்பூர்க் கரக்கோயிலே. 10

திரு இன்னம்பர் V-21 திருக் குறுந்தொகை

என்னில் ஆரும் எனக்கு இனியார் இல்லை;
என்னிலும்(ம்) இனியான் ஒருவன்(ன்) உளன்;
என்உளே உயிர்ப்புஆய்ப் புறம் போந்து புக்கு
என்உளே நிற்கும், இன்னம்பர் ஈசனே. 1

மட்டு உண்பார்கள், மடந்தையர் வாள்கணால்
கட்டுண்பார்கள், கருதுவது என்கொலோ?
தட்டி முட்டித் தள்ளாடித் தழுக்குழி
எட்டுமூர்த்தியர், இன்னம்பர் ஈசனே, 2

''கனலும் கண்ணியும், தண்மதியோடு, உடன்
புனலும், கொன்றையும், சூடும் புரிசடை;
அனலும், சூலமும், மான்மறி, கையினர்''
எனலும், என் மனத்து, இன்னம்பர் ஈசனே. 3

மழைக்கண் மா மயில் ஆலும் மகிழ்ச்சியான்
அழைக்கும், தன் அடியார்கள்தம் அன்பினை;
குழைக்கும் தன்னைக் குறிக்கொள வேண்டியே
இழைக்கும், என் மனத்து—இன்னம்பர் ஈசனே. 4

தென்னவன்(ன்); எனை ஆளும் சிவன்அவன்;
மன்னவன்; மதி அம் மறை ஓதியான்;
முன்னம் அன்னவன்—சேரலன், பூழியான்,
இன்னம் இன்புஉற்ற இன்னம்பர் ஈசனே. 5

விளக்கும், வேறுபடப் பிறர் உள்ளத்தில்;
அளக்கும், தன் அடியார் மனத்து அன்பினை;
குளக்கும் என்னைக் குறிக்கொள வேண்டியே
இளக்கும், என் மனத்து—இன்னம்பர் ஈசனே. 6

சடைக்கணாள், புனலாள்; அனல் கையது; ஓர்
கடைக்கணால் மங்கை நோக்க, இமவான்மகள்
படைக்கணால் பருகப்படுவான்—நமக்கு 7
இடைக்கண்ஆய் நின்ற இன்னம்பர் ஈசனே.

தொழுது தூ மலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற்று அரற்றுகின்றாரையும்,
பொழுது போக்கிப் புறக்கணிப்பாரையும், 8
எழுதும், கீழ்க்கணக்கு—இன்னம்பர் ஈசனே.

விரியும் தண் இளவேனிலில் வெண்பிறை
புரியும் காமனை வேவ, புருவமும்
திரியும் எல்லையில் மும்மதில் தீ எழுந்து 9
எரிய, நோக்கிய இன்னம்பர் ஈசனே!

சனியும் வெள்ளியும் திங்களும் ஞாயிறும்
முனிவனாய் முடிபத்து உடையான்தனைக்
கனிய ஊன்றிய காரணம் என்கொலோ, 10
இனியனாய் நின்ற இன்னம்பர் ஈசனே?

திருக் குடமூக்கு V-22 திருக் குறுந்தொகை

பூ வணத்தவன்; புண்ணியன்; நண்ணி அங்கு
ஆவணத்து உடையான், அடியார்களை;—
தீ வணத் திருநீறு மெய்பூசி, ஓர் 1
கோவணத்து உடையான், குடமூக்கிலே.

பூத்து ஆடிக் கழியாதே நீர், பூமியீர்,
தீத்துஆடி(த்) திறம் சிந்தையுள் வைம்மினோ!—
''வேர்த்து ஆடும் காளிதன் விசை தீர்க!'' என்று 2
கூத்துஆடி(ய்) உறையும் குடமூக்கிலே.

நங்கையாள்உமையாள் உறை நாதனார்—
அம் கையாளொடு அறுபதம் தாழ்சடைக்
கங்கையாள்அவள், கன்னி எனப்படும் 3
கொங்கையாள், உறையும் குடமூக்கிலே.

ஓதா நாவன் திறத்தை உரைத்திரேல்,
ஏதானும்(ம்) இனிது ஆகும்; இயமுனை—
சேதாஏறு உடையான் அமர்ந்த(வ்) இடம்—
கோதாவிரி உறையும் குடமூக்கிலே. 4

நக்க(அ)ரையனை, நாள்தொறும் நன்நெஞ்சே!
வக்கரை உறைவானை, வணங்கு, நீ!—
அக்கு அரையோடு அரவு அரை ஆர்த்தவன்,
கொக்கரை உடையான், குடமூக்கிலே. 5

துறவி நெஞ்சினர் ஆகிய தொண்டர்காள்!
பிறவி நீங்கப் பிதற்றுமின், பித்தராய்!—
மறவனாய்ப் பார்த்தன்மேல் கணை தொட்ட எம்
குறவனார் உறையும் குடமூக்கிலே. 6

தொண்டர் ஆகித் தொழுது பணிமினோ,
பண்டை வல்வினை பற்றுஅற வேண்டுவீர்!—
விண்டவர் புரம்மூன்று ஒரு மாத்திரைக்
கொண்டவன்(ன்) உறையும் குடமூக்கிலே. 7

காமியம் செய்து காலம் கழியாதே,
ஓமியம் செய்து அங்கு உள்ளத்து உணர்மினோ!—
சாமியோடு, சர(ச்)சுவதிஅவள்,
கோமியும்(ம்), உறையும் குடமூக்கிலே. 8

சிரமம் செய்து, சிவனுக்குப் பத்தராய்ப்
பரமனைப் பலநாளும் பயிற்றுமின்!—
பிரமன் மாலொடு மற்று ஒழிந்தார்க்கு எலாம்
குரவனார் உறையும் குடமூக்கிலே. 9

அன்றுதான் அரக்கன் கயிலாயத்தைச்
சென்று தான் எடுக்க(வ்), உமை அஞ்சலும்
நன்று தான் நக்கு, நல்விரல் ஊன்றி, பின்
கொன்று, கீதம் கேட்டான், குடமூக்கிலே. 10

திரு நின்றியூர் V-23 திருக் குறுந்தொகை

கொடுங் கண் வெண்தலை கொண்டு, குறை விலைப்
படும் கண் ஒன்று இலராய், பலி தேர்ந்து உண்பர்—
நெடுங்கண் மங்கையர் ஆட்டு அயர் நின்றியூர்க்
கடுங் கைக் கூற்று உதைத்திட்ட கருத்தரே. 1

வீதி வேல்நெடுங்கண்ணியர் வெள்வளை
நீதியே கொளப்பாலது?—நின்றியூர்
வேதம் ஓதி, விளங்கு வெண்தோட்டராய்,
காதில் வெண்குழை வைத்த எம் கள்வரே. 2

புற்றின் ஆர் அரவம் புலித்தோல்மிசைச்
சுற்றினார்; சுண்ணப்போர்வை கொண்டார்; சுடர்
நெற்றிக்கண் உடையார்; அமர் நின்றியூர்
பற்றினாரைப் பற்றா, வினைப் பாவமே. 3

பறையின் ஓசையும், பாடலின் ஓசையும்,
மறையின் ஓசையும், மல்கி அயல்எலாம்
நிறையும் பூம்பொழில் சூழ் திரு நின்றியூர்
உறையும் ஈசனை உள்கும், என் உள்ளமே. 4

சுனையுள் நீலம் சுளியும் நெடுங்கணாள்,
''இனையன்'' என்று என்றும் ஏசுவது என்கொலோ?—
நினையும் தண்வயல் சூழ் திரு நின்றியூர்ப்
பனையின் ஈர்உரி போர்த்த பரமரே ! 5

உரைப்பக் கேண்மின், நும் உச்சி உளான்தனை!
''நிரைப் பொன் மா மதில் சூழ் திரு நின்றியூர்
உரைப்பொன்கற்றையர் ஆர் இவரோ?'' எனில்,
திரைத்துப் பாடித் திரிதரும் செல்வரே. 6

கன்றி ஊர் முகில் போலும் கருங்களிறு
இன்றி ஏறலனால்; இது என்கொலோ?—
நின்றியூர் பதிஆக நிலாயவன்,
வென்றி ஏறு உடை எங்கள் விகிர்தனே. 7

நிலை இலா வெள்ளைமாலையன், நீண்டது ஓர்
கொலை விலால் எயில் எய்த கொடியவன்,
நிலையின் ஆர் வயல் சூழ் திரு நின்றியூர்
உரையினால்-தொழுவார் வினை ஓயுமே. 8

அஞ்சிஆகிலும் அன்புபட்டுஆகிலும்
நெஞ்சம்! வாழி! நினை, நின்றியூரை நீ!—
இஞ்சிமாமதில் எய்து இமையோர் தொழக்
குஞ்சி வான்பிறை சூடிய கூத்தனே. 9

எளியனா மொழியா இலங்கைக்கு இறை,
களியினால் கயிலாயம் எடுத்தவன்,
நெளிய ஊன்ற வலான் அமர் நின்றியூர்
அளியினால்-தொழுவார் வினை அல்குமே. 10

திரு ஒற்றியூர் V-24 திருக் குறுந்தொகை

ஒற்றி ஊரும் ஒளி மதி, பாம்பினை;
ஒற்றி ஊரும் அப் பாம்பும் அதனையே
ஒற்றி ஊர ஒரு சடை வைத்தவன்
ஒற்றியூர் தொழ, நம் வினை ஓயுமே. 1

வாட்டம் ஒன்று உரைக்கும் மலையான்மகள்
ஈட்டவே, இருள் ஆடி, இடு பிணக்-
காட்டில் ஓரி கடிக்க வெடித்தது ஓர்
ஓட்டை வெண்தலைக் கை—ஒற்றியூரரே. 2

கூற்றுத் தண்டத்தை அஞ்சிக் குறிக்கொண்மின்,
ஆற்றுத் தண்டத்து அடக்கும் அரன் அடி!
நீற்றுத் தண்டத்தராய் நினைவார்க்கு எலாம்
ஊற்றுத்தண்டு ஒப்பர்போல், ஒற்றியூரரே. 3

சுற்றும் பேய் சுழலச் சுடுகாட்டு எரி
பற்றி ஆடுவர்; பாய் புலித்தோலினர்—
மற்றை ஊர்கள்எல்லாம் பலி தேர்ந்து போய்
ஒற்றியூர் புக்கு உறையும் ஒருவரே. 4

புற்றில் ஆடு அரவு ஆட்டி, உமையொடு
பெற்றம்ஏறு உகந்து, ஏறும் பெருமையான்—
மற்றையாரொடு வானவரும் தொழ
ஒற்றியூர் உறைவான் ஓர் கபாலியே. 5

போது தாழ்ந்து புதுமலர் கொண்டு—நீர்-
மாது தாழ்சடை வைத்த மணாளனார்;
ஓது வேதியனார், திரு ஒற்றியூர்;—
பாதம் ஏத்தப் பறையும், நம் பாவமே. 6

பலவும் அன்னங்கள் பல்மலர்மேல்-துஞ்சும்,
கலவமஞ்ஞைகள் கார் என எள்குறும்,
உலவு பைம்பொழில் சூழ் திரு ஒற்றியூர்
நிலவினான் அடியே அடை—நெஞ்சமே! 7

ஒன்றுபோலும் உகந்து அவர் ஏறிற்று;
ஒன்றுபோலும் உதைத்துக் களைந்தது;
ஒன்றுபோல் ஒளி மா மதி சூடிற்று;
ஒன்றுபோல் உகந்தார், ஒற்றியூரரே. 8

படை கொள் பூதத்தார், வேதத்தர், கீதத்தர்,
சடை கொள் வெள்ளத்தர், சாந்தவெண்நீற்றினர்,
உடையும் தோல் உகந்தார், உறை ஒற்றியூர்
அடையும் உள்ளத்தவர் வினை அல்குமே. 9

வரையின் ஆர் உயர் தோள் உடை மன்னனை
வரையினால் வலி செற்றவர் வாழ்வுஇடம்,
திரையின் ஆர் புடை சூழ் திரு ஒற்றியூர்,
உரையினால் பொலிந்தார் உயர்ந்தார்களே. 10

திருப் பாசூர் V-25 திருக் குறுந்தொகை

முந்தி மூஎயில் எய்த முதல்வனார்,
சிந்திப்பார் வினை தீர்த்திடும் செல்வனார்,
அந்திக்கோன்தனக்கே அருள்செய்தவர்—
பந்திச் செஞ்சடைப் பாசூர் அடிகளே. 1

மடந்தை பாகம் மகிழ்ந்த மணாளனார்,
தொடர்ந்த வல்வினை போக்கிடும் சோதியார்,
கடந்த காலனைக் கால்கொடு பாய்ந்தவர்,
படர்ந்த நாகத்தர்—பாசூர் அடிகளே. 2

நாறு கொன்றையும் நாகமும் திங்களும்
ஆறும் செஞ்சடை வைத்த அழகனார்,
காறு கண்டத்தர், கையது ஓர் சூலத்தர்,
பாறின் ஓட்டினர்—பாசூர் அடிகளே. 3

வெற்றியூர் உறை வேதியர் ஆவர், நல்
ஒற்றி ஏறு உகந்து ஏறும் ஒருவனார்,
நெற்றிக்கண்ணினர், நீள் அரவம்தனைப்
பற்றி ஆட்டுவர்—பாசூர் அடிகளே. 4

மட்டு அவிழ்ந்த மலர் நெடுங்கண்ணிபால்
இட்ட வேட்கையர்ஆகி இருப்பவர்,—
துட்டரேல், அறியேன், இவர் சூழ்ச்சிமை;—
பட்ட நெற்றியர்—பாசூர் அடிகளே. 5

பல்இல்ஓடு கை ஏந்திப் பகல்எலாம்
எல்லி நின்று இடு பெய் பலி ஏற்பவர்,—
சொல்லிப் போய்ப் புகும் ஊர் அறியேன்; சொல்லீர் !—
பல்கும் நீற்றினர்—பாசூர் அடிகளே. 6

கட்டிவிட்ட சடையர், கபாலியர்,—
எட்டி நோக்கி வந்து இல் புகுந்து அவ்அவர்
இட்டமா அறியேன், இவர் செய்வன—
பட்ட நெற்றியர்—பாசூர் அடிகளே. 7

வேதம் ஓதி வந்து இல் புகுந்தார்அவர்,
காதில் வெண்குழை வைத்த கபாலியார்,
நீதி ஒன்று அறியார், நிறை கொண்டனர்—
பாதிவெண்பிறைப் பாசூர் அடிகளே. 8

சாம்பல் பூசுவர், தாழ்சடை கட்டுவர்,
ஓம்பல் மூதெருது ஏறும் ஒருவனார்,
தேம்பல்வெண்மதி சூடுவர், தீயது ஓர்
பாம்பும் ஆட்டுவர்—பாசூர் அடிகளே. 9

மாலினோடு மறையவன்தானும்ஆய்,
மேலும் கீழும், அளப்ப(அ)ரிது ஆயவர்;
ஆலின் நீழல் அறம் பகர்ந்தார்; மிகப்
பால்வெண்நீற்றினர்—பாசூர் அடிகளே. 10

திரியும் மூஎயில் செங்கணை ஒன்றினால்
எரிய எய்தனரேனும், இலங்கைக் கோன்
நெரிய ஊன்றியிட்டார், விரல்ஒன்றினால்;
பரியர்; நுண்ணியர்—பாசூர் அடிகளே. 11

திரு வன்னியூர் V-26 திருக் குறுந்தொகை

காடு கொண்டு அரங்காக் கங்குல்வாய்க் கணம்
பாட, மாநடம் ஆடும் பரமனார்;
வாட, மான் நிறம் கொள்வர்—மணம் கமழ்
மாட மா மதில் சூழ் வன்னியூரரே. 1

செங்கண் நாகம் அரையது; தீத்திரள்
அங்கை ஏந்தி நின்றார்; எரிஆடுவர்;
கங்கை வார்சடைமேல் இடம் கொண்டவர்;
மங்கை பாகம் வைத்தார்—வன்னியூரரே. 2

ஞானம் காட்டுவர்; நன்நெறி காட்டுவர்;
தானம் காட்டுவர், தம் அடைந்தார்க்கு எலாம்;
தானம் காட்டி, தம் தாள் அடைந்தார்கட்கு
வானம் காட்டுவர்போல்—வன்னியூரரே. 3

இம்மை, அம்மை, என இரண்டும்(ம்)இவை
மெய்ம்மைதான் அறியாது விளம்புவர்;
மெய்ம்மையால் நினைவார்கள்தம் வல்வினை—
வம்மின்!—தீர்ப்பர்கண்டீர், வன்னியூரரே. 4

பிறை கொள் வாள்நுதல் பெய்வளைத் தோளியர்
நிறையைக் கொள்பவர்; நீறு அணி மேனியர்;
கறை கொள் கண்டத்தர்; வெண்மழுவாளினர்;
மறை கொள் வாய்மொழியார்—வன்னியூரரே. 5

திளைக்கும் வண்டொடு தேன் படு கொன்றையர்;
துளைக்கைவேழத்தர்; தோலர்; சுடர் மதி
முளைக்கும் மூரல் கதிர் கண்டு, நாகம், நா
வளைக்கும் வார்சடையார்—வன்னியூரரே. 6

குணம் கொள், தோள்,—எட்டு,—மூர்த்தி இணைஅடி
இணங்குவார்கட்கு இனியனும்ஆய் நின்றான்;
வணங்கி மா மலர் கொண்டவர், வைகலும்
வணங்குவார் மனத்தார்—வன்னியூரரே. 7

இயலும் மாலொடு நான்முகன் செய் தவம்
முயலின் காண்பு அரிதுஆய் நின்ற மூர்த்திதான்—
அயல்எலாம் அன்னம் ஏயும் அம் தாமரை
வயல்எலாம் கயல் பாய் வன்னியூரரே. 8

நலம் கொள் பாகனை நன்று முனிந்திடா,
விலங்கல் கோத்து, எடுத்தான் அது மிக்கிட,
இலங்கை மன்னன் இருபதுதோளினை
மலங்க ஊன்றி வைத்தார்—வன்னியூரரே. 9

திரு ஐயாறு V-27 திருக் குறுந்தொகை

சிந்தை வாய்தல் உளான், வந்து; சீரியன்;
பொந்து வார் புலால் வெண்தலைக் கையினன்;
முந்தி வாயது ஓர் மூஇலைவேல் பிடித்து 1
அந்தி வாயது ஓர் பாம்பர்—ஐயாறரே.

பாகம் மாலை,—மகிழ்ந்தனர்,—பால்மதி;
போக, ஆனையின் ஈர்உரி போர்த்தவர்—
கோகம்மாலை, குலாயது ஓர் கொன்றையும், 2
ஆக, ஆன்நெய்அஞ்சுஆடும் ஐயாறரே.

நெஞ்சம் என்பது ஓர் நீள் கயம்தன்னுளே
வஞ்சம் என்பது ஓர் வான் சுழிப்பட்டு, நான்,
துஞ்சும்போழ்து, நின் நாமத் திருஎழுத்து- 3
அஞ்சும் தோன்ற, அருளும் ஐயாறரே.

நினைக்கும் நெஞ்சின் உள்ளார்; நெடு மா மதில்-
அனைத்தும் ஒள்அழல்வாய் எரியூட்டினார்;
பனைக்கைவேழத்து உரி உடல் போர்த்தவர்—
அனைத்துவாய்தலுள் ஆரும் ஐயாறரே. 4

பரியர்; நுண்ணியர்; பார்த்தற்கு அரியவர்;
அரிய பாடலர்; ஆடலர்; அன்றியும்
கரிய கண்டத்தர்; காட்சி பிறர்க்கு எலாம்
அரியர்; தொண்டர்க்கு எளியர்—ஐயாறரே. 5

புலரும்போதும், இலாப் பட்ட பொன்சுடர்,
மலரும் போதுகளால் பணிய, சிலர்;
இலரும், போதும் இலாததும் அன்றியும்;
அலரும் போதும் அணியும் ஐயாறரே. 6

பங்கு அ(ம்)மாலைக் குழலி, ஓர் பால்நிறக்
கங்கை, மாலையர் காதன்மை செய்தவர்—
மங்கை, மாலை மதியமும், கண்ணியும்,
அங்கமாலையும், சூடும் ஐயாறரே. 7

முன்னை ஆறு முயன்று எழுவீர்; ‘‘எலாம்
பின்னை ஆறு பிரி’’ எனும் பேதைகாள்!
மன் ஐ ஆறு மருவிய மாதவன்- 8
தன் ஐயாறு தொழ, தவம் ஆகுமே.

ஆன்ஐ ஆறு என ஆடுகின்றான் முடி
வானை ஆறு வளாயது காண்மினோ!
நான் ஐயாறு புக்கேற்கு அவன் இன்அருள் 9
தேனைஆறு திறந்தாலே ஒக்குமே.

அரக்கின் மேனியன்; அம் தளிர்மேனியன்;
அரக்கின் சேவடியாள் அஞ்ச, ‘‘அஞ்சல்!’’ என்று,
அரக்கன் ஈர்-ஐந்துவாயும் அலறவே, 10
அரக்கினான், அடியாலும்—ஐயாறனே.

திரு ஐயாறு V-28 திருக் குறுந்தொகை

சிந்தை வண்ணத்தராய், திறம்பா வணம்
முந்தி வண்ணத்தராய், முழுநீறு அணி
சந்தி வண்ணத்தராய், தழல் போல்வது ஓர் 1
அந்திவண்ணமும், ஆவர்—ஐயாறரே.

மூல வண்ணத்தராய், முதல்ஆகிய
கோல வண்ணத்தர் ஆகி, கொழுஞ் சுடர்
நீலவண்ணத்தர் ஆகி, நெடும் பளிங்கு 2
ஆல வண்ணத்தர் ஆவர்—ஐயாறரே.

சிந்தை வண்ணமும், தீயது ஓர் வண்ணமும்,
அந்திப்போது அழகுஆகிய வண்ணமும்,
பந்திக் காலனைப் பாய்ந்தது ஓர் வண்ணமும், 3
அந்திவண்ணமும், ஆவர்—ஐயாறரே.

இருளின் வண்ணமும், ஏழ்இசை வண்ணமும்,
சுருளின் வண்ணமும், சோதியின் வண்ணமும்,
மருளும் நான்முகன் மாலொடு வண்ணமும்,
அருளும் வண்ணமும், ஆவர்—ஐயாறரே. 4

இழுக்கின் வண்ணங்கள் ஆகிய வெவ்அழல்
குழைக்கும் வண்ணங்கள் ஆகியும் கூடியும்,
மழைக்கண் மா முகில் ஆகிய வண்ணமும்,
அழைக்கும் வண்ணமும், ஆவர்—ஐயாறரே. 5

இண்டை வண்ணமும், ஏழ்இசை வண்ணமும்,
தொண்டர் வண்ணமும், சோதியின் வண்ணமும்.
கண்ட வண்ணங்கள்ஆய்க் கனல் மா மணி
அண்ட வண்ணமும், ஆவர்—ஐயாறரே. 6

விரும்பும் வண்ணமும், வேதத்தின் வண்ணமும்.
கரும்பின் இன்மொழிக் காரிகை வண்ணமும்,
விரும்புவார் வினை தீர்த்திடும் வண்ணமும்,
அரும்பின் வண்ணமும், ஆவர்—ஐயாறரே. 7

ஊழி வண்ணமும், ஒண்சுடர் வண்ணமும்,
வேழஈர்உரி போர்த்தது ஓர் வண்ணமும்,
வாழித் தீஉரு ஆகிய வண்ணமும்,
ஆழிவண்ணமும், ஆவர்—ஐயாறரே. 8

செய் தவன் திருநீறு அணி வண்ணமும்,
எய்த நோக்க(அ)ரிது ஆகிய வண்ணமும்,
கைது காட்சி அரியது ஓர் வண்ணமும்,
ஐது வண்ணமும், ஆவர்—ஐயாறரே. 9

எடுத்த வாள் அரக்கன் திறல் வண்ணமும்,
இடர்(க்)கள் போல் பெரிது ஆகிய வண்ணமும்,
கடுத்த கைந்நரம்பால் இசை வண்ணமும்,
அடுத்த வண்ணமும், ஆவர்—ஐயாறரே. 10

திரு ஆவடுதுறை V-29 திருக் குறுந்தொகை

நிறைக்க வாலியள் அல்லள், இந் நேரிழை;
மறைக்க வாலியள் அல்லள், இம் மாதராள்—
பிறைக்கு அவாவிப் பெரும்புனல் ஆவடு-
துறைக் கவாலியோடு ஆடிய சுண்ணமே. 1

தவளமாமதிச் சாயல் ஓர் சந்திரன்-
பிளவு சூடிய பிஞ்ஞகன், எம் இறை,
அளவு கண்டிலள்; ஆவடுதண்துறைக்
களவு கண்டனள் ஒத்தனள்—கன்னியே. 2

‘‘பாதி பெண் ஒருபாகத்தன்; பல்மறை
ஓதி; என் உளம் கொண்டவன்; ஒண் பொருள்
ஆதி—ஆவடுதண்துறை மேவிய
சோதியே! சுடரே!’’ என்று சொல்லுமே. 3

கார்க் கொள் மா முகில் போல்வது ஓர் கண்டத்தன்;
வார்க்கொள்மென்முலை சேர்ந்து இறுமாந்து, இவள்
ஆர்க் கொள் கொன்றையன்; ஆவடுதண்துறைத்
தார்க்கு நின்று இவள் தாழுமா காண்மினே! 4

கருகு கண்டத்தன், காய் கதிர்ச் சோதியன்,
பருகு பால் அமுதே எனும் பண்பினன்,
அருகு சென்று இவள், ‘‘ஆவடுதண்துறை
ஒருவன் என்னை உடைய கோ’’ என்னுமே. 5

குழலும், கொன்றையும், கூவிளம், மத்தமும்,
தழலும், தையல் ஓர்பாகமாத் தாங்கினான்;
அழகன்; ‘‘ஆவடுதண்துறையா!’’ எனக்
கழலும், கைவளை காரிகையாளுக்கே. 6

பஞ்சின் மெல்அடிப் பாவை ஓர்பங்கனைத்
தஞ்சம் என்று இறுமாந்து, இவள் ஆரையும்
அஞ்சுவாள்அல்லள்; ஆவடுதண்துறை
மஞ்சனோடு இவள் ஆடிய மையலே! 7

‘‘பிறையும் சூடி, நல் பெண்ணொடு ஆண் ஆகி, என்
நிறையும் நெஞ்சமும் நீர்மையும் கொண்டவன்;
அறையும் பூம்பொழில் ஆவடுதண்துறை
இறைவன்—என்னை உடையவன்’’ என்னுமே. 8

வையம்தான் அளந்தானும் அயனும்ஆய்
மெய்யைக் காணல்உற்றார்க்கு அழல்ஆயினான்;
ஐயன்; ‘‘ஆவடுதண்துறையா!’’ என,
கையில் வெள்வளையும் கழல்கின்றதே. 9

‘‘பக்கம் பூதங்கள் பாட, பலி கொள்வான்;
மிக்க வாள் அரக்கன் வலி வீட்டினான்;
அக்கு அணிந்தவன்—ஆவடுதண்துறை
நக்கன்’’ என்னும், இந் நாண்இலி; காண்மினே! 10

திருப் பராய்த்துறை V-30 திருக் குறுந்தொகை

கரப்பர், காலம் அடைந்தவர்தம் வினை;
சுருக்கும்ஆறு வல்லார், கங்கை செஞ்சடை;—
பரப்பு நீர் வரு காவிரித் தென்கரைத்
திருப் பராய்த்துறை மேவிய செல்வரே. 1

மூடினார், களியானையின் ஈர்உரி;
பாடினார், மறைநான்கினோடு ஆறுஅங்கம்;
சேடனார்; தென்பராய்த்துறைச் செல்வரைத்
தேடிக்கொண்டு அடியேன் சென்று காண்பனே. 2

பட்ட நெற்றியர்; பால்மதிக்கீற்றினர்;
நட்டம்ஆடுவர், நள்இருள்ஏமமும்;
சிட்டனார்—தென்பராய்த்துறைச் செல்வனார்;
இட்டம்ஆய் இருப்பாரை அறிவரே. 3

முன்புஎலாம் சிலமோழைமை பேசுவர்,
என்புஎலாம் பல பூண்டு, அங்கு உழிதர்வர்—
தென்பராய்த்துறை மேவிய செல்வனார்;
அன்பராய் இருப்பாரை அறிவரே. 4

போது தாதொடு கொண்டு, புனைந்துஉடன்
தாது அவிழ் சடைச் சங்கரன் பாதத்துள்,
''வாதை தீர்க்க!'' என்று ஏத்தி, பராய்த்துறைச்
சோதியானைத் தொழுது, எழுந்து, உய்ம்மினே! 5

நல்ல நால்மறை ஓதிய நம்பனை,
பல்இல்வெண்தலையில் பலி கொள்வனை,
தில்லையான், தென்பராய்த்துறைச் செல்வனை,
வல்லைஆய் வணங்கித் தொழு, வாய்மையே! 6

நெருப்பினால் குவித்தால் ஒக்கும், நீள்சடை;
பருப்பதம்மதயானை உரித்தவன்,
திருப் பராய்த்துறையார், திருமார்பின் நூல்
பொருப்பு அராவி இழி புனல் போன்றதே. 7

எட்ட இட்ட இடு மணல் எக்கர்மேல்
பட்ட நுண் துளி பாயும் பராய்த்துறைச்
சிட்டன் சேவடி சென்று அடைகிற்றிரேல்,
விட்டு, நம் வினை உள்ளன வீடுமே. 8

நெருப்பு அராய் நிமிர்ந்தால் ஒக்கும் நீள்சடை;
மருப்பு அராய் வளைத்தால் ஒக்கும், வாள்மதி;
திருப் பராய்த்துறை மேவிய செல்வனார்
விருப்பராய் இருப்பாரை அறிவரே. 9

தொண்டு பாடியும், தூ மலர் தூவியும்,
இண்டை கட்டி இணைஅடி ஏத்தியும்,
பண்டரங்கர் பராய்த்துறைப் பாங்கரைக்
கண்டுகொண்டு, அடியேன் உய்ந்து போவனே. 10

அரக்கன் ஆற்றல் அழித்த அழகனை,
பரக்கும் நீர்ப் பொன்னி மன்னு பராய்த்துறை
இருக்கை மேவிய ஈசனை, ஏத்துமின்!
பொருக்க, நும்வினை போய் அறும்; காண்மினே! 11

திரு ஆனைக்கா V-31 திருக் குறுந்தொகை

கோனைக் காவிக் குளிர்ந்த மனத்தராய்த்
தேனைக் காவி உண்ணார், சிலதெண்ணர்கள்;
ஆனைக்காவில் எம்மானை அணைகிலார்,
ஊனைக் காவி உழிதர்வர், ஊமரே. 1

திருகு சிந்தையைத் தீர்த்து, செம்மை செய்து,
பருகி ஊறலை, பற்றிப் பதம் அறிந்து,
உருகி, நைபவர்க்கு ஊனம் ஒன்று இன்றியே
அருகு நின்றிடும்—ஆனைக்கா அண்ணலே. 2

துன்பம் இன்றித் துயர் இன்றி என்றும், நீர்,
இன்பம் வேண்டில், இராப்பகல் ஏத்துமின்!
''என் பொன், ஈசன், இறைவன்'' என்று உள்குவார்க்கு
அன்பன் ஆயிடும்—ஆனைக்கா அண்ணலே. 3

நாவால் நன்று நறுமலர்ச்சேவடி
ஓவாது ஏத்தி உளத்து அடைத்தார், ''வினை
காவாய்!'' என்று தம் கைதொழுவார்க்கு எலாம்
''ஆவா!'' என்றிடும்—ஆனைக்கா அண்ணலே. 4

வஞ்சம் இன்றி வணங்குமின்! வைகலும்
வெஞ்சொல் இன்றி விலகுமின்! வீடு உற
நைஞ்சுநைஞ்சு நின்று உள் குளிர்வார்க்கு எலாம்,
''அஞ்சல்!''என்றிடும்—ஆனைக்கா அண்ணலே. 5

நடையை மெய் என்று நாத்திகம் பேசாதே;
படைகள் போல் வரும், பஞ்சமாபூதங்கள்;
தடை ஒன்று இன்றியே தன் அடைந்தார்க்கு எலாம்
அடைய நின்றிடும், ஆனைக்கா அண்ணலே. 6

ஒழுகு மாடத்துள் ஒன்பதுவாய்தலும்
கழுகு அரிப்பதன் முன்னம், கழல்அடி
தொழுது, கைகளால்-தூ மலர் தூவி நின்று,
அழுமவர்க்கு அன்பன்—ஆனைக்கா அண்ணலே. 7

உருளும்போது அறிவு ஒண்ணா; உலகத்தீர்!
தெருளும், சிக்கெனத் தீவினை சேராதே!
இருள் அறுத்து நின்று, ''ஈசன்'' என்பார்க்கு எலாம்
அருள் கொடுத்திடும்—ஆனைக்கா அண்ணலே. 8

நேசம்ஆகி நினை, மட நெஞ்சமே!
நாசம் ஆய குலநலம் சுற்றங்கள்
பாசம் அற்று, பராபர ஆனந்த
ஆசை உற்றிடும், ஆனைக்கா அண்ணலே. 9

ஓதம் மா கடல் சூழ் இலங்கைக்கு இறை
கீதம் கின்னரம் பாட, கெழுவினான்,
பாதம் வாங்கி, பரிந்து, அருள்செய்து, அங்கு ஓர்
ஆதிஆயிடும்—ஆனைக்கா அண்ணலே. 10

திருப் பூந்துருத்தி V-32 திருக் குறுந்தொகை

கொடி கொள் செல்வ விழாக் குணலை அருக்
கடி கொள் பூம்பொழில் கச்சி ஏகம்பனார்,
பொடிகள் பூசிய பூந்துருத்தி(ந்)நகர் 1
அடிகள், சேவடிக்கீழ் நாம் இருப்பதே!

ஆர்த்த தோல்உடை கட்டி ஓர் வேடனாய்ப்
பார்த்தனோடு படை தொடும்ஆகிலும்,
பூத்த நீள் பொழில் பூந்துருத்தி(ந்)நகர்த் 2
தீர்த்தன் சேவடிக்கீழ் நாம் இருப்பதே!

மாதினை மதித்தான், ஒருபாகமா;
காதலால் கரந்தான், சடைக் கங்கையை;
பூதநாயகன்—பூந்துருத்தி(ந்) நகர்க்கு
ஆதி; சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 3

மூவனாய், முதல்ஆய், இவ்வுலகுஎலாம்
காவனாய், கடுங் காலனைக் காய்ந்தவன்;
பூவின் நாயகன்—பூந்துருத்தி(ந்) நகர்த்
தேவன்; சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 4

செம்பொனே ஒக்கும் மேனியன்; தேசத்தில்
உம்பரார்அவரோடு அங்கு இருக்கிலும்,
பொன் பொன்னார் செல்வப் பூந்துருத்தி(ந்) நகர்
நம்பன்; சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 5

வல்லம் பேசி வலிசெய் மூன்றுஊரினைக்
கொல்லம் பேசிக் கொடுஞ்சரம் நூறினான்—
புல்லம் பேசியும்—பூந்துருத்தி(ந்) நகர்ச்
செல்வன்; சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 6

ஒருத்தனாய் உலகுஏழும் தொழ நின்று
பருத்த பாம்பொடு பால்மதி கங்கையும்
பொருத்தன்ஆகிலும், பூந்துருத்தி(ந்) நகர்த்
திருத்தன் சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 7

அதிரர் தேவர் இயக்கர் விச்சாதரர்
கருத நின்றவர் காண்பு அரிது ஆயினான்,
பொருத நீர் வரு பூந்துருத்தி(ந்) நகர்ச்
சதுரன், சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 8

செதுகு அரு மனத்தார் புறம்கூறினும்,
கொதுகு அருக் கண்ணின் நோன்பிகள் கூறினும்,—
பொதுவின் நாயகன்—பூந்துருத்தி(ந்) நகர்க்கு
அதிபன் சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 9

துடித்த தோள் வலி வாள் அரக்கன்தனைப்
பிடித்த கைஞ் ஞெரிந்துஉற்றன, கண்எலாம்
பொடிக்க ஊன்றிய, பூந்துருத்தி(ந்) நகர்ப்
படிக் கொள், சேவடிக்கீழ் நாம் இருப்பதே! 10

திருச் சோற்றுத்துறை V-33 திருக் குறுந்தொகை

கொல்லை ஏற்றினர், கோள் அரவத்தினர்,
தில்லைச் சிற்றம்பலத்து உறை செல்வனார்,
தொல்லைஊழியர், சோற்றுத்துறையர்க்கே
வல்லைஆய்ப் பணி செய், மட நெஞ்சமே! 1

முத்தி ஆக ஒரு தவம் செய்திலை;
அத்தியால் அடியார்க்கு ஒன்று அளித்திலை;
தொத்து நின்று அலர் சோற்றுத்துறையர்க்கே
பத்திஆய்ப் பணி செய், மட நெஞ்சமே! 2

ஒட்டி நின்ற உடல் உறு நோய்வினை
கட்டி நின்ற கழிந்து அவை போய் அற,
தொட்டு நின்றும் அச் சோற்றுத்துறையர்க்கே
பட்டிஆய்ப் பணி செய், மட நெஞ்சமே! 3

''ஆதியான், அண்டவாணர்க்கு அருள் நல்கும்
நீதியான்'' என்றும், ''நின்மலனே'' என்றும்,
''சோதியான்'' என்றும், சோற்றுத்துறையர்க்கே
வாதிஆய்ப் பணி செய், மட நெஞ்சமே! 4

''ஆட்டினாய், அடியேன் வினைஆயின
ஓட்டினாய்; ஒரு காதில் இலங்கு வெண்-
தோட்டினாய்'' என்று சோற்றுத்துறையர்க்கே
நீட்டி நீ பணி செய், மட நெஞ்சமே! 5

பொங்கி நின்று எழுந்த(க்) கடல்நஞ்சினைப்
பங்கி உண்டது ஓர் தெய்வம் உண்டோ? சொலாய்!
தொங்கி நீ என்றும் சோற்றுத்துறையர்க்குத்
தங்கி நீ பணி செய், மட நெஞ்சமே! 6

ஆணி போல நீ ஆற்ற வலியைகாண்;
ஏணி போல் இழிந்து ஏறியும், ஏங்கியும்,
தோணி ஆகிய சோற்றுத்துறையர்க்கே
பூணிஆய்ப் பணி செய், மட நெஞ்சமே! 7

பெற்றம் ஏறில் என்? பேய் படை ஆகில் என்?
புற்றில் ஆடு அரவேஅது பூணில் என்?
சுற்றி நீ, என்றும் சோற்றுத்துறையர்க்கே
பற்றி, நீ பணி செய், மட நெஞ்சமே! 8

அல்லியான், அரவுஐந்தலைநாக(அ)ணைப்-
பள்ளியான், அறியாத பரிசுஎலாம்
சொல்லி, நீ என்றும் சோற்றுத்துறையர்க்கே
புல்லி, நீ பணி செய், மட நெஞ்சமே! 9

மிண்டரோடு விரவியும் வீறு இலாக்
குண்டர்தம்மைக் கழிந்து உய்யப் போந்து, நீ
தொண்டு செய்து, என்றும் சோற்றுத்துறையர்க்கே
உண்டு, நீ பணி செய், மட நெஞ்சமே! 10

வாழ்ந்தவன் வலி வாள் அரக்கன்தனை
ஆழ்ந்து போய் அலற(வ்) விரல் ஊன்றினான்,
சூழ்ந்த பாரிடம் சோற்றுத்துறையர்க்கே
தாழ்ந்து நீ பணி செய், மட நெஞ்சமே! 11

திரு நெய்த்தானம் V-34 திருக் குறுந்தொகை

கொல்லியான், குளிர் தூங்கு குற்றாலத்தான்,
புல்லியார் புரம்மூன்று எரிசெய்தவன்,
நெல்லியான், நிலைஆன நெய்த்தானனைச்
சொல்லி மெய் தொழுவார் சுடர்வாணரே. 1

இரவனை, இடு வெண்தலை ஏந்தியை,
பரவனை, படையார் மதில்மூன்றையும்
நிரவனை, நிலைஆன நெய்த்தானனை,
குரவனை, தொழுவார் கொடிவாணரே. 2

ஆன்இடைஐந்தும்ஆடுவர்; ஆர்இருள்
கான்இடை நடம்ஆடுவர்; காண்மினோ!
தேன் இடை மலர் பாயும் நெய்த்தானனை
வான்இடைத் தொழுவார் வலிவாணரே. 3

விண்டவர் புரம்மூன்றும் வெண்நீறு எழக்
கண்டவன், கடிதுஆகிய நஞ்சினை
உண்டவன்(ன்), ஒளிஆன நெய்த்தானனைத்
தொண்டராய்த் தொழுவார் சுடர்வாணரே. 4

முன்கை நோவக் கடைந்தவர் நிற்கவே
சங்கியாது சமுத்திர நஞ்சு உண்டான்,
நங்கையோடு நவின்ற நெய்த்தானனைத்
தம் கையால்-தொழுவார் தலைவாணரே. 5

சுட்டநீறு மெய் பூசி, சுடலையுள்
நட்டம்ஆடுவர், நள்இருள் பேயொடே;
சிட்டர், வானவர், தேரும் நெய்த்தானனை
இட்டம்ஆய்த் தொழுவார் இன்பவாணரே. 6

கொள்ளித் தீ-எரி வீசிக் கொடியது ஓர்
கள்ளிக்காட்டுஇடை ஆடுவர்; காண்மினோ!
தெள்ளித் தேறித் தெளிந்து நெய்த்தானனை
உள்ளத்தால்-தொழுவார் உம்பர்வாணரே. 7

உச்சிமேல் விளங்கும்(ம்) இளவெண்பிறை
பற்றி ஆடுஅரவோடும் சடைப் பெய்தான்,
நெற்றி ஆர்அழல் கண்ட நெய்த்தானனைச்
சுற்றி மெய் தொழுவார் சுடர்வாணரே. 8

மாலொடும், மறை ஓதிய நான்முகன்,
காலொடும் முடி காண்பு அரிதுஆயினான்;
சேலொடும் செருச் செய்யும் நெய்த்தானனை
மாலொடும் தொழுவார் வினை வாடுமே. 9

வலிந்த தோள் வலி வாள் அரக்கன்தனை
நெருங்க நீள் வரை ஊன்று நெய்த்தானனார்,
புரிந்து கைந்நரம்போடு இசை பாடலும்
பரிந்தனை, பணிவார் வினை பாறுமே. 10

திருப் பழனம் V-35 திருக் குறுந்தொகை

அருவனாய், அத்திஈர்உரி போர்த்து உமை
உருவனாய், ஒற்றியூர் பதிஆகிலும்,
பரு வரால் வயல் சூழ்ந்த பழனத்தான்,
திருவினால்-திரு வேண்டும், இத் தேவர்க்கே. 1

வையம் வந்து வணங்கி வலம்கொளும்
ஐயனை அறியார், சிலர்ஆதர்கள்;
பை கொள் பாம்பு அரை ஆர்த்த பழனன்பால்
பொய்யர் காலங்கள் போக்கிடுவார்களே. 2

வண்ணம்ஆக முறுக்கிய வாசிகை
திண்ணம்ஆகத் திருச்சடைச் சேர்த்தியே
பண்ணும் ஆகவே பாடும், பழனத்தான்;
எண்ணும், நீர் அவன் ஆயிரம்நாமமே! 3

மூர்க்கப் பாம்பு பிடித்தது மூச்சிட,
வாக்கு அப் பாம்பினைக் கண்ட துணிமதி
பாக்க, பாம்பினைப் பற்றும் பழனத்தான்,
தார்க் கொள் மாலை சடைக் கரந்திட்டதே. 4

நீலம் உண்ட மிடற்றினன்; நேர்ந்தது ஓர்
கோலம் உண்ட குணத்தான்; நிறைந்தது ஓர்-
பாலும் உண்டு, பழனன்பால்; என்னிடை
மாலும் உண்டு, இறை என்தன் மனத்துளே. 5

மந்தம்ஆக வளர்பிறை சூடி ஓர்
சந்தம்ஆகத் திருச்சடை சாத்துவான்,
பந்தம்ஆயின தீர்க்கும் பழனத்தான்,
எந்தை தாய் தந்தை எம்பெருமானுமே. 6

மார்க்கம் ஒன்று அறியார், மதிஇ(ல்)லிகள்;
பூக் கரத்தின் புரிகிலர், மூடர்கள்;—
பார்க்க நின்று பரவும் பழனத்தான்
தாள்கண் நின்று தலை வணங்கார்களே. 7

ஏறினார் இமையோர்கள் பணி கண்டு
தேறுவார்அலர், தீவினையாளர்கள்;
பாறினார் பணி வேண்டும் பழனத்தான்
கூறினான், உமையாளொடும் கூடவே. 8

சுற்றுவார்; தொழுவார்; சுடர்வண்ணன், மேல்-
தெற்றினார் திரியும் புரம்மூன்று எய்தான்,
பற்றினார் வினை தீர்க்கும் பழனனை,
எற்றினால் மறக்கேன், எம்பிரானையே? 9

பொங்கு மாகடல் சூழ் இலங்கைக்கு இறை
அங்கம்ஆன இறுத்து அருள்செய்தவன்,
பங்கன், என்றும் பழனன், உமையொடும்
தங்கன், தாள் அடியேன் உடை உச்சியே. 10

திருச் செம்பொன்பள்ளி V-36 திருக் குறுந்தொகை

கான் அறாத கடிபொழில் வண்டுஇனம்
தேன் அறாத திருச் செம்பொன்பள்ளியான்,
ஊன் அறாதது ஓர் வெண்தலையில் பலி-
தான் அறாதது ஓர் கொள்கையன்; காண்மினே! 1

என்பும் ஆமையும் பூண்டு அங்கு உழிதர்வர்க்கு
அன்பும் ஆயிடும் ஆயிழையீர்! இனிச்
செம்பொன்பள்ளி உளான் சிவலோகனை
நம் பொன்பள்ளி உள்க(வ்), வினை நாசமே. 2

வேறு கோலத்தர்; ஆண் அலர்; பெண் அலர்;
கீறு கோவண ஐ துகில் ஆடையர்;
தேறல் ஆவது ஒன்று அன்று, செம்பொன்பள்ளி
ஆறு சூடிய அண்ணல்அவனையே. 3

அருவராதது ஓர் வெண்தலை ஏந்தி வந்து
இருவராய், இடுவார் கடை தேடுவார்,
தெருஎலாம் உழல்வார்—செம்பொன்பள்ளியார்;
ஒருவர்தாம் பலபேர் உளர்; காண்மினே! 4

பூ உலாம் சடைமேல் புனல் சூடினான்,
ஏவலால் எயில்மூன்றும் எரித்தவன்—
தேவர் சென்று இறைஞ்சும் செம்பொன்பள்ளியான்;
மூவராய் முதல்ஆய் நின்ற மூர்த்தியே. 5

சலவராய் ஒரு பாம்பொடு தண்மதிக்
கலவர் ஆவதன் காரணம் என்கொலோ—
திலக நீள் முடியார், செம்பொன்பள்ளியார்,
குலவிலால் எயில்மூன்று எய்த கூத்தரே? 6

கை கொள் சூலத்தர், கட்டுவாங்கத்தினர்,
மை கொள் கண்டத்தர்ஆகி இருசுடர்
செய்யமேனி வெண்நீற்றர்—செம்பொன்பள்ளி
ஐயர்; கையது, ஓர் ஐந்தலைநாகமே. 7

வெங் கண் நாகம் வெருஉற ஆர்த்தவர்,
பைங்கண் ஆனையின் ஈர்உரி போர்த்தவர்,
செங்கண் மால்விடையார்—செம்பொன்பள்ளியார்;
அங்கண்ஆய் அடைந்தார் வினை தீர்ப்பரே. 8

நன்றி நாரணன், நான்முகன், என்று இவர்
நின்ற நீள் முடியோடு அடி காண்புஉற்றுச்
சென்று காண்பு அரியான்—செம்பொன்பள்ளியான்,
நின்ற சூழலில் நீள் எரி ஆகியே. 9

திரியும் மும்மதில் செங் கணை ஒன்றினால்
எரிய எய்து, அனல் ஓட்டி, இலங்கைக் கோன்
நெரிய ஊன்றியிட்டார்—செம்பொன்பள்ளியார்;
அரிய வானம் அவர் அருள்செய்வரே. 10

திருக் கடவூர்வீரட்டம் V-37 திருக் குறுந்தொகை

மலைக் கொள் ஆனை மயக்கிய வல்வினை
நிலைக்கொள் ஆனை நினைப்புறு, நெஞ்சமே!
கொலைக் கை யானையும் கொன்றிடும் ஆதலால்,
கலைக் கையானைகண்டீர்—கடவூரரே. 1

வெள்ளிமால்வரை போல்வது ஓர் ஆனையார்;
உள்ளஆறு எனை உள் புகும் ஆனையார்;
கொள்ளம் ஆகிய கோயிலுள் ஆனையார்;
கள்ள ஆனைகண்டீர்—கடவூரரே. 2

ஞானம் ஆகிய நன்கு உணர் ஆனையார்;
ஊனை வேவ உருக்கிய ஆனையார்;
வேனல் ஆனை உரித்து உமை அஞ்சவே,
கான ஆனைகண்டீர்—கடவூரரே. 3

ஆலம் உண்டு அழகுஆயது ஓர் ஆனையார்;
நீலமேனி நெடும் பளிங்கு ஆனையார்;
கோலம்ஆய கொழுஞ் சுடர் ஆனையார்;
கானஆனைகண்டீர்—கடவூரரே. 4

அளித்த ஆன்அஞ்சும்ஆடிய ஆனையார்;
வெளுத்த நீள்கொடி ஏறு உடை ஆனையார்;
எளித்த வேழத்தை எள்குவித்த ஆனையார்;
களித்த ஆனைகண்டீர்—கடவூரரே. 5

விடுத்த மால்வரை விண் உற ஆனையார்;
தொடுத்த மால்வரை தூயது ஓர் ஆனையார்;
கடுத்த காலனைக் காய்ந்தது ஓர் ஆனையார்;
கடுத்த ஆனைகண்டீர்—கடவூரரே. 6

மண்உளாரை மயக்குஉறும் ஆனையார்;
எண்உளார்பலர் ஏத்திடும் ஆனையார்;
விண்உளார்பலரும்(ம்) அறி ஆனையார்;
கண்ணுள் ஆனைகண்டீர்—கடவூரரே. 7

சினக்கும் செம்பவளத்திரள் ஆனையார்;
மனக்கும் வல்வினை தீர்த்திடும் ஆனையார்;
அனைக்கும் அன்புஉடையார் மனத்துஆனையார்;
கனைக்கும் ஆனைகண்டீர்—கடவூரரே. 8

வேதம்ஆகிய வெஞ் சுடர் ஆனையார்;
நீதியால் நிலன்ஆகிய ஆனையார்;
ஓதி ஊழி தெரிந்து உணர் ஆனையார்;
காதல் ஆனைகண்டீர்—கடவூரரே. 9

நீண்ட மாலொடு நான்முகன்தானும்ஆய்,
''காண்டும்'' என்று புக்கார்கள் இருவரும்
ஆண்ட ஆர்அழல் ஆகிய ஆனையார்;
காண்டல் ஆனைகண்டீர்—கடவூரரே. 10

அடுத்து வந்த இலங்கையர்மன்னனை
எடுத்த தோள்கள் இற நெரித்த ஆனையார்;
கடுத்த காலனைக் காய்ந்தது ஓர் ஆனையார்;
கடுக்கை ஆனைகண்டீர்—கடவூரரே. 11

திருக் கடவூர்மயானம் V-38 திருக் குறுந்தொகை

குழை கொள் காதினர், கோவணஆடையர்,
உழையர்தாம்—கடவூரின் மயானத்தார்;
பழைய தம் அடியார் செய்யும் பாவமும்
பிழையும் தீர்ப்பர், பெருமான்அடிகளே. 1

உன்னி வானவர் ஓதிய சிந்தையில்
கன்னல், தேன்—கடவூரின் மயானத்தார்;
தன்னை நோக்கித் தொழுது எழுவார்க்கு எலாம்
‘‘பின்னை’’ என்னார், பெருமான்அடிகளே. 2

சூலம் ஏந்துவர், தோல்உடைஆடையர்,
ஆலம் உண்டு அமுதே மிகத் தேக்குவர்,
காலகாலர்—கடவூர் மயானத்தார்;
மாலை மார்பர், பெருமான்அடிகளே. 3

இறைவனார், இமையோர் தொழு பைங்கழல்
மறவனார்—கடவூரின் மயானத்தார்;
அறவனார், அடியார்அடியார்தங்கள்
பிறவி தீர்ப்பர், பெருமான்அடிகளே. 4

கத்து காளி கதம் தணிவித்தவர்,
மத்தர்தாம்—கடவூரின் மயானத்தார்;
ஒத்து ஒவ்வாதன செய்து உழல்வார், ஒரு
பித்தர்காணும், பெருமான்அடிகளே. 5

எரி கொள் மேனி இளம்பிறை வைத்தவர்,
கரியர்தாம்—கடவூரின் மயானத்தார்;
அரியர், அண்டத்துஉளோர் அயன் மாலுக்கும்;
பெரியர்காணும், பெருமான் அடிகளே. 6

அணங்கு பாகத்தர், ஆரணநால்மறை
கணங்கள் சேர் கடவூரின் மயானத்தார்;
வணங்குவார் இடர் தீர்ப்பர், மயக்குஉறும்
பிணம் கொள் காடர்—பெருமான்அடிகளே. 7

அரவு கையினர், ஆதிபுராணனார்—
மரவு சேர் கடவூரின் மயானத்தார்;
பரவுவார் இடர் தீர்ப்பர், பணி கொள்வர்,
பிரமன் மாற்கும் பெருமான்அடிகளே. 8

திரு மயிலாடுதுறை V-39 திருக் குறுந்தொகை

கொள்ளும் காதன்மை பெய்து உறும் கோல்வளை
உள்ளம் உள்கி உரைக்கும், திருப்பெயர்—
வள்ளல் மா மயிலாடுதுறை உறை
வெள்ளம் தாங்கு சடையனை வேண்டியே. 1

சித்தம் தேறும்; செறிவளை சிக்கெனும்;
பச்சை தீரும், என் பைங்கொடி—பால்மதி
வைத்த மா மயிலாடுதுறை அரன் 2
கொத்தினில் பொலி கொன்றை கொடுக்கிலே.

அண்டர் வாழ்வும், அமரர் இருக்கையும்,
கண்டு வீற்றிருக்கும் கருத்து ஒன்று இலோம்—
வண்டு சேர் மயிலாடுதுறை அரன் 3
தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே.

வெஞ்சினக் கடுங் காலன் விரைகிலான்;
அஞ்சு இறப்பும் பிறப்பும் அறுக்கல் ஆம்—
மஞ்சன், மா மயிலாடுதுறை உறை 4
அஞ்சலாள் உமைபங்கன், அருளிலே.

குறைவு இலோம், கொடு மானுட வாழ்க்கையால்—
கறை நிலாவிய கண்டன், எண்தோளினன்,
மறைவலான், மயிலாடுதுறை உறை 5
இறைவன், நீள் கழல் ஏத்தி இருக்கிலே.

நிலைமை சொல்லு, நெஞ்சே! தவம் என் செய்தாய்?—
கலைகள்ஆய வல்லான், கயிலாய நல்-
மலையன், மா மயிலாடுதுறையன், நம் 6
தலையின்மேலும் மனத்துளும் தங்கவே.

நீற்றினான், நிமிர்புன்சடையான், விடை-
ஏற்றினான், நமை ஆள்உடையான், புலன்
மாற்றினான், மயிலாடுதுறை என்று 7
போற்றுவார்க்கும் உண்டோ, புவி வாழ்க்கையே?

கோலும், புல்லும், ஒரு கையில் கூர்ச்சமும்,
தோலும், பூண்டு துயரம் உற்று என் பயன்?
நீல மா மயில் ஆடு துறையனே! 8
நூலும் வேண்டுமோ, நுண் உணர்ந்தோர்கட்கே?

பணம் கொள் ஆடுஅரவு அல்குல் பகீரதி
மணம் கொளச் சடை வைத்த மறையவன்,
வணங்கும் மா மயிலாடுதுறை அரன், 9
அணங்கு ஓர்பால் கொண்ட கோலம் அழகிதே!

நீள் நிலா அரவச் சடை நேசனைப்
பேணிலாதவர் பேதுறவு ஓட்டினோம்;
வாள்நிலா மயிலாடுதுறைதனைக் 10
காணில், ஆர்க்கும் கடுந் துயர் இல்லையே.

பருத்த தோளும் முடியும் பொடிபட
இருத்தினான், அவன் இன்இசை கேட்டலும்
வரத்தினான், மயிலாடுதுறை தொழும் 11
கரத்தினார் வினைக்கட்டு அறும்; காண்மினே!

திருக் கழிப்பாலை V-40 திருக் குறுந்தொகை

வண்ணமும் வடிவும் சென்று கண்டிலள்;
எண்ணி நாமங்கள் ஏத்தி நிறைந்திலள்;
கண் உலாம் பொழில் சூழ் கழிப்பாலை எம்
அண்ணலே அறிவான், இவள் தன்மையே! 1

மருந்து வானவர் உய்ய நஞ்சு உண்டு உகந்து
இருந்தவன், கழிப்பாலையுள் எம்பிரான்,
திருந்து சேவடி சிந்தையுள் வைத்து, இவள்,
பரிந்து உரைக்கிலும், என் சொல் பழிக்குமே. 2

மழலைதான் வரச் சொல்-தெரிகின்றிலள்;
குழலின் நேர் மொழி கூறிய கேண்மினே:
''அழகனே! கழிப்பாலை எம் அண்ணலே!
இகழ்வதோ, எனை? ஏன்றுகொள்!'' என்னுமே. 3

செய்யமேனி வெண்நீறு அணிவான்தனை
மையல் ஆகி, மதிக்கிலள், ஆரையும்;
கை கொள் வெண்மழுவன், கழிப்பாலை எம்
ஐயனே அறிவான், இவள் தன்மையே. 4

கருத்தனை, கழிப்பாலையுள் மேவிய
ஒருத்தனை, உமையாள் ஒருபங்கனை,
''அருத்தியால் சென்று கண்டிட வேண்டும்'' என்று
ஒருத்தியார் உளம் ஊசல்அது ஆகுமே. 5

''கங்கையைச் சடை வைத்து மலைமகள்-
நங்கையை உடனேவைத்த நாதனார்,
திங்கள்சூடி, திருக் கழிப்பாலையான்,
இங்கு வந்திடும்'' என்று இறுமாக்குமே. 6

''ஐயனே! அழகே! அனல் ஏந்திய
கையனே! கறை சேர்தரு கண்டனே!
மை உலாம் பொழில் சூழ் கழிப்பாலை எம்
ஐயனே, விதியே, அருள்!'' என்னுமே. 7

பத்தர்கட்கு அமுதுஆய பரத்தினை,
முத்தனை, முடிவு ஒன்று இலா மூர்த்தியை,
அத்தனை, அணி ஆர் கழிப்பாலை எம்
சித்தனை, சென்று சேருமா செப்புமே! 8

பொன் செய் மா முடி வாள் அரக்கன் தலை-
அஞ்சும்நான்கும் ஒன்று(ம்) இறுத்தான்அவன்
என் செயான்? கழிப்பாலையுள் எம்பிரான்
துஞ்சும்போதும் துணை எனல் ஆகுமே. 9

திருப் பைஞ்ஞீலி V-41 திருக் குறுந்தொகை

உடையர் கோவணம், ஒன்றும் குறைவு இலர்—
படை கொள் பாரிடம் சூழ்ந்த பைஞ்ஞீலியார்;
சடையின் கங்கை தரித்த சதுரரை
அடைய வல்லவர்க்கு இல்லை, அவலமே. 1

மத்தம்மாமலர் சூடிய மைந்தனார்
சித்தராய்த் திரிவார் வினை தீர்ப்பரால்;
பத்தர்தாம் தொழுது ஏத்து பைஞ்ஞீலி எம்
அத்தனைத் தொழ வல்லவர் நல்லரே. 2

விழுது சூலத்தன்; வெண்மழுவாட்படை,
கழுது துஞ்சு இருள் காட்டுஅகத்து ஆடலான்;
பழுது ஒன்று இன்றிப் பைஞ்ஞீலிப் பரமனைத்
தொழுது செல்பவர்தம் வினை தூளியே. 3

ஒன்றி மாலும் பிரமனும் தம்மிலே
நின்ற சூழல் அறிவு அரியான்—இடம்
சென்று பார்!—இடம் ஏத்து பைஞ்ஞீலியுள்
என்றும் மேவி இருந்த அடிகளே. 4

வேழத்தின்(ன்)உரி போர்த்த விகிர்தனார்,
தாழச் செஞ்சடைமேல் பிறை வைத்தவர்—
தாழைத்தண்பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலியார்;
யாழின் பாட்டை உகந்த அடிகளே. 5

குண்டுபட்டு, குறி அறியாச் சமண்-
மிண்டரோடு படுத்து, உய்யப் போந்து, நான்,
கண்டம் கார், வயல் சூழ்ந்த பைஞ்ஞீலி, எம்
அண்டவாணன், அடி அடைந்து உய்ந்தெனே. 6

வரிப் பை ஆடுஅரவு ஆட்டி மதகரி-
உரிப்பை மூடிய உத்தமனார் உறை
திருப் பைஞ்ஞீலி திசை தொழுவார்கள் போய்
இருப்பர், வானவரோடு இனிதுஆகவே, 7

கோடல் கோங்கம் புறவு அணி முல்லைமேல்
பாடல் வண்டு இசை கேட்கும் பைஞ்ஞீலியார்,
பேடும் ஆணும் பிறர் அறியாதது ஓர்—
ஆடும் நாகம் அசைத்த—அடிகளே. 8

கார் உலாம் மலர்க்கொன்றைஅம்தாரினன்,
வார்உலாம்முலைமங்கை ஓர்பங்கினன்,
தேர் உலாம் பொழில் சூழ்ந்த பைஞ்ஞீலி எம்
ஆர்கிலா அமுதை, அடைந்து உய்ம்மினே! 9

''தருக்கிச் சென்று தடவரை பற்றலும்
நெருக்கி ஊன்ற நினைந்து, சிவனையே
அரக்கன் பாட, அருளும் எம்மான் இடம்,
இருக்கை ஞீலி'' என்பார்க்கு இடர் இல்லையே. 10

திரு வேட்களம்

V-42

திருக் குறுந்தொகை

நன்று நாள்தொறும் நம் வினை போய் அறும்;
என்றும் இன்பம் தழைக்க இருக்கல் ஆம்;
சென்று, நீர், திரு வேட்களத்துள்(ள்) உறை
துன்று பொன்சடையானைத் தொழுமினே! 1

கருப்புவெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்;
பொருப்புவெஞ்சிலையால் புரம் செற்றவன்;
விருப்பன் மேவிய வேட்களம் கைதொழுது
இருப்பன்ஆகில், எனக்கு இடர் இல்லையே. 2

வேட்களத்து உறை வேதியன், எம் இறை;
ஆக்கள் ஏறுவர்; ஆன்ஐஞ்சும்ஆடுவர்;
பூக்கள்கொண்டு அவன் பொன்அடி போற்றினால்
காப்பர் நம்மை, கறைமிடற்று அண்ணலே. 3

அல்லல் இல்லை; அருவினைதான் இல்லை—
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்,
செல்வனார், திரு வேட்களம் கைதொழ
வல்லர்ஆகில்; வழிஅது காண்மினே! 4

துன்பம் இல்லை; துயர் இல்லை; யாம், இனி
நம்பன் ஆகிய நல் மணிகண்டனார்,
என் பொனார், உறை வேட்கள நன்நகர்
இன்பன், சேவடி ஏத்தி இருப்பதே. 5

கட்டப்பட்டுக் கவலையில் வீழாதே
பொட்ட வல் உயிர் போவதன் முன்னம், நீர்,
சிட்டனார் திரு வேட்களம் கைதொழ,
பட்ட வல்வினைஆயின பாறுமே. 6

வட்டமென்முலையாள்உமை பங்கனார்,
எட்டும் ஒன்றும் இரண்டும் மூன்று ஆயினார்,
சிட்டர், சேர் திரு வேட்களம் கைதொழுது
இட்டம்ஆகி இரு, மட நெஞ்சமே! 7

நட்டம்ஆடிய நம்பனை, நாள்தொறும்
இட்டத்தால் இனிதுஆக நினைமினே—
வட்டவார்முலையாள்உமை பங்கனார்,
சிட்டனார், திரு வேட்களம்தன்னையே! 8

வட்ட மா மதில்மூன்று உடை வல் அரண்
சுட்ட கொள்கையர்ஆயினும், சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர்போல்,- திரு வேட்களச் செல்வரே. 9

சேடனார் உறையும் செழு மாமலை
ஓடி அங்கு எடுத்தான் முடிபத்து இற
வாட ஊன்றி, மலர்அடி வாங்கிய
வேடனார் உறை வேட்களம் சேர்மினே! 10

திரு நல்லம் V-43 திருக் குறுந்தொகை

கொல்லத்தான் நமனார்தமர் வந்தக்கால்,
இல்லத்தார் செய்யல்ஆவது என்? ஏழைகாள்!
நல்லத்தான், நமை ஆள்உடையான், கழல்
சொல்லத்தான் வல்லிரேல்,-துயர் தீருமே. 1

பொக்கம் பேசிப் பொழுது கழியாதே,
துக்கம் தீர் வகை சொல்லுவன்; கேண்மினோ;
தக்கன் வேள்வி தகர்த்த தழல்வண்ணன்,
நக்கன், சேர் நல்லம் நண்ணுதல் நன்மையே. 2

பிணிகொள் வார்குழல் பேதையர் காதலால்
பணிகள் மேவிப் பயன் இல்லை; பாவிகாள்!
அணுக வேண்டில், அரன்நெறி ஆவது;
நணுகும், நாதன் நகர் திரு நல்லமே! 3

தமக்கு நல்லது; தம் உயிர் போயினால்;
இமைக்கும்போதும் இராது, இக் குரம்பைதான்;
உமைக்கு நல்லவன்தான் உறையும் பதி—
நமக்கு நல்லது—நல்லம் அடைவதே. 4

உரை தளர்ந்து உடலார் நடுங்காமுனம்,
நரைவிடை உடையான் இடம்நல்லமே
பரவுமின்! பணிமின்! பணிவாரொடே
விரவுமின்! விரவாரை விடுமினே! 5

அல்லல்ஆக ஐம்பூதங்கள் ஆட்டினும்,
வல்லஆறு ''சிவாயநம'' என்று,
நல்லம் மேவிய நாதன் அடி தொழ,
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே. 6

மாதராரொடு, மக்களும், சுற்றமும்,
பேதம் ஆகிப் பிரிவதன் முன்னமே,
நாதன் மேவிய நல்லம்நகர் தொழப்
போதுமின்! எழுமின்! புகல் ஆகுமே. 7

வெம்மைஆன வினைக்கடல் நீங்கி, நீர்,
செம்மைஆய சிவகதி சேரல் ஆம்;
சும்மை ஆர் மலர் தூவித் தொழுமினோ,
நம்மை ஆள்உடையான் இடம்நல்லமே! 8

காலம்ஆன கழிவதன் முன்னமே,
ஏலும்ஆறு வணங்கி, நின்று, ஏத்துமின்—
மாலும், மா மலரானொடு, மாமறை-
நாலும் வல்லவர், கோன் இடம்நல்லமே! 9

மல்லை மல்கிய தோள் அரக்கன் வலி
ஒல்லையில்(ல்) ஒழித்தான் உறையும் பதி,
நல்ல நல்லம் எனும் பெயர், நாவினால்
சொல்ல வல்லவர் தூ நெறி சேர்வரே. 10

திரு ஆமாத்தூர் V-44 திருக் குறுந்தொகை

மா மாத்து ஆகிய மால் அயன் மால்கொடு
தாமாத் தேடியும் காண்கிலர், தாள் முடி;
''ஆமாத்தூர் அரனே! அருளாய்!'' என்றுஎன்று
ஏமாப்பு எய்திக் கண்டார், இறையானையே. 1

சந்தியானை, சமாதி செய்வார்தங்கள்
புந்தியானை, புத்தேளிர் தொழப்படும்
அந்தியானை, ஆமாத்தூர் அழகனை,
சிந்தியாதவர் தீவினையாளரே. 2

காமாத்தம்(ம்) எனும் கார்வலைப் பட்டு, நான்,
போம் ஆத்தை அறியாது, புலம்புவேன்;
''ஆமாத்தூர் அரனே'' என்று அழைத்தலும்,
தேமாத்தீம்கனி போல, தித்திக்குமே. 3

பஞ்சபூதவலையில் படுவதற்கு
அஞ்சி, நானும் ஆமாத்தூர் அழகனை
நெஞ்சினுள் நினைந்தேன்; நினைவு எய்தலும்,
வஞ்சஆறுகள் வற்றின; காண்மினே! 4

குரா மன்னும் குழலாள் ஒருகூறனார்,
அரா மன்னும் சடையான், திரு ஆமாத்தூர்
இராமனும் வழிபாடுசெய் ஈசனை,
நிராமயன்தனை, நாளும் நினைமினே! 5

பித்தனை, பெருந்தேவர் தொழப்படும்
அத்தனை, அணி ஆமாத்தூர் மேவிய
முத்தினை, அடியேன் உள் முயறலும்,
பத்திவெள்ளம் பரந்தது; காண்மினே! 6

நீற்றின் ஆர் திரு மேனியன்; நேரிழை
கூற்றினான்; குழல் கோலச் சடையில் ஓர்
ஆற்றினான்; அணி ஆமாத்தூர் மேவிய
ஏற்றினான்—எமை ஆள்உடை ஈசனே. 7

பண்ணில் பாடல்கள் பத்திசெய் வித்தகர்க்கு
அண்ணித்து ஆகும் அமுதினை, ஆமாத்தூர்
சண்ணிப்பானை—தமர்க்கு அணித்துஆயது ஓர்
கண்ணில் பாவை அன்னான், அவன்—காண்மினே! 8

குண்டர் பீலிகள் கொள்ளும் குணம் இலா
மிண்டரோடு எனை வேறுபடுத்து உயக்-
கொண்ட நாதன், குளிர் புனல் வீரட்டத்து
அண்டனார், இடம் ஆமாத்தூர்; காண்மினே! 9

வானம் சாடும் மதி அரவத்தொடு
தான் அஞ்சாது உடன்வைத்த, சடையிடை,
தேன்அஞ்சுஆடிய, தெங்கு இளநீரொடும்
ஆன்அஞ்சுஆடிய, ஆமாத்தூர் ஐயனே! 10

விடலையாய் விலங்கல்(ல்) எடுத்தான் முடி
அடர ஓர்விரல் ஊன்றிய, ஆமாத்தூர்
இடம்அதாக் கொண்ட, ஈசனுக்கு என் உளம்
இடம்அதாக் கொண்டு இன்புற்று இருப்பனே. 11

திருத் தோணிபுரம் V-45 திருக் குறுந்தொகை

‘‘மாது இயன்று மனைக்கு இரு!’’ என்றக்கால்,
‘‘நீதிதான் சொல நீ எனக்கு ஆர்?’’ எனும்;
‘‘சோதி ஆர்தரு தோணிபுரவர்க்குத்
தாதி ஆவன், நான்’’ என்னும்—என் தையலே. 1

நக்கம் வந்து ‘‘பலி இடு!’’ என்றார்க்கு, இட்டம்
மிக்க தையலை வெள்வளை கொள்வது—
தொக்க நீர்வயல்-தோணிபுரவர்க்கு—
தக்கது அன்று, தமது பெருமைக்கே. 2

கெண்டை போல் நயனத்து இமவான்மகள்
வண்டு வார்குழலாள் உடன்ஆகவே,
துண்டவான்பிறைத் தோணிபுரவரைக்
கண்டு காமுறுகின்றனள், கன்னியே. 3

பாலையாழ்மொழியாள்அவள் தாழ்சடை-
மேலள் ஆவது கண்டனள்; விண் உறச்
சோலை ஆர்தரு தோணிபுரவர்க்குச்
சால நல்லள் ஆகின்றனள்—தையலே. 4

பண்ணின் நேர் மொழியாள், பலி இட்ட இப்
பெண்ணை, மால்கொடு பெய்வளை கொள்வது,
சுண்ணம்ஆடிய தோணிபுரத்து உறை
அண்ணலாருக்குச் சால அழகிதே? 5

முல்லைவெண்நகை மொய்குழலாய்! உனக்கு
அல்லன் ஆவது அறிந்திலை, நீ; கனித்
தொல்லை ஆர் பொழில்-தோணிபுரவர்க்கே
நல்லை ஆயிடுகின்றனை—நங்கையே! 6

ஒன்றுதான் அறியார், உலகத்தவர்;
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பு இலர்;
துன்று வார் பொழில்-தோணிபுரவர்தம்
கொன்றை சூடும் குறிப்புஅது ஆகுமே. 7

உறவு பேய்க்கணம்; உண்பது வெண்தலை;
உறைவது ஈமம்; உடலில் ஓர் பெண்கொடி;
துறைகள் ஆர் கடல்-தோணிபுரத்து உறை
இறைவனார்க்கு இவள் என் கண்டு அன்புஆவதே? 8

மாக யானை மருப்பு ஏர் முலையினர்
போக, யானும் அவள் புக்கதே புக,
தோகை சேர்தரு தோணிபுரவர்க்கே
ஆக, யானும்—அவர்க்கு—இனி ஆள்அதே. 9

இட்டம்ஆயின செய்வாள், என் பெண்கொடி—
கட்டம் பேசிய கார்அரக்கன்தனைத்
துட்டு அடக்கிய தோணிபுரத்து உறை
அட்டமூர்த்திக்கு அன்புஅது ஆகியே. 10

திருப் புகலூர் V-46 திருக் குறுந்தொகை

துன்னக் கோவண, சுண்ணவெண்நீறு அணி,
பொன் நக்கன்ன சடை, புகலூரரோ!
மின் நக்கன்ன வெண்திங்களைப் பாம்புஉடன்
என்னுக்கோ உடன்வைத்திட்டு இருப்பதே? 1

இரைக்கும் பாம்பும், எறிதரு திங்களும்,
நுரைக்கும் கங்கையும், நுண்ணிய செஞ்சடை,
புரைப்பு இலாத பொழில் புகலூரரை
உரைக்குமா சொல்லி ஒள்வளை சோருமே. 2

''ஊசல் ஆம் அரவுஅல்குல் என் சோர்குழல்!
ஏசல் ஆம் பழி தந்து எழில் கொண்டன-
ரோ? சொலாய், மகளே! 'முறையோ?' என்று
பூசல் நாம் இடுதும், புகலூரர்க்கே.'' 3

மின்னின் நேர் இடையாள்உமை பங்கனை,
தன்னை நேர் ஒப்பு இலாத தலைவனை,
புன்னைக் காவல் பொழில் புகலூரனை,
என்னுள் ஆக வைத்து இன்புஉற்று இருப்பனே. 4

விண்ணின் ஆர் மதி சூடிய வேந்தனை
எண்ணி, நாமங்கள் ஓதி, எழுத்துஅஞ்சும்
கண்ணினால், கழல் காண்பு இடம் ஏது எனில்,
புண்ணியன் புகலூரும் என் நெஞ்சுமே! 5

அண்டவாணர் அமுது உண நஞ்சு உண்டு,
பண்டு நால்மறை ஓதிய பாடலன்;
தொண்டர்ஆகித் தொழுது மதிப்பவர்
புண்டரீகத்து உளார்—புகலூரரே. 6

தத்துவம் தலை கண்டு அறிவார் இலை;
தத்துவம் தலை கண்டவர் கண்டிலர்;
தத்துவம் தலைநின்றவர்க்கு அல்லது
தத்துவன்(ன்)அலன், தண் புகலூரனே. 7

பெருங் கை ஆகிப் பிளிறி வருவது ஓர்
கருங்கையானைக்-களிற்று உரி போர்த்தவர்;
வரும் கை யானை மதக்களிறுஅஞ்சினைப்
பொரும் கை யானைகண்டீர்—புகலூரரே. 8

பொன் ஒத்த(ந்) நிறத்தானும் பொருகடல்
தன் ஒத்த(ந்) நிறத்தானும் அறிகிலா,
புன்னைத் தாது பொழில், புகலூரரை,
''என் அத்தா!'' என, என் இடர் தீருமே. 9

மத்தனாய், மதியாது, மலைதனை
எத்தினான் திரள் தோள் முடிபத்து இற
ஒத்தினான் விரலால்; ஒருங்கு ஏத்தலும்
பொத்தினான் புகலூரைத் தொழுமினே! 10

திருக் கச்சி ஏகம்பம் V-47 திருக் குறுந்தொகை

பண்டு செய்த பழவினையின் பயன்
கண்டும்கண்டும், களித்திகாண், நெஞ்சமே!
வண்டு உலாம் மலர்ச் செஞ்சடை ஏகம்பன்
தொண்டனாய்த் திரியாய், துயர் தீரவே! 1

நச்சி நாளும் நயந்து அடியார் தொழ,
இச்சையால் உமைநங்கை வழிபட,—
கொச்சையார் குருகார்—செறி தீம்பொழில்
கச்சி ஏகம்பமே கைதொழுமினே! 2

ஊன் நிலாவி இயங்கி, உலகுஎலாம்
தான் உலாவிய தன்மையர்ஆகிலும்,
வான் உலாவிய பாணி பிறங்க, வெங்-
கானில் ஆடுவர்—கச்சி ஏகம்பரே. 3

இமையா முக்கணர், என் நெஞ்சத்து உள்ளவர்,
தமை யாரும்(ம்) அறிவு ஒண்ணாத் தகைமையர்,
இமையோர் ஏத்த இருந்தவன்—ஏகம்பன்;
நமை ஆளு(ம்)மவனைத் தொழுமின்களே! 4

மருந்தினோடு நல் சுற்றமும் மக்களும்
பொருந்தி நின்று, எனக்கு ஆய எம் புண்ணியன்;
கருந்தடங்கண்ணினாள் உமை கைதொழ
இருந்தவன்—கச்சி ஏகம்பத்து எந்தையே. 5

பொருளினோடு நல் சுற்றமும் பற்றுஇலர்க்கு
அருளும் நன்மை தந்து, ஆய அரும்பொருள்;
சுருள் கொள் செஞ்சடையான்; கச்சி ஏகம்பம்
இருள் கெடச் சென்று கைதொழுது ஏத்துமே! 6

மூக்கு வாய் செவி கண் உடல் ஆகி வந்து
ஆக்கும் ஐவர்தம் ஆப்பை அவிழ்த்து, அருள்
நோக்குவான்; நமை நோய்வினை வாராமே
காக்கும் நாயகன்—கச்சி ஏகம்பனே. 7

பண்ணில் ஓசை, பழத்தினில் இன்சுவை,
பெண்ணொடு ஆண் என்று பேசற்கு அரியவன்,
வண்ணம் இ(ல்)லி, வடிவு வேறு ஆயவன்,
கண்ணில் உள் மணி—கச்சி ஏகம்பனே. 8

திருவின்நாயகன் செம்மலர்மேல் அயன்
வெருவ, நீண்ட விளங்கு ஒளிச்சோதியான்;
ஒருவனாய், உணர்வுஆய், உணர்வுஅல்லது ஓர்
கருவுள் நாயகன்—கச்சி ஏகம்பனே. 9

இடுகுநுண்இடை, ஏந்து இளமென்முலை,
வடிவின், மாதர் திறம் மனம் வையன்மின்!
பொடி கொள் மேனியன், பூம்பொழில் கச்சியுள்
அடிகள், எம்மை அருந்துயர் தீர்ப்பரே. 10

இலங்கை வேந்தன் இராவணன் சென்று தன்
விலங்கலை எடுக்க(வ்), விரல் ஊன்றலும்,
கலங்கி, ''கச்சி ஏகம்பவோ!'' என்றலும்,
நலம் கொள் செல்வு அளித்தான், எங்கள் நாதனே. 11

திருக் கச்சி ஏகம்பம் V-48 திருக் குறுந்தொகை

பூமேலானும் பூமகள்கேள்வனும்
''நாமே தேவர்!'' எனாமை, நடுக்குஉற,
தீ மேவும்(ம்) உருவா! திரு ஏகம்பா!
ஆமோ, அல்லல்பட, அடியோங்களே? 1

அருந் திறல்(ல்) அமரர் அயன் மாலொடு
திருந்த நின்று வழிபடத் தேவியோடு
இருந்தவன்(ன்) எழில் ஆர், கச்சி ஏகம்பம்
பொருந்தச் சென்று புடைபட்டு எழுதுமே. 2

கறை கொள் கண்டத்து எண்தோள் இறை முக்கணன்,
மறை கொள் நாவினன், வானவர்க்கு ஆதியான்,
உறையும் பூம்பொழில் சூழ் கச்சி ஏகம்பம்
முறைமையால் சென்று முந்தித் தொழுதுமே. 3

பொறிப் புலன்களைப் போக்கு அறுத்து, உள்ளத்தை
நெறிப்படுத்து, நினைந்தவர் சிந்தையுள்
அறிப்புஉறும்(ம்) அமுதுஆயவன் ஏகம்பம்
குறிப்பினால், சென்று, கூடி, தொழுதுமே. 4

சிந்தையுள் சிவம்ஆய் நின்ற செம்மையோடு
அந்திஆய், அனல்ஆய், புனல், வானம்ஆய்,
புந்திஆய், புகுந்து உள்ளம் நிறைந்த எம்
எந்தை ஏகம்பம் ஏத்தித் தொழுமினே! 5

சாக்கியத்தொடு மற்றும் சமண்படும்
பாக்கியம்(ம்)இலார் பாடு செலாது, உறப்
பூக் கொள் சேவடியான் கச்சி ஏகம்பம்
நாக்கொடு ஏத்தி, நயந்து, தொழுதுமே. 6

முப்பினோடு முனிவு உறுத்து எம்தமை
ஆர்ப்பதன் முன், அணி அமரர்க்கு இறை
காப்பதுஆய கடிபொழில் ஏகம்பம்
சேர்ப்புஅதுஆக, நாம் சென்று அடைந்து உய்துமே. 7

ஆலும் மா மயில் சாயல் நல்லாரொடும்
சால நீ உறு மால் தவிர், நெஞ்சமே!
நீலமாமிடற்று அண்ணல்ஏகம்பனார்
கோல மா மலர்ப்பாதமே கும்பிடே! 8

பொய்அனைத்தையும் விட்டவர் புந்தியுள்
மெய்யனை, சுடர் வெண்மழு.ஏந்திய
கையனை, கச்சி ஏகம்பம் மேவிய
ஐயனை, தொழுவார்க்கு இல்லை, அல்லலே. 9

அரக்கன் தன் வலி உன்னி, கயிலையை
நெருக்கிச் சென்று, எடுத்தான் முடிதோள் நெரித்து
இரக்க இன்இசை கேட்டவன் ஏகம்பம்,
தருக்குஅதுஆக நாம் சார்ந்து, தொழுதுமே. 10

திரு வெண்காடு V-49 திருக் குறுந்தொகை

பண் காட்டிப் படிஆய தன் பத்தர்க்குக்
கண் காட்டி, கண்ணில் நின்ற மணி ஒக்கும்,
பெண் காட்டிப் பிறைச் சென்னி வைத்தான் திரு
வெண்காட்டை அடைந்து உய்(ம்), மட நெஞ்சமே! 1

கொள்ளி வெந்தழல் வீசி நின்று ஆடுவார்,
ஒள்ளிய(க்) கணம் சூழ் உமைபங்கனார்,
வெள்ளியன், கரியன், பசு ஏறிய
தெள்ளியன், திரு வெண்காடு அடை, நெஞ்சே! 2

ஊன் நோக்கும்(ம்) இன்பம் வேண்டி உழலாதே,
வான் நோக்கும் வழிஆவது நின்மினோ!
தான் நோக்கும் தன் அடியவர் நாவினில்-
தேன் நோக்கும் திரு வெண்காடு அடை, நெஞ்சே! 3

பரு வெண்கோட்டுப் பைங்கண் மதவேழத்தின்
உருவம் காட்டி நின்றான், உமை அஞ்சவே;
பெருவெண்காட்டு இறைவன்(ன்) உறையும்(ம்) இடம்
திரு வெண்காடு அடைந்து உய்(ம்), மட நெஞ்சமே! 4

பற்று அவன், கங்கை பாம்பு மதிஉடன்
உற்ற வன் சடையான், உயர் ஞானங்கள்
கற்றவன், கயவர் புரம் ஓர் அம்பால்
செற்றவன், திரு வெண்காடு அடை, நெஞ்சே! 5

கூடினான், உமையாள் ஒருபாகம்ஆய்;
வேடனாய் விசயற்கு அருள்செய்தவன்;
சேடனார்; சிவனார்; சிந்தை மேய வெண்-
காடனார்; அடியே அடை, நெஞ்சமே! 6

தரித்தவன், கங்கை, பாம்பு, மதிஉடன்;
புரித்த புன்சடையான்; கயவர் புரம்
எரித்தவன்; மறைநான்கினோடு ஆறுஅங்கம்
விரித்தவன்(ன்), உறை வெண்காடு அடை, நெஞ்சே! 7

பட்டம் இண்டை அவைகொடு பத்தர்கள்
‘‘சிட்டன், ஆதி’’ என்று(ச்)சிந்தைசெய்யவே,
நட்டமூர்த்தி—ஞானச்சுடர்ஆய் நின்ற
அட்டமூர்த்திதன்—வெண்காடு அடை, நெஞ்சே! 8

ஏனவேடத்தினானும் பிரமனும்
தான் அ(வ்)வேடம் முன் தாழ்ந்து அறிகின்றிலா
ஞானவேடன், விசயற்கு அருள்செய்யும்
கான வேடன்தன், வெண்காடு அடை, நெஞ்சே! 9

பாலை ஆடுவர், பல்மறை ஓதுவர்,
சேலை ஆடிய கண் உமை பங்கனார்,
வேலை ஆர் விடம் உண்ட வெண்காடர்க்கு
மாலைஆவது மாண்டவர் அங்கமே. 10

இரா வணம் செய, மா மதி பற்று அவ், ஐ-
யிரா வணம்(ம்) உடையான்தனை உள்குமின்!
இராவணன்தனை ஊன்றி அருள்செய்த
இராவணன் திரு வெண்காடு அடைமினே! 11

திரு வாய்மூர் V-50 திருக் குறுந்தொகை

‘‘எங்கே?’’ என்ன, இருந்த இடம் தேடிக்கொண்டு,
அங்கே வந்து, அடையாளம் அருளினார்;
தெங்கே தோன்றும் திரு வாய்மூர்ச் செல்வனார்
‘‘அங்கே வா!’’ என்று போனார்; அது என்கொலோ? 1

மன்னு மா மறைக்காட்டு மணாளனார்
உன்னிஉன்னி உறங்குகின்றேனுக்குத்
தன்னை வாய்மூர்த் தலைவன் ஆமா சொல்லி,
என்னை, ‘‘வா!’’ என்று போனார்; அது என்கொலோ? 2

தஞ்சே கண்டேன்; தரிக்கிலாது, ‘‘ஆர்?’’ என்றேன்;
‘‘அஞ்சேல்! உன்னை அழைக்க வந்தேன்’’ என்றார்;
‘‘உஞ்சேன்’’ என்று உகந்தே எழுந்து ஓட்டந்தேன்;
வஞ்சே வல்லரே, வாய்மூர் அடிகளே? 3

கழியக் கண்டிலேன்; கண் எதிரே கண்டேன்;
ஒழியப் போந்திலேன்; ஒக்கவே ஓட்டந்தேன்;
வழியில் கண்டிலேன்; வாய்மூர் அடிகள்தம்
சுழியில் பட்டுச் சுழல்கின்றது என்கொலோ? 4

‘‘ஒள்ளியார் இவர் அன்றி மற்று இல்லை’’ என்று
உள்கிஉள்கி, உகந்து, இருந்தேனுக்குத்
தெள்ளியார் இவர் போல, திரு வாய்மூர்க்
கள்ளியார் அவர் போல, கரந்ததே! 5

‘‘யாதே செய்தும், யாம் அலோம்; நீ’’ என்னில்,
ஆதே ஏயும்; அளவு இல் பெருமையான்—
மா தேவு ஆகிய வாய்மூர் மருவினார்—
‘‘போதே!’’ என்றும், புகுந்ததும், பொய்கொலோ? 6

பாடிப் பெற்ற பரிசில் பழங் காசு
வாடி வாட்டம் தவிர்ப்பார்அவரைப் போல்-
தேடிக்கொண்டு, ‘‘திரு வாய்மூர்க்கே’’ எனா,
ஓடிப் போந்து, இங்கு ஒளித்தஆறு என்கொலோ? 7

திறக்கப் பாடிய என்னினும் செந்தமிழ்
உறைப்புப் பாடி அடைப்பித்தார் உந் நின்றார்;
மறைக்க வல்லரோ, தம்மைத் திரு வாய்மூர்ப்
பிறைக் கொள் செஞ்சடையார்? இவர் பித்தரே! 8

தனக்கு ஏருமை தவிர்க்க என்று வேண்டினும்,
நினைத்தேன் பொய்க்கு அருள்செய்திடும் நின்மலன்
எனக்கே வந்து எதிர் ''வாய்மூருக்கே'' எனா,
புனற்கே பொன்கோயில் புக்கதும் பொய்கொலோ? 9

தீண்டற்கு அரிய திருவடி ஒன்றினால்
மீண்டற்கும் மிதித்தார், அரக்கன்தனை;
வேண்டிக்கொண்டேன், திரு வாய்மூர் விளக்கினை
''தூண்டிக்கொள்வன், நான்'' என்றாலும், தோன்றுமே. 10

திருப் பாலைத்துறை V-51 திருக் குறுந்தொகை

நீல மா மணிகண்டத்தர்; நீள் சடைக்
கோல மா மதி கங்கையும் கூட்டினார்;
சூலம் மான் மழு ஏந்தி, சுடர் முடிப்
பால்நெய்ஆடுவர்—பாலைத்துறையரே. 1

கவள மா களிற்றின்(ன்) உரி போர்த்தவர்;
தவள-வெண்நகை மங்கை ஒர்பங்கினர்;
திவள வானவர் போற்றித் திசைதொழும்
பவளமேனியர்—பாலைத்துறையரே. 2

மின்னின் நுண்இடைக் கன்னியர் மிக்கு, எங்கும்
பொன்னிநீர் மூழ்கிப் போற்றி அடி தொழ,
மன்னி நால்மறையோடு பல்கீதமும்
பன்னினார்அவர்—பாலைத்துறையரே. 3

நீடு காடு இடம்ஆய், நின்ற பேய்க்கணம்
கூடு பூதம் குழுமி நின்று ஆர்க்கவே,
ஆடினார் அழகுஆகிய நால்மறை
பாடினார்அவர்—பாலைத்துறையரே. 4

''சித்தர், கன்னியர், தேவர்கள், தானவர்,
பித்தர், நால்மறை வேதியர், பேணிய
அத்தனே! நமை ஆள்உடையாய்!'' எனும்
பத்தர்கட்கு அன்பர்—பாலைத்துறையரே. 5

விண்ணினார் பணிந்து ஏத்த, வியப்புஉறும்
மண்ணினார் மறவாது, ''சிவாய'' என்று
எண்ணினார்க்கு இடமா எழில் வானகம்
பண்ணினார்அவர்—பாலைத்துறையரே. 6

குரவனார்; கொடுகொட்டியும், கொக்கரை
விரவினார், பண் கெழுமிய வீணையும்;—
மருவு நாள்மலர் மல்லிகை, செண்பகம்,
பரவு நீர்ப் பொன்னிப் பாலைத்துறையரே. 7

தொடரும் தொண்டரைத் துக்கம் தொடர்ந்து வந்து
அடரும்போது, அரனாய் அருள்செய்பவர்;
கடலின் நஞ்சு அணி கண்டர்—கடிபுனல்
படரும் செஞ்சடைப் பாலைத்துறையரே. 8

மேகம் தோய் பிறை சூடுவர்; மேகலை
நாகம் தோய்ந்த அரையினர்; நல் இயல்
போகம் தோய்ந்த புணர்முலை மங்கை ஓர்-
பாகம் தோய்ந்தவர்—பாலைத்துறையரே. 9

வெங் கண் வாள்அரவு ஆட்டி வெருட்டுவர்;
அம் கணார்; அடியார்க்கு அருள் நல்குவர்;
செங்கண் மால் அயன் தேடற்கு அரியவர்;
பைங்கண் ஏற்றினர்—பாலைத்துறையரே. 10

உரத்தினால் அரக்கன்(ன்) உயர்மாமலை
நெருக்கினானை நெரித்து, அவன் பாடலும்
இரக்கமா அருள்செய்த பாலைத்துறை
கரத்தினால்-தொழுவார் வினை ஓயுமே. 11

திரு நாகேச்சுரம்　V-52　திருக் குறுந்தொகை

நல்லர்; நல்லது ஓர் நாகம் கொண்டு ஆட்டுவர்;
வல்லர், வல்வினை தீர்க்கும் மருந்துகள்;
பல்இல்ஓடு கை ஏந்திப் பலி திரி
செல்வர்போல்—திரு நாகேச்சுரவரே. 1

நாவல்அம்பெருந்தீவினில் வாழ்பவர்
மேவி வந்து வணங்கி, வினையொடு
பாவம்ஆயின பற்று அறுவித்திடும்
தேவர்போல்—திரு நாகேச்சுரவரே. 2

ஓதம் ஆர் கடலின் விடம் உண்டவர்;
ஆதியார், அயனோடு அமரர்க்கு எலாம்;
மாது ஓர்கூறர்; மழு வலன் ஏந்திய
நாதர்போல்—திரு நாகேச்சுரவரே. 3

சந்திர(ன்)னொடு சூரியர்தாம் உடன்-
வந்து சீர் வழிபாடுகள் செய்தபின்,
ஐந்தலைஅரவின் பணி கொண்டு, அருள்
மைந்தர்போல்—மணி நாகேச்சுரவரே. 4

பண்டு ஓர் நாள் இகழ் வான் பழித் தக்கனார்
கொண்ட வேள்விக் குமண்டைஅது கெட,
தண்டமா, விதாதாவின் தலை கொண்ட
செண்டர்போல்—திரு நாகேச்சுரவரே. 5

வம்பு பூங் குழல் மாது மறுக ஓர்
கம்ப யானை உரித்த கரத்தினர்;
செம்பொன் ஆர் இதழி(ம்)மலர்ச் செஞ்சடை
நம்பர்போல்—திரு நாகேச்சுரவரே. 6

மானை ஏந்திய கையினர்; மை அறு
ஞானச் சோதியர்; ஆதியர்; நாமம்தான்
ஆன அஞ்சுஎழுத்து ஓத, வந்து அண்ணிக்கும்
தேனர்போல்—திரு நாகேச்சுரவரே. 7

கழல் கொள் காலினர்; காலனைக் காய்ந்தவர்;
தழல் கொள் மேனியர்; சாந்தவெண்நீறு அணி
அழகர்; ஆல்நிழல்கீழ் அறம் ஓதிய
குழகர்போல்—குளிர் நாகேச்சுரவரே. 8

வட்ட மா மதில்மூன்றுஉடன் வல் அரண்
சுட்ட செய்கையர்ஆகிலும், சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்து, குளிர்விக்கும்
சிட்டர்போல்—திரு நாகேச்சுரவரே. 9

தூர்த்தன் தோள்முடிதாளும் தொலையவே
சேர்த்தினார், திருப்பாதத்து ஒருவிரல்;
ஆர்த்து வந்து, உலகத்தவர் ஆடிடும்
தீர்த்தர்போல்—திரு நாகேச்சுரவரே. 10

திரு அதிகைவீரட்டானம் V-53 திருக் குறுந்தொகை

கோணல் மா மதி சூடி, ஓர் கோவண
நாண் இல் வாழ்க்கை நயந்தும், பயன் இலை;
பாணில் வீணை பயின்றவன் வீரட்டம்
காணில்அல்லது, என் கண் துயில் கொள்ளுமே? 1

பண்ணினை, பவளத்திரள் மா மணி
அண்ணலை, அமரர் தொழும் ஆதியை,
சுண்ணவெண்பொடியான், திரு வீரட்டம்
நண்ணில்அல்லது, என் கண் துயில் கொள்ளுமே? 2

உற்றவர்தம் உறு நோய் களைபவர்,
பெற்றம் ஏறும் பிறங்கு சடையினர்,
சுற்றும் பாய் புனல் சூழ் திரு வீரட்டம்
கற்கில்அல்லது, என் கண் துயில் கொள்ளுமே? 3

முற்றா வெண்மதி சூடும் முதல்வனார்
செற்றார் வாழும் திரிபுரம் தீ எழ,
வில்-தான் கொண்டு எயில் எய்தவர்; வீரட்டம்
கற்றால்அல்லது, என் கண் துயில் கொள்ளுமே? 4

பல்லாரும் பலதேவர் பணிபவர்,
நல்லாரும் நயந்து ஏத்தப்படுபவன்,
வில்லால் மூஎயில் எய்தவன், வீரட்டம்
கல்லேன்ஆகில், என் கண் துயில் கொள்ளுமே? 5

வண்டு ஆர் கொன்றையும் மத்தம்,—வளர்சடைக்
கொண்டான்,—கோல மதியோடு அரவமும்;
விண்டார் மும்மதில் எய்தவன்; வீரட்டம்
கண்டால் அல்லது, என் கண் துயில் கொள்ளுமே? 6

அரை ஆர் கோவணஆடையன், ஆறு எலாம்
திரை ஆர் ஒண் புனல் பாய் கெடிலக் கரை—
விரை ஆர் நீற்றன்—விளங்கு வீரட்டன்பால்
கரையேன்ஆகில், என் கண் துயில் கொள்ளுமே? 7

நீறு உடைத் தடந்தோள் உடை நின்மலன்,
ஆறு உடைப் புனல் பாய் கெடிலக் கரை—
ஏறு உடைக் கொடியான்,—திரு வீரட்டம்
கூறில்அல்லது, என் கண் துயில் கொள்ளுமே? 8

செங்கண் மால்விடை ஏறிய செல்வனார்,
பைங்கண் ஆனையின் ஈர்உரி போர்த்தவர்,
அம் கண் ஞாலம்அது ஆகிய, வீரட்டம்,
கங்குல் ஆக, என் கண் துயில் கொள்ளுமே? 9

பூண், நாண், ஆரம், பொருந்த உடையவர்;
நாண் ஆக(வ்) வரைவில்லிடை அம்பினால்,
பேணார் மும்மதில் எய்தவன்; வீரட்டம்
காணேன்ஆகில், என் கண் துயில் கொள்ளுமே? 10

வரை ஆர்ந்த(வ்) வயிரத்திரள் மாணிக்கம்
திரை ஆர்ந்த(ப்) புனல் பாய் கெடிலக் கரை—
விரை ஆர் நீற்றன்—விளங்கிய வீரட்டம்
உரையேன்ஆகில், என் கண் துயில் கொள்ளுமே? 11

உலந்தார் வெண்தலை உண்கலன் ஆகவே,
வலம்தான் மிக்க அவ் வாள் அரக்கன்தனைச்
சிலம்பு ஆர் சேவடி ஊன்றினான் வீரட்டம்
புலம்பேன்ஆகில், என் கண் துயில் கொள்ளுமே? 12

திரு அதிகைவீரட்டானம் V-54 திருக் குறுந்தொகை

எட்டுநாள்மலர் கொண்டு, அவன் சேவடி
மட்டு அலர், இடுவார் வினை மாயுமால்—
கட்டித் தேன் கலந்தன்ன கெடில வீ-
ரட்டனார் அடி சேருமவருக்கே. 1

நீளமா நினைந்து, எண்மலர் இட்டவர்
கோள வல்வினையும் குறைவிப்பரால்—
வாளமா இழியும் கெடிலக் கரை,
வேளி சூழ்ந்து, அழகுஆய வீரட்டரே. 2

கள்ளின் நாள்மலர்ஓர்இரு-நான்கு கொண்டு,
உள்குவார்அவர் வல்வினை ஓட்டுவார்—
தெள்ளு நீர் வயல் பாய் கெடிலக் கரை,
வெள்ளைநீறு அணி மேனி, வீரட்டரே. 3

பூங்கொத்துஆயின மூன்றொடுஓர்ஐந்து இட்டு
வாங்கி நின்றவர் வல்வினை ஓட்டுவார்—
வீங்கு தண்புனல் பாய் கெடிலக் கரை,
வேங்கைத்தோல்உடை ஆடை, வீரட்டரே. 4

தேனப் போதுகள்மூன்றொடுஓர்ஐந்து உடன்
தான் அப்போது இடுவார் வினை தீர்ப்பவர்—
மீனத் தண்புனல் பாய் கெடிலக் கரை,
வேனல் ஆனை உரித்த, வீரட்டரே. 5

ஏழித் தொல் மலர் கொண்டு பணிந்தவர்
ஊழித் தொல்வினை ஓட, அகற்றுவார்—
பாழித் தண்புனல் பாய் கெடிலக் கரை,
வேழத்தின்(ன்)உரி போர்த்த, வீரட்டரே. 6

உரைசெய் நூல்வழி ஒண்மலர்எட்டு இட,
திரைகள் போல் வரு வல்வினை தீர்ப்பரால்—
வரைகள் வந்து இழியும் கெடிலக் கரை,
விரைகள் சூழ்ந்து அழகுஆய, வீரட்டரே. 7

ஓலி வண்டு அறை ஒண்மலர் எட்டினால்
காலை ஏத்த வினையைக் கழிப்பரால்—
ஆலி வந்து இழியும் கெடிலக் கரை,
வேலி சூழ்ந்து அழகுஆய, வீரட்டரே. 8

தாரித்து உள்ளி, தட மலர்எட்டினால்
பாரித்து ஏத்த, வல்லார் வினை பாற்றுவார்—
மூரித் தெண்திரை பாய் கெடிலக் கரை,
வேரிச் செஞ்சடை வேய்ந்த, வீரட்டரே. 9

அட்டபுட்பம்அவை கொளும்ஆறு கொண்டு,
அட்டமூர்த்தி அநாதிதன்பால் அணைந்து,
அட்டும்ஆறு செய்கிற்ப—அதிகை வீ-
ரட்டனார் அடி சேருமவர்களே. 10

திரு நாரையூர் V-55 திருக் குறுந்தொகை

வீறு தான் உடை வெற்பன்மடந்தை ஓர்-
கூறன் ஆகிலும், கூன்பிறை சூடிலும்,
நாறு பூம்பொழில் நாரையூர் நம்பனுக்கு
ஆறு சூடலும், அம்ம அழகிதே! 1

புள்ளி கொண்ட புலிஉரிஆடையும்,
வெள்ளி கொண்ட வெண்பூதி மெய்ஆடலும்,—
நள்ளி தெண்திரை நாரையூரான்—நஞ்சை
அள்ளி உண்டலும், அம்ம அழகிதே! 2

வேடு தங்கிய வேடமும், வெண்தலை-
ஓடு தங்கிய உண் பலி கொள்கையும்,—
நாடு தங்கிய நாரையூரான்—நடம்-
ஆடு பைங்கழல், அம்ம அழகிதே! 3

கொக்கின் தூவலும், கூவிளம்கண்ணியும்,
மிக்க வெண்தலைமாலை, விரிசடை
நக்கன்ஆகிலும், நாரையூர் நம்பனுக்கு
அக்கின்ஆரமும், அம்ம அழகிதே! 4

வடி கொள் வெண்மழு மான் அமர் கைகளும்,
பொடி கொள் செம்பவளம் புரை மேனியும்,
நடிகொள் நல் மயில் சேர் திரு நாரையூர்
அடிகள்தம் வடிவு, அம்ம அழகிதே! 5

சூலம் மல்கிய கையும், சுடரொடு,
பாலும்நெய்தயிர்ஆடிய பான்மையும்,—
ஞாலம் மல்கிய நாரையூர் நம்பனுக்கு—
ஆலநீழலும், அம்ம அழகிதே! 6

பண்ணின் நால்மறை பாடலொடு ஆடலும்,
எண்ணிலார் புரம்மூன்று எரிசெய்தலும்,
நண்ணினார் துயர் தீர்த்தலும்,—நாரையூர்
அண்ணலார் செய்கை—அம்ம அழகிதே! 7

என்பு பூண்டு, எருது ஏறி, இளம்பிறை
மின் புரிந்த சடைமேல் விளங்கவே,
நன் பகல் பலி தேரினும், நாரையூர்
அன்பனுக்கு அது அம்ம அழகிதே! 8

முரலும் கின்னரம் மொந்தை முழங்கவே,
இரவில் நின்று எரிஆடலும்,—நீடுவான்
நரலும் வாரி நன்நாரையூர் நம்பனுக்கு—
அரவும் பூணுதல், அம்ம அழகிதே! 9

கடுக்கை அம் சடையன் கயிலை(ம்)மலை
எடுத்த வாள் அரக்கன் தலைஈர்-அஞ்சும்
நடுக்கம் வந்து இற, நாரையூரான் விரல்
அடுத்த தன்மையும், அம்ம அழகிதே! 10

திருக் கோளிலி V-56 திருக் குறுந்தொகை

மைக் கொள் கண் உமை பங்கினன், மான் மழுத்
தொக்க கையினன், செய்யது ஓர் சோதியன்,
கொக்கு அமர் பொழில் சூழ்தரு கோளிலி
நக்கனை, தொழ நம்வினை நாசமே. 1

முத்தினை, முதல்ஆகிய மூர்த்தியை,
வித்தினை, விளைவுஆய விகிர்தனை,
கொத்து அலர் பொழில் சூழ்தரு கோளிலி
அத்தனை, தொழ நீங்கும், நம் அல்லலே. 2

வெண்திரைப் பரவை விடம் உண்டது ஓர்
கண்டனை, கலந்தார்தமக்கு அன்பனை,
கொண்டல் அம் பொழில் கோளிலி மேவிய
அண்டனை, தொழுவார்க்கு அல்லல் இல்லையே. 3

பலவும் வல்வினை பாறும் பரிசினால்—
உலவும் கங்கையும் திங்களும் ஒண் சடை
குலவினான், குளிரும் பொழில் கோளிலி
நிலவினான்தனை,—நித்தல் நினைமினே! 4

அல்லல்ஆயின தீரும்; அழகிய
முல்லைவெண்முறுவல்(ல்) உமை அஞ்சவே,
கொல்லை யானை உரித்தவன், கோளிலிச்
செல்வன், சேவடி சென்று தொழுமினே! 5

ஆவின் பால் கண்டு அளவு இல் அருந்தவப்
பாலன் வேண்டலும், ''செல்!'' என்று பாற்கடல்
கூவினான், குளிரும் பொழில் கோளிலி
மேவினானை, தொழ வினை வீடுமே. 6

சீர்த்த நல் மனையாளும் சிறுவரும்
ஆர்த்த சுற்றமும் பற்று இலை ஆதலால்,
கூத்தனார் உறையும் திருக் கோளிலி
ஏத்தி, நீர், தொழுமின்(ன்)! இடர் தீருமே. 7

மால்அதுஆகி மயங்கும் மனிதர்காள்!
காலம் வந்து கடை முடியாமுனம்,
கோல வார் பொழில், கோளிலி மேவிய
நீலகண்டனை நின்று நினைமினே! 8

கேடு மூடிக் கிடந்து உண்ணும் நாடுஅது
தேடி, நீர், திரியாதே சிவகதி
கூடல் ஆம்; திருக் கோளிலி ஈசனைப்
பாடுமின்(ன்), இரவோடு பகலுமே! 9

மடுத்து மாமலை ஏந்தல்உற்றான்தனை
அடர்த்து, பின்னும் இரங்கி, அவற்கு அருள்
கொடுத்தவன்(ன்) உறை கோளிலியே தொழ,
விடுத்து நீங்கிடும், மேலைவினைகளே. 10

திருக் கோளிலி V-57 திருக் குறுந்தொகை

முன்னமே நினையாதொழிந்தேன், உனை;
இன்னம் நான் உன சேவடி ஏத்திலேன்,
செந்நெல் ஆர் வயல் சூழ் திருக் கோளிலி
மன்னனே, அடியேனை மறவலே! 1

விண்உளார் தொழுது ஏத்தும் விளக்கினை,
மண்உளார் வினை தீர்க்கும் மருந்தினை,—
பண்உளார் பயிலும் திருக் கோளிலி
அண்ணலார்—அடியே தொழுது உய்ம்மினே! 2

நாளும் நம்முடை நாள்கள் அறிகிலோம்;
ஆளும் நோய்கள் ஓர்ஐம்பதோடுஆறு-எட்டும்;
ஏழைமைப்பட்டு இருந்து, நீர், நையாதே,
கோளிலி(ய்) அரன் பாதமே கூறுமே! 3

விழவின் ஓசை ஒலி அறாத் தண்பொழில்,
பழகினார் வினை தீர்க்கும், பழம் பதி—
அழல் கையான் அமரும்—திருக்கோளிலிக்
குழகனார் திருப்பாதமே கூறுமே! 4

மூலம் ஆகிய மூவர்க்கும் மூர்த்தியை,
காலன் ஆகிய காலற்கும் காலனை,—
கோலம் ஆம் பொழில் சூழ் திருக் கோளிலிச்
சூலபாணிதன்—பாதம் தொழுமினே! 5

காற்றனை, கடல்நஞ்சு அமுதுஉண்ட வெண்-
நீற்றனை, நிமிர்புன்சடை அண்ணலை,
ஆற்றனை,—அமரும் திருக் கோளிலி
ஏற்றனார்—அடியே தொழுது ஏத்துமே! 6

வேதம்ஆய விண்ணோர்கள்தலைவனை,
ஓதி மன்உயிர் ஏத்தும் ஒருவனை,—
கோதி வண்டு அறையும் திருக் கோளிலி
வேதநாயகன்—பாதம் விரும்புமே! 7

நீதியால்-தொழுவார்கள் தலைவனை,
வாதைஆன விடுக்கும் மணியினை,—
கோதி வண்டு அறையும் திருக் கோளிலி
வேதநாயகன்—பாதம் விரும்புமே! 8

மாலும் நான்முகனாலும் அறிவு ஒணாப்
பாலின் மென்மொழியாள் ஒருபங்கனை,
கோலம் ஆம் பொழில் சூழ் திருக் கோளிலி
நீலகண்டனை, நித்தல் நினைமினே! 9

அரக்கன்ஆய இலங்கையர்மன்னனை
நெருக்கி அம் முடிபத்து இறுத்தான், அவற்கு
இரக்கம் ஆகியவன், திருக் கோளிலி
அருத்திஆய் அடியே தொழுது உய்ம்மினே! 10

திருப் பழையாறை வடதளி V-58 திருக் குறுந்தொகை

தலைஎலாம் பறிக்கும் சமண்கையர் உள்-
நிலையினால் மறைத்தால் மறைக்க ஒண்ணுமே?
அலையின் ஆர் பொழில் ஆறை வடதளி
நிலையினான் அடியே நினைந்து உய்ம்மினே! 1

மூக்கினால் முரன்று ஓதி அக் குண்டிகை
தூக்கினார் குலம் தூர் அறுத்தே தனக்கு
ஆக்கினான் அணி ஆறை வடதளி
நோக்கினார்க்கு இல்லையால், அருநோய்களே. 2

குண்டரை, குணம்இல்லரை, கூறை இல்
மிண்டரை, துரந்த(வ்) விமலன்தனை;
அண்டரை; பழையாறை வடதளிக்
கண்டரை; தொழுது உய்ந்தன, கைகளே. 3

முடையரை, தலை முண்டிக்கும் மொட்டரை,
கடையரை, கடிந்தார்; கனல் வெண்மழுப்-
படையரை; பழையாறை வடதளி
உடையரை; குளிர்ந்து உள்கும், என் உள்ளமே. 4

ஒள் அரிக்கணார் முன் அமண் நின்று உணும்
கள்ளரைக் கடிந்த(க்) கருப்புஊறலை,
அள்ளல் அம் புனல் ஆறை வடதளி
வள்ளலை, புகழத் துயர் வாடுமே. 5

நீதியைக் கெட நின்று அமணே உணும்
சாதியைக் கெடுமா செய்த சங்கரன்,
ஆதியை, பழையாறை வடதளிச்
சோதியை, தொழுவார் துயர் தீருமே. 6

திரட்டு இரைக்கவளம் திணிக்கும் சமண்-
பிரட்டரைப் பிரித்த(ப்) பெருமான்தனை,
அருள்-திறத்து அணி ஆறை வடதளித்
தெருட்டரை, தொழத் தீவினை தீருமே. 7

ஓது இனத்து எழுத்துஅஞ்சு உணராச் சமண்
வேதனைப்படுத்தானை, வெங் கூற்று உதை
பாதனை, பழையாறை வடதளி
நாதனை, தொழ நம் வினை நாசமே. 8

''வாய் இருந்தமிழே படித்து, ஆள்உரு
ஆயிரம்சமணும் அழிவு ஆக்கினான்—
பாய் இரும் புனல் ஆறை வடதளி
மேயவன்(ன்)''என வல்வினை வீடுமே. 9

செருத்தனைச் செயும் சேண் அரக்கன்(ன்) உடல்,
எருத்து, இற(வ்) விரலால் இறை ஊன்றிய
அருத்தனை; பழையாறை வடதளித்
திருத்தனை; தொழுவார் வினை தேயுமே. 10

திரு மாற்பேறு V-59 திருக் குறுந்தொகை

பொரும் ஆற்றின் படை வேண்டி, நல் பூம் புனல்
வரும் ஆற்றின் மலர் கொண்டு, வழிபடும்
கருமாற்கு இன் அருள் செய்தவன் காண்தகு
திரு மாற்பேறு தொழ, வினை தேயுமே. 1

ஆலத்து ஆர் நிழலில்(ல்) அறம் நால்வர்க்குக்
கோலத்தால் உரைசெய்தவன், குற்றம் இல்
மாலுக்கு ஆர் அருள் செய்தவன், மாற்பேறு
ஏலத்தான் தொழுவார்க்கு இடர் இல்லையே. 2

துணி வண்ணச் சுடர் ஆழி கொள்வான் எண்ணி,
அணி வண்ணத்து அலர்கொண்டு, அடி அர்ச்சித்த
மணிவண்ணற்கு அருள் செய்தவன் மாற்பேறு
பணி வண்ணத்தவர்க்கு இல்லைஆம், பாவமே. 3

தீதுஅவை செய்து தீவினை வீழாதே,
காதல் செய்து கருத்தினில் நின்ற நல்
மா தவர் பயில் மாற்பேறு கைதொழப்
போதுமின்! வினைஆயின போகுமே. 4

வார் கொள் மென்முலை மங்கை ஓர்பங்கினன்,
வார் கொள் நல்முரசம்(ம்) அறைய(வ்) அறை
வார் கொள் பைம்பொழில் மாற்பேறு கைதொழு-
வார்கள் மன்னுவர், பொன்னுலகத்திலே. 5

பண்டை வல்வினை பற்றுஅறுக்கும் வகை
உண்டு; சொல்லுவன்; கேண்மின்: ஒளி கிளர்
வண்டு சேர் பொழில் சூழ் திரு மாற்பேறு
கண்டு கைதொழ, தீரும், கவலையே. 6

மழுவலான் திருநாமம் மகிழ்ந்து உரைத்து
அழ வலார்களுக்கு, அன்புசெய்து இன்பொடும்
வழு இலா அருள்செய்தவன் மாற்பேறு
தொழ வலார்தமக்கு, இல்லை, துயரமே. 7

முன்னவன்(ன்), உலகுக்கு; முழுமணிப்
பொன் அவன், திகழ் முத்தொடு; போகம் ஆம்
மன்னவன்; திரு மாற்பேறு கைதொழும்
அன்னவர் எமை ஆள்உடையார்களே. 8

வேடனாய் விசய(ன்)னொடும் எய்து வெங்-
காடு நீடு உகந்து, ஆடிய கண்ணுதல்—
மாடம் நீடு உயரும்—திரு மாற்பேறு
பாடுவார் பெறுவார், பரலோகமே. 9

கருத்தனாய்க் கயிலாயமலைதனைத்
தருக்கினால் எடுத்தானைத் தகரவே
வருத்தி, ஆர் அருள் செய்தவன் மாற்பேறு
அருத்தியால்-தொழுவார்க்கு இல்லை, அல்லலே. 10

திரு மாற்பேறு V-60 திருக் குறுந்தொகை

ஏதும் ஒன்றும் அறிவுஇலர்ஆயினும்,
ஓதி அஞ்சுஎழுத்தும்(ம்) உணர்வார்கட்குப்
பேதம் இன்றி, அவர்அவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர், மாற்பேறரே. 1

அச்சம் இல்லை; நெஞ்சே! அரன்நாமங்கள்
நிச்சலும் நினையாய், வினை போய் அற!
''கச்ச மா விடம் உண்ட கண்டா!'' என,
வைச்ச மா நிதி ஆவர், மாற்பேறரே. 2

சாத்திரம்பல பேசும் சழக்கர்காள்!
கோத்திர(ம்)மும் குலமும் கொண்டு என் செய்வீர்?
''பாத்திரம் சிவன்'' என்று பணிதிரேல்,
மாத்திரைக்குள் அருளும், மாற்பேறரே. 3

இருந்து சொல்லுவன்; கேண்மின்கள்: ஏழைகாள்!
அருந்தவம் தரும், அஞ்சுஎழுத்து ஓதினால்;
பொருந்து நோய் பிணி போகத் துரப்பது ஓர்
மருந்தும் ஆகுவர், மன்னும் மாற்பேறரே. 4

சாற்றிச் சொல்லுவன்; கேண்மின்: தரணியீர்!
ஏற்றின்மேல் வருவான் கழல் ஏத்தினால்,
கூற்றை நீக்கிக் குறைவு அறுத்து ஆள்வது ஓர்
மாற்று இலாச் செம்பொன் ஆவர், மாற்பேறரே. 5

ஈட்டும் மா நிதி சால இழக்கினும்,
வீட்டும் காலன் விரைய அழைக்கினும்,
''காட்டில் மாநடம் ஆடுவாய், கா!'' எனில்,
வாட்டம் தீர்க்கவும் வல்லர், மாற்பேறரே. 6

''ஐயனே! அரனே!'' என்று அரற்றினால்,
உய்யல் ஆம்; உலகத்தவர் பேணுவர்;
செய்யபாதம்இரண்டும் நினையவே,
வையம் ஆளவும் வைப்பர், மாற்பேறரே. 7

''உந்திச் சென்று மலையை எடுத்தவன்
சந்து தோளொடு தாள் இற ஊன்றினான்—
மந்தி பாய் பொழில் சூழும்—மாற்பேறு'' என,
அந்தம் இல்லது ஓர் இன்பம் அணுகுமே. 8

திரு அரிசிற்கரைப்புத்தூர் V-61 திருக் குறுந்தொகை

''முத்து ஊரும் புனல் மொய் அரிசிற்கரைப்-
புத்தூரன்(ன்) அடி போற்றி!'' என்பார்எலாம்
மொய்த்து ஊரும் புலன்ஐந்தொடு புல்கிய
மைத்து ஊரும் வினை மாற்றவும் வல்லரே. 1

''பிறைக்கணிச் சடை எம்பெருமான்'' என்று—
கறைக் கணித்தவர் கண்ட வணக்கத்துஆய்
உறக் கணித்து—உருகா மனத்தார்களைப்
புறக்கணித்திடும், புத்தூர்ப் புனிதனே. 2

அரிசிலின் கரைமேல், அணி ஆர்தரு
புரிசை, நம் திருப் புத்தூர்ப் புனிதனைப்
பரிசொடும் பரவிப் பணிவார்க்கு எலாம்
துரிசு இல் நன்நெறி தோன்றிடும்; காண்மினே! 3

வேதனை(ம்), மிகு வீணையில் மேவிய
கீதனை, கிளரும் நறுங்கொன்றைஅம்-
போதனை, புனல் சூழ்ந்த புத்தூரனை,
நாதனை(ந்), நினைந்து என் மனம் நையுமே. 4

அருப்புப் போல் முலையார் அல்லல் வாழ்க்கைமேல்
விருப்புச் சேர் நிலை விட்டு, நல் இட்டம்ஆய்,
திருப் புத்தூரனைச் சிந்தைசெயச்செய,
கருப்புச்சாற்றிலும் அண்ணிக்கும்; காண்மினே! 5

பாம்பொடு(ம்) மதியும் படர்புன்சடைப்
பூம்புனலும் பொதிந்த புத்தூர் உளான்,
நாம் பணிந்து அடி போற்றிட, நாள்தொறும்
சாம்பல் என்பு தனக்கு அணி ஆகுமே. 6

கனல் அங்கைதனில் ஏந்தி, வெங்காட்டுஇடை
அனல் அங்கு எய்தி, நின்று, ஆடுவர்; பாடுவர்;
பினல்அம்செஞ்சடைமேல் பிலயம் தரு
புனலும் சூடுவர்போலும்—புத்தூரரே. 7

காற்றிலும் கடிது ஆகி நடப்பது ஓர்
ஏற்றினும்(ம்) இசைந்து ஏறுவர்; என்பொடு
நீற்றினை அணிவர்; நினைவுஆய்த் தமை,
''போற்றி!'' என்பவர்க்கு அன்பர்—புத்தூரரே. 8

முன்னும் முப்புரம் செற்றனர்ஆயினும்
அன்னம் ஒப்பர், அலந்து அடைந்தார்க்கு எலாம்;
மின்னும் ஒப்பர், விரிசடை; மேனி செம்-
பொன்னும் ஒப்பர்—புத்தூர் எம் புனிதரே. 9

செருத்தனால்-தன தேர் செல உய்த்திடும்
கருத்தனாய்க் கயிலை எடுத்தான் உடல்,
பருத்த தோள் கெடப் பாதத்து ஒருவிரல்
பொருத்தினார்—பொழில் ஆர்ந்த புத்தூரரே. 10

திருக் கடுவாய்க்கரைப்புத்தூர் V-62　　திருக் குறுந்தொகை

ஒருத்தனை, மூஉலகொடு தேவர்க்கும்
அருத்தனை, அடியேன் மனத்துள்(ள்) அமர்
கருத்தனை, கடுவாய்ப்புனல்ஆடிய
திருத்தனை, புத்தூர் சென்று கண்டு உய்ந்தெனே. 1

யாவரும்(ம்) அறிதற்கு அரியான்தனை
மூவரின் முதல்ஆகிய மூர்த்தியை,
நாவின் நல் உரை ஆகிய நாதனை,
தேவனை, புத்தூர் சென்று கண்டு உய்ந்தெனே. 2

அன்பனை, அடியார் இடர்நீக்கியை,
செம்பொனை, திகழும் திருக்கச்சி ஏ-
கம்பனை, கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
நம்பனை, கண்டு நான் உய்யப்பெற்றெனே. 3

மா தனத்தை, மா தேவனை, மாறு இலாக்
கோதனத்தில்ஐந்துஆடியை, வெண்குழைக்
காதனை, கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
நாதனை, கண்டு நான் உய்யப்பெற்றெனே. 4

குண்டுபட்ட குற்றம் தவிர்த்து, என்னை ஆட்-
கொண்டு, நல்-திறம் காட்டிய கூத்தனை;
கண்டனை; கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
அண்டனை; கண்டு அருவினை அற்றெனே. 5

பந்தபாசம் அறுத்து எனை ஆட்கொண்ட
மைந்தனை(ம்), மணவாளனை, மா மலர்க்
கந்த நீர்க் கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எந்தைஈசனை, கண்டு இனிது ஆயிற்றே. 6

உம்பரானை, உருத்திரமூர்த்தியை,
அம்பரானை, அமலனை, ஆதியை,
கம்பு நீர்க் கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எம்பிரானை, கண்டு இன்பம்அது ஆயிற்றே. 7

மாசு ஆர் பாசமயக்கு அறுவித்து, எனுள்
நேசம்ஆகிய நித்தமணாளனை,
''பூசம் நீர்க் கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
ஈசனே!'' என, இன்பம்அது ஆயிற்றே. 8

இடுவார் இட்ட கவளம் கவர்ந்து இரு
கடு வாய் இட்டவர் கட்டுரை கொள்ளாதே,
கடுவாய்த்தென்கரைப்புத்தூர் அடிகட்கு ஆட்பட
வே பெற்று, நான் பாக்கியம் செய்தெனே. 9

அரக்கன் ஆற்றல் அழித்து அவன் பாடல் கேட்டு
இரக்கம் ஆகி அருள்புரி ஈசனை,
திரைக் கொள் நீர்க் கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
இருக்கும் நாதனை, காணப்பெற்று உய்ந்தெனே. 10

திருத் தென்குரங்காடுதுறை V-63 திருக் குறுந்தொகை

இரங்கா வன் மனத்தார்கள் இயங்கும் முப்புரம்
காவல்(ல்) அழியப் பொடிஆக்கினான்—
தரங்கு ஆடும் தட நீர்ப் பொன்னித் தென்கரைக்
குரங்காடுதுறைக் கோலக் கபாலியே. 1

முத்தினை(ம்), மணியை, பவளத்து ஒளிர்தொத்தினை,
சுடர்சோதியை, ''சோலை சூழ்
கொத்து அலர் குரங்காடுதுறை உறை
அத்தன்'' என்ன அண்ணித்திட்டு இருந்ததே. 2

குளிர்புனல் குரங்காடுதுறையனை
தளிர்நிறத் தையல் பங்கனை, தண்மதி
ஒளியனை(ந்), நினைந்தேனுக்கு என் உள்ளமும்
தெளிவினைத் தெளியத் தெளிந்திட்டதே. 3

மணவன்காண்; மலையாள் நெடு மங்கலக்
கணவன்காண்; கலை ஞானிகள் காதல் எண்குணவன்காண்;
குரங்காடுதுறைதனில்
அணவன்காண், அன்புசெய்யும் அடியர்க்கே. 4

ஞாலத்தார் தொழுது ஏத்திய நன்மையன்;
காலத்தான் உயிர் போக்கிய காலினன்;
நீலத்து ஆர் மிடற்றான்; வெள்ளை நீறு அணி
கோலத்தான்—குரங்காடுதுறையனே. 5

ஆட்டினான், முன் அமணரோடு என்தனை;
பாட்டினான், தன பொன்அடிக்கு இன்இசை;
வீட்டினான், வினை; மெய் அடியாரொடும்
கூட்டினான்—குரங்காடுதுறையனே. 6

மாத்தன்தான், மறையார் முறையால்; மறை-
ஓத்தன்; தாருகன்தன் உயிர் உண்ட பெண்
போத்தன்தான்; அவள் பொங்கு சினம் தணி
கூத்தன்தான்—குரங்காடுதுறையனே. 7

நாடி நம் தமர்ஆயின தொண்டர்காள்!
ஆடுமின்(ன்)! அழுமின்! தொழுமின்(ன்)! அடி
பாடுமின்! பரமன் பயிலும்(ம்) இடம்,
கூடுமின், குரங்காடுதுறையையே! 8

தென்றல்நன்நெடுந்தேர் உடையான்-உடல்
பொன்ற வெங்கனல் பொங்க விழித்தவன்;
அன்று அவ் அந்தகனை அயில்சூலத்தால்
கொன்றவன்—குரங்காடுதுறையனே. 9

நல்-தவம் செய்த நால்வர்க்கும் நல்அறம்
உற்ற நல்மொழியால் அருள்செய்த நல்
கொற்றவன் குரங்காடுதுறை தொழ,
பற்றும் தீவினைஆயின பாறுமே. 10

கடுத்த தேர் அரக்கன் கயிலை(ம்)மலை
எடுத்த தோள்தலை இற்று அலற(வ்) விரல்
அடுத்தலும்(ம்), அவன் இன்இசை கேட்டு அருள்
கொடுத்தவன்—குரங்காடுதுறையனே. 11

திருக் கோழம்பம் V-64 திருக் குறுந்தொகை

வேழம்பத்து ஐவர் வேண்டிற்று வேண்டிப் போய்
ஆழம் பற்றி வீழ்வார், பலஆதர்கள்;
கோழம்பத்து உறை கூத்தன் குரைகழல்-
தாழும் பத்தர்கள் சாலச் சதுரரே. 1

கயிலைநல்மலை ஆளும் கபாலியை,
மயில்இயல் மலைமாதின் மணாளனை,
குயில் பயில் பொழில் கோழம்பம் மேய என்
உயிரினை, நினைந்து உள்ளம் உருகுமே. 2

வாழும் பான்மையர் ஆகிய வான் செல்வம்—
தாழும் பான்மையர்ஆகித் தம் வாயினால்-
''தாழம்பூ மணம் நாறிய தாழ் பொழில்
கோழம்பா!'' என, கூடிய செல்வமே. 3

பாடல் ஆக்கிடும், பண்ணொடு, பெண்இவள்;
கூடல் ஆக்கிடும், குன்றின் மணல்கொடு;
கோடல் பூத்து அலர் கோழம்பத்துள் மகிழ்ந்து
ஆடும் கூத்தனுக்கு அன்புபட்டாள் அன்றே! 4

தளிர் கொள் மேனியள்தான் மிக அஞ்ச, ஓர்
பிளிறு வாரணத்து ஈர்உரி போர்த்தவன்—
குளிர் கொள் நீள் வயல் கோழம்பம் மேவினான்;
நளிர் கொள் நீர், சடைமேலும் நயந்ததே. 5

நாதர் ஆவர், நமக்கும் பிறர்க்கும், தாம்—
வேத நாவர், விடைக் கொடியார், வெற்பில்
கோதைமாதொடும் கோழம்பம் கோயில்கொண்ட
ஆதி, பாதம் அடைய வல்லார்களே. 6

முன்னை நான் செய்த பாவம் முதல்அற,
பின்னை நான் பெரிதும்(ம்) அருள் பெற்றது—
அன்னம் ஆர் வயல் கோழம்பத்துள்(ள்) அமர்
பின்னல்வார்சடையானைப் பிதற்றியே. 7

ஏழைமாரிடம் நின்று, இருகைக்கொடு, உண்
கோழைமாரொடும் கூடிய குற்றம்ஆம்—
கூழை பாய் வயல் கோழம்பத்தான் அடி
ஏழையேன் முன் மறந்து அங்கு இருந்ததே. 8

அரவுஅணைப் பயில் மால், அயன், வந்து அடி
பரவனை; பரம்ஆம் பரஞ்சோதியை;
குரவனை; குரவு ஆர் பொழில் கோழம்பத்து
உரவனை; ஒருவர்க்கு உணர்வு ஒண்ணுமே? 9

சமர சூரபன்மாவைத் தடிந்த வேல்
குமரன் தாதை, நன் கோழம்பம் மேவிய,
அமரர்கோவினுக்கு அன்பு உடைத் தொண்டர்கள்
அமரலோகம்அது ஆள்உடையார்களே. 10

துட்டன்ஆகி, மலை எடுத்து, அஃதின்கீழ்ப்
பட்டு, வீழ்ந்து, படர்ந்து, உய்யப்போயினான்—
‘‘கொட்டம் நாறிய கோழம்பத்து ஈசன்’’ என்று
இட்ட கீதம் இசைத்த அரக்கனே. 11

திருப் பூவனூர் V-65 திருக் குறுந்தொகை

பூவனூர்ப் புனிதன் திருநாமம்தான்
நாவில் நூறு-நூறாயிரம் நண்ணினார்,
பாவம்ஆயின பாறிப் பறையவே,
தேவர்கோவினும் செல்வர்கள் ஆவரே. 1

என்னன், என் மனை, எந்தை, என் ஆர்உயிர்,
தன்னன், தன் அடியேன் தனம்ஆகிய
பொன்னன்—பூவனூர் மேவிய புண்ணியன்;
இன்னன் என்று அறிவு ஒண்ணான், இயற்கையே! 2

குற்றம் கூடிக் குணம்பல கூடாதீர்!
மற்றும் தீவினை செய்தன மாய்க்கல் ஆம்;
புற்று அராவினன் பூவனூர் ஈசன் பேர்
கற்று வாழ்த்தும், கழிவதன் முன்னமே! 3

ஆவில்மேவியஐந்து அமர்ந்து ஆடுவான்,
தூ வெண்நீறு துதைந்த செம்மேனியான்,
மேவ நூல்விரி—வெண்ணியின் தென்கரை—
பூவனூர் புகுவார் வினை போகுமே. 4

"புல்லம்ஊர்தி ஊர்—பூவனூர், பூம் புனல்
நல்லம், மூர்த்தி நல்லூர், நனிபள்ளிஊர்,
தில்லைஊர், திரு ஆரூர், தீக்காலிநல்-
வல்லம்ஊர்" என, வல்வினை மாயுமே. 5

அனுசயப்பட்டு அது இது என்னாதே,
கனி மனத்தொடு கண்களும் நீர் மல்கி,
புனிதனை—பூவனூரனை—போற்றுவார்
மனிதரில்-தலைஆன மனிதரே. 6

ஆதிநாதன்; அமரர்கள் அர்ச்சிதன்;
வேதநாவன்; வெற்பின் மடப்பாவை ஓர்
பாதிஆனான்; பரந்த பெரும் படைப்
பூதநாதன்—தென்பூவனூர் நாதனே. 7

பூவனூர், தண் புறம்பயம், பூம்பொழில்
நாவலூர், நள்ளாறொடு, நன்னிலம்,
கோவலூர், குடவாயில், கொடுமுடி,
மூவலூரும்—முக்கண்ணன் ஊர்; காண்மினே! 8

ஏவம்ஏதும் இலா அமண்ஏதலர்—
பாவகாரிகள்—சொல்வலைப்பட்டு, நான்,
தேவதேவன் திருநெறி ஆகிய
பூவனூர் புகுதப்பெற்ற நாள் இன்றே! 9

நாரண(ன்)னொடு, நான்முகன், இந்திரன்,
வாரணன், குமரன், வணங்கும் கழல்
பூரணன்—திருப் பூவனூர் மேவிய
காரணன்(ன்); எனை ஆள்உடைக் காளையே. 10

மைக் கடுத்த நிறத்து அரக்கன் வரை
புக்கு எடுத்தலும், பூவனூரன்(ன்) அடி
மிக்கு அடுத்த விரல் சிறிது ஊன்றலும்,
பக்கு, அடுத்த பின் பாடி உய்ந்தான் அன்றே! 11

திரு வலஞ்சுழி V-66 திருக் குறுந்தொகை

ஓதம் ஆர் கடலின் விடம் உண்டவன்,
பூதநாயகன், பொன்கயிலைக்கு இறை,
மாது ஓர்பாகன், வலஞ்சுழி ஈசனை,
பாதம் ஏத்தப் பறையும், நம் பாவமே. 1

கயிலைநாதன், கறுத்தவர் முப்புரம்
எயில்கள் தீ எழ ஏ வல வித்தகன்,
மயில்கள் ஆலும் வலஞ்சுழி ஈசனைப்
பயில்கிலார்சிலர்—பாவித்தொழும்பரே. 2

இளைய காலம் எம்மானை அடைகிலாத்
துளை இலாச் செவித் தொண்டர்காள்! நும் உடல்
வளையும் காலம், வலஞ்சுழி ஈசனைக்
களைக்கண்ஆகக் கருதி, நீர் உய்ம்மினே! 3

நறை கொள் பூம் புனல் கொண்டு எழு மாணிக்குஆய்க்
குறைவு இலாக் கொடுங்கூற்று உதைத்திட்டவன்,
மறை கொள் நாவன், வலஞ்சுழி மேவிய
இறைவனை, இனி என்றுகொல் காண்பதே? 4

விண்டவர் புரம்மூன்றும் எரி கொளத்
திண் திறல் சிலையால் எரிசெய்தவன்,
வண்டு பண் முரலும் தண் வலஞ்சுழி
அண்டனுக்கு, அடிமைத்திறத்து ஆவனே. 5

படம் கொள் பாம்பொடு பால்மதியம் சடை
அடங்க ஆள வல்லான், உம்பர்தம்பிரான்,
மடந்தைபாகன், வலஞ்சுழியான், அடி
அடைந்தவர்க்கு அடிமைத்திறத்து ஆவனே. 6

நாக்கொண்டு(ப்) பரவும்(ம்) அடியார் வினை
போக்க வல்ல புரிசடைப் புண்ணியன்,
மாக் கொள் சோலை வலஞ்சுழி ஈசன்தன்
ஏக் கொளப் புரம்மூன்று எரி ஆனவே. 7

தேடுவார், பிரமன்திருமால்அவர்;
ஆடு பாதம் அவரும் அறிகிலார்;
மாட வீதி வலஞ்சுழி ஈசனைத்
தேடுவான் உறுகின்றது, என் சிந்தையே. 8

கண் பனிக்கும்; கை கூப்பும்; ‘‘கண்மூன்று உடை
நண்பனுக்கு எனை நான் கொடுப்பேன்’’ எனும்;
வண் பொ(ன்)னித் தென்வலஞ்சுழி மேவிய
பண்பன் இப் பொனைச் செய்த பரிசு இதே! 9

இலங்கை வேந்தன் இருபதுதோள் இற
நலம் கொள் பாதத்து ஒருவிரல் ஊன்றினான்,
மலங்கு பாய் வயல் சூழ்ந்த, வலஞ்சுழி
வலம்கொள்வார் அடி என் தலைமேலவே. 10

திரு வாஞ்சியம் V-67 திருக் குறுந்தொகை

படையும் பூதமும் பாம்பும் புல்வாய்அதள்-
உடையும் தாங்கிய உத்தமனார்க்கு இடம்,
புடை நிலாவிய பூம்பொழில், வாஞ்சியம்
அடைய வல்லவர்க்கு அல்லல் ஒன்று இல்லையே. 1

பறப்பையும் பசுவும் படுத்துப் பல-
திறத்தவும்(ம்) உடையோர் திகழும் பதி,
கறைப் பிறைச் சடைக் கண்ணுதல் சேர்தரு
சிறப்பு உடை, திரு வாஞ்சியம் சேர்மினே! 2

புற்றில் ஆடு அரவோடு புனல் மதி
தெற்று செஞ்சடைத் தேவர்பிரான் பதி,
சுற்று மாடங்கள் சூழ், திரு வாஞ்சியம்
பற்றிப் பாடுவார்க்குப் பாவம் இல்லையே. 3

அங்கம்ஆறும் அருமறைநான்குஉடன்
தங்கு வேள்வியர் தாம் பயிலும் நகர்,
செங்கண் மால இடம் ஆர், திரு வாஞ்சியம்
தங்குவார் நம் அமரர்க்கு அமரரே. 4

நீறு பூசி நிமிர்சடைமேல் பிறை
ஆறு சூடும் அடிகள் உறை பதி,
மாறுதான் ஒருங்கும் வயல், வாஞ்சியம்
தேறி வாழ்பவர்க்குச் செல்வம் ஆகுமே. 5

அற்றுப் பற்று இன்றி ஆரையும் இல்லவர்க்கு
உற்ற நல்-துணை ஆவான் உறை பதி,
தெற்று மாடங்கள் சூழ், திரு வாஞ்சியம்
கற்றுச் சேர்பவர்க்குக் கருத்து ஆவதே. 6

அருக்கன் அங்கி யமனொடு தேவர்கள்
திருத்தும் சேவடியான் திகழும் நகர்,
ஒருத்தி பாகம் உகந்தவன், வாஞ்சியம்
அருத்தியால் அடைவார்க்கு இல்லை, அல்லலே. 7

திரு நள்ளாறு   V-68   திருக் குறுந்தொகை

உள் ஆறாதது ஓர் புண்டரிகத்திரள்,
தெள் ஆறாச் சிவசோதித்திரளினை,
''கள் ஆறாத பொன்கொன்றை கமழ் சடை
நள்ளாறா!'' என, நம் வினை நாசமே. 1

ஆரணப்பொருள்ஆம் அருளாளனார்
வாரணத்துஉரி போர்த்த மணாளனார்—
நாரணன் நண்ணி ஏத்தும் நள்ளாறனார்;
காரணக் கலைஞானக் கடவுளே. 2

மேகம் பூண்டது ஓர் மேருவில் கொண்டு, எயில்
சோகம் பூண்டு அழல் சோர, தொட்டான்அவன்—
பாகம் பூண்ட மால் பங்கயத்தானொடு,
நாகம் பூண்டு கூத்துஆடும் நள்ளாறனே. 3

மலியும் செஞ்சடை வாள்அரவ(ம்)மொடு
பொலியும் பூம்புனல் வைத்த புனிதனார்,
நலியும் கூற்றை நலிந்த நள்ளாறர்தம்
வலியும் கண்டு இறுமாந்து மகிழ்வனே. 4

உறவனாய் நிறைந்து, உள்ளம் குளிர்ப்பவன்;
இறைவன்ஆகி நின்று, எண் நிறைந்தான்அவன்—
நறவம் நாறும் பொழில்-திரு நள்ளாறன்;
மறவனாய்ப் பன்றிப் பின் சென்ற மாயமே! 5

செக்கர் அங்கு அழி செஞ்சுடர்ச் சோதியார்;
நக்கர்—அங்கு அரவு ஆர்த்த நள்ளாறனார்;
வக்கரன்(ன்) உயிர் வவ்விய மாயற்குச்
சக்கரம்(ம்) அருள்செய்த சதுரரே. 6

வஞ்ச நஞ்சின் பொலிகின்ற கண்டத்தர்;
விஞ்சையின் செல்வப் பாவைக்கு வேந்தனார்;
வஞ்ச நெஞ்சத்தவர்க்கு வழி கொடார்—
நஞ்ச நெஞ்சர்க்கு அருளும் நள்ளாறரே. 7

அல்லன் என்றும் அலர்க்கு, அருள்ஆயின
சொல்லன் என்று,—சொல்லா மறைச்சோதியான்,—
வல்லன் என்றும், வல்லார் வளம் மிக்கவர்;
நல்லன், என்றும் நல்லார்க்கு, நள்ளாறனே. 8

பாம்புஅணைப் பள்ளி கொண்ட பரமனும்,
பூம் பணைப் பொலிகின்ற புராணனும்,
தாம் பணிந்து அளப்ப ஒண்ணாத் தனித் தழல்—
நாம் பணிந்து அடி போற்றும் நள்ளாறனே. 9

இலங்கை மன்னன் இருபதுதோள் இற
மலங்க மால்வரைமேல் விரல் வைத்தவர்,
நலம் கொள் நீற்றர், நள்ளாறரை, நாள்தொறும்
வலம்கொள்வார் வினைஆயின மாயுமே. 10

திருக் கருவிலிக் கொட்டிட்டை V-69 திருக் குறுந்தொகை

மட்டு இட்ட(க்) குழலார் சுழலில் வலைப்-
பட்டிட்டு(ம்) மயங்கிப் பரியாது, நீர்,
கட்டிட்ட(வ்) வினை போகக் கருவிலிக்
கொட்டிட்டை உறைவான் கழல் கூடுமே! 1

ஞாலம் மல்கு மனிதர்காள்! நாள்தொறும்
ஏல மா மலரோடு இலை கொண்டு, நீர்,
காலனார் வருதல்முன், கருவிலி,
கோல வார் பொழில், கொட்டிட்டை சேர்மினே! 2

பங்கம்ஆயின பேசப் பறைந்து, நீர்,
மங்குமா நினையாதே, மலர்கொடு,
கங்கை சேர் சடையான்தன் கருவிலி,
கொங்கு வார் பொழில், கொட்டிட்டை சேர்மினே! 3

வாடி நீர் வருந்தாதே,—மனிதர்காள்!—
வேடனாய் விசயற்கு அருள்செய்த வெண்-
காடனார் உறைகின்ற கருவிலி,
கோடு நீள் பொழில், கொட்டிட்டை சேர்மினே! 4

உய்யும்ஆறு இது கேண்மின்: உலகத்தீர்!
பை கொள் பாம்பு அரையான், படை ஆர் மழுக்
கையினான், உறைகின்ற கருவிலி,
கொய்கொள் பூம்பொழில், கொட்டிட்டை சேர்மினே! 5

ஆற்றவும்(ம்) அவலத்து அழுந்தாது, நீர்,
தோற்றும் தீயொடு, நீர், நிலம், தூ வெளி,
காற்றும், ஆகி நின்றான்தன் கருவிலி,
கூற்றம் காய்ந்தவன், கொட்டிட்டை சேர்மினே! 6

''நில்லா வாழ்வு நிலைபெறும்'' என்று எண்ணிப்
பொல்லா ஆறு செயப் புரியாது, நீர்,
கல் ஆரும் மதில் சூழ் தண் கருவிலி,
கொல் ஏறு ஊர்பவன், கொட்டிட்டை சேர்மினே! 7

பிணித்த நோய்ப்பிறவிப் பிரிவு எய்தும் ஆறு
உணர்த்தல் ஆம்; இது கேண்மின்: உருத்திர-
கணத்தினார் தொழுது ஏத்தும் கருவிலி,
குணத்தினான் உறை, கொட்டிட்டை சேர்மினே! 8

நம்புவீர்; இது கேண்மின்கள்: நாள்தொறும்
''எம்பிரான்!'' என்று இமையவர் ஏத்தும் ஏ-
கம்பனார் உறைகின்ற கருவிலி,
கொம்பு அனார் பயில், கொட்டிட்டை சேர்மினே! 9

பார்உளீர்! இது கேண்மின்: பருவரை
பேரும்ஆறு எடுத்தானை அடர்த்தவன்,
கார் கொள் நீர் வயல் சூழ் தண் கருவிலி,
கூர் கொள் வேலினன், கொட்டிட்டை சேர்மினே! 10

திருக் கொண்டீச்சுரம் V-70 திருக் குறுந்தொகை

கண்ட பேச்சினில் காளையர்தங்கள்பால்
மண்டி ஏச்சுணும் மாதரைச் சேராதே,
சண்டியீச்சுரவர்க்கு அருள்செய்த அக்
கொண்டியீச்சுரவன் கழல் கூறுமே! 1

சுற்றமும், துணை நல் மடவாளொடு,
பெற்ற மக்களும், பேணல் ஒழிந்தனர்;
குற்றம் இல் புகழ்க் கொண்டீச்சுரவனார்
பற்றுஅலால், ஒரு பற்று மற்று இல்லையே. 2

மாடுதான் அது இல் எனின், மானுடர்
பாடுதான் செல்வார் இல்லை; பல்மாலையால்
கூட நீர் சென்று, கொண்டீச்சுரவனைப்
பாடுமின்! பரலோகத்து இருத்துமே. 3

தந்தை, தாயொடு, தாரம், எனும் தளை-
பந்தம் ஆங்கு அறுத்து, பயில்வு எய்திய
கொந்து அவிழ் பொழில் கொண்டீச்சுரவனைச்
சிந்தைசெய்ம்மின்கள், சேவடி சேரவே! 4

கேளுமின்(ன்): இளமைஅது கேடு வந்து
ஈளையோடு இருமல்(ல்)அது எய்தல்முன்,
கோள் அரா அணி கொண்டீச்சுரவனை
நாளும் ஏத்தித் தொழுமின்! நன்கு ஆகுமே. 5

வெம்பு நோயும் இடரும் வெறுமையும்
துன்பமும் துயரும்(ம்) எனும் சூழ்வினை,
கொம்பனார் பயில் கொண்டீச்சுரவனை,
''எம்பிரான்!'' என வல்லவர்க்கு இல்லையே. 6

அல்லலோடு அருநோயில் அழுந்தி, நீர்,
செல்லுமா நினையாதே, கனை குரல்
கொல்லை ஏறு உடைக் கொண்டீச்சுரவனை
வல்லஆறு தொழ, வினை மாயுமே. 7

நாறு சாந்து அணி நல்முலை, மென்மொழி,
மாறு இலா மலைமங்கை ஒர்பாகமாக்
கூறனார் உறை கொண்டீச்சுரம் நினைந்து
ஊறுவார்தமக்கு ஊனம் ஒன்று இல்லையே. 8

அயில் ஆர் அம்பு எரி, மேரு வில், ஆகவே
எயிலாரும் பொடிஆய் விழ எய்தவன்,
குயில் ஆரும் பொழில் கொண்டீச்சுரவனைப்
பயில்வாரும் பெருமை பெறும் பாலரே. 9

நிலையின் ஆர் வரை நின்று எடுத்தான்தனை
மலையினால் அடர்த்து(வ்) விறல் வாட்டினான்,
குலையின் ஆர் பொழில் கொண்டீச்சுரவனைத்
தலையினால் வணங்க, தவம் ஆகுமே. 10

திரு விசயமங்கை V-71 திருக் குறுந்தொகை

குசையும் அங்கையில் கோசமும் கொண்ட அவ்
வசை இல் மங்கலவாசகர் வாழ்த்தவே,
இசைய மங்கையும் தானும் ஒன்றுஆயினான்—
விசயமங்கையுள் வேதியன்; காண்மினே! 1

ஆதிநாதன்; அடல் விடைமேல் அமர்
பூதநாதன்; புலிஅதள்ஆடையன்;
வேதநாதன்—விசயமங்கை உளான்;
பாதம் ஓத வல்லார்க்கு இல்லை, பாவமே. 2

கொள்ளிடக் கரைக் கோவந்தபுத்தூரில்
வெள்விடைக்கு அருள்செய் விசயமங்கை-
யுள்இடத்து உறைகின்ற உருத்திரன்
கிள்ளிட, தலை அற்றது, அயனுக்கே. 3

திசையும் எங்கும் குலுங்க, திரிபுரம்
அசைய, அங்கு எய்திட்டு, ஆர்அழல் ஊட்டினான்—
விசயமங்கை விருத்தன்; புறத்துஅடி
விசையின் மங்கி விழுந்தனன், காலனே. 4

பொள்ளல் ஆக்கை அகத்தில் ஐம்பூதங்கள்
கள்ளம் ஆக்கிக் கலக்கிய கார்இருள்
விள்ளல் ஆக்கி, விசயமங்கைப் பிரான்,
உள்ளல் நோக்கி, என் உள்ளுள் உறையுமே. 5

''கொல்லை ஏற்றுக் கொடியொடு பொன்மலை-
வில்லை ஏற்று உடையான், விசயமங்கைச்
செல்வ, போற்றி!'' என்பாருக்குத் தென்திசை-
எல்லை ஏற்றலும் இன்சொலும் ஆகுமே. 6

கண் பல் உக்க கபாலம் அங்கைக் கொண்டு
உண் பலிக்கு உழல் உத்தமன், உள் ஒளி
வெண்பிறைக்கண்ணியான், விசயமங்கை
நண்பனை, தொழப்பெற்றது நன்மையே. 7

பாண்டுவின் மகன் பார்த்தன் பணி செய்து,
வேண்டும் நல் வரம் கொள் விசயமங்கை
ஆண்டவன்(ன்) அடியே நினைந்து, ஆசையால்
காண்டலே கருத்துஆகி இருப்பனே. 8

வந்து கேண்மின்: மயல் தீர் மனிதர்காள்!
வெந்தநீற்றன், விசயமங்கைப் பிரான்,
சிந்தையால் நினைவார்களைச் சிக்கெனப்
பந்து ஆக்கி, உயக்கொளும்; காண்மினே! 9

இலங்கை வேந்தன் இருபதுதோள் இற
விலங்கல் சேர் விரலான் விசயமங்கை
வலம்செய்வார்களும், வாழ்த்து இசைப்பார்களும்,
நலம் செய்வார்அவர், நன்நெறி நாடியே. 10

திரு நீலக்குடி   V-72   திருக் குறுந்தொகை

வைத்த மாடும், மனைவியும், மக்கள், நீர்
செத்தபோது, செறியார் பிரிவதே;
நித்தம் நீலக்குடி அரனை(ந்) நினை
சித்தம் ஆகில், சிவகதி சேர்திரே. 1

செய்யமேனியன், தேனொடு பால்தயிர்-
நெய்அதுஆடிய நீலக்குடி அரன்,
மையல்ஆய் மறவா மனத்தார்க்கு எலாம்
கையில் ஆமலக்கனி ஒக்குமே. 2

ஆற்ற நீள்சடை, ஆயிழையாள் ஒரு-
கூற்றன்; மேனியில் கோலம்அது ஆகிய
நீற்றன்—நீலக்குடி உடையான்; அடி
போற்றினார் இடர் போக்கும் புனிதனே. 3

நாலுவேதியர்க்கு இன்அருள் நன்நிழல்
ஆலன்; ஆலநஞ்சு உண்டு கண்டத்து அமர்
நீலன்—நீலக்குடி உறை நின்மலன்;
காலனார் உயிர் போக்கிய காலனே. 4

''நேச நீலக்குடி அரனே!'' எனா
நீசராய், நெடுமால் செய்த மாயத்தால்,
ஈசன் ஓர் சரம் எய்ய எரிந்துபோய்,
நாசம் ஆனார், திரிபுரநாதரே. 5

கொன்றைசூடியை, ''குன்றமகளொடும்
நின்ற நீலக்குடி அரனே!'' எனீர்—
என்றும் வாழ்வு உகந்தே இறுமாக்கும் நீர்;
பொன்றும்போது நுமக்கு அறிவு ஒண்ணுமே? 6

கல்லினோடு எனைப் பூட்டி அமண்கையர்
ஒல்லை நீர் புக நூக்க, என் வாக்கினால்,
நெல்லு நீள் வயல் நீலக்குடி அரன்
நல்ல நாமம் நவிற்றி, உய்ந்தேன் அன்றே! 7

''அழகியோம்; இளையோம்'' எனும் ஆசையால்
ஒழுகி ஆவி உடல் விடும் முன்னமே,
நிழல்அது ஆர் பொழில் நீலக்குடி அரன்
கழல் கொள் சேவடி கைதொழுது, உய்ம்மினே! 8

கற்றைச்செஞ்சடைக் காய் கதிர் வெண்திங்கள்
பற்றிப் பாம்புஉடன் வைத்த பராபரன்—
நெற்றிக்கண் உடை நீலக்குடி அரன்;
சுற்றித் தேவர் தொழும் கழல் சோதியே. 9

தருக்கி வெற்புஅது தாங்கிய வீங்கு தோள்
அரக்கனார் உடல் ஆங்கு ஒர்விரலினால்
நெரித்து, நீலக்குடி அரன், பின்னையும்
இரக்கம்ஆய், அருள்செய்தனன் என்பரே. 10

திரு மங்கலக்குடி V-73 திருக் குறுந்தொகை

தங்கு அலப்பிய த்க்கன் பெரு வேள்வி
அங்கு அலக்கழித்து ஆர் அருள் செய்தவன்—
கொங்கு அலர்க் குழல் கொம்பு அனையாளொடு
மங்கலக்குடி மேய மணாளனே. 1

காவிரி(ய்)யின் வடகரைக் காண்தகு
மா விரி(ய்)யும் பொழில் மங்கலக்குடித்
தே அரி(ய்)யும் பிரமனும் தேட ஒணாத்
தூ எரிச்சுடர்ச்சோதியுள் சோதியே! 2

மங்கலக்குடி ஈசனை மாகாளி,
வெங்கதிர்ச்செல்வன், விண்ணோடு மண்உளோர்,
சங்குசக்கரதாரி, சதுமுகன்,
அங்கு அகத்தியனும்(ம்), அர்ச்சித்தார்அன்றே. 3

மஞ்சன், வார்கடல் சூழ் மங்கலக்குடி,
நஞ்சம் ஆர்அமுது ஆக நயந்து கொண்டு,
அஞ்சும்ஆடல் அமர்ந்து, அடியேன் உடை
நெஞ்சம் ஆலயமாக் கொண்டு நின்றதே! 4

செல்வம் மல்கு திரு மங்கலக்குடி—
செல்வம் மல்கு சிவநியமத்தராய்,
செல்வம் மல்கு செழு மறையோர் தொழ,
செல்வன் தேவியொடும் திகழ் கோயிலே. 5

மன்னு சீர் மங்கலக்குடி மன்னிய
பின்னுவார்சடைப் பிஞ்ஞகன்தன் பெயர்
உன்னுவாரும் உரைக்க வல்லார்களும்
துன்னுவார், நன்நெறி தொடர்வு எய்தவே. 6

மாதரார் மருவும் மங்கலக்குடி
ஆதிநாயகன், அண்டர்கள்நாயகன்,
வேதநாயகன், வேதியர்நாயகன்,
பூதநாயகன், புண்ணியமூர்த்தியே. 7

வண்டு சேர் பொழில் சூழ் மங்கலக்குடி,
விண்ட தாதையைத் தாள் அற வீசிய
சண்டநாயகனுக்கு அருள்செய்தவன்—
துண்டமாமதி சூடிய சோதியே. 8

கூசுவார்அலர், குண்டர், குணம்இலர்,
நேசம்ஏதும் இலாதவர், நீசர்கள்,
மாசர்பால்—மங்கலக்குடி மேவிய
ஈசன் வேறுபடுக்க—உய்ந்தேன் அன்றே! 9

மங்கலக்குடியான் கயிலை(ம்)மலை
அங்கு அலைத்து எடுக்குற்ற அரக்கர்கோன்,
தன் கரத்தொடு தாள்தலைதோள் தகர்ந்து,
அங்கு அலைத்து, அழுது, உய்ந்தனன் தான் அன்றே! 10

திரு எறும்பியூர் V-74 திருக் குறுந்தொகை

விரும்பி ஊறு விடேல், மட நெஞ்சமே!
கரும்பின் ஊறல்கண்டாய், கலந்தார்க்கு அவன்;—
இரும்பின் ஊறல் அருதது ஓர் வெண்தலை
எறும்பியூர்மலையான், எங்கள் ஈசனே. 1

பிறங்கு செஞ்சடைப் பிஞ்ஞகன்; பேணு சீர்க்
கறங்கு பூதகணம் உடைக் கண்ணுதல்—
நறுங்குழல்மடவாளொடு நாள்தொறும்
எறும்பியூர்மலையான், எங்கள் ஈசனே. 2

மருந்து, வானவர் தானவர்க்கு இன்சுவை;
புரிந்த புன்சடைப் புண்ணியன், கண்ணுதல்—
பொருந்து பூண் முலை மங்கைநல்லாளொடும்
எறும்பியூர்மலையான், எங்கள் ஈசனே. 3

நிறம் கொள் கண்டத்து நின்மலன்; எம் இறை;
மறம் கொள் வேல்கண்ணி வாணுதல் பாகமா,
அறம் புரிந்து அருள்செய்த எம் அம்கணன்—
எறும்பியூர்மலையான், எங்கள் ஈசனே. 4

நறும் பொன்நாள்மலர்க்கொன்றையும் நாகமும்
துறும்பு செஞ்சடை, தூ மதி வைத்து, வான்
உறும் பொன்மால்வரைப் பேதையோடு ஊர்தொறும்
எறும்பியூர்மலையான், எங்கள் ஈசனே. 5

கறும்பி ஊர்வன ஐந்து உள, காயத்தில்;
திறம்பி ஊர்வன மற்றும் பல உள;
குறும்பி ஊர்வது ஓர் கூட்டுஅகத்து இட்டு, எனை
எறும்பியூர் அரன் செய்த இயற்கையே! 6

மறந்தும், மற்று இது பேர்இடர்; நாள்தொறும்
திறம்பி, நீ நினையேல், மட நெஞ்சமே!
புறம் செய் கோலக் குரம்பையில் இட்டு, எனை
எறும்பியூர் அரன் செய்த இயற்கையே! 7

இன்பமும், பிறப்பும்(ம்), இறப்பி(ன்)னொடு,
துன்பமும்(ம்) உடனேவைத்த சோதியான்—
''அன்பனே, அரனே!'' என்று அரற்றுவார்க்கு
இன்பன் ஆகும் எறும்பியூர் ஈசனே. 8

கண் நிறைந்த கன பவளத்திரள்;
விண் நிறைந்த விரி சுடர்ச்சோதியான்;
உள்-நிறைந்து, உருஆய், உயிர்ஆயவன்—
எண் நிறைந்த எறும்பியூர் ஈசனே. 9

நிறம் கொள் மால்வரை ஊன்றி எடுத்தலும்,
நறுங்குழல் மடவாள் நடுக்கு எய்திட,
மறம் கொள் வாள் அரக்கன் வலி வாட்டினான்—
எறும்பியூர்மலை எம் இறை; காண்மினே! 10

திருக் குரக்குக்கா V-75 திருக் குறுந்தொகை

மரக் கொக்குஆம் என வாய்விட்டு அலறி, நீர்,
சரக்குக் காவி, திரிந்து அயராது, கால்
பரக்கும் காவிரி நீர் அலைக்கும் கரைக்
குரக்குக்கா அடைய, கெடும், குற்றமே. 1

கட்டு ஆறே கழி காவிரி பாய் வயல்
கொட்டாறே, புனல் ஊறு குரக்குக்கா,
முட்டு ஆறா, அடி ஏத்த முயல்பவர்க்கு
இட்டு ஆறா, இடர் ஓட எடுக்குமே. 2

கைஅனைத்தும் கலந்து எழு காவிரி,
செய்அனைத்திலும் சென்றிடும், செம் புனல்
கொய்அனைத்தும் கொணரும் குரக்குக்கா
ஐயனைத் தொழுவார்க்கு அல்லல் இல்லையே. 3

மிக்கு அனைத்துத்திசையும் அருவிகள்
புக்குக் காவிரி போந்த புனல் கரை,
கொக்குஇனம் பயில் சோலை, குரக்குக்கா
நக்கனை நவில்வார் வினை நாசமே. 4

விட்டு வெள்ளம் விரிந்து எழு காவிரி
இட்ட நீர் வயல் எங்கும் பரந்திட,
கொட்ட மா முழவு, ஓங்கு குரக்குக்கா
இட்டம்ஆய் இருப்பார்க்கு இடர் இல்லையே. 5

மேலைவானவரோடு, விரி கடல்
மாலும், நான்முகனும், அளப்பு ஒணாக்
கோல மாளிகைக் கோயில் குரக்குக்காப்-
பாலராய்த் திரிவார்க்கு இல்லை, பாவமே. 6

ஆலநீழல் அமர்ந்த அழகனார்,
காலனை உதைகொண்ட கருத்தனார்,
கோல மஞ்ஞைகள் ஆலும் குரக்குக்காப்-
பாலருக்கு அருள்செய்வர், பரிவொடே. 7

செக்கர் அங்கு எழு செஞ்சுடர்ச்சோதியார்,
அக்கு அரையர், எம் ஆதிபுராணனார்,
கொக்குஇனம் வயல் சேரும் குரக்குக்கா
நக்கனை, தொழ, நம் வினை நாசமே. 8

உருகி ஊன் குழைந்து ஏத்தி எழுமின், நீர்,
கரிய கண்டன் கழல்அடிதன்னையே!
குரவனம் செழுங் கோயில் குரக்குக்கா
இரவும் எல்லியும் ஏத்தித் தொழுமினே! 9

இரக்கம் இன்றி மலை எடுத்தான் முடி,
உரத்தை, ஒல்க அடர்த்தான் உறைவுஇடம்—
குரக்குஇனம் குதிகொள்ளும் குரக்குக்கா;
வரத்தனைப் பெற வான்உலகு ஆள்வரே. 10

திருக் கானூர் V-76 திருக் குறுந்தொகை

திருவின் நாதனும், செம்மலர்மேல் உறை
உருவனாய், உலகத்தின் உயிர்க்கு எலாம்
கருவன் ஆகி, முளைத்தவன்—கானூரில்
பரமன்ஆய பரஞ்சுடர்; காண்மினே! 1

''பெண்டிர், மக்கள், பெருந் துணை, நன்நிதி,
உண்டுஇறே'' என்று உகவன்மின், ஏழைகாள்!
கண்டுகொண்மின், நீர், கானூர் முளையினை,
புண்டரீகப் பொதும்பில் ஒதுங்கியே! 2

தாயத்தார், தமர், நன்நிதி, என்னும் இம்
மாயத்தே கிடந்திட்டு மயங்கிடேல்!
காயத்தே உளன், கானூர் முளையினை
வாய்அ(த்)தால் வணங்கீர், வினை மாயவே! 3

குறியில் நின்று, உண்டு கூறை இலாச் சமண்
நெறியை விட்டு, நிறைகழல் பற்றினேன்:
அறியல்உற்றிரேல், கானூர் முளைஅவன்
செறிவு செய்திட்டு இருப்பது என் சிந்தையே. 4

பொத்தல் மண்சுவர்ப் பொல்லாக் குரம்பையை
மெய்த்தன் என்று வியந்திடல், ஏழைகாள்!
சித்தர், பத்தர்கள், சேர் திருக் கானூரில்
அத்தன்பாதம் அடைதல் கருமமே. 5

கல்வி ஞானக்கலைப்பொருள் ஆயவன்,
செல்வம் மல்கு திருக் கானூர் ஈசனை,
எல்லியும் பகலும்(ம்) இசைவு ஆனவா
சொல்லிடீர், நும் துயரங்கள் தீரவே! 6

நீரும், பாரும், நெருப்பும், அருக்கனும்,
காரும், மாருதம்—கானூர் முளைத்தவன்;
சேர்வும் ஒன்று அறியாது, திசைதிசை
ஓர்வும் ஒன்று இலர், ஓடித் திரிவரே. 7

ஓமத்தோடு அயன்மால் அறியா வணம்
வீமப் பேர்ஒளி ஆய விழுப்பொருள்,
காமற் காய்ந்தவன்—கானூர் முளைத்தவன்;
சேமத்தால் இருப்புஆவது என் சிந்தையே. 8

வன்னி, கொன்றை, எருக்கு, அணிந்தான் மலை
உன்னியே சென்று எடுத்தவன் ஒண்திறல்-
தன்னை வீழத் தனிவிரல் வைத்தவன்—
கன்னி மா மதில் கானூர்க் கருத்தனே. 9

திருச் சேறைச் செந்நெறி V-77 திருக் குறுந்தொகை

பூரியா வரும், புண்ணியம்; பொய் கெடும்;
கூரிதுஆய அறிவு கைகூடிடும்—
சீரியார் பயில் சேறையுள் செந்நெறி
நாரிபாகன்தன் நாமம் நவிலவே. 1

என்ன மா தவம் செய்தனை!—நெஞ்சமே!—
மின்னுவார்சடை வேதவிழுப்பொருள்,
செந்நெல் ஆர் வயல் சேறையுள் செந்நெறி
மன்னு சோதி, நம்பால் வந்து வைகவே. 2

பிறப்பு, மூப்பு, பெரும் பசி, வான் பிணி,
இறப்பு, நீங்கிடும்; இன்பம் வந்து எய்திடும்—
சிறப்பர் சேறையுள் செந்நெறியான் கழல்
மறப்பது இன்றி மனத்துள் வைக்கவே. 3

மாடு தேடி, மயக்கினில் வீழ்ந்து, நீர்,
ஓடி எய்த்தும், பயன் இலை; ஊமர்காள்!
சேடர் வாழ் சேறைச் செந்நெறி மேவிய
ஆடலான்தன் அடி அடைந்து உய்ம்மினே! 4

எண்ணி நாளும், எரிஅயில் கூற்றுவன்
துண்ணென்று ஒன்றில்,-துரக்கும் வழி கண்டேன்;
திண் நன் சேறைத் திருச் செந்நெறி உறை
அண்ணலார் உளர்: அஞ்சுவது என்னுக்கே? 5

தப்பி வானம், தரணி கம்பிக்கில் என்?
ஒப்பு இல் வேந்தர் ஒருங்குஉடன் சீறில் என்?
செப்பம் ஆம் சேறைச் செந்நெறி மேவிய
அப்பனார் உளர்; அஞ்சுவது என்னுக்கே? 6

வைத்த மாடும், மடந்தைநல்லார்களும்,
ஒத்து ஒவ்வாத உற்றார்களும், என் செய்வார்?
சித்தர் சேறைத் திருச் செந்நெறி உறை
அத்தர்தாம் உளர்; அஞ்சுவது என்னுக்கே? 7

குலன்கள் என் செய்வ? குற்றங்கள் என் செய்வ?
துலங்கி நீ நின்று சோர்ந்திடல், நெஞ்சமே!
இலங்கு சேறையில் செந்நெறி மேவிய
அலங்கனார் உளர்; அஞ்சுவது என்னுக்கே? 8

பழகினால் வரும் பண்டு உள சுற்றமும்
விழவிடாவிடில், வேண்டிய எய்த ஒணா;
திகழ் கொள் சேறையில் செந்நெறி மேவிய
அழகனார் உளர்; அஞ்சுவது என்னுக்கே! 9

''பொருந்து நீள்மலையைப் பிடித்து ஏந்தினான்
வருந்த ஊன்றி, மலர்அடி வாங்கினான்—
திருந்து சேறையில் செந்நெறி மேவி அங்கு
இருந்த சோதி'' என்பார்க்கு இடர் இல்லையே. 10

திருக் கோடிகா V-78 திருக் குறுந்தொகை

''சங்கு உலாம் முன்கைத் தையல் ஓர்பாகத்தன்,
வெங் குலாம் மதவேழம் வெகுண்டவன்,
கொங்கு உலாம் பொழில் கோடிகாவா!'' என,
எங்கு இலாதது ஓர் இன்பம் வந்து எய்துமே. 1

வாடி வாழ்வது என் ஆவது? மாதர்பால்
ஓடி, வாழ்வினை உள்கி, நீர், நாள்தொறும்
கோடிகாவனைக் கூறீரேல், கூறினேன்:
பாடிகாவலில் பட்டுக் கழிதிரே. 2

''முல்லைநல்முறுவல்(ல்) உமை பங்கனார்,
தில்லை அம்பலத்தில்(ல்) உறை செல்வனார்,
கொல்லை ஏற்றினர், கோடிகாவா!'' என்று அங்கு
ஒல்லை ஏத்துவார்க்கு ஊனம் ஒன்று இல்லையே. 3

நா வளம் பெறும்ஆறு, மன் நன்னுதல்
ஆமளம் சொலி, அன்பு செயின்(ன்)அலால்,
''கோமளஞ்சடைக் கோடிகாவா!'' என,
''ஏவள்?'' என்று எனை ஏசும், அவ் ஏழையே. 4

வீறுதான் பெறுவார் சிலர்ஆகிலும்,
நாறு பூங்கொன்றைதான் மிக நல்கானேல்,
கூறுவேன், ''கோடிகா உளாய்!'' என்று; மால்
ஏறுவேன்; நும்மால் ஏசப்படுவனோ? 5

நாடி நாரணன், நான்முகன், வானவர்
தேடி ஏசறவும், தெரியாதது ஓர்
கோடிகாவனைக் கூறாத நாள்எலாம்
பாடிகாவலில் பட்டுக் கழியுமே. 6

''வரங்களால் வரையை எடுத்தான்தனை
அரங்க ஊன்றி அருள்செய்த அப்பன் ஊர்,
குரங்கு சேர் பொழில் கோடிகாவா!'' என
இரங்குவேன், மனத்து ஏதங்கள் தீரவே. 7

திருப் புள்ளிருக்குவேளூர் V-79 திருக் குறுந்தொகை

வெள்எருக்கு அரவம் விரவும் சடைப்
புள்ளிருக்குவேளூர் அரன் பொன்கழல்
உள் இருக்கும் உணர்ச்சி இலாதவர்,
நள் இருப்பர், நரகக்குழியிலே. 1

மாற்றம் ஒன்று அறியீர்; மனைவாழ்க்கை போய்க்
கூற்றம் வந்து உமைக் கொள்வதன் முன்னமே,
போற்ற வல்லிரேல், புள்ளிருக்குவேளூர்,
சீற்றம்ஆயின தேய்ந்து அறும்; காண்மினே! 2

அருமறையனை, ஆணொடு பெண்ணனை,
கருவிடம் மிக உண்ட எம் கண்டனை,
புரிவெண்நூலனை, புள்ளிருக்குவேளூர்,
உருகி நைபவர் உள்ளம் குளிருமே. 3

தன் உரு(வ்)வை ஒருவருக்கு அறிவு ஒணா
மின்உரு(வ்)வனை, மேனி வெண்நீற்றனை,
பொன்உரு(வ்)வனை, ''புள்ளிருக்குவேளூர்!''
என்ன வல்லவர்க்கு இல்லை, இடர்களே. 4

செங்கண்மால் பிரமற்கும் அறிவு ஒணா
அங்கியின்(ன்) உருஆகி, அழல்வது ஓர்
பொங்கு அர(வ்)வனை, புள்ளிருக்குவேளூர்
மங்கைபாகனை, வாழ்த்த, வரும், இன்பே. 5

குற்றம் இ(ல்)லியை, கோலச் சிலையினால்
செற்றவர் புரம் செந்தழல் ஆக்கியை,
புற்று அர(வ்)வனை, புள்ளிருக்குவேளூர்,
பற்ற வல்லவர் பாவம் பறையுமே. 6

கையினோடு கால் கட்டி, உமர்எலாம்,
''ஐயன் வீடினன்'' என்பதன் முன்னம், நீர்,
பொய் இலா அரன், புள்ளிருக்குவேளூர்,
மை உலாவிய கண்டனை, வாழ்த்துமே! 7

உள்ளம் உள்கி உகந்து, சிவன் என்று,
மெள்ள உள்க வினை கெடும்; மெய்ம்மையே;
புள்ளினார் பணி புள்ளிருக்குவேளூர்
வள்ளல் பாதம் வணங்கித் தொழுமினே! 8

அரக்கனார் தலைபத்தும் அழிதர
நெருக்கி, மா மலர்ப்பாதம் நிறுவிய
பொருப்பனார் உறை புள்ளிருக்குவேளூர்
விருப்பினால்-தொழுவார் வினை வீடுமே. 9

திரு அன்பில் ஆலந்துறை V-80 திருக் குறுந்தொகை

வானம் சேர் மதி சூடிய மைந்தனை
நீ, நெஞ்சே!—கெடுவாய்—நினைகிற்கிலை;
ஆன்அஞ்சுஆடியை, அன்பில் ஆலந்துறைக்
கோன், எம் செல்வனை, கூறிட கிற்றியே! 1

காரணத்தர், கருத்தர், கபாலியார்,
வாரணத்துஉரி போர்த்த மணாளனார்—
ஆரணப்பொருள், அன்பில் ஆலந்துறை,
நாரணற்கு அரியான் ஒரு நம்பியே. 2

அன்பின் ஆன்அஞ்சு அமைந்து, உடன்ஆடிய
என்பின் ஆனை உரித்துக் களைந்தவன்,
அன்பிலானை, அம்மானை, அள் ஊறிய
அன்பினால் நினைந்தார் அறிந்தார்களே. 3

சங்கை, உள்ளதும்; சாவதும் மெய்; உமை-
பங்கனார் அடி பாவியேன், நான் உய;
அங்கணன், எந்தை, அன்பில் ஆலந்துறைச்
செங்கணார், அடிச் சேரவும் வல்லனே? 4

கொக்குஇற(ஃ)கர், குளிர்மதிச் சென்னியர்,
மிக்க(அ)ரக்கர் புரம் எரிசெய்தவர்,
அக்கு அரையினர், அன்பில் ஆலந்துறை
நக்க உரு(வ்)வரும், நம்மை அறிவரே. 5

வெள்ளம் உள்ள விரிசடை நந்தியைக்
கள்ளம் உள்ள மனத்தவர் காண்கிலார்;
அள்ளல் ஆர் வயல் அன்பில் ஆலந்துறை
உள்ளஆறு அறியார், சிலர்ஊமரே. 6

பிறவி மாயப்பிணக்கில் அழுந்தினும்,
உறவுஎலாம் சிந்தித்து, உன்னி உகவாதே,
அறவன்எம்பிரான் அன்பில் ஆலந்துறை
மறவாதே, தொழுது, ஏத்தி வணங்குமே! 7

நுணங்குநூல் அயன் மாலும் இருவரும்
பிணங்கி எங்கும் திரிந்து எய்த்தும் காண்கிலா
அணங்கன், எம்பிரான், அன்பில் ஆலந்துறை
வணங்கும், நும் வினை மாய்ந்து அறும் வண்ணமே! 8

பொய்எலாம் உரைக்கும் சமண்சாக்கியக்-
கையன்மார் உரை கேளாது எழுமினோ!
ஐயன், எம்பிரான், அன்பில் ஆலந்துறை
மெய்யன், சேவடி ஏத்துவார் மெய்யரே. 9

இலங்கை வேந்தன் இருபதுதோள் இற்று
மலங்க மாமலைமேல் விரல் வைத்தவன்,
அலங்கல் எம்பிரான், அன்பில் ஆலந்துறை
வலம்கொள்வாரை வானோர் வலம்கொள்வரே. 10

திருப் பாண்டிக்கொடுமுடி V-81 திருக் குறுந்தொகை

சிட்டனை, சிவனை, செழுஞ்சோதியை,
அட்டமூர்த்தியை, ஆலநிழல் அமர்
பட்டனை, திருப் பாண்டிக்கொடுமுடி
நட்டனை, தொழ, நம் வினை நாசமே. 1

பிரமன் மால் அறியாத பெருமையன்,
தருமம்ஆகிய தத்துவன், எம்பிரான்,
பரமனார், உறை பாண்டிக்கொடுமுடி
கருமம்ஆகத் தொழு, மட நெஞ்சமே! 2

ஊசலாள் அல்லள்; ஒண் கழலாள் அல்லள்;
''நேசம் ஆம் திருப் பாண்டிக்கொடுமுடி
ஈசனே!'' எனும் இத்தனைஅல்லது
பேசும்ஆறு அறியாள், ஒரு பேதையே. 3

தூண்டிய(ச்) சுடர் போல்-ஒக்கும் சோதியான்;
காண்டலும்(ம்) எளியான், அடியார்கட்கு;
''பாண்டிக்கொடுமுடி மேய பரமனைக்
காண்டும்'' என்பவர்க்கு எய்தும் கருத்து ஒணான். 4

நெருக்கி, அம் முடி, நின்று இசை வானவர்
இருக்கொடும் பணிந்து ஏத்த இருந்தவன்
திருக் கொடு(ம்)முடி என்றலும், தீவினைக்-
கருக் கெடும்(ம்); இது கைகண்ட யோகமே. 5

திரு வான்மியூர் V-82 திருக் குறுந்தொகை

விண்ட மா மலர் கொண்டு விரைந்து, நீர்,
அண்டநாயகன்தன் அடி சூழ்மின்கள்!
பண்டு நீர் செய்த பாவம் பறைத்திடும்,
வண்டு சேர் பொழில், வான்மியூர் ஈசனே. 1

பொருளும் சுற்றமும் பொய்ம்மையும் விட்டு, நீர்,
''மருளும் மாந்தரை மாற்றி, மயக்கு அறுத்து
அருளுமா வல்ல ஆதியாய்!'' என்றலும்,
மருள் அறுத்திடும்—வான்மியூர் ஈசனே. 2

மந்தம்ஆகிய சிந்தை மயக்கு அறுத்து,
அந்தம் இல் குணத்தானை அடைந்து, நின்று,
''எந்தை! ஈசன்!'' என்று ஏத்திட வல்லிரேல்,
வந்து நின்றிடும்—வான்மியூர் ஈசனே. 3

உள்ளம் உள் கலந்து ஏத்த வல்லார்க்கு அலால்
கள்ளம் உள்ளவழிக் கசிவான்அலன்—
வெள்ளமும்(ம்) அரவும் விரவும் சடை
வள்ளல் ஆகிய வான்மியூர் ஈசனே. 4

படம் கொள் பாம்பரை, பால்மதி சூடியை,
வடம் கொள் மென்முலை மாது ஒருகூறனை,
தொடர்ந்து நின்று தொழுது எழுவார் வினை
மடங்க நின்றிடும்—வான்மியூர் ஈசனே. 5

நெஞ்சில் ஐவர் நினைக்க நினைக்குறார்;
''பஞ்சின் மெல்அடியாள் உமை பங்க!'' என்று
அஞ்சி, நாள்மலர் தூவி, அழுதிரேல்,
வஞ்சம் தீர்த்திடும்—வான்மியூர் ஈசனே. 6

நுணங்குநூல் அயன் மாலும் அறிகிலாக்
குணங்கள்தாம் பரவிக் குறைந்து உக்கவர்,
சுணங்கு பூண் முலைத் தூ மொழியார்அவர்,
வணங்க, நின்றிடும்—வான்மியூர் ஈசனே. 7

''ஆதியும்(ம்), அரனாய், அயன், மாலும்ஆய்,
பாதி பெண்உருஆய பரமன்'' என்று
ஓதி, உள் குழைந்து, ஏத்த வல்லார்அவர்
வாதை தீர்த்திடும்—வான்மியூர் ஈசனே. 8

ஓட்டை மாடத்தில் ஒன்பதுவாசலும்
காட்டில் வேவதன் முன்னம், கழல்அடி
நாட்டி, நாள்மலர் தூவி, வலம்செயில்,
வாட்டம் தீர்த்திடும்—வான்மியூர் ஈசனே. 9

பாரம்ஆக மலை எடுத்தான்தனைச்
சீரம் ஆகத் திருவிரல் ஊன்றினான்;
ஆர்வம்ஆக அழைத்து அவன் ஏத்தலும்,
வாரம் ஆயினன்—வான்மியூர் ஈசனே. 10

திரு நாகைக்காரோணம் V-83 திருக் குறுந்தொகை

''பாணத்தால் மதில்மூன்றும் எரித்தவன்;
பூணத் தான் அரவு ஆமை பொறுத்தவன்;
காணத் தான் இனியான்—கடல் நாகைக்கா-
ரோணத்தான்'' என, நம் வினை ஓயுமே. 1

வண்டு அலம்பிய வார்சடை ஈசனை,
விண்தலம் பணிந்து ஏத்தும் விகிர்தனை,
கண்டல் அம் கமழ் நாகைக்காரோணனை,
கண்டலும், வினைஆன கழலுமே. 2

புனையும் மா மலர் கொண்டு, புரிசடை
நனையும் மா மலர் சூடிய நம்பனை,
கனையும் வார்கடல் நாகைக்காரோணனை,
நினையவே, வினைஆயின நீங்குமே. 3

கொல்லை மால்விடை ஏறிய கோவினை,
எல்லி மா நடம்ஆடும் இறைவனை,
கல்லின் ஆர் மதில் நாகைக்காரோணனை,
சொல்லவே, வினைஆனவை சோருமே. 4

மெய்யனை, விடைஊர்தியை, வெண்மழுக்
கையனை, கடல் நாகைக்காரோணனை,
மை அனுக்கிய கண்டனை, வானவர்
ஐயனை, தொழுவார்க்கு அல்லல் இல்லையே. 5

அலங்கல் சேர் சடை ஆதிபுராணனை,
விலங்கல்மெல்லியல் பாகம் விருப்பனை,
கலங்கள் சேர் கடல் நாகைக்காரோணனை,
வலம்கொள்வார் வினைஆயின மாயுமே. 6

சினம் கொள் மால்கரி சீறிய ஏறினை,
இனம் கொள் வானவர் ஏத்திய ஈசனை,
கனம் கொள் மா மதில் நாகைக்காரோணனை,
மனம்கொள்வார் வினைஆயின மாயுமே. 7

அந்தம் இல் புகழ் ஆயிழையார் பணிந்து,
''எந்தை! ஈசன்!'' என்று ஏத்தும் இறைவனை,
கந்த வார் பொழில் நாகைக்காரோணனை,
சிந்தைசெய்யக் கெடும், துயர்; திண்ணமே. 8

கருவனை, கடல் நாகைக்காரோணனை,
இருவருக்கு அறிவு ஒண்ணா இறைவனை,
ஒருவனை, உணரார் புரம்மூன்று எய்த
செருவனை, தொழத் தீவினை தீருமே. 9

கடல் கழி தழி நாகைக்காரோணன்தன்,
வடவரை எடுத்து ஆர்த்த அரக்கனை
அடர ஊன்றிய, பாதம் அணைதர,
தொடர அஞ்சும், துயக்கு அறும் காலனே. 10

திருக் காட்டுப்பள்ளி V-84 திருக் குறுந்தொகை

மாட்டுப் பள்ளி மகிழ்ந்து உறைவீர்க்கு எலாம்
கேட்டுப் பள்ளி கண்டீர்! கெடுவீர்; இது
ஓட்டுப் பள்ளி விட்டு ஓடல் உறுமுனம்,
காட்டுப்பள்ளி உளான் கழல் சேர்மினே! 1

மாட்டைத் தேடி மகிழ்ந்து, நீர், நும்முளே
நாட்டுப் பொய்எலாம் பேசிடும் நாண்இலீர்!
கூட்டை விட்டு உயிர் போவதன் முன்னமே,
காட்டுப்பள்ளி உளான் கழல் சேர்மினே! 2

தேனை வென்ற சொல்லாளொடு செல்வமும்
ஊனை விட்டு உயிர் போவதன் முன்னமே,
கான வேடர் கருதும் காட்டுப்பள்ளி
ஞானநாயகனைச் சென்று நண்ணுமே! 3

அருத்தமும் மனையாளொடு மக்களும்
பொருத்தம் இல்லை; பொல்லாதது போக்கிடும்
கருத்தன், கண்ணுதல், அண்ணல், காட்டுப்பள்ளி
திருத்தன், சேவடியைச் சென்று சேர்மினே! 4

''சுற்றமும் துணையும், மனைவாழ்க்கையும்,
அற்றபோது அணையார், அவர்'' என்றுஎன்றே,
கற்றவர்கள் கருதும் காட்டுப்பள்ளிப்
பெற்றம் ஏறும் பிரான் அடி சேர்மினே! 5

அடும்பும், கொன்றையும், வன்னியும், மத்தமும்,
துடும்பல்செய் சடைத் தூ மணிச்சோதியான்;
கடம்பன்தாதை; கருதும் காட்டுப்பள்ளி
உடம்பினார்க்கு ஓர் உறு துணை ஆகுமே. 6

மெய்யில் மாசு உடையார், உடல் மூடுவார்,
பொய்யை மெய் என்று புக்கு உடன்வீழன்மின்!
கையில் மான் உடையான், காட்டுப்பள்ளி எம்
ஐயன்தன் அடியே அடைந்து உய்மினே! 7

வேலை வென்ற கண்ணாரை விரும்பி, நீர்,
சீலம் கெட்டுத் திகையன்மின், பேதைகாள்!
காலையே தொழும் காட்டுப்பள்ளி(ய்) உறை
நீலகண்டனை நித்தல் நினைமினே! 8

‘‘இன்று உளார் நாளை இல்லை’’ எனும் பொருள்
ஒன்றும் ஓராது, உழிதரும் ஊமர்காள்!
அன்று வானவர்க்குஆக விடம் உண்ட
கண்டனார் காட்டுப்பள்ளி கண்டு உய்ம்மினே! 9

எண் இலா அரக்கன் மலை ஏந்திட
எண்ணி நீள் முடிபத்தும் இறுத்தவன்,
கண்உளார் கருதும், காட்டுப்பள்ளியை
நண்ணுவார்அவர்தம் வினை நாசமே. 10

திருச் சிராப்பள்ளி   V-85   திருக் குறுந்தொகை

மட்டு வார்குழலாளொடு மால்விடை
இட்டமா உகந்து ஏறும் இறைவனார்;
கட்டு நீத்தவர்க்கு இன்அருளே செயும்
சிட்டர்போலும்—சிராப்பள்ளிச் செல்வரே. 1

அரிஅயன் தலை வெட்டி வட்டு ஆடினார்,
அரிஅயன் தொழுது ஏத்தும் அரும்பொருள்,
பெரியவன், சிராப்பள்ளியைப் பேணுவார்
அரிஅயன் தொழ அங்கு இருப்பார்களே. 2

அரிச்சு, இராப்பகல் ஐவரால் ஆட்டுண்டு,
சுரிச்சு இராது,—நெஞ்சே!—ஒன்று சொல்லக் கேள்:
திரிச் சிரர்ப்பள்ளி என்றலும், தீவினை
நரிச்சு இராது நடக்கும்நடக்குமே. 3

‘‘தாயும்ஆய் எனக்கே, தலை கண்ணும்ஆய்,
பேயனேனையும் ஆண்ட பெருந்தகை;
தேய நாதன்—சிராப்பள்ளி மேவிய
நாயனார்’’ என, நம் வினை நாசமே. 4

திரு வாட்போக்கி V-86 திருக் குறுந்தொகை

காலபாசம் பிடித்து எழு தூதுவர்,
''பாலகர், விருத்தர், பழையார்'' எனார்;
ஆலநீழல் அமர்ந்த வாட்போக்கியார்
சீலம் ஆர்ந்தவர் செம்மையுள் நிற்பரே. 1

விடுத்த தூதுவர் வந்து வினைக்குழிப்
படுத்தபோது பயன் இலை—பாவிகாள்!
அடுத்த கின்னரம் கேட்கும் வாட்போக்கியை
எடுத்தும், ஏத்தியும், இன்புறுமின்களே! 2

வந்து இவ்வாறு வளைத்து எழு தூதுவர்
உந்தி, ஓடி, நரகத்து இடாமுனம்,—
அந்தியின்(ன்) ஒளி தங்கும் வாட்போக்கியார்—
சிந்தியா எழுவார் வினை தீர்ப்பரே. 3

கூற்றம் வந்து குமைத்திடும்போதினால்
தேற்றம் வந்து, தெளிவுஉறல் ஆகுமே?
ஆற்றவும் அருள்செய்யும் வாட்போக்கிபால்
ஏற்றுமின், விளக்கை, இருள் நீங்கவே! 4

மாறுகொண்டு வளைத்து எழு தூதுவர்
வேறுவேறு படுப்பதன் முன்னமே,
ஆறு செஞ்சடை வைத்த வாட்போக்கியார்க்கு
ஊறிஊறி உருகும், என் உள்ளமே. 5

கானம் ஓடிக் கடிது எழு தூதுவர்
தானமோடு தலை பிடியாமுனம்,
ஆன்அஞ்சுஆடி உகந்த வாட்போக்கியார்,
ஊனம்இல்லவர்க்கு உண்மையில் நிற்பரே. 6

பார்த்துப் பாசம் பிடித்து எழு தூதுவர்
கூர்த்த வேலால் குமைப்பதன் முன்னமே,
ஆர்த்த கங்கை அடக்கும் வாட்போக்கியார்
கீர்த்திமைகள் கிளர்ந்து உரைமின்களே! 7

நாடி வந்து, நமன்தமர் நல் இருள்
கூடி வந்து, குமைப்பதன் முன்னமே,
ஆடல் பாடல் உகந்த வாட்போக்கியை
வாடி ஏத்த, நம் வாட்டம் தவிருமே. 8

கட்டு அறுத்துக் கடிது எழு தூதுவர்
பொட்ட நூக்கிப் புறப்படாமுன்னமே,
அட்டமாமலர் சூடும் வாட்போக்கியார்க்கு
இட்டம்ஆகி, இணைஅடி ஏத்துமே! 9

இரக்கம் முன் அறியாது எழு தூதுவர்
பரக்கழித்து, அவர் பற்றுதல்முன்னமே,
அரக்கனுக்கு அருள்செய்த வாட்போக்கியார்
கரப்பதும் கரப்பார், அவர்தங்கட்கே. 10

திரு மணஞ்சேரி V-87 திருக் குறுந்தொகை

பட்டம்நெற்றியர்; பாய் புலித்தோலினர்;
நட்டம் நின்று நவில்பவர்—நாள்தொறும்
சிட்டர் வாழ் திரு ஆர் மணஞ்சேரி எம்
வட்டவார்சடையார்; வண்ணம் வாழ்த்துமே! 1

துன்னு வார்குழலாள் உமையாளொடும்
பின்னுவார்சடைமேல் பிறை வைத்தவர்,
மன்னு வார் மணஞ்சேரி மருந்தினை,
உன்னுவார் வினைஆயின ஓயுமே. 2

புற்றில் ஆடு அரவு ஆட்டும் புனிதனார்;
தெற்றினார் புரம் தீ எழச் செற்றவர்—
சுற்றின் ஆர் மதில் சூழ் மணஞ்சேரியார்;
பற்றினார்அவர் பற்று, அவர்; காண்மினே! 3

மத்தமும் மதியும் வளர் செஞ்சடை
முத்தர்; முக்குணர்; மூசு அரவம் அணி
சித்தர்; தீவணர்—சீர் மணஞ்சேரி எம்
வித்தர்; தாம் விருப்பாரை விருப்பரே. 4

துள்ளு மான்மறி, தூ மழுவாளினர்;
வெள்ளநீர் கரந்தார், சடைமேல் அவர்;—
அள்ளல் ஆர் வயல் சூழ் மணஞ்சேரி எம்
வள்ளலார்; கழல் வாழ்த்தல் வாழ்வு ஆவதே. 5

நீர் பரந்த நிமிர்புன்சடையின்மேல்
ஊர் பரந்த உரகம் அணிபவர்—
சீர் பரந்த திரு மணஞ்சேரியார்;
ஏர் பரந்து அங்கு இலங்கு சூலத்தரே. 6

சுண்ணத்தர்; சுடுநீறு உகந்து ஆடலார்;
விண்ணத்து அம் மதி சூடிய வேதியர்—
மண்ணத்து அம் முழவு ஆர் மணஞ்சேரியார்;
வண்ணத்து அம் முலையாள்உமை வண்ணரே. 7

துன்ன ஆடையர், தூ மழுவாளினர்;
பின்னும் செஞ்சடைமேல் பிறை வைத்தவர்—
மன்னு வார் பொழில் சூழ் மணஞ்சேரி எம்
மன்னனார்; கழலே தொழ வாய்க்குமே. 8

சித்தர், தேவர்கள், மாலொடு, நான்முகன்—
புத்தர்தேர் அமண்கையர்—புகழவே,
மத்தர்தாம் அறியார், மணஞ்சேரி எம்
அத்தனார்; அடியார்க்கு அல்லல் இல்லையே. 9

கடுத்த மேனி அரக்கன், கயிலையை
எடுத்தவன், நெடு நீள் முடிபத்து இறப்
படுத்தலும், ‘‘மணஞ்சேரி, அருள்!’’ எனக்
கொடுத்தனன், கொற்றவாளொடு நாமமே. 10

திரு மருகல் V-88 திருக் குறுந்தொகை

பெருகல் ஆம், தவம்; பேதைமை தீரல் ஆம்;
திருகல்ஆகிய சிந்தை திருத்தல் ஆம்;
பருகல் ஆம், பரம்ஆயது ஓர் ஆனந்தம்—
மருகலான் அடி வாழ்த்தி வணங்கவே. 1

பாடம் கொள் பனுவல்-திறம் கற்றுப் போய்,
நாடு அங்கு உள்ளன தட்டிய நாண்இலீர்!
மாடம் சூழ் மருகல் பெருமான் திரு
வேடம் கைதொழ, வீடு எளிது ஆகுமே. 2

சினத்தினால் வரும் செய் தொழில்ஆம்அவை-
அனைத்தும் நீங்கி நின்று, ஆதரவுஆய், மிக
மனத்தினால் மருகல்பெருமான் திறம்
நினைப்பினார்க்கு இல்லை, நீள் நில வாழ்க்கையே. 3

ஓது பைங்கிளிக்கு ஒண் பால்அமுது ஊட்டி,
பாதுகாத்துப் பலபல கற்பித்து,
மாதுதான், மருகல்பெருமானுக்குத்
தூது சொல்ல விடத்தான் தொடங்குமே. 4

இன்னஆறு என்பது உண்டு அறியேன்; இன்று
துன்னு கைவளை சோர, கண் நீர் மல்கும்;
மன்னு தென்மருகல் பெருமான் திறம்
உன்னி, ஒண்கொடி உள்ளம் உருகுமே. 5

சங்கு சோர, கலையும் சரியவே,
மங்கைதான், மருகல்பெருமான் வரும்
அங்கவீதி அருகு அணையாநிற்கும்;
நங்கைமீர்! இதற்கு என் செய்கேன், நாளுமே? 6

காட்சி பெற்றிலள்ஆகிலும், காதலே
மீட்சி ஒன்று அறியாது மிகுவதே?
மாட்சி ஆர் மருகல்பெருமானுக்குத்
தாட்சி சால உண்டாகும்!—என் தையலே. 7

நீடு நெஞ்சுள் நினைந்து, கண் நீர் மல்கும்,
ஓடும் மாலினோடு, ஒண் கொடிமாதராள்,
''மாடம் நீள் மருகல் பெருமான் வரில்
கூடு, நீ!'' என்று கூடல் இழைக்குமே. 8

கந்தவார்குழல் கட்டிலள், காரிகை
அந்தி, ''மால்விடையோடும் அன்புஆய் மிக
வந்திடாய், மருகல்பெருமான்!'' என்று
சிந்தைசெய்து திகைத்திடும்; காண்மினே! 9

ஆதி மாமலை அன்று எடுத்தான் இற்று,
''சோதி!'' என்றலும், தொல்அருள் செய்திடும்
ஆதியான், மருகல்பெருமான், திறம்
ஓதி வாழ்பவர் உம்பர்க்கும் உம்பரே. 10

பொது　V-89　தனித் திருக் குறுந்தொகை

ஒன்று வெண்பிறைக்கண்ணி; ஓர் கோவணம்;
ஒன்று கீள் உமையோடும் உடுத்தது—
ஒன்று வெண்தலை ஏந்தி, எம் உள்ளத்தே
ஒன்றி நின்று, அங்கு உறையும் ஒருவனே. 1

இரண்டும் ஆம், அவர்க்கு உள்ளன செய்தொழில்;
இரண்டும் ஆம், அவர்க்கு உள்ளன கோலங்கள்;
இரண்டும் இல்இளமான்; எமை ஆள்உகந்து,
இரண்டுபோதும் என் சிந்தையுள் வைகுமே. 2

மூன்றுமூர்த்தியுள் நின்று, இயலும் தொழில்
மூன்றும் ஆயின; மூஇலைச்சூலத்தன்;
மூன்றுகண்ணினன்; தீத்தொழில் மூன்றினன்;
மூன்றுபோதும் என் சிந்தையுள் மூழ்குமே. 3

நாலின்மேல் முகம் செற்றதும்; மன் நிழல்
நாலு நன்கு உணர்ந்திட்டதும்; இன்பம்ஆம்
நாலுவேதம்,—சரித்ததும்,—நன்நெறி
நாலுபோல்—எம் அகத்து உறை நாதனே. 4

அஞ்சும் அஞ்சும் ஓர்ஆடி, அரைமிசை
அஞ்சுபோல் அரவு ஆர்த்தது, இன் தத்துவம்
அஞ்சும், அஞ்சும், ஓர்ஓர்அஞ்சும், ஆயவன்;
அஞ்சும்ஆம்—எம் அகத்து உறை ஆதியே. 5

ஆறுகால் வண்டு மூசிய கொன்றையான்;
ஆறு சூடிய அண்ட முதல்வனார்;
ஆறுகூர்மையர்க்கு அச் சமயப் பொருள்
ஆறுபோல்—எம் அகத்து உறை ஆதியே. 6

ஏழு மா மலை, ஏழ்பொழில், சூழ் கடல்-
ஏழு, போற்றும் இராவணன் கைந்நரம்பு-
ஏழு கேட்டு அருள்செய்தவன் பொன்கழல்,
ஏழும் சூழ் அடியேன் மனத்து உள்ளவே. 7

எட்டுமூர்த்தியாய் நின்று இயலும் தொழில்,
எட்டு வான்குணத்து, ஈசன் எம்மான்தனை
எட்டுமூர்த்தியும் எம் இறை எம் உளே;
எட்டுமூர்த்தியும் எம் உள் ஒடுங்குமே. 8

ஒன்பது ஒன்பது—யானை, ஒளி களிறு;
ஒன்பதுஒன்பது பல்கணம் சூழவே,
ஒன்பது ஆம் அவை தீத் தொழிலின்(ன்) உரை;
ஒன்பது ஒத்து நின்று என் உள் ஒடுங்குமே. 9

பத்து-நூறவன், வெங் கண் வெள்ஏற்று அண்ணல்;
பத்து-நூறு, அவன் பல்சடை தோள்மிசை;
பத்து யாம் இலம் ஆதலின் ஞானத்தால்
பத்தியான் இடம் கொண்டது பள்ளியே. 10

பொது V-90 தனித் திருக் குறுந்தொகை

மாசு இல் வீணையும், மாலை மதியமும்,
வீசு தென்றலும், வீங்கு இளவேனிலும்,
மூசு வண்டு அறை பொய்கையும், போன்றதே—
ஈசன், எந்தை, இணைஅடி நீழலே. 1

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்;
நமச்சிவாயவே நான் அறி விச்சையும்;
நமச்சிவாயவே நா நவின்று ஏத்துமே;
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே. 2

ஆள் ஆகார்; ஆள்ஆனாரை அடைந்து உய்யார்;
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்;
தோளாத(ச்) சுரையோ, தொழும்பர் செவி?
வாளா மாய்ந்து மண்ஆகிக் கழிவரே! 3

நடலை வாழ்வுகொண்டு என் செய்திர்? நாண்இலீர்?
சுடலை சேர்வது சொல் பிரமாணமே;
கடலின் நஞ்சு அமுதுஉண்டவர் கைவிட்டால்,
உடலினார் கிடந்து ஊர் முனி பண்டமே! 4

பூக் கைக் கொண்டு அரன் பொன்அடி போற்றிலார்;
நாக்கைக்கொண்டு அரன் நாமம் நவில்கிலார்;
ஆக்கைக்கே இரை தேடி, அலமந்து,
காக்கைக்கே இரை ஆகி, கழிவரே! 5

குறிகளும்(ம்), அடையாளமும், கோயிலும்,
நெறிகளும்(ம்), அவர் நின்றது ஓர் நேர்மையும்,
அறிய ஆயிரம்ஆரணம் ஓதிலும்,
பொறிஇலீர்! மனம் என்கொல், புகாததே? 6

வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும்,
தாழ்த்தச் சென்னியும், தந்த தலைவனைச்
சூழ்த்த மா மலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா, வினையேன் நெடுங் காலமே! 7

எழுது பாவைநல்லார் திறம் விட்டு, நான்,
தொழுது போற்றி, நின்றேனையும் சூழ்ந்துகொண்டு,
உழுத சால்வழியே உழுவான்பொருட்டு
இழுதைநெஞ்சம்இது என் படுகின்றதே! 8

நெக்குநெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன் ஆர் சடைப் புண்ணியன்,
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பவர், அவர்தம்மை நாணியே. 9

விறகில்-தீயினன், பாலில் படு நெய் போல்
மறைய நின்றுளன்—மா மணிச்சோதியான்;
உறவுகோல் நட்டு, உணர்வுகயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய, முன் நிற்குமே. 10

பொது V-91 தனித் திருக் குறுந்தொகை

ஏஇலானை, என் இச்சை அகம்படிக்-
கோயிலானை, குணப்பெருங்குன்றினை,
வாயிலானை, மனோன்மணியைப் பெற்ற
தாய்இலானை, தழுவும், என் ஆவியே. 1

முன்னை ஞான முதல்-தனி வித்தினை;
பின்னை ஞானப் பிறங்கு சடையனை;
என்னை ஞானத்து, இருள் அறுத்து, ஆண்டவன்-
தன்னை; ஞானத்தளை இட்டு வைப்பனே. 2

ஞானத்தால்-தொழுவார், சிலஞானிகள்;
ஞானத்தால்-தொழுவேன், உனை நான், அலேன்;
ஞானத்தால்-தொழுவார்கள் தொழ, கண்டு,
ஞானத்தால் உனை, நானும் தொழுவனே. 3

புழுவுக்கும் குணம் நான்கு; எனக்கும்(ம்) அதே;
புழுவுக்கு இங்கு எனக்கு உள்ள பொல்லாங்கு இல்லை;
புழுவினும் கடையேன் புனிதன்தமர்-
குழுவுக்கு எவ்விடத்தேன், சென்று கூடவே? 4

மலையே வந்து விழினும், மனிதர்காள்!
நிலையில் நின்று கலங்கப்பெறுதிரே?
தலைவன்ஆகிய ஈசன் தமர்களை,
கொலை செய் யானைதான், கொன்றிடுகிற்குமே? 5

கற்றுக் கொள்வன வாய் உள, நா உள;
இட்டுக் கொள்வன பூ உள; நீர் உள;
கற்றைச்செஞ்சடையான் உளன்; நாம் உளோம்;
எற்றுக்கோ, நமனால் முனிவுண்பதே? 6

மனிதர்காள்! இங்கே வம்! ஒன்று சொல்லுகேன்:
கனி தந்தால் கனி உண்ணவும் வல்லிரே?
புனிதன், பொன்கழல் ஈசன், எனும் கனி
இனிது சாலவும், ஏசற்றவர்கட்கே. 7

என்னை ஏதும் அறிந்திலன், எம்பிரான்;
தன்னை, நானும் முன், ஏதும் அறிந்திலேன்;
என்னைத் தன் அடியான் என்று அறிதலும்,
தன்னை நானும் பிரான் என்று அறிந்தெனே. 8

தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பது ஓர்
உள்ளத் தேறல்; அமுத ஒளி; வெளி;
கள்ளத்தேன், கடியேன், கவலைக்கடல்-
வெள்ளத்தேனுக்கு எவ்வாறு விளைந்ததே? 9

பொது V-92 காலபாசத் திருக் குறுந்தொகை

கண்டுகொள்ள (அ)ரியானைக் கனிவித்துப்
பண்டு நான் செய்த பாழிமை கேட்டிரேல்,
கொண்ட பாணி கொடுகொட்டி தாளம் கைக்-
கொண்ட தொண்டரைத் துன்னிலும் சூழலே! 1

‘‘நடுக்கத்துள்ளும், நகையுளும், நம்பற்குக்
கடுக்கக் கல்லவடம் இடுவார்கட்குக்
கொடுக்கக் கொள்க’’ என உரைப்பார்களை
இடுக்கண் செய்யப்பெறீர், இங்கு நீங்குமே! 2

கார் கொள் கொன்றைக் கடிமலர்க்கண்ணியான்
சீர் கொள் நாமம் சிவன் என்று அரற்றுவார்
ஆர்கள்ஆகினும் ஆக; அவர்களை
நீர்கள் சாரப்பெறீர், இங்கு நீங்குமே! 3

சாற்றினேன்: சடை நீள் முடிச் சங்கரன்,
சீற்றம் காமன்கண் வைத்தவன், சேவடி
ஆற்றவும் களிப்பட்ட மனத்தராய்,
‘‘போற்றி!’’ என்று உரைப்பார் புடை போகலே! 4

இறை என் சொல் மறவேல், நமன்தூதுவீர்!
பிறையும் பாம்பும் உடைப் பெருமான் தமர்,
நறவம் நாறிய நன்நறுஞ் சாந்திலும்
நிறைய நீறு அணிவார், எதிர் செல்லலே! 5

வாமதேவன் வள நகர் வைகலும்,
காமம் ஒன்று இலராய், கை விளக்கொடு,
தாமம், தூபமும், தண்நறுஞ்சாந்தமும்,
ஏமமும், புனைவார் எதிர் செல்லலே! 6

படையும் பாசமும் பற்றிய கையினீர்!
அடையன்மின், நமது ஈசன் அடியரை!
விடை கொள் ஊர்தியினான் அடியார்குழாம்
புடை புகாது, நீர், போற்றியே போமினே! 7

விச்சை ஆவதும், வேட்கைமை ஆவதும்,
நிச்சல் நீறு அணிவாரை நினைப்பதே;
அச்சம் எய்தி அருகு அணையாது, நீர்,
பிச்சை புக்கவன் அன்பரைப் பேணுமே! 8

இன்னம் கேண்மின்: இளம்பிறை சூடிய
மன்னன் பாதம் மனத்துஉடன் ஏத்துவார்,
மன்னும் அஞ்சுஎழுத்து ஆகிய மந்திரம்-
தன்னில் ஒன்று வல்லாரையும், சாரலே! 9

மற்றும் கேண்மின்: மனப் பரிப்பு ஒன்று இன்றிச்
சுற்றும் பூசிய நீற்றொடு, கோவணம்,
ஒற்றை ஏறு, உடையர்ன் அடியேஅலால்
பற்றுஒன்றுஇ(ல்)லிகள்மேல் படைபோகலே! 10

அரக்கன் ஈர்-ஐந்தலையும் ஓர்தாளினால்
நெருக்கி ஊன்றியிட்டான் தமர் நிற்கிலும்,
சுருக்கெனாது, அங்குப் பேர்மின்கள்! மற்று நீர்
சுருக்கெனில், சுடரான் கழல் சூடுமே. 11

பொது V-93

“மறக்கிற்பனே” என்னும் திருக் குறுந்தொகை

காசனை, கனலை, கதிர் மா மணித்-
தேசனை, புகழார்—சிலர்தெண்ணர்கள்;
மாசினைக் கழித்து ஆட்கொள வல்ல எம்
ஈசனை இனி நான் மறக்கிற்பனே? 1

புந்திக்கு(வ்) விளக்குஆய புராணனை,
சந்திக்கண் நடம்ஆடும் சதுரனை,
அந்திவண்ணனை, ஆர்அழல்மூர்த்தியை,
வந்து என் உள்ளம் கொண்டானை, மறப்பனே? 2

‘‘ஈசன், ஈசன்’’ என்று என்றும் அரற்றுவன்;
ஈசன்தான் என் மனத்தில் பிரிவு இலன்;
ஈசன்தன்னையும் என் மனத்துக் கொண்டு(வ்),
ஈசன்தன்னையும் யான் மறக்கிற்பனே? 3

ஈசன் என்னை அறிந்தது அறிந்தனன்,—
ஈசன் சேவடி ஏற்றப்பெறுதலால்,—
ஈசன் சேவடி ஏத்தப்பெற்றேன்; இனி
ஈசன்தன்னையும் யான் மறக்கிற்பனே? 4

தேனை, பாலினை, திங்களை, ஞாயிற்றை,
வானவெண்மதி சூடிய மைந்தனை,
வேனிலானை மெலிவு செய் தீ-அழல்-
ஞானமூர்த்தியை, நான் மறக்கிற்பனே? 5

கன்னலை, கரும்பு ஊறிய தேறலை,
மின்னனை, மின் அனைய உருவனை,
பொன்னனை, மணிக்குன்று பிறங்கிய
என்னனை, இனி யான் மறக்கிற்பனே? 6

கரும்பினை, கட்டியை, கந்தமாமலர்ச்
சுரும்பினை, சுடர்ச்சோதியுள் சோதியை,
அரும்பினில் பெரும்போது கொண்டு, ஆய் மலர்
விரும்பும் ஈசனை, நான் மறக்கிற்பனே? 7

துஞ்சும்போதும் சுடர்விடு சோதியை,
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கும் நீதியை,
நஞ்சு கண்டத்து அடக்கிய நம்பனை,
வஞ்சனேன் இனி யான் மறக்கிற்பனே? 8

புதிய பூவினை, புண்ணியநாதனை,
நிதியை, நீதியை, நித்திலக்குன்றினை,
கதியை, கண்டம் கறுத்த கடவுளை,
மதியை, மைந்தனை, நான் மறக்கிற்பனே? 9

கருகு கார்முகில் போல்வது ஓர் கண்டனை,
உருவம் நோக்கியை, ஊழிமுதல்வனை,
பருகு பாலனை, பால்மதி சூடியை,
மருவும் மைந்தனை, நான் மறக்கிற்பனே? 10

பொது

V-94 "தொழற்பாலதே" என்னும் திருக் குறுந்தொகை

அண்டத்தானை, அமரர் தொழப்படும்
பண்டத்தானை, பவித்திரம்ஆம் திரு-
முண்டத்தானை, முற்றாத இளம்பிறைத்-
துண்டத்தானை—கண்டீர்—தொழல்பாலதே. 1

முத்து ஒப்பானை, முளைத்து எழு கற்பக-
வித்து ஒப்பானை, விளக்குஇடை நேர் ஒளி
ஒத்து ஒப்பானை, ஒளிர் பவளத்திரள்-
தொத்து ஒப்பானை—கண்டீர்—தொழல்பாலதே. 2

பண் ஒத்தானை, பவளம் திரண்டது ஓர்
வண்ணத்தானை, வகை உணர்வான்தனை,
எண்ணத்தானை, இளம்பிறை போல் வெள்ளைச்-
சுண்ணத்தானை—கண்டீர்—தொழல்பாலதே. 3

விடலையானை, விரை கமழ் தேன் கொன்றைப்-
படலையானை, பலி திரிவான் செலும்
நடலையானை, நரி பிரியாதது ஓர்
சுடலையானை—கண்டீர்—தொழல்பாலதே. 4

பரிதியானை, பல்வேறு சமயங்கள்
கருதியானை, கண்டார் மனம் மேவிய
பிரிதியானை, பிறர் அறியாதது ஓர்
சுருதியானை—கண்டீர்—தொழல்பாலதே. 5

ஆதியானை, அமரர் தொழப்படும்
நீதியானை, நியமநெறிகளை
ஓதியானை, உணர்தற்கு அரியது ஓர்
சோதியானை—கண்டீர்—தொழல்பாலதே. 6

ஞாலத்தானை, நல்லானை, வல்லார் தொழும்
கோலத்தானை, குணப்பெருங்குன்றினை,
மூலத்தானை, முதல்வனை, மூஇலைச்-
சூலத்தானை—கண்டீர்—தொழல்பாலதே. 7

ஆதிப்பால் அட்டமூர்த்தியை, ஆன்அஞ்சும்
வேதிப்பானை, நம்மேல் வினை வெந்து அறச்
சாதிப்பானை, தவத்துஇடை மாற்றங்கள்
சோதிப்பானை—கண்டீர்—தொழல்பாலதே. 8

நீற்றினானை, நிகர் இல் வெண்கோவணக்-
கீற்றினானை, கிளர் ஒளிச் செஞ்சடை
ஆற்றினானை, அமரர்தம் ஆர்உயிர்
தோற்றினானை—கண்டீர்—தொழல்பாலதே. 9

விட்டிட்டானை, மெய்ஞ்ஞானத்து; மெய்ப்பொருள்
கட்டிட்டானை; கனங்குழைபால் அன்பு-
பட்டிட்டானை; பகைத்தவர் முப்புரம்
சுட்டிட்டானை—கண்டீர்—தொழல்பாலதே. 10

முற்றினானை; இராவணன் நீள் முடி
ஒற்றினானை, ஒருவிரலால் உற;
பற்றினானை, ஓர் வெண்தலை; பாம்பு அரைச்
சுற்றினானை—கண்டீர்—தொழல்பாலதே. 11

பொது V-95 இலிங்க புராணத் திருக் குறுந்தொகை

புக்கு அணைந்து புரிந்து அலர் இட்டிலர்;
நக்கு அணைந்து நறுமலர் கொய்திலர்;
சொக்கு அணைந்த சுடர்ஒளிவண்ணனை
மிக்குக் காணல்உற்றார்—அங்கு இருவரே. 1

அலரும் நீரும் கொண்டு ஆட்டித் தெளிந்திலர்;
திலகம் மண்டலம் தீட்டித் திரிந்திலர்;
உலகமூர்த்தி, ஒளிநிற-வண்ணனைச்
செலவு காணல்உற்றார்—அங்கு இருவரே. 2

ஆப்பி நீரோடு அலகு கைக் கொண்டிலர்;
பூப் பெய் கூடை புனைந்து சுமந்திலர்;
காப்புக்கொள்ளி, கபாலிதன் வேடத்தை
ஒப்பிக் காணல்உற்றார்—அங்கு இருவரே. 3

நெய்யும் பாலும் கொண்டு ஆட்டி நினைந்திலர்;
பொய்யும் பொக்கமும் போக்கிப் புகழ்ந்திலர்;
ஐயன், வெய்ய அழல்நிற-வண்ணனை
மெய்யைக் காணல்உற்றார்—அங்கு இருவரே. 4

எருக்குஅம்கண்ணிகொண்டு இண்டை புனைந்திலர்;
பெருக்கக் கோவணம் பீறி உடுத்திலர்;
தருக்கினால் சென்று, தாழ்சடை அண்ணலை
நெருக்கி, காணல்உற்றார்—அங்கு இருவரே. 5

மரங்கள் ஏறி மலர் பறித்து இட்டிலர்;
நிரம்ப நீர் சுமந்து ஆட்டி நினைந்திலர்;
உரம் பொருந்தி, ஒளிநிற-வண்ணனை
நிரம்பக் காணல்உற்றார்—அங்கு இருவரே. 6

கட்டுவாங்கம் கபாலம் கைக்கொண்டிலர்;
அட்டமாங்கம் கிடந்து அடி வீழ்ந்திலர்;
சிட்டன் சேவடி சென்று எய்திக் காணிய,
பட்ட கட்டம் உற்றார்—அங்கு இருவரே. 7

வெந்தநீறு விளங்க அணிந்திலர்;
கந்தமாமலர் இண்டை புனைந்திலர்;
எந்தை, ஏறு உகந்து ஏறு எரிவண்ணனை,
அந்தம் காணல்உற்றார்—அங்கு இருவரே. 8

இள எழுந்த இருங்குவளை(ம்)மலர்
பிளவு செய்து, பிணைத்து அடி இட்டிலர்;
களவுசெய் தொழில் காமனைக் காய்ந்தவன்
அளவு காணல்உற்றார்—அங்கு இருவரே. 9

கண்டி பூண்டு கபாலம் கைக் கொண்டிலர்;
விண்ட வான் சங்கம் விம்ம வாய்வைத்திலர்;
அண்டமூர்த்தி, அழல்நிற-வண்ணனைக்
கெண்டிக் காணல்உற்றார்—அங்கு இருவரே. 10

செங்கணானும் பிரமனும் தம்முளே
எங்கும் தேடித் திரிந்தவர் காண்கிலார்;
''இங்கு உற்றேன்!'' என்று இலிங்கத்தே தோன்றினான்,
பொங்கு செஞ்சடைப் புண்ணியமூர்த்தியே. 11

பொது V-96 மனத்தொகைத் திருக் குறுந்தொகை

பொன் உள்ளத் திரள் புன்சடையின் புறம்,
மின் உள்ளத் திரள் வெண்பிறையாய்! இறை
நின் உள்ளத்து அருள் கொண்டு, இருள் நீங்குதல்
என் உள்ளத்து உளது; எந்தைபிரானிரே! 1

முக்கணாவும்(ம்) உடையாய்! முனிகள்பலர்
தொக்கு எணாவும் கழலாய்! ஒரு தோலினோடு
அக்கு அணாவும்(ம்) அரையாய்! அருளேஅலாது
எக்கணாவும்(ம்) இலன்; எந்தைபிரானிரே! 2

பனிஆய் வெண்கதிர் பாய் படர்புன்சடை
முனியாய்! நீ உலகம் முழுது ஆளினும்,
தனியாய், நீ; சரண், நீ; சலமே பெரிது;
இனியாய், நீ எனக்கு; எந்தைபிரானிரே! 3

மறையும் பாடுதிர்; மா தவர் மாலினுக்கு
உறையும் ஆயினை; கோள் அரவோடு ஒரு
பிறையும் சூடினை; என்பதுஅலால், பிறிது
இறையும் சொல் இலை—எந்தைபிரானிரே! 4

பூத்து ஆர் கொன்றையினாய்! புலியின்(ன்)அதள்
ஆர்த்தாய், ஆடுஅரவோடு! அனல்ஆடிய
கூத்தா! நின் குரை ஆர் கழலேஅலது
ஏத்தா, நா எனக்கு; எந்தைபிரானிரே! 5

''பைம் மாலும்(ம்) அரவா! பரமா! பசு—
மைம் மால் கண்ணியோடு—ஏறும் மைந்தா!'' எனும்
அம் மால்அல்லது மற்று அடிநாயினேன்
எம்மாலும்(ம்) இலன்—எந்தைபிரானிரே! 6

வெப்பத்தின் மன மாசு விளக்கிய
செப்பத்தால், ''சிவன்!'' என்பவர் தீவினை
ஒப்பத் தீர்த்திடும் ஒண் கழலாற்கு அல்லது
எப்பற்றும்(ம்) இலன்—எந்தைபிரானிரே! 7

திகழும் சூழ் சுடர் வானொடு, வைகலும்,
நிகழும் ஒண் பொருள்ஆயின, நீதி, என்
புகழும்ஆறும்அலால்; நுன பொன்அடி
இகழும்ஆறு இலன்—எந்தைபிரானிரே! 8

கைப்பற்றித் திருமால் பிரமன்(ன்) உனை
எய்ப் பற்றி(ய்) அறிதற்கு அரியாய்! அருள்
அப் பற்றுஅல்லது, மற்று அடிநாயினேன்
எப்பற்றும்(ம்) இலன்; எந்தைபிரானிரே! 9

''எந்தை, எம்பிரான்'' என்றவர்மேல் மனம்,
''எந்தை, எம்பிரான்'' என்று இறைஞ்சித் தொழுது,
''எந்தை, எம்பிரான்'' என்று அடி ஏத்துவார்,
''எந்தை, எம்பிரான்'' என்று அடி சேர்வரே. 10

பொது V-97 "சித்தத்தொகை"த் திருக் குறுந்தொகை

சிந்திப்பார் மனத்தான், சிவன், செஞ்சுடர்
அந்திவான் நிறத்தான், அணி ஆர் மதி
முந்திச் சூடிய முக்கண்ணினான், அடி
வந்திப்பார்அவர் வான்உலகு ஆள்வரே. 1

அண்டம் ஆர் இருள்ஊடு கடந்து உம்பர்
உண்டுபோலும், ஓர் ஒண்சுடர்; அச் சுடர்
கண்டு இங்கு ஆர் அறிவார்? அறிவார்எலாம்,
''வெண்திங்கள்கண்ணி வேதியன்'' என்பரே. 2

ஆதிஆயவன், ஆரும் இலாதவன்,
போது சேர் புனை நீள் முடிப் புண்ணியன்—
பாதி பெண்உருஆகி, பரஞ்சுடர்ச்-
சோதியுள் சோதிஆய், நின்ற சோதியே. 3

இட்டது, இட்டது—ஓர் ஏறு உகந்து ஏறி ஊர்
பட்டி துட்டங்களாய்ப்—பலி தேர்வது ஓர்
கட்ட வாழ்க்கையன்ஆகிலும், வானவர்,
''அட்டமூர்த்தி, அருள்!'' என்று அடைவரே. 4

ஈறு இல் கூறையன்ஆகி, எரிந்தவெண்-
நீறு பூசி நிலாமதி சூடிலும்,
வீறு இலாதன செய்யினும், விண்ணவர்,
''ஊறலாய், அருளாய்!'' என்று உரைப்பரே. 5

உச்சி வெண்மதி சூடிலும், ஊன் அருப்
பச்சை வெண்தலை ஏந்திப் பலஇலம்
பிச்சையே புகும்ஆகிலும், வானவர்,
''அச்சம் தீர்த்து அருளாய்!'' என்று அடைவரே. 6

''ஊர் இலாய்!'' என்று, ஒன்றுஆக உரைப்பது ஓர்
பேர் இலாய்! பிறை சூடிய பிஞ்ஞகா!
கார் உலாம் கண்டனே! உன் கழல்அடி
சேர்வுஇலார்கட்குத் தீயவை தீயவே. 7

''எந்தையே! எம்பிரானே!'' என உள்கிச்
சிந்திப்பார்அவர் தீவினை தீருமால்;
வெந்தநீறு மெய் பூசிய வேதியன்
அந்தமா அளப்பார், அடைந்தார்களே. 8

ஏனவெண்மருப்போடு என்பு பூண்டு, எழில்
ஆனைஈர்உரி போர்த்து, அனல்ஆடிலும்;
தான்அ(வ்)வண்ணத்தன்ஆகிலும்; தன்னையே
வானநாடர் வணங்குவர், வைகலே. 9

ஐயன், அந்தணன், ஆணொடு பெண்ணும் ஆம்
மெய்யன், மேதகு வெண்பொடிப் பூசிய
மை கொள் கண்டத்தன், மான்மறிக் கையினான்—
பை கொள் பாம்பு அரை ஆர்த்த பரமனே. 10

ஒருவன்ஆகி நின்றான், இவ் உலகுஎலாம்;
இருவர்ஆகி நின்றார்கட்கு அறிகிலான்;
அரு அரா அரை ஆர்த்தவன்; ஆர் கழல்
பரவுவார்அவர் பாவம் பறையுமே. 11

ஓதவண்ணனும் ஒண்மலர்ச் செல்வனும்,
''நாதனே, அருளாய்!'' என்று நாள்தொறும்
காதல் செய்து கருதப்படுமவர்
பாதம் ஏத்தப் பறையும், நம் பாவமே. 12

ஔவ தன்மை அவர்அவர் ஆக்கையான்;
''வெவ்வ தன்மையன்'' என்பது ஒழிமினோ!
மௌவல் நீள் மலர்மேல் உறைவானொடு
பௌவவண்ணனும்ஆய்ப் பணிவார்களே. 13

அக்கும் ஆமையும் பூண்டு, அனல் ஏந்தி, இல்
புக்கு, பல்பலி தேரும் புராணனை—
நக்கு, நீர்கள், நரகம் புகேன்மினோ!—
தொக்க வானவரால்-தொழுவானையே. 14

கங்கை தங்கிய செஞ்சடைமேல் இளந்-
திங்கள் சூடிய தீநிற-வண்ணனார்;
இங்கணார், எழில் வானம் வணங்கவே;
அம் கணாற்கு அதுவால், அவன் தன்மையே! 15

ஙகர வெல் கொடியானொடு,—நன்நெஞ்சே!—
நுகர, நீ உனைக் கொண்டு உயப் போக்குஉறில்,
மகர வெல் கொடி மைந்தனைக் காய்ந்தவன்
புகர் இல் சேவடியே புகல் ஆகுமே. 16

சரணம் ஆம் படியார் பிறர் யாவரோ?
கரணம் தீர்த்து உயிர் கையில் இகழ்ந்தபின்,
மரணம் எய்தியபின், நவை நீக்குவான்
அரணம்மூஎயில் எய்தவன் அல்லனே? 17

ஞமன் என்பான், நரகர்க்கு; நமக்கு எலாம்
சிவன் என்பான்; செழு மான்மறிக் கையினான்;
கவனம் செய்யும் கன விடைஊர்தியான்
தமர் என்றாலும், கெடும், தடுமாற்றமே. 18

இடபம் ஏறியும் இல் பலி ஏற்பவர்;
அடவி காதலித்து ஆடுவர்; ஐந்தலைப்-
படஅம்பாம்பு அரை ஆர்த்த பரமனை,
கடவிராய்ச் சென்று, கைதொழுது உய்ம்மினே! 19

இணர்ந்து கொன்றை பொன்-தாது சொரிந்திடும்,
புணர்ந்த வாள்அரவம் மதியோடு உடன்-
அணைந்த, அம் சடையான்அவன் பாதமே
உணர்ந்த உள்ளத்தவர் உணர்வார்களே. 20

தருமம் தான், தவம் தான், தவத்தால் வரும்
கருமம் தான்—கருமான்மறிக் கையினான்;
அருமந்தன்ன அதிர்கழல் சேர்மினோ!—
சிரமம் சேர் அழல்-தீவினையாளரே! 21

''நமச்சிவாய'' என்பார் உளரேல், அவர்-
தம் அச்சம் நீங்கத் தவநெறி சார்தலால்,
அமைத்துக் கொண்டது ஓர் வாழ்க்கையன்ஆகிலும்,
இமைத்து நிற்பது சால அரியதே. 22

பல்பல் காலம் பயிற்றி, பரமனைச்
சொல் பல்-காலம் நின்று, ஏத்துமின்! தொல்வினை
வெற்பில்-தோன்றிய வெங்கதிர் கண்ட அப்
புல்பனி(க்) கெடும்ஆறுஅது போலுமே. 23

மணி செய் கண்டத்து, மான்மறிக் கையினான்;
கணிசெய் வேடத்தர் ஆயவர்; காப்பினால்
பணிகள்தாம் செய வல்லவர் யாவர், தம்
பிணி செய் ஆக்கையை நீக்குவர்; பேயரே! 24

இயக்கர், கின்னரர், இந்திரன், தானவர்,
நயக்க நின்றவன்; நான்முகன் ஆழியான்
மயக்கம் எய்த, வல் மால் எரி ஆயினான்;
வியக்கும் தன்மையினான்—எம் விகிர்தனே. 25

அரவம் ஆர்த்து அனல்ஆடிய அண்ணலைப்
பரவுவார்அவர் பாவம் பறைதற்கு,
குரவை கோத்தவனும், குளிர்போதின்மேல்
கரவு இல் நான்முகனும், கரி அல்லரே? 26

அழல் அங்கையினன்; அந்தரத்து ஓங்கி நின்று
உழலும் மூஎயில் ஒள்அழல் ஊட்டினான்—
தழலும் தாமரையானொடு, தாவினான்,
கழலும் சென்னியும் காண்டற்கு அரியனே. 27

இளமை கைவிட்டு அகறலும், மூப்பினார்,
வளமை போய், பிணியோடு வருதலால்,
உளம்எலாம் ஒளிஆய் மதிஆயினான்
கிளமையே கிளைஆக நினைப்பனே. 28

தன்னில்-தன்னை அறியும் தலைமகன்
தன்னில்-தன்னை அறியில்-தலைப்படும்;
தன்னில்-தன்னை அறிவுஇலன்ஆயிடில்,
தன்னில்-தன்னையும் சார்தற்கு அரியனே. 29

இலங்கை மன்னனை ஈர்-ஐந்து—பத்தும்—அன்று
அலங்கலோடு உடனேசெல ஊன்றிய
நலம் கொள் சேவடி நாள்தொறும்நாள்தொறும்
வலம்கொண்டு ஏத்துவார் வான்உலகு ஆள்வரே. 30

பொது V-98 உள்ளத் திருக் குறுந்தொகை

நீறு அலைத்தது ஓர் மேனி, நிமிர்சடை
ஆறு அலைக்க நின்று ஆடும், அமுதினை;
தேறலை; தெளியை; தெளி வாய்த்தது ஓர்
ஊறலை; கண்டுகொண்டது—என் உள்ளமே. 1

பொந்தையைப் புக்கு நீக்கப் புகுந்திடும்
தந்தையை, தழல் போல்வது ஓர் மேனியை,
சிந்தையை, தெளிவை, தெளி வாய்த்தது ஓர்
எந்தையை, கண்டுகொண்டது—என் உள்ளமே. 2

வெள்ளத்தார் விஞ்சையார்கள் விரும்பவே
வெள்ளத்தைச் சடை வைத்த விகிர்தனார்,
கள்ளத்தைக் கழிய(ம்) மனம் ஒன்றி நின்று
உள்ளத்தில், ஒளியைக் கண்டது—என் உள்ளமே. 3

அம்மானை,—''அமுதின் அமுதே!'' என்று—
தம்மானை, தத்துவத்து அடியார் தொழும்
செம் மான(ந்)நிறம் போல்வது ஓர் சிந்தையுள்
எம்மானை, கண்டுகொண்டது, என் உள்ளமே. 4

கூறு ஏறும்(ம்) உமை பாகம் ஓர்பாலராய்,
ஆறு ஏறும் சடைமேல் பிறை சூடுவர்,
பாறு ஏறும் தலை ஏந்திப் பலஇலம்
ஏறு ஏறும் எந்தையைக் கண்டது—என் உள்ளமே. 5

முன் நெஞ்சம் இன்றி மூர்க்கராய்ச் சாகின்றார்,
தம் நெஞ்சம் தமக்குத் தாம் இலாதவர்;
வன்நெஞ்சம்(ம்)அது நீங்குதல் வல்லிரே?
என் நெஞ்சில் ஈசனைக் கண்டது—என் உள்ளமே. 6

வென்றானை, புலன் ஐந்தும்; என் தீவினை
கொன்றானை; குணத்தாலே வணங்கிட
நன்றா நல் மனம் வைத்திடும் ஞானம்ஆம்
ஒன்றானை; கண்டுகொண்டது—என் உள்ளமே. 7

மருவினை, மட நெஞ்சம்! மனம் புகும்
குருவினை, குணத்தாலே வணங்கிடும்
திருவினை, சிந்தையுள் சிவனாய் நின்ற
உருவனை, கண்டுகொண்டது—என் உள்ளமே. 8

தேசனை, திருமால் பிரமன் செயும்
பூசனை, புணரில் புணர்வு ஆயது ஓர்
நேசனை, நெஞ்சினுள் நிறைவுஆய் நின்ற
ஈசனை, கண்டுகொண்டது—என் உள்ளமே. 9

வெறுத்தான், ஐம்புலனும்; பிரமன்தலை
அறுத்தானை; அரக்கன் கயிலாயத்தைக்
கறுத்தானைக் காலினில் விரல்ஒன்றினால்
ஒறுத்தானை; கண்டுகொண்டது—என் உள்ளமே. 10

பொது

V-99 பாவநாசத் திருக் குறுந்தொகை

பாவமும் பழி பற்றுஅற வேண்டுவீர்!
ஆவில்அஞ்சு உகந்து ஆடுமவன் கழல்
மேவராய், மிகவும் மகிழ்ந்து உள்குமின்!
காவலாளன் கலந்து அருள்செய்யுமே. 1

கங்கை ஆடில் என்? காவிரி ஆடில் என்?
கொங்கு தண் குமரித்துறை ஆடில் என்?
ஒங்கு மாகடல்ஓதம்நீராடில் என்?
‘‘எங்கும் ஈசன்’’ எனாதவர்க்கு இல்லையே. 2

பட்டர் ஆகில் என்? சாத்திரம் கேட்கில் என்?
இட்டும் அட்டியும் ஈதொழில் பூணின் என்?
எட்டும் ஒன்றும் இரண்டும் அறியில் என்?
‘‘இட்டம் ஈசன்’’ எனாதவர்க்கு இல்லையே. 3

வேதம் ஓதில் என்? வேள்விகள் செய்கில் என்?
நீதிநூல்பல நித்தல் பயிற்றில் என்?
ஓதி அங்கம்ஓர்ஆறும் உணரில் என்?
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே. 4

காலை சென்று கலந்து நீர் மூழ்கில் என்?
வேலைதோறும் விதிவழி நிற்கில் என்?
ஆலை வேள்வி அடைந்து அது வேட்கில் என்?
ஏல ‘‘ஈசன்’’ என்பார்க்கு அன்றி இல்லையே. 5

கானம், நாடு, கலந்து திரியில் என்?
ஈனம் இன்றி இருந் தவம் செய்யில் என்?
ஊனை உண்டல் ஒழிந்து வான் நோக்கில் என்?
‘‘ஞானன்’’ என்பவர்க்கு அன்றி நன்கு இல்லையே. 6

கூட வேடத்தர்ஆகிக் குழுவில் என்?
வாடி ஊனை வருத்தித் திரியில் என்?
ஆடல் வேடத்தன் அம்பலக்கூத்தனைப்
பாடலாளர்க்கு அல்லால், பயன் இல்லையே. 7

நன்று நோற்கில் என்? பட்டினிஆகில் என்?
குன்றம் ஏறி இருந் தவம் செய்யில் என்?
சென்று நீரில் குளித்துத் திரியில் என்?
என்றும், ‘‘ஈசன்’’ என்பார்க்கு அன்றி இல்லையே. 8

கோடிதீர்த்தம் கலந்து குளித்து அவை-
ஆடினாலும், அரனுக்கு அன்பு இல்லையேல்,
ஓடும் நீரினை ஓட்டைக் குடத்து அட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனொடு ஒக்குமே. 9

மற்று நல்-தவம் செய்து வருந்தில் என்?
பொற்றை உற்று எடுத்தான் உடல் புக்கு இறக்
குற்ற, நல் குரை ஆர் கழல், சேவடி
பற்றுஇலாதவர்க்குப் பயன் இல்லையே. 10

பொது V-100 ஆதிபுராணத் திருக் குறுந்தொகை

வேதநாயகன்; வேதியர்நாயகன்;
மாதின் நாயகன்; மாதவர்நாயகன்;
ஆதிநாயகன்; ஆதிரைநாயகன்;
பூதநாயகன்—புண்ணியமூர்த்தியே. 1

செத்துச் செத்துப் பிறப்பதே தேவு என்று
பத்திசெய் மனப்பாறைகட்கு ஏறுமோ,
''அத்தன்'' என்று அரியோடு பிரமனும்
துத்தியம்செய நின்ற நல்சோதியே? 2

நூறுகோடி பிரமர்கள் நொந்தினார்;
ஆறுகோடி நாராயணர் அங்ஙனே;
ஏறு கங்கை மணல், எண் இல் இந்திரர்;
ஈறு இலாதவன் ஈசன் ஒருவனே. 3

வாதுசெய்து மயங்கும் மனத்தராய்
ஏது சொல்லுவீர்ஆகிலும், ஏழைகாள்!
''யாது ஓர் தேவர்'' எனப்படுவார்க்கு எலாம்
மாதேவன்(ன்)அலால் தேவர் மற்று இல்லையே. 4

கூவல் ஆமை குரைகடல் ஆமையை,
''கூவலோடு ஒக்குமோ, கடல்?'' என்றல் போல்,
பாவகாரிகள் பார்ப்பு அரிது என்பரால்,
தேவதேவன்சிவன் பெருந்தன்மையே. 5

பேய்வனத்து அமர்வானை, பிரார்த்தித்தார்க்கு
ஈவனை, இமையோர் முடி தன் அடிச்
சாய்வனை,—சலவார்கள்—தமக்கு உடல்
சீவனை, சிவனை, சிந்தியார்களே. 6

எரி பெருக்குவர்; அவ் எரி ஈசனது
உரு வருக்கம்அது ஆவது உணர்கிலர்;
அரி அயற்கு அரியானை அயர்த்துப் போய்
நரிவிருத்தம்அது ஆகுவர், நாடரே. 7

அருக்கன் பாதம் வணங்குவர், அந்தியில்;
அருக்கன்ஆவான் அரன்உரு அல்லனோ?
இருக்குநால்மறை ஈசனையே தொழும்
கருத்தினை நினையார், கல்மனவரே. 8

தாயினும் நல்ல சங்கரனுக்கு அன்பர்-
ஆய உள்ளத்து அமுது அருந்தப்பெறார்—
பேயர், பேய்முலை உண்டு உயிர் போக்கிய
மாயன் மாயத்துப் பட்ட மனத்தரே. 9

அரக்கன் வல் அரட்டு ஆங்கு ஒழித்து, ஆர் அருள்
பெருக்கச் செய்த பிரான் பெருந்தன்மையை
அருத்தி செய்து அறியப்பெறுகின்றிலர்—
கருத்து இலாக் கயவக்கணத்தோர்களே. 10

திருச்சிற்றம்பலம்

உ

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் அருளிய

தேவாரத் திருப்பதிகங்கள்

ஆறாம் திருமுறை

கோயில் VI-1 பெரிய திருத் தாண்டகம்

அரியானை, அந்தணர்தம் சிந்தையானை,
அருமறையின் அகத்தானை, அணுவை, யார்க்கும்
தெரியாத தத்துவனை, தேனை, பாலை,
திகழ் ஒளியை, தேவர்கள்தம் கோனை, மற்றைக்
கரியானை, நான்முகனை, கனலை, காற்றை,
கனைகடலை, குலவரையை, கலந்து நின்ற
பெரியானை, பெரும்பற்றப்புலியூரானை,—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 1

கற்றானை, கங்கை வார்சடையான்தன்னை,
காவிரி சூழ் வலஞ்சுழியும் கருதினானை,
அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய்வானை,
ஆரூரும் புகுவானை, அறிந்தோம்அன்றே;
மற்று ஆரும் தன் ஒப்பார் இல்லாதானை,
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தப்-
பெற்றானை, பெரும்பற்றப்புலியூரானை,—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 2

கருமானின்உரி-அதளே உடையா வீக்கி,
கனைகழல்கள் கலந்து ஒலிப்ப, அனல் கை ஏந்தி,
வரு மானத் திரள்தோள்கள் மட்டித்து ஆட,
வளர்மதியம் சடைக்கு அணிந்து, மான் நேர் நோக்கி
அரு மான வாள்முகத்தாள் அமர்ந்து காண,
அமரர்கணம் முடி வணங்க, ஆடுகின்ற
பெருமானை, பெரும்பற்றப்புலியூரானை,—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 3

அருந்தவர்கள் தொழுது ஏத்தும் அப்பன்தன்னை,
அமரர்கள்தம் பெருமானை, அரனை, மூவா-
மருந்து அமரர்க்கு அருள்புரிந்த மைந்தன்தன்னை,
மறிகடலும் குலவரையும் மண்ணும் விண்ணும்
திருந்து ஒளிய தாரகையும் திசைகள்எட்டும்
திரி சுடர்கள்ஓர்இரண்டும் பிறவும் ஆய
பெருந்தகையை, பெரும்பற்றப்புலியூரானை,— 4
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே.

அருந்துணையை; அடியார்தம் அல்லல் தீர்க்கும்
அருமருந்தை; அகல் ஞாலத்துஅகத்துள் தோன்றி
வரும் துணையும் சுற்றமும் பற்றும் விட்டு,
வான் புலன்கள் அகத்து அடக்கி, மடவாரோடும்
பொருந்து அணைமேல் வரும் பயனைப் போக மாற்றி,
பொது நீக்கி, தனை நினைய வல்லோர்க்கு என்றும்
பெருந்துணையை; பெரும்பற்றப்புலியூரானை;—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 5

கரும்பு அமரும் மொழி மடவாள் பங்கன்தன்னை,
கன வயிரக்குன்று அனைய காட்சியானை,
அரும்பு அமரும் பூங்கொன்றைத்தாரான்தன்னை,
அருமறையோடு ஆறுஅங்கம் ஆயினானை,
சுரும்பு அமரும் கடிபொழில்கள் சூழ் தென்ஆரூர்ச்
சுடர்க்கொழுந்தை, துளக்கு இல்லா விளக்கை, மிக்க
பெரும்பொருளை, பெரும்பற்றப்புலியூரானை,—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 6

வரும் பயனை, எழுநரம்பின் ஓசையானை,
வரை சிலையா வானவர்கள் முயன்ற வாளி
அரும் பயம் செய் அவுணர் புரம் எரியக் கோத்த
அம்மானை, அலைகடல்நஞ்சு அயின்றான்தன்னை,
சுரும்பு அமரும் குழல் மடவார் கடைக்கண் நோக்கில்-
துளங்காத சிந்தையராய்த் துறந்தோர் உள்ளப்
பெரும்பயனை, பெரும்பற்றப்புலியூரானை,—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 7

கார்ஆனை ஈர்உரிவைப்போர்வையானை,
காமரு பூங் கச்சி ஏகம்பன்தன்னை,
ஆரேனும் அடியவர்கட்கு அணியான்தன்னை,
அமரர்களுக்கு அறிவு அரிய அளவுஇலானை,
பாரோரும் விண்ணோரும் பணிய நட்டம்
பயில்கின்ற பரஞ்சுடரை, பரனை, எண் இல்
பேரானை, பெரும்பற்றப்புலியூரானை,—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 8

முற்றாத பால்மதியம் சூடினானை,
மூஉலகம் தான் ஆய முதல்வன்தன்னை,
செற்றார்கள் புரம்மூன்றும் செற்றான்தன்னை,
திகழ் ஒளியை, மரகதத்தை, தேனை, பாலை,
குற்றாலத்து அமர்ந்து உறையும் குழகன்தன்னை,
கூத்துஆட வல்லானை, கோனை, ஞானம்
பெற்றார்கள் பெரும்பற்றப்புலியூரானை,—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 9

கார் ஒளிய திருமேனிச் செங்கண் மாலும்,
கடிக்கமலத்து இருந்த(அ)யனும், காணா வண்ணம்
சீர் ஒளிய தழல்பிழம்புஆய் நின்ற தொல்லைத்
திகழ் ஒளியை; சிந்தைதனை மயக்கம் தீர்க்கும்
ஏர் ஒளியை; இரு நிலனும், விசும்பும், விண்ணும்,
ஏழ்உலகும், கடந்து அண்டத்து அப்பால் நின்ற
பேர் ஒளியை; பெரும்பற்றப்புலியூரானை;—
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே. 10

கோயில் VI-2 புக்க திருத் தாண்டகம்

மங்குல்மதி தவழும் மாட வீதி
மயிலாப்பில் உள்ளார்; மருகல் உள்ளார்;
கொங்கில் கொடுமுடியார்; குற்றாலத்தார்;
குடமூக்கின் உள்ளார்; போய்க் கொள்ளம்பூதூர்த்
தங்கும் இடம் அறியார்; சால நாளார்;
தருமபுரத்து உள்ளார்; தக்களூரார்—
பொங்கு வெண்நீறு அணிந்து பூதம் சூழ,
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 1

நாகம் அரைக்கு அசைத்த நம்பர் இந் நாள்
நனிபள்ளி உள்ளார்; போய் நல்லூர்த் தங்கி,
பாகப்பொழுதுஎலாம் பாசூர்த் தங்கி,
பரிதிநியமத்தார், பன்னிருநாள்;
வேதமும் வேள்விப் புகையும் ஓவா
விரிநீர் மிழலை எழுநாள்-தங்கி,
போகமும் பொய்யாப் பொருளும் ஆனார்—
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 2

துறம் காட்டி, எல்லாம் விரித்தார்போலும்;
தூ மதியும் பாம்பும் உடையார்போலும்;
மறம் காட்டி, மும்மதிலும் எய்தார்போலும்;
மந்திரமும் தந்திரமும் தாமேபோலும்;
அறம் காட்டி, அந்தணர்க்கு அன்று ஆலநீழல்
அறம் அருளிச்செய்த அரனார்—இந் நாள்,
புறங்காட்டு எரிஆடிப் பூதம் சூழ,
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 3

வார் ஏறு வனமுலையாள் பாகம்ஆக,
மழுவாள் கை ஏந்தி, மயானத்து ஆடி,
சீர் ஏறு தண் வயல் சூழ் ஓத வேலித்
திரு வாஞ்சியத்தார்; திரு நள்ளாற்றார்;
கார் ஏறு கண்டத்தார்; காமற் காய்ந்த
கண் விளங்கு நெற்றியார்; கடல்நஞ்சு உண்டார்—
போர் ஏறு தாம் ஏறிப் பூதம் சூழ,
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 4

கார் ஆர் கமழ்கொன்றைக் கண்ணி சூடி,
கபாலம் கை ஏந்தி, கணங்கள் பாட,
ஊரார் இடு பிச்சை கொண்டு, உழ(ல்)லும்
உத்தமராய் நின்ற ஒருவனார்தாம்;
சீர் ஆர் கழல் வணங்கும் தேவதேவர்;
திரு ஆரூர்த் திரு மூலட்டானம் மேயார்—
போர் ஆர் விடை ஏறிப் பூதம் சூழ, 5
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

காது ஆர் குழையினர்; கட்டங்கத்தர்;
கயிலாயமாமலையார்; காரோணத்தார்;
மூதாயர் மூதாதை இல்லார்போலும்;
முதலும் இறுதியும் தாமேபோலும்;
மாதுஆய மாதர் மகிழ, அன்று,
வன் மத வேள்தன் உடலம் காய்ந்தார்—இந் நாள்
போது ஆர் சடை தாழப் பூதம் சூழ, 6
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே.

இறந்தார்க்கும் என்றும் இறவாதார்க்கும்
இமையவர்க்கும் ஏகம்ஆய் நின்று, சென்று
பிறந்தார்க்கும் என்றும் பிறவாதார்க்கும்
பெரியான்; தன் பெருமையே பேச நின்று,
மறந்தார் மனத்து என்றும் மருவார்போலும்;
மறைக்காட்டு உறையும் மழுவாள் செல்வர்—
புறம் தாழ்சடை தாழப் பூதம் சூழ,
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 7

குலா வெண்தலைமாலை என்பு பூண்டு,
குளிர்கொன்றைத்தார் அணிந்து, கொல் ஏறு ஏறி,
கலா வெங்களிற்றுஉரிவைப்போர்வை மூடி,
கை ஓடு அனல் ஏந்தி, காடு உறைவார்;
நிலாவெண்மதி உரிஞ்ச நீண்ட மாடம்
நிறை வயல் சூழ் நெய்த்தானம் மேய செல்வர்—
புலா வெண்தலை ஏந்திப் பூதம் சூழ,
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 8

சந்தித்த கோவணத்தர், வெண்நூல் மார்பர்;
சங்கரனைக் கண்டீரோ? கண்டோம்—இந் நாள்,
பந்தித்த வெள்விடையைப் பாய ஏறி,
படுதலையில் என்கொலோ ஏந்திக்கொண்டு,
வந்து ஈங்கு என் வெள்வளையும் தாமும் எல்லாம்,
மணி ஆரூர் நின்று, அந்தி கொள்ளக்கொள்ள,
பொன்தீ மணிவிளக்குப் பூதம் பற்ற,
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 9

பாதங்கள் நல்லார் பரவி ஏத்த,
பத்திமையால் பணி செய்யும் தொண்டர்தங்கள்
ஏதங்கள் தீர, இருந்தார்போலும்;
எழுபிறப்பும் ஆள்உடைய ஈசனார்தாம்—
வேதங்கள் ஓதி, ஓர் வீணை ஏந்தி,
விடை ஒன்று தாம் ஏறி, வேதகீதர்,
பூதங்கள் சூழ, புலித்தோல் வீக்கி,
புலியூர்ச் சிற்றம்பலமே புக்கார்தாமே. 10

பட்டு உடுத்து, தோல் போர்த்து, பாம்பு ஒன்று ஆர்த்து,
பகவனார், பாரிடங்கள் சூழ நட்டம்
சிட்டராய், தீ ஏந்தி, செல்வார்தம்மைத்
தில்லைச் சிற்றம்பலத்தே கண்டோம், இந் நாள்;
விட்டு இலங்கு சூலமே, வெண்நூல், உண்டே;
ஓதுவதும் வேதமே; வீணை உண்டே;
கட்டங்கம் கையதே,—சென்று காணீர்!—
கறை சேர் மிடற்று எம் கபாலியார்க்கே. 11

திரு அதிகைவீரட்டானம் VI-3 ஏழைத் திருத் தாண்டகம்

வெறி விரவு கூவிளநல்-தொங்கலானை,
வீரட்டத்தானை, வெள்ஏற்றினானை,
பொறிஅரவினானை, புள்ஊர்தியானை,
பொன்நிறத்தினானை, புகழ் தக்கானை,
அறிதற்கு அரிய சீர் அம்மான்தன்னை,
அதியரையமங்கை அமர்ந்தான்தன்னை,
எறி கெடிலத்தானை, இறைவன்தன்னை,—
ஏழையேன்நான் பண்டு இகழ்ந்தஆறே! 1

வெள்ளிக்குன்று அன்ன விடையான்தன்னை,
வில்வலான் வில்வட்டம் காய்ந்தான்தன்னை,
புள்ளிவரிநாகம் பூண்டான்தன்னை,
பொன் பிதிர்ந்தன்ன சடையான்தன்னை,
வள்ளிவளைத் தோள் முதல்வன்தன்னை,
வாரா உலகு அருள வல்லான்தன்னை,
எள்க இடு பிச்சை ஏற்பான்தன்னை,—
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தஆறே! 2

முந்தி உலகம் படைத்தான்தன்னை,
மூவா முதல்ஆய மூர்த்திதன்னை,
சந்த வெண்திங்கள் அணிந்தான்தன்னை,
தவநெறிகள் சாதிக்க வல்லான்தன்னை,
சிந்தையில்-தீர்வினையை, தேனை, பாலை,
செழுங் கெடில வீரட்டம் மேவினானை,
எந்தைபெருமானை, ஈசன்தன்னை,—
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தஆறே! 3

மந்திரமும், மறைப்பொருளும், ஆனான்தன்னை;
மதியமும், ஞாயிறும், காற்றும், தீயும்,
அந்தரமும், அலைகடலும், ஆனான்தன்னை;
அதியரையமங்கை அமர்ந்தான்தன்னை;
கந்தருவம் செய்து, இருவர், கழல் கைகூப்பி,
கடிமலர்கள்பல தூவி, காலைமாலை
இந்திரனும் வானவரும் தொழ, செல்வானை;—
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தஆறே! 4

ஒரு பிறப்பு இல் அரன் அடியை உணர்ந்தும் காணார்;
உயர்கதிக்கு வழி தேடிப் போகமாட்டார்;
வரு பிறப்பு ஒன்று உணராது, மாசு பூசி,
வழி காணாதவர் போல்வார் மனத்தன்ஆகி,
அரு பிறப்பை அறுப்பிக்கும் அதிகைஊரன்
அம்மான்தன் அடிஇணையே அணைந்து வாழாது,
இருபிறப்பும் வெறுவியராய் இருந்தார் சொல்கேட்டு—
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தஆறே! 5

ஆறு ஏற்க வல்ல சடையான்தன்னை;
அஞ்சனம் போலும் மிடற்றான்தன்னை;
கூறு ஏற்க, கூறு அமர, வல்லான்தன்னை;
கோல்வளைக்கை மாதராள் பாகன்தன்னை;
நீறு ஏற்கப் பூசும் அகலத்தானை;
நின்மலன்தன்னை; நிமலன்தன்னை;
ஏறு ஏற்க ஏறுமா வல்லான்தன்னை;—
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தஆறே! 6

குண்டுஆக்கனாய் உழன்று, கையில் உண்டு,
குவிமுலையார்தம் முன்னே நாணம் இன்றி,
உண்டி உகந்து, அமணே நின்றார் சொல் கேட்டு,
உடன்ஆகி, உழிதந்தேன், உணர்வு ஒன்று இன்றி;
வண்டு உலவு கொன்றைஅம்கண்ணியானை,
வானவர்கள் ஏத்தப்படுவான்தன்னை,
எண்திசைக்கும் மூர்த்தியாய் நின்றான்தன்னை,—
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தஆறே! 7

உறி முடித்த குண்டிகை தம் கையில்-தூக்கி,
ஊத்தைவாய்ச் சமணர்க்கு ஓர் குண்டுஆக்க(ன்)னாய்,
கறி விரவு நெய் சோறு கையில் உண்டு,
கண்டார்க்குப் பொல்லாத காட்சி ஆனேன்;
மறிதிரைநீர்ப்பவ்வம்நஞ்சு உண்டான்தன்னை,
மறித்து ஒரு கால் வல்வினையேன், நினைக்கமாட்டேன்;
எறிகெடிலநாடர் பெருமான்தன்னை—
ஏழையேன் நான் பண்டு இகழ்ந்தஆறே! 8

நிறை ஆர்ந்த நீர்மைஆய் நின்றான்தன்னை,
நெற்றிமேல் கண் ஒன்று உடையான்தன்னை,
மறையானை, மாசு ஒன்று இலாதான்தன்னை,
வானவர்மேல் மலர்அடியை வைத்தான்தன்னை,
கறையானை, காது ஆர் குழையான்தன்னை,
கட்டங்கம் ஏந்திய கையான்தன்னை,
இறையானை, எந்தைபெருமான்தன்னை,—
ஏழையேன்நான் பண்டு இகழ்ந்தஆறே! 9

தொல்லை வான் சூழ்வினைகள் சூழப் போந்து
தூற்றியேன்; ஆற்றியேன்; சுடர்ஆய் நின்று
வல்லையே இடர் தீர்த்து இங்கு அடிமைகொண்ட,
வானவர்க்கும் தானவர்க்கும், பெருமான்தன்னை;
கொல்லைவாய்க் குருந்து ஒசித்துக் குழலும் ஊதும்
கோவலனும், நான்முகனும், கூடி எங்கும்
எல்லை காண்பு அரியானை; எம்மான்தன்னை;—
ஏழையேன்நான் பண்டு இகழ்ந்தஆறே! 10

முலை மறைக்கப்பட்டு நீராடாப் பெண்கள்
முறைமுறையால், ''நம் தெய்வம்'' என்று தீண்டி,
தலை பறிக்கும் தன்மையர்கள் ஆகி நின்று,
தவமே என்று அவம் செய்து, தக்கது ஓரார்;
மலை மறிக்கச் சென்ற இலங்கைக் கோனை
மதன் அழியச் செற்ற சேவடியினானை,
இலை மறித்த கொன்றைஅம்தாரான்தன்னை,—
ஏழையேன்நான் பண்டு இகழ்ந்தஆறே! 11

திரு அதிகை வீரட்டானம் VI-4 அடையாளத் திருத் தாண்டகம்

சந்திரனை மா கங்கைத் திரையால் மோதச்
சடாமகுடத்து இருத்துமே; சாமவேத-
கந்தருவம் விரும்புமே; கபாலம் ஏந்து
கையனே; மெய்யனே; கனகமேனிப்
பந்து அணவு மெல்விரலாள் பாகன்ஆமே;
பசு ஏறுமே; பரமயோகிஆமே;
ஐந்தலைய மாசுணம் கொண்டு அரை ஆர்க்கு(ம்)மே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 1

ஏறு ஏறி ஏழ்உலகம் உழிதர்வானே;
இமையவர்கள் தொழுது ஏத்த இருக்கின்றானே;
பாறு ஏறு படுதலையில் பலி கொள்வானே;
படஅரவம் தடமார்பில் பயில்வித்தானே;
நீறு ஏறு செழும் பவளக்குன்று ஒப்பானே;
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித்தானே;
ஆறு ஏறு சடைமுடிமேல் பிறை வைத்தானே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 2

முண்டத்தின் பொலிந்து இலங்கு நெற்றியானே;
முதல்ஆகி நடுஆகி முடிவு ஆனானே;
கண்டத்தில் வெண்மருப்பின் காறையானே;
கதம்நாகம் கொண்டு ஆடும் காட்சியானே;
பிண்டத்தின் இயற்கைக்கு ஓர் பெற்றியானே;
பெரு நிலம், நீர், தீ, வளி, ஆகாசம், ஆகி
அண்டத்துக்கு அப்பால்ஆய் இப் பாலானே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 3

செய்யனே; கரியனே, கண்டம்; பைங்கண்
வெள்எயிற்று ஆடுஅரவனே; வினைகள் போக
வெய்யனே; தண்கொன்றை மிலைத்த சென்னிச்
சடையனே; விளங்கு மழுச் சூலம் ஏந்தும்
கையனே; காலங்கள்மூன்று ஆனானே;
கருப்புவில் தனிக் கொடும் பூண் காமற் காய்ந்த
ஐயனே; பருத்து உயர்ந்த ஆன்ஏற்றானே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 4

பாடுமே, ஒழியாமே நால்வேத(ம்)மும்;
படர்சடைமேல் ஒளி திகழப் பனிவெண்திங்கள்
சூடுமே; அரை திகழத் தோலும் பாம்பும்
சுற்றுமே; தொண்டைவாய் உமை ஓர்பாகம்
கூடுமே; குடமுழவம், வீணை, தாளம்,
குறுநடைய சிறு பூதம் முழக்க, மாக்கூத்து
ஆடுமே; அம் தடக்கை அனல் ஏந்து(ம்)மே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 5

ஒழித்திடுமே, உள்குவார் உள்ளத்து உள்ள
உறு பிணியும் செறு பகையும்; ஒற்றைக்கண்ணால்
விழித்திடுமே, காமனையும் பொடிஆய் வீழ;
வெள்ளப்புனல்கங்கை செஞ்சடைமேல்
இழித்திடுமே; ஏழ்உலகும் தான் ஆகு(ம்)மே;
இயங்கும் திரிபுரங்கள் ஓர் அம்பி(ன்)னால்
அழித்திடுமே; ஆதி மா தவத்து உளானே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 6

குழலோடு, கொக்கரை, கைத்தாளம், மொந்தை,
குறள்பூதம் முன் பாடத் தான் ஆடு(ம்)மே;
கழல் ஆடு திருவிரலால் கரணம்செய்து,
கனவின்கண் திருஉருவம் தான் காட்டு(ம்)மே;
எழில் ஆரும் தோள் வீசி நடம்ஆடு(ம்)மே;
ஈமப் புறங்காட்டில் ஏமம்தோறும்
அழல்ஆடுமே; அட்டமூர்த்தி ஆமே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 7

மால்ஆகி மதம் மிக்க களிறுதன்னை
வதைசெய்து, மற்று அதனின் உரிவை கொண்டு,
மேலாலும் கீழாலும் தோன்றா வண்ணம்,
வெம் புலால் கை கலக்க, மெய் போர்த்தானே;
கோலாலம் பட வரை நட்டு, அரவு சுற்றி,
குரைகடலைத் திரை அலற, கடைந்து கொண்ட
ஆலாலம் உண்டு இருண்ட கண்டத்தானே;—
அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 8

செம்பொனால் செய்து அழகு பெய்தால் போலும்
    செஞ்சடை எம்பெருமானே; தெய்வம் நாறும்
வம்பின் நாள்மலர்க் கூந்தல் உமையாள் காதல்
    மணவாளனே; வலங்கை மழுவாள(ன்)னே;
நம்பனே; நால்மறைகள் தொழ நின்றானே;
    நடுங்காதார் புரம்மூன்றும் நடுங்கச் செற்ற
அம்பனே; அண்டகோசத்து உளானே;—
    அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 9

எழுந்த திரை நதித் துவலை நனைந்த திங்கள்
    இளநிலாத் திகழ்கின்ற வளர்சடையனே;
கொழும் பவளச்செங்கனிவாய்க் காமக்கோட்டி
    கொங்கைஇணை அமர் பொருது கோலம் கொண்ட
தழும்பு உளவே; வரைமார்பில் வெண்நூல் உண்டே;
    சாந்தமொடு சந்தனத்தின் அளறு தங்கி
அழுந்திய செந்திருஉருவில் வெண்நீற்றானே;—
    அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 10

நெடியானும் நான்முகனும் நேடிக் காணா
    நீண்டானே; நேர் ஒருவர் இல்லாதானே;
கொடி ஏறு கோல மாமணிகண்ட(ன்)னே;
    கொல் வேங்கை அதளனே; கோவணவனே;
பொடி ஏறு மேனியனே; ஐயம் வேண்டிப்
    புவலோகம் திரியுமே; புரிநூலானே;
அடியாரை அமருலகம் ஆள்விக்கு(ம்)மே;—
    அவன்ஆகில் அதிகைவீரட்டன் ஆமே. 11

திரு அதிகைவீரட்டானம் VI-5 போற்றித் திருத் தாண்டகம்

எல்லாம் சிவன் என்ன நின்றாய், போற்றி!
    எரிசுடர்ஆய் நின்ற இறைவா, போற்றி!
கொல் ஆர் மழுவாள்படையாய், போற்றி!
    கொல்லும் கூற்று ஒன்றை உதைத்தாய், போற்றி!
கல்லாதார் காட்சிக்கு அரியாய், போற்றி!
    கற்றார் இடும்பை களைவாய், போற்றி!
வில்லால் வியன்அரணம் எய்தாய், போற்றி!—
    வீரட்டம் காதல் விமலா, போற்றி! 1

பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா, போற்றி!
    பல்ஊழிஆய படைத்தாய், போற்றி!
ஓட்டுஅகத்தே ஊணா உகந்தாய், போற்றி!
    உள்குவார் உள்ளத்து உறைவாய், போற்றி!
காட்டுஅகத்தே ஆடல் மகிழ்ந்தாய், போற்றி!
    கார்மேகம் அன்ன மிடற்றாய், போற்றி!
ஆட்டுவது ஓர் நாகம் அசைத்தாய், போற்றி!—
    அலை கெடில வீரட்டத்து ஆள்வாய், போற்றி! 2

முல்லைஅம்கண்ணி முடியாய், போற்றி!
    முழுநீறு பூசிய மூர்த்தி, போற்றி!
எல்லை நிறைந்த குணத்தாய், போற்றி!
    ஏழ்நரம்பின் ஓசை படைத்தாய், போற்றி!
சில்லை சிரைத்தலையில் ஊணா, போற்றி!
    சென்று அடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய், போற்றி!
தில்லைச் சிற்றம்பலம் மேயாய், போற்றி!—
    திரு வீரட்டானத்து எம் செல்வா, போற்றி! 3

சாம்பர் அகலத்து அணிந்தாய், போற்றி!
தவநெறிகள் சாதித்து நின்றாய், போற்றி!
கூம்பித் தொழுவார்தம் குற்றேவ(ல்)லைக்
குறிக்கொண்டு இருக்கும் குழகா, போற்றி!
பாம்பும் மதியும் புனலும் தம்மில்
பகை தீர்த்து உடன்வைத்த பண்பா, போற்றி!
ஆம்பல்மலர் கொண்டு அணிந்தாய், போற்றி!—
அலை கெடில வீரட்டத்து ஆள்வாய், போற்றி! 4

நீறு ஏறு நீலமிடற்றாய், போற்றி!
நிழல் திகழும் வெண்மழுவாள் வைத்தாய், போற்றி!
கூறு ஏறு உமை ஒருபால் கொண்டாய், போற்றி!
கோள் அரவம் ஆட்டும் குழகா, போற்றி!
ஆறு ஏறு சென்னி உடையாய், போற்றி!
அடியார்கட்கு ஆர் அமுதம் ஆனாய், போற்றி!
ஏறு ஏற என்றும் உகப்பாய், போற்றி!—
இருங் கெடில வீரட்டத்து எந்தாய், போற்றி! 5

பாடுவார் பாடல் உகப்பாய், போற்றி!
பழையாற்றுப் பட்டீச்சுரத்தாய், போற்றி!
வீடுவார் வீடு அருள வல்லாய், போற்றி!
வேழத்துஉரி வெருவப் போர்த்தாய், போற்றி!
நாடுவார் நாடற்கு அரியாய், போற்றி!
நாகம் அரைக்கு அசைத்த நம்பா, போற்றி!
ஆடும் ஆன்அஞ்சு உகப்பாய், போற்றி!—
அலை கெடில வீரட்டத்து ஆள்வாய், போற்றி! 6

மண் துளங்க ஆடல் மகிழ்ந்தாய், போற்றி!
மால்கடலும் மால்விசும்பும் ஆனாய், போற்றி!
விண் துளங்க மும்மதிலும் எய்தாய், போற்றி!
வேழத்துஉரி மூடும் விகிர்தா, போற்றி!
பண் துளங்கப் பாடல் பயின்றாய், போற்றி!
பார் முழுதும்ஆய பரமா, போற்றி!
கண் துளங்கக் காமனை முன் காய்ந்தாய், போற்றி!—
கார்க் கெடிலம் கொண்ட கபாலீ, போற்றி! 7

வெஞ்சின வெள்ஊர்தி உடையாய், போற்றி!
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய், போற்றி!
துஞ்சாப் பலி தேரும் தோன்றால், போற்றி!
தொழுத கை துன்பம் துடைப்பாய், போற்றி!
நஞ்சு ஒடுங்கும் கண்டத்து நாதா, போற்றி!
நால்மறையோடு ஆறுஅங்கம் ஆனாய், போற்றி!
அம் சொலாள் பாகம் அமர்ந்தாய், போற்றி!—
அலை கெடில வீரட்டத்து ஆள்வாய், போற்றி! 8

சிந்தைஆய் நின்ற சிவனே, போற்றி!
சீபர்ப்பதம் சிந்தைசெய்தாய், போற்றி!
புந்திஆய்ப் புண்டரிகத்து உள்ளாய், போற்றி!
புண்ணியனே, போற்றி! புனிதா, போற்றி!
சந்திஆய் நின்ற சதுரா, போற்றி!
தத்துவனே, போற்றி! என் தாதாய், போற்றி!
அந்திஆய் நின்ற அரனே, போற்றி!—
அலை கெடில வீரட்டத்து ஆள்வாய், போற்றி! 9

முக்கணா, போற்றி! முதல்வா, போற்றி!
முருகவேள்தன்னைப் பயந்தாய், போற்றி!
தக்கணா, போற்றி! தருமா, போற்றி!
தத்துவனே, போற்றி! என் தாதாய் போற்றி!
தொக்கு ''அணா'' என்று இருவர் தோள் கைகூப்ப,
துளங்காது எரிசுடர்ஆய் நின்றாய், போற்றி!
எக்கண்ணும் கண் இலேன்; எந்தாய், போற்றி!—
எறி கெடில வீரட்டத்து ஈசா, போற்றி! 10

திரு அதிகைவீரட்டானம் VI-6 திருவடித் திருத் தாண்டகம்

அரவுஅணையான் சிந்தித்து அரற்றும்(ம்) அடி;
அருமறையான் சென்னிக்கு அணி ஆம் அடி;
சரவணத்தான் கைதொழுது சாரும்(ம்) அடி;
சார்ந்தார்கட்கு எல்லாம் சரண் ஆம் அடி;
பரவுவார் பாவம் பறைக்கும்(ம்) அடி;
பதினெண்கணங்களும் பாடும்(ம்) அடி;
திரை விரவு தென்கெடில நாடன்(ன்) அடி—
திரு வீரட்டானத்து எம் செல்வன்(ன்) அடி. 1

கொடுவினையார் என்றும் குறுகா அடி;
குறைந்து அடைந்தார் ஆழாமைக் காக்கும்(ம்) அடி;
படு முழவம் பாணி பயிற்றும்(ம்) அடி;
பதைத்து எழுந்த வெங் கூற்றைப் பாய்ந்த(வ்) அடி;
கடு முரண் ஏறு ஊர்ந்தான் கழல்சேவடி;
கடல் வையம் காப்பான் கருதும்(ம்) அடி;
நெடு மதியம் கண்ணி அணிந்தான் அடி—
நிறை கெடில வீரட்டம் நீங்கா அடி. 2

வைது எழுவார் காமம், பொய், போகா அடி;
வஞ்சவலைப்பாடு ஒன்று இல்லா அடி;
கைதொழுது நாம் ஏத்திக் காணும்(ம்) அடி;
கணக்கு வழக்கைக் கடந்த(வ்) அடி;
நெய்—தொழுது, நாம் ஏத்தி—ஆட்டும்(ம்) அடி;
நீள் விசும்பை ஊடு அறுத்து நின்ற(வ்) அடி;
தெய்வப்புனல் கெடில நாடன்(ன்) அடி—
திரு வீரட்டானத்து எம் செல்வன்(ன்) அடி. 3

அரும்பித்த செஞ்ஞாயிறு ஏய்க்கும்(ம்) அடி;
அழகு எழுதல் ஆகா அருள் சேவடி;
சுரும்பித்த வண்டுஇனங்கள் சூழ்ந்த(வ்) அடி;
சோமனையும் காலனையும் காய்ந்த(வ்) அடி;
பெரும் பித்தர் கூடிப் பிதற்றும்(ம்) அடி;
பிழைத்தார் பிழைப்பு அறிய வல்ல(வ்) அடி;
திருந்து நீர்த் தென்கெடில நாடன்(ன்) அடி—
திரு வீரட்டானத்து எம் செல்வன்(ன்) அடி. 4

ஒரு காலத்து ஒன்றுஆகி நின்ற(வ்) அடி;
ஊழிதோறுஊழி உயர்ந்த(வ்) அடி;
பொரு கழலும் பல்சிலம்பும் ஆர்க்கும்(ம்) அடி;
புகழ்வார் புகழ் தகைய வல்ல(வ்) அடி;
இரு நிலத்தார் இன்புஉற்று அங்கு ஏத்தும்(ம்) அடி;
இன்புஉற்றார் இட்ட பூ ஏறும்(ம்) அடி;
திரு அதிகைத் தென்கெடிலநாடன்(ன்) அடி—
திரு வீரட்டானத்து எம் செல்வன்(ன்) அடி. 5

திருமகட்குச் செந்தாமரை ஆம் அடி;
சிறந்தவர்க்குத் தேன்ஆய் விளைக்கும்(ம்) அடி;
பொருளவர்க்குப் பொன்உரைஆய் நின்ற(வ்) அடி;
புகழ்வார் புகழ் தகைய வல்ல(வ்) அடி;
உருஇரண்டும் ஒன்றோடு ஒன்று ஒவ்வா அடி;
உரு என்று உணரப்படாத(வ்) அடி;
திரு அதிகைத் தென்கெடிலநாடன்(ன்) அடி—
திரு வீரட்டானத்து எம் செல்வன்(ன்) அடி. 6

உரைமாலைஎல்லாம் உடைய(வ்) அடி;
உரையால் உணரப்படாத(வ்) அடி;
வரைமாதை வாடாமை வைக்கும்(ம்) அடி;
வானவர்கள்தாம் வணங்கி வாழ்த்தும்(ம்) அடி;
அரைமாத்திரையில் அடங்கும்(ம்) அடி;
அகலம் அளக்கிற்பார் இல்லா அடி;
கரை மாங் கலிக் கெடிலநாடன்(ன்) அடி—
கமழ் வீரட்டானக் காபாலி(ய்) அடி. 7

நறுமலர்ஆய் நாறும் மலர்ச்சேவடி;
நடுஆய் உலகம் நாடுஆய(வ்) அடி;
செறிகதிரும் திங்களும்ஆய் நின்ற(வ்) அடி;
தீத்திரள்ஆய் உள்ளே திகழ்ந்த(வ்) அடி;
மறு மதியை மாசு கழுவும்(ம்) அடி;
மந்திரமும் தந்திரமும் ஆய(வ்) அடி;
செறி கெடிலநாடர்பெருமான் அடி—
திரு வீரட்டானத்து எம் செல்வன்(ன்) அடி. 8

அணியனவும் சேயனவும் அல்லா அடி;
அடியார்கட்கு ஆர் அமுதம் ஆய(வ்) அடி;
பணிபவர்க்குப் பாங்குஆக வல்ல(வ்) அடி;
பற்றுஅற்றார் பற்றும் பவள(வ்) அடி;
மணிஅடி; பொன்அடி; மாண்புஆம் அடி;
மருந்துஆய்ப் பிணி தீர்க்க வல்ல(வ்) அடி;
தணிபு ஆடு தண்கெடில நாடன்(ன்) அடி—
தகை சார் வீரட்டத் தலைவன்(ன்) அடி. 9

அம் தாமரைப்போதுஅலர்ந்த(வ்) அடி;
அரக்கனையும் ஆற்றல் அழித்த(வ்) அடி;
முந்துஆகி முன்னே முளைத்த(வ்) அடி;
முழங்கு அழல்ஆய் நீண்ட எம் மூர்த்தி(ய்) அடி;
பந்து ஆடு மெல்விரலாள் பாகன்(ன்) அடி;
பவளத்தடவரையே போல்வான் அடி;
வெந்தார் சுடலை நீறுஆடும்(ம்) அடி—
வீரட்டம் காதல் விமலன்(ன்) அடி. 10

திரு அதிகைவீரட்டானம் VI-7 காப்புத் திருத் தாண்டகம்

செல்வப் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
சிற்றேமமும், பெருந் தண் குற்றால(ம்)மும்,
தில்லைச் சிற்றம்பலமும், தென்கூட(ல்)லும்,
தென்ஆனைக்காவும், சிராப்பள்ளி(ய்)யும்,
நல்லூரும், தேவன்குடி, மருக(ல்)லும்,
நல்லவர்கள் தொழுது ஏத்தும் நாரையூரும்—
கல்லலகு நெடும்புருவக் கபாலம் ஏந்திக்
கட்டங்கத்தோடு உறைவார் காப்புக்களே. 1

தீர்த்தப்புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திருக் கோவல்வீரட்டம், வெண்ணெய்நல்லூர்,
ஆர்த்து அருவி வீழ் சுனைநீர் அண்ணாமலை,
அறையணிநல்லூரும்(ம்), அரநெறியும்,—
ஏத்துமின்கள்! நீர் ஏத்த நின்ற ஈசன்—
இடைமருது, இன்னம்பர், ஏகம்ப(ம்)மும்,
கார்த் தயங்கு சோலைக் கயிலாய(ம்)மும்—
கண்ணுதலான்தன்னுடைய காப்புக்களே. 2

சிறை ஆர் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திருப் பாதிரிப்புலியூர், திரு ஆமாத்தூர்,
துறை ஆர் வன முனிகள் ஏத்த நின்ற
சோற்றுத்துறை, துருத்தி, நெய்த்தான(ம்)மும்,—
அறை ஆர் புனல் ஒழுகு காவிரீ சூழ்
ஐயாற்று அமுதர்—பழனம், நல்லம்,
கறை ஆர் பொழில் புடை சூழ் கானப்பேரும்,
கழுக்குன்றும்—தம்முடைய காப்புக்களே. 3

திரை ஆர் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திரு ஆரூர், தேவூர், திரு நெல்லிக்கா,
உரையார் தொழ நின்ற ஒற்றியூரும்,
ஓத்தூரும், மாற்பேறும், மாந்துறையும்,
வரை ஆர் அருவி சூழ் மாநதியும்,
மாகாளம், கேதாரம், மா மேரு(வ்)வும்—
கரை ஆர் புனல் ஒழுகு காவிரீ சூழ்
கடம்பந்துறை உறைவார் காப்புக்களே. 4

செழு நீர்ப்-புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திரிபுராந்தகம், தென் ஆர் தேவீச்சுரம்,
கொழு நீர் புடை சுழிக்கும் கோட்டுக்காவும்,
குடமூக்கும், கோகரணம், கோலக்காவும்,
பழி நீர்மை இல்லாப் பனங்காட்டூரும்,
பனையூர், பயற்றூர், பராய்த்துறையும்,
கழுநீர் மது விரியும் காளிங்க(ம்)மும்—
கணபதீச்சுரத்தார்தம் காப்புக்களே. 5

தெய்வப் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
செழுந் தண் பிடவூரும், சென்று நின்று
பவ்வம் திரியும் பருப்பத(ம்)மும்,
பறியலூர்வீரட்டம், பாவநாசம்,
மவ்வம் திரையும் மணிமுத்த(ம்)மும்,
மறைக்காடும், வாய்மூர், வலஞ்சுழி(ய்)யும்,
கவ்வை வரிவண்டு பண்ணே பாடும்
கழிப்பாலை—தம்முடைய காப்புக்களே. 6

தெண்நீர்ப்-புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
தீக்காலிவல்லம், திரு வேட்டி(ய்)யும்,
உண் நீர் ஆர் ஏடகமும், ஊறல், அம்பர்,
உறையூர், நறையூர், அரணநல்லூர்,
விண்ணார் விடையான் விளமர், வெண்ணி,
மீயச்சூர், வீழிமிழலை, மிக்க
கண் ஆர் நுதலார் கரபுர(ம்)மும்—
காபாலியார்அவர்தம் காப்புக்களே. 7

தெள்ளும் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திண்டீச்சுரமும், திருப்புக(ல்)லூர்,
எள்ளும் படையான் இடைத்தான(ம்)மும்,
ஏயீச்சுரமும், நல் ஏமம், கூடல்,
கொள்ளும் இலயத்தார் கோடிகாவும்,
குரங்கணில்முட்டமும், குறும்பலாவும்,
கள் அருந்தத் தெள்ளியார் உள்கி ஏத்தும்
காரோணம்—தம்முடைய காப்புக்களே. 8

சீர் ஆர் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திருக் காட்டுப்பள்ளி, திரு வெண்காடும்,
பாரார் பரவும் சீர்ப் பைஞ்ஞீலியும்,
பந்தணைநல்லூரும், பாசூர், நல்லம்,
நீர் ஆர் நிறை வயல் சூழ் நின்றியூரும்,
நெடுங்களமும், நெல்வெண்ணெய், நெல்வாயி(ல்)லும்,—
கார் ஆர் கமழ்கொன்றைத்தாரார்க்கு என்றும்—
கடவூரில் வீரட்டம்—காப்புக்களே. 9

சிந்தும் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திரு வாஞ்சியமும், திரு நள்ளாறும்,
அம் தண்பொழில் புடை சூழ் அயோகந்தியும்,
ஆக்கூரும், ஆவூரும், ஆன்பட்டி(ய்)யும்,
எம்தம் பெருமாற்கு இடம் ஆவது(வ்)
இடைச்சுரமும், எந்தை தலைச்சங்காடும்,
கந்தம் கமழும் கரவீர(ம்)மும்,
கடம்பூர்க் கரக்கோயில்—காப்புக்களே. 10

தேன் ஆர் புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திருச் செம்பொன்பள்ளி, திருப் பூவணமும்,
வானோர் வணங்கும் மணஞ்சேரி(ய்)யும்,
மதில் உஞ்சைமாகாளம், வாரணாசி,
ஏனோர்கள் ஏத்தும் வெகுளீச்சுரம்,
இலங்கு ஆர் பருப்பதத்தோடு, ஏண் ஆர் சோலைக்
கான் ஆர் மயில் ஆர் கருமாரி(ய்)யும்—
கறைமிடற்றார்தம்முடைய காப்புக்களே. 11

திரு நீர்ப்-புனல் கெடில வீரட்ட(ம்)மும்,
திரு அளப்பூர், தெற்கு ஏறு சித்தவடம்,
உரு நீர் வளம் பெருகு மா நிருப(ம்)மும்—
மயிலாப்பில் மன்னினார், மன்னி ஏத்தும்
பெருநீர் வளர்சடையான் பேணி நின்ற—
பிரமபுரம், சுழியல், பெண்ணாகடம்,
கருநீலவண்டு அரற்றும் காளத்தி(ய்)யும்,
கயிலாயம்—தம்முடைய காப்புக்களே. 12

திருக் காளத்தி   VI-8   திருத் தாண்டகம்

விற்று ஊண் ஒன்று இல்லாத நல்கூர்ந்தான்காண்,
வியன்கச்சிக் கம்பன்காண், பிச்சைஅல்லால்
மற்று ஊண் ஒன்று இல்லாத மா சதுரன்காண்,
மயானத்து மைந்தன்காண், மாசு ஒன்று இல்லாப்
பொன்-தூண்காண், மா மணிநல்குன்று ஒப்பான்காண்,
பொய்யாது பொழில்ஏழும் தாங்கி நின்ற
கல்-தூண்காண்—காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண்; அவன் என் கண் உளானே. 1

இடிப்பான்காண், என் வினையை; ஏகம்பன்காண்;
எலும்புஆபரணன்காண்; எல்லாம் முன்னே
முடிப்பான்காண்; மூஉலகும் ஆயினான்காண்;
முறைமையால் ஐம்புரியும் வழுவா வண்ணம்
படித்தான் தலை அறுத்த பாசுபதன்காண்;
பராய்த்துறையான்; பழனம், பைஞ்ஞீலியான்காண்;
கடித்தார் கமழ்கொன்றைக்கண்ணியான்காண்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 2

நாரணன்காண், நான்முகன்காண், நால்வேதன்காண்,
ஞானப்பெருங்கடற்கு ஓர் நாவாய் அன்ன
பூரணன்காண், புண்ணியன்காண், புராணன் தான்காண்,
புரிசடைமேல் புனல் ஏற்ற புனிதன் தான்காண்,
சாரணன்காண், சந்திரன்காண், கதிரோன் தான்காண்,
தன்மைக்கண்-தானேகாண், தக்கோர்க்கு எல்லாம்
காரணன்காண்—காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண்; அவன் என் கண் உளானே. 3

செற்றான்காண், என் வினையை; தீஆடீகாண்;
திரு ஒற்றியூரான்காண்; சிந்தைசெய்வார்க்கு
உற்றான்காண்; ஏகம்பம் மேவினான்காண்;
உமையாள்நல்கொழுநன்காண்; இமையோர் ஏத்தும்
சொல்-தான்காண்; சோற்றுத்துறை உளான்காண்;
சுறாவேந்தன் ஏவலத்தை நீறா நோக்கக்
கற்றான்காண்—காளத்தி காணப்பட்ட
கணநாதன்காண்; அவன் என் கண் உளானே. 4

மனத்துஅகத்தான்; தலைமேலான்; வாக்கின் உள்ளான்;
வாய் ஆரத் தன் அடியே பாடும் தொண்டர்-
இனத்துஅகத்தான்; இமையவர்தம் சிரத்தின்மேலான்;
ஏழ்அண்டத்து அப்பாலான்; இப் பால் செம்பொன்
புனத்துஅகத்தான்; நறுங்கொன்றைப்போதின் உள்ளான்;
பொருப்புஇடையான்; நெருப்புஇடையான்; காற்றின் உள்ளான்;
கனத்துஅகத்தான்; கயிலாயத்து உச்சி உள்ளான்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 5

எல்லாம் முன் தோன்றாமே தோன்றினான்காண்;
ஏகம்பம் மேயான்காண்; இமையோர் ஏத்தப்
பொல்லாப் புலன்ஐந்தும் போக்கினான்காண்;
புரிசடைமேல் பாய் கங்கை பூரித்தான்காண்;
நல்ல விடை மேற்கொண்டு, நாகம் பூண்டு,
நளிர் சிரம் ஒன்று ஏந்தி, ஓர் நாண்ஆய் அற்ற
கல்ஆடை மேல் கொண்ட காபாலீகாண்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 6

கரிஉருவுகண்டத்து எம் கண் உளான் காண்;
கண்டன்காண்; வண்டு உண்ட கொன்றையான்காண்;
எரி, பவள, வண்ணன்காண்; ஏகம்பன்காண்;
எண்திசையும் தான் ஆய குணத்தினான்காண்;
திரிபுரங்கள் தீ இட்ட தீஆடீகாண்;
தீவினைகள் தீர்த்திடும் என் சிந்தையான்காண்;
கரிஉரிவை போர்த்து உகந்த காபாலீகாண்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 7

இல்ஆடிச் சில்பலி சென்று ஏற்கின்றான்காண்;
இமையவர்கள் தொழுது இறைஞ்ச இருக்கின்றான்காண்;
வில்ஆடி வேடனாய் ஓடினான்காண்;
வெண்நூலும் சேர்ந்த அகலத்தான்காண்;
மல் ஆடு திரள்தோள்மேல் மழுவாளன்காண்;
மலைமகள்தன் மணாளன்காண்; மகிழ்ந்து முன்நாள்
கல்லாலின்கீழ் இருந்த காபாலிகாண்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 8

தேனப் பூ வண்டு உண்ட கொன்றையான்காண்;
திரு ஏகம்பத்தான்காண்; தேன் ஆர்ந்து உக்க
ஞானப்பூங்கோதையாள் பாகத்தான்காண்;
நம்பன்காண்; ஞானத்துஒளி ஆனான்காண்;
வானப் பேர் ஊரும் மறிய ஓடி
மட்டித்து நின்றான்காண்; வண்டு ஆர் சோலைக்
கானப்பேரூரான்காண்; கறைக்கண்டன்காண்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 9

இறையவன்காண்; ஏழ்உலகும் ஆயினான்காண்;
ஏழ்கடலும் சூழ் மலையும் ஆயினான்காண்;
குறை உடையார் குற்றேவல் கொள்வான் தான்காண்;
குடமூக்கில் கீழ்க்கோட்டம் மேவினான்காண்;
மறை உடைய வானோர்பெருமான் தான்காண்;
மறைக்காட்டு உறையும் மணிகண்டன்காண்;
கறை உடைய கண்டத்து எம் காபாலிகாண்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 10

உண்ணா அருநஞ்சம் உண்டான் தான்காண்;
ஊழித்தீ அன்னான்காண்; உகப்பார் காணப்
பண் ஆரப் பல்இலயம் பாடினான்காண்;
பயின்ற நால்வேதத்தின் பண்பினான்காண்;
அண்ணாமலையான்காண்; அடியார்ஈட்டம்
அடிஇணைகள் தொழுது ஏத்த அருளுவான்காண்;
கண் ஆரக் காண்பார்க்கு ஓர் காட்சியான்காண்—
காளத்தியான்அவன், என் கண் உளானே. 11

திரு ஆமாத்தூர் VI-9 திருத் தாண்டகம்

வண்ணங்கள் தாம் பாடி, வந்து நின்று,
வலி செய்து, வளை கவர்ந்தார்—வகையால் நம்மைக்
கண்அம்பால் நின்று எய்து, கனலப் பேசி,
கடியது ஓர் விடை ஏறி—காபாலி(ய்)யார்;
சுண்ணங்கள் தாம் கொண்டு துதையப் பூசித்
தோல் உடுத்து நூல் பூண்டு தோன்றத்தோன்ற
அண்ணலார் போகின்றார்; வந்து காணீர்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 1

வெந்தார் வெண்பொடிப் பூசி, வெள்ளைமாலை
விரிசடைமேல்-தாம் சூடி, வீணை ஏந்தி,
கந்தாரம் தாம் முரலா, போகாநிற்க,
''கறை சேர் மணிமிடற்றீர்! ஊர் ஏது?'' என்றேன்;
நொந்தார் போல் வந்து எனது இல்லை புக்கு,
''நுடங்கு ஏர் இடை மடவாய்! நம் ஊர் கேட்கில்,
அம் தாமரைமலர்மேல் அளி-வண்டு யாழ்செய்
ஆமாத்தூர்'' என்று, அடிகள் போயினாரே. 2

கட்டங்கம் தாம் ஒன்று கையில் ஏந்தி,
கடிய விடை ஏறி—காபாலி(ய்)யார்—
இட்டங்கள் தாம் பேசி, இல்லே புக்கு,
இடும் பலியும் இடக் கொள்ளார்; போவார்அல்லர்;
பட்டிமையும் படிறுமே பேசுகின்றார்;
பார்ப்பாரைப் பரிசு அழிப்பார் போல்கின்றார், தாம்;
அட்டிய சில்பலியும் கொள்ளார்; விள்ளார்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 3

பசைந்த பலபூதத்தர், பாடல் ஆடல்;
படநாகக்கச்சையர்; பிச்சைக்கு என்று அங்கு
இசைந்தது ஓர் இயல்பினர்; எரியின் மேனி
இமையா முக்கண்ணினர்; நால்வேதத்தர்;
பிசைந்த திருநீற்றினர்; பெண் ஓர்பாகம்
பிரிவு அறியாப் பிஞ்ஞகனார்; தெண்நீர்க் கங்கை
அசைந்த திருமுடியர்; அங்கைத் தீயர்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 4

உருள் உடைய தேர், புரவியோடும், யானை,
ஒன்றாலும் குறைவு இல்லை; ஊர்தி வெள்ஏறு;
இருள் உடைய கண்டத்தர்; செந்தீவண்ணர்;
இமையவர்கள் தொழுது ஏத்தும் இறைவனார், தாம்;
பொருள் உடையர்அல்லர்; இலரும் அல்லர்;
புலித்தோல் உடைஆகப் பூதம் சூழ,
அருள் உடைய அம் கோதை, மாலை மார்பர்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 5

வீறு உடைய ஏறு ஏறி, நீறு பூசி,
வெண்தோடு பெய்து, இடங்கை வீணை ஏந்தி,
கூறு உடைய மடவாள் ஓர்பாகம் கொண்டு,
குழை ஆட, கொடுகொட்டி கொட்டா, வந்து,
பாறு உடைய படுதலை ஓர் கையில் ஏந்தி,
பலி கொள்வார்அல்லர், படிறே பேசி;
ஆறு உடைய சடைமுடி எம் அடிகள் போலும்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 6

கை ஓர் கபாலத்தர்; மானின்தோலர்;
கருத்து உடையர்; நிருத்தராய்க் காண்பார் முன்னே,
செய்யதிருமேனி வெண்நீறுஆடி,
திகழ் புன்சடைமுடிமேல்-திங்கள் சூடி,
மெய் ஒருபாகத்து உமையை வைத்து,
மேவார் திரிபுரங்கள் வேவச் செய்து(வ்),
ஐயனார் போகின்றார்; வந்து காணீர்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 7

‘‘ஒன்றாலும் குறைவு இல்லை; ஊர்தி வெள்ஏறு;
ஒற்றியூர் உம் ஊரே? உணரக் கூறீர்!
நின்றுதான் என் செய்வீர், போவீர்ஆகில்?
நெற்றிமேல் கண் காட்டி நிறையும் கொண்டீர்;
என்றும்தான் இவ் வகையே இடர் செய்கின்றீர்;
இருக்கும் ஊர் இனி அறிந்தோம், ஏகம்ப(ம்)மோ?
அன்றித்தான் போகின்றீர், அடிகள்! எம்மோடு;’’—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 8

கல்லலகு தாம் கொண்டு, காளத்தி(ய்)யார்,
கடிய விடை ஏறி, காணக்காண
இல்லமே தாம் புகுதா, ''இடுமின், பிச்சை!''
என்றாருக்கு எதிர் எழுந்தேன்; எங்கும் காணேன்;
''சொல்லாதே போகின்றீர்; உம் ஊர் ஏது?
துருத்தி? பழனமோ? நெய்த்தான(ம்)மோ?''
அல்லலே செய்து அடிகள் போகின்றார், தாம்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 9

மழுங்கலா நீறுஆடும் மார்பர்போலும்;
மணி மிழலை மேய மணாளர்போலும்;
கொழுங்குவளைக்கோதைக்கு இறைவர்போலும்;
கொடுகொட்டி, தாளம், உடையார்போலும்;
செழுங் கயிலாயத்து எம் செல்வர்போலும்;
தென்அதிகைவீரட்டம் சேர்ந்தார்போலும்;
அழுங்கினார் ஐயுறவு தீர்ப்பார்போலும்—
அழகியரே, ஆமாத்தூர் ஐயனாரே! 10

திருப் பந்தணைநல்லூர் VI-10 திருத் தாண்டகம்

நோதங்கம் இல்லாதார்; நாகம் பூண்டார்;
நூல் பூண்டார்; நூல்மேல் ஓர் ஆமை பூண்டார்;
பேய் தங்கு நீள் காட்டில் நட்டம்ஆடி;
பிறை சூடும் சடைமேல் ஓர் புனலும் சூடி;
ஆ தங்கு பைங்குழலாள் பாகம் கொண்டார்;
அனல் கொண்டார்; அந்திவாய் வண்ணம் கொண்டார்;
பாதம் கம் நீறு ஏற்றார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 1

காடுஅலால் கருதாதார்; கடல்நஞ்சு உண்டார்;
களிற்றுஉரிவை மெய் போர்த்தார்; கலன்அதுஆக;
ஓடுஅலால் கருதாதார்; ஒற்றியூரார்;
உறு பிணியும் செறு பகையும் ஒற்றைக்கண்ணால்
பீடு உலாம்தனை செய்வார்; பிடவம், மொந்தை,
குடமுழவம், கொடுகொட்டி, குழலும், ஓங்கப்
பாடலார்; ஆடலார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 2

பூதப்படை உடையார்; பொங்கு நூலார்;
புலித்தோல் உடையினார்; போர் ஏற்றி(ன்)னார்;
வேதத்தொழிலார் விரும்ப நின்றார்;
விரிசடைமேல் வெண்திங்கள்கண்ணி சூடி,
ஓதத்து ஒலிகடல்வாய் நஞ்சம் உண்டார்;
உம்பரோடு அம்பொன்னுலகம் ஆண்டு
பாதத் தொடு கழலார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 3

நீர் உலாம் சடைமுடிமேல்-திங்கள் ஏற்றார்;
நெருப்பு ஏற்றார், அங்கையில்; நிறையும் ஏற்றார்;
ஊர்எலாம் பலி ஏற்றார்; அரவம் ஏற்றார்;
ஒலிகடல்வாய் நஞ்சம் மிடற்றில் ஏற்றார்;
வார் உலாம் முலை மடவாள் பாகம் ஏற்றார்;
மழு ஏற்றார்; மான்மறி ஓர் கையில் ஏற்றார்;
பார் உலாம் புகழ் ஏற்றார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 4

தொண்டர் தொழுது ஏத்தும் சோதி ஏற்றார்;
துளங்கா மணி முடியார்; தூய நீற்றார்;
இண்டைச் சடைமுடியார்; ஈமம் சூழ்ந்த
இடு பிணக்காட்டு ஆடலார், ஏமம்தோறும்;
அண்டத்துக்கு அப் புறத்தார்; ஆதிஆனார்;
அருக்கனாய், ஆர்அழல்ஆய், அடியார்மேலைப்
பண்டைவினை அறுப்பார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 5

கடம் மன்னு களியானை உரிவை போர்த்தார்;
கானப்பேர் காதலார்; காதல்செய்து
மடம் மன்னும் அடியார்தம் மனத்தின் உள்ளார்;
மான்உரி-தோல் மிசைத்தோளார்; மங்கை காண
நடம் மன்னி ஆடுவார்; நாகம் பூண்டார்;
நால்மறையோடு ஆறுஅங்கம் நவின்ற நாவார்;
படம் மன்னு திருமுடியார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 6

முற்றா மதிச் சடையார்; மூவர்ஆனார்;
மூஉலகும் ஏத்தும் முதல்வர்ஆனார்;
கற்றார் பரவும் கழலார்; திங்கள்,
கங்கையாள், காதலார்; காம்பு ஏய் தோளி
பற்றுஆகும் பாகத்தார்; பால்வெண்நீற்றார்;
பான்மையால் ஊழி, உலகம், ஆனார்;
பற்றார் மதில் எரித்தார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 7

கண் அமரும் நெற்றியார்; காட்டார்; நாட்டார்;
கன மழுவாள் கொண்டது ஓர் கையார்; சென்னிப்
பெண் அமரும் சடைமுடியார்; பேர் ஒன்று இல்லார்;
பிறப்பு இலார்; இறப்பு இலார்; பிணி ஒன்று இல்லார்;
மண்ணவரும், வானவரும், மற்றையோரும்,
மறையவரும், வந்து எதிரே வணங்கி ஏத்தப்
பண் அமரும் பாடலார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 8

ஏறு ஏறி ஏழ்உலகும் ஏத்த நின்றார்;
இமையவர்கள் எப்பொழுதும் இறைஞ்ச நின்றார்;
நீறு ஏறு மேனியார்; நீலம் உண்டார்;
நெருப்பு உண்டார்; அங்கை அனலும் உண்டார்;
ஆறு ஏறு சென்னியார்; ஆன்அஞ்சுஆடி;
அனல் உமிழும் ஐவாய் அரவும் ஆர்த்தார்;
பாறு ஏறு வெண்தலையார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 9

கல் ஊர் கடிமதில்கள்மூன்றும் எய்தார்;
காரோணம் காதலார்; காதல்செய்து
நல்லூரார்; ஞானத்தார்; ஞானம் ஆனார்;
நால்மறையோடு ஆறுஅங்கம் நவின்ற நாவார்;
மல் ஊர் மணி மலையின்மேல் இருந்து,
வாள் அரக்கர்கோன் தலையை மாளச் செற்று,
பல்ஊர் பலி திரிவார்; பைங்கண் ஏற்றார்;
பலி ஏற்றார்—பந்தணைநல்லூராரே. 10

திருப் புன்கூரும் திரு நீடூரும் VI-11 திருத் தாண்டகம்

பிறவாதே தோன்றிய பெம்மான்தன்னை,
பேணாதார்அவர்தம்மைப் பேணாதானை,
துறவாதே கட்டு அறுத்த சோதியானை,
தூ நெறிக்கும் தூ நெறிஆய் நின்றான்தன்னை,
திறம் ஆய எத்திசையும் தானேஆகித்
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நிறம்ஆம் ஒளியானை, நீடூரானை,—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 1

பின்தானும் முன்தானும் ஆனான்தன்னை,
பித்தர்க்குப் பித்தனாய் நின்றான்தன்னை,
நன்று ஆங்கு அறிந்தவர்க்கும் தானேஆகி
நல்வினையும் தீவினையும் ஆனான்தன்னை,
சென்று ஓங்கி விண் அளவும் தீ ஆனானை,
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நின்று ஆய நீடூர் நிலாவினானை,—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 2

இல்லானை,—எவ்இடத்தும்,—உள்ளான்தன்னை;
இனிய நினையாதார்க்கு இன்னாதானை;
வல்லானை, வல் அடைந்தார்க்கு அருளும் வண்ணம்;
மாட்டாதார்க்கு எத்திறத்தும் மாட்டாதானை;
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானை;
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை;
நெல்லால் விளை கழனி நீடூரானை;—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 3

கலைஞானம் கல்லாமே கற்பித்தானை,
கடுநரகம் சாராமே காப்பான்தன்னை,
பல ஆய வேடங்கள் தானே ஆகி,
பணிவார்கட்கு அங்குஅங்கே பற்றுஆனானை;
சிலையால் புரம் எரித்த தீஆடி(ய்)யை,
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நிலை ஆர் மணி மாட நீடூரானை,—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 4

நோக்காதே எவ்அளவும் நோக்கினானை,
நுணுகாதே யாதுஒன்றும் நுணுகினானை,
ஆக்காதே யாதுஒன்றும் ஆக்கினானை,
அணுகாதார் அவர்தம்மை அணுகாதானை,
தேக்காதே தெண்கடல்நஞ்சு உண்டான்தன்னை,
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நீக்காத பேர்ஒளி சேர் நீடூரானை,— 5
நீதனேன் என்னே நான் நினையாஆறே!

பூண் அலாப் பூணானை, பூசாச் சாந்தம்
உடையானை, முடை நாறும் புன் கலத்தில்
ஊண் அலா ஊணானை, ஒருவர் காணா
உத்தமனை, ஒளி திகழும் மேனியானை,
சேண் உலாம் செழும் பவளக்குன்று ஒப்பானை,
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நீண் உலாம் மலர்க் கழனி நீடூரானை,— 6
நீதனேன் என்னே நான் நினையாஆறே!

உரை ஆர் பொருளுக்கு உலப்புஇலானை,
ஒழியாமே எவ் உருவும் ஆனான்தன்னை,
புரைஆய்க் கனம்ஆய் ஆழ்ந்து ஆழாதானை,
புதியனவும்ஆய் மிகவும் பழையான்தன்னை,
திரை ஆர் புனல் சேர் மகுடத்தானை,
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நிரை ஆர் மணி மாட நீடூரானை,—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 7

கூர் அரவத்துஅணையானும் குளிர்தண்பொய்கை
மலரவனும் கூடிச் சென்று அறியமாட்டார்;
ஆர் ஒருவர் அவர் தன்மை அறிவார்? தேவர்,
''அறிவோம்'' என்பார்க்கு எல்லாம் அறியல் ஆகாச்
சீர் அரவக் கழலானை, நிழல் ஆர் சோலைத்
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நீர் அரவத் தண்கழனி நீடூரானை,—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 8

கைஎலாம் நெய் பாய, கழுத்தே கிட்ட,
கால் நிமிர்த்து, நின்று உண்ணும் கையர் சொன்ன
பொய்எலாம் மெய் என்று கருதிப் புக்குப்
புள்ளுவரால் அகப்படாது உய்யப் போந்தேன்;
செய்எலாம் செழுங் கமலப் பழன வேலித்
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நெய்தல் வாய்ப் புனல் படப்பை நீடூரானை,—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 9

இகழும்ஆறு எங்ஙனே? ஏழைநெஞ்சே!
இகழாது பரந்து ஒன்றுஆய் நின்றான்தன்னை,
நகழ மால்வரைக்கீழ் இட்டு, அரக்கர்கோனை
நலன் அழித்து நன்கு அருளிச்செய்தான்தன்னை,
திகழும் மா மதகரியின்உரி போர்த்தானை,
திருப் புன்கூர் மேவிய சிவலோக(ன்)னை,
நிகழுமா வல்லானை, நீடூரானை,—
நீதனேன் என்னே நான் நினையாஆறே! 10

திருக் கழிப்பாலை VI-12 திருத் தாண்டகம்

ஊன் உடுத்தி, ஒன்பதுவாசல் வைத்து(வ்),
ஒள் எலும்பு தூணா உரோமம் மேய்ந்து,
தாம் எடுத்த கூரை தவிரப் போவார்;
தயக்கம்பல படைத்தார், தா(ம்)மரையினார்,
கான் எடுத்து மா மயில்கள் ஆலும் சோலைக்
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
வான்இடத்தை ஊடு அறுத்து வல்லைச் செல்லும்
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 1

முறை ஆர்ந்த மும்மதிலும் பொடியாச் செற்று,
முன்னும்ஆய், பின்னும்ஆய், முக்கண் எந்தை;
பிறை ஆர்ந்த சடைமுடிமேல் பாம்பு, கங்கை,
பிணக்கம் தீர்த்து உடன்வைத்தார்; பெரிய நஞ்சுக்-
கறை ஆர்ந்த மிடற்று அடங்கக் கண்ட எந்தை—
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
மறை ஆர்ந்த வாய்மொழியால், மாய, யாக்கை,
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 2

நெளிவு உண்டாக் கருதாதே, நிமலன்தன்னை
நினைமின்கள், நித்தலும்! நேரிழையாள் ஆய
ஒளி வண்டு ஆர் கருங்குழலி உமையாள்தன்னை
ஒருபாகத்து அமர்ந்து, அடியார் உள்கி ஏத்த,
களி வண்டு ஆர் கரும் பொழில் சூழ் கண்டல் வேலிக்
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
வளி உண்டு ஆர் மாயக் குரம்பை நீங்க
வழி வைத்தார்க்கு, அவ்வழியே போதும், நாமே. 3

பொடி நாறு மேனியர்; பூதிப் பையர்;
புலித்தோலர்; பொங்கு அரவர்; பூணநூலர்;
அடி நாறு கமலத்தர்; ஆரூர் ஆதி;
ஆன்அஞ்சும்ஆடும் ஆதிரையினார்தாம்—
கடி நாறு பூஞ்சோலை கமழ்ந்து நாறும்
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
மடி நாறு மேனி இம் மாயம் நீங்க
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 4

விண் ஆனாய்! விண்ணவர்கள் விரும்பி வந்து,
''வேதத்தாய்! கீதத்தாய்! விரவி எங்கும்
எண் ஆனாய்! எழுத்து ஆனாய்! கடல்ஏழ் ஆனாய்!
இறை ஆனாய்! எம் இறையே!'' என்று நிற்கும்
கண் ஆனாய்! கார் ஆனாய்! பாரும் ஆனாய்!
கழிப்பாலையுள் உறையும் கபால(அ)ப்பனார்,
மண் ஆன மாயக் குரம்பை நீங்க
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 5

விண்ணப்ப விச்சாதரர்கள் ஏத்த,
விரி கதிரோன், எரி சுடரான், விண்ணும் ஆகி,
பண் அப்பன்; பத்தர் மனத்துள் ஏயும்
பசுபதி; பாசுபதன்; தேசமூர்த்தி;
கண்ணப்பன் கண் அப்பக் கண்டு உகந்தார்—
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
வண்ணப் பிணி மாயயாக்கை நீங்க
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 6

பிணம் புல்கு பீறல் குரம்பை மெய்யாப்
பேதப்படுகின்ற பேதைமீர்காள்!
நிணம் புல்கு சூலத்தர்; நீலகண்டர்;
எண்தோளர்; எண் நிறைந்த குணத்தினாலே
கணம்புல்லன் கருத்து உகந்தார்; காஞ்சி உள்ளார்—
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
மணம் புல்கு மாயக் குரம்பை நீங்க
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 7

இயல்பு ஆய ஈசனை, எந்தைதந்தை,
என் சிந்தை மேவி உறைகின்றானை,
முயல்வானை, மூர்த்தியை, தீர்த்தம்ஆன
தியம்பகன், திரிசூலத்து அனல் நகையன்—
கயல் பாயும் கண்டல் சூழ்வுண்ட வேலிக்
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
மயல் ஆய மாயக் குரம்பை நீங்க 8
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே.

செற்றது ஓர் மனம் ஒழிந்து, சிந்தைசெய்து,
''சிவமூர்த்தி'' என்று எழுவார் சிந்தையுள்ளால்
உற்றது ஓர் நோய் களைந்து இவ் உலகம்எல்லாம்
காட்டுவான்; உத்தமன்தான்; ஓதாது எல்லாம்
கற்றது ஓர் நூலினன்; களிறு செற்றான்—
கழிப்பாலை மேய கபால(அ)ப்பனார்;
மற்று இது ஓர் மாயக் குரம்பை நீங்க
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 9

பொருது அலங்கல் நீள் முடியான்—போர் அரக்கன்—
புட்பகம்தான் பொருப்பின்மீது ஓடாதுஆக,
இரு நிலங்கள் நடுக்கு எய்த எடுத்திடுதலும்,
ஏந்திழையாள்தான் வெருவ, இறைவன் நோக்கிக்
கரதலங்கள் கதிர்முடி ஆறு-அஞ்சினோடு
கால்விரலால் ஊன்று கழிப்பாலையார்,
வருதல் அங்கம் மாயக் குரம்பை நீங்க
வழி வைத்தார்க்கு, அவ் வழியே போதும், நாமே. 10

திருப் புறம்பயம் VI-13 திருத் தாண்டகம்

கொடி மாட நீள்தெருவு கூடல், கோட்டூர்,
கொடுங்கோளூர், தண் வளவி கண்டியூரும்,
நடம்ஆடும் நல் மருகல், வைகி; நாளும்
நலம் ஆகும் ஒற்றியூர் ஒற்றிஆக;
படு மாலை வண்டு அறையும் பழனம், பாசூர்,
பழையாறும், பாற்குளமும், கைவிட்டு; இந் நாள்
பொடி ஏறும் மேனியராய்ப் பூதம் சூழ,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 1

முற்று ஒருவர் போல முழுநீறுஆடி,
முளைத்திங்கள் சூடி, முந்நூலும் பூண்டு,
ஒற்று ஒருவர் போல உறங்குவேன் கை
ஒளி வளையை ஒன்றுஒன்று எண்ணுகின்றார்;
மற்று ஒருவர் இல்லை, துணை எனக்கு;
மால் கொண்டால் போல மயங்குவேற்கு,
புற்று அரவக் கச்சு ஆர்த்துப் பூதம் சூழ,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 2

ஆகாத நஞ்சு உண்ட அந்திவண்ணர்,
ஐந்தலைய மாசுணம் கொண்டு, அம் பொன்தோள்மேல்
ஏகாசமா இட்டு, ஓடு ஒன்று ஏந்தி வந்து(வ்),
''இடு, திருவே, பலி!'' என்றார்க்கு, இல்லே புக்கேன்;
பாகுஏதும் கொள்ளார்; பலியும் கொள்ளார்;
பாவியேன் கண்ணுள்ளே பற்றி நோக்கி,
போகாத வேடத்தர் பூதம் சூழ,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 3

பல் மலிந்த வெண்தலை கையில் ஏந்தி,—
பனி முகில் போல் மேனிப் பவந்த நாதர்—
நெல் மலிந்த நெய்த்தானம், சோற்றுத்துறை,
நியமம், துருத்தியும், நீடூர், பாச்சில்,
கல் மலிந்து ஓங்கு கழுநீர்க்குன்றம்,
கடல் நாகைக்காரோணம், கைவிட்டு, இந் நாள்
பொன் மலிந்த கோதையரும் தாமும் எல்லாம்
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 4

செத்தவர்தம் தலைமாலை கையில் ஏந்தி,
சிரமாலை சூடி, சிவந்த மேனி
மத்தகத்த யானை உரிவை மூடி,
மடவாள்அவளோடும் மான் ஒன்று ஏந்தி,
அத் தவத்த தேவர்அறுபதின்மர்
ஆறுநூறுயிரவர்க்கு ஆடல் காட்டி,
புத்தகம் கைக் கொண்டு, புலித்தோல் வீக்கி,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 5

நஞ்சு அடைந்த கண்டத்தர், வெண்நீறுஆடி,
நல்ல புலிஅதள்மேல் நாகம் கட்டி,
பஞ்சு அடைந்த மெல்விரலாள் பாகம்ஆக,
''பராய்த்துறையேன்'' என்று ஓர் பவளவண்ணர்
துஞ்சுஇடையே வந்து, துடியும் கொட்ட,
துண்ணென்று எழுந்திருந்தேன்; சொல்லமாட்டேன்;
புன்சடையின்மேல் ஓர் புனலும் சூடி,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 6

மறி இலங்கு கையர் மழு ஒன்று ஏந்தி,
''மறைக்காட்டேன்'' என்று ஓர் மழலை பேசி,
செறி இலங்கு திண்தோள்மேல் நீறு கொண்டு,
திருமுண்டமா இட்ட திலக நெற்றி
நெறி இலங்கு கூந்தலார் பின்பின் சென்று,
நெடுங்கண் பனி சோர, நின்று நோக்கி,
பொறி இலங்கு பாம்பு ஆர்த்து, பூதம் சூழ,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 7

நில்லாதே பல்ஊரும் பலிகள் வேண்டி,
நிரைவளையார் பலி பெய்ய நிறையும் கொண்டு,
கொல் ஏறும் கொக்கரையும் கொடுகொட்டி(ய்)யும்
குடமூக்கில் அங்கு ஒழிய, ''குளிர்தண்பொய்கை
நல்லாடை, நல்லூரே, தவிரேன்'' என்று
நறையூரில்†தாமும் தவிர்வார் போல,
பொல்லாத வேடத்தர், பூதம் சூழ,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 8

விரை ஏறு நீறு அணிந்து, ஓர் ஆமை பூண்டு,
வெண்தோடு பெய்து, இடங்கை வீணை ஏந்தி,
திரை ஏறு சென்னிமேல்-திங்கள்தன்னைத்
திசை விளங்க வைத்து, உகந்த செந்தீவண்ணர்,
அரை ஏறு மேகலையாள் பாகம்ஆக
ஆர்இடத்தில் ஆடல் அமர்ந்த ஐயன்
புரை ஏறு தாம் ஏறி, பூதம் சூழ,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 9

கோ ஆய இந்திரன் உள்ளிட்டார்ஆகக்
குமரனும், விக்கினவிநாயக(ன்)னும்,
பூ ஆய பீடத்துமேல் அய(ன்)னும்,
பூமி அளந்தானும், போற்றுஇசைப்ப;
பா ஆய இன்இசைகள் பாடி ஆடிப்
பாரிடமும் தாமும் பரந்து பற்றி,
பூ ஆர்ந்த கொன்றை பொறிவண்டு ஆர்க்க,
''புறம்பயம் நம் ஊர்'' என்று போயினாரே! 10

திரு நல்லூர் VI-14 திருத் தாண்டகம்

நினைந்து உருகும் அடியாரை நைய வைத்தார்;
நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்;
சினம் திருகு களிற்று உரிவைப்போர்வை வைத்தார்;
செழு மதியின்தளிர் வைத்தார்; சிறந்து வானோர்-
இனம் துருவி, மணி மகுடத்து ஏற, துற்ற
இனமலர்கள் போது அவிழ்ந்து மது வாய்ப் பில்கி
நனைந்தனைய திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 1

பொன் நலத்த நறுங்கொன்றை சடைமேல் வைத்தார்;
புலிஉரியின்-அதள் வைத்தா; புனலும் வைத்தார்;
மன் நலத்த திரள்தோள்மேல் மழுவாள் வைத்தார்;
வார் காதில் குழை வைத்தார்; மதியும் வைத்தார்;
மின் நலத்த நுண்இடையாள் பாகம் வைத்தார்;
வேழத்தின்உரி வைத்தார்; வெண்நூல் வைத்தார்;
நல்-நலத்த திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 2

தோடு ஏறும் மலர்க்கொன்றை சடைமேல் வைத்தார்;
துன் எருக்கின்வடம் வைத்தார்; துவலை சிந்த,
பாடு ஏறு படு திரைகள் எறிய வைத்தார்;
பனிமத்தமலர் வைத்தார்; பாம்பும் வைத்தார்;
சேடு ஏறு திருநுதல்மேல் நாட்டம் வைத்தார்;
சிலை வைத்தார்; மலை பெற்ற மகளை வைத்தார்;
நாடு ஏறு திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 3

வில் அருளி வரு புருவத்து ஒருத்தி பாகம்
பொருத்துஆகி, விரிசடைமேல் அருவி வைத்தார்;
கல் அருளி வரிசிலையா வைத்தார்; ஊராக்
கயிலாயமலை வைத்தார்; கடவூர் வைத்தார்;
சொல் அருளி அறம் நால்வர்க்கு அறிய வைத்தார்;
சுடுசுடலைப் பொடி வைத்தார்; துறவி வைத்தார்;
நல் அருளால்-திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 4

விண் இரியும் திரிபுரங்கள் எரிய வைத்தார்;
வினை, தொழுவார்க்கு, அற வைத்தார்; துறவி வைத்தார்;
கண்எரியால் காமனையும் பொடியா வைத்தார்;
கடிக்கமலம்மலர் வைத்தார்; கயிலை வைத்தார்;
திண் எரியும் தண்புனலும் உடனேவைத்தார்;
திசை தொழுது மிசை அமரர் திகழ்ந்து வாழ்த்தி
நண்ண(அ)ரிய திருவடி என் தலைமேல் வைத்தார்— 5
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே!

உற்று உலவு பிணி உலகத்து எழுமை வைத்தார்;
உயிர் வைத்தார்; உயிர் செல்லும் கதிகள் வைத்தார்;
மற்று அமரர்கணம் வைத்தார்; அமரர் காணா
மறை வைத்தார்; குறைமதியம் வளர வைத்தார்;
செற்றம் மலி ஆர்வமொடு காமலோபம்
சிறவாத நெறி வைத்தார்; துறவி வைத்தார்;
நல்-தவர் சேர் திருவடி என் தலைமேல் வைத்தார்— 6
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே!

மாறு மலைந்தார் அரணம் எரிய வைத்தார்;
மணி முடிமேல் அர வைத்தார்; அணி கொள் மேனி
நீறு மலிந்து எரிஆடல் நிலவ வைத்தார்;
நெற்றிமேல் கண் வைத்தார்; நிலையம் வைத்தார்;
ஆறு மலைந்து அறு திரைகள் எறிய வைத்தார்;
ஆர்வத்தால் அடி அமரர் பரவ வைத்தார்;
நாறுமலர்த்திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 7

குலங்கள் மிகு மலை, கடல்கள், ஞாலம், வைத்தார்;
குரு மணி சேர் அர வைத்தார்; கோலம் வைத்தார்;
உலம் கிளரும் அரவத்தின் உச்சி வைத்தார்;
உண்டுஅருளி விடம் வைத்தார்; எண்தோள் வைத்தார்;
நிலம் கிளரும் புனல் கனலுள் அனிலம் வைத்தார்;
நிமிர்விசும்பின் மிசை வைத்தார்; நினைந்தார் இந் நாள்
நலம் கிளரும் திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 8

சென்று உருளும் கதிர்இரண்டும் விசும்பில் வைத்தார்;
திசைபத்தும் இரு நிலத்தில் திருந்த வைத்தார்;
நின்றுஅருளி அடி அமரர் வணங்க வைத்தார்;
நிறை தவமும் மறை பொருளும் நிலவ வைத்தார்;
கொன்றுஅருளி, கொடுங் கூற்றம் நடுங்கி ஓட,
குரைகழல்சேவடி வைத்தார்; விடையும் வைத்தார்;
நன்று அருளும் திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 9

பாம்பு உரிஞ்சி, மதி கிடந்து, திரைகள் ஏங்க,
பனிக்கொன்றை சடை வைத்தார்; பணி செய் வானோர்
ஆம் பரிசு தமக்கு எல்லாம் அருளும் வைத்தார்;
அடு சுடலைப் பொடி வைத்தார்; அழகும் வைத்தார்;
ஓம்ப(அ)ரிய வல்வினைநோய் தீர வைத்தார்;
உமையை ஒருபால் வைத்தார்; உகந்து வானோர்,
நாம், பரவும் திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 10

குலம் கிளரும் வரு திரைகள்ஏழும் வைத்தார்;
குரு மணி சேர் மலை வைத்தார்; மலையைக் கையால்
உலம் கிளர எடுத்தவன் தோள் முடியும் நோவ
ஒருவிரலால் உற வைத்தார்; ''இறைவா!'' என்று
புலம்புதலும், அருளொடு போர் வாளும் வைத்தார்;
புகழ் வைத்தார்; புரிந்து ஆளாக் கொள்ள வைத்தார்;
நலம் கிளரும் திருவடி என் தலைமேல் வைத்தார்—
நல்லூர் எம்பெருமானார் நல்லஆறே! 11

திருக் கருகாவூர் VI-15 திருத் தாண்டகம்

குருகு ஆம்; வயிரம் ஆம்; கூறும் நாள் ஆம்;
கொள்ளும் கிழமை ஆம்; கோளேதான் ஆம்;
பருகா அமுதம் ஆம்; பாலின் நெய் ஆம்;
பழத்தின் இரதம் ஆம்; பாட்டின் பண் ஆம்;
ஒரு கால் உமையாள் ஓர்பாகனும்(ம்) ஆம்;
உள்-நின்ற நாவிற்கு உரையாடி(ய்) ஆம்;
கருஆய் உலகுக்கு முன்னே தோன்றும்
கண் ஆம்—கருகாவூர் எந்தைதானே. 1

வேதங்கள் வேள்வி பயந்தார்போலும்;
விண்ணுலகும் மண்ணுலகும் ஆனார்போலும்;
பூதங்கள்ஆய புராணர்போலும்;
புகழ வளர் ஒளிஆய் நின்றார்போலும்;
பாதம் பரவப்படுவார்போலும்;
பத்தர்களுக்கு இன்பம் பயந்தார்போலும்;
ஏதங்கள்ஆன கடிவார்போலும்—
இடைமருது மேவிய ஈசனாரே. 3

திண் குணத்தார் தேவர்கணங்கள் ஏத்தித்
திசை வணங்கச் சேவடியை வைத்தார்போலும்;
விண் குணத்தார் வேள்வி சிதைய நூறி,
வியன்கொண்டல்மேல் செல் விகிர்தர்போலும்;
பண் குணத்தார் பாடலோடு ஆடல் ஓவாப்
பரங்குன்றம் மேய பரமர்போலும்;
எண்குணத்தார்; எண்ணாயிரவர்போலும்—
இடைமருது மேவிய ஈசனாரே. 4

ஊகம் முகில் உரிஞ்சு சோலை சூழ்ந்த
உயர் பொழில் அண்ணாவில் உறைகின்றாரும்,
பாகம் பணிமொழியாள் பாங்கர்ஆகி,
படுவெண்தலையில் பலி கொள்வாரும்,
மாகம் அடை மும்மதிலும் எய்தார்தாமும்,
மணி பொழில் சூழ் ஆரூர் உறைகின்றாரும்,
ஏகம்பம் மேயாரும், எல்லாம் ஆவார்—
இடைமருது மேவிய ஈசனாரே. 5

ஐ-இரண்டும், ஆறுஒன்றும், ஆனார்போலும்;
அறு-மூன்றும், நால்-மூன்றும், ஆனார்போலும்;
செய் வினைகள் நல்வினைகள் ஆனார்போலும்;
திசைஅனைத்தும்ஆய் நிறைந்த செல்வர்போலும்;
கொய் மலர்அம்கொன்றைச் சடையார்போலும்;
கூத்துஆட வல்ல குழகர்போலும்;
எய்ய வந்த காமனையும் காய்ந்தார்போலும்—
இடைமருது மேவிய ஈசனாரே. 6

பிரியாத குணம் உயிர்கட்கு அஞ்சோடுஅஞ்சுஆய்,
பிரிவு உடைய குணம் பேசில் பத்தோடுஒன்றுஆய்,
விரியாத குணம் ஒரு கால் நான்கே என்பர்;
விரிவு இலாக் குணம் நாட்டத்து ஆறே என்பர்;
தெரிவுஆய குணம்அஞ்சும் சமிதைஅஞ்சும்
பதம்அஞ்சும் கதிஅஞ்சும் செப்பினாரும்,
எரி ஆய தாமரைமேல் இயங்கினாரும்—
இடைமருது மேவிய ஈசனாரே. 7

தோலின் பொலிந்த உடையார்போலும்;
சுடர் வாய் அரவு அசைத்த சோதிபோலும்;
ஆலம் அமுதுஆக உண்டார்போலும்;
அடியார்கட்கு ஆர் அமுதம் ஆனார்போலும்;
காலனையும் காய்ந்த கழலார்போலும்;
கயிலாயம் தம் இடமாக் கொண்டார்போலும்;
ஏலம் கமழ்குழலாள் பாகர்போலும்—
இடைமருது மேவிய ஈசனாரே. 8

பைந்தளிர்க் கொன்றைஅம்தாரார்போலும்;
    படைக்கணாள் பாகம் உடையார்போலும்;
அந்திவாய் வண்ணத்து அழகர்போலும்;
    அணி நீலகண்டம் உடையார்போலும்;
வந்த வரவும் செலவும் ஆகி,
    மாறாது என் உள்ளத்து இருந்தார்போலும்;
எம்தம் இடர் தீர்க்க வல்லார்போலும்—
    இடைமருது மேவிய ஈசனாரே. 9

கொன்றை அம் கூவிளமாலைதன்னைக்
    குளிர்சடைமேல் வைத்து உகந்த கொள்கையாரும்,
நின்ற அனங்கனை நீறு நோக்கி
    நெருப்பு உருவம்ஆய் நின்ற நிமலனாரும்,
அன்று அ(வ்)அரக்கன் அலறி வீழ
    அரு வரையைக் காலால் அழுத்தினாரும்,
என்றும் இடு பிச்சை ஏற்று உண்பாரும்—
    இடைமருது மேவிய ஈசனாரே. 10

திரு இடைமருது VI-17 திருத் தாண்டகம்

ஆறு சடைக்கு அணிவர்; அங்கைத் தீயர்;
    அழகர்; படை உடையர்; அம் பொன்-தோள்மேல்
நீறு தடவந்து, இடபம் ஏறி,
    நித்தம் பலி கொள்வர்; மொய்த்த பூதம்
கூறும் குணம் உடையர்; கோவணத்தர்;
    கோள் தால வேடத்தர்; கொள்கை சொல்லின்,
ஈறும் நடுவும் முதலும் ஆவார்—
    இடைமருது மேவி இடம்கொண்டாரே. 1

மங்குல் மதி வைப்பர்; வானநாடர்;
    மடமான் இடம் உடையர்; மாதராளைப்
பங்கில் மிக வைப்பர்; பால் போல் நீற்றர்;
    பளிக்குவடம் புனைவர்; பாவநாசர்;
சங்கு திரை உகளும் சாய்க்காடு ஆள்வர்;
    சரிதைபல உடையர்; தன்மை சொல்லின்,
எங்கும் பலி திரிவர்; என் உள் நீங்கார்—
    இடைமருது மேவி இடம்கொண்டாரே. 2

ஆலநிழல் இருப்பர்; ஆகாயத்தர்;
    அரு வரையின் உச்சியர்; ஆணார்; பெண்ணார்;
காலம்பல கழித்தார்; கறை சேர் கண்டர்;
    கருத்துக்குச் சேயார், தாம், காணாதார்க்கு;
கோலம்பல உடையர்; கொல்லை ஏற்றர்;
    கொடுமழுவர்; கோழம்பம் மேய ஈசர்;
ஏலம் மணம் நாறும் ஈங்கோய் நீங்கார்—
    இடைமருது மேவி இடம்கொண்டாரே. 3

தேசர்; திறம் நினைவார் சிந்தை சேரும்
    செல்வர்; திரு ஆரூர் என்றும் உள்ளார்;
வாசம், மலரின்கண்; மான்தோல் போர்ப்பர்;
    மருவும் கரிஉரியர்; வஞ்சக் கள்வர்;
நேசர், அடைந்தார்க்கு; அடையாதார்க்கு
    நிட்டுரவர்; கட்டங்கர்; நினைவார்க்கு என்றும்
ஈசர்; புனல் பொன்னித்தீர்த்தர்—வாய்த்த
    இடைமருது மேவி இடம்கொண்டாரே. 4

கரப்பர், கரிய மனக் கள்வர்க்கு; உள்ளம்
கரவாதே தம் நினையகிற்பார் பாவம்
துரப்பர்; தொடு கடலின் நஞ்சம் உண்பர்;
தூய மறைமொழியர்; தீயால் ஒட்டி
நிரப்பர் புரம்மூன்றும் நீறு செய்வர்;
நீள்சடையர்; பாய்விடை கொண்டு எங்கும் ஐயம்
இரப்பர்; எமை ஆள்வர்; என் உள் நீங்கார்—
இடைமருது மேவி இடம்கொண்டாரே. 5

கொடி ஆர் இடபத்தர்; கூத்தும் ஆடி,
குளிர்கொன்றை மேல் வைப்பர்; கோலம் ஆர்ந்த
பொடி ஆரும் மேனியர்; பூதிப் பையர்;
புலித்தோலர்; பொங்கு அரவர்; பூணநூலர்;
அடியார் குடி ஆவர்; அந்தணாளர்
ஆகுதியின் மந்திரத்தார்; அமரர் போற்ற
இடி ஆர் களிற்று உரியர்—எவரும் போற்ற
இடைமருது மேவி இடம்கொண்டாரே. 6

பச்சைநிறம் உடையர்; பாலர்; சாலப்
பழையர்; பிழைஎல்லாம் நீக்கி ஆள்வர்;
கச்சைக் கதம்நாகம் பூண்ட தோளர்;
கலன் ஒன்று கை ஏந்தி, இல்லம்தோறும்
பிச்சை கொள நுகர்வர்; பெரியர், சால;
பிறங்கு சடைமுடியர்; பேணும் தொண்டர்
இச்சை மிக அறிவர்; என்றும் உள்ளார்—
இடைமருது மேவி இடம்கொண்டாரே. 7

கா ஆர் சடைமுடியர்; காரோணத்தர்;
கயிலாயம் மன்னினார்; பன்னும் இன்சொல்
பா ஆர் பொருளாளர்; வாள் ஆர் கண்ணி
பயிலும் திருஉருவம் பாகம் மேயார்;
பூ ஆர் புனல் அணவு புன்கூர் வாழ்வர்;
புரம்மூன்றும் ஒள்அழலாக் காயத் தொட்ட
ஏ ஆர் சிலைமலையர்; எங்கும், தாமே;—
இடைமருது மேவி இடம்கொண்டாரே. 8

புரிந்தார், நடத்தின்கண்; பூதநாதர்;
பொழில் ஆரூர் புக்கு உறைவர்; போந்து தம்மில்
பிரிந்து ஆர் அகல் வாய பேயும் தாமும்
பிரியார், ஒருநாளும்; பேணு காட்டில்
எரிந்தார் அனல்,—உகப்பர்,—ஏழில் ஓசை;
எவ்இடத்தும் தாமே என்று ஏத்துவார்பால்
இருந்தார்—இமையவர்கள் போற்ற என்றும்
இடைமருது மேவி இடம்கொண்டாரே. 9

விட்டு இலங்கு மா மழுவர்; வேலைநஞ்சர்;
விடங்கர்; விரிபுனல் சூழ் வெண்காட்டு உள்ளார்;
மட்டு இலங்கு தார்-மாலை மார்பில் நீற்றர்;
மழபாடியுள் உறைவர்; மாகாளத்தர்;
சிட்டு இலங்கு வல்அரக்கர்கோனை அன்று
செழு முடியும் தோள்ஐந்-நான்கு அடரக் காலால்
இட்டு இரங்கி மற்று அவனுக்கு ஈந்தார், வென்றி;—
இடைமருது மேவி இடம்கொண்டாரே. 10

திருப் பூவணம் VI-18 திருத் தாண்டகம்

வடி ஏறு திரிசூலம் தோன்றும்தோன்றும்;
 வளர்சடைமேல் இளமதியம் தோன்றும்தோன்றும்;
கடி ஏறு கமழ்கொன்றைக்கண்ணி தோன்றும்;
 காதில் வெண்குழைதோடு கலந்து தோன்றும்;
இடி ஏறு களிற்று உரிவைப்போர்வை தோன்றும்;
 எழில் திகழும் திருமுடியும் இலங்கித் தோன்றும்;
பொடி ஏறு திருமேனி பொலிந்து தோன்றும்—
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 1

ஆண்ஆகிப் பெண்ஆய வடிவு தோன்றும்;
 அடியவர்கட்கு ஆர் அமுதம் ஆகித் தோன்றும்;
ஊண்ஆகி ஊர் திரிவான் ஆகித் தோன்றும்;
 ஒற்றை வெண்பிறை தோன்றும்; பற்றார்தம்மேல்
சேண் நாக வரைவில்லால் எரித்தல் தோன்றும்;
 செத்தவர்தம் எலும்பினால் செறியச் செய்த
பூண் நாணும் அரைநாணும் பொலிந்து தோன்றும்—
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 2

கல்லாலின்நீழலில் கலந்து தோன்றும்
 கவின் மறையோர்நால்வர்க்கும் நெறிகள் அன்று
சொல்ஆகச் சொல்லியவா தோன்றும்தோன்றும்;
 சூழ் அரவும், மான்மறியும், தோன்றும்தோன்றும்;
அல்லாத காலனை முன் அடர்த்தல் தோன்றும்;
 ஐவகையால் நினைவார்பால் அமர்ந்து தோன்றும்;
பொல்லாத புலால் எலும்பு பூண்ஆய்த் தோன்றும்—
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 3

படை மலிந்த மழுவாளும் மானும் தோன்றும்;
 பன்னிரண்டுகண் உடைய பிள்ளை தோன்றும்;
நடை மலிந்த விடையோடு கொடியும் தோன்றும்;
 நால்மறையின் ஒலி தோன்றும்; நயனம் தோன்றும்;
உடை மலிந்த கோவணமும் கீளும் தோன்றும்;
 ஊரல் வெண்சிரமாலை உலாவித் தோன்றும்;
புடை மலிந்த பூதத்தின் பொலிவு தோன்றும்—
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 4

மயல் ஆகும் தன் அடியார்க்கு அருளும் தோன்றும்;
 மாசு இலாப் புன்சடைமேல் மதியம் தோன்றும்;
இயல்புஆக இடு பிச்சை ஏற்றல் தோன்றும்;
 இருங்கடல்நஞ்சு உண்டு இருண்ட கண்டம் தோன்றும்;
கயல் பாயக் கடுங் கலுழிக் கங்கைநங்கை
 ஆயிரம்ஆம் முகத்தினொடு வானில்-தோன்றும்
புயல் பாயச் சடை விரித்த பொற்புத் தோன்றும்—
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 5

பார்ஆழிவட்டத்தார் பரவி இட்ட
 பல்மலரும், நறும்புகையும், பரந்து தோன்றும்;
சீர் ஆழித் தாமரையின்மலர்கள் அன்ன
 திருந்திய மா நிறத்த சேவடிகள் தோன்றும்;
ஓர் ஆழித் தேர் உடைய இலங்கை வேந்தன்
 உடல் துணித்த இடர் பாவம் கெடுப்பித்து, அன்று,
போர் ஆழி முன் ஈந்த பொற்புத் தோன்றும்—
 பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 6

தன் அடியார்க்கு அருள்புரிந்த தகவு தோன்றும்;
சதுர்முகனைத் தலை அரிந்த தன்மை தோன்றும்;
மின் அனைய நுண்இடையாள் பாகம் தோன்றும்;
வேழத்தின்உரி விரும்பிப் போர்த்தல் தோன்றும்;
துன்னிய செஞ்சடைமேல் ஓர் புனலும் பாம்பும்
தூய மா மதிஉடனே வைத்தல் தோன்றும்;
பொன் அனைய திருமேனி பொலிந்து தோன்றும்—
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 7

செறி கழலும் திருவடியும் தோன்றும்தோன்றும்;
திரிபுரத்தை எரிசெய்த சிலையும் தோன்றும்;
நெறிஅதனை விரித்து உரைத்த நேர்மை தோன்றும்;
நெற்றிமேல் கண் தோன்றும்; பெற்றம் தோன்றும்;
மறுபிறவி அறுத்துஅருளும் வகையும் தோன்றும்;
மலைமகளும் சலமகளும் மலிந்து தோன்றும்;
பொறிஅரவும் இளமதியும் பொலிந்து தோன்றும்—
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 8

அருப்பு ஓட்டு முலை மடவாள் பாகம் தோன்றும்;
அணி கிளரும் உரும் என்ன அடர்க்கும் கேழல்-
மருப்பு ஓட்டு மணிவயிரக்கோவை தோன்றும்;
மணம் மலிந்த நடம் தோன்றும்; மணி ஆர் வைகைத்
திருக்கோட்டில் நின்றது ஓர் திறமும் தோன்றும்;
செக்கர்வான் ஒளி மிக்குத் திகழந்த சோதிப்
பொருப்பு ஓட்டி நின்ற திண்புயமும் தோன்றும்—
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 9

ஆங்கு அணைந்த சண்டிக்கும் அருளி, அன்று,
தன் முடிமேல் அலர்மாலை அளித்தல் தோன்றும்;
பாங்கு அணைந்து பணி செய்வார்க்கு அருளி, அன்று,
பலபிறவி அறுத்துஅருளும் பரிசு தோன்றும்;
கோங்கு அணைந்த கூவிளமும் மதமத்த(ம்)மும்
குழற்கு அணிந்த கொள்கையொடு கோலம் தோன்றும்;
பூங்கணை வேள் உரு அழித்த பொற்புத் தோன்றும்—
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 10

ஆர் உருவ உள்குவார் உள்ளத்துள்ளே
அவ் உருஆய் நிற்கின்ற அருளும் தோன்றும்;
வார் உருவப் பூண் முலை நல் மங்கைதன்னை
மகிழ்ந்து ஒருபால் வைத்து உகந்த வடிவும் தோன்றும்;
நீர்உருவக் கடல் இலங்கை அரக்கர்கோனை
நெறுநெறுஎன அடர்த்திட்ட நிலையும் தோன்றும்;
போர் உருவக் கூற்று உதைத்த பொற்புத் தோன்றும்—
பொழில் திகழும் பூவணத்து எம் புனிதனார்க்கே. 11

திரு ஆலவாய் VI-19 திருத் தாண்டகம்

முளைத்தானை, எல்லார்க்கும் முன்னே தோன்றி;
முதிரும் சடைமுடிமேல் முகிழ்வெண்திங்கள்
வளைத்தானை; வல்அசுரர் புரங்கள்மூன்றும்,
வரை சிலையா வாசுகி மா நாணுக் கோத்துத்
துளைத்தானை, சுடு சரத்தால் துவள நீரு;
தூ முத்தவெண்முறுவல் உமையோடு ஆடித்
திளைத்தானை;—தென்கூடல்-திரு ஆலவாஅய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 1

விண்ணுலகின் மேலார்கள் மேலான்தன்னை,
மேல் ஆடு புரம்மூன்றும் பொடிசெய்தானை,
பண் நிலவு பைம்பொழில் சூழ் பழனத்தானை,
பசும்பொன்னின் நிறத்தானை, பால்நீற்றானை,
உள்-நிலவு சடைக்கற்றைக் கங்கையாளைக்
கரந்து உமையோடு உடன்ஆகி இருந்தான்தன்னை,—
தெள்-நிலவு தென்கூடல்-திரு ஆலவாய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 2

நீர்த்திரளை நீள்சடைமேல் நிறைவித்தானை,
நிலம் மருவி நீர் ஓடக் கண்டான்தன்னை,
பால்-திரளைப் பயின்று ஆட வல்லான்தன்னை,
பகைத்து எழுந்த வெங் கூற்றைப் பாய்ந்தான்தன்னை,
கால்-திரள்ஆய் மேகத்தினுள்ளே நின்று
கடுங் குரல்ஆய் இடிப்பானை, கண் ஓர் நெற்றித்
தீத்திரளை,—தென்கூடல்-திரு ஆலவாய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 3

வானம், இது, எல்லாம் உடையான்தன்னை;
வரிஅரவக்கச்சானை; வன்பேய் சூழக்
கானம்அதில் நடம்ஆட வல்லான்தன்னை,
கடைக்கண்ணால் மங்கையையும் நோக்கா; என்மேல்
ஊனம்அதுஎல்லாம் ஒழித்தான்தன்னை;
உணர்வுஆகி அடியேனது உள்ளே நின்ற
தேன்அமுதை;—தென்கூடல்-திரு ஆலவாய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 4

ஊரானை, உலகுஏழ்ஆய் நின்றான்தன்னை,
ஒற்றை வெண்பிறையானை, உமையோடு என்றும்
பேரானை, பிறர்க்கு என்றும் அரியான்தன்னை,
பிணக்காட்டில் நடம்ஆடல் பேயோடு என்றும்
ஆரானை, அமரர்களுக்கு அமுது ஈந்தானை,
அருமறையால் நான்முகனும் மாலும் போற்றும்
சீரானை,—தென்கூடல்-திரு ஆலவாய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 5

மூவனை, மூர்த்தியை, மூவா மேனி
உடையானை, மூஉலகும் தானே எங்கும்
பாவனை, பாவம் அறுப்பான்தன்னை,
படி எழுதல் ஆகாத மங்கையோடும்
மேவனை, விண்ணோர் நடுங்கக் கண்டு
விரிகடலின் நஞ்சு உண்டு அமுதம் ஈந்த
தேவனை,—தென்கூடல்-திரு ஆலவாய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 6

துறந்தார்க்குத் தூ நெறிஆய் நின்றான்தன்னை,
துன்பம் துடைத்து ஆள வல்லான்தன்னை,
இறந்தார்கள் என்பே அணிந்தான்தன்னை,
எல்லி நடம்ஆட வல்லான்தன்னை,
மறந்தார் மதில்மூன்றும் மாய்த்தான்தன்னை,
மற்று ஒரு பற்று இல்லா அடியேற்கு என்றும்
சிறந்தானை,—தென்கூடல்-திருஆலவாய்ச் 7
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே.

வாயானை, மனத்தானை, மனத்துள் நின்ற
கருத்தானை, கருத்து அறிந்து முடிப்பான்தன்னை,
தூயானை, தூ வெள்ளைஏற்றான்தன்னை,
சுடர்த் திங்கள் சடையானை, தொடர்ந்து நின்ற என்
தாயானை, தவம்ஆய தன்மையானை,
தலைஆய தேவாதிதேவர்க்கு என்றும்
சேயானை,—தென்கூடல்-திரு ஆலவாஅய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 8

பகைச் சுடர்ஆய்ப் பாவம் அறுப்பான்தன்னை,
பழிஇலியாய் நஞ்சம் உண்டு அமுது ஈந்தானை,
வகைச் சுடர்ஆய் வல்அசுரர் புரம் அட்டானை,
வளைவுஇலியாய் எல்லார்க்கும் அருள்செய்வானை,
மிகைச் சுடரை, விண்ணவர்கள்மேல் அப்பாலை,
மேல்ஆய தேவாதிதேவர்க்கு என்றும்
திகைச் சுடரை,—தென்கூடல்-திரு ஆலவாஅய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 9

மலையானை, மா மேரு மன்னினானை,
வளர்புன்சடையானை, வானோர்தங்கள்
தலையானை, என் தலையின் உச்சி என்றும்
தாபித்து இருந்தானை, தானே எங்கும்
துலை ஆக ஒருவரையும் இல்லாதானை,
தோன்றாதார் மதில்மூன்றும் துவள எய்த
சிலையானை,—தென்கூடல்-திரு ஆலவாஅய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 10

தூர்த்தனைத் தோள் முடிபத்து இறுத்தான்தன்னை,
தொல்-நரம்பின் இன்இசை கேட்டு அருள்செய்தானை,
பார்த்தனைப் பணி கண்டு பரிந்தான்தன்னை,
பரிந்து அவற்குப் பாசுபதம் ஈந்தான்தன்னை,
ஆத்தனை, அடியேனுக்கு அன்பன்தன்னை,
அளவு இலாப் பல்ஊழி கண்டு நின்ற
தீர்த்தனை,—தென்கூடல்-திரு ஆலவாஅய்ச்
சிவன் அடியே சிந்திக்கப்பெற்றேன், நானே. 11

திரு நள்ளாறு VI-20 திருத் தாண்டகம்

ஆதிக்கண்ணான் முகத்தில் ஒன்று சென்று(வ்)
அல்லாத சொல் உரைக்கத் தன் கை வாளால்
சேதித்த திருவடியை, செல்ல நல்ல
சிவலோகநெறி வகுத்துக் காட்டுவானை,
மா மதியை, மாது ஓர்கூறுஆயினானை,
மா மலர்மேல் அயனோடு மாலும் காணா
நாதியை, நம்பியை, நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 1

படையானை, பாசுபதவேடத்தானை,
பண்டு அனங்கற் பார்த்தானை, பாவம்எல்லாம்
அடையாமைக் காப்பானை, அடியார்தங்கள்
அருமருந்தை, ‘‘ஆவா!’’ என்று அருள்செய்வானை,
சடையானை, சந்திரனைத் தரித்தான்தன்னை,
சங்கத்த முத்து அனைய வெள்ளைஏற்றின்
நடையானை, நம்பியை, நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 2

பட அரவம் ஒன்று கொண்டு அரையில் ஆர்த்த
பராபரனை, பைஞ்ஞீலி மேவினானை,
அடல் அரவம் பற்றிக் கடைந்த நஞ்சை
அமுதுஆக உண்டானை, ஆதியானை,
மடல் அரவம் மன்னு பூங்கொன்றையானை,
மாமணியை, மாணிக்குஆய்க் காலன்தன்னை
நடல் அரவம் செய்தானை, நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 3

கட்டங்கம் ஒன்று தம் கையில் ஏந்தி,
கங்கணமும் காதில் விடு தோடும் இட்டு,
சுட்ட(அ)ங்கம் கொண்டு துதையப் பூசி,
சுந்தரனாய்ச் சூலம் கை ஏந்தினானை;
பட்ட(அ)ங்கமாலை நிறையச் சூடி,
பல்கணமும் தாமும் பரந்த காட்டில்
நட்டங்கம் ஆடியை, நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 4

உலந்தார்தம் அங்கம் கொண்டு உலகம்எல்லாம்
ஒரு நொடியில் உழல்வானை, உலப்பு இல் செல்வம்
சிலந்திதனக்கு அருள்செய்த தேவதேவை,
திருச் சிராப்பள்ளி எம் சிவலோக(ன்)னை,
கலந்தார்தம் மனத்து என்றும் காதலானை,
கச்சி ஏகம்பனை, கமழ்பூங்கொன்றை
நலம் தாங்கும் நம்பியை, நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 5

குலம் கொடுத்துக் கோள் நீக்க வல்லான்தன்னை,
குலவரையின் மடப்பாவை இடப்பாலானை,
மலம் கெடுத்து மா தீர்த்தம்ஆட்டிக் கொண்ட
மறையவனை, பிறை தவழ் செஞ்சடையினானை,
சலம் கெடுத்துத் தயாமூலதன்மம் என்னும்
தத்துவத்தின்வழி நின்று தாழ்ந்தோர்க்கு எல்லாம்
நலம் கொடுக்கும் நம்பியை, நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 6

பூ விரியும் மலர்க்கொன்றைச் சடையினானை,
புறம்பயத்து எம்பெருமானை, புகலூரானை,
மா இரியக் களிறு உரித்த மைந்தன்தன்னை,
மறைக்காடும் வலிவலமும் மன்னினானை,
தே இரியத் திகழ் தக்கன் வேள்விஎல்லாம்
சிதைத்தானை, உதைத்து அவன்தன் சிரம் கொண்டானை,
நா விரிய மறை நவின்ற நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 7

சொல்லானை, சுடர்ப் பவளச்சோதியானை,
தொல் அவுணர் புரம்மூன்றும் எரியச் செற்ற
வில்லானை, எல்லார்க்கும் மேல்ஆனானை,
மெல்லியலாள் பாகனை, வேதம்நான்கும்
கல்லாலின் நீழல்கீழ் அறம் கண்டானை,
காளத்தியானை, கயிலை மேய
நல்லானை, நம்பியை, நள்ளாற்றானை,— 8
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே!

குன்றாத மா முனிவன் சாபம் நீங்கக்
குரைகழலால் கூற்றுவனைக் குமைத்த கோனை,
அன்றாக அவுணர் புரம்மூன்றும் வேவ
ஆர்அழல்வாய் ஓட்டி அடர்வித்தானை,
சென்று ஆது வேண்டிற்று ஒன்று ஈவான்தன்னை,
''சிவன் எம்பெருமான்'' என்று இருப்பார்க்கு என்றும்
நன்றுஆகும் நம்பியை, நள்ளாற்றானை,—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 9

''இறவாதே வரம் பெற்றேன்'' என்று மிக்க
இராவணனை இருபதுதோள் நெரிய ஊன்றி,
உறவுஆகி, இன்இசை கேட்டு, இரங்கி, மீண்டே
உற்ற பிணி தவிர்த்து, அருள வல்லான்தன்னை;
மறவாதார் மனத்து என்றும் மன்னினானை;
மா மதியம், மலர்க்கொன்றை, வன்னி, மத்தம்,
நறவு, ஆர் செஞ்சடையானை; நள்ளாற்றானை;—
நான்அடியேன் நினைக்கப்பெற்று உய்ந்தஆறே! 10

திரு ஆக்கூர்த் தான்தோன்றிமாடம் VI-21 திருத் தாண்டகம்

முடித் தாமரை அணிந்த மூர்த்திபோலும்;
மூஉலகும் தாம்ஆகி நின்றார்போலும்;
கடித்தாமரை ஏய்ந்த கண்ணார்போலும்;
கல்லலகு பாணி பயின்றார்போலும்;
கொடித்தாமரைக்காடே நாடும் தொண்டர்
குற்றேவல் தாம் மகிழ்ந்த குழகர்போலும்;
அடித்தாமரைமலர் மேல் வைத்தார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 1

ஓதிற்று ஒரு நூலும் இல்லைபோலும்;
உணரப்படாதது ஒன்று இல்லைபோலும்;
காதில் குழை இலங்கப் பெய்தார்போலும்;
கவலை, பிறப்பு, இடும்பை, காப்பார்போலும்;
வேதத்தோடு ஆறுஅங்கம் சொன்னார்போலும்;
விடம் சூழ்ந்து இருண்ட மிடற்றார்போலும்;
ஆதிக்கு அளவுஆகி நின்றார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 2

மை ஆர் மலர்க்கண்ணாள் பாகர்போலும்:
மணிநீலகண்டம் உடையார்போலும்;
நெய் ஆர் திரிசூலம் கையார்போலும்;
நீறு ஏறு தோள்எட்டு உடையார்போலும்;
வை ஆர் மழுவாள்படையார்போலும்;
வளர் ஞாயிறு அன்ன ஒளியார்போலும்;
ஐவாய் அரவம் ஒன்று ஆர்த்தார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 3

வடி விளங்கு வெண்மழுவாள் வல்லார்போலும்;
வஞ்சக் கருங்கடல்நஞ்சு உண்டார்போலும்;
பொடி விளங்கு முந்நூல் சேர் மார்பர்போலும்;
பூங் கங்கை தோய்ந்த சடையார்போலும்;
கடி விளங்கு கொன்றைஅம்தாரார்போலும்;
கட்டங்கம் ஏந்திய கையார்போலும்;
அடி விளங்கு செம்பொன்கழலார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 4

ஏகாசம் ஆம் புலித்தோல் பாம்பு தாழ,
இடு வெண்தலை கலனா ஏந்தி, நாளும்
மேகாசம் கட்டழித்த வெள்ளிமாலை
புனல் ஆர் சடைமுடிமேல் புனைந்தார்போலும்;
மா காசம் ஆய வெண்நீரும், தீயும்,
மதியும், மதி பிறந்த விண்ணும், மண்ணும்,
ஆகாசம், என்று இவையும் ஆனார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 5

மாது ஊரும் வாள்நெடுங்கண், செவ்வாய், மென்தோள்,
மலைமகளை மார்பத்து அணைத்தார்போலும்;
மூதூர், முதுதிரைகள், ஆனார்போலும்;
முதலும் இறுதியும் இல்லார்போலும்;
தீது ஊரா நல்வினைஆய் நின்றார்போலும்;
திசைஎட்டும் தாமே ஆம் செல்வர்போலும்;
ஆதிரைநாள்ஆய் அமர்ந்தார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 6

மால்யானை மத்தகத்தைக் கீண்டார்போலும்;
மான்தோல் உடையா மகிழ்ந்தார்போலும்;
கோலானைக் கோ அழலால் காய்ந்தார்போலும்;
குழவிப்பிறை சடைமேல் வைத்தார்போலும்;
காலனைக் காலால் கடந்தார்போலும்;
கயிலாயம் தம் இடமாக் கொண்டார்போலும்;
ஆல், ஆன்ஐந்துஆடல், உகப்பார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 7

கண் ஆர்ந்த நெற்றி உடையார்போலும்;
காமனையும் கண்அழலால் காய்ந்தார்போலும்;
உண்ணா அருநஞ்சம் உண்டார்போலும்;
ஊழித்தீ அன்ன ஒளியார்போலும்;
எண்ணாயிரம்கோடிபேரார்போலும்;
ஏறு ஏறிச் செல்லும் இறைவர்போலும்;
அண்ணாவும், ஆரூரும், மேயார்போலும்—
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே. 8

கடி ஆர் தளிர் கலந்த கொன்றைமாலை,
கதிர் போது, தாது அணிந்த கண்ணிபோலும்;
நெடியானும் சதுமுகனும் நேட நின்ற,
நீலநல்கண்டத்து, இறையார்போலும்;
படி ஏல் அழல்வண்ணம் செம்பொன்மேனி,
மணிவண்ணம், தம் வண்ணம் ஆவார்போலும்;
அடியார் புகல்இடம்அது ஆனார்போலும்— 9
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே.

திரையானும் செந்தாமரைமேலானும்
தேர்ந்து, அவர்கள்தாம் தேடிக் காணார், நாணும்
புரையான் எனப்படுவார் தாமேபோலும்;
போர் ஏறு தாம் ஏறிச் செல்வார்போலும்;
கரையா வரை வில், ஏ, நாகம் நாணா,
காலத்தீ அன்ன கனலார்போலும்;
வரை ஆர் மதில் எய்த வண்ணர்போலும்— 10
ஆக்கூரில்-தான்தோன்றிஅப்பனாரே.

திரு நாகைக்காரோணம் VI-22 திருத் தாண்டகம்

பாரார் பரவும் பழனத்தானை,
பருப்பதத்தானை, பைஞ்ஞீலியானை,
சீரார் செழும் பவளக்குன்று ஒப்பானை,
திகழும் திருமுடிமேல்-திங்கள் சூடிப்
பேர்ஆயிரம் உடைய பெம்மான்தன்னை,
பிறர் தன்னைக் காட்சிக்கு அரியான்தன்னை,—
கார் ஆர் கடல் புடை சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 1

விண்ணோர்பெருமானை, வீரட்ட(ன்)னை,
வெண்நீறு மெய்க்கு அணிந்த மேனியானை,
பெண்ணானை, ஆணானை, பேடியானை,
பெரும்பற்றத்தண்புலியூர் பேணினானை,
அண்ணாமலையானை, ஆன்ஐந்துஆடும்
அணி ஆரூர் வீற்றிருந்த அம்மான்தன்னை,—
கண் ஆர் கடல் புடை சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 2

சிறை ஆர் வரிவண்டு தேனே பாடும்
திரு மறைக்காட்டு எந்தைசிவலோக(ன்)னை,
மறை ஆன்ற வாய்மூரும் கீழ்வேளூரும்
வலிவலமும் தேவூரும் மன்னி அங்கே
உறைவானை, உத்தமனை, ஒற்றியூரில்
பற்றி ஆள்கின்ற பரமன்தன்னை,—
கறை ஆர் கடல் புடை சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 3

அன்னம் ஆம் பொய்கை சூழ் அம்பரானை,
ஆச்சிராம(ந்) நகரும் ஆனைக்காவும்
முன்னமே கோயிலாக் கொண்டான்தன்னை,
மூஉலகும் தான் ஆய மூர்த்திதன்னை,
சின்னம் ஆம் பல்மலர்கள் அன்றே சூடிச்
செஞ்சடைமேல் வெண்மதியம் சேர்த்தினானை,—
கன்னிஅம்புன்னை சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 4

நடை உடைய நல் எருது ஒன்று ஊர்வான்தன்னை;
ஞானப்பெருங்கடலை; நல்லூர் மேய,
படை உடைய மழுவாள் ஒன்று ஏந்தினானை;
பன்மையே பேசும் படிறன்தன்னை;
மடைஇடையே வாளை உகளும் பொய்கை
மருகல்வாய்ச் சோதி மணிகண்ட(ன்)னை;—
கடை உடைய நெடுமாடம் ஓங்கு நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 5

புலம் கொள் பூந் தேறல் வாய்ப் புகலிக் கோனை;
பூம்புகார்க் கற்பகத்தை; புன்கூர் மேய,
அலங்கல் அம் கழனி சூழ் அணி நீர்க் கங்கை
அவிர்சடைமேல் ஆதரித்த, அம்மான்தன்னை;
இலங்கு தலைமாலை பாம்பு கொண்டே,
ஏகாசம் இட்டு இயங்கும் ஈசன்தன்னை;—
கலங்கல் கடல் புடை சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 6

பொன் மணி அம் பூங்கொன்றைமாலையானை,
புண்ணியனை, வெண்நீறு பூசினானை,
சில்மணிய மூஇலையசூலத்தானை,
தென் சிராப்பள்ளிச் சிவலோக(ன்)னை,
மன் மணியை, வான் சுடலை ஊராப் பேணி
வல் எருது ஒன்று ஏறும் மறைவல்லானை,—
கல் மணிகள் வெண்திரை சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 7

வெண்தலையும் வெண்மழுவும் ஏந்தினானை,
விரி கோவணம் அசைத்த வெண்நீற்றானை,
புண் தலைய மால்யானை உரி போர்த்தானை,
புண்ணியனை, வெண்நீறு அணிந்தான்தன்னை,
எண்திசையும் எரிஆட வல்லான்தன்னை,
ஏகம்பம் மேயானை, எம்மான்தன்னை,—
கண்டல் அம் கழனி சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 8

சொல் ஆர்ந்த சோற்றுத்துறையான்தன்னை;
தொல்-நரகம் நன்நெறியால்-தூர்ப்பான்தன்னை;
வில்லானை; மீயச்சூர் மேவினானை;
வேதியர்கள்நால்வர்க்கும் வேதம் சொல்லி,
பொல்லாதார்தம் அரணம்மூன்றும் பொன்ற,
பொறிஅரவம் மார்பு ஆரப் பூண்டான்தன்னை;
கல்லாலின்கீழானை;—கழி சூழ் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 9

மனை துறந்த வல்அமணர்தங்கள் பொய்யும்,
மாண்பு உரைக்கும் மனக் குண்டர்தங்கள் பொய்யும்,
சினை பொதிந்த சீவரத்தர்தங்கள் பொய்யும்,
மெய் என்று கருதாதே, போத,—நெஞ்சே!—
பனைஉரியைத் தன் உடலில் போர்த்த எந்தை-
அவன் பற்றே பற்றுஆகக் காணின்அல்லால்,
கனைகடலின் தெண்கழி சூழ் அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே? 10

நெடியானும் மலரவனும் நேடி ஆங்கே
நேர் உருவம் காணாமே சென்று நின்ற
படியானை, பாம்புரமே காதலானை,
பாம்பு அரையோடு ஆர்த்த படிறன்தன்னை,
செடி நாறும் வெண்தலையில் பிச்சைக்கு என்று
சென்றானை, நின்றியூர் மேயான்தன்னை,—
கடி நாறு பூஞ்சோலை அம் தண் நாகைக்-
காரோணத்து எஞ்ஞான்றும் காணல் ஆமே. 11

திரு மறைக்காடு VI-23 திருத் தாண்டகம்

தூண்டு சுடர் அனைய சோதிகண்டாய்;
தொல்அமரர் சூளாமணிதான்கண்டாய்;
காண்டற்கு அரிய கடவுள்கண்டாய்;
கருதுவார்க்கு ஆற்ற எளியான்கண்டாய்;
வேண்டுவார் வேண்டுவதே ஈவான்கண்டாய்;
மெய்ந்நெறிகண்டாய்; விரதம்எல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான்கண்டாய்—
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 1

கை கிளரும் வீணை வலவன்கண்டாய்;
காபாலிகண்டாய்; திகழும் சோதி
மெய் கிளரும் ஞானவிளக்குக்கண்டாய்;
மெய்அடியார் உள்ளத்து வித்துக்கண்டாய்;
பை கிளரும் நாகம் அசைத்தான்கண்டாய்;
பராபரன்கண்டாய்; பாசூரான்கண்டாய்;
வை கிளரும் கூர்வாள்படையான்கண்டாய்—
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 2

சிலந்திக்கு அருள் முன்னம் செய்தான்கண்டாய்;
திரிபுரங்கள் தீவாய்ப் படுத்தான்கண்டாய்;
நிலம், துக்கம், நீர், வளி, தீ, ஆனான்கண்டாய்;
நிரூபியாய் ரூபியும்ஆய் நின்றான்கண்டாய்;
சலம் துக்க சென்னிச் சடையான்கண்டாய்;
தாமரையான், செங்கண் மால், தானேகண்டாய்;
மலம் துக்க மால்விடை ஒன்று ஊர்ந்தான்கண்டாய்—
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 3

கள்ளி முதுகாட்டில் ஆடிகண்டாய்;
காலனையும் காலால் கடந்தான்கண்டாய்;
புள்ளிஉழைமானின்தோலான்கண்டாய்;
புலிஉரி சேர் ஆடைப் புனிதன் கண்டாய்;
வெள்ளிமிளிர் பிறை முடிமேல் சூடிகண்டாய்;
வெண்நீற்றான்கண்டாய்; நம் செந்தில் மேய
வள்ளிமணாளற்குத் தாதைகண்டாய்—
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 4

மூரி முழங்கு ஒலிநீர் ஆனான்கண்டாய்;
முழுத்தழல் போல் மேனி முதல்வன்கண்டாய்;
ஏரி நிறைந்தனைய செல்வன்கண்டாய்;
இன் அடியார்க்கு இன்பம் விளைப்பான்கண்டாய்;
ஆரியன்கண்டாய்; தமிழன்கண்டாய்;
அண்ணாமலை உறையும் அண்ணல்கண்டாய்;
வாரி மதகளிறே போல்வான்கண்டாய்—
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 5

ஆடல் மால்யானை உரித்தான்கண்டாய்;
அகத்தியான்பள்ளி அமர்ந்தான்கண்டாய்;
கோடியான்கண்டாய்; குழகன்கண்டாய்;
குளிர் ஆரூர் கோயிலாக் கொண்டான்கண்டாய்;
நாடிய நன்பொருள்கள் ஆனான்கண்டாய்;
நன்மையோடு இம்மை மற்று அம்மைஎல்லாம்
வாடிய வாட்டம் தவிர்ப்பான்கண்டாய்—
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 6

வேலை சேர் நஞ்சம் மிடற்றான்கண்டாய்;
விண் தடவு பூங் கயிலைவெற்பன்கண்டாய்;
ஆலை சேர் வேள்வி அழித்தான்கண்டாய்;
அமரர்கள்தாம் ஏத்தும் அண்ணல்கண்டாய்;
பால் நெய் சேர் ஆன்அஞ்சும்ஆடிகண்டாய்;
பருப்பதத்தான்கண்டாய்; பரவைமேனி
மாலை ஓர்கூறு உடைய மைந்தன்கண்டாய்—
மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 7

அம்மை பயக்கும் அமிர்துகண்டாய்;
　அம் தேன்தெளிகண்டாய்; ஆக்கம் செய்திட்டு
இம்மை பயக்கும் இறைவன்கண்டாய்;
　என் நெஞ்சே! உன்ளில் இனியான்கண்டாய்;
மெய்ம்மையே ஞானவிளக்குக்கண்டாய்;
　வெண்காடன்கண்டாய்; வினைகள் போக
மம்மர் அறுக்கும் மருந்துகண்டாய்—
　மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 8

மூலநோய் தீர்க்கும் முதல்வன்கண்டாய்;
　முத்தமிழும் நால்மறையும் ஆனான்கண்டாய்;
ஆலின்கீழ் நால்வர்க்கு அறத்தான்கண்டாய்;
　ஆதியும் அந்தமும் ஆனான்கண்டாய்;
பாலவிருத்தனும் ஆனான்கண்டாய்;
　பவளத்தடவரையே போல்வான்கண்டாய்;
மாலை சேர் கொன்றை மலிந்தான்கண்டாய்—
　மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 9

அயன்அவனும் மால்அவனும் அறியா வண்ணம்,
　ஆர்அழல்ஆய் நீண்டு, உகந்த அண்ணல்கண்டாய்;
துயர் இலங்கை வேந்தன் துளங்க, அன்று,
　சோதி விரலால் உற வைத்தான்கண்டாய்;
பெயர(அ)வற்குப் பேர்அருள்கள்செய்தான்கண்டாய்;
　பேரும், பெரும் படையோடு, ஈந்தான்கண்டாய்;
மயர் உறு வல்வினைநோய் தீர்ப்பான்கண்டாய்—
　மறைக்காட்டு உறையும் மணாளன்தானே. 10

திரு ஆரூர்　VI-24　திருத் தாண்டகம்

கைம் மான மதகளிற்றின் உரிவையான்காண்;
　கறைக்கண்டன்காண்; கண் ஆர் நெற்றியான்காண்;
அம்மான்காண்; ஆடுஅரவு ஒன்று ஆட்டினான்காண்;
　அனல்ஆடிகாண்; அயில்வாய்ச்சூலத்தான்காண்;
எம்மான்காண்; ஏழ்உலகும் ஆயினான்காண்;
　எரிசுடரோன்காண்; இலங்கும் மழுவாளன்காண்;
செம் மானத்து ஒளி அன்ன மேனியான்காண்—
　திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 1

ஊன் ஏறு படுதலையில் உண்டியான்காண்;
　ஓங்காரன்காண்; ஊழி முதல்ஆனான்காண்;
ஆன்ஏறு ஒன்று ஊர்ந்து உழலும் ஐயாறன்காண்;
　அண்டன்காண்; அண்டத்துக்கு அப்பாலன்காண்;
மான் ஏறு கரதலத்து எம் மணிகண்டன்காண்;
　மா தவன்காண்; மா தவத்தின் விளைவுஆனான்காண்;
தேன் ஏறும் மலர்க்கொன்றைக்கண்ணியான்காண்—
　திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 2

ஏ வணத்த சிலையால் முப்புரம் எய்தான்காண்;
　இறையவன்காண்; மறையவன்காண்; ஈசன்தான்காண்;
தூ வணத்த சுடர்ச் சூலப்படையினான்காண்;
　சுடர்மூன்றும் கண்மூன்றாக் கொண்டான்தான்காண்;
ஆவணத்தால் என்தன்னை ஆட்கொண்டான்காண்;
　அனல்ஆடிகாண்; அடியார்க்கு அமிர்துஆனான்காண்;
தீவணத்த திருஉருவின் கரிஉருவன்காண்--
　திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 3

கொங்கு வார் மலர்க்கண்ணிக் குற்றாலன்காண்;
 கொடுமழுவன்காண்; கொல்லைவெள்ஏற்றான்காண்;
எங்கள்பால்-துயர் கெடுக்கும் எம்பிரான்காண்;
 ஏழ்கடலும் ஏழ்மலையும் ஆயினான்காண்;
பொங்கு மா கருங்கடல்நஞ்சு உண்டான் தான்காண்;
 பொன்-தூண் காண்; செம்பவளத்திரள் போல்வான்காண்;
செங்கண் வாள்அரா, மதியோடு உடன்வைத்தான்காண்—
 திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 4

கார் ஏறு நெடுங்குடுமிக் கயிலாயன்காண்;
 கறைக்கண்டன்காண்; கண் ஆர் நெற்றியான்காண்;
போர் ஏறு நெடுங்கொடி மேல் உயர்த்தினான்காண்;
 புண்ணியன்காண்; எண்ண(அ)ரும் பல்குணத்தினான்காண்;
நீர் ஏறு சுடர்ச் சூலப்படையினான்காண்;
 நின்மலன்காண்; நிகர்ஏதும் இல்லாதான்காண்;
சீர் ஏறு திருமால் ஓர்பாகத்தான்காண்—
 திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 5

பிறை அரவக்குறுங்கண்ணிச் சடையினான்காண்;
 பிறப்புஇலிகாண்; பெண்ணோடு ஆண்ஆயினான்காண்;
கறை உருவ மணிமிடற்று வெண்நீற்றான்காண்;
 கழல் தொழுவார் பிறப்பு அறுக்கும் காபாலிகாண்;
இறை உருவக் கனவளையாள் இடப்பாகன்காண்;
 இரு நிலன்காண்; இரு நிலத்துக்கு இயல்பு ஆனான்காண்;
சிறை உருவக் களி வண்டு ஆர் செம்மையான்காண்—
 திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 6

தலை உருவச் சிரமாலை சூடினான்காண்;
 தமர்உலகம் தலை கலனாப் பலி கொள்வான்காண்;
அலை உருவச் சுடர் ஆழி ஆக்கினான்காண்;
 அவ் ஆழி நெடுமாலுக்கு அருளினான்காண்;
கொலை உருவக் கூற்று உதைத்த கொள்கையான்காண்;
 கூர் எரி நீர் மண்ணொடு காற்று ஆயினான்காண்;
சிலை உருவச் சரம் துரந்த திறத்தினான்காண்—
 திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 7

ஐயன்காண், குமரன்காண், ஆதியான்காண்;
 அடல் மழுவாள் தான் ஒன்று பியல்மேல் ஏந்து
கையன்காண்; கடல்பூதப்படையினான்காண்;
 கண்எரியால் ஐங்கணையோன் உடல் காய்ந்தான்காண்;
வெய்யன்காண்; தண்புனல் சூழ் செஞ்சடையான்காண்;
 வெண்நீற்றான்காண்; விசயற்கு அருள்செய்தான்காண்;
செய்யன்காண்; கரியன்காண்; வெளியோன் தான்காண்—
 திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 8

மலை வளர்த்த மடமங்கை பாகத்தான்காண்;
 மயானத்தான்காண்; மதியம் சூடினான்காண்;
இலை வளர்த்த மலர்க்கொன்றைமாலையான்காண்;
 இறையவன்காண்; எறிதிரைநீர்நஞ்சு உண்டான்காண்;
கொலை வளர்த்த மூஇலையசூலத்தான்காண்;
 கொடுங்குன்றன்காண்; கொல்லைஏற்றினான்காண்;
சிலை வளர்த்த சரம் துரந்த திறத்தினான்காண்—
 திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 9

பொன்-தாது மலர்க்கொன்றை சூடினான்காண்;
புரிநூலன்காண்; பொடி ஆர் மேனியான்காண்;
மற்று ஆரும் தன் ஒப்பார் இல்லாதான்காண்;
மறைஓதிகாண்; எறிநீர்நஞ்சு உண்டான்காண்;
எற்றாலும் குறைவு ஒன்றும் இல்லாதான்காண்;
இறையவன்காண்; மறையவன்காண்; ஈசன் தான்காண்;
செற்றார்கள் புரம்மூன்றும் செற்றான் தான்காண்—
திரு ஆரூரான்காண், என் சிந்தையானே. 10

திரு ஆரூர் VI-25 திருத் தாண்டகம்

உயிரா வணம் இருந்து, உற்று நோக்கி,
உள்ளக்கிழியின் உரு எழுதி,
உயிர் ஆவணம் செய்திட்டு, உன் கைத் தந்தால்,
உணரப்படுவாரோடு ஒட்டி, வாழ்தி;
அயிராவணம் ஏறாது, ஆன்ஏறு ஏறி,
அமரர்நாடு ஆளாதே, ஆரூர் ஆண்ட
அயிராவணமே! என் அம்மானே! நின்
அருள் கண்ணால் நோக்காதார் அல்லாதாரே. 1

எழுது கொடிஇடையார், ஏழை மென்தோள்
இளையார்கள், நம்மை இகழாமுன்னம்
பழுதுபட நினையேல், பாவிநெஞ்சே!
பண்டுதான் என்னோடு பகைதான் உண்டோ?
முழுதுஉலகில் வானவர்கள் முற்றம் கூடி,
முடியால் உற வணங்கி, முற்றம் பற்றி,
அழுது, திருவடிக்கே பூசை செய்ய
இருக்கின்றான் ஊர்போலும், ஆரூர்தானே. 2

தேரூரார்; மாவூரார்; திங்களூரார்;
திகழ்புன்சடைமுடிமேல்-திங்கள்சூடி;
கார் ஊராநின்ற கழனிச் சாயல்
கண் ஆர்ந்த நெடுமாடம் கலந்து தோன்றும்
ஓர்ஊரா உலகுஎலாம் ஒப்பக் கூடி,
''உமையாள்மணவாளா!'' என்று வாழ்த்தி,
''ஆரூரா! ஆரூரா!'' என்கின்றார்கள்;
அமரர்கள்தம் பெருமானே! எங்கு உற்றாயே? 3

கோவணமோ, தோலோ, உடை ஆவது?
கொல் ஏறோ, வேழமோ, ஊர்வதுதான்?
பூவணமோ, புறம்பயமோ, அன்றுஆயில்-தான்
பொருந்தார்தார் வாழ்க்கை திருந்தாமையோ?
தீ வணத்த செஞ்சடைமேல்-திங்கள் சூடி,
திசைநான்கும் வைத்து உகந்த செந்தீவண்ணர்,
ஆவணமோ, ஒற்றியோ, அம்மானார்தாம்—
அறியேன் மற்று—ஊர் ஆம்ஆறு ஆரூர்தானே? 4

ஏந்து மழுவாளர்; இன்னம்பராஅர்;
எரிபவளவண்ணர்; குடமூக்கி(ல்)லார்;
வாய்ந்த வளைக்கையாள் பாகம்ஆக
வார்சடையார்; வந்து வலஞ்சுழி(ய்)யார்;
போந்தார், அடிகள் புறம்பயத்தே;
புகலூர்க்கே போயினார்; போர் ஏறு ஏறி;
ஆய்ந்தே இருப்பார் போய், ஆரூர் புக்கார்; 5
அண்ணலார் செய்கின்ற கண் மாய(ம்)மே!

கரு ஆகி, குழம்பி(இ)ருந்து, கலித்து, மூளைக்
 கரு நரம்பும் வெள்எலும்பும் சேர்ந்து ஒன்றுஆகி,
உருஆகிப் புறப்பட்டு, இங்கு ஒருத்திதன்னால்
 வளர்க்கப்பட்டு, உயிராரும் கடைபோகாரால்;
மருவுஆகி, நின் அடியே, மறவேன்; அம்மான்!
 மறித்து ஒரு கால் பிறப்பு உண்டேல், மறவா வண்ணம்,—
திரு ஆரூர் மணவாளா! திருத் தெங்கூராய்!
 செம்பொன் ஏகம்பனே!—திகைத்திட்டேனே. 6

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்;
 மூர்த்திஅவன் இருக்கும் வண்ணம் கேட்டாள்;
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்;
 பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்;
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்;
 அகன்றாள், அகலிடத்தார் ஆசாரத்தை;
தன்னை மறந்தாள்; தன் நாமம் கெட்டாள்;
 தலைப்பட்டாள், நங்கை தலைவன்தாளே! 7

ஆடுவாய், நீ நட்டம்; அளவின் குன்றா
 அவி அடுவார், அருமறையோர்; அறிந்தேன், உன்னை;
பாடுவார், தும்புருவும் நாரதாதி;
 பரவுவார், அமரர்களும் அமரர்கோனும்;
தேடுவார், திருமாலும் நான்முக(ன்)னும்;
 தீண்டுவார், மலைமகளும் கங்கையாளும்;
கூடுமே, நாய்அடியேன் செய் குற்றேவல்?
 குறை உண்டே, திரு ஆரூர் குடிகொண்டீர்க்கே? 8

நீர் ஊரும் செஞ்சடையாய்! நெற்றிக்கண்ணாய்!
 நிலாத்திங்கள்-துண்டத்தாய்! நின்னைத் தேடி,
ஓர் ஊரும் ஒழியாமே ஒற்றித்து எங்கும்
 உலகம்எலாம் திரிதந்து, நின்னைக் காண்பான்,
தேர் ஊரும் நெடுவீதி பற்றி நின்று,
 திருமாலும் நான்முகனும், தேர்ந்தும் காணாது,
''ஆரூரா! ஆரூரா!'' என்கின்றார்கள்—
 அமரர்கள்தம் பெருமானே! ஆரூராயே! 9

நல்லூரே நன்றுஆக நட்டம்இட்டு,
 நரைஏற்றைப் பழையாறே பாய ஏறி,
பல்ஊரும் பலிதிரிந்து, சேற்றூர்மீதே,—
 பலர் காண.— தலையாலங்காட்டின்ஊடே,
இல் ஆர்ந்த பெருவேளூர்த் தளியே பேணி,
 இராப் பட்டீச்சுரம் கடந்து மணக்கால் புக்கு(வ்),
எல் ஆரும் தளிச்சாத்தங்குடியில் காண,
 இறைப்பொழுதில் திரு ஆரூர் புக்கார் தாமே. 10

கருத்துத்திக்கதநாகம் கையில் ஏந்தி,
 கருவரை போல் களியானை கதறக் கையால்
உரித்து எடுத்துச் சிவந்து, அதன் தோல் பொருந்த மூடி,
 உமையவளை அச்சுறுத்தும் ஒளி கொள் மேனி,
திருத் துருத்தி திருப் பழனம் திரு நெய்த்தானம்
 திரு ஐயாறு இடம்கொண்ட, செல்வர்; இந்நாள்
அரிப் பெருத்த வெள்ஏற்றை அடர ஏறி,
 அப்பனார், இப் பருவம் ஆரூராரே. 11

திரு ஆரூர்

VI-26

திருத் தாண்டகம்

பாதித் தன் திருஉருவில் பெண் கொண்டானை,
பண்டு ஒரு கால் தசமுகனை அழுவித்தானை,
வாதித்துத் தட மலரான் சிரம் கொண்டானை,
வன் கருப்புச்சிலைக் காமன் உடல் அட்டானை,
சோதிச் சந்திரன் மேனி மறுச் செய்தானை,
சுடர்அங்கித்தேவனை ஓர் கை கொண்டானை,
ஆதித்தன் பல் கொண்ட அம்மான்தன்னை,—
ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்தஆறே! 1

வெற்பு உறுத்த திருவடியால் கூற்று அட்டானை;
விளக்கின் ஒளி, மின்னின் ஒளி, முத்தின் சோதி,
ஒப்பு உறுத்த திருஉருவத்து ஒருவன்தன்னை;
ஓதாதே வேதம் உணர்ந்தான்தன்னை;
அப்பு உறுத்த கடல் நஞ்சம் உண்டான்தன்னை,
அமுதுஉண்டார் உலந்தாலும் உலவாதானை—
அப்பு உறுத்த நீர்அகத்தே அழல் ஆனானை;—
ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்தஆறே! 2

ஒரு காலத்து ஒரு தேவர் கண் கொண்டானை,
ஊழிதோறு ஊழி உயர்ந்தான்தன்னை,
வருகாலம் செல்காலம் ஆயினானை,
வன் கருப்புச்சிலைக் காமன் உடல் அட்டானை,
பொரு வேழக்-களிற்று உரிவைப்போர்வையானை,
புள்அரையன் உடல்தன்னைப் பொடிசெய்தானை,
அரு வேள்வி தகர்த்து எச்சன் தலை கொண்டானை,—
ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்தஆறே! 3

மெய்ப் பால்வெண்நீறு அணிந்த மேனியானை,
வெண்பளிங்கின் உடல் பதித்த சோதியானை,
ஒப்பானை, ஒப்பு இலா ஒருவன்தன்னை,
உத்தமனை, நித்திலத்தை, உலகம்எல்லாம்
வைப்பானை, களைவானை, வருவிப்பானை,
வல்வினையேன் மனத்துஅகத்தே மன்னினானை,
அப்பாலைக்கு அப்பாலைக்கு அப்பாலானை,—
ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்தஆறே! 4

பிண்டத்தில் பிறந்தது ஒரு பொருளை; மற்றைப்
பிண்டத்தைப் படைத்தானை; பெரிய வேதத்-
துண்டத்தில்-துணிபொருளை; சுடுதீஆகி,
சுழல் கால்ஆய், நீர்ஆகி, பார்ஆய், இற்றைக்
கண்டத்தில்-தீதின் நஞ்சு அமுதுசெய்து
கண்மூன்று படைத்தது ஒரு கரும்பை; பாலை;
அண்டத்துக்கு அப் புறத்தார்தமக்கு வித்தை;—
ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்தஆறே! 5

நீதிஆய், நிலன்ஆகி, நெருப்புஆய், நீர்ஆய்,
நிறை கால்ஆய், இவையிற்றின் நியமம்ஆகி,
பாதிஆய், ஒன்றுஆகி, இரண்டுஆய், மூன்றுஆய்,
பரமாணுஆய், பழுத்த பண்கள்ஆகி,
சோதிஆய், இருள்ஆகி, சுவைகள்ஆகி.
சுவை கலந்த அப்பால்ஆய், வீடுஆய், வீட்டின்
ஆதிஆய் அந்தம்ஆய், நின்றான்தன்னை—
ஆரூரில் கண்டு அடியேன் அயர்த்தஆறே! 6

திரு ஆரூர் VI-27 திருத் தாண்டகம்

பொய்ம் மாயப்பெருங்கடலில் புலம்பாநின்ற
புண்ணியங்காள்! தீவினைகாள்! திருவே! நீங்கள்
இம் மாயப்பெருங்கடலை அரித்துத் தின்பீர்க்கு
இல்லையே, கிடந்ததுதான்; யானேல், வானோர்
தம்மானை, தலைமகனை, தண் நல் ஆரூர்த்
தடங்கடலை, தொடர்ந்தோரை அடங்கச் செய்யும்
எம்மான்தன் அடித் தொடர்வான் உழிதர்கின்றேன்;
இடையிலேன்; கெடுவீர்காள்! இடறேன்மி(ன்)னே! 1

ஐம்பெருமாபூதங்காள்! ஒருவீர் வேண்டிற்று
ஒருவீர் வேண்டீர்! ஈண்டு இவ் அவனிஎல்லாம்
உம் பரமே உம் வசமே ஆக்க வல்லீர்க்கு
இல்லையே, நுகர் போகம்; யானேல், வானோர்
உம்பரும்ஆய் ஊழியும்ஆய் உலகுஏழ்ஆகி
ஒள் ஆரூர் நள் அமிர்துஆம் வள்ளல், வானோர்-
தம் பெருமானாய் நின்ற அரனை, காண்பேன்;
தடைப்படுவேனாக் கருதித் தருக்கேன்மி(ன்)னே! 2

சில்உருவில் குறி இருத்தி, நித்தல் பற்றி,
செழுங் கணால் நோக்கும்இது ஊகம் அன்று;
பல்உருவில்-தொழில் பூண்ட பஞ்சபூதப்-
பளகீர்! உம் வசம் அன்றே! யானேல், எல்லாம்
சொல் உருவின் சுடர்மூன்றுஆய், உருவம்மூன்றுஆய்,
தூ நயனம்மூன்றுஆகி, ஆண்ட ஆரூர்
நல் உருவில் சிவன் அடியே அடைவேன்; நும்மால்
நமைப்புண்ணேன்; கமைத்து நீர் நடமின்க(ள்)ளே! 3

உன் உருவின் சுவை ஒளி ஊறு ஓசை நாற்றத்து
உறுப்பினது குறிப்பு ஆகும் ஐவீர்! நுங்கள்
மன் உருவத்து இயற்கைகளால் சுவைப்பீர்க்கு, ஐயோ!
வையகமே போதாதே; யானேல், வானோர்
பொன்உருவை, தென்ஆரூர் மன்னு குன்றை,
புவிக்கு எழில்ஆம் சிவக்கொழுந்தை, புகுந்து என் சிந்தை
தன் உருவைத் தந்தவனை, எந்தைதன்னை,
தலைப்படுவேன்; துலைப் படுப்பான் தருக்கேன்மி(ன்)னே! 4

துப்பினை முன் பற்று அரு விறலே! மிக்க
சோர்வு படு சூட்சியமே! சுகமே! நீங்கள்
ஒப்பனையைப் பாவித்து இவ் உலகம்எல்லாம்
உழறும்இது குறை முடிப்பீர்க்கு அரிதே; என்தன்
வைப்பினை, பொன் மதில் ஆரூர் மணியை, வைகல்
மணாளனை, எம்பெருமானை, வானோர்தங்கள்
அப்பனை, செப்பட அடைவேன்; நும்மால் நானும்
ஆட்டுணேன்; ஓட்டந்து, ஈங்கு அலையேன்மி(ன்)னே; 5

பொங்கு மதமானமே! ஆர்வச்செற்றக்-
குரோதமே! உலோபமே! பொறையே! நீங்கள்
உங்கள் பெரு மா நிலத்தின் எல்லைஎல்லாம்
உழறும்இது குறை முடிப்பீர்க்கு அரிதே? யானேல்,
அம் கமலத்து அயனொடு மால்ஆகி, மற்றும்
அதற்கு அப்பால் ஒன்றுஆகி, அறிய ஒண்ணாச்
செங்கனகத் தனிக் குன்றை, சிவனை, ஆரூர்ச்
செல்வனை, சேர்வேன்; நும்மால் செலுத்துணேனே! 6

இடர், பாவம்என, மிக்க துக்க, வேட்கை,
வெறுப்பே, என்று அனைவீரும் உலகை ஓடிக்
குடைகின்றீர்க்கு உலகங்கள் குலுங்கி நுங்கள்
குறி நின்றது அமையாதே? யானேல், வானோர்-
அடையார்தம் புரம்மூன்றும் எரிசெய்தானை,
அமரர்கள்தம் பெருமானை, அரனை, ஆரூர்
உடையானை, கடுகச் சென்று அடைவேன்; நும்மால்
ஆட்டுணேன்; ஓட்டந்து ஈங்கு அலையேன்மி(ன்)னே! 7

விரைந்து ஆளும் நல்குரவே! செல்வே! பொல்லா
வெகுட்சியே! மகிழ்ச்சியே! வெறுப்பே! நீங்கள்
நிரந்து ஓடி மா நிலத்தை அரித்துத் தின்பீர்க்கு
இல்லையே, நுகர் போகம்? யானேல், வானோர்
கரைந்து ஓட வரு நஞ்சை அமுதுசெய்த
கற்பகத்தை, தற்பரத்தை, திரு ஆரூரில்
பரஞ்சோதிதனை, காண்பேன்; படேன், நும் பண்பில்;
பரிந்து ஓடி ஓட்டந்து பகட்டேன்மி(ன்)னே! 8

மூள்வுஆய தொழில் பஞ்சேந்திரியவஞ்ச-
முகரிகாள்! முழுதும் இவ் உலகை ஓடி
நாள்வாயும் நும்முடைய மம்மர் ஆணை
நடாத்துகின்றீர்க்கு அமையாதே? யானேல், வானோர்
நீள் வானமுகடுஅதனைத் தாங்கி நின்ற
நெடுந்தூணை, பாதாளக் கருவை, ஆரூர்
ஆள்வானை, கடுகச் சென்று அடைவேன்; நும்மால்
ஆட்டுணேன்; ஓட்டந்து ஈங்கு அலையேன்மி(ன்)னே! 9

சுருக்கமொடு, பெருக்கம், நிலைநிற்றல், பற்றித்
துப்பறை என்று அனைவீர்! இவ் உல்கை ஓடிச்
செருக்கி மிகை செலுத்தி உம செய்கை வைகல்
செய்கின்றீர்க்கு அமையாதே? யானேல், மிக்க,
தருக்கி மிக வரை எடுத்த, அரக்கன் ஆகம்
தளர அடி எடுத்து அவன்தன் பாடல் கேட்டு(வ்)
இரக்கம் எழுந்து அருளிய எம்பெருமான் பாதத்து
இடையிலேன்; கெடுவீர்காள்! இடறேன்மி(ன்)னே! 10

திரு ஆரூர் VI-28 திருத் தாண்டகம்

நீற்றினையும் நெற்றிமேல் இட்டார்போலும்;
நீங்காமே வெள்எலும்பு பூண்டார்போலும்;
காற்றினையும் கடிதுஆக நடந்தார்போலும்;
கண்ணின்மேல் கண் ஒன்று உடையார்போலும்;
கூற்றினையும் குரைகழலால் உதைத்தார்போலும்;
கொல் புலித் தோல்ஆடைக் குழகர்போலும்;
ஆற்றினையும் செஞ்சடைமேல் வைத்தார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 1

பரியது ஓர் பாம்பு அரைமேல் ஆர்த்தார்போலும்;
பாசுபதம் பார்த்தற்கு அளித்தார்போலும்;
கரியது ஓர் களிற்றுஉரிவை போர்த்தார்போலும்;
காபாலம் கட்டங்கக் கொடியார்போலும்;
பெரியது ஓர் மலை வில்லா எய்தார்போலும்;
பேர் நந்தி என்னும் பெயரார்போலும்;
அரியது ஓர் அரணங்கள் அட்டார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 2

துணிஉடையர், தோல்உடையர், என்பார்போலும்;
தூய திருமேனிச் செல்வர்போலும்;
பிணி உடைய அடியாரைத் தீர்ப்பார்போலும்;
பேசுவார்க்கு எல்லாம் பெரியார்போலும்;
மணி உடைய மா நாகம் ஆர்ப்பார்போலும்;
வாசுகி மா நாணாக வைத்தார்போலும்;
அணி உடைய நெடுவீதி நடப்பார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 3

ஓட்டுஅகத்தே ஊண் ஆக உகந்தார்போலும்;
ஓர் உருஆய்த் தோன்றி உயர்ந்தார்போலும்;
நாட்டுஅகத்தே நடைபலவும் நவின்றார்போலும்;
ஞானப்பெருங்கடற்கு ஓர் நாதர்போலும்;
காட்டுஅகத்தே ஆடல் உடையார்போலும்;
காமரங்கள் பாடித் திரிவார்போலும்;
ஆட்டுஅகத்தில் ஆன்ஐந்து உகந்தார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 4

ஏனத்து இள மருப்புப் பூண்டார்போலும்;
இமையவர்கள் ஏத்த இருந்தார்போலும்;
கானக் கல்லால்கீழ் நிழலார்போலும்;
கடல்நஞ்சம் உண்டு இருண்ட கண்டர்போலும்;
வானத்து இளமதி சேர் சடையார்போலும்;
வான் கயிலைவெற்பில் மகிழ்ந்தார்போலும்;
ஆனத்து முன்எழுத்துஆய் நின்றார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 5

காமனையும் கரி ஆகக் காய்ந்தார்போலும்;
கடல்நஞ்சம் உண்டு இருண்ட கண்டர்போலும்;
சோமனையும் செஞ்சடைமேல் வைத்தார்போலும்;
சொல்ஆகிச் சொல்பொருள்ஆய் நின்றார்போலும்;
நா மனையும் வேதத்தார் தாமேபோலும்;
நங்கை ஓர்பால் மகிழ்ந்த நம்பர்போலும்;
ஆ(ம்) மனையும் திருமுடியார் தாமேபோலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 6

முடி ஆர் மதி, அரவம், வைத்தார்போலும்;
மூஉலகும் தாமேஆய் நின்றார்போலும்;
செடி ஆர் தலைப் பலி கொண்டு உழல்வார்போலும்;
செல் கதிதான் கண்ட சிவனார்போலும்;
கடி ஆர் நஞ்சு உண்டு இருண்ட கண்டர்போலும்;
கங்காளவேடக் கருத்தர்போலும்;
அடியார் அடிமை உகப்பார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 7

இந்திரத்தை இனிதுஆக ஈந்தார்போலும்;
இமையவர்கள் வந்து இறைஞ்சும் இறைவர்போலும்;
சுந்தரத்த பொடிதன்னைத் துதைந்தார்போலும்;
தூத் தூய திருமேனித் தோன்றல்போலும்;
மந்திரத்தை மனத்துள்ளே வைத்தார்போலும்;
மா நாகம் நாண் ஆக, வளைத்தார்போலும்;
அம் திரத்தே அணியா நஞ்சு உண்டார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 8

பிண்டத்தைக் காக்கும் பிரானார்போலும்;
பிறவி, இறவி, இலாதார்போலும்;
முண்டத்து முக்கண் உடையார்போலும்;
முழுநீறு பூசும் முதல்வர்போலும்;
கண்டத்து இறையே கறுத்தார்போலும்;
காளத்தி, காரோணம், மேயார்போலும்;
அண்டத்துக்கு அப்புறம்ஆய் நின்றார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 9

ஒரு காலத்து ஒன்றுஆகி நின்றார்போலும்;
ஊழிபல கண்டு இருந்தார்போலும்;
பெருகாமே வெள்ளம் தவிர்த்தார்போலும்;
பிறப்பு, இடும்பை, சாக்காடு, ஒன்று இல்லார்போலும்;
உருகாதார் உள்ளத்து நில்லார்போலும்;
உகப்பார்தம் மனத்து என்றும் நீங்கார்போலும்;
அருகுஆக வந்து என்னை, ''அஞ்சல்!'' என்பார்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 10

நன்றாக நடைபலவும் நவின்றார்போலும்;
ஞானப்பெருங்கடற்கு ஓர் நாதர்போலும்;
கொன்றாகிக் கொன்றது ஒன்று உண்டார்போலும்;
கோள் அரக்கர்கோன் தலைகள் குறைத்தார்போலும்;
சென்று ஆர் திரிபுரங்கள் எய்தார்போலும்;
திசைஅனைத்தும்ஆய், அனைத்தும் ஆனார்போலும்;
அன்றுஆகில், ஆயிரம்பேரார்போலும்—
அணி ஆரூர்த் திரு மூலட்டானனாரே. 11

திரு ஆரூர் VI-29 திருத் தாண்டகம்

திருமணியை, தித்திக்கும் தேனை, பாலை,
தீம்கரும்பின் இன்சுவையை, தெளிந்த தேறல்,
குருமணியை, குழல் மொந்தை தாளம் வீணை
கொக்கரையின் சச்சரியின் பாணியானை,
பரு மணியை, பவளத்தை, பசும்பொன், முத்தை,
பருப்பதத்தில் அருங்கலத்தை, பாவம் தீர்க்கும்
அருமணியை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 1

பொன்னே போல்-திருமேனி உடையான்தன்னை,
பொங்கு வெண்நூலானை, புனிதன்தன்னை,
மின்னானை, மின்இடையாள் பாகன்தன்னை,
வேழத்தின்உரி விரும்பிப் போர்த்தான்தன்னை,
தன்னானை, தன் ஒப்பார் இல்லாதானை,
தத்துவனை, உத்தமனை, தழல் போல் மேனி
அன்னானை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 2

ஏற்றானை, ஏழ்உலகும் ஆனான்தன்னை,
ஏழ்கடலும் ஏழ்மலையும் ஆனான்தன்னை,
கூற்றானை, கூற்றம் உதைத்தான்தன்னை,
கொடுமழுவாள் கொண்டது ஓர் கையான்தன்னை,
காற்றானை, தீயானை, நீரும் ஆகி,
கடி கமழும் புன்சடைமேல் கங்கைவெள்ள-
ஆற்றானை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 3

முந்திய வல்வினைகள் தீர்ப்பான்தன்னை,
மூவாத மேனி முக்கண்ணினானை,
சந்திரனும் வெங்கதிரும் ஆயினானை,
சங்கரனை, சங்கக்குழையான்தன்னை,
மந்திரமும் மறைப்பொருளும் ஆனான்தன்னை,
மறுமையும் இம்மையும் ஆனான்தன்னை,
அம் திரனை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 4

பிற நெறிஆய், பீடுஆகி, பிஞ்ஞகனும்ஆய்,
பித்தனாய், பத்தர் மனத்தினுள்ளே
உற நெறிஆய், ஓமம்ஆய், ஈமக்காட்டில்,
ஓரிபல விட, நட்டம்ஆடினானை;
துறநெறிஆய், தூபம்ஆய், தோற்றம்ஆகி,
நாற்றம்ஆய், நல் மலர்மேல் உறையாநின்ற
அறநெறியை; ஆரூரில் அம்மான்தன்னை;—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 5

பழகிய வல்வினைகள் பாற்றுவானை,
பசுபதியை, பாவகனை, பாவம் தீர்க்கும்
குழகனை, கோள் அரவு ஒன்று ஆட்டுவானை,
கொடுகொட்டி கொண்டது ஓர் கையான்தன்னை,
விழவனை, வீரட்டம் மேவினானை,
விண்ணவர்கள் ஏத்தி விரும்புவானை,
அழகனை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 6

சூளாமணி சேர் முடியான்தன்னை,
சுண்ணவெண்நீறு அணிந்த சோதியானை,
கோள் வாய் அரவம் அசைத்தான்தன்னை,
கொல் புலித் தோல்ஆடைக் குழகன்தன்னை,
நாள்வாயும் பத்தர் மனத்து உளானை,
நம்பனை, நக்கனை, முக்கணானை,
ஆள்வானை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 7

முத்தினை, மணிதன்னை, மாணிக்கத்தை,
மூவாத கற்பகத்தின் கொழுந்துதன்னை,
கொத்தினை, வயிரத்தை, கொல் ஏறு ஊர்ந்து
கோள் அரவு ஒன்று ஆட்டும் குழகன்தன்னை,
பத்தனை, பத்தர் மனத்து உளானை,
பரிதி போல்-திருமேனி உடையான்தன்னை,
அத்தனை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 8

பைஆடுஅரவம் கை ஏந்தினானை,
பரிதி போல்-திருமேனிப் பால்நீற்றானை,
நெய்ஆடு திருமேனி நிமலன்தன்னை,
நெற்றிமேல் மற்றொரு கண் நிறைவித்தானை,
செய்யானை, செழும் பவளத்திரள் ஒப்பானை,
செஞ்சடைமேல் வெண்திங்கள் சேர்த்தினானை,
ஐயாறு மேயானை, ஆரூரானை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 9

சீர் ஆர் முடிபத்து உடையான்தன்னைத்
தேசு அழியத் திருவிரலால் சிதைய நூக்கிப்
பேர் ஆர் பெருமை கொடுத்தான்தன்னை,
பெண்இரண்டும் ஆணும்ஆய் நின்றான்தன்னை,
போர் ஆர் புரங்கள் புரள நூறும்
புண்ணியனை, வெண்நீறு அணிந்தான்தன்னை,
ஆரானை, ஆரூரில் அம்மான்தன்னை,—
அறியாது அடிநாயேன் அயர்த்தஆறே! 10

திரு ஆரூர் VI-30 திருத் தாண்டகம்

எம் பந்த வல்வினைநோய் தீர்த்திட்டான்காண்;
ஏழ்கடலும் ஏழ்உலகும் ஆயினான்காண்;
வம்பு உந்து கொன்றைஅம்தார்-மாலையான்காண்;
வளர்மதி சேர் கண்ணியன்காண்; வானோர் வேண்ட,
அம்பு ஒன்றால் மூஎயிலும் எரிசெய்தான்காண்;
அனல்ஆடி, ஆன்அஞ்சும்ஆடினான்காண்—
செம்பொன் செய் மணி மாடத் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 1

அக்கு உலாம் அரையினன்காண்; அடியார்க்கு என்றும்
ஆர் அமுதுஆய் அண்ணிக்கும் ஐயாற்றான்காண்;
கொக்கு, உலாம் பீலியொடு, கொன்றைமாலை,
குளிர்மதியும், கூர் அரவும், நீரும், சென்னித்
தொக்கு உலாம் சடையினன்காண்; தொண்டர் செல்லும்
தூநெறிகாண்—வானவர்கள் துதிசெய்து ஏத்தும்,
திக்குஎலாம் நிறைந்த புகழ்த் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 2

நீர் ஏறு சடைமுடி எம் நிமலன்தான்காண்;
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித்தான்கான்;
வார் ஏறு வனமுலையாள் பாகத்தான்காண்;
வளர்மதி சேர் சடையான்காண்; மாதேவன்காண்;
கார் ஏறு முகில் அனைய கண்டத்தான்காண்;
கல்லாலின்கீழ் அறங்கள் சொல்லினான்காண்—
சீர் ஏறு மணி மாடத் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 3

கான் ஏறு களிற்று உரிவைப்போர்வையான்காண்;
கற்பகம்காண்; காலனை அன்று உதைசெய்தான்காண்;
ஊன் ஏறும் உடைதலையில் பலி கொள்வான்காண்;
உத்தமன்காண்; ஒற்றியூர் மேவினான்காண்;
ஆன்ஏறு ஒன்றுஅது ஏறும் அண்ணல்தான்காண்;
ஆதித்தன் பல் இறுத்த ஆதிதான்காண்—
தேன் ஏறு மலர்ச்சோலைத் திரு ஆரூரில்- 4
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே.

பிறப்போடு இறப்பு என்றும் இல்லாதான்காண்;
பெண்உருவோடு ஆண்உருவம் ஆயினான்காண்;
மறப்படும் என் சிந்தை மருள் நீக்கினான்காண்;
வானவரும் அறியாத நெறி தந்தான்காண்—
நறப் படு பூ மலர், தூபம், தீபம், நல்ல
நறுஞ்சாந்தம், கொண்டு ஏத்தி நாளும் வானோர்
சிறப்போடு பூசிக்கும் திரு ஆரூரில்- 5
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே.

சங்கரன்காண்; சக்கரம் மாற்கு அருள்செய்தான்காண்;
தருணேந்துசேகரன்காண்; தலைவன்தான்காண்;
அம் கமலத்து அயன் சிரங்கள்ஐந்தில் ஒன்றை
அறுத்தவன்காண்; அணி பொழில் சூழ் ஐயாற்றான்காண்;
எங்கள் பெருமான்காண்; என் இடர்கள் போக
அருள்செய்யும் இறைவன்காண்—இமையோர் ஏத்தும்
செங்கமல வயல் புடை சூழ் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 6

நன்று அருளி, தீது அகற்றும் நம்பிரான்காண்;
நால்மறையோடு ஆறுஅங்கம் ஆயினான்காண்;
மின்திகழும் சோதியான்காண்; ஆதிதான்காண்;
வெள்ஏறு நின்று உலவு கொடியினான்காண்;
துன்று பொழில் கச்சி ஏகம்பன்தான்காண்;
சோற்றுத்துறையான்காண்—சோலை சூழ்ந்த
தென்றலால் மணம் கமழும் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 7

பொன் நலத்த நறுங்கொன்றைச் சடையினான்காண்;
புகலூரும் பூவணமும் பொருந்தினான்காண்;
மின் நலத்த நுண்இடையாள் பாகத்தான்காண்;
வேதியன்காண்; வெண்புரிநூல் மார்பினான்காண்;
கொல்-நலத்த மூஇலைவேல் ஏந்தினான்காண்;
கோலமா நீறு அணிந்த மேனியான்காண்—
செந் நலத்த வயல் புடை சூழ் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 8

விண்டவர்தம் புரம்மூன்றும் எரிசெய்தான்காண்;
வேலைவிடம் உண்டு இருண்ட கண்டத்தான்காண்;
மண்டலத்தில் ஒளி வளர விளங்கினான்காண்;
வாய்மூரும் மறைக்காடும் மருவினான்காண்;
புண்டரிகக்கண்ணனும், பூவின்மேலைப்
புத்தேளும், காண்பு அரிய புராணன்தான்காண்—
தெண்திரைநீர் வயல் புடை சூழ் திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 9

செரு வளரும் செங்கண் மால்ஏற்றினான்காண்;
தென்ஆனைக்காவன்காண்; தீயில் வீழ,
மருவலர்தம் புரம்மூன்றும் எரிசெய்தான்காண்;
வஞ்சகர்பால் அணுகாத மைந்தன்தான்காண்;
அரு வரையை எடுத்தவன்தன் சிரங்கள்பத்தும்,
ஐந்-நான்குதோளும், நெரிந்து அலற அன்று
திருவிரலால் அடர்த்தவன்காண்—திரு ஆரூரில்-
திரு மூலட்டானத்து எம் செல்வன்தானே. 10

திரு ஆரூர் VI-31 திருத் தாண்டகம்

இடர் கெடும்ஆறு எண்ணுதியேல், நெஞ்சே! நீ வா!
''ஈண்டு ஒளி சேர் கங்கைச் சடையாய்!'' என்றும்,
''சுடர்ஒளியாய்! உள் விளங்கு சோதீ!'' என்றும்,
''தூ நீறு சேர்ந்து இலங்கு தோளா!'' என்றும்,
''கடல்விடம்அது உண்டு இருண்ட கண்டா!'' என்றும்,
''கலைமான்மறி ஏந்து கையா!'' என்றும்,
''அடல் விடையாய்! ஆரமுதே! ஆதீ!'' என்றும், 1
''ஆரூரா!'' என்றுஎன்றே, அலறாநில்லே!

செடி ஏறு தீவினைகள் தீரும் வண்ணம்
சிந்தித்தே, நெஞ்சமே! திண்ணம்ஆகப்
''பொடி ஏறு திருமேனி உடையாய்!'' என்றும்,
''புரந்தரன்தன் தோள் துணித்த புனிதா!'' என்றும்,
''அடியேனை ஆள்ஆகக் கொண்டாய்!'' என்றும்,
''அம்மானே! ஆரூர் எம் அரசே!'' என்றும்,
''கடி நாறு பொழில் கச்சிக் கம்பா!'' என்றும்,
''கற்பகமே!'' என்றுஎன்றே, கதறாநில்லே! 2

நிலை பெறுமாறு எண்ணுதியேல், நெஞ்சே! நீ வா!
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு,
புலர்வதன் முன் அலகிட்டு, மெழுக்கும்இட்டு,
பூமாலை புனைந்து ஏத்தி, புகழ்ந்து பாடி,
தலை ஆரக் கும்பிட்டு, கூத்தும் ஆடி,
''சங்கரா, சய! போற்றிபோற்றி!'' என்றும்,
''அலை புனல் சேர் செஞ்சடை எம் ஆதீ!'' என்றும்,
''ஆரூரா!'' என்றுஎன்றே, அலறாநில்லே! 3

புண்ணியமும் நன்நெறியும் ஆவதுஎல்லாம்
நெஞ்சமே! இதுகண்டாய்; பொருந்தக் கேள், நீ:
''நுண்ணிய வெண்நூல் கிடந்த மார்பா!'' என்றும்,
''நுந்தாத ஒண்சுடரே!'' என்றும், ''நாளும்
விண் இயங்கு தேவர்களும் வேதம்நான்கும்
விரைமலர்மேல் நான்முகனும் மாலும் கூடி
எண்ண(அ)ரிய திருநாமம் உடையாய்!'' என்றும்,
''எழில் ஆரூரா!'' என்றே ஏத்தாநில்லே! 4

இழைத்த நாள் எல்லை கடப்பது அன்றால்;
இரவினொடு நண்பகலும் ஏத்தி வாழ்த்தி,
''பிழைத்ததுஎலாம் பொறுத்து அருள்செய் பெரியோய்!'' என்றும்,
''பிஞ்ஞகனே! மைஞ் ஞவிலும் கண்டா!'' என்றும்,
அழைத்து அலறி, ''அடியேன் உன் அரணம்கண்டாய்,
அணி ஆரூர் இடம்கொண்ட அழகா!'' என்றும்,
''குழல்சடை எம் கோன்!'' என்றும், கூறு, நெஞ்சே!
குற்றம் இல்லை, என்மேல்; நான் கூறினேனே. 5

நீப்ப(அ)ரிய பல்பிறவி நீக்கும் வண்ணம்
நினைந்திருந்தேன்காண்; நெஞ்சே! ''நித்தம்ஆகச்
சேப் பிரியா வெல் கொடியினானே!'' என்றும்,
''சிவலோகநெறி தந்த சிவனே!'' என்றும்,
'பூப் பிரியா நான்முகனும் புள்ளின்மேலைப்
புண்டரிகக்கண்ணானும், ''போற்றி!'' என்னத்
தீப்பிழம்புஆய் நின்றவனே! செல்வம் மல்கும்
திரு ஆரூரா!' என்றே சிந்தி, நெஞ்சே! 6

பற்றி நின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்,
பரகதிக்குச் செல்வது ஒரு பரிசு வேண்டில்,
சுற்றி நின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்,
சொல்லுகேன்; கேள்: நெஞ்சே, துஞ்சா வண்ணம்!
''உற்றவரும் உறு துணையும் நீயே'' என்றும்,
''உன்னை அல்லால் ஒரு தெய்வம் உள்கேன்'' என்றும்,
''புற்று அரவக் கச்சு ஆர்த்த புனிதா!'' என்றும், 7
''பொழில் ஆரூரா!'' என்றே, போற்றாநில்லே!

மதி தருவன், நெஞ்சமே, உஞ்சுபோக!
வழிஆவது இதுகண்டாய்; ''வானோர்க்கு எல்லாம்
அதிபதியே! ஆரமுதே! ஆதீ!'' என்றும்;
''அம்மானே! ஆரூர் எம் ஐயா!'' என்றும்;
துதிசெய்து துன்று மலர் கொண்டு தூவிச்
சூழும் வலம்செய்து தொண்டு பாடி,
''கதிர் மதி சேர் சென்னியனே! காலகாலா!
கற்பகமே!'' என்றுஎன்றே கதறுநில்லே! 8

பாசத்தைப் பற்றுஅறுக்கல் ஆகும்; நெஞ்சே!
''பரஞ்சோதீ! பண்டரங்கா! பாவநாசா!
தேசத்து ஒளி விளக்கே! தேவதேவே!
திரு ஆரூர்த் திருமூலட்டானா!'' என்றும்,
நேசத்தை நீ பெருக்கி நேர் நின்று உள்கி
நித்தலும் சென்று அடிமேல் வீழ்ந்து நின்று,
ஏசற்று நின்று, ''இமையோர்ஏறே!'' என்றும்,
''எம்பெருமான்!'' என்றுஎன்றே ஏத்தாநில்லே! 9

புலன்கள்ஐந்தால் ஆட்டுண்டு போது போக்கிப்
புறம்புறமே திரியாதே போது, நெஞ்சே!
''சலம் கொள் சடைமுடி உடைய தலைவா!'' என்றும்,
''தக்கன் செய் பெரு வேள்வி தகர்த்தாய்!'' என்றும்,
''இலங்கையர்கோன் சிரம் நெரித்த இறைவா!'' என்றும்,
''எழில் ஆரூர் இடம்கொண்ட எந்தாய்!'' என்றும்,
''நலம் கொள் அடி என் தலைமேல் வைத்தாய்!'' என்றும்,
நாள்தோறும் நவின்று ஏத்தாய்! நன்மை ஆமே. 10

திரு ஆரூர் VI-32 போற்றித் திருத் தாண்டகம்

கற்றவர்கள் உண்ணும் கனியே, போற்றி!
கழல் அடைந்தார் செல்லும் கதியே, போற்றி!
அற்றவர்கட்கு ஆர் அமுதம் ஆனாய், போற்றி!
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய், போற்றி!
மற்று ஒருவர் ஒப்பு இல்லா மைந்தா, போற்றி!
வானவர்கள் போற்றும் மருந்தே, போற்றி!
செற்றவர்தம் புரம் எரித்த சிவனே, போற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 1

வங்கம் மலி கடல் நஞ்சம் உண்டாய், போற்றி!
மதயானை ஈர்உரிவை போர்த்தாய், போற்றி!
கொங்கு அலரும் நறுங்கொன்றைத்தாராய், போற்றி!
கொல் புலித் தோல்ஆடைக் குழகா, போற்றி!
அங்கணனே, அமரர்கள்தம் இறைவா, போற்றி!
ஆலமரநீழல் அறம் சொன்னாய், போற்றி!
செங்கனகத் தனிக் குன்றே, சிவனே, போற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 2

மலையான்மடந்தைமணாளா, போற்றி!
மழவிடையாய்! நின் பாதம் போற்றிபோற்றி!
நிலைஆக என் நெஞ்சில் நின்றாய், போற்றி!
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய், போற்றி!
இலை ஆர்ந்த மூஇலைவேல் ஏந்தீ, போற்றி!
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய், போற்றி!
சிலையால் அன்று எயில் எரித்த சிவனே, போற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 3

பொன் இயலும் மேனியனே, போற்றிபோற்றி!
பூதப்படை உடையாய், போற்றிபோற்றி!
மன்னிய சீர் மறைநான்கும் ஆனாய், போற்றி!
மறி ஏந்து கையானே, போற்றிபோற்றி!
உன்னுமவர்க்கு உண்மையனே, போற்றிபோற்றி!
உலகுக்கு ஒருவனே, போற்றிபோற்றி!
சென்னிமிசை வெண்பிறையாய், போற்றிபோற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 4

நஞ்சு உடைய கண்டனே, போற்றிபோற்றி!
நல்-தவனே, நின் பாதம் போற்றிபோற்றி!
வெஞ்சுடரோன் பல் இறுத்த வேந்தே, போற்றி!
வெண்மதிஅம்கண்ணி விகிர்தா, போற்றி!
துஞ்சு இருளில் ஆடல் உகந்தாய், போற்றி!
தூ நீறு மெய்க்கு அணிந்த சோதீ, போற்றி!
செஞ்சடையாய், நின் பாதம் போற்றிபோற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 5

சங்கரனே, நின் பாதம் போற்றிபோற்றி!
சதாசிவனே, நின் பாதம் போற்றிபோற்றி!
பொங்கு அரவா, நின் பாதம் போற்றிபோற்றி!
புண்ணியனே, நின் பாதம் போற்றிபோற்றி!
அம் கமலத்து அயனோடு மாலும் காணா
அனல்உருவா, நின் பாதம் போற்றிபோற்றி!
செங்கமலத்திருப்பாதம் போற்றிபோற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 6

வம்பு உலவு கொன்றைச் சடையாய், போற்றி!
வான்பிறையும் வாள்அரவும் வைத்தாய், போற்றி!
கொம்பு அனைய நுண்இடையாள் கூறா, போற்றி!
குரைகழலால் கூற்று உதைத்த கோவே, போற்றி!
நம்புமவர்க்கு அரும்பொருளே, போற்றிபோற்றி!
நால்வேதம் ஆறுஅங்கம் ஆனாய், போற்றி!
செம்பொனே, மரகதமே, மணியே, போற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 7

உள்ளம்ஆய் உள்ளத்தே நின்றாய், போற்றி!
உகப்பார் மனத்து என்றும் நீங்காய், போற்றி!
வள்ளலே, போற்றி! மணாளா, போற்றி!
வானவர்கோன் தோள் துணித்த மைந்தா, போற்றி!
வெள்ளைஏறு ஏறும் விகிர்தா, போற்றி!
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய், போற்றி!
தெள்ளுநீர்க்கங்கைச் சடையாய், போற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 8

பூ ஆர்ந்த சென்னிப் புனிதா, போற்றி!
புத்தேளிர் போற்றும் பொருளே, போற்றி!
தே ஆர்ந்த தேவர்க்கும் தேவே, போற்றி!
திருமாலுக்கு ஆழி அளித்தாய், போற்றி!
சாவாமே காத்து என்னை ஆண்டாய், போற்றி!
சங்கு ஒத்த நீற்று எம் சதுரா, போற்றி!
சே ஆர்ந்த வெல் கொடியாய், போற்றிபோற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 9

பிரமன்தன் சிரம் அரிந்த பெரியோய், போற்றி!
பெண்உருவோடு ஆண்உருஆய் நின்றாய், போற்றி!
கரம்நான்கும் முக்கண்ணும் உடையாய், போற்றி!
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய், போற்றி!
அருமந்த தேவர்க்கு அரசே, போற்றி!
அன்று அரக்கன் ஐந்நான்குதோளும், தாளும்,
சிரம், நெரித்த சேவடியாய், போற்றிபோற்றி!
திருமூலட்டானனே, போற்றிபோற்றி! 10

திரு ஆரூர் அரநெறி VI-33 திருத் தாண்டகம்

பொரும் கை மதகரி உரிவைப்போர்வையானை,
பூவணமும் வலஞ்சுழியும் பொருந்தினானை,
கரும்பு தரு கட்டியை, இன்அமிர்தை, தேனை,
காண்பு அரிய செழுஞ்சுடரை, கனகக்குன்றை,
இருங் கனகமதில் ஆரூர் மூலட்டானத்து
எழுந்தருளி இருந்தானை, இமையோர் ஏத்தும்
அருந்தவனை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 1

கற்பகமும் இருசுடரும் ஆயினானை,
காளத்தி கயிலாயமலை உளானை,
வில் பயிலும் மதன் அழிய விழித்தான்தன்னை,
விசயனுக்கு வேடுவனாய் நின்றான்தன்னை,
பொற்பு அமரும் பொழில் ஆரூர் மூலட்டானம்
பொருந்திய எம்பெருமானை, பொருந்தார் சிந்தை
அற்புதனை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 2

பாதி ஒரு பெண், முடிமேல் கங்கையானை,
பாசூரும் பரங்குன்றும் மேயான்தன்னை,
வேதியனை, தன் அடியார்க்கு எளியான்தன்னை,
மெய்ஞ்ஞானவிளக்கானை, விரையே நாறும்
போது இயலும் பொழில் ஆரூர் மூலட்டானம்
புற்று இடம்கொண்டு இருந்தானை, போற்றுவார்கள்
ஆதியனை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடையேன் அருவினைநோய் அறுத்தஆறே! 3

நந்தி பணி கொண்டு அருளும் நம்பன்தன்னை,
நாகேச்சுரம் இடமா நண்ணினானை,
சந்தி மலர் இட்டு அணிந்து வானோர் ஏத்தும்
தத்துவனை, சக்கரம் மாற்கு ஈந்தான்தன்னை,
இந்து நுழை பொழில் ஆரூர் மூலட்டானம்
இடம்கொண்ட பெருமானை, இமையோர் போற்றும்
அந்தணனை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தவாறே! 4

சுடர்ப் பவளத்திருமேனி வெண்நீற்றானை,
சோதிலிங்கத் தூங்கானைமாடத்தானை,
விடக்கு இடுகாடு இடம்ஆக உடையான்தன்னை,
மிக்க(அ)ரணம் எரியூட்ட வல்லான்தன்னை,
மடல் குலவு பொழில் ஆரூர் மூலட்டானம்
மன்னிய எம்பெருமானை, மதியார் வேள்வி
அடர்த்தவனை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 5

தாய்அவனை, எவ்உயிர்க்கும்; தன் ஒப்பு இல்லாத்
தகு தில்லை நடம் பயிலும் தலைவன்தன்னை;
மாயவனும், மலரவனும், வானோர், ஏத்த
மறிகடல்நஞ்சு உண்டு உகந்த மைந்தன்தன்னை;
மேயவனை,—பொழில் ஆரூர் மூலட்டானம்,—
விரும்பிய எம்பெருமானை; எல்லாம் முன்னே
ஆயவனை; அரநெறியில் அப்பன்தன்னை;—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 6

பொருள் இயல் நல் சொல்பதங்கள் ஆயினானை,
புகலூரும் புறம்பயமும் மேயான்தன்னை,
மருள் இயலும் சிந்தையர்க்கு மருந்துதன்னை,
மறைக்காடும் சாய்க்காடும் மன்னினானை,
இருள் இயன்ற பொழில் ஆரூர் மூலட்டானத்து
இனிது அமரும் பெருமானை, இமையோர் ஏத்த
அருளியனை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 7

காலனைக் காலால் காய்ந்த கடவுள்தன்னை,
காரோணம் கழிப்பாலை மேயான்தன்னை,
பாலனுக்குப் பாற்கடல் அன்று ஈந்தான்தன்னை,
பணி உகந்த அடியார்கட்கு இனியான்தன்னை,
சேல் உகளும் வயல் ஆரூர் மூலட்டானம்
சேர்ந்து இருந்த பெருமானை, பவளம் ஈன்ற
ஆலவனை,அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 8

ஒப்பு ஒருவர் இல்லாத ஒருவன்தன்னை,
ஒத்தூரும் உறையூரும் மேவினானை,
வைப்புஅவனை, மாணிக்கச்சோதியானை,
மாருதமும் தீ வெளி நீர் மண் ஆனானை,
மெய்ப்பொருள்ஆய் அடியேனது உள்ளே நின்ற
வினைஇலியை, திரு மூலட்டானம் மேய
அப் பொன்னை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 9

பகலவன்தன் பல் உகுத்த படிறன்தன்னை,
பராய்த்துறை பைஞ்ஞீலி இடம் பாவித்தானை,
இகலவனை, இராவணனை இடர் செய்தானை,
ஏத்தாதார் மனத்துஅகத்துள் இருள் ஆனானை,
புகழ் நிலவு பொழில் ஆரூர் மூலட்டானம்
பொருந்திய எம்பெருமானை, போற்றார் சிந்தை
அகலவனை, அரநெறியில் அப்பன்தன்னை,—
அடைந்து அடியேன் அருவினைநோய் அறுத்தஆறே! 10

திரு ஆரூர் VI-34 திருத் தாண்டகம்

ஒருவனாய் உலகு ஏத்த நின்ற நாளோ?
ஓர் உருவே மூஉருவம் ஆன நாளோ?
கருவனாய்க் காலனை முன் காய்ந்த நாளோ?
காமனையும் கண்அழலால் விழித்த நாளோ?
மருவனாய் மண்ணும் விண்ணும் தெரித்த நாளோ?
மான்மறி கை ஏந்தி, ஓர் மாது, ஓர்பாகம்
திருவினாள் சேர்வதற்கு முன்னோ? பின்னோ?— 1
திரு ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே.

மலையார் பொன்பாவையொடு மகிழ்ந்த நாளோ?
வானவரை வலி அமுதம் ஊட்டி, அந் நாள்
நிலைபெறு பெறுவித்து நின்ற நாளோ?
நினைப்ப(அ)ரிய தழல்பிழம்புஆய் நிமிர்ந்த நாளோ?
அலைசாமே அலைகடல்நஞ்சு உண்ட நாளோ?
அமரர்கணம் புடை சூழ இருந்த நாளோ?
சிலையால் முப்புரம் எரித்த முன்னோ? பின்னோ?—
திரு ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 2

பாடகம் சேர் மெல்அடி நல் பாவையாளும்
நீயும் போய் பார்த்தனது பலத்தைக் காண்பான்
வேடனாய் வில் வாங்கி எய்த நாளோ?
விண்ணவர்க்கும் கண்ணவனாய் நின்ற நாளோ?
மாடமொடு மாளிகைகள் மல்கு தில்லை
மணி திகழும் அம்பலத்தை மன்னிக் கூத்தை
ஆடுவான் புகுவதற்கு முன்னோ? பின்னோ?—
அணி ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 3

ஓங்கி-உயர்ந்து எழுந்து நின்ற நாளோ?
ஓர் உகம் போல் ஏழ்உகம்ஆய் நின்ற நாளோ?
தாங்கிய சீர்த் தலைஆன வானோர் செய்த
தக்கன்தன் பெரு வேள்வி தகர்த்த நாளோ?
நீங்கிய நீர்த் தாமரையான் நெடுமாலோடு,
''நில்லாய், எம்பெருமானே!'' என்று அங்கு ஏத்தி,
வாங்கி, மதி, வைப்பதற்கு முன்னோ? பின்னோ?—
வளர் ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 4

பாலனாய் வளர்ந்திலாப் பான்மையானே!
பணிவார்கட்கு அங்குஅங்கே பற்று ஆனானே!
நீலமாமணிகண்டத்து எண்தோளானே!
நெருநலையாய் இன்றுஆகி நாளைஆகும்
சீலமே! சிவலோகநெறியே ஆகும்
சீர்மையே! கூர்மையே! குணமே! நல்ல
கோலம் நீ கொள்வதற்கு முன்னோ? பின்னோ?—
குளிர் ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 5

திறம்பலவும் வழி காட்டிச் செய்கை காட்டிச்
சிறியையாய்ப் பெரியையாய் நின்ற நாளோ?
மறம்பலவும் உடையாரை மயக்கம் தீர்த்து
மா முனிவர்க்கு அருள்செய்து அங்கு இருந்த நாளோ?
பிறங்கிய சீர்ப் பிரமன்தன் தலை கை ஏந்திப்
பிச்சை ஏற்று உண்டு உழன்று நின்ற நாளோ?
அறம்பலவும் உரைப்பதற்கு முன்னோ? பின்னோ?—
அணி ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 6

நிலந்தரத்து நீண்டு உருவம் ஆன நாளோ?
நிற்பனவும் நடப்பனவும் நீயே ஆகிக்
கலந்து உரைக்கக் கற்பகம்ஆய் நின்ற நாளோ?
காரணத்தால் நாரணனைக் கற்பித்து, அன்று,
வலம் சுருக்கி வல்அசுரர் மாண்டு வீழ,
வாசுகியை வாய் மடுத்து, வானோர் உய்ய,
சலந்தரனைக் கொல்வதற்கு முன்னோ? பின்னோ?—
தண் ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 7

பாதத்தால் முயலகனைப் பாதுகாத்துப்
பார்அகத்தே பரஞ்சுடர்ஆய் நின்ற நாளோ?
கீதத்தை மிகப் பாடும் அடியார்க்கு என்றும்
கேடு இலா வான்உலகம் கொடுத்த நாளோ?
பூதத்தான், பொரு நீலி, புனிதன், மேவிப்
பொய் உரையா மறை நால்வர், விண்ணோர்க்கு, என்றும்
வேதத்தை விரிப்பதற்கு முன்னோ? பின்னோ?—
விழவு ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 8

புகைஎட்டும், போக்குஎட்டும், புலன்கள்எட்டும்,
பூதலங்கள்அவைஎட்டும், பொழில்கள்எட்டும்,
கலைஎட்டும், காப்புஎட்டும், காட்சிஎட்டும்,
கழல்சேவடி அடைந்தார் களைகண்எட்டும்,
நகைஎட்டும், நாள்எட்டும், நன்மைஎட்டும்,
நலம் சிறந்தார் மனத்துஅகத்து மலர்கள்எட்டும்,
திகைஎட்டும், தெரிப்பதற்கு முன்னோ? பின்னோ?—
திரு ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 9

ஈசனாய், உலகுஏழும் மலையும் ஆகி,
இராவணனை ஈடு அழித்திட்டு, இருந்த நாளோ?
வாசமலர் மகிழ் தென்றல் ஆன நாளோ?
மதயானைஉரி போர்த்து மகிழ்ந்த நாளோ?
தாது மலர் சண்டிக்குக் கொடுத்த நாளோ?
சகரர்களை மறித்திட்டு ஆட்கொண்ட நாளோ?
தேசம் உமை அறிவதற்கு முன்னோ? பின்னோ?—
திரு ஆரூர் கோயிலாக் கொண்ட நாளே. 10

திரு வெண்காடு VI-35 திருத் தாண்டகம்

தூண்டு சுடர் மேனித் தூநீறுஆடி,
சூலம் கை ஏந்தி, ஓர் சுழல் வாய் நாகம்
பூண்டு, பொறிஅரவம் காதில் பெய்து,
பொன்சடைகள்அவை தாழ, புரிவெண்நூலர்,
நீண்டு கிடந்து இலங்கு திங்கள் சூடி,
நெடுந்தெருவே வந்து எனது நெஞ்சம் கொண்டார்,
வேண்டும் நடை நடக்கும் வெள்ஏறு ஏறி;—
வெண்காடு மேவிய விகிர்தனாரே. 1

பாதம் தனிப் பார்மேல் வைத்த பாதர்;
பாதாளம்ஏழ் உருவப் பாய்ந்த பாதர்;
ஏதம் படா வண்ணம் நின்ற பாதர்;
ஏழ்உலகும்ஆய் நின்ற ஏகபாதர்;
ஓதத்து ஒலி மடங்கி, ஊர் உண்டு ஏறி,
ஒத்து உலகம்எல்லாம் ஒடுங்கிய(ப்)பின்,
வேதத்து ஒலி கொண்டு, வீணை கேட்பார்—
வெண்காடு மேவிய விகிர்தனாரே. 2

நென்னலை ஓர் ஓடு ஏத்திப் பிச்சைக்கு என்று
வந்தார்க்கு, ''வந்தேன்'' என்று இல்லே புக்கேன்;
அந் நிலையே நிற்கின்றார்; ஐயம் கொள்ளார்;
அருகே வருவார் போல் நோக்குகின்றார்;
''நும் நிலைமை ஏதோ? நும் ஊர்தான் ஏதோ?''
என்றேனுக்கு ஒன்றுஆகச் சொல்லமாட்டார்—
மென்முலையார் கூடி விரும்பி ஆடும்
வெண்காடு மேவிய விகிர்தனாரே. 3

ஆகத்து உமை அடக்கி, ஆறு சூடி,
    ஐவாய்அரவு அசைத்து, அங்கு ஆன்ஏறு ஏறி,
போகம்பல உடைத்துஆய்ப் பூதம் சூழ,
    புலித்தோல் உடையாப் புகுந்து நின்றார்;
பாகு இடுவான் சென்றேனைப் பற்றி நோக்கி,
    பரிசு அழித்து, என் வளை கவர்ந்தார், பாவியேனை;—
மேகம் முகில் உரிஞ்சு சோலை சூழ்ந்த
    வெண்காடு மேவிய விகிர்தனாரே. 4

கொள்ளைக் குழைக் காதின் குண்டைப்பூதம்
    கொடுகொட்டி கொட்டிக் குனித்துப் பாட,
உள்ளம் கவர்ந்திட்டுப் போவார் போல
    உழிதருவர்; நான் தெரியமாட்டேன், மீண்டேன்;
கள்ளவிழி விழிப்பார், காணாக் கண்ணால்;
    கண்ணுளார் போலே கரந்து நிற்பர்;
வெள்ளச் சடைமுடியர்; வேத நாவர்—
    வெண்காடு மேவிய விகிர்தனாரே. 5

தொட்டு இலங்கு சூலத்தர்; மழுவாள் ஏந்தி,
    சுடர்க் கொன்றைத்தார் அணிந்து, சுவைகள் பேசி,
பட்டி வெள்ஏறு ஏறி, பலியும் கொள்ளார்;
    பார்ப்பாரைப் பரிசு அழிப்பார் ஒக்கின்றாரால்;
கட்டு இலங்கு வெண்நீற்றர்; கனலப் பேசிக்
    கருத்து அழித்து வளை கவர்ந்தார்; காலைமாலை
விட்டுஇலங்குசடைமுடியர்; வேத நாவர்—
    வெண்காடு மேவிய விகிர்தனாரே. 6

பெண்பால், ஒருபாகம்; பேணா வாழ்க்கை;
    கோள் நாகம் பூண்பனவும்; நாண் ஆம் சொல்லார்;
உண்பார், உறங்குவார், ஒவ்வா; நங்காய்!
    உண்பதுவும் நஞ்சு அன்றே, உலோபி! உண்ணார்;
பண்பால் அவிர்சடையர் பற்றி நோக்கி,
    பாலைப் பரிசு அழிய, பேசுகின்றார்—
விண்பால் மதி சூடி, வேதம் ஓதி,
    வெண்காடு மேவிய விகிர்தனாரே. 7

மருதங்களா மொழிவர், மங்கையோடு;
    வானவரும் மால் அயனும் கூடி, தங்கள்
சுருதங்களால்-துதித்து, தூநீர்ஆட்டி,
    தோத்திரங்கள்பல சொல்லி, தூபம் காட்டி,
''கருதும்கொல் எம்பிரான், செய் குற்றேவல்?''
    என்பார்க்கு வேண்டும் வரம் கொடுத்து,
விகிர்தங்களா நடப்பர், வெள்ஏறு ஏறி;—
    வெண்காடு மேவிய விகிர்தனாரே. 8

புள்ளானும் நான்முகனும் புக்கும் போந்தும்
    காணார், பொறி அழல்ஆய் நின்றான்தன்னை;
உள்ளானை; ஒன்று அல்லா உருவினானை;
    உலகுக்கு ஒரு விளக்குஆய் நின்றான்தன்னை;
கள் ஏந்து கொன்றை தூய், காலைமூன்றும்
    ஓவாமே, நின்று தவங்கள் செய்த
வெள்ளானை வேண்டும் வரம் கொடுப்பார்—
    வெண்காடு மேவிய விகிர்தனாரே. 9

மாக் குன்று எடுத்தோன்தன் மைந்தன்ஆகி
மா வேழம் வில்லா மதித்தான்தன்னை—
நோக்கும் துணைத் தேவர்எல்லாம் நிற்க—
நொடிவரையில் நோவ விழித்தான்தன்னை;
காக்கும் கடல் இலங்கைக் கோமான்தன்னைக்
'கதிர் முடியும் கண்ணும் பிதுங்க ஊன்றி,
வீக்கம் தவிர்த்த விரலார்போலும்—
வெண்காடு மேவிய விகிர்தனாரே. 10

திருப் பழனம் VI-36 திருத் தாண்டகம்

அலை ஆர் கடல் நஞ்சம் உண்டார்தாமே;
அமரர்களுக்கு அருள்செய்யும் ஆதிதாமே;
கொலை ஆய கூற்றம் உதைத்தார்தாமே;
கொல் வேங்கைத் தோல் ஒன்று அசைத்தார்தாமே;
சிலையால் புரம்மூன்றும் எரித்தார்தாமே;
தீநோய் களைந்து என்னை ஆண்டார்தாமே;
பலி தேர்ந்து அழகுஆய பண்பர்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 1

வெள்ளம் ஒரு சடைமேல் ஏற்றார்தாமே;
மேலார்கள்மேலார்கள் மேலார்தாமே;
கள்ளம் கடிந்து என்னை ஆண்டார்தாமே;
கருத்து உடைய பூதப்படையார்தாமே;
உள்ளத்து உவகை தருவார்தாமே;
உறு நோய் சிறு பிணிகள் தீர்ப்பார்தாமே;
பள்ளப் பரவை நஞ்சு உண்டார்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 2

இரவும் பகலும்ஆய் நின்றார்தாமே;
எப்போதும் என் நெஞ்சத்து உள்ளார்தாமே;
அரவம் அரையில் அசைத்தார்தாமே;
அனல்ஆடி அங்கை மறித்தார்தாமே;
குரவம் கமழும் குற்றாலர்தாமே;
கோலங்கள் மேல்மேல் உகப்பார்தாமே;
பரவும் அடியார்க்குப் பாங்கர்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 3

மாறு இல் மதில்மூன்றும் எய்தார்தாமே;
வரிஅரவம் கச்சுஆக ஆர்த்தார்தாமே;
நீறு சேர் திருமேனி நிமலர்தாமே;
நெற்றி நெருப்புக்கண் வைத்தார்தாமே;
ஏறு கொடுஞ் சூலக் கையார்தாமே;
என்புஆபரணம் அணிந்தார்தாமே;
பாறு உண் தலையில் பலியார்தாமே— 4
பழனநகர் எம்பிரானார்தாமே.

சீரால் வணங்கப்படுவார்தாமே;
திசைக்கு எல்லாம் தேவுஆகி நின்றார்தாமே;
ஆரா அமுதம் ஆனார்தாமே;
அளவு இல் பெருமை உடையார்தாமே;
நீர் ஆர் நியமம் உடையார்தாமே;
நீள்வரை வில்ஆக வளைத்தார்தாமே;
பாரார் பரவப்படுவார்தாமே—. 5
பழனநகர் எம்பிரானார்தாமே.

காலன் உயிர் வௌவ வல்லார்தாமே;
கடிது ஓடும் வெள்ளைவிடையார்தாமே;
கோலம்பலவும் உகப்பார்தாமே;
கோள் நாகம் நாண் ஆகப் பூண்டார்தாமே;
நீலம் பொலிந்த மிடற்றார்தாமே;
நீள்வரையின் உச்சி இருப்பார்தாமே;
பாலவிருத்தரும் ஆனார்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 6

ஏய்ந்த உமைநங்கை பங்கர்தாமே;
ஏழ்ஊழிக்கு அப் புறம்ஆய் நின்றார்தாமே;
ஆய்ந்து மலர் தூவ நின்றார்தாமே;
அளவு இல் பெருமை உடையார்தாமே;
தேய்ந்த பிறை சடைமேல் வைத்தார்தாமே;
தீ வாய் அரவுஅதனை ஆர்த்தார்தாமே;
பாய்ந்த படர் கங்கை ஏற்றார்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 7

ஓராதார் உள்ளத்தில் நில்லார்தாமே;
உள் ஊறும் அன்பர் மனத்தார்தாமே;
பேராது என் சிந்தை இருந்தார்தாமே;
பிறர்க்கு என்றும் காட்சிக்கு அரியார்தாமே;
ஊர் ஆரும் மூஉலகத்து உள்ளார்தாமே;
உலகை நடுங்காமல் காப்பார்தாமே;
பார் ஆர் முழவத்து இடையார்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 8

நீண்டவர்க்கு ஓர் நெருப்புஉருவம் ஆனார்தாமே;
நேரிழையை ஒருபாகம் வைத்தார்தாமே;
பூண்டு அரவைப் புலித்தோல்மேல் ஆர்த்தார்தாமே;
பொன்நிறத்த வெள்ளச்சடையார்தாமே;
ஆண்டு உலகுஏழ்அனைத்தினையும் வைத்தார்தாமே;
அங்குஅங்கே சிவம்ஆகி நின்றார்தாமே;
பாண்டவரில் பார்த்தனுக்குப் பரிந்தார்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 9

விடை ஏறி, வேண்டு உலகத்து இருப்பார்தாமே;
விரிகதிரோன் சோற்றுத்துறையார்தாமே;
புடை சூழ் தேவர்குழாத்தார்தாமே;
பூந்துருத்தி, நெய்த்தானம், மேயார்தாமே;
அடைவே புனல் சூழ் ஐயாற்றார்தாமே;
அரக்கனையும் ஆற்றல் அழித்தார்தாமே;
படையாப் பல்பூதம் உடையார்தாமே—
பழனநகர் எம்பிரானார்தாமே. 10

திரு ஐயாறு VI-37 திருத் தாண்டகம்

‘‘ஆரார் திரிபுரங்கள் நீறு நோக்கும்
அனல்ஆடி! ஆரமுதே!’’ என்றேன், நானே;
‘‘கூர் ஆர் மழுவாள்படை ஒன்று ஏந்திக்
குறள்பூதப்பல்படையாய்!’’ என்றேன், நானே;
‘‘பேர்ஆயிரம் உடையாய்!’’ என்றேன், நானே;
‘‘பிறை சூடும் பிஞ்ஞகனே!’’ என்றேன், நானே;
‘‘ஆரா அமுதே! என் ஐயாற(ன்)னே!’’—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 1

‘‘தீ வாயில் முப்புரங்கள் நீறு நோக்கும்
தீர்த்தா! புராணனே!’’ என்றேன், நானே;
‘‘மூவா மதிசூடி!’’ என்றேன், நானே;
‘‘முதல்வா! முக்கண்ணனே!’’ என்றேன், நானே;
‘‘ஏ ஆர் சிலையானே!’’ என்றேன், நானே;
இடும்பைக்கடல்நின்றும் ஏற வாங்கி,
‘‘ஆவா!’’ என்று அருள்புரியும் ஐயாற(ன்)னே!’’—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 2

‘‘அம் சுண்ண வண்ணனே!’’ என்றேன், நானே;
‘‘அடியார்கட்கு ஆர் அமுதே!’’ என்றேன், நானே;
‘‘நஞ்சு அணி கண்டனே!’’ என்றேன், நானே;
‘‘நாவலர்கள் நால்மறையே!’’ என்றேன், நானே;
‘‘நெஞ்சு உணர உள் புக்கு இருந்தபோது
நிறையும் அமுதமே!’’ என்றேன், நானே;
‘‘அஞ்சாதே ஆள்வானே! ஐயாற(ன்)னே!’’—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 3

‘‘தொல்லைத் தொடு கடலே!’’ என்றேன், நானே;
‘‘துலங்கும் இளம்பிறையாய்!’’ என்றேன், நானே;
‘‘எல்லை நிறைந்தானே!’’ என்றேன், நானே;
‘‘ஏழ்நரம்பின் இன்இசையாய்!’’ என்றேன், நானே;
‘‘அல்லல்கடல் புக்கு அழுந்துவேனை
வாங்கி அருள்செய்தாய்!’’ என்றேன், நானே;
‘‘எல்லை ஆம் ஐயாறு!’’ என்றேன், நானே;—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 4

‘‘இண்டைச் சடைமுடியாய்!’’ என்றேன், நானே;
‘‘இருசுடர் வானத்தாய்!’’ என்றேன், நானே;
‘‘தொண்டர் தொழப்படுவாய்!’’என்றேன், நானே;
‘‘துருத்தி நெய்த்தானத்தாய்!’’ என்றேன், நானே;
‘‘கண்டம் கறுத்தானே!’’ என்றேன், நானே;
‘‘கனல் ஆகும் கண்ணானே!’’ என்றேன், நானே;
‘‘அண்டத்துக்கு அப்பால் ஆம் ஐயாற்(ன்)னே!’’—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 5

‘‘பற்றார் புரம் எரித்தாய்!’’ என்றேன், நானே;
‘‘பசுபதீ! பண்டரங்கா!’’ என்றேன், நானே;
‘‘கற்றார்கள் நாவினாய்!’’ என்றேன், நானே;
‘‘கடு விடை ஒன்று ஊர்தியாய் !’’ என்றேன், நானே;
‘‘பற்றுஆனார் நெஞ்சு உளாய்!’’ என்றேன், நானே;
‘‘பார்த்தற்கு அருள்செய்தாய்!’’ என்றேன், நானே;
‘‘அற்றார்க்கு அருள்செய்யும் ஐயாற(ன்)னே!’’— 6
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே!

‘‘விண்ணோர்தலைவனே!’’ என்றேன், நானே;
‘‘விளங்கும் இளம்பிறையாய்!’’ என்றேன், நானே;
‘‘எண்ணார் எயில் எரித்தாய்!’’ என்றேன், நானே;
‘‘ஏகம்பம் மேயானே!’’ என்றேன், நானே;
‘‘பண் ஆர் மறை பாடி!’’ என்றேன், நானே;
‘‘பசுபதீ! பால்நீற்றாய்!’’ என்றேன், நானே;
‘‘அண்ணா! ஐயாறனே!’’’ என்றேன், நானே;— 7
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே!

‘‘அவன்’’ என்று நான் உன்னை அஞ்சாதேனை
‘‘அல்லல் அறுப்பானே!’’ என்றேன், நானே;
‘‘சிவன்’’ என்று நான் உன்னை எல்லாம் சொல்ல,
‘‘செல்வம் தருவானே!’’ என்றேன், நானே;
‘‘பவன்ஆகி என் உள்ளத்துள்ளே நின்று
பண்டைவினை அறுப்பாய்!’’ என்றேன், நானே;
‘‘அவன்’’ என்றே, ‘‘ஆதியே! ஐயாற(ன்)னே!’’—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 8

‘‘கச்சி ஏகம்பனே!’’ என்றேன், நானே;
‘‘கயிலாயா! காரோணா!’’ என்றேன், நானே;
‘‘நிச்சல் மணாளனே!’’ என்றேன், நானே;
‘‘நினைப்பார் மனத்து உளாய்!’’ என்றேன், நானே;
‘‘உச்சம்போது ஏறு ஏறீ!’’ என்றேன், நானே;
‘‘உள்குவார் உள்ளத்தாய்!’’ என்றேன், நானே;
‘‘அச்சம்பிணி தீர்க்கும் ஐயாற(ன்)னே!’’—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 9

‘‘வில்ஆடி வேடனே!’’ என்றேன், நானே;
‘‘வெண்நீறு மெய்க்கு அணிந்தாய்!’’ என்றேன், நானே;
‘‘சொல் ஆய சூழலாய்!’’ என்றேன், நானே;
‘‘சுலா ஆய தொன்னெறியே!’’ என்றேன், நானே;
‘‘எல்லாம்ஆய் என் உயிரே!’’ என்றேன், நானே;
‘‘இலங்கையர்கோன் தோள் இறுத்தாய்!’’ என்றேன், நானே;
‘‘அல்லா வினை தீர்க்கும் ஐயாற(ன்)னே!’’—
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே! 10

திரு ஐயாறு VI-38 திருத் தாண்டகம்

ஓசைஒலிஎலாம் ஆனாய், நீயே;
உலகுக்கு ஒருவனாய் நின்றாய், நீயே;
வாசமலர்எலாம் ஆனாய், நீயே;
மலையான்மருகனாய் நின்றாய், நீயே;
பேசப் பெரிதும் இனியாய், நீயே;
பிரானாய் அடி என்மேல் வைத்தாய், நீயே;
தேச விளக்குஎலாம் ஆனாய், நீயே—
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 1

நோக்க(அ)ரிய திருமேனி உடையாய், நீயே;
நோவாமே நோக்கு அருள வல்லாய், நீயே;
காப்ப(அ)ரிய ஐம்புலனும் காத்தாய், நீயே;
காமனையும் கண்அழலால் காய்ந்தாய், நீயே;
ஆர்ப்ப(அ)ரிய மா நாகம் ஆர்த்தாய், நீயே;
அடியான் என்று அடி என்மேல் வைத்தாய், நீயே;
தீர்ப்ப(அ)ரிய வல்வினைநோய் தீர்ப்பாய், நீயே—
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 2

கனத்துஅகத்துக் கடுஞ் சுடர்ஆய் நின்றாய், நீயே;
கடல், வரை, வான், ஆகாயம், ஆனாய், நீயே;
தனத்துஅகத்துத் தலை கலனாக் கொண்டாய், நீயே;
சார்ந்தாரைத் தகைந்து ஆள வல்லாய், நீயே;
மனத்து இருந்த கருத்து அறிந்து முடிப்பாய், நீயே;
மலர்ச்சேவடி என்மேல் வைத்தாய், நீயே;
சினத்து இருந்த திரு நீலகண்டன், நீயே—
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 3

வான் உற்ற மா மலைகள் ஆனாய், நீயே;
    வடகயிலை மன்னி இருந்தாய், நீயே;
ஊன் உற்ற ஒளி மழுவாள்படையாய், நீயே;
    ஒளி மதியோடு, அரவு, புனல், வைத்தாய், நீயே;
ஆன்உற்றஐந்தும் அமர்ந்தாய், நீயே;
    ''அடியான்'' என்று அடி என்மேல் வைத்தாய், நீயே;
தேன் உற்ற சொல் மடவாள் பங்கன், நீயே—
    திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 4

பெண் ஆண் பிறப்புஇலியாய் நின்றாய், நீயே;
    பெரியார்கட்கு எல்லாம் பெரியாய், நீயே;
உண்ணா அருநஞ்சம் உண்டாய், நீயே;
    ஊழிமுதல்வனாய் நின்றாய், நீயே;
கண்ஆய் உலகுஎலாம் காத்தாய், நீயே;
    கழல்சேவடி என்மேல் வைத்தாய், நீயே;
திண் ஆர் மழுவாள்படையாய், நீயே—
    திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 5

உற்றிருந்த உணர்வுஎலாம் ஆனாய், நீயே;
    உற்றவர்க்கு ஓர் சுற்றம்ஆய் நின்றாய், நீயே;
கற்றிருந்த கலைஞானம் ஆனாய், நீயே;
    கற்றவர்க்கு ஓர் கற்பகம்ஆய் நின்றாய், நீயே;
பெற்றிருந்த தாய்அவளின் நல்லாய், நீயே;
    பிரானாய் அடி என்மேல் வைத்தாய், நீயே;
செற்றிருந்த திரு நீலகண்டன், நீயே—
    திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 6

எல்லாஉலகமும் ஆனாய், நீயே;
    ஏகம்பம் மேவி இருந்தாய், நீயே;
நல்லாரை நன்மை அறிவாய், நீயே;
    ஞானச்சுடர்விளக்குஆய் நின்றாய், நீயே;
பொல்லா வினைகள் அறுப்பாய், நீயே;
    புகழ்ச் சேவடி என்மேல் வைத்தாய், நீயே;
செல்வாய செல்வம் தருவாய், நீயே—
    திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 7

ஆவினில்ஐந்தும் அமர்ந்தாய், நீயே;
    அளவு இல் பெருமை உடையாய், நீயே;
பூவினில் நாற்றம்ஆய் நின்றாய், நீயே;
    போர்க் கோலம் கொண்டு எயில் எய்தாய், நீயே;
நாவில் நடுஉரைஆய் நின்றாய், நீயே;
    நண்ணி அடி என்மேல் வைத்தாய், நீயே;
தேவர் அறியாத தேவன், நீயே— 8
    திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ!

எண்திசைக்கும் ஒண்சுடர்ஆய் நின்றாய், நீயே;
    ஏகம்பம் மேய இறைவன், நீயே;
வண்டு இசைக்கும் நறுங்கொன்றைத்தாராய், நீயே;
    வாராஉலகு அருள வல்லாய், நீயே;
தொண்டு இசைத்து உன் அடி பரவ நின்றாய், நீயே;
    தூ மலர்ச்சேவடி என்மேல் வைத்தாய், நீயே;
திண் சிலைக்கு ஓர் சரம் கூட்ட வல்லாய், நீயே— 9
    திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ!

விண்டார் புரம்மூன்றும் எய்தாய், நீயே;
விண்ணவர்க்கும் மேல்ஆகி நின்றாய், நீயே;
கண்டாரைக் கொல்லும் நஞ்சு உண்டாய், நீயே;
காலங்கள் ஊழிஆய் நின்றாய், நீயே;
தொண்டுஆய் அடியேனை ஆண்டாய், நீயே;
தூ மலர்ச்சேவடி என்மேல் வைத்தாய், நீயே;
திண்தோள் விட்டு எரிஆடல் உகந்தாய், நீயே—
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 10

ஆரும் அறியா இடத்தாய், நீயே;
ஆகாயம் தேர் ஊர வல்லாய், நீயே;
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத்து இறுத்தாய், நீயே;
ஊரும் புரம்மூன்றும் அட்டாய், நீயே;
ஒண்தாமரையானும் மாலும் கூடித்
தேரும் அடி என்மேல் வைத்தாய், நீயே—
திரு ஐயாறு அகலாத செம்பொன்சோதீ! 11

திரு மழபாடி VI-39 திருத் தாண்டகம்

நீறு ஏறு திருமேனி உடையான்கண்டாய்;
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைத்தான்கண்டாய்;
கூறுஆக உமை பாகம் கொண்டான்கண்டாய்;
கொடிய விடம் உண்டு இருண்ட கண்டன்கண்டாய்;
ஏறு ஏறி எங்கும் திரிவான்கண்டாய்;
ஏழ்உலகும் ஏழ்மலையும் ஆனான்கண்டாய்;
மாறுஆனார்தம் அரணம் அட்டான்கண்டாய்—
மழபாடி மன்னும் மணாளன்தானே. 1

கொக்குஇறகு சென்னி உடையான்கண்டாய்;
கொல்லை விடை ஏறும் கூத்தன்கண்டாய்;
அக்கு அரைமேல் ஆடல் உடையான்கண்டாய்;
அனல் அங்கை ஏந்திய ஆதிகண்டாய்;
அக்கோடு அரவம் அணிந்தான்கண்டாய்;
அடியார்கட்கு ஆர் அமுதம் ஆனான்கண்டாய்;
மற்று இருந்த கங்கைச் சடையான்கண்டாய்—
மழபாடி மன்னும் மணாளன்தானே. 2

நெற்றித் தனிக் கண் உடையான்கண்டாய்;
நேரிழை ஓர்பாகம்ஆய் நின்றான்கண்டாய்;
பற்றிப் பாம்பு ஆட்டும் படிறன்கண்டாய்;
பல்ஊர் பலி தேர் பரமன்கண்டாய்;
செற்றார் புரம்மூன்றும் செற்றான்கண்டாய்;
செழு மா மதி சென்னி வைத்தான்கண்டாய்;
மற்று ஒரு குற்றம் இலாதான்கண்டாய்—
மழபாடி மன்னும் மணாளன்தானே. 3

அலை ஆர்ந்த புனல்கங்கைச் சடையான்கண்டாய்;
அண்டத்துக்கு அப்பால்ஆய் நின்றான்கண்டாய்;
கொலைஆன கூற்றம் குமைத்தான்கண்டாய்;
கொல் வேங்கைத் தோல் ஒன்று உடுத்தான்கண்டாய்;
சிலையால்-திரிபுரங்கள் செற்றான்கண்டாய்;
செழு மா மதி சென்னி வைத்தான்கண்டாய்;
மலை ஆர் மடந்தைமணாளன் கண்டாய்—
மழபாடி மன்னும் மணாளன்தானே. 4

உலந்தார்தம் அங்கம் அணிந்தான்கண்டாய்;
உவகையோடு இன்அருள்கள் செய்தான்கண்டாய்;
நலம் திகழும் கொன்றைச் சடையான்கண்டாய்;
நால்வேதம் ஆறுஅங்கம் ஆனான்கண்டாய்;
உலந்தார் தலை கலனாக் கொண்டான்கண்டாய்;
உம்பரார்தங்கள்பெருமான்கண்டாய்—
மலர்ந்து ஆர் திருவடி என் தலைமேல் வைத்த
மழபாடி மன்னும் மணாளன்தானே. 5

தாமரையான்தன் தலையைச் சாய்த்தான்கண்டாய்;
தகவு உடையார் நெஞ்சுஇருக்கை கொண்டான்கண்டாய்;
பூ மலரான் ஏத்தும் புனிதன்கண்டாய்!
புணர்ச்சிப் பொருள்ஆகி நின்றான்கண்டாய்;
ஏ மருவு வெஞ்சிலை ஒன்று ஏந்திகண்டாய்;
இருள் ஆர்ந்த கண்டத்து இறைவன்கண்டாய்;
மா மருவும் கலை கையில் ஏந்திகண்டாய்—
மழபாடி மன்னும் மணாளன்தானே. 6

நீர் ஆகி, நெடுவரைகள் ஆனான்கண்டாய்;
நிழல் ஆகி, நீள் விசும்பும் ஆனான்கண்டாய்;
பார் ஆகி, பௌவம்ஏழ் ஆனான்கண்டாய்;
பகல் ஆகி, வான் ஆகி, நின்றான்கண்டாய்;
ஆரேனும் தன் அடியார்க்கு அன்பன்கண்டாய்;
அணுஆகி, ஆதிஆய், நின்றான்கண்டாய்;
வார் ஆர்ந்த வனமுலையாள் பங்கன்கண்டாய்—
மழபாடி மன்னும் மணாளன்தானே. 7

பொன் இயலும் திருமேனி உடையான்கண்டாய்;
பூங்கொன்றைத்தார் ஒன்று அணிந்தான்கண்டாய்;
மின் இயலும் வார்சடை எம்பெருமான்கண்டாய்;
வேழத்தின்உரி விரும்பிப் போர்த்தான்கண்டாய்;
தன் இயல்பார் மற்று ஒருவர் இல்லான்கண்டாய்;
தாங்க(அ)ரிய சிவம் தானாய் நின்றான்கண்டாய்;
மன்னிய மங்கை ஓர்கூறன் கண்டாய்— 8
மழபாடி மன்னும் மணாளன்தானே.

ஆலாலம் உண்டு உகந்த ஆதிகண்டாய்;
அடையலர்தம் புரம்மூன்றும் எய்தான்கண்டாய்;
காலால் அக் காலனையும் காய்ந்தான்கண்டாய்;
கண்ணப்பர்க்கு அருள்செய்த காளைகண்டாய்;
பால் ஆரும் மொழி மடவாள் பாகன்கண்டாய்;
பசு ஏறிப் பலி திரியும் பண்பன்கண்டாய்;
மாலாலும் அறிவு அரிய மைந்தன்கண்டாய்— 9
மழபாடி மன்னும் மணாளன்தானே.

ஒரு சுடர்ஆய், உலகுஏழும் ஆனான்கண்டாய்;
ஓங்காரத்து உள்பொருள்ஆய் நின்றான்கண்டாய்;
விரி சுடர்ஆய், விளங்கு ஒளிஆய், நின்றான்கண்டாய்;
விழவு ஒலியும், வேள்வொலியும், ஆனான்கண்டாய்;
இருசுடர் மீது ஓடா இலங்கைக்கோனை
ஈடு அழிய இருபதுதோள் இறுத்தான்கண்டாய்;
மரு சுடரின் மாணிக்கக்குன்றுகண்டாய்— 10
மழபாடி மன்னும் மணாளன்தானே.

திரு மழபாடி VI-40 திருத் தாண்டகம்

அலை அடுத்த பெருங்கடல் நஞ்சு அமுதா உண்டு,
அமரர்கள்தம் தலை காத்த ஐயர்; செம்பொன்-
சிலை எடுத்து மா நாகம் நெருப்புக் கோத்துத்
திரிபுரங்கள் தீ இட்ட செல்வர்போலும்;
''நிலை அடுத்த பசும்பொன்னால், முத்தால், நீண்ட
நிரை வயிரப் பலகையால், குவையாத் துற்ற
மலை அடுத்த மழபாடி வயிரத்தூணே!''
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே. 1

அறை கலந்த குழல், மொந்தை, வீணை, யாழும்,
அந்தரத்தின் கந்தருவர் அமரர் ஏத்த,
மறை கலந்த மந்திரமும் நீரும் கொண்டு
வழிபட்டார் வான் ஆளக் கொடுத்தி அன்றே!
''கறை கலந்த பொழில் கச்சிக் கம்பம் மேய
கன வயிரத் திரள் தூணே! கலி சூழ் மாடம்
மறை கலந்த மழபாடி வயிரத்தூணே!''
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே. 2

உரம் கொடுக்கும் இருள் மெய்யர், மூர்க்கர், பொல்லா
ஊத்தைவாய்ச் சமணர்தமை உறவாக் கொண்ட
பரம் கெடுத்து, இங்கு அடியேனை ஆண்டுகொண்ட
பவளத்தின் திரள் தூணே! பசும்பொன் முத்தே!
''புரம் கெடுத்து, பொல்லாத காமன் ஆகம்
பொடிஆக விழித்துஅருளி, புவியோர்க்கு என்றும்
வரம் கொடுக்கும் மழபாடி வயிரத்தூணே!''
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே. 3

''ஊன் இகந்து ஊண் உறி கையர்—குண்டர், பொல்லா
ஊத்தைவாய்ச் சமணர்—உறவுஆகக் கொண்டு
ஞான(அ)கம் சேர்ந்து உள்ள வயிரத்தை நண்ணா
நாயேனைப் பொருள்ஆக ஆண்டுகொண்ட,
மீன் அகம் சேர் வெள்ளநீர் விதியால் சூடும்
வேந்தனே! விண்ணவர்தம் பெருமான்! மேக
வானகம் சேர் மழபாடி வயிரத்தூணே!''
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே. 4

சிரம் ஏற்ற நான்முகன்தன் தலையும் மற்றைத்
திருமால்தன் செழுந் தலையும் பொன்றச் சிந்தி,
உரம் ஏற்ற இரவி பல்-தகர்த்து, சோமன்
ஒளிர்கலைகள் பட உழக்கி, உயிரை நல்கி,
நரை ஏற்ற விடை ஏறி, நாகம் பூண்ட
நம்பியையே, ''மறைநான்கும் ஓலம்இட்டு
வரம் ஏற்கும் மழபாடி வயிரத்தூணே!''
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே. 5

''சினம் திருத்தும் சிறுப் பெரியார் குண்டர்தங்கள்
செதுமதியார் தீவினைக்கே விழுந்தேன்; தேடிப்
புனம் திருத்தும் பொல்லாத பிண்டி பேணும்
பொறிஇலியேன்தனைப் பொருளா ஆண்டுகொண்டு,
தனம் திருத்துமவர் திறத்தை ஒழியப் பாற்றி,
தயாமூலதன்மவழி எனக்கு நல்கி,
மனம் திருத்தும் மழபாடி வயிரத்தூணே!''
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே. 6

''சுழித்துணைஆம் பிறவிவழித் துக்கம் நீக்கும்
சுருள்சடை எம்பெருமானே! தூய தெண்நீர்
இழிப்ப(அ)ரிய பசுபாசப் பிறப்பை நீக்கும்
என் துணையே! என்னுடைய பெம்மான்! தம்மான்!
பழிப்ப(அ)ரிய திருமாலும் அயனும் காணாப்
பருதியே! சுருதிமுடிக்கு அணிஆய் வாய்த்த,
வழித்துணை ஆம், மழபாடி வயிரத்தூணே!''
என்றுஎன்றே நான் அரற்றி நைகின்றேனே. 7

திரு நெய்த்தானம் VI-41 திருத் தாண்டகம்

வகைஎலாம் உடையாயும் நீயே என்றும்,
வான் கயிலை மேவினாய் நீயே என்றும்,
மிகைஎலாம் மிக்காயும் நீயே என்றும்,
வெண்காடு மேவினாய் நீயே என்றும்,
பகைஎலாம் தீர்த்து ஆண்டாய் நீயே என்றும்,
பாசூர் அமர்ந்தாயும் நீயே என்றும்,
திகைஎலாம் தொழச் செல்வாய் நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!— என் நெஞ்சு உளாயே. 1

ஆர்த்த எனக்கு அன்பன் நீயே என்றும்,
ஆதிக்கயிலாயன் நீயே என்றும்,
கூர்த்த நடம்ஆடி நீயே என்றும்,
''கோடிகா மேய குழகா!'' என்றும்,
பார்த்தற்கு அருள்செய்தாய் நீயே என்றும்,
''பழையனூர் மேவிய பண்பா!'' என்றும்,
தீர்த்தன் சிவலோகன் நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 2

அல்ஆய்ப் பகல்ஆனாய் நீயே என்றும்,
ஆதிக்கயிலாயன் நீயே என்றும்,
கல்லால் அமர்ந்தாயும் நீயே என்றும்,
காளத்திக் கற்பகமும் நீயே என்றும்,
சொல்ஆய்ப் பொருள்ஆனாய் நீயே என்றும்,
சோற்றுத்துறை உறைவாய் நீயே என்றும்,
செல் வாய்த் திரு ஆனாய் நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 3

மின்நேர்இடைபங்கன் நீயே என்றும்,
வெண்கயிலை மேவினாய் நீயே என்றும்,
பொன் நேர் சடைமுடியாய் நீயே என்றும்,
பூதகணநாதன் நீயே என்றும்,
என் நா இரதத்தாய் நீயே என்றும்,
ஏகம்பத்து என் ஈசன் நீயே என்றும்,
தென்னூர்ப்பதி உளாய் நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 4

முந்தி இருந்தாயும் நீயே என்றும்,
முன் கயிலை மேவினாய் நீயே என்றும்,
நந்திக்கு அருள்செய்தாய் நீயே என்றும்,
நடம்ஆடி நள்ளாறன் நீயே என்றும்,
பந்திப்ப(அ)ரியாயும் நீயே என்றும்,
பைஞ்ஞீலி மேவினாய் நீயே என்றும்,
சித்திப்ப(அ)ரியாயும் நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 5

தக்கார்அடியார்க்கு நீயே என்றும்,
தலை ஆர் கயிலாயன் நீயே என்றும்,
அக்குஆரம் பூண்டாயும் நீயே என்றும்,
ஆக்கூரில்-தான்தோன்றி நீயே என்றும்,
புக்கு ஆய ஏழ்உலகும் நீயே என்றும்,
புள்ளிருக்குவேளூராய் நீயே என்றும்,
தெக்கு ஆரும் மாகோணத்தானே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 6

புகழும் பெருமையாய் நீயே என்றும்,
பூங் கயிலை மேவினாய் நீயே என்றும்,
இகழும் தலைஏந்தி நீயே என்றும்,
இராமேச்சுரத்து இன்பன் நீயே என்றும்,
அகழும் மதில் உடையாய் நீயே என்றும்,
ஆலவாய் மேவினாய் நீயே என்றும்,
திகழும் மதிசூடி நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 7

வானவர்க்கு மூத்து இளையாய் நீயே என்றும்,
வானக் கயிலாயன் நீயே என்றும்,
கானம் நடம்ஆடி நீயே என்றும்,
கடவூரில் வீரட்டன் நீயே என்றும்,
ஊன் ஆர் முடி அறுத்தாய் நீயே என்றும்,
ஒற்றியூர் ஆரூராய் நீயே என்றும்,
தேன்ஆய் அமுதுஆனாய் நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 8

தந்தைதாய் இல்லாதாய் நீயே என்றும்,
தலை ஆர் கயிலாயன் நீயே என்றும்,
எம் தாய் எம்பிரான் ஆனாய் நீயே என்றும்,
ஏகம்பத்து என் ஈசன் நீயே என்றும்,
முந்திய முக்கணாய் நீயே என்றும்,
மூவலூர் மேவினாய் நீயே என்றும்,
சிந்தையாய், தேனாராய் நீயே என்றும்,
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 9

மறித்தான் வலி செற்றாய் நீயே என்றும்;
வான் கயிலை மேவினாய் நீயே என்றும்;
வெறுத்தார் பிறப்பு அறுப்பாய் நீயே என்றும்;
வீழிமிழலையாய் நீயே என்றும்;
அறத்தாய், அமுது ஈந்தாய் நீயே என்றும்;
யாவர்க்கும் தாங்க ஒணா நஞ்சம் உண்டு,
பொறுத்தாய், புலன்ஐந்தும், நீயே என்றும்;
நின்ற நெய்த்தானா!—என் நெஞ்சு உளாயே. 10

திரு நெய்த்தானம் VI-42 திருத் தாண்டகம்

மெய்த்தானத்து அகம்படியுள் ஐவர் நின்று
வேண்டிற்றுக் குறை முடித்து, வினைக்குக் கூடு ஆம்
இத் தானத்து இருந்து, இங்ஙன் உய்வான் எண்ணும்
இதனை ஒழி! இயம்பக் கேள்: ஏழைநெஞ்சே!
மைத்துஆன நீள்நயனி பங்கன், வங்கம்
வரு திரைநீர் நஞ்சு உண்ட கண்டன், மேய
நெய்த்தான நன்நகர் என்று ஏத்தி நின்று,
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 1

‘‘ஈண்டா இரும் பிறவி துறவா ஆக்கை-
இது நீங்கல் ஆம்; விதி உண்டு’’ என்று சொல்ல
வேண்டாவே; நெஞ்சமே! விளம்பக் கேள், நீ;
விண்ணவர்தம் பெருமானார், மண்ணில் என்னை
ஆண்டான், அன்று அரு வரையால் புரம்மூன்று எய்த
அம்மானை, அரிஅயனும் காணா வண்ணம்
நீண்டான், உறை துறைநெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 2

பரவிப் பலபலவும் தேடி, ஓடி,
பாழ் ஆம் குரம்பைஇடைக் கிடந்து, வாளா
குரவி, குடிவாழ்க்கை வாழ எண்ணி,
குலைகை தவிர், நெஞ்சே! கூறக் கேள், நீ;
இரவிக்குலம் முதலா வானோர் கூடி
எண் இறந்த கோடி அமரர்ஆயம்
நிரவிக்க(அ)ரியவன் நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 3

அலை ஆர் வினைத் திறம் சேர் ஆக்கையுள்ளே
அகப்பட்டு, உள் ஆசை எனும் பாசம்தன்னுள்
தலைஆய், கடை ஆகும் வாழ்வில் ஆழ்ந்து
தளர்ந்து, மிக, நெஞ்சமே, அஞ்சவேண்டா!
இலை ஆர் புனக் கொன்றை, எறிநீர், திங்கள்,
இருஞ்சடைமேல் வைத்து உகந்தான்; இமையோர் ஏத்தும்
நிலையான; உறை நிறை நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 4

தினைத்தனை ஓர் பொறை இலா உயிர் போம் கூட்டைப்
பொருள் என்று மிக உன்னி, ‘‘மதியால் இந்த
அனைத்துஉலகும் ஆளல் ஆம்’’ என்று பேசும்
ஆங்காரம் தவிர், நெஞ்சே! அமரர்க்குஆக
முனைத்து வரு மதில்மூன்றும் பொன்ற, அன்று,
முடுகிய வெஞ்சிலை வளைத்து, செந்தீ மூழ்க
நினைத்த பெருங் கருணையன் நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 5

மிறை படும் இவ் உடல்வாழ்வை மெய் என்று எண்ணி,
வினையிலே கிடந்து அழுந்தி, வியவேல், நெஞ்சே!
குறைவு உடையார் மனத்து உளான்; குமரன்தாதை;
கூத்துஆடும் குணம் உடையான்; கொலை வேல் கையான்;
அறைகழலும் திருவடிமேல் சிலம்பும் ஆர்ப்ப,
அவனிதலம் பெயர வரு நட்டம் நின்ற
நிறைவு உடையான்; இடம் ஆம் நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 6

பேசப் பொருள் அலாப் பிறவிதன்னைப்
பெரிது என்று உன் சிறு மனத்தால் வேண்டி, ஈண்டு
வாசக்குழல் மடவார் போகம் என்னும்
வலைப்பட்டு, வீழாதே வருக, நெஞ்சே!
தூசக் கரி உரித்தான்; தூநீறுஆடித்
துதைந்து இலங்கு நூல் மார்பன்; தொடரகில்லா
நீசர்க்கு அரியவன்; நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 7

அஞ்சப் புலன்இவற்றால் ஆட்ட ஆட்டுண்டு,
அருநோய்க்கு இடம் ஆய உடலின் தன்மை
தஞ்சம் எனக் கருதி, தாழேல், நெஞ்சே!
தாழக் கருதுதியே? தன்னைச் சேரா
வஞ்சம் மனத்தவர்கள் காண ஒண்ணா
மணிகண்டன், ''வானவர்தம் பிரான்!'' என்று ஏத்தும்
நெஞ்சர்க்கு இனியவன், நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 8

பொருந்தாத உடல்அகத்தின் புக்க ஆவி
போம்ஆறு அறிந்துஅறிந்தே, புலை வாழ்வு உன்னி,
இருந்து. ஆங்கு இடர்ப்பட நீ வேண்டா; நெஞ்சே!
இமையவர்தம் பெருமான்; அன்று உமையாள் அஞ்ச,
கருந்தாள மதகரியை வெருவக் கீறும்
கண்ணுதல்; கண்டு அமர்ஆடி, கருதார் வேள்வி;
நிரந்தரமா இனிது உறை நெய்த்தானம் என்று
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 9

உரித்து அன்று, உனக்கு இவ் உடலின் தன்மை;
உண்மை உரைத்தேன்; விரதம்எல்லாம்
தரித்தும் தவம் முயன்றும் வாழா நெஞ்சே!
தம்மிடையில் இல்லார்க்கு ஒன்று அல்லார்க்கு அன்னன்;
எரி(த்)தான்; அனல் உடையான்; ''எண்தோளானே!
எம்பெருமான்!'' என்று ஏத்தா இலங்கைக் கோனை
நெரித்தானை, நெய்த்தானம் மேவினானை,
நினையுமா நினைந்தக்கால் உய்யல் ஆமே. 10

திருப் பூந்துருத்தி VI-43 திருத் தாண்டகம்

நில்லாத நீர் சடைமேல் நிற்பித்தானை;
நினையா என் நெஞ்சை நினைவித்தானை;
கல்லாதனஎல்லாம் கற்பித்தானை;
காணாதனஎல்லாம் காட்டினானை;
சொல்லாதனஎல்லாம் சொல்லி, என்னைத்
' தொடர்ந்து, இங்கு அடியேனை ஆளாக்கொண்டு,
பொல்லா என் நோய் தீர்த்த புனிதன்தன்னை,
புண்ணியனை,— பூந்துருத்திக் கண்டேன், நானே. 1

குற்றாலம் கோகரணம் மேவினானை;
கொடுங் கைக் கருங்கூற்றைப் பாய்ந்தான்தன்னை;
உற்று ஆலம்-நஞ்சு உண்டு ஒடுக்கினானை;
உணரா என் நெஞ்சை உணர்வித்தானை;
பற்று ஆலின்கீழ் அங்கு இருந்தான்தன்னை;
பண் ஆர்ந்த வீணை பயின்றான்தன்னை;
புற்று ஆடு அரவு ஆர்த்த புனிதன்தன்னை;
புண்ணியனை;—பூந்துருத்திக் கண்டேன், நானே. 2

எனக்கு என்றும் இனியானை, எம்மான்தன்னை,
எழில் ஆரும் ஏகம்பம் மேயான்தன்னை,
மனக்கு என்றும் வருவானை, வஞ்சர் நெஞ்சில்
நில்லானை, நின்றியூர் மேயான்தன்னை,
தனக்கு என்றும் அடியேனை ஆளாக்கொண்ட
சங்கரனை, சங்கவார்குழையான்தன்னை,
புனக் கொன்றைத்தார் அணிந்த புனிதன்தன்னை,
பொய்இலியை.—பூந்துருத்திக் கண்டேன், நானே. 3

வெறி ஆர் மலர்க்கொன்றை சூடினானை,
வெள்ளானை வந்து இறைஞ்சும் வெண்காட்டானை,
அறியாது அடியேன் அகப்பட்டேனை,
அல்லல்கடல்நின்றும் ஏற வாங்கி
''நெறிதான் இது'' என்று காட்டினானை,
நிச்சல் நலி பிணிகள் தீர்ப்பான்தன்னை,
பொறிஆடுஅரவு ஆர்த்த புனிதன்தன்னை,
பொய்இலியை,—பூந்துருத்திக் கண்டேன், நானே. 4

மிக்கானை, வெண்நீறு சண்ணித்தானை,
விண்டார் புரம்மூன்றும் வேவ நோக்கி
நக்கானை, நால்மறைகள் பாடினானை,
நல்லார்கள் பேணிப் பரவ நின்ற
தக்கானை, தண்தாமரைமேல்அண்ணல்
தலை கொண்டு மாத்திரைக்கண் உலகம்எல்லாம்
புக்கானை, புண்ணியனை, புனிதன்தன்னை,
பொய்இலியை,—பூந்துருத்திக் கண்டேன், நானே. 5

ஆர்த்தானை,—வாசுகியை,—அரைக்கு ஓர் கச்சா
அசைத்தானை; அழகுஆய பொன் ஆர் மேனிப்
பூத்தானத்தான் முடியைப் பொருந்தா வண்ணம்
புணர்த்தானை; பூங்கணையான் உடலம் வேவப்
பார்த்தானை; பரிந்தானை; பனிநீர்க்கங்கை
படர்சடைமேல் பயின்றானை; பதைப்ப யானை
போர்த்தானை; புண்ணியனை; புனிதன்தன்னை;
பொய்இலியை;—பூந்துருத்திக் கண்டேன், நானே. 6

எரித்தானை, எண்ணார் புரங்கள்மூன்றும்
இமைப்புஅளவில் பொடி ஆக; எழில் ஆர் கையால்
உரித்தானை, மதகரியை உற்றுப் பற்றி;
உமை அதனைக் கண்டு அஞ்சி நடுங்கக் கண்டு
சிரித்தானை; சீர் ஆர்ந்த பூதம் சூழ,
திருச்சடைமேல்-திங்களும் பாம்பும் நீரும்
புரித்தானை; புண்ணியனை; புனிதன்தன்னை;
பொய்இலியை;—பூந்துருத்திக் கண்டேன், நானே. 7

வைத்தானை,—வானோர்உலகம்எல்லாம்,—
வந்து இறைஞ்சி மலர் கொண்டு நின்று போற்றும்
வித்தானை; வேண்டிற்று ஒன்று ஈவான்தன்னை;
விண்ணவர்தம் பெருமானை; வினைகள் போக
உய்த்தானை; ஒலி கங்கை சடைமேல்-தாங்கி
ஒளித்தானை; ஒருபாகத்து உமையோடு ஆங்கே
பொய்த்தானை; புண்ணியனை; புனிதன்தன்னை;
பொய்இலியை;—பூந்துருத்திக் கண்டேன், நானே. 8

ஆண்டானை, வானோர்உலகம்எல்லாம்;
அந் நாள் அறியாத தக்கன் வேள்வி
மீண்டானை, விண்ணவர்களோடும் கூடி;
விரைமலர்மேல் நான்முகனும் மாலும் தேர
நீண்டானை; நெருப்புஉருவம் ஆனான்தன்னை;
நிலைஇலார் மும்மதிலும் வேவ, வில்லைப்
பூண்டானை; புண்ணியனை; புனிதன்தன்னை;
பொய்இலியை;—பூந்துருத்திக் கண்டேன், நானே. 9

மறுத்தானை, மலை கோத்து அங்கு எடுத்தான்தன்னை,
மணி முடியோடு இருபதுதோள் நெரியக் காலால்
இறுத்தானை; எழுநரம்பின் இசை கேட்டானை;
எண்திசைக்கும் கண்ஆனான் சிரம் மேல்ஒன்றை
அறுத்தானை; அமரர்களுக்கு அமுது ஈந்தானை;
யாவர்க்கும் தாங்க ஒணா நஞ்சம் உண்டு
பொறுத்தானை; புண்ணியனை; புனிதன்தன்னை;
பொய்இலியை;—பூந்துருத்திக் கண்டேன், நானே. 10

திருச் சோற்றுத்துறை VI-44 திருத் தாண்டகம்

மூத்தவனாய் உலகுக்கு முந்தினானே!
முறைமையால் எல்லாம் படைக்கின்றானே!
ஏத்துஅவனாய் ஏழ்உலகும் ஆயினானே!
இன்பனாய்த் துன்பம் களைகின்றானே!
காத்தவனாய் எல்லாம் தான் காண்கின்றானே!
கடுவினையேன் தீவினையைக் கண்டு போகத்
தீர்த்தவனே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 1

தலையவனாய் உலகுக்கு ஓர் தன்மையானே!
தத்துவனாய்ச் சார்ந்தார்க்கு இன்அமுது ஆனானே!
நிலையவனாய் நின் ஒப்பார் இல்லாதானே!
நின்று உணராக் கூற்றத்தைச் சீறிப் பாய்ந்த
கொலையவனே! கொல் யானைத் தோல் மேல் இட்ட
கூற்றுவனே! கொடிமதில்கள்மூன்றும் எய்த
சிலையவனே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 2

முற்றாத பால்மதியம் சூடினானே!
முளைத்து எழுந்த கற்பகத்தின் கொழுந்து ஒப்பானே!
உற்றார் என்று ஒருவரையும் இல்லாதானே!
உலகு ஓம்பும் ஒண்சுடரே! ஓதும் வேதம்,—
கற்றானே,—எல்லாக்கலைஞான(ம்)மும்!
கல்லாதேன் தீவினைநோய் கண்டு போகச்
செற்றானே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 3

கண்ணவனாய் உலகுஎல்லாம் காக்கின்றானே!
காலங்கள் ஊழி கண்டு இருக்கின்றானே!
விண்ணவனாய் விண்ணவர்க்கும் அருள்செய்வானே!
வேதனாய் வேதம் விரித்திட்டானே!
எண்ணவனே! எண்ணார் புரங்கள்மூன்றும்
இமையாமுன் எரி கொளுவ நோக்கி நக்க
திண்ணவனே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 4

நம்பனே! நால்மறைகள் ஆயினானே!
நடம்ஆட வல்லானே! ஞானக்கூத்தா!
கம்பனே! கச்சி மா நகர் உளானே!
கடிமதில்கள்மூன்றினையும் பொடியா எய்த
அம்பனே! அளவு இலாப் பெருமையானே!
அடியார்கட்கு ஆர் அமுதே! ஆன்ஏறு ஏறும்
செம்பொனே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 5

ஆர்ந்தவனே! உலகுஎலாம் நீயே ஆகி
அமைந்தவனே! அளவு இலாப் பெருமையானே!
கூர்ந்தவனே! குற்றாலம் மேய கூத்தா!
கொடு மூஇலையதுஓர்சூலம் ஏந்திப்
பேர்ந்தவனே! ''பிரளயங்கள்எல்லாம் ஆய
பெம்மான்!'' என்று எப்போதும் பேசும் நெஞ்சில்
சேர்ந்தவனே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 6

வானவனாய் வண்மை மனத்தினானே!
மா மணி சேர் வானோர்பெருமான், நீயே;
கானவனாய் ஏனத்தின் பின் சென்றானே!
கடிய அரணங்கள்மூன்று அட்டானே!
தானவனாய்த் தண் கயிலை மேவினானே!
தன் ஒப்பார் இல்லாத மங்கைக்கு என்றும்
தேனவனே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 7

தன்னவனாய், உலகுஎல்லாம் தானே ஆகி,
தத்துவனாய், சார்ந்தார்க்கு இன்அமுது ஆனானே!
என்னவனாய், என் இதயம் மேவினானே!
ஈசனே! பாசவினைகள் தீர்க்கும்
மன்னவனே! மலைமங்கை பாகம்ஆக
வைத்தவனே! வானோர் வணங்கும் பொன்னித்
தென்னவனே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 8

எறிந்தானே! எண்திசைக்கும் கண் ஆனானே!
ஏழ்உலகம்எல்லாம் முன்ஆய் நின்றானே!
அறிந்தார்தாம் ஓர்இருவர் அறியா வண்ணம்
ஆதியும் அந்தமும்ஆகி அங்கே
பிறிந்தானே! ''பிறர் ஒருவர் அறியா வண்ணம்
பெம்மான்!'' என்று எப்போதும் ஏத்தும் நெஞ்சில்
செறிந்தானே! திருச் சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 9

மை அனைய கண்டத்தாய்! மாலும் மற்றை
வானவரும் அறியாத வண்ணச் சூலக்
கையவனே! கடிஇலங்கைக் கோனை, அன்று,
கால்விரலால் கதிர் முடியும் தோளும் செற்ற
மெய்யவனே! அடியார்கள் வேண்டிற்று ஈயும்
விண்ணவனே! விண்ணப்பம் கேட்டு நல்கும்
செய்யவனே! திருச்சோற்றுத்துறை உளானே!
திகழ் ஒளியே! சிவனே! உன் அபயம், நானே. 10

திரு ஒற்றியூர் VI-45 திருத் தாண்டகம்

வண்டு ஓங்கு செங்கமலம் கழுநீர் மல்கும்
மதமத்தம் சேர் சடைமேல் மதியம் சூடி,
திண்தோள்கள்ஆயிரமும் வீசி நின்று,
திசை சேர நடம்ஆடி,— சிவலோக(ன்)னார்—
உண்டார் நஞ்சு, உலகுக்கு ஓர் உறுதி வேண்டி;
ஒற்றியூர் மேய ஒளி வண்ண(ன்)னார்;
கண்டேன், நான் கனவுஅகத்தில்; கண்டேற்கு என்தன்
கடும் பிணியும் சுடும் தொழிலும் கைவிட்ட(வ்)வே. 1

ஆகத்து ஓர் பாம்பு அசைத்து, வெள்ஏறு ஏறி,
அணி கங்கை செஞ்சடைமேல் ஆர்க்கச் சூடி,
பாகத்து ஓர் பெண் உடையார்; ஆணும் ஆவார்;
பசு ஏறி உழிதரும் எம் பரமயோகி;
காமத்தால் ஐங்கணையான்தன்னை வீழக்
கனலா எரிவிழித்த கண்மூன்றி(ன்)னார்—
ஓமத்தால் நால்மறைகள் ஓதல் ஓவா
ஒளி திகழும் ஒற்றியூர் உறைகின்றாரே. 2

வெள்ளத்தைச் செஞ்சடைமேல் விரும்பி வைத்தீர்!
வெண்மதியும் பாம்பும் உடனேவைத்தீர்!
கள்ளத்தை மனத்துஅகத்தே கரந்து வைத்தீர்!
கண்டார்க்குப் பொல்லாதுகண்டீர்! எல்லே
கொள்ளத்தான் இசை பாடிப் பலியும் கொள்ளீர்!
கோள் அரவும், குளிர்மதியும், கொடியும், காட்டி
உள்ளத்தை நீர் கொண்டீர்—ஓதல் ஓவா
ஒளி திகழும் ஒற்றியூர் உடைய கோவே! 3

நரை ஆர்ந்த விடை ஏறி, நீறு பூசி,
நாகம் கச்சு அரைக்கு ஆர்த்து, ஓர் தலை கை ஏந்தி,
உரையா வந்து, இல் புகுந்து, பலிதான் வேண்ட,
''எம் அடிகள்! உம் ஊர்தான் ஏதோ?'' என்ன,
''விரையாதே கேட்டியேல், வேல்கண் நல்லாய்!
விடும் கலங்கள் நெடுங்கடலுள் நின்று தோன்றும்,
திரை மோதக் கரை ஏறிச் சங்கம் ஊரும்,
திரு ஒற்றியூர்'' என்றார்; தீயஆறே! 4

மத்தமாகளியானை உரிவை போர்த்து,
வானகத்தார் தானகத்தார்ஆகி நின்று,
பித்தர்தாம் போல் அங்கு ஓர் பெருமை பேசி,
பேதையரை அச்சுறுத்தி, பெயரக் கண்டு,
பத்தர்கள்தாம்பலர் உடனேகூடிப் பாடி,
''பயின்று இருக்கும் ஊர் ஏதோ? பணியீர்!'' என்ன,
''ஒத்து அமைந்த உத்தரநாள் தீர்த்தம்ஆக
ஒளி திகழும் ஒற்றியூர்'' என்கின்றாரே. 5

கடிய விடை ஏறி,—காளகண்டர்—
கலையோடு மழுவாள் ஓர் கையில் ஏந்தி,
இடிய பலி கொள்ளார்; போவார்அல்லர்;
''எல்லாம்தான் இவ் அடிகள் யார்?'' என்பாரே;
வடிவு உடைய மங்கையும் தாமும் எல்லாம்
வருவாரை எதிர் கண்டோம்; மயிலாப்புள்ளே
செடி படு வெண்தலை ஒன்று ஏந்தி வந்து,
திரு ஒற்றியூர் புக்கார்; தீயஆறே! 6

வல்லராய்—வானவர்கள் எல்லாம் கூடி—
வணங்குவார், வாழ்த்துவார், வந்து நிற்பார்,
''எல்லை எம்பெருமானைக் காணோம்'' என்ன,
எவ்ஆற்றால் எவ்வகையால் காணமாட்டார்;
நல்லார்கள் நால்மறையோர் கூடி நேடி,
''நாம் இருக்கும் ஊர் பணியீர், அடிகேள்!'' என்ன,
''ஒல்லைதான் திரை ஏறி ஓதம் மீளும்
ஒளி திகழும் ஒற்றியூர்'' என்கின்றாரே. 7

நிலைப்பாடே நான் கண்டது; ஏடீ, கேளாய்!
நெருநலை நன்பகல் இங்கு ஓர் அடிகள் வந்து,
கலைப்பாடும் கண்மலரும் கலக்க, நோக்கி,
கலந்து பலி இடுவேன்; எங்கும் காணேன்;
சலப்பாடே; இனி ஒரு நாள் காண்பேன்ஆகில்,
தன் ஆகத்து என் ஆகம் ஒடுங்கும் வண்ணம்,
உலைப்பாடே படத் தழுவி, போகல்ஒட்டேன்—
ஒற்றியூர் உறைந்து இங்கே திரிவானையே. 8

மண் அல்லை; விண் அல்லை; வலயம் அல்லை;
மலை அல்லை; கடல் அல்லை; வாயு அல்லை;
எண் அல்லை; எழுத்து அல்லை; எரியும் அல்லை;
இரவு அல்லை; பகல் அல்லை; யாவும் அல்லை;
பெண் அல்லை; ஆண் அல்லை; பேடும் அல்லை;
பிறிது அல்லை; ஆனாயும், பெரியாய்! நீயே;
உள்-நல்லை, நல்லார்க்கு; தீயை அல்லை—
உணர்வு அரிய ஒற்றியூர் உடைய கோவே! 9

மரு உற்ற மலர்க்குழலிமடவாள் அஞ்ச,
மலை துளங்கத் திசை நடுங்கச் செறுத்து நோக்கி,
செரு உற்ற வாள் அரக்கன் வலிதான் மாள,
திருவடியின் விரல்ஒன்றால் அலற ஊன்றி,
உரு ஒற்றி அங்கு இருவர் ஓடிக் காண
ஓங்கின அவ் ஒள்அழலார் இங்கே வந்து,
''திரு ஒற்றியூர், நம் ஊர்'' என்று போனார்;
செறி வளைகள் ஒன்றுஒன்றாய்ச் சென்றஆறே! 10

திரு ஆவடுதுறை VI-46 திருத் தாண்டகம்

நம்பனை, நால்வேதம் கரை கண்டானை,
ஞானப்பெருங்கடலை, நன்மைதன்னை,
கம்பனை, கல்லால் இருந்தான்தன்னை,
கற்பகம்ஆய் அடியார்கட்கு அருள்செய்வானை,
செம்பொன்னை, பவளத்தை, திரளும் முத்தை,
திங்களை, ஞாயிற்றை, தீயை, நீரை,
அம்பொன்னை,—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 1

மின்னானை, மின்இடைச் சேர் உருமினானை,
வெண்முகில்ஆய் எழுந்து மழை பொழிவான்தன்னை,
தன்னானை, தன் ஒப்பார் இல்லாதானை,
தாய்ஆகிப் பல்உயிர்க்கு ஓர் தந்தைஆகி
என்னானை, எந்தைபெருமான்தன்னை,
இரு நிலமும் அண்டமும்ஆய்ச் செக்கர்வானே
அன்னானை,—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 2

பத்தர்கள் சித்தத்தே பாவித்தானை,
பவளக்கொழுந்தினை, மாணிக்கத்தின்
தொத்தினை, தூ நெறிஆய் நின்றான்தன்னை,
சொல்லுவார் சொல்பொருளின் தோற்றம்ஆகி
வித்தினை, முளைக் கிளையை, வேரை, சீரை,
வினைவயத்தின் தன்சார்பை, வெய்ய தீர்க்கும்
அத்தனை,—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 3

பேணிய நல் பிறை தவழ் செஞ்சடையினானை,
பித்தர்ஆம் அடியார்க்கு முத்தி காட்டும்
ஏணியை, இடர்க்கடலுள் சுழிக்கப்பட்டு இங்கு
இளைக்கின்றேற்கு அக் கரைக்கே ஏற வாங்கும்
தோணியை, தொண்டனேன் தூய சோதிச்
சுலா வெண்குழையானை, சுடர் பொன்காசின்
ஆணியை,—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 4

ஒரு மணியை, உலகுக்கு ஓர் உறுதிதன்னை,
உதயத்தின் உச்சியை, உரும் ஆனானை,
பருமணியை, பாலோடு அஞ்சுஆடினானை,
பவித்திரனை, பசுபதியை, பவளக்குன்றை,
திருமணியை, தித்திப்பை, தேன்அதுஆகி,
தீம்கரும்பின் இன்சுவையை, திகழும் சோதி
அருமணியை,—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 5

ஏற்றானை, எண்தோள் உடையான்தன்னை,
எல்லில் நடம்ஆட வல்லான்தன்னை,
கூற்றானை, கூற்றம் உதைத்தான்தன்னை,
குரைகடல்வாய் நஞ்சு உண்ட கண்டன்தன்னை,
நீற்றானை, நீள்அரவு ஒன்று ஆர்த்தான்தன்னை,
நீண்ட சடைமுடிமேல் நீர் ஆர் கங்கை-
ஆற்றானை,—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 6

கைம் மான மதகளிற்றை உரித்தான்தன்னை,
கடல் வரை வான்-ஆகாசம் ஆனான்தன்னை,
செம் மானப் பவளத்தை, திகழும் முத்தை,
திங்களை, ஞாயிற்றை, தீஆனானை,
எம்மானை, என் மனமே கோயில்ஆக
இருந்தானை, என்பு உருகும் அடியார்தங்கள்
அம்மானை,—ஆவடுதண்துறையுள் மேய 7
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே!

மெய்யானை, பொய்யரொடு விரவாதானை,
வெள்ளடையை, தண்நிழலை, வெந்தீ ஏந்தும்
கையானை, காமன் உடல் வேவக் காய்ந்த
கண்ணானை, கண்மூன்று உடையான் தன்னை,
பைஆடுஅரவம் மதிஉடனே வைத்த
சடையானை, பாய் புலித்தோல் உடையான்தன்னை,
ஐயானை,—ஆவடுதண்துறையுள் மேய 8
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே!

வேண்டாமை வேண்டுவதும் இல்லான்தன்னை,
விசயனை முன் அசைவித்த வேடன்தன்னை,
தூண்டாமைச் சுடர்விடு நல்சோதிதன்னை,
சூலப்படையானை, காலன் வாழ்நாள்
மாண்டு ஓட உதைசெய்த மைந்தன்தன்னை,
மண்ணவரும் விண்ணவரும் வணங்கி ஏத்தும்
ஆண்டானை,—ஆவடுதண்துறையுள் மேய 9
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே!

பந்து அணவு மெல்விரலாள் பாகன்தன்னை,
பாடலோடு ஆடல் பயின்றான்தன்னை,
கொந்து அணவு நறுங்கொன்றைமாலையானை,
கோல மா நீலமிடற்றான்தன்னை,
செந்தமிழோடு ஆரியனை, சீரியானை,
திருமார்பில் புரிவெண்நூல் திகழப் பூண்ட
அந்தணனை,—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 10

தரித்தானை,—தண்கடல்நஞ்சு,—உண்டான்தன்னை;
தக்கன்தன் பெரு வேள்வி தகர்த்தான்தன்னை;
பிரித்தானை; பிறை தவழ் செஞ்சடையினானை;
பெரு வலியால் மலை எடுத்த அரக்கன்தன்னை
நெரித்தானை; நேரிழையாள் பாகத்தானை;
நீசனேன் உடல் உறு நோய்ஆன தீர
அரித்தானை;—ஆவடுதண்துறையுள் மேய
அரன் அடியே அடிநாயேன் அடைந்து உய்ந்தேனே! 11

திரு ஆவடுதுறை VI-47 திருத் தாண்டகம்

திருவே, என் செல்வமே, தேனே, வானோர்
செழுஞ்சுடரே, செழுஞ்சுடர் நல் சோதி மிக்க
உருவே, என் உறவே, என் ஊனே, ஊனின்
உள்ளமே, உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவே, என் கற்பகமே, கண்ணே, கண்ணின்
கருமணியே, மணி ஆடு பாவாய்,—காவாய்,
அருஆய வல்வினைநோய் அடையா வண்ணம்!—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 1

மாற்றேன், எழுத்துஅஞ்சும் என்தன் நாவில்;
மறவேன், திருவருள்கள்; வஞ்சம் நெஞ்சின்
ஏற்றேன்; பிற தெய்வம் எண்ணா நாயேன்,
எம்பெருமான்திருவடியே எண்ணின்அல்லால்;
மேல்-தான் நீ செய்வனகள் செய்யக் கண்டு,
வேதனைக்கே இடம் கொடுத்து, நாளும்நாளும்
ஆற்றேன்; அடியேனை, ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 2

வரை ஆர் மடமங்கை பங்கா! கங்கை-
மணவாளா! வார்சடையாய்! நின்தன் நாமம்
உரையா, உயிர் போகப்பெறுவேன்ஆகில்,
உறு நோய் வந்து எத்தனையும் உற்றால் என்னே?
கரையா, நினைந்து, உருகி, கண்ணீர் மல்கி,
காதலித்து, நின் கழலே ஏத்தும் அன்பர்க்கு
அரையா! அடியேனை, ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 3

சிலைத்தார் திரிபுரங்கள் தீயில் வேவச்
சிலை வளைவித்து உமையவளை அஞ்ச நோக்கிக்
கலித்து ஆங்கு இரும்பிடிமேல் கை வைத்து ஓடும்
களிறு உரித்த கங்காளா! எங்கள் கோவே!
நிலத்தார்அவர்தமக்கே பொறைஆய், நாளும்,
நில்லா உயிர் ஓம்பும் நீதனேன்நான்
அலுத்தேன்; அடியேனை, ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 4

நறுமாமலர் கொய்து, நீரில் மூழ்கி,
நாள்தோறும் நின் கழலே ஏத்தி, வாழ்த்தி,
துறவாத துன்பம் துறந்தேன்தன்னைச்
சூழ் உலகில் ஊழ்வினை வந்து உற்றால் என்னே?
உறவுஆகி, வானவர்கள் முற்றும் வேண்ட,
ஒலிதிரைநீர்க்கடல் நஞ்சு உண்டு, உய்யக்கொண்ட
அறவா! அடியேனை, ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 5

கோன்நாரணன் அங்கம் தோள்மேல் கொண்டு,
கொழு மலரான்தன் சிரத்தைக் கையில் ஏந்தி,
கான் ஆர் களிற்று உரிவைப்போர்வை மூடி,
கங்காளவேடராய் எங்கும் செல்வீர்;
நான் ஆர், உமக்கு, ஓர் வினைக்கேட(ன்)னேன்?
நல்வினையும் தீவினையும் எல்லாம் முன்னே
ஆனாய்! அடியேனை, ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 6

உழை உரித்த மான்உரி-தோல்ஆடையானே!
உமையவள்தம் பெருமானே! இமையோர்ஏறே!
கழை இறுத்த, கருங்கடல் நஞ்சு உண்ட கண்டா!
கயிலாயமலையானே! ‘‘உன்பால் அன்பர்
பிழை பொறுத்தி!’’ என்பதுவும், பெரியோய்! நின்தன்
கடன்அன்றே? பேர்அருள் உன்பாலதுஅன்றே?—
அழைஉறுத்து மா மயில்கள் ஆலும் சோலை
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 7

உலந்தார் தலைகலன் ஒன்று ஏத்தி, வானோர்
உலகம் பலி திரிவாய்! உன்பால் அன்பு
கலந்தார் மனம் கவரும் காதலானே!
கனல் ஆடும் கையவனே! ஐயா! மெய்யே
மலம் தாங்கு உயிர்ப்பிறவி மாயக் காய
மயக்குளே விழுந்து, அழுந்தி, நாளும்நாளும்
அலந்தேன்; அடியேனை, ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 8

பல் ஆர்ந்த வெண்தலை கையில் ஏந்தி,
பசு ஏறி, ஊர்ஊரன் பலி கொள்வானே!
கல் ஆர்ந்த மலைமகளும் நீயும் எல்லாம்
கரிகாட்டில் ஆட்டு உகந்தீர்; கருதீர்ஆகில்,
எல்லாரும் என்தன்னை இகழ்வர்போலும்;
ஏழை அமண்குண்டர், சாக்கியர்கள்,—ஒன்றுக்கு
அல்லாதார்—திறத்து ஒழிந்தேன்; ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 9

துறந்தார்தம் தூ நெறிக்கண் சென்றேன்அல்லேன்;
துணைமாலை சூட்ட நான் தூயேன்அல்லேன்;
பிறந்தேன் நின் திருஅருளே பேசின்அல்லால்
பேசாத நாள்எல்லாம் பிறவா நாளே;
செறிந்து ஆர் மதில் இலங்கைக் கோமான்தன்னைச்
செறு வரைக்கீழ் அடர்த்து, அருளிச்செய்கைஎல்லாம்
அறிந்தேன்; அடியேனை, ‘‘அஞ்சேல்!’’ என்னாய்—
ஆவடுதண்துறை உறையும் அமரர்ஏறே! 10

திரு வலிவலம்

VI-48

திருத் தாண்டகம்

நல்லான்காண், நால்மறைகள் ஆயினான்காண்,
நம்பன்காண், நணுகாதார் புரம்மூன்று எய்த
வில்லான்காண், விண்ணவர்க்கும் மேல்ஆனான்காண்,
மெல்லியலாள்பாகன்காண், வேத வேள்விச்
சொல்லான்காண், சுடர்மூன்றும் ஆயினான்காண்,
தொண்டுஆகிப் பணிவார்க்குத் தொல் வான் ஈய
வல்லான்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 1

ஊனவன்காண், உடல்தனக்கு ஓர் உயிர் ஆனான்காண்,
உள்ளவன்காண், இல்லவன்காண், உமையாட்கு என்றும்
தேன் அவன்காண், திரு அவன்காண், திசை ஆனான்காண்,
தீர்த்தன்காண், பார்த்தன்தன் பணியைக் கண்ட
கானவன்காண், கடல் அவன்காண், மலை ஆனான்காண்,
களியானை ஈர்உரிவை கதறப் போர்த்த
வானவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 2

ஏயவன்காண்; எல்லார்க்கும் இயல்பு ஆனான்காண்;
இன்பன்காண்; துன்பங்கள் இல்லாதான்காண்;
தாய் அவன்காண், உலகுக்கு ஓர்; தன் ஒப்பு இல்லாத்
தத்துவன்காண்; உத்தமன்காண்; தானே எங்கும்
ஆயவன்காண்; அண்டத்துக்கு அப்பாலான்காண்;
அகம் குழைந்து, மெய் அரும்பி, அழுவார்தங்கள்
வாயவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 3

உய்த்தவன்காண்; உடல்தனக்கு ஓர் உயிர் ஆனான்காண்;
ஓங்காரத்து ஒருவன்காண்; உலகுக்கு எல்லாம்
வித்து அவன்காண்; விண் பொழியும் மழை ஆனான்காண்;
விளைவு அவன்காண்; விரும்பாதார் நெஞ்சத்து என்றும்
பொய்த்தவன்காண்; பொழில்ஏழும் தாங்கினான்காண்;
புனலோடு, வளர்மதியும், பாம்பும், சென்னி
வைத்தவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 4

கூற்று அவன்காண், குணம் அவன்காண், குறி ஆனான்காண்,
குற்றங்கள்அனைத்தும்காண், கோலம் ஆய
நீற்றவன்காண், நிழல் அவன்காண், நெருப்பு ஆனான்காண்,
நிமிர்புன்சடைமுடிமேல் நீர் ஆர் கங்கை
ஏற்றவன்காண், ஏழ்உலகும் ஆயினான்காண்,
இமைப்புஅளவில் காமனை முன் பொடிஆய் வீழ
மாற்றவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும் 5
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே.

நிலையவன்காண்; தோற்று அவன்காண்; நிறை ஆனான்காண்;
நீர் அவன்காண்; பார் அவன்காண், ஊர்மூன்று எய்த
சிலையவன்காண்; செய்ய வாய், கரிய கூந்தல்,
தேன்மொழியை ஒருபாகம் சேர்த்தினான்காண்;
கலையவன்காண்; காற்று அவன்காண்; காலன் வீழக்
கருத்தவன்காண்; கயிலாயம் என்னும் தெய்வ-
மலையவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும் 6
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே.

பெண் அவன்காண், ஆண் அவன்காண், பெரியோர்க்கு என்றும்
பெரியவன்காண், அரி அவன்காண், அயன் ஆனான்காண்,
எண் அவன்காண், எழுத்து அவன்காண், இன்பக் கேள்வி
இசை அவன்காண், இயல் அவன்காண், எல்லாம் காணும்
கண் அவன்காண், கருத்து அவன்காண், கழிந்தோர் செல்லும்
கதி அவன்காண், மதி அவன்காண், கடல்ஏழ் சூழ்ந்த
மண் அவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 7

முன்னவன்காண், பின்னவன்காண், மூவா மேனி
முதல் அவன்காண், முடிவு அவன்காண், மூன்றுசோதி
அன்னவன்காண், அடியார்க்கும் அண்டத்தார்க்கும்
அணியவன்காண், சேயவன்காண், அளவு இல் சோதி
மின் அவன்காண், உரும் அவன்காண், திருமால் பாகம்
வேண்டினன்காண், ஈண்டு புனல் கங்கைக்கு என்றும்
மன்னவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 8

நெதி அவன்காண், யாவர்க்கும் நினைய ஒண்ணா
நீதியன்காண், வேதியன்காண், நினைவார்க்கு என்றும்
கதி அவன்காண், கார் அவன்காண், கனல் ஆனான்காண்,
காலங்கள் ஊழியாக் கலந்து நின்ற
பதி அவன்காண், பழம் அவன்காண், இரதம் தான்காண்,
பாம்போடு திங்கள் பயில வைத்த
மதியவன்காண்—வானவர்கள் வணங்கி ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 9

பங்கயத்தின்மேலானும், பாலன் ஆகி
உலகு அளந்த படியானும், பரவிக் காணாது
அங்கை வைத்த சென்னியராய், அளக்கமாட்டா
அனல் அவன்காண்; அலைகடல் சூழ் இலங்கை வேந்தன்
கொங்கு அலர்த்த முடி நெரிய விரலால் ஊன்றும்
குழகன்காண்; அழகன்காண்; கோலம் ஆய
மங்கையர்க்கு ஓர்கூறன்காண்—வானோர் ஏத்தும்
வலிவலத்தான்காண்; அவன் என் மனத்து உளானே. 10

திருக் கோகரணம் VI-49 திருத் தாண்டகம்

சந்திரனும் தண்புனலும் சந்தித்தான்காண்;
தாழ்சடையான்காண்; சார்ந்தார்க்கு அமுது ஆனான்காண்;
அந்தரத்தில் அசுரர் புரம்மூன்று அட்டான்காண்;
அவ் உருவில் அவ் உருவம் ஆயினான்காண்;
பந்தரத்து நால்மறைகள் பாடினான்காண்;
பலபலவும் பாணி பயில்கின்றான்காண்;
மந்திரத்து மறை பொருளும் ஆயினான்காண்— 1
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே.

தந்த(அ)த்தன்தன் தலையைத் தாங்கினான்காண்;
சாரணன்காண்; சார்ந்தார்க்கு இன்அமுது ஆனான்காண்;
கெந்தத்தன்காண்; கெடில வீரட்டன்காண்;
கேடுஇலிகாண்; கெடுப்பார் மற்று இல்லாதான்காண்;
வெந்து ஒத்த நீறு மெய் பூசினான்காண்;
வீரன்காண்; வியன்கயிலை மேவினான்காண்;
வந்து ஒத்த நெடுமாற்கும் அறிவு ஒணான்காண்— 2
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே.

தன் உருவம் யாவர்க்கும் தாக்காதான்காண்;
தாழ்சடை எம்பெருமான்காண்; தக்கார்க்கு உள்ள
பொன்உருவச் சோதி; புனல்ஆடினான்காண்;
புராணன்காண்; பூதங்கள்ஆயினான்காண்;
மின்உருவ நுண்இடையாள் பாகத்தான்காண்;
வேழத்தின்உரி வெருவப் போர்த்தான் தான்காண்;
மன் உருஆய் மாமறைகள் ஓதினான்காண்—
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே. 3

ஆறு ஏறு செஞ்சடை எம் ஆரூரன்காண்;
அன்பன்காண்; அணி பழனம் மேயான் தான்காண்;
நீறு ஏறி நிழல் திகழும் மேனியான்காண்;
நிருபன்காண்; நிகர் ஒன்றும் இல்லாதான்காண்;
கூறு ஏறு கொடுமழுவாள்படையினான்காண்;
கொக்கரையன்காண்; குழு நல் பூதத்தான்காண்;
மாறு ஆய மதில்மூன்றும் மாய்வித்தான்காண்—
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே. 4

சென்று அச் சிலை வாங்கிச் சேர்வித்தான்காண்;
தியம்பகன்காண்; திரி புரங்கள்மூன்றும்
பொன்றப் பொடிஆக நோக்கினான்காண்;
பூதன்காண்; பூதப்படையாளீகாண்;
அன்று அப் பொழுதே அருள்செய்தான்காண்;
அனல்ஆடிகாண்; அடியார்க்கு அமுது ஆனான்காண்;
மன்றல்-மணம் கமழும் வார்சடையான்காண்—
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே. 5

பிறையோடு பெண் ஒருபால் வைத்தான் தான்காண்;
பேரவன்காண்; பிறப்பு ஒன்றும் இல்லாதான்காண்;
கறை ஓடு மணிமிடற்றுக் காபாலீகாண்;
கட்டங்கன்காண், கையில் கபர்லம் ஏந்திப்
பறையோடு பல்கீதம் பாடினான்காண்;
ஆடினான்காண், பாணிஆக நின்று;
மறையோடு மா கீதம் கேட்டான் தான்காண்—
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே. 6

மின் அளந்த மேல்முகட்டின்மேல் உற்றான்காண்;
விண்ணவர்தம் பெருமான்காண்; மேவில் எங்கும்
முன் அளந்த மூவர்க்கும் முதல் ஆனான்காண்;
மூஇலைவேல்சூலத்து எம் கோலத்தான்காண்;
எண் அளந்து என் சிந்தையே மேவினான்காண்;
ஏ வலன்காண்; இமையோர்கள் ஏத்த நின்று,
மண் அளந்த மால் அறியா மாயத்தான்காண்— 7
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே.

பின்னுசடைமேல் பிறை சூடினான்காண்;
பேர்அருளன்காண்; பிறப்பு ஒன்று இல்லாதான்காண்;
முன்னி உலகுக்கு முன் ஆனான்காண்;
மூஎயிலும் செற்று உகந்த முதல்வன் தான்காண்;
இன்ன உரு என்று அறிவு ஒணாதான் தான்காண்;
ஏழ்கடலும் ஏழ்உலகும் ஆயினான்காண்;
மன்னும் மடந்தை ஓர்பாகத்தான்காண்— 8
மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே.

வெட்ட வெடித்தார்க்கு ஓர் வெவ்அழலன்காண்;
  வீரன்காண்; வீரட்டம் மேவினான்காண்;
பொட்ட அநங்கனையும் நோக்கினான்காண்;
  பூதன்காண்; பூதப்படையினான்காண்;
கட்டக் கடுவினைகள் காத்து ஆள்வான்காண்;
  கண்டன்காண்; வண்டு உண்ட கொன்றையான்காண்;
வட்டமதிப்பாகம் சூடினான்காண்—
  மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே. 9

கையால் கயிலை எடுத்தான்தன்னைக்
  கால்விரலால்-தோள் நெரிய ஊன்றினான்காண்;
மெய்யின் நரம்புஇசையால் கேட்பித்தாற்கு
  மீண்டே அவற்கு அருள்கள் நல்கினான்காண்;
பொய்யர் மனத்துப் புறம்பு ஆவான்காண்;
  போர்ப் படையான்காண்; பொருவார் இல்லாதான்காண்;
மை கொள் மணிமிடற்று வார்சடையான்காண்—
  மா கடல் சூழ் கோகரணம் மன்னினானே. 10

திரு வீழிமிழலை VI-50 திருத் தாண்டகம்

போர் ஆனை ஈர்உரிவைப் போர்வையானை,
  புலிஅதளே உடைஆடை போற்றினானை,
பாரானை, மதியானை, பகல்ஆனானை,
  பல்உயிர்ஆய் நெடுவெளிஆய்ப் பரந்து நின்ற
நீரானை, காற்றானை, தீஆனானை,
  நினையாதார் புரம் எரிய நினைந்த தெய்வத்-
தேரானை, திரு வீழிமிழலையானை,—
  சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 1

சவம் தாங்கு மயானத்துச் சாம்பல் என்பு
  தலைஓடு மயிர்க்கயிறு தரித்தான்தன்னை,
பவம் தாங்கு பாசுபதவேடத்தானை,
  பண்டு அமரர் கொண்டு உகந்த வேள்விஎல்லாம்
கவர்ந்தானை, கச்சி ஏகம்பன்தன்னை,
  கழல் அடைந்தான்மேல் கறுத்த காலன் வீழச்
சிவந்தானை, திரு வீழிமிழலையானை,—
  சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 2

அன்று ஆலின்கீழ் இருந்து அங்கு அறம் சொன்னானை,
  அகத்தியனை உகப்பானை, அயன்மால் தேட
நின்றானை, கிடந்த கடல்நஞ்சு உண்டானை,
  நேரிழையைக் கலந்திருந்தே புலன்கள்ஐந்தும்
வென்றானை, மீயச்சூர் மேவினானை,
  மெல்லியலாள் தவத்தின் நிறை அளக்கல்உற்றுச்
சென்றானை, திரு வீழிமிழலையானை,—
  சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 3

தூயானை, சுடர்ப் பவளச்சோதியானை,
  தோன்றிய எவ்உயிர்க்கும் துணைஆய் நின்ற
தாயானை, சக்கரம் மாற்கு ஈந்தான்தன்னை,
  சங்கரனை, சந்தோக சாமம் ஓதும்
வாயானை, மந்திரிப்பார் மனத்து உளானை,
  வஞ்சனையால் அஞ்சுஎழுத்தும் வழுத்துவார்க்குச்
சேயானை, திரு வீழிமிழலையானை,— 4
  சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே.

நல்-தவத்தின் நல்லானை, தீதுஆய் வந்த
நஞ்சு அமுதுசெய்தானை, அமுதம் உண்ட
மற்ற(அ)மரர் உலந்தாலும் உலவாதானை,
வருகாலம் செல்காலம் வந்தகாலம்
உற்று அவத்தை உணர்ந்தாரும் உணரல் ஆகா
ஒரு சுடரை, இரு விசும்பின் ஊர்மூன்று ஒன்றச்
செற்றவனை, திரு வீழிமிழலையானை,—
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 5

மைவானம்மிடற்றானை, அவ் வான் மின் போல்
வளர்சடைமேல் மதியானை, மழைஆய் எங்கும்
பெய்வானை, பிச்சாடல் ஆடுவானை,
பிலவாய பேய்க்கணங்கள் ஆர்க்கச் சூல் அம்பு
ஒய்வானை, பொய் இலா மெய்யன்தன்னை,
பூதலமும் மண்டலமும் பொருந்தும் வாழ்க்கை
செய்வானை, திரு வீழிமிழலையானை,—
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 6

மிக்கானை, குறைந்து அடைந்தார் மேவலானை,
வெவ்வேறுஆய் இருமூன்றுசமயம் ஆகிப்
புக்கானை, எப்பொருட்கும் பொதுஆனானை,
பொன்னுலகத்தவர் போற்றும் பொருளுக்கு எல்லாம்
தக்கானை, தான் அன்றி வேறு ஒன்று இல்லாத்
தத்துவனை, தடவரையை நடுவு செய்த
திக்கானை, திரு வீழிமிழலையானை,—
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 7

வானவர்கோன் தோள் இறுத்த மைந்தன்தன்னை,
வளைகுளமும் மறைக்காடும் மன்னினானை,
ஊனவனை, உயிரவனை, ஒரு நாள் பார்த்தன்
உயர் தவத்தின் நிலை அறியல்உற்றுச் சென்ற
கானவனை, கயிலாயம் மேவினானை,
கங்கை சேர் சடையானை, கலந்தார்க்கு என்றும்
தேனவனை, திரு வீழிமிழலையானை,—
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 8

பரத்தானை; இப் பக்கம் பல ஆனானை;
பசுபதியை; பத்தர்க்கு முத்தி காட்டும்
வரத்தானை; வணங்குவார் மனத்து உளானை;
மாருதம், மால், எரி, மூன்றும் வாய்அம்புஈர்க்கு ஆம்
சரத்தானை; சரத்தையும் தன் தாள்கீழ் வைத்த
தபோதனனை; சடாமகுடத்து அணிந்த பைங்கண்
சிரத்தானை; திரு வீழிமிழலையானை;—
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 9

அறுத்தானை, அயன்தலைகள்அஞ்சில் ஒன்றை;
அஞ்சாதே வரை எடுத்த அரக்கன் தோள்கள்
இறுத்தானை; எழுநரம்பின் இசை கேட்டானை;
இந்துவினைத் தேய்த்தானை; இரவிதன் பல்
பறித்தானை; பகீரதற்கா வானோர் வேண்டப்
பரந்து இழியும் புனல்கங்கை பனி போல் ஆகச்
செறித்தானை; திரு வீழிமிழலையானை;—
சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே. 10

திரு வீழிமிழலை VI-51 திருத் தாண்டகம்

கயிலாயமலை உள்ளார்; காரோணத்தார்;
கந்தமாதனத்து உளார்; காளத்தி(ய்)யார்;
மயிலாடுதுறை உளார்; மாகாளத்தார்;
வக்கரையார்; சக்கரம் மாற்கு ஈந்தார்; வாய்ந்த
அயில்வாய சூலமும், காபால(ம்)மும்,
அமரும் திருக்கரத்தார்; ஆன்ஏறு ஏறி,
வெயில்ஆய சோதி விளங்கும் நீற்றார்—
வீழிமிழலையே மேவினாரே. 1

பூதி அணி பொன்நிறத்தர்; பூணநூலர்;
பொங்கு அரவர்; சங்கரர்; வெண்குழை ஓர் காதர்;
கேதிசரம் மேவினார்; கேதாரத்தார்;
கெடில வடஅதிகைவீரட்டத்தார்;
மா துயரம் தீர்த்து என்னை உய்யக்கொண்டார்;
மழபாடி மேய மணவாள(ன்)னார்;
வேதிகுடி உளார்; மீயச்சூரார்—
வீழிமிழலையே மேவினாரே. 2

அண்ணாமலை அமர்ந்தார்; ஆரூர் உள்ளார்;
அளப்பூரார்; அந்தணர்கள் மாடக்கோயில்
உண்ணாழிகையார், உமையாளோடும்;
இமையோர்பெருமானார்; ஒற்றியூரார்;
பெண்ணாகடத்துப் பெருந் தூங்கானை-
மாடத்தார்; கூடத்தார்; பேராவூரார்—
விண்ணோர்கள்எல்லாம் விரும்பி ஏத்த
வீழிமிழலையே மேவினாரே. 3

வெண்காட்டார்; செங்காட்டங்குடியார்; வெண்ணி
நன்நகரார்; வேட்களத்தார்; வேதம் நாவார்;
பண் காட்டும் வண்டு ஆர் பழனத்து உள்ளார்;
பராய்த்துறையார்; சிராப்பள்ளி உள்ளார்—பண்டு ஓர்
வெண்கோட்டுக் கருங்களிற்றைப் பிளிறப் பற்றி
உரித்து, உரிவை போர்த்த விடலைவேடம்
விண் காட்டும் பிறைநுதலி அஞ்சக் காட்டி,
வீழிமிழலையே மேவினாரே. 4

புடை சூழ்ந்த பூதங்கள் வேதம் பாடப்
புலியூர்ச் சிற்றம்பலத்தே நடம்ஆடு(வ்)வார்;
உடை சூழ்ந்த புலித்தோலர்; கலிக் கச்சி(ம்)மேற்-
றளி உளார்; குளிர்சோலை ஏகம்பத்தார்;
கடை சூழ்ந்து பலி தேரும் கங்காள(ன்)னார்;
கழுமலத்தார்; செழு மலர்த்தார்க் குழலியோடும்
விடை சூழ்ந்த வெல் கொடியார்—மல்கு செல்வ
வீழிமிழலையே மேவினாரே. 5

பெரும்புலியூர் விரும்பினார்; பெரும் பாழி(ய்)யார்;
பெரும்பற்றப்புலியூர் மூலட்டானத்தார்;
இரும்புதலார்; இரும்பூளை உள்ளார்; ஏர் ஆர்
இன்னம்பரார்; ஈங்கோய்மலையார்; இன்சொல்
கரும்பு அனையாள் உமையோடும் கருகாவூரார்;
கருப்பறியலூரார்; கரவீரத்தார்—
விரும்பு அமரர் இரவுபகல் பரவி ஏத்த
வீழிமிழலையே மேவினாரே. 6

மறைக்காட்டார்; வலிவலத்தார்; வாய்மூர் மேயார்;
வாழ்கொளிபுத்தூரார்; மாகாளத்தார்;
கறை(க்)காட்டும் கண்டனார்; காபாலி(ய்)யார்;
கற்குடியார்; விற்குடியார்; கானப்பேரார்;
பறை(க்)காட்டும் குழிவிழிகண் பல்பேய் சூழப்
பழையனூர் ஆலங்காட்டு அடிகள் பண்டு ஓர்
மிறை(க்)காட்டும் கொடுங் காலன் வீடப் பாய்ந்தார்—
வீழிமிழலையே மேவினாரே. 7

அஞ்சைக்களத்து உள்ளார்; ஐயாற்று உள்ளார்;
ஆரூரார்; பேரூரார்; அழுந்தூர் உள்ளார்;
தஞ்சைத் தளிக்குளத்தார்; தக்களூரார்;
சாந்தை அயவந்தி தங்கினார்தாம்;
நஞ்சைத் தமக்கு அமுதா உண்ட நம்பர்;
நாகேச்சுரத்து உள்ளார்; நாரையூரார்;
வெஞ்சொல் சமண்சிறையில் என்னை மீட்டார்—
வீழிமிழலையே மேவினாரே. 8

கொண்டல் உள்ளார்;கொண்டீச்சுரத்தின் உள்ளார்;
கோவலூர்வீரட்டம் கோயில்கொண்டார்;
தண்டலையார்; தலையாலங்காட்டில் உள்ளார்;
தலைச்சங்கைப் பெருங்கோயில் தங்கினார்தாம்;
வண்டலொடு மணல் கொணரும் பொன்னிநன்நீர்
வலஞ்சுழியார்; வைகலில் மேல்மாடத்து உள்ளார்;
வெண்தலை கைக் கொண்ட விகிர்த வேடர்—
வீழிமிழலையே மேவினாரே. 9

அரிச்சந்திரத்து உள்ளார்; அம்பர் உள்ளார்;
அரிபிரமர்இந்திரர்க்கும் அரியர் ஆனார்;
புரிச்சந்திரத்து உள்ளார்; போகத்து உள்ளார்;
பொருப்புஅரையன்மகளோடு விருப்பர்ஆகி
எரிச் சந்தி வேட்கும் இடத்தார்; ஏம-
கூடத்தார் பாடத் தேன்இசை ஆர் கீதர்;
விரிச்சு அங்கை எரிக் கொண்டு அங்கு ஆடும் வேடர்—
வீழிமிழலையே மேவினாரே. 10

புன்கூரார்; புறம்பயத்தார்; புத்தூர் உள்ளார்;
பூவணத்தார்; புலிவலத்தார்; வலியின் மிக்க
தன் கூர்மை கருதி வரை எடுக்கல்உற்றான்
தலைகளொடு மலைகள் அன தாளும் தோளும்
பொன் கூரும் கழல்அடி ஓர்விரலால் ஊன்றி,
பொருப்புஅதன்கீழ் நெரித்து, அருள்செய் புவனநாதர்;
மின் கூரும் சடைமுடியார்; விடையின் பாகர்—
வீழிமிழலையே மேவினாரே. 11

திரு வீழிமிழலை   VI-52   திருத் தாண்டகம்

கண் அவன்காண்; கண்ஒளி சேர் காட்சியான்காண்;
கந்திருவம் பாட்டுஇசையில் காட்டுகின்ற
பண் அவன்காண்; பண்அவற்றின் திறம் ஆனான்காண்;
பழம்ஆகிச் சுவைஆகிப் பயக்கின்றான்காண்;
மண் அவன்காண்; தீ அவன்காண்; நீர் ஆனான்காண்;
வந்து அலைக்கும் மாருதன்காண்; மழைமேகம் சேர்
விண் அவன்காண்; விண்ணவர்க்கும் மேல்ஆனான்காண்—
விண் இழி தண் வீழிமிழலையானே. 1

ஆலைப் படு கரும்பின் சாறு போல
அண்ணிக்கும் அஞ்சுஎழுத்தின் நாமத்தான்காண்;
சீலம் உடை அடியார் சிந்தையான்காண்;
திரி புரம்மூன்று எரிபடுத்த சிலையினான்காண்;
பாலினொடு தயிர்நறுநெய்ஆடினான்காண்;
பண்டரங்கவேடன்காண்; பலி தேர்வான்காண்;
வேலைவிடம் உண்ட மிடற்றினான்காண்—
விண் இழி தண் வீழிமிழலையானே. 2

தண்மையொடு வெம்மைதான் ஆயினான்காண்;
சக்கரம் புள்பாகற்கு அருள்செய்தான்காண்;
கண்ணும் ஒருமூன்று உடைய காபாலிகாண்;
காமன் உடல் வேவித்த கண்ணினான்காண்;
எண் இல் சமண் தீர்த்து என்னை ஆட்கொண்டான்காண்;
இருவர்க்கு எரிஆய் அருளினான்காண்;
விண்ணவர்கள் போற்ற இருக்கின்றான்காண்—
விண் இழி தண் வீழிமிழலையானே. 3

காது இசைந்த சங்கக்குழையினான்காண்;
கனகமலை அனைய காட்சியான்காண்;
மாது இசைந்த மா தவமும் சோதித்தான்காண்;
வல் ஏனவெள்எயிற்று ஆபரணத்தான்காண்;
ஆதியன்காண்; அண்டத்துக்கு அப்பாலான்காண்;
ஐந்தலைமாநாகம் நாண் ஆக்கினான்காண்;
வேதியன்காண்; வேதவிதி காட்டினான்காண்—
விண் இழி தண் வீழிமிழலையானே. 4

நெய்யினொடு பால்இளநீர்ஆடினான்காண்;
நித்தமணவாளன் என நிற்கின்றான்காண்;
கையில் மழுவாளொடு மான் ஏந்தினான்காண்;
காலன் உயிர் காலால் கழிவித்தான்காண்;
செய்யதிருமேனியில் வெண்நீற்றினான்காண்;
செஞ்சடைமேல் வெண்மதியம் சேர்த்தினான்காண்;
வெய்ய கனல் விளையாட்டு ஆடினான்காண்— 5
விண் இழி தண் வீழிமிழலையானே.

கண் துஞ்சும் கருநெடுமால் ஆழி வேண்டி,
கண் இடந்து, சூட்ட, கண்டு அருளுவான்காண்;
வண்டு உண்ணும் மதுக் கொன்றை, வன்னி, மத்தம்,
வான்கங்கை, சடைக் கரந்த மாதேவன்காண்;
பண் தங்கு மொழி மடவாள் பாகத்தான்காண்;
பரமன்காண்; பரமேட்டிஆயினான்காண்;
வெண்திங்கள் அரவொடு செஞ்சடை வைத்தான்காண்— 6
விண் இழி தண் வீழிமிழலையானே.

கல்பொலி தோள் சலந்தரனைப் பிளந்த ஆழி
கருமாலுக்கு அருள்செய்த கருணையான்காண்;
வில் பொலி தோள் விசயன் வலி தேய்வித்தான்காண்;
வேடுவனாய்ப் போர் பொருது காட்டினான்காண்;
தற்பரம்ஆய் நற்பரம்ஆய் நிற்கின்றான்காண்;
சதாசிவன்காண்; தன் ஒப்பார் இல்லாதான்காண்;
வெற்புஅரையன்பாவை விருப்பு உளான்காண்— 7
விண் இழி தண் வீழிமிழலையானே.

மெய்த்தவன்காண், மெய்த்தவத்தில் நிற்பார்க்கு எல்லாம்;
விருப்பு இலா இருப்புமன வினையர்க்கு என்றும்
பொய்த்தவன்காண்; புத்தன் மறவாது ஓடி
எறி சல்லி புதுமலர்கள் ஆக்கினான்காண்;
உய்த்தவன்காண், உயர் கதிக்கே உள்கினாரை;
உலகுஅனைத்தும் ஒளித்து அளித்திட்டு உய்யச் செய்யும்
வித்தகன்காண்—வித்தகர்தாம் விரும்பி ஏத்தும்
விண் இழி தண் வீழிமிழலையானே. 8

சந்திரனைத் திருவடியால்-தளர்வித்தான்காண்;
தக்கனையும் முனிந்து எச்சன் தலை கொண்டான்காண்;
இந்திரனைத் தோள் முறிவித்து அருள்செய்தான்காண்;
ஈசன்காண்; நேசன்காண்,—நினைவோர்க்கு எல்லாம்,—
மந்திரமும் மறைப்பொருளும் ஆயினான்காண்;
மாலொடு அயன் மேலொடு கீழ் அறியா வண்ணம்
வெந்தழலின் விரி சுடர்ஆய் ஓங்கினான்காண்—
விண் இழி தண் வீழிமிழலையானே. 9

ஈங்கைப் பேர் ஈமவனத்து இருக்கின்றான்காண்;
எம்மான்காண்; கைம்மாவின்உரி போர்த்தான்காண்;
ஓங்கு மலைக்கு அரையன்தன் பாவையோடும்
ஓர்உருஆய் நின்றான்காண்; ஓங்காரன்காண்;
கோங்கு மலர்க்கொன்றைஅம்தார்க் கண்ணியான்காண்;
கொல் ஏறு வெல் கொடிமேல் கூட்டினான்காண்;
வேங்கைவரிப்புலித்தோல் மேல்ஆடையான்காண்—
விண் இழி தண் வீழிமிழலையானே. 10

திரு வீழிமிழலை VI-53 திருத் தாண்டகம்

மான் ஏறு கரம் உடைய வரதர்போலும்;
மால்வரை கால் வளை வில்லா வளைத்தார்போலும்;
கான் ஏறு கரி கதற உரித்தார்போலும்;
கட்டங்கம், கொடி, துடி, கைக் கொண்டார்போலும்;
தேன் ஏறு திருஇதழித்தாரார்போலும்;
திருவீழிமிழலை அமர் செல்வர்போலும்;
ஆன்ஏறுஅது ஏறும் அழகர்போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 1

சமரம் மிகு சலந்தரன் போர் வேண்டினானைச்
சக்கரத்தால் பிளப்பித்த சதுரர்போலும்;
நமனை ஒரு கால் குறைத்த நாதர்போலும்;
நாரணனை இடப்பாகத்து அடைத்தார்போலும்;
குமரனையும் மகன்ஆக உடையார்போலும்;
குளிர் வீழிமிழலை அமர் குழகர்போலும்;
அமரர்கள் பின் அமுது உண, நஞ்சு உண்டார்போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 2

நீறு அணிந்த திருமேனி நிமலர்போலும்;
நேமி, நெடுமாற்கு, அருளிச்செய்தார்போலும்;
ஏறு அணிந்த கொடி உடை எம் இறைவர்போலும்;
எயில்மூன்றும் எரிசரத்தால் எய்தார்போலும்;
வேறு அணிந்த கோலம் உடை வேடர்போலும்;
வியன்வீழிமிழலை உறை விகிர்தர்போலும்;
ஆறு அணிந்த சடாமகுடத்து அழகர்போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 3

கைவேழமுகத்தவனைப் படைத்தார்போலும்;
கயாசுரனை அவனால் கொல்வித்தார்போலும்;
செய் வேள்வித் தக்கனை முன் சிதைத்தார்போலும்;
திசைமுகன்தன் சிரம் ஒன்று சிதைத்தார்போலும்;
மெய் வேள்விமூர்த்தி தலை அறுத்தார்போலும்;
வியன்வீழிமிழலை இடம் கொண்டார்போலும்;
ஐவேள்வி, ஆறுஅங்கம், ஆனார்போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 4

துன்னத்தின் கோவணம் ஒன்று உடையார்போலும்;
சுடர்மூன்றும் சோதியும்ஆய்த் தூயார்போலும்;
பொன் ஒத்த திருமேனிப் புனிதர்போலும்;
பூதகணம் புடை சூழ வருவார்போலும்;
மின் ஒத்த செஞ்சடை வெண்பிறையார்போலும்;
வியன்வீழிமிழலை சேர் விமலர்போலும்;
அன்னத்தேர்அயன் முடி சேர் அடிகள்போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 5

மாலாலும் அறிவு அரிய வரதர்போலும்;
மறவாதார் பிறப்பு அறுக்க வல்லார்போலும்;
நால்ஆய மறைக்கு இறைவர் ஆனார்போலும்;
நாம எழுத்துஅஞ்சுஆய நம்பர்போலும்;
வேல் ஆர் கை வீரியை முன் படைத்தார்போலும்;
வியன்வீழிமிழலை அமர் விகிர்தர்போலும்;
ஆலாலம் மிடற்று அடக்கி அளித்தார்போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 6

பஞ்சு அடுத்த மெல்விரலாள் பங்கர்போலும்;
பைந்நாகம் அரைக்கு அசைத்த பரமர்போலும்;
மஞ்சு அடுத்த மணிநீலகண்டர்போலும்;
வடகயிலைமலை உடைய மணாளர்போலும்;
செஞ்சடைக்கண் வெண்பிறை கொண்டு அணிந்தார்போலும்;
திரு வீழிமிழலை அமர் சிவனார்போலும்;
அஞ்சு அடக்கும் அடியவர்கட்கு அணியார்போலும்— 7
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே.

குண்டரொடு பிரித்து எனை ஆட்கொண்டார்போலும்;
குடமூக்கில் இடம் ஆக்கிக்கொண்டார்போலும்;
புண்டரிகப்புதுமலர் ஆதனத்தார்போலும்;
புள்அரசைக் கொன்று உயிர் பின் கொடுத்தார்போலும்;
வெண்தலையில் பலி கொண்ட விகிர்தர்போலும்;
வியன்வீழிமிழலைநகர் உடையார்போலும்;
அண்டத்து உப் புறத்து அப்பால் ஆனார்போலும்— 8
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே.

முத்து அனைய முகிழ் முறுவல் உடையார்போலும்;
மொய் பவளக்கொடி அனைய சடையார்போலும்;
எத்தனையும் பத்தி செய்வார்க்கு இனியார்போலும்;
இரு-நான்குமூர்த்திகளும் ஆனார்போலும்;
மித்திர வச்சிரவணற்கு விருப்பர்போலும்;
வியன்வீழிமிழலை அமர் விகிர்தர்போலும்;
அத்தனொடும் அம்மை எனக்கு ஆனார்போலும்— 9
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே.

கரி உரிசெய்து உமை வெருவக் கண்டார்போலும்;
கங்கையையும் செஞ்சடைமேல் கரந்தார்போலும்;
எரிஅது ஒரு கை தரித்த இறைவர்போலும்;
ஏனத்தின் கூன்எயிறு பூண்டார்போலும்;
விரிகதிரோர்இருவரை முன் வெகுண்டார்போலும்;
வியன்வீழிமிழலை அமர் விமலர்போலும்;
அரிபிரமர் துதிசெய நின்று அளித்தார்போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 10

கயிலாயமலை எடுத்தான் கதறி வீழக்
கால்விரலால் அடர்த்து அருளிச்செய்தார்போலும்;
குயில் ஆய மென்மொழியாள் குளிர்ந்து நோக்கக்
கூத்துஆட வல்ல குழகர்போலும்;
வெயில்ஆய சோதிவிளக்கு ஆனார்போலும்;
வியன்வீழிமிழலை அமர் விகிர்தர்போலும்;
அயில் ஆய மூஇலைவேல்படையார் போலும்—
அடியேனை ஆள்உடைய அடிகள்தாமே. 11

திருப் புள்ளிருக்குவேளூர் VI-54 திருத் தாண்டகம்

ஆண்டானை, அடியேனை ஆளாக்கொண்டு;
அடியோடு முடி அயன் மால் அறியா வண்ணம்
நீண்டானை; நெடுங்கள மா நகரான்தன்னை;
நேமி வான் படையால் நீள் உரவோன் ஆகம்
கீண்டானை; கேதாரம் மேவினானை;
கேடுஇலியை; கிளர் பொறிவாள்அரவோடு என்பு
பூண்டானை; புள்ளிருக்குவேளூரானை;—
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே! 1

சீர்த்தானை, சிறந்து அடியேன் சிந்தையுள்ளே
திகழ்ந்தானை, சிவன்தன்னை, தேவதேவை,
கூர்த்தானை, கொடு நெடுவேல் கூற்றம்தன்னைக்
குரைகழலால் குமைத்து முனி கொண்ட அச்சம்
பேர்த்தானை, பிறப்புஇலியை, இறப்பு ஒன்று இல்லாப்
பெம்மானை, கைம்மாவின்உரிவை பேணிப்
போர்த்தானை, புள்ளிருக்குவேளூரானை,—
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே! 2

பத்திமையால் பணிந்து, அடியேன்தன்னைப் பல்-நாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை;
எத்தேவும் ஏத்தும் இறைவன்தன்னை;
எம்மானை; என் உள்ளத்துள்ளே ஊறும்
அத் தேனை; அமுதத்தை; ஆவின் பாலை;
அண்ணிக்கும் தீம்கரும்பை; அரனை; ஆதிப்-
புத்தேளை; புள்ளிருக்குவேளூரானை;—
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே! 3

இருள்ஆய உள்ளத்தின் இருளை நீக்கி,
இடர்பாவம் கெடுத்து, ஏழையேனை உய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டி, தன் போல்
சிவலோகநெறி அறியச் சிந்தை தந்த
அருளானை; ஆதி மா தவத்து உளானை;
ஆறுஅங்கம் நால்வேதத்து அப்பால் நின்ற
பொருளானை; புள்ளிருக்குவேளூரானை;—
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே! 4

மின்உருவை; விண்ணகத்தில் ஒன்றுஆய், மிக்கு
வீசும் கால்தன்அகத்தில் இரண்டுஆய், செந்தீத்-
தன்உருவில் மூன்றுஆய், தாழ் புனலில் நான்குஆய்,
தரணிதலத்து அஞ்சுஆகி, எஞ்சாத் தஞ்ச
மன் உருவை; வான் பவளக்கொழுந்தை; முத்தை;
வளர் ஒளியை; வயிரத்தை; மாசு ஒன்று இல்லாப்
பொன்உருவை; புள்ளிருக்குவேளூரானை;—
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே! 5

அறை ஆர் பொன்கழல் ஆர்ப்ப அணி ஆர் தில்லை
அம்பலத்துள் நடம்ஆடும் அழகன்தன்னை,
கறை ஆர் மூஇலைநெடுவேல் கடவுள்தன்னை,
கடல் நாகைக்காரோணம் கருதினானை,
இறையானை, என் உள்ளத்துள்ளே விள்ளாது
இருந்தானை, ஏழ்பொழிலும் தாங்கி நின்ற
பொறையானை, புள்ளிருக்குவேளூரானை,—
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே! 6

நெருப்பு அனைய திருமேனி வெண்நீற்றானை,
நீங்காது என் உள்ளத்தினுள்ளே நின்ற
விருப்பவனை, வேதியனை, வேதவித்தை,
வெண்காடும் வியன்துருத்திநகரும் மேவி
இருப்பவனை, இடைமருதோடு ஈங்கோய் நீங்கா
இறையவனை, எனை ஆளும் கயிலை என்னும்
பொருப்பவனை, புள்ளிருக்குவேளூரானை,—
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே! 7

பேர்ஆயிரம் பரவி வானோர் ஏத்தும்
பெம்மானை, பிரிவு இலா அடியார்க்கு என்றும்
வாராத செல்வம் வருவிப்பானை,
மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித்
தீரா நோய் தீர்த்து அருளவல்லான்தன்னை,
திரிபுரங்கள் தீ எழத் திண் சிலை கைக் கொண்ட
போரானை, புள்ளிருக்குவேளூரானை,— 8
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே!

பண்ணியனை, பைங்கொடியாள் பாகன்தன்னை,
படர்சடைமேல் புனல் கரந்த படிறன்தன்னை,
நண்ணியனை, என் ஆக்கித் தன் ஆனானை,
நால்மறையின் நல்பொருளை, நளிர்வெண்திங்கள்-
கண்ணியனை, கடிய நடை விடை ஒன்று ஏறும்
காரணனை, நாரணனை, கமலத்து ஓங்கும்
புண்ணியனை, புள்ளிருக்குவேளூரானை,— 9
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே!

இறுத்தானை, இலங்கையர்கோன் சிரங்கள்பத்தும்;
எழுநரம்பின் இன்இசை கேட்டு இன்புஉற்றானை;
அறுத்தானை, அடியார்தம் அருநோய் பாவம்;
அலைகடலில் ஆலாலம் உண்டு கண்டம்
கறுத்தானை; கண்அழலால் காமன் ஆகம்
காய்ந்தானை; கனல், மழுவும், கலையும், அங்கை
பொறுத்தானை; புள்ளிருக்குவேளூரானை;— 10
போற்றாதே ஆற்ற நாள் போக்கினேனே!

திருக் கயிலாயம்

VI-55 போற்றித் திருத் தாண்டகம்

வே(ற்)றுஆகி விண்ஆகி நின்றாய், போற்றி!
மீளாமே ஆள் என்னைக் கொண்டாய், போற்றி!
ஊற்றுஆகி உள்ளே ஒளித்தாய், போற்றி!
ஓவாத சத்தத்து ஒலியே, போற்றி!
ஆற்றுஆகி அங்கே அமர்ந்தாய், போற்றி!
ஆறுஅங்கம் நால்வேதம் ஆனாய், போற்றி!
காற்றுஆகி எங்கும் கலந்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 1

பிச்சுஆடல் பேயோடு உகந்தாய் போற்றி!
பிறவி அறுக்கும் பிரானே, போற்றி!
வைச்சு ஆடல் நன்று மகிழ்ந்தாய், போற்றி!
மருவி என் சிந்தை புகுந்தாய், போற்றி!
பொய்ச் சார் புரம்மூன்றும் எய்தாய், போற்றி!
போகாது என் சிந்தை புகுந்தாய், போற்றி!
கச்சு ஆக நாகம் அசைத்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 2

மருவார் புரம்மூன்றும் எய்தாய், போற்றி!
மருவி என் சிந்தை புகுந்தாய், போற்றி!
உருஆகி என்னைப் படைத்தாய், போற்றி!
உள் ஆவி வாங்கி ஒளித்தாய், போற்றி!
திருஆகி நின்ற திறமே, போற்றி!
தேசம் பரவப்படுவாய், போற்றி!
கருஆகி ஓடும் முகிலே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 3

வானத்தார் போற்றும் மருந்தே, போற்றி!
வந்து என்தன் சிந்தை புகுந்தாய், போற்றி!
ஊனத்தை நீக்கும் உடலே, போற்றி!
ஓங்கி அழல்ஆய் நிமிர்ந்தாய், போற்றி!
தேன(த்)தை வார்த்த தெளிவே, போற்றி!
தேவர்க்கும் தேவனாய் நின்றாய், போற்றி!
கானத் தீஆடல் உகந்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 4

ஊர் ஆகி நின்ற உலகே, போற்றி!
ஓங்கி அழல்ஆய் நிமிர்ந்தாய், போற்றி!
பேர் ஆகி எங்கும் பரந்தாய், போற்றி!
பெயராது என் சிந்தை புகுந்தாய், போற்றி!
நீர்ஆவி ஆன நிழலே, போற்றி!
நேர்வார் ஒருவரையும் இல்லாய், போற்றி!
கார்ஆகி நின்ற முகிலே, போற்றி!— 5
கயிலைமலையானே, போற்றிபோற்றி!

சில்உருஆய்ச் சென்று திரண்டாய், போற்றி!
தேவர் அறியாத தேவே, போற்றி!
புல்உயிர்க்கும் பூட்சி புணர்த்தாய், போற்றி!
போகாது என் சிந்தை புகுந்தாய், போற்றி!
பல்உயிர்ஆய்ப் பார்தோறும் நின்றாய், போற்றி!
பற்றி உலகை விடாதாய், போற்றி!
கல் உயிர்ஆய் நின்ற கனலே, போற்றி!— 6
கயிலைமலையானே, போற்றிபோற்றி!

பண்ணின் இசைஆகி நின்றாய், போற்றி!
பாவிப்பார் பாவம் அறுப்பாய், போற்றி!
எண்ணும் எழுத்தும் சொல் ஆனாய், போற்றி!
என் சிந்தை நீங்கா இறைவா, போற்றி!
விண்ணும் நிலனும் தீ ஆனாய், போற்றி!
மேலவர்க்கும் மேல்ஆகி நின்றாய், போற்றி!
கண்ணின்மணிஆகி நின்றாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 7

இமையாது உயிராது இருந்தாய், போற்றி!
என் சிந்தை நீங்கா இறைவா, போற்றி!
உமை பாகம் ஆகத்து அணைத்தாய், போற்றி!
ஊழிஏழ்ஆன ஒருவா, போற்றி!
அமையா அருநஞ்சம் ஆர்ந்தாய், போற்றி!
ஆதிபுராணனாய் நின்றாய், போற்றி!
கமை ஆகி நின்ற கனலே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 8

மூவாய், பிறவாய், இறவாய், போற்றி!
முன்னமே தோன்றி முளைத்தாய், போற்றி!
தேவாதிதேவர் தொழும் தேவே, போற்றி!
சென்று ஏறி எங்கும் பரந்தாய், போற்றி!
ஆவா! அடியேனுக்கு எல்லாம், போற்றி!
அல்லல் நலிய அலந்தேன், போற்றி!
காவாய்! கனகத்திரளே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 9

நெடிய விசும்போடு கண்ணே, போற்றி!
நீள அகலம் உடையாய், போற்றி!
அடியும் முடியும் இகலி, போற்றி!
அங்கு ஒன்று அறியாமை நின்றாய், போற்றி!
கொடிய வன்கூற்றம் உதைத்தாய், போற்றி!
கோயிலா என் சிந்தை கொண்டாய், போற்றி!
கடிய உருமொடு மின்னே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 10

உண்ணாது உறங்காது இருந்தாய், போற்றி!
ஓதாதே வேதம் உணர்ந்தாய், போற்றி!
எண்ணா இலங்கைக்கோன்தன்னைப் போற்றி!
இறை விரலால் வைத்து உகந்த ஈசா, போற்றி!
பண் ஆர் இசைஇன்சொல் கேட்டாய், போற்றி!
பண்டே என் சிந்தை புகுந்தாய், போற்றி!
கண்ஆய் உலகுக்கு நின்றாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 11

திருக் கயிலாயம் VI-56 போற்றித் திருத் தாண்டகம்

பொறை உடைய பூமி, நீர், ஆனாய்! போற்றி!
பூதப்படை ஆள் புனிதா, போற்றி!
நிறை உடைய நெஞ்சின்இடையாய், போற்றி!
நீங்காது என் உள்ளத்து இருந்தாய், போற்றி!
மறை உடைய வேதம் விரித்தாய், போற்றி!
வானோர் வணங்கப்படுவாய், போற்றி!
கறை உடைய கண்டம் உடையாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 1

முன்புஆகி நின்ற முதலே, போற்றி!
மூவாத மேனி முக்கண்ணா, போற்றி!
அன்புஆகி நின்றார்க்கு அணியாய், போற்றி!
ஆறு ஏறு சென்னிச் சடையாய், போற்றி!
என்பு ஆகம் எங்கும் அணிந்தாய், போற்றி!
என் சிந்தை நீங்கா இறைவா, போற்றி!
கண் பாவி நின்ற கனலே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 2

மாலை எழுந்த மதியே, போற்றி!
மன்னி என் சிந்தை இருந்தாய், போற்றி!
மேலைவினைகள் அறுப்பாய், போற்றி!
மேல் ஆடு திங்கள் முடியாய், போற்றி!
ஆலைக் கரும்பின் தெளிவே, போற்றி!
அடியார்கட்கு ஆர் அமுதம் ஆனாய், போற்றி!
காலை முளைத்த கதிரே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 3

உடலின் வினைகள் அறுப்பாய், போற்றி!
ஒள்எரி வீசும் பிரானே, போற்றி!
படரும் சடைமேல் மதியாய், போற்றி!
பல்கணக் கூத்தப்பிரானே, போற்றி!
சுடரில்-திகழ்கின்ற சோதீ, போற்றி!
தோன்றி என் உள்ளத்து இருந்தாய், போற்றி!
கடலில் ஒளிஆய முத்தே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 4

மை சேர்ந்த கண்டம் உடையாய், போற்றி!
மாலுக்கும் ஓர் ஆழி ஈந்தாய், போற்றி!
பொய் சேர்ந்த சிந்தை புகாதாய், போற்றி!
போகாது என் உள்ளத்து இருந்தாய், போற்றி!
மெய் சேரப் பால்வெண்நீறுஆடீ, போற்றி!
மிக்கார்கள் ஏத்தும் விளக்கே, போற்றி!
கை சேர் அனல் ஏந்தி ஆடீ, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 5

ஆறு ஏறு சென்னி முடியாய், போற்றி!
அடியார்கட்கு ஆர் அமுதுஆய் நின்றாய், போற்றி!
நீறு ஏறும் மேனி உடையாய், போற்றி!
நீங்காது என் உள்ளத்து இருந்தாய், போற்றி!
கூறு ஏறும் அம் கை மழுவா, போற்றி!
கொள்ளும் கிழமைஏழ் ஆனாய், போற்றி!
காறு ஏறு கண்டம்-மிடற்றாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 6

அண்டம்ஏழ் அன்று கடந்தாய், போற்றி!
ஆதிபுராணனாய் நின்றாய், போற்றி!
பண்டைவினைகள் அறுப்பாய், போற்றி!
பாரோர் விண் ஏத்தப்படுவாய், போற்றி!
தொண்டர் பரவும் இடத்தாய், போற்றி!
தொழில் நோக்கி ஆளும் சுடரே, போற்றி!
கண்டம் கறுக்கவும் வல்லாய், போற்றி!— 7
கயிலைமலையானே, போற்றிபோற்றி!

பெருகி அலைக்கின்ற ஆறே, போற்றி!
பேரா நோய் பேர விடுப்பாய், போற்றி!
உருகி நினைவார்தம் உள்ளாய், போற்றி!
ஊனம் தவிர்க்கும் பிரானே, போற்றி!
அருகி மிளிர்கின்ற பொன்னே, போற்றி!
ஆரும் இகழப்படாதாய், போற்றி!
கருகிப் பொழிந்து ஓடும் நீரே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 8

செய்யமலர்மேலான், கண்ணன், போற்றித்
தேடி உணராமை நின்றாய், போற்றி!
பொய்யா நஞ்சு உண்ட பொறையே, போற்றி!
பொருள்ஆக என்னை ஆட்கொண்டாய், போற்றி!
மெய்ஆக ஆன்அஞ்சு உகந்தாய், போற்றி!
மிக்கார்கள் ஏத்தும் குணத்தாய், போற்றி!
கைஆனைமெய்த்தோல் உரித்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 9

மேல் வைத்த வானோர்பெருமான், போற்றி!
மேல் ஆடு புரம்மூன்றும் எய்தாய், போற்றி!
சீலத்தான் தென்இலங்கை மன்னன் போற்றிச்
சிலை எடுக்க, வாய் அலற வைத்தாய், போற்றி!
கோலத்தால் குறைவுஇல்லான்தன்னை, அன்று,
கொடிதுஆகக் காய்ந்த குழகா, போற்றி!
காலத்தால் காலனையும் காய்ந்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 10

திருக் கயிலாயம் VI-57 போற்றித் திருத் தாண்டகம்

பாட்டுஆன நல்ல தொடையாய், போற்றி!
பரிசை அறியாமை நின்றாய், போற்றி!
சூட்டுஆன திங்கள் முடியாய், போற்றி!
தூ மாலைமத்தம் அணிந்தாய், போற்றி!
ஆட்டுஆனதுஅஞ்சும் அமர்ந்தாய், போற்றி!
அடங்கார் புரம் எரிய நக்காய், போற்றி!
காட்டுஆனை மெய்த்தோல் உரித்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 1

அதிரா வினைகள் அறுப்பாய், போற்றி!
ஆலநிழல்கீழ் அமர்ந்தாய், போற்றி!
சதுரா, சதுரக் குழையாய், போற்றி!
சாம்பர் மெய் பூசும் தலைவா, போற்றி!
எதிரா உலகம் அமைப்பாய், போற்றி!
என்றும் மீளா அருள்செய்வாய், போற்றி!
கதிர் ஆர் கதிருக்கு ஓர் கண்ணே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 2

செய்யாய், கரியாய், வெளியாய், போற்றி!
செல்லாத செல்வம் உடையாய், போற்றி!
ஐயாய், பெரியாய், சிறியாய், போற்றி!
ஆகாய வண்ண முடியாய், போற்றி!
வெய்யாய், தணியாய், அணியாய், போற்றி!
வேளாத வேள்வி உடையாய், போற்றி!
கை ஆர் தழல் ஆர் விடங்கா, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 3

ஆட்சி உலகை உடையாய், போற்றி!
அடியார்க்கு அமுதுஎலாம் ஈவாய், போற்றி!
சூட்சி சிறிதும் இலாதாய், போற்றி!
சூழ்ந்த கடல்நஞ்சம் உண்டாய், போற்றி!
மாட்சி பெரிதும் உடையாய், போற்றி!
மன்னி என் சிந்தை மகிழ்ந்தாய், போற்றி!
காட்சி பெரிதும் அரியாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 4

மு(ன்)னியா நின்ற முதல்வா, போற்றி!
மூவாத மேனி உடையாய், போற்றி!
என்(னி)யாய், எந்தைபிரானே, போற்றி!
ஏழ்இன்இசையே உகப்பாய், போற்றி!
மன்னிய மங்கைமணாளா, போற்றி!
மந்திரமும் தந்திரமும் ஆனாய், போற்றி!
கன்னி ஆர் கங்கைத் தலைவா, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 5

உரியாய், உலகினுக்கு எல்லாம், போற்றி!
உணர்வு என்னும் ஊர்வது உடையாய், போற்றி!
எரிஆய தெய்வச் சுடரே, போற்றி!
ஏசும் மா முண்டி உடையாய், போற்றி!
அரியாய், அமரர்கட்கு எல்லாம், போற்றி!
அறிவே அடக்கம் உடையாய், போற்றி!
கரியானுக்கு ஆழி அன்று ஈந்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 6

எண்மேலும் எண்ணம் உடையாய், போற்றி!
ஏறு அரிய ஏறும் குணத்தாய், போற்றி!
பண்மேலே பாவித்து இருந்தாய், போற்றி!
பண்ணொடு யாழ் வீணை பயின்றாய், போற்றி!
விண்மேலும் மேலும் நிமிர்ந்தாய், போற்றி!
மேலார்கள்மேலார்கள்மேலாய், போற்றி!
கண்மேலும் கண்ஒன்று உடையாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 7

முடி ஆர் சடைமேல் மதியாய், போற்றி!
முழுநீறு சண்ணித்த மூர்த்தி, போற்றி!
துடி ஆர் இடை உமையாள் பங்கா, போற்றி!
சோதித்தார் காணாமை நின்றாய், போற்றி!
அடியார் அடிமை அறிவாய், போற்றி!
அமரர்பதி ஆள வைத்தாய், போற்றி!
கடி ஆர் புரம்மூன்றும் எய்தாய், போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 8

போற்றுஇசைத்து உன் அடி பரவ நின்றாய், போற்றி!
புண்ணியனே, நண்ணல் அரியாய், போற்றி!
ஏற்று இசைக்கும் வான்மேல் இருந்தாய், போற்றி!
எண்ணாயிரம்-நுறுபெயராய், போற்றி!
நால்-திசைக்கும் விளக்குஆய நாதா, போற்றி!
நான்முகற்கும் மாற்கும் அரியாய், போற்றி!
காற்று இசைக்கும் திசைக்கு எல்லாம் வித்தே, போற்றி!—
கயிலைமலையானே, போற்றிபோற்றி! 9

திரு வலம்புரம் VI-58 திருத் தாண்டகம்

மண் அளந்த மணிவண்ணர்தாமும், மற்றை
மறையவனும், வானவரும், சூழ நின்று—
கண் மலிந்த திருநெற்றி உடையார்; ஒற்றைக்
கதநாகம் கை உடையார்; காணீர்அன்றே?—
பண் மலிந்த மொழியவரும், யானும், எல்லாம்
பணிந்து இறைஞ்சித் தம்முடைய பின்பின் செல்ல,
மண் மலிந்த வயல் புடை சூழ் மாட வீதி
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 1

சிலை நவின்று ஒரு கணையால் புரம்மூன்று எய்த
தீவண்ணர்; சிறந்து இமையோர் இறைஞ்சி ஏத்த,
கொலை நவின்ற களியானை உரிவை போர்த்து,
கூத்துஆடி, திரிதரும் அக் கூத்தர்; நல்ல
கலை நவின்ற மறையவர்கள் காணக்காண,
கடு விடைமேல், பாரிடங்கள் சூழ, காதல்
மலைமகளும் கங்கையும் தாமும் எல்லாம்
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 2

தீக் கூரும் திருமேனி ஒரு பால், மற்றை
ஒருபாலும் அரி உருவம் திகழ்ந்த செல்வர்;
ஆக்கூரில்-தான்தோன்றி புகுவார் போல,
அருவினையேன் செல்வதுமே, அப்பால் எங்கும்
நோக்கார், ஒருஇடத்தும்; நூலும் தோலும்
துதைந்து இலங்கும் திருமேனி வெண்நீறுஆடி,
வாக்கால் மறை விரித்து, மாயம் பேசி,
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 3

மூவாத மூக்கப் பாம்பு அரையில் சாத்தி
மூவர்உருஆய முதல்வர்; இந் நாள்
கோவாத எரிகணையைச் சிலைமேல் கோத்த
குழகனார்; குளிர்கொன்றை சூடி இங்கே
போவாரைக் கண்டு அடியேன் பின்பின் செல்ல,
புறக்கணித்து, தம்முடைய பூதம் சூழ,
‘‘வா வா!’’ என உரைத்து, மாயம் பேசி,
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 4

அனல் ஒரு கையது ஏந்தி, அதளினோடே
ஐந்தலைய மா நாகம் அரையில் சாத்தி,
புனல் பொதிந்த சடைக்கற்றைப் பொன் போல் மேனிப்
புனிதனார், புரிந்து அமரர் இறைஞ்சி ஏத்த,
சின விடையை மேற்கொண்டு, திரு ஆரூரும்
சிரபுரமும் இடைமருதும் சேர்வார் போல,
மனம் உருக, வளை கழல, மாயம் பேசி, 5
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே.

கறுத்தது ஒரு கண்டத்தர்; காலன் வீழக்
காலினால் காய்ந்து உகந்த காபாலி(ய்)யார்;
முறித்தது ஒரு தோல் உடுத்து, முண்டம் சாத்தி,
முனிகணங்கள் புடை சூழ, முற்றம்தோறும்
தெறித்தது ஒரு வீணையராய்ச் செல்வார்; தம் வாய்ச்
சிறு முறுவல் வந்து எனது சிந்தை வெளவ,
மறித்து ஒரு கால் நோக்காதே, மாயம் பேசி, 6
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே.

பட்டு உடுத்து, பவளம் போல் மேனிஎல்லாம்
பசுஞ்சாந்தம்கொண்டு அணிந்து, பாதம் நோவ
இட்டு எடுத்து நடம்ஆடி, இங்கே வந்தார்க்கு,
''எவ் ஊரீர், எம்பெருமான்?'' என்றேன்; ஆவி
விட்டிடும்ஆறுஅது செய்து, விரைந்து நோக்கி,
வேறு ஓர் பதி புகப் போவார் போல,
வட்டணைகள் பட நடந்து, மாயம் பேசி,
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 7

''பல்லார் பயில் பழனப் பாசூர்'' என்று,
பழனம்பதி பழைமை சொல்லி நின்றார்;
''நல்லார் நனிபள்ளி இன்று வைகி,
நாளைப் போய், நள்ளாறு சேர்தும்'' என்றார்;
சொல்லார், ஒரு இடமா; தோள் கை வீசி,
சுந்தரராய், வெந்தநீறுஆடி, எங்கும்
மல் ஆர் வயல் புடை சூழ் மாட வீதி
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 8

பொங்கு ஆடுஅரவு ஒன்று கையில் கொண்டு,
போர் வெண்மழு ஏந்தி, போகாநிற்பர்;
தங்கார் ஒருஇடத்தும், தம்மேல் ஆர்வம்
தவிர்த்துஅருளார்; ''தத்துவத்தே நின்றேன்'' என்பர்;
எங்கே இவர் செய்கை? ஒன்று ஒன்று ஒவ்வா;
என் கண்ணில்நின்று அகலா வேடம் காட்டி,
மங்குல்மதி தவழும் மாட வீதி
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 9

செங்கண் மால் சிலை பிடித்து, சேனையோடும்
சேதுபந்தனம் செய்து, சென்று புக்கு,
பொங்கு போர்பல செய்து, புகலால் வென்ற
போர் அரக்கன் நெடு முடிகள் பொடிஆய் வீழ,
அங்கு ஒரு தம் திருவிரலால் இறையே ஊன்றி,
அடர்த்து, அவற்கே அருள்புரிந்த அடிகள், இந் நாள்
வங்கம் மலி கடல் புடை சூழ் மாட வீதி
வலம்புரமே புக்கு, அங்கே மன்னினாரே. 10

திரு வெண்ணியூர் VI-59 திருத் தாண்டகம்

தொண்டு இலங்கும் அடியவர்க்கு ஓர் நெறியினாரும்,
தூ நீறு துதைந்து இலங்கும் மார்பினாரும்,
புண்டரிகத்து அயனொடு மால் காணா வண்ணம்
பொங்கு தழல்பிழம்பு ஆய புராணனாரும்,
வண்டு அமரும் மலர்க்கொன்றைமாலையாரும்,
வானவர்க்கா நஞ்சு உண்ட மைந்தனாரும்,
விண்டவர்தம் புரம்மூன்றும் எரிசெய்தாரும்—
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே. 1

நெருப்பு அனைய மேனிமேல் வெண்நீற்றாரும்,
நெற்றிமேல் ஒற்றைக்கண் நிறைவித்தாரும்,
பொருப்புஅரையன்மடப்பாவை இடப்பாலாரும்,
பூந்துருத்திநகர் மேய புராணனாரும்,
மருப்பு அனைய வெண்மதியக்கண்ணியாரும்,
வளைகுளமும் மறைக்காடும் மன்னினாரும்,
விருப்பு உடைய அடியவர்தம் உள்ளத்தாரும்—
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே. 2

கை உலாம் மூஇலைவேல் ஏந்தினாரும்,
கரிகாட்டில் எரிஆடும் கடவுளாரும்,
பை உலாம் நாகம் கொண்டு ஆட்டுவாரும்,
பரவுவார் பாவங்கள் பாற்றுவாரும்,
செய் உலாம் கயல் பாய வயல்கள் சூழ்ந்த
திருப் புன்கூர் மேவிய செல்வனாரும்,
மெய்எலாம் வெண்நீறு சண்ணித்தாரும்—
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே. 3

சடை ஏறு புனல் வைத்த சதுரனாரும்,
தக்கன்தன் பெருவேள்வி தகர்த்திட்டாரும்,
உடை ஏறு புலிஅதள்மேல் நாகம் கட்டி
உண் பலிக்கு என்று ஊர்ஊரின் உழிதர்வாரும்,
மடை ஏறிக் கயல் பாய வயல்கள் சூழ்ந்த
மயிலாடுதுறை உறையும் மணாளனாரும்,
விடை ஏறு வெல் கொடி எம் விமலனாரும்—
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே. 4

மண், இலங்கு நீர், அனல், கால், வானும், ஆகி
மற்று அவற்றின் குணம்எலாம்ஆய் நின்றாரும்;
பண் இலங்கு பாடலோடு ஆடலாரும்;
பருப்பதமும் பாசூரும் மன்னினாரும்;
கண் இலங்கு நுதலாரும்; கபாலம் ஏந்திக்
கடைதோறும் பலி கொள்ளும் காட்சியாரும்;
விண் இலங்கு வெண்மதியக்கண்ணியாரும்—
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே. 5

வீடுதனை மெய் அடியார்க்கு அருள்செய்வாரும்,
வேலைவிடம் உண்டு இருண்ட கண்டத்தாரும்,
கூடலர்தம் மூஎயிலும் எரிசெய்தாரும்,
குரைகழலால் கூற்றுவனைக் குமைசெய்தாரும்,
ஆடும் அரவு அரைக்கு அசைத்து அங்கு ஆடுவாரும்,
ஆலமரநீழல் இருந்து அறம் சொன்னாரும்,
வேடுவனாய் மேல் விசயற்கு அருள்செய்தாரும்— 6
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

மட்டு இலங்கு கொன்றைஅம்தார்-மாலை சூடி,
மடவாள்அவளோடு, மான் ஒன்று ஏந்தி,
சிட்டு இலங்கு வேடத்தார்ஆகி, நாளும்
சில்பலிக்கு என்று ஊர்ஊரின் திரிதர்வாரும்;
கட்டு இலங்கு பாசத்தால் வீச வந்த
காலன்தன் காலம் அறுப்பார்தாமும்;
விட்டுஇலங்கு வெண்குழை சேர் காதினாரும்— 7
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

செஞ்சடைக்கு ஓர் வெண்திங்கள் சூடினாரும்,
திரு ஆலவாய் உறையும் செல்வனாரும்,
அஞ்சனக் கண் அரிவை ஒருபாகத்தாரும்,
ஆறுஅங்கம் நால்வேதம்ஆய் நின்றாரும்,
மஞ்சு அடுத்த நீள் சோலை மாட வீதி
மதில் ஆரூர் புக்கு அங்கே மன்னினாரும்,
வெஞ்சினத்த வேழம்அது உரிசெய்தாரும்— 8
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே.

வளம் கிளர் மா மதி சூடும் வேணியாரும்,
வானவர்க்கா நஞ்சு உண்ட மைந்தனாரும்,
களம் கொள என் சிந்தையுள்ளே மன்னினாரும்,
கச்சி ஏகம்பத்து எம் கடவுளாரும்,
உளம் குளிர அமுது ஊறி அண்ணிப்பாரும்,
உத்தமராய் எத்திசையும் மன்னினாரும்,
விளங்(கு)கிளரும் வெண்மழு ஒன்று ஏந்தினாரும்—
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே. 9

பொன்இலங்கு கொன்றைஅம்தார்-மாலை சூடிப்
புகலூரும் பூவணமும் பொருந்தினாரும்,
கொன் இலங்கு மூஇலைவேல் ஏந்தினாரும்,
குளிர் ஆர்ந்த செஞ்சடை எம் குழகனாரும்,
தென்இலங்கை மன்னவர்கோன் சிரங்கள்பத்தும்
திருவிரலால் அடர்த்து அவனுக்கு அருள்செய்தாரும்,
மின் இலங்கு நுண்இடையாள் பாகத்தாரும்—
வெண்ணி அமர்ந்து உறைகின்ற விகிர்தனாரே. 10

திருக் கற்குடி   VI-60   திருத் தாண்டகம்

மூத்தவனை, வானவர்க்கு; மூவா மேனி
முதலவனை; திருஅரையில் மூக்கப் பாம்பு ஒன்று
ஆத்தவனை; அக்கு, அரவம், ஆரம்ஆக
அணிந்தவனை; பணிந்து அடியார் அடைந்த அன்போடு
ஏத்தவனை; இறுவரையில்-தேனை, ஏனோர்க்கு;
இன்அமுதம் அளித்தவனை; இடரை எல்லாம்
காத்தவனை; கற்குடியில் விழுமியானை;
கற்பகத்தை;—கண் ஆரக் கண்டேன், நானே. 1

செய்யானை, வெளியானை, கரியான்தன்னை,
திசைமுகனை, திசைஎட்டும் செறிந்தான்தன்னை,
ஐயானை, நொய்யானை, சீரியானை,
அணியானை, சேயானை, ஆன்அஞ்சுஆடும்
மெய்யானை, பொய்யாதும் இல்லான்தன்னை,
விடையானை, சடையானை, வெறித்த மான் கொள்
கையானை, கற்குடியில் விழுமியானை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 2

மண்அதனில் ஐந்தை; மா நீரில் நான்கை;
வயங்கு எரியில் மூன்றை; மாருதத்து இரண்டை;
விண்அதனில் ஒன்றை; விரிகதிரை;
தண்மதியை, தாரகைகள்தம்மில்; மிக்க
எண்அதனில் எழுத்தை; ஏழ்இசையை; காமன்
எழில் அழிய எரி உமிழ்ந்த இமையா நெற்றிக்-
கண்ணவனை; கற்குடியில் விழுமியானை;
கற்பகத்தை;—கண் ஆரக் கண்டேன், நானே. 3

நல்-தவனை, புற்று அரவம் நாணினானை,
நாணாது நகுதலை ஊண் நயந்தான்தன்னை,
முற்றவனை, மூவாத மேனியானை,
முந்நீரின் நஞ்சம் உகந்து உண்டான்தன்னை,
பற்றவனை, பற்றார்தம் பதிகள் செற்ற
படையானை, அடைவார்தம் பாவம் போக்கக்
கற்றவனை, கற்குடியில் விழுமியானை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 4

சங்கைதனைத் தவிர்த்து ஆண்ட தலைவன்தன்னை,
சங்கரனை, தழல் உறு தாள் மழுவாள் தாங்கும்
அம் கையனை, அங்கம் அணி ஆகத்தானை,
ஆகத்து ஓர்பாகத்தே அமர வைத்த
மங்கையனை, மதியொடு மாசுணமும் தம்மில்
மருவ விரிசடைமுடிமேல் வைத்த வான்நீர்க்-
கங்கையனை, கற்குடியில் விழுமியானை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 5

பெண்அவனை, ஆண்அவனை, பேடுஆனானை,
பிறப்புஇலியை, இறப்புஇலியை, பேரா வாணி
விண்ணவனை, விண்ணவர்க்கும் மேல்ஆனானை,
வேதியனை, வேதத்தின் கீதம் பாடும்
பண்ணவனை, பண்ணில் வரு பயன்ஆனானை,
பார்அவனை, பாரில் வாழ் உயிர்கட்கு எல்லாம்
கண்அவனை, கற்குடியில் விழுமியானை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 6

பண்டானை, பரந்தானை, குவிந்தான்தன்னை,
பாரானை, விண்ஆய் இவ் உலகம்எல்லாம்
உண்டானை, உமிழ்ந்தானை, உடையான்தன்னை,
ஒருவரும் தன் பெருமைதனை அறிய ஒண்ணா
விண்டானை, விண்டார்தம் புரங்கள்மூன்றும்
வெவ்அழலில் வெந்து பொடிஆகி வீழக்
கண்டானை, கற்குடியில் விழுமியானை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 7

வானவனை, வானவர்க்கு மேல்ஆனானை,
வணங்கும் அடியார் மனத்துள் மருவிப் புக்க
தேன்அவனை, தேவர் தொழு கழலான்தன்னை,
செய் குணங்கள்பலஆகி நின்ற வென்றிக்
கோன்அவனை, கொல்லை விடைஏற்றினானை,
குழல் முழவம் இயம்பக் கூத்துஆட வல்ல
கானவனை, கற்குடியில் விழுமியானை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 8

கொலை யானை உரி போர்த்த கொள்கையானை,
கோள் அரியை, கூர்அம்பா வரைமேல் கோத்த
சிலையானை, செம்மை தரு பொருளான்தன்னை,
திரி புரத்தோர்மூவர்க்குச் செம்மை செய்த
தலையானை, தத்துவங்கள் ஆனான்தன்னை,
தையல் ஓர்பங்கினனை, தன் கை ஏந்து
கலையானை, கற்குடியில் விழுமியானை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 9

பொழிலானை, பொழில் ஆரும் புன்கூரானை,
புறம்பயனை, அறம் புரிந்த புகலூரானை,
எழிலானை, இடைமருதின் இடம்கொண்டானை,
ஈங்கோய் நீங்காது உறையும் இறைவன்தன்னை,
அழல்ஆடு மேனியனை, அன்று சென்று அக்
குன்று எடுத்த அரக்கன் தோள் நெரிய ஊன்றும்
கழலானை, கற்குடியில் விழுமியானை, 10
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே.

திருக் கன்றுப்பூர் VI-61 திருத் தாண்டகம்

''மாதினை ஓர்கூறு உகந்தாய்! மறை கொள் நாவா!
மதிசூடீ! வானவர்கள்தங்கட்கு எல்லாம்
நாதனே!'' என்றுஎன்று பரவி, நாளும்
நைந்து உருகி, வஞ்சகம் அற்று, அன்பு கூர்ந்து,
வாதனையால் முப்பொழுதும் பூநீர் கொண்டு,
வைகல் மறவாது, வாழ்த்தி, ஏத்தி,
காதன்மையால்-தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 1

விடிவதுமே வெண்நீற்றை மெய்யில் பூசி,
வெளுத்து அமைந்த கீளொடு கோவணமும் தற்று,
''செடி உடைய வல்வினைநோய் தீர்ப்பாய்!'' என்றும்,
''செல் கதிக்கு வழி காட்டும் சிவனே!'' என்றும்,
''துடி அனைய இடை மடவாள் பங்கா!'' என்றும்,
''சுடலைதனில் நடம்ஆடும் சோதீ!'' என்றும்,
கடிமலர் தூய், தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 2

எவரேனும் தாம் ஆக; இலாடத்து இட்ட
திருநீறும் சாதனமும் கண்டால் உள்கி,
உவராதே, அவர்அவரைக் கண்டபோது
உகந்து அடிமைத்திறம் நினைந்து, அங்கு உவந்து நோக்கி,
''இவர் தேவர், அவர் தேவர்,'' என்று சொல்லி
இரண்டு ஆட்டாதுஒழிந்து, ஈசன் திறமே பேணி,
கவராதே, தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 3

''இலம்; காலம், செல்லா நாள்'' என்று, நெஞ்சத்து
இடையாதே யாவர்க்கும் பிச்சை இட்டு,
விலங்காதே, நெறி நின்று, அங்கு அறிவே மிக்கு,
மெய் அன்பு மிகப் பெய்து, பொய்யை நீக்கி,
துலங்காமே வானவரைக் காத்து நஞ்சம்
உண்ட பிரான் அடிஇணைக்கே சித்தம்வைத்து,
கலங்காதே, தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 4

''விருத்தனே! வேலைவிடம் உண்ட கண்டா!
விரிசடைமேல் வெண்திங்கள் விளங்கச் சூடும்
ஒருத்தனே! உமைகணவா! உலகமூர்த்தி!
நுந்தாத ஒண்சுடரே! அடியார்தங்கள்
பொருத்தனே!'' என்றுஎன்று புலம்பி, நாளும்
புலன்ஐந்தும் அகத்து அடக்கி, புலம்பி நோக்கி,
கருத்தினால்-தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 5

''பொசியினால் மிடைந்து புழுப் பொதிந்த போர்வைப்
பொல்லாத புலால் உடம்பை நிலாசும்'' என்று
பசியினால் மீதூரப்பட்டே, ஈட்டி,
பலர்க்கு உதவல்அது ஒழிந்து, பவளவாயார்
வசியினால் அகப்பட்டு, வீழாமுன்னம்,
வானவர்கோன் திருநாமம்அஞ்சும் சொல்லி,
கசிவினால்-தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 6

ஐயினால் மிடறு அடைப்புண்டு, ஆக்கை விட்டு(வ்)
ஆவியார் போவதுமே, அகத்தார் கூடி,
மையினால் கண் எழுதி, மாலை சூட்டி,
மயானத்தில் இடுவதன் முன், மதியம் சூடும்
ஐயனார்க்கு ஆள்ஆகி, அன்பு மிக்கு(வ்),
அகம் குழைந்து, மெய் அரும்பி, அடிகள் பாதம்
கையினால்-தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 7

திருதிமையால் ஐவரையும் காவல் ஏவி,
திகையாதே, ''சிவாயநம'' என்னும் சிந்தைச்
சுருதிதனைத் துயக்கு அறுத்து, துன்பவெள்ளக்-
கடல் நீந்திக் கரைஏறும் கருத்தே மிக்கு,
''பருதிதனைப் பல் பறித்த பாவநாசா!
பரஞ்சுடரே!'' என்றுஎன்று பரவி, நாளும்
கருதி மிகத் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 8

''குனிந்த சிலையால் புரம்மூன்று எரித்தாய்!'' என்றும்,
''கூற்று உதைத்த குரைகழல்சேவடியாய்!'' என்றும்,
''தனஞ்சயற்குப் பாசுபதம் ஈந்தாய்!'' என்றும்,
''தசக்கிரிவன் மலை எடுக்க, விரலால் ஊன்றி,
முனிந்து அவன்தன் சிரம்பத்தும் தாளும் தோளும்
முரண் அழித்திட்டு, அருள் கொடுத்த மூர்த்தி!'' என்றும்,
கனிந்து மிகத் தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணல் ஆமே! 9

திரு ஆனைக்கா VI-62 திருத் தாண்டகம்

எத் தாயர், எத் தந்தை, எச் சுற்றத்தார்,—
எம் மாடு சும்மாடு?—ஏவர் நல்லார்?
செத்தால் வந்து உதவுவார் ஒருவர் இல்லை;
சிறு விறகால்-தீ மூட்டிச் செல்லாநிற்பர்;
சித்துஆய வேடத்தாய்! நீடு பொன்னித்
திரு ஆனைக்கா உடைய செல்வா! என்தன்
அத்தா! உன் பொன்பாதம் அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 1

ஊன்ஆகி, உயிர்ஆகி, அதனுள் நின்ற
உணர்வுஆகி, பிறஅனைத்தும் நீயாய், நின்றாய்;
நான் ஏதும் அறியாமே என்னுள் வந்து,
நல்லனவும் தீயனவும் காட்டாநின்றாய்;
தேன் ஆரும் கொன்றையனே! நின்றியூராய்!
திரு ஆனைக்காவில் உறை சிவனே! ஞானம்-
ஆனாய்! உன் பொன்பாதம் அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 2

ஒப்புஆய், இவ் உலகத்தோடு ஒட்டி வாழ்வான்,
ஒன்று அலாத் தவத்தாரோடு உடனேநின்று,
துப்பு ஆரும் குறை அடிசில் துற்றி, நற்று உன்
திறம் மறந்து திரிவேனை, காத்து, நீ வந்து
எப்பாலும் நுன் உணர்வே ஆக்கி, என்னை
ஆண்டவனே! எழில் ஆனைக்காவா! வானோர்
அப்பா! உன் பொன்பாதம் அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 3

நினைத்தவர்கள் நெஞ்சுளாய்! வஞ்சக் கள்வா!
நிறை மதியம் சடை வைத்தாய்! அடையாது உன்பால்
முனைத்தவர்கள் புரம்மூன்றும் எரியச் செற்றாய்!
முன் ஆனைத்தோல் போர்த்த முதல்வா! என்றும்
கனைத்து வரும் எருது ஏறும் காளகண்டா!
கயிலாயமலையா! நின் கழலே சேர்ந்தேன்;
அனைத்துஉலகும் ஆள்வானே! ஆனைக்காவா!—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 4

இம் மாயப் பிறப்பு என்னும் கடல்ஆம் துன்பத்து-
இடைச் சுழிப்பட்டு இளைப்பேனை இளையா வண்ணம்,
கைம் மான, மனத்து உதவி, கருணை செய்து,
காதல்அருள்அவை வைத்தாய்! காண நில்லாய்!
வெம் மான மதகரியின் உரிவை போர்த்த
வேதியனே! தென்ஆனைக்காவுள் மேய
அம்மான்! நின் பொன்பாதம் அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 5

உரை ஆரும் புகழானே! ஒற்றியூராய்!
கச்சி ஏகம்பனே! காரோணத்தாய்!
விரை ஆரும் மலர் தூவி வணங்குவார்பால்
மிக்கானே! அக்கு, அரவம், ஆரம், பூண்டாய்!
திரை ஆரும் புனல் பொன்னித்தீர்த்தம் மல்கு
திரு ஆனைக்காவில் உறை தேனே! வானோர்-
அரையா! உன் பொன்பாதம் அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 6

மை ஆரும் மணிமிடற்றாய்! மாது ஓர்கூறாய்!
மான்மறியும், மா மழுவும், அனலும், ஏந்தும்
கையானே! காலன் உடல் மாளச் செற்ற
கங்காளா! முன் கோளும் விளைவும் ஆனாய்!
செய்யானே, திருமேனி! அரியாய்! தேவர்-
குலக் கொழுந்தே! தென்ஆனைக்காவுள் மேய
ஐயா! உன் பொன்பாதம் அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 7

இலை ஆரும் சூலத்தாய்! எண்தோளானே!
''எவ்இடத்தும் நீ அலாது இல்லை'' என்று
தலை ஆரக் கும்பிடுவார் தன்மையானே!
தழல் மடுத்த மா மேரு, கையில் வைத்த,
சிலையானே! திரு ஆனைக்காவுள் மேய
தீஆடீ! சிறு நோயால் நலிவுண்டு உள்ளம்
அலையாதே, நின் அடியே அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 8

விண் ஆரும் புனல் பொதி செஞ்சடையாய்! வேத-
நெறியானே! எறிகடலின் நஞ்சம் உண்டாய்!
எண் ஆரும் புகழானே! உன்னை, ''எம்மான்!''
என்றுஎன்றே நாவினில் எப்பொழுதும் உன்னி,
கண் ஆரக் கண்டிருக்கக் களித்து, எப்போதும்,
கடிபொழில் சூழ் தென்ஆனைக்காவுள் மேய
அண்ணா! நின் பொன்பாதம் அடையப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 9

கொடி ஏயும் வெள்ஏற்றாய்! கூளி பாட,
குறள்பூதம் கூத்துஆட, நீயும் ஆடி,
வடிவு ஏயும் மங்கைதனை வைத்த மைந்தா!
மதில் ஆனைக்கா உளாய்! மாகாளத்தாய்!
படி ஏயும் கடல் இலங்கைக் கோமான்தன்னைப்
பரு முடியும் திரள்தோளும் அடர்த்து உகந்த
அடியே வந்து, அடைந்து, அடிமைஆகப்பெற்றால்,—
அல்லகண்டம்கொண்டு அடியேன் என் செய்கேனே? 10

திரு ஆனைக்கா VI-63 திருத் தாண்டகம்

முன் ஆனைத்தோல் போர்த்த மூர்த்திதன்னை;
மூவாத சிந்தையே, மனமே, வாக்கே,
தன் ஆனையாப் பண்ணி ஏறினானை;
சார்தற்கு அரியானை; தாதைதன்னை;
என் ஆனைக்கன்றினை; என் ஈசன்தன்னை;
எறி நீர்த் திரை உகளும் காவிரீ சூழ்
தென்ஆனைக்காவானை; தேனை; பாலை;
செழுநீர்த்திரளை; சென்று ஆடினேனே. 1

மருந்தானை, மந்திரிப்பார் மனத்து உளானை,
வளர்மதி அம் சடையானை, மகிழ்ந்து என் உள்ளத்து
இருந்தானை, இறப்புஇலியை, பிறப்புஇலானை,
இமையவர்தம் பெருமானை, உமையாள் அஞ்சக்
கருந் தான-மதகளிற்றின் உரி போர்த்தானை,
கன மழுவாள்படையானை, பலி கொண்டு ஊர்ஊர்
திரிந்தானை, திரு ஆனைக்கா உளானை,
செழுநீர்த்திரளை, சென்று ஆடினேனே. 2

முற்றாத வெண்திங்கள்கண்ணியானை,
முந்நீர்நஞ்சு உண்டு இமையோர்க்கு அமுதம் நல்கும்
உற்றானை, பல்உயிர்க்கும் துணை ஆனானை,
ஓங்காரத்து உள்பொருளை, உலகம்எல்லாம்
பெற்றானை, பின் இறக்கம் செய்வான்தன்னை,
''பிரான்'' என்று போற்றாதார் புரங்கள்மூன்றும்
செற்றானை, திரு ஆனைக்கா உளானை, 3
செழுநீர்த்திரளை, சென்று ஆடினேனே.

கார் ஆரும் கறைமிடற்று எம்பெருமான்தன்னை,
காதில் வெண்குழையானை, கமழ்பூங்கொன்றைத்-
தாரானை, புலிஅதளின் ஆடையானை,
தான் அன்றி வேறு ஒன்றும் இல்லா ஞானப்
பேரானை, மணிஆரம் மார்பினானை,
பிஞ்ஞகனை, தெய்வநால்மறைகள் பூண்ட
தேரானை, திரு ஆனைக்கா உளானை, 4
செழுநீர்த்திரளை, சென்று ஆடினேனே.

பொய்ஏதும் இல்லாத மெய்யன்தன்னை,
புண்ணியனை, நண்ணாதார் புரம் நீறுஆக
எய்தானை, செய் தவத்தின் மிக்கான்தன்னை,
ஏறு அமரும் பெருமானை, இடம் மான் ஏந்து
கையானை, கங்காளவேடத்தானை,
கட்டங்கக் கொடியானை, கனல் போல் மேனிச்
செய்யானை, திரு ஆனைக்கா உளானை, 5
செழுநீர்த்திரளை, சென்று ஆடினேனே.

கலையானை, பரசு தர பாணியானை,
கன வயிரத்திரளானை, மணிமாணிக்க-
மலையானை, என் தலையின் உச்சியானை,
வார்தரு புன்சடையானை, மயானம் மன்னும்
நிலையானை, வரிஅரவு நாணாக் கோத்து
நினையாதார் புரம் எரிய வளைத்த மேருச்-
சிலையானை, திரு ஆனைக்கா உளானை,
செழுநீர்த்திரளை, சென்று ஆடினேனே. 6

ஆதியனை, எறி மணியின் ஓசையானை,
அண்டத்தார்க்கு அறிவு ஒண்ணாது அப்பால் மிக்க
சோதியனை, தூ மறையின் பொருளான்தன்னை,
சுரும்பு அமரும் மலர்க்கொன்றை தொல்-நூல் பூண்ட
வேதியனை, அறம் உரைத்த பட்டன்தன்னை,
விளங்கு மலர் அயன் சிரங்கள்ஐந்தில் ஒன்றைச்
சேதியனை, திரு ஆனைக்கா உளானை,
செழுநீர்த்திரளை, சென்று ஆடினேனே. 7

மகிழ்ந்தானை, கச்சி ஏகம்பன்தன்னை,
மறவாது கழல் நினைந்து வாழ்த்தி ஏத்திப்
புகழ்ந்தாரைப் பொன்னுலகம் ஆள்விப்பானை,
பூதகணப்படையானை, புறங்காட்டு ஆடல்
உகந்தானை, பிச்சையே இச்சிப்பானை,
ஒண்பவளத்திரளை, என் உள்ளத்துள்ளே
திகழ்ந்தானை, திரு ஆனைக்கா உளானை,
செழுநீர்த்திரளை, சென்று ஆடினேனே. 8

நசையானை; நால்வேதத்து அப்பாலானை;
நல்குரவும், தீப்பிணிநோய், காப்பான்தன்னை;
இசையானை; எண் இறந்த குணத்தான்தன்னை;
இடைமருதும் ஈங்கோயும் நீங்காது ஏற்றின்-
மிசையானை; விரிகடலும், மண்ணும், விண்ணும்,
மிகு தீயும், புனல், எறிகாற்று, ஆகி எட்டுத்-
திசையானை; திரு ஆனைக்கா உளானை:
செழுநீர்த்திரளை; சென்று ஆடினேனே. 9

பார்த்தானை, காமன் உடல் பொடிஆய் வீழ;
பண்டு அயன், மால், இருவர்க்கும் அறியா வண்ணம்
சீர்த்தானை; செந்தழல் போல் உருவினானை;
தேவர்கள்தம் பெருமானை; திறம் உன்னாதே
ஆர்த்து ஓடி மலை எடுத்த இலங்கை வேந்தன்
ஆண்மைஎலாம் கெடுத்து, அவன்தன் இடர் அப்போதே
தீர்த்தானை; திரு ஆனைக்கா உளானை;
செழுநீர்த்திரளை; சென்று ஆடினேனே. 10

திருக் கச்சி ஏகம்பம் VI-64 திருத் தாண்டகம்

கூற்றுவன்காண், கூற்றுவனைக் குமைத்த கோன்காண்,
குவலயன்காண், குவலயத்தின் நீர் ஆனான்காண்,
காற்று அவன்காண், கனல் அவன்காண், கலிக்கும் மின்காண்,
கன பவளச்செம்மேனி கலந்த வெள்ளை-
நீற்றவன்காண், நிலா ஊரும் சென்னியான்காண்,
நிறை ஆர்ந்த புனல்கங்கை நிமிர்சடைமேல்
ஏற்றவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 1

பரந்தவன்காண், பல்உயிர்கள்ஆகி எங்கும்;
பணிந்து எழுவார் பாவமும் வினையும் போகத்
துரந்தவன்காண்; தூ மலர்அம்கண்ணியான்காண்;
தோற்றம், நிலை, இறுதி, பொருள்ஆய் வந்த
மருந்து அவன்காண்; வையகங்கள் பொறை தீர்ப்பான்காண்;
மலர் தூவி நினைந்து எழுவார் உள்ளம் நீங்காது
இருந்தவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 2

நீற்றவன்காண்; நீர்ஆகித் தீஆனான்காண்;
நிறை மழுவும், தமருகமும், எரியும், கையில்-
தோற்றவன்காண்; தோற்றக் கேடு இல்லாதான்காண்;
துணைஇலிகாண்; துணை என்று தொழுவார் உள்ளம்
போற்றவன்காண்; புகழ்கள்தமைப் படைத்தான் தான்காண்;
பொறிஅரவும், விரிசடைமேல், புனலும்கங்கை
ஏற்றவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 3

தாய் அவன்காண், உலகிற்கு; தன் ஒப்பு இல்லாத்
தத்துவன்காண்; ''மலைமங்கைபங்கா!'' என்பார்
வாயவன்காண்; வரும் பிறவிநோய் தீர்ப்பான்காண்,
வானவர்க்கும் தானவர்க்கும் மண்ணுளோர்க்கும்;
சேயவன்காண், நினையார்க்கு; சித்தம் ஆரத்
திருவடியே உள்கி நினைந்து எழுவார் உள்ளம்
ஏயவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 4

அடுத்த ஆனை உரித்தான்காண் ....

5

அழித்தவன்காண், எயில்மூன்றும் அயில்வாய்அம்பால்;
ஐயாறும் இடைமருதும் ஆள்வான் தான்காண்;
பழித்தவன்காண், அடையாரை; அடைவார்தங்கள்
பற்று அவன்காண்; புற்று அரவம் நாணினான்காண்;
சுழித்தவன்காண், முடிக் கங்கை; அடியே போற்றும்
தூய மா முனிவர்க்காப் பார்மேல் நிற்க
இழித்தவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி 6
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே.

அசைந்தவன் காண், நடம்ஆடிப் பாடல் பேணி;
அழல்வண்ணத்தில்(ல்) அடியும் முடியும் தேடப்
பசைந்தவன்காண்; பேய்க்கணங்கள் பரவி ஏத்தும்
பான்மையன்காண்; பரவி நினைந்து எழுவார்தம்பால்
கசிந்தவன் காண்; கரியின்உரி போர்த்தான் தான்காண்;
கடலில் விடம் உண்டு அமரர்க்கு அமுதம் ஈய
இசைந்தவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி 7
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே.

முடித்தவன்காண், வன்கூற்றை; சீற்றத்தீயால்
வலியார்தம் புரம்மூன்றும் வேவச் சாபம்
பிடித்தவன்காண்; பிஞ்ஞகன் ஆம் வேடத்தான்காண்;
பிணையல் வெறி கமழ்கொன்றை, அரவு, சென்னி
முடித்தவன்காண்; மூஇலைநல்வேலினான்காண்;
முழங்கி உரும் எனத் தோன்றும் மழைஆய் மின்னி
இடித்தவன்காண்; எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 8

வரும் தவன்காண்; மனம் உருகி நினையாதார்க்கு
வஞ்சகன்காண்; அஞ்சுஎழுத்தும் நினைவார்க்கு என்றும்
மருந்து அவன்காண்; வான் பிணிகள் தீரும் வண்ணம்;
வானகமும் மண்ணகமும் மற்றும் ஆகிப்
பரந்தவன் காண்; படர்சடைஎட்டு உடையான் தான்காண்;
பங்கயத்தோன்தன் சிரத்தை ஏந்தி, ஊர்ஊர்
இரந்தவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 9

''வெம் மான உழுவை அதள்-உரி போர்த்தான்காண்;
வேதத்தின் பொருளான்காண்'' என்று இயம்பி,
விம்மாநின்று, அழுவார்கட்கு அளிப்பான் தான்காண்;
விடை ஏறித் திரிவான்காண்; நடம்செய் பூதத்து
அம்மான்காண்; அகலிடங்கள் தாங்கினான்காண்;
அற்புதன்காண்; சொல்பதமும் கடந்து நின்ற
எம்மான்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 10

அறுத்தான்காண், அயன் சிரத்தை; அமரர் வேண்ட,
ஆழ்கடலின் நஞ்சு உண்டு, அங்கு அணி நீர்க்கங்கை
செறுத்தான்காண்; தேவர்க்கும் தேவன் தான்காண்;
திசைஅனைத்தும் தொழுது ஏத்த, கலைமான் கையில்
பொறுத்தான்காண்; புகல்இடத்தை நலிய வந்து
பொரு கயிலை எடுத்தவன்தன் முடி, தோள்நால்-அஞ்சு,
இறுத்தான்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 11

## திருக் கச்சி ஏகம்பம்		VI-65		திருத் தாண்டகம்

உரித்தவன்காண், உரக் களிற்றை உமையாள் ஒல்க;
ஓங்காரத்து ஒருவன்காண்; உணர் மெய்ஞ்ஞானம்
விரித்தவன்காண்; விரித்த நால்வேதத்தான்காண்;
வியன்உலகில் பல்உயிரை விதியினாலே
தெரித்தவன்காண்; சில்உருஆய்த் தோன்றி எங்கும்
திரண்டவன்காண்; திரிபுரத்தை வேவ வில்லால்
எரித்தவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 1

நேசன்காண், நேசர்க்கு; நேசம் தன்பால்
இல்லாத நெஞ்சத்து நீசர்தம்மைக்
கூசன்காண்; கூசாதார் நெஞ்சு தஞ்சே
குடிகொண்ட குழகன்காண்; அழகு ஆர் கொன்றை-
வாசன்காண்; மலைமங்கைபங்கன் தான்காண்;
வானவர்கள் எப்பொழுதும் வணங்கி ஏத்தும்
ஈசன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 2

பொறையவன்காண்; பூமிஏழ் தாங்கி ஓங்கும்
புண்ணியன்காண்; நண்ணிய புண்டரீகப்போதில்
மறையவன்காண்; மறையவனைப் பயந்தோன் தான்காண்;
வார்சடை மாசுணம் அணிந்து, வளரும் பிள்ளைப்-
பிறையவன்காண்; பிறைதிகழும் எயிற்றுப் பேழ்வாய்ப்
பேயோடு அங்கு இடுகாட்டில் எல்லி ஆடும்
இறையவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 3

பார் அவன்காண், விசும்பு அவன்காண், பவ்வம் தான்காண்,
பனி வரைகள் இரவினொடு பகல்ஆய் நின்ற
சீரவன்காண், திசையவன்காண், திசைகள்எட்டும்
செறிந்தவன்காண், சிறந்த(அ)டியார் சிந்தைசெய்யும்
பேரவன்காண், பேர்ஆயிரங்கள் ஏத்தும்
பெரியவன்காண், அரியவன்காண், பெற்றம் ஊர்ந்த
ஏரவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
ஏகம்பன்காண், அவன் என் எண்ணத்தானே. 4

பெருந் தவத்து எம் பிஞ்ஞகன்காண், பிறைசூடிகாண்,
பேதையேன் வாதை உறு பிணியைத் தீர்க்கும்
மருந்து அவன்காண், மந்திரங்கள் ஆயினான்காண்,
வானவர்கள்தாம் வணங்கும் மாதேவன்காண்,
அருந்தவத்தான் ஆயிழையாள்உமையாள் பாகம்
அமர்ந்தவன்காண், அமரர்கள்தாம் அர்ச்சித்து ஏத்த
இருந்தவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி 5
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே.

ஆய்ந்தவன்காண், அருமறையோடு அங்கம்ஆறும்;
அணிந்தவன்காண், ஆடுஅரவோடு என்பும் ஆமை;
காய்ந்தவன்காண், கண் அழலால் காமன் ஆகம்;
கனன்று எழுந்த காலன் உடல் பொடிஆய் வீழப்
பாய்ந்தவன்காண்; பண்டு பலசருகால் பந்தர்
பயின்ற நூல் சிலந்திக்குப் பார் ஆள் செல்வம்
ஈந்தவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி 6
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே.

உமையவளை ஒருபாகம் சேர்த்தினான்காண்,
உகந்து ஒலிநீர்க்கங்கை சடை ஒழுக்கினான்காண்,
இமய வடகயிலைச்செல்வன் தான்காண்,
இல் பலிக்குச் சென்று உழலும் நல்கூர்ந்தான்காண்,
சமயம்அவைஆறினுக்கும் தலைவன் தான்காண்,
தத்துவன்காண், உத்தமன்காண், தானே ஆய
இமையவன்காண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி 7
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே.

தொண்டு படு தொண்டர் துயர் தீர்ப்பான் தான்காண்,
தூ மலர்ச்சேவடிஇணை எம் சோதியான்காண்,
உண்டு படு விடம் கண்டத்து ஒடுக்கினான்காண்,
ஒலிகடலில் அமுது அமரர்க்கு உதவினான்காண்,
வண்டு படு மலர்க்கொன்றைமாலையான்காண்,
வாள்மதிஆய் நாள்மீனும் ஆயினான்காண்—
எண்திசையும் எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி 8
ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே.

முந்தைகாண், மூவரினும் முதல் ஆனான்காண்,
    மூஇலைவேல் மூர்த்திகாண், முருகவேட்குத்
தந்தைகாண், தண் கட மா முகத்தினாற்குத்
    தாதைகாண், தாழ்ந்து அடியே வணங்குவார்க்குச்
சிந்தைகாண், சிந்தாத சித்தத்தார்க்குச்
    சிவன் அவன்காண், செங்கண் மால்விடை ஒன்று ஏறும்
எந்தைகாண்—எழில் ஆரும் பொழில் ஆர் கச்சி
    ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 9

பொன் இசையும் புரிசடை எம் புனிதன் தான்காண்,
    பூதகணநாதன்காண், புலித்தோல்ஆடை
தன் இசைய வைத்த எழில் அரவினான்காண்,
    சங்கவெண்குழைக் காதின் சதுரன் தான்காண்—
மின் இசையும் வெள்எயிற்றோன் வெகுண்டு வெற்பை
    எடுக்க, அடி அடர்ப்ப, மீண்டு அவன்தன் வாயில்
இன்இசை கேட்டு, இலங்கு ஒளி வாள் ஈந்தோன், கச்சி
    ஏகம்பன்காண்; அவன் என் எண்ணத்தானே. 10

திரு நாகேச்சுரம்   VI-66   திருத் தாண்டகம்

தாய்அவனை, வானோர்க்கும் ஏனோருக்கும்
    தலையவனை, மலையவனை, உலகம்எல்லாம்
ஆயவனை, சேயவனை, அணியான்தன்னை,
    அழலவனை, நிழலவனை, அறிய ஒண்ணா
மாயவனை, மறையவனை, மறையோர்தங்கள்
    மந்திரனை, தந்திரனை, வளரா நின்ற
தீஅவனை, திரு நாகேச்சுரத்து உளானை,—
    சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 1

உரித்தானை, மதவேழம்தன்னை; மின் ஆர்
    ஒளி முடி எம்பெருமானை; உமை ஓர்பாகம்
தரித்தானை; தரியலர்தம் புரம் எய்தானை;
    தன் அடைந்தார்தம் வினைநோய்பாவம்எல்லாம்
அரித்தானை; ஆல்அதன்கீழ் இருந்து நால்வர்க்கு
    அறம், பொருள், வீடு, இன்பம், ஆறுஅங்கம், வேதம்,
தெரித்தானை; திரு நாகேச்சுரத்து உளானை,—
    சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 2

கார்ஆனைஉரி போர்த்த கடவுள்தன்னை;
    காதலித்து நினையாத கயவர் நெஞ்சில்
வாரானை; மதிப்பவர்தம் மனத்து உளானை;
    மற்று ஒருவர் தன் ஒப்பார், ஒப்பு,—இலாத,—
ஏரானை; இமையவர்தம் பெருமான்தன்னை;
    இயல்புஆகி உலகுஎலாம் நிறைந்து மிக்க
சீரானை; திரு நாகேச்சுரத்து உளானை,—
    சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 3

தலையானை, எவ்உலகும் தான்ஆனானை,
    தன் உருவம் யாவர்க்கும் அறிய ஒண்ணா
நிலையானை, நேசர்க்கு நேசன்தன்னை,
    நீள் வானமுகடுஅதனைத் தாங்கி நின்ற
மலையானை, வரிஅரவு நாணாக் கோத்து
    வல்அசுரர் புரம்மூன்றும் மடிய எய்த
சிலையானை, திரு நாகேச்சுரத்து உளானை,—
    சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 4

மெய்யானை, தன் பக்கல் விரும்புவார்க்கு;
விரும்பாத அரும்பாவியவர்கட்கு என்றும்
பொய்யானை; புறங்காட்டில் ஆடலானை;
பொன் பொலிந்த சடையானை; பொடி கொள் பூதிப்
பையானை; பைஅரவம் அசைத்தான்தன்னை;
பரந்தானை; பவளமால்வரை போல் மேனிச்
செய்யானை; திரு நாகேச்சுரத்து உளானை;—
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 5

துறந்தானை, அறம் புரியாத் துரிசர்தம்மை;
தோத்திரங்கள்பல சொல்லி வானோர் ஏத்த
நிறைந்தானை; நீர், நிலம், தீ, வெளி, காற்று, ஆகி
நிற்பனவும் நடப்பனவும் ஆயினானை;
மறந்தானை, தன் நினையா வஞ்சர்தம்மை;
அஞ்சுஎழுத்தும் வாய் நவில வல்லோர்க்கு என்றும்
சிறந்தானை; திரு நாகேச்சுரத்து உளானை;—
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 6

மறையானை, மால்விடை ஒன்று ஊர்தியானை,
மால்கடல்நஞ்சு உண்டானை, வானோர்தங்கள்-
இறையானை, என் பிறவித்துயர் தீர்ப்பானை,
இன்னமுதை, மன்னிய சீர் ஏகம்பத்தில்
உறைவானை, ஒருவரும் ஈங்கு அறியா வண்ணம்
என் உள்ளத்துள்ளே ஒளித்து வைத்த
சிறையானை, திரு நாகேச்சுரத்து உளானை,—
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 7

எய்தானை, புரம்மூன்றும் இமைக்கும்போதில்;
இரு விசும்பில் வருபுனலைத் திரு ஆர் சென்னிப்
பெய்தானை; பிறப்புஇலியை; அறத்தில் நில்லாப்
பிரமன்தன் சிரம் ஒன்றைக் கரம் ஒன்றி(ன்)னால்
கொய்தானை; கூத்துஆட வல்லான்தன்னை;
குறி இலாக் கொடியேனை அடியேன்ஆகச்
செய்தானை; திரு நாகேச்சுரத்து உளானை;—
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 8

அளியானை, அண்ணிக்கும் ஆன்பால்தன்னை,
வான் பயிரை, அப் பயிரின் வாட்டம் தீர்க்கும்
துளியானை, அயன் மாலும் தேடிக் காணாச்
சுடரானை, துரிசு அறத் தொண்டுபட்டார்க்கு
எளியானை, யாவர்க்கும் அரியான்தன்னை,
இன்கரும்பின்தன்னுள்ளால் இருந்த தேறல்-
தெளியானை, திரு நாகேச்சுரத்து உளானை,—
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 9

சீர்த்தானை; உலகுஏழும் சிறந்து போற்றச்
சிறந்தானை; நிறைந்து ஓங்கு செல்வன்தன்னை;
பார்த்தானை, மதனவேள் பொடிஆய் வீழ;
பனிமதி அம் சடையானை; புனிதன்தன்னை;
ஆர்த்து ஓடி மலை எடுத்த அரக்கன் அஞ்ச
அருவிரலால் அடர்த்தானை; அடைந்தோர் பாவம்
தீர்த்தானை; திரு நாகேச்சுரத்து உளானை;—
சேராதார் நன்நெறிக்கண் சேராதாரே. 10

திருக் கீழ்வேளூர்   VI-67   திருத் தாண்டகம்

ஆள்ஆன அடியவர்கட்கு அன்பன்தன்னை,
ஆன்அஞ்சும்ஆடியை, நான் அபயம் புக்க
தாளானை, தன் ஒப்பார் இல்லாதானை,
சந்தனமும் குங்குமமும் சாந்தும் தோய்ந்த
தோளானை, தோளாத முத்து ஒப்பானை,
தூ வெளுத்த கோவணத்தை அரையில் ஆர்த்த
கீளானை, கீழ்வேளூர் ஆளும் கோவை,
கேடுஇலியை, நாடுமவர் கேடுஇலாரே. 1

சொல் பாவும் பொருள் தெரிந்து, தூய்மை நோக்கி,
தூங்காதார் மனத்து இருளை வாங்காதானை;
நல் பான்மை அறியாத நாயினேனை
நன்நெறிக்கே செலும் வண்ணம் நல்கினானை;
பல்பாவும் வாய் ஆரப் பாடி, ஆடி,
பணிந்து, எழுந்து, குறைந்து, அடைந்தார் பாவம் போக்க-
கிற்பானை; கீழ்வேளூர் ஆளும் கோவை;
கேடுஇலியை; நாடுமவர் கேடுஇலாரே. 2

அளை வாயில் அரவு அசைத்த அழகன்தன்னை,
ஆதரிக்கும் அடியவர்கட்கு அன்பே என்றும்
விளைவானை, மெய்ஞ்ஞானப்பொருள்ஆனானை,
வித்தகனை, எத்தனையும் பத்தர் பத்திக்கு
உளைவானை, அல்லாதார்க்கு உளையாதானை,
உலப்புஇலியை, உள் புக்கு என் மனத்து மாசு
கிளைவானை, கீழ்வேளூர் ஆளும் கோவை,
கேடுஇலியை, நாடுமவர் கேடுஇலாரே. 3

தாள் பாவு கமலமலர் தயங்குவானைத்
தலை அறுத்து மா விரதம் தரித்தான்தன்னை,
கோள் பாவு நாள்எல்லாம் ஆனான்தன்னை,
கொடுவினையேன் கொடுநரகக்குழியில் நின்றால்
மீட்பானை, வித்துருவின் கொத்து ஒப்பானை,
வேதியனை, வேதத்தின் பொருள் கொள் வீணை
கேட்பானை, கீழ்வேளூர் ஆளும் கோவை,
கேடுஇலியை, நாடுமவர் கேடுஇலாரே. 4

நல்லானை, நரைவிடை ஒன்று ஊர்தியானை,
நால்வேதத்து ஆறுஅங்கம் நணுகமாட்டாச்
சொல்லானை, சுடர்மூன்றும் ஆனான்தன்னை,
தொண்டுஆகிப் பணிவார்கட்கு அணியான்தன்னை,
வில்லானை, மெல்லியல் ஓர்பங்கன்தன்னை,
மெய்யராய் நினையாதார் வினைகள் தீர்க்க-
கில்லானை, கீழ்வேளூர் ஆளும் கோவை,
கேடுஇலியை, நாடுமவர் கேடுஇலாரே. 5

சுழித்தானை, கங்கை; மலர்வன்னி, கொன்றை,
தூ மத்தம், வாள்அரவம், சூடினானை;
அழித்தானை, அரணங்கள்மூன்றும் வேவ;
ஆலால-நஞ்சுஅதனை உண்டான்தன்னை;
விழித்தானை, காமன் உடல் பொடிஆய் வீழ;
மெல்லியல் ஓர்பங்கனை; முன் வேல் நல் ஆனை
கிழித்தானை; கீழ்வேளூர் ஆளும் கோவை;
கேடுஇலியை; நாடுமவர் கேடுஇலாரே. 6

உளர் ஒளியை, உள்ளத்தினுள்ளே நின்ற
ஓங்காரத்து உள்பொருள்தான்ஆயினானை,
விளர்ஒளியை விடுசுடர்கள்இரண்டும்ஒன்றும்
விண்ணொடு மண் ஆகாசம் ஆயினானை,
வளர் ஒளியை, மரகதத்தின் உருவினானை,
வானவர்கள் எப்பொழுதும் வாழ்த்தி ஏத்தும்
கிளர் ஒளியை, கீழ்வேளூர் ஆளும் கோவை,
கேடுஇலியை, நாடுமவர் கேடுஇலாரே. 7

தடுத்தானை, காலனைக் காலால் பொன்ற;
தன் அடைந்த மாணிக்கு அன்று அருள்செய்தானை;
உடுத்தானை, புலிஅதளோடு அக்கும் பாம்பும்;
உள்குவார் உள்ளத்தின் உள்ளான்தன்னை;
மடுத்தானை, அருநஞ்சம் மிடற்றுள்-தங்க;
வானவர்கள் கூடிய அத் தக்கன் வேள்வி
கெடுத்தானை; கீழ்வேளூர் ஆளும் கோவை;
கேடுஇலியை; நாடுமவர் கேடுஇலாரே. 8

மாண்டார் எலும்பு அணிந்த வாழ்க்கையானை,
மயானத்தில் கூத்தனை, வாள்அரவோடு என்பு
பூண்டானை, புறங்காட்டில் ஆடலானை,
போகாது என் உள் புகுந்து இடம்கொண்டு என்னை
ஆண்டானை, அறிவு அரிய சிந்தையானை,
அசங்கையனை, அமரர்கள்தம் சங்கைஎல்லாம்
கீண்டானை, கீழ்வேளூர் ஆளும் கோவை,
கேடுஇலியை, நாடுமவர் கேடுஇலாரே. 9

முறிப்புஆன பேசி மலை எடுத்தான்தானும்
முதுகு இற, முன்கைந்நரம்பை எடுத்துப் பாட,
பறிப்பான் கைச் சிற்றறிவாள் நீட்டினானை;
பாவியேன் நெஞ்சுஅகத்தே பாதப்போது
பொறித்தானை; புரம்மூன்றும் எரிசெய்தானை;
பொய்யர்களைப் பொய்செய்து போது போக்கிக்
கிறிப்பானை; கீழ்வேளூர் ஆளும் கோவை;
கேடுஇலியை; நாடுமவர் கேடுஇலாரே. 10

திரு முதுகுன்றம் VI-68 திருத் தாண்டகம்

கருமணியை, கனகத்தின்குன்று ஒப்பானை,
கருதுவார்க்கு ஆற்ற எளியான்தன்னை,
குருமணியை, கோள் அரவம் ஆட்டுவானை,
கொல் வேங்கை அதளானை, கோவண(ன்)னை,
அருமணியை, அடைந்தவர்கட்கு அமுது ஒப்பானை,
ஆன்அஞ்சும்ஆடியை, நான் அபயம் புக்க
திருமணியை, திரு முதுகுன்று உடையான்தன்னை,— 1
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே!

கார்ஒளிய கண்டத்து எம் கடவுள்தன்னை,
காபாலி, கட்டங்கம் ஏந்தினானை,
பார்ஒளியை, விண்ஒளியை, பாதாள(ன்)னை,
பால்மதியம் சூடி ஓர் பண்பன்தன்னை,
பேரொளியை, பெண் பாகம் வைத்தான்தன்னை,
பேணுவார்தம் வினையைப் பேணி வாங்கும்
சீர் ஒளியை, திருமுதுகுன்று உடையான்தன்னை,— 2
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே!

எத்திசையும் வானவர்கள் தொழ நின்றானை,
ஏறு ஊர்ந்த பெம்மானை, ''எம்மான்!'' என்று
பத்தனாய்ப் பணிந்த(அ)டியேன்தன்னைப் பல்-நாள்
பாமாலை பாடப் பயில்வித்தானை,
முத்தினை, என் மணியை, மாணிக்கத்தை,
முளைத்து எழுந்த செம்பவளக்கொழுந்து ஒப்பானை,
சித்தனை, என் திரு முதுகுன்று உடையான்தன்னை,—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 3

ஊன் கருவின் உள்-நின்ற சோதியானை,
உத்தமனை, பத்தர் மனம் குடிகொண்டானை,
கான் திரிந்து காண்டீபம் ஏந்தினானை,
கார்மேகமிடற்றானை, கனலை, காற்றை,
தான் தெரிந்து அங்கு அடியேனை ஆளாக்கொண்டு
தன்னுடைய திருவடி என் தலைமேல் வைத்த
தீம்கரும்பை, திரு முதுகுன்று உடையான்தன்னை,—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 4

தக்கனது பெரு வேள்வி தகர்த்தான்ஆகி,
தாமரை ஆர் நான்முகனும் தானேஆகி,
மிக்கது ஒரு தீவளிநீர்ஆகாசம்(ம்)ஆய்,
மேல்உலகுக்கு அப்பால்ஆய், இப்பாலானை;
அக்கினொடு முத்தினையும் அணிந்து, தொண்டர்க்கு
அங்குஅங்கே அறுசமயம்ஆகி நின்ற
திக்கினை; என் திரு முதுகுன்று உடையான்தன்னை;—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 5

புகழ் ஒளியை, புரம் எரித்த புனிதன்தன்னை,
பொன் பொதிந்த மேனியனை, புராணன்தன்னை,
விழவு ஒலியும் விண் ஒலியும் ஆனான்தன்னை,
வெண்காடு மேவிய விகிர்தன்தன்னை,
கழல்ஒலியும் கைவளையும் ஆர்ப்பஆர்ப்ப,
கடைதோறும் இடு பிச்சைக்கு என்று செல்லும்
திகழ் ஒளியை, திரு முதுகுன்று உடையான்தன்னை,—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 6

போர்த்து, ஆனையின்உரி-தோல் பொங்கப்பொங்க,
புலிஅதளே உடையாகத் திரிவான்தன்னை;
காத்தானை, ஐம்புலனும்; புரங்கள்மூன்றும்,
காலனையும்,—குரைகழலால்—காய்ந்தான்தன்னை;
மாத்து ஆடிப் பத்தராய் வணங்கும் தொண்டர்
வல்வினைவேர் அறும் வண்ணம் மருந்தும்ஆகித்
தீர்த்தானை; திரு முதுகுன்று உடையான்தன்னை;—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 7

துறவாதே யாக்கை துறந்தான்தன்னை,
சோதி முழுமுதல்ஆய் நின்றான்தன்னை,
பிறவாதே எவ்உயிர்க்கும் தானேஆகிப்
பெண்ணினோடு ஆண்உருஆய் நின்றான்தன்னை,
மறவாதே தன் திறமே வாழ்த்தும் தொண்டர்
மனத்துஅகத்தே அனவரதம் மன்னி நின்ற
திறலானை, திரு முதுகுன்று உடையான்தன்னை,—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 8

பொன்-தூணை, புலால் நாறு கபாலம் ஏந்திப்
புவலோகம்எல்லாம் உழிதந்தானை,
முற்றாத வெண்திங்கள்கண்ணியானை,
முழுமுதல்ஆய் மூஉலகும் முடிவு ஒன்று இல்லாக்
கல்-தூணை, காளத்திமலையான்தன்னை,
கருதாதார் புரம்மூன்றும் எரிய அம்பால்
செற்றானை, திரு முதுகுன்று உடையான்தன்னை,—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 9

இகழ்ந்தானை இருபதுதோள் நெரிய ஊன்றி,
எழுநரம்பின் இசை பாட இனிது கேட்டு,
புகழ்ந்தானை; பூந்துருத்தி மேயான்தன்னை;
புண்ணியனை; விண்ணவர்கள் நிதியம்தன்னை;
மகிழ்ந்தானை, மலைமகள் ஓர்பாகம் வைத்து;
வளர்மதியம் சடை வைத்து, மால் ஓர்பாகம்
திகழ்ந்தானை; திரு முதுகுன்று உடையான்தன்னை;—
தீவினையேன் அறியாதே திகைத்தஆறே! 10

திருப் பள்ளியின்முக்கூடல் VI-69 திருத் தாண்டகம்

ஆராத இன்னமுதை, அம்மான்தன்னை,
அயனொடு மால் அறியாத ஆதியானை,
தார் ஆரும் மலர்க்கொன்றைச் சடையான்தன்னை,
சங்கரனை, தன் ஒப்பார் இல்லாதானை,
நீரானை, காற்றானை, தீஆனானை,
நீள் விசும்புஆய், ஆழ்கடல்கள்ஏழும் சூழ்ந்த
பாரானை, பள்ளியின்முக்கூடலானை,—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 1

விடையானை, விண்ணவர்கள் எண்ணத்தானை,
வேதியனை, வெண்திங்கள் சூடும் சென்னிச்
சடையானை, சாமம் போல் கண்டத்தானை,
தத்துவனை, தன் ஒப்பார் இல்லாதானை,
அடையாதார் மும்மதிலும் தீயில் மூழ்க
அடு கணை கோத்து எய்தானை, அயில் கொள் சூலப்-
படையானை, பள்ளியின்முக்கூடலானை,—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 2

பூதியனை, பொன்வரையே போல்வான்தன்னை,
புரிசடைமேல் புனல் கரந்த புனிதன்தன்னை,
வேதியனை, வெண்காடு மேயான்தன்னை,
வெள்ஏற்றின்மேலானை, விண்ணோர்க்கு எல்லாம்
ஆதியனை, ஆதிரை நன்நாளான்தன்னை,
அம்மானை, மைம்மேவுகண்ணியாள் ஓர்-
பாதியனை, பள்ளியின்முக்கூடலானை,—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 3

போர்த்தானை, ஆனையின்தோல்; புரங்கள்மூன்றும்
பொடிஆக எய்தானை; புனிதன்தன்னை;
வார்(த்)தாங்கு வனமுலையாள் பாகன்தன்னை;
மறிகடலுள் நஞ்சு உண்டு, வானோர் அச்சம்
தீர்த்தானை; தென்திசைக்கே காமன் செல்ல,
சிறிதுஅளவில் அவன் உடலம் பொடியா அங்கே
பார்த்தானை; பள்ளியின்முக்கூடலானை;— 4
பயிலாதே பாழே நான் உழன்றஆறே!

அடைந்தார்தம் பாவங்கள், அல்லல், நோய்கள்,
அருவினைகள், நல்குரவு, செல்லா வண்ணம்
கடிந்தானை; கார்முகில் போல் கண்டத்தானை;
கடுஞ் சினத்தோன்தன் உடலை நேமியாலே
தடிந்தானை; தன் ஒப்பார் இல்லாதானை;
தத்துவனை; உத்தமனை; நினைவார் நெஞ்சில்
படிந்தானை; பள்ளியின்முக்கூடலானை;—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 5

கரந்தானை, செஞ்சடைமேல் கங்கைவெள்ளம்;
கனல்ஆடு திருமேனி, கமலத்தோன்தன்
சிரம் தாங்கு கையானை; தேவதேவை;
திகழ் ஒளியை; தன் அடியே சிந்தைசெய்வார்
வருந்தாமைக் காப்பானை; மண்ஆய், விண்ஆய்,
மறிகடல்ஆய், மால் விசும்புஆய், மற்றும்ஆகி,
பரந்தானை; பள்ளியின்முக்கூடலானை;—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 6

நதி ஆரும் சடையானை, நல்லூரானை,
நள்ளாற்றின் மேயானை, நல்லத்தானை,
மது வாரும் பொழில் புடை சூழ் வாய்மூரானை,
மறைக்காடு மேயானை, ஆக்கூரானை,
நிதியாளன்தோழனை, நீடூரானை,
நெய்த்தானம் மேயானை, ஆரூர் என்னும்
பதியானை, பள்ளியின்முக்கூடலானை,—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 7

நல்-தவனை; நால்மறைகள்ஆயினானை;
நல்லானை; நணுகாதார் புரங்கள்மூன்றும்
செற்றவனை; செஞ்சடைமேல்-திங்கள் சூடும்,
திரு ஆரூர்த் திரு மூலட்டானம் மேய,
கொற்றவனை; கூர் அரவம் பூண்டான்தன்னை;
குறைந்து அடைந்து தன் திறமே கொண்டாற்கு என்றும்
பற்றவனை; பள்ளியின்முக்கூடலானை;—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 8

ஊனவனை, உடலவனை, உயிர்ஆனானை,
உலகுஏழும் ஆனானை, உம்பர்கோவை,
வானவனை, மதி சூடும் வளவியானை,
மலைமகள் முன் வராகத்தின் பின்பே சென்ற
கானவனை, கயிலாயமலை உளானை,
கலந்து உருகி நைவார்தம் நெஞ்சினுள்ளே
பானவனை, பள்ளியின்முக்கூடலானை,—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 9

தடுத்தானைத் தான் முனிந்து தன் தோள் கொட்டித்
தடவரையை இருபதுதோள் தலையினாலும்
எடுத்தானைத் தாள்விரலால் மாள ஊன்றி,
எழுநரம்பின் இசைபாடல் இனிது கேட்டு,
கொடுத்தானை, பேரோடும் கூர்வாள்தன்னை;
குரைகழலால் கூற்றுவனை மாள, அன்று,
படுத்தானை; பள்ளியின்முக்கூடலானை;—
பயிலாதே பாழே நான் உழன்றஆறே! 10

பொது VI-70 க்ஷேத்திரக்கோவைத் திருத்தாண்டகம்

தில்லைச் சிற்றம்பலமும், செம்பொன்பள்ளி,
தேவன்குடி, சிராப்பள்ளி, தெங்கூர்,
கொல்லிக் குளிர் அறைப்பள்ளி, கோவல்-
வீரட்டம், கோகரணம், கோடிகாவும்,
முல்லைப் புறவம் முருகன்பூண்டி,
முழையூர், பழையாறை, சத்திமுற்றம்,
கல்லில்-திகழ் சீர் ஆர் காளத்தியும்,
கயிலாயநாதனையே காணல் ஆமே. 1

ஆரூர் மூலட்டானம், ஆனைக்காவும்,
ஆக்கூரில்-தான்தோன்றிமாடம், ஆவூர்,
பேரூர், பிரமபுரம், பேராவூரும்,
பெருந்துறை, காம்பீலி, பிடவூர், பேணும்
கூர் ஆர் குறுக்கைவீரட்டான(ம்)மும்,
கோட்டூர், குடமூக்கு, கோழம்ப(ம்)மும்,
கார் ஆர் கழுக்குன்றும், கானப்பேரும்,
கயிலாயநாதனையே காணல் ஆமே. 2

இடைமருது, ஈங்கோய், இராமேச்சுரம்,
இன்னம்பர், ஏர் இடவை, ஏமப்பேறூர்,
சடைமுடி, சாலைக்குடி, தக்க(ள்)ளூர்,
தலையாலங்காடு, தலைச்சங்காடு,
கொடுமுடி, குற்றாலம், கொள்ளம்பூதூர்,
கோத்திட்டை, கோட்டாறு, கோட்டுக்காடு,
கடைமுடி, கானூர், கடம்பந்துறை,
கயிலாயநாதனையே காணல் ஆமே. 3

எச்சில்இளமர், ஏமநல்லூர்,
இலம்பையங்கோட்டூர், இறையான்சேரி,
அச்சிறுபாக்கம், அளப்பூர், அம்பர்,
ஆவடுதண்துறை, அழுந்தூர், ஆறை,
கச்சினம், கற்குடி, கச்சூர் ஆலக்-
கோயில், கரவீரம், காட்டுப்பள்ளி,
கச்சிப் பலதளியும், ஏகம்பத்தும்,
கயிலாயநாதனையே காணல் ஆமே. 4

கொடுங்கோளூர், அஞ்சைக்களம், செங்குன்றூர்,
கொங்கணம், குன்றியூர், குரக்குக்காவும்,
நெடுங்களம், நன்னிலம், நெல்லிக்காவும்,
நின்றியூர், நீடூர், நியமநல்லூர்,
இடும்பாவனம், எழுமூர், ஏழூர், தோழூர்,
எறும்பியூர், ஏர் ஆரும் ஏமகூடம்,
கடம்பை, இளங்கோயில்தன்னிலுள்ளும்,
கயிலாயநாதனையே காணல் ஆமே. 5

மண்ணிப் படிக்கரை, வாழ்கொளிபுத்தூர்,
வக்கரை, மந்தாரம், வாரணாசி,
வெண்ணி, விளத்தொட்டி. வேள்விக்குடி,
விளமர், விராடபுரம், வேட்களத்தும்,
பெண்ணை அருள்-துறை, தண் பெண்ணாகடம்,
பிரம்பில், பெரும்புலியூர், பெருவேளூரும்,
கண்ணை, களர்க் காறை, கழிப்பாலையும்,
கயிலாயநாதனையே காணல் ஆமே. 6

வீழிமிழலை, வெண்காடு, வேங்கூர்,
    வேதிகுடி, விசயமங்கை, வியலூர்,
ஆழி அகத்தியான்பள்ளி, அண்ணா-
    மலை, ஆலங்காடும், அரதைப்பெரும்-
பாழி, பழனம், பனந்தாள், பாதாளம்,
    பராய்த்துறை, பைஞ்ஞீலி, பனங்காட்டூர், தண்
காழி, கடல் நாகைக்காரோணத்தும்,
    கயிலாயநாதனையே காணல் ஆமே. 7

உஞ்சேனை மாகாளம், ஊறல், ஓத்தூர்,
    உருத்திரகோடி, மறைக்காட்டுள்ளும்,
மஞ்சு ஆர் பொதியில்மலை, தஞ்சை, வழுவூர்-
    வீரட்டம், மாதானம், கேதாரத்தும்,
வெஞ்சமாக்கூடல், மீயச்சூர், வைகா,
    வேதீச்சுரம், வில்வீச்சுரம், வெற்றியூரும்,
கஞ்சனூர், கஞ்சாறு, பஞ்சாக்கையும்,
    கயிலாயநாதனையே காணல் ஆமே. 8

திண்டீச்சுரம், சேய்ஞலூர், செம்பொன்பள்ளி,
    தேவூர், சிரபுரம், சிற்றேமம், சேறை,
கொண்டீச்சுரம், கூந்தலூர், கூழையூர், கூடல்,
    குருகாவூர்வெள்ளடை, குமரி, கொங்கு(வ்),
அண்டர் தொழும் அதிகைவீரட்டானம்,
    ஐயாறு, அசோகந்தி, ஆமாத்தூரும்,
கண்டியூர்வீரட்டம், கருகாவூரும்,
    கயிலாயநாதனையே காணல் ஆமே. 9

நறையூரில் சித்தீச்சுரம், நள்ளாறு,
    நாரையூர், நாகேச்சுரம், நல்லூர், நல்ல
துறையூர், சோற்றுத்துறை, சூலமங்கை,
    தோணிபுரம், துருத்தி,சோமீச்சுரம்,
உறையூர், கடல் ஒற்றியூர், ஊற்றத்தூர்,
    ஓமாம்புலியூர், ஓர் ஏடகத்தும்,
கறையூர், கருப்பறியல், கன்றாப்பூரும்,
    கயிலாயநாதனையே காணல் ஆமே. 10

புலிவலம், புத்தூர், புகலூர், புன்கூர்,
    புறம்பயம், பூவணம், பொய்கைநல்லூர்,
வலிவலம், மாற்பேறு, வாய்மூர், வைகல்,
    வலஞ்சுழி, வாஞ்சியம், மருகல், வன்னி
நிலம் மலி நெய்த்தானத்தோடு, எத்தானத்தும்
    நிலவு பெருங்கோயில், பல கண்டால், தொண்டீர்!
கலி வலி மிக்கோனைக் கால்விரலால் செற்ற
    கயிலாயநாதனையே காணல் ஆமே. 11

பொது   VI-71 அடைவு திருத் தாண்டகம்

பொருப்பள்ளி,—வரை வில்லாப் புரம்மூன்று எய்து,
    புலந்து அழிய, சலந்தரனைப் பிளந்தான்,—பொன் சக்-
கரப்பள்ளி, திருக்காட்டுப்பள்ளி, கள் ஆர்
    கமழ் கொல்லி அறைப்பள்ளி, கலவம் சாரல்
சிரப்பள்ளி, சிவப்பள்ளி, செம்பொன்பள்ளி,
    செழு நனிபள்ளி, தவப்பள்ளி, சீர் ஆர்
பரப்பள்ளி, என்றுஎன்று பகர்வோர்எல்லாம்
    பரலோகத்து இனிதுஆகப் பாலிப்பாரே. 1

காவிரியின் கரைக் கண்டிவீரட்டானம்,
கடவூர்வீரட்டானம், காமரு சீர் அதிகை
மேவிய வீரட்டானம், வழுவைவீரட்டம்,
வியன்பறியல்வீரட்டம், விடை ஊர்திக்கு இடம்ஆம்
கோவல்நகர்வீரட்டம், குறுக்கைவீரட்டம்,
கோத்திட்டைக் குடிவீரட்டானம், இவை கூறி
நாவில் நவின்று உரைப்பார்க்கு நணுகச் சென்றால்,
நமன்தமரும், ''சிவன்தமர்!'' என்று அகல்வர், நன்கே. 2

நல் கொடிமேல் விடை உயர்த்த நம்பன் செம்பங்-
குடி, நல்லக்குடி, நளி நாட்டியத்தான்குடி,
கற்குடி, தென்களக்குடி, செங்காட்டங்குடி,
கருந்திட்டைக்குடி, கடையக்குடி,—காணுங்கால்—
விற்குடி, வேள்விக்குடி, நல் வேட்டக்குடி,
வேதிகுடி, மாணிகுடி, விடைவாய்க்குடி,
புற்குடி, மாகுடி,தேவன்குடி, நீலக்குடி,
புதுக்குடியும், போற்ற இடர் போகும்அன்றே. 3

பிறை ஊரும் சடைமுடி எம்பெருமான் ஆரூர்,
பெரும்பற்றப்புலியூரும், பேராவூரும்,
நறையூரும், நல்லூரும், நல்லாற்றூரும்,
நாலூரும், சேறூரும், நாரையூரும்,
உறையூரும், ஒத்தூரும், ஊற்றத்தூரும்,
அளப்பூர், ஓமாம்புலியூர், ஒற்றியூரும்,
துறையூரும், துவையூரும், தோழூர்தானும்,
துடையூரும், தொழ இடர்கள் தொடராஅன்றே. 4

பெருக்கு ஆறு சடைக்கு அணிந்த பெருமான் சேரும்
பெருங்கோயில் எழுபதினோடு எட்டும், மற்றும்
கரக்கோயில், கடிபொழில் சூழ் ஞாழற்கோயில்,
கருப்பறியல் பொருப்பு அனைய கொகுடிக்கோயில்,
இருக்கு ஓதி மறையவர்கள் வழிபட்டு ஏத்தும்
இளங்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில்,—
திருக்கோயில்—சிவன் உறையும் கோயில் சூழ்ந்து,
தாழ்ந்து, இறைஞ்ச, தீவினைகள் தீரும்அன்றே. 5

மலையார்தம்மகளொடு மாதேவன் சேரும்
மறைக்காடு; வண்பொழில் சூழ் தலைச்சங்காடு;
தலையாலங்காடு; தடங்கடல் சூழ் அம் தண்
சாய்க்காடு; தெள்ளு புனல் கொள்ளிக்காடு;
பலர் பாடும் பழையனூர் ஆலங்காடு;
பனங்காடு; பாவையர்கள் பாவம் நீங்க,
விலை ஆடும் வளை திளைக்க, குடையும் பொய்கை
வெண்காடும்; அடைய வினை வேறு ஆம்அன்றே. 6

கடு வாயர்தமை நீக்கி என்னை ஆட்கொள்
கண்நுதலோன் நண்ணும் இடம் அண்ணல்வாயில்,
நெடுவாயில், நிறை வயல் சூழ் நெய்தல்வாயில்,
நிகழ் முல்லைவாயிலொடு, ஞாழல்வாயில்,
மடு ஆர் தென்மதுரைநகர் ஆலவாயில்,
மறிகடல் சூழ் புனவாயில், மாடம் நீடு
குடவாயில், குணவாயில், ஆனஎல்லாம்
புகுவாரைக் கொடுவினைகள் கூடாஅன்றே. 7

நாடகம்ஆடி(இ)டம் நந்திகேச்சுரம், மா காளேச்சுரம்,
நாகேச்சுரம், நாகளேச்சுரம், நன்குஆன
கோடீச்சுரம், கொண்டீச்சுரம், திண்டீச்சுரம், குக்குடேச்சுரம்,
அக்கீச்சுரம்,—கூறுங்கால்—
ஆடகேச்சுரம், அகத்தீச்சுரம், அயனீச்சுரம்,
அத்தீச்சுரம், சித்தீச்சுரம், அம் தண் கானல்
ஈடு திரை இராமேச்சுரம், என்றுஎன்று ஏத்தி
இறைவன் உறை சுரம்பலவும் இயம்புவோமே. 8

கந்தமாதனம், கயிலைமலை, கேதாரம்,
காளத்தி, கழுக்குன்றம், கண் ஆர் அண்ணா,
மந்தம் ஆம் பொழில் சாரல் வடபர்ப்பதம்,
மகேந்திர மா மலை, நீலம், ஏமகூடம்,
விந்த மா மலை, வேதம், சையம், மிக்க
வியன்பொதியில்மலை, மேரு, உதயம், அத்தம்,
இந்துசேகரன் உறையும் மலைகள் மற்றும்
ஏத்துவோம், இடர் கெட நின்று ஏத்துவோமே. 9

நள்ளாறும், பழையாறும், கோட்டாற்றோடு,
நலம் திகழும் நாலாறும், திரு ஐயாறும்,
தெள்ளாறும்; வளைகுளமும், தளிக்குளமும், நல்
இடைக்குளமும், திருக்குளத்தோடு; அஞ்சைக்களம்,
விள்ளாத நெடுங்களம், வேட்களம்; நெல்லிக்கா,
கோலக்கா, ஆனைக்கா, வியன்கோடி(க்)கா;
கள் ஆர்ந்த கொன்றையான் நின்ற—ஆறும்,
குளம், களம், கா, என—அனைத்தும் கூறுவோமே. 10

கயிலாயமலை எடுத்தான் கரங்களோடு
சிரங்கள் உரம் நெரியக் கால்விரலால் செற்றோன்
பயில்வுஆய பராய்த்துறை, தென்பாலைத்துறை,
பண்டு எழுவர் தவத்துறை, வெண்துறை, பைம்பொழில்
குயில் ஆலந்துறை, சோற்றுத்துறை, பூந்துறை,
பெருந்துறையும், குரங்காடுதுறையினோடு,
மயிலாடுதுறை, கடம்பந்துறை, ஆவடுதுறை,
மற்றும் துறைஅனைத்தும் வணங்குவோமே. 11

திரு வலஞ்சுழி VI-72 திருத் தாண்டகம்

அலை ஆர் புனல்கங்கைநங்கை காண
அம்பலத்தில் அருநட்டம்ஆடி, வேடம்
தொலையாத வென்றியார், நின்றியூரும்
நெடுங்களமும் மேவி, விடையை மேற்கொண்டு,
இலை ஆர் படை கையில் ஏந்தி, எங்கும்
இமையவரும் உமையவளும் இறைஞ்சி ஏத்த,
மலை ஆர் திரள் அருவிப் பொன்னி சூழ்ந்த
வலஞ்சுழியே புக்கு, இடமா மன்னினாரே. 1

திரு வலஞ்சுழியும், திருக் கொட்டையூர்க் கோடீச்சுரமும் VI-73 திருத் தாண்டகம்

கருமணி போல் கண்டத்து அழகன்கண்டாய்;
கல்லால்நிழல்கீழ் இருந்தான்கண்டாய்;
பரு மணி மா நாகம் பூண்டான்கண்டாய்;
பவளக்குன்று அன்ன பரமன்கண்டாய்;
வரு மணி நீர்ப்பொன்னி வலஞ்சுழியான்கண்டாய்;
மாதேவன்கண்டாய்; வரதன்கண்டாய்—
குருமணி போல் அழகு அமரும் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 1

கலைக்கன்று தங்கு கரத்தான்கண்டாய்;
கலை பயில்வோர் ஞானக்கண் ஆனான்கண்டாய்;
அலைக் கங்கை செஞ்சடைமேல் ஏற்றான்கண்டாய்;
அண்ட கபாலத்து அப்பாலான்கண்டாய்;
மலைப் பண்டம் கொண்டு வரும் நீர்ப்பொன்னி
வலஞ்சுழியில் மேவிய மைந்தன்கண்டாய்—
குலைத்தெங்குஅம்சோலை சூழ் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 2

செந்தாமரைப்போது அணிந்தான்கண்டாய்;
சிவன்கண்டாய்; தேவர்பெருமான்கண்டாய்;
பந்துஆடுமெல்விரலாள் பாகன்கண்டாய்;
பாலோடு, நெய், தயிர், தேன், ஆடிகண்டாய்;
மந்தாரம் உந்தி வரும் நீர்ப்பொன்னி
வலஞ்சுழியில் மன்னும் மணாளன்கண்டாய்—
கொந்து ஆர் பொழில் புடை சூழ் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 3

பொடிஆடும் மேனிப் புனிதன்கண்டாய்;
புள்பாகற்கு ஆழி கொடுத்தான்கண்டாய்;
இடி ஆர் கடு முழக்கு ஏறு ஊர்ந்தான்கண்டாய்;
எண்திசைக்கும் விளக்குஆகி நின்றான்கண்டாய்;
மடல் ஆர் திரை புரளும் காவிரீவாய்
வலஞ்சுழியில் மேவிய மைந்தன்கண்டாய்—
கொடி ஆடு நெடுமாடக் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 4

அக்கு, அரவம், அரைக்கு அசைத்த அம்மான்கண்டாய்;
அருமறைகள் ஆறுஅங்கம் ஆனான்கண்டாய்;
தக்கனது பெரு வேள்வி தகர்த்தான்கண்டாய்;
சதாசிவன்காண்; சலந்தரனைப் பிளந்தான்கண்டாய்;
மைக் கொள் மயில்-தழை கொண்டு வரும் நீர்ப்பொன்னி
வலஞ்சுழியான்கண்டாய்; மழுவன்கண்டாய்—
கொக்கு அமரும் வயல் புடை சூழ் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 5

சண்டனை நல் அண்டர் தொழச் செய்தான்கண்டாய்;
சதாசிவன்கண்டாய்; சங்கரன்தான்கண்டாய்;
தொண்டர்பலர் தொழுது ஏத்தும் கழலான்கண்டாய்;
சுடர்ஒளிஆய்த் தொடர்வு அரிதுஆய் நின்றான்கண்டாய்;
மண்டு புனல் பொன்னி வலஞ்சுழியான்கண்டாய்;
மா முனிவர்தம்முடைய மருந்துகண்டாய்—
கொண்டல் தவழ் கொடிமாடக் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 6

அணவு அரியான்கண்டாய்; அமலன்கண்டாய்;
அவிநாசிகண்டாய்; அண்டத்தான்கண்டாய்;
பண மணி மா நாகம் உடையான்கண்டாய்;
பண்டரங்கன்கண்டாய்; பகவன்கண்டாய்;
மணல் வரும் நீர்ப்பொன்னி வலஞ்சுழியான்கண்டாய்;
மாதவற்கும் நான்முகற்கும் வரதன்கண்டாய்—
குணம் உடை நல் அடியார் வாழ் கொட்டையூரில் 7
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே.

விரை கமழும் மலர்க்கொன்றைத்தாரான்கண்டாய்;
வேதங்கள் தொழ நின்ற நாதன்கண்டாய்;
அரைஅதனில் புள்ளிஅதள்உடையான்கண்டாய்;
அழல்ஆடிகண்டாய்; அழகன்கண்டாய்;
வரு திரை நீர்ப்பொன்னி வலஞ்சுழியான்கண்டாய்;
வஞ்ச மனத்தவர்க்கு அரிய மைந்தன்கண்டாய்—
குரவு அமரும் பொழில் புடை சூழ் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 8

தளம் கிளரும் தாமரைஆதனத்தான்கண்டாய்;
தசரதன்தன்மகன் அசைவு தவிர்த்தான்கண்டாய்;
இளம்பிறையும் முதிர்சடைமேல் வைத்தான்கண்டாய்;
எட்டு-எட்டு இருங் கலையும் ஆனான்கண்டாய்;
வளம் கிளர் நீர்ப்பொன்னி வலஞ்சுழியான்கண்டாய்;
மா முனிகள் தொழுது எழு பொன்கழலான்கண்டாய்—
குளம் குளிர் செங்குவளை கிளர் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 9

விண்டார் புரம்மூன்று எரித்தான்கண்டாய்;
விலங்கலில் வல்அரக்கன் உடல் அடர்த்தான்கண்டாய்;
தண்தாமரையானும், மாலும், தேடத்
தழல்பிழம்புஆய் நீண்ட கழலான்கண்டாய்;
வண்டு ஆர் பூஞ்சோலை வலஞ்சுழியான்கண்டாய்;
மாதேவன்கண்டாய்—மறையோடு அங்கம்
கொண்டாடு வேதியர் வாழ் கொட்டையூரில்
கோடீச்சுரத்து உறையும் கோமான்தானே. 10

திரு நாரையூர் VI-74 திருத் தாண்டகம்

சொல்லானை, பொருளானை, சுருதியானை,
சுடர் ஆழி நெடுமாலுக்கு அருள்செய்தானை,
அல்லானை, பகலானை, அரியான்தன்னை,
அடியார்கட்கு எளியானை, அரண்மூன்று எய்த
வில்லானை, சரம் விசயற்கு அருள்செய்தானை,
வெங்கதிரோன் மா முனிவர் விரும்பி ஏத்தும்
நல்லானை, தீஆடும் நம்பன்தன்னை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 1

பஞ்சுண்ட மெல்அடியாள் பங்கன்தன்னை;
பாரொடு, நீர், சுடர், படர் காற்று, ஆயினானை;
மஞ்சுண்ட வான்ஆகி, வானம்தன்னில்
மதிஆகி, மதி சடைமேல் வைத்தான்தன்னை;
நெஞ்சுண்டு என் நினைவுஆகி நின்றான்தன்னை;
நெடுங்கடலைக் கடைந்தவர் போய் நீங்க, ஓங்கும்
நஞ்சு உண்டு, தேவர்களுக்கு அமுது ஈந்தானை;—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 2

மூவாது யாவர்க்கும் மூத்தான்தன்னை,
முடியாதே முதல்நடுவுமுடிவுஆனானை,
தேவாதிதேவர்கட்கும் தேவன்தன்னை,
திசைமுகன்தன் சிரம் ஒன்று சிதைத்தான்தன்னை,
ஆ வாத அடல் ஏறு ஒன்று உடையான்தன்னை,
அடியேற்கு நினைதோறும் அண்ணிக்கின்ற
நாவானை, நாவினில் நல் உரைஆனானை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 3

செம்பொன்னை, நன் பவளம் திகழும் முத்தை,
செழுமணியை, தொழுமவர்தம் சித்தத்தானை,
வம்பு அவிழும் மலர்க்கணை வேள் உலக்க நோக்கி
மகிழ்ந்தானை, மதில் கச்சி மன்னுகின்ற
கம்பனை, எம் கயிலாயமலையான்தன்னை,
கழுகினொடு காகுத்தன் கருதி ஏத்தும்
நம்பனை, எம்பெருமானை, நாதன்தன்னை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 4

புரை உடைய கரிஉரிவைப் போர்வையானை,
புரிசடைமேல் புனல் அடைத்த புனிதன்தன்னை,
விரை உடைய வெள்எருக்குஅம்கண்ணியானை,
வெண்நீறு செம்மேனி விரவினானை,
வரை உடைய மகள் தவம் செய் மணாளன்தன்னை,
வரு பிணிநோய் பிரிவிக்கும் மருந்துதன்னை,
நரைவிடை நல் கொடி உடைய நாதன்தன்னை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 5

பிறவாதும் இறவாதும் பெருகினானை,
பேய் பாட நடம்ஆடும் பித்தன்தன்னை,
மறவாத மனத்துஅகத்து மன்னினானை,
மலையானை, கடலானை, வனத்து உளானை,
உறவானை, பகையானை, உயிர்ஆனானை,
உள்ளானை, புறத்தானை, ஓசையானை,
நறவு ஆரும் பூங்கொன்றை சூடினானை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 6

தக்கனது வேள்வி கெடச் சாடினானை,
தலை கலனாப் பலி ஏற்ற தலைவன்தன்னை,
கொக்கரை சச்சரி வீணைப் பாணியானை,
கோள் நாகம் பூண்ஆகக் கொண்டான்தன்னை,
அக்கினொடும் என்பு அணிந்த அழகன்தன்னை,
அறுமுகனோடு ஆனைமுகற்கு அப்பன்தன்னை,
நக்கனை, வக்கரையானை, நள்ளாற்றானை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 7

அரிபிரமர் தொழுது ஏத்தும் அத்தன்தன்னை,
அந்தகனுக்கு அந்தகனை, அளக்கல் ஆகா—
எரி புரியும்—இலிங்கபுராணத்து உளானை,
எண்ஆகிப் பண் ஆர் எழுத்துஆனானை,
திரிபுரம் செற்று ஒருமூவர்க்கு அருள்செய்தானை,
சிலந்திக்கும் அரசு அளித்த செல்வன்தன்னை,
நரி விரவு காட்டுஅகத்தில் ஆடலானை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 8

ஆலாலம் மிடற்று அணியா அடக்கினானை;
ஆல்அதன்கீழ் அறம் நால்வர்க்கு அருள்செய்தானை;
பால்ஆகி, தேன்ஆகி, பழமும்ஆகி,
பைங்கரும்புஆய், அங்கு அருந்தும் சுவைஆனானை,
மேல்ஆய வேதியர்க்கு வேள்விஆகி,
வேள்வியினின் பயன்ஆய விமலன்தன்னை;
நால்ஆயமறைக்கு இறைவன்ஆயினானை;—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 9

மீளாத ஆள் என்னை உடையான்தன்னை,
வெளி செய்த வழிபாடு மேவினானை,
மாளாமை மறையவனுக்கு உயிரும் வைத்து
வன்கூற்றின் உயிர் மாள உதைத்தான்தன்னை,
தோள்ஆண்மை கருதி வரை எடுத்த தூர்த்தன்
தோள்வலியும் தாள்வலியும் தொலைவித்து ஆங்கே
நாளோடு வாள் கொடுத்த நம்பன்தன்னை,—
நாரையூர் நன்நகரில் கண்டேன், நானே. 10

திருக் குடந்தைக் கீழ்க்கோட்டம் VI-75 திருத் தாண்டகம்

சொல் மலிந்த மறைநான்கு ஆறுஅங்கம்ஆகிச்
சொல்பொருளும் கடந்த சுடர்ச்சோதிபோலும்;
கல் மலிந்த கயிலைமலைவாணர்போலும்;
கடல்நஞ்சம் உண்டு இருண்ட கண்டர்போலும்;
மல் மலிந்த மணி வரைத்திண்தோளர்போலும்;
மலைஅரையன்மடப்பாவை மணாளர்போலும்;
கொன் மலிந்த மூஇலைவேல் குழகர்போலும்—
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 1

கான் நல் இளங் கலி மறவன் ஆகி, பார்த்தன்
கருத்து அளவு செருத் தொகுதி கண்டார்போலும்;
ஆன் நல் இளங் கடு விடை ஒன்று ஏறி, அண்டத்து
அப்பாலும் பலி திரியும் அழகர்போலும்—
தேன் நல் இளந் துவலை மலி தென்றல் முன்றில்
செழும் பொழில் பூம்பாளை விரி தேறல் நாறும்,
கூனல்இளம்பிறை தடவு கொடி கொள், மாடக்
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 2

நீறு அலைத்த திருஉருவும், நெற்றிக்கண்ணும்,
நிலா அலைத்த பாம்பினொடு, நிறை நீர்க்கங்கை-
ஆறு அலைத்த சடைமுடியும், அம் பொன்-தாளும்,
அடியவர்க்குக் காட்டி அருள்புரிவார்போலும்;
ஏறு அலைத்த நிமிர்கொடி ஒன்று உடையர்போலும்;
ஏழ்உலகும் தொழு கழல் எம் ஈசர்போலும்;
கூறு அலைத்த மலைமடந்தைகொழுநர்போலும்—
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 3

தக்கனது பெரு வேள்வி தகர்த்தார்போலும்;
சந்திரனைக் கலை கவர்ந்து தரித்தார்போலும்;
செக்கர்ஒளி, பவளஒளி, மின்னின் சோதி,
செழுஞ் சுடர்த்தீ, ஞாயிறு, எனச் செய்யர்போலும்—
மிக்க திறல் மறையவரால் விளங்கு வேள்வி
மிகு புகை போய் விண் பொழிய, கழனிஎல்லாம்
கொக்கு இனிய கனி சிதறித் தேறல் பாயும்
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 4

காலன் வலி தொலைத்த கழல்காலர்போலும்;
காமன் எழில் அழல் விழுங்கக் கண்டார்போலும்;
ஆல்அதனில் அறம் நால்வர்க்கு அளித்தார்போலும்;
ஆனொடு பெண் அலி அல்லர், ஆனார், போலும்;
நீலஉரு, வயிர நிரை, பச்சை, செம்பொன்,
நெடும் பளிங்கு, என்று அறிவு அரிய நிறத்தார்போலும்—
கோல மணி கொழித்து இழியும் பொன்னி நன்நீர்க்
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 5

முடி கொண்ட வளர்மதியும், மூன்றுஆய்த் தோன்றும்—
முளைஞாயிறு அன்ன—மலர்க்கண்கள்மூன்றும்,
அடி கொண்ட சிலம்பு ஒலியும், அருள் ஆர் சோதி
அணி முறுவல் செவ்வாயும், அழகுஆய்த் தோன்ற;
துடி கொண்ட இடை மடவாள் பாகம் கொண்டு;
சுடர்ச்சோதிக்கடல் செம்பொன்மலை போல், இந் நாள்
குடிகொண்டு என் மனத்துஅகத்தே புகுந்தார்போலும்—
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 6

கார் இலங்கு திருஉருவத்தவற்கும், மற்றைக்
கமலத்தில் காரணற்கும், காட்சி ஒண்ணாச்
சீர் இலங்கு தழல்பிழம்பின் சிவந்தார்போலும்;
சிலை வளைவித்து அவுணர் புரம் சிதைத்தார்போலும்;
பார், இலங்கு புனல், அனல், கால், பரமாகாசம்,
பருதி, மதி, சுருதியும்ஆய், பரந்தார்போலும்;
கூர் இலங்கு வேல் குமரன் தாதைபோலும்—
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 7

பூச் சூழ்ந்த பொழில் தழுவு புகலூர் உள்ளார்;
புறம்பயத்தார்; அறம் புரி பூந்துருத்தி புக்கு,
மாச் சூழ்ந்த பழனத்தார்; நெய்த்தானத்தார்;
மா தவத்து வளர் சோற்றுத்துறையார்; நல்ல
தீச் சூழ்ந்த திகிரி திருமாலுக்கு ஈந்து,
திரு ஆனைக்காவில் ஓர் சிலந்திக்கு அந் நாள்
கோச் சோழர்குலத்து அரசு கொடுத்தார்போலும்—
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 8

பொங்கு அரவர்; புலித்தோலர்; புராணர்; மார்பில்
பொறி கிளர் வெண்பூணநூல் புனிதர்போலும்;
சங்கு அரவக் கடல் முகடு தட்டவிட்டு,
சதுர நடம்ஆட்டு உகந்த சைவர்போலும்;
அங்கு அரவத் திருவடிக்கு ஆட்பிழைப்ப, தந்தை-
அந்தணனை அற எறிந்தார்க்கு, அருள் அப்போதே
கொங்கு அரவச் சடைக் கொன்றை கொடுத்தார்போலும்—
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 9

ஏவி, இடர்க்கடல்இடைப் பட்டு இளைக்கின்றேனை
இப் பிறவி அறுத்து ஏற வாங்கி, ஆங்கே
கூவி, அமருலகுஅனைத்தும் உருவிப் போக,
குறியில் அறுகுணத்து ஆண்டுகொண்டார்போலும்—
தாவி—முதல் காவிரி, நல் யமுனை, கங்கை,
சரசுவதி, பொற்றாமரைப்புட்கரணி, தெண்நீர்க்
கோவியொடு, குமரி—வரு தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 10

செறிகொண்ட சிந்தைதனுள் தெளிந்து தேறித்
தித்திக்கும் சிவபுவனத்து அமுதம்போலும்;
நெறி கொண்ட குழலிஉமை பாகம்ஆக,
நிறைந்து அமரர்கணம் வணங்க நின்றார்போலும்;
மறி கொண்ட கரதலத்து எம் மைந்தர்போலும்;
மதில் இலங்கைக் கோன் மலங்க, வரைக்கீழ் இட்டு,
குறி கொண்ட இன்இசை கேட்டு, உகந்தார்போலும்—
குடந்தைக் கீழ்க்கோட்டத்து எம் கூத்தனாரே. 11

திருப் புத்தூர் VI-76 திருத் தாண்டகம்

புரிந்து அமரர் தொழுது ஏத்தும்·புகழ் தக்கோன்காண்,
போர் விடையின் பாகன்காண், புவனம்ஏழும்
விரிந்து பலஉயிர்ஆகி விளங்கினான்காண்,
விரைக்கொன்றைக்கண்ணியன்காண், வேதம்நான்கும்
தெரிந்து முதல் படைத்தோனைச் சிரம் கொண்டோன்காண்,
தீர்த்தன்காண், திருமால் ஓர்பங்கத்தான்காண்—
திருந்து வயல் புடை தழுவு திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 1

வார் ஆரும் முலை மங்கை பங்கத்தான்காண்;
மாமறைகள் ஆயவன்காண்; மண்ணும், விண்ணும்,
கூர் ஆர் வெந்தழலவனும், காற்றும், நீரும்,
குலவரையும், ஆயவன்காண்; கொடுநஞ்சு உண்ட
கார் ஆரும் கண்டன்காண்; எண்தோளன்காண்,
கயிலைமலைப்-பொருப்பன்காண்—விருப்போடு என்றும்
தேர் ஆரும் நெடுவீதித் திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 2

மின் காட்டும் கொடிமருங்குல் உமையாட்கு என்றும்
விருப்பவன்காண், பொருப்பு வலிச் சிலைக் கையோன்காண்,
நன் பாட்டுப் புலவனாய்ச் சங்கம் ஏறி
நல் கனகக்கிழி தருமிக்கு அருளினோன்காண்—
பொன் காட்டக் கடிக்கொன்றை, மருங்கே நின்ற
புனக் காந்தள் கை காட்ட, கண்டு வண்டு
தென் காட்டும் செழும் புறவின்-திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 3

ஏடு ஏறு மலர்க்கமலத்து அயனும், மாலும்,
இந்திரனும், பணிந்து ஏத்த இருக்கின்றான்காண்;
தோடு ஏறும் மலர்க்கடுக்கை, வன்னி, மத்தம்,
துன்னிய செஞ்சடையான்காண்; துகள் தீர் சங்கம்
மாடு ஏறி முத்து ஈனும் கானல் வேலி
மறைக்காட்டு மாமணிகாண்—வளம் கொள் மேதி
சேடு ஏறி மடுப் படியும் திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 4

கரு மருவு வல்வினைநோய் காற்றினான்காண்,
கா மரு பூங் கச்சி ஏகம்பத்தான்காண்,
பெரு மருவு பேர் உலகில் பிணிகள் தீர்க்கும்
பெரும்பற்றத்தண்புலியூர் மன்றுஆடிகாண்,
தரு மருவு கொடைத் தடக்கை அளகைக்கோன்தன்
சங்காத்தி, ஆரூரில்-தனி யானைகாண்—
திரு மருவு பொழில் புடை சூழ் திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 5

காம்பு ஆடு தோள் உமையாள் காண, நட்டம்
கலந்து ஆடல் புரிந்தவன்காண்; கையில் வெய்ய
பாம்பு ஆட, படுதலையில் பலி கொள்வோன்காண்;
பவளத்தின் பருவரை போல் படிமத்தான்காண்;
தாம்பு ஆடு சின விடையே பகடாக் கொண்ட
சங்கரன்காண்; பொங்கு அரவக்கச்சையோன்காண்—
சேம்பு ஆடு வயல் புடை சூழ் திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 6

வெறி விரவு மலர்க்கொன்றை, விளங்கு திங்கள்,
வன்னியொடு, விரிசடைமேல் மிலைச்சினான்காண்;
பொறி விரவு கதம்நாகம், அக்கினோடு
பூண்டவன்காண்; பொரு புலித்தோல்ஆடையான்காண்;
அறிவு அரிய நுண்பொருள்கள் ஆயினான்காண்;
ஆயிரம்பேர் உடையவன்காண்—அம் தண் கானல்
செறி பொழில் சூழ் மணி மாடத் திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 7

புக்கு அடைந்த வேதியற்குஆய்க் காலற் காய்ந்த
புண்ணியன்காண்; வெண்நகை வெள்வளையாள் அஞ்ச,
மிக்கு எதிர்ந்த கரி வெருவ, உரித்த கோன்காண்;
வெண்மதியைக் கலை சேர்த்த திண்மையோன்காண்;
அக்கு அரும்பு பெரும் புன்னை நெருங்கு சோலை
ஆரூருக்கு அதிபதிகாண்—அம் தண் தென்றல்
திக்கு அணைந்து வரு மருங்கில்-திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 8

பற்றவன்காண், ஏனோர்க்கும் வானோருக்கும்;
பராபரன்காண்; தக்கன்தன் வேள்வி செற்ற
கொற்றவன்காண்; கொடுஞ்சினத்தை அடங்கச் செற்று,
ஞானத்தை மேல் மிகுத்தல் கோளாக் கொண்ட
பெற்றியன்காண்; பிறங்கு அருவிக் கழுக்குன்றத்து எம்
பிஞ்ஞகன்காண்; பேர் எழில் ஆர் காமவேளைச்
செற்றவன்காண்—சீர் மருவு திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 9

உரம் மதித்த சலந்தரன்தன் ஆகம் கீண்ட
ஓர் ஆழி படைத்தவன்காண், உலகு சூழும்
வரம் மதித்த கதிரவனைப் பல் கொண்டான்காண்,
வானவர்கோன் புயம் நெரித்த வல்லாளன்காண்,
அர மதித்துச் செம்பொன்னின் ஆரம் பூணா
அணிந்தவன்காண், அலைகடல் சூழ் இலங்கை வேந்தன்
சிரம் நெரித்த சேவடிகாண்—திருப் புத்தூரில்-
திருத் தளியான்காண்; அவன் என் சிந்தையானே. 10

திரு வாய்மூர் VI-77 திருத் தாண்டகம்

பாட அடியார், பரவக் கண்டேன்;
பத்தர்கணம் கண்டேன்; மொய்த்த பூதம்
ஆடல் முழவம் அதிரக் கண்டேன்;
அங்கை அனல் கண்டேன்; கங்கையாளைக்
கோடல், அரவு, ஆர் சடையில் கண்டேன்;
கொக்கின்இதழ் கண்டேன்; கொன்றை கண்டேன்;
வாடல்-தலை ஒன்று கையில் கண்டேன்— 1
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே!

பாலின்மொழியாள் ஓர்பாகம் கண்டேன்;
பதினெண்கணமும் பயிலக் கண்டேன்;
நீலநிறமுண்ட கண்டம் கண்டேன்;
நெற்றி-நுதல் கண்டேன்; பெற்றம் கண்டேன்;
காலைக் கதிர் செய் மதியம் கண்டேன்;
கரந்தை திருமுடிமேல்-தோன்றக் கண்டேன்;
மாலைச் சடையும் முடியும் கண்டேன்— 2
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே!

மண்ணைத் திகழ நடம்அதுஆடும்,
வரை சிலம்பு ஆர்க்கின்ற, பாதம் கண்டேன்;
விண்ணில்-திகழும் முடியும் கண்டேன்;
வேடம்பல ஆம் சரிதை கண்டேன்;
நண்ணிப் பிரியா மழுவும் கண்டேன்;
நாலுமறை அங்கம் ஓதக் கண்டேன்;
வண்ணம் பொலிந்து-இலங்கு கோலம் கண்டேன்—
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே! 3

விளைத்த பெரும் பத்தி கூர, நின்று
மெய் அடியார்தம்மை விரும்பக் கண்டேன்;
இளைக்கும் கதம்நாகம் மேனி கண்டேன்;
என்பின்கலம் திகழ்ந்து தோன்றக் கண்டேன்;
திளைக்கும் திருமார்பில் நீறு கண்டேன்;
சேண் ஆர் மதில்மூன்றும் பொன்ற, அன்று,
வளைத்த வரிசிலையும் கையில் கண்டேன்—
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே! 4

கான் மறையும் போதகத்தின் உரிவை கண்டேன்;
காலில் கழல் கண்டேன்; கரியின்தோல் கொண்டு
ஊன் மறையப் போர்த்த வடிவும் கண்டேன்;
உள்க மனம்வைத்த உணர்வும் கண்டேன்;
நால்மறையானோடு நெடிய மாலும்
நண்ணி வரக் கண்டேன்; திண்ணம்ஆக
மான்மறி தம் கையில் மருவக் கண்டேன்—
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே! 5

அடி ஆர் சிலம்பு ஒலிகள் ஆர்ப்பக் கண்டேன்;
அவ்அவர்க்கே ஈந்த கருணை கண்டேன்;
முடி ஆர் சடைமேல் அரவம் மூழ்க
மூரிப் பிறை போய் மறையக் கண்டேன்;
கொடி, ஆர், அதன்மேல் இடபம் கண்டேன்;
கோவணமும் கீளும் குலாவக் கண்டேன்;
வடி ஆரும் மூஇலைவேல் கையில் கண்டேன்—
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே! 6

குழை ஆர் திருத்தோடு காதில் கண்டேன்;
கொக்கரையும் சச்சரியும் கொள்கை கண்டேன்;
இழை ஆர் புரிநூல் வலத்தே கண்டேன்;
ஏழ்இசை யாழ், வீணை, முரலக் கண்டேன்;
தழை ஆர் சடை கண்டேன்; தன்மை கண்டேன்;
தக்கையொடு தாளம் கறங்கக் கண்டேன்;
மழை ஆர் திருமிடறும் மற்றும் கண்டேன்— 7
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே!

பொருந்தாத செய்கை பொலியக் கண்டேன்;
போற்றுஇசைத்து விண்ணோர் புகழக் கண்டேன்;
பரிந்தார்க்கு அருளும் பரிசும் கண்டேன்;
பார்ஆகிப் புனல்ஆகி நிற்கை கண்டேன்;
விருந்துஆய்ப் பரந்த தொகுதி கண்டேன்;
மெல்லியலும் விநாயகனும் தோன்றக் கண்டேன்;
மருந்துஆய்ப் பிணி தீர்க்கும்ஆறு கண்டேன்— 8
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே!

மெய்அன்பர்ஆனார்க்கு அருளும் கண்டேன்;
வேடுவனாய் நின்ற நிலையும் கண்டேன்;
கை அம்பு அரண் எரித்த காட்சி கண்டேன்;
கங்கணமும், அங்கைக் கனலும், கண்டேன்;
ஐயம் பலஊர் திரியக் கண்டேன்;
அன்றவன்தன் வேள்வி அழித்து உகந்து,
வையம் பரவ இருத்தல் கண்டேன்—
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே! 9

கலங்க இருவர்க்கு அழல்ஆய் நீண்ட
காரணமும் கண்டேன்; கருஆய் நின்று,
பலங்கள் தரித்து, உகந்த பண்பும் கண்டேன்;
பாடல்ஒலிஎலாம் கூடக் கண்டேன்;
இலங்கைத் தலைவன் சிரங்கள்பத்தும்
இறுத்து, அவனுக்கு ஈந்த பெருமை கண்டேன்;
வலங்கைத்தலத்துள் அனலும் கண்டேன்—
வாய்மூர் அடிகளை நான் கண்டஆறே! 10

திரு ஆலங்காடு VI-78 திருத் தாண்டகம்

ஒன்று உலகுஅனைத்தும் ஆனார் தாமே;
ஊழிதோறுஊழி உயர்ந்தார் தாமே;
நின்றுஆகி எங்கும் நிமிர்ந்தார் தாமே;
நீர், வளி, தீ, ஆகாசம், ஆனார் தாமே;
கொன்று ஆரும் கூற்றை உதைத்தார் தாமே;
கோலப் பழனை உடையார் தாமே;
சென்று ஆடு தீர்த்தங்கள் ஆனார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 1

மலைமகளைப் பாகம் அமர்ந்தார் தாமே;
வானோர் வணங்கப்படுவார் தாமே;
சலமகளைச் செஞ்சடைமேல் வைத்தார் தாமே;
''சரண்'' என்று இருப்பார்கட்கு அன்பர் தாமே;
பலபலவும் வேடங்கள் ஆனார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
சிலை மலையா மூஎயிலும் அட்டார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 2

ஆஉற்றஐந்தும் உகந்தார் தாமே;
அளவு இல் பெருமை உடையார் தாமே;
பூ உற்ற நாற்றம்ஆய் நின்றார் தாமே;
புனிதப் பொருள்ஆகி நின்றார் தாமே;
பா உற்ற பாடல் உகப்பார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
தே உற்று அடி பரவ நின்றார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 3

நாறுபூங்கொன்றை முடியார் தாமே;
நால்மறையோடு ஆறுஅங்கம் சொன்னார் தாமே;
மாறு இலா மேனி உடையார் தாமே;
மா மதியம் செஞ்சடைமேல் வைத்தார் தாமே;
பாறினார் வெண்தலையில் உண்டார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
தேறினார் சித்தத்து இருந்தார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 4

அல்லும் பகலும்ஆய் நின்றார் தாமே;
அந்தியும் சந்தியும் ஆனார் தாமே;
சொல்லும் பொருள்எலாம் ஆனார் தாமே;
தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே;
பல்உரைக்கும் பாஎலாம் ஆனார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
செல்லும் நெறி காட்ட வல்லார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 5

தொண்டுஆய்ப் பணிவார்க்கு அணியார் தாமே;
தூ நீறு அணியும் சுவண்டர் தாமே;
தண்தாமரையானும் மாலும் தேட,
தழல்உருஆய் ஓங்கி, நிமிர்ந்தார் தாமே;
பண்தான் இசை பாட நின்றார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
திண்தோள்கள்எட்டும் உடையார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 6

மை ஆரும் கண்டம்-மிடற்றார் தாமே;
மயானத்தில் ஆடல் மகிழ்ந்தார் தாமே;
ஐயாறும், ஆரூரும், ஆனைக்காவும்,
அம்பலமும், கோயிலாக் கொண்டார் தாமே;
பைஆடுஅரவம் அசைத்தார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
செய்யாள் வழிபட நின்றார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 7

விண்முழுதும் மண்முழுதும் ஆனார் தாமே;
மிக்கோர்கள் ஏத்தும் குணத்தார் தாமே;
கண் விழியாக் காமனையும் காய்ந்தார் தாமே;
காலங்கள், ஊழி, கடந்தார் தாமே;
பண் இயலும் பாடல் உகப்பார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
திண் மழுவாள் ஏந்து கரத்தார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 8

கார் ஆர் கடல்நஞ்சை உண்டார் தாமே;
கயிலைமலையை உடையார் தாமே;
ஊர்ஆக ஏகம்பம் உகந்தார் தாமே;
ஒற்றியூர் பற்றி இருந்தார் தாமே;
பாரார் புகழப்படுவார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
தீராத வல்வினைநோய் தீர்ப்பார் தாமே—
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே. 9

மாலைப் பிறை சென்னி வைத்தார் தாமே;
வண் கயிலைமாமலையை வந்தியாத,
நீலக்கடல் சூழ், இலங்கைக் கோனை
நெரிய விரலால் அடர்த்தார் தாமே;
பால் ஒத்த மேனி நிறத்தார் தாமே;
பழனை பதியா உடையார் தாமே;
சீலத்தார் ஏத்தும் திறத்தார் தாமே— 10
திரு ஆலங்காடு உறையும் செல்வர்தாமே.

திருத் தலையாலங்காடு

VI-79

திருத் தாண்டகம்

தொண்டர்க்குத் தூநெறிஆய் நின்றான்தன்னை,
சூழ் நரகில் வீழாமே காப்பான்தன்னை,
அண்டத்துக்கு அப்பாலைக்கு அப்பாலானை,
ஆதிரைநாள் ஆதரித்த அம்மான்தன்னை,
முண்டத்தின் முளைத்து எழுந்த தீஆனானை,
மூஉருவத்து ஓர்உருஆய் முதல்ஆய் நின்ற
தண்டத்தில்-தலையாலங்காடன்தன்னை,—
சாராதே சால நாள் போக்கினேனே! 1

அக்கு இருந்த அரையானை, அம்மான்தன்னை,
அவுணர் புரம் ஒருநொடியில் எரிசெய்தானை,
கொக்கு இருந்த மகுடத்து எம் கூத்தன்தன்னை,
குண்டலம் சேர் காதானை, குழைவார் சிந்தை
புக்கு இருந்து போகாத புனிதன்தன்னை,
புண்ணியனை, எண்ண(அ)ரும் சீர்ப் போகம்எல்லாம்
தக்கு இருந்த தலையாலங்காடன்தன்னை,—
சாராதே சால நாள் போக்கினேனே! 2

மெய்த்தவத்தை; வேதத்தை; வேதவித்தை;
விளங்கு இளமாமதி சூடும் விகிர்தன்தன்னை;
எய்த்து அவமே உழிதந்த ஏழையேனை
இடர்க்கடலில் வீழாமே, ஏற வாங்கி,
பொய்த்தவத்தார் அறியாத நெறி நின்றானை;
புனல் கரந்திட்டு உமையொடு ஒருபாகம் நின்ற
தத்துவனை; தலையாலங்காடன்தன்னை;—
சாராதே சால நாள் போக்கினேனே! 3

சிவன்ஆகி, திசைமுகனாய், திருமால்ஆகி,
செழுஞ் சுடர்ஆய், தீஆகி, நீரும்ஆகி,
புவன்ஆகி, புவனங்கள்அனைத்தும்ஆகி,
பொன்ஆகி, மணிஆகி, முத்தும்ஆகி,
பவன்ஆகி, பவனங்கள்அனைத்தும்ஆகி,
பசு ஏறி, திரிவான் ஓர் பவனாய், நின்ற
தவன்ஆய தலையாலங்காடன்தன்னை—
சாராதே சால நாள் போக்கினேனே! 4

கங்கை எனும் கடும் புனலைக் கரந்தான்தன்னை,
கா மரு பூம்பொழில் கச்சிக் கம்பன்தன்னை,
அம் கையினில் மான்மறி ஒன்று ஏந்தினானை,
ஐயாறு மேயானை, ஆரூரானை,
பங்கம் இலா அடியார்க்குப் பரிந்தான்தன்னை,
பரிதிநியமத்தானை, பாசூரானை,
சங்கரனை, தலையாலங்காடன்தன்னை,—
சாராதே சால நாள் போக்கினேனே! 5

விடம் திகழும் அரவு அரைமேல் வீக்கினானை,
விண்ணவர்க்கும் எண்ண(அ)ரிய அளவினானை,
அடைந்தவரை அமருலகம் ஆள்விப்பானை,
அம்பொன்னை, கம்ப மா களிறு அட்டானை,
மடந்தை ஒருபாகனை, மகுடம்தன்மேல்
வார்புனலும் வாள்அரவும் மதியும் வைத்த
தடங்கடலை, தலையாலங்காடன்தன்னை,— 6
சாராதே சால நாள் போக்கினேனே!

விடை ஏறிக் கடைதோறும் பலி கொள்வானை,
வீரட்டம் மேயானை, வெண்நீற்றானை,
முடை நாறும் முதுகாட்டில் ஆடலானை,
முன்னானை, பின்னானை, அந் நாளானை,
உடை ஆடை உரி-தோலே உகந்தான்தன்னை,
உமை இருந்த பாகத்துள் ஒருவன்தன்னை,
சடையானை, தலையாலங்காடன்தன்னை,—
சாராதே சால நாள் போக்கினேனே! 7

கரும்பு இருந்த கட்டிதனை, கனியை, தேனை,
கன்றாப்பின் நடுதறியை, காறையானை,
இரும்பு அமர்ந்த மூஇலைவேல் ஏந்தினானை,
என்னானை, தென்ஆனைக்காவான்தன்னை,
சுரும்பு அமரும் மலர்க்கொன்றை சூடினானை,
தூயானை, தாய்ஆகி உலகுக்கு எல்லாம்
தரும் பொருளை, தலையாலங்காடன்தன்னை,—
சாராதே சால நாள் போக்கினேனே! 8

பண்டு அளவு நரம்புஓசைப் பயனை, பாலை,
படுபயனை, கடுவெளியை, கனலை, காற்றை,
கண்ட(அ)ளவில் களி கூர்வார்க்கு எளியான்தன்னை,
காரணனை, நாரணனை, கமலத்தோனை,
எண்தள இல் என் நெஞ்சத்துள்ளே நின்ற
எம்மானை, கைம்மாவின்உரிவை பேணும்
தண்டுஅரனை, தலையாலங்காடன்தன்னை,—
சாராதே சால நாள் போக்கினேனே! 9

கைத்தலங்கள்இருபது உடை அரக்கர்கோமான்
கயிலைமலைஅதுதன்னைக் கருதாது ஓடி,
முத்து இலங்கு முடி துளங்க வளைகள் எற்றி
முடுகுதலும், திருவிரல்ஒன்று அவன்மேல் வைப்ப,
பத்து இலங்கு வாயாலும் பாடல் கேட்டு,
பரிந்து, அவனுக்கு ''இராவணன்'' என்று ஈந்த நாமத்
தத்துவனை; தலையாலங்காடன்தன்னை;—
சாராதே சால நாள் போக்கினேனே! 10

திரு மாற்பேறு VI-80 திருத் தாண்டகம்

பாரானை; பாரினது பயன்ஆனானை;
படைப்புஆகிப் பல்உயிர்க்கும் பரிவோன்தன்னை;
ஆராத இன்னமுதை,—அடியார்தங்கட்கு,—
அனைத்துஉலகும் ஆனானை; அமரர்கோனை;
கார் ஆரும் கண்டனை; கயிலை வேந்தை;
கருதுவார் மனத்தானை; காலற் செற்ற
சீரானை; செல்வனை; திரு மாற்பேற்று எம்
செம்பவளக்குன்றினை;—சென்று அடைந்தேன், நானே. 1

விளைக்கின்ற நீர்ஆகி, வித்தும்ஆகி,
விண்ணோடு மண்ஆகி, விளங்கு செம்பொன்
துளைக்கின்ற துளைஆகி, சோதிஆகி,
தூண்ட(அ)ரிய சுடர்ஆகி, துளக்கு இல் வான்மேல்
முளைக்கின்ற கதிர் மதியும் அரவும் ஒன்றி
முழங்கு ஒலி நீர்க்கங்கையொடு மூவாது என்றும்
திளைக்கின்ற சடையானை; திரு மாற்பேற்று எம்
செம்பவளக்குன்றினை;—சென்று அடைந்தேன், நானே. 2

மலைமகள்தம்கோன்அவனை, மாநீர் முத்தை,
    மரகதத்தை, மாமணியை, மல்கு செல்வக்
கலை நிலவு கையானை, கம்பன்தன்னை,
    காண்பு இனிய செழுஞ்சுடரைக், கனகக்குன்றை,
விலை பெரிய வெண்நீற்று மேனியானை,
    மெய்யடியார் வேண்டுவதே வேண்டுவானை,
சிலை நிலவு கரத்தானை, திரு மாற்பேற்று எம்
    செம்பவளக்குன்றினை,—சென்று அடைந்தேன், நானே. 3

உற்றானை, உடல்தனக்கு ஓர் உயிர்ஆனானை,
    ஓங்காரத்து ஒருவனை, அங்கு உமை ஓர்பாகம்
பெற்றானை, பிஞ்ஞகனை, பிறவாதானை,
    பெரியனவும் அரியனவும் எல்லாம் முன்னே
கற்றானை, கற்பனவும் தானேஆய
    கச்சி ஏகம்பனை, காலன் வீழச்
செற்றானை, திகழ் ஒளியை, திரு மாற்பேற்று எம்
    செம்பவளக்குன்றினை,—சென்று அடைந்தேன், நானே. 4

நீறுஆகி, நீறு உமிழும் நெருப்பும்ஆகி,
    நினைவுஆகி, நினைவு இனிய மலையான்மங்கை
கூறுஆகி, கூற்றுஆகி, கோளும்ஆகி,
    குணம்ஆகி, குறையாத உவகைக்கண்ணீர்
ஆறாத ஆனந்தத்து அடியார் செய்த
    அநாசாரம் பொறுத்துஅருளி, அவர்மேல் என்றும்
சீறாத பெருமானை; திரு மாற்பேற்று எம்
    செம்பவளக்குன்றினை;—சென்று அடைந்தேன், நானே. 5

மருவு இனிய மறைப்பொருளை, மறைக்காட்டானை,
    மறப்புஇலியை, மதி ஏந்து சடையான்தன்னை,
உரு நிலவும் ஒண்சுடரை, உம்பரானை,
    உரைப்பு இனிய தவத்தானை, உலகின் வித்தை,
கரு நிலவு கண்டனை, காளத்தி(ய்)யை,
    கருதுவார் மனத்தானை, கல்விதன்னை,
செரு நிலவு படையானை, திரு மாற்பேற்று எம்
    செம்பவளக்குன்றினை,—சென்று அடைந்தேன், நானே. 6

பிறப்பானை, பிறவாத பெருமையானை,
    பெரியானை, அரியானை, பெண்ஆண்ஆய
நிறத்தானை, நின்மலனை, நினையாதாரை
    நினையானை, நினைவோரை நினைவோன்தன்னை,
அறத்தானை, அறவோனை, ஐயன்தன்னை,
    அண்ணல்தனை, நண்ண(அ)ரிய அமரர் ஏத்தும்
திறத்தானை, திகழ் ஒளியை, திரு மாற்பேற்று எம் 7
    செம்பவளக்குன்றினை,—சென்று அடைந்தேன், நானே.

வானகத்தில் வளர்முகிலை, மதியம்தன்னை,
    வணங்குவார் மனத்தானை, வடிவு ஆர் பொன்னை,
ஊன்அகத்தில் உறுதுணையை, உலவாதானை,
    ஒற்றியூர் உத்தமனை, ஊழிக் கன்றை,
கானகத்துக் கருங்களிற்றை, காளத்தி(ய்)யை,
    கருதுவார் கருத்தானை, கருவை, மூலத்
தேன்அகத்தில் இன்சுவையை, திரு மாற்பேற்று எம் 8
    செம்பவளக்குன்றினை,—சென்று அடைந்தேன், நானே.

முற்றாத முழுமுதலை; முளையை; மொட்டை;
முழுமலரின் மூர்த்தியை; முனியாது என்றும்
பற்றுஆகிப் பல்உயிர்க்கும் பரிவோன் தன்னை;
பராபரனை; பரஞ்சுடரை; பரிவோர் நெஞ்சில்
உற்றானை; உயர் கருப்புச்சிலையோன் நீறுஆய்
ஒள்அழல்வாய் வேவ உறும் நோக்கத்தானை;
செற்றானை, திரிபுரங்கள்; திரு மாற்பேற்று எம்
செம்பவளக்குன்றினை;—சென்று அடைந்தேன், நானே. 9

விரித்தானை, நால்மறையோடு அங்கம்ஆறும்;
வெற்பு எடுத்த இராவணனை விரலால் ஊன்றி
நெரித்தானை; நின்மலனை; அம்மான்தன்னை;
நிலா நிலவு செஞ்சடைமேல் நிறை நீர்க்கங்கை
தரித்தானை; சங்கரனை; சம்புதன்னை;
தரியலர்கள் புரம்மூன்றும் தழல்வாய் வேவச்
சிரித்தானை; திகழ் ஒளியை; திரு மாற்பேற்று எம்
செம்பவளக்குன்றினை;—சென்று அடைந்தேன், நானே. 10

திருக் கோடிகா   VI-81   திருத் தாண்டகம்

கண் தலம் சேர் நெற்றி இளங்காளைகண்டாய்;
கல்மதில் சூழ் கந்தமாதனத்தான்கண்டாய்;
மண்தலம் சேர் மயக்கு அறுக்கும் மருந்துகண்டாய்;
மதில் கச்சி ஏகம்பம் மேயான்கண்டாய்;
விண்தலம் சேர் விளக்குஒளிஆய் நின்றான்கண்டாய்;
மீயச்சூர் பிரியாத விகிர்தன்கண்டாய்;
கொண்டல் அம் சேர் கண்டத்து எம் கூத்தன்கண்டாய்—
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே. 1

வண்டு ஆடு பூங்குழலாள் பாகன்கண்டாய்;
மறைக்காட்டு உறையும் மணாளன்கண்டாய்;
பண்டு ஆடும் பழவினைநோய் தீர்ப்பான்கண்டாய்;
பரலோக நெறி காட்டும் பரமன்கண்டாய்;
செண்டுஆடி அவுணர்புரம் செற்றான்கண்டாய்;
திரு ஆரூர்த் திருமூலட்டானன்கண்டாய்;
கொண்டாடும் அடியவர்தம் மனத்தான்கண்டாய்—
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே. 2

அலை ஆர்ந்த புனல்கங்கைச் சடையான்கண்டாய்;
அடியார்கட்கு ஆர் அமுதம் ஆனான்கண்டாய்;
மலை ஆர்ந்த மடமங்கை பங்கன்கண்டாய்;
வானோர்கள் முடிக்கு அணிஆய் நின்றான்கண்டாய்;
இலை ஆர்ந்த திரிசூலப்படையான்கண்டாய்;
ஏழ்உலகும்ஆய் நின்ற எந்தைகண்டாய்;
கொலை ஆர்ந்த குஞ்சரத் தோல் போர்த்தான்கண்டாய்—
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே. 3

மற்று ஆரும் தன் ஒப்பார் இல்லான்கண்டாய்;
மயிலாடுதுறை இடமா மகிழ்ந்தான்கண்டாய்;
புற்று ஆடு அரவு அணிந்த புனிதன்கண்டாய்;
பூந்துருத்திப் பொய்இலியாய் நின்றான்கண்டாய்;
அற்றார்கட்கு அற்றானாய் நின்றான்கண்டாய்;
ஐயாறு அகலாத ஐயன்கண்டாய்;
குற்றாலத்து அமர்ந்து உறையும் கூத்தன்கண்டாய்—
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே. 4

வார் ஆர்ந்த வனமுலையாள் பங்கன்கண்டாய்;
மாற்பேறு காப்பா மகிழ்ந்தான்கண்டாய்;
போர் ஆர்ந்த மால்விடை ஒன்று ஊர்வான்கண்டாய்;
புகலூரை அகலாத புனிதன்கண்டாய்;
நீர் ஆர்ந்த நிமிர்சடை ஒன்று உடையான்கண்டாய்;
நினைப்பார்தம் வினைப்பாரம் இழிப்பான்கண்டாய்;
கூர் ஆர்ந்த மூஇலைவேல்படையான்கண்டாய்—
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே. 5

கடி மலிந்த மலர்க்கொன்றைச் சடையான்கண்டாய்;
கண் அப்ப விண்அப்புக் கொடுத்தான்கண்டாய்;
படி மலிந்த பல்பிறவி அறுப்பான்கண்டாய்;
பற்றுஅற்றார் பற்றவனாய் நின்றான்கண்டாய்;
அடி மலிந்த சிலம்பு அலம்பத் திரிவான்கண்டாய்;
அமரர்கணம் தொழுது ஏத்தும் அம்மான்கண்டாய்;
கொடி மலிந்த மதில்-தில்லைக் கூத்தன்கண்டாய்—
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே. 6

உழை ஆடு கரதலம்ஒன்று உடையான்கண்டாய்;
ஒற்றியூர் ஒற்றியா உடையான்கண்டாய்;
கழை ஆடு கழுக்குன்றம் அமர்ந்தான்கண்டாய்;
காளத்திக் கற்பகம்ஆய் நின்றான்கண்டாய்;
இழை ஆடும் எண்புயத்த இறைவன்கண்டாய்;
என் நெஞ்சத்துள்-நீங்கா எம்மான்கண்டாய்;
குழை ஆட நடம்ஆடும் கூத்தன்கண்டாய்—
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே. 7

படம் ஆடு பன்னகக்கச்சு அசைத்தான்கண்டாய்;
பராய்த்துறையும் பாசூரும் மேயான்கண்டாய்;
நடம்ஆடி ஏழ்உலகும் திரிவான்கண்டாய்;
நால்மறையின் பொருள்கண்டாய்; நாதன்கண்டாய்;
கடம் ஆடு களிறு உரித்த கண்டன்கண்டாய்;
கயிலாயம் மேவி இருந்தான்கண்டாய்;
குடம்ஆடி இடம்ஆகக் கொண்டான்கண்டாய்— 8
கோடிகா அமர்ந்து உறையும் குழகன்தானே.

திருச் சாய்க்காடு VI-82 திருத் தாண்டகம்

வானத்து இளமதியும் பாம்பும் தன்னில்
வளர்சடைமேல் ஆதரிப்ப வைத்தார்போலும்;
தேனைத் திளைத்து உண்டு வண்டு பாடும்
தில்லை நடம்ஆடும் தேவர்போலும்;
ஞானத்தின் ஒண்சுடர்ஆய் நின்றார்போலும்;
நன்மையும் தீமையும் ஆனார்போலும்;
தேன் ஒத்து அடியார்க்கு இனியார்போலும்— 1
திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே.

விண்ணோர் பரவ நஞ்சு உண்டார்போலும்;
வியன்துருத்தி வேள்விக்குடியார்போலும்;
அண்ணாமலை உறையும் அண்ணல்போலும்;
அதியரையமங்கை அமர்ந்தார்போலும்;
பண் ஆர் களி வண்டு பாடி ஆடும்
பராய்த்துறையுள் மேய பரமர்போலும்—
திண் ஆர் புகார் முத்து அலைக்கும் தெண்நீர்த் 2
திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே.

கான் இரிய வேழம் உரித்தார்போலும்;
    காவிரிப்பூம்பட்டினத்து உள்ளார்போலும்;
வான் இரிய வரு புரம்மூன்று எரித்தார்போலும்;
    வடகயிலைமலைஅது தம் இருக்கைபோலும்;
ஊன் இரியத் தலை கலனா உடையார்போலும்;
    உயர் தோணிபுரத்து உறையும் ஒருவர்போலும்—
தேன் இரிய மீன் பாயும் தெண்நீர்ப் பொய்கைத்
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 3

ஊன் உற்ற வெண்தலை சேர் கையர்போலும்;
    ஊழிபல கண்டு இருந்தார்போலும்;
மான் உற்ற கரதலம் ஒன்று உடையார்போலும்;
    மறைக்காட்டுக் கோடி மகிழ்ந்தார்போலும்;
கான் உற்ற ஆடல் அமர்ந்தார்போலும்;
    காமனையும் கண்அழலால் காய்ந்தார்போலும்—
தேன் உற்ற சோலை திகழ்ந்து தோன்றும்
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 4

கார் மல்கு கொன்றைஅம்தாரார்போலும்;
    காலனையும் ஓர் உதையால் கண்டார்போலும்;
பார் மல்கி ஏத்தப்படுவார்போலும்;
    பருப்பதத்தே பல்ஊழி நின்றார்போலும்;
ஊர் மல்கு பிச்சைக்கு உழன்றார்போலும்;
    ஒத்தூர் ஒருநாளும் நீங்கார்போலும்;
சீர் மல்கு பாடல் உகந்தார்போலும்—
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 5

மா வாய் பிளந்து உகந்த மாலும், செய்ய-
    மலரவனும், தாமேயாய் நின்றார்போலும்;
மூவாத மேனி முதல்வர்போலும்;
    முதுகுன்றமூதூர் உடையார்போலும்;
கோஆய முனிதன்மேல் வந்த கூற்றைக்
    குரைகழலால், அன்று, குமைத்தார்போலும்;
தேவாதிதேவர்க்கு அரியார்போலும்—
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 6

கடு வெளியோடு ஓர்ஐந்தும் ஆனார்போலும்;
    காரோணத்து என்றும் இருப்பார்போலும்;
இடி குரல் வாய்ப் பூதப்படையார்போலும்;
    ஏகம்பம் மேவி இருந்தார்போலும்;
படி ஒருவர் இல்லாப் படியார்போலும்;
    பாண்டிக்கொடுமுடியும் தம் ஊர்போலும்;
செடிபடுநோய் அடியாரைத் தீர்ப்பார்போலும்—
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 7

விலை இலா ஆரம் சேர் மார்பர்போலும்;
    வெண்நீறு மெய்க்கு அணிந்த விகிர்தர்போலும்;
மலையினார்மங்கை மணாளர்போலும்;
    மாற்பேறு காப்புஆய் மகிழ்ந்தார்போலும்;
தொலைவுஇலார் புரம்மூன்றும் தொலைத்தார்போலும்;
    சோற்றுத்துறை, துருத்தி, உள்ளார்போலும்;
சிலையின் ஆர் செங்கண்அரவர்போலும்—
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 8

அல்லல் அடியார்க்கு அறுப்பார்போலும்;
    அமருலகம் தம் அடைந்தார்க்கு ஆட்சிபோலும்;
நல்லமும் நல்லூரும் மேயார்போலும்;
    நள்ளாறு நாளும் பிரியார்போலும்;
முல்லைமுகைநகையாள் பாகர்போலும்;
    முன்னமே தோன்றி முளைத்தார்போலும்;
தில்லை நடம்ஆடும் தேவர்போலும்—
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 9

உறைப்பு உடைய இராவணன் பொன்மலையைக் கையால்
    ஊக்கம்செய்து எடுத்தலுமே, உமையாள் அஞ்ச,
நிறைப் பெருந்தோள்இருபதும் பொன்முடிகள்பத்தும்
    நிலம் சேர, விரல் வைத்த நிமலர்போலும்;
பிறைப்பிளவு சடைக்கு அணிந்த பெம்மான்போலும்;
    பெண்ஆண்உருஆகி நின்றார்போலும்;
சிறப்பு உடைய அடியார்கட்கு இனியார்போலும்—
    திருச் சாய்க்காட்டு இனிது உறையும் செல்வர்தாமே. 10

திருப் பாசூர் VI-83 திருத் தாண்டகம்

விண்ஆகி, நிலன்ஆகி, விசும்பும்ஆகி,
    வேலை சூழ் ஞாலத்தார் விரும்புகின்ற
எண்ஆகி, எழுத்துஆகி, இயல்பும்ஆகி,
    ஏழ்உலகும் தொழுது ஏத்திக் காண நின்ற
கண்ஆகி, மணிஆகி, காட்சிஆகி,
    காதலித்து அங்கு அடியார்கள் பரவ நின்ற
பண்ஆகி, இன்அமுதுஆம் பாசூர் மேய 1
    பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே!

வேதம்ஓர்நான்குஆய், ஆறுஅங்கம்ஆகி,
    விரிக்கின்ற பொருட்கு எல்லாம் வித்தும்ஆகி,
கூதல்ஆய், பொழிகின்ற மாரிஆகி,
    குவலயங்கள் முழுதும்ஆய், கொண்டல்ஆகி,
காதலால் வானவர்கள், ''போற்றி!'' என்று
    கடிமலர்கள்அவை தூவி ஏத்த நின்ற
பாதி ஓர் மாதினனை; பாசூர் மேய 2
    பரஞ்சுடரை;—கண்டு அடியேன் உய்ந்தஆறே!

தடவரைகள்ஏழும்ஆய், காற்றும்ஆய், தீஆய்,
    தண் விசும்புஆய், தண் விசும்பின் உச்சிஆகி,
கடல்வலயம் சூழ்ந்தது ஒரு ஞாலம்ஆகி,
    காண்கின்ற கதிரவனும் மதியும்ஆகி,
குடமுழவச் சதிவழியே அனல் கை ஏந்திக்
    கூத்துஆட வல்ல குழகன்ஆகி,
படஅரவுஒன்றுஅது ஆட்டிப் பாசூர் மேய 3
    பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே!

நீர் ஆரும் செஞ்சடைமேல் அரவம் கொன்றை
    நிறை மதியம் உடன்சூடி, நீதியாலே
சீர் ஆரும் மறை ஓதி, உலகம் உய்யச்
    செழுங் கடலைக் கடைந்த கடல்நஞ்சம் உண்ட
கார் ஆரும் கண்டனை; கச்சி மேய
    கண்ணுதலை; கடல் ஒற்றி கருதினானை;
பாரோரும் விண்ணோரும் பரசும் பாசூர்ப் 4
    பரஞ்சுடரை;—கண்டு அடியேன் உய்ந்தஆறே!

வேடனாய் விசயன்தன் வியப்பைக் காண்பான்,
வில் பிடித்து, கொம்பு உடைய ஏனத்தின் பின்;
கூடினார்—உமைஅவளும் கோலம் கொள்ள,
கொலைப் பகழி உடன்கோத்து—கோரப் பூசல்;
ஆடினார், பெருங்கூத்துக் காளி காண;
அருமறையோடு ஆறுஅங்கம் ஆய்ந்துகொண்டு,
பாடினார், நால்வேதம்; பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே! 5

புத்தியினால் சிலந்தியும் தன் வாயின் நூலால்
பொதுப் பந்தர்அது இழைத்துச் சருகால் மேய்ந்த
சித்தியினால், அரசுஆண்டு சிறப்புச் செய்யச்
சிவகணத்துப் புகப் பெய்தார்; திறலால் மிக்க
வித்தகத்தால் வெள்ளானை விள்ளா அன்பு
விரவியவா கண்டு, அதற்கு வீடு காட்டி,
பத்தர்களுக்கு இன்அமுதுஆம் பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே! 6

இணை ஒருவர் தாம்அல்லால் யாரும் இல்லார்;
இடைமருதோடு ஏகம்பத்து என்றும் நீங்கார்;
அணைவு அரியர், யாவர்க்கும்; ஆதிதேவர்;
அருமந்த நன்மைஎலாம் அடியார்க்கு ஈவர்;
தணல் முழுகு பொடிஆடும் செக்கர்மேனித்
தத்துவனை, சாந்து அகிலின்அளறு தோய்ந்த
பணைமுலையாள் பாகனை, எம் பாசூர் மேய
பரஞ்சுடரை,—கண்டு அடியேன் உய்ந்தஆறே! 7

அண்டவர்கள் கடல் கடைய, அதனுள்-தோன்றி,
அதிர்ந்து எழுந்த ஆலாலம் வேலை ஞாலம்
எண்திசையும் சுடுகின்றஆற்றைக் கண்டு,
இமைப்புஅளவில் உண்டு இருண்ட கண்டர்; தொண்டர்
வண்டு படு மதுமலர்கள் தூவி நின்று,
வானவர்கள் தானவர்கள் வணங்கி, ஏத்தும்
பண்டரங்கவேடனை; எம் பாசூர் மேய
பரஞ்சுடரை;—கண்டு அடியேன் உய்ந்தஆறே! 8

ஞாலத்தை உண்ட திருமாலும், மற்றை
நான்முகனும், அறியாத நெறியார்; கையில்
சூலத்தால் அந்தகனைச் சுருளக் கோத்து,
தொல்உலகில் பல்உயிரைக் கொல்லும் கூற்றைக்
கால(த்)தால் உதைசெய்து, காதல்செய்த
அந்தணனைக் கைக்கொண்ட செவ்வான்வண்ணர்;
பால் ஒத்த வெண்நீற்றர்; பாசூர் மேய
பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே! 9

வேந்தன், நெடு முடி உடைய அரக்கர்கோமான்,
மெல்லியலாள்உமை வெருவ, விரைந்திட்டு, ஓடி,
சாந்தம் என நீறு அணிந்தான் கயிலைவெற்பைத்
தடக்கைகளால் எடுத்திடலும், தாளால் ஊன்றி
ஏந்து திரள்திண்தோளும் தலைகள்பத்தும்
இறுத்து, அவன்தன் இசை கேட்டு, இரக்கம் கொண்ட,
பாந்தள் அணி சடைமுடி, எம் பாசூர் மேய,
பரஞ்சுடரைக் கண்டு அடியேன் உய்ந்தஆறே! 10

திருச் செங்காட்டங்குடி VI-84 திருத் தாண்டகம்

பெருந்தகையை, பெறற்கு அரிய மாணிக்கத்தை,
பேணி நினைந்து எழுவார்தம் மனத்தே மன்னி
இருந்த மணிவிளக்குஅதனை, நின்ற பூமேல்
எழுந்தருளி இருந்தானை, எண்தோள் வீசி
அருந் திறல் மா நடம்ஆடும் அம்மான்தன்னை,
அம் கனகச்சுடர்க்குன்றை, அன்று ஆலின்கீழ்த்
திருந்து மறைப்பொருள் நால்வர்க்கு அருள்செய்தானை,—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 1

துங்க நகத்தால் அன்றித் தொலையா வென்றித்
தொகு திறல் அவ் இரணியனை ஆகம் கீண்ட
அம் கனகத்திருமாலும், அயனும், தேடும்
ஆர் அழலை; அநங்கன் உடல் பொடிஆய் வீழ்ந்து
மங்க, நகத் தான் வல்ல மருந்துதன்னை;
வண் கயிலைமாமலைமேல் மன்னி நின்ற,
செங்கனகத்திரள்தோள், எம் செல்வன்தன்னை;—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 2

உருகு மனத்து அடியவர்கட்கு ஊறும் தேனை,
உம்பர் மணி முடிக்கு அணியை, உண்மை நின்ற
பெருகு நிலைக் குறியாளர் அறிவுதன்னை,
பேணிய அந்தணர்க்கு மறைப்பொருளை, பின்னும்
முருகு விரி நறுமலர்மேல் அயற்கும் மாற்கும்
முழுமுதலை, மெய்த் தவத்தோர் துணையை, வாய்த்த
திருகுகுழல்உமைநங்கை பங்கன்தன்னை,—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 3

கந்தமலர்க்கொன்றை அணி சடையான்தன்னை;
கதிர்விடு மா மணி பிறங்கு கனகச்சோதிச்
சந்த மலர்த் தெரிவை ஒருபாகத்தானை;
சராசர நல்-தாயானை; நாயேன் முன்னைப்
பந்தம் அறுத்து, ஆள்ஆக்கி, பணி கொண்டு, ஆங்கே
பன்னிய நூல்-தமிழ்மாலை பாடுவித்து, என்
சிந்தை மயக்கு அறுத்த திருஅருளினானை;—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 4

நஞ்சு அடைந்த கண்டத்து நாதன்தன்னை,
நளிர்மலர்ப்-பூங்கணை வேளை நாசம்ஆக
வெஞ்சினத்தீ விழித்தது ஒரு நயனத்தானை,
வியன்கெடில வீரட்டம் மேவினானை,
மஞ்சு அடுத்த நீள் சோலை மாட வீதி
மதில் ஆரூர் இடம்கொண்ட மைந்தன்தன்னை,
செஞ் சினத்த திரிசூலப்படையான்தன்னை,—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 5

கன்னியை அங்கு ஒரு சடையில் கரந்தான்தன்னை,
கடவூரில் வீரட்டம் கருதினானை,
பொன்னி சூழ் ஐயாற்று எம் புனிதன்தன்னை,
பூந்துருத்தி நெய்த்தானம் பொருந்தினானை,
பன்னிய நால்மறை விரிக்கும் பண்பன்தன்னை,
பரிந்து இமையோர் தொழுது ஏத்தி, ''பரனே!'' என்று
சென்னிமிசைக்கொண்டு அணி சேவடியினானை,—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 6

எத்திக்கும்ஆய் நின்ற இறைவன்தன்னை;
ஏகம்பம் மேயானை; இல்லாத் தெய்வம்
பொத்தித் தம் மயிர் பறிக்கும் சமணர் பொய்யில்
புக்கு அழுந்தி வீழாமே, போத வாங்கி,
பத்திக்கே வழி காட்டி, பாவம் தீர்த்து,
பண்டைவினைப் பயம்ஆனஎல்லாம் போக்கி,
தித்தித்து, என் மனத்துள்ளே ஊறும் தேனை;—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 7

கல்லாதார் மனத்து அணுகாக் கடவுள்தன்னை;
கற்றார்கள் உற்று ஓரும் காதலானை;
பொல்லாத நெறி உகந்தார் புரங்கள்மூன்றும்
பொன்றி விழ, அன்று, பொரு சரம் தொட்டானை;
நில்லாத நிணக்குரம்பைப் பிணக்கம் நீங்க,
நிறை தவத்தை அடியேற்கு நிறைவித்து, என்றும்
செல்லாத செந்நெறிக்கே செல்விப்பானை;—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 8

அரிய பெரும்பொருள்ஆகி நின்றான்தன்னை;
அலைகடலில் ஆலாலம் அமுதுசெய்த
கரியது ஒரு கண்டத்து, செங்கண் ஏற்று,
கதிர்விடு மா மணிபிறங்கு காட்சியானை;
உரிய பலதொழில் செய்யும் அடியார்தங்கட்கு
உலகம்எலாம் முழுது அளிக்கும் உலப்புஇலானை;
தெரிவை ஒருபாகத்துச் சேர்த்தினானை;—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 9

போர் அரவம் மால்விடை ஒன்று ஊர்தியானை,
புறம்பயமும் புகலூரும் மன்னினானை,
நீர் அரவச் செஞ்சடைமேல் நிலாவெண்திங்கள்
நீங்காமை வைத்தானை, நிமலன்தன்னை,
பேர் அரவப் புட்பகத்தேர் உடைய வென்றிப்
பிறங்கு ஒளி வாள் அரக்கன் முடி இடியச் செற்ற
சீர் அரவக் கழலானை, செல்வன்தன்னை,—
செங்காட்டங்குடிஅதனில் கண்டேன், நானே. 10

திரு முண்டீச்சுரம் VI-85 திருத் தாண்டகம்

ஆர்த்தான்காண், அழல்நாகம் அரைக்கு நாணா;
அடியவர்கட்கு அன்பன்காண்; ஆனைத்தோலைப்
போர்த்தான்காண்; புரிசடைமேல் புனல் ஏற்றான்காண்;
புறங்காட்டில் ஆடல் புரிந்தான் தான்காண்;
காத்தான்காண்,—உலகுஏழும் கலங்கா வண்ணம்,—
கனைகடல்வாய் நஞ்சுஅதனைக் கண்டத்துள்ளே
சேர்த்தான்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 1

கருத்தன்காண்; கமலத்தோன் தலையில் ஒன்றைக்
காய்ந்தான்காண்; பாய்ந்த நீர் பரந்த சென்னி
ஒருத்தன்காண்; உமையவள் ஓர்பாகத்தான்காண்;
ஓர் உருவின் மூஉருஆய், ஒன்றுஆய், நின்ற
விருத்தன்காண்; விண்ணவர்க்கும் மேல்ஆனான்காண்;
மெய்அடியார் உள்ளத்தே விரும்பி நின்ற
திருத்தன்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 2

நம்பன்காண், நரைவிடை ஒன்று ஏறினான்காண்,
நாதன்காண், கீதத்தை நவிற்றினான்காண்;
இன்பன்காண், இமையா முக்கண்ணினான்காண்,
ஏசற்று மனம் உருகும் அடியார்தங்கட்கு
அன்பன்காண், ஆர்அழல்அதுஆடினான்காண்,
''அவன், இவன்'' என்று யாவர்க்கும் அறிய ஒண்ணாச்
செம்பொன்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 3

மூவன்காண்; மூவர்க்கும் முதல் ஆனான்காண்;
முன்னும்ஆய், பின்னும்ஆய், முடிவு ஆனான்காண்;
காவன்காண்; உலகுக்கு ஓர் கண் ஆனான்காண்;
கங்காளன்காண்; கயிலைமலையினான்காண்;
ஆவன்காண்; ஆஅகத்துஅஞ்சுஆடினான்காண்;
ஆர்அழல்ஆய் அயற்கு அரிக்கும் அறிய ஒண்ணாத்
தேவன்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 4

கானவன்காண், கானவனாய்ப் பொருதான் தான்காண்,
கனல்ஆட வல்லான்காண், கையில் ஏந்தும்
மானவன்காண், மறைநான்கும் ஆயினான்காண்,
வல் ஏறுஒன்றுஅது ஏற வல்லான் தான்காண்,
ஊனவன்காண், உலகத்துக்கு உயிர் ஆனான்காண்,
உரை அவன்காண், உணர்வு அவன்காண், உணர்ந்தார்க்கு என்றும்
தேன் அவன்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 5

உற்றவன்காண், உறவுஎல்லாம் ஆவான் தான்காண்,
ஒழிவு அற நின்று எங்கும் உலப்புஇலான்காண்,
புற்று அரவே ஆடையும்ஆய்ப் பூணும் ஆகிப்
புறங்காட்டில் எரிஆடல் புரிந்தான் தான்காண்,
நல்-தவன்காண், அடி அடைந்த மாணிக்குஆக
நணுகியது ஓர் பெருங் கூற்றைச் சேவடியினால்
செற்றவன்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 6

உதைத்தவன்காண், உணராத தக்கன் வேள்வி
உருண்டு ஓட; தொடர்ந்து அருக்கன் பல்லை எல்லாம்
தகர்த்தவன்காண்; தக்கன்தன் தலையைச் செற்ற
தலையவன்காண்; மலைமகள்ஆம் உமையைச் சால
மதிப்பு ஒழிந்த வல்அமரர் மாண்டார் வேள்வி
வந்து அவி உண்டவரோடும் அதனை எல்லாம்
சிதைத்தவன்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 7

உரிந்த உடையார் துவரால் உடம்பை மூடி
உழிதரும் அவ் ஊமர்அவர் உணரா வண்ணம்
பரிந்தவன்காண்—பனிவரைமீப் பண்டம்எல்லாம்
பறித்து, உடனேநிரந்து வரு பாய் நீர்ப்பெண்ணை,
நிரந்து வரும் இருகரையும் தடவா ஓடி,
நின்மலனை வலம்கொண்டு, நீள நோக்கி,
திரிந்து உலவு—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 8

அறுத்தவன்காண், அடியவர்கள் அல்லல்எல்லாம்;
அரும்பொருள்ஆய் நின்றவன்காண்; அநங்கன் ஆகம்
மறுத்தவன்காண்; மலைதன்னை மதியாது ஓடி,
மலைமகள்தன் மனம் நடுங்க, வானோர் அஞ்ச,
கறுத்தவனாய், கயிலாயம் எடுத்தோன் கையும்
கதிர் முடியும் கண்ணும் பிதுங்கி ஓடச்
செறுத்தவன்காண்—திரு முண்டீச்சுரத்து மேய
சிவலோகன்காண்; அவன் என் சிந்தையானே. 9

திரு ஆலம்பொழில் VI-86 திருத் தாண்டகம்

கருஆகிக் கண்ணுதலாய் நின்றான்தன்னை,
கமலத்தோன்தலை அரிந்த காபாலி(ய்)யை,
உரு ஆர்ந்த மலைமகள் ஓர்பாகத்தானை,
உணர்வுஎலாம்ஆனானை, ஓசைஆகி
வருவானை, வலஞ்சுழி எம்பெருமான்தன்னை,
மறைக்காடும் ஆவடுதண்துறையும் மேய
திருவானை, தென்பரம்பைக்குடியில் மேய
திரு ஆலம்பொழிலானை,—சிந்தி, நெஞ்சே! 1

உரித்தானை, களிறுஅதன் தோல் போர்வைஆக;
உடையானை, உடை புலியின்அதளே ஆக;
தரித்தானை, சடைஅதன்மேல் கங்கை, அங்கைத்
தழல்உருவை; விடம் அமுதா உண்டு, இதுஎல்லாம்
பரித்தானை; பவளமால்வரை அன்னானை;
பாம்புஅணையான்தனக்கு, அன்று, அங்கு ஆழி நல்கிச்
சிரித்தானை; தென்பரம்பைக்குடியில் மேய
திரு ஆலம்பொழிலானை;—சிந்தி, நெஞ்சே! 2

உருமூன்றுஆய் உணர்வின்கண் ஒன்றுஆனானை;
ஓங்கார மெய்ப்பொருளை; உடம்பிலுள்ளால்
கரு ஈன்ற வெங்களவை அறிவான்தன்னை;
காலனைத் தன் கழல்அடியால் காய்ந்து, மாணிக்கு
அருள் ஈன்ற ஆரமுதை; அமரர்கோனை;
அள்ஊறி, ‘‘எம்பெருமான்!’’ என்பார்க்கு என்றும்
திரு ஈன்ற—தென்பரம்பைக்குடியில் மேய—
திரு ஆலம்பொழிலானை;—சிந்தி, நெஞ்சே! 3

பார்முழுதுஆய் விசும்புஆகிப் பாதாளம்(ம்)ஆம்
பரம்பரனை; சுரும்பு அமரும் குழலாள் பாகத்து
ஆர் அமுதுஆம் அணி தில்லைக் கூத்தன்தன்னை;
வாட்போக்கி அம்மானை; ‘‘எம்மான்!’’ என்று
வாரம்அது ஆம் அடியார்க்கு வாரம்ஆகி,
வஞ்சனை செய்வார்க்கு என்றும் வஞ்சன் ஆகும்
சீர் அரசை; தென்பரம்பைக்குடியில் மேய
திரு ஆலம்பொழிலானை;—சிந்தி, நெஞ்சே! 4

வரை ஆர்ந்த மடமங்கை பங்கன்தன்னை;
வானவர்க்கும் வானவனை; மணியை; முத்தை;
அரை ஆர்ந்த புலித்தோல்மேல் அரவம் ஆர்த்த
அம்மானை; தம்மானை, அடியார்க்கு என்றும்;
புரை ஆர்ந்த கோவணத்து எம் புனிதன்தன்னை;
பூந்துருத்தி மேயானை; புகலூரானை;
திரை ஆர்ந்த தென்பரம்பைக்குடியில் மேய
திரு ஆலம்பொழிலானை;—சிந்தி, நெஞ்சே! 5

விரிந்தானை; குவிந்தானை; வேதவித்தை;
    வியன்பிறப்போடு இறப்புஆகி நின்றான்தன்னை;
அரிந்தானை, சலந்தரன்தன் உடலம் வேறா;
    ஆழ்கடல்நஞ்சு உண்டு இமையோர்எல்லாம் உய்யப்
பரிந்தானை; பல்அசுரர் புரங்கள்மூன்றும்
    பாழ்படுப்பான், சிலைமலை நாண் ஏற்றி, அம்பு
தெரிந்தானை; தென்பரம்பைக்குடியில் மேய
    திரு ஆலம்பொழிலானை;—சிந்தி, நெஞ்சே! 6

பொல்லாத என் அழுக்கில் புகுவான், என்னைப்
    புறம்புறமே சோதித்த புனிதன்தன்னை;
எல்லாரும் தன்னையே இகழ, அந் நாள்;
    ''இடு, பலி!'' என்று—அகம் திரியும் எம்பிரானை;
சொல்லாதார்அவர்தம்மைச் சொல்லாதானை;
    தொடர்ந்து தன் பொன்அடியே பேணுவாரைச்
செல்லாத நெறி செலுத்த வல்லான்தன்னை;
    திரு ஆலம்பொழிலானை;—சிந்தி, நெஞ்சே! 7

ஐந்தலைய நாகஅணைக் கிடந்த மாலோடு
    அயன் தேடி நாட(அ)ரிய அம்மான்தன்னை,
பந்து அணவு மெல்விரலாள் பாகத்தானை,
    பராய்த்துறையும் வெண்காடும் பயின்றான்தன்னை,
பொந்து உடைய வெண்தலையில் பலி கொள்வானை,
    பூவணமும் புறம்பயமும் பொருந்தினானை,
சிந்திய வெந்தீவினைகள் தீர்ப்பான்தன்னை,
    திரு ஆலம்பொழிலானை,—சிந்தி, நெஞ்சே! 8

கையில் உண்டு உழல்வாரும் சாக்கியரும்,
    கல்லாத வன்மூடர்க்கு, அல்லாதானை;
பொய்இலாதவர்க்கு என்றும் பொய்இலானை;
    பூண்நாகம் நாண் ஆகப், பொருப்பு வில்லா,
கையின் ஆர் அம்பு எரி கால் ஈர்க்குக் கோலா,
    கடுந் தவத்தோர் நெடும் புரங்கள் கனல்வாய் வீழ்த்த—
செய்யின் ஆர் தென்பரம்பைக்குடியில் மேய—
    திரு ஆலம்பொழிலானை;—சிந்தி, நெஞ்சே! 9

திருச் சிவபுரம் VI-87 திருத் தாண்டகம்

வானவன்காண்; வானவர்க்கும் மேல்ஆனான்காண்;
    வடமொழியும் தென்தமிழும் மறைகள்நான்கும்
ஆனவன்காண்; ஆன்ஐந்தும்ஆடினான்காண்;
    ஐயன்காண்; கையில் அனல் ஏந்தி ஆடும்
கானவன்காண்; கானவனுக்கு அருள்செய்தான்காண்;
    கருதுவார் இதயத்துக்கமலத்து ஊறும்
தேன் அவன்காண்; சென்று அடையாச் செல்வன் தான்காண்;
    சிவன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 1

நக்கன்காண்; நக்க(அ)ரவம் அரையில் ஆர்த்த
    நாதன்காண்; பூதகணம் ஆட ஆடும்
சொக்கன்காண்; கொக்குஇறகு சூடினான்காண்;
    துடிஇடையாள் துணைமுலைக்குச் சேர்வுஅது ஆகும்
பொக்கன்காண்; பொக்கணத்த வெண்நீற்றான்காண்;
    புவனங்கள்மூன்றினுக்கும் பொருள்ஆய் நின்ற
திக்கன்காண்; செக்கர்அது திகழும் மேனிச்
    சிவன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 2

வம்பின்மலர்க்குழல் உமையாள் மணவாளன்காண்;
 மலரவன், மால், காண்பு அரிய மைந்தன் தான்காண்;
கம்ப மதக்கரி பிளிற உரிசெய்தோன்காண்;
 கடல்நஞ்சம் உண்டு இருண்ட கண்டத்தோன்காண்;
அம்பர்நகர்ப் பெருங்கோயில் அமர்கின்றான்காண்;
 அயவந்தி உள்ளான்காண்; ஐயாறன்காண்;
செம்பொன் எனத் திகழ்கின்ற உருவத்தான்காண்;
 சிவன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 3

பித்தன்காண்; தக்கன்தன் வேள்விஎல்லாம்
 பீடு அழியச் சாடி, அருள்கள்செய்த
முத்தன்காண்; முத்தீயும் ஆயினான்காண்;
 முனிவர்க்கும் வானவர்க்கும் முதல்ஆய் மிக்க
அத்தன்காண்; புத்தூரில் அமர்ந்தான் தான்காண்;
 அரிசில்பெருந்துறையே ஆட்சி கொண்ட
சித்தன்காண்; சித்தீச்சுரத்தான் தான்காண்;
 சிவன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 4

தூயவன்காண்; நீறு துதைந்த மேனி
 துளங்கும் பளிங்கு அனைய சோதியான்காண்;
தீ அவன்காண்; தீஅவுணர் புரம் செற்றான்காண்;
 சிறுமான் கொள் செங்கை எம்பெருமான்தான்காண்;
ஆயவன்காண்; ஆரூரில் அம்மான் தான்காண்;
 அடியார்கட்கு ஆர் அமுதம் ஆயினான்கர்ண்;
சேயவன்காண்; சேமநெறி ஆயினான்காண்;
 சிவன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 5

பார் அவன்காண்; பார்அதனில் பயிர் ஆனான்காண்;
 பயிர் வளர்க்கும் துளி அவன்காண்; துளியில் நின்ற
நீர் அவன்காண்; நீர் சடைமேல் நிகழ்வித்தான்காண்;
 நில வேந்தர் பரிசுஆக நினைவுஉற்று ஓங்கும்
பேரவன்காண்; பிறைஎயிற்று வெள்ளைப்பன்றி
 பிரியாது, பலநாளும் வழிபட்டு, ஏத்தும்
சீரவன்காண்; சீர் உடைய தேவர்க்கு எல்லாம்
 சிவ்ன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 6

வெய்யவன்காண்; வெய்ய கனல் ஏந்தினான்காண்;
 வியன்கெடில வீரட்டம் மேவினான்காண்;
மெய்யவன்காண்; பொய்யர் மனம் விரவாதான்காண்;
 வீணையோடு இசைந்து மிகு பாடல் மிக்க
கையவன்காண்; கையில் மழு ஏந்தினான்காண்;
 காமன் அங்கம் பொடி விழித்த கண்ணினான்காண்;
செய்யவன்காண்; செய்யவளை மாலுக்கு ஈந்த
 சிவன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 7

கலை ஆரும் நூல் அங்கம் ஆயினான்காண்;
 கலை பயிலும் கருத்தன்காண்; திருத்தம்ஆகி,
மலைஆகி, மறிகடல்ஏழ் சூழ்ந்து நின்ற
 மண்ஆகி, விண்ஆகி, நின்றான் தான்காண்;
தலைஆய மலை எடுத்த தகவுஇலோனைத்
 தகர்ந்து விழ, ஒருவிரலால் சாதித்து, ஆண்ட
சிலை ஆரும் மடமகள் ஓர்கூறன் தான்காண்;
 சிவன்அவன்காண்—சிவபுரத்து எம் செல்வன்தானே. 8

திரு ஓமாம்புலியூர் VI-88 திருத் தாண்டகம்

ஆர் ஆரும் மூஇலைவேல் அங்கையானை;
அலைகடல்நஞ்சு அயின்றானை; அமரர் ஏத்தும்
ஏர் ஆரும் மதி பொதியும் சடையினானை;
எழுபிறப்பும் எனை ஆளா உடையான்தன்னை;
ஊர் ஆரும் படநாகம் ஆட்டுவானை;
உயர் புகழ் சேர்தரும் ஓமாம்புலியூர் மன்னும்
சீர் ஆரும் வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 1

''ஆதியான்'', அரி அயன், என்று அறிய ஒண்ணா
அமரர் தொழும் கழலானை; அமலன்தன்னை;
சோதி மதி கலை தொலைய, தக்கன், எச்சன்,
சுடர் இரவி அயில்எயிறு, தொலைவித்தானை;
ஓதி மிக அந்தணர்கள் எரிமூன்று ஓம்பும்
உயர் புகழ் ஆர்தரும் ஓமாம்புலியூர் மன்னும்
தீது இல் திரு வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 2

வரும் மிக்க மதயானை உரித்தான்தன்னை;
வானவர்கோன் தோள்அனைத்தும் மடிவித்தானை;
தரு மிக்க குழல் உமையாள் பாகன்தன்னை;
சங்கரன்எம்பெருமானை; தரணிதன்மேல்
உரு மிக்க மணி மாடம் நிலாவு வீதி,
உத்தமர் வாழ்தரும், ஓமாம்புலியூர் மன்னும்
திரு மிக்க வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 3

அன்றினவர் புரம்மூன்றும் பொடிஆய் வேவ
அழல் விழித்த கண்ணானை; அமரர்கோனை;
வென்றி மிகு காலன் உயிர் பொன்றி வீழ
விளங்கு திருவடி எடுத்த விகிர்தன்தன்னை;
ஒன்றிய சீர் இருபிறப்பர் முத்தீ ஓம்பும்,
உயர் புகழ் நால்மறை, ஓமாம்புலியூர் நாளும்
தென்றல் மலி வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 4

பாங்கு உடைய எழில் அங்கி அருச்சனை முன் விரும்பப்
பரிந்து அவனுக்கு அருள்செய்த பரமன்தன்னை;
பாங்கு இலா நரகுஅதனில்-தொண்டர்ஆனார்
பாராத வகை பண்ண வல்லான்தன்னை;
ஓங்கு மதில் புடை தழுவும் எழில் ஓமாம்புலியூர்,
உயர் புகழ் அந்தணர் ஏத்த, உலகர்க்கு என்றும்
தீங்கு இல், திரு வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 5

அருந்தவத்தோர் தொழுது ஏத்தும் அம்மான்தன்னை;
ஆராத இன்னமுதை; அடியார்தம்மேல்
வரும் துயரம் தவிர்ப்பானை; உமையாள்நங்கை-
மணவாளநம்பியை; என் மருந்துதன்னை;
பொருந்து புனல் தழுவு வயல் நிலவு, துங்கப்
பொழில் கெழுவுதரும், ஓமாம்புலியூர் நாளும்
திருந்து திரு வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 6

மலையானை; வரும் மலை அன்று உரிசெய்தானை;
மறையானை; மறையாலும் அறிய ஒண்ணாக்
கலையானை; கலை ஆரும் கையினானை;
கடிவானை, அடியார்கள் துயரம்எல்லாம்;
உலையாத அந்தணர்கள் வாழும் ஓமாம்-
புலியூர் எம் உத்தமனை; புரம்மூன்று எய்த
சிலையானை; வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 7

சேர்ந்து ஓடும் மணிக் கங்கை சூடினானை,
செழு மதியும் படஅரவும் உடன்வைத்தானை,
சார்ந்தோர்கட்கு இனியானை, தன் ஒப்பு இல்லாத்
தழல்உருவை, தலைமகனை, தகை நால்வேதம்
ஓர்ந்து ஓதிப் பயில்வார் வாழ்தரும் ஓமாம்புலியூர்
உள்ளானை, கள்ளாத அடியார் நெஞ்சில்
சேர்ந்தானை, வடதளி எம் செல்வன்தன்னை,—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 8

வார் கெழுவு முலை உமையாள் வெருவ அன்று
மலை எடுத்த வாள் அரக்கன் தோளும் தாளும்
ஏர் கெழுவு சிரம்பத்தும் இறுத்து, மீண்டே
இன்இசை கேட்டு இருந்தானை; இமையோர்கோனை;
பார் கெழுவு புகழ் மறையோர் பயிலும் மாட,
பைம்பொழில் சேர்தரும், ஓமாம்புலியூர் மன்னும்
சீர் கெழுவு வடதளி எம் செல்வன்தன்னை;—
சேராதே திகைத்து நாள் செலுத்தினேனே! 9

திரு இன்னம்பர் VI-89 திருத் தாண்டகம்

அல்லிமலர் நாற்றத்து உள்ளார்போலும்;
அன்புஉடையர் சிந்தை அகலார்போலும்;
சொல்லின், அருமறைகள் தாமேபோலும்;
தூநெறிக்கு வழி காட்டும் தொழிலார்போலும்;
வில்லின் புரம்மூன்று எரித்தார்போலும்;
வீங்கு இருளும் நல் வெளியும் ஆனார்போலும்;
எல்லி நடம்ஆட வல்லார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 1

கோழிக்கொடியோன்தன் தாதைபோலும்;
கொம்பனாள் பாகம் குளிர்ந்தார்போலும்;
ஊழிமுதல்வரும் தாமேபோலும்;
உள்குவார் உள்ளத்தின் உள்ளார்போலும்;
ஆழித்தேர் வித்தகரும் தாமேபோலும்;
அடைந்தவர்கட்கு அன்பராய் நின்றார்போலும்;
ஏழுபிறவிக்கும் தாமேபோலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 2

தொண்டர்கள்தம் தகவின் உள்ளார்போலும்;
தூநெறிக்கும் தூ நெறிஆய் நின்றார்போலும்;
பண்டு இருவர் காணாப் படியார்போலும்;
பத்தர்கள்தம் சித்தத்து இருந்தார்போலும்;
கண்டம் இறையே கறுத்தார்போலும்;
காமனையும் காலனையும் காய்ந்தார்போலும்;
இண்டைச் சடை சேர் முடியார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 3

வானத்து இளந்திங்கள்கண்ணிதன்னை
வளர்சடைமேல் வைத்து உகந்த மைந்தர்போலும்;
ஊன் ஒத்த வேல் ஒன்று உடையார்போலும்;
ஒளி நீறு பூசும் ஒருவர்போலும்;
தானத்தின் முப்பொழுதும் தாமேபோலும்;
தம்மின் பிறர் பெரியார் இல்லைபோலும்;
ஏனத்துஎயிறு இலங்கப் பூண்டார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 4

சூழும் துயரம் அறுப்பார்போலும்;
தோற்றம் இறுதிஆய் நின்றார்போலும்;
ஆழும் கடல்நஞ்சை உண்டார்போலும்;
ஆடல் உகந்த அழகர்போலும்;
தாழ்வு இல் மனத்தேனை ஆளாக்கொண்டு,
தன்மை அளித்த தலைவர்போலும்;
ஏழுபிறப்பும் அறுப்பார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 5

பாதத்து அணையும் சிலம்பர்போலும்;
பார் ஊர் விடை ஒன்று உடையார்போலும்;
பூதப்படை ஆள் புனிதர்போலும்;
பூம் புகலூர் மேய புராணர்போலும்;
வேதப்பொருள்ஆய் விளைவார்போலும்;
வேடம் பரவித் திரியும் தொண்டர்
ஏதப்படா வண்ணம் நின்றார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 6

பல்ஆர்தலைஓட்டில் ஊனார்போலும்;
பத்தர்கள்தம் சித்தத்து இருந்தார்போலும்;
கல்லாதார் காட்சிக்கு அரியார்போலும்;
கற்றவர்கள் ஏதம் களைவார்போலும்;
பொல்லாத பூதப்படையார்போலும்;
பொருகடலும் ஏழ்மலையும் தாமேபோலும்;
எல்லாரும் ஏத்தத் தகுவார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 7

மட்டு மலியும் சடையார்போலும்;
மாதை ஓர்பாகம் உடையார்போலும்;
கட்டம் பிணிகள் தவிர்ப்பார்போலும்;
காலன்தன் வாழ்நாள் கழிப்பார்போலும்;
நட்டம் பயின்று ஆடும் நம்பர்போலும்;
ஞாலம், எரி, நீர், வெளி, கால், ஆனார்போலும்;
எட்டுத்திசைகளும் தாமேபோலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 8

கரு உற்ற காலத்தே என்னை ஆண்டு
கழல்போது தந்து, அளித்த கள்வர்போலும்;
செருவில் புரம்மூன்றும் அட்டார்போலும்;
தேவர்க்கும் தேவர்ஆம் செல்வர்போலும்;
மருவில் பிரியாத மைந்தர்போலும்;
மலர்அடிகள் நாடி வணங்கல்உற்ற
இருவர்க்கு ஒருவராய் நின்றார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 9

அலங்கல் சடை தாழ, ஐயம் ஏற்று(வ்),
அரவம் அரை ஆர்க்க வல்லார்போலும்;
வலங்கை மழு ஒன்று உடையார்போலும்;
வான் தக்கன் வேள்வி சிதைத்தார்போலும்;
விலங்கல் எடுத்து உகந்த வெற்றியானை
விறல் அழித்து, மெய்ஞ்ஞரம்பால் கீதம் கேட்டு, அன்று,
இலங்கு சுடர் வாள் கொடுத்தார்போலும்—
இன்னம்பர்த் தான்தோன்றி ஈசனாரே. 10

திருக் கஞ்சனூர்

VI-90

திருத் தாண்டகம்

மூஇலைநல்சூலம் வலன் ஏந்தினானை,
மூன்றுசுடர்க்கண்ணானை, மூர்த்திதன்னை,
நாவலனை, நரைவிடை ஒன்று ஏறுவானை,
நால்வேதம் ஆறுஅங்கம் ஆயினானை,
ஆவினில்ஐந்து உகந்தானை, அமரர்கோவை,
அயன்திருமால் ஆனானை, அனலோன் போற்றும்
காவலனை, கஞ்சனூர் ஆண்ட கோவை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 1

தலை ஏந்து கையானை, என்பு ஆர்த்தானை,
சவம் தாங்கு தோளானை, சாம்பலானை,
குலை ஏறு நறுங்கொன்றை முடிமேல் வைத்துக்
கோள் நாகம் அசைத்தானை, குலம் ஆம் கைலை-
மலையானை, மற்று ஒப்பார் இல்லாதானை,
மதி கதிரும் வானவரும் மாலும் போற்றும்
கலையானை, கஞ்சனூர் ஆண்ட கோவை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 2

தொண்டர்குழாம் தொழுது ஏத்த அருள்செய்வானை;
சுடர் மழுவாள்படையானை; சுழி வான்கங்கைத்
தெண்திரைகள் பொருது இழி செஞ்சடையினானை;
செக்கர்வான்ஒளியானை; சேராது எண்ணிப்
பண்டு அமரர் கொண்டு உகந்த வேள்விஎல்லாம்
பாழ்படுத்து, தலை அறுத்து, பல் கண் கொண்ட
கண்டகனை; கஞ்சனூர் ஆண்ட கோவை;
கற்பகத்தை;—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 3

விண்ணவனை, மேரு வில்லா உடையான்தன்னை,
மெய்ஆகிப் பொய்ஆகி விதிஆனானை,
பெண்ணவனை, ஆண்அவனை, பித்தன்தன்னை,
பிணம் இடுகாடு உடையானை, பெருந் தக்கோனை,
எண்ணவனை, எண்திசையும் கீழும் மேலும்
இரு விசும்பும் இரு நிலமும் ஆகித் தோன்றும்
கண்ணவனை, கஞ்சனூர் ஆண்ட கோவை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 4

உருத்திரனை, உமாபதியை, உலகுஆனானை,
உத்தமனை, நித்திலத்தை, ஒருவன்தன்னை,
பருப்பதத்தை, பஞ்சவடி மார்பினானை,
பகல்இரவுஆய் நீர்வெளிஆய்ப் பரந்து நின்ற
நெருப்புஅதனை, நித்திலத்தின்தொத்து ஒப்பானை,
நீறு அணிந்த மேனியராய் நினைவார் சிந்தைக்
கருத்தவனை, கஞ்சனூர் ஆண்ட கோவை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 5

ஏடு ஏறு மலர்க்கொன்றை, அரவு, தும்பை,
    இளமதியம், எருக்கு, வான் இழிந்த கங்கை,
சேடு ஏறிந்த சடையானை; தேவர்கோவை;
    செம்பொன்மால்வரையானை; சேர்ந்தார் சிந்தைக்
கேடுஇலியை; கீழ்வேளூர் ஆளும் கோவை;
    கிறி பேசி, மடவார் பெய் வளைகள் கொள்ளும்
காடவனை; கஞ்சனூர் ஆண்ட கோவை;
    கற்பகத்தை;—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 6

நாரணனும் நான்முகனும் அறியாதானை,
    நால்வேதத்து உருவானை, நம்பிதன்னை,
பாரிடங்கள் பணி செய்யப் பலி கொண்டு உண்ணும்
    பால்வணனை, தீவணனை, பகல்ஆனானை,
வார் பொதியும் முலையாள் ஓர்கூறன்தன்னை,
    மான் இடங்கை உடையானை, மலிவு ஆர் கண்டம்
கார் பொதியும் கஞ்சனூர் ஆண்ட கோவை,
    கற்பகத்தை,—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 7

வானவனை, வலிவலமும் மறைக்காட்டானை,
    மதி சூடும் பெருமானை, மறையோன்தன்னை,
ஏனவனை, இமவான்தன் பேதையோடும்
    இனிது இருந்த பெருமானை, ஏத்துவார்க்குத்
தேனவனை, தித்திக்கும் பெருமான்தன்னை,
    தீது இலா மறையவனை, தேவர் போற்றும்
கானவனை, கஞ்சனூர் ஆண்ட கோவை,
    கற்பகத்தை,—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 8

நெருப்புஉருவுதிருமேனி வெண்நீற்றானை,
    நினைப்பார்தம் நெஞ்சானை, நிறைவுஆனானை,
தருக்கு அழிய முயலகன்மேல்-தாள் வைத்தானை,
    சலந்தரனைத் தடிந்தோனை, தக்கோர் சிந்தை
விருப்பவனை, விதியானை, வெண்நீற்றானை,
    விளங்கு ஒளிஆய், மெய்ஆகி, மிக்கோர் போற்றும்
கருத்தவனை, கஞ்சனூர் ஆண்ட கோவை,
    கற்பகத்தை,—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 9

மடல் ஆழித் தாமரைஆயிரத்தில் ஒன்று
    மலர்க்கண் இடந்து இடுதலுமே, மலி வான் கோலச்
சுடர் ஆழி நெடுமாலுக்கு அருள்செய்தானை;
    தும்பிஉரி போர்த்தானை; தோழன் விட்ட
அடல் ஆழித் தேர் உடைய இலங்கைக் கோனை
    அரு வரைக்கீழ் அடர்த்தானை; அருள் ஆர் கருணைக்-
கடலானை; கஞ்சனூர் ஆண்ட கோவை;
    கற்பகத்தை;—கண் ஆரக் கண்டு உய்ந்தேனே! 10

திரு எறும்பியூர் VI-91 திருத் தாண்டகம்

பன்னிய செந்தமிழ் அறியேன்; கவியேல் மாட்டேன்;
    எண்ணோடு பண் நிறைந்த கலைகள்ஆய-
தன்னையும் தன் திறத்து அறியாப் பொறிஇலேனைத்
    தன் திறமும் அறிவித்து, நெறியும் காட்டி,
அன்னையையும் அத்தனையும் போல, அன்புஆய்
    அடைந்தேனைத் தொடர்ந்து, என்னை ஆளாக் கொண்ட
தென்எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை,
    செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 1

பளிங்கின் நிழலுள் பதித்த சோதியானை,
பசுபதியை, பாசுபதவேடத்தானை,
விளிந்து எழுந்த சலந்தரனை வீட்டினானை,
வேதியனை, விண்ணவனை, மேவி வையம்
அளந்தவனை, நான்முகனை, அல்லல் தீர்க்கும்
அருமருந்தை,—ஆம்ஆறு அறிந்து என் உள்ளம்
தெளிந்து—எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை,
செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 2

கருவை; என்தன் மனத்து இருந்த கருத்தை; ஞானக்-
கடுஞ்சுடரை; படிந்து கிடந்து அமரர் ஏத்தும்
உருவை; அண்டத்து ஒரு முதலை; ஓத வேலி
உலகில் நிறை தொழில் இறுதி நடுஆய் நின்ற,
மருவை வென்ற குழல் மடவாள் பாகம் வைத்த,
மயானத்து, மாசிலா மணியை; வாசத்
திரு எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை;
செழுஞ்சுடரை;—சென்று அடையப்பெற்றேன், நானே. 3

பகழி பொழிந்து அடல் அரக்கர் புரங்கள்மூன்றும்
பாழ்படுத்த பரஞ்சுடரை, பரிந்து தன்னைப்
புகழும் அன்பர்க்கு இன்பு அமரும் அமுதை, தேனை,
புண்ணியனை, புவனிஅது முழுதும் போத
உமிழும் அம் பொன்குன்றத்தை, முத்தின்தூணை,
உமையவள்தம் பெருமானை, இமையோர் ஏத்தும்
திகழ் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை,
செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 4

பாரிடங்கள் உடன்பாடப் பயின்று நட்டம்
பயில்வானை, அயில்வாய சூலம் ஏந்தி
நேரிடும் போர் மிக வல்ல நிமலன்தன்னை,
நின்மலனை, அம் மலர் கொண்ட(அ)யனும் மாலும்
பார் இடந்தும் மேல் உயர்ந்தும் காணா வண்ணம்
பரந்தானை, நிமிர்ந்து முனிகணங்கள் ஏத்தும்
சீர் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை,
செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 5

கார்முகில்ஆய்ப் பொழிவானை, பொழிந்த முந்நீர்
கரப்பானை, கடிய நடை விடை ஒன்று ஏறி
ஊர்பலவும் திரிவானை, ஊர்அது ஆக
ஒற்றியூர் உடையனாய் முற்றும் ஆண்டு
பேர்எழுத்துஒன்று உடையானை, பிரமனோடு
மாலவனும் இந்திரனும் மந்திரத்தால் ஏத்தும்
சீர் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை,
செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 7

''நீள் நிலமும், அம் தீயும், நீரும், மற்றை
நெறி இலங்கும் மிகு காலும், ஆகாச(ம்)மும்,
வாள் நிலவு தாரகையும், மண்ணும், விண்ணும்,
மன் உயிரும், என் உயிரும், தான் ஆம் செம்பொன்
ஆணி!'' என்றும், ''அஞ்சனமாமலையே!'' என்றும்,
''அம் பவளத்திரள்!'' என்றும், அறிந்தோர் ஏத்தும்
சேண் எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை;
செழுஞ்சுடரை;—சென்று அடையப்பெற்றேன், நானே. 8

அறம் தெரியா, ஊத்தைவாய், அறிவு இல் சிந்தை
ஆரம்பக் குண்டரோடு, அயர்த்து நாளும்
மறந்தும் அரன்திருவடிகள் நினையமாட்டா
மதிஇலியேன் வாழ்வுஎல்லாம் வாளா; மண்மேல்
பிறந்த நாள் நாள் அல்ல, வாளா; ஈசன்
பேர் பிதற்றிச் சீர் அடிமைத்திறத்து உள் அன்பு
செறிந்து எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை,
செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 8

அறிவு இலங்கு மனத்தானை, அறிவார்க்கு அன்றி
அறியாதார்தம் திறத்து ஒன்று அறியாதானை,
பொறி இலங்கு வாள்அரவம் புனைந்து பூண்ட
புண்ணியனை, பொருதிரைவாய் நஞ்சம் உண்ட
குறி இலங்கு மிடற்றானை, மடல்-தேன் கொன்றைச்
சடையானை, மடைதோறும் கமலம்மென்பூச்
செறி எறும்பியூர்மலைமேல் மாணிக்கத்தை,
செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 9

அருந்தவத்தின் பெரு வலியால் அறிவது அன்றி,
அடல் அரக்கன் தடவரையை எடுத்தான் திண்தோள்
முரிந்து, நெரிந்து, அழிந்து, பாதாளம் உற்று,
மூன்கைநரம்பினை எடுத்துக் கீதம் பாட,
இருந்தவனை; ஏழ்உலகும் ஆக்கினானை;
எம்மானை; கைம்மாவின்உரிவை போர்த்த,
திருந்து எறும்பியூர்மலைமேல், மாணிக்கத்தை;
செழுஞ்சுடரை,—சென்று அடையப்பெற்றேன், நானே. 10

திருக் கழுக்குன்றம் VI-92 திருத் தாண்டகம்

மூஇலைவேல் கையானை, மூர்த்திதன்னை,
முதுபிணக்காடு உடையானை, முதல்ஆனானை,
ஆவினில்ஐந்து உகந்தானை, அமரர்கோனை,
ஆலாலம் உண்டு உகந்த ஐயன்தன்னை,
பூவினின்மேல் நான்முகனும் மாலும் போற்றப்
புணர்வு அரிய பெருமானை, புனிதன்தன்னை,
காவலனை, கழுக்குன்றம் அமர்ந்தான்தன்னை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 1

பல்ஆடுதலை சடைமேல் உடையான்தன்னை,
பாய் புலித்தோல் உடையானை, பகவன்தன்னை,
சொல்லோடு பொருள்அனைத்தும் ஆனான்தன்னை,
சுடர்உருவில் என்பு அருக் கோலத்தானை,
அல்லாத காலனை முன் அடர்த்தான்தன்னை,
ஆலின்கீழ் இருந்தானை, அமுதுஆனானை,
கல்ஆடை புனைந்துஅருளும் காபாலி(ய்)யை,
கற்பகத்தை,—கண் ஆரக் கண்டேன், நானே. 2

பொது VI-93 பலவகைத் திருத் தாண்டகம்

நேர்ந்து ஒருத்தி ஒருபாகத்து அடங்கக் கண்டு,
நிலை தளர ஆயிரம்மாமுகத்தினோடு
பாய்ந்து ஒருத்தி படர்சடைமேல் பயிலக் கண்டு,
படஅரவும் பனிமதியும் வைத்த செல்வர்—
தாம் திருத்தித் தம் மனத்தை ஒருக்காத் தொண்டர்!
தனித்து ஒரு தண்டு ஊன்றி மெய் தளராமுன்னம்—
''பூந்துருத்தி பூந்துருத்தி'' என்பீர்ஆகில்,
பொல்லாப் புலால்-துருத்தி போக்கல் ஆமே. 1

ஐத் தானத்து அகமிடறு சுற்றி ஆங்கே
அகத்து அடைந்தால் யாதொன்றும் இடுவார் இல்லை;—
மைத் தானக் கண் மடவார்தங்களோடு
மாயம் மனைவாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்!—
பைத் தானத்து ஒண்மதியும் பாம்பும் நீரும்
படர்சடைமேல் வைத்து உகந்த பண்பன் மேய
''நெய்த்தானம் நெய்த்தானம்'' என்பீர்ஆகில்,
நிலாவாப் புலால்-தானம் நீக்கல் ஆமே. 2

பொய் ஆரு ஆறே புனைந்து பேசி,
புலர்ந்து எழுந்த காலைப் பொருளே தேடி,
''கையாருக் கரணம் உடையோம்'' என்று
களித்த மனத்தராய், 'கருதி வாழ்வீர்!
நெய் ஆரு ஆடிய நீலகண்டர்,
நிமிர்புன்சடை நெற்றிக்கண்ணர், மேய
''ஐயாறே ஐயாறே'' என்பீர்ஆகில்,
அல்லல் தீர்ந்து அமருலகம் ஆளல் ஆமே. 3

இழவு ஒன்று தாம் ஒருவர்க்கு இட்டு ஒன்று ஈயார்;
ஈன்று எடுத்த தாய்தந்தை பெண்டீர் மக்கள்
கழல் நம் கோவை ஆதல் கண்டும், தேறார்;
களித்த மனத்தராய்க் கருதி வாழ்வீர்!
அழல் நம்மை நீக்குவிக்கும், அரையன் ஆக்கும்,
அமருலகம் ஆள்விக்கும், அம்மான் மேய
''பழனம் பழனமே'' என்பீர்ஆகில்,
பயின்று எழுந்த பழவினைநோய் பாற்றல் ஆமே. 4

ஊற்றுத்துறைஒன்பது உள்-நின்று ஓரீர்;
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டீர்;
மாற்றுத்துறை வழி கொண்டு ஓடாமுன்னம்,—
மாயம் மனைவாழ்க்கை மகிழ்ந்து வாழ்வீர்!—
வேற்றுத்தொழில் பூண்டார் புரங்கள்மூன்றும்
வெவ்அழல்வாய் வீழ்விக்கும் வேந்தன் மேய
''சோற்றுத்துறை சோற்றுத்துறை'' என்பீர்ஆகில்,-
துயர் நீங்கித் தூ நெறிக்கண் சேரல் ஆமே. 5

கலம் சுழிக்கும் கருங்கடல் சூழ் வையம்தன்னில்
கள்ளக்கடலில் அழுந்தி, வாளா
நலம் சுழியா, எழும் நெஞ்சே! இன்பம் வேண்டில்,
நம்பன்தன் அடிஇணைக்கே நவில்வாய்ஆகில்,
அலம் சுழிக்கும் மன் நாகம்தன்னால் மேய,
அருமறையோடு ஆறுஅங்கம்ஆனார் கோயில்,
''வலஞ்சுழியே வலஞ்சுழியே'' என்பீர்ஆகில்,
வல்வினைகள் தீர்ந்து வான் ஆளல் ஆமே. 6

தண்டி, குண்டோதரன், பிங்கிருடி,
சார்ந்த புகழ் நந்தி, சங்குகன்னன்,
பண்டை உலகம் படைத்தான்தானும்,
பாரை அளந்தான், பல்லாண்டு இசைப்ப;
திண்டி வயிற்றுச் சிறு கண் பூதம்-
சில பாட; செங்கண் விடை ஒன்று ஊர்வான்
''கண்டியூர் கண்டியூர்'' என்பீர்ஆகில்,
கடுக நும் வல்வினையைக் கழற்றல் ஆமே. 7

விடம், மூக்கப் பாம்பே போல், சிந்தி, நெஞ்சே!
வெள்ஏற்றான்தன் தமரைக் கண்டபோது
வடம் ஊக்க மா முனிவர் போலச் சென்று,
மா தவத்தார் மனத்து உளார், மழுவாள் செல்வர்,
படம் மூக்கப் பாம்புஅணையில் பள்ளியானும்
பங்கயத்துமேல் அயனும் பரவிக் காணா,
''குடமூக்கே குடமூக்கே'' என்பீர்ஆகில்,
கொடுவினைகள் தீர்ந்து அரனைக் குறுகல் ஆமே. 8

தண் காட்ட, சந்தனமும் தவளநீறும்;
தழை அணுகும் குறுங் கொன்றைமாலை சூடி;
கண் காட்டா, கருவரை போல்-அனைய காஞ்சிக்
கார்மயில்அம்சாயலார் கலந்து காண;
எண் காட்டாக் காடுஅங்கு இடமா நின்று(வ்)
எரி வீசி; இரவு ஆடும் இறைவர் மேய
''வெண்காடே வெண்காடே'' என்பீர்ஆகில்,
வீடாத வல்வினைநோய் வீட்டல் ஆமே. 9

தந்தை யார்? தாய் யார்? உடன்பிறந்தார்,
தாரம், ஆர்? புத்திரர் ஆர்? தாம்தாம் ஆரே?
வந்தஆறு எங்ஙனே? போம்ஆறு ஏதோ?
மாயம் ஆம்; இதற்கு ஏதும் மகிழவேண்டா!
சிந்தையீர்! உமக்கு ஒன்று சொல்லக் கேண்மின்:
திகழ் மதியும் வாள்அரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் ''நமச்சிவாய''
என்று எழுவார்க்கு இரு விசும்பில் இருக்கல் ஆமே. 10

பொது VI-94 நின்ற திருத் தாண்டகம்

இரு நிலன்ஆய், தீஆகி, நீரும்ஆகி,
இயமானனாய், எறியும் காற்றும்ஆகி,
அரு நிலைய திங்கள்ஆய், ஞாயிறுஆகி,
ஆகாசம்ஆய், அட்டமூர்த்திஆகி,
பெரு நலமும் குற்றமும் பெண்ணும் ஆணும்
பிறர் உருவும் தம் உருவும் தாமேஆகி,
நெருநலைஆய், இன்றுஆகி, நாளைஆகி,
நிமிர்புன்சடை அடிகள் நின்றஆறே! 1

மண்ஆகி, விண்ஆகி, மலையும்ஆகி,
வயிரமும்ஆய், மாணிக்கம் தானேஆகி,
கண்ஆகி, கண்ணுக்கு ஓர் மணியும்ஆகி,
கலைஆகி, கலைஞானம் தானேஆகி,
பெண்ஆகி, பெண்ணுக்கு ஓர் ஆணும்ஆகி,
பிரளயத்துக்கு அப்பால் ஓர் அண்டம்ஆகி,
எண்ஆகி எண்ணுக்கு ஓர் எழுத்தும்ஆகி,
எழும்சுடர்ஆய் எம் அடிகள் நின்றஆறே! 2

கல்ஆகி, களறுஆகி, கானும்ஆகி,
காவிரிஆய், கால்ஆறுஆய், கழியும்ஆகி,
புல்ஆகி, புதல்ஆகி, பூடும்ஆகி,
புரம்ஆகி, புரம்மூன்றும் கெடுத்தான்ஆகி,
சொல்ஆகி, சொல்லுக்கு ஓர் பொருளும்ஆகி,
சுலாவுஆகி, சுலாவுக்கு ஓர் சூழல்ஆகி,
நெல்ஆகி, நிலன்ஆகி, நீரும்ஆகி,
நெடுஞ்சுடர்ஆய் நிமிர்ந்து, அடிகள் நின்றஆறே! 3

காற்றுஆகி, கார்முகில்ஆய், காலம்மூன்றுஆய்,
கனவுஆகி, நனவுஆகி, கங்குல்ஆகி,
கூற்றுஆகி, கூற்று உதைத்த கொல் களிறும்ஆகி,
குரைகடல்ஆய், குரைகடற்கு ஓர் கோமானும்(ம்)ஆய்,
நீற்றானாய், நீறு ஏற்ற மேனிஆகி,
நீள் விசும்புஆய், நீள் விசும்பின் உச்சிஆகி,
ஏற்றானாய், ஏறு ஊர்ந்த செல்வன்ஆகி,
எழும்சுடர்ஆய், எம் அடிகள் நின்றஆறே. 4

தீஆகி, நீர்ஆகி, திண்மைஆகி,
திசைஆகி, அத் திசைக்கு ஓர் தெய்வம்ஆகி,
தாய்ஆகி, தந்தையாய், சார்வும்ஆகி,
தாரகையும் ஞாயிறும் தண்மதியும்ஆகி,
காய்ஆகி, பழம்ஆகி, பழத்தில் நின்ற
இரதங்கள் நுகர்வானும் தானேஆகி,
நீஆகி, நான்ஆகி, நேர்மைஆகி,
நெடுஞ்சுடர்ஆய், நிமிர்ந்து அடிகள் நின்றஆறே. 5

அங்கம்ஆய், ஆதிஆய், வேதம்ஆகி,
அருமறையோடு ஐம்பூதம் தானேஆகி,
பங்கம்ஆய், பலசொல்லும் தானேஆகி,
பால்மதியோடு ஆதிஆய், பான்மைஆகி,
கங்கைஆய், காவிரிஆய், கன்னிஆகி,
கடல்ஆகி, மலைஆகி, கழியும்ஆகி,
எங்கும்ஆய், ஏறு ஊர்ந்த செல்வன்ஆகி,
எழும்சுடர்ஆய், எம் அடிகள் நின்றஆறே. 6

மாதாபிதாஆகி, மக்கள்ஆகி,
மறிகடலும் மால் விசும்பும் தானேஆகி,
கோதாவிரிஆய், குமரிஆகி,
கொல் புலித் தோல் ஆடைக் குழகன்ஆகி,
போதுஆய் மலர் கொண்டு போற்றி நின்று
புனைவார் பிறப்பு அறுக்கும் புனிதன்ஆகி,
ஆதானும் என நினைந்தார்க்கு அஃதேஆகி,
அழல்வண்ணவண்ணர்தாம் நின்றஆறே! 7

ஆஆகி, ஆவினில்ஐந்தும்ஆகி,
அறிவுஆகி, அழல்ஆகி, அவியும்ஆகி,
நாஆகி, நாவுக்கு ஓர் உரையும்ஆகி,
நாதனாய், வேதத்தின் உள்ளோன்ஆகி,
பூஆகி, பூவுக்கு ஓர் நாற்றம்ஆகி,
பூக்குளால் வாசம்ஆய் நின்றான்ஆகி,
தேஆகி, தேவர் முதலும்ஆகி,
செழுஞ்சுடர்ஆய், சென்று அடிகள் நின்றஆறே! 8

நீர்ஆகி, நீள் அகலம் தானேஆகி,
நிழல்ஆகி, நீள் விசும்பின் உச்சிஆகி,
பேர்ஆகி, பேருக்கு ஓர் பெருமைஆகி,
பெரு மதில்கள்மூன்றினையும் எய்தான்ஆகி,
ஆரேனும் தன் அடைந்தார்தம்மைஎல்லாம்
ஆட்கொள்ள வல்ல எம் ஈசனார்தாம்
பார்ஆகி, பண்ஆகி, பாடல்ஆகி,
பரஞ்சுடர்ஆய், சென்று அடிகள் நின்றஆறே! 9

மால்ஆகி, நான்முகனாய், மா பூதம்(ம்)ஆய்,
மருக்கம்ஆய், அருக்கம்ஆய், மகிழ்வும்ஆகி,
பால்ஆகி, எண்திசைக்கும் எல்லைஆகி,
பரப்புஆகி, பரலோகம் தானேஆகி,
பூலோக புவலோக சுவலோகம்(ம்)ஆய்,
பூதங்கள்ஆய், புராணன் தானேஆகி,
ஏலாதனஎலாம் ஏல்விப்பானாய்,
எழும்சுடர்ஆய், எம் அடிகள் நின்றஆறே! 10

பொது VI-95 தனித் திருத் தாண்டகம்

அப்பன் நீ, அம்மை நீ, ஐயனும் நீ,
அன்பு உடைய மாமனும் மாமியும் நீ,
ஒப்பு உடைய மாதரும் ஒண் பொருளும் நீ,
ஒரு குலமும் சுற்றமும் ஓர் ஊரும் நீ,
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய் நீ,
துணைஆய் என் நெஞ்சம் துறப்பிப்பாய் நீ,
இப் பொன் நீ, இம் மணி நீ, இம் முத்து(ந்)நீ,
இறைவன் நீ—ஏறு ஊர்ந்த செல்வன்நீயே. 1

வெம்ப வருகிற்பது அன்று, கூற்றம் நம்மேல்;
வெய்ய வினைப்பகையும் பைய நையும்;
எம் பரிவு தீர்ந்தோம்; இடுக்கண் இல்லோம்;
எங்கு எழில் என் ஞாயிறு? எளியோம்அல்லோம்—
அம் பவளச்செஞ்சடைமேல் ஆறுசூடி,
அனல்ஆடி, ஆன்அஞ்சும் ஆட்டு உகந்த
செம்பவளவண்ணர், செங்குன்றவண்ணர்,
செவ்வானவண்ணர், என் சிந்தையாரே. 2

ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே?
அடக்குவித்தால் ஆர் ஒருவர் அடங்காதாரே?
ஓட்டுவித்தால் ஆர் ஒருவர் ஓடாதாரே?
உருகுவித்தால் ஆர் ஒருவர் உருகாதாரே?
பாட்டுவித்தால் ஆர் ஒருவர் பாடாதாரே?
பணிவித்தால் ஆர் ஒருவர் பணியாதாரே?
காட்டுவித்தால் ஆர் ஒருவர் காணாதாரே?
காண்பார் ஆர், கண்ணுதலாய்! காட்டாக்காலே? 3

நல் பதத்தார் நல் பதமே! ஞானமூர்த்தீ!
நலஞ்சுடரே! நால்வேதத்து அப்பால் நின்ற
சொல் பதத்தார் சொல் பதமும் கடந்து நின்ற
சொலற்கு அரிய சூழலாய்! இது உன் தன்மை;
நிற்பது ஒத்து நிலை இலா நெஞ்சம்தன்னுள்
நிலாவாத புலால்உடம்பே புகுந்து நின்ற
கற்பகமே! யான் உன்னை விடுவேன்அல்லேன்—
கனகம், மா மணி, நிறத்து எம் கடவுளானே! 4

திருக்கோயில் இல்லாத திரு இல் ஊரும்,
திருவெண்நீறு அணியாத திரு இல் ஊரும்,
பருக்கு ஓடிப் பத்திமையால் பாடா ஊரும்,
பாங்கினொடு பலதளிகள் இல்லா ஊரும்,
விருப்போடு வெண்சங்கம் ஊதா ஊரும்,
விதானமும் வெண்கொடியும் இல்லா ஊரும்,
அருப்போடு மலர் பறித்து இட்டு உண்ணா ஊரும்,
அவைஎல்லாம் ஊர் அல்ல; அடவி-காடே! 5

திருநாமம் அஞ்சுஎழுத்தும் செப்பார்ஆகில்,
தீவண்ணர் திறம் ஒரு கால் பேசார்ஆகில்,
ஒருகாலும் திருக்கோயில் சூழார்ஆகில்,
உண்பதன் முன் மலர் பறித்து இட்டு உண்ணார்ஆகில்,
அருநோய்கள் கெட வெண்நீறு அணியார்ஆகில்,
அளி அற்றார்; பிறந்தஆறு ஏதோ என்னில்,
பெரு நோய்கள் மிக நலிய, பெயர்த்தும் செத்தும்
பிறப்பதற்கே தொழில்ஆகி, இறக்கின்றாரே! 6

நின் ஆவார் பிறர் இன்றி நீயே ஆனாய்;
நினைப்பார்கள் மனத்துக்கு ஓர் வித்தும்ஆனாய்;
மன்ஆனாய்; மன்னவர்க்கு ஓர் அமுதம்ஆனாய்;
மறைநான்கும்ஆனாய்; ஆறுஅங்கம்ஆனாய்;
பொன்ஆனாய்; மணிஆனாய்; போகம்ஆனாய்;
பூமிமேல் புகழ் தக்க பொருளே! உன்னை,
''என் ஆனாய்! என் ஆனாய்!'' என்னின்அல்லால்,
ஏழையேன் என் சொல்லி ஏத்துகேனே? 7

அத்தா! உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய்;
அருள்நோக்கில்-தீர்த்தநீர் ஆட்டிக்கொண்டாய்;
எத்தனையும் அரியை நீ எளியைஆனாய்;
எனை ஆண்டுகொண்டு இரங்கி ஏன்றுகொண்டாய்;
பித்தனேன், பேதையேன், பேயேன், நாயேன்,
பிழைத்தனகள்அத்தனையும் பொறுத்தாய் அன்றே!
இத்தனையும் எம் பரமோ? ஐய! ஐயோ!
எம்பெருமான் திருக்கருணை இருந்தஆறே! 8

குலம் பொல்லேன்; குணம் பொல்லேன்; குறியும் பொல்லேன்;
குற்றமே பெரிது உடையேன்; கோலம் ஆய
நலம் பொல்லேன்; நான் பொல்லேன்; ஞானி அல்லேன்;
நல்லாரோடு இசைந்திலேன்; நடுவே நின்ற
விலங்கு அல்லேன்; விலங்குஅல்லாது ஒழிந்தேன்அல்லேன்;
வெறுப்பனவும் மிகப் பெரிதும் பேச வல்லேன்;
இலம் பொல்லேன்; இரப்பதே ஈயமாட்டேன்;
என் செய்வான் தோன்றினேன், ஏழையேனே? 9

சங்கநிதி பதுமநிதி இரண்டும் தத்து
தரணியொடு வான் ஆளத் தருவரேனும்,
மங்குவார்அவர் செல்வம் மதிப்போம்அல்லோம்,
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லார்ஆகில்;
அங்கம்எலாம் குறைந்து அழுகு தொழுநோயரா(அ)ய்
ஆ உரித்துத் தின்று உழலும் புலையரேனும்,
கங்கை வார்சடைக் கரந்தார்க்கு அன்பர்ஆகில்,
அவர்கண்டீர், நாம் வணங்கும் கடவுளாரே! 10

பொது　　VI-96　　தனித் திருத் தாண்டகம்

ஆமயம் தீர்த்து அடியேனை ஆளாக் கொண்டார்;
அதிகைவீரட்டானம் ஆட்சி கொண்டார்;
தாமரையோன் சிரம் அரிந்து கையில் கொண்டார்;
தலைஅதனில் பலி கொண்டார்; நிறைவு ஆம் தன்மை
வாமனனார் மா காயத்து உதிரம் கொண்டார்;
மான் இடம் கொண்டார்; வலங்கை மழுவாள் கொண்டார்;
காமனையும் உடல் கொண்டார், கண்ணால் நோக்கி;—
கண்ணப்பர் பணியும் கொள் கபாலியாரே. 1

முப்புரிநூல் வரைமார்பில் முயங்கக் கொண்டார்;
முதுகேழல்முளைமருப்பும் கொண்டார், பூணா;
செப்புஉருவம் முலை மலையாள் பாகம் கொண்டார்;
செம்மேனி வெண்நீறு திகழக் கொண்டார்;
துப்புரவு ஆர் சுரிசங்கின்தோடு கொண்டார்;
சுடர் முடி சூழ்ந்து, அடி அமரர் தொழவும் கொண்டார்;
அப் பலி கொண்டு ஆயிழையார் அன்பும் கொண்டார்—
அடியேனை ஆள்உடைய அடிகளாரே. 2

முடி கொண்டார்; முளைஇளவெண்திங்களோடு
மூசும் இள நாகம் உடன்ஆகக் கொண்டார்;
அடி கொண்டார், சிலம்பு அலம்பு கழலும் ஆர்ப்ப;
அடங்காத முயலகனை அடிக்கீழ்க் கொண்டார்;
வடி கொண்டு ஆர்ந்து இலங்கும் மழு வலங்கைக் கொண்டார்;
மாலை இடப்பாகத்தே மருவக் கொண்டார்;
துடி கொண்டார்; கங்காளம் தோள்மேல் கொண்டார்—
சூலை தீர்த்து அடியேனை ஆட்கொண்டாரே. 3

பொக்கணமும் புலித்தோலும் புயத்தில் கொண்டார்;
பூதப்படைகள் புடை சூழக் கொண்டார்;
அக்கினொடு படஅரவம் அரைமேல் கொண்டார்;
அனைத்துஉலகும் படைத்து அவையும் அடங்கக் கொண்டார்;
கொக்குஇறகும் கூவிளமும் கொண்டை கொண்டார்;
கொடியானை அடல் ஆழிக்கு இரையாக் கொண்டார்;
செக்கர்நிறத் திருமேனி திகழக் கொண்டார்—
செடியேனை ஆட்கொண்ட சிவனார்தாமே. 4

அந்தகனை அயில்சூலத்து அழுத்திக் கொண்டார்;
அருமறையைத் தேர்க்குதிரை ஆக்கிக்கொண்டார்;
சுந்தரனைத் துணைக்கவரி வீசக் கொண்டார்;
சுடுகாடு நடம்ஆடும் இடமாக் கொண்டார்;
மந்தரம் நல் பொரு சிலையா வளைத்துக்கொண்டார்;
மாகாளன் வாசல்காப்புஆகக் கொண்டார்;
தந்திரமந்திரத்தராய் அருளிக்கொண்டார்—
சமண் தீர்த்து என் தன்னை ஆட்கொண்டார்தாமே. 5

பாரிடங்கள் பலகருவி பயிலக் கொண்டார்;
பவளநிறம் கொண்டார்; பளிங்கும் கொண்டார்;
நீர் அடங்கு சடைமுடிமேல் நிலாவும் கொண்டார்;
நீலநிறம் கோலம் நிறை மிடற்றில் கொண்டார்;
வார் அடங்கு வனமுலையார் மையல்ஆகி
வந்து இட்ட பலி கொண்டார்; வளையும் கொண்டார்;
ஊர் அடங்க, ஒற்றிநகர் பற்றிக்கொண்டார்—
உடல் உறு நோய் தீர்த்து என்னை ஆட்கொண்டாரே. 6

அணி தில்லைஅம்பலம் ஆடுஅரங்காக் கொண்டார்;
ஆலாலஅருநஞ்சம் அமுதாக் கொண்டார்;
கணி வளர் தார்ப் பொன்இதழிக்கமழ்தார் கொண்டார்;
காதல் ஆர் கோடி கலந்து இருக்கை கொண்டார்;
மணி பணத்த அரவம் தோள்வளையாக் கொண்டார்;
மால்விடைமேல் நெடுவீதி போதக்கொண்டார்;
துணி புலித்தோலினை ஆடைஉடையாக் கொண்டார்;
சூலம் கைக் கொண்டார்—தொண்டு எனைக் கொண்டாரே. 7

பட மூக்கப் பாம்பு அணையானோடு, வானோன்,
பங்கயன், என்று அங்கு அவரைப் படைத்துக் கொண்டார்;
குடமூக்கில் கீழ்க்கோட்டம் கோயில்கொண்டார்;
கூற்று உதைத்து ஓர் வேதியனை உய்யக்கொண்டார்;
நெடுமூக்கின் கரியின் உரி மூடிக்கொண்டார்;
நினையாத பாவிகளை நீங்கக்கொண்டார்;
இடம் ஆக்கி இடைமருதும் கொண்டார், பண்டே;—
என்னை இந் நாள் ஆட்கொண்ட இறைவர்தாமே. 8

எச்சன் இணைதலை கொண்டார்; பகன் கண் கொண்டார்;
இரவிகளில் ஒருவன் பல் இறுத்துக்கொண்டார்;
மெச்சன் விதாத்திரன் தலையும் வேருக்கொண்டார்;
விறல் அங்கி கரம் கொண்டார்; வேள்வி காத்து,
உச்ச நமன் தாள் அறுத்தார்; சந்திரனை உதைத்தார்;
உணர்வு இலாத் தக்கன்தன் வேள்விஎல்லாம்
அச்சம் எழ அழித்துக்கொண்டு, அருளும் செய்தார்—
அடியேனை ஆட்கொண்ட அமலர்தாமே. 9

சடை ஒன்றில் கங்கையையும் தரித்துக்கொண்டார்;
சாமத்தின் இசை வீணை தடவிக்கொண்டார்;
உடை ஒன்றில் புள்ளிஉழைத்தோலும் கொண்டார்;
உள்குவார் உள்ளத்தை ஒருக்கிக்கொண்டார்;
கடைமுன்றில் பலி கொண்டார்; கனலும் கொண்டார்;
காபாலவேடம் கருதிக் கொண்டார்;
விடை வென்றிக் கொடிஅதனில் மேவக் கொண்டார்—
வெந்துயரம் தீர்த்து என்னை ஆட்கொண்டாரே. 10

குராமலரோடு, அரா, மதியம், சடைமேல் கொண்டார்;
குடமுழ, நந்தீசனை, வாசகனாக் கொண்டார்;
சிராமலை தம் சேர்வுஇடமாத் திருந்தக் கொண்டார்;
தென்றல்நெடுந்தேரோனைப் பொன்றக்கொண்டார்;
பராபரன் என்பது தமது பேராக் கொண்டார்;
பருப்பதம் கைக்கொண்டார்; பயங்கள் பண்ணி
இராவணன் என்று அவனைப் பேர் இயம்பக்கொண்டார்—
இடர் உறு நோய் தீர்த்து என்னை ஆட்கொண்டாரே. 11

பொது VI-97 வினாவிடைத் திருத்தாண்டகம்

அண்டம் கடந்த சுவடும் உண்டோ?
அனல் அங்கை ஏந்திய ஆடல் உண்டோ?
பண்டை எழுவர் படியும் உண்டோ?
பாரிடங்கள்பல சூழப் போந்தது உண்டோ?
கண்டம் இறையே கறுத்தது உண்டோ?
கண்ணின்மேல் கண் ஒன்று கண்டது உண்டோ?
தொண்டர்கள் சூழத் தொடர்ச்சி உண்டோ?—
சொல்லீர், எம்பிரானாரைக் கண்டஆறே! 1

எரிகின்ற இள ஞாயிறு அன்ன மேனி
இலங்கிழை ஓர்பால் உண்டோ? வெள்ஏறு உண்டோ?
விரிகின்ற பொறி அரவத் தழலும் உண்டோ?
வேழத்தின்உரி உண்டோ? வெண்நூல் உண்டோ?
வரி நின்ற பொறிஅரவச் சடையும் உண்டோ?
அச் சடைமேல் இளமதியம் வைத்தது உண்டோ?
சொரிகின்ற புனல் உண்டோ? சூலம் உண்டோ?— 2
சொல்லீர், எம்பிரானாரைக் கண்டஆறே!

நிலாமாலை செஞ்சடைமேல் வைத்தது உண்டோ?
நெற்றிமேல் கண் உண்டோ? நீறு சாந்தோ?
புலால் நாறு வெள்எலும்பு பூண்டது உண்டோ?
பூதம் தற் சூழ்ந்தனவோ? போர் ஏறு உண்டோ?
கலாம் மாலை வேல்கண்ணாள் பாகத்து உண்டோ?
கார்க் கொன்றைமாலை கலந்தது உண்டோ?
சுலா மாலை ஆடுஅரவம் தோள்மேல் உண்டோ?—
சொல்லீர், எம்பிரானாரைக் கண்டஆறே. 3

பண் ஆர்ந்த வீணை பயின்றது உண்டோ?
பாரிடங்கள்பல சூழப் போந்தது உண்டோ?
உண்ணா அருநஞ்சம் உண்டது உண்டோ?
ஊழித்தீ அன்ன ஒளிதான் உண்டோ?
கண் ஆர் கழல் காலற் செற்றது உண்டோ?
காமனையும் கண்அழலால் காய்ந்தது உண்டோ?
எண்ணார் திரிபுரங்கள் எய்தது உண்டோ?—
எவ் வகை, எம்பிரானாரைக் கண்டஆறே? 4

நீறு உடைய திருமேனி பாகம் உண்டோ?
நெற்றிமேல் ஒற்றைக்கண் முற்றும் உண்டோ?
கூறு உடைய கொடுமழுவாள் கையில் உண்டோ?
கொல் புலித்தோல்உடை உண்டோ? கொண்ட வேடம்
ஆறு உடைய சடை உண்டோ? அரவம் உண்டோ?
அதன் அருகே பிறை உண்டோ? அளவு இலாத
ஏறு உடைய கொடி உண்டோ? இலயம் உண்டோ?—
எவ் வகை, எம்பிரானாரைக் கண்டஆறே? 5

பட்டமும் தோடும் ஓர்பாகம் கண்டேன்;
பார் திகழப் பலி திரிந்து போதக் கண்டேன்;
கொட்டி நின்று இலயங்கள் ஆடக் கண்டேன்;
குழை காதில், பிறை சென்னி, இலங்கக் கண்டேன்;
கட்டங்கக் கொடி திண்தோள் ஆடக் கண்டேன்;
கனம் மழுவாள் வலங்கையில் இலங்கக் கண்டேன்;
சிட்டனைத் திருஆலவாயில் கண்டேன்—
தேவனைக் கனவில் நான் கண்டஆறே! 6

அலைத்து ஓடு புனல்கங்கை சடையில் கண்டேன்;
அலர்கொன்றைத்தார் அணிந்தஆறு கண்டேன்;
பலிக்கு ஓடித் திரிவார் கைப் பாம்பு கண்டேன்;
பழனம் புகுவாரைப் பகலே கண்டேன்;
கலிக் கச்சிமேற்றளியே இருக்கக் கண்டேன்;
கறைமிடறும் கண்டேன்; கனலும் கண்டேன்;
வலித்து உடுத்த மான்தோல் அரையில் கண்டேன்—
மறை வல்ல மா தவனைக் கண்டஆறே! 7

நீறு ஏறு திருமேனி நிகழக் கண்டேன்;
நீள்சடைமேல் நிறை கங்கை ஏறக் கண்டேன்;
கூறு ஏறு கொடுமழுவாள் கொள்ளக் கண்டேன்;
கொடுகொட்டி, கை அலகு, கையில் கண்டேன்;
ஆறு ஏறு சென்னி அணி மதியும் கண்டேன்;
அடியார்கட்கு ஆர் அமுதம்ஆகக் கண்டேன்;
ஏறு ஏறி இந் நெறியே போதக் கண்டேன்—
இவ் வகை எம்பெருமானைக் கண்டஆறே! 8

விரையுண்ட வெண்நீறுதானும் உண்டு;
வெண்தலை கை உண்டு; ஒரு கை வீணை உண்டு;
சுரை உண்டு; சூடும் பிறை ஒன்று உண்டு;
சூலமும் தண்டும் சுமந்தது உண்டு(வ்);
அரையுண்ட கோவணஆடை உண்டு(வ்);
அலிக்கோலும் தோலும் அழகா உண்டு(வ்);
இரை உண்டுஅறியாத பாம்பும் உண்டு(வ்)—
இமையோர்பெருமான் இலாதது என்னே? 9

''மைப் படிந்த கண்ணாளும் தானும் கச்சி-
மயானத்தான், வார்சடையான்'' என்னின், அல்லான்;
ஒப்பு உடையன்அல்லன்; ஒருவன் அல்லன்;
ஓர் ஊரன்அல்லன்; ஓர் உவமன்இ(ல்)லி;
அப் படியும் அந் நிறமும் அவ் வண்ண(ம்)மும்
அவன் அருளே கண்ஆகக் காணின்அல்லால்,
''இப் படியன், இந் நிறத்தன், இவ் வண்ணத்தன்,
இவன் இறைவன்'' என்று எழுதிக் காட்ட ஒணாதே. 10

பொன் ஒத்த மேனிமேல் பொடியும் கண்டேன்;
புலித்தோல்உடை கண்டேன்; புணரத் தன்மேல்
மின் ஒத்த நுண்இடையாள் பாகம் கண்டேன்;
மிளிர்வது ஒரு பாம்பும் அரைமேல் கண்டேன்;
அன்னத்தேர் ஊர்ந்த அரக்கன்தன்னை
அலற அடர்த்திட்ட அடியும் கண்டேன்;
சின்ன மலர்க்கொன்றைக்கண்ணி கண்டேன்—
சிவனை நான் சிந்தையுள் கண்டஆறே! 11

பொது VI-98 மறுமாற்றத் திருத் தாண்டகம்

நாம் ஆர்க்கும் குடி அல்லோம்; நமனை அஞ்சோம்;
நரகத்தில் இடர்ப்படோம்; நடலை இல்லோம்;
ஏமாப்போம்; பிணி அறியோம்; பணிவோம்அல்லோம்;
இன்பமே,—எந்நாளும்,—துன்பம் இல்லை;
தாம் ஆர்க்கும் குடி அல்லாத் தன்மைஆன
சங்கரன், நல் சங்கவெண்குழை ஓர் காதின்
கோமாற்கே, 'நாம் என்றும் மீளா ஆள்ஆய்க்
கொய்ம்மலர்ச்சேவடிஇணையே குறுகினோமே. 1

அகலிடமே இடம்ஆக ஊர்கள்தோறும்
அட்டு உண்பார், இட்டு உண்பார், விலக்கார், ஐயம்;
புகல்இடம் ஆம் அம்பலங்கள்; பூமிதேவி
உடன்கிடந்தால் புரட்டாள்; பொய் அன்று, மெய்யே;
இகல் உடைய விடை உடையான் ஏன்றுகொண்டான்;
இனி ஏதும் குறைவு இலோம்; இடர்கள் தீர்ந்தோம்;
துகில் உடுத்துப் பொன் பூண்டு திரிவார் சொல்லும்
சொல் கேட்கக் கடவோமோ? துரிசு அற்றோமே. 2

வார் ஆண்ட கொங்கையர் சேர் மனையில் சேரோம்;
''மாதேவா! மாதேவா!'' என்று வாழ்த்தி,
நீர் ஆண்ட புரோதாயம் ஆடப்பெற்றோம்;
நீறு அணியும் கோலமே நிகழப்பெற்றோம்;
கார் ஆண்ட மழை போலக் கண்ணீர் சோரக்
கல்மனமே நல் மனமாக் கரையப்பெற்றோம்;
பார் ஆண்டு பகடு ஏறித் திரிவார் சொல்லும்
பணி கேட்கக் கடவோமோ? பற்று அற்றோமே. 3

உறவுஆவார், உருத்திரபல்கணத்தினோர்கள்;
உடுப்பன கோவணத்தொடு கீள் உளஆம்அன்றே;
செறுவாரும் செறமாட்டார்; தீமைதானும்
நன்மைஆய்ச் சிறப்பதே; பிறப்பில் செல்லோம்;
நறவு ஆர் பொன்இதழி நறுந் தாரோன் சீர் ஆர்
நமச்சிவாயம் சொல்ல வல்லோம், நாவால்;
சுறவு ஆரும் கொடியானைப் பொடியாக் கண்ட
சுடர் நயனச்சோதியையே தொடர்வுஉற்றோமே. 4

என்றும் நாம் யாவர்க்கும் இடைவோம்அல்லோம்;
இரு நிலத்தில் எமக்கு எதிர்ஆவாரும் இல்லை;
சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம்அல்லோம்;
சிவபெருமான் திருவடியே சேரப்பெற்றோம்;
ஒன்றினால் குறை உடையோம்அல்லோம்அன்றே;
உறு பிணியார் செறல் ஒழிந்திட்டு ஓடிப் போனார்;
பொன்றினார் தலைமாலை அணிந்த சென்னிப்
புண்ணியனை நண்ணிய புண்ணியத்து உளோமே. 5

''மூஉருவில் முதல்உருவாய், இரு-நான்கு ஆன
மூர்த்தியே!'' என்று முப்பத்துமூவர்-
தேவர்களும் மிக்கோரும் சிறந்து வாழ்த்தும்
செம்பவளத் திருமேனிச் சிவனே!'' என்னும்
நா உடையார் நமை ஆள உடையார்அன்றே;
நாவல்அம்தீவுஅகத்தினுக்கு நாதர்ஆன
காவலரே ஏவி விடுத்தாரேனும்,
கடவம்அலோம்; கடுமையொடு களவு அற்றோமே. 6

நிற்பனவும், நடப்பனவும், நிலனும், நீரும்,
நெருப்பினொடு, காற்றுஆகி, நெடு வான்ஆகி,
அற்பமொடு பெருமையும்ஆய், அருமைஆகி,
அன்புஉடையார்க்கு எளிமையதுஆய், அளக்கல் ஆகாத்
தற்பரம்ஆய், சதாசிவம்ஆய், தானும் யானும்
ஆகின்ற தன்மையனை நன்மையோடும்
பொற்புஉடைய பேசக் கடவோம்; பேயர்
பேசுவன பேசுதுமோ? பிழை அற்றோமே. 7

ஈசனை, எவ்உலகினுக்கும் இறைவன்தன்னை,
இமையவர்தம் பெருமானை, எரிஆய் மிக்க
தேசனை, செம்மேனி வெண்நீற்றானை,
சிலம்புஅரையன் பொன்பாவை நலம் செய்கின்ற
நேசனை, நித்தலும் நினையப்பெற்றோம்;
நின்று உண்பார் எம்மை நினையச் சொன்ன
வாசகம்எல்லாம் மறந்தோம்அன்றே;
வந்தீர் ஆர்? மன்னவன்ஆவான்தான் ஆரே? 8

சடை உடையான்; சங்கக்குழை ஓர் காதன்;
சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி,
விடை உடையான்; வேங்கைஅதள் மேல்ஆடை,
வெள்ளி போல் புள்ளி உழை-மான்தோல் சார்ந்த
உடை, உடையான்; நம்மை உடையான்கண்டீர்;
உம்மோடு மற்றும் உளராய் நின்ற
படை உடையான் பணி கேட்கும் பணியோம்அல்லோம்;
பாசம் அற வீசும் படியோம், நாமே. 9

நா ஆர நம்பனையே பாடப்பெற்றோம்;
நாண்அற்றார் நள்ளாமே விள்ளப்பெற்றோம்;
''ஆவா!'' என்று எமை ஆள்வான், அமரர்நாதன்,
அயனொடு மாற்கு அறிவு அரிய அனல்ஆய் நீண்ட
தேவாதிதேவன், சிவன், என் சிந்தை
சேர்ந்து இருந்தான்; தென்திசைக்கோன் தானே வந்து,
கோஆடி, ''குற்றேவல் செய்கு'' என்றாலும்,
குணம்ஆகக் கொள்ளோம்; எண்குணத்து உளோமே. 10

திருப் புகலூர் VI-99 திருத் தாண்டகம்

எண்ணுகேன்; என் சொல்லி எண்ணுகேனோ,
எம்பெருமான் திருவடியே எண்ணின்அல்லால்?
கண் இலேன்! மற்று ஓர் களைகண் இல்லேன்,
கழல்அடியே கைதொழுது காணின்அல்லால்;
ஒண்ணுளே ஒன்பதுவாசல் வைத்தாய்;
ஒக்க அடைக்கும்போது உணரமாட்டேன்;
புண்ணியா! உன் அடிக்கே போதுகின்றேன்—
பூம் புகலூர் மேவிய புண்ணியனே! 1

அங்கமே பூண்டாய்! அனல்ஆடி(ன்)னாய்!
ஆதிரையாய்! ஆல்நிழலாய்! ஆன்ஏறு ஊர்ந்தாய்!
பங்கம் ஒன்று இல்லாத படர்சடையினாய்!
பாம்பொடு திங்கள் பகை தீர்த்து ஆண்டாய்!
சங்கை ஒன்று இன்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சு உண்டு, சாவா மூவாச்
சிங்கமே! உன் அடிக்கே போதுகின்றேன்—
திருப் புகலூர் மேவிய தேவதேவே! 2

பைஅரவக்கச்சையாய்! பால்வெண்நீற்றாய்!
பளிக்குக்குழையினாய்! பண் ஆர் இன்சொல்
மை விரவு கண்ணாளைப் பாகம் கொண்டாய்!
மான்மறி கை ஏந்தினாய்! வஞ்சக் கள்வர்-
ஐவரையும் என்மேல்-தரவு அறுத்தாய்;
அவர் வேண்டும் காரியம் இங்கு ஆவதுஇல்லை;
பொய் உரையாது உன் அடிக்கே போதுகின்றேன்— 3
பூம் புகலூர் மேவிய புண்ணியனே!

தெருளாதார் மூஎயிலும் தீயில் வேவ,
சிலை வளைத்து, செங் கணையால் செற்ற தேவே!
மருளாதார்தம் மனத்தில் வாட்டம் தீர்ப்பாய்!
மருந்துஆய்ப் பிணி தீர்ப்பாய், வானோர்க்கு என்றும்!
அருள்ஆகி, ஆதிஆய், வேதம்ஆகி,
அலர்மேலான் நீர்மேலான் ஆய்ந்தும் காணாப்
பொருள்ஆவாய்! உன் அடிக்கே போதுகின்றேன்— 4
பூம் புகலூர் மேவிய புண்ணியனே!

நீர் ஏறு செஞ்சடைமேல் நிலாவெண்திங்கள்
நீங்காமை வைத்து உகந்த நீதியானே!
பார் ஏறு படுதலையில் பலி கொள்வானே!
பண்டு அநங்கற் காய்ந்தானே! பாவநாசா!
கார் ஏறு முகில் அனைய கண்டத்தானே!
கருங்கைக்களிற்று உரிவை கதறப் போர்த்த
போர்ஏறே! உன் அடிக்கே போதுகின்றேன்— 5
பூம் புகலூர் மேவிய புண்ணியனே!

விரிசடையாய்! வேதியனே! வேதகீதா!
    விரி பொழில் சூழ் வெண்காட்டாய்! மீயச்சூராய்!
திரிபுரங்கள் எரிசெய்த தேவதேவே!
    திரு ஆரூர்த் திரு மூலட்டானம் மேயாய்!
மருவுஇனியார் மனத்து உளாய்! மாகாளத்தாய்!
    வலஞ்சுழியாய்! மா மறைக்காட்டு எந்தாய்! என்றும்
புரிசடையாய்! உன் அடிக்கே போதுகின்றேன்—
    பூம் புகலூர் மேவிய புண்ணியனே! 6

தே ஆர்ந்த தேவனை, தேவர்எல்லாம்
    திருவடிமேல் அலர் இட்டு, தேடி நின்று,
நா ஆர்ந்த மறை பாடி, நட்டம்ஆடி,
    நான்முகனும் இந்திரனும் மாலும் போற்ற,
கா ஆர்ந்த பொழில்-சோலைக் கானப்பேராய்!
    கழுக்குன்றத்து உச்சியாய்! கடவுளே! நின்
பூ ஆர்ந்த பொன்அடிக்கே போதுகின்றேன்—
    பூம் புகலூர் மேவிய புண்ணியனே! 7

நெய்ஆடி! நின்மலனே! நீலகண்டா!
    நிறைவு உடையாய்! மறை வல்லாய்! நீதியானே!
மை ஆடு கண் மடவாள் பாகத்தானே!
    மான்தோல்உடையாய்! மகிழ்ந்து நின்றாய்!
கொய் ஆடு கூவிளம் கொன்றைமாலை
    கொண்டு, அடியேன்நான் இட்டு, கூறி நின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்—
    பூம் புகலூர் மேவிய புண்ணியனே! 8

துன்னம் சேர் கோவணத்தாய்! தூய நீற்றாய்!
    துதைந்து இலங்கு வெண்மழுவாள் கையில் ஏந்தி,
தன் அணையும் தண்மதியும் பாம்பும் நீரும்
    சடைமுடிமேல் வைத்து உகந்த தன்மையானே!
அன்னநடை மடவாள் பாகத்தானே!
    அக்குஆரம் பூண்டானே! ஆதியானே!
பொன்அம்கழல்அடிக்கே போதுகின்றேன்—
    பூம் புகலூர் மேவிய புண்ணியனே! 9

*ஒருவரையும் அல்லாது உணராது, உள்ளம்;
    உணர்ச்சித் தடுமாற்றத்துள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி,
    இல்லாத தரவு அறுத்தாய்க்கு இல்லேன்; ஏலக்
கருவரை சூழ் கானல் இலங்கை வேந்தன்
    கடுந்தேர் மீது ஓடாமைக் காலால் செற்ற
பொரு வரையாய்! உன் அடிக்கே போதுகின்றேன்—
    பூம் புகலூர் மேவிய புண்ணியனே! 10

திருச்சிற்றம்பலம்

---

*[திருமுறை கண்ட புராண வரலாற்றில் (பாடல் 15) ‘ஒருவரையும்’ என்றே உள்ளமையால், பிறரெல்லாம் கொண்ட ‘ஒருவனையும்’ என்ற பாடத்தை ஈண்டுக் கொண்டிலம்.]

தேவாரம்

பண்முறை

சுந்தரர்

உ

திருச்சிற்றம்பலம்

சுந்தரர் அருளிய

தேவாரத் திருப்பதிகங்கள்

ஏழாம் திருமுறை

திரு வெண்ணெய்நல்லூர் VII-1 இந்தளம்

பித்தா! பிறைசூடி! பெருமானே! அருளாளா!
எத்தால் மறவாதே நினைக்கின்றேன்? மனத்து உன்னை
வைத்தாய்; பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்-துறையுள்
அத்தா!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 1

நாயேன் பலநாளும் நினைப்பு இன்றி, மனத்து உன்னை,
பேய்ஆய்த் திரிந்து எய்த்தேன்; பெறல் ஆகா அருள் பெற்றேன்;
வேய் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
ஆயா!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 2

மன்னே! மறவாதே நினைக்கின்றேன், மனத்து உன்னை;
பொன்னே, மணிதானே, வயிர(ம்)மே, பொருது உந்தி
மின் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
அன்னே!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 3

முடியேன்; இனிப் பிறவேன்; பெறின் மூவேன்; பெற்றம்ஊர்தீ!
கொடியேன் பலபொய்யே உரைப்பேனைக் குறிக்கொள், நீ!
செடி ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
அடிகேள்!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 4

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம்(ம்)அது பணியாய்!
ஆதன் பொருள் ஆனேன்; அறிவுஇல்லேன்; அருளாளா!
தாது ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
ஆதி!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 5

தண் ஆர் மதிசூடி! தழல் போலும் திருமேனீ!
எண்ணார் புரம்மூன்றும் எரியுண்ண(ந்) நகைசெய்தாய்!
மண் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
அண்ணா!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 6

ஊன்ஆய், உயிர்ஆனாய்; உடல்ஆனாய்; உலகுஆனாய்;
வான்ஆய், நிலன்ஆனாய்; கடல்ஆனாய்; மலைஆனாய்;
தேன் ஆர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
ஆனாய்!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 7

ஏற்றார் புரம்மூன்றும் எரியுண்ணச் சிலை தொட்டாய்!
தேற்றாதன சொல்லித் திரிவேனோ? செக்கர்வான்நீர்
ஏற்றாய்! பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
ஆற்றாய்!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 8

மழுவாள் வலன் ஏந்தீ! மறைஓதீ! மங்கைபங்கா!
தொழுவார்அவர் துயர்ஆயின தீர்த்தல் உன தொழிலே;
செழு வார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
அழகா!—உனக்கு ஆள்ஆய் இனி அல்லேன் எனல் ஆமே? 9

கார் ஊர் புனல் எய்தி, கரை கல்லித் திரைக்கையால்
பார் ஊர் புகழ் எய்தி, திகழ் பல் மா மணி உந்தி,
சீர் ஊர் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்நல்லூர் அருள்-துறையுள்
ஆரூரன் எம்பெருமாற்கு ஆள்அல்லேன் எனல் ஆமே? 10

திருப் பரங்குன்றம் VII-2 இந்தளம்

கோத்திட்டையும் கோவலும் கோவில்கொண்டீர்;
    உம்மைக் கொண்டு உழல்கின்றது ஓர், கொல்லைச் சில்லை,
சே, திட்டுக் குத்தித் தெருவே திரியும்;
    சில்பூதமும் நீரும் திசைதிசையன;
சோத்திட்டு விண்ணோர்பலரும் தொழ, நும் அரைக்
    கோவணத்தோடு ஒரு தோல் புடை சூழ்ந்து,
ஆர்த்திட்டதும் பாம்பு; கைக் கொண்டதும் பாம்பு—
    அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 1

முண்டம் தரித்தீர்; முதுகாடு உறைவீர்;
    முழுநீறு மெய் பூசுதிர்; மூக்கப் பாம்பைக்
கண்டத்திலும் தோளிலும் கட்டி வைத்தீர்;
    கடலைக் கடைந்திட்டது ஓர் நஞ்சை உண்டீர்;
பிண்டம் சுமந்து உம்மொடும் கூடமாட்டோம்;
    ''பெரியாரொடு நட்பு இனிது'' என்று இருத்தும்;
அண்டம் கடந்து அப் புறத்தும் இருந்தீர்—
    அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 2

மூடுஆய முயலகன், மூக்கப் பாம்பு,
    முடை நாறிய வெண்தலை, மொய்த்த பல்பேய்,
பாடாவரு பூதங்கள், பாய் புலித்தோல்,
    பரிசு ஒன்று அறியாதன பாரிடங்கள்,
தோடு ஆர் மலர்க்கொன்றையும், துன் எருக்கும்;
    துணை மா மணி நாகம் அரைக்கு அசைத்து, ஒன்று
ஆடாதனவே செய்தீர்; எம்பெருமான்!—
    அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 3

மஞ்சுண்ட மாலை மதி சூடு சென்னி,
    மலையான்மடந்தைமணவாளநம்பி!
பஞ்சுண்ட அல்குல் பணைமென்முலையாளொடு
    நீரும் ஒன்றுஆய் இருத்தல் ஒழியீர்;
நஞ்சு உண்டு தேவர்க்கு அமுதம் கொடுத்த
    நலம் ஒன்று அறியோம்; உம் கை நாகம்அதற்கு
அஞ்சு உண்டு, படம்; அது போக விடீர்—
    அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 4

பொல்லாப் புறங்காட்டுஅகத்து ஆட்டு ஒழியீர்;
புலால் வாயன பேயொடு பூச்சு ஒழியீர்;
''எல்லாம் அறிவீர்; இதுவே அறியீர்''
என்று இரங்குவேன், எல்லியும் நண்பகலும்;
கல்லால்நிழல்கீழ் ஒரு நாள் கண்டதும்,
கடம்பூர்க் கரக்கோயிலில் முன் கண்டதும்,
அல்லால் விரகு ஒன்று இலம்; எம்பெருமான்!—
அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 5

தென்னாத்தெனாத்தெத்தெனா என்று பாடிச்
சில்பூதமும் நீரும் திசைதிசையன;
பல்-நால்மறை பாடுதிர்; பாசூர் உளீர்;
படம்பக்கம் கொட்டும் திரு ஒற்றியூரீர்;
பண் ஆர் மொழியாளை ஓர்பங்கு உடையீர்;
படுகாட்டுஅகத்து என்றும் ஓர் பற்று ஒழியீர்;
''அண்ணாமலையேன்'' என்றீர்; ஆரூர் உளீர்—
அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 6

சிங்கத்துஉரி மூடுதிர்; தேவர்கணம் தொழ
நிற்றீர்; பெற்றம் உகந்து ஏறிடுதிர்;
பங்கம்பல பேசிடப் பாடும் தொண்டர்தமைப்
பற்றிக்கொண்டு ஆண்டுவிடவும் கில்லீர்;
கங்கைச் சடையீர்! உம் கருத்து அறியோம்;
கண்ணும்மூன்று உடையீர்; கண்ணேஆய் இருந்தால்,
அங்கத்து உறு நோய் களைந்து ஆளகில்லீர்—
அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 7

பிணி வண்ணத்த வல்வினை தீர்த்துஅருளீர்;
பெருங்காட்டுஅகத்தில் பெரும் பேயும் நீரும்
துணிவண்ணத்தின் மேலும் ஓர் தோல் உடுத்து,
சுற்றும் நாகத்தராய், சுண்ணநீறு பூசி,
மணிவண்ணத்தின் மேலும் ஓர் வண்ணத்தராய்,
மற்றும்மற்றும் பல்பலவண்ணத்தராய்,
அணி வண்ணத்தராய், நிற்றீர்; எம்பெருமான்!—
அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 8

கோள் ஆளிய குஞ்சரம் கோள் இழைத்தீர்;
மலையின்தலைஅல்லது கோயில்கொள்ளீர்;
வேள் ஆளிய காமனை வெந்து அழிய
விழித்தீர்; அது அன்றியும், வேய் புரையும்
தோளாள் உமைநங்கை ஓர்பங்கு உடையீர்;
உடு கூறையும் சோறும் தந்து ஆளகில்லீர்;
ஆள் ஆளியவே கிற்றீர்; எம்பெருமான்!—
அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 9

பாரோடு விண்ணும் பகலும் ஆகி,
பனி மால்வரைஆகி, பரவைஆகி,
நீரோடு தீயும் நெடுங் காற்றும் ஆகி,
நெடு வெள்ளிடைஆகி, நிலனும் ஆகி,
தேர் ஓட வரை எடுத்த அரக்கன்
சிரம்பத்து இறுத்தீர்; உம் செய்கைஎல்லாம்
ஆரோடும் கூடா; அடிகேள்! இது என்?—
அடியோம் உமக்கு ஆட்செய அஞ்சுதுமே. 10

''அடிகேள்! உமக்கு ஆட்செய அஞ்சுதும்'' என்று
அமரர்பெருமானை ஆரூரன் அஞ்சி,
முடியால் உலகு ஆண்ட மூவேந்தர்முன்னே
மொழிந்த ஆறும்ஓர்நான்கும், ஓர் ஒன்றினையும்
படியா, இவை கற்று வல்ல அடியார்,
பரங்குன்றம் மேய பரமன் அடிக்கே
குடிஆகி, வானோர்க்கும் ஓர் கோவும்ஆகி,
குலவேந்தராய் விண்முழுது ஆள்பவரே. 11

திரு நெல்வாயில் அரத்துறை VII-3 இந்தளம்

கல்வாய் அகிலும் கதிர் மா மணியும்
கலந்து உந்தி வரும் நிவவின் கரைமேல்
நெல்வாயில் அரத்துறை நீடு உறையும்,
நிலவெண்மதி சூடிய, நின்மலனே!
''நல் வாய் இல்செய்தார், நடந்தார், உடுத்தார்,
நரைத்தார், இறந்தார்'' என்று நானிலத்தில்
சொல்ஆய்க் கழிகின்றது அறிந்து, அடியேன்
தொடர்ந்தேன்; உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 1

கறி மா மிளகும் மிகு வல் மரமும்
மிக உந்தி வரும் நிவவின் கரைமேல்,
நெறி வார்குழலார்அவர் காண, நடம்செய்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே!
வறிதே நிலையாத இம் மண்ணுலகில்
நரன்ஆக வகுத்தனை; நான் நிலையேன்;
பொறிவாயில் இவ் ஐந்தினையும் அவியப்
பொருது, உன் அடியே புகும் சூழல் சொல்லே! 2

புற்று ஆடு அரவம்(ம்) அரைஆர்த்து உகந்தாய்!
புனிதா! பொரு வெள்விடைஊர்தியினாய்!
எற்றே ஒரு கண் இலன், நின்னை அல்லால்;
நெல்வாயில் அரத்துறை நின்மலனே!
மற்றே ஒரு பற்று இலன்; எம்பெருமான்!
வண்டு ஆர் குழலாள் மங்கைபங்கினனே!
அற்று ஆர் பிறவிக்கடல் நீந்தி ஏறி,
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 3

கோடு உயர் கோங்குஅலர் வேங்கைஅலர்
மிக உந்தி வரும் நிவவின் கரைமேல்
நீடு உயர் சோலை நெல்வாயில் அரத்துறை
நின்மலனே! நினைவார் மனத்தாய்!
ஓடுபுனல்கரை ஆம், இளமை;
உறங்கி விழித்தால் ஒக்கும், இப் பிறவி;
வாடி இருந்து வருந்தல்செய்யாது,
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 4

உலவும் முகிலில்-தலை கல் பொழிய,
உயர் வேயொடு இழி நிவவின் கரைமேல்,
நிலவும் மயிலார்அவர்தாம் பயிலும்,
நெல்வாயில் அரத்துறை நின்மலனே!
புலன்ஐந்தும் மயங்கி, அகம் குழைய,
பொரு வேல் ஓர் நமன்தமர்தாம் நலிய,
அலமந்து மயங்கி அயர்வதன் முன்,
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 5

ஏலம்(ம்) இலவங்கம் எழில்கனகம்
மிக உந்தி வரும் நிவவின் கரைமேல்,
நீலம்மலர்ப் பொய்கையில் அன்னம் மலி,
நெல்வாயில் அரத்துறையாய்! ஒரு நெல்-
வால் ஊன்ற வருந்தும் உடம்புஇதனை
மகிழாது, அழகா! அலந்தேன், இனி யான்;
ஆல(ந்)நிழலில் அமர்ந்தாய்! அமரா!
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 6

சிகரம் முகத்தில்-திரள் ஆர் அகிலும்
மிக உந்தி வரும் நிவவின் கரைமேல்,
நிகர் இல் மயிலார்அவர்தாம் பயிலும்,
நெல்வாயில் அரத்துறை நின்மலனே!
மகரக்குழையாய்! மணக்கோலம்அதே
பிணக்கோலம்அது ஆம், பிறவிஇதுதான்;
அகரம் முதலின் எழுத்துஆகி நின்றாய்!
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 7

திண் தேர் நெடுவீதி இலங்கையர்கோன்
திரள்தோள்இருபஃதும் நெரித்துஅருளி,
ஞெண்டு ஆடு நெடு வயல் சூழ் புறவின்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே!
பண்டே மிக நான் செய்த பாக்கியத்தால்,
பரஞ்சோதி! நின் நாமம் பயிலப்பெற்றேன்;
அண்டா! அமரர்க்கு அமரர்பெருமான்!
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 8

மாணா உருஆகி ஓர் மண் அளந்தான்,
மலர்மேலவன், நேடியும் காண்பு அரியாய்!
நீள்நீள் முடி வானவர் வந்து இறைஞ்சும்
நெல்வாயில் அரத்துறை நின்மலனே!
வாண் ஆர் நுதலார் வலைப்பட்டு, அடியேன்,
பலவின்கனி ஈஅது போல்வதன் முன்,
ஆணொடு பெண்ஆம் உருஆகி நின்றாய்!
அடியேன் உய்யப்போவது ஓர் சூழல் சொல்லே! 9

நீர் ஊரும் நெடு வயல் சூழ் புறவின்
நெல்வாயில் அரத்துறை நின்மலனைத்
தேர் ஊர் நெடுவீதி நல் மாடம் மலி
தென்நாவலர்கோன்—அடித்தொண்டன், அணி
ஆரூரன்—உரைத்தன நல்-தமிழின்
மிகு மாலை ஓர்பத்துஇவை கற்று வல்லார்
கார் ஊர் களி வண்டு அறை யானை மன்னர்- 10
அவர் ஆகி, ஓர் விண்முழுது ஆள்பவரே.

திரு அஞ்சைக்களம் VII-4 இந்தளம்

தலைக்குத் தலைமாலை அணிந்தது என்னே?
சடைமேல் கங்கைவெள்ளம் தரித்தது என்னே?
அலைக்கும் புலித்தோல் கொண்டு அசைத்தது என்னே?
அதன்மேல் கதநாகம் கச்சு ஆர்த்தது என்னே?—
மலைக்கு(ந்) நிகர்-ஒப்பன வன் திரைகள்
வலித்து, எற்றி, முழங்கி வலம்புரிகொண்டு,
அலைக்கும் கடல்அம்கரைமேல் மகோதை 1
அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே!

பிடித்து ஆட்டி ஓர் நாகத்தைப் பூண்டது என்னே?
பிறங்கும் சடைமேல் பிறை சூடிற்று என்னே?
பொடித்தான் கொண்டு மெய்ம் முற்றும் பூசிற்று என்னே?
புகர் ஏறு உகந்து ஏறல் புரிந்தது என்னே?—
மடித்து, ஓட்டந்து, வன் திரை எற்றியிட,
வளர் சங்கம் அங்காந்து முத்தம் சொரிய,
அடித்து ஆர் கடல்அம்கரைமேல் மகோதை
அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 2

சிந்தித்து எழுவார்க்கு நெல்லிக்கனியே!
சிறியார் பெரியார், மனத்து ஏறல்உற்றால்;
முந்தித் தொழுவார் இறவார்; பிறவார்;
முனிகள்முனியே! அமரர்க்கு அமரா!
சந்தித் தடமால்வரை போல்-திரைகள்
தணியாது இடறும் கடல்அம்கரைமேல்,
அந்தித்தலைச் செக்கர்வானே ஒத்தியால்—
அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 3

இழைக்கும்(ம்) எழுத்துக்கு உயிரே ஒத்தியால்;
இலையே ஒத்தியால்;உளையே ஒத்தியால்;
குழைக்கும் பயிர்க்கு ஓர் புயலே ஒத்தியால்;
அடியார்தமக்கு ஓர் குடியே ஒத்தியால்—
மழைக்கு(ந்) நிகர்-ஒப்பன வன் திரைகள்
வலித்து, எற்றி, முழங்கி வலம்புரிகொண்டு
அழைக்கும் கடல்அம்கரைமேல் மகோதை
அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 4

வீடின் பயன் என்? பிறப்பின் பயன் என்?
விடை ஏறுவது என், மதயானை நிற்க?
கூடும் மலைமங்கைஒருத்திஉடன்
சடைமேல் கங்கையாளை நீ சூடிற்று என்னே?
பாடும் புலவர்க்கு அருளும் பொருள் என்?—
நிதியம்பல செய்த கலச் செலவில்
ஆடும் கடல்அம்கரைமேல் மகோதை
அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 5

இரவத்து இடுகாட்டு எரிஆடிற்று என்னே?
இறந்தார் தலையில் பலி கோடல் என்னே?
பரவித் தொழுவார் பெறு பண்டம் என்னே?
பரமா, பரமேட்டி, பணித்துஅருளாய்!—
உரவத்தொடு, சங்கமொடு இப்பி முத்தம்
கொணர்ந்து, எற்றி, முழங்கி வலம்புரிகொண்டு,
அரவக் கடல்அம்கரைமேல் மகோதை
அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 6

‘‘ஆக்கும் அழிவும் அமைவும், நீ’’ என்பன், நான்;
‘‘சொல்லுவார் சொல்பொருள்அவை, நீ’’ என்பன், நான்;
‘‘நாக்கும் செவியும் கண்ணும், நீ’’ என்பன், நான்;
நலனே! இனி நான் உனை நன்கு உணர்ந்தேன்—
நோக்கும் நிதியம்பல எத்தனையும்
கலத்தில் புகப் பெய்துகொண்டு, ஏற நுந்தி
ஆர்க்கும் கடல்அம்கரைமேல் மகோதை
அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 7

வெறுத்தேன், மனைவாழ்க்கையை விட்டொழிந்தேன்;
    விளங்கும் குழைக் காது உடை வேதியனே!
இறுத்தாய், இலங்கைக்கு இறைஆயவனை,
    தலைபத்தொடு தோள்பல இற்று விழ;
கறுத்தாய், கடல்நஞ்சு அமுதுஉண்டு கண்டம்;
    கடுகப் பிரமன் தலைஐந்திலும் ஒன்று
அறுத்தாய்—கடல்அம்கரைமேல் மகோதை
    அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 8

பிடிக்குக் களிறே ஒத்தியால்; எம்பிரான்!
    பிரமற்கும் பிரான்; மற்றை மாற்கும் பிரான்;
நொடிக்கும் அளவில் புரம்மூன்று எரியச்
    சிலை தொட்டவனே! உனை நான் மறவேன்—
வடிக்கின்றன போல் சில வன் திரைகள்
    வலித்து, எற்றி, முழங்கி வலம்புரிகொண்டு
அடிக்கும் கடல்அம்கரைமேல் மகோதை
    அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனே! 9

எம்தம்(ம்) அடிகள், இமையோர்பெருமான்,
    எனக்கு என்றும் அளிக்கும் மணிமிடற்றன்,
அம் தண்கடல்அம்கரைமேல் மகோதை
    அணி ஆர் பொழில் அஞ்சைக்களத்து அப்பனை,
மந்தம் முழவும் குழலும் இயம்பும்
    வளர் நாவலர்கோன்—நம்பிஊரன்—சொன்ன
சந்தம் மிகு தண்தமிழ்மாலைகள்கொண்டு
    அடி வீழ வல்லார் தடுமாற்று இலரே. 10

திரு ஓணகாந்தன்தளி VII-5 இந்தளம்

நெய்யும் பாலும் தயிரும் கொண்டு நித்தல் பூசை செய்யல்உற்றார்;
கையில் ஒன்றும் காணம் இல்லை, கழல்அடி தொழுது உய்யின்அல்லால்;
ஐவர் கொண்டு இங்கு ஆட்ட ஆடி, ஆழ்குழிப்பட்டு அழுந்துவேனுக்கு,
உய்யும்ஆறு ஒன்று அருளிச்செய்யீர்—ஓணகாந்தன்தளி உளீரே! 1

திங்கள் தங்கு சடையின்மேல் ஓர்—திரைகள் வந்து புரள வீசும்—
கங்கையாளேல், வாய் திற(வ்)வாள்; கணபதி(ய்)யேல், வயிறுதாரி;
அம் கை வேலோன்குமரன், பிள்ளை; தேவியார் கொற்றுஅடியாளால்;
உங்களுக்கு ஆட்செய்யமாட்டோம்—ஓணகாந்தன்தளி உளீரே! 2

பெற்றபோழ்தும் பெறாதபோழ்தும், பேணி உன் கழல் ஏத்துவார்கள்
''மற்று ஓர் பற்றுஇலர்'' என்று இரங்கி, மதிஉடையவர் செய்கை செய்யீர்;
அற்றபோழ்தும் அலந்தபோழ்தும், ஆபற்காலத்து, அடிகேள்! உம்மை
ஒற்றிவைத்து இங்கு உண்ணல் ஆமோ?—ஓணகாந்தன்தளி உளீரே! 3

வல்லதுஎல்லாம் சொல்லி உம்மை வாழ்த்தினாலும், வாய் திறந்து ஒன்று
இல்லை என்னீர்; உண்டும் என்னீர்; எம்மை ஆள்வான் இருப்பது என், நீர்?
பல்லை உக்க படுதலையில் பகல்எலாம் போய்ப் பலி திரிந்து இங்கு
ஒல்லை வாழ்க்கை ஒழியமாட்டீர்—ஓணகாந்தன்தளி உளீரே! 4

கூடிக்கூடித் தொண்டர் தங்கள் கொண்ட பாணி குறைபடாமே,
ஆடிப் பாடி, அழுது, நெக்கு, அங்கு அன்புஉடையவர்க்கு இன்பம் ஓரீர்;
தேடித்தேடித் திரிந்து எய்த்தாலும் சித்தம் என்பால் வைக்கமாட்டீர்;
ஓடிப் போகீர்; பற்றும் தாரீர்—ஓணகாந்தன்தளி உளீரே! 5

வார்இருங்குழல், மை வாள்நெடுங்கண், மலைமகள்—மது விம்மு கொன்றைத்-
தார் இருந் தடமார்பு நீங்காத் தையலாள்—உலகு உய்ய வைத்த,
கார் இரும் பொழில், கச்சி மூதூர்க் காமக்கோட்டம் உண்டாக, நீர் போய்
ஊர் இடும் பிச்சை கொள்வது என்னே?—ஓணகாந்தன்தளி உளீரே! 6

பொய்ம்மையாலே போது போக்கிப் புறத்தும் இல்லை; அகத்தும் இல்லை;
மெய்ம்மை சொல்லி ஆளமாட்டீர்; மேலைநாள் ஒன்று இடவும் கில்லீர்;
எம்மைப் பெற்றால் ஏதும் வேண்டீர்; ஏதும் தாரீர்; ஏதும் ஓரீர்;
உம்மை அன்றே, எம்பெருமான்?—ஓணகாந்தன்தளி உளீரே! 7

வலையம் வைத்த கூற்றம் ஈர்வான் வந்து நின்ற வார்த்தை கேட்டு.
சிலை அமைத்த சிந்தையாலே திருவடி தொழுது உய்யின்அல்லால்,
கலை அமைத்த—காமச் செற்றக் குரோத லோப மதவர்ஊடு—ஐ-
உலை அமைத்து இங்கு ஒன்றமாட்டேன்—ஓணகாந்தன்தளி உளீரே! 8

வாரம்ஆகித் திருவடிக்குப் பணிசெய் தொண்டர் பெறுவது என்னே?
ஆரம் பாம்பு; வாழ்வது ஆரூர்; ஒற்றியூரேல், உ(ம்)மது அன்று;
தாரம்ஆகக் கங்கையாளைச் சடையில்வைத்த அடிகேள்! உம்தம்
ஊரும் காடு(வ்); உடையும் தோலே—ஓணகாந்தன்தளி உளீரே! 9

ஓ வணம்(ம்) ஏல் எருது ஒன்று ஏறும் ஓணகாந்தன்தளி உளார்தாம்
ஆவணம் செய்து, ஆளும் கொண்டு(வ்), அரை துகி(ல்)லொடு பட்டு வீக்கி,
கோவணம் மேற்கொண்ட வேடம் கோவைஆக ஆரூரன் சொன்ன 10
பா வணத் தமிழ்பத்தும் வல்லார்க்குப் பறையும், தாம் செய்த பாவம்தானே.

திரு வெண்காடு VII-6 இந்தளம்

படம் கொள் நாகம் சென்னி சேர்த்தி, பாய் புலித்தோல் அரையில் வீக்கி,
அடங்கலார் ஊர் எரியச் சீறி, அன்று மூவர்க்கு அருள்புரிந்தீர்;
மடங்கலானைச் செற்று உகந்தீர்; மனைகள்தோறும் தலை கை ஏந்தி 1
விடங்கர்ஆகித் திரிவது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே!

இழித்து உகந்தீர், முன்னை வேடம்; இமையவர்க்கும் உரைகள் பேணாது,
ஒழித்து உகந்தீர்; நீர் முன் கொண்ட உயர்தவத்தை, அமரர் வேண்ட,
அழிக்க வந்த காமவேளை, அவனுடைய தாதை காண, 2
விழித்து உகந்த வெற்றி என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே!

படைகள் ஏந்தி, பாரிட(ம்)மும் பாதம் போற்ற, மாதும் நீரும்,
உடை ஓர் கோவணத்தர்ஆகி—உண்மை சொல்லீர்; உண்மை அன்றே!—
சடைகள் தாழக் கரணம் இட்டு, தன்மை பேசி, இல் பலிக்கு 3
விடைஅது ஏறி, திரிவது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே!

பண் உளீராய்ப் பாட்டும் ஆனீர்; பத்தர் சித்தம் பரவிக் கொண்டீர்;
கண் உளீராய்க் கருத்தில் உம்மைக் கருதுவார்கள் காணும் வண்ணம்
மண் உளீராய் மதியம் வைத்தீர்; வானநாடர் மருவி ஏத்த, 4
விண் உளீராய் நிற்பது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே!

குடம் எடுத்து நீரும் பூவும் கொண்டு, தொண்டர் ஏவல் செய்ய,
நடம் எடுத்து ஒன்று ஆடிப் பாடி, நல்குவீர்; நீர் புல்கும் வண்ணம்
வடம் எடுத்த கொங்கை மாது ஓர்பாகம்ஆக, வார்கடல்வாய் 5
விடம் மிடற்றில் வைத்தது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே!

மாறுபட்ட வனத்துஅகத்தில் மருவ வந்த வன் களிற்றைப்
பீறி, இட்டம்ஆகப் போர்த்தீர்; பெய் பலிக்கு என்று இல்லம்தோறும்
கூறுபட்ட கொடியும் நீரும் குலாவி, ஏற்றை அடர ஏறி,
வேறுபட்டுத் திரிவது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே! 6

காதலாலே கருது தொண்டர் காரணத்தீர்ஆகி நின்றே,
பூதம் பாடப் புரிந்து, நட்டம் புவனி ஏத்த ஆட வல்லீர்;
நீதிஆக ஏழில்ஓசை நித்தர்ஆகி, சித்தர் சூழ,
வேதம் ஓதித் திரிவது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே! 7

குரவு, கொன்றை, மதியம், மத்தம், கொங்கை மாதர்கங்கை, நாகம்,
விரவுகின்ற சடை உடையீர்; விருத்தர் ஆனீர்; கருத்தில் உம்மைப்
பரவும் என்மேல் பழிகள் போக்கீர்; பாகம்ஆய மங்கை அஞ்சி
வெருவ, வேழம் செற்றது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே! 8

மாடம் காட்டும் கச்சி உள்ளீர், நிச்சயத்தால் நினைப்புஉளார்பால்;
பாடும் காட்டில் ஆடல்உள்ளீர்; பரவும் வண்ணம் எங்ஙனேதான்?
நாடும் காட்டில், அயனும் மாலும் நணுகா வண்ணம் அனலும் ஆய
வேடம் காட்டி, திரிவது என்னே?—வேலை சூழ் வெண்காடனீரே! 9

விரித்த வேதம் ஓத வல்லார் வேலை சூழ் வெண்காடு மேய
விருத்தன் ஆய வேதன்தன்னை, விரி பொழில் சூழ் நாவலூரன்—
அருத்தியால் ஆரூரன்தொண்டன், அடியன்—கேட்ட மாலைபத்தும்
தெரித்த வண்ணம் மொழிய வல்லார் செம்மையாளர், வான்உளாரே. 10

திரு எதிர்கொள்பாடி VII-7 இந்தளம்

மத்தயானை ஏறி, மன்னர் சூழ வருவீர்காள்!
செத்தபோதில் ஆரும் இல்லை; சிந்தையுள் வைம்மின்கள்!
வைத்த உள்ளம் மாற்ற வேண்டா; வம்மின், மனத்தீரே!
அத்தர் கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 1

தோற்றம் உண்டேல், மரணம் உண்டு; துயரம், மனைவாழ்க்கை;
மாற்றம் உண்டேல், வஞ்சம் உண்டு; நெஞ்ச-மனத்தீரே!
நீற்றர், ஏற்றர், நீலகண்டர், நிறைபுனல் நீள்சடைமேல்
ஏற்றர், கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 2

செடி கொள் ஆக்கை சென்றுசென்று தேய்ந்து ஒல்லை வீழாமுன்,
வடி கொள் கண்ணார் வஞ்சனையுள் பட்டு மயங்காதே,
கொடி கொள் ஏற்றர், வெள்ளைநீற்றர், கோவணஆடை உடை
அடிகள், கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 3

வாழ்வர்கண்டீர், நம்முள் ஐவர்; வஞ்சமனத்தீரே!
யாவராலும் இகழப்பட்டு, இங்கு அல்லலில் வீழாதே,
மூவராயும் இருவராயும் முதல்வன் அவனேஆம்
தேவர் கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 4

அரித்து நம்மேல் ஐவர் வந்து, இங்கு ஆறுஅலைப்பான்பொருட்டால்,
சிரித்த பல்வாய்வெண்தலை போய் ஊர்ப்புறம் சேராமுன்,
வரிக் கொள் துத்தி—வாள் அரக்கர் வஞ்சம் மதில்மூன்றும்
எரித்த—வில்லி எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 5

பொய்யர்கண்டீர், வாழ்க்கையாளர்; பொத்து அடைப்பான்பொருட்டால்
மையல் கொண்டீர்; எம்மோடு ஆடி நீரும், மனத்தீரே!
நைய வேண்டா; இம்மை ஏத்த, அம்மை நமக்கு அருளும்
ஐயர் கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 6

கூசம் நீக்கி, குற்றம் நீக்கி, செற்றம் மனம் நீக்கி,
வாசம் மல்கு குழலினார்கள் வஞ்சம் மனைவாழ்க்கை
ஆசை நீக்கி, அன்பு சேர்த்தி, என்பு அணிந்து ஏறு ஏறும்
ஈசர் கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 7

இன்பம் உண்டேல், துன்பம் உண்டு; ஏழை, மனைவாழ்க்கை;
முன்பு சொன்ன மோழைமையால், முட்டைமனத்தீரே!
அன்பர்அல்லால், அணி கொள் கொன்றைஅடிகள் அடி சேரார்;
என்பர் கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 8

தந்தையாரும் தவ்வையாரும் எள்-தனைச் சார்வு ஆகார்;
வந்து நம்மோடு உள் அளாவி வானநெறி காட்டும்—
சிந்தையீரே! நெஞ்சினீரே!—திகழ் மதியம் சூடும்
எந்தை கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 9

குருதி சோர ஆனையின்தோல் கொண்ட குழல்சடையன்;
மருது கீறி ஊடு போன மால், அயனும், அறியா,
சுருதியார்க்கும் சொல்ல ஒண்ணா, சோதி; எம் ஆதியான்;
கருது கோயில் எதிர்கொள்பாடிஎன்பது அடைவோமே. 10

முத்துநீற்றுப் பவளமேனிச் செஞ்சடையான் உறையும்
பத்தர் பந்தந்து எதிர்கொள்பாடிப் பரமனையே பணியச்
சித்தம்வைத்த தொண்டர்தொண்டன்—சடையன்அவன்சிறுவன்,
பத்தன், ஊரன்—பாடல் வல்லார் பாதம் பணிவாரே. 11

திரு ஆரூர் VII-8 இந்தளம்

இறைகளோடு இசைந்த இன்பம், இன்பத்தோடு இசைந்த வாழ்வு,
பறை கிழித்தனைய போர்வை பற்றி யான் நோக்கினேற்கு,—
திறை கொணர்ந்து ஈண்டி, தேவர், செம்பொனும் மணியும் தூவி,
அறைகழல் இறைஞ்சும் ஆரூர்அப்பனே!—அஞ்சினேனே. 1

ஊன்மிசை உதிரக்குப்பை; ஒரு பொருள் இலாத மாயம்;
மான் மறித்தனைய நோக்கின் மடந்தைமார் மதிக்கும் இந்த
மானுடப்பிறவிவாழ்வு வாழ்வது ஓர் வாழ்வு வேண்டேன்;
ஆன் நல்வெள்ஏற்ற ஆரூர்அப்பனே!—அஞ்சினேனே. 2

அறுபதும்பத்தும், எட்டும், ஆறினோடுஅஞ்சு-நான்கும்,
துறு பறித்தனைய நோக்கின் சொல்லிற்று ஒன்றுஆகச் சொல்லார்;
நறுமலர்ப்பூவும் நீரும் நாள்தொறும் வணங்குவார்க்கு(வ்)
அறிவினைக் கொடுக்கும் ஆரூர்அப்பனே! அஞ்சினேனே. 3

சொல்லிடில் எல்லை இல்லை, சுவை இலாப் பேதைவாழ்வு;
நல்லது ஓர் கூரை புக்கு நலம் மிக அறிந்தேன்அல்லேன்;
மல்லிகை மாடம் நீடு மருங்கொடு நெருங்கி எங்கும்
அல்லி வண்டு இயங்கும் ஆரூர் அப்பனே! அஞ்சினேனே. 4

நரம்பினோடு எலும்பு கட்டி நசையினோடு இசைவு ஒன்று இல்லாக்
குரம்பைவாய்க் குடிஇருந்து குலத்தினால் வாழமாட்டேன்;
விரும்பிய கமழும் புன்னை மாதவித்தொகுதி என்றும்
அரும்பு வாய் மலரும் ஆரூர் அப்பனே! அஞ்சினேனே. 5

மணம் என மகிழ்வர், முன்னே,—மக்கள் தாய் தந்தை சுற்றம்,—
பிணம் எனச் சுடுவர், பேர்த்தே; பிறவியை வேண்டேன், நாயேன்;
பணைஇடைச் சோலைதோறும் பைம்பொழில் வளாகத்து எங்கள்
அணைவினைக் கொடுக்கும் ஆரூர்அப்பனே! அஞ்சினேனே. 6

தாழ்வு எனும் தன்மை விட்டு, தனத்தையே மனத்தில் வைத்து,
வாழ்வதே கருதி, தொண்டர் மறுமைக்கு ஒன்று ஈயகில்லார்;
ஆழ் குழிப்பட்டபோது, அலக்கணில், ஒருவர்க்கு ஆவர்;
யாழ் முயன்று இருக்கும் ஆரூர் அப்பனே! அஞ்சினேனே. 7

உதிரம்நீர் இறைச்சிக்குப்பை எடுத்தது மலக்குகை(ம்)மேல்
வருவது ஓர் மாயக் கூரை வாழ்வது ஓர் வாழ்வு வேண்டேன்;
கரிய மால், அயனும், தேடிக் கழல் முடி காணமாட்டா
அரியனாய் நின்ற ஆரூர்அப்பனே! அஞ்சினேனே. 8

பொய்த்தன்மைத்துஆய மாயப்போர்வையை, மெய் என்று எண்ணும்
வித்தகத்துஆய வாழ்வு வேண்டி, நான் விரும்பகில்லேன்;
முத்தினைத் தொழுது, நாளும் முடிகளால் வணங்குவார்க்கு(வ்)
அத் தன்மைத்து ஆகும் ஆரூர்அப்பனே! அஞ்சினேனே. 9

தம் சொல் ஆர் அருள் பயக்கும்—தமியனேன், தடமுலைக்கண்
அம் சொலார் பயிலும் ஆரூர் அப்பனை, ஊரன் அஞ்சி—
செஞ்சொலால் நயந்த பாடல் சிந்தியா ஏத்த வல்லார்,
நஞ்சு உலாம் கண்டத்து எங்கள் நாதனை நண்ணுவாரே. 10

திரு அரிசிற்கரைப்புத்தூர் VII-9 இந்தளம்

மலைக்கு(ம்)மகள் அஞ்ச(ம்) மதகரியை
    உரித்தீர்; எரித்தீர், வரு முப்புரங்கள்;
சிலைக்கும் கொலைச் சே உகந்து ஏறு ஒழியீர்;
    சில்பலிக்கு இல்கள்தொறும் செலவு ஒழியீர்—
கலைக்கொம்பும் கரிமருப்பும்(ம்) இடறி,
    கலவம்மயில்பீலியும் கார்அகிலும்
அலைக்கும் புனல் சேர் அரிசில்-தென்கரை
    அழகு ஆர் திருப்புத்தூர் அழகனீரே! 1

அருமலரோன் சிரம் ஒன்று அறுத்தீர்;
    செறுத்தீர், அழல்சூலத்தில் அந்தகனை;
திருமகள்கோன் நெடுமால் பலநாள்
    சிறப்புஆகிய பூசனை செய் பொழுதில்,
ஒரு மலர் ஆயிரத்தில் குறைவா,
    நிறைவுஆக ஓர் கண்மலர் சூட்டலுமே,
பொரு விறல் ஆழி புரிந்து அளித்தீர்—
    பொழில் ஆர் திருப்புத்தூர்ப் புனிதனீரே! 2

தரிக்கும் தரை, நீர், தழல், காற்று, அந்தரம்,
சந்திரன், சவிதா, இயமானன், ஆனீர்;
சரிக்கும் பலிக்குத் தலை அங்கை ஏந்தி,
தையலார் பெய்ய, கொள்வது தக்கது அன்றால்—
முரிக்கும் தளிர்ச் சந்தனத்தொடு, வேயும்,
முழங்கும் திரைக்கைகளால் வாரி மோதி
அரிக்கும் புனல் சேர் அரிசில்-தென்கரை
அழகு ஆர் திருப்புத்தூர் அழகனீரே! 3

கொடி உடை மும்மதில் வெந்து அழிய, குன்றம்
வில்லா, நாணியின் கோல் ஒன்றி(ன்)னால்
இடிபட எய்து எரித்தீர், இமைக்கும் அளவில்;
உமக்கு ஆர் எதிர்? எம்பெருமான்!
கடி படு பூங்கணையான், கருப்புச்சிலைக்
காமனை, வேவக் கடைக்கண்ணி(ன்)னால்
பொடிபட நோக்கியது என்னைகொல்லோ?—
பொழில் ஆர் திருப்புத்தூர்ப் புனிதனீரே! 4

வணங்கித் தொழுவார்அவர், மால், பிரமன்,
மற்றும் வானவர், தானவர், மா முனிவர்;
உணங்கல்-தலையில் பலி கொண்டல் என்னே?
உலகங்கள்எல்லாம் உடையீர், உரையீர்!—
இணங்கிக் கயல் சேல் இளவாளை பாய,
இனக்கெண்டை துள்ள, கண்டிருந்த அன்னம்
அணங்கிக் குணம் கொள் அரிசில்-தென்கரை
அழகு ஆர் திருப்புத்தூர் அழகனீரே! 5

அகத்து அடிமை செயும் அந்தணன்தான்,
அரிசில்புனல் கொண்டு வந்து ஆட்டுகின்றான்,
மிகத் தளர்வு எய்தி, குடத்தையும் நும் முடி
மேல் விழுத்திட்டு, நடுங்குத(ல்)லும்,
வகுத்து அவனுக்கு, ''நித்தல் படியும்
வரும்'' என்று ஒரு காசினை நின்ற நன்றிப்
புகழ்த்துணை கைப் புகச்செய்து உகந்தீர்—
பொழில் ஆர் திருப்புத்தூர்ப் புனிதனீரே! 6

பழிக்கும் பெருந் தக்கன் எச்சம் அழிய,
பகலோன் முதலாப் பலதேவரையும்
தெழித்திட்டு, அவர் அங்கம் சிதைத்தருளும்
செய்கை என்னைகொலோ? மை கொள் செம் மிடற்றீர்!
விழிக்கும் தழைப்பீலியொடு ஏலம் உந்தி,
விளங்கும் மணிமுத்தொடு பொன் வரன்றி,
அழிக்கும் புனல் சேர் அரிசில்-தென்கரை
அழகு ஆர் திருப்புத்தூர் அழகனீரே! 7

பறைக்கண் நெடும் பேய்க்கணம் பாடல்செய்ய,
குறள்பாரிடங்கள் பறைதாம் முழக்க,
பிறைக் கொள் சடை தாழ, பெயர்ந்து, நட்டம்,
பெருங்காடு அரங்குஆக நின்று, ஆடல் என்னே?
கறைக் கொள் மணிகண்டமும், திண்தோள்களும்,
கரங்கள், சிரம்தன்னிலும், கச்சும் ஆகப்
பொறிக் கொள் அரவம் புனைந்தீர், பலவும்;—
பொழில் ஆர் திருப்புத்தூர்ப் புனிதனீரே! 8

மழைக் கண் மடவாளை ஓர்பாகம் வைத்தீர்;
வளர்புன்சடைக் கங்கையை வைத்து உகந்தீர்;
முழைக் கொள் அரவொடு என்பு அணிகலனா,
முழுநீறு மெய் பூசுதல் என்னைகொலோ?—
கழைக் கொள் கரும்பும், கதலிக்கனியும்,
கமுகின் பழுக்காயும், கவர்ந்துகொண்டு இட்டு,
அழைக்கும் புனல் சேர் அரிசில்-தென்கரை
அழகு ஆர் திருப்புத்தூர் அழகனீரே! 9

கடிக்கும்(ம்) அரவால் மலையால் அமரர்
கடலைக் கடைய, ''எழு காளகூடம்
ஒடிக்கும்(ம்), உலகங்களை'' என்று அதனை
உமக்கே அமுதுஆக உண்டீர்; உமிழீர்—
இடிக்கும் மழை வீழ்த்து இழித்திட்டு, அருவி
இருபாலும் ஓடி, இரைக்கும் திரைக்கை
அடிக்கும் புனல் சேர் அரிசில்-தென்கரை
அழகு ஆர் திருப்புத்தூர் அழகனீரே! 10

கார் ஊர் மழை பெய்து(ப்) பொழி அருவிக்
கழையோடு அகில் உந்திட்டு இருகரையும்
போர் ஊர் புனல் சேர் அரிசில்-தென்கரைப்
பொழில் ஆர் திருப்புத்தூர்ப் புனிதர்தம்மை,
ஆரூரன் அருந்தமிழ் ஐந்தினொடுஐந்து
அழகால் உரைப்பார்களும் கேட்பவரும்,
சீர் ஊர்தரு தேவர்கணங்களொடும்
இணங்கி, சிவலோகம்அது எய்துவரே. 11

திருக் கச்சி அனேகதங்காவதம் VII-10 இந்தளம்

தேன்நெய் புரிந்து உழல் செஞ்சடை
எம்பெருமானது இடம்; திகழ் ஐங்கணை அக்
கோனை எரித்து எரிஆடி இடம்;
குலவானது இடம்; குறையா மறை ஆம்
மானை இடத்தது ஓர் கையன் இடம்; மதம்
மாறுபடப் பொழியும் மலை போல்
யானை உரித்த பிரானது இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 1

கூறு நடைக் குழிகண் பகுவாயன
பேய் உகந்து ஆட, நின்று ஓரி இட,
வேறுபடக் குடகத்தி(ல்)லை அம்பலவாணன்
நின்று ஆடல் விரும்பும் இடம்;
ஏறுவிடைக் கொடி எம்பெருமான்,
இமையோர்பெருமான், உமையாள்கணவன்,
ஆறு சடைக்கு உடை அப்பன் இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 2

கொடிகள்இடைக் குயில் கூவும் இடம்; மயில்
ஆலும்(ம்) இடம்; மழுவாள் உடைய
கடி கொள் புனல் சடை கொண்ட நுதல்
கறைக்கண்டன் இடம்; பிறைத்துண்டம் முடிச்
செடி கொள் வினைப்பகை தீரும் இடம்; திரு
ஆரும் இடம்; திருமார்பு-அகலத்து
அடிகள் இடம்(ம்); அழல்வண்ணன் இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 3

கொங்கு நுழைத்தன வண்டு அறை கொன்றையும்
கங்கையும் திங்களும் சூடு சடை,
மங்குல் நுழை மலை மங்கையை—நங்கையை—
பங்கினில்-தங்க உவந்து அருள்செய்,
சங்குகுழைச் செவி கொண்டு, அருவித்திரள்
பாய, (அ)வியாத் தழல் போல் உடை, தம்
அம் கை, மழுத் திகழ் கையன் இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 4

பைத்த படத்தலை ஆடுஅரவம்
பயில்கின்ற இடம்; பயிலப் புகுவார்
சித்தம் ஒரு நெறி வைத்த இடம்;
திகழ்கின்ற இடம்; திருவான் அடிக்கே
வைத்த மனத்தவர், பத்தர், மனம்கொள
வைத்த இடம்; மழுவாள் உடைய
அத்தன் இடம்(ம்); அழல்வண்ணன் இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 5

தண்டம் உடைத் தருமன்தமர் என்தமரைச்
செயும் வன் துயர் தீர்க்கும் இடம்;
பிண்டம் உடைப் பிறவித்தலை நின்று
நினைப்பவர் ஆக்கையை நீக்கும் இடம்;
கண்டம் உடைக் கருநஞ்சு கரந்த
பிரானது இடம்; கடல்ஏழு கடந்து
அண்டம் உடைப் பெருமானது இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 6

கட்டு மயக்கம் அறுத்தவர் கைதொழுது
ஏத்தும் இடம்; கதிரோன் ஒளியால்
விட்ட இடம்; விடைஊர்தி இடம்;
குயில்பேடை தன் சேவலொடு ஆடும் இடம்;
மட்டு மயங்கி அவிழ்ந்த மலர் ஒரு
மாதவியோடு மணம் புணரும்
அட்டபுயங்கப்பிரானது இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 7

புல்லி இடம்; ‘‘தொழுது உய்தும்’’ என்னாதவர்தம்
புரம்மூன்றும் பொடிப்படுத்த
வில்லி இடம்; விரவாது உயிர் உண்ணும்
வெங்காலனைக் கால்கொடு வீந்து அவியக்
கொல்லி இடம்—குளிர் மாதவி, மவ்வல்,
குரா, வகுளம், குருக்கத்தி, புன்னை,
அல்லிஇடைப் பெடைவண்டு உறங்கும் கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 8

சங்கையவர் புணர்தற்கு அரியான், தளவு
ஏல் நகையாள் தவிரா மிகு சீர்
மங்கைஅவள் மகிழச் சுடுகாட்டுஇடை
நட்டம் நின்று ஆடிய சங்கரன், எம்
அங்கையில் நல் அனல் ஏந்துமவன், கனல்
சேர் ஒளி அன்னது ஓர் பேரகலத்து
அங்கையவன்(ன்) உறைகின்ற இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 9

வீடு பெறப் பலஊழிகள் நின்று
நினைக்கும் இடம்; வினை தீரும் இடம்;
பீடு பெறப் பெரியோர் திடம் கொண்டு
மேவினர்தங்களைக் காக்கும் இடம்;
பாடும்இடத்து அடியான், புகழ் ஊரன்,
உரைத்த இம் மாலைகள்பத்தும் வல்லார்
கூடும் இடம்; சிவலோகன் இடம்—கலிக்
கச்சி அனேகதங்காவதமே. 10

திருப் பூவணம் VII-11 இந்தளம்

திரு உடையார், திருமால் அயனாலும்
உரு உடையார், உமையாளை ஓர்பாகம்
பரிவு உடையார், அடைவார் வினை தீர்க்கும்
புரிவு உடையார்,—உறை பூவணம் ஈதோ! 1

எண்ணி இருந்தும், கிடந்தும், நடந்தும்,
அண்ணல் எனா நினைவார் வினை தீர்ப்பார்;
பண் இசை ஆர் மொழியார்பலர் பாடப்
புண்ணியனார்;—உறை பூவணம் ஈதோ! 2

தெள்ளிய பேய்பல பூதம்அவற்றொடு
நள்இருள் நட்டம்அதுஆடல் நவின்றோர்,
புள்ளுவர்ஆகுமவர்க்கு அவர் தாமும்
புள்ளுவனார்,—உறை பூவணம் ஈதோ! 3

நிலன் உடை மான்மறி கையது; தெய்வக்
கனல் உடை மா மழு ஏந்தி, ஓர் கையில்
அனல் உடையார்; அழகு ஆர்தரு சென்னிப்
புனல் உடையார்;—உறை பூவணம் ஈதோ! 4

நடை உடை நல் எருது ஏறுவர்; நல்லார்
கடைகடைதோறு, ‘‘இடுமின், பலி!’’ என்பார்;
துடிஇடை நல் மடவாளொடு மார்பில்
பொடி அணிவார்;—உறை பூவணம் ஈதோ! 5

மின்அனையாள் திருமேனி விளங்க ஓர்
தன் அமர் பாகம்அது ஆகிய சங்கரன்,
முன் நினையார் புரம்மூன்று எரியூட்டிய
பொன் அனையான்,—உறை பூவணம் ஈதோ! 6

மிக்கு இறை ஏயவன் துன்மதியாய்விட,
நக்கு இறையே விரலால் இற ஊன்றி;
நெக்கு இறையே நினைவார் தனி நெஞ்சம்
புக்கு உறைவான்;—உறை பூவணம் ஈதோ! 7

சீரின் மிகப் பொலியும் திருப்பூவணம்
ஆர இருப்புஇடமா உறைவான்தனை
ஊரன் உரைத்த சொல்மாலைகள் பத்துஇவை
பாரில் உரைப்பவர் பாவம் அறுப்பரே. 8

திரு நாட்டுத்தொகை VII-12 இந்தளம்

வீழக் காலனைக் கால்கொடு பாய்ந்த விலங்கலான்,
கூழைஏறு உகந்தான், இடம்கொண்டதும்—கோவலூர்,
தாழையூர், தகட்டூர், தக்களூர், தருமபுரம், 1
வாழை காய்க்கும் வளர் மருகல்நாட்டு மருகலே.

அண்டத்து அண்டத்தின் அப் புறத்து ஆடும் அமுதன் ஊர்—
தண்டந்தோட்டம், தண்டங்குறை, தண்டலை, ஆலங்காடு,
கண்டல் முண்டல்கள் சூழ் கழிப்பாலை, கடற்கரை, 2
கொண்டல்நாட்டுக் கொண்டல், குறுக்கைநாட்டுக் குறுக்கையே.

மூலனூர்,—முதல்ஆய முக்கண்ணன்—முதல்வனூர்,
நாலனூர்,—நரைஏறு உகந்து ஏறிய நம்பன், ஊர்
கோலம் நீற்றன்—குற்றாலம், குரங்கணில்முட்டமும், 3
வேலனூர், வெற்றியூர், வெண்ணிக்கூற்றத்து வெண்ணியே.

தேங்கூரும், திருச் சிற்றம்பலமும், சிராப்பள்ளி,—
பாங்கு ஊர், எங்கள் பிரான் உறையும்—கடம்பந்துறை,
பூங்கூரும்,—பரமன் பரஞ்சோதி பயிலும் ஊர்— 4
நாங்கூர்நாட்டு நாங்கூர், நறையூர்நாட்டு நறையூரே.

குழலை வென்ற மொழி மடவாளை ஓர்கூறன் ஆம்,
மழலை ஏற்று, மணாளன் இடம்—தடமால்வரைக்
கிழவன்—கீழைவழி. பழையாறு, கிழையமும், 5
மிழலைநாட்டு மிழலை, வெண்ணிநாட்டு மிழலையே.

தென்னூர், கைம்மைத் திருச் சுழியல்,-திருக் கானப்பேர்,—
பன் ஊர் புக்கு உறையும் பரமர்க்கு இடம், பாய் நலம்
என் ஊர் எங்கள் பிரான் உறையும்—திருத் தேவனூர், 6
பொன்னூர்நாட்டுப் பொன்னூர், புரிசைநாட்டுப் புரிசையே.

ஈழநாட்டு மாதோட்டம், தென்நாட்டு இராமேச்சுரம்,
சோழநாட்டுத் துருத்தி, நெய்த்தானம், திருமலை,
ஆழி ஊர் அளநாட்டுக்கு எலலாம் அணி ஆகிய 7
கீழையில்,—அரனூர்க்கு இடம்—கிள்ளிகுடிஅதே.

நாளும் நன்னிலம், தென்பனையூர், வடகஞ்சனூர்,
நீளநீள்சடையான் நெல்லிக்காவு, நெடுங்களம்,
காளகண்டன் உறையும் கடைமுடி, கண்டியூர், 8
வேளார்நாட்டு வேளூர், விளத்தூர்நாட்டு விளத்தூரே.

தழலும் மேனியன், தையல் ஓர்பாகம் அமர்ந்தவன்,
தொழலும் தொல்வினை தீர்க்கின்ற சோதி—சோற்றுத்துறை—
கழலும் கோவை உடையவன், காதலிக்கும்(ம்) இடம்— 9
பழனம், பாம்பணி, பாம்புரம், தஞ்சை, தஞ்சாக்கையே.

மை கொள் கண்டன், எண்தோளன், முக்கண்ணன்,—வலஞ்சுழி—
பை கொள் வாள்அரவு ஆட்டித் திரியும் பரமன், ஊர்—
செய்யில் வாளைகள் பாய்ந்து உகளும் திருப் புன்கூர், நன்று 10
ஐயன் மேய பொழில் அணி ஆவடுதுறைஅதே.

பேணி நாடுஅதனில்-திரியும் பெருமான்தனை,
ஆணையா அடியார்கள் தொழப்படும் ஆதியை,
நாணி, ஊரன்—வனப்பகைஅப்பன், வன்தொண்டன்—சொல்
பாணியால் இவை ஏத்துவார் சேர் பரலோகமே. 11

திருத் துறையூர் VII-13 தக்கராகம்

மலை ஆர் அருவித்திரள் மா மணி உந்தி,
குலை ஆரக் கொணர்ந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
கலை ஆர் அல்குல் கன்னியர் ஆடும், துறையூர்த்
தலைவா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 1

மத்தம்மதயானையின் வெண்மருப்பு உந்தி,
முத்தம் கொணர்ந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
பத்தர் பயின்று ஏத்திப் பரவும், துறையூர்
அத்தா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 2

கந்தம் கமழ் கார்அகில் சந்தனம் உந்திச்
செந்தண்புனல் வந்து இழி பெண்ணை வடபால்,
மந்திபல மா நடம்ஆடும், துறையூர்
எந்தாய்! உனை வேண்டிக் கொள்வேன், தவநெறியே. 3

அரும்பு ஆர்ந்தன மல்லிகை சண்பகம் சாடி,
சுரும்பு ஆரக் கொணர்ந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
கரும்பு ஆர் மொழிக் கன்னியர் ஆடும், துறையூர்
விரும்பா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 4

பாடு ஆர்ந்தன மாவும் பலாக்களும் சாடி,
நாடு ஆர வந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
மாடு ஆர்ந்தன மாளிகை சூழும், துறையூர்
வேடா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 5

மட்டு ஆர் மலர்க்கொன்றையும் வன்னியும் சாடி,
மொட்டு ஆரக் கொணர்ந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
கொட்டு ஆட்டொடு பாட்டுஒலி ஓவா, துறையூர்ச்
சிட்டா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 6

மாது ஆர் மயில்பீலியும் வெண்நுரை உந்தி,
தாது ஆரக் கொணர்ந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
போது ஆர்ந்தன பொய்கைகள் சூழும், துறையூர்
நாதா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 7

கொய்யா மலர்க்கோங்கொடு வேங்கையும் சாடி,
செய் ஆரக் கொணர்ந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
மை ஆர் தடங்கண்ணியர் ஆடும், துறையூர்
ஐயா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 8

விண் ஆர்ந்தன மேகங்கள் நின்று பொழிய,
மண் ஆரக் கொணர்ந்து எற்றி, ஓர் பெண்ணை வடபால்,
பண் ஆர் மொழிப் பாவையர் ஆடும், துறையூர்
அண்ணா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 9

மா வாய் பிளந்தானும், மலர்மிசையானும்,
ஆவா! அவர் தேடித் திரிந்து அலமந்தார்;
பூ ஆர்ந்தன பொய்கைகள் சூழும் துறையூர்த்
தேவா! உனை வேண்டிக்கொள்வேன், தவநெறியே. 10

செய் ஆர் கமலம் மலர் நாவலூர் மன்னன்,—
கையால்-தொழுது ஏத்தப்படும் துறையூர்மேல்—
பொய்யாத் தமிழ் ஊரன், உரைத்தன வல்லார்,
மெய்யே பெறுவார்கள், தவநெறிதானே. 11

திருப் பாச்சிலாச்சிராமம் VII-14 தக்கராகம்

வைத்தனன் தனக்கே, தலையும் என் நாவும்
    நெஞ்சமும்; வஞ்சம் ஒன்று இன்றி
உய்த்தனன் தனக்கே, திருவடிக்கு அடிமை;
    உரைத்தக்கால், உவமனே ஒக்கும்;
பைத்த பாம்பு ஆர்த்து ஓர் கோவணத்தோடு
    பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்
பித்தரே ஒத்து ஓர் நச்சிலர்ஆகில்,
    இவர்அலாது இல்லையோ, பிரானார்? 1

‘‘அன்னையே!’’ என்னேன்; ‘‘அத்தனே!’’ என்னேன்;
    ‘‘அடிகளே அமையும்’’ என்று இருந்தேன்;
என்னையும், ‘‘ஒருவன் உளன்’’ என்று கருதி,
    இறைஇறை திருஅருள் காட்டார்;
அன்னம் ஆம் பொய்கை சூழ்தரு
    பாச்சிலாச்சிராமத்து உறை அடிகள்
பின்னையே அடியார்க்கு அருள்செய்வதுஆகில்,
    இவர்அலாது இல்லையோ, பிரானார்? 2

உற்றபோதுஅல்லால் உறுதியை உணரேன்;
    ‘‘உள்ளமே அமையும்’’ என்று இருந்தேன்;
செற்றவர் புரம்மூன்று எரி எழச் செற்ற,
    செஞ்சடை, நஞ்சு அடை கண்டர்,
அற்றவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிராமத்து
    அடிகள்தாம், யாது சொன்னாலும்,
பெற்றபோது உகந்து, பெறுவிடில் இகழில்,
    இவர்அலாது இல்லையோ, பிரானார்? 3

நாச் சில பேசி, ‘‘நமர் பிறர்’’ என்று,
    ‘‘நன்று தீது’’ என்கிலர்; மற்று ஓர்
பூச்சு இலை; நெஞ்சே! பொன் விளை கழனிப்
    புள்இனம் சிலம்பும்ஆம் பொய்கைப்
பாச்சிலாச்சிராமத்து அடிகள் என்று இவர்தாம்
    பலரையும் ஆட்கொள்வர்; பரிந்து ஓர்
பேச்சு இலர்; ஒன்றைத் தரஇலர்ஆகில்,
    இவர்அலாது இல்லையோ, பிரானார்? 4

வரிந்த வெஞ்சிலையால் அந்தரத்து எயிலை
    வாட்டிய வகையினரேனும்,
‘‘புரிந்த அந் நாளே புகழ்தக்க; அடிமை
    போகும் நாள் வீழும் நாள்’’ ஆகிப்
பரிந்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிராமத்து
    அடிகள்தாம், யாது சொன்னாலும்,
பிரிந்து இறைப்போதில் பேர்வதேஆகில்,
    இவர்அலாது இல்லையோ, பிரானார்? 5

செடித் தவம் செய்வார் சென்றுழிச் செல்லேன்;
''தீவினை செற்றிடும்'' என்று
அடித்தவம்அல்லால் ஆரையும் அறியேன்;
ஆவதும் அறிவர், எம் அடிகள்;
படைத்தலைச் சூலம் பற்றிய கையர்,
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்,
பிடித்த வெண்நீறே பூசுவதுஆனால்,
இவர்அலாது இல்லையோ, பிரானார்? 6

கையது கபாலம்; காடு உறை வாழ்க்கை;
கட்டங்கம் ஏந்திய கையர்;
மெய்யது புரிநூல்; மிளிரும் புன்சடைமேல்
வெண்திங்கள் சூடிய விகிர்தர்;
பைஅரவுஅல்குல் பாவையர் ஆடும்
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்;
மெய்யரே ஒத்து ஓர் பொய் செய்வதுஆகில்,
இவர்அலாது இல்லையோ, பிரானார்? 7

நிணம் படும் உடலை நிலைமை என்று ஓரேன்;
நெஞ்சமே தஞ்சம் என்று இருந்தேன்;
கணம் படிந்து ஏத்தி, கங்குலும் பகலும்
கருத்தினால் கைதொழுது எழுவேன்;
பணம் படும் அரவம் பற்றிய கையர்,
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்,
பிணம் படு காட்டில் ஆடுவதுஆகில்,
இவர்அலாது இல்லையோ, பிரானார்? 8

குழைத்து வந்து ஓடிக் கூடுதி,—நெஞ்சே!—
குற்றேவல் நாள்தொறும் செய்வான்;
இழைத்த நாள் கடவார்; அன்பிலரேனும்,
''எம்பெருமான்!'' என்று எப்போதும்
அழைத்தவர்க்கு அருள்செய் பாச்சிலாச்சிராமத்து
அடிகள்தாம், யாது சொன்னாலும்,
பிழைத்தது பொறுத்து ஒன்று ஈகிலர்ஆகில்,
இவர்அலாது இல்லையோ, பிரானார்? 9

துணிப்படும் உடையும் சுண்ணவெண்நீறும்
தோற்றமும் சிந்தித்துக் காணில்,
மணிப் படு கண்டனை வாயினால் கூறி,
மனத்தினால்-தொண்டனேன் நினைவேன்;
பணிப் படும் அரவம் பற்றிய கையர்,
பாச்சிலாச்சிராமத்து எம் பரமர்,
பிணிப்பட ஆண்டு, பணிப்புஇலர்ஆகில், 10
இவர்அலாது இல்லையோ,பிரானார்?

ஒருமையே அல்லேன், எழுமையும் அடியேன்;
அடியவர்க்கு அடியனும் ஆனேன்;
உரிமையால் உரியேன்; உள்ளமும் உருகும்;
ஒண்மலர்ச்சேவடி காட்டாய்;
அருமை ஆம் புகழார்க்கு அருள்செயும்
பாச்சிலாச்சிராமத்து எம் அடிகள்,
பெருமைகள் பேசிச் சிறுமைகள் செய்யில், 11
இவர்அலாது இல்லையோ, பிரானார்?

ஏசின அல்ல; இகழ்ந்தன அல்ல;
''எம்பெருமான்!'' என்று எப்போதும்
பாயின புகழான், பாச்சிலாச்சிராமத்து
அடிகளை அடி தொழப் பல்-நாள்
வாயினால் கூறி மனத்தினால் நினைவான்,
வள வயல் நாவல் ஆரூரன்,
பேசின பேச்சைப் பொறுக்கிலர்ஆகில்,
இவர்அலாது இல்லையோ, பிரானார்? 12

திரு நாட்டியத்தான்குடி VII-15 தக்கராகம்

பூண் நாண்ஆவது ஓர் அரவம் கண்டு அஞ்சேன்;
புறங்காட்டு ஆடல் கண்டு இகழேன்;
பேணீர்ஆகிலும் பெருமையை உணர்வேன்;
பிறவேன்ஆகிலும் மறவேன்;
காணீர்ஆகிலும் காண்பன், என் மனத்தால்;
கருதீர்ஆகிலும், கருதி,
நானேல், உம் அடி பாடுதல் ஒழியேன்—
நாட்டியத்தான்குடி நம்பீ! 1

கச்சு ஏர் பாம்பு ஒன்று கட்டி நின்று, இடுகாட்டு
எல்லியில் ஆடலைக் கவர்வன்;
துச்சேன்என் மனம் புகுந்திருக்கின்றமை
சொல்லாய், திப்பிய மூர்த்தீ!
வைச்சே இடர்களைக் களைந்திட வல்ல
மணியே! மாணிக்கவண்ணா!
நச்சேன், ஒருவரை, நான் உம்மை அல்லால்;—
நாட்டியத்தான்குடி நம்பீ! 2

அஞ்சாதே உமக்கு ஆட்செய வல்லேன்;
யாதினுக்கு ஆசைப்படுகேன்?—
பஞ்சு ஏர் மெல்அடி மாமலைமங்கை
பங்கா! எம் பரமேட்டீ!
மஞ்சு ஏர் வெண்மதி செஞ்சடை வைத்த
மணியே! மாணிக்கவண்ணா!
நஞ்சு ஏர் கண்டா! வெண்தலைஏந்தீ!
நாட்டியத்தான்குடி நம்பீ! 3

கல்லேன்அல்லேன், நின் புகழ்; அடிமை
கல்லாதே பல கற்றேன்;
நில்லேன்அல்லேன், நின்வழி; நின்றார்-
தம்முடை நீதியை நினைய
வல்லேன்அல்லேன்; பொன்அடி பரவ-
மாட்டேன்; மறுமையை நினைய,—
நல்லேன்அல்லேன்,—நான் உமக்கு அல்லால்;—
நாட்டியத்தான்குடி நம்பீ! 4

மட்டு ஆர் பூங்குழல் மலைமகள் கணவனைக்
கருதார்தமைக் கருதேன்;
ஒட்டீர்ஆகிலும் ஒட்டுவன், அடியேன்;
உம் அடி அடைந்தவர்க்கு அடிமைப்
பட்டேன்ஆகிலும் பாடுதல் ஒழியேன்;
பாடியும் நாடியும் அறிய
நட்டேன் ஆதலால் நான் மறக்கில்லேன்—
நாட்டியத்தான்குடி நம்பீ! 5

படப் பால்-தன்மையின், நான் பட்டதுஎல்லாம்
''படுத்தாய்'' என்று அல்லல் பறையேன்;
குடப் பாச்சில்(ல்) உறை கோ! குளிர் வானே!
கோனே! கூற்று உதைத்தானே!
மடப் பால்-தயிரொடு நெய் மகிழ்ந்து ஆடும்
மறைஓதீ! மங்கைபங்கா!
நடப்பீர்ஆகிலும் நடப்பன், உம் அடிக்கே;—
நாட்டியத்தான்குடி நம்பீ! 6

ஐவாய்அரவினை மதிஉடன் வைத்த
அழகா! அமரர்கள்தலைவா!
எய்வான் வைத்தது ஓர் இலக்கினை அணைதர
நினைந்தேன், உள்ளம் உள்ளளவும்;
உய்வான் எண்ணி வந்து உம் அடி அடைந்தேன்;
உகவீர்ஆகிலும் உகப்பன்;
நைவான் அன்று, உமக்கு ஆட்பட்டது, அடியேன்;—
நாட்டியத்தான்குடி நம்பீ! 7

கலியேன், மானுட வாழ்க்கை ஒன்றுஆக;
கருதிடின் கண்கள் நீர் பில்கும்;
பலி தேர்ந்து உண்பது ஓர் பண்பு கண்டு இகழேன்;
பசுவே ஏறிலும் பழியேன்;
வலியேஆகிலும் வணங்குதல் ஒழியேன்;
மாட்டேன்; மறுமையை நினையேன்;
நலியேன் ஒருவரை, நான் உமை அல்லால்;—
நாட்டியத்தான்குடி நம்பீ! 8

குண்டாடிச் சமண்சாக்கியப்பேய்கள்
கொண்டார்ஆகிலும், கொள்ளக்
கண்டாலும், கருதேன்; எருது ஏறும்
கண்ணா! நின்அலது அறியேன்;
தொண்டாடித் தொழுவார் தொழக் கண்டு
தொழுதேன், என் வினை போக;—
நண்டு ஆடும் வயல்-தண்டலை வேலி
நாட்டியத்தான்குடி நம்பீ! 9

கூடா மன்னரைக் கூட்டத்து வென்ற
கொடிறன், கோட்புலி, சென்னி
நாடு ஆர் தொல்புகழ் நாட்டியத்தான்குடி
நம்பியை நாளும் மறவா,
சேடு ஆர் பூங்குழல் சிங்கடி அப்பன்—
திரு ஆரூரன்—உரைத்த,
பாடீர்ஆகிலும், பாடுமின், தொண்டீர்! 10
பாட, நும் பாவம் பற்றுஅறுமே.

திருக் கலயநல்லூர் VII-16 தக்கராகம்

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்ட தவம் கண்டு,
குறிப்பினொடும் சென்று, அவள்தன் குணத்தினை நன்கு அறிந்து,
விரும்பு வரம் கொடுத்து, அவளை வேட்டு, அருளிச்செய்த
விண்ணவர்கோன்; கண்நுதலோன்; மேவிய ஊர் வினவில்—
அரும்பு அருகே சுரும்பு அருவ, அறுபதம் பண் பாட,
அணி மயில்கள் நடம்ஆடும் அணி பொழில் சூழ் அயலில்
கரும்பு அருகே கருங்குவளை கண்வளரும், கழனிக் 1
கமலங்கள் முகம்மலரும், கலயநல்லூர்காணே.

செரு மேவு சலந்தரனைப் பிளந்த சுடர் ஆழி
செங்கண்மலர் பங்கயமாச் சிறந்தானுக்கு அருளி,
இருள் மேவும் அந்தகன்மேல்-திரிசூலம் பாய்ச்சி,
இந்திரனைத் தோள் முரித்த இறையவன் ஊர் வினவில்—
பெரு மேதை மறைஒலியும், பேரி-முழவுஒலியும்,
பிள்ளைஇனம் துள்ளி விளையாட்டுஒலியும், பெருக;
கருமேதி புனல் மண்ட; கயல் மண்ட, கமலம்;
களி வண்டின்கணம் இரியும் கலயநல்லூர்காணே. 2

இண்டைமலர் கொண்டு, மணல்இலிங்கம்அது இயற்றி,
இனத்து ஆவின் பால்ஆட்ட, இடறிய தாதையைத் தாள்
துண்டம் இடு சண்டி அடி அண்டர் தொழுது ஏத்தத்
தொடர்ந்து அவனைப் பணிகொண்ட விடங்கனது ஊர் வினவில்—
மண்டபமும் கோபுரமும் மாளிகை சூளிகையும்,
மறைஒலியும் விழவுஒலியும் மறுகு நிறைவுஎய்தி,
கண்டவர்கள் மனம் கவரும், புண்டரிகப் பொய்கைக்
காரிகையார் குடைந்து ஆடும், கலயநல்லூர்காணே. 3

மலைமடந்தை விளையாடி வளை ஆடு கரத்தால்
மகிழ்ந்து அவள் கண் புதைத்தலுமே, வல் இருள்ஆய் எல்லா-
உலகுஉடன்தான் மூட, இருள் ஓடும் வகை, நெற்றி
ஒற்றைக்கண் படைத்து உகந்த உத்தமன் ஊர் வினவில்—
அலை அடைந்த புனல் பெருகி, யானைமருப்பு இடறி
அகிலொடு சந்து உந்தி, வரும் அரிசிலின் தென்கரைமேல்,
கலை அடைந்து கலி கடி அந்தணர் ஓமப் புகையால்
கணமுகில் போன்ற(அ)ணி கிளரும், கலயநல்லூர்காணே. 4

நிற்பானும், கமலத்தில் இருப்பானும், முதலா
நிறைந்து அமரர் குறைந்து இரப்ப, நினைந்தருளி, அவர்க்குஆய்
வெற்பு ஆர் வில், அரவுநாண், எரிஅம்பால், விரவார்
புரம்மூன்றும் எரிவித்த விகிர்தன் ஊர் வினவில்—
சொல்பால பொருள்பால சுருதிஒருநான்கும்
தோத்திரமும் பல சொல்லித் துதித்து, இறைதன் திறத்தே
கற்பாரும் கேட்பாரும்ஆய், எங்கும் நன்கு ஆர்
கலை பயில் அந்தணர் வாழும் கலயநல்லூர்காணே. 5

பெற்றிமை ஒன்று அறியாத தக்கனது வேள்விப்
பெருந் தேவர் சிரம் தோள் பல் கரம் கண் பீடு அழியச்
செற்று, மதிக்கலை சிதையத் திருவிரலால்-தேய்வித்து,
அருள் பெருகு சிவபெருமான் சேர்தரும் ஊர் வினவில்—
தெற்று கொடிமுல்லையொடு மல்லிகை செண்பகமும்
திரை பொருது வருபுனல் சேர் அரிசிலின் தென்கரைமேல்,
கற்றினம் நல் கரும்பின் முளை கறிகற்க, கறவை
கமழ் கழுநீர் கவர் கழனி, கலயநல்லூர்காணே. 6

இலங்கையர்கோன் சிரம்பத்தோடு இருபதுதிண்தோளும்
இற்று அலற ஒற்றைவிரல் வெற்புஅதன்மேல் ஊன்றி,
நிலம் கிளர் நீர் நெருப்பொடு காற்று ஆகாசம் ஆகி,
நிற்பனவும் நடப்பன ஆம் நின்மலன் ஊர் வினவில்—
பலங்கள்பல திரை உந்தி, பரு மணி பொன் கொழித்து,
பாதிரி சந்து அகில்நெடு கேதகையும் பருங்கி,
கலங்கு புனல் அலம்பி வரும் அரிசிலின் தென்கரைமேல்,
கயல் உகளும் வயல் புடை சூழ், கலயநல்லூர்காணே. 7

மால் அயனும் காண்பு அரிய மால் எரிஆய் நிமிர்ந்தோன்,
வன்னி மதி சென்னிமிசை வைத்தவன், மொய்த்து எழுந்த
வேலைவிடம் உண்ட மணிகண்டன், விடை ஊரும்
விமலன், உமையவளோடு மேவிய ஊர் வினவில்—
சோலை மலி குயில் கூவ, கோல மயில் ஆல,
சுரும்பொடு வண்டு இசை முரல, பசுங்கிளி சொல்-துதிக்க,
காலையிலும் மாலையிலும் கடவுள்அடி பணிந்து
கசிந்த மனத்தவர் பயிலும் கலயநல்லூர்காணே. 8

பொரும் பலம்அது உடை அசுரன்தாரகனைப் பொருது
பொன்றுவித்த பொருளினை முன் படைத்து உகந்த புனிதன்,
கரும்புவிலின் மலர்வாளிக் காமன் உடல் வேவக்
கனல்விழித்த கண்ணுதலோன், கருதும் ஊர் வினவில்—
இரும் புனல் வெண்திரை பெருகி, ஏலம், இலவங்கம்,
இருகரையும் பொருது அலைக்கும் அரிசிலின் தென்கரைமேல்,
கரும் பு(ன்)னை வெண்முத்து அரும்பிப் பொன்மலர்ந்து பவளக்
கவின் காட்டும் கடிபொழில் சூழ், கலயநல்லூர்காணே. 9

தண்கமலப்பொய்கை புடை சூழ்ந்து அழகு ஆர் தலத்தில்-
தடம் கொள் பெருங்கோயில்தனில்,-தக்க வகையாலே
வண்கமலத்து அயன் முன்நாள் வழிபாடு செய்ய,
மகிழ்ந்துஅருளி இருந்த பரன் மருவிய ஊர் வினவில்—
வெண்கவரி கரும்பீலி வேங்கையொடு கோங்கின்
விரைமலரும் விரவு புனல் அரிசிலின் தென்கரைமேல்,
கண் கமுகின் பூம்பாளை மது வாசம் கலந்த
கமழ் தென்றல் புகுந்து உலவு, கலயநல்லூர்காணே. 10

தண்புனலும் வெண்மதியும் தாங்கிய செஞ்சடையன்,
தாமரையோன்தலை கலனாக் காமரம் முன் பாடி
உண் பலி கொண்டு உழல் பரமன், உறையும் ஊர், நிறை நீர்
ஒழுகு புனல் அரிசிலின் தென்கலயநல்லூர்அதனை,
நண்பு உடைய—நன் சடையன் இசைஞானி சிறுவன்,
நாவலர்கோன்,—ஆரூரன் நாவின் நயந்து உரைசெய்
பண் பயிலும் பத்தும்இவை பத்திசெய்து நித்தம்
பாட வல்லார், அல்லலொடு பாவம் இலர், தாமே. 11

திரு நாவலூர் VII-17 நட்டராகம்

கோவலன் நான்முகன் வானவர்கோனும் குற்றேவல் செய்ய,
மேவலர் முப்புரம் தீ எழுவித்தவர், ஓர் அம்பினால்;
ஏவலனார்; வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்ட
நாவலனார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 1

தன்மையினால் அடியேனைத் தாம் ஆட்கொண்ட நாள், சபைமுன்
வன்மைகள் பேசிட, வன்தொண்டன் என்பது ஓர் வாழ்வு தந்தார்;
புன்மைகள் பேசவும், பொன்னைத் தந்து என்னைப் போகம் புணர்த்த
நன்மையினார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 2

வேகம்கொண்டு ஓடிய வெள்விடை ஏறி ஓர் மெல்லியலை
ஆகம் கொண்டார்; வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்டார்;
போகம் கொண்டார், கடல்கோடியில் மோடியை; பூண்பதுஆக
நாகம் கொண்டார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 3

அஞ்சும் கொண்டு ஆடுவர், ஆவினில்; சேவினை ஆட்சி கொண்டார்;
தஞ்சம் கொண்டார், அடிச்சண்டியை, தாம் என வைத்து உகந்தார்;
நெஞ்சம் கொண்டார்; வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்டு
நஞ்சம் கொண்டார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 4

உம்பரார்கோனைத் திண்தோள் முரித்தார்; உரித்தார், களிற்றை;
செம்பொன் ஆர் தீவண்ணர்; தூ வண்ண நீற்றர்; ஓர் ஆவணத்தால்,
எம்பிரானார், வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்ட
நம்பிரானார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 5

கோட்டம்கொண்டார், குடமூக்கிலும் கோவலும் கோத்திட்டையும்;
வேட்டம் கொண்டார்; வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்டார்;
ஆட்டம் கொண்டார், தில்லைச் சிற்றம்பலத்தே; அருக்கனை முன்
நாட்டம் கொண்டார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 6

தாய்அவளாய், தந்தைஆகி, சாதல் பிறத்தல் இன்றி,
போய் அகலாமைத் தன் பொன்அடிக்கு என்னைப் பொருந்த வைத்த
வேயவனார்; வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்ட
நாயகனார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 7

வாய்ஆடி, மாமறை ஓதி ஓர் வேதியன்ஆகி வந்து;
தீஆடியார்; சினக் கேழலின் பின் சென்று ஓர் வேடுவனாய்,
வேய்ஆடியார்; வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்ட
நாயாடியார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 8

படம் ஆடு பாம்பு அணையானுக்கும், பாவைநல்லாள்தனக்கும்,
வடம் ஆடு மால்விடைஏற்றுக்கும், பாகனாய் வந்து ஒரு நாள்
இடம் ஆடியார்; வெண்ணெய்நல்லூரில்வைத்து எனை ஆளும்கொண்ட
நடம்ஆடியார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 9

''மிடுக்கு உண்டு'' என்று ஓடி ஓர் வெற்பு எடுத்தான் வலியை நெரித்தார்;
அடக்கம் கொண்டு ஆவணம் காட்டி நல் வெண்ணெயூர் ஆளும்கொண்டார்;
தடுக்க ஒண்ணாதது ஓர் வேழத்தினை உரித்திட்டு உமையை
நடுக்கம் கண்டார்க்கு இடம்ஆவது—நம் திரு நாவலூரே. 10

நாதனுக்கு ஊர், நமக்கு ஊர், நரசிங்கமுனைஅரையன்
ஆதரித்து ஈசனுக்கு ஆட்செயும் ஊர், அணி நாவலூர் என்று
ஓத நல்-தக்க வன்தொண்டன்—ஆரூரன்—உரைத்த தமிழ்
காதலித்தும் கற்றும் கேட்பவர்தம் வினைக்கட்டு அறுமே. 11

திரு வேள்விக்குடி VII-18 நட்டராகம்

மூப்பதும் இல்லை; பிறப்பதும் இல்லை; இறப்பது இல்லை;
சேர்ப்புஅது காட்டுஅகத்து; ஊரினும் ஆக;—சிந்திக்கின்—அல்லால்,
காப்பது வேள்விக்குடி, தண்துருத்தி; எம் கோன் அரைமேல்
ஆர்ப்பது நாகம்; அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 1

கட்டக் காட்டின்(ன்) நடம்ஆடுவர்; யாவர்க்கும் காட்சி ஒண்ணார்;
சுட்டவெண்நீறு அணிந்து ஆடுவர்; பாடுவர்; தூய நெய்யால்
வட்டக்குண்டத்தில் எரி வளர்த்து ஓம்பி மறை பயில்வார்
அட்டக் கொண்டு, உண்பது; அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 2

பேரும் ஓர்ஆயிரம்பேர் உடையார்; பெண்ணோடு ஆணும் அல்லர்;
ஊரும்அது ஒற்றியூர்; மற்றை ஊர் பெற்றவா நாம் அறியோம்;
காரும் கருங்கடல்நஞ்சு அமுதுஉண்டு கண்டம் கறுத்தார்க்கு
ஆரம் பாம்புஆவது; அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 3

ஏனக்கொம்பும்(ம்) இள ஆமையும் பூண்டு, அங்கு ஓர் ஏறும் ஏறி,
கானக்-காட்டில்-தொண்டர் கண்டன சொல்லியும், காமுறவே,
மானைத்தோல் ஒன்றை உடுத்து, புலித்தோல் பியற்கும் இட்டு,
யானைத்தோல் போர்ப்பது; அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 4

ஊட்டிக்கொண்டு உண்பது ஓர் ஊண் இலர், ஊர் இடு பிச்சைஅல்லால்;
பூட்டிக்கொண்டு ஏற்றினை ஏறுவர்; ஏறி ஓர் பூதம் தம்பால்
பா(ட்)டிக்கொண்டு உண்பவர்; பாழிதொறும் பலபாம்பு பற்றி
ஆட்டிக்கொண்டு, உண்பது; அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 5

குறவனார்தம்மகள், தம் மகனார்மணவாட்டி; கொல்லை
மறவனாராய், அங்கு ஓர் பன்றிப் பின் போவது மாயம்கண்டீர்;
இறைவனார், ஆதியார், சோதியராய், அங்கு ஓர் சோர்வு படா
அறவனார்ஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 6

பித்தரை ஒத்து ஒரு பெற்றியர்; நற்ற(வ்)வை, என்னைப் பெற்ற;
முற்ற(வ்)வை, தம் அ(ன்)னை, தந்தைக்கும் தவ்வைக்கும் தம்பிரானார்;
செத்தவர்தம் தலையில் பலி கொள்வதே செல்வம்ஆகில்,
அத் தவம்ஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 7

உம்பரான், ஊழியான், ஆழியான், ஓங்கி மலர் உறைவான்,
தம் பரம் அல்லவர்; சிந்திப்பவர் தடுமாற்று அறுப்பார்;
எம் பரம் அல்லவர்; என் நெஞ்சத்துள்ளும் இருப்பதுஆகில்,
அம்பரம்ஆவது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே! 8

இந்திரனுக்கும் இராவணனுக்கும் அருள்புரிந்தார்;
மந்திரம் ஓதுவர்; மாமறை பாடுவர்; மான்மறியர்;
சிந்துரக்கண்ணனும், நான்முகனும்(ம்), உடன்ஆய்த் தனியே 9
அந்தரம் செல்வது அறிந்தோமேல் நாம் இவர்க்கு ஆட்படோமே!

கூடலர்மன்னன், குல நாவலூர்க்கோன், நலத் தமிழைப்
பாட வல்ல(ப்)—பரமன்(ன்)அடியார்க்கு அடிமை வழுவா
நாட வல்ல(த்)—தொண்டன், ஆரூரன், ஆட்படும்ஆறு சொல்லிப் 10
பாட வல்லார் பரலோகத்து இருப்பது பண்டம் அன்றே.

திரு நின்றியூர் VII-19 நட்டராகம்

அற்றவனார், அடியார்தமக்கு; ஆயிழை பங்கினர்ஆம்;
பற்றவனார்; ''எம் பராபரர்'' என்று பலர் விரும்பும்
கொற்றவனார்; குறுகாதவர் ஊர் நெடு வெஞ்சரத்தால் 1
செற்றவனார்க்கு இடம்ஆவது—நம் திரு நின்றியூரே.

வாசத்தின் ஆர் மலர்க்கொன்றை உள்ளார்; வடிவு ஆர்ந்த நீறு
பூசத்தினார்; புகலி(ந்)நகர் போற்றும் எம் புண்ணியத்தார்;
நேசத்தினால் என்னை ஆளும்கொண்டார்; நெடுமால்கடல் சூழ் 2
தேசத்தினார்க்கு இடம்ஆவது—நம் திரு நின்றியூரே.

அம் கையில் மூஇலைவேலர்; அமரர் அடி பரவ,
சங்கையை நீங்க, அருளித் தடங்கடல்நஞ்சம் உண்டார்;
மங்கை ஒர்பாகர்; மகிழ்ந்த இடம்—வளம் மல்கு புனல்
செங்கயல் பாயும் வயல் பொலியும் திரு நின்றியூரே. 3

ஆறு உகந்தார், அங்கம்; நால்மறையார்; எங்கும் ஆகி அடல்
ஏறு உகந்தார், இசைஏழ் உகந்தார்; முடிக் கங்கைதன்னை
வேறு உகந்தார்; விரிநூல் உகந்தார்; பரி சாந்தம்அதா
நீறு உகந்தார்; உறையும்(ம்) இடம்ஆம்—திரு நின்றியூரே. 4

வஞ்சம்கொண்டார் மனம் சேரகில்லார்; நறுநெய் தயிர் பால்
அஞ்சும்கொண்டு ஆடிய வேட்கையினார்; அதிகைப்பதியே
தஞ்சம் கொண்டார்; தமக்கு என்றும் இருக்கை, சரண்அடைந்தார்
நெஞ்சம், கொண்டார்க்கு இடம்ஆவது—நம் திரு நின்றியூரே. 5

ஆர்த்தவர், ஆடுஅரவம்(ம்) அரைமேல்; புலிஈர்உரிவை
போர்த்தவர்; ஆனையின்தோல் உடல் வெம் புலால் கை அகலப்
பார்த்தவர்; இன்உயிர், பார், படைத்தான் சிரம்அஞ்சில் ஒன்றைச்
சேர்த்தவருக்கு உறையும்(ம்) இடம்ஆம்—திரு நின்றியூரே. 6

தலைஇடை ஆர் பலி சென்று அகம்தோறும் திரிந்த செல்வர்;
மலை உடையாள் ஒருபாகம் வைத்தார்; கல்-துதைந்த நன்நீர்-
அலை உடையார்; சடைஎட்டும் சுழல, அருநடம்செய்
நிலை உடையார்; உறையும்(ம்) இடம்ஆம்—திரு நின்றியூரே. 7

எட்டு உகந்தார், திசை; ஏழ் உகந்தார், எழுத்து; ஆறும் அன்பர்
இட்டு உகந்து ஆர் மலர்ப் பூசை இச்சிக்கும் இறைவர்; முன்நாள்
பட்டு உகும் பார்இடைக் காலனைக் காய்ந்து, பலி இரந்து ஊண்
சிட்டு உகந்தார்க்கு இடம்ஆவது—நம் திரு நின்றியூரே. 8

காலமும் ஞாயிறும் ஆகி நின்றார்; கழல் பேண வல்லார்
சீலமும் செய்கையும் கண்டு உகப்பார்; அடி போற்றுஇசைப்ப,
மாலொடு நான்முகன் இந்திரன் மந்திரத்தால் வணங்க,
நீலநஞ்சு உண்டவருக்கு இடம்ஆம்—திரு நின்றியூரே. 9

வாயார், மனத்தால் நினைக்குமவருக்கு; அருந்தவத்தில்-
தூயார்; சுடுபொடிஆடிய மேனியர்; வானில் என்றும்
மேயார்; விடை உகந்து ஏறிய வித்தகர்; பேர்ந்தவர்க்குச்
சேயார்; அடியார்க்கு அணியவர்; ஊர்—திரு நின்றியூரே. 10

சேரும் புகழ்த் தொண்டர் செய்கை அருத் திரு நின்றியூரில்
சீரும் சிவகதிஆய் இருந்தானைத் திரு நாவல் ஆ-
ரூரன் உரைத்த உறுதமிழ்பத்தும் வல்லார் வினை போய்,
பாரும் விசும்பும் தொழ, பரமன்(ன்)அடி கூடுவரே. 11

திருக் கோளிலி VII-20 நட்டராகம்

நீள நினைந்து அடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்;
வாள் அன கண் மடவாள்அவள் வாடி வருந்தாமே,
கோளிலி எம்பெருமான்! குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்;
ஆள் இலை; எம்பெருமான், அவை அட்டித்தரப் பணியே! 1

வண்டுஅமரும்குழலாள் உமைநங்கை ஓர்பங்கு உடையாய்!
விண்டவர்தம் புரம்மூன்று எரிசெய்த எம் வேதியனே!
தெண்திரை நீர் வயல் சூழ் திருக் கோளிலி எம்பெருமான்!
அண்டம்அதுஆயவனே, அவை அட்டித்தரப் பணியே! 2

பாதி ஓர் பெண்ணை வைத்தாய்; படரும் சடைக் கங்கை வைத்தாய்;
மாதர்நல்லார் வருத்தம்(ம்)அது நீயும் அறிதி அன்றே!
கோது இல் பொழில் புடை சூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்;
ஆதியே, அற்புதனே, அவை அட்டித்தரப் பணியே! 3

சொல்லுவது என், உனை நான்? தொண்டைவாய் உமைநங்கையை நீ
புல்கி இடத்தில் வைத்தாய்க்கு ஒரு பூசல் செய்தார் உளரோ?
கொல்லை வளம் புறவில் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்;
அல்லல் களைந்து அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே! 4

முல்லைமுறுவல் உமை ஒருபங்கு உடை முக்கணனே!
பல் அயர் வெண்தலையில் பலி கொண்டு உழல் பாசுபதா!
கொல்லை வளம் புறவில்-திருக் கோளிலி எம்பெருமான்!
அல்லல் களைந்து, அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே! 5

குரவு அமரும் குழலாள் உமைநங்கை ஓர்பங்கு உடையாய்!
பரவை பசிவருத்தம்(ம்)அது நீயும் அறிதி அன்றே!
குரவு அமரும் பொழில் சூழ் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்;
அரவம் அசைத்தவனே, அவை அட்டித்தரப் பணியே! 6

எம்பெருமான்! நுனையே நினைந்து ஏத்துவன், எப்பொழுதும்;
வம்பு அமரும் குழலாள் ஒருபாகம் அமர்ந்தவனே!
செம்பொனின் மாளிகை சூழ் திருக் கோளிலி எம்பெருமான்!
அன்புஅது(வ்)ஆய் அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே! 7

அரக்கன் முடிகரங்கள்(ள்) அடர்த்திட்ட எம் ஆதிப்பிரான்!
பரக்கும் அரவுஅல்குலாள் பரவைஅவள் வாடுகின்றாள்;
குரக்குஇனங்கள் குதிகொள் குண்டையூர்ச் சிலநெல்லுப் பெற்றேன்;
இரக்கம்அதுஆய் அடியேற்கு அவை அட்டித்தரப் பணியே! 8

பண்டைய மால், பிரமன், பறந்தும்(ம்) இடந்தும்(ம்) அயர்ந்தும்
கண்டிலராய், அவர்கள் கழல் காண்பு அரிதுஆய பிரான்!
தெண்திரைநீர் வயல் சூழ் திருக் கோளிலி எம்பெருமான்!
அண்டம்அதுஆயவனே, அவை அட்டித்தரப் பணியே! 9

கொல்லை வளம் புறவில்-திருக் கோளிலி மேயவனை
நல்லவர்தாம் பரவும் திரு நாவலஊரன்அவன்
நெல் இட ஆட்கள் வேண்டி(ந்) நினைந்து ஏத்திய பத்தும் வல்லார், 10
அல்லல் களைந்து உலகின்(ன்), அண்டர் வான்உலகு ஆள்பவரே.

திருக் கச்சிமேற்றளி VII-21 நட்டராகம்

நொந்தா ஒண்சுடரே! நுனையே நினைந்திருந்தேன்;
வந்தாய்; போய்அறியாய்; மனமே புகுந்து நின்ற
சிந்தாய்! எந்தைபிரான்! திரு மேற்றளி உறையும் 1
எந்தாய்! உன்னை அல்லால் இனி ஏத்தமாட்டேனே.

ஆள்-தான் பட்டமையால் அடியார்க்குத் தொண்டுபட்டுக்
கேட்டேன், கேட்பதுஎல்லாம்; பிறவா வகை கேட்டொழிந்தேன்;
சே(ட்)டார் மாளிகை சூழ் திரு மேற்றளி உறையும்
மா(ட்)டே! உன்னை அல்லால் மகிழ்ந்து ஏத்தமாட்டேனே. 2

மோறாந்து ஓர்ஒருகால் நினையாதுஇருந்தாலும்,
வேறா வந்து என் உள்ளம் புக வல்ல மெய்ப்பொருளே!
சேறு ஆர் தண்கழனித் திரு மேற்றளி உறையும்
ஏறே! உன்னை அல்லால் இனி ஏத்தமாட்டேனே. 3

உற்றார் சுற்றம் எனும் அது விட்டு நுன் அடைந்தேன்;
எற்றால் என் குறைவு? என் இடரைத் துறந்தொழிந்தேன்;
செற்றாய், மும்மதிலும்! திரு மேற்றளி உறையும்
பற்றே! நுன்னை அல்லால் பணிந்து ஏத்தமாட்டேனே. 4

எம்மான், எம் அ(ன்)னை, என்றவர் இட்டு இறந்தொழிந்தார்;
மெய்ம் மால்ஆயின தீர்த்து அருள்செயும் மெய்ப்பொருளே!
கைம்மாஈர்உரியாய்! கனம் மேற்றளி உறையும்
பெம்மான்! உன்னை அல்லால் பெரிது ஏத்தமாட்டேனே. 5

நானேல் உன் அடியே நினைந்தேன்; நினைதலுமே
ஊன் நேர் இவ் உடலம் புகுந்தாய்; என் ஒண்சுடரே!
தேனே! இன்னமுதே! திரு மேற்றளி உறையும்
கோனே! உன்னை அல்லால் குளிர்ந்து ஏத்தமாட்டேனே. 6

கை ஆர் வெஞ்சிலை நாண்அதன்மேல் சரம் கோத்தே,
எய்தாய், மும்மதிலும் எரியுண்ண; எம்பெருமான்!
செய் ஆர் பைங்கமலத் திரு மேற்றளி உறையும்
ஐயா! உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 7

விரை ஆர் கொன்றையினாய்! விமலா! இனி உன்னை அல்லால்,
உரையேன், நாஅதனால், உடலில் உயிர் உள்ளளவும்;
திரை ஆர் தண்கழனித் திரு மேற்றளி உறையும்
அரையா! உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 8

நிலைஆய் நின் அடியே நினைந்தேன்; நினைதலுமே,
தலைவா! நின் நினையப் பணித்தாய்; சலம்ஒழிந்தேன்;
சிலை ஆர் மா மதில் சூழ் திரு மேற்றளி உறையும்
மலையே! உன்னை அல்லால் மகிழ்ந்து ஏத்தமாட்டேனே. 9

பார் ஊர் பல்லவன் ஊர் மதில் காஞ்சி மா நகர்வாய்ச்
சீர் ஊரும் புறவில்-திரு மேற்றளிச் சிவனை
ஆரூரன்(ன்)அடியான்—அடித்தொண்டன், ஆரூரன்—சொன்ன
சீர் ஊர் பாடல் வல்லார் சிவலோகம் சேர்வாரே. 10

திருப் பழமண்ணிப்படிக்கரை VII-22 நட்டராகம்

முன்னவன், எங்கள் பிரான், முதல் காண்பு அரிதுஆய பிரான்,
சென்னியில் எங்கள் பிரான், திரு நீலமிடற்று எம்பிரான்,
மன்னிய எங்கள் பிரான், மறைநான்கும் கல்லால்நிழல்கீழ்ப்
பன்னிய எங்கள் பிரான்—பழமண்ணிப்படிக்கரையே. 1

அண்ட கபாலம் சென்னி(ய்) அடிமேல் அலர் இட்டு நல்ல
தொண்டு அங்கு அடி பரவி, தொழுது ஏத்தி, நின்று ஆடும் இடம்;
வெண்திங்கள் வெண்மழுவன், விரை ஆர் கதிர் மூவிலைய
பண்டங்கன், மேய இடம்—பழமண்ணிப்படிக்கரையே. 2

ஆடுமின், அன்புஉடையீர்! அடிக்கு ஆட்பட்ட தூளி கொண்டு
சூடுமின், தொண்டர்உள்ளீர்! உமரோடு எமர் சூழ வந்து,
வாடும் இவ் வாழ்க்கைதன்னை வருந்தாமல் திருந்தச் சென்று,
பாடுமின், பத்தர்உள்ளீர், பழமண்ணிப்படிக்கரையே! 3

அடுதலையே புரிந்தான், நவை; அந்தர மூஎயிலும்
கெடுதலையே புரிந்தான்; கிளரும் சிலை நாணியில் கோல்
நடுதலையே புரிந்தான்; நரி கான்றிட்ட எச்சில் வெள்ளைப்-
படுதலையே புரிந்தான்—பழமண்ணிப்படிக்கரையே. 4

உம் கைகளால் கூப்பி உகந்து ஏத்தித் தொழுமின், தொண்டீர்!
மங்கை ஒர்கூறு உடையான், வானோர் முதல்ஆய பிரான்,
அம் கையில் வெண்மழுவன்(ன்), அலை ஆர் கதிர் மூவிலைய
பங்கயபாதன், இடம்—பழமண்ணிப்படிக்கரையே. 5

செடி படத் தீ விளைத்தான், சிலை ஆர் மதில்; செம் புனம் சேர்
கொடி படு மூரி வெள்ளைஎருதுஏற்றையும் ஏறக் கொண்டான்;
கடியவன்காலன்தன்னைக் கறுத்தான்; கழல் செம்பவளப்-
படியவன்; பாசுபதன்—பழமண்ணிப்படிக்கரையே. 6

கடுத்தவன்—தேர் கொண்டு ஓடிக் கயிலாய நல் மாமலையை
எடுத்தவன், ஈர்-ஐந்துவாய் அரக்கன்—முடிபத்து அலற,
விடுத்து, அவன் கைநரம்பால் வேதகீதங்கள் பாடல்உறப்
படுத்தவன்; பால்வெண்நீற்றன்—பழமண்ணிப்படிக்கரையே. 7

திரிவன மும்மதிலும்(ம்) எரித்தான்; இமையோர்பெருமான்;
அரியவன்; அட்டபுட்பம்(ம்)அவை கொண்டு அடி போற்றி, நல்ல
கரியவன் நான்முகனும்(ம்), அடியும் முடி காண்பு அரிய
பரியவன்; பாசுபதன்—பழமண்ணிப்படிக்கரையே. 8

வெற்று அரைக் கற்ற(அ)மணும், விரையாது வெண் தாலம் உண்ணும்
துற்றரை, துற்று அறுப்பான் துன்னஆடைத் தொழில் உடையீர்!
பெற்றரைப் பித்தர் என்று(க்) கருதேன்மின்! படிக்கரையுள்
பற்றரைப் பற்றி நின்று(ப்) பழிபாவங்கள் தீர்மின்களே! 9

பல்உயிர் வாழும் தெண்நீர்ப் பழமண்ணிப்படிக்கரையை
அல்லிஅம்தாமரைத்தார் ஆரூரன் உரைத்த தமிழ்
சொல்லுதல்கேட்டல்வல்லார்அவர்க்கும், தமர்க்கும், கிளைக்கும்,
எல்லியும் நன்பகலும்(ம்) இடர் கூருதல் இல்லை அன்றே! 10

திருக் கழிப்பாலை VII-23 நட்டராகம்

செடியேன் தீவினையில்-தடுமாறக் கண்டாலும்,
''அடியான்; ஆவா!'' எனாது ஒழிதல் தகவு ஆமே?—
முடிமேல் மா மதியும் அரவும் உடன்துயிலும்
வடிவே தாம் உடையார் மகிழும் கழிப்பாலைஅதே. 1

எங்கேனும் இருந்து உன் அடியேன் உனை நினைந்தால்,
அங்கே வந்து என்னொடும் உடன்ஆகி நின்றுஅருளி,
இங்கே என் வினையை அறுத்திட்டு, எனை ஆளும்
கங்காநாயகனே!—கழிப்பாலை மேயானே! 2

ஒறுத்தாய், நின் அருளில்; அடியேன் பிழைத்தனகள்
பொறுத்தாய், எத்தனையும் நாயேனைப் பொருள்படுத்துச்
செறுத்தாய்; வேலைவிடம் மறியாமல் உண்டு கண்டம்
கறுத்தாய்—தண்கழனிக் கழிப்பாலை மேயானே! 3

சுரும்பு ஆர் விண்ட மலர்அவை தூவி, தூங்கு கண்ணீர்
அரும்பாநிற்கும் மனத்து அடியாரொடும் அன்பு செய்வன்;
விரும்பேன், உன்னை அல்லால், ஒரு தெய்வம் என் மனத்தால்;—
கரும்பு ஆரும் கழனிக் கழிப்பாலை மேயானே! 4

ஒழிப்பாய், என் வினையை; உகப்பாய்; முனிந்துஅருளித்
தெழிப்பாய்; மோதுவிப்பாய்; விலை ஆவணம் உடையாய்—
கழிப்பால் கண்டல் தங்கச் சுழி ஏந்து மா மறுகின்
கழிப்பாலை மருவும் கனல் ஏந்து கையானே! 5

ஆர்த்தாய், ஆடுஅரவை அரை ஆர் புலிஅதள்மேல்;
போர்த்தாய், ஆனையின்தோல்உரிவை புலால் நாற;
காத்தாய்,—தொண்டு செய்வார் வினைகள்அவை போக,—
பார்த்தானுக்கு இடம்ஆம்—பழி இல் கழிப்பாலைஅதே. 6

பருத் தாள் வன் பகட்டைப் படம்ஆக முன் பற்றி, அதள்-
உரித்தாய், ஆனையின்தோல்; உலகம் தொழும் உத்தமனே!
எரித்தாய், முப்புரமும்;—இமையோர்கள் இடர் கடியும்
கருத்தா! தண்கழனிக் கழிப்பாலை மேயானே! 7

படைத்தாய், ஞாலம்எலாம்; படர்புன்சடை எம் பரமா!
உடைத்தாய், வேள்விதனை; உமையாளை ஓர்கூறு உடையாய்;
அடர்த்தாய், வல்அரக்கன் தலைபத்தொடு தோள் நெரிய;—
கடல் சாரும் கழனிக் கழிப்பாலை மேயானே! 8

பொய்யா நாஅதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே
மெய்யே நின்று எரியும் விளக்கே ஒத்த தேவர்பிரான்,
செய்யானும் கரிய நிறத்தானும் தெரிவு அரியான்,
மை ஆர் கண்ணியொடு மகிழ்வான், கழிப்பாலைஅதே. 9

பழி சேர் இல் புகழான், பரமன், பரமேட்டி,
கழி ஆர் செல்வம் மல்கும் கழிப்பாலை மேயானை,
தொழுவான் நாவலர்கோன்—ஆரூரன்—உரைத்த தமிழ்
வழுவா மாலை வல்லார் வானோர்உலகு ஆள்பவரே. 10

திரு மழபாடி VII-24 நட்டராகம்

பொன் ஆர் மேனியனே! புலித்தோலை அரைக்கு அசைத்து,
மின் ஆர் செஞ்சடைமேல் மிளிர் கொன்றை அணிந்தவனே!
மன்னே! மாமணியே! மழபாடியுள் மாணிக்கமே!
அன்னே!—உன்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 1

கீள் ஆர் கோவணமும், திருநீறு மெய் பூசி, உன்தன்
தாளே வந்து அடைந்தேன்; தலைவா! எனை ஏன்றுகொள், நீ!
வாள் ஆர் கண்ணி பங்கா! மழபாடியுள் மாணிக்கமே!
கேளா!—நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 2

எம்மான், எம் அ(ன்)னை, என்தனக்கு எள்-தனைச் சார்வு ஆகார்;
இம் மாயப் பிறவி பிறந்தே இறந்து எய்த்தொழிந்தேன்;
மைம் மாம் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
அம்மான்!—நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 3

பண்டே நின் அடியேன்; அடியார்அடியார்கட்கு எல்லாம்
தொண்டே பூண்டொழிந்தேன்; தொடராமைத் துரிசு அறுத்தேன்;
வண்டு ஆர் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
அண்டா!—நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 4

கண்ஆய், ஏழ்உலகும் கருத்துஆய அருத்தமும்ஆய்,
பண் ஆர் இன்தமிழ்ஆய், பரம்ஆய பரஞ்சுடரே!
மண் ஆர் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
அண்ணா!—நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 5

நாளார் வந்து அணுகி நலியாமுனம், நின்தனக்கே
ஆளா வந்து அடைந்தேன்; அடியேனையும் ஏன்றுகொள், நீ!
மாளா நாள் அருளும் மழபாடியுள் மாணிக்கமே!
ஆளா!—நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 6

சந்து ஆரும் குழையாய்! சடைமேல் பிறைதாங்கி! நல்ல
வெந்தார் வெண்பொடியாய்! விடை ஏறிய வித்தகனே!
மைந்து ஆர் சோலைகள் சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
எந்தாய்!—நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 7

வெய்ய விரிசுடரோன் மிகு தேவர்கணங்கள்எல்லாம்
செய்யமலர்கள் இட, மிகு செம்மையுள் நின்றவனே!
மை ஆர் பூம்பொழில் சூழ் மழபாடியுள் மாணிக்கமே!
ஐயா!—நின்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 8

நெறியே! நின்மலனே! நெடுமால் அயன் போற்றிசெய்யும்
குறியே! நீர்மையனே! கொடி ஏர் இடையாள் தலைவா!
மறி சேர் அம் கையனே! மழபாடியுள் மாணிக்கமே!
அறிவே!—உன்னை அல்லால் இனி யாரை நினைக்கேனே? 9

ஏர் ஆர் முப்புரமும் எரியச் சிலை தொட்டவனை,
வார்ஆர்கொங்கைஉடன் மழபாடியுள் மேயவனை,
சீர் ஆர் நாவலர்கோன்—ஆரூரன்—உரைத்த தமிழ் 10
பாரோர் ஏத்த வல்லார் பரலோகத்து இருப்பாரே.

VII-25

நட்டராகம்

திரு முதுகுன்றம்

பொன் செய்த மேனியினீர்; புலித்தோலை அரைக்கு அசைத்தீர்;
முன் செய்த மூஎயிலும்(ம்) எரித்தீர்; முதுகுன்று அமர்ந்தீர்;
மின் செய்த நுண்இடையாள் பரவைஇவள்தன் முகப்பே,
என் செய்தஆறு,—அடிகேள்!—அடியேன் இட்டளம் கெடவே? 1

உம்பரும் வானவரும்(ம்) உடனேநிற்கவே, எனக்குச்
செம்பொனைத் தந்துஅருளி, திகழும் முதுகுன்று அமர்ந்தீர்;
வம்பு அமரும் குழலாள் பரவைஇவள் வாடுகின்றாள்;
எம்பெருமான்! அருளீர், அடியேன் இட்டளம் கெடவே! 2

பத்தா! பத்தர்களுக்கு அருள்செய்யும் பரம்பரனே!
முத்தா! முக்கணனே! முதுகுன்றம் அமர்ந்தவனே!
மைத்து ஆரும் தடங்கண் பரவைஇவள் வாடாமே,
அத்தா! தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே! 3

மங்கை ஓர்கூறு அமர்ந்தீர்; மறைநான்கும் விரித்து உகந்தீர்;
திங்கள் சடைக்கு அணிந்தீர்; திகழும் முதுகுன்று அமர்ந்தீர்;
கொங்கை நல்லாள்பரவை—குணம் கொண்டு இருந்தாள்—முகப்பே,
அங்கணனே! அருளாய், அடியேன் இட்டளம் கெடவே! 4

மை ஆரும் மிடற்றாய்! மருவார் புரம்மூன்று எரித்த
செய்யார் மேனியனே! திகழும் முதுகுன்று அமர்ந்தாய்!
பை ஆரும்(ம்) அரவு ஏர் அல்குலாள்இவள் வாடுகின்றாள்;
ஐயா! தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே! 5

நெடியான், நான்முகனும்(ம்), இரவி(ய்)யொடும், இந்திரனும்,
முடியால் வந்து இறைஞ்ச(ம்) முதுகுன்றம் அமர்ந்தவனே!
படி ஆரும்(ம்) இயலாள் பரவைஇவள்தன் முகப்பே,
அடிகேள்! தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே! 6

கொந்து அணவும் பொழில் சூழ் குளிர் மா மதில் மாளிகைமேல்
வந்து அணவும் மதி சேர், சடை மா முதுகுன்று உடையாய்!
பந்து அணவும் விரலாள் பரவைஇவள்தன் முகப்பே,
அந்தணனே! அருளாய், அடியேன் இட்டளம் கெடவே! 7

பரசு ஆரும் கரவா! பதினெண்கணமும் சூழ
முரசார் வந்து அதிர(ம்), முதுகுன்றம் அமர்ந்தவனே!
விரை சேரும் குழலாள் பரவைஇவள்தன் முகப்பே,
அரசே! தந்தருளாய், அடியேன் இட்டளம் கெடவே! 8

ஏத்தாது இருந்து அறியேன்; இமையோர் தனி நாயகனே!
மூத்தாய், உலகுக்கு எல்லாம்; முதுகுன்றம் அமர்ந்தவனே!
பூத்து ஆரும் குழலாள் பரவைஇவள்தன் முகப்பே,
கூத்தா! தந்துஅருளாய், கொடியேன் இட்டளம் கெடவே! 9

பிறை ஆரும் சடை எம்பெருமான்! ''அருளாய்'' என்று,
முறையால் வந்து அமரர் வணங்கும் முதுகுன்றர்தம்மை
மறையார்தம் குரிசில்—வயல் நாவல் ஆரூரன்—சொன்ன
இறை ஆர் பாடல் வல்லார்க்கு எளிதுஆம், சிவலோகம்அதே. 10

திருக் காளத்தி VII-26 நட்டராகம்

செண்டுஆடும் விடையாய்! சிவனே! என் செழுஞ்சுடரே!
வண்டு ஆரும் குழலாள் உமை பாகம் மகிழ்ந்தவனே!
கண்டார் காதலிக்கும் கணநாதன்! எம் காளத்தியாய்!
அண்டா!—உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 1

இமையோர்நாயகனே! இறைவா! என் இடர்த்துணையே!
கமை ஆர் கருணையினாய்! கரு மா முகில் போல் மிடற்றாய்!
உமை ஓர்கூறு உடையாய்! உருவே! திருக் காளத்தியுள்
அமைவே!—உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 2

படை ஆர் வெண்மழுவா! பகலோன் பல் உகுத்தவனே!
விடை ஆர் வேதியனே! விளங்கும் குழைக் காது உடையாய்!
கடை ஆர் மாளிகை சூழ் கணநாதன்! எம் காளத்தியாய்!
உடையாய்!—உன்னை அல்லால் உகந்து ஏத்தமாட்டேனே. 3

மறி சேர் கையினனே! மதமாஉரி போர்த்தவனே!
குறியே! என்னுடைய குருவே! உன் குற்றேவல் செய்வேன்;
நெறியே நின்று அடியார் நினைக்கும் திருக் காளத்தியுள்
அறிவே!—உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 4

செஞ்சேல் அன்ன கண்ணார் திறத்தே கிடந்து உற்று அலறி,
நஞ்சேன், நான்அடியேன்,—நலம் ஒன்று அறியாமையினால்,—
துஞ்சேன்; நான் ஒரு கால்-தொழுதேன்; திருக் காளத்தியாய்!
அஞ்சாது உன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 5

பொய்யவன் நாய்அடியேன் புகவே நெறி ஒன்று அறியேன்;
செய்யவன்ஆகி வந்து இங்கு இடர்ஆனவை தீர்த்தவனே!
மெய்யவனே! திருவே! விளங்கும் திருக் காளத்தி என்
ஐய! நுன்தன்னை அல்லால் அறிந்து ஏத்தமாட்டேனே. 6

கடியேன், காதன்மையால் கழல்போது அறியாத என் உள்
குடியாக் கோயில்கொண்ட குளிர்வார்சடை எம் குழகா!
முடியால் வானவர்கள் முயங்கும் திருக் காளத்தியாய்!—
அடியேன் உன்னை அல்லால் அறியேன், மற்று ஒருவரையே. 7

நீறு ஆர் மேனியனே! நிமலா! நினை அன்றி மற்றுக்
கூறேன், நாஅதனால்; கொழுந்தே! என் குணக்கடலே!
பாறு ஆர் வெண்தலையில் பலி கொண்டு உழல் காளத்தியாய்!
ஏறே! உன்னை அல்லால் இனி ஏத்தமாட்டேனே. 8

தளிர் போல் மெல்அடியாள்தனை ஆகத்து அமர்ந்துஅருளி,
எளிவாய் வந்து என் உள்ளம் புகுத வல்ல எம்பெருமான்!
களி ஆர் வண்டு அறையும் திருக் காளத்தியுள் இருந்த
ஒளியே!—உன்னை அல்லால் இனி ஒன்றும் உணரேனே. 9

கார் ஊரும் பொழில் சூழ் கணநாதன் எம் காளத்தியுள்
ஆரா இன்னமுதை, அணி நாவல் ஆரூரன் சொன்ன
சீர் ஊர் செந்தமிழ்கள் செப்புவார், வினைஆயின போய்ப் 10
பேரா விண்ணுலகம் பெறுவார்; பிழைப்பு ஒன்று இலரே.

திருக் கற்குடி

VII-27

நட்டராகம்

விடை ஆரும் கொடியாய்! வெறி ஆர் மலர்க்கொன்றையினாய்!
படை ஆர் வெண்மழுவா! பரம்ஆய பரம்பரனே!
கடி ஆர் பூம்பொழில் சூழ் திருக் கற்குடி மன்னி நின்ற
அடிகேள்! எம்பெருமான்!—அடியேனையும், ''அஞ்சல்!'' என்னே! 1

மறையோர் வானவரும் தொழுது ஏத்தி வணங்க நின்ற
இறைவா! எம்பெருமான்! எனக்கு இன்அமுது ஆயவனே!
கறை ஆர் சோலைகள் சூழ் திருக் கற்குடி மன்னி நின்ற
அறவா! அங்கணனே!—அடியேனையும், ''அஞ்சல்!'' என்னே! 2

சிலையால் முப்புரங்கள் பொடிஆகச் சிதைத்தவனே!
மலைமேல் மா மருந்தே! மடமாது இடம் கொண்டவனே!
கலை சேர் கையினனே! திருக் கற்குடி மன்னி நின்ற
அலை சேர் செஞ்சடையாய்!—அடியேனையும், ''அஞ்சல்!'' என்னே! 3

செய்யார் மேனியனே! திரு நீலமிடற்றினனே!
மைஆர்கண்ணி பங்கா! மதயானை உரித்தவனே!
கை ஆர் சூலத்தினாய்! திருக் கற்குடி மன்னி நின்ற
ஐயா! எம்பெருமான்!—அடியேனையும், ''அஞ்சல்!'' என்னே! 4

சந்து ஆர் வெண்குழையாய்! சரி கோவணஆடையனே!
பந்து ஆரும் விரலாள் ஒருபாகம் அமர்ந்தவனே!
கந்து ஆர் சோலைகள் சூழ் திருக் கற்குடி மன்னி நின்ற
எந்தாய்! எம்பெருமான்!—அடியேனையும் ஏன்றுகொள்ளே! 5

அரை ஆர் கீளொடு கோவணமும்(ம்) அரவும்(ம்) அசைத்து
விரை ஆர் கொன்றைஉடன் விளங்கும் பிறை மேல் உடையாய்!
கரை ஆரும் வயல் சூழ் திருக் கற்குடி மன்னி நின்ற
அரையா! எம்பெருமான்!—அடியேனையும், ''அஞ்சல்!'' என்னே! 6

பாரார் விண்ணவரும் பரவிப் பணிந்து ஏத்த நின்ற
சீர் ஆர் மேனியனே! திகழ் நீலமிடற்றினனே!
கார் ஆர் பூம்பொழில் சூழ் திருக் கற்குடி மன்னி நின்ற
ஆரா இன்னமுதே!—அடியேனையும், ''அஞ்சல்!'' என்னே! 7

நிலனே, நீர், வளி, தீ, நெடுவானகம், ஆகி நின்ற
புலனே! புண்டரிகத்து அயன், மாலவன், போற்றிசெய்யும்
கனலே! கற்பகமே! திருக் கற்குடி மன்னி நின்ற
அனல் சேர் கையினனே!— அடியேனையும், ''அஞ்சல்!'' என்னே! 8

வரும் காலன்(ன்) உயிரை மடியத் திரு மெல்விரலால்
பெரும் பாலன்தனக்குஆய்ப் பிரிவித்த பெருந்தகையே!
கரும்பு ஆரும் வயல் சூழ் திருக் கற்குடி மன்னி நின்ற
விரும்பா! எம்பெருமான்!—அடியேனையும் வேண்டுதியே! 9

அலை ஆர் தண்புனல் சூழ்ந்து, அழகுஆகி, விழவு அமரும்
கலை ஆர் மா தவர் சேர் திருக் கற்குடிக் கற்பகத்தைச்
சிலை ஆர் வாள்நுதலாள் நல்ல சிங்கடி அப்பன் உரை
விலை ஆர் மாலை வல்லார் வியல்மூஉலகு ஆள்பவரே. 10

திருக் கடவூர்வீரட்டம் VII-28 நட்டராகம்

பொடி ஆர் மேனியனே! புரிநூல் ஒருபால் பொருந்த,
வடி ஆர் மூஇலைவேல், வளர் கங்கைஇன்மங்கையொடும்,
கடி ஆர் கொன்றையனே! கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அடிகேள்! என் அமுதே!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 1

பிறை ஆரும் சடையாய்! பிரமன்தலையில் பலி கொள்
மறை ஆர் வானவனே! மறையின் பொருள்ஆனவனே!
கறை ஆரும் மிடற்றாய்! கடவூர்தனுள் வீரட்டத்து எம்
இறைவா! என் அமுதே!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 2

அன்று ஆலின்(ன்)நிழல்கீழ் அறம் நால்வர்க்கு அருள்புரிந்து,
கொன்றாய், காலன்; உயிர் கொடுத்தாய், மறையோனுக்கு; மான்-
கன்று ஆரும் கரவா! கடவூர்த் திரு வீரட்டத்துள்
என்தாதை! பெருமான்!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 3

போர் ஆரும் கரியின்(ன்) உரி போர்த்துப் பொன்மேனியின்மேல்,
வார் ஆரும் முலையாள் ஒருபாகம் மகிழ்ந்தவனே!
கார் ஆரும் மிடற்றாய்! கடவூர்தனுள் வீரட்டானத்து
ஆரா என் அமுதே!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 4

மை ஆர் கண்டத்தினாய்! மதமாஉரி போர்த்தவனே!
பொய்யாது என் உயிருள் புகுந்தாய்! இன்னம் போந்துஅறியாய்!
கை ஆர் ஆடுஅரவா! கடவூர்தனுள் வீரட்டத்து எம்
ஐயா! என் அமுதே!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 5

மண், நீர், தீ, வெளி, கால், வரு பூதங்கள்ஆகி, மற்றும்
பெண்ணோடு ஆண்அலியாய், பிறவா உரு ஆனவனே!
கண் ஆரும் மணியே! கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அண்ணா! என் அமுதே!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 6

எரி ஆர் புன்சடைமேல் இள நாகம் அணிந்தவனே!
நரி ஆரும் சுடலை நகுவெண்தலை கொண்டவனே!
கரி ஆர் ஈர்உரியாய்! கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அரியாய்! என் அமுதே!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 7

வேறா உன் அடியேன், விளங்கும் குழைக் காது உடையாய்!
தேறேன், உன்னை அல்லால்; சிவனே! என் செழுஞ்சுடரே!
காறு ஆர் வெண்மருப்பா! கடவூர்த் திரு வீரட்டத்துள்
ஆறு ஆர் செஞ்சடையாய்!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 8

அயனோடு அன்று அரியும்(ம்) அடியும் முடி காண்பு அரிய
பயனே! எம் பரனே! பரம்ஆய பரஞ்சுடரே!
கயம் ஆரும் சடையாய்! கடவூர்த் திரு வீரட்டத்துள்
அயனே! என் அமுதே!—எனக்கு ஆர் துணை, நீஅலதே? 9

கார் ஆரும் பொழில் சூழ் கடவூர்த் திரு வீரட்டத்துள்
ஏர் ஆரும்(ம்) இறையைத் துணையா எழில் நாவலர்கோன்—
ஆரூரன்(ன்) அடியான், அடித்தொண்டன்—உரைத்த தமிழ் 10
பாரோர் ஏத்த வல்லார் பரலோகத்து இருப்பாரே.

நட்டராகம்

திருக் குருகாவூர்வெள்ளடை VII-29

இத்தனைஆம்ஆற்றை அறிந்திலேன்; எம்பெருமான்!
''பித்தனே'' என்று உன்னைப் பேசுவார், பிறர்எல்லாம்;
முத்தினை, மணிதன்னை, மாணிக்கம், முளைத்து எழுந்த 1
வித்தனே! குருகாவூர் வெள்ளடை நீ அன்றே;

ஆவியைப் போகாமே தவிர்த்து, என்னை ஆட்கொண்டாய்;
வாவியில் கயல் பாய, குளத்துஇடை மடைதோறும்
காவியும் குவளையும் கமலம் செங்கழுநீரும் 2
மேவிய குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

பாடுவார் பசி தீர்ப்பாய்; பரவுவார் பிணி களைவாய்;
ஓடு நன் கலன்ஆக உண் பலிக்கு உழல்வானே!
காடு நல் இடம்ஆகக் கடுஇருள் நடம்ஆடும் 3
வேடனே! குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

வெப்பொடு பிணிஎல்லாம் தவிர்த்து எனை ஆட்கொண்டாய்;
ஒப்பு உடை ஒளி நீலம் ஓங்கிய மலர்ப்பொய்கை,
அப்படி அழகுஆய அணி நடை மடஅன்னம் 4
மெய்ப்படு குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

வரும் பழி வாராமே தவிர்த்து, எனை ஆட்கொண்டாய்;
சுரும்பு உடை மலர்க்கொன்றைச் சுண்ணவெண்நீற்றானே!
அரும்பு உடை மலர்ப் பொய்கை அல்லியும் மல்லிகையும் 5
விரும்பிய குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

பண்இடைத் தமிழ் ஒப்பாய்! பழத்தினில் சுவை ஒப்பாய்!
கண்இடை மணி ஒப்பாய்! கடுஇருள் சுடர் ஒப்பாய்!—
மண்இடை அடியார்கள் மனத்து இடர் வாராமே, 6
விண்இடைக் குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

போந்தனை; தரியாமே நமன்தமர் புகுந்து, என்னை
நோந்தன செய்தாலும், நுன்அலது அறியேன், நான்;
சாம்தனை வருமேலும் தவிர்த்து எனை ஆட்கொண்ட 7
வேந்தனே! குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

மலக்கு இல் நின் அடியார்கள் மனத்துஇடை மால் தீர்ப்பாய்;
சலச்சலம் மிடுக்கு உடைய தருமனார்தமர் என்னைக்
கலக்குவான் வந்தாலும், கடுந் துயர் வாராமே, 8
விலக்குவாய்; குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

படுவிப்பாய், உனக்கே ஆள் பலரையும், பணியாமே;
தொடுவிப்பாய், துகிலொடு பொன்; தோல் உடுத்து உழல்வானே!
கெடுவிப்பாய், அல்லாதார்; கேடு இலாப் பொன்அடிக்கே 9
விடுவிப்பாய்; குருகாவூர் வெள்ளடை நீ அன்றே!

வளம் கனி பொழில் மல்கு வயல் அணிந்து அழகுஆய
விளங்கு ஒளி குருகாவூர் வெள்ளடை உறைவானை,
இளங் கிளை ஆரூரன்—வனப்பகைஅவள்அப்பன்— 10
உளம் குளிர் தமிழ்மாலை பத்தர்கட்கு உரை ஆமே.

திருக் கருப்பறியலூர் VII-30 நட்டராகம்

சிம்மாந்து, சிம்புளித்து, சிந்தையினில் வைத்து உகந்து திறம்பா வண்ணம்—
கைம்மாவின்உரிவை போர்த்து உமை வெருவக் கண்டானை; கருப்பறியலூர்,
கொய்ம் மாவின் மலர்ச்சோலைக் குயில் பாட மயில் ஆடும், கொகுடிக்கோயில் 1
எம்மானை;—மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே!

நீ(ற்)று ஆரும் மேனியராய் நினைவார்தம் உள்ளத்தே நிறைந்து தோன்றும்
காற்றானை, தீயானை, கதிரானை, மதியானை, கருப்பறியலூர்—
கூற்றானை, கூற்று உதைத்துக் கோல்வளையாள்அவளோடும்—கொகுடிக்கோயில்
ஏற்றானை, மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 2

முட்டாமே நாள்தோறும் நீர் மூழ்கி, பூப் பறித்து, மூன்றுபோதும்
கட்டு ஆர்ந்த இண்டை கொண்டு, அடிச் சேர்த்தும் அந்தணர்தம் கருப்பறியலூர்—
கொட்டு ஆட்டுப் பாட்டுஆகி நின்றானை, குழகனை,—கொகுடிக்கோயில்
எட்டுஆனமூர்த்தியை, நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 3

விருந்துஆய சொல்மாலைகொண்டு ஏத்தி, வினை போக, வேலிதோறும்
கருந் தாள வாழைமேல் செங்கனிகள் தேன் சொரியும் கருப்பறியலூர்—
குருந்துஆய முள்எயிற்றுக் கோல்வளையாள்அவளோடும்—கொகுடிக்கோயில்
இருந்தானை மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 4

பொடி ஏறு திருமேனிப் பெருமானை, பொங்கு அரவக்கச்சையானை,
கடி நாறும் பூம் பொய்கைக் கயல் வாளை குதிகொள்ளும் கருப்பறியலூர்—
கொடி ஏறி வண்டுஇனமும் தண் தேனும் பண்செய்யும்—கொகுடிக்கோயில்
அடி ஏறு கழலானை, நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 5

பொய்யாத வாய்மையால், பொடி பூசிப் போற்றுஇசைத்து, பூசை செய்து,
கையினால் எரி ஓம்பி மறை வளர்க்கும் அந்தணர்தம் கருப்பறியலூர்—
கொய் உலாம் மலர்ச்சோலைக் குயில் கூவ மயில் ஆலும்—கொகுடிக்கோயில்
ஐயனை என் மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 6

செடி கொள் நோய் உள்ளளவும் தீவினையும் தீர்ந்துஒழியச் சிந்தைசெய்மின்!
கடி கொள் பூந் தடம் மண்டிக் கருமேதி கண்படுக்கும் கருப்பறியலூர்—
கொடி கொள் பூ நுண்இடையாள் கோல்வளையாள்அவளோடும்—கொகுடிக்கோயில்
அடிகளை என் மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 7

பறையாத வல்வினைகள் பறைந்தொழிய, பல்-நாளும் பாடி ஆடி—
கறை ஆர்ந்த கண்டத்தன், எண்தோளன், முக்கண்ணன்,—கருப்பறியலூர்,
குறையாத மறை நாவர் குற்றேவல் ஒழியாத, கொகுடிக்கோயில்
உறைவானை, மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 8

சங்கு ஏந்து கையானும் தாமரையின்மேலானும் தன்மை காணாக்
கங்கு ஆர்ந்த வார்சடைகள் உடையானை, விடையானை, கருப்பறியலூர்—
கொங்கு ஆர்ந்த பொழில்-சோலை சூழ் கனிகள்பல உதிர்க்கும்—கொகுடிக்கோயில்
எம் கோனை, மனத்தினால் நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 9

பண் தாழ் இன்இசை முரலப் பல்-நாளும் பாவித்துப் பாடி ஆடிக்
கண்டார்தம் கண் குளிரும் க்ளிக் கமுகம் பூஞ்சோலைக் கருப்பறியலூர்—
குண்டாடும் சமணரும் சாக்கியரும் புறம்கூறும்—கொகுடிக்கோயில்
எண்தோள் எம்பெருமானை நினைந்தபோது அவர் நமக்கு இனியஆறே! 10

கலை மலிந்த தென்புலவர் கற்றோர்தம் இடர் தீர்க்கும் கருப்பறியலூர்—
குலை மலிந்த கோள்-தெங்கு மட்டு ஒழுகும் பூஞ்சோலை—கொகுடிக்கோயில்
இலை மலிந்த மழுவானை, மனத்தினால் அன்பு செய்து, இன்பம் எய்தி,
மலை மலிந்த தோள் ஊரன்—வனப்பகைஅப்பன்—உரைத்த வண்தமிழ்களே! 11

திரு இடையாற்றுத் தொகை VII-31 கொல்லி

முந்தை ஊர் முதுகுன்றம், குரங்கணில்முட்டம்,
சிந்தைஊர் நன்று சென்று அடைவான் திரு ஆரூர்,
பந்தையூர், பழையாறு, பழனம், பைஞ்ஞீலி,
எந்தை ஊர் எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 1

சுற்றும் ஊர் சுழியல், திருச் சோபுரம், தொண்டர்
ஒற்றும் ஊர் ஒற்றியூர், திரு ஊறல்,—ஒழியாப்
பெற்றம் ஊர்தி, பெண் பாதி இடம்—பெண்ணைத் தெண் நீர்
எற்றும் ஊர் எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 2

கடங்களூர், திருக் காரிக்கரை, கயிலாயம்,
விடங்களூர், திரு வெண்ணி, அண்ணாமலை,—வெய்ய
படங்கள் ஊர்கின்ற பாம்பு அரையான், பரஞ்சோதி,
இடம் கொள் ஊர்—எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 3

கச்சையூர், காவம், கழுக்குன்றம், காரோணம்,—
பிச்சை ஊர் திரிவான்—கடவூர், வடபேறூர்,
கச்சி ஊர் கச்சி, சிக்கல், நெய்த்தானம், மிழலை,
இச்சை ஊர் எமது அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 4

நிறையனூர், நின்றியூர், கொடுங்குன்றம், அமர்ந்த
பிறையனூர், பெருமூர், பெரும்பற்றப்புலியூர்,
மறையனூர், மறைக்காடு, வலஞ்சுழி, வாய்த்த
இறையனூர், எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 5

திங்களூர், திருஆதிரையான் பட்டினம்ஊர்,
நங்களூர், நறையூர், நனி நால்இசை நாலூர்,
தங்களூர், தமிழான் என்று பாவிக்க வல்ல
எங்களூர், எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 6

கருக்க நஞ்சு அமுதுஉண்ட கல்லாலன், கொல் ஏற்றன்,
தருக்கு அரக்கனைச் செற்று உகந்தான், தன் முடிமேல்
எருக்கநாள்மலர் இண்டையும் மத்தமும் சூடி,
இருக்கும் ஊர் எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 7

தேசனூர்,—வினை தேய நின்றான்—திரு ஆக்கூர்,
பாசனூர்,—பரமேட்டி, பவித்திர பாவ-
நாசன்—ஊர் நனிபள்ளி, நள்ளாற்றை அமர்ந்த
ஈசனூர், எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 8

பேறனூர்,—பிறைச் சென்னியினான்—பெருவேளூர்,
தேறனூர்,—திருமாமகள்கோன் திருமால் ஓர்-
கூறன்—ஊர் குரங்காடுதுறை, திருக் கோவல்,
ஏறனூர், எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதே. 9

ஊறி வாயினன், நாடிய வன்தொண்டன்—ஊரன்—
தேறுவார் சிந்தை தேறும் இடம்—செங்கண்வெள்ஏறு
ஏறுவார்—எய்து அ(ம்)மான் இடையாறு, இடைமருதைக்
கூறுவார் வினை எவ்விட, மெய் குளிர்வாரே. 10

திருக் கோடிக் குழகர்

VII-32

கொல்லி

கடிதுஆய்க் கடல்காற்று வந்து எற்ற, கரைமேல்
குடிதான் அயலே இருந்தால் குற்றம் ஆமோ?
கொடியேன் கண்கள் கண்டன, கோடிக் குழகீர்!
அடிகேள்! உமக்கு ஆர் துணைஆக இருந்தீரே? 1

முன்தான் கடல்நஞ்சம் உண்டஅதனாலோ?
பின்தான் பரவைக்கு உபகாரம் செய்தாயோ?
குன்றாப் பொழில் சூழ்தரு கோடிக் குழகா!
என்தான் தனியே இருந்தாய்? எம்பிரானே! 2

மத்தம் மலி சூழ் மறைக்காடுஅதன் தென்பால்
பத்தர்பலர் பாட இருந்த பரமா!
கொத்து ஆர் பொழில் சூழ்தரு கோடிக் குழகா!—
எத்தால்-தனியே இருந்தாய்? எம்பிரானே! 3

காடேல், மிக வலிது; காரிகை அஞ்ச,
கூடிப் பொந்தில் ஆந்தைகள் கூகை குழற,
வேடித்தொண்டர் சாலவும் தீயர்; சழக்கர்;
கோடிக் குழகா! இடம் கோயில் கொண்டாயே? 4

மைஆர்தடங்கண்ணி பங்கா! கங்கையாளும்
மெய் ஆகத்து இருந்தனள்; வேறு இடம் இல்லை;
கை ஆர் வளைக் காடுகாளோடும் உடன்ஆய்க்
கொய் ஆர் பொழில் கோடியே கோயில்கொண்டாயே. 5

அரவு ஏர் அல்குலாளை ஓர்பாகம் அமர்ந்து,
மரவம் கமழ் மா மறைக்காடுஅதன் தென்பால்
குரவம் பொழில் சூழ்தரு கோடிக் குழகா!
இரவே துணைஆய் இருந்தாய்; எம்பிரானே! 6

பறையும் குழலும்(ம்) ஒலிபாடல் இயம்ப,
அறையும் கழல் ஆர்க்க, நின்று ஆடும் அமுதே!
குறையாப் பொழில் சூழ்தரு கோடிக் குழகா!
இறைவா!—தனியே இருந்தாய்; எம்பிரானே! 7

ஒற்றியூர் என்ற ஊனத்தினால்அதுதானோ?
அற்றப் பட ஆரூர் அது என்று அகன்றாயோ?
முற்றா மதி சூடிய கோடிக் குழகா!
எற்றால்-தனியே இருந்தாய்? எம்பிரானே! 8

நெடியானொடு நான்முகனும்(ம்) அறிவு ஒண்ணாப்
படியான்! பலி கொள்ளும் இடம் குடி இல்லை;
கொடியார் பலர்வேடர்கள் வாழும் கரைமேல்,
அடிகேள்! அன்புஅதுஆய் இடம் கோயில் கொண்டாயே! 9

பார் ஊர் மலி சூழ் மறைக்காடுஅதன் தென்பால்
ஏர் ஆர் பொழில் சூழ்தரு கோடிக் குழகை
ஆரூரன் உரைத்தன பத்துஇவை வல்லார்
சீர் ஊர் சிவலோகத்து இருப்பவர்தாமே. 10

“நமக்கு அடிகள்ஆகிய அடிகள்” VII-33 கொல்லி

பாறு தாங்கிய காடரோ? படுதலையரோ? மலைப்பாவை ஓர்-
கூறு தாங்கிய குழகரோ? குழைக் காதரோ? குறுங் கோட்டு இள
ஏறு தாங்கிய கொடியரோ? சுடுபொடியரோ? இலங்கும் பிறை
ஆறு தாங்கிய சடையரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 1

இட்டிதுஆக வந்து உரைமினோ! நுமக்கு இசையுமா நினைந்து ஏத்துவீர்!
கட்டி வாழ்வது நாகமோ? சடைமேலும் நாறு கரந்தையோ?
பட்டி ஏறு உகந்து ஏறரோ? படுவெண்தலைப் பலி கொண்டு வந்து
அட்டி ஆளவும் கிற்பரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 2

ஒன்றினீர்கள், வந்து உரைமினோ! நுமக்கு இசையுமா நினைந்து ஏத்துவீர்!
குன்றி போல்வது ஓர் உருவரோ? குறிப்புஆகி நீறு கொண்டு அணிவரோ?
இன்றியே இலர் ஆவரோ? அன்றி உடையராய் இலர் ஆவரோ?
அன்றியே மிக அறவரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 3

தேனை ஆடு முக்கண்ணரோ? மிகச் செய்யரோ? வெள்ளைநீற்றரோ?
பால்நெய்ஆடலும் பயில்வரோ? தமைப் பற்றினார்கட்கு நல்லரோ?
மானை மேவிய கண்ணினாள் மலைமங்கைநங்கையை அஞ்ச, ஓர்
ஆனைஈர்உரி போர்ப்பரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 4

கோணல்மாமதி சூடரோ? கொடுகொட்டி, காலர்கழலரோ?
வீணைதான் அவர் கருவியோ? விடை ஏறு வேதமுதல்வரோ?
நாண்அதுஆக ஓர் நாகம் கொண்டு அரைக்கு ஆர்ப்பரோ? நலம் ஆர்தர
ஆணைஆக நம் அடிகளோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 5

வந்து சொல்லுமின், மூடனேனுக்கு! வல்லவா நினைந்து ஏத்துவீர்!
வந்த சாயினை அறிவரோ? தம்மை வாழ்த்தினார்கட்கு நல்லரோ?
புந்தியால் உரை கொள்வரோ? அன்றிப் பொய் இல் மெய் உரைத்து ஆள்வரோ?
அன்றியே மிக அறவரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 6

மெய் என்? சொல்லுமின், நமரங்காள்! உமக்கு இசையுமா நினைந்து ஏத்துவீர்!
கையில் சூலம்அது உடையரோ? கரிகாடரோ? கறைக்கண்டரோ?
வெய்ய பாம்பு அரை ஆர்ப்பரோ? விடை ஏறரோ? கடைதோறும் சென்று
ஐயம் கொள்ளும் அவ் அடிகளோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 7

நீடு வாழ் பதி உடையரோ? அயன் நெடிய மாலுக்கும் நெடியரோ?
பாடுவாரையும் உடையரோ? தமைப் பற்றினார்கட்கு நல்லரோ?
காடுதான் அரங்கு ஆகவே, கைகள்எட்டினோடு இலயம் பட,
ஆடுவார் எனப்படுவரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 8

நமணநந்தியும், கருமவீரனும், தருமசேனனும், என்று இவர்
குமணமாமலைக்குன்று போல் நின்று, தங்கள் கூறை ஒன்று இன்றியே,
‘‘ஞமணம், ஞாஞணம், ஞாணம், ஞோணம்’’ என்று ஓதி யாரையும் நாண்இலா
அமணரால் பழிப்பு உடையரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 9

படி செய் நீர்மையின் பத்தர்காள்! பணிந்து ஏத்தினேன்; பணியீர், அருள்!
வடிவுஇலான் திரு நாவலூரரான்—வனப்பகைஅப்பன், வன்தொண்டன்,
செடியன்ஆகிலும் தீயன்ஆகிலும் தம்மையே மனம் சிந்திக்கும்
அடியன்—ஊரனை ஆள்வரோ?—நமக்கு அடிகள்ஆகிய அடிகளே. 10

திருப் புகலூர்

VII-34

கொல்லி

தம்மையே புகழ்ந்து இச்சை பேசினும் சார்வினும் தொண்டர் தருகிலாப்
பொய்ம்மையாளரைப் பாடாதே, எந்தை புகலூர் பாடுமின், புலவீர்காள்!
இம்மையே தரும், சோறும் கூறையும்; ஏத்தல் ஆம்; இடர் கெடலும் ஆம்;
அம்மையே சிவலோகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 1

மிடுக்குஇலாதானை, ''வீமனே; விறல் விசயனே, வில்லுக்கு இவன்;'' என்று,
கொடுக்கிலாதானை, ''பாரியே!'' என்று, கூறினும் கொடுப்பார் இலை;
பொடிக் கொள் மேனி எம் புண்ணியன் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்!
அடுக்குமேல் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 2

''காணியேல் பெரிது உடையனே! கற்று நல்லனே! சுற்றம், நல் கிளை,
பேணியே விருந்து ஓம்புமே!'' என்று பேசினும் கொடுப்பார் இலை;
பூணி பூண்டு உழப் புள் சிலம்பும் தண் புகலூர் பாடுமின், புலவீர்காள்!
ஆணிஆய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 3

நரைகள் போந்து மெய் தளர்ந்து மூத்து உடல் நடுங்கி நிற்கும் இக் கிழவனை,
''வரைகள் போல்-திரள்தோளனே!'' என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை;
புரை வெள்ஏறு உடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்!
அரையனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 4

வஞ்சம் நெஞ்சனை, மா சழக்கனை, பாவியை, வழக்குஇ(ல்)லியை,
பஞ்சதுட்டனை, ''சாதுவே!'' என்று பாடினும் கொடுப்பார் இலை;
பொன் செய் செஞ்சடைப் புண்ணியன் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்!
நெஞ்சில் நோய் அறுத்து உஞ்சுபோவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 5

நலம்இலாதானை, ''நல்லனே!'' என்று, நரைத்த மாந்தரை, ''இளையனே!'',
குலம்இலாதானை, ''குலவனே!'' என்று, கூறினும் கொடுப்பார் இலை;
புலம்எலாம் வெறி கமழும் பூம் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்!
அலமராது அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 6

நோயனை, ''தடந்தோளனே!'' என்று, நொய்ய மாந்தரை, ''விழுமிய
தாய் அன்றோ, புலவோர்க்கு எலாம்!'' என்று, சாற்றினும் கொடுப்பார் இலை;
போய் உழன்று கண் குழியாதே, எந்தை புகலூர் பாடுமின், புலவீர்காள்!
ஆயம் இன்றிப் போய் அண்டம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 7

எள் விழுந்த இடம் பார்க்கும்ஆகிலும், ஈக்கும் ஈகிலன்ஆகிலும்,
''வள்ளலே! எங்கள் மைந்தனே!'' என்று வாழ்த்தினும் கொடுப்பார் இலை;
புள்எலாம் சென்று சேரும் பூம் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்!
அள்ளல்பட்டு அழுந்தாது போவதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 8

கற்றிலாதானை, ''கற்று நல்லனே!'', ''காமதேவனை ஒக்குமே'',
முற்றிலாதானை, ''முற்றனே!'', என்று மொழியினும் கொடுப்பார் இலை;
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அருப் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்!
அத்தனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 9

''தையலாருக்கு ஒர் காமனே!'' என்றும், ''சால நல அழகு உடை ஐயனே!'',
''கை உலாவிய வேலனே!'' என்று, கழறினும் கொடுப்பார் இலை;
பொய்கை ஆவியில் மேதி பாய் புகலூரைப் பாடுமின், புலவீர்காள்!
ஐயனாய் அமருலகம் ஆள்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 10

செறுவினில் செழுங் கமலம் ஓங்கு தென்புகலூர் மேவிய செல்வனை
நறவம் பூம்பொழில் நாவலூரன்—வனப்பகைஅப்பன், சடையன்தன்-
சிறுவன், தொண்டன், ஊரன்—பாடிய பாடல் பத்துஇவை வல்லவர்
அறவனார் அடி சென்று சேர்வதற்கு யாதும் ஐயுறவு இல்லையே. 11

திருப் புறம்பயம்

VII-35

கொல்லி

அங்கம் ஓதி ஓர் ஆறைமேற்றளிநின்றும் போந்து வந்து இன்னம்பர்த்
தங்கினோமையும், ''இன்னது'' என்றிலர், ஈசனார்; எழு, நெஞ்சமே!
கங்குல் ஏமங்கள் கொண்டு தேவர்கள் ஏத்தி, வானவர்தாம் தொழும்
பொங்கு மால்விடைஏறி செல்வப் புறம்பயம் தொழப் போதுமே. 1

பதியும், சுற்றமும், பெற்ற மக்களும், பண்டையார்அலர்; பெண்டிரும்,
நெதியில் இம் மனை வாழும் வாழ்க்கையும், நினைப்பு ஒழி(ம்), மட நெஞ்சமே!
மதியம் சேர் சடைக் கங்கையான் இடம்—மகிழும், மல்லிகை, சண்பகம்,
புதிய பூ மலர்ந்து எல்லி நாறும்—புறம்பயம் தொழப் போதுமே. 2

புறம் திரைந்து, நரம்பு எழுந்து, நரைத்து, நீ உரையால்-தளர்ந்து,
அறம் புரிந்து நினைப்பது ஆண்மை அரிதுகாண்; இஃது அறிதியேல்,
திறம்பியாது எழு, நெஞ்சமே! சிறுகாலை நாம் உறு வாணியம்,
புறம் பயத்து உறை பூதநாதன் புறம்பயம் தொழப் போதுமே. 3

குற்று ஒரு(வ்)வரைக் கூறை கொண்டு கொலைகள் சூழ்ந்த களவுஎலாம்
செற்று ஒரு(வ்)வரைச் செய்த தீமைகள், இம்மையே வரும், திண்ணமே;
மற்று ஒரு(வ்)வரைப் பற்று இலேன்; மறவாது எழு(ம்), மட நெஞ்சமே!
புற்றுஅர(வ்)வு உடைப் பெற்றம்ஏறி புறம்பயம் தொழப் போதுமே. 4

கள்ளி நீ செய்த தீமைஉள்ளன பாவமும் பறையும்படி
தெள்ளிதா எழு, நெஞ்சமே! செங்கண் சே உடைச் சிவலோகன் ஊர்—
துள்ளி வெள் இள வாளை பாய் வயல்-தோன்று தாமரைப்பூக்கள்மேல்,
புள்ளி நள்ளிகள் பள்ளிகொள்ளும்—புறம்பயம் தொழப் போதுமே. 5

படைஎலாம் பகடு ஆர ஆளிலும், பௌவம் சூழ்ந்து அரசு ஆளிலும்,
கடை எலாம் பினைத் தேரைவால்; கவலாது எழு(ம்), மட நெஞ்சமே!
மடைஎலாம் கழுநீர் மலர்ந்து, மருங்குஎலாம் கரும்பு ஆட, தேன்
புடைஎலாம் மணம் நாறு சோலைப் புறம்பயம் தொழப் போதுமே. 6

முன்னைச் செய்வினை இம்மையில் வந்து மூடும் ஆதலின் முன்னமே,
என்னை நீ தியக்காது எழு(ம்), மட நெஞ்சமே! எந்தை தந்தை ஊர்—
அன்னச்சேவலோடு ஊடிப் பேடைகள் கூடிச் சேரும் அணி பொழில்,
புன்னைக்கன்னிகள் அக்குஅரும்பு—புறம்பயம் தொழப் போதுமே. 7

மலம்எலாம் அறும், இம்மையே; மறுமைக்கும் வல்வினை சார்கிலா;
சலம்எலாம் ஒழி, நெஞ்சமே! எங்கள் சங்கரன் வந்து தங்கும் ஊர்—
கலம்எலாம் கடல் மண்டு, காவிரிநங்கை ஆடிய, கங்கைநீர்
புலம்எலாம் மண்டிப் பொன் விளைக்கும்—புறம்பயம் தொழப் போதுமே. 8

பண்டு அரீயன செய்த தீமையும் பாவமும் பறையும்படி
கண்டு அரீயன கேட்டியேல், கவலாது எழு(ம்),மட நெஞ்சமே!
தொண்டு அரீயன பாடித் துள்ளி நின்று, ஆடி வானவர்தாம் தொழும்—
புண்டரீகம் மலரும் பொய்கை—புறம்பயம் தொழப் போதுமே. 9

துஞ்சியும் பிறந்தும் சிறந்தும் துயக்கு அறாத மயக்குஇவை
அஞ்சி, ஊரன் திருப் புறம்பயத்து அப்பனைத் தமிழ்ச்சீரினால்
நெஞ்சினாலே, ‘‘புறம்பயம் தொழுது உய்தும்’’ என்று நினைத்தன
வஞ்சியாது உரைசெய்ய வல்லவர், வல்லர், வான்உலகு ஆளவே. 10

திருப் பைஞ்ஞீலி VII-36 கொல்லி

கார் உலாவிய நஞ்சை உண்டு இருள் கண்ட! வெண்தலைஓடு கொண்டு,
ஊர்எலாம் திரிந்து, என் செய்வீர்? பலி ஓர் இடத்திலே கொள்ளும், நீர்!
பார்எலாம் பணிந்து உம்மையே பரவிப் பணியும் பைஞ்ஞீலியீர்!
ஆரம் ஆவது நாகமோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 1

சிலைத்து நோக்கும், வெள்ஏறு; செந்தழல் வாய பாம்புஅது மூசெனும்;
பலிக்கு நீர் வரும்போது நும் கையில் பாம்பு வேண்டா, பிரானிரே!—
மலைத்த சந்தொடு, வேங்கை, கோங்கமும், மன்னு கார்அகில், சண்பகம்,
அலைக்கும் பைம்புனல் சூழ்—பைஞ்ஞீலியில் ஆரணீய விடங்கரே! 2

தூயவர், கண்ணும் வாயும் மேனியும்; துன்னஆடை, சுடலையில்
பேயொடு ஆடலைத் தவிரும்! நீர் ஒரு பித்தரோ? எம்பிரானிரே!—
பாயும் நீர்க் கிடங்கு ஆர் கமலமும், பைந் தண் மாதவி, புன்னையும்,
ஆய பைம்பொழில் சூழ்—பைஞ்ஞீலியில் ஆரணீய விடங்கரே! 3

செந்தமிழ்த் திறம் வல்லிரோ? செங்கண் அரவம் முன்கையில் ஆடவே
வந்து நிற்குமிது என்கொலோ? பலி மாற்றமாட்டோம்; இடகிலோம்;
பைந் தண் மா மலர் உந்து சோலைகள் கந்தம் நாறும் பைஞ்ஞீலியீர்!
அந்தி வானம் உம் மேனியோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 4

நீறு நும் திருமேனி நித்திலம்; நீல்நெடுங்கண்ணினாளொடும்
கூறராய் வந்து நிற்றிரால்; கொணர்ந்து இடகிலோம், பலி; நடமினோ!
பாறு வெண்தலை கையில் ஏந்தி, ‘‘பைஞ்ஞீலியேன்’’ என்றீர், அடிகள்நீர்;
ஆறு தாங்கிய சடையரோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 5

குரவம் நாறிய குழலினார் வளை கொள்வதே தொழில்ஆகி நீர்
இரவும் இம் மனை அறிதிரே? இங்கே நடந்து போகவும் வல்லிரே?
பரவி நாள்தொறும் பாடுவார் வினை பற்றுஅறுக்கும் பைஞ்ஞீலியீர்!
அரவம் ஆட்டவும் வல்லிரோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 6

ஏடு உலாம் மலர்க்கொன்றை சூடுதிர்; என்புஎலாம் அணிந்து என் செய்வீர்?
காடு, நும் பதி; ஓடு, கையது; காதல்செய்பவர் பெறுவது என்?
‘‘பாடல் வண்டு இசை ஆலும் சோலைப் பைஞ்ஞீலியேன்’’ என்று நிற்றிரால்;
ஆடல் பாடலும் வல்லிரோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 7

மத்தம்,— மா மலர்,—கொன்றை, வன்னியும், கங்கையாளொடு திங்களும்,
மொய்த்த வெண்தலை, கொக்குஇற(ஃ)கொடு, வெள்எருக்கம், உம் சடைய தாம்;
‘‘பத்தர்சித்தர்கள் பாடி ஆடும் பைஞ்ஞீலியேன்’’ எனறு நிற்றிரால்;
அத்தி ஈர் உரி போர்த்திரோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 8

தக்கை, தண்ணுமை, தாளம், வீணை, தகுணிச்சம், கிணை, சல்லரி,
கொக்கரை, குடமுழவினோடு இசை கூடிப் பாடி நின்று ஆடுவீர்;
‘‘பக்கமே குயில் பாடும் சோலைப் பைஞ்ஞீலியேன்’’ என நிற்றிரால்;
அக்கும் ஆமையும் பூண்டிரோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 9

கை ஒர் பாம்பு, அரை ஆர்த்த ஒர் பாம்பு, கழுத்து ஒர் பாம்பு, அவை பின்பு தாழ்
மெய்எலாம் பொடிக்கொண்டு பூசுதிர்; வேதம் ஓதுதிர்; கீதமும்
பையவே விடங்குஆக நின்று, ''பைஞ்ஞீலியேன்'' என்றீர், அடிகள்நீர்;
ஐயம் ஏற்குமிது என்கொலோ? சொலும்!—ஆரணீய விடங்கரே! 10

அன்னம் சேர் வயல் சூழ் பைஞ்ஞீலியில் ஆரணீய விடங்கரை
மின்னும் நுண்இடை மங்கைமார்பலர் வேண்டிக் காதல் மொழிந்த சொல்
மன்னு தொல்புகழ் நாவலூரன்—வன்தொண்டன்—வாய்மொழி பாடல்பத்து
உன்னி இன்இசை பாடுவார், உமைகேள்வன் சேவடி சேர்வரே. 11

திரு ஆரூர் VII-37 கொல்லி

குருகு பாய, கொழுங் கரும்புகள் நெரிந்த சாறு
அருகு பாயும் வயல் அம் தண் ஆரூரரைப்
பருகும்ஆறும், பணிந்து ஏத்தும்ஆறும், நினைந்து
உருகும்ஆறும்(ம்), இவை உணர்த்த வல்லீர்களே? 1

பறக்கும் எம் கிள்ளைகாள்! பாடும் எம் பூவைகாள்!
அறக்கண் என்னத் தகும் அடிகள்ஆரூரரை
மறக்ககில்லாமையும், வளைகள் நில்லாமையும்,
உறக்கம் இல்லாமையும், உணர்த்த வல்லீர்களே? 2

சூழும் ஓடிச் சுழன்று உழலும் வெண்நாரைகாள்!
ஆளும் அம் பொன்கழல் அடிகள்ஆரூரர்க்கு
வாழும்ஆறும், வளை கழலும்ஆறும்(ம்), எனக்கு
ஊழும் மாறும்(ம்), இவை உணர்த்த வல்லீர்களே? 3

சக்கிரவாளத்து இளம் பேடைகாள்! சேவல்காள்!
அக்கிரமங்கள் செயும் அடிகள்ஆரூரர்க்கு,
வக்கிரம் இல்லாமையும், வளைகள் நில்லாமையும்,
உக்கிரம் இல்லாமையும், உணர்த்த வல்லீர்களே? 4

இலை கொள் சோலைத்தலை இருக்கும் வெண்நாரைகாள்!
அலைகொள் சூலப்படை அடிகள்ஆரூரர்க்கு,
கலைகள் சோர்கின்றதும், கன வளை கழன்றதும்,
முலைகள் பீர் கொண்டதும், மொழிய வல்லீர்களே? 5

வண்டுகாள்! கொண்டல்காள்! வார் மணல் குருகுகாள்!
அண்டவாணர் தொழும் அடிகள்ஆரூரரைக்
கண்டஆறும், காமத்தீக் கனன்று எரிந்து மெய்
உண்டஆறும்(ம்), இவை உணர்த்த வல்லீர்களே? 6

தேன் நலம் கொண்ட தேன்! வண்டுகாள்! கொண்டல்காள்!
ஆன்நலம் கொண்ட எம் அடிகள்ஆரூரர்க்கு,
பால்நலம் கொண்ட எம் பணைமுலை பயந்து பொன்
ஊன் நலம் கொண்டதும் உணர்த்த வல்லீர்களே? 7

சுற்றுமுற்றும் சுழன்று உழலும் வெண்நாரைகாள்!
அற்றம் முற்றப் பகர்ந்து அடிகள்ஆரூரர்க்கு,
பற்று மற்று இன்மையும், பாடு மற்று இன்மையும்,
முற்றும் மற்று இன்மையும், மொழிய வல்லீர்களே? 8

குரவம் நாற, குயில் வண்டுஇனம் பாட, நின்று
அரவம் ஆடும் பொழில் அம் தண் ஆரூரரைப்
பரவி நாடு(ம்)மதும், பாடி நாடு(ம்)மதும்,
உருகி நாடு(ம்)மதும், உணர்த்த வல்லீர்களே? 9

கூடும் அன்னப்பெடைகாள்! குயில்! வண்டுகாள்!
ஆடும் அம் பொன்கழல் அடிகள்ஆரூரரைப்
பாடும்ஆறும், பணிந்து ஏத்தும்ஆறும், கூடி
ஊடும்ஆறும்(ம்), இவை உணர்த்த வல்லீர்களே? 10

நித்தம்ஆக(ந்) நினைந்து உள்ளம் ஏத்தித் தொழும்
அத்தன், அம் பொன்கழல் அடிகள், ஆரூரரைச்
சித்தம்வைத்த புகழ்ச் சிங்கடிஅப்பன்—மெய்ப்-
பத்தன், ஊரன்—சொன்ன பாடுமின், பத்தரே! 11

திரு அதிகைத் திரு வீரட்டானம் VII-38 கொல்லிக்கௌவாணம்

தம்மானை அறியாத சாதியார் உளரே?
சடைமேல் கொள் பிறையானை, விடை மேற்கொள் விகிர்தன்,
கைம்மாவின் உரியானை, கரிகாட்டில் ஆடல்
உடையானை, விடையானை,—''கறை கொண்ட கண்டத்து
அம்மான் தன் அடிக் கொண்டு என் முடிமேல் வைத்திடும்'' என்னும்
ஆசையால் வாழ்கின்ற அறிவு இலா நாயேன்—
எம்மானை, எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 1

முன்னே எம்பெருமானை மறந்து என்கொல்? மறவா-
தொழிந்து என்கொல்? மறவாத சிந்தையால் வாழ்வேன்;
''பொன்னே! நல்மணியே! வெண்முத்தே! செய் பவளக்-
குன்றமே! ஈசன்!'' என்று உன்னையே புகழ்வேன்;
''அன்னே! என் அத்தா!'' என்று அமரரால் அமரப்-
படுவானை, அதிகை மா நகருள் வாழ்பவனை,
என்னே! என் எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 2

''விரும்பினேற்கு எனது உள்ளம் விடகிலா விதியே!
விண்ணவர்தம் பெருமானே! மண்ணவர் நின்று ஏத்தும்
கரும்பே! என் கட்டி!'' என்று உள்ளத்தால் உள்கி,
காதல் சேர் மாதராள்—கங்கையாள் நங்கை—
வரும் புனலும் சடைக்கு அணிந்து, வளராத பிறையும்
வரிஅரவும் உடன்துயில வைத்துஅருளும் எந்தை,
இரும் புனல் வந்து எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 3

நால்-தானத்து ஒருவனை, நான் ஆய பரனை,
நள்ளாற்று நம்பியை, வெள்ளாற்று விதியை,
காற்றானை, தீயானை, கடலானை, மலையின்
தலையானை, கடுங் கலுழிக் கங்கைநீர்வெள்ள-
ஆற்றானை, பிறையானை, அம்மானை, எம்மான்-
தம்மானை, யாவர்க்கும் அறிவு அரிய செங்கண்
ஏற்றானை, எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 4

சேந்தர்தாய்—மலைமங்கை—திருநிறமும் பரிவும்
உடையானை, அதிகை மா நகருள் வாழ்பவனை,
கூந்தல் தாழ் புனல்மங்கை—குயில் அன்ன மொழியாள்—
சடைஇடையில் கயல்இனங்கள் குதிகொள்ளக் குலாவி,—
வாய்ந்த நீர் வர உந்தி மராமரங்கள் வணக்கி,
மறிகடலை இடம் கொள்வான் மலை ஆரம் வாரி—
ஏந்து நீர் எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 5

மைம் மான மணிநீலகண்டத்து எம்பெருமான்,
வல் ஏனக்கொம்பு அணிந்த மா தவனை, வானோர்-
தம்மானை, தலைமகனை, தண்மதியும் பாம்பும்
தடுமாறும் சடையானை, தாழ்வரைக்கை வென்ற
வெம் மான மதகரியின் உரியானை, வேத-
விதியானை, வெண்நீறு சண்ணித்த மேனி
எம்மானை, எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 6

வெய்துஆய வினைக்கடலில் தடுமாறும் உயிர்க்கு
மிக இரங்கி, அருள்புரிந்து, வீடுபேறு ஆக்கம்
பெய்தானை, பிஞ்ஞகனை, மைஞ் ஞவிலும் கண்டத்து
எண்தோள் எம்பெருமானை, பெண்பாகம் ஒருபால்
செய்தானை, செக்கர்வான் ஒளியானை, தீ வாய்
அரவு ஆடு சடையானை, திரிபுரங்கள் வேவ
எய்தானை, எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 7

பொன்னானை, மயில்ஊர்தி முருகவேள் தாதை,
பொடிஆடு திருமேனி, நெடுமால்தன் முடிமேல்-
தென்னானை, குடபாலின் வடபாலின் குணபால்
சேராத சிந்தையான், செக்கர்வான் அந்தி
அன்னானை, அமரர்கள்தம் பெருமானை, கருமான்-
உரியானை, அதிகை மா நகருள் வாழ்பவனை,
என்னானை, எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 8

திருந்தாத வாள் அவுணர் புரம்மூன்றும் வேவச்
சிலை வளைவித்து, ஒரு கணையால்-தொழில் பூண்ட சிவனை,
கருந் தான மதகளிற்றின் உரியானை, பெரிய
கண்மூன்றும் உடையானை,—கருதாத அரக்கன்
பெருந்தோள்கள்நால்-ஐந்தும், ஈர்-ஐந்துமுடியும்,
உடையானைப் பேய்உருவம் ஊன்றும்—உற மலைமேல்
இருந்தானை, எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 9

என்பினையே கலன்ஆக அணிந்தானை, எங்கள்
எருது ஏறும் பெருமானை, இசைஞானிசிறுவன்—
வன் பனைய வளர் பொழில் சூழ் வயல் நாவலூர்க்கோன்,
வன்தொண்டன், ஆரூரன்—மதியாது சொன்ன
அன்பனை, யாவர்க்கும் அறிவு அரிய அத்தர்-
பெருமானை, அதிகை மா நகருள் வாழ்பவனை,
என் பொன்னை, எறி கெடில வடவீரட்டானத்து
உறைவானை, இறைபோதும் இகழ்வன் போல் யானே! 10

திருத்தொண்டத்தொகை VII-39 கொல்லிக்கௌவாணம்

தில்லை வாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்;
திருநீலகண்டத்துக் குயவனார்க்கு அடியேன்;—
இல்லையே என்னாத—இயற்பகைக்கும் அடியேன்;
இளையான்தன்குடிமாறன் அடியார்க்கும் அடியேன்;—
வெல்லுமா மிக வல்ல—மெய்ப்பொருளுக்கு அடியேன்;—
விரி பொழில் சூழ் குன்றையார்—விறல்மிண்டற்கு அடியேன்;—
அல்லி மென் முல்லைஅம்தார்—அமர்நீதிக்கு அடியேன்;
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 1

இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தற்கு அடியேன்;
ஏனாதிநாதன்தன் அடியார்க்கும் அடியேன்;—
கலை மலிந்த சீர் நம்பி—கண்ணப்பற்கு அடியேன்;
கடவூரில் கலயன்தன் அடியார்க்கும் அடியேன்;—
மலை மலிந்த தோள் வள்ளல்—மானக்கஞ்சாறன்,
எஞ்சாத வாள்-தாயன், அடியார்க்கும் அடியேன்;—
அலை மலிந்த புனல் மங்கை—ஆனாயற்கு அடியேன்;
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 2

மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்;
முருகனுக்கும், உருத்திரபசுபதிக்கும், அடியேன்;
செம்மையே திருநாளைப்போவார்க்கும் அடியேன்;
திருக்குறிப்புத்தொண்டர்தம் அடியார்க்கும் அடியேன்;—
மெய்ம்மையே திருமேனி வழிபடாநிற்க,
வெகுண்டு எழுந்த தாதைதாள் மழுவினால் எறிந்த,
அம்மையான் அடி—சண்டிப்பெருமானுக்கு அடியேன்;
ஆரூரான் ஆரூரில் அம்மானுக்கு ஆளே. 3

திரு நின்ற செம்மையே செம்மையாக் கொண்ட
திருநாவுக்கரையன்தன் அடியார்க்கும் அடியேன்;—
பெரு நம்பி—குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்;
பெருமிழலைக்குறும்பற்கும், பேயார்க்கும், அடியேன்;—
ஒரு நம்பி—அப்பூதி அடியார்க்கும் அடியேன்;—
ஒலி புனல் சூழ் சாத்தமங்கை—நீலநக்கற்கு அடியேன்;—
அரு நம்பி—நமிநந்தி அடியார்க்கும் அடியேன்; 4
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

வம்பு அரு வரிவண்டு மணம் நாற மலரும்
மதுமலர்நல்கொன்றையான் அடிஅலால் பேணா—
எம்பிரான்—சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்;
ஏயர்கோன்கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்;—
நம்பிரான்—திருமூலன் அடியார்க்கும் அடியேன்;—
நாட்டம் மிகு—தண்டிக்கும், மூர்க்கற்கும், அடியேன்;—
அம்பரான்—சோமாசிமாறனுக்கும் அடியேன்; 5
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

வார் கொண்ட வனமுலையாள் உமை பங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியற்கும் அடியேன்;—
சீர் கொண்ட புகழ் வள்ளல்—சிறப்புலிக்கும் அடியேன்;—
செங்காட்டங்குடி மேய—சிறுத்தொண்டற்கு அடியேன்;—
கார் கொண்ட கொடை—கழறிற்றறிவார்க்கும் அடியேன்;—
கடல் காழி—கணநாதன் அடியார்க்கும் அடியேன்;—
ஆர் கொண்ட வேல் கூற்றன்—களந்தைக் கோன்—அடியேன்; 6
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

பொய்அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்;—
பொழில் கருவூர்த் துஞ்சிய—புகழ்ச்சோழற்கு அடியேன்;—
மெய்அடியான்—நரசிங்கமுனையரையற்கு அடியேன்;—
விரி திரை சூழ் கடல் நாகை—அதிபத்தற்கு அடியேன்;—
கை தடிந்த வரிசிலையான்—கலிக்கம்பன், கலியன்,
கழல் சத்தி—வரிஞ்சையர்கோன்,—அடியார்க்கும் அடியேன்;
ஐயடிகள்காடவர்கோன் அடியார்க்கும் அடியேன்; 7
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

கறைக்கண்டன் கழல்அடியே காப்புக் கொண்டிருந்த
கணம்புல்லநம்பிக்கும், காரிக்கும், அடியேன்;—
நிறைக் கொண்ட சிந்தையான், நெல்வேலி வென்ற—
நின்ற சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்;—
துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித்
தொல் மயிலை—வாயிலான் அடியார்க்கும் அடியேன்;—
அறைக் கொண்ட வேல் நம்பி—முனையடுவாற்கு அடியேன்; 8
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

கடல் சூழ்ந்த உலகுஎலாம் காக்கின்ற பெருமான்—
காடவர்கோன்—கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்:—
மடல் சூழ்ந்த தார் நம்பி—இடங்கழிக்கும்,—தஞ்சை
மன்னவன்ஆம்—செருத்துணைதன் அடியார்க்கும் அடியேன்;—
புடை சூழ்ந்த புலிஅதள்மேல் அரவு ஆட ஆடி
பொன்அடிக்கே மனம் வைத்த—புகழ்த்துணைக்கும் அடியேன்;—
அடல் சூழ்ந்த வேல் நம்பி—கோட்புலிக்கும் அடியேன்; 9
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

பத்தராய்ப் பணிவார்கள்எல்லார்க்கும் அடியேன்;
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்;
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்;
திரு ஆரூர்ப் பிறந்தார்கள்எல்லார்க்கும் அடியேன்;
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்;
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்;
அப்பாலும் அடிச் சார்ந்த அடியார்க்கும் அடியேன்; 10
ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.

மன்னிய சீர் மறை நாவன்—நின்றவூர்—பூசல்,
வரிவளையாள் மானிக்கும், நேசனுக்கும், அடியேன்;
தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணாற்கு அடியேன்;
திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்;
என்னவன்ஆம் அரன்அடியே அடைந்திட்ட சடையன்,
இசைஞானி, காதலன்—திரு நாவலூர்க் கோன்,
அன்னவன் ஆம் ஆரூரன்—அடிமைகேட்டு உவப்பார் 11
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே.

திருக் காணாட்டுமுள்ளூர் VII-40 கொல்லிக்கௌவாணம்

வள் வாய மதி மிளிரும் வளர்சடையினானை,
மறையவனை, வாய்மொழியை, வானவர்தம் கோனை,
புள் வாயைக் கீண்டு உலகம் விழுங்கி உமிழ்ந்தானை,
பொன்நிறத்தின் முப்புரிநூல் நான்முகத்தினானை,—
முள் வாய மடல்-தழுவி, முடத்தாழை ஈன்று
மொட்டு அலர்ந்து, விரை நாறும் முருகு விரி பொழில் சூழ்,
கள் வாய கருங்குவளை கண்வளரும் கழனி— 1
காணாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே.

ஒரு மேக-முகில்ஆகி, ஒத்து உலகம்தான்ஆய்,
ஊர்வனவும் நிற்பனவும் ஊழிகளும் தான்ஆய்,
பொரு மேவு கடல்ஆகி, பூதங்கள்ஐந்துஆய்,
புனைந்தவனை, புண்ணியனை, புரிசடையினானை,
திரு மேவு செல்வத்தார் தீமூன்றும் வளர்த்த
திருத் தக்க அந்தணர்கள் ஓதும் நகர்—எங்கும்
கருமேதி செந்தாமரை மேயும் கழனி—
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 2

இரும்பு உயர்ந்த முஇலையசூலத்தினானை,
இறையவனை, மறையவனை, எண்குணத்தினானை,
சுரும்பு உயர்ந்த கொன்றையொடு தூ மதியம் சூடும்
சடையானை, விடையானை, சோதி எனும் சுடரை,—
அரும்பு உயர்ந்த அரவிந்தத்து அணி மலர்கள் ஏறி,
அன்னங்கள் விளையாடும் அகன் துறையின் அருகே
கரும்பு உயர்ந்து, பெருஞ் செந்நெல் நெருங்கி விளை கழனி—
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 3

பூளை புனை கொன்றையொடு புரிசடையினானை,
புனல்ஆகி, அனல்ஆகி, பூதங்கள்ஐந்துஆய்,
நாளை இன்று நெருநல்ஆய், ஆகாயம்ஆகி,
நாயிறுஆய், மதியம்ஆய், நின்ற எம்பரனை,—
பாளை படு பைங்கமுகின் சூழல், இளந் தெங்கின்
படு மதம் செய் கொழுந் தேறல் வாய் மடுத்துப் பருகி,
காளைவண்டு பாட, மயில் ஆலும் வளர் சோலை—
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 4

செருக்கு வாய்ப் பைங்கண் வெள்அரவு அரையினானை,
தேவர்கள் சூளாமணியை, செங்கண் விடையானை,
முருக்குவாய் மலர் ஒக்கும் திருமேனியானை,
முன்னிலைஆய் முழுதுஉலகம்ஆய பெருமானை,—
இருக்கு வாய் அந்தணர்கள் எழுபிறப்புள் எங்கும்
வேள்வி இருந்து இரு நிதியம் வழங்கும் நகர், எங்கும்
கருக்கு வாய்ப் பெண்ணையொடு தெங்கு மலி சோலை—
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 5

விடை அரவக் கொடி ஏந்தும் விண்ணவர்தம் கோனை,
வெள்ளத்து மால்அவனும் வேதமுதலானும்
அடிஇணையும் திருமுடியும் காண அரிதுஆய
சங்கரனை, தத்துவனை,—தையல்மடவார்கள்
உடை அவிழ, குழல் அவிழ, கோதை குடைந்துஆட,
குங்குமங்கள் உந்தி வரு கொள்ளிடத்தின் கரைமேல்,
கடைகள் விடு வார் குவளைகளை வாரும் கழனி— 6
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே.

அருமணியை, முத்தினை, ஆன்அஞ்சும்ஆடும்
அமரர்கள்தம் பெருமானை, அருமறையின் பொருளை,
திருமணியை, தீம்கரும்பின் ஊறல் இருந் தேனை,
தெரிவு அரிய மாமணியை, திகழ் தகு செம்பொன்னை,—
குரு மணிகள் கொழித்து இழிந்து சுழித்து இழியும் திரைவாய்க்
கோல்வளையார் குடைந்துஆடும் கொள்ளிடத்தின் கரைமேல்,
கருமணிகள் போல் நீலம் மலர்கின்ற கழனி— 7
கானாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே.

இழை தழுவு வெண்நூலும் மேவு திருமார்பின்
ஈசன், தன் எண்தோள்கள் வீசி எரிஆட,
குழை தழுவு திருக்காதில் கோள் அரவம் அசைத்து,
கோவணம் கொள் குழகனை, குளிர்சடையினானை,—
தழை தழுவு தண் நிறத்த செந்நெல்அத்தன் அயலே
தடந் தரள மென் கரும்பின் தாழ் கிடங்கின் அருகே,
கழை தழுவித் தேன் தொடுக்கும் கழனி சூழ் பழன—
காணாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 8

குனிவு இனிய கதிர் மதியம் சூடு சடையானை,
குண்டலம் சேர் காதவனை, வண்டுஇனங்கள் பாடப்
பனி உதிரும் சடையானை, பால்வெண்நீற்றானை,
பலஉருவும் தன் உருவே ஆய பெருமானை,—
துனிவு இனிய தூய மொழித் தொண்டைவாய் நல்லார்,
தூ நீலம் கண்வளரும் சூழ் கிடங்கின் அருகே
கனிவு இனிய கதலிவனம் தழுவு பொழில்-சோலை—
காணாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 9

தேவி, அம்பொன்மலைக்கோமான்தன் பாவை,—ஆகத்
தனது உருவம் ஒருபாகம் சேர்த்துவித்த பெருமான்;
மேவிய வெந்நரகத்தில் அழுந்தாமை நமக்கு
மெய்ந்நெறியைத் தான் காட்டும் வேதமுதலானை;—
தூவி வாய் நாரையொடு குருகு பாய்ந்து ஆர்ப்ப,
துறைக் கெண்டை மிளிர்ந்து, கயல் துள்ளி விளையாட,
காவிவாய் வண்டுபல பண் செய்யும் கழனி—
காணாட்டுமுள்ளூரில் கண்டு தொழுதேனே. 10

திரையின் ஆர் கடல் சூழ்ந்த தென்இலங்கைக் கோனைச்
செற்றவனை, செஞ்சடைமேல் வெண்மதியினானை,
கரையின் ஆர் புனல் தழுவு கொள்ளிடத்தின் கரைமேல்
காணாட்டுமுள்ளூரில் கண்டு கழல்-தொழுது,
உரையின் ஆர் மதயானை நாவல் ஆரூரன்,
உரிமையால் உரைசெய்த ஒண்தமிழ்கள் வல்லார்—
வரையின் ஆர் வகை ஞாலம் ஆண்டவர்க்கும், தாம் போய்,
வானவர்க்கும்,—தலைவராய் நிற்பர், அவர்தாமே. 11

திருக் கச்சூர் ஆலக்கோயில் VII-41 கொல்லிக்கௌவாணம்

முது வாய் ஓரி கதற, முதுகாட்டு எரி கொண்டு ஆடல் முயல்வானே!
மது வார் கொன்றைப்புதுவீ சூடும் மலையான்மகள்தன் மணவாளா!
கதுவாய்த்தலையில் பலி நீ கொள்ளக் கண்டால் அடியார் கவலாரே?
அதுவே ஆம்ஆறு இதுவோ?—கச்சூர் ஆலக்கோயில் அம்மானே! 1

கச்சு ஏர் அரவு ஒன்று அரையில் அசைத்து, கழலும் சிலம்பும் கலிக்க, பலிக்கு என்று
உச்சம்போதா ஊர்ஊர் திரியக் கண்டால் அடியார் உருகாரே?
இச்சை அறியோம்; எங்கள் பெருமான்! ஏழ்ஏழ்பிறப்பும் எனை ஆள்வாய்!—
அச்சம் இல்லாக் கச்சூர் வடபால் ஆலக்கோயில் அம்மானே! 2

சாலக் கோயில் உள நின் கோயில்; அவை என் தலைமேல் கொண்டாடி
மாலைத் தீர்ந்தேன்; வினையும் துரந்தேன்—வானோர் அறியா நெறியானே!
கோலக் கோயில் குறையாக் கோயில் குளிர் பூங் கச்சூர் வடபாலை
ஆலக்கோயில், கல்லால்நிழல்கீழ் அறம் கட்டுரைத்த அம்மானே! 3

விடையும் கொடியும் சடையும் உடையாய்! மின் நேர் உருவத்து ஒளியானே!
கடையும் புடை சூழ் மணி மண்டபமும் கன்னிமாடம் கலந்து, எங்கும்
புடையும் பொழிலும் புனலும் தழுவி, பூமேல்-திருமாமகள் புல்கி,
அடையும் கழனிப் பழனக் கச்சூர் ஆலக்கோயில் அம்மானே! 4

மேலைவிதியே! வினையின் பயனே! விரவார் புரம்மூன்று எரிசெய்தாய்!
காலை எழுந்து தொழுவார்தங்கள் கவலை களைவாய்! கறைக்கண்டா!
மாலை மதியே! மலைமேல் மருந்தே! மறவேன், அடியேன்;—வயல் சூழ்ந்த
ஆலைக் கழனிப் பழனக் கச்சூர் ஆலக்கோயில் அம்மானே! 5

பிறவாய்; இறவாய்; பேணாய்; மூவாய்; பெற்றம் எறிப் பேய் சூழ்தல்
துறவாய்; மறவாய், சுடுகாடு என்றும் இடமாக் கொண்டு நடம்ஆடி;
ஒறுவாய்த்தலையில் பலி நீ கொள்ளக் கண்டால் அடியார் உருகாரே?
அறவே ஒழியாய்—கச்சூர் வடபால் ஆலக்கோயில் அம்மானே! 6

பொய்யே உன்னைப் புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாக் கொள்வோனே!
மெய்யே! எங்கள் பெருமான்! உன்னை நினைவார்அவரை நினைகண்டாய்!—
மை ஆர் தடங்கண் மங்கை பங்கா! கங்கு ஆர் மதியம் சடை வைத்த
ஐயா! செய்யாய்! வெளியாய்! கச்சூர் ஆலக்கோயில் அம்மானே! 7

ஊனைப் பெருக்கி, உன்னை நினையாதொழிந்தேன், செடியேன்; உணர்வுஇல்லேன்—
கானக் கொன்றை கமழ மலரும் கடிநாறு உடையாய்! கச்சூராய்!
மானைப் புரையும் மடமென்நோக்கிமடவாள் அஞ்ச மறைத்திட்ட
ஆனைத்தோலாய்! ஞானக்கண்ணாய்! ஆலக்கோயில் அம்மானே! 8

காதல்செய்து, களித்து, பிதற்றி, கடிமாமலர் இட்டு உனை ஏத்தி,
ஆதல்செய்யும் அடியார் இருக்க, ஐயம் கொள்வது அழகிதே!
ஓதக் கண்டேன்; உன்னை மறவேன்; உமையாள்கணவா! எனை ஆள்வாய்!—
ஆதல் பழனக் கழனிக் கச்சூர் ஆலக்கோயில் அம்மானே! 9

அன்னம் மன்னும் வயல் சூழ் கச்சூர் ஆலக்கோயில் அம்மானை
உன்ன முன்னும் மனத்து ஆரூரன்—ஆரூரன் பேர் முடி வைத்த
மன்னு புலவன், வயல் நாவலர்கோன், செஞ்சொல் நாவன், வன்தொண்டன்—
பன்னு தமிழ்நூல்மாலை வல்லார்அவர் என் தலைமேல் பயில்வாரே. 10

திரு வெஞ்சமாக்கூடல் VII-42 கொல்லிக்கௌவாணம்

எறிக்கும் கதிர் வேய் உதிர் முத்த(ம்)மொடு,
ஏலம்(ம்), இலவங்கம், தக்கோலம், இஞ்சி,
செறிக்கும் புனலுள் பெய்துகொண்டு, மண்டி,
திளைத்து, எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்—
முறிக்கும் தழை மா முடப்புன்னை, ஞாழல்,
குருக்கத்திகள்மேல் குயில் கூவல் அறா,
வெறிக்கும் கலைமா—வெஞ்சமாக்கூடல் 1
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே.

குளங்கள்பலவும் குழியும் நிறைய,
குட மா மணி சந்தனமும்(ம்) அகிலும்
துளங்கும் புனலுள் பெய்துகொண்டு மண்டி,
திளைத்து, எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்—
வளம் கொள் மதில் மாளிகை, கோபுரமும்,
மணி மண்டபமும்(ம்), இவை மஞ்சுதன்னுள்
விளங்கும் மதி தோய்—வெஞ்சமாக்கூடல் 2
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே.

வரை மான் அனையார்—மயில்சாயல் நல்லார்,
வடிவேல்கண் நல்லார்—பலர் வந்து இறைஞ்ச,
திரை ஆர் புனலுள் பெய்துகொண்டு மண்டி,
திளைத்து, எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்—
நிரை ஆர் கமுகும், நெடுந் தாள்-தெங்கும்,
குறுந் தாள் பலவும், விரவிக் குளிரும்
விரை ஆர் பொழில் சூழ்—வெஞ்சமாக்கூடல்
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே. 3

பண் நேர் மொழியாளை ஓர்பங்கு உடையாய்!
படு காட்டுஅகத்து என்றும் ஓர் பற்று ஒழியாய்!
தண் ஆர் அகிலும், நல சாமரையும்,
அலைத்து எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்—
மண் ஆர் முழவும் குழலும் இயம்ப,
மடவார் நடம்ஆடும்(ம்) மணி அரங்கில்
விண் ஆர் மதி தோய்—வெஞ்சமாக்கூடல்
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே. 4

துளை வெண்குழையும் சுருள் வெண்தோடும்
தூங்கும் காதில்-துளங்கும் படியாய்!
க(ள்)ளையே கமழும் மலர்க்கொன்றையினாய்!
கலந்தார்க்கு அருள்செய்திடும் கற்பகமே!
பி(ள்)ளைவெண்பிறையாய்! பிறங்கும் சடையாய்!
பிறவாதவனே! பெறுதற்கு அரியாய்!
வெ(ள்)ளைமால்விடையாய்! வெஞ்சமாக்கூடல்
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே. 5

தொழுவார்க்கு எளியாய்! துயர் தீர நின்றாய்!
சுரும்பு ஆர் மலர்க்கொன்றை துன்றும் சடையாய்!
உழுவார்க்கு அரிய விடை ஏறி! ஒன்னார்
புரம் தீ எழ ஓடுவித்தாய்! அழகா!
முழவு ஆர் ஒலிபாடலொடு ஆடல் அரு
முதுகாடு அரங்கா நடம்ஆட வல்லாய்!
விழவு ஆர் மறுகின் வெஞ்சமாக்கூடல்
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே. 6

கடம் மா களியானை உரித்தவனே!
கரிகாடு இடமா, அனல் வீசி நின்று
நடம்ஆட வல்லாய்! நரைஏறு உகந்தாய்!
நல்லாய்! நறுங்கொன்றை நயந்தவனே!
படம்ஆயிரம் ஆம் பருத் துத்திப் பைங்கண்
பகுவாய் எயிற்றோடு அழலே உமிழும்
விட வார்அரவா! வெஞ்சமாக்கூடல்
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே. 7

காடும் மலையும் நாடும் இடறி,
கதிர் மா மணி சந்தனமும்(ம்) அகிலும்
சேடன்(ன்) உறையும்(ம்) இடம்தான் விரும்பி,
திளைத்து, எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்—
பாடல் முழவும் குழலும்(ம்) இயம்ப,
பணைத்தோளியர் பாடலொடு ஆடல் அரு,
வேடர் விரும்பும்—வெஞ்சமாக்கூடல்
விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே. 8

கொங்கு ஆர் மலர்க்கொன்றைஅம்தாரவனே!
 கொடுகொட்டி ஓர் வீணை உடையவனே!
பொங்கு ஆடுஅரவும் புனலும் சடைமேல்
 பொதியும் புனிதா! புனம் சூழ்ந்து அழகு ஆர்
துங்கு ஆர் புனலுள் பெய்துகொண்டு மண்டி,
 திளைத்து எற்று சிற்றாறுஅதன் கீழ்க்கரைமேல்—
வெங் கார் வயல் சூழ்—வெஞ்சமாக்கூடல்
 விகிர்தா! அடியேனையும் வேண்டுதியே. 9

''வஞ்சிநுண்இடையார்—மயில்சாயல் அன்னார்,
 வடிவேல்கண் நல்லார்—பலர் வந்து இறைஞ்சும்
வெஞ்சமாக்கூடல் விகிர்தா! அடியேனையும்
 வேண்டுதியே'' என்று தான் விரும்பி,
வஞ்சியாது அளிக்கும் வயல் நாவலர்கோன்—
 வனப்பகைஅப்பன், வன்தொண்டன்—சொன்ன
செஞ்சொல்-தமிழ்மாலைகள்பத்தும் வல்லார்
 சிவலோகத்து இருப்பது திண்ணம் அன்றே! 10

திரு முதுகுன்றம் VII-43 கொல்லிக்கௌவாணம்

நஞ்சி, ''இடை இன்று நாளை'' என்று உம்மை நச்சுவார்
துஞ்சியிட்டால் பின்னைச் செய்வது என்? அடிகேள், சொலீர்!
பஞ்சி இடப் புட்டில் கீறுமோ? பணியீர், அருள்!—
முஞ்சிஇடைச் சங்கம் ஆர்க்கும் சீர் முதுகுன்றரே! 1

ஏரிக் கனகக்கமலம்மலர் அன்ன சேவடி
ஊர்இத்தனையும் திரிந்தக்கால் அவை நோம்கொலோ?—
வாரிக்கண் சென்று வளைக்கப்பட்டு, வருந்திப் போய்,
மூரிக் களிறு முழக்கு அறு முதுகுன்றரே! 2

தொண்டர்கள் பாட, விண்ணோர்கள் ஏத்த உழிதர்வீர்!
பண்டு அகம்தோறும் பலிக்குச் செல்வது பான்மையே?—
கண்டகர் வாளிகள் வில்லிகள் புறங்காக்கும் சீர்
மொண்ட கை வேள்வி முழக்கு அறு முதுகுன்றரே! 3

இளைப்பு அறியீர்; இம்மை ஏத்துவார்க்கு அம்மை செய்வது என்?
விளைப்பு அறியாத வெங் காலனை உயிர் வீட்டினீர்;—
அளைப் பிரியா அரவு அல்குலாளொடு கங்கை சேர்
முளைப்பிறைச் சென்னிச் சடைமுடி முதுகுன்றரே! 4

ஆடி அசைந்து அடியாரும் நீரும் அகம்தொறும்
பாடிப் படைத்த பொருள்எலாம் உமையாளுக்கோ?—
மாடம், மதில், அணி கோபுரம், மணி மண்டபம்,
மூடி முகில் தவழ் சோலை சூழ் முதுகுன்றரே! 5

இழை வளர் நுண்இடை மங்கையொடு இடுகாட்டுஇடைக்
குழை வளர் காதுகள் மோத நின்று குனிப்பதே?—
மழை வளரும் நெடுங்கோட்டுஇடை மதயானைகள்,
முழை வளர் ஆளி, முழக்கு அறு முதுகுன்றரே! 6

சென்று இல்இடைச் செடி நாய் குரைக்க, செடிச்சிகள்
மன்றில்இடைப் பலி தேரப் போவது வாழ்க்கையே?—
குன்றில்இடைக் களிறு ஆளி கொள்ள, குறத்திகள்
முன்றில்இடைப் பிடி கன்று இடும் முதுகுன்றரே! 7

அந்தி திரிந்து அடியாரும் நீரும் அகம்தொறும்
சந்திகள்தோறும் பலிக்குச் செல்வது தக்கதே?—
மந்தி கடுவனுக்கு உண் பழம் நாடி மலைப்புறம்
முந்தி அடி தொழ நின்ற சீர் முதுகுன்றரே! 8

செட்டு நின் காதலி ஊர்கள்தோறும் அறம் செய,
''அட்டுமின், சில்பலிக்கு!'' என்று அகம்கடை நிற்பதே?
பட்டி வெள்ஏறு உகந்து ஏறுவீர்! பரிசு என்கொலோ?—
முட்டி அடி தொழ நின்ற சீர் முதுகுன்றரே! 9

எத்திசையும் திரிந்து ஏற்றக்கால் பிறர் என் சொலார்?
பத்தியினால் இடுவார்இடைப் பலி கொண்மினோ!—
எத்திசையும் திரை ஏற மோதிக் கரைகள்மேல்
முத்தி முத்தாறு வலம்செயும் முதுகுன்றரே! 10

முத்தி முத்தாறு வலம்செயும் முதுகுன்றரைப்
பித்தன் ஒப்பான் அடித்தொண்டன்—ஊரன்—பிதற்று இவை
தத்துவஞானிகள் ஆயினார் தடுமாற்றுஇலார்,
எத்தவத்தோர்களும், ஏத்துவார்க்கு இடர் இல்லையே. 11

பொது: ''முடிப்பது கங்கை'' VII-44 கொல்லிக்கௌவாணம்

முடிப்பது கங்கையும், திங்களும்; செற்றது மூஎயில்;
நொடிப்பதுமாத்திரை நீறு எழக் கணை நூறினார்;
''கடிப்பதும் ஏறும்'' என்று அஞ்சுவன்; திருக்கைகளால்
பிடிப்பது பாம்பு அன்றி இல்லையோ, எம்பிரானுக்கே? 1

தூறு அன்றி ஆடுஅரங்கு இல்லையோ? சுடலைப் பொடி-
நீறு அன்றிச் சாந்தம் மற்று இல்லையோ? இமவான்மகள்
கூறு அன்றிக் கூறு மற்று இல்லையோ? கொல்லைச் சில்லை வெள்-
ஏறு அன்றி ஏறுவது இல்லையோ, எம்பிரானுக்கே? 2

தட்டுஎனும் தட்டுஎனும்,—தொண்டர்காள்!—தடுமாற்றத்தை,—
ஒட்டுஎனும் ஒட்டுஎனும் மா நிலத்து—உயிர் கோறலை;
சிட்டனும், திரிபுரம் சுட்ட தேவர்கள்தேவனை,
வெட்டெனப் பேசன்மின், தொண்டர்காள், எம்பிரானையே! 3

நரி தலை கவ்வ, நின்று ஓரி கூப்பிட, நள்இருள்
எரி தலைப் பேய் புடை சூழ, ஆர் இருள் காட்டுஇடைச்
சிரிதலைமாலை சடைக்கு அணிந்த எம் செல்வனை,
பிரிதலைப் பேசன்மின், தொண்டர்காள், எம்பிரானையே! 4

வேய் அன தோளி மலைமகளை விரும்பிய
மாயம் இல் மாமலைநாடன் ஆகிய மாண்பனை,
ஆயன சொல்லி நின்றார்கள் அல்லல் அறுக்கிலும்,
''பேயனே! பித்தனே!'' என்பரால், எம்பிரானையே! 5

''இறைவன்!'' என்று எம்பெருமானை வானவர் ஏத்தப் போய்,
துறை ஒன்றி, தூ மலர் இட்டு, அடிஇணை போற்றுவார்;
மறை அன்றிப் பாடுவது இல்லையோ? மல்கு வான்இளம்-
பிறை அன்றிச் சூடுவது இல்லையோ, எம்பிரானுக்கே? 6

தாரும், தண்கொன்றையும் கூவிளம் தனி மத்தமும்;
ஆரும் அளவு, அறியாத ஆதியும் அந்தமும்;
ஊரும், ஒன்று இல்லை,—உலகுஎலாம்,—உகப்பார் தொழப்
பேரும் ஓர்ஆயிரம் என்பரால், எம்பிரானுக்கே. 7

அரியொடு பூமிசையானும் ஆதியும் அறிகிலார்;
வரிதரு பாம்பொடு வன்னி திங்களும் மத்தமும்
புரிதரு புன்சடை வைத்த எம் புனிதற்கு, இனி
எரி அன்றி அங்கைக்கு ஒன்று இல்லையோ, எம்பிரானுக்கே? 8

கரிய மனச் சமண் காடி ஆடு கழுக்களால்
எரிய வசவுணும் தன்மையோ? இமவான்மகள்
பெரிய மனம் தடுமாற வேண்டி,—பெம்மான்—மதக்-
கரியின்உரிஅல்லது இல்லையோ, எம்பிரானுக்கே? 9

காய்சின மால்விடை மாணிக்கத்து, எம் கறைக்கண்டத்து,
ஈசனை ஊரன் எட்டோடுஇரண்டு விரும்பிய—
ஆயின சீர்ப் பகைஞானிஅப்பன், அடித்தொண்டன்தான்,
ஏசின—பேசுமின், தொண்டர்காள், எம்பிரானையே! 10

திரு ஆமாத்தூர் VII-45 கொல்லிக்கௌவாணம்

காண்டனன்காண்டனன், காரிகையாள்தன் கருத்தனாய்
ஆண்டனன்ஆண்டனன்; ஆமாத்தூர் எம் அடிகட்கு ஆட்-
பூண்டனன்பூண்டனன்; பொய் அன்று; சொல்லுவன்; கேண்மின்கள்:
மீண்டனன்மீண்டனன், வேதவித்து அல்லாதவர்கட்கே. 1

பாடுவன்பாடுவன்,— பார்ப் பதிதன் அடி பற்றி,—நான்
தேடுவன்தேடுவன்; திண்ணெனப் பற்றிச் செறிதர
ஆடுவன்ஆடுவன்,—ஆமாத்தூர் எம் அடிகளை,—
கூடுவன்கூடுவன், குற்றம்அது அற்று என் குறிப்பொடே. 2

காய்ந்தவன்காய்ந்தவன், கண்அழலால் அன்று காமனை;
பாய்ந்தவன்பாய்ந்தவன், பாதத்தினால் அன்று கூற்றத்தை;
ஆய்ந்தவன்ஆய்ந்தவன்,—ஆமாத்தூர் எம் அடிகளார்,— 3
ஏய்ந்தவன்ஏய்ந்தவன், எம்பிராட்டியைப் பாகமே.

ஓர்ந்தனன்ஓர்ந்தனன்,—உள்ளத்துள்ளே நின்ற ஒண் பொருள்,—
சேர்ந்தனன்சேர்ந்தனன், சென்று திரு ஒற்றியூர் புக்கு;
சார்ந்தனன்சார்ந்தனன், சங்கிலி மென்தோள் தடமுலை; 4
ஆர்ந்தனன்ஆர்ந்தனன், ஆமாத்தூர் ஐயன் அருள்அதே.

வென்றவன்வென்றவன், வேள்வியில் விண்ணவர்தங்களை;
சென்றவன்சென்றவன், சில்பலிக்கு என்று தெருஇடை;
நின்றவன்நின்றவன், நீதி நிறைந்தவர்தங்கள்பால்; 5
அன்று அவன் அன்று அவன், செய் அருள்;—ஆமாத்தூர் ஐயனே.

காண்டவன்காண்டவன், காண்டற்கு அரிய கடவுளாய்;
நீண்டவன்நீண்டவன், நாரணன் நான்முகன் நேடவே;
ஆண்டவன்ஆண்டவன், ஆமாத்தூரையும் எனையும் ஆள்; 6
பூண்டவன்பூண்டவன், மார்பில் புரிநூல் புரளவே.

எண்ணவன்எண்ணவன், ஏழ்உலகத்து உயிர்தங்கட்கு;
கண் அவன் கண் அவன், ''காண்டும்'' என்பார்அவர்தங்கட்கு;
பெண் அவன் பெண் அவன், மேனி ஓர்பாகம்; ஆம், பிஞ்ஞகன்;
அண்ணவன்அண்ணவன்—ஆமாத்தூர் எம் அடிகளே. 7

பொன்னவன்பொன்னவன்; பொன்னைத் தந்து என்னைப் போக விடா
மின்னவன்மின்னவன்; வேதத்தின் உள்பொருள் ஆகிய
அன்னவன்அன்னவன்; ஆமாத்தூர் ஐயனை ஆர்வத்தால்
''என்னவன்என்னவன்!'' என் மனத்து இன்புற்று இருப்பனே. 8

தேடுவன்தேடுவன், செம்மலர்ப்பாதங்கள் நாள்தொறும்;
நாடுவன்நாடுவன், நாபிக்கு மேலே ஓர்நால்விரல்;
மா(ட்)டுவன்மா(ட்)டுவன், வன் கை பிடித்து; மகிழ்ந்து உளே
ஆடுவன்ஆடுவன், ஆமாத்தூர் எம் அடிகளே. 9

உற்றனன், உற்றவர்தம்மை ஒழிந்து, உள்ளத்து உள்பொருள்
பற்றினன்; பற்றினன், பங்கயச்சேவடிக்கே செல்ல;
அற்றனன்அற்றனன்; ஆமாத்தூர்மேயான்அடியார்கட்கு ஆட்-
பெற்றனன்பெற்றனன், பெயர்த்தும்பெயர்த்தும் பிறவாமைக்கே. 10

ஐயனை, அத்தனை, ஆள்உடை ஆமாத்தூர் அண்ணலை,
மெய்யனை, மெய்யர்க்கு மெய்ப்பொருள்ஆன விமலனை,
மையனை, மை அணி கண்டனை, வன்தொண்டன்—ஊரன்—சொல்
பொய் ஒன்றும் இன்றிப் புலம்புவார் பொன்கழல் சேர்வரே. 11

திரு நாகைக்காரோணம் VII-46 கொல்லிக்கௌவாணம்

பத்துஊர் புக்கு, இரந்து, உண்டு, பலபதிகம் பாடி,
    பாவையரைக் கிறி பேசிப் படிறுஆடித் திரிவீர்;
செத்தார்தம் எலும்பு அணிந்து சே ஏறித் திரிவீர்;
    செல்வத்தை மறைத்து வைத்தீர்; எனக்கு ஒரு நாள் இரங்கீர்;
முத்துஆரம், இலங்கி-மிளிர் மணிவயிரக்கோவை-
    அவை, பூணத் தந்துஅருளி, மெய்க்கு இனிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்துஅருளவேண்டும்—
    கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 1

வேம்பினொடு தீம்கரும்பு விரவி எனைத் தீற்றி,
    விருத்தி நான் உமை வேண்ட, துருத்தி புக்கு அங்கு இருந்தீர்;
பாம்பினொடு படர்சடைகள்அவை காட்டி வெருட்டிப்
    பகட்ட நான் ஒட்டுவனோ? பலகாலும் உழன்றேன்;—
சேம்பினோடு செங்கழுநீர் தண் கிடங்கில்-திகழும்—
    திரு ஆரூர் புக்கு இருந்த தீவண்ணர் நீரே;
காம்பினொடு நேத்திரங்கள் பணித்துஅருளவேண்டும்—
    கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 2

பூண்டது ஓர் இள ஆமை; பொருவிடை ஒன்று ஏறி,
    பொல்லாத வேடம் கொண்டு, எல்லாரும் காணப்
பாண் பேசி, படுதலையில் பலி கொள்கை தவிரீர்;
    பாம்பினொடு படர்சடைமேல் மதி வைத்த பண்பீர்;
வீண் பேசி மடவார் கை வெள்வளைகள் கொண்டால்,
    வெற்புஅரையன்மடப்பாவை பொறுக்குமோ? சொல்லீர்—
காண்பு இனிய மணி மாடம் நிறைந்த நெடுவீதிக்
    கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 3

விட்டது ஓர் சடை தாழ, வீணை விடங்குஆக,
வீதி விடை ஏறுவீர்; வீண் அடிமை உகந்தீர்;
துட்டர்ஆயின பேய்கள் சூழ நடம்ஆடிச்
சுந்தரராய்த் தூ மதியம் சூடுவது சுவண்டே?
வட்டவார்குழல் மடவார்தம்மை மயல் செய்தல்
மா தவமோ? மாதிமையோ? வாட்டம்எலாம் தீரக்
கட்டி எமக்கு ஈவதுதான் எப்போது? சொல்லீர்—
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 4

மிண்டாடித் திரிதந்து, வெறுப்பனவே செய்து,
வினைக்கேடுபல பேசி, வேண்டியவா திரிவீர்;
தொண்டாடித் திரிவேனைத் தொழும்பு தலைக்கு ஏற்றும்
சுந்தரனே! கந்தம் முதல் ஆடை ஆபரணம்
பண்டாரத்தே எனக்குப் பணித்துஅருளவேண்டும்;
பண்டுதான் பிரமாணம் ஒன்று உண்டே? நும்மைக்
கண்டார்க்கும் காண்பு அரிதுஆய்க் கனல் ஆகி நிமிர்ந்தீர்—
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 5

இலவஇதழ்வாய் உமையோடு எருது ஏறி, பூதம்
இசை பாட, இடு பிச்சைக்கு எச்சு உச்சம்போது,
பலஅகம் புக்கு, உழிதர்வீர்; பட்டோடு சாந்தம்
பணித்துஅருளாது இருக்கின்ற பரிசு என்ன படிறே?
உலவு திரைக் கடல் நஞ்சை, அன்று, அமரர் வேண்ட
உண்டு அருளிச்செய்தது, உமக்கு இருக்க ஒண்ணாது இடவே;—
கலவமயில்இயலவர்கள் நடம்ஆடும் செல்வக்
கடல்நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 6

தூசு உடைய அகல்அல்குல்-தூ மொழியாள் ஊடல்
தொலையாத காலத்து ஓர் சொல்பாடுஆய் வந்து,
தேசு உடைய இலங்கையர்கோன் வரை எடுக்க அடர்த்து,
திப்பிய கீதம் பாட, தேரொடு வாள் கொடுத்தீர்;
நேசம் உடை அடியவர்கள் வருந்தாமை அருந்த,
நிறை மறையோர் உறை வீழிமிழலைதனில் நித்தல்
காசு அருளிச்செய்தீர்; இன்று எனக்கு அருளவேண்டும்—
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 7

மாற்றம் மேல் ஒன்று உரையீர்; வாளா நீர் இருந்தீர்;
''வாழ்விப்பன்'' என ஆண்டீர்; வழி அடியேன், உமக்கு;
ஆற்றவேல்-திரு உடையீர்; நல்கூர்ந்தீர்அல்லீர்;
அணி ஆரூர் புகப் பெய்த அரு நிதியம்அதனில்-
தோற்றம் மிகு முக்கூற்றில் ஒரு கூறு வேண்டும்;
தாரீரேல், ஒருபொழுதும் அடி எடுக்கல் ஒட்டேன்;
காற்று அனைய கடும் பரிமா ஏறுவது வேண்டும்—
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 8

மண்ணுலகும் விண்ணுலகும் உ(ம்)மதே ஆட்சி;
மலைஅரையன்பொன்பாவை, சிறுவனையும், தேறேன்;
எண்ணிலி உண் பெருவயிறன் கணபதி ஒன்று அறியான்;
எம்பெருமான்! இது தகவோ? இயம்பி அருள்செய்வீர்!
திண்ணென என் உடல் விருத்தி தாரீரேஆகில்,
திருமேனி வருந்தவே வளைக்கின்றேன்; நாளை,
''கண்ணறையன், கொடும்பாடன்'' என்று உரைக்க வேண்டா—
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 9

மறி ஏறு கரதலத்தீர்; மாதிமையேல் உடையீர்;
"மா நிதியம் தருவன்" என்று வல்லீராய் ஆண்டீர்;
கிறி பேசி, கீழ்வேளூர் புக்கு, இருந்தீர்; அடிகேள்!
கிறி உம்மால் படுவேனோ? திருஆணை உண்டேல்,
பொறி விரவு நல் புகர் கொள் பொன் சுரிகை மேல் ஓர்
பொன்பூவும் பட்டிகையும் புரிந்துஅருளவேண்டும்;
கறி விரவு நெய்சோறு முப்போதும் வேண்டும்—
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீரே! 10

"பண் மயத்த மொழிப் பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றுஆய பெருமானே! மற்று ஆரை உடையேன்?
உள் மயத்த உமக்கு அடியேன் குறை தீர்க்கவேண்டும்;
ஒளி முத்தம், பூண் ஆரம், ஒண் பட்டும், பூவும்,
கண் மயத்த கத்தூரி, கமழ்சாந்தும், வேண்டும்—
கடல் நாகைக்காரோணம் மேவி இருந்தீர்!" என்று
அண் மயத்தால் அணி நாவல் ஆரூரன் சொன்ன
அருந்தமிழ்கள்இவை வல்லார் அமருலகு ஆள்பவரே. 11

ஊர்த்தொகை VII-47 பழம்பஞ்சுரம்

காட்டூர்க் கடலே! கடம்பூர் மலையே! கானப்பேரூராய்!
கோட்டூர்க் கொழுந்தே! அழுந்தூர் அரசே! கொழு நல் கொல் ஏறே!
பாட்டு ஊர் பலரும் பரவப்படுவாய்! பனங்காட்டூரானே!
மா(ட்)டு ஊர் அறவா!—மறவாது உன்னைப் பாடப் பணியாயே! 1

கொங்கில் குறும்பில் குரக்குத்தளியாய்! குழகா! குற்றாலா!
மங்குல்-திரிவாய்! வானோர்தலைவா! வாய்மூர் மணவாளா!
சங்கக்குழை ஆர் செவியா! அழகா! அவியா அனல் ஏந்திக்
கங்குல் புறங்காட்டுஆடீ!—அடியார் கவலை களையாயே! 2

நிறைக் காட்டானே! நெஞ்சத்தானே! நின்றியூரானே!
மிறை(க்) காட்டானே! புனல் சேர் சடையாய்! அனல் சேர் கையானே!
மறைக்காட்டானே! திரு மாந்துறையாய்! மாகோணத்தானே!
இறை(க்) காட்டாயே, எங்கட்கு உன்னை! எம்மான்தம்மானே! 3

ஆரூர் அத்தா! ஐயாற்று அமுதே! அளப்பூர் அம்மானே!
கார் ஊர் பொழில்கள் புடை சூழ் புறவில் கருகாவூரானே!
பேரூர் உறைவாய்! பட்டிப் பெருமான்! பிறவா நெறியானே!
பார் ஊர் பலரும் பரவப்படுவாய்! பாரூர் அம்மானே! 4

மருகல் உறைவாய்! மாகாளத்தாய்! மதியம் சடையானே!
அருகல் பிணி நின் அடியார்மேல அகல அருளாயே!
கருகல்குரலாய்! வெண்ணிக் கரும்பே! கானூர்க் கட்டியே!
பருகப் பணியாய், அடியார்க்கு உன்னை! பவளப்படியானே! 5

தாம் கூர் பிணி நின் அடியார்மேல அகல அருளாயே—
வேங்கூர் உறைவாய்! விளமர்நகராய்! விடை ஆர் கொடியானே!
நாங்கூர் உறைவாய்! தேங்கூர்நகராய்! நல்லூர் நம்பானே!
பாங்கு ஊர் பலி தேர் பரனே! பரமா! பழனப்பதியானே! 6

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந் தாராய்!
வானைக் காவல் கொண்டு நின்றார் அறியா நெறியானே!
ஆனைக்காவில் அரனே! பரனே! அண்ணாமலையானே!—
ஊனைக் காவல் கைவிட்டு, உன்னை உகப்பார் உணர்வாரே. 7

துருத்திச் சுடரே! நெய்த்தானத்தாய்! சொல்லாய், கல்லாலா!
பரு(த்)திநியமத்து உறைவாய்! வெயில்ஆய், பலஆய், காற்றுஆனாய்;
திருத்தித்திருத்தி வந்து, என் சிந்தை இடம்கொள் கயிலாயா!
அருத்தித்து, உன்னை அடைந்தார் வினைகள் அகல அருளாயே! 8

புலியூர்ச் சிற்றம்பலத்தாய்! புகலூர்ப் போதா! மூதூரா!
பொலி சேர் புரம்மூன்று எரியச் செற்ற புரிபுன்சடையானே!
வலி சேர் அரக்கன் தடக்கைஐஞ்ஞான்கு அடர்த்த மதிசூடீ!
கலி சேர் புறவில் கடவூர்ஆளீ! காண அருளாயே! 9

கைம்மாஉரிவை அம்மான் காக்கும் பலஊர் கருத்து உன்னி,
மைம் மாந் தடங்கண் மதுரம் அன்ன மொழியாள் மடச்சிங்கடி-
தம்மான்—ஊரன், சடையன்சிறுவன், அடியன்—தமிழ்மாலை
செம்மாந்து இருந்து திருவாய் திறப்பார் சிவலோகத்தாரே. 10

திருப் பாண்டிக்கொடுமுடி VII-48 பழம்பஞ்சுரம்

மற்றுப் பற்று எனக்கு இன்றி, நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்;
பெ(ற்)றலும் பிறந்தேன்; இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்;
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக்கொடுமுடி
நல்-தவா! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாய்வே. 1

இட்டன் நும் அடி ஏத்துவார் இகழ்ந்திட்ட நாள், மறந்திட்ட நாள்,
''கெட்ட நாள் இவை'' என்றுஅலால் கருதேன்; கிளர் புனல் காவிரி
வட்டவாசிகை கொண்டு அடி தொழுது ஏத்து பாண்டிக்கொடுமுடி
நட்டவா! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே. 2

ஓவு நாள், ''உணர்வு அழியும் நாள், உயிர் போகும் நாள், உயர் பாடைமேல்
காவு நாள் இவை'' என்றுஅலால் கருதேன், கிளர் புனல்காவிரிப்
பாவு தண்புனல் வந்து இழி—பரஞ்சோதி!—பாண்டிக்கொடுமுடி
நாவலா! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே. 3

எல்லை இல் புகழ் எம்பிரான், எந்தைதம்பிரான், என் பொன் மாமணி,—
கல்லை உந்தி வளம் பொழிந்து இழி காவிரிஅதன்வாய்க் கரை,
நல்லவர் தொழுது ஏத்தும் சீர்—கறையூரில் பாண்டிக்கொடுமுடி
வல்லவா! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே. 4

''அஞ்சினார்க்கு அரண் ஆதி'' என்று அடியேனும்நான் மிக அஞ்சினேன்;
''அஞ்சல்!'' என்று அடித்தொண்டனேற்கு அருள் நல்கினாய்க்கு அழிகின்றது என்?
பஞ்சின் மெல்அடிப் பாவைமார் குடைந்து ஆடு பாண்டிக்கொடுமுடி 5
நஞ்சு அணி கண்ட! நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே.

ஏடு வான் இளந்திங்கள் சூடினை; என், பின்? கொல் புலித் தோலின்மேல்
ஆடு பாம்புஅது அரைக்கு அசைத்த அழகனே! அம் தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்து இழி—பரஞ்சோதி!—பாண்டிக்கொடுமுடி 6
சேடனே! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே.

விரும்பி நின் மலர்ப்பாதமே நினைந்தேன்; வினைகளும் விண்டனன்;
நெருங்கி வண்பொழில் சூழ்ந்து எழில் பெற நின்ற காவிரிக்கோட்டுஇடை—
குரும்பைமென்முலைக் கோதைமார் குடைந்துஆடு—பாண்டிக்கொடுமுடி 7
விரும்பனே! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே.

செம்பொன் நேர் சடையாய்! திரிபுரம் தீ எழச் சிலை கோலினாய்!
வம்பு உலாம் குழலாளைப் பாகம் அமர்ந்து காவிரிக்கோட்டிடை—
கொம்பின்மேல் குயில் கூவ, மா மயில் ஆடு—பாண்டிக்கொடுமுடி
நம்பனே! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே. 8

''சாரணன், தந்தை, எம்பிரான், எந்தைதம்பிரான், என் பொன், மாமணி'' என்று
பேர்எண்ஆயிரகோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்;
நாரணன், பிரமன், தொழும் கறையூரில் பாண்டிக்கொடுமுடிக்
காரணா! உனை நான் மறக்கினும் சொல்லும், நா நமச்சிவாயவே. 9

கோணிய பிறை சூடியை, கறையூரில் பாண்டிக்கொடுமுடி
பேணிய பெருமானை, பிஞ்ஞகப்பித்தனை, பிறப்புஇ(ல்)லியை,
பாண் உலா வரிவண்டு அறை கொன்றைத்தாரனை, படப்பாம்பு அரை-
நாணனை, தொண்டன்ஊரன் சொல்இவை சொல்லுவார்க்கு இல்லை, துன்பமே. 10

திரு முருகன்பூண்டி VII-49 பழம்பஞ்சுரம்

கொடுகு வெஞ்சிலை வடுகவேடுவர், விரவலாமை சொல்லி,
''திடுகு மொட்டு'' எனக் குத்தி, கூறை கொண்டு, ஆறுஅலைக்கும் இடம்—
முடுகு நாறிய வடுகர் வாழ்—முருகன்பூண்டி மா நகர்வாய்,
இடுகு நுண்இடை மங்கைதன்னொடும் எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 1

வில்லைக் காட்டி வெருட்டி, வேடுவர், விரவலாமை சொல்லிக்
கல்லினால் எறிந்திட்டும், மோதியும், கூறை கொள்ளும் இடம்—
முல்லைத்தாது மணம் கமழ்—முருகன்பூண்டி மா நகர்வாய்,
எல்லைக் காப்பது ஒன்று இல்லைஆகில், நீர் எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 2

பசுக்களே கொன்று தின்று, பாவிகள், பாவம் ஒன்று அறியார்,
உசிர்க்கொலைபல நேர்ந்து, நாள்தொறும் கூறை கொள்ளும் இடம்—
முசுக்கள் போல் பலவேடர் வாழ்—முருகன்பூண்டி மா நகர்வாய்,
இசுக்கு அழியப் பயிக்கம் கொண்டு, நீர் எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 3

பீறல் கூறை உடுத்து, ஓர் பத்திரம் கட்டி, வெட்டனராய்,
சூறைப் பங்கியர்ஆகி, நாள்தொறும் கூறை கொள்ளும் இடம்—
மோறை வேடுவர் கூடி வாழ்—முருகன்பூண்டிமா நகர்வாய்,
ஏறு கால் இற்றது இல்லைஆய்விடில், எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 4

தயங்கு தோலை உடுத்த சங்கரா! சாமவேதம்ஓதீ!
மயங்கி ஊர் இடு பிச்சை கொண்டு உணும் மார்க்கம் ஒன்று அறியீர்;
முயங்கு பூண் முலை மங்கையாளொடு முருகன்பூண்டிநகர்வாய்,
இயங்கவும் மிடுக்கு உடையராய்விடில், எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 5

விட்டு இசைப்பன, கொக்கரை, கொடுகொட்டி, தத்தளகம்,
கொட்டிப் பாடும் துந்துமியொடு, குடமுழா, நீர் மகிழ்வீர்;
மொட்டு அலர்ந்து மணம் கமழ் முருகன்பூண்டி மா நகர்வாய்,
இட்ட பிச்சை கொண்டு உண்பதுஆகில், நீர் எத்துக்கு
இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 6

வேதம் ஓதி, வெண்நீறு பூசி, வெண்கோவணம் தற்று, அயலே
ஓதம் மேவிய ஒற்றியூரையும் உத்தரம் நீர் மகிழ்வீர்;
மோதி வேடுவர் கூறை கொள்ளும் முருகன்பூண்டி மா நகர்வாய்,
ஏது காரணம் ஏது காவல் கொண்டு, எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 7

படஅரவு நுண் ஏர் இடை, பணைத்தோள், வரிநெடுங்கண்,
மடவரல்(ல்)உமைநங்கைதன்னை ஓர்பாகம் வைத்து உகந்தீர்;
முடவர் அல்லீர்; இடர் இலீர்; முருகன்பூண்டி மா நகர்வாய்,
இடவம் ஏறியும் போவதுஆகில், நீர் எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே! 8

சாந்தம் ஆக வெண்நீறு பூசி, வெண்பல்-தலை கலனா,
வேய்ந்த வெண்பிறைக் கண்ணிதன்னை ஓர் பாகம் வைத்து உகந்தீர்;
மோந்தையோடு முழக்கு அறா முருகன்பூண்டி மா நகர்வாய்,
ஏந்து பூண் முலை மங்கைதன்னொடும் எத்துக்கு இங்கு இருந்தீர்? எம்பிரானீரே. 9

முந்தி வானவர்தாம் தொழும் முருகன்பூண்டி மா நகர்வாய்ப்
பந்து அணை விரல் பாவைதன்னை ஓர்பாகம் வைத்தவனைச்
சிந்தையில் சிவதொண்டன்ஊரன் உரைத்தனபத்தும்கொண்டு
எம்தம் அடிகளை ஏத்துவார் இடர் ஒன்றும் தாம் இலரே. 10

திருப் புனவாயில் VII-50 பழம்பஞ்சுரம்

சித்தம்! நீ நினை! என்னொடு சூள் அறு, வைகலும்!
மத்தயானையின் ஈர்உரி போர்த்த மணாளன் ஊர்—
பத்தர்தாம்பலர் பாடி நின்று ஆடும் பழம் பதி,
பொத்தில் ஆந்தைகள் பாட்டு அறா—புனவாயிலே. 1

கருது நீ, மனம்! என்னொடு சூள் அறு, வைகலும்!
எருது மேற்கொளும் எம்பெருமாற்கு இடம்ஆவது—
மருதவானவர் வைகும் இடம், மற வேடுவர்
பொருது, சாத்தொடு, பூசல் அறா—புனவாயிலே. 2

தொக்குஆய மனம்! என்னொடு சூள் அறு, வைகலும்!
நக்கான், நமை ஆள்உடையான், நவிலும்(ம்) இடம்—
அக்கோடு அரவு ஆர்த்த பிரான் அடிக்கு அன்பராய்ப்
புக்கார்அவர் போற்று ஒழியா—புனவாயிலே. 3

வற்கென்று இருத்திகண்டாய், மனம்! என்னொடு சூள் அறு, வைகலும்!
பொன்குன்றம் சேர்ந்தது ஓர் காக்கை பொன் ஆம்; அதுவே புகல்—
கல்குன்றும், தூறும், கடு வெளியும், கடல் கானல்வாய்ப்
புற்கென்று தோன்றிடும்—எம்பெருமான் புனவாயிலே. 4

நில்லாய், மனம்! என்னொடு சூள் அறு, வைகலும்!
நல்லான் நமை ஆள்உடையான் நவிலும்(ம்) இடம்—
வில்வாய்க் கணை வேட்டுவர் ஆட்ட, வெகுண்டு போய்ப்
புல்வாய்க்கணம் புக்கு ஒளிக்கும்—புனவாயிலே. 5

மறவல் நீ, மனம்! என்னொடு சூள் அறு, வைகலும்!
உறவும் ஊழியும்ஆய பெம்மாற்கு இடம்ஆவது—
பிறவு கள்ளியின் நீள் கவட்டு ஏறித் தன் பேடையைப்
புறவம் கூப்பிடப் பொன் புனம் சூழ்—புனவாயிலே. 6

ஏசு அற்று நீ நினை, என்னொடு சூள் அறு, வைகலும்!
பாசுஅற்றவர் பாடி நின்று ஆடும் பழம் பதி—
தேசத்து அடியவர் வந்து இருபோதும் வணங்கிடப்
பூசல்-துடி பூசல் அறா—புனவாயிலே. 7

கொள்ளிவாயின கூர்எயிற்று ஏனம் கிழிக்கவே
தெள்ளி மா மணி தீவிழிக்கும்(ம்) இடம்—செந் தறை
கள்ளி வற்றி, புல் தீந்து, வெங் கானம் கழிக்கவே,
புள்ளி மான்இனம் புக்கு ஒளிக்கும்—புனவாயிலே. 8

எற்றே, நினை!—என்னொடும் சூள் அறு, வைகலும்!
மற்று ஏதும் வேண்டா, வல்வினைஆயின மாய்ந்து அற;—
கல்-தூறு கார்க் காட்டுஇடை மேய்ந்த கார்க்கோழி போயப்
புற்று ஏறி, ''கூ கூ'' என அழைக்கும் புனவாயிலே. 9

பொடிஆடு மேனியன் பொன் புனம் சூழ் புனவாயிலை
அடியார்அடியன்—நாவல ஊரன்—உரைத்தன
மடியாது கற்று இவை ஏத்த வல்லார், வினை மாய்ந்து போய்க்
குடிஆக, பாடி நின்று ஆட வல்லார்க்கு இல்லை, குற்றமே. 10

திரு ஆரூர் VII-51 பழம்பஞ்சுரம்

பத்திமையும் அடிமையையும் கைவிடுவான், பாவியேன்
பொத்தின நோய்அதுஇதனைப் பொருள் அறிந்தேன்; போய்த் தொழுவேன்;
முத்தனை, மாமணிதன்னை, வயிரத்தை, மூர்க்கனேன்
எத்தனை நாள் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 1

ஐவணம் ஆம் பகழி உடை அடல் மதனன் பொடிஆகச்
செவ்வணம் ஆம் திருநயனம் விழிசெய்த சிவமூர்த்தி,
மை அணவு கண்டத்து வளர்சடை எம் ஆரமுதை,
எவ் வணம் நான் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 2

சங்கு அலக்கும் தடங்கடல்வாய் விடம் சுட வந்து அமரர் தொழ,
அங்கு அலக்கண் தீர்த்து விடம் உண்டு உகந்த அம்மானை,
இங்கு அலக்கும் உடல் பிறந்த அறிவிலியேன் செறிவு இன்றி
எங்கு உலக்கப் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 3

இங்ஙனம் வந்து இடர்ப் பிறவிப் பிறந்து அயர்வேன்; 'அயராமே
அங்ஙனம் வந்து எனை ஆண்ட அருமருந்து, என் ஆரமுதை,
வெங்கனல் மா மேனியனை, மான் மருவும் கையானை,
எங்ஙனம் நான் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 4

செப்ப(அ)ரிய அயனொடு மால் சிந்தித்தும் தெளிவு அரிய
அப் பெரிய திருவினையே,—அறியாதே அருவினையேன்—
ஒப்பு அரிய குணத்தானை, இணைஇலியை, அணைவு இன்றி
எப் பரிசு பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 5

வல்-நாகம் நாண், வரை வில், அங்கி கணை, அரி பகழி,
தன் ஆகம் உற வாங்கிப் புரம் எரித்த தன்மையனை,
முன்ஆக நினையாத மூர்க்கனேன் ஆக்கை சுமந்து
என் ஆகப் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 6

வன் சயம்ஆய் அடியான்மேல் வரும் கூற்றின் உரம் கிழிய
முன் சயம் ஆர் பாதத்தால் முனிந்து உகந்த மூர்த்திதனை,
மின் செயும் வார்சடையானை, விடையானை, அடைவு இன்றி
என் செய நான் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 7

முன் நெறி வானவர் கூடித் தொழுது ஏத்தும் முழுமுதலை,
அந் நெறியை, அமரர் தொழும் நாயகனை, அடியார்கள்
செந்நெறியை, தேவர்குலக்கொழுந்தை, மறந்து இங்ஙனம் நான்
என் அறிவான் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 8

கற்று உள வான்கனிஆய கண்ணுதலை, கருத்து ஆர
உற்று உளன்ஆம் ஒருவனை, முன் இருவர் நினைந்து இனிது ஏத்தப்-
பெற்றுளன்ஆம் பெருமையனை, பெரிது அடியேன் கைஅகன்றிட்டு
எற்று உளனாய்ப் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 9

ஏழ்இசைஆய், இசைப்பயன்ஆய், இன்அமுதுஆய், என்னுடைய
தோழனும்ஆய், யான் செய்யும் துரிசுகளுக்கு உடன்ஆகி,
மாழைஒண்கண் பரவையைத் தந்து ஆண்டானை, மதி இல்லா
ஏழையேன் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 10

வங்கம் மலி கடல் நஞ்சை, வானவர்கள்தாம் உய்ய,
நுங்கி, அமுது அவர்க்கு அருளி, நொய்யேனைப் பொருள்படுத்துச்
சங்கிலியோடு எனைப் புணர்த்த தத்துவனை, சழக்கனேன்
எங்கு உலக்கப் பிரிந்திருக்கேன், என் ஆரூர் இறைவனையே? 11

பேர் ஊரும் மதகரியின் உரியானை, பெரியவர்தம்
சீர் ஊரும் திரு ஆரூர்ச் சிவன், அடியே திறம் விரும்பி
ஆரூரன்—அடித்தொண்டன், அடியன்—சொல் அகலிடத்தில்
ஊர்ஊரன் இவை வல்லார் உலகவர்க்கு மேலாரே. 12

திரு ஆலங்காடு VII-52 பழம்பஞ்சுரம்

முத்தா! முத்தி தர வல்ல முகிழ்மென்முலையாள்உமை பங்கா!
சித்தா! சித்தித் திறம் காட்டும் சிவனே! தேவர்சிங்கமே!
பத்தா! பத்தர்பலர் போற்றும் பரமா! பழையனூர் மேய
அத்தா! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 1

பொய்யே செய்து புறம்புறமே திரிவேன்தன்னைப் போகாமே,
மெய்யே வந்து இங்கு எனை ஆண்ட மெய்யா! மெய்யர் மெய்ப்பொருளே!
பைஆடுஅரவம் அரைக்கு அசைத்த பரமா! பழையனூர் மேய
ஐயா! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 2

தூண்டா விளக்கின் நற்சோதீ! தொழுவார்தங்கள் துயர் தீர்ப்பாய்!
பூண்டாய், எலும்பை! புரம்மூன்றும் பொடியாச் செற்ற புண்ணியனே!
பாண்டு ஆழ் வினைகள்அவை தீர்க்கும் பரமா! பழையனூர் மேய
ஆண்டா! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 3

மறி நேர் ஒண்கண் மடநல்லார் வலையில் பட்டு, மதி மயங்கி,
அறிவே அழிந்தேன், ஐயா, நான்! மை ஆர் கண்டம் உடையானே!
பறியா வினைகள்அவை தீர்க்கும் பரமா! பழையனூர் மேய
அறிவே! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 4

வேல் அங்கு ஆடு தடங்கண்ணார் வளையுள் பட்டு, உன் நெறி மறந்து,
மால் அங்கு ஆடி, மறந்தொழிந்தேன்; மணியே! முத்தே! மரகதமே!
பால் அங்கு ஆடீ! நெய்ஆடீ! படர்புன்சடையாய்! பழையனூர்
ஆலங்காடா!—உன்னுடைய அடியார்க்கு அடியேன் ஆவேனே. 5

எண்ணார்தங்கள் எயில் எய்த எந்தாய்! எந்தைபெருமானே!
கண்ஆய் உலகம் காக்கின்ற கருத்தா! திருத்தல் ஆகாதாய்!
பண் ஆர் இசைகள்அவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அண்ணா! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 6

வண்டுஆர்குழலிஉமைநங்கை பங்கா! கங்கைமணவாளா!
விண்டார் புரங்கள் எரிசெய்த விடையாய்! வேதநெறியானே!
பண்டு ஆழ் வினைகள்பல தீர்க்கும் பரமா! பழையனூர் மேய
அண்டா! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 7

பேழ்வாய் அரவின் அணையானும், பெரிய மலர்மேல் உறைவானும்
தாழாது, உன்தன் சரண் பணிய, தழல்ஆய் நின்ற தத்துவனே!
பாழ் ஆம் வினைகள்அவை தீர்க்கும் பரமா! பழையனூர்தன்னை
ஆள்வாய்! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 8

எம்மான்! எந்தை! மூத்த(அ)ப்பன்! ஏழ்ஏழ்படிகால் எமை ஆண்ட
பெம்மான்! ஈமப் புறங்காட்டில் பேயோடு ஆடல் புரிவானே!
பல் மா மலர்கள்அவை கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா! ஆலங்காடா!—உன் அடியார்க்கு அடியேன் ஆவேனே. 9

பத்தர்சித்தர்பலர் ஏத்தும் பரமன், பழையனூர் மேய
அத்தன், ஆலங்காடன்தன் அடிமைத்திறமே அன்புஆகிச்
சித்தர் சித்தம்வைத்த புகழ்ச் சிறுவன்ஊரன் ஒண்தமிழ்கள்-
பத்தும் பாடி ஆடுவார் பரமன்அடியே பணிவாரே. 10

திருக் கடவூர்மயானம் VII-53 பழம்பஞ்சுரம்

மரு ஆர் கொன்றை மதி சூடி, மாணிக்கத்தின்மலை போல
வருவார், விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படை சூழ;
திருமால், பிரமன், இந்திரற்கும், தேவர், நாகர், தானவர்க்கும்,
பெருமான்—கடவூர்மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 1

விண்ணோர்தலைவர்; வெண்புரிநூல் மார்பர்; வேதகீதத்தர்;
கண் ஆர் நுதலர்; நகுதலையர்; காலகாலர்; கடவூரர்;
எண்ணார் புரம்மூன்று எரிசெய்த இறைவர்; உமை ஓர் ஒருபாகம்,
பெண்ஆண் ஆவர்—மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 2

காயும் புலியின் அதள்உடையர்; கண்டர்; எண்தோள் கடவூரர்;
தாயும் தந்தை, பல்உயிர்க்கும், தாமே ஆன தலைவனார்;
பாயும் விடைஒன்றுஅது ஏறிப் பலி தேர்ந்து உண்ணும் பரமேட்டி—
பேய்கள் வாழும் மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 3

நறை சேர் மலர் ஐங்கணையானை நயனத்தீயால் பொடிசெய்த
இறையார் ஆவர்; எல்லார்க்கும் இல்லை என்னாது அருள்செய்வார்;
பறை ஆர் முழவம் பாட்டோடு பயிலும் தொண்டர் பயில் கடவூர்ப்
பிறை ஆர் சடையார்—மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 4

கொத்து ஆர் கொன்றை மதி சூடி, கோள் நாகங்கள் பூண்ஆக,
மத்தயானை உரி போர்த்து, மருப்பும் ஆமைத் தாலியார்;
பத்தி செய்து பாரிடங்கள் பாடி ஆடப் பலி கொள்ளும்
பித்தர்—கடவூர்மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 5

துணி வார் கீளும் கோவணமும் துதைந்து, சுடலைப் பொடி அணிந்து,
பணி மேல் இட்ட பாசுபதர்; பஞ்சவடி மார்பினர்; கடலூர்த்
திணிவு ஆர் குழையார்; புரம்மூன்றும் தீவாய்ப் படுத்த சேவகனார்;
பிணி வார்சடையார்—மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 6

கார் ஆர் கடலின் நஞ்சு உண்ட கண்டர்; கடலூர் உறை வாணர்;
தேர் ஆர் அரக்கன் போய் வீழ்ந்து சிதைய விரலால் ஊன்றினார்;
ஊர்தான் ஆவது, உலகுஏழும் உடையார்க்கு ஒற்றியூர், ஆரூர்;
பேர்ஆயிரவர்—மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 7

வாடாமுலையாள்தன்னோடும் மகிழ்ந்து, கானில் வேடுவனாய்க்
கோடு ஆர் கேழல் பின் சென்று, குறுகி, விசயன் தவம் அழித்து,
நாடா வண்ணம் செருச் செய்து, ஆவநாழி நிலை அருள்செய்
பீடு ஆர் சடையார்—மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 8

வேழம் உரிப்பர்; மழுவாளர்; வேள்வி அழிப்பர்; சிரம் அறுப்பர்;
ஆழி அளிப்பர், அரிதனக்கு; ஆன்அஞ்சு உகப்பர்; அறம் உரைப்பர்;
ஏழைத்தலைவர்; கடலூரில் இறைவர்; சிறுமான்மறிக் கையர்;
பேழைச்சடையர்—மயானத்துப் பெரியபெருமான்அடிகளே. 9

மாடம் மல்கு கடலூரில் மறையோர் ஏத்தும் மயானத்து,
பீடை தீர அடியாருக்கு அருளும் பெருமான்அடிகள் சீர்
நாடி, நாவல் ஆரூரன் நம்பி சொன்ன நல்-தமிழ்கள்
பாடும் அடியார், கேட்பார்மேல், பாவம்ஆன பறையுமே. 10

திரு ஒற்றியூர் VII-54 தக்கேசி

அழுக்கு மெய்கொடு உன் திருவடி அடைந்தேன்;
அதுவும் நான் படப்பாலதுஒன்றுஆனால்,
பிழுக்கை வாரியும் பால் கொள்வர்; அடிகேள்!
பிழைப்பன்ஆகிலும் திருவடிப் பிழையேன்;
வழுக்கி வீழினும் திருப்பெயர்அல்லால்,
மற்று நான் அறியேன், மறு மாற்றம்;
ஒழுக்க என் கணுக்கு ஒரு மருந்து உரையாய்—
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே! 1

கட்டனேன் பிறந்தேன், உனக்கு ஆள்ஆய்;
காதல் சங்கிலி காரணம்ஆக,
எட்டினால்-திகழும் திருமூர்த்தி!
என் செய்வான், அடியேன் எடுத்து உரைக்கேன்?
பெட்டன்ஆகிலும், திருவடி,—பிழையேன்,—
பிழைப்பன்ஆகிலும் திருவடிக்கு அடிமை;
ஒட்டினேன், எனை நீ செய்வதுஎல்லாம்;— 2
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே!

கங்கை தங்கிய சடை உடைக் கரும்பே!
கட்டியே! பலர்க்கும் களைகண்ணே!
அங்கை நெல்லியின்பழத்துஇடை அமுதே!
அத்த! என் இடர் ஆர்க்கு எடுத்து உரைக்கேன்?—
சங்கும் இப்பியும் சலஞ்சலம் முரல,
வயிரம் முத்தொடு பொன் மணி வரன்றி,
ஓங்கும் மா கடல் ஓதம் வந்து உலவும்— 3
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே!

ஈன்று கொண்டது ஓர் சுற்றம்ஒன்று அன்றால்;
யாவர்ஆகில் என், அன்புஉடையார்கள்?
தோன்ற நின்று அருள்செய்து அளித்திட்டால்
சொல்லுவாரை அல்லாதன சொல்லாய்;
மூன்றுகண் உடையாய்! அடியேன் கண்
கொள்வதே கணக்குவழக்குஆகில்,
ஊன்றுகோல் எனக்கு ஆவது ஒன்று அருளாய்— 4
ஒற்றியூர் எலும் ஊர் உறைவானே!

வழித்தலைப் படுவான் முயல்கின்றேன்;
உன்னைப் போல் என்னைப் பாவிக்கமாட்டேன்;
சுழித்தலைப் பட்ட நீர்அது போலச்
சுழல்கின்றேன்; சுழல்கின்றது, என் உள்ளம்;
கழித்தலைப் பட்ட நாய்அது போல
ஒருவன் கோல் பற்றிக் கறகற இழுக்கை
ஒழித்து, நீ அருள்ஆயின செய்யாய்— 5
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே!

மானைநோக்கியர் கண்வலைப் பட்டு,
வருந்தி, யான் உற்ற வல்வினைக்கு அஞ்சி,
தேனை ஆடிய கொன்றையினாய்! உன்
சீலமும் குணமும் சிந்தியாதே
நானும் இத்தனை வேண்டுவது; அடியேன்
உயிரொடும் நரகத்து அழுந்தாமை,
ஊனம்உள்ளன தீர்த்து, அருள்செய்யாய்— 6
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே!

மற்றுத் தேவரை நினைந்து உனை மறவேன்;
நெஞ்சினாரொடு வாழவும் மாட்டேன்;
பெற்றிருந்து பெருதொழிகின்ற
பேதையேன் பிழைத்திட்டதை அறியேன்;
முற்றும் நீ எனை முனிந்திட அடியேன்
கடவது என்? உனை நான் மறவேனேல்,
உற்ற நோய் உறு பிணி த்விர்த்து அருளாய்— 7
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே!

கூடினாய், மலைமங்கையை; நினையாய்:
''கங்கை—ஆயிரமுகம் உடையாளை—
சூடினாய்'' என்று சொல்லிய புக்கால்,
தொழும்பனேனுக்கும் சொல்லலும் ஆமே;
வாடி நீ இருந்து என் செய்தி? மனனே!
வருந்தி யான் உற்ற வல்வினைக்கு அஞ்சி,
ஊடினால், இனி ஆவது ஒன்று உண்டே?— 8
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே!

மகத்தில் புக்கது ஓர் சனி எனக்கு ஆனாய்;
மைந்தனே! மணியே! மணவாளா!
அகத்தில் பெண்டுகள் நான் ஒன்று சொன்னால்,
''அழையேல், போ, குருடா!'' எனத் தரியேன்;
முகத்தில் கண் இழந்து எங்ஙனம் வாழ்கேன்?
முக்கணா! முறையோ? மறைஓதீ!—
உகைக்கும் தண்கடல் ஓதம் வந்து உலவும் 9
ஒற்றியூர் எனும் ஊர் உறைவானே!

ஓதம் வந்து உலவும் கரைதன்மேல்
ஒற்றியூர் உறை செல்வனை, நாளும்
ஞாலம்தான் பரவப்படுகின்ற
நால்மறை அங்கம் ஓதிய நாவன்—
சீலம்தான் பெரிதும் மிக வல்ல
சிறுவன், வன்தொண்டன், ஊரன்—உரைத்த
பாடல் பத்துஇவை வல்லவர்தாம் போய்ப்
பரகதி திண்ணம் நண்ணுவர்தாமே. 10

திருப் புன்கூர்　VII-55　தக்கேசி

அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத,
அவனைக் காப்பது காரணம்ஆக,
வந்த காலன்தன் ஆர்உயிர்அதனை
வவ்வினாய்க்கு, உன்தன் வன்மை கண்டு அடியேன்,
எந்தை! நீ எனை நமன்தமர் நலியின்,
''இவன் மற்று என் அடியான்'' என விலக்கும்
சிந்தையால் வந்து, உன் திருவடி அடைந்தேன்—
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானே! 1

''வையகம் முற்றும் மா மழை மறந்து,
வயலில் நீர் இலை; மா நிலம் தருகோம்;
உய்யக் கொள்க, மற்று எங்களை!'' என்ன,
ஒலி கொள் வெண்முகில்ஆய்ப் பரந்து எங்கும்
பெய்யும் மா மழைப் பெரு வெள்ளம் தவிர்த்து,
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டு அருளும்
செய்கை கண்டு, நின் திருவடி அடைந்தேன்—
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானே! 2

ஏதம்—நன்நிலம் ஈர்-அறுவேலி
ஏயர்கோன் உற்ற—இரும் பிணி தவிர்த்து,
கோதனங்களின் பால் கறந்து ஆட்டக்
கோல வெண்மணல் சிவன்தன்மேல் சென்ற
தாதை தாள் அற எறிந்த தண்டிக்கு உன்
சடைமிசை மலர் அருள்செயக் கண்டு,
பூதஆளி! நின் பொன்அடி அடைந்தேன்— 3
பூம்பொழில்-திருப் புன்கூர் உளானே!

நல்-தமிழ் வல்ல ஞானசம்பந்தன்,
நாவினுக்குஅரையன், நாளைப்போவானும்,
கற்ற சூதன், நல் சாக்கியன், சிலந்தி,
கண்ணப்பன், கணம்புல்லன், என்று இவர்கள்
குற்றம் செய்யினும் குணம் எனக் கருதும்
கொள்கை கண்டு, நின் குரைகழல் அடைந்தேன்—
பொன்-திரள் மணிக் கமலங்கள் மலரும் 4
பொய்கை சூழ் திருப் புன்கூர் உளானே!

கோலம் மால்வரை மத்து என நாட்டி,
கோள் அர(வ்)வு சுற்றி, கடைந்து எழுந்த
ஆலம்நஞ்சு கண்டு அவர் மிக இரிய,
அமரர்கட்கு அருள்புரிவது கருதி,
நீலம் ஆர் கடல்விடம்தனை உண்டு,
கண்டத்தே வைத்த பித்த! நீ செய்த 5
சீலம் கண்டு, நின் திருவடி அடைந்தேன்—
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானே!

இயக்கர், கின்னரர், யமனொடு, வருணர்,
இயங்கு தீ, வளி, ஞாயிறு, திங்கள்,
மயக்கம் இல் புலி, வானரம், நாகம்,
வசுக்கள், வானவர், தானவர், எல்லாம்
அயர்ப்பு ஒன்று இன்றி நின் திருவடிஅதனை
அர்ச்சித்தார்; பெறும் ஆர் அருள் கண்டு,
திகைப்பு ஒன்று இன்றி நின் திருவடி அடைந்தேன்—
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானே! 6

போர்த்த நீள் செவியாளர் அந்தணர்க்குப்
பொழில் கொள் ஆல்நிழல்கீழ் அறம் புரிந்து,
பார்த்தனுக்கு அன்று பாசுபதம் கொடுத்து
அருளினாய்; பண்டு பகீரதன் வேண்ட,
ஆர்த்து வந்து இழியும் புனல்கங்கை-
நங்கையாளை நின் சடைமிசைக் கரந்த
தீர்த்தனே! நின்தன் திருவடி அடைந்தேன்—
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானே! 7

மூஎயில் செற்றஞான்று உய்ந்த மூவரில்
இருவர் நின் திருக் கோயிலின் வாய்தல்
காவலாளர் என்று ஏவிய பின்னை,
ஒருவன்—நீ கரிகாடு அரங்குஆக,
மானைநோக்கிஓர் மாநடம் மகிழ—
மணி முழா முழக்க(வ்) அருள்செய்த
தேவதேவ! நின் திருவடி அடைந்தேன்—
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானே! 8

அறிவினால் மிக்க அறுவகைச் சமயம்
அவ்அவர்க்கு அங்கே ஆர் அருள் புரிந்து,
எறியும் மா கடல் இலங்கையர்கோனைத்
துலங்க மால்வரைக்கீழ் அடர்த்திட்டு,
குறி கொள் பாடலின் இன்இசை கேட்டு,
கோல வாளொடு நாள்அது கொடுத்த
செறிவு கண்டு, நின் திருவடி அடைந்தேன்—
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானே! 9

கம்பம் மால்களிற்றின்(ன்) உரியானை,
காமற் காய்ந்தது ஓர் கண் உடையானை,
செம்பொனே ஒக்கும் திருஉருவானை,
செழும் பொழில்-திருப் புன்கூர் உளானை,
உம்பர்ஆளியை, உமையவள்கோனை,
ஊரன்—வன்தொண்டன்—உள்ளத்தால் உகந்து
அன்பினால் சொன்ன அருந்தமிழ் ஐந்தோடு-
ஐந்தும் வல்லவர் அருவினை இலரே. 10

திரு நீடூர் VII-56 தக்கேசி

ஊர்வது ஓர் விடைஒன்று உடையானை,
ஒண்நுதல்-தனிக் கண்நுதலானை,
கார்அது ஆர் கறைமாமிடற்றானை,
கருதலார் புரம்மூன்று எரித்தானை,—
நீரில் வாளை, வரால், குதிகொள்ளும்
நிறை புனல் கழனிச் செல்வம்—நீடூர்ப்
பார்உளார் பரவித் தொழ நின்ற
பரமனை,—பணியா விடல் ஆமே? 1

துன்னு வார்சடைத் தூ மதியானை,
துயக்கு உரு வகை தோன்றுவிப்பானை,
பன்னு நால்மறை பாட வல்லானை,
பார்த்தனுக்கு அருள் செய்த பிரானை,
என்னை இன்அருள் எய்துவிப்பானை,
ஏதிலார்தமக்கு ஏதிலன்தன்னை,—
புன்னை, மாதவிப்போது, அலர்—நீடூர்ப்
புனிதனை,—பணியா விடல் ஆமே? 2

கொல்லும் மூஇலைவேல் உடையானை,
கொடிய காலனையும் குமைத்தானை,
நல்லவா நெறி காட்டுவிப்பானை,
நாளும் நாம் உகக்கின்ற பிரானை,
அல்லல் இல் அருளே புரிவானை,—
ஆரும் நீர் வயல் சூழ் புனல்—நீடூர்க்
கொல்லை வெள்ளெருது ஏற வல்லானை,—
கூறி நாம் பணியா விடல் ஆமே? 3

தோடு காது இடு தூநெறியானை,
தோற்றமும் துறப்புஆயவன்தன்னை,
பாடு மாமறை பாட வல்லானை,—
பைம்பொழில் குயில் கூவிட, மாடே
ஆடு மா மயில் அன்னமோடு ஆட,
அலை புனல் கழனி—திரு நீடூர்
வேடன் ஆய பிரான்அவன்தன்னை,—
விரும்பி நாம் பணியா விடல் ஆமே? 4

குற்றம் ஒன்று அடியார் இலர்ஆனால்
கூடும்ஆறு அதனைக் கொடுப்பானை,
கற்ற கல்வியிலும்(ம்) இனியானை,
காணப் பேணுமவர்க்கு எளியானை,
முற்ற அஞ்சும் துறந்திருப்பானை,
மூவரின் முதல்ஆயவன்தன்னை,—
சுற்றும் நீள் வயல் சூழ்—திரு நீடூர்த் 5
தோன்றலை,—பணியா விடல் ஆமே?

கா(ட்)டில் ஆடிய கண்நுதலானை,
காலனைக் கடிந்திட்ட பிரானை,
பாடி ஆடும் பரிசே புரிந்தானை,
பற்றினோடு சுற்றம்(ம்) ஒழிப்பானை,
தேடி மால் அயன் காண்பு அரியானை,
சித்தமும் தெளிவார்க்கு எளியானை,—
கோடிதேவர்கள் கும்பிடும்—நீடூர்க் 6
கூத்தனை,—பணியா விடல் ஆமே?

விட்டுஇலங்கு எரி ஆர் கையினானை,
வீடு இலாத வியன்புகழானை,
கட்டுவாங்கம் தரித்த பிரானை,
காதில் ஆர் கனகக்குழையானை,
விட்டுஇலங்கு புரிநூல் உடையானை,
வீந்தவர் தலைஓடு கையானை,—
கட்டியின் கரும்பு ஓங்கிய நீடூர்க் 7
கண்டு நாம் பணியா விடல் ஆமே?

மாயம்ஆய மனம் கெடுப்பானை,
மனத்துளே மதிஆய் இருப்பானை,
காய மாயமும் ஆக்குவிப்பானை,
காற்றும்ஆய்க் கனல்ஆய்க் கழிப்பானை,
ஓயும்ஆறு உறு நோய் புணர்ப்பானை,
ஒல்லை வல்வினைகள் கெடுப்பானை,
வேய்கொள்தோள்உமை பாகனை, நீடூர்
வேந்தனை,—பணியா விடல் ஆமே? 8

கண்டமும் கறுத்திட்ட பிரானை,
காணப் பேணுமவர்க்கு எளியானை,
தொண்டரைப் பெரிதும்(ம்) உகப்பானை,
துன்பமும் துறந்து இன்பு இனியானை,
பண்டைவல்வினைகள் கெடுப்பானை,
பாகம்மாமதி ஆயவன்தன்னை,—
கெண்டை வாளை கிளர் புனல் நீடூர்க்
கேண்மையால் பணியா விடல் ஆமே? 9

அல்லல்உள்ளன தீர்த்திடுவானை,
அடைந்தவர்க்கு அமுது ஆயிடுவானை,
கொல்லை வல் அரவம்(ம்) அசைத்தானை,
கோலம் ஆர் கரியின்(ன்)உரியானை,
நல்லவர்க்கு அணிஆனவன்தன்னை,
நானும் காதல்செய்கின்ற பிரானை,—
எல்லி மல்லிகையே கமழ் நீடூர்
ஏத்தி நாம் பணியா விடல் ஆமே? 10

பேர்ஓர்ஆயிரமும்(ம்) உடையானை,
பேசினால் பெரிதும்(ம்) இனியானை,
நீர் ஊர் வார்சடை நின்மலன்தன்னை,
நீடூர் நின்று உகந்திட்ட பிரானை,
ஆரூரன்(ன்) அடி காண்பதற்கு அன்புஆய்
ஆதரித்து அழைத்திட்ட இம் மாலை
பார் ஊரும் பரவித் தொழ வல்லார்,
பத்தராய் முத்தி தாம் பெறுவாரே. 11

திரு வாழ்கொளிபுத்தூர் VII-57 தக்கேசி

தலைக்கலன் தலைமேல்-தரித்தானை,
தன்னை என்னை நினைக்கத் தருவானை,
கொலைக் கை யானை உரி போர்த்து உகந்தானை,
கூற்று உதைத்த(க்) குரை சேர் கழலானை,
அலைத்த செங்கண் விடை ஏற வல்லானை,
ஆணையால் அடியேன் அடிநாயேன்—
மலைத்த செந்நெல் வயல் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 1

படைக்கண் சூலம் பயில வல்லானை,
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை,
கடைக்கண் பிச்சைக்கு இச்சை காதலித்தானை,
காமன் ஆகம்தனைக் கட்டு அழித்தானை,
சடைக்கண் கங்கையைத் தாழ வைத்தானை,
தண்ணீர்மண்ணிக் கரையானை, தக்கானை,
மடைக்கண் நீலம் மலர் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 2

வெந்தநீறு மெய் பூச வல்லானை,
    வேதமால்விடை ஏற வல்லானை,
அந்தம்ஆதி(ய்) அறிதற்கு அரியானை,
    ஆறு அலைத்த(ச்) சடையானை, அம்மானை,
சிந்தை என் தடுமாற்று அறுப்பானை,—
    தேவதேவன், என் சொல் முனியாதே
வந்து என் உள்ளம் புகும்—வாழ்கொளிபுத்தூர்
    மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 3

தடங்கையால் மலர் தூய்த் தொழுவாரைத்
    தன் அடிக்கே செல்லும்ஆறு வல்லானை,
படம் கொள் நாகம்(ம்) அரை ஆர்த்து உகந்தானை,
    பல்இல்வெள்ளைத்தலை ஊண் உடையானை,
நடுங்க ஆனைஉரி போர்த்து உகந்தானை,
    நஞ்சம் உண்டு கண்டம் கறுத்தானை,
மடந்தைபாகனை, வாழ்கொளிபுத்தூர்
    மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 4

வளைக்கை முன்கை மலைமங்கை மணாளன்;
    மாரனார் உடல் நீறு எழச் செற்று,
துளைத்த அங்கத்தொடு தூ மலர்க்கொன்றை
    'தோலும் நூலும் துதைந்த(வ்) வரைமார்பன்;'
திளைக்கும் தெவ்வர் திரி புரம்மூன்றும்
    அவுணர்பெண்டிரும் மக்களும் வேவ
வளைத்த வில்லியை; வாழ்கொளிபுத்தூர்
    மாணிக்கத்தை;—மறந்து என் நினைக்கேனே? 5

திருவின் நாயகன் ஆகிய மாலுக்கு
    அருள்கள்செய்திடும் தேவர்பிரானை,
உருவினானை, ஒன்றா அறிவு ஒண்ணா
    மூர்த்தியை, விசயற்கு அருள்செய்வான்
செரு வில் ஏந்தி ஓர் கேழல் பின் சென்று
    செங்கண் வேடனாய் என்னொடும் வந்து
மருவினான்தனை, வாழ்கொளிபுத்தூர்
    மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 6

எந்தையை, எந்தைதந்தைபிரானை,
    ஏதம்ஆய(வ்) இடர் தீர்க்க வல்லானை,
முந்திஆகிய மூவரின் மிக்க
    மூர்த்தியை, முதல் காண்பு அரியானை,—
கந்தின் மிக்க(க்) கரியின் மருப்போடு,
    கார்அகில், கவரி(ம்)மயிர், மண்ணி
வந்துவந்து இழி—வாழ்கொளிபுத்தூர்
    மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 7

தேனை ஆடிய கொன்றையினானை,
    தேவர் கைதொழும் தேவர்பிரானை,
ஊனம்ஆயின தீர்க்க வல்லானை,
    ஒற்றை ஏற்றனை, நெற்றிக்கண்ணனை,
கான ஆனையின் கொம்பினைப் பீழ்ந்த
    கள்ளப் பிள்ளைக்கும் காண்பு அரிது ஆய
வானநாடனை, வாழ்கொளிபுத்தூர்
    மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 8

காளைஆகி வரை எடுத்தான்தன்
கைகள் இற்று அவன் மொய் தலைஎல்லாம்
மூளை போத, ஒருவிரல் வைத்த
மூர்த்தியை, முதல் காண்பு அரியானை,—
பாளை தெங்கு பழம் விழ மண்டி,
செங்கண் மேதிகள் சேடு எறிந்து, எங்கும்
வாளை பாய் வயல்—வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 9

திருந்த நால்மறை பாட வல்லானை,
தேவர்க்கும் தெரிதற்கு அரியானை,
பொருந்த மால்விடை ஏற வல்லானை,
பூதிப்பை புலித்தோல் உடையானை,
இருந்து உணும் தேரரும் நின்று உணும் சமணும்
ஏச நின்றவன், ஆர்உயிர்க்கு எல்லாம்
மருந்து அனான்தனை, வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 10

மெய்யனை, மெய்யில் நின்று உணர்வானை,
மெய்இலாதவர்தங்களுக்கு எல்லாம்
பொய்யனை, புரம்மூன்று எரித்தானை,
புனிதனை, புலித்தோல்உடையானை,
செய்யனை, வெளிய(த்) திருநீற்றில்-
திகழும் மேனியன், மான்மறி ஏந்தும்
மை கொள் கண்டனை, வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை,—மறந்து என் நினைக்கேனே? 11

‘‘வளம் கிளர் பொழில் வாழ்கொளிபுத்தூர்
மாணிக்கத்தை மறந்து என் நினைக்கேன்?’’ என்று
உளம் குளிர் தமிழ், ஊரன்—வன்தொண்டன்,
சடையன்காதலன், வனப்பகைஅப்பன்,
நலம் கிளர் வயல் நாவலர்வேந்தன்,
நங்கைசிங்கடிதந்தை—பயந்த
பலம் கிளர் தமிழ் பாட வல்லார்மேல்
பறையும்ஆம், செய்த பாவங்கள்தானே. 12

திருக் கழுமலம் VII-58 தக்கேசி

சாதலும் பிறத்தலும் தவிர்த்து, எனை வகுத்து,
தன் அருள் தந்த எம் தலைவனை; மலையின்-
மாதினை மதித்து, அங்கு ஒர்பால் கொண்ட மணியை;
வருபுனல் சடைஇடை வைத்த எம்மானை;
ஏதிலென் மனத்துக்கு ஒர் இரும்பு உண்ட நீரை;
எண்வகைஒருவனை; எங்கள் பிரானை;
காதில் வெண்குழையனை;—கடல் கொள மிதந்த
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 1

மற்று ஒரு துணை இனி மறுமைக்கும் காணேன்;
வருந்தல்உற்றேன்; மறவா வரம் பெற்றேன்;
சுற்றிய சுற்றமும் துணை என்று கருதேன்;
துணை என்று நான் தொழப்பட்ட ஒண்சுடரை,
முத்தியும் ஞானமும் வானவர் அறியா
முறைமுறை பலபல நெறிகளும் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை,—அடியேன்
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 2

திருத் தினை நகர் உறை சேந்தன்அப்பன்(ன்), என்
செய்வினை அறுத்திடும் செம்பொனை, அம் பொன்
ஒருத்தனை, அல்லது இங்கு ஆரையும் உணரேன்;
உணர்வு பெற்றேன், உய்யும் காரணம்தன்னால்;
விருத்தனை, பாலனை, கனவுஇடை விரவி
விழித்து எங்கும் காணமாட்டாது விட்டு இருந்தேன்;
கருத்தனை, நிருத்தம் செய் காலனை,—வேலைக்
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 3

மழைக்கு அரும்பும் மலர்க்கொன்றையினானை
வளைக்கல்உற்றேன்; மறவா மனம் பெற்றேன்;
பிழைத்து ஒரு கால் இனிப் போய்ப் பிறவாமைப்
பெருமை பெற்றேன்; பெற்றது ஆர் பெறுகிற்பார்?
குழைக் கருங்கண்டனைக் கண்டுகொள்வானே
பாடுகின்றேன்; சென்று கூடவும் வல்லேன்;—
கழைக்கரும்பும் கதலிப் பலசோலை—
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 4

''குண்டலம் குழை திகழ் காதனே!'' என்றும்,
''கொடுமழுவாள்படைக் குழகனே!'' என்றும்,
''வண்டு அலம்பும் மலர்க்கொன்றையன்!'' என்றும்,
வாய் வெருவித் தொழுதேன், விதியாலே;
பண்டை நம் பலமனமும் களைந்து ஒன்றுஆய்,
பசுபதி பதி வினவி, பலநாளும்,—
கண்டல் அம் கழிக் கரை ஓதம் வந்து உலவும்—
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 5

''வரும், பெரும் வல்வினை'' என்று இருந்து எண்ணி,
வருந்தல்உற்றேன்; மறவா மனம் பெற்றேன்;
விரும்பி, என் மனத்துஇடை மெய் குளிர்ப்பு எய்தி,
வேண்டி நின்றே தொழுதேன், விதியாலே;
அரும்பினை, அலரினை, அமுதினை, தேனை,
ஐயனை, அறவன், என் பிறவிவேர் அறுக்கும்
கரும்பினை,—பெருஞ் செந்நெல் நெருங்கிய கழனி— 6
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே.

அயலவர் பரவவும், அடியவர் தொழவும்,
அன்பர்கள் சாயலுள் அடையல்உற்று இருந்தேன்—
முயல்பவர் பின் சென்று, ''முயல் வலை யானை
படும்'' என மொழிந்தவர் வழி முழுது எண்ணி;
புயலினை, திருவினை, பொன்னினது ஒளியை,
மின்னினது உருவை, என்இடைப் பொருளை,—
கயல்இனம் சேலொடு வயல் விளையாடும்— 7
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே.

நினைதரு பாவங்கள் நாசங்கள் ஆக,
நினைந்து முன் தொழுது எழப்பட்ட ஒண்சுடரை;
மனை தரு மலைமகள் கணவனை; வானோர்
மாமணிமாணிக்கத்தை(ம்); மறைப்பொருளை;
புனைதரு புகழினை; எங்களது ஒளியை;
இருவரும், ''ஒருவன்'' என்று உணர்வு அரியவனை;—
கனைதரு கருங்கடல் ஓதம் வந்து உலவும்— 8
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே.

மறைஇடைத் துணிந்தவர் மனைஇடை இருப்ப,
வஞ்சனை செய்தவர் பொய்கையும் மாய,
துறை உறக் குளித்து உளதுஆக வைத்து உய்த்த
உண்மை எனும் தகவின்மையை ஓரேன்;
பிறை உடைச் சடையனை, எங்கள் பிரானை,
பேர்அருளாளனை, கார்இருள் போன்ற
கறை அணி மிடறு உடை அடிகளை,—அடியேன்
கழுமல வள நகர்க் கண்டுகொண்டேனே. 9

செழு மலர்க்கொன்றையும் கூவிளமலரும்
விரவிய சடைமுடி அடிகளை நினைந்திட்டு
அழும் மலர்க்கண்இணை அடியவர்க்கு அல்லால்,
அறிவு அரிது, அவன் திருவடியிணைஇரண்டும்;
கழுமல வள நகர்க் கண்டுகொண்டு, ஊரன்—
சடையன்தன் காதலன்—பாடிய பத்தும்
தொழு மலர் எடுத்த கை அடியவர்தம்மைத்
துன்பமும் இடும்பையும் சூழகிலாவே. 10

திரு ஆரூர் VII-59 தக்கேசி

பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை,
போகமும் திருவும் புணர்ப்பானை,
பின்னை என் பிழையைப் பொறுப்பானை,
பிழைஎலாம் தவிரப் பணிப்பானை,
இன்ன தன்மையன் என்று அறிவு ஒண்ணா
எம்மானை, எளிவந்த பிரானை,
அன்னம் வைகும் வயல்-பழனத்து அணி
ஆரூரானை, மறக்கலும் ஆமே? 1

கட்டமும் பிணியும் களைவானை;
காலற் சீறிய கால் உடையானை;
விட்ட வேட்கைவெந்நோய் களைவானை;
விரவினால் விடுதற்கு அரியானை;
பட்ட வார்த்தை, பட நின்ற வார்த்தை,
வாராமே தவிரப் பணிப்பானை;
அட்டமூர்த்தியை; மட்டு அவிழ் சோலை
ஆரூரானை; மறக்கலும் ஆமே? 2

கார்க்குன்ற(ம்) மழைஆய்ப் பொழிவானை,
கலைக்கு எலாம் பொருள்ஆய் உடன்கூடிப்
பார்க்கின்ற(வ்) உயிர்க்குப் பரிந்தானை,
பகலும் கங்குலும்ஆகி நின்றானை,
ஓர்க்கின்ற(ச்) செவியை, சுவைதன்னை,
உணரும் நாவினை, காண்கின்ற கண்ணை,
ஆர்க்கின்ற(க்) கடலை, மலைதன்னை,
ஆரூரானை, மறக்கலும் ஆமே? 3

செத்தபோதினில் முன் நின்று நம்மைச்
சிலர்கள் கூடிச் சிரிப்பதன் முன்னம்,
வைத்த சிந்தை உண்டே; மனம் உண்டே;
மதி உண்டே; விதியின் பயன் உண்டே!
''முத்தன், எங்கள் பிரான்'' என்று வானோர்
தொழ நின்ற(த்) திமில்ஏறு உடையானை,
அத்தன், எந்தைபிரான், எம்பிரானை,
ஆரூரானை, மறக்கலும் ஆமே? 4

செறிவு உண்டேல், மனத்தால்-தெளிவு உண்டேல்,
தேற்றத்தால் வரும் சிக்கனவு உண்டேல்,
மறிவு உண்டேல், மறுமைப்பிறப்பு உண்டேல்,
வாழ்நாள்மேல் செல்லும் வஞ்சனை உண்டேல்,
பொறிவண்டு யாழ்செய்யும் பொன்மலர்க்கொன்றை
பொன் போலும் சடைமேல் புனைந்தானை—
அறிவு உண்டே; உடலத்து உயிர் உண்டே;—
ஆரூரானை மறக்கலும் ஆமே? 5

பொள்ளல் இவ் உடலைப் பொருள் என்று,
பொருளும் சுற்றமும் போகமும் ஆகி,
மெள்ள நின்றவர் செய்வனஎல்லாம்
வாராமே தவிர்க்கும் விதியானை,
''வள்ளல்! எம்தமக்கே துணை!'' என்று
நாள்நாளும்(ம்) அமரர் தொழுது ஏத்தும்—
அள்ளல்அம்கழனிப் பழனத்து—அணி
ஆரூரானை மறக்கலும் ஆமே? 6

கரி-யானைஉரி கொண்ட கையானை,
கண்ணின்மேல் ஒரு கண் உடையானை,
வரியானை, வருத்தம் களைவானை,
மறையானை, குறைமாமதி சூடற்கு
உரியானை, உலகத்து உயிர்க்கு எல்லாம்
ஒளியானை, உகந்து உள்கி நண்ணாதார்க்கு
அரியானை, அடியேற்கு எளியானை,
ஆரூரானை, மறக்கலும் ஆமே? 7

வாளா நின்று தொழும் அடியார்கள்
வான் ஆளப்பெறும் வார்த்தையைக் கேட்டும்
நாள்நாளும் மலர் இட்டு வணங்கார்;
நம்மை ஆள்கின்ற தன்மையை ஓரார்;
கேளா நான் கிடந்தே உழைக்கின்றேன்,
கிளைக்கு எலாம் துணை ஆம் எனக் கருதி;
ஆள் ஆவான் பலர் முன்பு அழைக்கின்றேன்;
ஆரூரானை மறக்கலும் ஆமே? 8

விடக்கையே பெருக்கிப் பலநாளும்
வேட்கையால் பட்ட வேதனைதன்னைக்
கடக்கிலேன்; நெறி காணவும் மாட்டேன்;
கண் குழிந்து இரப்பார் கையில் ஒன்றும்
இட(க்)கிலேன்; பரவைத் திரைக் கங்கைச்
சடையானை, உமையாளை ஓர்பாகத்து
அடக்கினானை, அம் தாமரைப் பொய்கை 9
ஆரூரானை, மறக்கலும் ஆமே?

ஒட்டி ஆட்கொண்டு போய் ஒளித்திட்ட
உச்சிப்போதனை, நச்சுஅரவு ஆர்த்த
பட்டியை, பகலை, இருள்தன்னை,
பாவிப்பார் மனத்து ஊறும் அத் தேனை,
கட்டியை, கரும்பின் தெளிதன்னை,
காதலால் கடல் சூர் தடிந்திட்ட
செட்டி அப்பனை, பட்டனை, செல்வ 10
ஆரூரானை, மறக்கலும் ஆமே?

ஓர் ஊர் என்று உலகங்களுக்கு எல்லாம்
உரைக்கல் ஆம் பொருள்ஆய் உடன்கூடி,
கார் ஊரும் கமழ்கொன்றைநல்மாலை
முடியன், காரிகை காரணம்ஆக
ஆரூரை(ம்) மறத்தற்கு அரியானை,
அம்மான்தன் திருப்பேர் கொண்ட தொண்டன்—
ஆரூரன்(ன்) அடிநாய்—உரை வல்லார்
அமரலோகத்து இருப்பவர்தாமே. 11

திரு இடைமருதூர் VII-60 தக்கேசி

கழுதை குங்குமம்தான் சுமந்து எய்த்தால்,
கைப்பர், பாழ் புக; மற்று அது போலப்
பழுது நான் உழன்று உள்-தடுமாறிப்
படு சுழித்தலைப் பட்டனன்; எந்தாய்!
அழுது நீ இருந்து என் செய்தி? மனனே!
''அங்கணா! அரனே!'' எனமாட்டா
இழுதையேனுக்கு ஓர் உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 1

நரைப்பு மூப்பொடு பிணி வரும், இன்னே;
நன்றி இல் வினையே துணிந்து எய்த்தேன்;
அரைத்த மஞ்சள்அது ஆவதை அறிந்தேன்;
அஞ்சினேன், நமனார்அவர்தம்மை;
உரைப்பன், நான் உன சேவடி சேர;
உணரும் வாழ்க்கையை ஒன்று அறியாத
இரைப்பனேனுக்கு ஓர் உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 2

புல்-நுனைப் பனி வெங்கதிர் கண்டால்
போலும் வாழ்க்கை பொருள் இலை; நாளும்
என் எனக்கு? இனி இன்றைக்கு நாளை
என்று இருந்து இடர் உற்றனன்; எந்தாய்!
முன்னமே உன சேவடி சேரா
மூர்க்கன்ஆகிக் கழிந்தன, காலம்;
இன்னம் என்தனக்கு உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 3

முந்திச் செய்வினை இம்மைக்கண் நலிய,
மூர்க்கன்ஆகிக் கழிந்தன, காலம்;
சிந்தித்தே மனம் வைக்கவும் மாட்டேன்;
சிறுச் சிறிதே இரப்பார்கட்கு ஒன்று ஈயேன்;
அந்தி வெண்பிறை சூடும் எம்மானே!
ஆரூர் மேவிய அமரர்கள்தலைவா!
எந்தை! நீ எனக்கு உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 4

அழிப்பர், ஐவர் புரவு உடையார்கள்;
ஐவரும் புரவு ஆசு அற ஆண்டு,
கழித்து, கால் பெய்து, போயின பின்னை,
கடைமுறை உனக்கே பொறை ஆனேன்;
விழித்துக் கண்டனன், மெய்ப்பொருள்தன்னை;
வேண்டேன், மானுட வாழ்க்கை, ஈதுஆகில்;
இழித்தேன்; என்தனக்கு உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 5

குற்றம்தன்னொடு குணம்பல பெருக்கி,
கோல நுண்இடையாரொடு மயங்கி,
கற்றிலேன், கலைகள்பல ஞானம்;
கடியஆயின கொடுமைகள் செய்தேன்;
பற்றல்ஆவது ஓர் பற்று மற்று இல்லேன்;
பாவியேன் பலபாவங்கள் செய்தேன்;
எற்று உளேன்? எனக்கு உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 6

கொடுக்ககிற்றிலேன், ஒண் பொருள்தன்னை;
குற்றம்செற்றம்இவை முதல்ஆக,
விடுக்ககிற்றிலேன், வேட்கையும் சினமும்;
வேண்டில், ஐம்புலன் என் வசம் அல்ல;
நடுக்கம் உற்றது ஓர் மூப்பு வந்து எய்த,
நமன்தமர் நரகத்து இடல் அஞ்சி,
இடுக்கண் உற்றனன்; உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 7

ஐவகையர் அரையர்அவர்ஆகி,
ஆட்சிகொண்டு, ஒரு கால் அவர் நீங்கார்;
அவ் வகை அவர் வேண்டுவதுஆனால்,
அவர்அவர்வழி ஒழுகி, நான் வந்து
செய்வகை அறியேன்; சிவலோகா!
தீவணா! சிவனே! எரிஆடீ!
எவ் வகை, எனக்கு உய்வகை? அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 8

ஏழை மானுட இன்பினை நோக்கி,
இளையவர் வயப்பட்டு இருந்து, ''இன்னம்
வாழைதான் பழுக்கும், நமக்கு'' என்று
வஞ்ச வல்வினையுள் வலைப்பட்டு,
கூழைமாந்தர்தம் செல்கதிப் பக்கம்,
போகமும் பொருள் ஒன்று அறியாத
ஏழையேனுக்கு ஓர் உய்வகை அருளாய்—
இடைமருது(வ்) உறை எந்தைபிரானே! 9

அரைக்கும் சந்தனத்தோடு அகில் உந்தி
ஐவனம் சுமந்து ஆர்த்து இருபாலும்
இரைக்கும் காவிரித் தென்கரைதன்மேல்
இடைமருது(வ்) உறை எந்தைபிரானை,
உரைக்கும் ஊரன் ஒளி திகழ் மாலை,
உள்ளத்தால் உகந்து ஏத்த வல்லார்கள்,
நரைப்பு மூப்பொடு நடலையும் இன்றி, 10
நாதன்சேவடி நண்ணுவர்தாமே.

திருக் கச்சி ஏகம்பம் VII-61 தக்கேசி

ஆலம்தான் உகந்து அமுதுசெய்தானை,
ஆதியை, அமரர் தொழுது ஏத்தும்
சீலம்தான் பெரிதும்(ம்) உடையானை,
சிந்திப்பார்அவர் சிந்தை உளானை,
ஏல வார்குழலாள் உமைநங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனை, கம்பன்எம்மானை, 1
காணக் கண் அடியேன் பெற்றஆறே!

உற்றவர்க்கு உதவும் பெருமானை,
    ஊர்வது ஒன்று உடையான், உம்பர்கோனை,
பற்றினார்க்கு என்றும் பற்றவன்தன்னை,
    பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை,
அற்றம் இல் புகழாள் உமைநங்கை
    ஆதரித்து வழிபடப்பெற்ற
கற்றைவார்சடைக் கம்பன்எம்மானை,
    காணக் கண் அடியேன் பெற்றஆறே! 2

திரியும் முப்புரம் தீப்பிழம்புஆகச்
    செங்கண் மால்விடைமேல்-திகழ்வானை,
கரியின் ஈர்உரி போர்த்து உகந்தானை,
    காமனைக் கனலா விழித்தானை,
வரி கொள் வெள்வளையாள் உமைநங்கை
    மருவி ஏத்தி வழிபடப்பெற்ற
பெரிய கம்பனை, எங்கள் பிரானை,
    காணக் கண் அடியேன் பெற்றஆறே! 3

குண்டலம் திகழ் காது உடையானை,
    கூற்று உதைத்த கொடுந்தொழிலானை,
வண்டு அலம்பும் மலர்க்கொன்றையினானை,
    வாள்அரா மதி சேர் சடையானை,
கெண்டைஅம்தடங்கண் உமைநங்கை
    கெழுமி ஏத்தி வழிபடப்பெற்ற
கண்டம் நஞ்சு உடைக் கம்பன்எம்மானை,
    காணக் கண் அடியேன் பெற்றஆறே! 4

வெல்லும் வெண்மழு ஒன்று உடையானை,
    வேலைநஞ்சு உண்ட வித்தகன்தன்னை,
அல்லல் தீர்த்து அருள்செய்ய வல்லானை,
    அருமறைஅவை அங்கம் வல்லானை,
எல்லை இல் புகழாள் உமைநங்கை
    என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
நல்ல கம்பனை, எங்கள் பிரானை,
    காணக் கண் அடியேன் பெற்றஆறே! 5

திங்கள் தங்கிய சடை உடையானை,
    தேவதேவனை, செழுங் கடல் வளரும்
சங்கவெண்குழைக் காது உடையானை,
    சாமவேதம் பெரிது உகப்பானை,
மங்கைநங்கைமலைமகள் கண்டு
    மருவி ஏத்தி வழிபடப்பெற்ற
கங்கையாளனை, கம்பன்எம்மானை,
    காணக் கண் அடியேன் பெற்றஆறே! 6

விண்ணவர் தொழுது ஏத்த நின்றானை,
    வேதம்தான் விரித்து ஓத வல்லானை,
நண்ணினார்க்கு என்றும் நல்லவன்தன்னை,
    நாளும் நாம் உகக்கின்ற பிரானை,
எண் இல் தொல்புகழாள் உமைநங்கை
    என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
கண்ணுமூன்று உடைக் கம்பன் எம்மானை,
    காணக் கண் அடியேன் பெற்றஆறே! 7

சிந்தித்து என்றும் நினைந்து எழுவார்கள்
சிந்தையில்-திகழும் சிவன்தன்னை,
பந்தித்த(வ்) வினைப்பற்று அறுப்பானை,
பாலொடு ஆன்அஞ்சும் ஆட்டு உகந்தானை,
அந்தம் இல் புகழாள் உமைநங்கை
ஆதரித்து வழிபடப்பெற்ற
கந்தவார்சடைக் கம்பன்எம்மானை,
காணக் கண் அடியேன் பெற்றஆறே! 8

வரங்கள் பெற்று உழல் வாள்அரக்கர்தம்
வாலிய(ப்) புரம்மூன்று எரித்தானை,
நிரம்பிய தக்கன்தன் பெருவேள்வி
நிலந்தரம் செய்த நிட்கண்டகனை,
பரந்த தொல்புகழாள் உமைநங்கை
பரவி ஏத்தி வழிபடப்பெற்ற
கரங்கள்எட்டு உடைக் கம்பன்எம்மானை,
காணக் கண் அடியேன் பெற்றஆறே! 9

எள்கல் இன்றி—இமையவர்கோனை,
ஈசனை,—வழிபாடு செய்வாள் போல்
உள்ளத்து உள்கி, உகந்து, உமைநங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு,
வெள்ளம் காட்டி வெருட்டிட, அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை, எங்கள் பிரானை,
காணக் கண் அடியேன் பெற்றஆறே! 10

பெற்றம்ஏறு உகந்து ஏற வல்லானை,
‘‘பெரிய எம்பெருமான்’’ என்று எப்போதும்
கற்றவர் பரவப்படுவானை,
‘‘காணக் கண் அடியேன் பெற்றது’’ என்று
கொற்றவன், கம்பன், கூத்தன்எம்மானை,
குளிர்பொழில்-திரு நாவல் ஆரூரன்
நல்-தமிழ் இவைஈர்-ஐந்தும் வல்லார்,
நன்நெறி(ய்) உலகு எய்துவர்தாமே. 11

திருக் கோலக்கா VII-62 தக்கேசி

புற்றில் வாள்அரவு ஆர்த்த பிரானை;
பூதநாதனை; பாதமே தொழுவார்
பற்று வான்துணை; எனக்கு எளிவந்த
பாவநாசனை; மேவ(அ)ரியானை;
முற்றலார் திரி புரம்ஒருமூன்றும்
பொன்ற, வென்றி மால்வரை அரி அம்பா,
கொற்ற வில் அம் கை ஏந்திய கோனை;— 1
கோலக்காவினில் கண்டுகொண்டேனே.

அங்கம்ஆறும் மாமறைஒருநான்கும்
ஆய நம்பனை, வேய் புரை தோளி
தங்கு மா திருஉரு உடையானை,
தழல்மதி(ச்) சடைமேல் புனைந்தானை,
வெங் கண் ஆனையின் ஈர்உரியானை,—
விண்உளாரொடு மண்உளார் பரசும்,
கொங்கு உலாம் பொழில் குர வெறி கமழும்— 2
கோலக்காவினில் கண்டுகொண்டேனே.

பாட்டுஅகத்து இசைஆகி நின்றானை,
    பத்தர் சித்தம் பரிவு இனியானை,
நாட்டுஅகத்தேவர் செய்கை உளானை,
    நட்டம்ஆடியை, நம்பெருமானை,
காட்டுஅகத்து உறு புலி உரியானை,
    கண்ஓர்மூன்று உடை அண்ணலை,—அடியேன்
கோட்டகப் புனல் ஆர் செழுங் கழனிக்
    கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 3

''ஆத்தம்'' என்று எனை ஆள்உகந்தானை,
    அமரர்நாதனை, குமரனைப் பயந்த
வார்த் தயங்கிய முலை மடமானை
    வைத்து வான்மிசைக் கங்கையைக் கரந்த
தீர்த்தனை, சிவனை, செழுந்தேனை,
    தில்லை அம்பலத்துள்-நிறைந்து ஆடும்
கூத்தனை, குருமாமணிதன்னை,—
    கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 4

அன்று வந்து எனை அகலிடத்தவர்முன்,
    ''ஆள்அதுஆக!'' என்று ஆவணம் காட்டி,
நின்று வெண்ணெய் நல்லூர்மிசை ஒளித்த
    நித்திலத்திரள்-தொத்தினை; முத்திக்கு
ஒன்றினான்தனை; உம்பர்பிரானை;
    உயரும் வல் அரணம் கெடச் சீறும்
குன்றவில்லியை—மெல்லியல்உடனே
    கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 5

காற்றுத் தீப் புனல்ஆகி நின்றானை,
    கடவுளை, கொடு மால்விடையானை,
நீற்றுத் தீஉருஆய் நிமிர்ந்தானை,
    நிரம்பு பல்கலையின் பொருளாலே
போற்றித் தன் கழல் தொழுமவன் உயிரைப்
    போக்குவான் உயிர் நீக்கிடத் தாளால்
கூற்றைத் தீங்கு செய் குரைகழலானை,—
    கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 6

அன்று அயன்சிரம் அரிந்து, அதில் பலி கொண்டு,
    அமரருக்கு அருள் வெளிப்படுத்தானை;
துன்று பைங்கழலில் சிலம்பு ஆர்த்த
    சோதியை; சுடர் போல் ஒளியானை;
மின்தயங்கிய இடை மடமங்கை
    மேவும் ஈசனை; வாசம் மா முடிமேல்
கொன்றை அம் சடைக் குழகனை;—அழகு ஆர்
    கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 7

நாளும் இன்இசையால்-தமிழ் பரப்பும்
    ஞானசம்பந்தனுக்கு உலகவர்முன்
தாளம் ஈந்து, அவன் பாடலுக்கு இரங்கும்
    தன்மையாளனை; என் மனக் கருத்தை;
ஆளும் பூதங்கள் பாட, நின்று ஆடும்
    அங்கணன்தனை; எண்கணம் இறைஞ்சும்
கோளிலிப் பெருங்கோயில் உள்ளானை;—
    கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 8

அரக்கன் ஆற்றலை அழித்து அவன் பாட்டுக்கு
அன்று இரங்கிய வென்றியினானை,
பரக்கும் பார் அளித்து உண்டு உகந்தவர்கள்
பரவியும் பணிதற்கு அரியானை,
சிரக் கண் வாய் செவி மூக்கு உயர் காயம்-
ஆகித் தீவினை தீர்த்த எம்மானை,—
குரக்குஇனம் குதிகொண்டு உகள் வயல் சூழ்
கோலக்காவினில் கண்டுகொண்டேனே. 9

கோடரம் பயில் சடை உடைக் கரும்பை,
கோலக்காவுள் எம்மானை, மெய்ம் மானப்
பாடர் அம் குடி அடியவர் விரும்பப்
பயிலும் நாவல் ஆரூரன்—வன்தொண்டன்—
நாடு இரங்கி முன் அறியும் அந் நெறியால்
நவின்ற பத்துஇவை விளம்பிய மாந்தர்
காடு அரங்கு என நடம் நவின்றான்பால்
கதியும் எய்துவர்; பதி அவர்க்கு அதுவே. 10

"நம்பி'' என்ற திருப்பதிகம் VII-63 தக்கேசி

மெய்யை முற்றப் பொடிப்பூசி ஓர் நம்பி,
வேதம்நான்கும் விரித்துஓதி ஓர் நம்பி,
கையில் ஓர் வெண் மழுஏந்தி ஓர் நம்பி,
கண்ணுமூன்றும் உடையாய் ஒரு நம்பி,
செய்யநம்பி, சிறு செஞ்சடை நம்பி,
திரிபுரம் தீ எழச் செற்றது ஓர் வில்லால்
எய்த நம்பி, என்னை ஆள்உடை நம்பி—
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 1

திங்கள் நம்பி, முடிமேல்; அடியார்பால்
சிறந்த நம்பி; பிறந்த உயிர்க்கு எல்லாம்
அம் கண் நம்பி; அருள் மால் விசும்பு ஆளும்
அமரர்நம்பி; குமரன் முதல்-தேவர்-
தங்கள் நம்பி; தவத்துக்கு ஒரு நம்பி;
''தாதை'' என்று உன் சரண் பணிந்து ஏத்தும்
எங்கள் நம்பி; என்னை ஆள்உடை நம்பி— 2
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே.

வருந்த அன்று மதயானை உரித்த
வழக்கு நம்பி, முழக்கும் கடல் நஞ்சம்
அருந்தும் நம்பி, அமரர்க்கு அமுது ஈந்த
அருள் என் நம்பி, பொருளால் வரு நட்டம்
புரிந்த நம்பி, புரிநூல் உடை நம்பி,
பொழுதும் விண்ணும் முழுதும் பலஆகி
இருந்த நம்பி, என்னை ஆள்உடை நம்பி— 3
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே.

ஊறும் நம்பி, அமுதா; உயிர்க்கு எல்லாம்
உரிய நம்பி; தெரியும் மறை அங்கம்,
கூறும் நம்பி, முனிவர்க்கு; அருங்கூற்றைக்
குமைத்த நம்பி; குமையாப் புலன்ஐந்தும்
சீறும் நம்பி; திரு வெள்ளடை நம்பி;
செங்கண் வெள்ளைச் செழுங் கோட்டு எருது என்றும்
ஏறும் நம்பி; என்னை ஆள்உடை நம்பி— 4
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே.

‘‘குற்ற நம்பி,—குறுகார் எயில் மூன்றை,—
குலைத்த நம்பி, சிலையா வரை கையில்
பற்றும் நம்பி, பரமானந்தவெள்ளம்
பணிக்கும் நம்பி’’ எனப் பாடுதல்அல்லால்
மற்று நம்பி! உனக்கு என் செய வல்லேன்?
மதியிலேன் படு வெந்துயர்எல்லாம்
எற்றும் நம்பி, என்னை ஆள்உடை நம்பி—
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே. 5

அரித்த நம்பி, அடி கைதொழுவார் நோய்;
ஆண்ட நம்பி, முன்னை; ஈண்டு உலகங்கள்
தெரித்த நம்பி; ஒரு சே உடை நம்பி;
சில்பலிக்கு என்று அகம்தோறும் மெய் வேடம்
தரித்த நம்பி; சமயங்களின் நம்பி;
தக்கன்தன் வேள்வி புக்கு அன்று இமையோரை
இரித்த நம்பி; என்னை ஆள்உடை நம்பி—
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 6

பின்னை நம்பும் புயத்தான் நெடுமாலும்
பிரமனும் என்று இவர் நாடியும் காணா
உன்னை—நம்பி!—ஒருவர்க்கு எய்தல் ஆமே,
உலகு நம்பி உரைசெய்யுமது அல்லால்?
முன்னை நம்பி; பின்னும் வார்சடை நம்பி;
முழுதுஇவை இத்தனையும் தொகுத்து ஆண்டது
என்னை? நம்பி! எம்பிரான்ஆய நம்பி—
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 7

சொல்லை நம்பி; பொருள்ஆய் நின்ற நம்பி;
தோற்றம், ஈறு, முதல், ஆகிய நம்பி;
வல்லை நம்பி, அடியார்க்கு அருள்செய்ய;
வருந்தி நம்பி உனக்கு ஆட்செயகில்லார்
அல்லல்—நம்பி!—படுகின்றது என்? நாடி
அணங்கு ஒருபாகம் வைத்து, எண்கணம் போற்ற,
இல்லம் நம்பி இடு பிச்சை கொள் நம்பி—
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 8

‘‘காண்டும், நம்பி கழல்சேவடி’’ என்றும்
கலந்து உனைக் காதலித்து ஆட்செய்கிற்பாரை
ஆண்டு நம்பி அவர் முன்கதி சேர
அருளும் நம்பி; குரு மாப் பிறை பாம்பைத்
தீண்டும் நம்பி; சென்னியில் கன்னி தங்கத்
திருத்தும் நம்பி; பொய்ச் சமண் பொருள்ஆகி
ஈண்டும் நம்பி; இமையோர் தொழும் நம்பி—
எழுபிறப்பும் எங்கள் நம்பிகண்டாயே. 9

கரக்கும் நம்பி, கசியாதவர்தம்மை;
கசிந்தவர்க்கு இம்மையொடு அம்மையில் இன்பம்
பெருக்கும் நம்பி; பெருகக் கருத்தா ....
.... 10

திருத் தினை நகர்

VII-64

தக்கேசி

நீறு தாங்கிய திருநுதலானை,
நெற்றிக்கண்ணனை, நிரை வளை மடந்தை
கூறு தாங்கிய கொள்கையினானை,
குற்றம்இ(ல்)லியை, கற்றைஅம்சடைமேல்
ஆறு தாங்கிய அழகனை, அமரர்க்கு
அரிய சோதியை,—வரிவரால் உகளும்
சேறு தாங்கிய—திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினை,—சென்று அடை, மனனே! 1

பிணி கொள் ஆக்கையில் பிறப்புஇறப்பு என்னும்
இதனை நீக்கி, ஈசன் திருவடிஇணைக்கு ஆள்-
துணிய வேண்டிடில், சொல்லுவன்; கேள், நீ:
அஞ்சல், நெஞ்சமே! வஞ்சர் வாழ் மதில்மூன்று
அணி கொள் வெஞ்சிலையால் உகச் சீறும்
ஐயன்,—வையகம் பரவி நின்று ஏத்தும்—
திணியும் வார் பொழில்-திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினை,—சென்று அடை, மனனே! 2

வடி கொள் கண்இணை மடந்தையர்தம்பால்
மயல்அது உற்று, வஞ்சனைக்கு இடம்ஆகி,
முடியுமா கருதேல்! எருது ஏறும்
மூர்த்தியை, முதல்ஆய பிரானை,
‘‘அடிகள்!’’ என்று அடியார் தொழுது ஏத்தும்
அப்பன், ஒப்பு இலா முலை உமை கோனை,
செடி கொள் கான் மலி திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினை,— சென்று அடை, மனனே! 3

பாவமே புரிந்து, அகலிடம்தன்னில்
பல பகர்ந்து, அலமந்து, உயிர் வாழ்க்கைக்கு
‘‘ஆவ!’’ என்று உழந்து அயர்ந்து வீழாதே,
அண்ணல்தன் திறம் அறிவினால் கருதி;
மாவின் ஈர்உரிஉடை புனைந்தானை,
மணியை, மைந்தனை, வானவர்க்கு அமுதை,
தேவதேவனை, திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினை, —சென்று அடை, மனனே! 4

ஒன்று அலா உயிர் வாழ்க்கையை நினைந்திட்டு,
உடல் தளர்ந்து, அரு மா நிதி இயற்றி,
‘‘என்றும் வாழல் ஆம், எமக்கு’’ எனப் பேசும்
இதுவும் பொய் எனவே நினை, உளமே!
குன்று உலாவிய புயம் உடையானை,
கூத்தனை,—குலாவிக் குவலயத்தோர்
சென்று எலாம் பயில்—திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினை,—சென்று அடை, மனனே! 5

வேந்தராய், உலகு ஆண்டு, அறம் புரிந்து,
வீற்றிருந்த இவ் உடல்இதுதன்னைத்
தேய்ந்து, இறந்து, வெந்துயர் உழந்திடும் இப்
பொக்க வாழ்வினை விட்டிடு, நெஞ்சே!
பாந்தள் அம் கையில் ஆட்டு உகந்தானை,
பரமனை, கடல்சூர் தடிந்திட்ட
சேந்தர் தாதையை, திருத் தினைநகருள்
சிவக்கொழுந்தினை,—சென்று அடை, மனனே! 6

தன்னில் ஆசு அறு சித்தமும் இன்றி,
தவம் முயன்று, அவம்ஆயின பேசி,
பின்னல் ஆர் சடை கட்டி, என்பு அணிந்தால்,
பெரிதும் நீந்துவது அரிது; அது நிற்க;
''முன் எலாம் முழுமுதல்'' என்று வானோர்
மூர்த்திஆகிய முதலவன்தன்னை,
செந்நெல் ஆர் வயல்-திருத் தினை நகருள்
சிவக்கொழுந்தினை,—சென்று அடை, மனனே! 7

பரிந்த சுற்றமும், மற்று வன் துணையும்,
பலரும், கண்டு அழுது எழ உயிர் உடலைப்
பிரிந்து போய் இது நிச்சயம் அறிந்தால்,
பேதைவாழ்வு எனும் பிணக்கினைத் தவிர்ந்து;
கருந்தடங்கண்ணிபங்கனை, உயிரை,
காலகாலனை, கடவுளை, விரும்பி,
செருந்தி பொன்மலர் திருத் தினை நகருள்
சிவக்கொழுந்தினை,—சென்று அடை, மனனே! 8

நமை எலாம் பலர் இகழ்ந்து உரைப்பதன் முன்,
நன்மை ஒன்று இலாத் தேரர் புன் சமண் ஆம்
சமயம் ஆகிய தவத்தினார் அவத்த-
தன்மை விட்டொழி, நன்மையை வேண்டில்!
உமை ஒர்கூறனை, ஏறு உகந்தானை,
உம்பர்ஆதியை, எம்பெருமானை,
சிமயம் ஆர் பொழில்-திருத் தினை நகருள்
சிவக்கொழுந்தினை,—சென்று அடை, மனனே! 9

நீடு பொக்கையின் பிறவியைப் பழித்து,
நீங்கல் ஆம் என்று மனத்தினைத் தெருட்டி,
சேடு உலாம் பொழில்-திருத் தினை நகருள்
சிவக்கொழுந்தின திருவடிஇணைதான்
நாடுஎலாம் புகழ் நாவலூர் ஆளி—
நம்பி, வன்தொண்டன், ஊரன்—உரைத்த
பாடல் ஆம் தமிழ் பத்துஇவை வல்லார்
முத்தி ஆவது பரகதிப் பயனே. 10

திரு நின்றியூர் VII-65 தக்கேசி

திருவும், வண்மையும், திண் திறல் அரசும்,—
சிலந்தியார் செய்த செய்பணி கண்டு—
மருவு கோச்செங்கணான்தனக்கு அளித்த
வார்த்தை கேட்டு நுன் மலர்அடி அடைந்தேன்—
பெருகு பொன்னி வந்து உந்து பல்மணியைப்
பிள்ளைப்பல்கணம் பண்ணையுள் நண்ணி,
தெருவும் தெற்றியும் முற்றமும் பற்றி,
திரட்டும் தென்திருநின்றியூரானே! 1

அணிகொள் ஆடை, அம் பூண், மணிமாலை,
அமுதுசெய்த அமுதம், பெறு சண்டி;
இணை கொள் ஏழ்-எழுநூறு இரும் பனுவல்
ஈந்தவன் திருநாவினுக்குஅரையன்;
கணை கொள் கண்ணப்பன்; என்று இவர் பெற்ற
காதல் இன்அருள் ஆதரித்து அடைந்தேன்—
திணை கொள் செந்தமிழ் பைங்கிளி தெரியும்
செல்வத் தென்திருநின்றியூரானே! 2

மொய்த்த சீர் முந்நூற்றுஅறுபதுவேலி
மூன்றுநூறுவேதியரொடு நுனக்கு
ஒத்த பொன்மணிக்கலசங்கள் ஏந்தி,
ஓங்கும் நின்றியூர் என்று உனக்கு அளிப்ப,
பத்தி செய்த அப் பரசுராமற்குப்
பாதம் காட்டிய நீதி கண்டு அடைந்தேன்—
சித்தர், வானவர், தானவர், வணங்கும்
செல்வத் தென்திருநின்றியூரானே! 3

இரவி நீள் சுடர் எழுவதன் முன்னம்
எழுந்து, தன் மூலைக்கலசங்கள் ஏந்தி,
சுரபி பால் சொரிந்து, ஆட்டி, நின் பாதம்
தொடர்ந்த வார்த்தை திடம்படக்கேட்டு,
பரவி உள்கி, வன் பாசத்தை அறுத்து,
பரம! வந்து, நுன் பாதத்தை அடைந்தேன்—
நிரவி நித்திலம், அத் தகு செம்பொன்,
அளிக்கும் தென்திருநின்றியூரானே! 4

வந்து ஓர் இந்திரன் வழிபட மகிழ்ந்து,
''வானநாடு நீ ஆள்க!'' என அருளி,
சந்திமூன்றிலும் தாபரம் நிறுத்திச்
சகளி செய்து இறைஞ்சு அகத்தியர்தமக்குச்
சிந்து மா மணி அணி திருப் பொதியில்
சேர்வு நல்கிய செல்வம் கண்டு அடைந்தேன்—
செந் தண் மா மலர்த் திருமகள் மருவும்
செல்வத் தென் திரு நின்றியூரானே! 5

காதுபொத்தர் ஐக் கின்னரர், உழுவை,
கடிக்கும் பன்னகம், பிடிப்ப(அ)ரும் சீயம்,
கோது இல் மா தவர்குழுஉடன், கேட்பக்
கோல ஆல்நிழல்கீழ் அறம் பகர;
ஏதம் செய்தவர் எய்திய இன்பம்
யானும் கேட்டு, நின் இணைஅடி அடைந்தேன்—
நீதி வேதியர் நிறை புகழ் உலகில்
நிலவு தென்திருநின்றியூரானே! 6

கோடு நான்கு உடைக் குஞ்சரம் குலுங்க,
நலம் கொள் பாதம் நின்று ஏத்தியபொழுதே
பீடு விண்மிசைப் பெருமையும் பெற்ற
பெற்றி கேட்டு நின் பொன்கழல் அடைந்தேன்—
பேடைமஞ்ஞையும், பிணைகளின் கன்றும்,
பிள்ளைக்கிள்ளையும், எனப் பிறைநுதலார்
நீடுமாடங்கள் மாளிகைதோறும் 7
நிலவு தென்திருநின்றியூரானே!

தக்கேசி

திரு ஆவடுதுறை VII-66

மறையவன்(ன்)ஒருமாணி வந்து அடைய,
வாரம்ஆய், அவன் ஆர்உயிர் நிறுத்தக்
கறை கொள் வேல் உடைக் காலனைக் காலால்
கடந்த காரணம் கண்டுகண்டு, அடியேன்,
''இறைவன், எம்பெருமான்'' என்று எப்போதும்
ஏத்திஏத்தி நின்று அஞ்சலி செய்து, உன்
அறைகொள் சேவடிக்கு அன்பொடும் அடைந்தேன்— 1
ஆவடுதுறை ஆதிஎம்மானே!

தெருண்ட வாய்இடை நூல் கொண்டு சிலந்தி
சித்திரப் பந்தர் சிக்கென இயற்ற,
சுருண்ட செஞ்சடையாய்! அதுதன்னைச்
சோழன் ஆக்கிய தொடர்ச்சி கண்டு, அடியேன்,
புரண்டு வீழ்ந்து நின் பொன்மலர்ப்பாதம்,
''போற்றிபோற்றி!'' என்று அன்பொடு புலம்பி,
அருண்டு, என் மேல்வினைக்கு அஞ்சி, வந்து அடைந்தேன்—
ஆவடுதுறை ஆதிஎம்மானே! 2

திகழும் மால்அவன் ஆயிரம்மலரால்
ஏத்துவான் ஒரு நீள் மலர் குறைய,
புகழினால் அவன் கண் இடந்து இடலும்,
புரிந்து, சக்கரம் கொடுத்தல் கண்டு, அடியேன்,
திகழும் நின் திருப்பாதங்கள் பரவி,
தேவதேவ! நின் திறம்பல பிதற்றி,
அகழும் வல்வினைக்கு அஞ்சி வந்து அடைந்தேன்—
ஆவடுதுறை ஆதிஎம்மானே! 3

வீரத்தால் ஒரு வேடுவன் ஆகி,
விசைத்து, ஒர் கேழலைத் துரந்து, சென்று, அணைந்து,
போரைத் தான் விசயன்தனக்கு அன்புஆய்ப்
புரிந்து, வான் படை கொடுத்தல் கண்டு, அடியேன்,
வாரத்தால் உன நாமங்கள் பரவி,
வழிபட்டு, உன் திறமே நினைந்து, உருகி,
ஆர்வத்தோடும் வந்து, அடிஇணை அடைந்தேன்—
ஆவடுதுறை ஆதிஎம்மானே! 4.

ஒக்க முப்புரம் ஓங்கு எரி தூவ,
உன்னை உன்னிய மூவர் நின் சரணம்
புக்கு, மற்றவர் பொன்னுலகு ஆளப்
புகழினால் அருள் ஈந்தமை அறிந்து,
மிக்க நின் கழலே தொழுது, அரற்றி,
வேதியா! ஆதிமூர்த்தி! நின் அரையில்
அக்கு அணிந்த எம்மான்! உனை அடைந்தேன்—
ஆவடுதுறை ஆதிஎம்மானே! 5

திரு வலிவலம் VII-67 தக்கேசி

ஊன்அங்கத்து உயிர்ப்புஆய், உலகுஎல்லாம்
ஓங்காரத்துஉருஆகி நின்றானை;
வானம் கைத்தவர்க்கும்(ம்) அளப்ப(அ)ரிய
வள்ளலை; அடியார்கள்தம் உள்ளத்
தேன், அங்கத்து அமுது, ஆகி, உள் ஊறும்
தேசனை; நினைத்தற்கு இனியானை;
மான் அம் கைத்தலத்து ஏந்த வல்லானை;—
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 1

பல்அடியார் பணிக்குப் பரிவானை,
பாடி ஆடும் பத்தர்க்கு அன்புஉடையானை,
செல் அடியே நெருக்கித் திறம்பாது
சேர்ந்தவர்க்கே சித்திமுத்தி செய்வானை,
நல் அடியார் மனத்து எய்ப்பினில் வைப்பை,
நான் உறு குறை அறிந்து அருள்புரிவானை,
வல் அடியார் மனத்து இச்சை உளானை,—
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 2

ஆழியனாய், அகன்றே, உயர்ந்தானை;
ஆதிஅந்தம் பணிவார்க்கு அணியானை;
கூழையர்ஆகி, பொய்யே குடி ஓம்பி,
குழைந்து, மெய்அடியார்குழுப் பெய்யும்
வாழியர்க்கே வழுவா நெறி காட்டி
மறுபிறப்பு என்னை மாசு அறுத்தானை;
மாழைஒண்கண்உமையை மகிழ்ந்தானை;—
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 3

நாத்தான் உன் திறமே திறம்பாது,
நண்ணி அண்ணித்து, அமுதம் பொதிந்து ஊறும்
ஆத்தானை, அடியேன்தனக்கு; என்றும்
அளவு இறந்த பல்-தேவர்கள் போற்றும்
சோத்தானை; சுடர்மூன்றிலும் ஒன்றி,
துருவி மால் பிரமன்(ன்) அறியாத
மாத்தானை; மாத்து எனக்கு வைத்தானை;—
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 4

நல்இசை ஞானசம்பந்தனும் நாவுக்கு-
அரசரும் பாடிய நல்-தமிழ்மாலை
சொல்லியவே சொல்லி ஏத்து உகப்பானை;
தொண்டனேன் அறியாமை அறிந்து,
கல்இயல் மனத்தைக் கசிவித்து,
கழல்அடி காட்டி, என் களைகளை அறுக்கும்
வல் இயல் வானவர் வணங்க-நின்றானை;— 5
வலிவலம்தனில் வந்து கண்டேனே.

பாடுமாப் பாடிப் பணியும்ஆறு அறியேன்;
பனுவுமா பனுவிப் பரவும்ஆறு அறியேன்;
தேடுமா தேடித் திருத்தும்ஆறு அறியேன்;
செல்லுமா செல்லச் செலுத்தும்ஆறு அறியேன்;
''கூடும்ஆறு எங்ஙனமோ?'' என்று கூறக்
குறித்துக் காட்டிக் கொணர்ந்து எனை ஆண்டு,
''வாடி நீ வாளா வருந்தல்!'' என்பானை 6
வலிவலம்தனில் வந்து கண்டேனே.

பந்தித்த வல்வினைப்பற்று அற, பிறவிப்-
படுகடல் பரப்புத் தவிர்ப்பானை;
சந்தித்த(த்) திறலால் பணி பூட்டித்
தவத்தை ஈட்டிய தம் அடியார்க்கு,
சிந்தித்தற்கு எளிதுஆய், திருப்பாதம்,
சிவலோகம் திறந்து ஏற்ற வல்லானை;
வந்திப்பார்தம் மனத்தின் உள்ளானை;— 7
வலிவலம்தனில் வந்து கண்டேனே.

எவ் எவர் தேவர் இருடிகள் மன்னர்
எண்இறந்தார்கள் மற்று எங்கும் நின்று ஏத்த,
அவ் அவர் வேண்டியதே அருள்செய்து,
அடைந்தவர்க்கே இடம்ஆகி நின்றானை;
இவ் அவர் கருணை எம் கற்பகக்கடலை;
''எம்பெருமான், அருளாய்!'' என்ற பின்னை,
வவ்வி என் ஆவி மனம் கலந்தானை;— 8
வலிவலம்தனில் வந்து கண்டேனே.

திரியும் முப்புரம் செற்றதும், குற்றத்
திறல் அரக்கனைச் செறுத்ததும், மற்றைப்
பெரிய நஞ்சு அமுதுஉண்டதும், முற்றும்
பின்னைஆய் முன்னமே முளைத்தானை;
அரிய நால்மறை அந்தணர் ஓவாது
அடி பணிந்து அறிதற்கு அரியானை;
வரையின்பாவைமணாளன், எம்மானை;—
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 9

ஏன்ற அந்தணன்தலையினை அறுத்து,
நிறைக்க மால் உதிரத்தினை ஏற்று,
தோன்று தோள்மிசைக் களேபரம்தன்னைச்
சுமந்த மா விரதத்த கங்காளன்;
சான்று காட்டுதற்கு அரியவன்; எளியவன்-
தன்னை; தன் நிலாம் மனத்தார்க்கு
மான்று சென்று அணையாதவன்தன்னை;—
வலிவலம்தனில் வந்து கண்டேனே. 10

கலி வலம் கெட ஆர்அழல் ஓம்பும்—
கற்ற நால்மறை முற்று அனல் ஓம்பும்—
வலிவலம்தனில் வந்து கண்டு, அடியேன்
மன்னும் நாவல் ஆரூரன்—வன்தொண்டன்—
ஒலி கொள் இன்இசைச் செந்தமிழ்பத்தும்
உள்ளத்தால் உகந்து ஏத்த வல்லார், போய்,
மெலிவு இல் வான்உலகத்தவர் ஏத்த,
விரும்பி விண்ணுலகு எய்துவர்தாமே. 11

திரு நள்ளாறு VII-68 தக்கேசி

செம்பொன்மேனி வெண்நீறு அணிவானை,
கரிய கண்டனை, மால் அயன் காணாச்
சம்புவை, தழல் அங்கையினானை,
சாமவேதனை, தன் ஒப்பு இலானை,
கும்பமாகரியின்(ன்) உரியானை,
கோவின்மேல் வரும் கோவினை, எங்கள்
நம்பனை, நள்ளாறனை, அமுதை,—
நாயினேன் மறந்து என் நினைக்கேனே? 1

விரை செய் மா மலர்க்கொன்றையினானை;
வேதகீதனை; மிகச் சிறந்து உருகிப்
பரசுவார் வினைப்பற்று அறுப்பானை;
பாலொடு ஆன்அஞ்சும்ஆட வல்லானை;
குரைகடல், வரை,—ஏழ்,—உலகு உடைய
கோனை; ஞானக்கொழுந்தினை; தொல்லை
நரைவிடை உடை நள்ளாறனை; அமுதை;—
நாயினேன் மறந்து என் நினைக்கேனே? 2

பூவில் வாசத்தை, பொன்னினை, மணியை,
புவியை, காற்றினை, புனல், அனல், வெளியை,
சேவின்மேல் வரும் செல்வனை, சிவனை,
தேவதேவனை, தித்திக்கும் தேனை,
காவிஅம்கண்ணி பங்கனை, கங்கைச்
சடையனை, காமரத்துஇசை பாட
நாவில் ஊறும் நள்ளாறனை, அமுதை,—
நாயினேன் மறந்து என் நினைக்கேனே? 3

தஞ்சம் என்று தன் தாள்அது அடைந்த
பாலன்மேல் வந்த காலனை, உருள
நெஞ்சில் ஓர் உதைகொண்ட பிரானை;
நினைப்பவர் மனம் நீங்ககில்லானை;
விஞ்சை வானவர், தானவர், கூடிக்
கடைந்த வேலையுள் மிக்கு எழுந்து எரியும்
நஞ்சம் உண்ட நள்ளாறனை; அமுதை;—
நாயினேன் மறந்து என் நினைக்கேனே? 4

மங்கைபங்கனை, மாசு இலா மணியை,
வானநாடனை, ஏனமோடு அன்னம்
எங்கும் நாடியும் காண்பு அரியானை,
ஏழையேற்கு எளிவந்த பிரானை,
அங்கம் நால்மறையால் நிறைகின்ற
அந்தணாளர் அடிஅது போற்றும்
நங்கள் கோனை, நள்ளாறனை, அமுதை,—
நாயினேன் மறந்து என் நினைக்கேனே? 5

கற்பகத்தினை, கனகமால்வரையை,
காமகோபனை, கண்ணுதலானை,
சொல்பதப்பொருள் இருள் அறுத்து அருளும்
தூய சோதியை, வெண்ணெய்நல்லூரில்
அற்புதப் பழ ஆவணம் காட்டி
அடியனா என்னை ஆள்அதுகொண்ட
நல்பதத்தை, நள்ளாறனை, அமுதை,—
நாயினேன் மறந்து என் நினைக்கேனே? 6

மறவனை, அன்று பன்றிப் பின் சென்ற
மாயனை, நால்வர்க்கு ஆலின்கீழ் உரைத்த
அறவனை, அமரர்க்கு அரியானை,
அமரர்சேனைக்கு நாயகன்ஆன
குறவர்மங்கைதன்கேள்வனைப் பெற்ற
கோனை, நான் செய்த குற்றங்கள் பொறுக்கும்
நறை விரி(ய்)யும் நள்ளாறனை, அமுதை,— 7
நாயினேன் மறந்து என் நினைக்கேனே?

மாதினுக்கு உடம்பு இடம் கொடுத்தானை,
மணியினை, பணிவார் வினை கெடுக்கும்
வேதனை, வேதவேள்வியர் வணங்கும்
விமலனை, அடியேற்கு எளிவந்த
தூதனை, தன்னைத் தோழமை அருளித்
தொண்டனேன் செய்த துரிசுகள் பொறுக்கும்
நாதனை, நள்ளாறனை, அமுதை,— 8
நாயினேன் மறந்து என் நினைக்கேனே?

இலங்கை வேந்தன், எழில் திகழ் கயிலை
எடுப்ப, ஆங்கு இமவான்மகள் அஞ்ச,
துலங்கு நீள்முடிஒருபதும் தோள்கள்-
இருபதும் நெரித்து, இன்இசை கேட்டு,
வலங்கை வாளொடு நாமமும் கொடுத்த
வள்ளலை; பிள்ளைமாமதிச் சடைமேல்
நலம் கொள் சோதி நள்ளாறனை; அமுதை;— 9
நாயினேன் மறந்து என் நினைக்கேனே?

செறிந்த சோலைகள் சூழ்ந்த நள்ளாற்று எம்
சிவனை, நாவலூர்ச் சிங்கடிதந்தை,
''மறந்தும் நான் மற்றும் நினைப்பது ஏது?'' என்று—
வனப்பகைஅப்பன், ஊரன், வன்தொண்டன்—
சிறந்த மாலைகள்அஞ்சினோடுஅஞ்சும்
சிந்தையுள் உருகிச் செப்ப வல்லார்க்கு
இறந்துபோக்கு இல்லை, வரவு இல்லைஆகி
இன்பவெள்ளத்துள் இருப்பர்கள், இனிதே. 10

வடதிருமுல்லைவாயில் VII-69 தக்கேசி

''திருவும் மெய்ப்பொருளும் செல்வமும், எனக்கு உன்
சீர் உடைக் கழல்கள்'' என்று எண்ணி,
ஒருவரை மதியாது உறுமைகள் செய்தும்,
ஊடியும், உறைப்பனாய்த் திரிவேன்;
முருகு அமர் சோலை சூழ் திரு முல்லை-
வாயிலாய்! வாயினால் உன்னைப்
பரவிடும் அடியேன் படு துயர் களையாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! 1

கூடிய இலயம் சதி பிழையாமை,
கொடிஇடைஉமைஅவள் காண,
ஆடிய அழகா! அருமறைப்பொருளே!
''அங்கணா! எங்கு உற்றாய்?'' என்று
தேடிய வானோர் சேர் திரு முல்லை-
வாயிலாய்! திருப் புகழ் விருப்பால்
பாடிய அடியேன் படு துயர் களையாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! 2

விண் பணிந்து ஏத்தும் வேதியா! மாதர்
வெருவிட, வேழம் அன்று உரித்தாய்!
செண்பகச்சோலை சூழ் திரு முல்லை-
வாயிலாய்! தேவர்தம் அரசே!
தண்பொழில் ஒற்றி மா நகர் உடையாய்!
சங்கிலிக்கா என் கண் கொண்ட
பண்ப! நின் அடியேன் படு துயர் களையாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! 3

பொன் நலம் கழனிப் புது விரை மருவி,
பொறிவரிவண்டு இசை பாட,
அம் நலம் கமலத்தவிசின்மேல் உறங்கும்
அலவன் வந்து உலவிட, அள்ளல்
செந்நெல்அம்கழனி சூழ் திரு முல்லை-
வாயிலாய்! திருப் புகழ் விருப்பால்
பன்னல் அம் தமிழால் பாடுவேற்கு அருளாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! 4

சந்தனவேரும், கார்அகில்குறடும்,
தண் மயில்பீலியும், கரியின்
தந்தமும், தரளக்குவைகளும், பவளக்-
கொடிகளும், சுமந்துகொண்டு உந்தி
வந்து இழி பாலி வடகரை முல்லை-
வாயிலாய்! மாசு இலா மணியே!
பந்தனை கெடுத்து என் படு துயர் களையாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! 5

மற்று நான் பெற்றது ஆர் பெற வல்லார்?
வள்ளலே! கள்ளமே பேசிக்
குற்றமே செயினும், குணம் எனக் கொள்ளும்
கொள்கையால் மிகைபல செய்தேன்;
செற்று மீது ஓடும் திரிபுரம் எரித்த
திரு முல்லைவாயிலாய்! அடியேன்
பற்று இலேன்; உற்ற படு துயர் களையாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! 6

மணி கெழு செவ்வாய், வெண் நகை, கரிய
வார்குழல், மா மயில்சாயல்,
அணி கெழு கொங்கை, அம் கயல்கண்ணார்
அரு நடம்ஆடல் அருத
திணி பொழில் தழுவு திரு முல்லைவாயில்
செல்வனே! எல்லியும் பகலும்
பணிஅது செய்வேன் படு துயர் களையாய்;
பாசுபதா! பரஞ்சுடரே! 7

நம்பனே! அன்று வெண்ணெய் நல்லூரில்
நாயினேன் தன்னை ஆட்கொண்ட
சம்புவே! உம்பரார் தொழுது ஏத்தும்—
தடங்கடல் நஞ்சு உண்ட—கண்டா!
செம்பொன் மாளிகை சூழ் திரு முல்லைவாயில்-
தேடி, யான் திரிதர்வேன், கண்ட
பைம்பொனே! அடியேன் படு துயர் களையாய்,
பாசுபதா! பரஞ்சுடரே! 8

மட்டு உலாம் மலர் கொண்டு அடிஇணை வணங்கும்
மாணிதன்மேல் மதியாதே
கட்டுவான் வந்த காலனை, மாளக்
காலினால் ஆர்உயிர் செகுத்த
சிட்டனே! செல்வத் திரு முல்லைவாயில்
செல்வனே! செழுமறை பகர்ந்த
பட்டனே! அடியேன் படு துயர் களையாய், 9
பாசுபதா! பரஞ்சுடரே!

சொல்ல(அ)ரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ் கொடிமுல்லையால் கட்டிட்டு,
எல்லை இல் இன்பம் அவன் பெற வெளிப்பட்டு,
அருளிய இறைவனே! என்றும்
நல்லவர் பரவும் திரு முல்லைவாயில்
நாதனே! நரைவிடை ஏறீ!
பல்கலைப்பொருளே! படு துயர் களையாய், 10
பாசுபதா! பரஞ்சுடரே!

விரை தரு மலர்மேல் அயனொடு மாலும்
வெருவிட நீண்ட எம்மானை,
திரை தரு புனல் சூழ் திரு முல்லைவாயில்
செல்வனை, நாவல் ஆரூரன்
உரைதரு மாலை ஓர்அஞ்சினோடுஅஞ்சும்
உள் குளிர்ந்து ஏத்த வல்லார்கள், 11
நரைதிரைமூப்பும் நடலையும் இன்றி
நண்ணுவர், விண்ணவர்க்கு அரசே.

திரு ஆவடுதுறை VII-70 தக்கேசி

கங்கை வார்சடையாய்! கணநாதா!
காலகாலனே! காமனுக்கு அனலே!
பொங்கு மாகடல்விடம் மிடற்றனே!
பூதநாதனே! புண்ணியா! புனிதா!
செங்கண் மால்விடையாய்! தெளி தேனே!
தீர்த்தனே! திரு ஆவடுதுறையுள்
அங்கணா! எனை, ''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே! 1

மண்ணின்மேல் மயங்கிக் கிடப்பேனை
வலிய வந்து என்னை ஆண்டுகொண்டானே!
கண் இலேன்; உடம்பில்(ல்) அடு நோயால்
கருத்து அழிந்து, உனக்கே பொறை ஆனேன்;
தெண் நிலா எறிக்கும் சடையானே!
தேவனே! திரு ஆவடுதுறையுள்
அண்ணலே! எனை,''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே! 2

ஒப்புஇலாமுலையாள் ஒருபாகா!
உத்தமா! மத்தம் ஆர்தரு சடையாய்!
முப்புரங்களைத் தீ வளைத்து அங்கே
மூவருக்கு அருள்செய்ய வல்லானே!
செப்ப ஆல்நிழல்கீழ் இருந்து அருளும்
செல்வனே! திரு ஆவடுதுறையுள்
அப்பனே! எனை, ''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே! 3

கொதியினால் வரு காளிதன் கோபம்
குறைய ஆடிய கூத்து உடையானே!
மதி இலேன்; உடம்பில்(ல்) அடு நோயால்
மயங்கினேன்; மணியே! மணவாளா!
விதியினால் இமையோர் தொழுது ஏத்தும்
விகிர்தனே! திரு ஆவடுதுறையுள்
அதிபனே! எனை,''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே! 4

வந்த வாள் அரக்கன் வலி தொலைத்து
வாழும் நாள் கொடுத்தாய்! வழிமுதலே!
வெந்தவெண்பொடிப் பூச வல்லானே!
வேடனாய் விசயற்கு அருள்புரிந்த
இந்துசேகரனே! இமையோர் சீர்
ஈசனே! திரு ஆவடுதுறையுள்
அந்தணா! எனை,''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே! 5

குறைவு இலா நிறைவே! குணக்குன்றே!
கூத்தனே! குழைக் காது உடையானே!
உறவு இலேன், உனைஅன்றி; மற்று அடியேன்
ஒரு பிழை பொறுத்தால் இழிவு உண்டே?
சிறை வண்டு ஆர் பொழில் சூழ் திரு ஆரூர்ச்
செம்பொனே! திரு ஆவடுதுறையுள்
அறவனே! எனை,''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே! 6

வெய்ய மாகரிஈர்உரியானே!
வேங்கைஆடையினாய்! விதிமுதலே!
மெய்யனே! அடல் ஆழி அன்று அரிதான்
வேண்ட, நீ கொடுத்து அருள்புரி விகிர்தா!
செய்யமேனியனே! திகழ் ஒளியே!
செங்கணா! திரு ஆவடுதுறையுள்
ஐயனே! எனை, ''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள் ஏறே! 7

கோது இலா அமுதே! அருள் பெருகு
கோலமே! இமையோர் தொழு கோவே!
பாதி மாது ஒருகூறு உடையானே!
பசுபதீ! பரமா! பரமேட்டீ!
தீது இலா மலையே! திருஅருள் சேர்
சேவகா! திரு ஆவடுதுறையுள்
ஆதியே! எனை, ''அஞ்சல்!'' என்று அருளாய்!—
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே! 8

வானநாடனே! வழித்துணைமருந்தே!
மாசு இலா மணியே! மறைப்பொருளே!
ஏன மா எயிறு, ஆமையும், எலும்பும்,
ஈடு தாங்கிய மார்பு உடையானே!
தேன் நெய் பால் தயிர் ஆட்டு உகந்தானே!
தேவனே! திரு ஆவடுதுறையுள்
ஆனையே! எனை, ''அஞ்சல்!'' என்று அருளாய்!— 9
ஆர் எனக்கு உறவு? அமரர்கள்ஏறே!

வெண்தலை, பிறை, கொன்றையும், அரவும்,
வேரி மத்தமும், விரவி முன் முடித்த
இண்டைமாமலர்ச் செஞ்சடையானை;
ஈசனை; திரு ஆவடுதுறையுள்
அண்டவாணனை; சிங்கடிஅப்பன்—
அணுக்க வன்தொண்டன்—ஆர்வத்தால் உரைத்த
தண்தமிழ்மலர்பத்தும் வல்லார்கள் 10
சாதலும் பிறப்பும்(ம்) அறுப்பாரே.

VII-71

காந்தாரம்

திரு மறைக்காடு

யாழைப்பழித்தன்னமொழிமங்கை ஒருபங்கன்,
பேழைச் சடைமுடிமேல் பிறை வைத்தான், இடம் பேணில்—
தாழைப்பொழில்ஊடே சென்று பூழைத்தலை நுழைந்து 1
வாழைக்கனி கூழைக்குரங்கு உண்ணும் மறைக்காடே.

சிகரத்துஇடை இளவெண்பிறை வைத்தான் இடம், தெரியில்—
முகரத்துஇடை முத்தின்(ன்) ஒளி பவளத்திரள், ஓதம்,
தகரத்துஇடை தாழைத்திரள் ஞாழல்-திரள் நீழல், 2
மகரத்தொடு சுறவம், கொணர்ந்து எற்றும் மறைக்காடே.

அங்கங்களும் மறைநான்குஉடன் விரித்தான் இடம் அறிந்தோம்—
தெங்கங்களும் நெடும்பெண்ணையும் பழம் வீழ் மணல் படப்பை,
சங்கங்களும் இலங்கு இப்பியும் வலம்புரிகளும் இடறி, 3
வங்கங்களும் உயர்கூம்பொடு வணங்கும் மறைக்காடே.

நரை விரவிய மயிர்தன்னொடு பஞ்ச(வ்)வடி மார்பன்,
உரை விரவிய உத்தமன், இடம்—உணரல்(ல்)உறு, மனமே!—
குரை விரவிய குலை சேகரக் கொண்டல்-தலை விண்ட
வரை புரைவன திரை பொருது இழிந்து எற்றும் மறைக்காடே. 4

சங்கைப் பட நினையாது எழு, நெஞ்சே, தொழுது ஏத்த!
கங்கைச் சடைமுடி உடையவர்க்கு இடம் ஆவது—பரவை
அங்கக் கடல் அரு மா மணி உந்திக் கரைக்கு ஏற்ற,
வங்கத்தொடு சுறவம் கொணர்ந்து எற்றும் மறைக்காடே. 5

அடல் விடையினன், மழுவாளினன், அலரால் அணி கொன்றைப்
படரும் சடைமுடி உடையவர்க்கு இடம்ஆவது—பரவைக்-
கடல்இடைஇடை கழி அருகினில் கடி நாறு தண் கைதை
மடல்இடைஇடை வெண்குருகு எழு மணிநீர் மறைக்காடே. 6

முளைவளர்இளமதி உடையவன், முன் செய்த வல்வினைகள்-
களை களைந்து எனை ஆளல்(ல்)உறு கண்டன், இடம்—செந்நெல்
வளை விளைவயல் கயல் பாய்தரு குண, வார் மணல், கடல்வாய்
வளை வளையொடு சலஞ்சலம் கொணர்ந்து எற்றும் மறைக்காடே. 7

நலம் பெரியன, சுரும்பு ஆர்ந்தன, நம்கோன் இடம் அறிந்தோம்;
கலம் பெரியன சாரும் கடல் கரை பொருது இழி—கங்கைச்-
சலம் புரி சடைமுடி உடையவர்க்கு இடம்ஆவது—பரவை
வலம்புரியொடு சலஞ்சலம் கொணர்ந்து எற்றும் மறைக்காடே. 8

குண்டாடியும் சமண்ஆடியும் குற்றுஉடுக்கையர்தாமும்
கண்டார் கண்ட காரணம்(ம்)அவை கருதாது கைதொழுமின்—
எண்தோளினன், முக்கண்ணினன், ஏழ்இசையினன், அறுகால்
வண்டு ஆடு தண்பொழில் சூழ்ந்து எழு மணிநீர் மறைக்காடே! 9

பார் ஊர்பல புடை சூழ் வளவயல் நாவலர்வேந்தன்
வார் ஊர் வனமுலையாள்உமை பங்கன் மறைக்காட்டை
ஆரூரன தமிழ்மாலைகள் பாடும்(ம்) அடித்தொண்டர்
நீர் ஊர்தரு நிலனோடு உயர் புகழ் ஆகுவர், தாமே. 10

திரு வலம்புரம் VII-72 காந்தாரம்

எனக்கு இனித் தினைத்தனைப் புகல்இடம் அறிந்தேன்;
பனைக் கனிபழம் படும் பரவையின் கரைமேல்—
எனக்கு இனியவன், தமர்க்கு இனியவன், எழுமையும்
மனக்கு இனியவன்தனது இடம்—வலம்புரமே. 1

புரம்அவை எரிதர வளைந்த வில்லினன், அவன்;
மரஉரி புலிஅதள் அரைமிசை மருவினன்;
அரஉரி இரந்தவன், இரந்து உண விரும்பி நின்று;
இரவு எரிஆடிதன் இடம்—வலம்புரமே. 2

நீறு அணி மேனியன், நெருப்பு உமிழ் அரவினன்,
கூறு அணி கொடுமழு ஏந்தி(ய) ஓர் கையினன்,
ஆறு அணி அவிர்சடை அழல் வளர் மழலை வெள்-
ஏறு அணி அடிகள்தம் இடம்—வலம்புரமே. 3

கொங்கு அணை சுரும்பு உண, நெருங்கிய குளிர் இளந்
தெங்கொடு பனை பழம் படும் இடம்; தேவர்கள்
தங்கிடும் இடம்; தடங்கடல்-திரை புடைதர
எங்களது அடிகள் நல் இடம்—வலம்புரமே. 4

கொடுமழு விரகினன், கொலை மலி சிலையினன்,
நெடுமதில் சிறுமையின் நிரவ வல்லவன், இடம்;
படு மணி முத்தமும் பவளமும் மிகச் சுமந்து
இடு மணல் அடைகரை இடம்—வலம்புரமே. 5

கருங்கடக்களிற்று உரிக் கடவுளது இடம்; கயல்
நெருங்கிய நெடும்பெ(ண்)ணைஅடும்பொடு விரவிய
மருங்கொடு, வலம்புரி சலஞ்சலம் மணம் புணர்ந்து
இருங்கடல் அணைகரை இடம்—வலம்புரமே. 6

நரி புரி காடு அரங்கா நடம்ஆடுவர்,
வரி புரி பாட நின்று ஆடும் எம்மான், இடம்;
புரிசுரிவரிகுழல் அரிவை ஒர்பால் மகிழ்ந்து
எரி எரிஆடிதன் இடம்—வலம்புரமே. 7

பாறு அணி முடைதலை கலன் என மருவிய,
நீறு அணி, நிமிர்சடைமுடியினன்; நிலவிய
மாறு அணி வரு திரை வயல் அணி பொழிலது,
ஏறு உடை அடிகள்தம் இடம்—வலம்புரமே. 8

சடசட விடு பெ(ண்)ணை பழம் படும் இட வகை;
பட வடகத்தொடு பல கலந்து உலவிய
கடைகடை பலி திரி கபாலிதன் இடம்அது;
இடி கரை மணல் அடை இடம்—வலம்புரமே. 9

குண்டிகைப் படப்பினில் விடக்கினை ஒழித்தவர்
கண்டவர், கண்டு அடி வீழ்ந்தவர், கனைகழல்
தண்டு உடைத் தண்டிதன் இனம் உடை ''அர''உடன் 10
எண்திசைக்கு ஒரு சுடர் இடம்—வலம்புரமே.

வரும் கலமும் பல பேணுதல், கருங்கடல்,
இருங் குலப் பிறப்பர்தம் இடம் வலம்புரத்தினை,
அருங் குலத்து அருந்தமிழ் ஊரன்—வன்தொண்டன்—சொல் 11
பெருங் குலத்தவரொடு பிதற்றுதல் பெருமையே.

திரு ஆரூர்

VII-73

காந்தாரம்

கரையும்,'கடலும், மலையும், காலையும், மாலையும், எல்லாம்
உரையில் விரவி வருவான்; ஒருவன்; உருத்திரலோகன்;
வரையின்மடமகள் கேள்வன்; வானவர்தானவர்க்கு எல்லாம்
அரையன்; இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ?கேளீர்! 1

''தனியன்'' என்று எள்கி அறியேன்; தம்மைப் பெரிதும் உகப்பன்;
முனிபவர்தம்மை முனிவன்; முகம்பல பேசி மொழியேன்;
கனிகள்பல உடைச் சோலைக் காய்க்குலை ஈன்ற கமுகின்
இனியன் இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 2

சொல்லில் குலா அன்றிச் சொல்லேன்; தொடர்ந்தவர்க்கும் துணை அல்லேன்;
கல்லில் வலிய மனத்தேன்; கற்ற பெரும் புலவாணர்
அல்லல் பெரிதும் அறுப்பான், அருமறை ஆறுஅங்கம் ஓதும்
எல்லை, இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 3

நெறியும், அறிவும், செறிவும், நீதியும், நான் மிகப் பொல்லேன்;
மிறையும் தறியும் உகப்பன்; வேண்டிற்றுச் செய்து திரிவேன்;
பிறையும் அரவும் புனலும் பிறங்கிய செஞ்சடை வைத்த
இறைவன் இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 4

நீதியில் ஒன்றும் வழுவேன்; நிட்கண்டகம் செய்து வாழ்வேன்;
வேதியர்தம்மை வெகுளேன்; வெகுண்டவர்க்கும் துணை ஆகேன்;
சோதியில் சோதி எம்மானை, சுண்ணவெண்நீறு அணிந்திட்ட
ஆதி, இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 5

அருத்தம் பெரிதும் உகப்பேன்; அலவலையேன்; அலந்தார்கள்
ஒருத்தர்க்கு உதவியேன்அல்லேன்; உற்றவர்க்குத் துணை அல்லேன்;
பொருத்தமேல் ஒன்றும் இலாதேன்; புற்று எடுத்திட்டு இடம்கொண்ட
அருத்தன் இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 6

சந்தம்பல அறுக்கில்லேன்; சார்ந்தவர்தம் அடிச் சாரேன்;
முந்திப் பொரு விடை ஏறி மூஉலகும் திரிவானே,
கந்தம் கமழ் கொன்றைமாலைக்கண்ணியன், விண்ணவர் ஏத்தும்
எந்தை, இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 7

நெண்டிக்கொண்டேயும் கிலாய்ப்பன்; நிச்சயமே; இது திண்ணம்;
மிண்டர்க்கு மிண்டுஅலால் பேசேன்; மெய்ப்பொருள் அன்றி உணரேன்;
பண்டு அங்கு இலங்கையர்கோனைப் பருவரைக்கீழ் அடர்த்திட்ட
அண்டன் இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 8

நமர், பிறர், என்பது அறியேன்; நான் கண்டதே கண்டு வாழ்வேன்;
தமரம் பெரிதும் உகப்பன்; தக்கஆறு ஒன்றும் இலாதேன்;
குமரன், திருமால், பிரமன் கூடிய தேவர் வணங்கும்
அமரன் இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 9

ஆசைபல அறுக்கில்லேன்; ஆரையும் அன்றி உரைப்பேன்;
பேசில் சழக்குஅலால் பேசேன்; பிழைப்பு உடையேன், மனம்தன்னால்;
ஓசை பெரிதும் உகப்பேன்; ஒலிகடல்நஞ்சு அமுதுஉண்ட
ஈசன் இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ? கேளீர்! 10

''எந்தை இருப்பதும் ஆரூர்; அவர் எம்மையும் ஆள்வரோ?'' என்று
சிந்தைசெயும் திறம் வல்லான், திரு மருவும் திரள்தோளான்,
மந்த முழவம் இயம்பும் வளவயல் நாவல் ஆரூரன்
சந்தம் இசையொடும் வல்லார்தாம் புகழ் எய்துவர்தாமே. 11

திருத் துருத்தியும் திரு வேள்விக்குடியும்

VII-74

காந்தாரம்

மின்னும் மா மேகங்கள் பொழிந்து இழிந்த(அ)ருவி
வெடிபடக் கரையொடும் திரை கொணர்ந்து எற்றும்
அன்னம் ஆம் காவிரி அகன் கரை உறைவார்;
அடிஇணை தொழுது எழும் அன்பர்ஆம் அடியார்
சொன்னஆறு அறிவார்; துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
என்னை, நான் மறக்கும்ஆறு?—எம்பெருமானை,
என் உடம்பு அடும் பிணிஇடர் கெடுத்தானை. 1

கூடும்ஆறு உள்ளன கூடியும், கோத்தும்,
கொய் புன ஏனலோடு ஐவனம் சிதறி,
மாடு மா கோங்கமே மருதமே பொருது,
மலை எனக் குலைகளை மறிக்கும்ஆறு உந்தி,
ஓடு மா காவிரித் துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
பாடும்ஆறு அறிகிலேன்—எம்பெருமானை,
பழவினைஉள்ளன பற்றுஅறுத்தானை. 2

கொல்லும் மால்யானையின் கொம்பொடு வம்பு ஆர்
கொழுங் கனிச் செழும் பயன் கொண்டு, கூட்டு எய்தி,
புல்கியும், தாழ்ந்தும், போந்து தவம் செய்யும்
போகரும் யோகரும் புலரிவாய் மூழ்கச்
செல்லும் மா காவிரித் துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
சொல்லும்ஆறு அறிகிலேன்—எம்பெருமானை,
தொடர்ந்து அடும் கடும் பிணித்தொடர்வு அறுத்தானை. 3

பொறியும் மா சந்தனத்துண்டமோடு அகிலும்
பொழிந்து, இழிந்து, அருவிகள் புன்புலம் கவர,
கறியும் மா மிளகொடு கதலியும் உந்தி,
கடல் உற விளைப்பதே கருதி, தன் கை போய்
எறியும் மா காவிரித் துருத்தியார்;வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
அறியும்ஆறு அறிகிலேன்—எம்பெருமானை, 4
அருவினைஉள்ளன ஆசு அறுத்தானை.

பொழிந்து இழி மும்மதக் களிற்றின மருப்பும்
பொன்மலர் வேங்கையின் நல் மலர் உந்தி,
இழிந்துஇழிந்து, அருவிகள் கடும் புனல் ஈண்டி,
எண்திசையோர்களும் ஆட வந்து இங்கே
சுழிந்து இழி காவிரித் துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
ஒழிந்திலேன், பிதற்றும்ஆறு;—எம்பெருமானை, 5
உற்ற நோய் இற்றையே உற ஒழித்தானை.

புகழும் மா சந்தனத்துண்டமோடு அகிலும்
பொன்மணி வரன்றியும், நல் மலர் உந்தி,
அகழும் மா அருங் கரை வளம்படப் பெருகி,
ஆடுவார் பாவம் தீர்த்து, அஞ்சனம் அலம்பி,
திகழும் மா காவிரித் துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
இகழும்ஆறு அறிகிலேன்—எம்பெருமானை, 6
இழித்த நோய் இம்மையே ஒழிக்க வல்லானை.

வரையின் மாங்கனியொடு வாழையின்கனியும்
வருடியும், வணக்கியும், மராமரம் பொருது,
கரையும் மா கருங்கடல் காண்பதே கருத்துஆய்,
காம்(பு) பீலி சுமந்து, ஒளிர் நித்திலம் கை போய்,
விரையும் மா காவிரித் துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
உரையும்ஆறு அறிகிலேன்—எம்பெருமானை, 7
உலகு அறி பழவினை அற ஒழித்தானை.

ஊரும் மா தேசமே மனம் உகந்து, உள்ளி,
புள்இனம்பல படிந்து ஒண் கரை உகள,
காரும் மா கருங்கடல் காண்பதே கருத்துஆய்,
கவரிமாமயிர் சுமந்து, ஒண் பளிங்கு இடறி,
தேரும் மா காவிரித் துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
ஆரும்ஆறு அறிகிலேன்—எம்பெருமானை, 8
அம்மைநோய் இம்மையே ஆசு அறுத்தானை.

புலங்களை வளம்படப் போக்கு அறப் பெருகி,
பொன்களே சுமந்து, எங்கும் பூசல் செய்து ஆர்ப்ப,
இலங்கும் ஆர் முத்தினோடு இனமணி இடறி,
இருகரைப் பெரு மரம் பீழந்து கொண்டு எற்றி,
கலங்கு மா காவிரித் துருத்தியார்; வேள்விக்-
குடிஉளார்; அடிகளை, செடியனேன் நாயேன்
விலங்கும்ஆறு அறிகிலேன்—எம்பெருமானை, 9
மேலைநோய் இம்மையே வீடுவித்தானை.

மங்கை ஓர்கூறு உகந்து, ஏறு உகந்து ஏறி,
மாறலார் திரிபுரம் நீறு எழச் செற்ற
அம் கையான் கழல்அடி அன்றி, மற்று அறியான்—
அடியவர்க்கு அடியவன், தொழுவன், ஆரூரன்—
கங்கை ஆர் காவிரித் துருத்தியார் வேள்விக்-
குடிஉளார், அடிகளைச் சேர்த்திய பாடல்
தம் கையால்-தொழுது, தம் நாவின்மேல் கொள்வார் 10
தவநெறி சென்று அமருலகம் ஆள்பவரே.

திரு ஆனைக்கா VII-75 காந்தாரம்

மறைகள்ஆயின நான்கும், மற்று உள பொருள்களும், எல்லாத்-
துறையும், தோத்திரத்து இறையும், தொன்மையும், நன்மையும், ஆய—
அறையும் பூம்புனல்—ஆனைக்கா உடை ஆதியை, நாளும், 1
''இறைவன்'' என்று அடி சேர்வார் எம்மையும் ஆள்உடையாரே.

வங்கம் மேவிய வேலை நஞ்சு எழ, வஞ்சகர்கள் கூடி,
தங்கள்மேல் அடராமை, ''உண்!'' என, உண்டு இருள்கண்டன்;
அங்கம் ஓதிய ஆனைக்கா உடை ஆதியை; நாளும், 2
''எங்கள் ஈசன்'' என்பார்கள் எம்மையும் ஆள்உடையாரே.

நீலவண்டு அறை கொன்றை, நேர் இழை மங்கை, ஒர் திங்கள்,
சால வாள்அரவங்கள், தங்கிய செஞ்சடை எந்தை;
ஆலநீழலுள் ஆனைக்கா உடை ஆதியை; நாளும் 3
ஏலும்ஆறு வல்லார்கள் எம்மையும் ஆள்உடையாரே.

தந்தை தாய், உலகுக்கு; ஓர் தத்துவன், மெய்த்தவத்தோர்க்கு;
பந்தம்ஆயின பெருமான்; பரிசு உடையவர் திரு அடிகள்;
அம் தண் பூம்புனல் ஆனைக்கா உடை ஆதியை; நாளும்
''எந்தை'' என்று அடி சேர்வார் எம்மையும் ஆள்உடையாரே. 4

கணை செந்தீ, அரவம் நாண், கல் வளையும் சிலை, ஆகத்
துணை செய் மும் மதில்மூன்றும் சுட்டவனே, உலகு உய்ய;
அணையும் பூம்புனல் ஆனைக்கா உடை ஆதியை; நாளும்
இணைகொள் சேவடி சேர்வார் எம்மையும் ஆள்உடையாரே. 5

விண்ணின் மா மதி சூடி; விலைஇலிகலன் அணி விமலன்;
பண்ணின் நேர் மொழி மங்கை பங்கினன்; பசு உகந்து ஏறி;
அண்ணல் ஆகிய ஆனைக்கா உடை ஆதியை; நாளும்
எண்ணும்ஆறு வல்லார்கள் எம்மையும் ஆள்உடையாரே. 6

தாரம் ஆகிய பொன்னித் தண்துறைஆடி விழுத்தும்
நீரில் நின்று, அடி போற்றி, ''நின்மலா, கொள்!'' என ஆங்கே
ஆரம் கொண்ட எம் ஆனைக்கா உடை ஆதியை நாளும்
ஈரம் உள்ளவர் நாளும் எம்மையும் ஆள்உடையாரே. 7

உரவம் உள்ளது ஓர் உழையின்உரி, புலிஅதள், உடையானை;
விரை கொள் கொன்றையினானை,—விரிசடைமேல்,—பிறையானை;
அரவம் வீக்கிய ஆனைக்கா உடை ஆதியை; நாளும்
இரவொடு எல்லிஅம்பகலும் ஏத்துவார் எமை உடையாரே. 8

வலம்கொள்வார்அவர்தங்கள் வல்வினை தீர்க்கும் மருந்து;
கலங்கக் காலனைக் காலால், காமனைக் கண், சிவப்பானை;
அலங்கல் நீர் பொரும் ஆனைக்கா உடை ஆதியை; நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையும் ஆள்உடையாரே. 9

ஆழியாற்கு அருள் ஆனைக்கா உடை ஆதி பொன்அடியின்
நீழலே சரண்ஆக நின்று அருள் கூர நினைந்து
வாழ வல்ல வன்தொண்டன் வண்தமிழ்மாலை வல்லார், போய்,
ஏழுமாபிறப்பு அற்று(வ்) எம்மையும் ஆள்உடையாரே. 10

VII-76 பியந்தைக்காந்தாரம்

திரு வாஞ்சியம்

பொருவனார்; புரிநூலர்; புணர்முலை உமையவளோடு
மருவனார்; மருவார்பால் வருவதும் இல்லை, நம் அடிகள்;
திருவனார் பணிந்து ஏத்தும் திகழ் திரு வாஞ்சியத்து உறையும்
ஒருவனார்; அடியாரை ஊழ்வினை நலிய ஒட்டாரே. 1

தொறுவில் ஆன்இளஏறு துண்ணென, இடி குரல் வெருவிச்
செறுவில் வாளைகள் ஓட, செங்கயல் பங்கயத்து ஒதுங்க,
கறுவு இலா மனத்தார்கள் காண்தகு வாஞ்சியத்து அடிகள்
மறு இலாத வெண்நீறு பூசுதல் மன்னும் ஒன்று உடைத்தே. 2

தூர்த்தர் மூஎயில் எய்து, சுடு நுனைப் பகழிஅது ஒன்றால்,
பார்த்தனார் திரள்தோள்மேல் பல்-நுனைப்பகழிகள் பாய்ச்சி,
தீர்த்தம் ஆம் மலர்ப்பொய்கைத் திகழ் திரு வாஞ்சியத்து அடிகள்
சாத்து மா மணிக் கச்சு அங்கு ஒரு தலை பலதலை உடைத்தே. 3

சள்ளை வெள்ளைஅம்குருகுதான்அது ஆம் எனக் கருதி,
வள்ளைவெண்மலர் அஞ்சி, மறுகி, ஓர் வாளையின் வாயில்
துள்ளு தெள்ளும் நீர்ப் பொய்கைத் துறை மல்கு வாஞ்சியத்து அடிகள்
வெள்ளைநுண்பொடிப் பூசும் விகிர்தம் ஒன்று ஒழிகிலர், தாமே. 4

மை கொள் கண்டர், எண்தோளர், மலைமகள் உடன்உறை வாழ்க்கைக்
கொய்த கூவிளமாலை குலவிய சடைமுடிக் குழகர்,
கைதை நெய்தல் அம் கழனி கமழ் புகழ் வாஞ்சியத்து அடிகள்,
பைதல்வெண்பிறையோடு பாம்பு உடன்வைப்பது பரிசே? 5

கரந்தை கூவிளமாலை கடிமலர்க் கொன்றையும் சூடி,
பரந்த பாரிடம் சூழ, வருவர், எம் பரமர், தம் பரிசால்;
திருந்து மாடங்கள் நீடு திகழ் திரு வாஞ்சியத்து உறையும்
மருந்தனார், அடியாரை வல்வினை நலிய ஒட்டாரே. 6

அருவி பாய்தரு கழனி, அலர்தரு குவளைஅம்கண்ணார்,
குருவி ஆய் கிளி சேர்ப்ப, குருகுஇனம் இரிதரு கிடங்கின்
பரு வரால் குதிகொள்ளும் பைம்பொழில் வாஞ்சியத்து உறையும்
இருவரால் அறிய ஒண்ணா இறைவனது அறைகழல் சரணே. 7

களங்கள் ஆர்தரு கழனி அளி தரக் களிதரு வண்டு
உளங்கள் ஆர் கலிப்பாடல் உம்பரில் ஒலித்திடும் காட்சி,
குளங்கள் ஆல்நிழல்கீழ் நல் குயில் பயில், வாஞ்சியத்து அடிகள்
விளங்கு தாமரைப்பாதம் நினைப்பவர் வினை நலிவு இலரே. 8

வாழைஇன்கனிதானும்,—மது விம்மி,—வருக்கைஇன்சுளையும்,
கூழைவானரம் தம்மில், ''கூறுஇது சிறிது'' எனக் குழறி,
தாழை வாழைஅம்தண்டால் செருச் செய்து தருக்கு வாஞ்சியத்துள்,
ஏழைபாகனை அல்லால் இறை எனக் கருதுதல் இலமே. 9

செந்நெல் அங்கு அலங்(கு) கழனித் திகழ் திரு வாஞ்சியத்து உறையும்
இன் அலங்கல் அம் சடை எம் இறைவனது அறைகழல் பரவும்
பொன் அலங்கல் நல் மாடப் பொழில் அணி நாவல் ஆரூரன்
பன் அலங்கல்நல்மாலை பாடுமின், பத்தர்உளீரே! 10

திரு ஐயாறு VII-77 காந்தாரபஞ்சமம்

பரவும் பரிசு ஒன்று அறியேன்நான் பண்டே உம்மைப் பயிலாதேன்;
இரவும் பகலும் நினைந்தாலும் எய்த நினையமாட்டேன், நான்—
கரவு இல் அருவி கமுகு உண்ண, தெங்குஅம்குலைக்கீழ்க் கருப்பாலை
அரவம் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 1

எங்கே போவேன்ஆயிடினும், அங்கே வந்து என் மனத்தீராய்,
சங்கை ஒன்றும் இன்றியே தலைநாள் கடைநாள் ஒக்கவே;—
கங்கை சடைமேல் கரந்தானே! கலைமான்மறியும் கனல்மழுவும்
தங்கும், திரைக் காவிரிக் கோட்டத்து, ஐயாறு உடைய அடிகளோ! 2

மருவிப் பிரியமாட்டேன், நான்; வழிநின்றொழிந்தேன்; ஒழிகிலேன்—
பருவி விச்சி(ய) மலைச்சாரல் பட்டைகொணடு பகடுஆடி,
குருவி ஓப்பி, கிளி கடிவார் குழல்மேல் மாலை கொண்டு ஒட்டந்-
தர, அம் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 3

பழகா நின்று பணி செய்வார்,—பெற்ற பயன் ஒன்று அறிகிலேன்,—
இகழாது உமக்கு ஆட்பட்டோர்க்கு; ஏகபடம் ஒன்று அரைச் சாத்தி!
குழகா! வாழை,—குலை,—தெங்கு கொணர்ந்து கரைமேல் எறியவே,
அழகு ஆர் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 4

பிழைத்த பிழை ஒன்று அறியேன், நான்; பிழையைத் தீரப் பணியாயே!—
மழைக் கண் நல்லார் குடைந்துஆட, மலையும் நிலனும் கொள்ளாமை
கழைக் கொள் பிரசம் கலந்து, எங்கும் கழனி மண்டி, கை ஏறி,
அழைக்கும் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 5

கார்க் கொள் கொன்றை சடைமேல் ஒன்று உடையாய்! விடையாய்! நகையினால்
மூர்க்கர் புரம்மூன்று எரிசெய்தாய்! முன் நீ; பின் நீ; முதல்வன் நீ—
வார்க் கொள் அருவி பல வாரி, மணியும் முத்தும் பொன்னும் கொண்டு,
ஆர்க்கும் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 6

மலைக்கண் மடவாள் ஒருபால்ஆய்ப் பற்றி உலகம் பலி தேர்வாய்!
சிலைக் கொள் கணையால் எயில் எய்த செங்கண் விடையாய்! தீர்த்தன் நீ—
மலைக் கொள் அருவி பல வாரி, மணியும் முத்தும் பொன்னும் கொண்டு,
அலைக்கும் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 7

போழும் மதியும், புனக் கொன்றை, புனல், சேர் சென்னிப் புண்ணியா!
சூழும் அரவச் சுடர்ச்சோதீ! உன்னைத் தொழுவார் துயர் போக,
வாழுமவர்கள், அங்குஅங்கே வைத்த சிந்தை உய்த்து ஆட்ட!—
ஆழும் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 8

கதிர்(க்) கொள் பசியே ஒத்தே நான் கண்டேன், உம்மைக் காணாதேன்;
எதிர்த்து நீந்தமாட்டேன், நான்—எம்மான் தம்மான்தம்மானே!
விதிர்த்து மேகம் மழை பொழிய, வெள்ளம் பரந்து, நுரை சிதறி,
அதிர்க்கும் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 9

கூசி அடியார் இருந்தாலும் குணம்ஒன்று இல்லீர்; குறிப்பு இல்லீர்;
தேசவேந்தன்திருமாலும், மலர்மேல் அயனும், காண்கிலார்—
தேசம் எங்கும் தெளித்து ஆடத் தெண் நீர் அருவி கொணர்ந்து எங்கும்
வாசம் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 10

கூடி அடியார் இருந்தாலும், குணம் ஒன்று இல்லீர்; குறிப்பு இல்லீர்;
ஊடி இருந்தும் உணர்கிலேன்,—உம்மை,—தொண்டன், ஊரனேன்,
தேடி எங்கும் காண்கிலேன்; திரு ஆரூரே சிந்திப்பன்—
ஆடும் திரைக் காவிரிக் கோட்டத்து ஐயாறு உடைய அடிகளோ! 11

நட்டபாடை

VII-78

திருக்கேதாரம்

வாழ்வுஆவது மாயம்(ம்); இது மண் ஆவது திண்ணம்;
பாழ்போவது பிறவிக்கடல்; பசி, நோய், செய்த பறிதான்;
தாழாது அறம் செய்ம்மின்! தடங்கண்ணான் மலரோனும்
கீழ் மேல் உற நின்றான் திருக் கேதாரம் எனீரே! 1

பறியே சுமந்து உழல்வீர்; பறி நரி கீறுவது அறியீர்;
குறி கூவிய கூற்றம் கொளும் நாளால் அறம் உளவே?
அறிவானிலும் அறிவான்—நல நறுநீரொடு, சோறு,
கிறி பேசி நின்று இடுவார் தொழு—கேதாரம் எனீரே! 2

கொம்பைப் பிடித்து ஒருக்(கு)காலர்கள் இருக்கால் மலர் தூவி,
''நம்பன் நமை ஆள்வான்'' என்று, நடுநாளையும் பகலும்;—
கம்பக் களிற்றுஇனம்ஆய் நின்று, சுனைநீர்களைத் தூவி,
செம்பொன்பொடி சிந்தும்—திருக் கேதாரம் எனீரே! 3

உழக்கே உண்டு, படைத்து ஈட்டி வைத்து, இழப்பார்களும், சிலர்கள்;
''வழக்கே?'' எனில், ''பிழைக்கேம்'' என்பர், மதி மாந்திய மாந்தர்;
சழக்கே பறி நிறைப்பாரொடு தவம்ஆவது செயன்மின்!
கிழக்கே சலம் இடுவார் தொழு கேதாரம் எனீரே! 4

வாள் ஓடிய தடங்கண்ணியர் வலையில்(ல்) அழுந்தாதே,
நாள் ஓடிய நமனார்தமர் நணுகாமுனம் நணுகி,
ஆள்ஆய் உய்ம்மின்! அடிகட்கு இடம்அதுவே எனில் இதுவே;
கீளோடு அரவு அசைத்தான் இடம் கேதாரம் எனீரே! 5

தளி சாலைகள் தவம்ஆவது, தம்மைப் பெறில்அன்றே?
குளியீர், உளம்! குருக்கேத்திரம் கோதாவிரி, குமரி,—
தெளியீர் உளம்!—ஸ்ரீ பர்ப்பதம்;—தெற்கு(வ்) வடக்கு ஆக—
கிளி வாழைஒண்கனி கீறி உண் கேதாரம் எனீரே! 6

பண்ணின் தமிழ்இசைபாடலின், பழ வேய் முழவு அதிர,
கண்ணின்(ன்) ஒளி கனகச்சுனை வயிரம்(ம்)அவை சொரிய,
மண் நின்றன மதவேழங்கள் மணி வாரிக்கொண்டு எறிய,
கிண்ணென்று இசை முரலும் திருக் கேதாரம் எனீரே! 7

முளைக்கைப் பிடி முகமன் சொலி, முது வேய்களை இறுத்து,
துளைக்கைக்களிற்றுஇனம்ஆய் நின்று சுனைநீர்களைத் தூவி,
வளைக்கைப் பொழி மழை கூர்தர, மயில் மான்பிணை நிலத்தைக்
கிளைக்க(ம்) மணி சிந்தும் திருக் கேதாரம் எனீரே! 8

பொதியே சுமந்து உழல்வீர்; பொதி அவம்ஆவதும் அறியீர்;
மதி மாந்திய வழியே சென்று குழி வீழ்வதும், வினையால்;
கதி சூழ் கடல் இலங்கைக்கு இறை மலங்க(வ்) வரை அடர்த்துக்
கெதி பேறுசெய்து இருந்தான் இடம் கேதாரம் எனீரே! 9

நாவின்மிசைஅரைய(ன்)னொடு, தமிழ் ஞானசம்பந்தன்,
யாவர் சிவன்அடியார்களுக்கு, அடியான் அடித்தொண்டன்,
தேவன் திருக் கேதாரத்தை—ஊரன்(ன்)—உரைசெய்த
பாவின் தமிழ் வல்லார், பரலோகத்து இருப்பாரே. 10

திருப் பருப்பதம் VII-79 நட்டபாடை

மானும், மரைஇனமும், மயில்இனமும், கலந்து எங்கும்
தாமே மிக மேய்ந்து(த்) தடஞ் சுனைநீர்களைப் பருகி,
பூ மா மரம் உரிஞ்சி, பொழில்ஊடே சென்று, புக்கு,
தேமாம்பொழில் நீழல்-துயில் ஸ்ரீ பர்ப்பதமலையே. 1

மலைச் சாரலும் பொழில் சாரலும் புறமே வரும் இனங்கள்
மலைப்பால் கொணர்ந்து இடித்து ஊட்டிட மலங்கி, தன களிற்றை
அழைத்து ஓடியும், பிளிறியவை அலமந்து வந்து எய்த்து,
திகைத்து ஓடி, தன் பிடி தேடிடும் ஸ்ரீ பர்ப்பதமலையே. 2

மன்னிப் புனம் காவல் மடமொழியாள் புனம் காக்க,
கன்னிக்கிளி வந்து(க்) கவைக் கோலிக் கதிர் கொய்ய,
''என்னைக் கிளி மதியாது'' என எடுத்துக் கவண் ஒலிப்ப,
தென் நல் கிளி திரிந்து ஏறிய சீ பர்ப்பதமலையே. 3

மை ஆர் தடங்கண்ணாள் மடமொழியாள் புனம் காக்கச்
செவ்வே திரிந்து ''ஆயோ!'' எனப் போகாவிட, விளிந்து,
கை பாவிய கவணால் மணி எறிய(வ்) இரிந்து ஓடிச்
செவ்வாயன கிளி பாடிடும் சீ பர்ப்பதமலையே. 4

ஆனைக்குலம் இரிந்து ஓடி, தன் பிடி சூழலில்-திரிய,
தானப் பிடி செவி தாழ்த்திட, அதற்கு(ம்) மிக இரங்கி,
மானக் குற அடல் வேடர்கள் இலையால் கலை கோலி, -
தேனைப் பிழிந்து இனிது ஊட்டிடும் சீ பர்ப்பதமலையே. 5

''மாற்றுக் களிறு அடைந்தாய்'' என்று மதவேழம் கை எடுத்து,
மூற்றித் தழல் உமிழ்ந்தும் மதம் பொழிந்தும் முகம் சுழிய,
''தூற்றத் தரிக்கில்லேன்'' என்று சொல்லி(ய்) அயல் அறியத்
தேற்றிச் சென்று, பிடி சூள் அறும் சீ பர்ப்பதமலையே. 6

''அப்போது வந்து உண்டீர்களுக்கு, அழையாது முன் இருந்தேன்;
எப்போதும் வந்து உண்டால், எமை எமர்கள் சுளியாரோ?
இப்போது உமக்கு இதுவே தொழில்'' என்று ஓடி, அக் கிளியைச்
செப்பு ஏந்து இளமுலையாள் எறி சீ பர்ப்பதமலையே. 7

திரியும் புரம் நீறு ஆக்கிய செல்வன்தன கழலை
அரிய திருமாலோடு அயன்தானும்(ம்) அவர் அறியார்;
கரியின்(ன்)இனமோடும் பிடி தேன் உண்டு அவை களித்துத்
திரிதந்தவை, திகழ்வால் பொலி சீ பர்ப்பதமலையே. 8

ஏனத்திரள் கிளைக்க(வ்), எரி போல(ம்) மணி சிதற,
ஏனல்(ல்) அவை மலைச்சாரல் இற்று இரியும் கரடியும்,
மானும், மரைஇனமும், மயில் மற்றும், பலஎல்லாம், 9
தேன் உண் பொழில்-சோலை(ம்) மிகு சீ பர்ப்பதமலையே.

நல்லார்அவர்பலர் வாழ்தரு வயல் நாவல ஊரன்
செல்லல்(ல்) உற அரிய சிவன் சீ பர்ப்பதமலையை
அல்லல்அவை தீரச் சொன தமிழ்மாலைகள் வல்லார் 10
ஒல்லைச் செல, உயர்வானகம் ஆண்டு அங்கு இருப்பாரே.

திருக் கேதீச்சரம்

VII-80

நட்டபாடை

நத்தார் புடை ஞானன்; பசுஏறி(ந்); நனை கவுள் வாய்
மத்தம்மதயானை உரி போர்த்த மழுவாளன்;
பத்து ஆகிய தொண்டர் தொழு, பாலாவியின் கரைமேல், 1
செத்தார் எலும்பு அணிவான்—திருக் கேதீச்சரத்தானே.

சுடுவார் பொடி-நீறும், நல துண்டப்பிறை, கீளும்,
கடம் ஆர் களியானை உரி, அணிந்த(க்) கறைக்கண்டன்;
பட ஏர் இடை மடவாளொடு, பாலாவியின் கரைமேல்- 2
திடமா உறைகின்றான்—திருக கேதீச்சரத்தானே.

அங்கம் மொழி அன்னார்அவர், அமரர், தொழுது ஏத்த,
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கம் செய்த பிறை சூடினன்; பாலாவியின் கரைமேல்-
செங்கண்(ண்) அரவு அசைத்தான்—திருக் கேதீச்சுரத்தானே. 3

கரிய கறைக்கண்டன்(ன்); நல கண்மேல் ஒரு கண்ணான்;
வரிய சிறை வண்டு யாழ்செயும் மாதோட்ட நன்நகருள்
பரிய திரை எறியா வரு பாலாவியின் கரைமேல்-
தெரியும் மறை வல்லான்—திருக் கேதீச்சுரத்தானே. 4

அங்கத்து உறு நோய்கள்(ள்) அடியார்மேல் ஒழித்துஅருளி
வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பங்கம் செய்த மடவாளொடு பாலாவியின் கரைமேல்-
தெங்குஅம்பொழில் சூழ்ந்த திருக் கேதீச்சுரத்தானே. 5

வெய்ய வினைஆய(வ்) அடியார்மேல் ஒழித்துஅருளி,
வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்நகரில்
பை ஏர் இடை மடவாளொடு பாலாவியின் கரைமேல்
செய்யசடைமுடியான்—திருக் கேதீச்சுரத்தானே. 6

ஊனத்து உறு நோய்கள்(ள்) அடியார்மேல் ஒழித்துஅருளி,
வால் நத்து உறு மலியும் கடல் மாதோட்ட நன்நகரில்
பால் நத்துறும் மொழியாளொடு பாலாவியின் கரைமேல்
ஏனத்துஎயிறு அணிந்தான்—திருக் கேதீச்சுரத்தானே. 7

அட்டன்(ன்) அழகுஆக(வ்) அரைதன்மேல் அரவு ஆர்த்து,
மட்டு உண்டு வண்டு ஆலும் பொழில் மாதோட்ட நன்நகரில்
பட்ட(வ்) அரி நுதலாளொடு பாலாவியின் கரைமேல்
சிட்டன்(ன்); நமை ஆள்வான்—திருக் கேதீச்சுரத்தானே. 8

மூவர் என, இருவர் என, முக்கண் உடை மூர்த்தி;
மாஇன்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்நகரில்
பாவம் வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரைமேல்-
தேவன்; எனை ஆள்வான்—திருக் கேதீச்சுரத்தானே. 9

கறை ஆர் கடல் சூழ்ந்த கழி மாதோட்ட நன்நகருள்
சிறை ஆர் பொழில் வண்டு யாழ்செயும் கேதீச்சுரத்தானை
மறை ஆர் புகழ் ஊரன்(ன்)—அடித்தொண்டன்(ன்)—உரைசெய்த
குறையாத் தமிழ்பத்தும் சொலக் கூடா, கொடுவினையே. 10

திருக் கழுக்குன்றம் VII-81 நட்டபாடை

கொன்று செய்த கொடுமையால் பல, சொல்லவே
நின்ற பாவவினைகள்தாம் பல, நீங்கவே
சென்றுசென்று தொழுமின்—தேவர்பிரான் இடம்—
கன்றினோடு பிடி சூழ் தண் கழுக்குன்றமே! 1

இறங்கிச் சென்று தொழுமின், இன்இசை பாடியே!
பிறங்கு கொன்றைச் சடையன், எங்கள் பிரான், இடம்—
நிறங்கள் செய்த மணிகள், நித்திலம், கொண்டு இழி
கறங்கு வெள்ளைஅருவித் தண் கழுக்குன்றமே. 2

நீள நின்று தொழுமின், நித்தலும் நீதியால்
ஆளும் நம்ம வினைகள் அல்கி அழுந்திட—
தோளும்எட்டும் உடைய மா மணிச்சோதியான்,
காளகண்டன், உறையும் தண் கழுக்குன்றமே! 3

வெளிறு தீரத் தொழுமின், வெண்பொடிஆடியை!
முளிறு இலங்கு மழுவாளன் முந்தி உறைவுஇடம்—
பிளிறு தீரப் பெருங்கைப் பெய்ம் மதம்மூன்று உடைக்
களிறினோடு பிடி சூழ் தண் கழுக்குன்றமே! 4

புலைகள் தீரத் தொழுமின்—புன்சடைப் புண்ணியன்,
இலை கொள் சூலப்படையன், எந்தைபிரான், இடம்—
முலைகள் உண்டு தழுவிக் குட்டியொடு முசுக்-
கலைகள் பாயும் புறவின்-தண் கழுக்குன்றமே! 5

மடம் உடைய அடியார்தம் மனத்தே உற
விடம் உடைய மிடறன், விண்ணவர்மேலவன்,
படம் உடைய அரவன்தான், பயிலும்(ம்) இடம்—
கடம் உடைய புறவின்-தண் கழுக்குன்றமே. 6

ஊனம் இல்லா அடியார்தம் மனத்தே உற
ஞானமூர்த்தி, நட்டம்ஆடி, நவிலும்(ம்) இடம்—
தேனும் வண்டும் மது உண்டு இன்இசை பாடியே,
கானமஞ்ஞை உறையும் தண் கழுக்குன்றமே. 7

அந்தம் இல்லா அடியார்தம் மனத்தே உற
வந்து, நாளும் வணங்கி, மாலொடு நான்முகன்
சிந்தைசெய்த மலர்கள் நித்தலும் சேரவே 8
கந்தம் நாறும் புறவின்-தண் கழுக்குன்றமே.

பிழைகள் தீரத் தொழுமின்—பின்சடைப் பிஞ்ஞகன்,
குழை கொள் காதன், குழகன், தான் உறையும்(ம்) இடம்—
மழைகள் சாலக் கலித்து நீடு உயர் வேய்அவை 9
கழை கொள் முத்தம் சொரியும் தண் கழுக்குன்றமே!

பல்இல்வெள்ளைத்தலையன்தான் பயிலும்(ம்) இடம்,
கல்லில் வெள்ளைஅருவித் தண் கழுக்குன்றினை,
மல்லின் மல்கு திரள்தோள் ஊரன் வனப்பினால் 10
சொல்லல் சொல்லித் தொழுவாரைத் தொழுமின்களே!

திருச் சுழியல்

VII-82

நட்டராகம்

ஊன்ஆய், உயிர் புகல்ஆய், அகலிடம்ஆய், முகில் பொழியும்
வான்ஆய், அதன் மதிஆய், விதி வருவான் இடம்—பொழிலின்
தேன் ஆதரித்து இசை வண்டுஇனம் மிழற்றும்—திருச் சுழியல், 1
நானாவிதம் நினைவார்தமை நலியார், நமன்தமரே.

தண்டு ஏர் மழுப்படையான், மழவிடையான், எழு கடல்நஞ்சு
உண்டே புரம் எரியச் சிலை வளைத்தான்,—இமையவர்க்கா,—
திண் தேர்மிசை நின்றான்அவன், உறையும் திருச் சுழியல்- 2
தொண்டே செய வல்லார்அவர் நல்லார்; துயர் இலரே.

கவ்வைக் கடல் கதறிக் கொணர் முத்தம் கரைக்கு ஏற்ற,
கொவ்வைத்துவர்வாயார் குடைந்து ஆடும் திருச் சுழியல்,
தெய்வத்தினை வழிபாடு செய்து எழுவார் அடி தொழுவார்,
அவ் அத் திசைக்கு அரசு ஆகுவர்; அலராள் பிரியாளே. 3

மலையான்மகள்மடமாது இடம் ஆகத்தவன், மற்றுக்
கொலை யானையின் உரி போர்த்த எம்பெருமான், திருச் சுழியல்
அலை ஆர் சடை உடையான், அடி தொழுவார் பழுது உள்ளம்
நிலையார்; திகழ் புகழால் நெடுவானத்து உயர்வாரே. 4

உற்றான், நமக்கு; உயரும் மதிச் சடையான்; புலன்ஐந்தும்
செற்று ஆர் திருமேனிப் பெருமான்; ஊர் திருச் சுழியல்
பெற்றான், இனிது உறைய; திறம்பாமைத் திருநாமம்
கற்றார்அவர் கதியுள் செல்வர்; ஏத்து(ம்)மது கடனே. 5

மலம் தாங்கிய பாசப் பிறப்பு அறுப்பீர்! துறைக் கங்கைச்-
சலம் தாங்கிய முடியான் அமர்ந்த இடம் ஆம் திருச் சுழியல்
நிலம் தாங்கிய மலரால், கொழும் புகையால், நினைந்து ஏத்தும்!
தலம் தாங்கிய புகழ் ஆம்; மிகு தவம் ஆம்; சதுர் ஆமே! 6

சைவத்த செவ்உருவன்; திருநீற்றன்(ன்), உரும்ஏற்றன்;
கை வைத்த ஒரு சிலையால் அரண்மூன்றும்(ம்) எரிசெய்தான்;
தெய்வத்தவர் தொழுது ஏத்திய குழகன்; திருச் சுழியல்
மெய் வைத்து அடி நினைவார் வினை தீர்தல்(ல்) எளிது அன்றே! 7

பூ ஏந்திய பீடத்தவன்தானும், அடல் அரியும்,
கோ ஏந்திய வினயத்தொடு குறுகப் புகல் அறியார்—
சே ஏந்திய கொடியான்அவன் உறையும் திருச் சுழியல்,
மா ஏந்திய கரத்தான், எம சிரத்தான்தனது அடியே. 8

கொண்டாடுதல் புரியா வரு தக்கன் பெரு வேள்வி
செண்டுஆடுதல் புரிந்தான் திருச் சுழியல் பெருமானைக்
குண்டாடிய சமண்ஆதர்கள் குடைச் சாக்கியர் அறியா,
மிண்டாடியஅது செய்தது(வ்)ஆனால், வரு விதியே, 9

நீர் ஊர்தரு நிமலன், திருமலையார்க்கு அயல் அருகே
தேர் ஊர்தரும் அரக்கன் சிரம் நெரித்தான், திருச் சுழியல்
பேர் ஊர் என உறைவான், அடிப்பெயர் நாவலர்கோமான்—
ஆரூரன—தமிழ்மாலைபத்து அறிவார் துயர் இலரே. 10

திரு ஆரூர் VII-83 புறநீர்மை

அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி,
முந்தி எழும் பழைய வல்வினை மூடாமுன்,
சிந்தை பராமரியா தென்திருஆரூர் புக்கு,
எந்தைபிரானாரை என்றுகொல் எய்துவதே? 1

நின்ற வினைக் கொடுமை நீங்க இருபொழுதும்
துன்று மலர் இட்டு, சூழும் வலம்செய்து.
தென்றல் மணம் கமழும் தென்திருஆரூர் புக்கு,
என்தன் மனம் குளிர என்றுகொல் எய்துவதே? 2

முன்னை முதல் பிறவி மூதறியாமையினால்
பின்னை நினைந்தனவும் பேதுறவும்(ம்) ஒழிய,
செந்நெல் வயல்-கழனித் தென்திருஆரூர் புக்கு,
என் உயிர்க்கு இன்னமுதை என்றுகொல் எய்துவதே? 3

நல்ல நினைப்பு ஒழிய நாள்களில் ஆர்உயிரைக்
கொல்ல நினைப்பனவும் குற்றமும் அற்று ஒழிய,
செல்வ வயல்-கழனித் தென்திருஆரூர் புக்கு,
எல்லை மிதித்து, அடியேன் என்றுகொல் எய்துவதே? 4

கடு வரி மாக் கடலுள் காய்ந்தவன் தாதையை, முன்;
சுடுபொடி மெய்க்கு அணிந்த சோதியை; வன்தலை வாய்
அடு புலி ஆடையனை; ஆதியை;—ஆரூர் புக்கு—
இடு பலி கொள்ளியை; நான் என்றுகொல் எய்துவதே? 5

சூழ் ஒளி, நீர், நிலம், தீ, தாழ் வளி, ஆகாசம்,
வான் உயர் வெங்கதிரோன், வண்தமிழ் வல்லவர்கள்
ஏழ்இசை, ஏழ்நரம்பின் ஓசையை;—ஆரூர் புக்கு—
ஏழ்உலகு ஆளியை; நான் என்றுகொல் எய்துவதே; 6

கொம்பு அன நுண்இடையாள் கூறனை, நீறு அணிந்த
வம்பனை, எவ்உயிர்க்கும் வைப்பினை, ஒப்பு அமராச்
செம்பொனை, நல்மணியை,—தென்திருஆரூர் புக்கு—
என்பொனை, என் மணியை, என்றுகொல் எய்துவதே? 7

ஆறு அணி நீள் முடிமேல் ஆடுஅரவம் சூடிப்
பாறு அணி வெண்தலையில் பிச்சைகொள் நச்சுஅரவன்,—
சேறு அணி தண்கழனித் தென்திருஆரூர் புக்கு— 8
ஏறு அணி எம் இறையை, என்றுகொல் எய்துவதே?

மண்ணினை உண்டு உமிழ்ந்த மாயனும், மா மலர்மேல்
அண்ணலும், நண்ண(அ)ரிய ஆதியை மாதினொடும்—
திண்ணிய மா மதில் சூழ் தென்திருஆரூர் புக்கு— 9
எண்ணிய கண் குளிர என்றுகொல் எய்துவதே?

மின்நெடுஞ்செஞ்சடையான் மேவிய ஆரூரை
நன்நெடுங் காதன்மையால் நாவலர்கோன்—ஊரன்—
பல்-நெடுஞ்சொல்மலர்கொண்டு இட்டனபத்தும் வல்லார் 10
பொன் உடை விண்ணுலகம் நண்ணுவர்; புண்ணியரே.

திருக் கானப்பேர்

VII-84

புறநீர்மை

தொண்டர் அடித்தொழலும், சோதி இளம்பிறையும்,
சூது அன மென்முலையாள் பாகமும், ஆகி வரும்
புண்டரிகப் பரிசு ஆம் மேனியும்; வானவர்கள்
பூசல்இடக் கடல்நஞ்சு உண்ட கருத்து அமரும்,
கொண்டல் எனத் திகழும், கண்டமும்; எண்தோளும்;
கோல நறுஞ்சடைமேல் வண்ணமும்; கண்குளிரக் 1
கண்டு, தொழப்பெறுவது என்றுகொலோ, அடியேன்?—
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே.

கூதல் இடும் சடையும், கோள் அரவும், விரவும்
கொக்குஇறகும், குளிர் மா மத்தமும், ஒத்து உன தாள்
ஓதல் உணர்ந்து, அடியார் உன் பெருமைக்கு நினைந்து
உள் உருகா, விரசும் ஓசையைப் பாடலும், நீ
ஆதல் உணர்ந்து அவரோடு அன்பு பெருத்து அடியேன்
அங்கையில் மா மலர் கொண்டு, என்கணது அல்லல் கெட,
காதல் உற, தொழுவது என்றுகொலோ, அடியேன்?—
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 2

நான் உடை மாடு எனவே நன்மை தரும் பரனை,
நல் பதம் என்று உணர்வார் சொல்பதம் ஆர் சிவனை,
தேன்இடை இன்னமுதை, பற்றுஅதனில்-தெளிவை,
தேவர்கள்நாயகனை, பூ உயர் சென்னியனை,
வான்இடை மா மதியை, மாசு அறு சோதியனை,
மாருதமும்(ம்) அனலும் மண்தலமும்(ம்) ஆய—
''கான்இடை மாநடன்'' என்று எய்துவது என்றுகொலோ?—
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 3

செற்றவர் முப்புரம் அன்று அட்ட சிலைத் தொழில் ஆர்
சேவகம்; முன் நினைவார் பாவகமும்; நெறியும்;
குற்றம் இல் தன் அடியார் கூறும் இசைப் பரிசும்;
கோசிகமும்(ம்),—அரையில்,—கோவணமும்(ம்) அதளும்;
மல்-திகழ் திண்புயமும்; மார்புஇடை, நீறு துதை,
மாமலைமங்கைஉமை சேர் சுவடும்; புகழக்
கற்றனவும் பரவிக் கைதொழல் என்றுகொலோ?—
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 4

கொல்லை விடைக் குழகும், கோல நறுஞ்சடையில்
கொத்து அலரும்(ம்) இதழித்தொத்தும், அதன் அருகே
முல்லை படைத்த நகை மெல்லியலாள் ஒருபால்
மோகம் மிகுத்து இலங்கும் கூறு செய் எப்பரிசும்,
தில்லைநகர்ப் பொது உற்று ஆடிய சீர் நடமும்,
திண்மழுவும், கைமிசைக் கூர் எரியும்(ம்) அடியார்
கல்லவடப் பரிசும், காணுவது என்றுகொலோ?—
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 5

பண்ணு தலைப் பயன் ஆர் பாடலும், நீடுதலும்,—
பங்கயமாது அனையார்,—பத்தியும்; ''முத்தி அளித்து
எண்ணு தலைப்பெருமான்'' என்று எழுவார்அவர்தம்
ஏசறவும்(ம்); ''இறைஆம் எந்தையையும் விரவி
நண்ணுதலைப் படும்ஆறு எங்ஙனம்?'' என்று அயலே
நைகிற என்னை மதித்து உய்யும் வணம் அருளும்
கண்ணுதலை, கனியை, காண்பதும்; என்றுகொலோ?
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 6

மாவை உரித்து அதள் கொண்டு அங்கம் அணிந்தவனை,
வஞ்சர் மனத்து இறையும் நெஞ்சு அணுகாதவனை,
மூவர்உருத் தனது ஆம் மூலமுதல்கருவை,
மூசிடும் மால்விடையின் பாகனை, ஆகம் உறப்
பாவகம் இன்றி மெய்யே பற்றுமவர்க்கு அமுதை,
பால் நறுநெய் தயிர் ஐந்துஆடு பரம்பரனை,—
காவல் எனக்கு இறை என்று, எய்துவது என்றுகொலோ?—
கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 7

தொண்டர்தமக்கு எளிய சோதியை, வேதியனை,
    தூய மறைப்பொருள்ஆம் நீதியை, வார்கடல்நஞ்சு
உண்டு அதனுக்கு இறவாது என்றும் இருந்தவனை,
    ஊழி படைத்தவனோடு ஒள் அரியும்(ம்) உணரா
அண்டனை, அண்டர்தமக்கு ஆகமநூல் மொழியும்
    ஆதியை, மேதகு சீர் ஓதியை, வானவர்தம்
கண்டனை,—அன்பொடு சென்று எய்துவது என்றுகொலோ?—
    கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 8

நாதனை, நாதம் மிகுத்த ஓசைஅதுஆனவனை,
    ஞானவிளக்குஒளிஆம் ஊன்உயிரை, பயிரை,
மாதனை, மேதகு தன் பத்தர் மனத்து இறையும்
    பற்று விடாதவனை, குற்றம் இல் கொள்கையனை,
தூதனை, என்தனை ஆள் தோழனை, நாயகனை,
    தாழ் மகரக்குழையும் தோடும் அணிந்த திருக்-
காதனை,—நாய்அடியேன் எய்துவது என்றுகொலோ?—
    கார் வயல் சூழ் கானப்பேர் உறை காளையையே. 9

கன்னலை, இன்னமுதை, கார்வயல் சூழ் கானப்-
    பேர் உறை காளையை, ஒண் சீர் உறை தண்தமிழால்
உன்னி மனத்து அயரா, உள் உருகி, பரவும்
    ஒண் பொழில் நாவலர்கோன் ஆகிய ஆரூரன்
பன்னும் இசைக்கிளவி பத்துஇவை பாட வல்லார்,
    பத்தர் குணத்தினராய், எத்திசையும் புகழ,
மன்னி இருப்பவர்கள், வானின்; இழிந்திடினும்,
    மண்டல நாயகராய் வாழ்வது நிச்சயமே! 10

திருக் கூடலையாற்றூர் VII-85 புறநீர்மை

வடிவு உடை மழு ஏந்தி, மதகரி உரி போர்த்து,
பொடி அணி திருமேனிப் புரிகுழல்உமையோடும்,
கொடி அணி நெடுமாடக் கூடலையாற்றூரில் 1
அடிகள் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே!

வையகம்முழுது உண்ட மாலொடு, நான்முகனும்,
பைஅரவு இள அல்குல் பாவையொடும்(ம்), உடனே,
கொய் அணி மலர்ச் சோலைக் கூடலையாற்றூரில் 2
ஐயன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே!

ஊர்தொறும் வெண்தலை கொண்டு, ‘‘உண் பலி இடும்!'' என்று.
வார் தரு மென்முலையாள் மங்கையொடும்(ம்)உடனே,
கூர்நுனை மழு ஏந்தி, கூடலையாற்றூரில் 3
ஆர்வன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே!

சந்து அணவும் புனலும் தாங்கிய தாழ்சடையன்
பந்து அணவும் விரலாள் பாவையொடும்(ம்)உடனே,
கொந்து அணவும் பொழில் சூழ் கூடலையாற்றூரில் 4
அந்தணன் வழி போந்த அதிசயம் அறியேனே!

வேதியர் விண்ணவரும் மண்ணவரும் தொழ, நல்
சோதிஅதுஉரு ஆகி, சுரிகுழல்உமையோடும்,
கோதிய வண்டு அறையும் கூடலையாற்றூரில்
ஆதி இவ் வழி போந்த அதிசயம் அறியேனே! 5

வித்தக வீணையொடும், வெண்புரிநூல் பூண்டு,
முத்து அன வெண்முறுவல் மங்கையொடும்(ம்)உடனே,
கொத்து அலரும் பொழில் சூழ் கூடலையாற்றூரில்
அத்தன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே! 6

மழை நுழை மதியமொடு வாள்அரவம் சடைமேல்
இழை நுழை துகில் அல்குல் ஏந்திழையாளோடும்,
குழை அணி திகழ் சோலைக் கூடலையாற்றூரில்
அழகன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே! 7

மறை முதல் வானவரும், மால், அயன், இந்திரனும்,
பிறைநுதல் மங்கையொடும், பேய்க்கணமும், சூழ,
குறள்படைஅதனோடும், கூடலையாற்றூரில்
அறவன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே! 8

வேலையின் நஞ்சு உண்டு, விடைஅது தான் ஏறி,
பால் அன மென்மொழியாள் பாவையொடும்(ம்)உடனே,
கோலம்அது உருஆகி, கூடலையாற்றூரில்
ஆலன் இவ் வழி போந்த அதிசயம் அறியேனே! 9

கூடலையாற்றூரில் கொடிஇடையவளோடும்
ஆடல் உகந்தானை, ''அதிசயம் இது'' என்று
நாடிய இன்தமிழால் நாவலஊரன் சொல்
பாடல்கள்பத்தும் வல்லார்தம் வினை பற்றுஅறுமே. 10

திரு வன்பார்த்தான்பனங்காட்டூர் VII-86 சீகாமரம்

விடையின்மேல் வருவானை; வேதத்தின் பொருளானை;
அடையில் அன்புஉடையானை; யாவர்க்கும் அறிய ஒண்ணா,
மடையில் வாளைகள் பாயும் வன்பார்த்தான் பனங்காட்டூர்,
சடையில் கங்கை தரித்தானை; சாராதார் சார்பு என்னே! 1

அறையும் பைங்கழல் ஆர்ப்ப, அரவு ஆட, அனல் ஏந்தி,
பிறையும் கங்கையும் சூடி, பெயர்ந்து, ஆடும் பெருமானார்;
பறையும் சங்கு ஒலி ஓவாப் படிறன்; தன் பனங்காட்டூர்
உறையும் எங்கள் பிரானை; உணராதார் உணர்வு என்னே! 2

தண் ஆர் மா மதி சூடி, தழல் போலும் திருமேனிக்கு
எண் ஆர் நாள்மலர் கொண்டு அங்கு இசைந்து ஏத்தும் அடியார்கள்
பண் ஆர் பாடல் அருத படிறன்; தன் பனங்காட்டூர்
பெண்ஆண்ஆய பிரானை; பேசாதார் பேச்சு என்னே! 3

நெற்றிக்கண் உடையானை, நீறு ஏறும் திருமேனிக்
குற்றம் இல் குணத்தானை, கோணாதார் மனத்தானை,
பற்றிப் பாம்பு அரை ஆர்த்த படிறன், தன் பனங்காட்டூர்ப்
பெற்றொன்று ஏறும் பிரானை, பேசாதார் பேச்சு என்னே! 4

உரம் என்னும் பொருளானை, உருகில் உள் உறைவானை,
சிரம் என்னும் கலனானை, செங்கண்மால்விடையானை,
வரம் முன்னம் அருள்செய்வான், வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பரமன், எங்கள் பிரானை, பரவாதார் பரவு என்னே! 5

எயிலார் பொக்கம்(ம்) எரித்த எண்தோள் முக்கண்(ண்) இறைவன்;
வெயில்ஆய், காற்று என வீசி, மின்ஆய், தீ என நின்றான்;
மயில் ஆர் சோலைகள் சூழ்ந்த வன்பார்த்தான் பனங்காட்டூர்ப்
பயில்வானுக்கு, அடிமைக்கண் பயிலாதார் பயில்வு என்னே! 6

மெய்யன், வெண்பொடி பூசும் விகிர்தன், வேத(ம்)முதல்வன்,
கையில் மான் மழு ஏந்திக் காலன் காலம்(ம்) அறுத்தான்,
பை கொள் பாம்பு அரை ஆர்த்த படிறன், தன் பனங்காட்டூர்
ஐயன், எங்கள் பிரானை, அறியாதார் அறிவு என்னே! 7

வஞ்சம் அற்ற மனத்தாரை மறவாத பிறப்புஇலியை,
பஞ்சிச் சீறடியாளைப் பாகம் வைத்து உகந்தானை,
மஞ்சு உற்ற மணி மாட வன்பார்த்தான் பனங்காட்டூர்
நெஞ்சத்து எங்கள் பிரானை, நினையாதார் நினைவு என்னே! 8

மழையானும், திகழ்கின்ற மலரோன், என்று இருவர்தாம்
உழையா நின்றவர் உள்க உயர்வானத்து உயர்வானை;
பழையானை; பனங்காட்டூர் பதிஆகத் திகழ்கின்ற
குழை(க்) காதற்கு அடிமைக்கண் குழையாதார் குழைவு என்னே! 9

பார் ஊரும் பனங்காட்டூர்ப் பவளத்தின் படியானை,
சீர் ஊரும் திரு ஆரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த
ஆரூரன்—அடித்தொண்டன்—அடியன் சொல், அடிநாய் சொல்,
ஊர்ஊரன் உரைசெய்வார், உயர்வானத்து உயர்வாரே. 10

திருப் பனையூர் VII-87 சீகாமரம்

மாட மாளிகை கோபுரத்தொடு மண்டபம் வளரும் வளர் பொழில்
பாடல் வண்டு அறையும் பழனத் திருப் பனையூர்,
தோடு பெய்து, ஒரு காதினில் குழை தூங்க, தொண்டர்கள் துள்ளிப் பாட, நின்று
ஆடும்ஆறு வல்லார்அவரே அழகியரே. 1

நாறுசெங்கழுநீர்மலர் நல்ல மல்லிகை சண்பகத்தொடு,
சேறு செய் கழனிப் பழனத் திருப் பனையூர்,
நீறு பூசி, நெய்ஆடி, தம்மை நினைப்பவர்தம் மனத்தர்ஆகி நின்று,
ஆறு சூட வல்லார்அவரே அழகியரே. 2

செங்கண் மேதிகள் சேடு எறிந்து தடம் படிதலின் சேல்இனத்தொடு
பைங்கண் வாளைகள் பாய் பழனத் திருப் பனையூர்,
திங்கள் சூடிய செல்வனார், அடியார்தம்மேல் வினை தீர்ப்பராய்விடில்
அங்கு இருந்து உறைவார்அவரே அழகியரே. 3

வாளை பாய,—மலங்கு, இளங்கயல், வரிவரால், உகளும்—கழனியுள்
பாளை ஒண் கமுகம் புடை சூழ் திருப் பனையூர்,
தோளும் ஆகமும் தோன்ற, நட்டம்இட்டு ஆடுவார்; அடித்தொண்டர்தங்களை
ஆளும்ஆறு வல்லார்; அவரே அழகியரே. 4

கொங்கையார்பலரும் குடைந்து ஆட, நீர்க் குவளை மலர்தர,
பங்கயம் மலரும் பழனத் திருப் பனையூர்,
மங்கை பாகமும் மால் ஓர்பாகமும் தாம் உடையவர்; மான் மழுவினொடு
அங்கைத் தீ உகப்பார்; அவரே அழகியரே. 5

காவிரி புடை சூழ் சோணாட்டவர்தாம் பரவிய கருணைஅம்கடல்; அப்
பா விரி புலவர் பயிலும் திருப் பனையூர்,
மா விரி மடநோக்கி அஞ்ச, மதகரி உரி போர்த்து உகந்தவர்;
ஆவில்ஐந்து உகப்பார்; அவரே அழகியரே. 6

மரங்கள்மேல் மயில் ஆல, மண்டபம் மாட மாளிகை கோபுரத்தின்மேல்
திரங்கல் வன்முகவன் புகப் பாய் திருப் பனையூர்,
துரங்க வாய் பிளந்தானும், தூ மலர்த் தோன்றலும், அறியாமல்-தோன்றி நின்று,
அரங்கில் ஆட வல்லார்அவரே அழகியரே. 7

மண்எலாம் முழவம் அதிர்தர, மாட மாளிகை கோபுரத்தின்மேல்,
பண் யாழ் முரலும் பழனத் திருப் பனையூர்,
வெண் நிலாச் சடை மேவிய—விண்ணவரொடு மண்ணவர் தொழ—
அண்ணல்ஆகி நின்றார்அவரே அழகியரே. 8

குரக்குஇனம் குதிகொள்ள, தேன் உக, குண்டு தண்வயல் கெண்டை பாய்தர,
பரக்கும் தண்கழனிப் பழனத் திருப் பனையூர்,
இரக்கம் இல்லவர், ஐந்தொடுஐந்தலை தோள்இருபது தாள் நெரிதர,
அரக்கனை அடர்த்தார்அவரே அழகியரே. 9

வஞ்சிநுண்இடை மங்கை பங்கினர்—மா தவர் வளரும், வளர் பொழில்,
பஞ்சின் மெல்அடியார் பயிலும்—திருப் பனையூர்,
வஞ்சியும் வளர் நாவலூரன்—வனப்பகைஅவள்அப்பன், வன்தொண்டன்—
செஞ்சொல் கேட்டு உகப்பார்அவரே அழகியரே. 10

திரு வீழிமிழலை VII-88 சீகாமரம்

நம்பினார்க்கு அருள்செய்யும் அந்தணர் நால்மறைக்கு இடம் ஆய வேள்வியுள்
செம்பொன் ஏர் மடவார் அணி பெற்ற திரு மிழலை,
உம்பரார் தொழுது ஏத்த மாமலையாளொடும்(ம்) உடனேஉறைவுஇடம்
அம் பொன் வீழி கொண்டீர்!—அடியேற்கும் அருளுதிரே! 1

''விடம் கொள் மா மிடற்றீர்! வெள்ளைச்சுருள்ஒன்று இட்டு விட்ட காதினீர்!'' என்று
திடம் கொள் சிந்தையினார் கலி காக்கும் திரு மிழலை,
மடங்கல் பூண்ட விமானம் மண்மிசை வந்து இழிச்சிய வானநாட்டையும்
அடங்கல் வீழி கொண்டீர்!—அடியேற்கும் அருளுதிரே! 2

ஊனை உற்று உயிர்ஆயினீர்; ஒளிமூன்றும்ஆய், தெளி நீரொடு ஆன்அஞ்சின்
தேனை ஆட்டு உகந்தீர்! செழு மாடத் திரு மிழலை,
மானை மேவிய கையினீர்! மழு ஏந்தினீர்! மங்கை பாகத்தீர்! விண்ணில்
ஆன வீழி கொண்டீர்!—அடியேற்கும் அருளுதிரே! 3

''பந்தம், வீடு, இவை பண்ணினீர்; படிறீர்; மதிப்பிதிர்க்கண்ணியீர்'' என்று
சிந்தைசெய்துஇருக்கும் செங்கையாளர் திரு மிழலை,
வந்து நாடகம் வானநாடியர் ஆட, மால் அயன் ஏத்த, நாள்தொறும்
அம் தண் வீழி கொண்டீர்!—அடியேற்கும் அருளுதிரே. 4

புரிசைமூன்றையும் பொன்றக் குன்றவில் ஏந்தி; வேதப்புரவித் தேர்மிசைத்
திரிசெய்—நால்மறையோர் சிறந்து ஏத்தும் திரு மிழலை,
பரிசினால் அடி போற்றும் பத்தர்கள் பாடி ஆடப் பரிந்து நல்கினீர்!—
அரிய வீழி கொண்டீர்!—அடியேற்கும் அருளுதிரே! 5

எறிந்த சண்டி, இடந்த கண்ணப்பன், ஏத்து பத்தர்கட்கு ஏற்றம் நல்கினீர்!
செறிந்த பூம்பொழில்-தேன் துளி வீசும் திரு மிழலை,
நிறைந்த அந்தணர் நித்தம்-நாள்தொறும் நேசத்தால் உமைப் பூசிக்கும்(ம்) இடம்
அறிந்து, வீழி கொண்டீர்!—அடியேற்கும் அருளுதிரே! 6

பணிந்த பார்த்தன், பகீரதன், பலபத்தர்சித்தர்க்குப் பண்டு நல்கினீர்!
திணிந்த மாடம்தொறும் செல்வம் மல்கு திரு மிழலை,
தணிந்த அந்தணர் சந்தி நாள்தொறும் அந்தி வான் இடு பூச்சிறப்புஅவை
அணிந்து, வீழி கொண்டீர்!—அடியேற்கும் அருளுதிரே! 7

பரந்த பாரிடம் ஊர்இடைப் பலி பற்றிப் பாத்து உணும் சுற்றம் ஆயினீர்;
தெரிந்த நால்மறையோர்க்கு இடம் ஆய திரு மிழலை
இருந்து, நீர் தமிழோடு இசை கேட்கும் இச்சையால் காசு நித்தம் நல்கினீர்;
அருந் தண் வீழி கொண்டீர்;—அடியேற்கும் அருளுதிரே! 8

''தூய நீர் அமுதுஆயஆறுஅது சொல்லுக!'' என்று உமை கேட்க, சொல்லினீர்;
''தீயர், ஆக்கு உலையாளர், செழு மாடத் திரு மிழலை
மேய நீர் பலி ஏற்றது என்?'' என்று விண்ணப்பம் செய்பவர்க்கு மெய்ப்பொருள்
ஆய வீழி கொண்டீர்;—அடியேற்கும் அருளுதிரே! 9

''வேத வேதியர், வேத நீதியர் ஓதுவார், விரி நீர் மிழலையுள்
ஆதி வீழி கொண்டீர்; அடியேற்கும் அருளுக!'' என்று
நாதகீதம் வண்டு ஓது வார் பொழில் நாவலூரன்—வன்தொண்டன்—நல்-தமிழ்
பாதம் ஓத வல்லார் பரனோடு கூடுவரே. 10

திரு வெண்பாக்கம் VII-89 சீகாமரம்

''பிழை உளன பொறுத்திடுவர்'' என்று அடியேன் பிழைத்தக்கால்
பழிஅதனைப் பாராதே, படலம் என் கண் மறைப்பித்தாய்;
''குழை விரவு வடி காதா! கோயில் உளாயே!'' என்ன,
உழை உடையான் உள் இருந்து, ''உளோம்; போகீர்!'' என்றானே! 1

இடை அறியேன்; தலை அறியேன்; ''எம்பெருமான், சரணம்!'' என்பேன்;
''நடை உடையன், நம் அடியான்'' என்று அவற்றைப் பாராதே,
விடை உடையான், விடநாகன், வெண்நீற்றன், புலியின்தோல்-
உடை உடையான், எனை உடையான், ''உளோம்; போகீர்!'' என்றானே! 2

செய் வினை ஒன்று அறியாதேன்; ''திருவடியே சரண்'' என்று
பொய்அடியேன் பிழைத்திடினும், பொறுத்திட நீ வேண்டாவோ?
''பைஅரவா! இங்கு இருந்தாயோ?'' என்ன, பரிந்து என்னை
உய்ய அருள்செய்ய வல்லான், ''உளோம்; போகீர்!'' என்றானே! 3

கம்பு அமரும் கரி உரியன்; கறைமிடற்றன்; காபாலி;
செம்பவளத்திருஉருவன்; சேயிழையோடு உடன்ஆகி,
''நம்பி இங்கே இருந்தீரே!'' என்று நான் கேட்டலுமே,
உம்பர்தனித்துணை எனக்கு, ''உளோம்; போகீர்!'' என்றானே! 4

பொன் இலங்கு நறுங்கொன்றை புரிசடைமேல் பொலிந்து இலங்க,
மின்இலங்கு நுண்இடையாள் பாகமா, எருது ஏறி,
துன்னி இருபால் அடியார் தொழுது ஏத்த, அடியேனும்
உன்னதம்ஆய்க் கேட்டலுமே, ''உளோம்; போகீர்!'' என்றானே! 5

கண்நுதலான், காமனையும் காய்ந்த திறல்; கங்கை, மலர்,
தெண்நிலவு, செஞ்சடைமேல் தீமலர்ந்த கொன்றையினான்;
''கண்மணியை மறைப்பித்தாய்; இங்கு இருந்தாயோ?'' என்ன,
ஒண்நுதலி பெருமானார், ''உளோம்; போகீர்!'' என்றானே! 6

பார் நிலவு மறையோரும் பத்தர்களும் பணி செய்யத்
தார் நிலவு நறுங்கொன்றைச் சடையனார்; ''தாங்க(அ)ரிய
கார் நிலவு மணிமிடற்றீர்! இங்கு இருந்தீரே?'' என்ன,
ஊர்அரவம் அரைக்கு அசைத்தான், ''உளோம்; போகீர்!'' என்றானே! 7

வார் இடம் கொள் வனமுலையாள்தன்னோடு மயானத்துப்
பாரிடங்கள்பல சூழப் பயின்று ஆடும் பரமேட்டி,
கார் இடம்கொள் கண்டத்தன், கருதும் இடம் திரு ஒற்றி-
யூர் இடம்கொண்டு இருந்த பிரான், ''உளோம்; போகீர்!'' என்றானே! 8

பொன்நவிலும் கொன்றையினாய்! ''போய் மகிழ்க்கீழ் இரு!'' என்று
சொன்ன எனைக் காணாமே, ''சூளுறவு மகிழ்க்கீழே''
என்ன வல்ல பெருமானே! ''இங்கு இருந்தாயோ?'' என்ன,
ஒன்னலரைக் கண்டால் போல், ''உளோம்; போகீர்!'' என்றானே! 9

''மான்திகழும் சங்கிலியைத் தந்து, வரு பயன்கள்எல்லாம்
தோன்ற அருள்செய்து அளித்தாய்'' என்று உரைக்க, ''உலகம்எலாம்
ஈன்றவனே! வெண்கோயில் இங்கு இருந்தாயோ?'' என்ன,
ஊன்றுவது ஓர் கோல் அருளி, ''உளோம்; போகீர்!'' என்றானே! 10

ஏர் ஆரும் பொழில் நிலவு வெண்பாக்கம் இடம்கொண்ட
கார் ஆரும் மிடற்றானைக் காதலித்திட்டு, அன்பினொடும்
சீர் ஆரும் திரு ஆரூர்ச் சிவன் பேர் சென்னியில் வைத்த
ஆரூரன் தமிழ் வல்லார்க்கு அடையா, வல்வினைதானே. 11

கோயில் VII-90 குறிஞ்சி

மடித்து ஆடும் அடிமைக்கண் அன்றியே, மனனே! நீ வாழும் நாளும்
தடுத்துஆட்டி, தருமனார்தமர் செக்கில் இடும்போது தடுத்து ஆட்கொள்வான்;
கடுத்து ஆடு கரதலத்தில் தமருகமும், எரி அகலும்; கரிய பாம்பும்
பிடித்து ஆடி; புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 1

பேராது காமத்தில் சென்றார் போல் அன்றியே, பிரியாது உள்கி,
சீர் ஆர்ந்த அன்பராய், சென்று, முன் அடி வீழும் திருவினாரை,
ஓராது தருமனார்தமர் செக்கில் இடும்போது, தடுத்து ஆட்கொள்வான்,
பேராளர் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 2

நரியார்தம் கள்ளத்தால் பக்கு ஆன பரிசு ஒழிந்து, நாளும் உள்கி,
பிரியாத அன்பராய், சென்று, முன் அடி வீழும் சிந்தையாரை,
தரியாது தருமனார்தமர் செக்கில் இடும்போது, தடுத்து ஆட்கொள்வான்,
பெரியோர்கள் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 3

கருமை ஆர் தருமனார்தமர் நம்மைக் கட்டிய கட்டு அறுப்பிப்பானை;
அருமைஆம் தன் உலகம் தருவானை; மண்ணுலகம் காவல் பூண்ட
உரிமையால் பல்லவர்க்குத் திறை கொடா மன்னவரை மறுக்கம் செய்யும்,
பெருமை ஆர் புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 4

கருமானின்உரிஆடை, செஞ்சடைமேல் வெண்மதியக்கண்ணியானை,—
உரும் அன்ன கூற்றத்தை உருண்டு ஓட உதைத்து உகந்து உலவா இன்பம்
தருவானை, தருமனார்தமர் செக்கில் இடும்போது தடுத்து ஆட்கொள்வான்,
பெருமானார்,—புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 5

உய்த்து ஆடித் திரியாதே, உள்ளமே! ஒழிகண்டாய், ஊன்கண் ஓட்டம்!
''எத்தாலும் குறைவு இல்லை'' என்பர்காண்; நெஞ்சமே! நம்மை நாளும்—
பைத்து ஆடும் அரவினன், படர்சடையன், பரஞ்சோதி,—பாவம் தீர்க்கும்
பித்தாடி, புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 6

''முட்டாத முச்சந்தி மூஆயிரவர்க்கும் மூர்த்தி'' என்னப்-
பட்டானை, பத்தராய்ப் பாவிப்பார் பாவமும் வினையும் போக
விட்டானை, மலை எடுத்த இராவணனைத் தலைபத்தும் நெரியக் காலால்-
தொட்டானை, புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 7

''கல்-தானும் குழையும்ஆறு அன்றியே, கருதுமா கருத கிற்றார்க்கு,
எற்றாலும் குறைவு இல்லை'' என்பர்காண்; உள்ளமே! நம்மைநாளும்—
செற்றுஆட்டித் தருமனார்தமர் செக்கில் இடும்போது—தடுத்து ஆட்கொள்வான்,
பெற்றேறி,(ப்) புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 8

நாடு உடைய நாதன்பால் நன்று என்றும் செய், மனமே! நம்மை நாளும்,
தாடு உடைய தருமனார்தமர் செக்கில் இடும்போது, தடுத்து ஆட்கொள்வான்,—
மோடு உடைய சமணர்க்கும், முடை உடைய சாக்கியர்க்கும், மூடம் வைத்த,
பீடு உடைய—புலியூர்ச் சிற்றம்பலத்து எம்பெருமானைப் பெற்றாம் அன்றே! 9

பார் ஊரும் அரவு அல்குல் உமைநங்கைஅவள் பங்கன்; பைங்கண் ஏற்றன்;
ஊர்ஊரன்; தருமனார்தமர் செக்கில் இடும்போது, தடுத்து ஆட்கொள்வான்;
ஆரூரன்தம்பிரான்; ஆரூரன்; மீ கொங்கில் அணி காஞ்சிவாஅய்ப்
பேரூரர்பெருமானைப் புலியூர்ச் சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே! 10

குறிஞ்சி

VII-91

திரு ஒற்றியூர்

பாட்டும் பாடிப் பரவித் திரிவார்
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்—
காட்டும் கலமும் திமிலும் கரைக்கே 1
ஒட்டும் திரைவாய் ஒற்றியூரே.

பந்தும் கிளியும் பயிலும் பாவை
சிந்தை கவர்வார், செந்தீவண்ணர்,
எம்தம் அடிகள், இறைவர்க்கு இடம்போல்— 2
உந்தும் திரைவாய் ஒற்றியூரே.

பவளக்கனிவாய்ப் பாவை பங்கன்,
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்,
தவழும் மதி சேர் சடையாற்கு, இடம்போல்— 3
உகளும் திரைவாய் ஒற்றியூரே.

என்(ன்)னது எழிலும் நிறையும் கவர்வான்,—
புன்னை மலரும் புறவில்-திகழும்—
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்,
உன்னப்படுவான்,—ஒற்றியூரே. 4

பணம் கொள் அரவம் பற்றி, பரமன்,
கணங்கள் சூழக் கபாலம்ஏந்தி,
வணங்கும் இடை மென்மடவார் இட்ட
உணங்கல் கவர்வான்,—ஒற்றியூரே. 5

படை ஆர் மழுவன், பால்வெண்நீற்றன்,
விடை ஆர் கொடியன், வேத நாவன்,
அடைவார் வினைகள் அறுப்பான், என்னை
உடையான், உறையும்—ஒற்றியூரே. 6

சென்ற புரங்கள் தீயில் வேவ
வென்ற விகிர்தன், வினையை வீட்ட
நன்றும் நல்ல நாதன், நரைஏறு
ஒன்றை உடையான்,—ஒற்றியூரே. 7

கலவமயில் போல் வளைக்கை நல்லார்
பலரும் பரவும் பவளப்படியான்,
உலகின் உள்ளார் வினைகள் தீர்ப்பான்,—
உலவும் திரைவாய் ஒற்றியூரே. 8

பற்றி வரையை எடுத்த அரக்கன்
இற்று முரிய விரலால் அடர்த்தார்;
எற்றும் வினைகள் தீர்ப்பார்;—ஓதம்
ஒற்றும் திரைவாய் ஒற்றியூரே. 9

ஒற்றி ஊரும் அரவும் பிறையும்
பற்றி ஊரும் பவளச்சடையான்
ஒற்றியூர்மேல் ஊரன் உரைத்த
கற்றுப் பாட, கழியும், வினையே. 10

திருப் புக்கொளியூர் அவிநாசி VII-92 குறிஞ்சி

எற்றால் மறக்கேன், எழுமைக்கும் எம்பெருமானையே?
''உற்றாய்'' என்று உன்னையே உள்குகின்றேன், உணர்ந்து உள்ளத்தால்;
புற்று ஆடு அரவா! புக்கொளியூர் அவிநாசியே
பற்றுஆக வாழ்வேன்; பசுபதியே! பரமேட்டியே! 1

வழி போவார்தம்மோடும் வந்து உடன்கூடிய மாணி—நீ
ஒழிவது அழகோ? சொல்லாய்! அருள், ஓங்கு சடையானே!—
பொழில் ஆரும் சோலைப் புக்கொளியூரில் குளத்துஇடை
இழியாக் குளித்த மாணி—என்னைக் கிறி செய்ததே? 2

எங்கேனும் போகினும், எம்பெருமானை நினைந்தக்கால்,
கொங்கே புகினும் கூறை கொண்டு ஆறு அலைப்பார் இலை;
பொங்கு ஆடுஅரவா! புக்கொளியூர் அவிநாசியே!
எம் கோனே! உனை வேண்டிக்கொள்வேன், பிறவாமையே. 3

உரைப்பார் உரை உகந்து, உள்க வல்லார்தங்கள் உச்சியாய்!
அரைக்கு ஆடுஅரவா! ஆதியும் அந்தமும் ஆயினாய்!
புரைக் காடு சோலைப் புக்கொளியூர் அவிநாசியே!—
கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு, காலனையே! 4

அரங்கு ஆவது எல்லாம் மாய் இடுகாடு; அது அன்றியும்,
சரம்-கோலை வாங்கி, வரிசிலை நாணியில் சந்தித்து,
புரம் கோட எய்தாய்—புக்கொளியூர் அவிநாசியே!
குரங்கு ஆடு சோலைக் கோயில்கொண்ட குழைக் காதனே! 5

''நாத்தானும் உனைப் பாடல் அன்றி நவிலாது'' எனா,
''சோத்து!'' என்று தேவர் தொழ நின்ற சுந்தரச் சோதியாய்!
பூத் தாழ்சடையாய்! புக்கொளியூர் அவிநாசியே!
கூத்தா!—உனக்கு நான் ஆட்பட்ட குற்றமும் குற்றமே! 6

மந்தி கடுவனுக்கு உண் பழம் நாடி, மலைப்புறம்
சந்திகள்தோறும் சலபுட்பம் இட்டு வழிபட,
புந்தி உறைவாய்! புக்கொளியூர் அவிநாசியே!
நந்தி!—உனை வேண்டிக் கொள்வேன், நரகம் புகாமையே. 7

பேணாது ஒழிந்தேன், உன்னை அலால் பிற தேவரை;
காணாது ஒழிந்தேன்; காட்டுதியேல் இன்னம் காண்பன், நான்;—
பூண் நாண் அரவா! புக்கொளியூர் அவிநாசியே!
காணாத கண்கள் காட்ட வல்ல கறைக்கண்டனே! 8

நள்ளாறு, தெள்ளாறு, அரத்துறைவாய் எங்கள் நம்பனே!
வெள்ளாடை வேண்டாய், வேங்கையின்தோலை விரும்பினாய்!—
புள் ஏறு சோலைப் புக்கொளியூரில் குளத்துஇடை
உள் ஆடப் புக்க மாணி என்னைக் கிறி செய்ததே? 9

நீர் ஏற ஏறும் நிமிர்புன்சடை நின்மல மூர்த்தியை—
போர் ஏறுஅது ஏறியை, புக்கொளியூர் அவிநாசியை,
கார் ஏறு கண்டனை,—தொண்டன்ஆரூரன் கருதிய
சீர் ஏறு பாடல்கள் செப்ப வல்லார்க்கு இல்லை, துன்பமே. 10

திரு நறையூர்ச் சித்தீச்சுரம் VII-93 குறிஞ்சி

நீரும் மலரும் நிலவும் சடைமேல்
ஊரும் அரவம் உடையான் இடம்ஆம்—
வாரும் அருவி மணி, பொன், கொழித்துச்
சேரும்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 1

அளைப் பைஅரவு ஏர் இடையாள் அஞ்ச,
துளைக்கைக்கரித் தோல் உரித்தான் இடம்ஆம்—
வளைக்கைம் மடவார் மடுவில்-தடநீர்த்
திளைக்கும்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 2

இகழும் தகையோர் எயில்மூன்று எரித்த
பகழியொடு வில் உடையோன் பதிதான்—
முகிழ்மென்முலையார் முகமே கமலம்-
திகழும்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 3

மறக் கொள் அரக்கன் வரைதோள் வரையால்
இறக் கொள் விரல் கோன் இருக்கும் இடம்ஆம்—
நறக் கொள் கமலம் நளி பள்ளி எழத்
திறக்கும்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 4

முழுநீறு அணி மேனியன், மொய்குழலார்
எழு நீர்மை கொள்வான், அமரும் இடம்ஆம்—
கழுநீர் கமழக் கயல், சேல், உகளும்
செழுநீர்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 5

ஊன் ஆர் உடைவெண்தலை உண் பலி கொண்டு,
ஆன் ஆர் அடல் ஏறு அமர்வான் இடம்ஆம்—
வான் ஆர் மதியம் பதி வண்பொழில்வாய்த்
தேன் ஆர்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 6

கார் ஊர் கடலில் விடம் உண்டு அருள்செய்
நீர் ஊர் சடையன் நிலவும் இடம்ஆம்—
வார் ஊர் முலையார் மருவும் மறுகில்
தேர் ஊர்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 7

கரியின்உரியும், கலைமான்மறியும்,
எரியும் மழுவும், உடையான் இடம்ஆம்—
புரியும் மறையோர் நிறை சொல்பொருள்கள்
தெரியும்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 8

பேணா முனிவன் பெரு வேள்விஎலாம்
மாணாமை செய்தான் மருவும், இடம்ஆம்—
பாண் ஆர் குழலும், முழவும், விழவில்
சேண் ஆர்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 9

குறியில் வழுவாக் கொடுங்கூற்று உதைத்த
எறியும் மழுவாள்படையான் இடம்ஆம்—
நெறியில் வழுவா நியமத்தவர்கள்
செறியும்—நறையூர்ச் சித்தீச்சுரமே. 10

போர் ஆர் புரம் எய் புனிதன் அமரும்
சீர் ஆர் நறையூர்ச் சித்தீச்சுரத்தை
ஆரூரன் சொல்இவை வல்லவர்கள்,
ஏர் ஆர் இமையோர்உலகு எய்துவரே. 11

திருச் சோற்றுத்துறை VII-94 கௌசிகம்

அழல் நீர் ஒழுகியனைய சடையும்,
உழை ஈர்உரியும், உடையான் இடம்ஆம்—
கழை நீர் முத்தும் கனகக்குவையும்
சுழல் நீர்ப் பொன்னி—சோற்றுத்துறையே. 1

பண்டைவினைகள் பறிய நின்ற
அண்டமுதல்வன், அமலன், இடம்ஆம்—
இண்டை கொண்டு அன்பு இடைஅறாத
தொண்டர் பரவும்—சோற்றுத்துறையே. 2

கோல அரவும், கொக்கின்இறகும்,
மாலை மதியும், வைத்தான் இடம்ஆம்—
ஆலும் மயிலும், ஆடல் அளியும்,
சோலை தரு நீர்—சோற்றுத்துறையே. 3

பளிக்குத்தாரை பவளவெற்பில்
குளிக்கும் போல் நூல் கோமாற்கு இடம்ஆம்—
அளிக்கும் ஆர்த்தி, அல்லால் மதுவம்
துளிக்கும் சோலை—சோற்றுத்துறையே. 4

உதையும், கூற்றுக்கு; ஒல்கா விதிக்கு
வதையும்; செய்த மைந்தன் இடம்ஆம்—
திரையும் தாதும் தேனும் ஞிமிறும்
துதையும் பொன்னி—சோற்றுத்துறையே. 5

ஓதக்கடல்நஞ்சினை உண்டிட்ட
பேதைப்பெருமான் பேணும் பதிஆம்—
சீதப்புனல் உண்டு எரியைக் காலும்
சூதப்பொழில் சூழ்—சோற்றுத்துறையே. 6

இறந்தார் என்பும், எருக்கும், சூடிப்
புறங்காட்டு ஆடும் புனிதன் கோயில்—
சிறந்தார், சுற்றம், திரு, என்று இன்ன
துறந்தார் சேரும்—சோற்றுத்துறையே. 7

காமன் பொடியாக் கண் ஒன்று இமைத்த
ஓமக்கடலார் உகந்த இடம்ஆம்—
தேமென்குழலார் சேக்கை புகைத்த
தூமம் விசும்பு ஆர்—சோற்றுத்துறையே. 8

இலையால், அன்பால், ஏத்துமவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார் இடம்ஆம்—
தலையால்-தாழும் தவத்தோர்க்கு என்றும்
தொலையாச் செல்வ—சோற்றுத்துறையே. 9

சுற்று ஆர்தரு நீர்ச் சோற்றுத்துறையுள்
முற்றா மதி சேர் முதல்வன் பாதத்து
அற்றார்அடியார் அடிநாய்ஊரன்
சொல்-தான்இவை கற்றார் துன்பு இலரே. 10

திரு ஆரூர் VII-95 செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆள்ஆய், பிறரை வேண்டாதே,
மூளாத் தீப் போல் உள்ளே கனன்று, முகத்தால் மிக வாடி,
ஆள்ஆய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளா(ஆ)ங்கு இருப்பீர்; திரு ஆரூரீர்! வாழ்ந்துபோதீரே! 1

விற்றுக் கொள்வீர்; ஒற்றி அல்லேன்; விரும்பி ஆட்பட்டேன்;
குற்றம் ஒன்றும் செய்தது இல்லை; கொத்தை ஆக்கினீர்;
எற்றுக்கு—அடிகேள்!—என் கண் கொண்டீர்? நீரே பழிப்பட்டீர்;
மற்றைக் கண்தான் தாராதொழிந்தால், வாழ்ந்துபோதீரே! 2

அன்றில் முட்டாது அடையும் சோலை ஆரூர்அகத்தீரே!
கன்று முட்டி உண்ணச் சுரந்த காலிஅவை போல,
என்றும் முட்டாப் பாடும் அடியார் தம் கண் காணாது
குன்றில் முட்டிக் குழியில் விழுந்தால், வாழ்ந்துபோதீரே! 3

துருத்தி உறைவீர்; பழனம் பதியா, சோற்றுத்துறை ஆள்வீர்;
இருக்கை திரு ஆரூரே உடையீர்; மனமே என வேண்டா;
அருத்தி உடைய அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்,
வருத்தி வைத்து, மறுமை பணித்தால், வாழ்ந்துபோதீரே! 4

செந் தண் பவளம் திகழும் சோலை இதுவோ, திரு ஆரூர்?
எம்தம் அடிகேள்! இதுவே ஆம்ஆறு, உமக்கு ஆட்பட்டோர்க்கு?
சந்தம்பலவும் பாடும் அடியார் தம் கண் காணாது
வந்து, ''எம்பெருமான்! முறையோ?'' என்றால், வாழ்ந்துபோதீரே! 5

தினைத்தாள் அன்ன செங்கால் நாரை சேரும் திரு ஆரூர்ப்
புனைத் தார் கொன்றைப் பொன் போல் மாலைப் புரிபுன்சடையீரே!
தனத்தால் இன்றி, தாம்தாம் மெலிந்து, தம் கண் காணாது,
மனத்தால் வாடி, அடியார் இருந்தால், வாழ்ந்துபோதீரே! 6

ஆயம் பேடை அடையும் சோலை ஆரூர் அகத்தீரே!
ஏ, எம்பெருமான்! இதுவே ஆம்ஆறு, உமக்கு ஆட்பட்டோர்க்கு?
மாயம் காட்டி, பிறவி காட்டி, மறவா மனம் காட்டி,
காயம் காட்டி, கண் நீர் கொண்டால், வாழ்ந்துபோதீரே! 7

கழிஆய், கடல்ஆய், கலன்ஆய், நிலன்ஆய், கலந்த சொல்ஆகி,—
இழியாக் குலத்தில் பிறந்தோம்—உம்மை இகழாது ஏத்துவோம்;
பழிதான் ஆவது அறியீர்; அடிகேள்! பாடும் பத்தரோம்;
வழிதான் காணாது, அலமந்து இருந்தால், வாழ்ந்துபோதீரே! 8

''பேயோடேனும் பிரிவு ஒன்று இன்னாது'' என்பர், பிறர்எல்லாம்;
காய்தான் வேண்டில், கனிதான்அன்றே, கருதிக் கொண்டக்கால்?
நாய்தான் போல நடுவே திரிந்தும், உமக்கு ஆட்பட்டோர்க்கு
வாய்தான் திறவீர்; திரு ஆரூரீர்! வாழ்ந்துபோதீரே! 9

செருந்தி செம்பொன்மலரும் சோலை இதுவோ, திரு ஆரூர்?
பொருந்தித் திரு மூலட்டான(ம்)மே இடமாக் கொண்டீரே;
இருந்தும், நின்றும், கிடந்தும், உம்மை இகழாது ஏத்துவோம்;
வருந்தி வந்தும், உமக்கு ஒன்று உரைத்தால், வாழ்ந்துபோதீரே! 10

கார் ஊர் கண்டத்து எண்தோள் முக்கண் கலைகள்பலஆகி,
ஆரூர்த் திரு மூலட்டானத்தே அடிப்பேர் ஆரூரன்,
பார் ஊர் அறிய, என் கண் கொண்டீர்; நீரே பழிப்பட்டீர்;
வார் ஊர் முலையாள் பாகம் கொண்டீர்! வாழ்ந்துபோதீரே! 11

திரு ஆரூர்ப் பரவையுள்மண்டளி VII-96 பஞ்சமம்

தூ வாயா! தொண்டு செய்வார் படு துக்கங்கள்
காவாயா? கண்டுகொண்டார்ஐவர் காக்கிலும்,
நா வாயால் உன்னையே நல்லன சொல்லுவேற்கு
''ஆவா!''என்—பரவையுள் மண்டளிஅம்மானே! 1

பொன்னானே, புலவர்க்கு! நின் புகழ் போற்றல் ஆம்—
தன்னானே தன்னைப் புகழ்ந்திடும் தற்சோதி!
மின்னானே! செக்கர்வானத்து இள ஞாயிறு
அன்னானே! பரவையுள்மண்டளி அம்மானே! 2

நா மாறாது உன்னையே நல்லன சொல்லுவார்
போம்ஆறு என்? புண்ணியா! புண்ணியம்ஆனானே!
பேய் மாறாப் பிணம் இடுகாடு உகந்து ஆடுவாய்க்கு
ஆம்ஆறு என்?—பரவையுள்மண்டளி அம்மானே! 3

நோக்குவேன், உன்னையே; நல்லன நோக்காமைக்
காக்கின்றாய்; கண்டுகொண்டார்ஐவர் காக்கினும்,
வாக்கு என்னும் மாலைகொண்டு உன்னை என் மனத்து
ஆர்க்கின்றேன்—பரவையுள்மண்டளி அம்மானே! 4

பஞ்சு ஏரும் மெல்அடியாளை ஒர்பாகம்ஆய்,
நஞ்சு ஏரும் நல் மணிகண்டம் உடையானே!
நெஞ்சு ஏர நின்னையே உள்கி நினைவாரை,
''அஞ்சேல்!'' என்—பரவையுள்மண்டளி அம்மானே! 5

அம்மானே! ஆகம சீலர்க்கு அருள் நல்கும்
பெம்மானே! பேர்அருளாளன் பிடவூரன்-
தம்மானே! தண்தமிழ்நூல் புலவாணர்க்கு ஓர்
அம்மானே! பரவையுள்மண்டளி அம்மானே! 6

விண்டானே! மேலையார்மேலையார்மேல்ஆய
எண்தானே! எழுத்தொடு சொல்பொருள்எல்லாம் முன்
கண்டானே! கண்தனைக் கொண்டிட்டுக் காட்டாயே!—
அண்டானே! பரவையுள்மண்டளி அம்மானே! 7

காற்றானே! கார்முகில் போல்வது ஓர் கண்டத்து எம்
கூற்றானே! கோல்வளையாளை ஒர்பாகம்ஆம்
நீற்றானே! நீள்சடைமேல் நிறை உள்ளது ஓர்
ஆற்றானே! பரவையுள்மண்டளி அம்மானே! 8

செடியேன், நான்; செய்வினை நல்லன செய்யாத
கடியேன், நான்; கண்டதேகண்டதே காமுறும்
கொடியேன், நான்; கூறும்ஆறு உன் பணி கூறாத
அடியேன், நான்—பரவையுள்மண்டளி அம்மானே! 9

கரந்தையும், வன்னியும். மத்தமும், கூவிளம்,
பரந்த சீர்ப் பரவையுள்மண்டளி அம்மானை
நிரம்பிய ஊரன் உரைத்தன பத்துஇவை
விரும்புவார் மேலையார்மேலையார்மேலாரே. 10

திரு நனிபள்ளி　VII-97　பஞ்சமம்

ஆதியன்; ஆதிரையன்(ன்) அயன் மால் அறிதற்கு அரிய
சோதியன்; சொல்பொருள்ஆய், சுருங்கா மறைநான்கினையும்
ஓதியன்; உம்பர்தம் கோன்; உலகத்தினுள் எவ்உயிர்க்கும்
நாதியன்; நம்பெருமான்; நண்ணும் ஊர்—நனிபள்ளிஅதே. 1

உறவுஇலி; ஊனம்இலி; உணரார் புரம்மூன்று எரியச்
செறி வி(ல்)லி; தன் நினைவார் வினைஆயின தேய்ந்து அழிய
அற இலகும்(ம்) அருளான்; மருள் ஆர் பொழில், வண்டு அறையும்,
நற விரி கொன்றையினான்; நண்ணும் ஊர்—நனிபள்ளிஅதே. 2

வான் உடையான்; பெரியான்; மனத்தாலும் நினைப்பு அரியான்;
ஆன்இடைஐந்து அமர்ந்தான்; அணுஆகி, ஓர் தீஉருக் கொண்டு
ஊன் உடை இவ் உடலம்(ம்) ஒடுங்கிப் புகுந்தான்;பரந்தான்;
நான் உடை மாடு; எம்பிரான்; நண்ணும் ஊர்—நனிபள்ளிஅதே. 3

ஓடு உடையன், கலனா; உடை கோவணவன்(ன்); உமை ஓர்-
பாடு உடையன்; பலி தேர்ந்து உண்ணும் பண்பு உடையன்; பயிலக்
காடு உடையன்(ன்), இடமா; மலைஏழும், கருங்கடல் சூழ்
நாடு, உடை நம்பெருமான் நண்ணும் ஊர்—நனிபள்ளிஅதே. 4

பண்ணற்கு அரியது ஒரு படைஆழிதனைப் படைத்துக்
கண்ணற்கு அருள்புரிந்தான்; கருதாதவர் வேள்விஅவி
உண்ணற்கு இமையவரை உருண்டு ஓட உதைத்து, உகந்து,
நண்ணற்கு அரிய பிரான்; நண்ணும் ஊர்—நனிபள்ளிஅதே. 5

மல்கிய செஞ்சடைமேல் மதியும்(ம்) அரவும்(ம்) உடனே-
புல்கிய ஆரணன், எம் புனிதன், புரிநூல் விகிர்தன்,
மெல்கிய வில்-தொழிலான், விருப்பன், பெரும் பார்த்தனுக்கு
நல்கிய நம்பெருமான், நண்ணும் ஊர் நனிபள்ளிஅதே. 6

அங்கம் ஓர்ஆறுஅவையும்(ம்), அருமாமறை, வேள்விகளும்,
எங்கும் இருந்து அந்தணர் எரிமூன்றுஅவை, ஓம்பும் இடம்;
பங்கயமாமுகத்தாள்உமை பங்கன் உறை கோயில்;
செங்கயல் பாயும் வயல்-திரு ஊர்—நனிபள்ளிஅதே. 7

திங்கள்குறுந்தெரியல்-திகழ் கண்ணியன்; நுண்ணியனாய்,
நம் கண் பிணி களைவான்; அரு மா மருந்து, ஏழ்பிறப்பும்;
மங்கத் திருவிரலால் அடர்த்தான், வல்அரக்கனையும்;
நங்கட்கு அருளும் பிரான்; நண்ணும் ஊர்—நனிபள்ளிஅதே. 8

ஏனமருப்பினொடும்(ம்) எழில் ஆமையும் பூண்டு, உகந்து,
வான் மதில்அரணம் மலையே சிலையா வளைத்தான்;
ஊனம் இல் காழிதன்னுள்(ள்) உயர் ஞானசம்பந்தற்கு அன்று
ஞானம் அருள்புரிந்தான்; நண்ணும் ஊர்—நனிபள்ளிஅதே. 9

காலமும் நாழிகையும் நனிபள்ளி மனத்தின் உள்கி,
கோலம்அதுஆயவனைக் குளிர் நாவலஊரன் சொன்ன
மாலை மதித்து உரைப்பார், மண் மறந்து வானோர்உலகில்
சால நல் இன்பம் எய்தி, தவலோகத்து இருப்பவரே. 10

திரு நன்னிலத்துப் பெருங்கோயில் VII-98 பஞ்சமம்

தண் இயல் வெம்மையினான்; தலையில் கடைதோறும் பலி,
பண் இயல் மென்மொழியார், இடக் கொண்டு உழல் பண்டரங்கன்—
புண்ணிய நால்மறையோர் முறையால் அடி போற்றுஇசைப்ப
நண்ணிய—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 1

வலம் கிளர் மா தவம் செய் மலைமங்கை ஓர்பங்கினனாய்,
சலம் கிளர் கங்கை தங்கச் சடை ஒன்றுஇடையே தரித்தான்—
பலம் கிளர் பைம்பொழில்-தண்பனிவெண்மதியைத் தடவ,
நலம் கிளர்—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 2

கச்சியன்; இன் கருப்பூர் விருப்பன்; கருதிக் கசிவார்
உச்சியன்; பிச்சைஉண்ணி(ய்); உலகங்கள்எல்லாம் உடையான்—
நொச்சி அம் பச்சிலையால், நுரைநீர்-புனலால்,-தொழுவார்
நச்சிய—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 3

பாடிய நால்மறையான்; படு பல்பிணக்காடு அரங்கா
ஆடிய மாநடத்தான்—''அடி போற்றி!'' என்று அன்பினராய்ச்
சூடிய செங்கையினார் பலதோத்திரம் வாய்த்த சொல்லி
நாடிய—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 4

பிலம் தரு வாயினொடு பெரிதும் வலி மிக்கு உடைய
சலந்தரன் ஆகம் இருபிளவு ஆக்கிய, சக்கரம் முன்
நிலம் தரு மாமகள்கோன் நெடுமாற்கு அருள்செய்த பிரான்—
நலம் தரு நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 5

வெண்பொடி மேனியினான், கருநீலமணிமிடற்றான்,
பெண் படி செஞ்சடையான், பிரமன்சிரம் பீடு அழித்தான்—
பண்பு உடை நால்மறையோர் பயின்று ஏத்தி, பல்கால் வணங்கும்
நண்பு உடை—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 6

தொடை மலி கொன்றை துன்றும் சடையன், சுடர் வெண்மழுவாள்
படை மலி கையன், மெய்யில் பகட்டுஊர்உரிப்போர்வையினான்—
மடை மலி வண்கமலம்மலர்மேல் மடஅன்னம் மன்னி
நடை மலி—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 7

குளிர்தரு திங்கள், கங்கை, குரவோடு, அர, கூவிளமும்,
மிளிர்தரு புன்சடைமேல் உடையான்; விடையான்—விரை சேர்
தளிர் தரு கோங்கு, வேங்கை, தட மாதவி, சண்பகமும்,
நளிர்தரு—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 8

கமர் பயில் வெஞ்சுரத்துக் கடுங் கேழல் பின் கானவனாய்,
அமர் பயில்வு எய்தி, அருச்சுனனுக்கு அருள்செய்த பிரான்—
தமர் பயில் தண் விழவில்-தகு சைவர், தவத்தின் மிக்க
நமர், பயில்—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே. 9

கருவரை போல் அரக்கன் கயிலை(ம்)மலைக்கீழ்க் கதற,
ஒருவிரலால் அடர்த்து, இன்அருள் செய்த உமாபதிதான்—
திரை பொரு பொன்னி நன்நீர்த் துறைவன், திகழ் செம்பியர்கோன், 10
நரபதி,—நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனே.

கோடு உயர் வெங்களிற்றுத் திகழ் கோச்செங்கணான் செய் கோயில்,
நாடிய நன்னிலத்துப் பெருங்கோயில் நயந்தவனைச்
சேடு இயல் சிங்கிதந்தை—சடையன், திரு ஆரூரன்— 11
பாடிய பத்தும் வல்லார் புகுவார், பரலோகத்துளே.

திரு நாகேச்சுரம் VII-99 பஞ்சமம்

பிறை அணி வாள்நுதலாள் உமையாள்அவள் பேழ்கணிக்க
நிறை அணி நெஞ்சு அனுங்க(ந்), நீலமால்விடம் உண்டது என்னே?—
குறை அணி குல்லை, முல்லை, அளைந்து(க்), குளிர் மாதவிமேல்
சிறை அணி வண்டுகள் சேர்—திரு நாகேச்சுரத்து அரனே! 1

அருந்தவம் மா முனிவர்க்கு அருள்ஆகி, ஓர் ஆல்அதன்கீழ்
இருந்து, அறமே புரிதற்கு இயல்பு ஆகியது என்னைகொல்ஆம்?—
குருந்து அயலே குரவம்(ம்) அரவின்(ன்)எயிறு ஏற்று அரும்ப,
செருந்தி செம்பொன்மலரும்—திரு நாகேச்சுரத்து அரனே! 2

பாலனது ஆர்உயிர்மேல் பரியாது பகைத்து எழுந்த
காலனை வீடுவித்து, கருத்து ஆக்கியது என்னைகொல்ஆம்?—
கோல மலர்க்குவளை கழுநீர் வயல் சூழ் கிடங்கில்,
சேலொடு வாளைகள் பாய்—திரு நாகேச்சுரத்து அரனே! 3

குன்ற-மலைக்குமரி—கொடி ஏர் இடையாள்—வெருவ,
வென்றி மதகரியின்(ன்) உரி போர்த்ததும் என்னைகொல்ஆம்?—
முன்றில் இளங் கமுகின் முது பாளை மது அளைந்து,
தென்றல் புகுந்து உலவும்—திரு நாகேச்சுரத்து அரனே! 4

அரை விரி கோவணத்தோடு அரவு ஆர்த்து, ஒரு நால்மறைநூல்
உரை பெருக(வ்) உரைத்து, அன்று உகந்து(வ்), அருள்செய்தது என்னே?—
வரை தரு மா மணியும், வரைச் சந்து, அகிலோடும், உந்தித்
திரை பொரு தண்பழன—திரு நாகேச்சுரத்து அரனே! 5

தங்கிய மா தவத்தின் தழல் வேள்வியின்நின்று எழுந்த
சிங்கமும் நீள் புலியும் செழு மால்கரியோடு அலறப்
பொங்கிய போர் புரிந்து(ப்), பிளந்து, ஈர்உரி போர்த்தது என்னே?—
செங்கயல் பாய் கழனி—திரு நாகேச்சுரத்து அரனே! 6

நின்ற இம் மாதவத்தை ஒழிப்பான் சென்று, அணைந்து, மிகப்
பொங்கிய பூங்கணை வேள் பொடிஆக விழித்தல் என்னே?—
பங்கயமாமலர்மேல் மது உண்டு, வண் தேன் முரல,
செங்கயல் பாய் வயல் சூழ்—திரு நாகேச்சுரத்து அரனே! 7

வரிஅர நாண்அது(வ்) ஆக, மாமேரு வில்அது(வ்)ஆக,
அரியன முப்புரங்கள்(ள்)அவை ஆர்அழல் மூட்டல் என்னே?—
விரிதரு மல்லிகையும், மலர்ச்சண்பகமும்(ம்), அளைந்து
திரிதரு வண்டு பண்செய்—திரு நாகேச்சுரத்து அரனே! 8

அங்கு இயல் யோகுதன்னை அழிப்பான் சென்று அணைந்து மிகப்
பொங்கிய பூங்கணை வேள் பொடிஆக விழித்தல் என்னே?—
பங்கயமாமலர்மேல் மது உண்டு, பண் வண்டு அறைய,
செங்கயல் நின்று உகளும்—திரு நாகேச்சுரத்து அரனே! 9

குண்டரை, கூறை இன்றித் திரியும் சமண்சாக்கியப்பேய்-
மிண்டரை, கண்ட தன்மை விரவு ஆகியது என்னைகொலோ?—
தொண்டு இரைத்து(வ்), வணங்கி, தொழில் பூண்டு, அடியார் பரவும்
தெண்திரைத் தண்வயல் சூழ்—திரு நாகேச்சுரத்து அரனே! 10

கொங்கு அணை வண்டு அரற்ற, குயிலும் மயிலும் பயிலும்
தெங்கு அணை பூம்பொழில் சூழ் திரு நாகேச்சுரத்து அரனை,
வங்கம் மலி கடல் சூழ் வயல் நாவல் ஆரூரன், சொன்ன
பங்கம் இல் பாடல் வல்லார்அவர்தம் வினை பற்றுஅறுமே. 11

திரு நொடித்தான்மலை   VII-100   பஞ்சமம்

தான் எனை முன் படைத்தான்; அது அறிந்து தன் பொன்அடிக்கே
நான் என பாடல்? அந்தோ! நாயினேனைப் பொருட்படுத்து,
வான் எனை வந்து எதிர்கொள்ள, மத்தயானை அருள்புரிந்து(வ்)
ஊன் உயிர் வேறு செய்தான்—நொடித்தான்மலை உத்தமனே. 1

ஆனை உரித்த பகை அடியேனொடு மீளக்கொலோ—
ஊனை உயிர் வெருட்டி ஒள்ளியானை நினைந்திருந்தேன்,
வானை மதித்த(அ)மரர் வலம்செய்து, எனை ஏற வைக்க
ஆனை அருள்புரிந்தான், நொடித்தான் மலை உத்தமனே? 2

மந்திரம் ஒன்று அறியேன், மனைவாழ்க்கை மகிழ்ந்து, அடியேன்;
சுந்தரவேடங்களால்-துரிசே செயும் தொண்டன்எனை
அந்தர மால்விசும்பில்(ல்) அழகு ஆனை அருள்புரிந்த-
தும் தரமோ? நெஞ்சமே!—நொடித்தான்மலை உத்தமனே. 3

வாழ்வை உகந்த நெஞ்சே! மடவார்தங்கள் வல்வினைப் பட்டு,
ஆழ முகந்த என்னை அது மாற்றி, அமரர்எல்லாம்
சூழ அருள் புரிந்து(த்), தொண்டனேன் பரம்அல்லது ஒரு
வேழம் அருள்புரிந்தான்—நொடித்தான்மலை உத்தமனே. 4

மண்ணுலகில் பிறந்து(ந்) நும்மை வாழ்த்தும் வழிஅடியார்
பொன்னுலகம் பெறுதல் தொண்டனேன் இன்று கண்டொழிந்தேன்;
விண்ணுலகத்தவர்கள் விரும்ப(வ்) வெள்ளையானையின்மேல்
என் உடல் காட்டுவித்தான்—நொடித்தான்மலை உத்தமனே. 5

அஞ்சினை ஒன்றி நின்று(வ்) அலர் கொண்டு அடி சேர்வு அறியா
வஞ்சனை என் மனமே வைகி, வானநன்நாடர்முன்னே
துஞ்சுதல் மாற்றுவித்து, தொண்டனேன் பரம்அல்லது ஒரு
வெஞ்சின ஆனை தந்தான்—நொடித்தான் மலை உத்தமனே. 6

நிலை கெட, விண் அதிர(ந்), நிலம் எங்கும் அதிர்ந்து அசைய,
மலைஇடை யானை ஏறி(வ்) வழியே வருவேன் எதிரே,
அலைகடல்ஆல்அரையன்(ன்) அலர் கொண்டு முன் வந்து இறைஞ்ச,
உலை அணையாத வண்ணம்—நொடித்தான்மலை உத்தமனே. 7

அர ஒலி, ஆகமங்கள்(ள்) அறிவார் அறி தோத்திரங்கள்,
விரவிய வேதஒலி, விண்எலாம் வந்து எதிர்ந்து இசைப்ப,
வரம் மலி வாணன் வந்து(வ்) வழிதந்து, எனக்கு ஏறுவது ஓர்
சிரம் மலி யானை தந்தான்—நொடித்தான்மலை உத்தமனே. 8

இந்திரன், மால், பிரமன்(ன்), எழில் ஆர் மிகு தேவர், எல்லாம்
வந்து எதிர்கொள்ள, என்னை மத்தயானை அருள்புரிந்து,
மந்திர மா முனிவர், ‘‘இவன் ஆர்?’’ என,—எம்பெருமான்—
‘‘நம்தமர் ஊரன்’’ என்றான்—நொடித்தான்மலை உத்தமனே. 9

ஊழிதொறுஊழி முற்றும்(ம்) உயர் பொன் நொடித்தான்மலையை,
சூழ் இசை இன்கரும்பின் சுவை நாவலஊரன் சொன்ன,
ஏழ்இசை இன்தமிழால் இசைந்து ஏத்திய பத்தினையும்,
ஆழி-கடல்(ல்)அரையா! அஞ்சையப்பர்க்கு அறிவிப்பதே! 10

பிற்சேர்க்கை

திரு நாகைக்காரோணம் VII-101 காந்தாரம்

பொன் ஆம் இதழி விரைமத்தம் பொங்கு கங்கைப் புரிசடைமேல்
முன்னா அரவம் மதியமும் சென்னி வைத்தல் மூர்க்கு அன்றே!—
துன்னா மயூரம் சோலைதொறும் ஆட, தூரத் துணைவண்டு
தென்னா என்னும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 1

வரைக்கைவேழம் உரித்தும் அரன் நடமாட்டுஆனால் மனைதோறும்
இரக்கை ஒழியீர்; பழி அறியில், ஏற்றை விற்று நெல் கொள்வீர்!—
முரைக் கை பவளக்கால் காட்ட, மூரிச் சங்கத்தொடு முத்தம்
திரைக்கை காட்டும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 2

புல்லும் பெறுமே, விடை? புணரச் சடைமேல் ஒரு பெண் புக வைத்தீர்!
இல்லம்தோறும் பலி என்றால், இரக்க இடுவார் இடுவாரே?—
முல்லை முறுவல் கொடி எடுப்ப, கொன்றைமுகம் மோதிரம் காட்ட,
செல்லும் புறவின்-தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 3

மாண்டார் எலும்பும் கலும்பும் எலாம் மாலைஆக மகிழ்ந்துஅருளி,
பூண் தார் பொறி ஆடுஅரவு ஆமை, புரம்மூன்று எரித்தீர், பொருள்ஆக—
தூண்டா விளக்கு மணி மாட வீதிதோறும் சுடர் உய்க்க,
சேண் தார் புரிசைத் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 4

ஒருவர்க்கு ஒருவர் அரிதுஆகில், உடைவெண்தலை கொண்டு ஊர்ஊரன்
இருவர்க்கு ஒருவர் இரந்து உண்டால் எளிதே? சொல்லீர்—எத்தனையும்
பரு வன் கனகம் கற்பூரம் பகர்ந்த முகந்து பப்பரவர்
தெருவில் சிந்தும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 5

தோ(ட்)டை உடுத்த காது உடையீர்! தோலை உடுத்துச் சோம்பாதே
ஆடை உடுத்துக் கண்டக்கால் அழகிது அன்றே! அரிது அன்று(வ்)—
ஓடை உடுத்த குமுதமே உள் அம் கை மறிப்ப, புறம்கை அனம்
சேடை உடுத்தும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 6

கடு நஞ்சு உண்டு, இரக்கவே, கண்டம் கறுத்தது; இக் காலம்—
விடும் நஞ்சு உண்டு—நாகத்தை வீட்டில் ஆட்டை வேண்டா, நீர்!—
கொடு மஞ்சுகள் தோய் நெடுமாடம் குலவு மணி மாளிகைக்குழாம்
இடு மிஞ்சு இதை சூழ் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 7

பள்ளம் பாறும் நறும்புனலைச் சூடி, பெண் ஓர்பாகமா,
வெள்ளைநீறே பூசுவீர்; மேயும் விடையும் பாயுமே?—
தொள்ளை ஆம் நல் கரத்து ஆனை சுமந்து வங்கம் சுங்கம்இடத்
தெள்ளும் வேலைத் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 8

மத்தம் கவரும் மலர்க்கொன்றைமாலைமேல் மால் ஆனாளை
உய்த்து அங்கு அவரும் உரைசெய்தால் உமக்கே அன்றே, பழி? உரையீர்—
முத்தம் கவரும் நகை இளையார் மூரித் தானை முடிமன்னர்
சித்தம் கவரும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 9

மறை அன்று ஆலின்கீழ் நால்வர்க்கு அளித்தீர்; களித்தார் மதில்மூன்றும்
இறையில் எரித்தீர்; ஏழ்உலகும் உடையார் இரந்து ஊண் இனிதேதான்?—
திறை கொண்டு அமரர் சிறந்து இறைஞ்சித் திருக் கோபுரத்து நெருக்க, மலர்ச்
சிறைவண்டு அறையும் தென்நாகைத் திருக் காரோணத்து இருப்பீரே! 10

தேர் ஆர் வீதித் தென்நாகைத் திருக் காரோணத்து இறையானைச்
சீர் ஆர் மாடத் திரு நாவலூர்க் கோன்—சிறந்த வன்தொண்டன்—
ஆரா அன்போடு உரைசெய்த அஞ்சொடுஅஞ்சும் அறிவார்கள்,
வார் ஆர் முலையாள் உமை கணவன் மதிக்க இருப்பார், வான்அகத்தே. 11

திருச்சிற்றம்பலம்

மூவர்தேவாரம் முற்றும்.

பின்னிணைப்பு

* திருமறைக்காட்டுப் பதிகம்

(வெள்ளிப் பாட்டு)

கொல்லி

விடைத்தவர் புரங்கள் மூன்றும் விரிசிலை குனிய வாங்கிப்
படைத்தொழில் புரிந்து நின்ற பரமனே! பரம யோகி!
கடைத்தலைப் புகுந்து நின்றோம்; கலிமறைக் கா(டு)அ மர்ந்தீர்!
அடைத்திடும், கதவு தன்னை அப்படித் தாளி னாலே! 1

முடைத்தலைப் பலிகொள் வானே! முக்கணா! நக்க மூர்த்தீ!
மடைத்தலைக் கமலம் ஓங்கும் வயல்மறைக் கா(டு)அ மர்ந்தாய்!
''அடைத்திடும், கதவை!'' என்(று)இங்(கு) அடியனேன் சொல்ல, வல்லே
அடைத்தனை கத(வு);இ(து) அன்றோ, எம்மை ஆள் உகக்கும் ஆறே! 2

கொங்(கு)அணா மலர்கள் மேவும் குளிர்பொழில் இமையப் பாவை
பங்(கு)அணா(வு) உருவி னானே! பருமணி உமிழும் வெம்மைச்
செங்கண்ஆர் அரவம் பூண்ட திகழ்மறைக் கா(டு)அ மர்ந்தாய்!
அங்கணா! இதுஅன் றோதான், எம்மைஆள் உகக்கும் ஆறே! 3

இருள்உடை மிடற்றி னானே! எழில்மறைப் பொருள்கள் எல்லாம்
தெருள்பட முனிவர்க்(கு) ஈந்த திகழ்மறைக் கா(டு)அ மர்ந்தாய்!
மருள்உடை மனத்த னேனும் வந்துஅடி பணிந்து நின்றேற்(கு)
அருள்அது புரிவ(து) அன்றோ, எம்மைஆள் உகக்கும் ஆறே! 4

பெருந்தகை வேழம் தன்னைப் பிளிறிட உரிசெய் தானே!
மருத்திகழ் பொழில்கள் சூழ்ந்த மாமறைக் கா(டு)அ மர்ந்தாய்!
கருத்தில னேனும் நின்தன் கழல்அடி பணிந்து நின்றேன்
அருத்தியை அறிவ(து) அன்றோ, எம்மைஆள் உகக்கும் ஆறே! 5

செப்(பு)அமர் கொங்கை மாதர் செறிவளை கொள்ளும் தேசோ(டு)
ஒப்(பு)அமர் பலிகொள் வானே! ஒளிமறைக் கா(டு)அ மர்ந்தாய்!
அப்(பு)அமர் சடையி னானே! அடியனேன் பணிஉ கந்த
அப்பனே! அளவில் சோதீ! அடிமையை உகக்கும் ஆறே! 6

மதிதுன்றும் இதழி, மத்தம், மன்னிய சென்னி யானே!
கதிஒன்றும் ஏற்றி னானே! கலிமறைக் கா(டு)அ மர்ந்தாய்!
விதிஒன்று பாவின் மாலை கேட்டருள் வியக்கும் தன்மை
இதுஅன்றோ, உலகில் நம்பி எம்மைஆள் உகக்கும் ஆறே! 7

நீசன்ஆம் அரக்கன் திண்தோள் நெரிதர விரலால் ஊன்றும்
தேசனே! ஞான மூர்த்தீ! திருமறைக் கா(டு)அ மர்ந்தாய்!
ஆசையை அறுக்க உய்ந்திட்(டு) அவன்அடி பரவ, மெய்யே
ஈசனார்க்(கு) ஆள்அ(து) ஆனேன் என்பதை அறிவித் தாயே. 8

மைதிகழ் உருவி னானும், மலரவன் தானும், மெய்ம்மை
எய்துமா(று) அறிய மாட்டார்; எழில்மறைக் கா(டு)அ மர்ந்தாய்!
பொய்தனை இன்றி நின்னைப் போற்றினார்க்(கு) அருளைச் சேரச்
செய்தனை, எனக்கு நீ இன்(று) அருளிய திறத்தினாலே. 9

மண்தலத்(து) அமணர் பொய்யும், தேரர்கள் மொழியும், மாறக்
கண்டனை; அடிகள்! என்றும் கல்மறைக் கா(டு)அமர்ந்தாய்!
''தண்டியைத் தானா வைத்தான்'' என்னும்அத் தன்மை யாலே
எண்திசைக்(கு) அறிய வைத்தாய், இக்கத(வு) அடைப்பித்(து) அன்றே! 10

மதம்உடைக் களிறு செற்ற மாமறைக் காட்(டு)உளானைக்
கத(வு)அடைத் திறமும் செப்பிக் கடிபொழில் காழி வேந்தன்—
தக(வு)உடைப் புகழின் மிக்க தமிழ்கெழு விரகன்—சொன்ன
பதம்உடைப் பத்தும் வல்லார், பரமனுக்(கு) அடியர் தாமே. 11

* இருபாஇருபஃது உரை மேற்கோள் தேவாரம்

பன்னில் ஊறும் பழத்தினும் இன்சுவை
என்னில் ஊறி எனக்கே களிதரும்,
உன்னில் உன்னும்,உன் னாவிடில் விட்டிடும்,
என்னுள் ஈசன் இருந்த இயற்கையே!

[*இவ்விருதிறமும் பற்றிய குறிப்பினை மூவர்தேவாரம்-முன்னுரையுள், திருவிடைவாய் கிளியன்னவூர்ப் பதிகங்கள் முதலாயின என்னும் தலைப்பின்கண் (பக்கம்-16, 17) காண்க.]

† சூரியன் தேவாரம் - சுந்தரமூர்த்தி பாடல்

அம்மானே! ஆனந்த வெள்ள மூர்த்தி!
அருமறையுள் அருமறையின் பொருளே! வானோர்
தம்மால்ஒன்(று) அறி(வு)அரிய சிவனும், மாலும்,
சதுமுகனும், உடன்ஆக விளங்கும் சோதி!
இம்மாயப் பிறப்(பு)ஆகி, உலகும் தானாய்,
இர(வு)ஆகிப் பகல்ஆகிக் கலந்து நின்ற
அம்மானே! அம்பரம்மீ(து) எழுந்து தோன்றும்
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே. 1

ஆயிரம்செங் கதிர்விளங்க, புவனம் தன்னில்
அள(வு)இறந்த பிறவிதனக்(கு) உயிர்ஆய், எங்கும்
மாஇருளைக் கடிந்து,மயக்(கு) அறுத்து, நாளும்
வஞ்சகரை வஞ்சித்திட்(டு), அடியேன் உய்ய
ஆயிரம்பா வம்களைந்தே, என்னை ஆண்ட
ஆதவன்என்(று) உல(கு)அறியும் ஆதி மூர்த்தி!
ஆயிரம்பேர் உடையானே! அமரர் ஏறே!
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே. 2

இந்திரியத் துடன்கலந்த கரணம் நான்கும்
ஈர்-ஐந்து மாருதமும் மயங்கி ஒன்(று)ஆய்,
மந்திரங்கள் ஈர்-எட்டும் எட்டும் போற்றி,
மணிக்கரத்தால் அடிவணங்கி, சிறப்புச் செய்த
சுந்தரனே! சுடர்ஒளிஆய் நின்ற சோதி!
சூரியனே! தாரணித் துணைஆய் நாளும்
அந்தரமே திரிந்(து)என்னை ஆண்டு கொண்டாய்! 3
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே.

ஈண்டுநன் மலர்கொண்(டு)உன் அடியார் ஏத்த,
இருபொழுதும் மறையோர்கள் புனல்கொண்(டு) என்றும்
காண்டம்எனும் கடுஞ்சரத்தால் அசுரர் மாள,
காதல்இரு மடவார்கள் அருகே நிற்க,
பூண்டஏழ் புரவிகொணர்ந்(து) அருணன் ஊர,
புவனம்எலாம் ஒளிவிளங்கப் போந்தே, என்னை
ஆண்டுகொண்ட பரமேட்டி! ஆதி மூர்த்தி! 4
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே.

உத்தமனே! பத்தர்மனத்து உறையும் தேனே!
உதயதிவா கரனே!என் உயிர்ஆய் நின்ற
வித்தகனே! விடக்(கு)உடலில் கொழுநோய் தீர்க்கும்
மிகுமருந்தே! விளக்(கு)ஒளிஆய் முளைத்த சோதி!
சித்தம்எனும் திண்கடலில்- திளைத்து நீந்தித்
திசைஅறியா மரக்கலம்போல் வினாவிக் கீண்(டு)இங்(கு)
அத்தலத்தே எடுத்(து)அவனி விளங்கத் தோன்றும் 5
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே.

ஊக்கம்எனும் பெருஞ்செல்வம் ஒன்று காட்டி
உகந்(து)அளித்த அதிபதியாய் உதிக்கும் சோதி!
பாற்கரனே! பரஞ்சுடரே! பாவ நாசா!
பார்அடங்கத் திரிந்துவரும் பரம மூர்த்தி!
பூக்கள்கொண்(டு) அடிவணங்கிச் சிறப்புச் செய்து
போற்றிசெயும் பூதலத்தில் அடியார்க்(கு) எல்லாம்
ஆக்கமும்ஆய் மயக்கத்தின் பயனும் ஆனாய்! 6
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே.

எரிகதிர்ஆய் நாயி(று)ஆய்த் திங்கள் ஆகி
எனப்பலஆய், யாண்(டு)ஊழி தோறும் ஆகி,
கருமமும்ஆய், கருமத்தின் பயனும் ஆகி,
காரணம்ஆய், ஆரணமந் திரங்கட்(கு) எல்லாம்
தெரி(வு)அரிய பொருள்உருவம் ஒன்(று)ஆய் நின்ற
திவாகரனே! ஒருவனே! தேவே! நாளும்
அருஉருஆய், உருவம்அ(து)ஆய், எங்கும் நின்ற 7
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே.

ஏவிநலப் பணிஉகந்தாய்! எந்தாய்! ஈண்(டு)இங்(கு)
இளமுலையார் புனல்ஆட எழுந்து கூடிக்
கூவும்இளங் குயில்என்ன மயில்என்(று) எண்ணிக்
குளங்கள்தொறும் குடைந்துகுடைந்(து) ஆட நோக்கித்
தேவபிரான் எழுந்தருளும் படி,பொன் சோதித்
தேர்ஊர்ந்து பரிமாவும் படையும் சூழ,
ஆவிகுளிர்ந்(து) அவனிதலம் விளங்கத் தோன்றும் 8
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே.

ஐ-இரண்டும் பதினைந்தும் ஒன்றுஆய்க் கூடி
அம்பலம்சேர் அம்பலத்துக்(கு) ஆதி ஆகிக்
கைஇரண்டும் படைத்தார்,உன் பாதம் கூப்ப;
கனிஇருப்பக் காய்கவர்ந்த கடைய னேற்குப்
பொய்இருளைக் கடிந்து,நின்னை வணங்க நல்காய்!
புலன்ஐந்தும் தொல்குரம்பை புகவே செய்(து)இங்(கு),
ஐயனே! மாயக்கூத்(து) ஆட்டு கின்ற
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே. 9

ஒட்(டு)இயல்ஆர் ஒருவடிவே உரைக்க என்றால்
ஒளிஉடைய திருஉருவம் பெரிய சோதி!
குட்டம்,உடல் கொழுநோய்கள், வாத, பித்தம்,
கொடியகயம்,—பாவத்தர் கூடக் கட்டி
இட்டம்உள விளையாட்டும் கோலம் காட்டி—
இடர்இன்றி, விடக்கடலில் அடக்கை ஆக்கி,
அட்டகுணம் ஆய்,அட்ட மூர்த்தி ஆனாய்!
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே. 10

ஓர்எழுத்(து)ஆய், ஒண்பொருள்ஆய், தேன்ஆய், பால்ஆய்,
ஒளிஅழலின் பழம்ஆகி, உருவம் ஒவ்வாத்
தாரணிக்குத் தான்ஒன்(று)ஆய், தானும் மூன்(று)ஆய்,
தான்எங்கும் கலந்(து),ஈர்ஏழ் உலகும் மிக்க
பூரணத்தின் அரும்பொருளை—புண்ணி யத்தை,
பூதலத்தோர் தொழு(து)ஏத்தும் புனிதன் தன்னை,
ஆரணத்தின் பயன்தன்னை—அறிந்தாய்! எந்தை!
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே. 11

ஔவனத்தின் அருமறையின் உச்சி உள்ளார்
அணிமகர மண்டலப்புண் டரிகத்(து) உள்ளார்,
ஔவனத்தார் பாற்கடலின் பள்ளி ஆனார்,
அயன்ஆனார், மூவர்களும் ஆன சோதி!
ஔவனத்தில் கொணர்வேடம் புனைந்து மாறா
ஆயிரம்பேர் ஒளிகாட்டி, அகிலம் எல்லாம்
ஔவனத்தில் அருந்துயரம் அகற்றி மாற்றும்
ஆதித்தா! அடியேன்என் இடர்தீர்ப் பாயே. 12

அக்கனகத் தோள்இலங்கும் சோதி தன்னில்
அணிமகர மண்டலப்புண் டரிகத்(து) உள்ளார்
திக்குபுகழ்ந்(து) இலங்குபுக ழானை—தேனை,
தினகரனை, ஆதித்த தேவன் தன்னை,—
உக்கிஉடல் கொழுநோய்கள் தீர வேண்டி,
உடையபிரான் அருள்நாவல் ஊரன் சொன்ன
தக்கதமிழ் பதினொன்றும் இரண்டும் வல்லார்,
தத்துவ்த்தின் மண்டலம்சென்று அடைவர் தாமே. 13

[† ''முத்திறத்தார் ஈசன் முதற்றிறத்தைப் பாடியவர்'' என்று கல்வெட்டுப் புகழ்ந்து பேசும் மூவர்கள் சிவபெருமானையன்றி மற்றொரு தெய்வத்தை மறந்தும் தொழாதவர்எனும் பெருமையுற்றவர் ஆதலின், ஈண்டுக் காணப்படும் இப்பதிகம் இடைச்செருகலே என்பது துணிவு.]

பதிக அட்டவணை

நான்காம் திருமுறை

பதிகத் தொடர் எண் | பதிக(தல)ப் பெயர் | பக்க எண்

பண் : கொல்லி

1 திரு அதிகைவீரட்டானம் 1

பண் : காந்தாரம்

2 திரு அதிகைவீரட்டானம் 3
3 திரு ஐயாறு 4
4 திரு ஆரூர் 5
5 திரு ஆரூர்(பழமொழி) 6
6 திருக் கழிப்பாலை 7
7 திருக் கச்சி ஏகம்பம் 8

பண் : பியந்தைக்காந்தாரம்

8 ''சிவன் எனும் ஓசை'' (பொது) 9

பண் : சாதாரி

9 திரு அங்கமாலை (பொது) 10

பண் : காந்தாரபஞ்சமம்

10 திரு அதிகைவீரட்டானம் 11
11 நமச்சிவாயத் திருப்பதிகம் (பொது) 12

பண் : பழந்தக்கராகம்

12 திருப் பழனம் 13
13 திரு ஐயாறு 14

பண் : பழம்பஞ்சுரம்

14 தசபுராணம் (பொது) 15
15 பாவநாசத் திருப்பதிகம் (பொது) 16

பதிகத் தொடர் எண் | பதிக(தல)ப் பெயர் | பக்க எண்

பண் : இந்தளம்

16 திருப் புகலூர் 17
17 திரு ஆரூர் அரநெறி 18
18 விடம் தீர்த்த திருப்பதிகம் (பொது) 19

பண் : சீகாமரம்

19 திரு ஆரூர் 20
20 திரு ஆரூர் 21

பண் : குறிஞ்சி

21 திரு ஆரூர்(திருஆதிரைப் பதிகம்) 22

பண் : கொல்லி (திரு நேரிசை)

22 கோயில் 23
23 கோயில் 25
24 திரு அதிகைவீரட்டானம் (கொப்பளித்த திரு நேரிசை) 26
25 திரு அதிகைவீரட்டானம் 27
26 திரு அதிகைவீரட்டானம் 28
27 திரு அதிகைவீரட்டானம் 29
28 திரு அதிகைவீரட்டானம் 29
29 திருச் செம்பொன்பள்ளி 30
30 திருக் கழிப்பாலை 31
31 திருக் கடவூர்வீரட்டம் 32
32 திருப் பயற்றூர் 33

திருநாவுக்கரசர் தேவாரம்

பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
33	திரு மறைக்காடு	34
34	திரு மறைக்காடு	35
35	திரு இடைமருதூர்	36
36	திருப் பழனம்	37
37	திரு நெய்த்தானம்	38
38	திரு ஐயாறு	39
39	திரு ஐயாறு	40
40	திரு ஐயாறு	41
41	திருச் சோற்றுத்துறை	42
42	திருத் துருத்தி	43
43	திருக் கச்சி மேற்றளி	44
44	திருக் கச்சி ஏகம்பம்	45
45	திரு ஒற்றியூர்	46
46	திரு ஒற்றியூர்	47
47	திருக் கயிலாயம்	47
48	திரு ஆப்பாடி	48
49	திருக் குறுக்கைவீரட்டம்	49
50	திருக் குறுக்கைவீரட்டம்	50
51	திருக் கோடிகா	51
52	திரு ஆரூர்	52
53	திரு ஆரூர்	53
54	திருப் புகலூர்	54
55	திரு வலம்புரம்	55
56	திரு ஆவடுதுறை	56
57	திரு ஆவடுதுறை	57
58	திருப் பருப்பதம்	58
59	திரு அவள்இவள்நல்லூர்	59
60	திருப் பெருவேளூர்	60
61	திரு இராமேச்சுரம்	61
62	திரு ஆலவாய்	62
63	திரு அண்ணாமலை	63
64	திரு வீழிமிழலை	64
65	திருச் சாய்க்காடு	65
66	திரு நாகேச்சுரம்	66
67	திருக் கொண்டீச்சுரம்	67
68	திரு ஆலங்காடு	68
69	திருக் கோவலூர்வீரட்டம்	69
70	திரு நனிபள்ளி	70
71	திரு நாகைக்காரோணம்	71
72	திரு இன்னம்பர்	72
73	திருச் சேறை	73
74	''நினைந்த'' திரு நேரிசை(பொது)	74
75	தனித் திரு நேரிசை (பொது)	75
76	தனித் திரு நேரிசை (பொது)	76
77	தனித் திரு நேரிசை (பொது)	77
78	குறைந்த திரு நேரிசை (பொது)	77
79	குறைந்த திரு நேரிசை (பொது)	78

நான்காம் திருமுறை

திரு விருத்தம்

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
	80	கோயில்	79
	81	கோயில்	80
	82	திருக் கழுமலம்	81
	83	திருக் கழுமலம்	82
	84	''ஆருயிர்த்'' திரு விருத்தம் (பொது)	82
	85	திருச் சோற்றுத்துறை	83
	86	திரு ஒற்றியூர்	84
	87	திருப் பழனம்	85
	88	திருப் பூந்துருத்தி	86
	89	திரு நெய்த்தானம்	87
	90	திரு வேதிகுடி	88
	91	திரு ஐயாறு	89
	92	திரு ஐயாறு	90
	93	திருக் கண்டியூர்	92
	94	திருப் பாதிரிப்புலியூர்	93
	95	திரு வீழிமிழலே	94
	96	திருச் சத்திமுற்றம்	95
	97	திரு நல்லூர்	96
	98	திரு ஐயாறு	98
	99	திருக் கச்சி ஏகம்பம்	98
	100	திரு இன்னம்பர்	99
	101	திரு ஆரூர்	100
	102	திரு ஆரூர்	101
	103	திரு நாகைக்காரோணம்	102
	104	திரு அதிகைவீரட்டானம்	103
	105	திருப் புகலூர்	103
	106	திருக் கழிப்பாலே	104
	107	திருக் கடவூர்	104
	108	திரு மாற்பேறு	105
	109	திருக் கடந்தைத் தூங்கானைமாடம்	105
	110	''பசுபதித்'' திரு விருத்தம் (பொது)	106
	111	''சரக்கறை''த் திரு விருத்தம் (பொது)	106
	112	தனித் திரு விருத்தம் (பொது)	108
	113	தனித் திரு விருத்தம் (பொது)	109

ஐந்தாம் திருமுறை

திருக் குறுந்தொகை

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
1	114	கோயில்	111
2	115	கோயில்	112
3	116	திரு நெல்வாயில் அரத்துறை	113
4	117	திரு அண்ணுமலே	114
5	118	திரு அண்ணுமலே	115

திருநாவுக்கரசர் தேவாரம்

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
6	119	திரு ஆரூர்	116
7	120	திரு ஆரூர்	117
8	121	திரு அன்னியூர்	118
9	122	திரு மறைக்காடு	119
10	123	திரு மறைக்காடு	120
11	124	திரு மீயச்சூர் இளங்கோயில்	121
12	125	திரு வீழிமிழலை	122
13	126	திரு வீழிமிழலை	123
14	127	திரு இடைமருதூர்	124
15	128	திரு இடைமருதூர்	125
16	129	திருப் பேரெயில்	126
17	130	திரு வெண்ணியூர்	127
18	131	திருக் கடம்பந்துறை	128
19	132	திருக் கடம்பூர்க் கரக்கோயில்	129
20	133	திருக் கடம்பூர்க் கரக்கோயில்	130
21	134	திரு இன்னம்பர்	131
22	135	திருக் குடமூக்கு	132
23	136	திரு நின்றியூர்	133
24	137	திரு ஒற்றியூர்	134
25	138	திருப் பாசூர்	135
26	139	திரு வன்னியூர்	136
27	140	திரு ஐயாறு	137
28	141	திரு ஐயாறு	138
29	142	திரு ஆவடுதுறை	139
30	143	திருப் பராய்த்துறை	140
31	144	திரு ஆனைக்கா	141
32	145	திருப் பூந்துருத்தி	142
33	146	திருச் சோற்றுத்துறை	143
34	147	திரு நெய்த்தானம்	144
35	148	திருப் பழனம்	145
36	149	திருச் செம்பொன்பள்ளி	146
37	150	திருக் கடவூர்வீரட்டம்	147
38	151	திருக் கடவூர்மயானம்	149
39	152	திரு மயிலாடுதுறை	149
40	153	திருக் கழிப்பாலை	151
41	154	திருப் பைஞ்ஞீலி	152
42	155	திரு வேட்களம்	153
43	156	திரு நல்லம்	154
44	157	திரு ஆமாத்தூர்	155
45	158	திருத் தோணிபுரம்	156
46	159	திருப் புகலூர்	157
47	160	திருக் கச்சி ஏகம்பம்	158
48	161	திருக் கச்சி ஏகம்பம்	159
49	162	திரு வெண்காடு	160
50	163	திரு வாய்மூர்	161
51	164	திருப் பாலைத்துறை	162
52	165	திரு நாகேச்சுரம்	163

ஐந்தாம் திருமுறை

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
53	166	திரு அதிகைவீரட்டானம்	164
54	167	திரு அதிகைவீரட்டானம்	165
55	168	திரு நாரையூர்	166
56	169	திருக் கோளிலி	167
57	170	திருக் கோளிலி	168
58	171	திருப் பழையாறை வடதளி	169
59	172	திரு மாற்பேறு	170
60	173	திரு மாற்பேறு	171
61	174	திரு அரிசிற்கரைப்புத்தூர்	172
62	175	திருக் கடுவாய்க்கரைப் புத்தூர்	173
63	176	திருத் தென்குரங்காடுதுறை	174
64	177	திருக் கோழம்பம்	175
65	178	திருப் பூவனூர்	176
66	179	திரு வலஞ்சுழி	177
67	180	திரு வாஞ்சியம்	178
68	181	திரு நள்ளாறு	179
69	182	திருக் கருவிலிக் கொட்டிட்டை	180
70	183	திருக் கொண்டீச்சுரம்	181
71	184	திரு விசயமங்கை	182
72	185	திரு நீலக்குடி	183
73	186	திரு மங்கலக்குடி	184
74	187	திரு எறும்பியூர்	185
75	188	திருக் குரக்குக்கா	186
76	189	திருக் கானூர்	187
77	190	திருச் சேறைச் செந்நெறி	188
78	191	திருக் கோடிகா	189
79	192	திருப் புள்ளிருக்குவேளூர்	190
80	193	திரு அன்பில் ஆலந்துறை	191
81	194	திருப் பாண்டிக்கொடுமுடி	192
82	195	திரு வான்மியூர்	192
83	196	திரு நாகைக்காரோணம்	193
84	197	திருக் காட்டுப்பள்ளி (மேலை)	194
85	198	திருச் சிராப்பள்ளி	195
86	199	திரு வாட்போக்கி	196
87	200	திரு மணஞ்சேரி	197
88	201	திரு மருகல்	198
89	202	தனித் திருக் குறுந்தொகை (பொது)	199
90	203	தனித் திருக் குறுந்தொகை (பொது)	200
91	204	தனித் திருக் குறுந்தொகை (பொது)	201
92	205	காலபாசத் திருக் குறுந்தொகை (பொது)	201
93	206	''மறக்கிற்பனே'' என்னும் திருக் குறுந்தொகை (பொது)	203
94	207	''தொழற்பாலதே'' என்னும் திருக் குறுந்தொகை (பொது)	204

திருநாவுக்கரசர் தேவாரம்

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
95	208	இலிங்கபுராணத் திருக் குறுந்தொகை (பொது)	205
96	209	மனத்தொகைத் திருக் குறுந்தொகை (பொது)	206
97	210	''சித்தத்தொகை'' த் திருக் குறுந்தொகை (பொது)	207
98	211	உள்ளத் திருக் குறுந்தொகை (பொது)	210
99	212	பாவநாசத் திருக் குறுந்தொகை (பொது)	211
100	213	ஆதிபுராணத் திருக் குறுந்தொகை (பொது)	212

ஆறும் திருமுறை

திருத் தாண்டகம்

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
1	214	கோயில் (பெரிய திருத் தாண்டகம்)	213
2	215	கோயில் (புக்க திருத் தாண்டகம்)	215
3	216	திரு அதிகைவீரட்டானம் (ஏழைத் திருத் தாண்டகம்)	216
4	217	திரு அதிகைவீரட்டானம் (அடையாளத் திருத் தாண்டகம்)	218
5	218	திரு அதிகைவீரட்டானம் (போற்றித் திருத் தாண்டகம்)	220
6	219	திரு அதிகைவீரட்டானம் (திருவடித் திருத் தாண்டகம்)	222
7	220	திரு அதிகைவீரட்டானம் (காப்புத் திருத் தாண்டகம்)	223
8	221	திருக் காளத்தி	225
9	222	திரு ஆமாத்தூர்	227
10	223	திருப் பந்தணைநல்லூர்	229
11	224	திருப் புன்கூரும் திரு நீடூரும்	231
12	225	திருக் கழிப்பாலை	232
13	226	திருப் புறம்பயம்	234
14	227	திரு நல்லூர்	236
15	228	திருக் கருகாவூர்	237
16	229	திரு இடைமருது	239
17	230	திரு இடைமருது	241
18	231	திருப் பூவணம்	243
19	232	திரு ஆலவாய்	244
20	233	திரு நள்ளாறு	246
21	234	திரு ஆக்கூர்த் தான்தோன்றிமாடம்	248
22	235	திரு நாகைக்காரோணம்	250
23	236	திரு மறைக்காடு	251
24	237	திரு ஆரூர்	253
25	238	திரு ஆரூர்	255
26	239	திரு ஆரூர்	257

ஆறாம் திருமுறை

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
27	240	திரு ஆரூர்	258
28	241	திரு ஆரூர்	259
29	242	திரு ஆரூர்	261
30	243	திரு ஆரூர்	263
31	244	திரு ஆரூர்	264
32	245	திரு ஆரூர் (போற்றித் திருத் தாண்டகம்)	266
33	246	திரு ஆரூர் அரநெறி	268
34	247	திரு ஆரூர்	269
35	248	திரு வெண்காடு	271
36	249	திருப் பழனம்	273
37	250	திரு ஐயாறு	274
38	251	திரு ஐயாறு	276
39	252	திரு மழபாடி	278
40	253	திரு மழபாடி	280
41	254	திரு நெய்த்தானம்	281
42	255	திரு நெய்த்தானம்	282
43	256	திருப் பூந்துருத்தி	284
44	257	திருச் சோற்றுத்துறை	286
45	258	திரு ஒற்றியூர்	287
46	259	திரு ஆவடுதுறை	289
47	260	திரு ஆவடுதுறை	291
48	261	திரு வலிவலம்	293
49	262	திருக் கோகரணம்	294
50	263	திரு வீழிமிழலை	296
51	264	திரு வீழிமிழலை	298
52	265	திரு வீழிமிழலை	299
53	266	திரு வீழிமிழலை	301
54	267	திருப் புள்ளிருக்குவேளூர்	303
55	268	திருக் கயிலாயம் (போற்றித் திருத் தாண்டகம்)	305
56	269	திருக் கயிலாயம் (போற்றித் திருத் தாண்டகம்	306
57	570	திருக் கயிலாயம் (போற்றித் திருத் தாண்டகம்)	308
58	271	திரு வலம்புரம்	310
59	272	திரு வெண்ணியூர்	311
60	273	திருக் கற்குடி	313
61	274	திருக் கன்றாப்பூர்	315
62	275	திரு ஆனைக்கா	316
63	276	திரு ஆனைக்கா	318
64	277	திருக் கச்சி ஏகம்பம்	319
65	278	திருக் கச்சி ஏகம்பம்	321
66	279	திரு நாகேச்சுரம்	323
67	280	திருக் கீழ்வேளூர்	325
68	281	திரு முதுகுன்றம்	326
69	282	திருப் பள்ளியின்முக்கூடல்	328
70	283	க்ஷேத்திரக்கோவை (பொது)	330

திருநாவுக்கரசர் தேவாரம்

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
71	284	திரு அடைவுத் திருத்தாண்டகம் (பொது)	331
72	285	திரு வலஞ்சுழி	333
73	286	திரு வலஞ்சுழியும், திருக்கொட்டையூர்க் கோடீச்சுரமும்	333
74	287	திரு நாரையூர்	335
75	288	திருக் குடந்தைக் கீழ்க்கோட்டம்	337
76	289	திருப் புத்தூர்	339
77	290	திரு வாய்மூர்	340
78	291	திரு ஆலங்காடு	342
79	292	திருத் தலையாலங்காடு	344
80	293	திரு மாற்பேறு	345
81	294	திருக் கோடிகா	347
82	295	திருச் சாய்க்காடு	348
83	296	திருப் பாசூர்	350
84	297	திருச் செங்காட்டங்குடி	352
85	298	திரு முண்டீச்சுரம்	353
86	299	திரு ஆலம்பொழில்	355
87	300	திருச் சிவபுரம்	356
88	301	திரு ஓமாம்புலியூர்	358
89	302	திரு இன்னம்பர்	359
90	303	திருக் கஞ்சனூர்	361
91	304	திரு எறும்பியூர்	362
92	305	திருக் கழுக்குன்றம்	364

பொதுப் பதிகங்கள்

பதிக எண்	பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
93	306	பலவகைத் திருத்தாண்டகம்	364
94	307	நின்ற திருத் தாண்டகம்	366
95	308	தனித் திருத் தாண்டகம்	368
96	309	தனித் திருத் தாண்டகம்	369
97	310	வினாவிடைத் திருத்தாண்டகம்	371
98	311	மறுமாற்றத் திருத்தாண்டகம்	373
99	312	திருப் புகலூர்	375

தலஅகராதி முதலியன

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
1	**அண்ணாமலை**		
	ஓதி மா மலர்கள்	IV	63
	வட்டனை	V	114
	பட்டிஏறு	V	115
2	**அதிகைவீரட்டானம்**		
	கூற்றுஆயினஆறு	IV	1
	சுண்ணவெண்	IV	3
	முளைக்கதிர்	IV	11

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	இரும்பு கொப்பளித்த	IV	26
	வெண்நிலா	IV	27
	நம்பனே	IV	28
	மடக்கினார்	IV	29
	முன்புஎலாம்	IV	29
	மாசு இல் ஒள்வாள்	IV	103
	கோணல் மா மதி	V	164
	எட்டுநாள்மலர்	V	165
	வெறி விரவு	VI	216
	சந்திரனை	VI	218
	எல்லாம் சிவன்	VI	220
	அரவுஅணையான்	VI	222
	செல்வப் புனல்	VI	223
3	அரிசிற்கரைப்புத்தூர்		
	முத்து ஊரும்	V	172
4	அவள்இவள்நல்லூர்		
	தோற்றினான்	IV	59
5	அன்பில் ஆலந்துறை		
	வானம் சேர் மதி	V	191
6	அன்னியூர்		
	பாறு அலைத்த	V	118
7	ஆக்கூர்த் தான்தோன்றிமாடம்		
	முடித் தாமரை	VI	248
8	ஆப்பாடி		
	கடல்அகம்ஏழினோடும்	IV	48
9	ஆமாத்தூர்		
	மா மாத்து	V	155
	வண்ணங்கள்	VI	227
10	ஆரூர்		
	பாடு இளம்	IV	5
	மெய்எலாம்	IV	6
	சூலப்படையானை	IV	20
	காண்டலே	IV	21
	முத்து விதானம்	IV	22
	படு குழிப்	IV	52
	குழல் வலம்	IV	53
	குலம் பலம்	IV	100
	வேம்பினைப்	IV	101
	எப்போதும்(ம்)	V	116
	கொக்கரை குழல்	V	117
	கைம் மான	VI	253
	உயிரா வணம்	VI	255
	பாதித் தன்	VI	257
	பொய்ம் மாயப்	VI	258
	நீற்றினையும்	VI	259
	திருமணியை	VI	261
	எம் பந்த	VI	263
	இடர் கெடும்ஆறு	VI	264

திருநாவுக்கரசர் தேவாரம்

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	கற்றவர்கள்	VI	266
	ஒருவனாய்	VI	269
11	ஆரூர் அரநெறி		
	எத் தீப் புகினும்	IV	18
	பொரும் கை மதகரி	VI	268
12	ஆலங்காடு		
	வெள்ளநீர்ச்	IV	68
	ஒன்றா உலகுஅனைத்தும்	VI	342
13	ஆலம்பொழில்		
	கருஆகிக்	VI	355
14	ஆலவாய்		
	வேதியா வேதகீதா	IV	62
	முளைத்தானை	VI	244
15	ஆவடுதுறை		
	மா-இரு ஞாலம்	IV	56
	மஞ்சனே	IV	57.
	நிறைக்க வாலியள்	V	139
	நம்பனை நால்வேதம்	VI	289
	திருவே என்	VI	291
16	ஆனைக்கா		
	கோனைக் காவிக்	V	141
	எத் தாயர் எத் தந்தை	VI	316
	முன் ஆனைத்தோல்	VI	318
17	இடைமருதூர்		
	காடு உடைச் சுடலை	IV	36
	பாசம் ஒன்று	V	124
	பறையின் ஓசையும்	V	125
	சூலப்படை	VI	239
	ஆறு சடைக்கு	VI	241
18	இராமேச்சுரம்		
	பாசமும் கழிக்க	IV	61
19	இன்னம்பர்		
	விண்ணவர்	IV	72
	மன்னும் மலைமகள்	IV	99
	என்னில் ஆரும்	V	131
	அல்லிமலர்	VI	359
20	எறும்பியூர்		
	விரும்பி ஊறு	V	185
	பன்னிய செந்தமிழ்	VI	362
21	ஐயாறு		
	மாதர்ப் பிறைக்	IV	4
	விடகிலேன்	IV	14
	கங்கையைச்	IV	39
	குண்டனாய்ச்	IV	40
	தான்அலாது	IV	41
	குறுவித்தவா	IV	89
	சிந்திப்பு அரியன	IV	90
	அந்தி வட்டத்	IV	98
	சிந்தை வாய்தல்	V	137
	சிந்தை வண்ணத்தராய்	V	138

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	ஆரார் திரிபுரங்கள்	VI	274
	ஓசைஒலிஎலாம்	VI	276
22	ஒற்றியூர்		
	வெள்ளத்தைச்	IV	46
	ஓம்பினேன்	IV	47
	செற்றுக் களிற்றுஉரி	IV	84
	ஒற்றி ஊரும்	V	134
	வண்டு ஓங்கு	VI	287
23	ஓமாம்புலியூர்		
	ஆர் ஆரும்	VI	358
24	கச்சி ஏகம்பம்		
	கரவு ஆடும்	IV	8
	நம்பனை நகரம்மூன்றும்	IV	45
	ஓதுவித்தாய்	IV	98
	பண்டு செய்த	V	158
	பூமேலானும்	V	159
	கூற்றுவன்காண்	VI	319
	உரித்தவன்காண்	VI	321
25	கச்சி மேற்றளி		
	மறைஅது பாடிப்	IV	44
26	கஞ்சனூர்		
	மூஇலைநல்சூலம்	VI	361
27	கடம்பந்துறை		
	முற்றிலா முலையாள்	V	128
28	கடம்பூர்க் கரக்கோயில்		
	தளரும் கோள்	V	129
	ஒருவராய்	V	130
29	கடவூர்மயானம்		
	குழை கொள்	V	149
30	கடவூர்வீரட்டம்		
	பொள்ளத்த	IV	32
	மருள்-துயர்	IV	104
	மலைக் கொள்	V	147
31	கடுவாய்க்கரைப்புத்தூர்		
	ஒருத்தனை	V	173
32	கண்டியூர்		
	வானவர் தானவர்	IV	92
33	கயிலாயம்		
	கனகம் மா வயிரம்	IV	47
	வே(ற்)றுஆகி	VI	305
	பொறை உடைய	VI	306
	பாட்டுஆன	VI	308
34	கருகாவூர்		
	குருகு ஆம்	VI	237
35	கருவிலிக் கொட்டிட்டை		
	மட்டு இட்ட(க்)	V	180
36	கழிப்பாலை		
	வன பவளவாய்	IV	7

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	நங்கையைப்	IV	31
	நெய்தல் குருகு	IV	104
	வண்ணமும்	V	151
	ஊன் உடுத்தி	VI	232
37	கழுக்குன்றம்		
	மூஇலைவேல்	VI	364
38	கற்குடி		
	மூத்தவனை	VI	313
39	கன்றாப்பூர்		
	மாதினை ஓர்கூறு	VI	315
40	காட்டுப்பள்ளி(மேலை)		
	மாட்டுப் பள்ளி	V	194
41	காழி		
	பார் கொண்டு (கழுமலம்)	IV	81
	படை ஆர் மழு (கழுமலம்)	IV	82
	மாது இயன்று (தோணிபுரம்)	V	156
42	காளத்தி		
	விற்று ஊண்	VI	225
43	கானூர்		
	திருவின் நாதனும்	V	187
44	கீழ்வேளூர்		
	ஆள்ஆன அடியவர்கட்கு	VI	325
45	குடந்தைக் கீழ்க்கோட்டம்		
	சொல் மலிந்த	VI	337
46	குடமுக்கு		
	பூ வணத்தவன்	V	132
47	குரக்குக்கா		
	மரக் கொக்குஆம்	V	186
48	குரங்காடுதுறை (தென்)		
	இரங்கா வன்	V	174
49	குறுக்கைவீரட்டம்		
	ஆதியில் பிரமனார்தாம்	IV	49
	நெடிய மால்	IV	50
50	(வலஞ்சுழியும்) கொட்டையூர்க் கோடீச்சுரம்		
	கருமணி போல்	VI	333
51	கொண்டீச்சுரம்		
	வரைகிலேன்	IV	67
	கண்ட பேச்சினில்	V	181
52	கோகரணம்		
	சந்திரனும்	VI	294
53	கோடிகா		
	நெற்றிமேல்	IV	51
	சங்கு உலாம்	V	189
	கண் தலம் சேர்	VI	347
54	கோயில்		
	செஞ்சடைக்கற்றை	IV	23
	பத்தனாய்ப்	IV	25

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்	தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	பாளை உடைக் கமுகு	IV	79	63	செம்பொன்பள்ளி		
	கரு நட்ட கண்டனை	IV	80		ஊனினுள்	IV	30
	அன்னம் பாலிக்கும்	V	111		கான் அறாத	V	146
	பனைக்கை மும்மத	V	112	64	சேறைச் செந்நெறி		
	அரியானை	VI	213		பெருந் திரு இமவான்	IV	73
	மங்குல்மதி	VI	215		பூரியா வரும்	V	188
55	கோவலூர்வீரட்டம்			65	சோற்றுத்துறை		
	செத்தையேன்	IV	69		பொய் விராம்	IV	42
56	கோழம்பம்				காலை எழுந்து	IV	83
	வேழம்பத்து ஐவர்	V	175		கொல்லை ஏற்றினர்	V	143
57	கோளிலி				மூத்தவனாய்	VI	286
	மைக் கொள் கண்	V	167	66	தலையாலங்காடு		
	முன்னமே	V	168		தொண்டர்க்குத்	VI	344
58	சத்திமுற்றம்			67	துருத்தி		
	கோவாய் முடுகி	IV	95		பொருத்திய	IV	43
59	சாய்க்காடு			68	(கடந்தைத்) தூங்கானைமாடம்		
	தோடு உலாம் மலர்கள்	IV	65		பொன் ஆர் திருவடிக்கு	IV	105
	வானத்து இளமதியும்	VI	348	69	நல்லம்		
60	சிராப்பள்ளி				கொல்லத்தான்	V	154
	மட்டு வார்குழலாளொடு	V	195	70	நல்லூர்		
61	சிவபுரம்				அட்டுமின் இல் பலி	IV	96
	வானவன்காண்	VI	356		நினைந்து உருகும்	VI	236
62	செங்காட்டங்குடி			71	நள்ளாறு		
	பெருந்தகையை	VI	352		உள் ஆறாதது	V	179

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	ஆதிக்கண்ணான்	VI	246
72	**நனிபள்ளி**		
	முன்-துணை ஆயினானை	IV	70
73	**நாகேச்சுரம்**		
	கச்சை சேர்	IV	66
	நல்லர் நல்லது	V	163
	தாய்அவனை	VI	323
74	**நாகைக்காரோணம்**		
	மனைவி தாய்	IV	71
	வடிவு உடை	IV	102
	பாணத்தால்	V	193
	பாரார் பரவும்	VI	250
75	**நாரையூர்**		
	வீறு தான் உடை	V	166
	சொல்லானை	VI	335
76	**நின்றியூர்**		
	கொடுங் கண்	V	133
77	**நிலக்குடி**		
	வைத்த மாடும்	V	183
78	**நெய்த்தானம்**		
	காலனை வீழச்	IV	38
	பார்இடம் சாடிய	IV	87
	கொல்லியான்	V	144
	வகைஎலாம்	VI	281
	மெய்த்தானத்து	VI	282
79	**நெல்வாயில் அரத்துறை**		
	கடவுளை	V	113
80	**பந்தணைநல்லூர்**		
	நோதங்கம்	VI	229
81	**பயற்றூர்**		
	உரித்திட்டார்	IV	33
82	**பராய்த்துறை**		
	கரப்பர் காலம்	V	140
83	**பருப்பதம்**		
	குன்றினார் புரங்கள்	IV	58
84	**பழனம்**		
	சொல்மாலை	IV	13
	ஆடினார்	IV	37
	மேவித்து நின்று	IV	85
	அருவனாய்	V	145
	அலை ஆர் கடல்	VI	273
85	**பழையாறை வடதளி**		
	தலைஎலாம் பறிக்கும்	V	169
86	**பள்ளியின் முக்கூடல்**		
	ஆராத இன்னமுதை	VI	328
87	**பாசூர்**		
	முந்தி மூஎயில்	V	135
	விண்ஆகி	VI	350

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
88	**பாண்டிக்கொடுமுடி**		
	சிட்டனை	V	192
89	**பாதிரிப்புலியூர்**		
	ஈன்றாளும்ஆய்	IV	93
90	**பாலைத்துறை**		
	நீல மா மணி	V	162
91	**புகலூர்**		
	செய்யர்	IV	17
	பகைத்திட்டார்	IV	54
	தன்னைச் சரண்	IV	103
	துன்னக் கோவண	V	157
	எண்ணுகேன்	VI	375
92	**புத்தூர்**		
	புரிந்து அமரர்	VI	339
93	**புள்ளிருக்குவேளூர்**		
	வெள்எருக்கு	V	190
	ஆண்டானை	VI	303
94	**புறம்பயம்**		
	கொடி மாட	VI	234
95	**புன்கூர் (நீடூரும்)**		
	பிறவாதே தோன்றிய	VI	231
96	**பூந்துருத்தி**		
	மாலினை மால் உற	IV	86
	கொடி கொள்	V	142
	நில்லாத நீர்	VI	284
97	**பூவணம்**		
	வடி ஏறு	V	243
98	**பூவனூர்**		
	பூவனூர்ப் புனிதன்	V	176
99	**பெருவேளூர்**		
	மறை அணி	IV	60
100	**பேரெயில்**		
	மறையும் ஓதுவர்	V	126
101	**பைஞ்ஞீலி**		
	உடையர் கோவணம்	V	152
102	**மங்கலக்குடி**		
	தங்கு அலப்பிய	V	184
103	**மணஞ்சேரி**		
	பட்டம்நெற்றியர்	V	197
104	**மயிலாடுதுறை**		
	கொள்ளும்	V	149
105	**மருகல்**		
	பெருகல் ஆம் தவம்	V	198
106	**மழபாடி**		
	நீறு ஏறு	VI	278
	அலை அடுத்த	VI	280
107	**மறைக்காடு**		
	இந்திரனோடு	IV	34
	தேரையும் மேல்	IV	35

திருநாவுக்கரசர் தேவாரம்

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	ஓதம் மால்கடல்	V	119
	பண்ணின் நேர்	V	120
	தூண்டு சுடர்	VI	251
108	**மாற்பேறு**		
	மாணிக்கு உயிர்	IV	105
	பொரும் ஆற்றின்	V	170
	ஏதும் ஒன்றும்	V	171
	பாரானை	VI	345
109	**மீயச்சூர் இளங்கோயில்**		
	தோற்றும் கோயிலும்	V	121
110	**முண்டீச்சுரம்**		
	ஆர்த்தான்காண்	VI	353
111	**முதுகுன்றம்**		
	கருமணியை	VI	326
112	**வலஞ்சுழி**		
	ஓதம் ஆர் கடலின்	V	177
	அலை ஆர் புனல்	VI	333
113	**வலம்புரம்**		
	தெண்திரை	IV	55
	மண் அளந்த	VI	310
114	**வலிவலம்**		
	நல்லான்காண்	VI	293
115	**வன்னியூர்**		
	காடு கொண்டு	V	136
116	**வாஞ்சியம்**		
	படையும் பூதமும்	V	178
117	**வாட்போக்கி**		
	காலபாசம்	V	196
118	**வாய்மூர்**		
	எங்கே என்ன	V	161
	பாட அடியார்	VI	340
119	**வான்மியூர்**		
	விண்ட மா மலர்	V	192
120	**விசயமங்கை**		
	குசையும்	V	182
121	**வீழிமிழலை**		
	பூதத்தின் படையர்	IV	64
	வான் சொட்டச்	IV	94
	கரைந்து	V	122
	என் பொனே	V	123
	போர் ஆனை	VI	296
	கயிலாயமலை	VI	298
	கண் அவன்காண்	VI	299
	மான் ஏறு கரம்	VI	301
122	**வெண்காடு**		
	பண் காட்டிப்	V	160
	தூண்டு சுடர்	VI	271
123	**வெண்ணியூர்**		
	முத்தினை	V	127

தொடர் எண்	தலம்—பதிகம்	திருமுறை எண்	பக்க எண்
	தொண்டு இலங்கும்	VI	311
124	**வேட்களம்**		
	நன்று நாள்தொறும்	V	153
125	**வேதிகுடி**		
	கையது கால்	IV	88
	பொதுப் பதிகங்கள்		
	சிவன் எனும்	IV	9
	தலையே நீ	IV	10
	சொல்-துணை	IV	12
	பருவரை ஒன்று	IV	15
	பற்றுஅற்றார் சேர்	IV	16
	ஒன்றுகொல்ஆம்	IV	19
	முத்தினை மணியை	IV	74
	தொண்டனேன்	IV	75
	மருள் அவா	IV	76
	கடும்பகல்	IV	77
	வென்றிலேன்	IV	77
	தம் மானம்	IV	78
	எட்டு ஆம் திசைக்கும்	IV	82
	சாம்பலைப்	IV	106
	விடையும் விடைப்	IV	106
	வெள்ளிக் குழைத்	IV	108
	பவளத்தடவரை	IV	109
	ஒன்று வெண்பிறைக்	V	199
	மாசு இல் வீணையும்	V	200
	ஏஇலானை	V	201
	கண்டுகொள்ள	V	201
	காசனை	V	203
	அண்டத்தானை	V	204
	புக்கு அணைந்து	V	205
	பொன் உள்ளத்	V	206
	சிந்திப்பார்	V	207
	நீறு அலைத்தது	V	210
	பாவமும் பழி	V	211
	வேதநாயகன்	V	212
	தில்லைச் சிற்றம்பலமும்	VI	330
	பொருப்பள்ளி	VI	331
	நேர்ந்து ஒருத்தி	VI	364
	இரு நிலன்ஆய்	VI	366
	அப்பன் நீ	VI	368
	ஆமயம் தீர்த்து	VI	369
	அண்டம் கடந்த்	VI	371
	நாம் ஆர்க்கும்	VI	373

பதிக அட்டவணை

ஏழாம் திருமுறை

பதிகத் தொடர் எண் — பதிக(தல)ப் பெயர் — பக்க எண்

பண்: இந்தளம்

1 திரு வெண்ணெய்நல்லூர் 379
2 திருப் பரங்குன்றம் 380
3 திரு நெல்வாயில் அரத்துறை 382
4 திரு அஞ்சைக்களம் 383
5 திரு ஓணகாந்தன்தளி 385
6 திரு வெண்காடு 386
7 திரு எதிர்கொள்பாடி 387
8 திரு ஆரூர் 388
9 திரு அரிசிற்கரைப்புத்தூர் 389
10 திருக் கச்சி அனேகதங்காவதம் 391
11 திருப் பூவணம் 393
12 திரு நாட்டுத்தொகை (பொது) 394

பண்: தக்கராகம்

13 திருத் துறையூர் 395
14 திருப் பாச்சிலாச்சிராமம் 396
15 திரு நாட்டியத்தான்குடி 398
16 திருக் கலயநல்லூர் 399

பண்: நட்டராகம்

17 திரு நாவலூர் 401
18 திரு வேள்விக்குடி 402
19 திரு நின்றியூர் 403
20 திருக் கோளிலி 404
21 திருக் கச்சி மேற்றளி 405
22 திருப் பழமண்ணிப்படிக்கரை 406
23 திருக் கழிப்பாலை 407
24 திரு மழபாடி 408
25 திரு முதுகுன்றம் 409
26 திருக் காளத்தி 410
27 திருக் கற்குடி 411
28 திருக் கடவூர்வீரட்டம் 412
29 திருக் குருகாவூர் வெள்ளடை 413
30 திருக் கருப்பறியலூர் 414

பண்: கொல்லி

31 திரு இடையாற்றுத் தொகை 416
32 திருக் கோடிக் குழகர் 417
33 ''நமக்கு அடிகள்ஆகிய அடிகள்'' (பொது) 418
34 திருப் புகலூர் 419
35 திருப் புறம்பயம் 420
36 திருப் பைஞ்ஞீலி 421
37 திரு ஆரூர் 422

பண்: கொல்லிக்கௌவாணம்

38 திரு அதிகைத் திரு வீரட்டானம் 423
39 திருத் தொண்டத்தொகை 425

ஏழாம் திருமுறை

பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
40	திருக் கானாட்டுமுள்ளூர்	426
41	திருக் கச்சூர் ஆலக்கோயில்	428
42	திரு வெஞ்சமாக்கூடல்	429
43	திரு முதுகுன்றம்	431
44	''முடிப்பது கங்கை'' (பொது)	432
45	திரு ஆமாத்தூர்	433
46	திரு நாகைக்காரோணம்	434

பண் : பழம்பஞ்சுரம்

47	ஊர்த்தொகை (பொது)	436
48	திருப் பாண்டிக்கொடுமுடி	437
49	திரு முருகன்பூண்டி	438
50	திருப் புனவாயில்	439
51	திரு ஆரூர்	440
52	திரு ஆலங்காடு	441
53	திருக் கடவூர்மயானம்	442

பண்: தக்கேசி

54	திரு ஒற்றியூர்	443
55	திருப் புன்கூர்	445
56	திரு நீடூர்	446
57	திரு வாழ்கொளிபுத்தூர்	448
58	திருக் கழுமலம்	450
59	திரு ஆரூர்	452
60	திரு இடைமருதூர்	454
61	திருக் கச்சி ஏகம்பம்	455

பதிகத் தொடர் எண்	பதிக(தல)ப் பெயர்	பக்க எண்
62	திருக் கோலக்கா	457
63	''நம்பி'' என்ற திருப் பதிகம் (பொது)	459
64	திருத் தினை நகர்	461
65	திரு நின்றியூர்	462
66	திரு ஆவடுதுறை	463
67	திரு வலிவலம்	464
68	திரு நள்ளாறு	466
69	வடதிருமுல்லைவாயில்	468
70	திரு ஆவடுதுறை	470

பண் : காந்தாரம்

71	திரு மறைக்காடு	471
72	திரு வலம்புரம்	472
73	திரு ஆரூர்	473
